ஸ்ரீமத்

கம்ப ராமாயண அகராதி

மூன்றாம் பாகம் த - ப

அ. சே. சுந்தரராஜன், B.A.

உ

ஸ்ரீமத்

கம்ப ராமாயண அகராதி

மூன்றாம் பாகம் த — ப

தொகுப்பாசிரியன் :

முன்னாள், இலங்கை இராமநாதன் கல்லூரி ஆசிரியர்

அ. சே. சுந்தரராஜன், B. A.,

10-A, அல்மோரா, அணுசக்தி நகர்,

பம்பாய்-400094.

ஆகஸ்டு 1978

விலை: ரூ. 40-00

சிவகாமி அச்சகம், அண்ணாமலைநகர்

கம்ப ராமாயண அகராதி III

குறியீடுகளின் விளக்கம்

அ - அயோத்தியா காண்டம்

அண் - அண்ணாமலைப் பல்கலைக் கழகப்பதிப்பு

ஆ - ஆரணிய காண்டம்

இலக் - இலக்கணை

உ.வி - உரைவிகற்பம்

கலா - கலா க்ஷேத்திரம் பதிப்பு

கி - கிட்கிந்தா காண்டம்

கு - குமாரசாமிப் புலவர் பதிப்பு

சு - சுந்தர காண்டம்

பா - பால காண்டம்

பா : பே - பாட பேதம்

பாயி - பாயிரம்

மு. ரா - மு. ரா. கந்தசாமிக் கவிராயர் பதிப்பு

யுத் - யுத்த காண்டம்

வெ.ப - வெ. ப. சுப்பிரமணிய முதலியார் கம்பராமாயண சாரம்

வை.மு - வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் பதிப்பு

உ

ஸ்ரீமத்

கம்ப ராமாயண அகராதி - III

த

தக்கர் - கள்வர்; திருடர். தண்டமென்றொரு பொருட்குரிய தக்கரைக் கண்டவர் பொறுப்பரோ. (யுத்: 30) தற்கர் பார்க்க. (பா : பே)

தக்கலை - தகுதியுடையை அல்லை. தகாதவள். இற்புகத் தக்கலை என்னின். (சு : 508)

தக்கவாறு - தகுந்த வகையில். அவற்றையும் அவற்றினோயத் தக்க வாறியற்றி மற்றுஞ் சிலைவலித்தருக்கினாலே புக்கவன் ஆவிகொண்டு போதுதி. (யுத் : 2894)

தக்கன் - தக்ஷன். தக்கன் நல் வேள்வியில் தழலும் ஆறின. (பா : 762) (ஆ : 201)

தக்கன கனி - நல்ல கனிகள். தக்கன கனிகாயுந் தந்து. (அ : 717)

தக்கனார் - தக்கன். இக்கார்முகங் கொளாச் சமையுறு தக்கனார் வேள்வி சாரவே. (பா : 761)

தக்கான் - தகுதியுடையவனான இராமபிரான். தக்கான் போனான் வனம். (அ : 615)

தக்கிணை - பெரியோர்க்கு அன்பால் அளிக்கும் கையுறைப் பொருள். எனாலமை தவமெலாங் கொள்க தக்கிணையா என்றான். (ஆ : 148)

தக்கில் - தகாத. தள்ளத் தக்கில் பெருஞ் சயிலம். (யுத் : 229)

தக்கிலது - தகுதியில்லாதது. செய்யத் தக்கதன்று. தகவிலது என்பது தக்கிலது என்று வந்தது. (அண்) தருமமோ பிறி தொன்றாமோ தக்கில தென்னும் பக்கம். (கி : 320) தக்கில தென்றனன். (யுத் : 2259) (யுத் : 4001)

தக்கில தென்னும் பக்கம் - 1. தகுதியில்லாதது என்னும் செயற் பகுதியிற் பாற்பட்டதேயாம். (அண்) தகுதியுடையதன்று என்னும் யக்கத்திற்கு சேர்க்க வேண்டியதேயாம். (கலா) (கி : 320)
2. தகாதென்பர் அயலார். (பழையவுரை) (கி : 320) (யுத் : 4001)

தக்கிலன் - தகுதியற்றவன். தக்கிலன் மனத்துள் யாதுந் தழுவிலன் சலமுங் கொண்டான். (ஆ : 294)

தக்குளேயேல் - வலிமையுடையையானால்; வல்லமையாகிய தகுதியைப் பெற்றுள்ளாயானால். என்மேலெதிரும்வலி தக்குளேயேல் என்றெறு போதுதியால். (யுத் : 1725)

தக்கை - ஓர் இசைக்கருவி. (யுத் : 2397)

தக்கோர் - பெரியோர் மேலோர். தஞ்சென மாதரை உள்ளலார்கள் தக்கோர். (அ : 202) தாமுத லோடுங் கெட்டால் ஒழிவரோ வண்மை தக்கோர். (யுத் : 637)

தகர்த்தல் - இடித்தல். தத்த மாடங்கள் தம்முடலாற் சிலர் தகர்த்தார். (சு : 792)

தகர்தல் - உடைதல். சிதைதல். முறிதல். தாமிழை நெரிதலில் தகர்ந்த பொன்மழை. (அ : 133) இமையோர் தந்தி கோடிறத் தகர்ந்த நாள். (யுத் : 125)

தகவின்மை - வலிமையின்மை. நீலன் முதற்பேர் போர்கெழு கொற்ற நெடுவீரர் சாலவுரைத்தார் வாரி கடக்குந் தகவின்மை. (கி : 1014)

தகவு - 1. நடுவு நிலைமை. தடுப்பது நினக்கழகிதோ தகவில் வெள்ளி. (பா : 451)

2. தகுதி. தகவில் தவ வேடம். (அ : 713) (யுத் : 1175)
3. நற்குணம். (வை. மு) (பா : 451)
4. நல்லொழுக்கம். தருமமும் தகவுமிவர் தனமெனுந் தகையரிவர். (கி : 50)
5. அருள். கிருபை. தானே தானே தஞ்சமிலாதான் தகவில்லான். (அ : 594)
6. நீதி. நேர்மை. தனியே பறவாய் தகவேதுமிலாய். (பா : 1249)
7. தக்க அன்பு. தன்னுடை உரிமைச் செல்வம் தம்பிக்குத் தகவின் நல்கி. (கி : 71)
8. வல்லமை. சாலவுரைத்தார் வாரி கடக்குந் தகவின்மை. (கி:1014)
9. பொறுமை. தழங்குஞ் செந்நீச் சிந்த அடித்தாள் தகவில்லான். (சு : 185) [பா : பே]
10. பெருந்தன்மை. (உ.வி) தம்பிக்குத் தகவின் நல்கி. (கி : 71)
11. மேன்மைக்குணம். தகவும் சலித்தது. (யுத் : 1148)

தகவுடையோர் - பெருமையுடையோர். தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான். (அ : 1024)

தகவோய் - நடுவுநிலைமையுடையவனே. தருமமும் இது தக்கதே நினைத்தனை தகவோய். (அ : 35)

தகளி - அகல். (தகழி) பாந்தள் ஏந்திய மொய்ந்நிலத் தகளியின். (கி : 445)

தகாதன - தகுதியல்லாதன. (மொழிகள்) தானுள பத்துப் பேழ்வாய் தகாதன உரைக்கத்தக்க. (யுத் : 1601)

தகுகில தென்னும் பக்கம் - தகாதென்கின்ற பக்ஷபாதமே. (வை.மு) (கி : 320) [பா : பே]

தகுதல் - 1. தகுதி. தகவில் துன்பம். (ஆ : 134)
2. சிறப்பு. மாநிலந்தன்னை இத்தகைதர. (ஆ : 15)
3. நிகர்த்தல். தாமடங்கலும் முடங்குளை யாளியுந் தகுவார். (யுத் : 3785)

தகுதற் கொத்த - தகுதிக்கு ஒத்த. தகுதற் கொத்த சனகன் தையல். (அ : 355)

தகுந்திறன் - காரணம். தகுந்திறன் நினைந்தேன். (யுத் : 1655)

தகுந்தொழில் - தகுதிவாய்ந்த தவச்செயல். தகுந் தொழில் முனிவரன். (பா : 383)

தகுமுனிவன் - தக்கோனாகிய முனிவன். (கோசிகன்) அத்தகு முனிவன் கூற. (பா : 688)

தகை 1. அழகு. தகை மலர்க்கை. (பா : 1041) தகைவாணகர். (யுத் ; 2639) தகைமதி. (அ : 1131) மதி தகை அமிழ்தின் அசும்பு. (யுத் : 3633)
2. சிறப்பு. மாநிலந்தன்னை இத்தகைதர. (அ : 15)
3. தடுத்தல். தாமரைப் படுவ வண்டும் தகைவரு திருவும். (பா : 35) தகைப்புலம். (யுத் : 371)
4. மேன்மை. தகை ஞாலம் மூன்றுங்காண. (அ : 878)
5. பெருமை. தகைநேர் வண்புகழ். (கி : 404) தகையறு பிறவி. (கி : 656)
6. நன்மை. தகையுறு அத்தழலின் நாப்பண். (பா : 429)
7. இயற்கைப் பண்புகள். அஞ்சொற்கள் குழறித் தத்தம் தகை தடுமாறி நின்றார். (பா : 1220)
8. திறமை. தகுந்தகை யமைந்து மத்தன்மை செய்திலேன். (கி : 695)
9. செய்தி. தக்கான் போனான் வனமென்னும் தகையு முணர்ந் தார். (அ ; 615)

10. அருள். மனுவின் வந்த திறத்தகை இராமன் என்னும் சேவகன். (சு : 30)

11. தன்மை. மிகுந்தகை நினைப்பு முற்ற. (சு : 309)

12. தகுதி. தகைநேர் வண்புகழ். (உ.வி) (கி : 404)

13. இனிமை. தகையின் நீங்கிய திருமுகம். (யுத் : 2596)

தகைசால் மணி - ஒளிவிடுகின்ற தகுதி நிறைந்த மாணிக்கம். தாட்டிணைக் குடையுந் தகை சான்மணி மேட்டிமைப்பன. (பா : 58)

தகைத்தல் - தடுத்து வைத்தல். தஞ்சென ஆருளர் ஆண்மை தகைந்தார். (யுத் : 2260)

தகைத்தன்மை - தகுதி. இத்தன்மையுடையது எனும் தகுதி. தருமம் இன்னது எனும் தகைத்தன்மையும் இருமையுந் தெரிந்தெண்ணலை. (கி : 338)

தகைதர - சிறப்புண்டாகுமாறு. கன்னியர்க் கமைவருங் கற்பின் மாநிலந்தன்னை இத்தகைதர. (அ : 15)

தகைதல் - 1. எதிர்த்தல். மற்றவன் தார் கிடந்ததோள் தகைய வல்லதோ. (கி : 121)

2. கட்டுப்படல். தடையுறு மந்திரம் தகைந்த நாகம்போல். (சு : 224)

தகைப்பு - 1. தடுத்தல். தீமையும் தகைப்பும் நீங்கி. (யுத் : 1883) [பா : பே]

2. சோர்வு. தகைப்பில் தானே படர்நெறி படர்ந்த தன்றே. (சு : 1335)

தகைப்புலத்தோர் - தகுதியுடையவர்கள். தடுக்கும் நினைவினர். (கலா) பற்றுன் மிக்க தகைப்புலத்தோர். (யுத் : 410)

தகைப்புலம் - கருத்திற்குத் தடையாயுள்ள இடம். தன் கொள்கையைத் தடுக்குமிடம். அவர் தகைப்புலந் துறந்து போய்ச் சார்தலன்றியே. (யுத் : 371)

தகைபெற - அழகெழ. அழகு பொருந்த. பல்கணைப் புட்டிலும் தகைபெறக் கட்டி. (யுத் : 1451)

தகை மென் பூ - அழகிய மெல்லிய மலர்கள். (யுத் : 3655)

தகைமேவருகலம் - அழகு பொருந்திய அணிகலங்கள். தாவரு நாண்முதல் அணியலால் தகைமேவரு கலங்களை வெறுத்த மேனியர். (அ : 967)

தகைமை - 1. மேன்மை, மகத்துவம். பெருந்தகைமைத் தயரதன் தன் புதல்வரிவர் என அவர் தகைமை கூறலுற்றான். (பா : 720)
2. தன்மை. கொம்பனாட்கு இங்கடுத்த தகைமை இயம்புவாம். (ஆ : 813) மன்னன் தகைமை காணவாராய். (அ : 332)

தகைய - வலிமையுள்ள. தோள்தகையத் துறு மலர்த்தார் இகலரக்கர். (ஆ : 359)

தகையர் - தன்மையர். தருமந் தகவுமிவர் தனமெனுந் தகையர். (கி : 50)

தகையழிதல் - வலிமைக்குணம் அழிதல். முதல் மூவராந் தலைவரும் முனையிற் போவராந் தகையழிவராம். (யுத் : 512)

தகையேர் கடாங் கலவை - அழகுமிக அமைத்த சந்தனக் கலவை. தாமந்தாம் தகை ஏர் கடாங் கலவை தாங் கமழ்ந்தின்று என்பரால். (அ : 980)

தகையொளி - சிறந்த ஒளி. பொற்கழலின் தகையொளி நெடு நிலந் தடவ. (சு : 412)

தகையோர் - அழகுடையோர். தன்னைப் போல் தகையோரில்லாத் தளிரைப்போ லடியின்னாளும் என்னைப்போலிடையே வந்தாள். (ஆ : 286)

தகைவாணகர் - தகை வாள் நகர்; பெருமையுடைய ஒளிமிக்க அயோத்தி நகரம். (யுத் : 2639)

தகைவு - தடை. தடுத்தல். தளர்ந்த போதுந் தகைவேயோ. (கி : 24)

தகைவென் - தடுத்து வைப்பேன். இன்றேகாதவண்ணம் தகை வென் உலகோடென்று. (அ : 362)

தங்கு - ஒப்புருபு. விற்றங்கு புருவம். (பா : 1160)

தங்குதல் - 1. நிலைத்து நிற்றல். பசையில்தங்கலில் சிந்தையர். (யுத் : 210)
2. அடங்கிவிடுதல். தடைப்படுதல். தலையறப்பட்டதல்லால் உடல்காரில் தங்கிற்றுண்டோ. (யுத் ; 1236)
3. நிலைத்தல். தங்கு மாதவம் புரிதலும். (பா : 527)
4. நின்று விடுதல். குரங்கிற் றங்குமோ. (யுத் : 32)

தங்கையர் - இளையசகோதரிமார். உன்னும் என் தங்கையர். (அ : 570)

தச்ச - தைத்த. உச்சவீரன் கைச்சுடுசர நிருதர் நெஞ்சுருவத் தச்சு நின்றன கண்டனர். (ஆ । 506)

தச்சன் - 1. தச்சுத் தொழில் செய்பவன். விரிகட்டிற்றட்டான் கொல்லன் வெஞ்சினத் தச்சன் வெய்யோன். (யுத் : 2385)
2. சிற்பி. அரியன தச்சற்குமுதவி. (யுத் : 16)

தசங்கம் - (தசாங்கம்) ஆறு, மலை, யானை, குதிரை, நாடு, ஊர், கொடி, முரசு, தார், தேர் என்பன. போர்த தசங்கப் படகம் புதைத்திட. (யுத் : 1061)

தசநவம் - தசார்ணவம். தசநவப் பெயர்ச் சரள சண்பகம். (கி : 906)

தசமுகக்கூற்றம் - தசமுகனாகிய யமன். உண்ணுஞ் செய்கையத் தசமுகக் கூற்றம். (யுத் : 518)

தசமுகத்தான் - இராவணன். தட்ட உயரத்தினிலுறுந் தசமுகத் தான். (யுத் : 854)

தசமுகன் - இராவணன். தசமுகன் தனக்கு மாதுலர். (பா : 382) (யுத் : 1532)

தசமுகன் தனயன் - இராவணன் மகன். (யுத் : 2063)

தசமுகன் தனிமகன் - இராவணனது தனிப்புதல்வன். (யுத் : 2470)

தசமுகன் தோன்றல் - இந்திரசித்து. யாருஞ் சுற்றினரின்றித் தோன்றும் தசமுகன் தோன்றல் துள்ளி. (யுத் : 2052)

தசரத ராமன் - தசரதன் மகனாகிய இராமன். தழைத்து வண்டிமிருந் தண்டார்த் தசரத ராமன் என்பான். (பா : 557)

தசரதன் - இராமபிரான் தந்தை. தசரதனென்றுயர் கீர்த்திச் செங்கோல் வேந்தன். (பா : 244)

தசரதன் சிறுவன் - இராமன். (யுத் : 1607)

தசும்பு - 1. கலசம். அத்தசும்புடைக் கொடுந்தேர். (யுத் : 1910)
2. குடம். துணைக்கட் டசும்பு வேய்ந்தவர் ஒத்தவர். (அ : 772)
3. சஞ்சரிக்கின்ற. ததும்பு என்பது எதுகை நோக்கி விகாரப் பட்டது. தசும்பு நுண்ணெடுங் கோளொடு. (யுத் : 2559)
4. பாலிகைப்பாத்திரம். விசும்பிடைத் தசும்பூடுகுத்த செக்கரிற் பிறைக்குல முளைத்தன ஒக்க. (யுத் : 3618)

தசும்பு நுண்ணெடுங் கோள் - சஞ்சரிக்குந் தன்மையுள்ள நுண்ணிய நெடிய கிரகங்கள். (யுத் : 2559)

தசை - ஊன். தசைக் கொளீஇ. (யுத் : 1291)

தசைத்தோல் - 1. தசையோடு சம்பந்தப்பட்ட தோல். துடித்தன தசைத் தோல். (ஆ : 532)

2. தசையுந் தோலும். (யுத் : 1565)

தஞ்ச நற்றுணைவனை தவறிலாப் புகழான் - விபீடணன். தஞ்சமடைந்த நல்ல துணைவனை குற்றமில்லாத புகழையுடையவன். (யுத் : 410)

தஞ்சம் - 1. எளிமை. தஞ்சம் இவ்வுலகம் நீ தாங்குவாய். (அ : 945)
2. துணை. வேற்றார்கள் திறத்திவன் தஞ்சமென். (கி : 270)
3. தாழ்வு. தானே தானே தஞ்சமிலாதான். (அ : 594)
4. புகலிடம். இரட்சகம். தஞ்சமே உனக்கொரு பொருள் உணர்த்துகை தவிரேன். (அ : 165)
5. பற்றுக்கோடு. ஆதரவு. மாநிலம் தஞ்சமாக நீ தாங்கென்ற வாசகம் நஞ்சமோ. (அ : 305) அது தஞ்சென உணர்ந்திலை. (யுத் : 28)

தஞ்சு - 1. பற்றுக்கோடு. தஞ்சென மாதரை உள்ளலார்கள் தக்கோர். (அ : 202) (அ : 901)
2. எளியது. அஞ்சிறை அறுபத மடைந்த கீடத்தைத் தஞ்சனத் தன் மயமாக்குந் தன்மைபோல். (ஆ : 492)
3. தஞ்சம், புகலிடம். தஞ்சென மனிதர்பால் வைத்த சார்பினை. (யுத் : 314) (யுத் : 376)
4. குறைவு. எளிமையாகியது. அம்சாரியை குறைந்து வந்தது. நகை மழுவாளன் நாளும் தஞ்சென முன்னம் தானே தாதைபாற் கொடுத்து. (யுத் : 421)
5. அடைக்கலப் பொருள். என்னை வருக வென்றருள் செய்தானே தஞ்செனக்கருதினானே. (யுத் : 432)
6. நிலையானது. ஸ்திரம். தஞ்சென ஆருளர் ஆண்மை தகைந்தார். (யுத் : 2260)

தட்ட - தடுத்துக் கட்டப்பட்ட. தரங்கவேலை தட்ட இச் சேது வென்னும் இங்கு. (யுத் : 4089)

தட்டம் - தட்டு. அம்பொற்றட்ட மீது. (பா : 267) பால் நிறத்தட்டம். (கி : 772)

தட்டல் - 1. தடுத்தல், தடுத்து வைத்தல். வேலையைத் தட்டவா கண்டும். (யுத் : 738) அரக்கன் சிறை தட்டால். (யுத் : 2607) (யுத் : 4089)
2. அணைபோட்டுத் தடுத்தல். விரிகடல் தட்டான். (யுத் : 2385)

தட்டவாகண்டும் - தடுத்தவாற்றைப் பார்த்தும். வேலையைத் தட்டவாகண்டும். (யுத் : 738)

தட்டவுயரம் - தட்டுப்பட்ட திடர். தட்டவுயரத்தினில் உறுந்தச முகத்தான். (யுத் : 854)

தட்டான் - தடுத்தான். (தள் - பகுதி) விரிகடல் தட்டான். (யுத் : 2385)

தட்டு - தேரில் வீரன் இருக்குமிடம். தேரின் மேற்கூரை. கொடிஞ்சொடு தட்டும் அச்சும். (அ : 1044)

தட்டுதல் - 1. கண்ணுக்கு விஷயமாதல். தட்டுப்படுதல். தட்ட உயரத்தினில். (யுத் : 854)

2. தோள் கொட்டுதல். தட்டினர் தழுவினர். (யுத் : 2527)

தட்டுமுட்டாடுதல் - தட்டுமுட்டுப் பண்டங்கள் போலக் கலத்தல். தட்டு முட்டாடின தலையொடு தலைகள். (சு : 851)

தட - 1. பெரிய. தடங்கடல் வாய். (யுத் : 6)

2. அகன்ற. தடந்தாமரைத் திருமுகம். (யுத் : 2583)

3. பெருமை. தடங்கை. (யுத் : 2591)

தடக்கை - 1. வலக்கை. நான்முகன் படைக்கலம் தடக்கையிற் கொண்டான். (யுத் : 1034)

2. பெரிய திருக்கை. சங்கு சக்கரக் குறியுள்ள தடக்கை. (கி : 152) (யுத் : 280)

3. குளக்கரை. உந்தித் தறியிறத் தடக்கை சாய்த்து. (பா : 27)

தடங்கல் - பெரிய கல். (யுத் : 2015)

தடஞ்செய் தேர் - பெரிய தேர். தடஞ்செய் தேரினன். (அ : 1159)

தடஞ்செய் தேரினன் - சூரியன். (அ : 1159)

தடந்தரு தாமரை - பெருமையைக் கொண்ட செந்தாமரை. (வை.மு) பொய்கையிற் பூத்த தாமரை. (உ.வி) தடந்தரு தாமரைத் தாளுமேயல. (பா : 620)

தடந்துயில் - பெருந்துயில், பேருறக்கம். தட்டுறு குறங்குபோலத் தடந்துயில் கொள்வதானன். (யுத் : 1271)

தடந்தோள் - பெரிய தோள். ஏந்து தடந்தோள் இராமன். (அ : 387)

தட நெடுங்கிரி - பெரிய நீண்ட மலை. (சு : 842)

தடநீர் வேலை - மிக்க நீரையுடைய கடல். (யுத் : 725)

தடம் - 1. குளம், தடாகம். கண்ணினீர்ப் பெருந்தடம். (சு : 393) தடந்தரு தாமரைத்தாளுமேயல. (பா : 620)

2. பெருமை. விசாலம். தடங்கல் வரை. (யுத் : 2016) (உ. வி) (பா : 620)

3. கரை. மாறெனத் தடங்களைப் பொருது. (பா : 838)

4. அகன்ற நீர் நிலை. மைந்நீர்த் தடங்களும் மடுவும் சூழ்ந்த தண்ணறுஞ்சோலை. (பா : 977)

5. காடு. ஓங்கிய கற்றடங் காணுதி யென்னில். (அ : 658)

6. பக்கமலை. துவரின் நீண்மணித் தடந்தொறும் இடந்தொறும். (அ : 741) மருண்டமா மலைத்தடங்கள் செல்லலாவ அல்ல. (கி.233)

7. வழி. தந்தியும் பிடிகளும் தடங்கள் நோக்கின. (அ : 777)

8. மணற் குன்று. அன்னசுடர் மணித் தடங்கள் கண்டான். (ஆ : 228)

9. நதி. காரிரீர்த்துப் புகமண்டும் தடஞ்சுழிகள். (யுத் : 3568)

10. அகலம். தடத்த பேருலகத்தேயோ. (யுத் : 1246) தட மார்பிடைக் குளித்த அம்பு. (ஆ : 512)

11. மலை. மலைத்தடம். தழைத்த பொன் முலைத்தடங் கடந்தருவி போற்றுழ. (சு : 335)

12. ஓம குண்டம். வேதிகை தடந்தோறு அந்தியிடு அகிற்புகை நுழைந்த குளிரன்னம். (கி : 519)

13. தாழ்வரை. பேழ்வயிற்றரவுரி தடங்கள் தோறும் நின்றுடுவ. (அ : 740)

14. இடம். சிலைத்தடம் பொழி வயக்கடும் பகழி. (யுத் : 2016)

தடம்படுபுயம் - பெருமை வாய்ந்த தோள். தடம்படு புயத்த சிறு தம்பியர்கள். (பா : 1245)

தடம் பெருங்கண்ணினாள் - அகன்ற பெரிய கண்களையுடைய சீதா பிராட்டி. (ஆ : 1045)

தடமதில் - பெரியமதில். கனக மாடத்தடமதிலயோத்தி. (கி : 70)

தடவரை - பெரிய மலை. தடவரை கொண்டு சீறி. (யுத் : 1025)

தடவி - தேடி. நானிலந் தடவித் தோட்டு நுங்கினர் புவியினைப் பாதலந் தோன்ற. (பா : 514)

தடவித் தேடி - தேடிக் கண்டுபிடித்து. பிணந்தொறுந் தடவித் தேடிக் கொன்றனன். (சு : 786)

தடவுதல் - 1. வருடுதல். தோய்தல். முகிற் குலந்தடவுந்தோறும் நனைவன. (பா ; 567) அடிதடவ. (ஆ : 1083)

2. ஆாத்தல். அடி தடவப்பட அரவ மிசைக்கும் கடி தடம். (ஆ : 1083)

3. சிந்துதல். தடி தடவப் பல தலை தழுவ. (ஆ : 1083)

4. தீண்டுதல். கிட்டுதல். இவர் கண மழையைத் தடவ. (யுத் : 3232) சென்னி வான் தடவும்... (யுத் : 804) திசையையும் தடவும் அத்தானை. (யுத் : 29) (கி : 3261)

5. சோதித்தல். தடவும் ஆற்றலைக் கூற்றையும். (யுத் : 3514)

6. தேடுதல். தண்டகத்தையுந் தடவி ஏகினர். (கி : 909) அப்புறத் தண்டந்தோறுந் தடவின சில கையம்மா. (யுத் : 272) வேக வெம்பிலந்தடவி. (கி : 131) (யுத் : 3906)

7. அடைதல். திசை முகம் தடவும் சிகர மாளிகைத்தலம். (சு : 24)

8. பொருந்தல். தடிதடவப் பல தலை தழுவ. (ஆ : 1083)

தடறு - 1. நீர்க்கரை. நாரை வாழ் தடறு. (கி : 938)

2. மட்டை. (கலா) (கி : 938)

3. படைகளின் உறை. தடற்று வாளுருவி. (யுத் : 3149)

தடன் - பெருமை. தடனெக்கும் நிழல். (பா : 1056)

தடாது - தடையுருதபடி. தடா திருட்படலை மூட. (பா : 693)

தடி - 1. இடி. தடியுடை முகிற்குலம். (பா : 378)

2. ஊன். தடித்துண்டு. தடியுடை எயிற்றுப் பேழ்வாய்த் தாடகை. (பா : 415) தடிதடவப் பல தலைதழுவ. (ஆ : 1083)

3. தண்டாயுதம். நெடுந்தடி மிதந்தன. (ஆ : 451)

4. அளவு கோல். (வை. மு) (ஆ : 1083)

5. மின்னல். தடிவன மிடைந்தன தயங்குபூணொளி. (கி : 685)

6. கூர்மை. துங்க மார்பையுந் தோளையும் தடிக்கணை தூக்க. (யுத் : 2568)

தடிக்கணை - கூர்மையான அம்பு. (வை. மு) தடித்த அம்பு. (கலா) (யுத் : 2568)

தடித்தல் - பருத்தல். பூரித்தல். வேர்த்தனர் தடித்தனர். (அ : 124)

தடித்து - 1. மின்னல். தடித்தா மென்னத் தன்னெதிர் செல்லும் அழல் வேலை. (சு : 183)

2. இடி. தடித்து வீழ்வனவெனத் தகர்ந்து சிந்தின. (கி : 248)

தடித்தெறிதல் - மின்னல் வீசுதல். இக் கணத்தும் எறிப்ப தடித்தென. (யுத் : 3710)

தடிதல் - 1. அறுத்தல். தாளிரண்டையும் இரண்டு வெங்கணை களாற்றடிந்து. (ஆ : 501)
2. வெட்டுதல். தலைகளைத் தடிகின்றேம். (யுத் : 3185) தடிந் தனன். (யுத் : 2840) தடிந்தார். (சு : 792)
3. கொல்லுதல். கடுங்கணை தடியத்தாஞ்சில திண்டிறல் வலை யெயிற் றரக்கர் தேவராய். (ஆ : 488) தடிந்த. (யுத் : 1670)
4. துணிபடல். தாமச் சுடர் வாளி தடிந்தகல. (யுத் : 3460)
5. வெல்லுதல். உலகை நலி சம்பரனைத் தடிந்த அந்நாள். (ஆ : 199)

தடிந்து - தடிந்தேன். இறந்த காலத்தன்மை வினைமுற்று. சுக்கிரீவ நின் தோளுடை வன்மையால் தெசந் தொகு அக்கிரீவனைத் தடிந்து. (யுத் : 4071)

தடு - தடுத்தல். வேலையைத் தட்டவா கண்டும். (யுத் : 738)

தடுத்தல் - தடைசெய்தல். தகைதல். இடுமின் பன்மர மெங்கும் இயக்கறச் தடுமின். (யுத் : 965) தடுத்தல் அரியார். (யுத் : 3404) தடுக்கிலையாமெனின். (யுத் : 1525) தடுத்திலீர். (யுத் : 1679)

தடுப்பரும் சாபம் - தடுக்க முடியாத சாபமொழி. தடுப்பருஞ் சாபம் வல்ல வரந்தரு முனிவன். (பா : 554)

தடுப்பவர் - தடுத்து நிறுத்தவல்ல தலைவர்கள். தடுப்பவரின்மை தெரிந்தார். (யுத் : 1928)

தடுப்பென் - காப்பென். தத்துறலொழிநீ யானே தடுப்பென் நின் னுயிரை. (பா : 588)

தடுமாறுதல் - போவதும் வருவது மாதல். தள்ளியோடி அலைதடு மாறலால். (பா : 1042)

தடை - 1. தடுத்தல். இடை தடையில்லதை விட்டான். (யுத்:3043)
2. தடுத்தற் குரியது. தடை ஏதும்இல் சூலம். (யுத் : 1927)

தடைக்கரும் - தடை செய்வதற்கு அரிய, தடுத்தற் கரிய. தடைக் கரும் பெருவலிச் சம்பரப் பெயர். அவுணன். (ஆ : 1010)

தடை கொள்ளல் - தடுத்து நிறுத்தல். மேல் விடுவானை இடையே தடைகொண்டு. (யுத் : 1927)

தண் - குளிர்ச்சி. தண்ணிறை நெடுநிலாத் தழைத்தது எங்குமே. (பா : 1047)

தண்கதிர் - சந்திரன். வெங்கதிர் தண்கதிர் விலங்கி மீண்டன. (யுத் : 3747)

தண்கதிரோன் - சந்திரன். அயல் நின்றொளிர் தண் கதிரோன். (ஆ : 80)

தண்சாரல் - குளிர்ந்த தாழ்வரை. தண் சாரல் ஓங்கிய வேங்கடம். (கி : 769)

தண்டகநாடு - தொண்டை நாடு. தெண்டிரைத் தண்டக நாடு' (கி : 928) அன்ன தண்டக நாடு கடந்து. (கி : 937)

தண்டகம் - தண்டகாரணியம். ஓடிப் படர்ந்த தண்டகம் இவ்வுலகத் துளதன்றே. (அ : 611)

தண்டகவனம்- தண்டகாரணியம். தண்டகவனத்துறை தவத்துளோர் கள் தாம் கண்டனர் இராமனை. (ஆ : 120) (ஆ : 5) (யுத் . 4137)

தண்டம் - 1. யானை செல்வழி. தாறு பாய் கரி வகை தண்டத்தைத் தழுவி. (பா : 902)

2. தண்டனை. என்பால் தண்டத்தை இடுதியன்றே. (க : 934) என்பெரும் பழவினைத் தண்டமே அடியனேற் குறுபதந் தருவதே. (கி : 371)

3. கதை. தண்டம் கையின் வீசிய தக்க அரக்கன். (யுத் : 1915)

தண்டமிழ்த் தென்றல் - குளிர்ந்த இனிய தென்றல்: தண்டமிழ்த் தென்றலென்னுங் கோளரா. (ஆ : 1043)

தண்டமிழ் நிரம்பும் புலவர் - இனிய தமிழ்க்கவிகளை இயற்றும் புலவர். (யுத் : 1444)

தண்டமிழ்ப் பசுந் தென்றல் - குளிர்ந்த இனிமையான இளந் தென்றல். சாந்தளாவிய கலவை மேற்றவழ்வுறு தண்டமிழ்ப் பசுந் தென்றல். (அ : 305)

தண்டமிழ் யாழ் - தமிழ்நாட்டு இசைக் கருவியாகிய யாழ். (அண்) குளிர்ச்சி பொருந்திய இனிமைமிக்க யாழ். (கலா) (வை. மு) குறி நரம்பெறிவுற்று எழுவு தண்டமிழ் யாழினு மினிய சொற் கிளியே. (அ : 764)

தண்டல் - 1. கெடுதல். தண்டலில் தவஞ் செய்வோர். (ஆ : 721)

2. தவுறுதல். தண்டலில் உயிரெலாம் தன்னை நோக்கின. (சு : 593) தண்டலில் நெடுஞ் சிறை. (சு : 1280)

3. நீங்குதல். தண்டலில் மானம். (யுத் : 1509)

4. மாறுபாடு. தலைவனே முதல் தண்டலிலோர். (யுத் : 3637)
5. தடை. தண்டலில் நெடுந்திசை மூன்றுந்தாயினர். (சு : 1276)
6. போக்குதல். மன்னவன் கொண்டுபோமெனுங் கொள்கையைத் தண்டினுய். (சு : 1077)

தண்டலம் - குளிர்ந்த இடம். பசும்புல் தண்டலம். (யுத் : 3278)

தண்டலை - 1. சோலை. தண்டலை அயோத்தி. (அ : 740) தண்டலை மயில்களாட. (பா : 35) இனத்த தண்டலை நாட்டிருந்தேயும். (யுத் : 4127) தண்டலை மருதவைப்பு. (யுத் : 2367)
2. குளிர்ந்த இடத்தையுடையது. (சோலை) தண்டலைக் கோசலத் தலைவன். (சு : 477)
3. வயல். தண்டலை நெல்லினும் நீர் துறந்தன. (அ : 811)

தண்டலைப் பரப்பு - குளிர்ந்த சோலையிடங்கள். தண்டலைப் பரப்பும் சாலி வேலியுந் தழீ இயவை வப்பும். (பா : 43)

தண்டா - நீங்காத. தண்டா வென்றித்தானவன். (கி : 892)

தண்டாத - 1. நீங்காத. தடைபடாத. தண்டாத செங்கோல் தயரதன். (அ : 388)
2. தவருமல் அழிக்கவல்ல. தண்டாத வாளிதடிந்த தனிவார்த்தை யுண்டாள். (யுத் : 1670)

தண்டாமரைப்பூ - குளிர்ந்த தாமரைப்பூ. தண்டாமரைப்பூ நெருப்புற்ற தன்மையுற்ருள். (யுத் : 262)

தண்டாவனம் - தண்டகவனம். தண்டாவனஞ் செல்வதற்கே சனமந்தார்கள் தம்மை. (அ : 436)

தண்டிலம் - வெண்மணல். அக்கினியைப் பிரதிஷ்டிக்கின்ற இடத்திற்கு பரப்பும் மணல் (கலா) தண்டிலம் விரித்தனன் தருப்பை சாத்தினன். (பா : 1329)

தண்டு - 1. முக்கோல். பிரமதண்டம். குலவு நூன் முறைத் தண்டொடு பொலிதரு தடக்கையான் தனை. (பா : 252)
2. கதாயுதம். தண்டு போற் புயத்தான் தடுமாறினன். (பா : 1012) (பா : 104) தண்டு கொண்டெறிந்தான். (யுத் : 3772)
3. துடுப்பு. மயிற்பீலியார்த்த முகிமுடை முரண் தண்டு. (அ : 1050)
4. உள் தொளை யுள்ள பொருள். தண்டிருந்த பைந்தாமரைத் தாளற. (யுத் : 970)

5. கோல். எழு முனைத்தண்டு. (யுத் : 988)

6. கட்டிப்பட்ட பாளம். திருகிப் பொன்னெடுந் தண்டில் திரண்ட வால். (சு : 1193)

7. காலதண்டம். தண்டேந்திய கரதலத்தண்ணல். (அ : 569)

தண்டுதல் - 1. நீங்குதல். தண்டுதலின்றி ஒன்றி. (பா : 571) தண்டா வென்றித் தானவன். (கி : 892)

2. நீக்குதல். அரக்கனை மாய்த்து எனைக் கொண்டு மன்னவன் போமெனும் கொள்கையைத் தண்டினாய். சு : 1077)

3. தடைப்படுத்தல். தண்டலில் நெடுந்திசை மூன்றுந் தாயினர். (சு : 1276)

தண்டுலம் - விரித்தல் - வெண்மணலைப் பரப்புதல். தண்டுலம் விரித்தனன். (பா : 1329) [பா : பே]

தண்டுளி யருவி - குளிர்ந்த பல நீர்த்துளி வடிவான அருவி நீர்கள். (வை.மு) அலவு தண்டுளிய யருவிநீர். (அ : 761) (பா : பே)

தண்டுறை - குளிர்ந்த நீர்த்துறை. தண்டுறையோர் நாவாயினொரு தனியே தான் வந்தான். (அ : 1023)

தண்டெழுந்தணைய தோள் - ஓங்கிய தண்டாயுதம் போன்ற தோள். (ஆ : 36)

தண்டேந்திய கரதலத்தண்ணல் - காலதண்டத்தை ஏந்திய கையை யுடைய பெருமையுடைய யமன். பிரகர நெடுந்திசைப் பெருந் தண்டேந்திய கரதலத் தண்ணல். (ஆ : 569)

தண்டை - ஒரு காலணி. தண்டை தோள்வளை கடகமென்றியனையன. (யுத் : 1470)

தண்ணக்கடல் - தண்ணங்கடல் என்பதன் விகாரம். தண் அம் கடல் என்க. (வை.மு) குளிர்ச்சியுள்ள அழகிய கடல். (பா : 969) (பா : பே)

தண்ணகர் - குளிர்ந்த நகர். தண்ணகர் வாயில் நீங்கி. (ஆ : 211)

தண்ணமழை - குளிர்ந்த மேகம். தண்ணமழை மேலிடை தழைந்தது. (ச : 710)

தண்ணளி - குளிர்ந்த அருள். (கருணை) உற்றுடைய பெருவரமும் உகந்துடைய தண்ணளியும் உணர்ந்து நோக்கின். (யுத் : 408) தண்ணளிச் சனகன். (பா : 1116)

தண்ணளித்திரு - குளிர்ந்த தலையளி செய்தலாகிய செல்வம். சிறந்த ...ன் தண்ணளித் திருவைத் தேசழித்திறந்தனை யாமெனில். (அ : 840)

தண்ணளியின் சாலை போல்வான் - குளிர்ந்த அருளுக்கு உறைவிடம் போல்பவன். தயாவோடு தண்ணளியின் சாலை போல்வான். (பா : 215)

தண்ணற்கடல் - குளிர்ந்து அழகிய கடல். தண்ணற் கடலில் தனி சிறுது தரங்க நீங்கி. (பா : 969)

தண்ணறுந்தேறல் - குளிர்ச்சி பொருந்திய நல்ல கள். பொன் செய் தண்ணறுந் தேறல் வள்ளம். (பா : 1056)

தண்ணிறப் பாற்கடல் - குளிர்ந்த நிறமுள்ள பாற்கடல். தண்ணிறப் பாற்கடல் தழீஇய தாமென. (பா : 1037)

தண்ணிறை நெடுநிலா - குளிர்ச்சி நிறைந்த பெருநிலவு. (பா:1047)

தண்ணீர் - பருகுதற்குரிய குளிர்ந்த நீர். தண்ணீர் உள் நசை உலர்ந்த நாவர். (யுத் : 2116) (யுத் : 1930)

தண்ணுமை - மத்தளம். தழங்கிசை வழங்கும் வீணை தண்ணுமை அடைத்தன. (சு : 257)

தண்ணென் மொழி - குளிர்ந்த சொல். (கி : 30)

தண்ணென்றொழுக்கம் - குளிர்ச்சியான நல்ல ஒழுக்கம். குளிர்ச்சி யான பெருந்தன்மை. தண்ணென்றொழுக்க முந்தழுவிச் சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி. (ஆ : 225)

தண்ணெனுங் கானம் - குளிர்ந்த வனம். விரிந்த பூமழையினாலே தண்ணெனுங் கானம் நீங்கி. (பா : 419)

தண்தங்கல் - குளிர்ச்சி தங்கல். தங்கு தண் சாந்தகில் கலவை சார்ந்தில. (அ : 970) [பா : பே]

தண்புனல் - குளிர்ந்த நீர். தாதொடு ததும்பு பூந்திரைத் தண்புனல் சுட்டதால். (பா : 1037)

தண்மை - 1. எளிமை. ஓர் தண்மை அணு. (யுத் : 254)

2. இன்பம். பிறவிகள் உலப்பில் கோடிகள் தண்மையில் வெம்மையில் தழுவினவ்வெனும் வண்மை. (அ : 1136)

3. அற்பம். (உ. வி) (யுத் : 254)

4. குளிர்ச்சி. தண்ணிறை நெடு நிலா. (பா : 1047) (அ : 1131)

தணந் தாமரை - தண் அம் தாமரை, குளிர்ந்த அழகிய தாமரை. தணந் தாமரையின் தனிப் பகைஞன். (ஆ : 672)

தணப்பு - 1. பிரிதல். பிரிவு. நீங்குதல். தணப்பில் தாமரைச் சதுமுகன். (யுத் : 4018)

2. தடைசெய்தல். தாக்கிய தணப்பில் கால் எறிய. (ஆ : 1158)

தணல் - கனிந்த நெருப்பு மலைகளைத் தணற்செய்து. (சு : 1220)

தணி - குளிர்ச்சி. தண்மை. தணிமலர்த் திருமகள் தயங்கு மாளிகை. (பா : 143)

தணிக்குறு பகைஞர் - அடக்குதற்குரிய பகைவர். தணிக்குறு பகைஞரைத் தாழ்க என்தலை. (அ : 507)

தணித்தல் - அடக்கிக் கொள்ளுதல். கடிமதில் தணித்து நோக்கா. (அ : 90)

தணிதல் - 1. நிறைதல். தழுவி நின்றன பசியில தணிந்த. (அ : 730)

2. கோபந்தணிதல். தாயினுமினிய நீரே தணிதிரால். (கி : 620)

3. மகிழ்தல். தரைக்கு நாயகன் தாய் இனிநீ எனத் தணியா. (அ : 180)

4. வேகங்குறைதல். யானே செல எண்ணுவன் எய்த அவண் தானேர்வது நதெனவே தணிவேன். (யுத் : 2357)

5. குறைதல். குனிதல். கடிமதில் தணிந்து நோக்கா. (சு : 90)

தணிப்பு - ஓய்வு. தணிப்பில் வெஞ்சரம். (யுத் : 3428)

தணிமலர் - குளிர்ந்த செந்தாமரை மலர். தணிமலர்த் திருமகள் தயங்கு மாளிகை. (பா : 143)

தணிவன - தோய்வன. இடைவிடாது இயற்றப்படுவன. (அண்) தங்குவன. (கலா) தணிவன அறநெறி தணிவிலாதன. (பா : 125)

தணிவிலாதன - குன்றுதன. (பா : 125)

தணிவு - 1. சமாதானவார்த்தை. தடுத்து வல்லவா தணிவு செய்து. (கி : 134)

2. குறைவு. தணிவறப் பண்டு செய்த தவம். (யுத் : 2137)

தத்தமசெய்கை - தம்தமக்கு இயன்ற உதவிச் செயல்கள். நின்ற தேவர் நெடுந்திரை போரொடுஞ் சென்று தத்தம செய்கை புரிந்தனர். (யுத் : 3928)

தத்தமது - தந்தமதுடைய. உம்பர் தத்தம துள்ளம் நடுங்கவே. (யுத் : 1037)

தத்தி - தாவி. பாய்ந்து. பத்தோடு பத்தின் நெடும் பத்தியில் தத்தி. (ஆ : 925) தத்தி எதிர் சென்று. (யுத் : 847) தத்தி யுக. (சு . 559)

தத்தியுக - பாய்ந்தொழுக. விழியின் ஆலி முலைமுன்றில் தத்தியுக மென்குதலை தள்ள. (சு : 559)

தத்து - 1. தடுமாற்றம். தத்துறு சிந்தையர் தளருந்தேவர். (ஆ : 592)

2. கவலை. தத்துறுவதென்னை மனனே தளரல் அம்மா. (ஆ : 620)

தத்துதல் - 1. தாவிப்பாய்தல். தத்தி. (யுத் : 1027) தத்தினன் இலங்கைமூதூர்க் கோபுரத்தும்பர்ச் சார்ந்தான். (யுத் : 2813)

2. தாண்டுதல். தத்தின கடல் அது தவத்தினுயதோ. (சு : 587)

3. எங்கும் பரவுதல். தலைக்குவட் டணைந்த செக்கர் சரிந்தன குழல்கள் தத்தி. (யுத் : 1943)

4. ததும்புதல். ததும்பிவழிதல். தாவுதல். தத்தி வீழருவி. (யுத் : 4266) தத்துநீர்க் கடன் முழுவதுங் குருதியாய்த் தயங்க. (யுத் : 2306)

தத்துநீர்க்கடல் - தாவுகின்ற நீரையுடைய கடல். (யுத் : 2306)

தத்துவத்தின் தகை மூர்த்தி - பெரிய தத்துவ சொரூபி. தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி நீயாகின் இனி நின்ற முதற்றேவர் என் கொண்டென் செய்வாரே. (ஆ : 52)

தத்துவநிலை இற்றன்றே - உண்மை நிலைமை இத்தன்மைய தன்றே. நெஞ்சம் தருக்கினர் கெடுவரன்றே தத்துவ நிலை இற்றன்றே. (ஆ : 761)

தத்துவம் - 1. பரதத்துவம். சித்தென அருமறை தேறிய தத்துவம் அவன். (யுத் : 191)

2. மெய். மெய்ப்பொருள். தத்துவம் நண்ணினன். (அ : 119)

3. மெய்ம்மை. தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி நீயாகின். (ஆ : 52)

தத்துறல் - 1. துன்பப்படுதல். தத்துறல் ஒழிந்திலை தையல் நீ (சு : 645) (பா : பே)

2. தாவிப்பாய்தல். தத்துறு தடநீர் வேலை. (யுத் : 725)

தத்துறவு - 1. தடுமாற்றம். தத்துறு தடநீர் வேலை. (யுத் : 725) (சு : 645)

2. துன்பம். தத்துறு முயிரொடு புலன்கள் தள்ளுறும் பித்து. (சு : 675) தத்துறவு ஒழிந்திலை. (சு : 645)

தத்துறு சிந்தை - நிலைதவறித் தடுமாற்றங்கொள்ளும் மனம். (கலா) (வை.மு கலங்கிய மனம். (அண்) தத்துறு சிந்தையர் தளருந்தேவர். (ஆ : 592)

தத்துறுதல் - மனத்தடுமாற்றம். மனக்கலக்கம். துன்பம். தத்துற லொழிந்து நீள் தரும மோங்கவே. (பா : 283) தத்துறுவ தென்னை மனனே. (ஆ : 620)

2. தாவிச் செல்லுதல். தத்துறு தடநீர் வேலை. (யுத் : 725)

ததி - தயிர். பெருந்ததிக் கருந்தேன் மாறும் மரகதப் பெருங்குன்று (கி : 923)

ததி முகன் - மதுவனத்தைக் காவல் புரிந்த வானரவீரன். இனி யெமாற் செயலின் றென்னத் ததிமுகற் கியம்பினரே. (சு : 1264)

ததியின் வதனன் - ததிமுகன். ததியின் வதனன் சதவலி. (சு : 606)

ததும்பல் - 1. நிறைதல். கண்ணீர் ததும்பி. (யுத் : 9)

2. அசைதல். கொங்கைகள் ததும்பிட. (ஆ : 283)

ததை - 1. நெருக்கமான. ததையு மலர்த்தாரண்ணல். (பா : 713)

2. சிதையும். (கலா) (பா : 713)

ததைதல் - நெருங்கியிருத்தல். ததைமலர்த் தாமரை யன்னதாளினல். (பா : 141) ததையுமலர்த்தார். (பா : 713)

தந்த - 1. போன்ற. தேர் தந்த அல்குல் (ஆ : 637)

2. பூண்ட. வார்தந்த கொங்கை. (ஆ : 637)

3. பூத்த. தார் தந்த கமலத்தாளை. (ஆ : 637)

4. பயின்ற. மறை தந்த நாவால். (அ : 428)

தந்தம் - 1. பல். வன் தந்த வரி கொள் நாகம். (சு : 4)

2. தம்தம். தந்த மின்மையும் எளிமையும். (அ : 179)

தந்தி - ஆண்யானை. தந்தியும் பிடிகளும் தடங்கள் நோக்கின. (அ : 777) தந்தியின் நெடுமழை சிதறின. (யுத் : 1816)

தந்தியின் - யானைமீது. (யுத் : 1816)

தந்திரக் கடல் - சேனு சமுத்திரம். தந்திரக்கடலை நீந்தித் தன் பெரும் பலத்தைச் சார்ந்தான். (யுத் : 1347)

தந்திரச் சுற்றம் - சேனைத் தலைவர். தந்திரச் சுற்றத்தாரும் தன் கிளைச் சுற்றத்தாரும். யுத் : 1223)

தந்திரத் தலைமையோர் - சேனைத் தலைவர். மகோதரன் முதலோராய தந்திரத் தலைமையோரும். (யுத் : 2794)

தந்திரத்தலைவர் - சேனைத்தலைவர். தந்திரப் பெருந்தலைவரும் தலைத் தலையோரும் (யுத் : 3779) (அ : 736)

தந்திரம் - சேனை. தந்திரத் தலைவரும் தரணி பாலரும். (அ : 736) தந்திரம் காற்றுறு சாம்பல். (யுத் : 1315)

தந்திரி - யாழ். (வை. மு) நரம்புந் தானம். (கலா) (அண்) தந்திரி நெறியிற்றக்குறு கருவி தூக்கினர். (சு : 419)

தந்திரி நெறி - நரம்பின் முறை. (சு : 419)

தந்திரியர் - சேனைத்தலைவர். மந்திரியர் தந்திரியர். (யுத் : 4147)

தந்திருந்தனர் அருள் - நம்பால் அருள்செய்து அங்குத் தங்கியிருக்கின்றார்கள். (அண்) கருணையை நம்மிடத்தில் வைத்திருக்கின்றார்கள். (வை. மு. (கி : 93)

தந்தீக - கொடுத்தருள்வாய். செம்மையின் திருவடித்தலம் தந்தீகென. (அ : 1200) வேறிலா அன்பினுன் விடைதந்தீகென. அ : 572)

தந்தீயும் - தரும். தழல் வெங்கட் பேய் தந்தீயும். (அ : 214) உயிர் தந்தியும் மருந்து. (சு : 1322)

தந்து - 1. எறியப்பட்டு. தான் அறத்தந்து. (சு : 274

2. தெளிவித்து. கருமமென்றெரு பொருள் தந்து நாட்டுதல். (அ : 939)

3. புறந்தந்து. புரந்தரன் செருவில் தந்து போயது. (யுத் : 2405)

தந்துறு பயன் - தருகின்ற பயன், உதவுகின்ற பேறுகள். தந்துறு பயனிவை. (யுத் : 195)

தந்தை சார்விடம் - தந்தை தங்குமிடம். தனயனும் தந்தை சார்விடம் மேவினுன். (அ : 831)

தந்தை தந்தை - பாட்டன். தந்தை தந்தை பண்டுற்ற சழக்கெலாம் எந்தை தீர்த்தனன். (யுத் : 2101)

தந்தை தாயர் - தந்தையும் தாயும். தந்தைதாய ரென்றிவர்கள் தாமலால். (அ : 1172)

தந்தை துணை - தந்தையின் நண்பன். சுமந்திரன். தன் முன்னே யவன் தன்மை தந்தை துணை முந்துரைத்த சொல் முன்னே யுவக்கின்ற துரிசிலாத் திருமனத்தான். (அ : 1019) (பா : பே)

தந்தையர் - முதாதையர். கங்கையைத் தந்து தந்தையரை மீள்வில் இன்னுல கேற்றினன். (ஆ : 67

தந் நேரில்லா மங்கையர் - தமக்கு உவமையற்ற (கட்டழகு வாய்ந்த) சேடியர். (பா : 593

தப்பற - தவறுதல் இல்லாமல். இளைய வீரர்கள் தப்பற அடிநிழல் தழுவி ஏத்துற. (பா : 316)

தப்பின - தவறி விழ்ந்தன. தப்பின மணி காசும் சங்கமும். (பா : 1274)

தப்பு - 1. குற்றம். தப்பில் கார் நிறந் தவிர்ந்தது. (யுத் : 3272)
2. தவறுதல். தப்பறக் கொன்று. (யுத் : 3318)

தப்புதல் - 1. விடுதல். தப்புதி அறத்தை ஏழாய். (சு : 460)
2. தவறுதல். ஒழிவற முற்றும் பற்றித் தப்புதலின்றிக் கொன்று (யுத் : 272) தப்புமே. (யுத் : 567) தப்பிற் றவ்வுரை. (யுத் : 3394
3. தவறி வீழ்தல். தப்பின மணிகாசும் சங்கமும். (பா : 1274)

தபனன் - சூரியன். தபனன் மைந்தன் உறைதரும் புரமீ தென்றான். (யுத் : 4095)

தபனன் மைந்தன் - சுக்கிரீவன். (யுத் : 4095)

தபு - நீங்கிய. புரைதபு கமல நாட்டம். (அ : 588)

தபுதல் - 1. அற்றுப்போதல். புரை தபு தவம். (ஆ : 842)
2. நீங்குதல். அனையான் உயிர் தபுமேல். (பா : 1371

மதபுலே - நீங்குமேல். (பா : 1371)

தபோதர் - இருடிகள். தவமுனிவர். பின்னொர் வாசக முரைத்தனன் தபோதரிற் பெரியோன். (யுத் : 4109)

தபோதனர் - தவச்செல்வர். கடவுட் டிருநதி தங்கி வைகும் தபோ தனர் யாவரும். (அ : 627)

தபோதனன் - தவத்தையே தனமாக வுடையவன். என்னை யாளுடை நாயகன் எதிர் போய்ப் பன்று நான்மறைத் தபோதனன் தாண் மிசைப் புணிந்தான். (யுத் : 4105)

தம் - 1. சாரியை. நெடுங்கை தம்மை நீக்கி. (அ : 189) வயவர் தம் கணிச்சி. (அ : 754)
2. அசை. எண்ணருஞ் சுரும்புதம் மினத்துக் கல்லது. (அ : 994)
3. தம்முடைய. தார் கெழு புரவி யென்னுந் தம்மனம் தாவப் போனார். (சு : 824)

தம்பல் - தம்பலம்; ஈறு குறைந்தது. தாம்பூலம் என்பதன் சிதைவு என்றுங் கூறுவர். மேவரும் கோபமன்ன வெள்ளிலைத் தம்பல் கண்டார். (பா : 946) வெள்ளிலைத் தம்பற் குப்பை சிதர்ந்தென. (கி : 472)

தம்பற் குப்பை - வெற்றிலைத் தம்பலங்களின் திரள். (கி : 472)

தம்பால் - தம்மை. அனையவர் தம்பால் வாழ்வியாது. (யுத் : 185)

தம்பித்தல் - அசைவற்றிருத்தல். தம்பித்துயர் திசை யானைகள் தளர (பா : 1356)

தம்பியர் - தம்பிமார். (கி : 263) (யுத் : 1376)

தம்பியானவன் - தம்பியாகியவன், கும்பகருணன். (யுத் : 1312)

தம்பியோன் - தம்பியாவான். தாழ்விலா ஒரு தம்பியோன். (யுத்:1334)

தம்பிரான் - இறைவன். திருமால். அம்பிலே சிலையை நாட்டி அமரர்க்கன் றமுதமீந்த தம்பிரான் என்ன. (பாயி : 10)

தம்மடங்கு முனிவர் - தமக்குள்ளே அடங்கி ஒழுகும் முனிவர். தம் மடங்கு முனிவரையும் தலையடங்க நிலையடங்கச் சாய்த்த நாளின். (யுத் : 3868)

தம்மனமென மருட்டையலார் - தம் மனமென மருள் தையலார். தங்கள் மனம்போலப் பிறரை மயக்கவல்ல விலைமாதர். செம்மையின் முனிவரன் தொடரச் சென்றனர் தம்மன மெனமருள் தையலார்களே. (பா : 224)

தம்மனை - தாய். சானகி யெனும் பெயர் உலகின் தம்மனை. (யுத் : 87)

தம்மி - தாமரை. தாள் மிடைந்தன தம்மி மிடைந்தன. (பா : 845)

தம்மின் - தாருங்கள். விடைதம்மின். (கி : 1033) (யுத் : 3406)

தம்முயிர்க்குறுதி எண்ணார் - தம்முடைய உயிர்க்கு உறுதி தேட வேண்டும் என்று எண்ணாதவர்களாய். (அ : 9)

தம்முன் - தமயன். வானமாள என் தம்முனை வைத்தவன். (கி : 330) என் தம்முன் மாதவம் பூண்டனன். (அ : 863)

தம்முனர் - தமையனர். இராமபிரான். நிரந்தாந் தம்முனர் பந்தியங் கழற்பாத மருச்சியா. (யுத் : 4125)

தம்மையுணர்தல் . 1. தம்மை யறிதல்; அறிவு மயங்காதிருத்தல். தம்மையு முணர்ந்திலர்... சிலவர் முந்தினர். (அ : 466)
2. தம்மியல்புகளை யுணர்தல். தம்மையு முணர்ந்து தரை கண்டு விரைகின்ற செம்மையவர். (பா : 918)

தமதம எதிரெதிர் - தம்தமது எதிர்க் கெதிர். மத மழை போல்வன தமதம எதிரெதிர் பொருவன. (யுத் : 1811)

தமம் - இருள். தமம் திரண்டுலகி யாவையுந் தாவுற. (பா : 695)

தமர் - சுற்றத்தார். தம் உறவினர். தமரெலாம் வர உகந்தனைய தான முனிவன். (ஆ : 4) தமரைக் கூடினன். (யுத் : 1509)

தமரம் - ஓசை. பேரொலி. தமரமதுடன் வளர் சதுமறை. (பா : 305) தாக்கிய தமரம். (யுத் : 550)

தமனியக் கச்சு - பொன்னுலியன்ற கச்சு. மாசுணத்தின் தாள் வலந்தொளிர் தமனியக் கச்சொடு சார்த்தி. (யுத் : 3610)

தமனியக்கொம்பு - பொற்கொம்பு. வாணிமிர் மதியம் தள்ளுறச் சுமந்தெழுதரு தமனியக் கொம்பில். (அ : 57)

தமனியத்தறி - பொற்றூண். தானுடை உதயமென்னும் தமனியத் தறியினின்று. (பா : 975)

தமனியம் - பொன். தமனியப் பெருமலை. (யுத் : 478) தமனிய அரங்கு. (சு : 201)

தமனிய வரங்கு - பொன்மயமான நாடக மேடை. (சு : 201)

தமாலம் - பச்சிலை மரம். தாளினேலமும் தமாலமும் தழைதரு சாரல். (அ : 738)

தமி - தனி. தமியை பிறரில்லை. (யுத் : 289)

தமியள் - தனியளாய். தன்னந்தனியளாய். தமியள் எய்திய தையலை நோக்கினன். (அ : 1148) (அ : 288)

தமியன்' - தனியன். உலகளித்து யோகின் எய்திய சக்கரத் தவனெனத் தமியனுயினன். (அ : 9) (அ : 298) (ஆ : 624)

தமியிர் இருக்கின்றீர் - தனியாக இருக்கின்றீர். ஏகென்றிருக்கின்றீர் தமியிர். (ஆ : 828)

தமியேன் - 1. கதியற்றவன். தமியனேனுக்குயிர் தந்த உதவியோனே (யுத் : 867)
2. தனியாக உள்ளேன். தமியேன் என்னுது என்னே இம் மூப்பிடையே வெறுத்தாய். (அ : 353)

தமியை - 1. தனியளாய். துணையுமின்றித் தமியை நீ வருதற்கொத்த தன்மையென் தையல். (ஆ : 266)
2. தனித்துள்ளாய். தாரை நிலையை தமியை பிறரில்லை. (யுத்:289)

தமிழ் - 1. இனிமை. தண்டமிழ்ப் பசுந் தென்றல். [சு : 305] தண்டமிழ் யாழ். (அ : 764) தமிழ்ப் பாட்டிசைக்குந் தாமரையே. (கி : 29)
2. தமிழ் மொழி. தழற் புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான். (ஆ : 158) தமிழெனும் அளப்பருஞ் சலதிதந்தவன். (பா : 379) தமிழ் நிகர் நறவம். (கி : 854)

தமிழ்ச் சங்கம் - பாண்டி நாட்டிலிருந்த தமிழ் ஆராய்ந்த சங்கம். தென்தமிழ் நாட்டகன் பொதியில் தமிழ்ச் சங்கம் சேர்கிற்பிரேல். (கி : 774)

தமிழ்த் தலைவன் - அகத்தியன். தமிழ்த் தலைவனை நிகர்த்தது அத் தயங்கு தானையே. (அ : 977)

தமிழ்த் தென்றல் - குளிர்ந்த இனிமையுடைய தென்றல். தண் டமிழ்த் தென்றலென்னுங் கோளரா. (ஆ : 1043)

தமிழ் நாடு - செந்தமிழ் நாடு. (பாண்டிநாடு) அகன் தமிழ் நாட்டிற் பெயர்திர் மாதோ. (கி : 773) தென்றமிழ் நாடு. (கி : 774)

தமிழ் நெறி வழக்கம் - தமிழர் நெறியில் மரபாக உள்ள வழக்குகள். வரையாது பொருள் வழங்குதல் போன்றன. (வை. மு) தமிழுக் குரிய அகப்பொருளில் வரும் நெறிமுறை. (அண்) தமிழ்நெறி வழக்கமன்னத் தனிச்சிலை வழங்கச் சாய்ந்தார். (யுத் : 3603)

தமிழ்ப்பா - தமிழ்ப்பாடல். முந்திய நாவினர் உரையின்படி நான் தமிழ்ப்பாவினலிது உணர்த்திய பண்பரோ. (பா : 10)

தமிழ்ப்பாட்டு - இனிய பாடல். குழல் வண்டு தமிழ்ப் பாட்டிசைக் குந்தாமரையே. (கி : 29)

தமிழ் முனி - அகத்தியர். முன்னம் வேலையை முழுவதுங் குடித்தது முறையீது என்ன மீட்டுமிழ் தமிழ் முனி யொத்ததவ் விலங்கை. (யுத் : 2495) (பா : பே) (யுத் : 2899) மாறிலாத் தமிழ் முனி. (யுத் : 4199)

தமிழ் முனிவன் - அகத்தியர். இது தமிழ் முனிவன் வைகும் இயல் தரு குன்றம். (யுத் : 4094)

தமிழ் யாழ் - தமிழ் நாட்டின் இசைக் கருவியாகிய யாழ். குறி நரம் பெறிவுற்றெழுவு தண்டமிழ் யாழினும் இனிய சொற்கிளியே. (அ:764)

தமிழெனும் அளப்பருஞ் சலதி - தமிழ் மொழி என்னும் யாவராலும் அளவிடுதற்கரிய கடல். (பா : 379)

தமிழெனும் அளப்பருஞ் சலதி தந்தவன் - அகத்தியர். (பா : 379)

தமையன் - அண்ணன். தன்றுணைத் தமையன். (கி:579) (யுத்:1376)

தயங்குதல் - 1. விட்டு விட்டுப் பிரகாசித்தல்.
2. விளங்குதல். தாலியம் பெரு மலை தயங்கக் காண்டியால். (சு : 661) தயங்குறச் சூழவிட்டதொடு புலிவாலினன். (அ : 648)
3. திகைத்தல். தயங்கு பேரிருள் சூழ் ஆழிமா நிலம். [கி : 160

தய்த்த - தைத்த. தய்த்த அம் பொடுந் திரிந்தன சரலயின் சாலம். (யுத் : 559)

தய்யல் - தையல். கட்டழகுள்ளவள். தய்யலை இராமன் மேனி தைத்த வேற்றடங்கணாளை. (யுத் : 2655) (யுத் : 2859)

தயங்குற - விளக்கம் மிக. (அ : 648)

தயமுகன் - இராவணன். தயமுகன் தருகென்றேய மன்னுடைச் சேனை. (சு : 814)

தயமுகனர் - இராவணன். ஆக்கரிய மூக்குங்கை அரியுண்டாள் என்முறை நாக்கரியுந் தயமுகனர். (ஆ : 349)

தயரதப் பெயரினன் - தசரதன் என்னும் பெயரையுடைய அரசன். (யுத் : 94)

தயரத ராமன் - தசரதன் புதல்வனான இராமபிரான். (பா : 557) (பா : பே) (யுத் : 4303)

தயரதன் - தசரதன். அயன் புதல்வன் தயரதனை அறியாதார் இல்லை. (பா : 733) பெருந்தகைமைத் தயரதன். (பா : 720)

தயரதன் சேய் - இராமபிரான். (ஆ : 529)

தயரதனர் - தசரதன். வேந்தர்பிரான் தயரதனர். (யுத் : 3908)

தயல் - தையல். சனகன் தருதயலும். (பா : 1349)

தயா - தயை. அன்பு. கருணை. தயா வெனும் ஈரம். (சு : 636) மாதயாவுடைய தன் கணவன். (ஆ : 39) (பா : 215) (யுத் : 3957)

தயா நிலை - அருளின் இருப்பிடம். தனி அறத்தின் தாயே தயா நிலையே. (அ : 1125)

தயா முதல் அறம் - அருளாகிய முதல் அறம். தயா முதல் அறத்தினைத் தழீஇய தென்னவே. (அ : 1120)

தயாவிலி - அருளற்ற கொடியை. தயையிலி என வரற்பாலது இயல் பாய் நின்றது. (கலா) வன்றயா விலி என்ன வருந்தினன். (கி : 33)

தயாவு - தயை. விடுவதோர் தயாவு தாங்கலால். (ஆ : 685)

தயிர் - தயிர்க்கட்டி. தயிருடைக்கும் மத்தென்ன உலகைநலி சம்பரன். (ஆ : 199) தோயும் வெண்டயிர். (பா : 59) தாழிப்படுதயிர். (சு : 959)

தயிர்க்கண்டம் - தயிர்க்கட்டி. முழுத்த நெய்யிற் செந்தயிர்க் கண்டம் இடையிடை செறிந்தசோறு. (பா : 50)

தயிர் தோய்பிரை - பால் தயிராதற்குரிய பிரை. (யுத் : 3033)

தயிருறு மத்து - தயிர் கடையும் மத்து. தயிருறு மத்திற் காம சரம்பட. (பா : 566)

தயிலக் கடல் - எண்ணெய் நிறைந்த பாத்திரம். தையற் கடல் நின்றெடுத்தவனைத் தயிலக்கடலின் தலையுய்த்தார். (அ : 606)

தயிலத் தோணி - எண்ணெய்த் தோணி. எண்ணெய்த்தாழி. தயிலக் கொப்பரை. தொன்னெறித் தயிலத் தோணி வளர்த்துவன். [யுத் : 3205] வளர்த்துமின். (யுத் : 3205) (பா: பே)

தயிலம் - எண்ணெய். தயிலக்கடல். (அ : 606)

தயை - அருள். தயையினெடு தண்ணளியின் சாலப்போல்வான். (பா : 215) (பா : பே)

தர்க்கு - தருக்கு. கொடுமை. நரகதர்க்கற நல்கு நலத்த நீர். (உ. வி) (அ : 1081)

தர - 1. கற்றுத்தர. உளரு மறையினெடொழிவரு கலையும்...... அரனிகர் முனிதரவே. (பா : 306)
2 ஒப்ப. தூண்தர நிவந்த தோளான். (அ : 1033)
3. தருக. தன்னிகர் முனிவனைத் தர விடை என்னு. (ஆ : 105)

தரக்கிற்றிகொல் - மீட்டுக் கொடுக்கவல்லையோ. தானவரைத் தலை தூமித் தென் வான்தரக்கிற்றிகொல் என்று குறையிரப்ப. (பா : 723)

தரங்கம் - அலை. தள்ளுநீர்ப் பெருங் கங்கைத் தரங்கத்தான்.(அ:636). நீர்த்தரங்க வேலை. (கி : 239)

தரங்கவார் குழல் - அலை போன்ற நீண்ட கூந்தல். தரங்கவார் குழல் தாமரைச் சீறடிக் கருங்கண் வாளுடையாளை. (பா : 850)

தரணி - உலகம். பூமி. தன் மாமகனுந் தானுந் தரணி பெறுமாறுன்னி. (அ : 367)

தரணி தாங்குதல் - உலகை ஆளுதல். தங்குலப் புதல்வரே தரணி தாங்கப்போய் வெங்குலப் புலன் கெடவீடு நண்ணினர். (அ : 17)

தரணிபாலர் - அரசர். தந்திரத் தலைவரும் தரணிபாலரும். (அ : 935)

தரணிபெறுதல் - தரணி உரிமையைப் பெறுதல். தன் மாமகனுந் தானும் தரணி பெறுமாறுன்னி. (அ : 367)

தரத்ததன்று - நிலைமையதன்று. அயனுக்கும் அரும்பெறல் தீர்த்தம் எம் போலியர் தரத்ததன்று. (அ : 720)

தரத்தர - 1. செய்து கொண்டேயிருக்கையில். தேவியர்கள் உன் மேல் ஒண்ணகை தரத்தர. (யுத் : 62)
2. கொடுத்துக் கொண்டேயிருக்கையில். கணக்கிலார் தாந்த மாற்றலுக் கேற்ற தரத்தர வேந்தவெற்பை ஒருவன் விரல்களால் ஏந்தி இட்டது. (யுத் : 737)

தரத்துவாசவர் - தரத்து உவாசவர். பெருமையுடைய உபாசனை செய்பவர். நீள் தரத்து வாசவர் வேள்வியர் தண்டகம். (யுத்:4101)

தரந்தரம் - வரிசை வரிசையாக. (அண்) இனமினமாக. (வை. மு) பரந்த தேர் களிறு பாய்புரவி பண்ணையில் தரந்தர நடந்தன. (பா : 1286)

தரம் - 1. வரிசை. பண்ணையில் தரந்தர நடந்தன. (பா : 1286)
2. தகுதி. தரம் பிறரின்மை யுன்னித் தருமமே தூது செல்ல. (பா : 565) ஒருவர் தரம் அடங்குவதன்றிது. (சு : 104) இம்பர் நாட்டின் தரமல்லள். (பா : 856)

3. உயர்ச்சி. மேன்மை. உயர்வு. கழங்குகள் சிந்திய தரம்பயில் தரங்கம். (பா : 919) தரத்தன. (கி. 161)

4. சிறப்பு. பெருமை. உத்தம இலக்கணம். மேன்மை. தரங்களின் அமைத்து. (ஆ : 238) தரம் பெறு தலைவர். (யுத் : 18)

5. வலிமை நின் தரமலாப் பெரியோர். (யுத் : 130) தரங்கெளர் தாதை (சு : 1266)

6. தன்மை. புன்றுணைப் பகழிக்கு ஒயுந்தரத்தரோ. (யுத் : 2185

7. தங்கசெயல். வேட்டம் முற்றல்... புகழுடைத்தாம் அன்று (ஆ : 794)

8. மேல்நிலை. அம் பொன் மாளிகைத் தரமுறு நிலைதொறும். (சு : 1056)

9. அளவு. நின் தரமலாப் பெரியோர். (யுத் : 130)

10. தகுதி. (தக்கார்) தரம் பிறர் இன்மையுன்னி. (பா : 565)

தரமல்லள் - தகுதிக்கேற்றவள் அல்லள். (பா : 856)

தரமலாப் பெரியோர் - வலிமை மேம்பட்ட பெரியோர். (யுத் : 130)

தரவு - கொண்டு வருதல். தருதல். வல்லையினைக்த் தரவு வேண்டினன் என்றனன் தாமரைக் கண்ணன். (யுத் : 2480)

தரளத்தாம்பு - முத்துமாலை. பூந்தாள மாதாம்பற்றென்ன மழைக் கண்ணீர் ஆலியுக. (அ : 394)

தரளத்தாமம் - முத்து மாலை. தரளத்தாமவிஞ்சையர். (யுத் : 3785)

தரளப்பத்தி - முத்துவரிசை. முத்துவரிசை போன்ற பல்வரிசை. பவள வாயத் தரளப்பத்தி. (யுத் : 3964)

தரளப்பந்தர் - முத்துப்பந்தல். வானிறத் தரளப்பந்தர். (யுத் : 797)

தரளம் - முத்து. பன்னந்துகு தரளந்தொகு படர்பந்திகள். (அ : 624) உயர் தரளம். (யுத் : 2307)

தரளவான் சிவிகை - முத்தாலியன்ற பெரிய பல்லக்கு. ஒன்றலா முழுமதியூரும் மானம் போல் சென்றன தரளவான் சிவிகையீட்டமே. (பா : 834)

தரள வெண்கொடி - வெண்ணிறமுடைய முத்தாரத்தின் ஒழுங்கு. மிக்கொளிர் கழுத்தணி தரள வெண்கொடி. (பா : 1299)

தரற் பாற்று - தருதற்குத் தகுதியுடையது. அமுது வேண்டுவ துண்டைய அவ்வரம் பழுதிலாமையினுற் றரற்பாற்றென்ருன். (யுத் : 4139)

தரன் - 1. தகுதியுடையவன். செய்து முடிக்குந்தரனல்லன். (யுத் : 3802)
2. ஆற்றல். செறிதாள் தரன். (சு : 1010)

தராதலம் - பூமிபாகிப இடம். தராதல முதலுலகனைத்துந் தள்ளுற. (பா : 1291) (யுத் : 2392) தராதல முழுதுங் காத்து. (யுத் : 4358) (யுத் : 4079)

தராதல மகள் - பூ மகள். தராதல மகளும் பூவிற்றையலும். (யுத்:4225)

தராதல வேந்தன் - சக்கரவர்த்தி. தசரதன். தராதல வேந்தன் மைந்தர். (யுத் : 2392)

தராபதி - அரசன். பெருந்தகையும் இவர் குலத்தோர் தராபதிகாண். (பா : 721)

தராவலபம் - பூ மண்டலம். தராவலப நேமியுழவன் தயரதப் பேர்ப் பராவரு நலத் தொருவன். (ஆ : 616)

தரிக்கல் - ஆறியிருத்தல். தரிக்கலாற்றன். (பா : 432)

தரித்தல் - தாங்கல். பொறுத்தல். மாற்றவள் தாதியர்க்கு ஆட்செயுத் தரிக்கிலேன். (அ : 151) தரிக்கு மாறுளதோ. (கி : 147) தரித்திலே. (யுத் : 3031) தரியாதானை. (யுத் : 2627)

தரீமுகன் - வானரப் படைத்தலைவன். ஆறைந்து கோடி சாகரத் தொடும் தரீமுகன் என்பவன் சார்ந்தான். (கி : 713)

தரு - 1. பொருந்தியிருந்தல். கணந்தரு குரங்கு. (யுத் : 1326)
2. கற்பகம். தருவுடைக் கடவுள் வேந்தன். (பா : 206)
3. மரம். உயர்ந்த வாழைத்தரு. (யுத் : 701)
4. ஒத்தல். பிடித்தரு நடையினள். (ஆ : 243) உலந்தரு வயிரத்திண்டோள். (பா : 984)
5. அடர்த்தி. தருவன மணியதோளான். (யுத் : 1941)

தருக்கினர் - செருக்குற்றூர். நெஞ்சந் தருக்கினர் கெடுவரன்றே. (ஆ : 761) [பா. பே]

தருக்கினேன் - செருக்குடையவனாகிய இராவணன். (யுத் : 3873)

தருக்கு - 1. வலிமை. வல்லமை. வீரம். (கலா) சாபமுந் தாங்கினர் எதிர் செயுந் தருக்கிலாமையின். (பா : 381) அரக்கர் புரி தீமை சிதைவெய்தத் தருக்கழிதரக் கடிது கொல்வது சமைந்தேன். (ஆ : 171)

2. திறமை.(வை.மு)மிகுதி. (அண்) உன்சிலை வலித்தருக்கினாலே புக்கவன் ஆவி கொண்டு போதுதி. (யுத் : 2894)
3. செருக்கு. அகங்காரம். தைரியம். வீரச்செருக்கு. தானொருவனுளனாக உரை செய்யுந் தருக்கிலரால். (சு : 326) (யுத் : 4030) தருக்கிரிப் பெரியானை. (யுத் : 1566) தருக்கும் போரிடை. (யுத் : 386)
4. களிப்புமேம் படுதல். தார்தந்த கமலத்தாளைத் தருக்கினர் கடையச் சங்க நீர் தந்தது. (ஆ : 637)
5. பெருமை. (வை.மு) பெருமிதம். பேராண்மை. (அண்) மற்றொருவன் புணர் தாரமாவது தரங்குந்தருக்கரோ. (அண்) (வை ப) (சு : 336) தருக்கலாந் தரத்ததல்லா வலியது தருக்கின் வாங்கி. (யுத் : 1407)
6. கொடுமை. தருக்குயர் சிறையுற்றன்னதகையள். (சு : 1315)
7. வலிமைபால் ஏற்றுக் கொள்ளும் செருக்குடைமை. (கலா) மற்றொருவன் புணர் தார மாவது தாங்கும் தருக்கதோ. (கி : 336) (பா : பே)
8. துணிவு. வானவரே முதலோரை வினவுவனேல்......உரை செய்யுந் தருக்கிலரால். (சு : 325)
9. பேராண்மை. கல்வியின் மெய்ந்நெறி வாரமாவது மற்றொருவன் புணர் தாரமாவது தாங்குந் தருக்கரோ. (கி : 336)

தருக்குதல் - அகங்கரித்தல். வருத்தல். தந்த உன்னை சென்று தருக்கிலான் முந்தையுற்றது சொற்ற முரிந்து நீ. (கி : 332) [பா : பே] தந்துலக் கிளைஞரைத் தருக்கும் போரிடைப் பொங்கு நர்க் கொன்றவர். (யுத் : 385)

தருதுவென் - அளிப்பேன். தருகுவென் வென்றி. (யுத் : 2810) (அ : 682)

தருகை 1 - கொடை. தருகை நீண்ட தயரதன். (பாயி : 30)
2. நிகழ்த்துதல். விளைத்தல். எதிர் இவை சொற்றனை இனிமேல் தருகைக்குரிய தொர் கொற்றமென். (யுத் : 1132)

தருணம் - இளமை. ஒவம் புதுக்கினரெனத் தருண மங்கையர் பொலிந்தார். (பா : 913) தருண வஞ்சிக் கொம்பு. (அ : 546)

தருணமங்கை - இளம் பருவத்தை யுடையவள். (தருணி) பருவப் பெண். (பிராட்டி) தருணமங்கையை மீட்பதோர் நெறி தருக என்னும் பொருள் நயந்து. (யுத் ; 539)

தருதல் - 1. கொள்ளுதல் தடந்தரு தாமரைத் தாளுமேயல. (பா : 620)

2. அழைத்து வருதல். தருதும். (அ : 954) ஈண்டு நம் தூதர் தம்மை இவ்வழித் தருதிர் என்றான். (யுத் : 1224) (பா : 1203)

3. கொணர்தல். என்றுனையாற் கொல்லலை தருகெனக் கூறுவீர் என்றான். (சு : 1070) தந்திலனே. (யுத் : 1685)

4. ஏந்துதல். வேல் தரு குமரர். (பா : 824)

5. ஒத்தல். உவமவுருபு. உலந்தரு வயிரத்திண்டோள். (பா : 986) மதியின் பாகந்தரு நுதலாள். (அ : 621)

6. படைத்தல். உண்டாக்குதல். தருதல் காக்குதல் தவிர்த்தல் என்றிவை செய்யத்தக்கான். (யுத் : 182) தருபரன். (யுத் : 198) மும்மையாம் உலகந்தந்த முதல்வற்கும் முதல்வன். (சு : 560) உலகு தந்தானும். (யுத் : 250)

7. நிறைதல். பரல் தருகானகம். (ஆ : 1116)

8. வார்தல். அறந்தரு வள்ளல். (ஆ : 868)

9. பொருந்துதல். மண்டலந்தரு கதிரவன். (யுத் : 142)

10. காத்தல். புறந்தருதல். பாதுகாத்தல். தன் வயிற்றகத்து வைத்துத் தந்தது அச்சியம் தாயின். (யுத் : 266)

11. அளித்தல். விடை தம்மின். (கி : 1033) தாராய் அமர். (யுத் : 1744) தாற் பாற்று. (யுத் : 4139) தருவென். (பா : 1063) இராமனைத் தருதி என்பால். (ஆ : 638)

12. நூல் முதலியன இயற்றுதல். சடையன் வெண்ணெய் நல்லூர் வயின் தந்ததே. (பா : 11)

13. ஓட்டுதல். எள்ளரிய தேர்தரு சுமந்திரன். (சு : 551)

14. கொடுத்தல். உண்டாக்குதல். வெற்றியுந் தருகுவர். (யுத் : 380) நோய் தந்தவனே நுவல் தீர்வுமெனு. (யுத் : 243)

15. பயிலுதல். வாய்தந்தன சொல்லி. (யுத் : 243)

16. தாமாகவந்தன. வாய் தந்தன கூறுதியோ. (அ : 428)

தருநற் கொத்த - தரவல்ல. கண்ணிய தருதற் கொத்த கற்பக தரு. (ஆ : 1197)

தருந்தருங் கனி - தருத்தருங் கனி. எதுகை நோக்கி மெலிந்தது. மரங்கள் தரும் பழங்கள். வருக்கை வாழை மாத் தருந்தருங் கனியொடு- (பா : 222)

தருநறை - நறைக்கொடி. சிந்து வாரத்தரு நறைத் தேக்கமில். (கி : 584)

தருப்பை - தருப்பைப் புல். காமர் வண் தருப்பையும். (யுத் : 2947) தருப்பை யென்னும் புல்லினல் தொடுத்து. (யுத் : 707)

தருபதஞ் சமைந்த முக்கோல் - மூவரும் ஒருவரே யென்ற கருத்தைந் தரும் சொற் பொருளமைந்த திரிதண்டம். (யுத் : 4204)

தருபரன் - அனைத்தையும் உண்டாக்குகின்ற பரம் பொருள். கருதின கருதின காட்டுகின்றது தருபரன் அருள். (யுத் : 197)

தரும் - 1. உவமவுருபு. கூரயில் தரும் கண்ணென. (கி : 479) [பா : பே]

2. தாரும் பெருந்தேன் இன் சொற் பெண்ணிவள் ஒப்பாள் ஒரு பெண்ணைத் தருந்தானென்ருல் நான் முகன் இன்னுந்தரலாமே (பா : 590)

தரும் தரும் 1. மேலும் மேலும் தருகின்ற. (உ. வி)

2. தருத்தரும் என்பது விகாரப்பட்டது. மரங்கள் தந்த. (வை.மு) வருக்கை வாழைமாத் தருந் தருங்கனியொடு தாழையின் பலம் அருந்தவ அருந்தென அருளினர் அரோ. (பா : 222)

தருமக் கற்பின் தெய்வதம் - அற நெறியாகிய கற்பின் தெய்வமாக இருப்பவள். (யுத் : 2859)

தருமங்காப்பான் - அறத்தைக் காப்பவனுகிய அனுமன். (யுத் : 2969)

தருமச்செல்வன் - தருமத்தைச் செல்வமாகக் கொண்ட இலக்குவன். அறப்பெருஞ் செல்வனுகிய இலக்குவன். (அண்) ஆரியன் கமல பாதமகத்திலும் புறத்துமாகச் சீரிய சென்னி சேர்த்துக் சென்றனன் தருமச் செல்வன். (யுத் : 2902)

தருமசீலன் - அற வொழுக்கத்தையுடையவன். இருமையே அரசாளுதி தரும சீல. (யுத் : 3932)

தருமத்தின் தனிமூர்த்தி - ஒப்பற்ற அறவுருவானவன். தாயாவார் யாவரே தருமத்தின் தனிமூர்த்தி. (ஆ : 53)

தருமத்தின் தனிமை தீர்ப்பான் - தருமத்துக்குத் துணையாய் நின்று உதவி அதன் தனிமையைப் போக்குபவனுகிய அனுமன். மேரு புயத்திற்கும் உவமை போதாத் தன்னுருக் கொண்டு நின்ருன் தருமத்தின் தனிமை தீர்ப்பான். (கி : 74)

தருமத்தின் தேவு - அறக்கடவுள். அறக்கடவுள் போல்பவன். (பரதன்) சேனுயர் தருமத்தின் தேவைச் செம்மையின் ஆணியை அன்னது நினைக்கலாகுமோ. (அ : 1112)

தருமத்தின் நெறி - தருமத்தின் வழி. இரக்கமே முதல் தருமத்தின் நெறி யொன்று மில்லா அரக்கர். (யுத் : 2503)

தருமத்திட்டினல் - தருமத்தின் பெருமையால். (யுத் : 3819)

தரும தயா - தருமமாகிய அருள் நெறி. (அண்) தருமமும் தயாவும். (வை.மு) தருமம் - இப்பிறப்பிற் செய்யட்படும் நல்வினை. தயை - இரக்கம். தரும தயாவினை. (கி : 827) தருமதயா இவை. (கி : 827) [பா : பே]

தருமதானம் - தருமத்தோடு கூடிய தானம். தருமதானமும் வந்தனை நீதியும் பிறவும். (யுத் : 406)

தரும நீதி - தருமமான நீதி நெறி. அறநெறி. தரும நீதியின் தற்பயனுவதுன் னருமமே யன்றிக் கண்டிலங் கண்களால். (யுத் : 4151) தம்முனைத் துறந்தது தரும நீதியோ. (யுத் : 368)

தருமப் பன்னியர் - மனைவிமார். தர்ம பத்தினிமார். முனிவர் தம் தருமப் பன்னியர் தூய நீராட்டினர். (சு : 1153)

தருமம் - 1. முறை. கற்றுணர்ந் தோய்க்கினிக் கடவ தருமமும் மிது தக்கதே நினைத்தனை. (அ : 35)
2. சடங்கு. தந்தை தன்வயிற் றருமம் யாவையும் முந்து நூலுளோர் முறையின் முற்றினன். (அ : 391)
3. அறம். சலமுத லறுத்தரும் தருமந் தாங்கினர். (அ : 6)
4. அறக்கடவுள். தருமமும் சலித்த தம்மா. (யுத் : 269)

தருமம் சலித்தல் - தருமதேவதை பயந்து நடுங்குதல். (யுத் : 269)

தருமம் தவிர்தல் - தருமம் நீங்குதல். அந்தோ தவிர்ந்தது தரும மம்மா. (யுத் : 2840)

தருமம் பார்ப்பார் - தருமத்தையே முக்கியமாகக் கருதுபவர்கள். தாயவை தந்தை மாரென் றுணர்வரோ தருமம் பார்ப்பார். (யுத் : 1360)

தருமம் போலி - தருமத்தின் வடிவம் போன்றவள். (கலா) அறத்தினைப் போன்றவள். தற்பிரிந்தருள்புரி தருமம் போலியை. (யுத் : 3980)

தருமமாவார் - தரும தேவதைகளாவார். இங்கு இவர்களோ தருமமாவார். (கி : 55)

தருமமூர்த்தி - தருமத்தை நிலைநிறுத்த அவதரித்தவன். தாதை சொல் தலைமேற் கொண்ட தாபதன் தருமமூர்த்தி. (யுத் : 2227) (யுத் : 325)

தரும வேலி - தருமத்தின் வேலி- (அண்) (வை. மு) தருமமாகிய வேலி. (கலா) விதியினுர் தரும வேலியைச் சிந்தினர். (ஆ:952)

தருமன் - தருமதேவதை. தரும னஞ்சுறு சரிதர். (கி : 51)

தருமன் அஞ்சுறு சரிதர் - தருமதேவதையும் அஞ்சத்தக்க ஒழுக்க முடையவர். (கி : 51)

தருவனம் - விரும்பியதைத் தரும் வனம். (சித்தாச்சிரமம்) (அண்) மரங்களடர்ந்த காடு. (வை. மு) மரமடர்ந்த வனம். (அண்)

சித்தியைத்தரும் வனம் ஸித்த வனம் என்பது வடமொழியிற் கண்டது. (கலா) தருவனத்தில் யானியற்றுந் தவ வேள்விக்கு. (பா : 326 தருவனமனைய தோளான். (யுத் : 1942) (யுத் : 848) (யுத் : 2705)

தருவித்தல் - விளைவித்தல். இத்தனை கேடும் தருவித்தேன். (யுத் : 2603)

தருவுடைக் கடவுள் வேந்தன் - கற்பக மரங்களையுடைய தேவர் தலைவனான இந்திரன். (பா : 206)

தரை - 1. நிலம். வீட்டு நிலம். பிரமரந்திரம். பரம்பொருள் தங்கும் தானம். தம்மையுமுணர்ந்து தரைகண்டு விரைகின்ற...... செம்மையவர். (பா : 918)

2. பூமி. தரையளித்த தனிநேமித்தயரதன். (ஆ : 360) (அ : 212)

தரைக்கு நாயகன் - பூமிக்கு அரசன். தரைக்கு நாயகன் தாய் இனி நீ. (அ : 180)

தரை காணுதல் - தரையில் விழுதல். காலுங்கரமுந் தரை கண்டன வால். (யுத் : 2916)

தரைப்படுதல் - தரையில் வீழ்ந்து அழிதல். இரதமாயிரம் சாதமாகத் தரைப்படச் சாடுமால். (யுத் : 2905)

தரை புகுதல் - பூமியில் அழுந்துதல். மதில் தரை புக்கதால். (யுத்:977)

தலங்கள் - நாடுகள். தலங்கள் யாவையும் பெற்றனன் தானெனத் தரிப்பான். (அ : 49)

தலஞ் சார்த்துதல் - தரையில் தள்ளுதல். தரையில் வீழ்த்துதல். கை எழுநான்கையும் தழுவும் வாளிகளால் தலஞ் சார்த்தினன். (ஆ : 386)

தலத்தலை - மண்ணின் மேல். தலத்தலை வீழ்ந்தேங்கினர். (அ : 392)

தலத்தனன் - நிலத்தில் வீழ்ந்தான். (யுத் : 2854)

தலத்திடைப் படுத்தல் - பூமியில் வீழ்த்துதல். பரிகொடு பரிகளைத் தலத்திடைப் படுத்தான். (சு : 841)

தலத்துளோர் - நாட்டு மக்கள். தீயவை இராமனே செய்யுமேல் அது தாய் செயலல்லவோ தலத்துளோர்க்கெலாம். (அ : 854)

தலப்பொறை - பூமிபாரம். உலப்பில் பல்லாண்டெலாம் உறுகணின்றியே தலப்பொறை யாற்றினேன். (பா : 262)

தலப்பொறை யாற்றல் - பூமி பாரத்தைத் தாங்குதல். (பா : 262)

தலம் - 1. நாடு. தலங்கள் யாவயும் பெற்றனன் தானெனத் தரிப்பான். (அ : 49) தலத்தியல் பன்று. (யுத் : 3203)
2. உலகு. பூமி. அவை தாய் செயலல்லவோ தலத்துளோர்க் கெலாம். (அ : 854) தலத்திடைப் புரண்ட. (யுத் : 1433) தலத்தனன். (யுத் : 1862)
3. தளவரிசை. சந்திர காந்தத்தின் தலத்த. (பா : 122)
4. (ஒருவர்க்குரிய) இடம். இந்திரன் எயில் தலைத்தகரத் தலத் தெற்றினன். (யுத் : 1284)

தலை - 1. இடம். தலைத்தலை வீழ்ந்து. (அ : 392)
2. நுனி. தாரை வன்தலைத் தண்ணிள ஆம்பல். (கி : 933) (கி : 161) கூர்த்த என் வேல்தலை. (யுத் : 1681)
3. சிகரம். வானுயர்ந்த கோட்டின் தலைகளும் நின் பொற்றுளின் தழுஃபினித் தவிர்ந்தவன்றே. (கி : 380)
4. தமிழ் உபசர்க்கம். தலை பொத்தினர் செவிகள். (யுத் : 1990)
5. தலைமை. அத்தலைத் தானையான் அளவிலாற்றலான். (உ. வி) (ஆ : 480) (பா : பே)

6. உத்தமாங்கம். சிரசு. தலைகள் பத்தும் சின்ன பின்னங்கள் செய்யச் செருக்களஞ் சேர்தல் நன்றே. (யுத் : 930)

7. ஆரம்பம். கடை கண்டில தலை கண்டில. (யுத் : 1828)

8. நெற்றி. புன்தலைக் குருதிநீர் முகத்தைக் கோத்தலும். (யுத் : 1507)

9. கருவிப் பொருள். முன்னர்க் கோசிகன் என்னு முனிவரன் தன்னருட் டலைதாங்கிய விஞ்சையும். (அ. 318)

தலைக்கலம் - மண்டையோடு. முப்புரங்களை எய்த வில்லியார் தலைக் கலத்திரந்தது தவத்தின் பாலதோ. (ஆ : 1007) கருந்தலைக் கலம். (யுத் : 2358)

தலைக்குவடு - உச்சி. சிகரத்துச்சி. மீமிசைச் சொல். தலைக்கு வட்டயன் மதிதவழும் மாளிகை. (அ : 490) தலைக்கு வட்டணைந்த செக்கர் சரிந்தன குழல்கள். (யுத் : 1943)

தலைக்கொண்டோடல் - அதிகப்பட்டு மேலேறுதல். மிகுதிப்பட்டுச் செல்லல். கழுதின் தேர்க்குலந் தானகங்கரிதலில் தலைக் கொண்டோடிப் போய் மேல் நிமிர்ந் தெழுந்திடின் விசும்பும் வேம் எனு. (பா : 354)

தலைக்கொள்ளல் - 1. மிகுதல். பொங்கி மேற்படல். மிகுதியாகக் கொள்ளுதல். சினந் தலைக்கொளக் கடித்தன. (யுத் : 218) சிலந்தலைக் கொண்ட சீயம். (அ : 742) சலந்தலைக் கொண்டனராய தன்மையார். (சு : 408)

2. தம்மிடத்துக் கொள்ளுதல். கரிகளும் பரிகளும் தலைக் கொண்டோடுகின்றன. (யுத் : 1195) (ஆ : 814)

3. ஏற்றுக்கொள்ளுதல். தலையிற் கொள்ளுதல். தலையால் ஏற்றுக் கொள்ளுதல். அது தலைக் கொண்டேகுதல் எனக் கருந்தவம். (அ : 562) என் சொல் தலைக் கொளத்தக்க தென்று கேட்கிற்பா யாகின். (யுத் : 1382)

தலை கட்டிய - தலையில் உறுதியாக அமைக்கப்பட்ட. கொம்புதலை கட்டிய குலக்கிரி கடுப்பான். (ஆ : 529)

தலைகள் தோறும் முடியுடை அரக்கன் - தலைபத்திலும் கிரீடம் அணிந்த இராவணன். (பா : 415)

தலைகாத்தல் - தலைதப்பி நிற்றல். வாழுலகந் தான்காப்போர் இனி உங்கள் தலை காத்து நின்று. (ஆ : 350)

தலை காலுதல் - தலைகளை வெளிக்காட்டுதல். வாளெயிற்றரவம் போல வன்றலை கான்ற. (கி : 471) (பா : பே)

தலைகொண்டு தரையுழுதுதல் - தலையினால் தரையை ஆழமாக மோதிக் கொள்ளுதல். தலையே கொண்டுற்றுழுந்தரை. (யுத்:2839)

தலைசுமந்திருகை நாற்றி - இரண்டு கையைத் தலைமேற் சுமந்து கொண்டு. தலையின்மீது வணக்கக் குறியாக இருகையையுங் குவித்துக் கொண்டு. தாதையைக் கொன்றான் பின்னே தலை சுமந்திருகை நாற்றிப் பேதையனென்ன வாழ்ந்தான் என்பதோர் பிழையுந் தீர்ந்தாய். (யுத் : 945)

தலைத்தலம் - தலையிடம். கால் தலைத்தலத்தொடுந் துணிய. (யுத் : 2939)

தலைத்தலை - 1. இடங்கள் தோறும். அவ்வவ் விடங்களில். தாவாத மன்னர் தலைத்தலைவீழ்ந் தேங்கினர். (அ:392) தாக்கிய திசைகள் தோறும் தலைத்தலை மயங்கி. (யுத் : 2002) (யுத் : 2939)
2. தலைக்குமேல். (வை. மு) மேலும் மேலும். (அண்) சீற்றந் தலைத்தலைச் சென்றுற. (யுத் : 3020)

தலைத்தலைச் சிறந்த காதல் - கணவன் தலைவியராகிய இருவரிடத்தும் மிக்கிருந்த காதற் பயனான காமவின்பம். தண்டுதலின்றி ஒன்றித் தலைத்தலை சிறந்த காதல் உண்டபின். (பா : 571)

தலைத்தலையோர் - தலைமை பெற்றுயர்ந்தோர். தந்திரப் பெருந்தலை வரும் தலைத்தலையோரும். (யுத் : 3779)

தலைதடுமாறல் - பாரந்தாங்காமல் தலைநிலை மாறுதல். அனந்தனும் தலை தடுமாற முரிநீராடை இரு நில மடந்தை முதுகுளு குற்றனள் முரல. (சு : 423)

தலைதாங்கிய - பெற்ற. (கலா) கோசிகன் என்னும் முனிவரன் தன்னருள் தலைதாங்கிய விஞ்சையும். (அ : 318)

தலை தாழ்தல் - தலை வணங்குதல். இள நங்கைமார் கண்முன் தணிக்குறு பகைஞரைத் தாழ்க என்தலை. (அ : 907)

தலைதுமித்தல் - தலையை வெட்டிக் கொல்லுதல். வெலற்கரிய தான வரைத் தலைதுமித்து. (பா : 723)

தலை தொடர்தல் - தலைமையாகப் பொருந்துதல். அயில் தலைத் தொடர் அங்கையன். (யுத் : 1284)

தலை தொறும் தலை தொறும் - ஒவ்வொரு தலையிலும். சகரநீர் வேலை தழுவிய கதிரிற் றலைதொறுந் தலைதொறுந் தயங்கும் வகைய பன் மருடம் இளவெயில் எறிப்ப. (சு : 407)

தலைநிற்றல் - 1. மேற் கொள்ள உடன்படல். யாது கொற்றவனே வியது அது செயலன்றோ நீதி எற்கென நினைந்தும் அப்பணி தலை நின்றான். (அ : 70)
2. ஏற்று நிற்றல். அதன்படி ஒழுகல். என்னுரை தலை நிற்பின் உலகம் ஏழும் ஏழும் உன் ஒரு மகற்காக்குவென் என்றான். (அ:177)
3. தலைமேற் கொண்டு நிற்றல். முயன்று நிற்றல். தந்தையும் தாயுநீரே தலைநின்றேன் பணிமின் என்றான். (அ : 291) வயவரும் அத்தொழில் தலை நின்றார். (யுத் : 214)
4. மேற் கொள்ளல். தவ வேடந் தலை நின்றான். (அ : 1022) தலை ர ன்றார். (யுத் : 214)

தலைப்படல் (தலைப்படுதல்) - 1. தொடங்குதல். யத்தனித்தல். தானைக் கடலோடு தலைப்படலும். (யுத் : 1764)
2. கிட்டுதல். எதிர்ப்படல். சேர்தல். தன்னையே நினைந்து நோற்குஞ் சவரியைத் தலைப்பட்டு. (ஆ : 1094) தாங்கரிய பேராற்றல் தாடகையே தலைப்பட்டாள். (பா : 743)

தலைப்பூசல் - தலையோடு முடிதலாகிய துன்பம். கொய்தலை பூசற் பட்டோர். (யுத் : 3599)

தலைப் பெய்தல் - ஒருங்கு கூடுதல். தாயருந்தலைப் பெய்து. (அ:1156)

தலைபத்துளான் - பத்துத் தலைகளையுடைய இராவணன். (ஆ : 1021)

தலை பொத்துதல் - மூடிக்கொள்ளுதல். தலை - உபசர்க்கம். நத்தொலி முரசொலி நடுக்கலாற் றலைபொத்தினர் செவிகளைப் புரந்தராதியர். (யுத் : 1990)

தலைமகன் - 1. மூத்த மகன். தலைமகன் சிலைத்தொழில். (பா : 819)
2. தலைவன். தலைமகன் வெகுண்ட போதும். (அ:9) (யுத் : 3885)

தலை மயக்குறுதல் - 1. சேர்தல். பெருஞ் செருத்தன்னில் வந்து தலை மயக்குற்றனர். (யுத் : 1008)
2. கலத்தல். தாங்கின கலுழி சென்று தலை மயக்குறுவ தம்மில். (கி : 473)

தலை மயங்குதல் - இடம் பெயர்ந்து செல்லல். ஆயருர்த் தயிரும் வேரியுந் தலைமயங்குமே. (பா : 86)

2. கலந்தல். சாறும் வேள்வியுந் தலை மயங்குமே. (பா : 87) (பா : 85)

தலைமாடு - உச்சியின் அருகு. (கலா) குடுமித் தலைமாடு கொண்டான். (சு : 59) (பா : பே)

தலைமிகல் - தலைக்கு மேலேறுதல். (அண்) மிகுந்து நிற்றல். (வை.மு) சலம் தலைமிக்கது. (அ : 198)

தலைமிசைத் தலைமிசை - சிகரங்கள் தோறும். மலைத்தலை மிசைத் தலை மிசைத்தாவிச் சென்றனர். (ஆ : 422)

தலை மூன்றுடையான் - திரிசிரன். ஆமா மெனத் தலை மூன்றுடையான் ஆர்த்து வந்தடர்த்தான். (யுத் : 853)

தலைமேற் கொள்ளல் - சிரமேற் கொண்டு கொண்டாடுதல். காகமுற்று மோர் கண்ணில வாக்கிய வேக வென்றியைத் தன் தலைமேற்கொள்வாள். (சு : 357)

தலைமை - தலைவராந் தன்மை. தலைமை கண்ணினர்த் தாழ்கிலா மணி முடித்தலங்கள். (யுத் : 3620)

தலையாய பேருணர்வு - முக்கியமான விஷயங்களையெல்லாம் அறிய வல்ல மூதறிவு. (வை. மு) கலைகளின் உயரிய உண்மைப் பொருளை உணர்தல். (அண்) தலையாய பேருணர்விற் கலைமகட்குந் தலைவராய். (பா : 743)

தலையாள் - ரதிகன். வில்லுடைத் தலையாளொடு சூதரை வீழ்த்த. (யுத் : 1435)

தலையான் - தலைகளையுடையவன். ஐந்தொடைந்துடைத் தலையான் (யுத் ; 3772)

தலையிடுதல் - உட்புகுதல். நாணித் தலையிடுகின்றிலன். (யுத்:1134)

தலையிற்றுங்கிய செங்கையள் - தலையின் மேல்வைத்துக் கொண்ட சிவந்த கையையுடையள். (ஆ : 583)

தலையெடுத்தல் - தலைதூக்கல். தலையெடுத்தின்னமும் மகளிர்த் தாழ்தியோ. (சு : 452) தலையெடுத்திலர். (யுத் : 1557)

தலையெடுத்து விழியாமை சமைப்பதே - தலையெடுத்து விழித்துப் பார்க்க வொண்ணாதபடி செய்திடுதல் மாத்திரமேயோ(உன்செயல்) (வை. மு) தலை நிமிர்த்துப் பார்க்காதபடி பங்கப்படுத்துவதோ.

(அண்) தேவரெதிர் தலையெடுத்து விழியாமை சமைப்பதே. (ஆ : 325)

தலையேந்துதல் - தலை மேற்கொள்ளல். அன்னவன் பணிதலையேந்தி. (அ : 459)

தலைவர் ஒருமூவர் - ஒப்பற்ற தலைவர்களான திரிமூர்த்திகள். தலைவர் ஒரு மூவர் தனிமான மிது தானே. (யுத் : 3657)

தலைவரல் - முதன்மையாக அமைதல். மிகுதல். மனந்தலை வருங் கனியின் இன்சுவை மறந்தார். (ஆ : 601)

தலைவரை இன்மை - தலைவர் இல்லாமை. அன்னவை காவல் செய் தலைவரை இன்மை கண்டிலம். (அ : 941)

தலைவீரர் - முன்னணியில் நிற்கும் வீரர். போன படைத்தலை விரர் தமக் கிரைபோதா இச்சேனை. (அ : 1012)

தலைவோர் - தலைவர்கள். சேனைத் தலைவோருந்தாமடைந்தார். (அ : 1133)

தவ்வல் - கெடுதல். தவ்வலில் ஆறு பத்தாயிரம். (யுத் : 4245)

தவ்வா - தவறாத. தவ்வா உண்மைக் காருகம் என்னும் படைத் தன்னால். (யுத் : 3808)

தவ்வாது - கூம்பாது. குவியாமல். தவ்வாது இரவும் பொலி தாமரையின். (ஆ : 75)

தவ்விடல் - 1. நீங்கல். தேவர் தானவர் வெருவல் தவ்விடத்தனி யருளு தாழ்சடைக் கடவுள் என. (கி : 46)

2. தவறிடல். அவனிடை எறிந்த விச்சுத் தவ்விட. (யுத்:1889)

தவ்விய - நிலைகெட்டழிந்த. அசனி ஏற்றினால் தவ்விய கிரியெனத் தரையில் வீழ்ந்தனன். (கி : 979)

தவ்வின - தவறிய. தவ்வின பணியுளதாகத்தான் கொலோ. (யுத்:42)

தவ்வின பணி - நிறைவேற்றத் தவறிய கட்டளை. (யுத் : 42)

தவ்வுதல் - 1. தவறுதல். தவ்வின பணி. (யுத் : 42)

2. நிலை கெட்டழிதல். தவ்விய கிரியென. (கி : 979)

தவ்வேலென - திடீரென்று. தவ்வேலென வந்தானவன் தனிவேலெனத்தகையான். (யுத் : 1832)

தவ்வை - 1. தமக்கை. தாயர் தவ்வையர் தன்றுணைச் சேடியர். (பா : 523)

2. மூதேவி. அயோத்தி வந்தடைந்த தவ்வையாமெனக் கிடந்தனள் கேகயன் தனயை. (அ : 185)

தவ்வையர் - தாய்மார்களும் தமக்கை முறையினரும். தாயர் தவ்வையர் தன்றுணைச் சேடியர். (பா : 614)

தவ - 1. மெலிய. (இதன் எதிர்மறை தவா) தானவர் வலிதவ நிமிர்ந்த தானையாய். (அ : 838)

2. கெட. துகள் தவத் தொழில் செய்து. (யுத் : 2098)

தவங்கருதல் - தவஞ் செய்தல். சரவங்க னிருந்து தவங்கருதும்...... வரச வனம். (ஆ : 74)

தவஞ் செய்த தவம் - தவஞ் செய்து பெற்ற பயன். ஒருவர் தரமடங்குவதன்றிது தவஞ் செய்த தவமால். (சு : 104)

தவஞ் செலுத்தல் - தவத்தை இடையூறின்றி முடித்தல். தென்றிசையதனை நண்ணிச் செய்தவம் செலுத்தும் வைகல். (பா : 671) (பா : பே)

தவண் மதி - தவள் மதி. வெண்ணிறமான மதி. தவண்மதி புனையான். (பா : 306)

தவத்தர் - தவத்திற்சிறந்தோர். (யுத் : 2483)

தவத்தி - கற்புடையாள். ஒருவன் இல்லுறை தவத்தியை இரங்காய். (யுத் : 63)

தவத்தின் குறை முடித்தல் - நித்திய தருமமாகிய இன்றியமையாச் செய்கையைச் செய்து முடித்தல். (ஆ : 338)

தவத்தின் பெருங்கடல் - பெருங்கடல் போற் பரந்த தவம். ஆவற்கண் நீ யுழன்ற அருந்தவத்தின் பெருங்கடற்கும். (யுத் : 3909)

தவத்தின் வாய்த்தல் - தவத்தின் பயனுகப் பெறுதல். வலங்களும் வரங்களும் தவத்தின் வாய்த்தவர். (யுத் : 493) தவத்தின் வாய்த்தார். (யுத் : 408)

தவத்தினேர்கள் - தவஞ் செய்தவர்கள். தவத்தினேர்கள் தங்குதாட் பூவுயிர்த்த கற்பகப் பொதும்பர். (பா : 115)

தவத்தீறிலான் - எல்லையற்ற தவத்தையுடைய விசுவாமித்திர முனிவன். (பா : 400)

தவத்துள்ளாள் - தவத்தில் இருப்பவள். தெய்வப்பத்தினி தவத்துளானை. (யுத் : 2842)

தவத்துறை - தவஞ் செய்யும் நன்னெறி. நீங்கினம் தவத்துறை. (யுத் : 4198)

தவத்தை ஆயும் அறிவு - பொறுமையையே எப்போதும் நினைகின்ற புத்தி. அறந்தரு தவத்தை ஆயும் அறிவினால் அவற்றை முற்றும் மறந்தனை யெனினும். (யுத் : 926)

தவத்தொழில் - தவ ஒழுக்கம். அந்தமில் தவத்தொழிலர். (ஆ : 612)

தவத்தோர் ஓங்கல் - தவமுனிவர்க் கெல்லாம் சிறந்த மலைபோன்ற வணுகிய வசிட்டன். (அண்) தவத்து ஓர் ஓங்கல் - தவத்தையுடைய ஒப்பற்ற மலை. வசிட்ட முனிவன். (கலா) உரைசெய் பெருமை உயர் தவத்தோர் ஓங்கல். (அ : 385)

தவ நுணங்கியர் - தவத்தால் உடல் சுருங்கி அறிவு கூர்மையடையப்பெற்றவர். (அண்) (யுத் : 1333)

தவப்பயன் - தவத்தின் பயன். தானே அடக்கி ஐம்புலன்கள் வென்ற தவப்பயன் அறுதலாலே. (சு : 29)

தவப்பள்ளி - தவஞ் செய்வார் உறையுஞ்சாலை. தவச்சாலை. ஆச்சிரமம். நற்றவப்பள்ளி வாயிலை நண்ணினன். (அ : 654) இனிய மாதவப்பள்ளி கொண்டெய்தினன். (அ : 630)

தவப்பாவை - கற்புடைய பாவை. நீங்கா இடர்க் கொடியேன் தந்த பாவை தவப்பாவை தனிமை தகவோ. (யுத் : 9)

தவம் - 1. இல்லறம். (அண்) அடக்கம். (கலா) தகவு மிகு தவமுமிவை தழுவ. (அ : 544)

2. நல்வினை. மையறு தவத்தின் வந்த சவரி. (கி : 104) நின்ற தவம் ஒன்றுமிலர். (யுத் : 75) (யுத் : 3992)

3. மனம் பொறிவழிப் போகாது விரதங்காத்து உயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்தல். நிறை தவமன்னதொர் செயலாள். (அ : 619)

4. வானப் பிரஸ்தாச்சிரமம். தேவரும் ஒத்த மாதவஞ் செய்துயர்ந்தாரன்றே. (அ : 317)

5. கற்பு. நற்பெருந் தவத்தாளாகிய நங்கை. (சு : 1308) யாருக்காக என் கோதறு தவத்தினைக் கூறிக் காட்டுகேன். (யுத் : 3997)

6. விரதம். திங்கள் ஒன்றினில் என் செய்தவந் தீர்ந்ததால். (சு : 638)

7. தபசு. செய்த தவமுண்டு வலியுமுண்டால். (யுத் : 2891)
8. பொறுமை. அறந்தரு தவத்தை ஆயுமறிவினுல் அவற்றை முற்றும் மறந்தனை யெனினும். (யுத் : 926)
9. நல்லொழுக்கம். மூதக்கோய் இது நற்றவ மன்றென மொழியா. (யுத் : 152)
10. தூய செயல். பெருந்தவ முயன்று. (யுத் : 704)
11. நித்திய கருமம். அந்த நதியகத்து நிறை தவத்தின் குறை முடித்து. (ஆ : 338)

தவம் முடித்தல் - தவத்தைச் செய்து முடித்தல். அசும்பு பாய்வரை அருந்தவ முடித்தவர். (அ : 772)

தவம் முயல்வார் - தவத்தை முயன்று செய்பவர். ஒருங்கினில் உயர்தவ முயல்வார்க்கு இறையு மீதலாதினியதோர் இடமரிது. (அ : 719)

தவம்முற்றித் திருவுறல் - தவத்தைச் செய்து முடித்து மேலான பாக்கியத்தை யடைதல். திறத்திறனுலே செய்த முற்றித் திருவுற்றாய். (ஆ : 738)

தவம் முற்றுதல் - 1. தவம் பயனை விளைத்தல். திருத்தின தவ முற்றிற் றென்று நற்றெரிகின்றான். (அ : 709) [பா : பே]
2. தவத்தைச் செய்து முடித்தல். (ஆ : 738)

தவ மெய்யர் - தவ வேடந் தாங்கிய உடம்பினர். வெஞ்சமத் தொழிலர் தவ மெய்யர் கைச்சிலையர். (கி : 47)

தவர் - தவசிகள். புதல்வரில்லாமை வேள்வி தவர்களிற் புரித லோடும். (பா : 429)

தவ வேடம் தலை நிற்றல் - தவத்திற்குரிய வேடத்தை மேற்கொள்ளல். தவ வேடந் தலை நின்றான். (அ : 1022)

தவ வேள்வி - தவமும் வேள்வியும். தருவனத்துள் யான் இயற்றுந் தவ வேள்விக்கு. (பா : 327)

தவழ்தல் - 1. தவழ்ந்து செல்லுதல். தாளரிச் சதங்கை யார்ப்பத் தவழ்கின்ற பருவந்தன்னில். (யுத் : 3193)
2. கிளர்தல். தனி நெடுஞ் சிலையிறத் தவழ்தடங் கிரிகளே. (பா : 1136)
3. பரவுதல். உலகெலாம் தவழ்ந்த கீர்த்தியான். (யுத் : 2719)

4. விளங்குதல். பொருந்துதல். (அண்) மொய் தவழ்கிரிகள். (யுத் : 437)

5. தீட்டப்படல் (வை.மு) மைதவழ்ந்த கருங்கண். (பா : 1170)

தவள் - வெண்மை. தவள் மதிபுனையரன். (பா : 396)

தவளக்கங்கணம் - வெண்மை யாகிய கைவளை. தவளக் கங்கணங் களு மிலங்கிய கரம் பிறழவே. (ஆ : 16)

தவளம் - வெண்மை. சலஞ்சல மலம்பு தவளக் கங்கணங்கள். (ஆ : 16)

தவளமாடம் - வெண்மையான மாளிகைகள். திருவினீங்கிய தாமரை யொத்துள தவள மாடமே. (அ : 494)

தவளமேனி - வெண்மை நிறம் வாய்ந்த திருமேனி. தவளமேனி மைத்தரு கருங்கட் செவ்வாய் அணங்கு. (பாயி : 32)

தவளை - தவளை. சூல் தவளை நீர் உழக்குந்துறை கெழுநீர் வளநாடா. (ஆ : 346)

தவறிலாப் புகழான் - குற்ற மில்லாத புகழினையுடையவனான விபீடணன். தஞ்சநற் றுணைவனான தவறிலாப்புகழான் தன்னை. (யுத் : 450)

தவறு - குற்றம். அவரின்றித் தானே வந்தான் என்றலின் வேறோர் தவறுண்டோ. (ஆ : 1168) தவறிலாப் புகழான். (யுத் : 450)

தவன் - தவம். தவனுறு தச முகன் தனக்கு. (பா : 382) தவஞ் செயத் தவன் செய்த தவன் என்னென்கின்றாள். (ஆ : 242) தவனுணங்கியரும் வேதத் தலைவரு முணருந் தன்மைச் சிவன். (யுத் : 1333)

தவன் நுணங்கியர் - நுண்மையான (செய்தற்கரிய) தவத்தை யுடையவர். மிகவும் அருமையான தவத்தை யுடையவர். (யுத் : 1233)

தவன வேகம் - 1. சூரியன் போன்ற வேகம். தவன வேகத்தினீர் சலித்திரோ என்றான். (கி : 965)

2. மிக்க வேகம். ஒருபொருட் பன்மொழி. தவனம் வேகம். நின் தாதையிற் புக்குழல் தவன வேதத்தை ஓர்கிலை. (கி : 748)

தவனன் - சூரியன். (கி : 965)

தவனுணங்கியர் - நுணங்கிய தவர். மிகவும் அருமையான தவத்தை யுடையவர். (யுத் : 1333)

தவா - 1. அழியாத. கெடாத. தவா நெடுவானகம். (கி : 4)
2. நீங்காத. அறந்தவா நெறி அந்தணர். (ஆ : 136)
3. மாறுபடாத. அளந்தவா நெடுங் கருவியிற் செயிரியர் கலைக் கண்ணுால் அளர்த பாடல். (சு : 287)

தவா இருட் பகை - எளிதில் அழியாத பகைவர்களாகிய இருட்டு. தவாவலி யரக்கரென்னும் தவா இருட் பகையைத் தள்ளி. (கி : 99) [பா : பே]

தவா வலி - கெடாத வலிமை. தவாவலி யரக்கர். (கி : 99)

தவாத - நீங்காத. ஒழியாத. நிலந்தவாத செந்நீரிடை. (யுத் : 2310)

தவிசு - 1. அணை. (அண்) தாமரைப் பெருந்தவி சுகந்த அத் தேவனும். (பா : 193)
2. ஆசனம். (வை.மு) (பா : 193)
3. மெத்தை. தவிசுடைப்பீடம். (யுத் : 1230)

தவிசுடைப் பீடம் - மெத்தையிட்ட ஆசனம். அமளி மாட்டோர் தவிசுடைப் பீடம். (யுத் : 1230)

தவிர் - ஒழிவாய். துயரம் தவிர் நீ. (அ : 374) பொய் தவிர். (ஆ : 610)

தவிர்த்தல் - 1. ஒழித்தல். தருமமே தவிர்க்குமோ தன்னைத் தானரோ. (கி : 260) துயரம் தவிர்நீ. (அ : 374)
2. அழித்தல். தருதல் காக்குதல் தவிர்த்தல் என்றிவை செயத் தக்கான். (யுத் : 182)
3. செய்யவொட்டாது விலக்குதல். தடுத்தல். கேள்வியாவையுந் தவிர்த்தனன். (யுத் : 185) தவிர்ந்திலை போலும். (யுத் : 1353)

தவிர்தல் - 1. நீங்குதல். அன்றாரித்த ஐயத்தாற் சிறிதையந் தவிர்ந் தாரும் உளர் ஐயா. (ஆ : 59) தவிர்ந்தது தருமம். (யுத் : 2820) (அ : 374) தவிரா. (யுத் : 497)
2. அடங்குதல். எண்ணே தவிரா. (பா : 1254)
3. கழிதல். இன்றெடுந் தவிர்ந்த தன்றே உடன் பிறப்பென்று விட்டான். (யுத் : 1385)
4. இழத்தல். தாமரை தவிரப் போந்தாள். (ஆ : 626)

தவுதல் - தபுதல். அழிதல். கெடுதல். குறைதல். ஓர் எல்லையில் அகப்படுதல். தபு என்பதன் மரூஉ. எண் தவா விசும் பெட்ட நின்று. (சு : 119) தவாத. (யுத் : 2310)

தழங்கிய கலைகள் - ஒலிக்கின்ற மேகலாபரணங்கள். தழங்கிய கலைகளும் நிறையுந் சங்கமும். (பா : 607)

தழங்கு - மிகுகின்ற. தழங்கு சீற்றத்தான். (அ : 1092)

தழங்கு சீற்றத்தான் - மிகுகின்ற சினமுடையவனும். (1092)

தழங்குதல் - 1. ஒலித்தல். தழங்கிய கலைகளும். (பா : 607)
2. இடித்தல். அவ்வொலி சாரல் மாரி தழங்கலா. (அ : 236)
3. மிகுதிபாதல். தளமலர்ப் புள்ளொலி தழங்க. (கி:7) (அ:1072)
4. முழங்குதல். பணைக் குலமும் தழங்கா. (யுத் : 2911) தழங்கெரி. (யுத் : 2922) முரசு தழங்கு பேரொலி. (யுத் : 3277)

தழல் - எரி. தழற் புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான். (ஆ : 158)

தழல் நிறக் கடவுள் - சிவபிரான். தழல் நிறக்கடவுள் அங்கு வந்து (பா : 527)

தழல் நிறத்தவன் - சிவபெருமான். அத்தழல் நிறத்தவனை ஒங்க லொன்றெடும் எடுக்க முன் வரங் கொண்ட துண்டோ. (யுத்:114)

தழல் மாரி - நெருப்பு மழை. விழியில் தழல் மாரி சொரிந்தார். (யுத் : 1914)

தழல்வண்ணன் - நெருப்புப் போலும் செந்நிறமுடைய சிவபிரான். தழல்வண்ணன் தடக்கை வில்லைத் தோளாலிறுத்தான் துணைத் தாதைதன் அன்பின் தோழன். (ஆ : 928)

தழல்விழி - நெருப்பைக் கக்குகின்ற கண்விழி. தழல்விழிக் கொலை வெஞ்சியம். (யுத் : 878)

தழல் விழியாளி - தீப்போல விழிக்கின்ற அத்தியாளி தழல்விழி யாளியுந் துணையும். (பா : 147)

தழலாறுதல் - நெருப்புத்தணிதல். ஆறுகின்றில தழல். (யுத் : 25)

தழலிடு வல்லி - தீயிடைப் பெய்த கொடி. தழலிடு வல்லியே போலச் சாம்பினுள். (பா : 606)

தழலெடுத்தான் - சிவபிரான். தழலெடுத்தான் மலையெடுத்த தனி மலையே. (ஆ : 325)

தழலெழ விழித்தல் - தீப்பொறிகனல விழித்தல். தழலெழ விழித்தனன் சாம்பராயினுன். (பா : 376) தழிலெழ விழித்தான். (யுத் : 176)

தழலேயேயனையவன் - தீயையே ஒத்தவன். தழலேயே யனையவன் பொன்னின் வார்சிலே. (பா : 1132)

தழற்கண்ணன் - தீயினைக் கண்ணுகவுடைய சிவபெருமான். தாமரைக் கண்ணன் தழற்கண்ணன். (யுத் : 137)

தழற்பிறங்கல் - தீப்பிழம்புகள். தோளோடு தோள் தேய்த்தலில் தந்த தழற்பிறங்கல். (கி : 275)

தழற்புரை சுடர்க் கடவுர் - சிவபெருமான். தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ். (ஆ : 158)

தழற் பொறி - தீப்பொறி.

தழனிறக்கடவுள் - செந்தீ வண்ணமான சிவபெருமான். தழல் நிறக் கடவுள் அங்கு வந்து நின் கருத்தினே முடித்து மென்றகன்ருன். (பா : 527)

தழி - தழுவி. வெங்கதிர் தழிவந் தார்பூண்டன பிரிந்தாலென. (ஆ : 466)

தழிய - 1. தழுவிய என்பதன் விகாரம். பொருந்தியிருந்த. தழிய வானர மாக்கடல் சாய்தலும். (யுத் : 996)

2. பற்றப்பட்ட. தழுவினுய் தழிய பின்னும். (சு : 81)

தழிவந்து - தழுவிவந்து. (ஆ : 466)

தழீஇ - தழுவி. அடைந்து. தழீக்கொள்ள. (சு : 493) (சு : 12) அவலந்தான் தழிஇ. (கி : 676)

தழீஇக் கொள - இறுக அணைத்துக் கொள்ள. மயிலியற் றேவிமார்கள் தழீஇக் கொளப் பொலிந்தவானேர். (சு : 12)

தழீஇய - தழுவிய. மெய்யுறத் தழீஇய மெல்லென் பிடியொடும். (சு : 6) (சு : 81) [பா : பே] (சு : 416)

தழீஇய தாம் என - தழுவி நின்றது போல. பாற்கடல் தழீஇய தாமென. (பா : 1307)

தழீஇயன - தழுவியன. தழுவினவாய். தாளுடைக் கோடல் தம்மைத் தழீஇயன காதல் தங்க மீளல. (கி : 471)

தழும்பிய - பழகிய. தழும்பிய தேவரும் தெளிவு தந்திலர். (யுத்:3731)

தழும்பு - 1. புண்வடு. மார்பினுந் தோளினுமுள இனம் தழும்பு. (யுத் : 510) (சு : 304)
2. வடு. காய்ப்பு. உயர்ந்த கோட்டின் தலைகளும் நின்பொற்றாளின் தழும்பிரித் தவிர்ந்த வன்றே. (கி : 380) பகை வேந்தர் முடியுழுத தழும்பிருந்த சரணத்தானை. (சு : 312) யுத் : 1974)

தழும்புதல் - பழகியிருத்தல். தழும்பிய தேவரும் தெரிவு தந்திலர். (யுத் : 3731)

தழுவ - சூழ. தரம்பெறு தலைவரும் தழுவத் தோன்றினன். (யுத் : 18)

தழுவாது வந்து தழுவ - தழுவி நிற்காது சிறிது சிறிது தழுவி. (அண்) படாதனவும் படுவனவுமாய்ப் பொருந்த. (வை.மு) மணி கோடியோடு நளிர் போது செம்பொன் முதலாத் தன்பாலியைந்த நிழல் கொண்டமைந்த தழுவாது வந்து தழுவ. (யுத் : 2199)

தழுவிச் சுமந்து - சேர்த்துப் பிடித்துத் தாங்கி. தண்டெழுந்தனைய தோள்கொடு சுமந்து தழுவி பண்டெழுந் தனது வன்கதி பதிற்றின் முடுகிக் கொண்டெழுந்தனன். (ஆ : 36)

தழுவிலன் - பற்றுக் கொண்டிலன். மனத்துள் யாதுந் தழுவிலன். (ஆ : 294)

தழுவினர் தழுவினர் – பலமுறை தழுவி. தழுவினர் தழுவினர் தலையுந் தாள்களும். (யுத் : 3900)

தழுவுகாதலன் - தழுவுகின்ற அன்பினையுடையனாகி. தரைத்தலையிழிந்தவர்த் தழுவு காதலன். (ஆ : 194)

தழுவுதல் - 1. மேற்கொள்ளல். தள்ளா நிலைசால் மெய்ம்மை தழுவா. (அ : 348) தவ வேடந்தழுவினை. (அ : 713)
2. ஆலிங்கனஞ் செய்தல். தழுவினபுளினர் வேந்தன். (அ : 1025)
3. ஆயத்தமாக அடைதல். தழுவுதேர். (அ : 800)
4. ஏற்றுக்கொள்ளல். தயாதன் பணி யீ தென்னச் சிந்தையில் தழுவி நின்றான். (ஆ : 1025)
5. உடன் கொள்ளல். குண்டல மீன் குலந்தழுவி. (யுத் : 784)

தழுவுதேர் - ஆயத்தமாகத் தன்னையடைந்த தேர். (அ : 800)

தழை - 1. மயிற்றோகைக்குடை. அவ் வெயில் தழையிடை நிழல் கெடத் தவழும். (பா : 829)
2. மயிற் பீலி. பீலிக்குஞ்சங்கள். தழை யொலித்தன. (அ : 243)

3. மிகுதியாதல். கனகனை முருக்கிய முரட்சீயம் தழைகொள் தோளொடும் தழைபல பரப்பி முன் துயில்வதோர் தகையானை. (சு : 302)

4. இலை- தளிர். தழையிலா வேய். (பா : 349) தழைக்கை. (யுத் : 3913)

தழைகொண்டு தழைத்தல் - தழைகளை ஏந்தித் தழைத்தல். வெங் கடத் துலவைகள் தழைகொண்டு தழைத்த. (அ : 728)

தழைத்த பேரருள் - மிக்க பேரருள். இழைத்த தீவினையையுங் கடக்க எண்ணுதல் தழைத்த பேரருளுடைத் தவத்தினுகுமேல். (அ : 25)

தழைத்தல் - 1. மகிழ்தல். பூரித்தல். மௌலி கவித்தனன் வரும் என்றென்று தழைக்கின்ற உள்ளம். (அ : 297)

2. ஒலித்தல். (வை.மு) தாளிரடி நூபுரந் தழைப்ப. (பா : 487) தழைத்து வண்டிமிருந் தண்டார்த் தசரத ராமன். (பா : 577)

3. மிகுதல். செறிதல். தழைத்த பேரருள். (அ : 25) சடசட எனுமொலி தழைப்ப. (ஆ:1118) எறும்வலி தழைத்த தகைமையர். (சு : 424) [பா : பே]

4. பெருகிப் பரவுதல். தழைத்த மேகமே. (கி : 446)

5. இலை விட்டுத் தழைத்தல். வெங்கடத்துலவைகள் தழை கொண்டு தழைத்த. (அ : 728)

தழைந்தன - மிகப் பெருகலாயின. நிலமிசை விரிந்த எண்டிசை தழைந்தன. (சு : 594)

தழைந்து தவழ்தல் - செழித்துப் பொருந்துதல். தங்கு திண் கரிய காளிமை தவழ்ந்து தவழ. (ஆ : 14)

தழைப்ப - ஒலிக்க. தாளிரடி நூபுரந் தழைப்ப. (பா : 487)

தழையிலாவேய் - இலையே இல்லாத உலர்ந்த மூங்கில். (பா : 349)

தழையுறுக்கரும்பின் சாபம் - தழை இல்லாத இனிய கரும்பாகிய வில். தழையுரு கரும்பின்சாபத் தனங்க வேள் சரங்கள் பாய. (பா : 1156)

தழையுறு சாலை - இலைகளால் வேயப்பட்ட சாலை. பன்ன சாலை. தழையுறு சாலை நின்றும் தனிச்சிலை தரித்தமேரு... முழையினின் றெழுந்து செல்லும் மடங்கலின் முனிந்து சென்றான். (ஆ : 432)

தள் - தள்ளுதல். தள்ளில் தாமரைச் சேவடி. (யுத் : 2582)

தள்ள - தள்ளாட. தளர. தடுமாற. (கலா) மொய்யுறு செவிகள் தாழ்ந்து முதுகுற முறைகால் தள்ள. (சு : 6) உள்ளந்தள்ள. (சு : 285)

2. மயங்க. தம் அறிவு தள்ள. (சு : 285)

3. மிகுதியாக. கொடுஞ்சரந் தள்ளத் தள்ளுற. (யுத் : 2447)

4. அசைக்க. தள்ளத்தக்கில் பெருஞ்சயிலத்தொடு எள்ளக்கட்டி.. (யுத் : 229)

தள்ளத் தங்கில் பெருஞ்சயிலம் - அசைக்க முடியாத பெரிய மலை. (யுத் : 229)

தள்ளருந்துயர் - தவிர்க்க முடியாதிருந்த துன்பம். யாரினும் தள்ளருந் துபரமும் சமைவும் சாற்றலும். (பா - 231)

தள்ளரும் - தள்ள அரும். தாங்கமுடியாத. தள்ளரும் பரம் தாங்கிய ஒட்டகம். (பா - 852)

தள்ளரும் பகை - பிறரால் வெல்லமுடியாத பகை. தள்ளரும் பகையெலாந் தவிர்த்து நின்ற யான். (அ : 18)

தள்ளரும்பரம் - தாங்கமுடியாத சுமை. (பா : 852)

தள்ள வாரம் - சோம்பல். (யுத் : 747)

தள்ளவாரி - சோம்பேறி. அவ்வீடணத் தள்ளவாரி நிலைமையும். (யுத் : 747)

தள்ளாட - நிலைகுலைய. பாணி தள்ளாடப் பாடலமுதுஅப் பாடுவாரும். (சு : 282)

தள்ளாடி வீழ்தல் - தடுமாறி வீழ்தல். மெய்தளாடி வீழும். (அ : 206)

தள்ளாடுதல் - அசைதல். தள்ளாடிய வடமேருவிற் சலித்தான். (யுத் : 3016)

தள்ளா நிலை - தவறத்தகாத தன்மை. தள்ளா நிலைசால் மெய்ம்மை தழுவா. (அ : 348)

தள்ளி - 1. வீசி. தரளமும் மணியுந் தள்ளி. (அ : 1042)

2. செலுத்தி. உம்பர் நாடு காண்குமென்று அறிவு தள்ளி. (கி:1000)

3. தடுமாறி. (யுத் : 2233)

4. கழிந்து. அருந்தவம் பெரும்பகல் தள்ளி. (பா : 538)

தள்ளித் தள்ளி - உந்தி உந்தி. கரையினைத் தள்ளித்தள்ளி வாங்கிய கடல்போல் நின்றான். (யுத் : 1939)

தள்ளித் துளங்குதல் - தட்டித் தடுமாறுதல். தள்ளித் துளங்கிய நடையார். (யுத் : 2232)

தள்ளிப் படுத்தல் - வீழ்த்திக்கொல்லுதல். தள்ளிப் படுத்தனர் அரக்கர் வேலை. (யுத் : 2005)

தள்ளிப் போதல் - தடுமாறிச் செல்லுதல். பண்ணைக் கானமுந் தள்ளத் தள்ளி...... வானவர் மகளிர் போனார். (யுத் : 2233)

தள்ளில் தாமரை - தள்ளப்படுதல் இல்லாத சிறந்ததாமரை. தள்ளில் தாமரைச் சேவடி. (யுத் : 2582)

தள்ளுதல் - 1. மோதுதல். தள்ளு நீர்ப்பெருங் கங்கைத் தரங்கத் தான். (அ : 636)
2. புரட்டுதல். மேருவைத் தள்ளலானதோர் அரியின் தானையான். (கி : 124)
3. நீக்குதல். போக்குதல். தாதை மனத்திடர் தள்ளிடுவான். (யுத் : 1705) இன்னலும் துயரும் தள்ளினான். (யுத் : 1676)
4. தள்ளாடல், விழுதல். நெடுவேணி புறத்தசைந்து மேனி தள்ள. (யுத் : 4148) முறைகால் தள்ள. (சு : 6)
5. அசைத்தல். தள்ளத் தக்கில் பெருஞ் சயிலம். (யுத் : 229)
6. வெளிப்படுத்தல். தையலார் கருவுந் தள்ளி. (யுத் : 272)
7. வலியழித்தல். திசைகளை உலகொடுஞ் செருக்கால் தாங்கும் யானையைத்தள்ளி. (யுத் : 114)
8. அறுயசமாக எய்தல். தானற்றுருளக் கைக்கணை தள்ளிடுவான். (யுத் : 1710)
9. நீங்குதல். தள்ளா நிமிர்ச்சிய. (சு : 39)
10. சிதைத்தல். (உ. வி) (யுத் : 272)
11. சோர்தல். தள்ளி ஏங்க. (யுத் : 2791)
12. தடுமாறல். மென்குதலை தள்ள. (சு : 559)
13. புறக்கணித்தல். தள்ளில் தாமரைச் சேவடி. (யுத் : 2582)
14. கழித்தல். அருந்தவம் பெரும் பகல் தள்ளி. (பா : 538)
15. (கீழே) தள்ளி விடுதல். கதுமெனக் கனல் பொத்தித் தள்ளுமின். (யுத் : 214)

தள்ளுநீர் - மிக்கநீர். தள்ளுநீர்ப் பெருங் கங்கைத் தரங்கத்தான். (அ : 636)

தள்ளுற - தள்ளாட. (வை.மு) தூண்டி உந்த. (அண்) சிந்த. (கலா) தராதலமுத லுலகனைத்துந் தள்ளுற. (பா : 1291)

தள்ளுறல் - 1. பின்னிடல். சங்க மொன்றெலித்தது கடலுந்தள்ளுற. (யுத் : 2439)
2. துயரமடைதல். (வை.மு) தடுமாறுதல். (கலா) உள்ளந் தள்ளுறல் ஒழிந்து நின்றான். (யுத் : 2887)
3. தள்ளப்படுதல். தள்ளுற்ற அறமும் தேவர் துயரமும். (ஆ : 1011)

தள்ளுறுதல் - துவளுதல். தள்ளுறு மருங்கினர் தழீஇக் கொண்டேகினார். (ஆ : 596)

தள்ளுறு - 1. வருத்தம். தள்ளுறு வேறில்லை. (அ : 402)
2. தள்ளுதற்குக் காரணம். (உ.வி) (அ : 402)

தள - தள்ள. தள்ளத்தகு பலர்த்தவி சிகந்து. (கி : 523)

தளச்சேறு - கற்பூரஞ் சேர்ந்த சந்தனக்குழம்பு. ஒண்ணகர் உறைத்த ஒண்டளச் சேறிடு பரணியில் திகழு நீரது. (கி : 16)

தளம் - 1. பச்சைக் கருப்பூரம். வெண்டளக் கலவைச் சேறும். (பா : 43)
2. மேல்தளம். உபரிகை. வெண்டளக் கலவை மாடம். (சு : 3) (அ : 492)
3. சந்தனக் குழம்பு. களபம். சீதளம் என்பதன் முதற் குறை. (கலா) ஒண்டளச் சேறு. (கி : 16)
4. பூவிதழ். தளங்கெழ கற்பக முகிழும். (சு : 529)
5. கூட்டம். தளப்பெருஞ் சேனை. (யுத் : 2427)
6. அடிப்பகுதி. (அண்)
7. கனம். (வை.மு) தளங்கிளர் மணிகால. (பா : 1039)
8. படை. போர்க்களம். தளப்பெருஞ் சேனை வெள்ளம் அறுபதும் தலத்ததாக. (யுத் : 2427)

தளமலி சேனை - பல தொகுதிகளாகக் கூடி நின்ற சேனை. கூட்டமாகிய சேனை. (அண்) (யுத் : 623)

தளர்வு - மனவருத்தம். தளர்ச்சி. தளர்வின் றுணரும் அம்மாதவனும். (அ : 384)

தளரல் - சோர்வடையற்க. தளரல் ஈண்டெனச் சூழி வெங்கடகளிற்றரசற் சொல்லி. (அ : 567)

தவளம் - முல்லை. வெண்டளவப் போதாம் பல் தோன்ற. (அ: 394)

தளவு - முல்லை. தேந்தளவுகள் செய்யும் சிறுகுறு நகை காணும். (அ : 698)

தளாடி வீழும் - தள்ளாடி விழும். (அ : 206)

தளி - 1. திவலை, துளி. தண்ணற் கடலில் தளி சிந்து தரங்க நீங்கி. (பா : 969)

2. கோவில். தளிதுறந்தன பலி. (அ : 498)

3. குதிரை கட்டும் சாலை. தளி துறந்தன பரி. (அ : 498) [பா:பே]

தளிக்கும் - செழித்த. நின் தளிக்கும் தனிக்குடை. (பா : 325)

தளித்தல் - 1. துளித்தல். பரவையல்குல் ஒளிப்பறத் தளிப்ப. (அ : 1048)

2. செழித்தல். (பா . 325)

தளிந்த - 1. குளிர்ந்த. தெளிவுள்ள. (கல.ர) தளிந்த கற்றலம். (பா : 112)

2. தாவரிசையிடப்பட்ட. (அண்) (பா : 112)

தளிர் - 1. கை. (ஆகு) பெய்வளைத்தளிர். (அ: 306)

2. தளிர்; அதன் மென்மை. தளிரடி நூபுரம். (பா : 487) தளிர்க்கை நோவ. (சு : 200) தண்டளிர் தீயும். (ஆ : 1054)

3. துளிர். தகடு. ஈனுமாழை இளந்தளிரேயிடை ஈனுமாழை இளந்தளிரே இடைமானும். (பா : 952)

தளிர்க்கை - தளிர்போலும் மென்மையான கை. (சு:200) செந்தளிர்க் கைகள். (யுத் : 4002) (யுத் : 3187)

தளிர்த்தல் - மிகுதியாகக் கலத்தல். தேன் தளிர்த்த கவளமும். (அ : 1080)

தளிர்த்து வீங்குதல் - புளகித்துப் பூரித்தல். சில பொன் மாலைத் தானுடைச் செவிகளூடு தவமுறத் தளிர்த்து வீங்கும் ஊனுடை உடம்பினானும். (ஆ : 872)

தளிர் நிற முண்டகண் - தளிர் போலும் நிறத்தைக் கவர்ந்த கண். என் தளிர்நிற முண்ட கண்ணின் உண்ணிறங் காட்டினீர். (பா : 795)

தளிரடி - தளிர் போன்று மென்மையான பாதங்கள். தளிரடி நூபுரம். (பா : 487)

தளிராடை - தளிர் போன்றுள்ள ஆடை. அந்தணர்க் கன்னமுந் தளிராடையும் நல்கினுள். (அ : 96) [பா : பே]

தளிரைப் போலடியினுள் - தளிரைப் போன்று மெல்லிய அடியை யுடையவள். (சீதாபிராட்டி) தன்னைப்போல் தகையோரில்லாத் தளிரைப் போலடியினுளும் என்னைப்போல் இடையே வந்தாள். (ஆ : 286)

தளை - 1. கட்டு. பிணிப்பு. தளை வரும் தொடையல் மார்பு. (பா:1137)
2. பின்காற் கயிறு. தளை கொளுத்திய தாவெரி. (சு : 1205)
3. வயல். வரம்பு. தளை விட்டெறிக் குவளைத்தொகை. (அ : 662)
4 விலங்கு. இடும்பலர் நெடுந்தளை ஈர்த்த காலொடும். (அ : 908)
5. கச்சு. தளைவயின் நகிலொடு தடிந்து. (ஆ : 1128)

தளைத்தல் - பிணித்தல். தளைத்து வைத்தது சதுமுகன் பெரும்படை. (யுத் : 2573)

தளைத்தாரென - தளைத்து வைத்தாற் போல. மதயானையை வன்றெழிலில் தளைத்தாரென வந்து. (யுத் : 3450)

தளைத்து வைத்தது - பிணித்து விட்டது. யுத் : 2573)

தளையவிழ் தரு - முறுக்கு விரிந்து மலர்கின்ற (கற்பக) மரம் தளையவிழ் தருவுடைச் சயிலகோபன். (பா - 286)

தளையானேன் - தளையானது போலானேன். தளையானேன் உயிர் போதல் தக்கதால். (கி : 980)

தளைவருந் தொடையல் - தொடுத்தல் அமைந்த மாலை. தளைவருந் தொடையல் மார்புறத் தழுவினுன். (பா : 1137)

தளைவிட்டெறி - வயல்களினின்றும் விட்டெறிகின்ற. வரப்புகளில் விட்டெறிகின்ற. தளைவிட்டெறி குவளைத்தொகை. (அ : 622)

தற்கர் - கள்ளத் தன்மையுடையவர். [தற்கர் - தஸ்கரர்] கள்வர். தண்டமென்றெரு பொருட்குரிய தற்கரைக் கண்டவர் பொறுப்பரோ. (யுத் : 30)

தற்கு - 1. தருக்கு. கர்வம். எதுகை நோக்கித் திரிந்தது. தற்கடங்கி உலந்தவர். (யுத் : 1010)
2. தனக்கு. தாளினில் அடைந்தவர் தம்மைத் தற்கொரு கோளுற அஞ்சினன் கொடுத்த பேதையும். (அ : 894) உவமை தற்கு இலான். (யுத் : 2753)

தற்பம் - செருக்கு. அகங்காரம். என்னைத் திராத்தற்பத்தைத் துடைத்ததென்றுற் பிறிதொரு சான்றுமுண்டோ. (யுத் : 1245)

தற்பயன் - 1. சாரம். தரும நீதியின் தற்பயனுவனுன் கருமமே யன்றிக் கண்டிலம் கண்களால். (யுத் : 4151)
2. தனதுபயன். தற்பயன் தான் தரும் தருமம் இல்லையால். (யுத் : 196) [பா : பே]

தற்பயன் தான் திரிதருமம் இல்லையே - தனது பயன் தானே முன் பின்னாக முறை பிறழப்பெறுவது ஒரு வினையும் இல்லை. (யுத்:196)

தற்பயன் தான் தெரிதருமம் இல்லை - தானே பயனை ஆராய்ந்து கொடுக்கின்ற கருமம் எதுவும் இல்லை. (யுத் : 196) [பா : பே]

தற்பரன் - எல்லாப் பொருளிலும் மேம்பட்டவன். தற்பர உன்னை யொன் றிழைத்தில தொழிந்து நீங்கியது. (யுத் : 2739)

தற்பிரிந்தருள்புரி தருமம் போலி - (தலைவனுகிய) தன்னைப்பிரிந்து (தனித்த நிலையிலும்) அருள் செய்யும் அறத்தினைப் போன்றவள்; சீதாபிராட்டி. (யுத் : 3980)

தறி - 1. தம்பம். தறிமடுத்து. (பா : 752)
2. தரை உடையாதபடி முன் அணையிடுதற்கு ஊன்றும் முளை. தறியிறத் தடக்கை சாய்த்து. (பா : 27)
3. யானை கட்டுந்தூண். தறி பொரு...... யானை. (யுத் : 2791) நொய்தினிட்ட வன்தறி பறித்து. (அ : 1218)
4. தூண். அந்தாம நெடுந்தறி ஆயிரத்தால். (ஆ : 715) நெடுந்தறி. (யுத் : 259)

தறுகட் குன்றம் - வன்கண்மையுள்ள களிற்றியானைகள். தாறுமாய் தறுகட் குன்றம். (பா : 570)

தறுகண் - 1. அஞ்சாமை. அனல் தறுகண் அந்தகனும் அஞ்சிப் பிலம்புக. (பா : 389) கனலுமிழ் தறுகண் யானையே. (பா : 838)
2. கொடுமை. அன்பிற் றறுகண் பிறிதுண்டோ. (அ : 601)
3. தாட்சண்யம் பாராட்டாத குரூரத் தன்மை. வன்தறு கண்ணி னன் வயிர்த்துக் கூறுவாள். (ஆ : 824)
4. தெறுவது போன்ற கண். தறுகணூடு வெண்புனீர் சொரிய நின்ருன். (யுத் : 1372)
5. கடுகக் கொல்லுதல். தாறுபாய் தறுகட் குன்றம். (பா : 570) [பா : பே]

தறுகண்ணர் - கொடிய விழியினராகிய கொலைஞர். கோளரிக் குழுவெனக் கனல்கின்ற தறுகண்ணர். (யுத் : 211)

தறுகண்மை - கண்ணோட்ட மில்லாத குரூர குணம். வன்தறு கண்ணினள். (ஆ : 824)

தறுகண் யானை - அஞ்சாமையோடு கூடிய யானைகள். அருவிபாய் கவுள் தாறு எனக் கனலுமிற் தறுகண் யானையே. (பா : 838)

தறுகணந்தகன் - கொடிய அஞ்சாமையோடு கூடிய யமன். அனல் தறு கண் அந்தகனும் அஞ்ச. (பா : 389)

தறுகணர் - அஞ்சாமை மிக்கோர். தறுகணர்க் கரசனே. (யுத் : 1566) தறுகணர் தகையறு நிலையினர். (யுத் : 1814)

தறுகணர்க் கரசன் - அஞ்சாமை யுடையோரில் தலைவன். கும்ப கருணன். (யுத் : 1566)

தறுகணாளர் - அஞ்சாமை யுடையவர். அத்தறுகணாளர் கண்டனர். (யுத் : 2126)

தறுகணான் - ஆண்மை மிக்கவன். அத்தறுகணானும் தோளினை பற்றி ஏந்தித் தழுவினன். (சு : 987)

தறுதல் - 1. தெறுதல். தறுகணாடு வெம்புனீர் சொரிய நின்றான். (யுத் : 1372)
2. அழித்தல். தறுகட் கார்மேலுளன். (யுத் : 3471)

தறை - தரை. மடப்பிள்ளைகள் தரையிற் கிறிடில் தச்சரும் காய்வரோ. (பா : 9) தறைவா யவன்வந் தடி தாழுதலும். (ஆ:885) (யுத் : 1216) (யுத் : 1819)

தறையடித்தல் - இருக்குமிடத்தில் ஆணியடித்தல். தறை யடித்தது போல் திராத்தகைய இத்திசைகள் தாங்கும் கறையடி. (கி : 379)

தன் - தன்னை. தன் சேர்கோலம். (பா : 594) தன்னனைய நிறை குணம். (பா : 739)

தன் கிளைச் சுற்றத்தார் - தனது உறவினர். தந்திரச் சுற்றத்தாரும் தன் கிளைச் சுற்றத்தாரும். (யுத் : 1223)

தன் பெருந்தகைமைக்கொத்த சாம்பன் - தன் பெருந்தன்மைக் கொத்த முப்பினையுடைய சாம்பன். முதுமைக்கேற்ற பெருந் தன்மையுடைய சாம்பன். தனக்கு வேறு உவமையின்றித் தானே உவமையாய சாம்பன். (யுத் : 2669)

தன் பெருந்தன்மை தானும்அறிகிலா ஒருவன் - தனது பெருமை யினைத்தானும் அறி முடியாத ஒப்பற்ற இறைவனாகிய திருமால். (யுத் : 2898)

தன்போற் புகழ் - தன்னுடைய உயிரைப் போலக்கருதும் புகழ். (கலா) தன் பொறிபோற் சிறந்த புகழ். (அண்) (யுத் : 2176)

தன் மயம் - தனது வடிவம். அஞ்சிறை அறுபதம் அடைந்த கீடத்தைத் தஞ்செனத் தன்மயமாக்கும் தன்மைபோல். (ஆ:492)

தன்மவனம் - ஆதூர்த்தன் நகரம். ஆதூர்த்தன் வகையில் தன் மவனம். (பா : 425)

தன்மை - 1. முறைமை. எற்பிரி தனிமையுந் தீர்த்தி தன்மையால். (அ : 564) (கி : 980)
2. நிலைமை. அரசன் தன்மை சொலவந்த வேதமுனிவன். (அ:604) குடுவைத் தன்மைய தாயதக் குன்றம். (யுத் : 231)
3. செய்கை. என்ன தன்மை பண்ணும். (யுத் : 3346)
4. மேம்பாடு. நற்குணமுமாம். தன்மைக்குத் தலையாய தசமுகன். (யுத் : 974)
5. தான் என்னும் ஆணவம். (உ. வி) தன்மைக்குத் தலையாய தசமுகன். (யுத் : 974)

தன்னக வசத்துலகு தங்க - 1. தனது உடற் பரப்பினுள்ளே உலகம் முழுவதும் தங்கியிருக்க.
2. தனது வியாபகமாகிய உட்பரப்பிலே உலகம் முழுவதும் தங்கியிருக்க. தன்னக வசத்துலகு தங்க ஒரு தன்னின் பின்னக வசத்த பொருள் இல்லை. (யுத் : 3643)

தன்னிகர் முனிவன் - தனக்குத் தானே ஒப்பான முனிவன்; வசிட்டன். (யுத் : 4171)

தன்னின் முன்னிய பொருளிலா ஒரு தனித்தலைவன் - தன்னின் மேலான ஒரு பொருளில்லாத ஒப்பற்ற திருமால். (யுத் : 123)

தன்னுணர்வு - தன் நல்லறிவு. அனங்க வேள் சரங்கள் பாயத் தன்னுணர்வழிந்து காதற் சலதியின் அழுந்தி. (பா : 669)

தன்னேரில்லாத் தீயவள் - தனக்கு உவமை யில்லாத கொடியவளாகிய கைகேசி. (அ : 215)

தன்னைக் கொண்டிருத்தல் - தன்னுயிரைத் தாங்கிப் பொறுத்திருத்தல். (கலா) இத்துணை நெடிது வைகித் தன்னைக் கொண்டிருந்தே தாழ்த்தான். (கி : 636) [பா ; பே]

தன்னைத் தானுணர்தல் - உயிராகிய தன்னியல்பை உணர்தல். தன்னைத் தானுணரத் திரும் தகையறு பிறவி யென்பது. (கி : 656)

தன்னைத் தானெனத் தழுவுதல் - தன்னையே தான் தழுவினது போலத் தழுவுதல். ஈருடம்பென்று தோன்றாது ஒருடம்பென்றே தோன்றும்படி இறுகத் தழுவுதல். பின்னைச் செம்மல் அவ்விளவலை உள்ளன்பு பிணிப்பத் தன்னைத் தானெனத் தழுவினன். (யுத்:4045)

தன்னைத்தானொத்தல் - தனக்குத்தானே ஒப்பாதல். தன் நிறம் தானே ஒக்கும் மலர் நிறம் சமழ்க்கு மன்றே. (கி : 808)

தன்னை நல்குதல் - தன்னுயிரைக் கொடுத்தல். தன்னை நல்கியத் தருமம் நல்கினன். (அ : 914)

தன்னையாந் தன்மை - தான் தமையனான தன்மை. தன்னைப்பற்றி யுண்டான வரலாறு. (உ.வி) எருவை வேந்தனும் தன்னையாந் தன்மையைச் சாற்றன் மேயினன். (கி : 975)

தன்னையுங் கடந்து நீண்ட உவகையன் - தன்னையும் விஞ்சிப் பரந்த மகிழ்ச்சியையுடையவனாய். இராவணன் எழுந்து பொங்கித் தன்னையுங் கடந்து நீண்ட உவகையன் ..... நெடுங்கரி யாட்டங் கண்டான். (யுத் : 2773)

தன்னையுந் துறக்குந்தன்மை - தான் என்று சொல்லத் தக்கதையும் துறத்தல். நாணத்தைத் துறத்தல். (வை.மு) தன்னையுந் துறக்குந் தன்மை காமத்தே வதிந்ததன்றே (பா : 1103)

தன்னையுந் தாங்கலாதாள் - தன் உடம்பையும் தான் தாங்கும் வலிமை யில்லாதவளாய். தன்னையுந் தாங்கலாதாள் துகிலொன்றுந் தாங்கி நின்றாள். (பா : 1159)

தன்னையும் மலிந்த பேருவகையான் - தன்னையும் விஞ்சிய பெரு மகிழ்ச்சியுடையவனாய். தன்னையும் மலிந்த பேருவகையான்...... தன் புயங்கள் வீங்கினன். (பா : 1083)

தன்னையுமுணர்ந்திலன் - (துன்ப மிகுதியால்) தன்னையும் அறியாதவனாயினன். எடுத்த துன்பத்தால் தன்னையும் உணர்ந்திலன் உணருந் தன்மையான். (அ : 455)

தன்னையேயனைய தோர் கோலம் - தன்னையே தானொத்த அலங்காரக் கோலம். தன்னையே யனையதோர் கோலந்தாங்கினான். (பா:1312)

தன்னையே யனையவன் - தன்னைத்தானே நிகர்ப்பவன். இராமபிரான். அத்துன்னு மாநகரினின்றெதிர்வரத் துன்னினான் தன்னையே யனையவன். (பா : 1132) தன்னையே யனையவன் சரணம் வந்தணுகினான். (கி : 94)

தன்னொக்கும் உவமை - தனக்குத்தானே உவமையாதல். தன்னொக்கும் என்பதல்லால் தனையொக்கும் உவமையுண்டோ. (ஆ:788)

தன்னொப்பு - தனக்கு ஒப்பு. தன்னொப் பொன்றில்லாதான். (யுத்:294)

தன - தன். மீனெலாம் தன பின்வர. (பா : 1192)

தனதன் - குபேரன். தனதன் தந்த மானமேற் சேனையோடும் வடதிசை நோக்கி மீது போன தேர். (யுத் : 2960)

தனம் - 1. செல்வம். பழந்தனம் இழந்தன படைத்தவர். (சு:554) 2. கொங்கை. தாக்கணங்கனையவள் தனத்தில் தைத்தவே. (பா : 599)

தனயர் - புதல்வர். தனயர் சேவகங்கள் கண்டு. (பா : 512)

தனயர்கள் - புதல்வர்கள். வெப்புடைக் கொடிய மன்னன் தனயர்கள் வெகுண்டு மிக்கார். (பா : 662)

தனயன் - புதல்வன். இராவணன் தனயன். (யுத் 2451)

தனயன் நான்முகன் தன்மகன் சிறுவன் - நான்முகனாகிய பிரமனுக்கு நல்ல மகனாகிய புலத்தியன் மகன் விச்சிரவசுவுக்குப் புதல்வன். (யுத் : 513)

தனயை - மகள். மதமலை ஈரைஞ்ஞூறுடைத் தரமிகு வலியொடு தனயை தோன்றும். (பா : 370) (சு : 1305)

தனி - 1. வேறு உவமை பெறாதது. ஒப்பற்ற தன்மை. சிறப்புடைமை. அன்னவன் தனி மகள். (யுத் : 407) தனியாறு. (பா : 741) தனி வெண்டிங்கள். (அ : 580) தானுயிருறத் தனிதழுவும் பேடையை. (கி : 15) தனி ஞானி. (யுத் : 149) பிறந்து விளையாடுகின்ற தனியோய். (யுத் : 2202)
2. தனிமைப்பாடு. தனியுந் தானுமத்தையலுமாயினான். (பா:702)
3 ஒரு. ஒன்றாகிய தன்மை. குரக்குத் தனிக்கரத்திற் புடைப் பாற்றுதி கொல்லாம். (யுத் : 1127)

தனிக்கரம் - ஒருகை. (யுத் : 1127)

தனிக்கொலை - தனியே (இரகசியமாகக்) கொல்லும் கொலை. தாதை வந்து தான் தனிக்கொலை சூழினும் சாகான். (யுத் : 148)

தனிக்கோயில் - ஒப்பற்ற அரண்மனை. தாரகலத் தண்ணல் தாசரதி தனிக்கோயில். (யுத் : 1952) (அ : 324)

தனிக்கோல் - ஒப்பில்லாத அரசாட்சி. செம்மாண் தனிக்கோல் உலகு ஏழினுஞ் செல்ல நின்றான். (பா : 168)

தனிச்சரம் - ஒப்பற்ற அம்பு. புரங்கள் வேவத்தனிச்சரந் துரந்தமேரு. (சு : 451)

தனிச்சிலை - ஒப்பற்ற பெருமை வாய்ந்த வில். சங்குறை கரத்தொரு தனிச்சிலை தரித்தான். (பா : 387)

தனிச்சிலை தரித்த மேரு - ஒப்பற்ற வில்லைத் தாங்கிய மேருமலை போன்றவனாகிய இராமபிரான். (ஆ : 432)

தனிச் செல் நேமியான் - பொதுவறக்கடிந்து தனிச்செங்கோல் செலுத்துகின்ற சக்கரவர்த்தி. தயாத னெனும்பெயர்த் தனிச் செல் நேமியான். (பா : 807)

தனிச்சொற்றுளி மாரி - ஒப்பற்ற சொற்களாகிய துளிகளையுடைய மழை. மாருத் தனிச் சொல் துளி மாரி வழங்கி வந்தான். (அ:418)

தனித்தம்பி - ஒப்பற்ற தம்பி. (அ : 417) [பா : பே]

தனித்தனி - தனித்தனியே. தனித்தனி இனிது தாங்கி...... அடி முறை ஏவல் செய்ய. (ஆ : 880) தனித்தனி கடுத்தல் செய்தார். (சு : 12) (யுத் - 1221) தனித்தனி கிடைப்பரோ. (கி ; 2111) (யுத் : 449)

தனித்தாய் - ஒப்பற்ற தாய். தந்தை நீ தனித்தாயு நீ. (பா : 334)

தனித்திகிரி - ஏக சக்கரம். ஒப்பற்ற ஆணை ஆழி. தொன்றுபுரி கோலொடு தனித்திகிரி உய்ப்பான். (பா : 1234)

தனித்தொன்றில்லான் - தனிப்பட்டுத் தனக்கு உவமையாவதொரு பொருளைப் பெறாதவனாய்க் குணபூர்ணனான இராமபிரான். தாளின் மேல் வணங்கினனைத் தழுவினன் தனித் தொன்றில்லான். (யுத் : 3141)

தனிநாதன் - ஒப்பற்ற தலைவனான இராமபிரான். உங்கள் 'குலத் தனி நாதற் குயிர்த்துணைவன். (அ : 1017) அவன் முகம் நோக்கி யொன்றுரைத்தனன் தனி நாதன். (யுத் : 1543)

தனி நாய்கன் - ஒரே உரிமையாளனான வணிகன். (அ : 605)

தனி நாயகம் - ஒரு நாயகம். ஒப்பார் மிக்காரை யில்லாத தனித் தலைமை. தேவர் தேவியர் சேவடி கைதொழும் தாயின் மூவுலகின் தனி நாயகம் மேவுகின்றது. (சு : 442)

தனி நாயகன் - ஒப்பற்ற தலைவனாகிய திருமால். இராமபிரான். தனி நாயகன் வன்கதை தன்கை கொளா நனிசாட விழுந்தனர். (யுத் : 1751) தனி நாயகற்கிளையோன். (யுத்:3017) (யுத்:3720)

தனிநிலை - நடுவுநிலைமை. செம்பொற்றுலைத் தாலமன்ன தனிநிலை தாங்கிய ஞால மன்னற்கு. (அ : 116)

தனிநின்ற தத்துவம் - ஒப்பற்று விளங்கிய மெய்ம்மை. தனிநின்ற தத்துவத்தின் தகைமூர்த்தி நீயாகில். (ஆ : 52)

தனி நின்றுழல்தல் - தனியே நின்று வருந்துதல். தனிநின்றுழல் தன்னுயிரைச் சிறிதே தகைவான். (அ : 363)

தனிப்பிழை - ஒப்பற்றபிழை. பெருங்குற்றம். தனிப்பிழை பொறுத் தனன் இது. (ஆ : 749)

தனி முதல் நாயகன் - ஒப்பற்ற இறைவனாகிய இராமபிரான். ஆழித் தனி முதல் நாயகற்கிளையான். (யுத் : 3024)

தனி முதலவன் - ஒப்பற்ற தலைவனான இராமபிரான். மறையுந் தடவுதலறிவரு தனி முதலவனும். (பா : 313)

தனிமை - தனிப்பட்டநிலை. தனித்து அடையுந் துன்பம். எற்பிரி தனிமையுந் தீர்த்தி. (அ : 564)

தனிமைத் தன்மை - தனிப்பட்ட நிலைமை. அளவில் சேனையின் தருக்கும் அம்மாருதி தனிமைத் தன்மையும். (சு : 883)

தனிமைப்பாடு - (சேனையற்ற) தனிமைப்பட்ட நிலை. தனித்து நிற்கும் இடர். எம்பிக் கமரிடைத் தனிமைப்பாடு புகுந்துள துண்டென் றுள்ளம் பொருமல் வந்துற்ற போழ்தின். (யுத் - 1655)

தனியரசாட்சி - ஒப்பற்ற வீட்டுலக அரசாட்சி, அத்தனியரசாட்சி யில் தாழும் உள்ளம். (அ : 23)

தனியன் - தனிப்பட்டவன். எம்பெருமான் அருள் விழியின் தனியன் நானிலந் தாங்கியது. (அ : 43)

தனியாண்மை - தனிப்பட்ட ஆண்மை. நிகராருமில் தனியாண்மையும் இனி நின் தோளாண்மையும் இசையோடுடன் துடைப்பேன் ஒரு புடைப்பால். (யுத் : 1126)

தனியாறு - பேராறு. தள்ளரிய பெருநீதித் தனியாறு. (பா : 741)

தனியுறுவது - ஒரு துணையுமின்றித் தனியே நிற்பது. பெண்பாலின் தன்னுறுவல் தீர்ப்பான் தனியுறுவதோராதே உன்னுறவு நீ தீர்ந்தாய். (ஆ : 995)

தனியை - தனியாக இருக்கின்ருய். தனியை நீ. (ஆ : 279)

தனிவார்த்தை - ஒப்பற்ற சொல். (யுத் : 1670)

தனிவிற்ருெழில் - ஒப்பற்றவிற்ருெழில். (யுத் : 1826)

தனு - 1. உடம்பு. தனுவொடும் துறக்க மெய்த இன்றெனுக்கருளு கென்ன. (பா ; 671)
2. வில். சன்னத்தனுகித் தனு ஏந்துதற்கேது. (அ : 419)
3. கவந்தனின் முற்பிறவிப் பெயர். தனுவெனு நாமத்தேனோர் கந்தர்ப்பன் சாபத்தாலிக் கடைப்படு பிறவி கண்டேன். (ஆ;1191)
4. காசிபன் மனைவி. தானவரே முதலோரைத் தனுப்பயந்தாள். (ஆ : 202)

தனுத்தொழில் - விற்ருெழில். வெத்தகையாழி தகைந்த தனுத் தொழிலான். (யுத் : 1738)

தனுமறை - தனுர்வேதம். இவன் தனு மறை வித்தகம் சாற்றற் பாலதோ. (யுத் : 1984)

தனுமறை வித்தகம் - வில் வேதப் பயிற்சியிலுள்ள திறமை. (யுத் : 1984)

தனுவல்லான் - வில்லில் வல்லவனுன இராமபிரான். (யுத் : 1566)

தனுவலம் - வில்லாற்றல். ஆயிரந்தேரு மாயத் தனுவலங்காட்டி. (யுத் : 2182) (2963)

தனுவலான் - கோதண்டபாணியாகிய இராமபிரான். வெஞ்சினத் தனுவலான். (பா : 1324)

தனுவின் செல்வன் - இராமன். சாதுவாம் என்ற அத்தனுவின் செல்வனும் போது நாம் வாலிபால் என்னப் போயினுர். (கி : 228)

தனுவேதம் - தனுர் வேதம். வில்வேதம். சிலையாயுந் தனுவேதம் தெவ்வரைப் போற் பணி செய்ய. (பா : 743)

தனை - 1. அளவு. பூத மத்தனையும் ஓர் வடிவு கொண்டென. (ஆ:16)
2. வரையிலும். சரம் பற்றிய சாபம் விடுந்தனையே. (ஆ : 913) சோலையின் தனையோ. (சு : 410)

தனையர் - புத்திரர்கள். தனையர் உளராம் என்ருன். (பா : 213) தனையராயினர். (அ : 1174)

தனையன் - புதல்வன். (தநயன்) தனையன் நான்முகன் தகை மகன் சிறுவன். (யுத் : 513)

தனையொக்கும் உவமை - தனக்கு ஒப்பாகும் வேறு உவமைப் பொருள். தன்னொக்கும் என்பதல்லால் தனையொக்கும் உவமை யுண்டோ. (ஆ : 788)

தனையொவாதவன் - தன்னை ஒப்பவராகப் பிறரை இல்லாதவன். துருவாச முனி. தனையொவாதவன் மகிழ்ச்சியால் வாசவன் தன்கை வனையுமாலையை நீட்டலும். (பா : 490)

தா

தா - 1. குற்றம். தாவரும் இருவினை செற்று. (பா : 356)
2. தாவுதல். தாவரும் பக்கம் எண்ணிரு கோடியின் தலைவன். (யுத் : 500)
3. வருத்தம். துன்பம். கேடு. தாநெடுந்தீமைகளுடைய தன்மையார். (யுத் :577) (உ.வி) (பா : 356) தாவற ஓடி. (யுத் : 1930)
4. வலிமை. வீரர் கண் தாகுல முற்றுஞ் சுடும். (யுத் : 3793) தாவரும் பக்கம் எண்ணிரு கோடியின் தலைவன். (யுத் : 500)
5. அழிதல். தா அரிய பேருலகம். (யுத் : 1671) தாவரும் பொறையினன். (யுத் : 3886)
6. கொடு. விடைதம்மின். (கி : 1033) தாவிடை. (யுத் : 2253) தருதி வில். (யுத் : 549)
7. கேடு. தாவரும் பெருவலித்தம்பி. (கி : 209)

தாக்கணங்கு - 1. காமநெறியால் உயிர் கொள்ளுந் தெய்வம். மோகினித் தெய்வம் என்பர். தீண்டி வருத்துகின்ற மோகினித்

தெய்வம். தாக்கணங் கனையவள். (பா : 599) (யுத் : 1547) தாக்கணங் கனைய மேனி. (பா : 1162)

2. திருமகள். எல்லோரிடமுந் தங்குந் திருமகள். தாக்கணங்கு அருஞ் சீதை. (கி : 482) தாக்க அரும் தாக்கரும் என அகர வீறு தொக்கது. தாங்க - தாக்க என வலித்தது. (கலா) (கி : 599)

3. போரிற் பகைவரைத் தாக்கி வருத்தும் பேராற்றலை வழங்கும் வீரலக்குமி. தாக்கணங்குறை தாமரைத் தாளினல் நூக்கினுன் அக்கதவினை. (கி : 599)

தாக்கிய தெய்வம் - சூர். (கலா) தாக்கணங்கு. (அண்) அந்தியில் தாக்கிய தெய்வ முண்டென்னுந் தன்மையள். (பா : 1097)

தாக்கு - 1. குறுந்தடி. தாக்கில் தாக்குறும் பறையும். (பா : 88)

2. தாக்குதல். தாக்கிற்கு இடையுளது எம்பால் நல்கிப்பின் நிரை நிற்றிர். (யுத் : 2413)

தாக்குதல் - 1. பொருந்துதல். மற்றவன் ஆய்மலர்த் தாள்களைத் தாக்கத் தன்தலை தாழ்ந்து வணங்கி. (யுத் : 4161)

2. மோதுதல். தாக்கினுர் தாக்கினுர் தம் கைத்தலஞ் சலித்த தன்றி. (யுத் : 1423) தாக்குற. (சு : 91)

3. படுதல். (உ.வி) (யுத் : 4161)

4. பொருதல். தாக்கினன் அரக்கன்தானே. (யுத் : 2012)

5. பற்றியிருத்தல். தாக்கணங்குறை தாமரைத்தாள். (கி : 599)

தாக்கொலி - அடிக்கப்படுதலால் ஆகிய ஓசை. முருடிரண்டு முழங் குறத் தாக்கொலி. (ஆ : 395)

தாகுதல் - தாவுதல். பார்த்தல். கழல் வெய்யோன் கண் தாகுதல் முன் செல்ல விசைத்துள்ளது கண்டான். (யுத் : 3793)

தாங்கல் - தாங்குபவர். ஆதாரம். பூமி. தாங்கலில் வீழ்வான் மற்றுத் தாபத சரண மென்ன. (பா : 679)

தாங்குதல் - 1. பாதுகாத்தல். காப்பாற்றுதல். தாங்ககிற்றிர். (யுத் : 1679) தாங்கலாற்றும் கோளிலா மன்னன். (யுத் : 2542) தாங்குதி தாங்குவாரை. (கி : 423)

2. மதித்துக் காத்தல். மற்றொருவன் புணர் தாரமாவது தாங்குந் தருக்கரோ. (கி : 386)

3. ஆளுதல். மாநிலந் தஞ்சமாக நீ தாங்கென்ற வாசகம். (அ: 305)

4. மேற்கொள்ளுதல். தாங்குவார் செருமுன் என்னில். (யுத் : 1259)

5. பொறுத்தல். தாங்குவா ளல்லள் துன்பம். (யுத் : 1629)
6. தள்ளப்படுதல். தள்ளுதல். ஓங்கிய வெகுளி துன்பம் என்றிவை ஒன்றற் கொன்று தாங்கிய தரங்கமாக. (யுத் : 1939)
7. சுமத்தல். யானையும் பெரும் பெயர்க் கிரிகளும் பெயரத் தாங்கிய அரும் பொறை. (அ : 16)
8. பெறுதல். முனிவரன் தன்னருள் தலை தாங்கிய விஞ்சையும். (அ : 318) பொருவரு விஞ்சைகள் ஏதமற்றன தாங்கி. (அ : 319)
9. தாங்குதல். தாங்கணைப் பணிலமும். (சு : 532)
10. தரித்தல். வளையுந் தாங்கு அரா விங்கணைப் பள்ளியான். (சு : 532) [பா : பே]
11. சூடுதல். மகுடந் தாங்கலாய். (அ : 1161)
12. வகித்தல். சிரத்தால் தாங்கினள். (அ : 553)
13. தடுத்தல். தாங்கருந்தவத்தின் மிக்கோன். (பா : 419)

தாசரதி - தசரதன் மகனாகிய இராமபிரான். தாரகலத்தண்ணல் தனிக் கோயில் தாசரதி பேர உலகுற்ற துற்றதாற் பேரிலங்கை. (யுத் : 1952)

தாட்சி - 1. தாழ்வு. தாழ்ச்சி. தாட்சியில் பொருள் தரும் தரும மூர்த்தியை. (யுத் : 325) (பா : பே)
2. இழிவு. தாட்சி இங்கிதனின் மேல் தருவதென்னினி. (யுத் : 23)

தாட்சியில் பொருள் - எவ்வகைபான தாழ்வுமில்லாத உறுதிப் பொருள். (யுத் : 325)

தாட்டாமரை - தண்டினையுடைய தாமரை மலர். தாட்டாமரை மலரோன் படை. (யுத் : 3025)

தாட்டுணை - தாள் துணை. இரண்டு பாதங்கள். பின்னங்கால்கள். தாட்டுணை பிடித்தகன் தரையின் எற்றுவார். (யுத் : 484) (சு:930)

தாட்படாக் கமலம் - 1. நாளமாகிய தாளில் தோன்றாத தாமரை. (அண்) (கலா)
2. நாளத்தை விட்டு நீங்காத செந்தாமரை மலர். (வை.மு) தாட்படாக் கமல மன்ன தடங்கணான். (கி : 76)

தாடகை - சுபாகு மாரீசன் தாய். (மலைகளிற் சஞ்சரிப்பவள்) வேலிகற் சினவு தாடகை. (கி : 84)

தாடை - கன்னம். தாடைகள் சந்துமார்பு. (யுத் : 1270)

தா டொடு தடக்கை - முழந்தாளைத் தொடுமாறு நீண்டுள்ள பெரிய கைகள். [ஆஜாநுபாகு] தாள் தொடு தடக்கை. தா டொடு தடக்கையாரத் தழுவினன். (யுத் : 4268) தா டொடு தடக்கை யத்தருமமே யனுன். (அ : 886)

தாண்டு மா - குதிரை. தடுப்பருந் தேரிலேறித் தாண்டுமாப் படர்த லோடும். (பா : 685) (பா : பே)

தாணிலாமலர் - காம்பிலே பொருந்தாத மலர்கள். சொன் மலர். தாள் நிலா மலர் தூவினன் தம்முனைக் காணலாமெனும் ஆசை கடாவவே. (அ : 799) அப்பொழுது பறித்த மலர். (உ.வி)

தாணிலாமலர் தூவினன் - 1. இராமபிரான் திருவடிகளில் விளக்கம் மிக்க மலர்களைத் தூவி. (அண்) தாள் நிலாம் மலர்.
2. சொன் மலர்களைத் தூவினன். துதித்தான். (கலா) தாணிலா மலர் தூவினன் தம்முனைக் காணலா மெனும் ஆசை கடாவவே. (அ : 799)

தாணு - 1. அசரம். நிலையியற் பொருள். நிலைத்திணைப் பொருள். தாணுவோ டூர்வ வெல்லாம் சமைக்குவென் என்னும் வேலை. (பா : 680)
2. ஸ்திரமாக நிற்பது. தாணுவாய் உலகினைத் தழுவி நிற்கும் மேருவே. (யுத் : 101)
3. மலை. (கலா) தாணுவின் தோற்றத்தானை. (யுத் : 2900)
4. சிவபெருமான். (வை.மு) (அண்) (யுத் : 2900)

தாணுவின் தோற்றத்தான் - மலையைப் போன்ற தோற்றமுடைய இலக்குவன். (கலா) சிவபெருமான் போன்ற உக்கிரமான தோற்றத்தையுடைய இளையபெருமாள். (வை.மு) (அண்) உறுதிகள் பலவுஞ் சொல்லித் தாணுவின் தோற்றத் தானைத் தழுவினன். (யுத் : 2900)

தாதவிழ் கூந்தல் - மலர்கள் முறுக்கு விரிகின்ற மயிர் முடி. தாதவிழ் கூந்தன் மாதர் தனித்தனி நோக்க. (யுத் : 1221)

தாதாய் - பிள்ளாய். குழந்தாய். தாதாய் காணச் சால நினைந்தேன் தளர்கின்றேன். (யுத் : 2610)

தாதி - 1. செவிலித்தாய். பேதை தாதியரிற் சொன்னர். (பா: 1203)
2. வேலைக்காரி. சேடிகள் தலைவியரது ஏவலாட்டிகள் என்றும் தாதிமார் அவர்களது ஏவலாட்டிகளென்றும் யாழ்ப்பாண உரை

யொன்றிற் கூறப்படுகின்றது. நீதில் செல்வ மடந்தையர் சேடியர் தாதிமாரெனத் தம்பணி கேட்பவே. (அ:1078)

தாதிமார் - பணிப் பெண்கள். (அ : 1078)

தாதியர் - பணிப் பெண்டிர். குற்றேவல் செய்யும் மகளிர். உன் மாற்றவள் தாதியர்க் காட்செயத் தரிக்கிலேன் என்ருள். (அ:151) தாதியர்தமைத் தொழும் தன்னைத் தான் தொழும். (யுத் : 4173)

தாது - 1. பூந்தாது. மகரந்தத்தூள். தாதுகு மீயரித்தளிர் மெல்லணை. (பா : 644)

2. மலர். தாதவிழ் கூந்தன் மாதர். (யுத் : 1221)

தாதுகுவீ - மகரந்தஞ் சிந்தப் பெற்ற மலர். தாதுகு வீயரித்தளிர் மெல்லணை. (பா : 644)

தாது கொண்ட போது - மகரந்தப் பொடிகளைக் கொண்ட மலர்கள். தாது கொண்ட சீத மேவு சாந்து சந்த மென்றளிர்ப் போதுகொண்டு. (ஆ : 650)

தாதுண் சடிலம் - மகரந்தங்களைக் கொண்ட சடைமுடி. தாதுண் சடிலத் தலை வைத்தது. (ஆ : 694)

தாதுராகம் - 1. (செங்) காவிக் கல்லின் செந்நிறம். தாதுராகத் திற் சார்ந்த கூந்தலம் பிடிகள். (பா : 941)

2. காவிக்கல். தாதுராகத் தடங் குன்றம். (யுத் : 1514)

தாதை - தந்தை. தந்தாதையரைத் தனையர் கொலை நேர்ந்தார் முந்தாரே யுள்ளார். (ஆ : 994) (யுத் : 4023) (யுத் : 148)

தாதை சொல் தலைமேற் கொண்ட தாபதன் - இராமன். (யுத்:2227)

தாதைதந்தை - பிதாமகன்.

தாதைதன் தந்தை - பிதாமகன். தந்தையின் தந்தை. திகைத்து மேவு தாதைதன் தந்தைபால் உரைத்தனன் மீண்டு. (பா : 513)

தாதை தாதை - பிதாக்கடவுள். மலர் மேலயன் தன் முதலோர் தந் தாதைதாதை இறைவா. (யுத் : 2202)

தாதை பணி - தந்தை ஏவிய பணி. தந்தை கட்டளை. சகரர் தாதை பணி தலைநின்று. (அ : 320) (அ : 617)

தாதையர் - தந்தைமார். மக்களைச் சுமந்து செல்லுந் தாதையர். (யுத் : 1936) (ஆ : 994)

தாபத - இருடியே. முனிவனே. தாபத சரணம் என்ன. (பா : 679)

தாபதர் - தவஞ் செய்பவர். தண்டகத்துத் தாபதர் தம்மை உள் கண்டு அகத்துயர் தீர்வது காண்டிரால். (கி : 760) முக்கோல் தாபதர் வடிவங் கொண்டு. (யுத் : 4204)

தாபதர்கள் - முனிவர் வேடங் கொண்டவர்கள். தாபதர்கள் சிலை யெடுத்துத் திரியுமிது சிறிதன்றே. (ஆ : 325)

தாபதன் - தாபத வேடங் கொண்ட இராமன். தாபதன் அம்புக் காற்று நொந்தனன். (யுத் : 1241) (யுத் : 2227)

தாம் 1. தாகம். தாமுற அளித்தனன். (உ.வி) (பா : 269)

2. அசை. நா தாம் பற்று மழலை. (அ : 394) (ஆ : 84)

3. தாமம். ஒளி. தாம் மடங்கலும் கொடுஞ் சுடர்ப்படைகளும் தரித்தார். (யுத் : 3786)

4. தாமே. வேறு துணையின்றி. உலகம் யாவையும் தாமுள வாக்கலும். (பா : 1)

தாம் தாம் ஒழிய - அவரவர் நீங்க. தாம் தாம் ஒழியத் தமியேனு டனே போந்தாய். (ஆ : 1110)

தாம்பிரை - காசிபன் மனைவி. இழைபுரையுந் தாம்பிரை ஊர்க்குருவி காடை முதல் யாவும் ஈன்றாள். (ஆ : 203)

தாம்பு - ஆரம். கயிறு. பூந்தரள மா தாம்பு அற்றென்ன மழைக் கண்ணீர் ஆலியுக. (அ : 394) மணித் தாம்பு. (பா : 663) தாம்பினில் பற்றித் தந்து. (சு : 812)

தாம - அழகிய. தாமத் துணைக்குறங்கு. (யுத் : 3006)

தாமக்குடை - ஒளியையுடைய (வெண் கொற்றக்) குடை. தாமக் குடை மீதுயரப் பெருஞ்சங்கம் விம்ம. (யுத் : 1977)

தாமகூடம் - ஒளி மிக்க சிகரம். தாமகூடத் திரைத் தீர்த்த சங்கமம். (கி : 828)

தாமச்சுடர் - பேரொளி. ஒரு பொருட் பன்மொழி. சுடர்த்தாமம். ஒளி வரிசை. தாமச் சுடர் வாளி தடிந்தகல. (யுத் : 3460)

தாம சத்திரம் - தாம அஸ்திரம். ஒளிபொருந்திய படைக்கலங்கள். தாம சத்திரம் சித்திரம் பொருந்தினர் தயங்க. (யுத் : 3784)

தாமசம் - 1. இருள். இருள் மயமான மாயக்கணை. மாயாஸ்திரம். தாமசத்திற் பிறந்தவர். (யுத் : 3784)

2. தாமதகுணம். தாமசத்தினிற் செல்கிலாச் சது முகத்தவற்கும் தாமசத்தினைச் செய்பவர். (யுத் : 3784)

தாமடங்கலும் - 1. தாம் மடங்கலும். தாவுகின்ற சிங்கத்தையும். தாமடங்கலு முடங்குளை யாளியுந் தகுவார். (யுத் : 3786)

2. தாம் அடங்கலும்; தாங்கள் யாவரும். தாம் அடங்கலும் நெடுந்திசை உலகொடு தகைவார். (யுத் : 3786)

3. தா மடங்கலும்; வலிமையுள்ள ஊழித்தீயும். தாமடங்கலுங் கடலு மொத்தார். (யுத் : 3786)

4. தாம் மடங்கலும்; ஒலியுள்ள இடிகளும். தாமடங்கலும் தொடுந் சுடர்ப் படைகளுந் தரித்தார். (யுத் : 3786)

தாமணி - கட்டுக் கயிறு. தாவெரி தாமணி முனை கொளுத்தி. (சு : 1205)

தாமத்தலை - மாலையணிந்த தலைகள். (யுத் : 2922)

தாமதம் - தாமசாத்திரம். மாயாஸ்திரம். தாமசத்தினிற் பிறந்தவர். (யுத் : 3784)

தாமப் பொற்றோள் - மாலை யணிந்த அழகிய தோள். மாருதி தாமப் பொற்றோள். (யுத் : 1185)

தாமம் - 1. மாலை. மல்லிகைத்தாமம் வெறுத்து. (பா : 972)

2. வெற்றிமாலை. தாம நாட்டிய கொடிப்படை. (யுத் : 505)

3. முத்துமாலை. அருவியில் தாழ்ந்து முத்தலங்கு தாமத்த. (பா:127)

4. அழகுக்காக மட்டும் அணியும் மாலை. தார்கள் கோதை தாம் தாமந்தாம். (அ : 980)

5. ஒளி. விளக்கம். அந்தாம நெடுந்தறி ஆயிரம். (ஆ : 715) தாம மௌலி. (யுத் : 4318) (கி : 828)

6. இடம். தாம மூவுலகமுந் தழுவிச் சார்தலால். (யுத் : 206)

தாம மௌலி - ஒளியுள்ள கிரீடம். தத்த முச்சியின்மேல் வைத்த தொத்தது அத்தாம மௌலி. (யுத் : 4318)

தாமரை - 1. தாமரை மலர். தாட்டாமரை மலரோன். (யுத்:3025)

2. பதுமம் என்னும் பேரெண். பொருது பற்றிய தாமரை போலும். (யுத்: 3576) தாமரைக் கணக்கு பார்க்க.

3. கண். விரை செறி தாமரை இமைக்கும் மெய்ம்மையால். (பா : 621)

தாமரைக் கண் - 1. தாமரை மலர் போன்ற கண். தாமரைக் கண் பனி சோர்கின்றான். (அ : 787)

2. தாமரை மணி. நளினாக்ஷம். (நளினம் - தாமரை; அக்ஷம் - கண் மணி) (வை. மு) தாமரைக் கண்ணொடேர் தவத்தின் மாலையன். (ஆ : 835) [பா : பே]

தாமரைக் கண்ணன் - தாமரை மலர்போன்ற கண்ணையுடையவன். தாமரை மலர் போன்ற கண்ணையுடைய இராமபிரான். தாமரைக் கண்ணன் காதலுற்றிலன். (அ : 70) தாமரைக் கண்ணன் என்பார் (பா : 791) (ஆ : 385) (யுத் : 137)

தாமரைக் கணக்கு - பத்மம் என்ற பேரெண். கோடியினாற் பெருக்கிய கோடி. ஒன்று முதற் பதினைந்தாவது தானமான நூறுலக்ஷங் கோடியே பதுமம், தாமரை, கோடா கோடி என்று வழங்கும் தாமரைத் தலைய வானரி தாமரைக் கணக்கிற் சார்ந்த தாம் வரத் துரந்து முந்தித் தசமுகன் தனயனார்த்தான். (யுத் : 2063)

தாமரைக்கிழத்தி - திருமகள். சீதாபிராட்டி. தாமரைக் கிழத்தி யோடும் தசரதராமன் சார்ந்தான். (யுத் : 4321)

தாமரைக்கை - தாமரை மலர்க்கு ஒப்பான கை. தாமரைக் கை நோவ ஆழிகடைந்தமுதம் எங்களுக்கே ஈந்தாய். (ஆ : 102)

தாமரைச் சரணம் - தாமரை மலர் போன்ற பாதங்கள். தாதை தாமரைச் சரணஞ்சூடி. (அ : 287) தாமரைச் சரணம் வைத்தான். (யுத் : 1859) (யுத் : 2888)

தாமரைச் செங்கணன் - தாமரை மலர் போன்ற சிவந்த கண்களை யுடையவன். (பரதன்) தாமரைச் செங்கணனை எழுவினு முயர்ந்த தோளாய் எய்திய தென்னை என்ன. (அ : 1025)

தாமரைச் செல்வி - தாமரையில் வீற்றிருக்குந் திருமகள். செய்ய தாமரைச் செல்வியைத் திம்புனல் கையினாட்டும் களிற்றரசு. (பா : 1038)

தாமரைச் செழுந்தவிசு - வளப்பமான தாமரை மலர் அணை. தாமரைச் செழுந்தவி சுகந்த அத்தேவும். (பா : 193)

தாமரைச் சேயவள் - செந்தாமரை மலரிலுள்ள திருமகள். அமர்ந்த தாமரைச் சேயவள் என வளர் செல்வி கண்டு. (பா : 371)

தாமரை சீறிய கைகள் - செந்தாமரை மலர்களைப் பகையென்று சினந்த கைகள். கூறிய முனிவனைக் குளிர்ந்த தாமரை சீறிய கைகளால் தொழுது. (அ : 1190)

தாமரைத்தடங் கண்ணன் - இராமன். (யுத் : 1553)

தாமரைத்தடம் - தாமரைத் தடாகம். தாமரைத்தடம் பொய்கை செஞ்சந்தனம் தாமரைத்தன ஒத்தது. (சு : 723)

தாமரைத் தலையவாளி - தாமரை யரும்பு போன்ற முனையையுடைய அம்புகள். [நாளீகாஸ்திரம்] மொட்டம்பு. (யுத் : 2063)

தாமரைத் தவிசின் மேலான் - பிரமன். தாமரை ஆசனத்தில் வீற்றிருக்கும் பிரமன். தாமரைத் தவிசின் மேலான் வெம்படை தொடுக்குமாயின். (யுத் : 2893)

தாமரை நயனத்தான் - தாமரை மலர் போன்ற கண்களையுடைய பெருமான். இராமன். (அ : 676)

தாமரை நாண் மலர்க்கானம் - அன்றலர்ந்த தாமரை நான்மலர்க் கானத்துள். (பா : 855)

தாமரைப்பூ - தாமரை மலர். தண்டாமரைப்பூ நெருப்புற்ற தன்மை யுற்றாள். (யுத் : 2627)

தாமரைப் பொகுட்டு - தாமரை மலரின் நடுவிலுள்ள கொட்டை. செந்தாமரைப் பொகுட்டிற் செம்மாந்து வீற்றிருக்கும் நந்தா விளக்கை. (யுத் : 294)

தாமரை போற்கை - தாமரை மலர் போன்ற கை. பொற்றாமரை போற்கையால் பொடிசூழ் படி நின்றெழுவி. (அ : 333)

தாமரை மலரின் வைகுறும் நன்னெடு முதல்வன் - பிரமதேவன். தாமரைப் பூவில் வீற்றிருக்கின்ற நல்லபுகழான் நீண்ட தலைவனாகிய பிரமதேவன். (பா : 368)

தாமரை மேலுறை வான் - தாமரை மலர்மேல் தங்கு கின்ற பிரமன். உரிய தாமரை மேலுறை வானினும். (அ : 104)

தாமரையின் தனிப் பகைஞன் - தாமரைக்கு ஒப்பற்ற பகைஞனை சந்திரன். தணந்தாமரையின் தனிப்பகைஞன் என்னுந் தன்மை ஒருதானே யுணர்ந்தான். (ஆ : 672)

தாமரையுடைத்தானம் - தாமரைகள் பல தோன்றிப் பொருந்திய தாமரை வாவி. பங்கயம் செய்யவும் வெரியவும் பலபடத் தங்கு தாமரை யுடைத்தானமே போலுமே. (பா : 1120)

தாமரை வடித்த அங்கணுயக - செந்தாமரை மலரைத் திருத்திச் செய்தாற் போன்ற திருக்கண்களையுடைய தலைவனே. (அ : 720) [பா : பே]

தாமரை வளையம் - 1. தாமரையினுட் சுருள். (வை.மு) விரத நோயுற்ருர்க்கு வெப்பம் தணிய அவர் மார்பில் அணியும்படி குளிர்ந்த பூக்கள் கோக்கப்பட்ட தாமரைக் கொடிவளையம். தாமரை வளையம் நானச்சார முண்டிருந்த சீதச் சந்தனம் தளிர் மென் தாதோடு ஆர முண்டிருந்தும் சிந்தை அயர் கின்ருன். (ஆ : 664)

2. தாமரையின் பெரிய அடிப்பகுதி (வை.மு) தாமரைத்தண்டின் வளையம். (அண்) தாமரைக் கிழங்கு. தளையவிழ்ந்த கொழுந்தடந் தாமரை வளையம் வன்கையில் வாங்கின வானரம். (யுத் : 968)

தாமரை வனம் - தாமரையாகிய காடு. தும்பி கலந்த தாமரைப் பெருவனம் கதிரவன் கரத்தால் மலர்ந்த தாமெனப் பொலிந்தன உலர்ந்தவர் வதனம். (யுத் : 2310)

தாமவிஞ்சையர் - 1. தாவுகின்ற அவிஞ்சையை யுடையவர். தாம விஞ்சையர் கடற்பெருந் தகையினர். (யுத் : 5785)

2. ஆரத்தையணிந்த வித்தியாதரர். தரளத் தாம விஞ்சையர் துவன்றினர். (யுத் : 3785)

தாமவிந்து - 1. தாம் அவிந்து. (இறந்து) தாம் அவிந்து மீதெழுந்தவர். (யுத் : 3785)

2. தாம இந்து. ஒளியுள்ள இந்து. தாம இந்துவின் பிளவெனத் தயங்கு வெள்ளெயிற்றர். (யுத் : 3785)

தாமுற - தாம் மிகுதியாக. தாகம் பொருந்த. (உ.வி) காமரொண் கௌசலை கரத்திஞேர் பகிர் தாமுற அளித்தனன் சங்க மார்த்தெழ. (பா : 269)

தாய் 1. தாவி. ஆழிதாய் இடராழியிடையே வீழ்ந் தழிவேஞே. (சு : 324) குறளுருவாயடித் தாயளந்துலகங்கள் தரக் கொள்வான். (சு : 1189)

2. மூலம். கள்ளியின் தாய். (பா : 340)

3. பெற்றதாய். தாய் சொற் கேட்டலும் தந்தை சொற் கேட்டலும். (யுத் : 4158)

தாய் தந்தை - தாயும் தந்தையும் ஈன்ற தாய் தந்தை என்ருல் அவர்மேல் சலிக்கின்றது என்னே. (அ : 428)

தாய் தெரிந்துலகங் காத்த தவத்தி - தாயாக அறியப்பட்டு உலகைக் காக்கின்ற தவமுடையவள். சீதா பிராட்டி. தாய் தெரிந்துலகங் காத்த தவத்தியைத் தன்னைக் கொல்லும் நோய் தெரிந்துணரான் தேடிக் கொண்டனன் நுவல. (யுத் : 723)

தாய்மை - தாயாபிருக்குந்தன்மை. தாய்மையுமன்றி நட்புந் தருமமுந் தழுவி நின்ருய். (கி : 313)

தாய - 1. தாவிய. தாய வேலை. (சு : 243)
2. தாவி வளர்ந்தன. சிறை வானந்தாயவே. (கி : 994)

தாயத்து நிரப்பினேர். பங்காளியால் வறுமையுற்றவர். நேர்வரு தாயத்து நிரப்பினேர் பிறர் சீரிய கிளைஞரை மடியச் செற்றுளோர். (யுத் : 387)

தாயம் - 1. உரிமை. சொத்துரிமை. பங்காளித்தன்மை. நின்குலத் தாயம் வந்தவர்க்கு. (கி : 963)
2. பங்காளிகள். நேர்வருதாயத்து நிரப்பினேர். (யுத் : 387) நற்ருய முளதாய பற்ரு மிக்க தகைப்புலத்தோர். (யுத் : 410)

தாயர் - தன் தாய்மார்கள். தார்குலாம் அலங்கன் மார்பன் தாயரை நினைந்து நைந்தான். (கி : 615) தாயரும் அருந்தவத்தவரும். (அ : 986) (அ : 443) (யுத் : 4150)

தாயர் சொல் நோக்கினுன் - தாயான கைகேசியினது சொல்லைப் பரிபாலித்தவனுன இராமபிரான். பாரதி தன்னை நோக்கினுன் தாயர்சொல் நோக்கினுன். (யுத் : 3933)

தாயர் தவ்வையர் - ஐவகைத் தாயருள் ஈன்ருளொழிந்த மற்றை யோரும் அவர் மக்களாய்த் தமக்கு மூத்தோரும். தாயர் தவ்வை யர் தன்றுணைச் சேடியர் ஆய மன்னிய அன்பினர். (அ : 523)

தாயரிற்பரி சேடியர் - தன்னை பெற்ற தாய்மாரினும் அன்பு காட்டும் சேடியர். தாயரிற் பரி சேடியர் வியரித்தளிர் மெல்லணை... ஆயிரத்தின் இரட்டி அடுக்கினர். (பா : 644)

தாயவன் - 1. தடந்தவன். (அண்) [தாவு] எதிரில்லான். மேயவிறல் முற்று வரி வெஞ்சிலையி னேடுந் தாயவன். (ஆ : 754)

2. உரிமையாகக் கவர்ந்து கொண்டவன். (வை.மு) [தாயபாகம்] (ஆ : 754)

தாயவை - ஔவை எனப் படுகின்ற தாய். தாயவை தந்தை மா ரென் றுணர்வரோ தருமம் பார்ப்பார். (யுத் : 1360)

தாயின் அன்பினன் - தாயைக் காட்டிலும் அன்புடையவன். தாயின் மன்னுயிர்க் கன்பினன் உளன் ஒருதக்கோன். (யுத் : 149)

தாயினர் - தாவிச் சென்றார்கள். தாயினர் உலகினை. (கி : 818)

தாயினுந் தொழத்தக்காள் - தாயினிடத்துக் காட்டிலும் பெரும் பணிவு கொண்டு தொழத்தக்கவளான சீதாபிராட்டி. தாயினுந் தொழத் தக்காள் மேற்றங்கிய காதற்றன்மை நோயும் நின் முனிவுமல்லால் வெல்வரோ நுவலற் பாலார். (யுத் : 3878)

தாயினும் உயிர்க்கு நல்லாள் - அன்னையைக் காட்டிலும் பிராணிகளி டம் நன்மை புரிபவளான சீதை. (யுத் : 770)

தாயினை - தாவினாய். போய்த் தாவினை நெடு மாகடல் பிழைத்தாய் கடல் புகுந்தாய். (யுத் : 1850)

தாயீர் - தாயாம் தன்மையுடையீர். முலைதந்தீர் தாயிரே நீர் இன்று மெனக் கென்தருவீரே. (அ : 868)

தயேயனைய கருணையான் - தாயைப் போல நன்மக்களிடம் கருணை புரியும் இராமபிரான். தாயேயனைய கருணையான் துணையை. (சு : 1169)

தாயைப் பயந்தோன் - மாதாமகன். என்று தாயைப் பயந்தோன் இயம்பலும். (யுத் : 739)

தாயை முன்னிய கன்று - தாய்ப் பசுவை எதிர்த்த கன்று. தாயின் முன்னிய கன்றனையான் தனக்கு. (சு : 617)

தாயையே ஊனறக் குறைத்தான் - தாயையே உடம்பு அற்றொழியுமாறு தலையை வெட்டினான். பரசுராமன். (அ : 321)

தாயோன் - தாவியளந்தவன். மூன்றுலகு அடியின் தாயோன் ஒக்க வூர் பறவை. (சு : 932)

தார் - 1. சேனை தார் ஒடுங்கல் செல்லாது. (அ : 110)
2. காலாட் படை. காரா யின காய்கரி மாத் தாராயிர கோடி. (யுத் : 2908)

3. படை வகுப்பு. அணிவகுப்பு. தார் கெழு சேனே. (சு:1233)
4. முன்னணிச் சேனே. கொடிப்படை. (கலா) தார் செலக் கடை செலச் சென்ற தானே. (யுத் : 1321)
5. ஒழுங்கு. தாருடை மலரினும் ஒதுங்கத் தக்கிலா. (அ : 552)
6. குதிரைச் சேனே. காலிற் கால்வரு தாரினங் குழுமின· (ஆ : 400)
7. தேர்ச் சிறு மணிகள். தாரணி தேரொடு மிற்றன. (சு : 727)
8. மாலே. தார் காத்த நறுங்குஞ்சித் தனயர்கள். (சு : 736)
9. அடையாள மாலே. தார்கள் தாம் கோதை தாம். (அ : 890)
10. கிண்கிணி மாலே - குதிரையின் கழுத்திற் கட்டப்படுவது. யானேயின் கழுத்தில் கட்டப்படுவது. ஆர்த்தன கழலும் தாரும். (சு : 982) தாரொடு நடந்தன பிடிகள். (அ : 134)
11. பொன்னரி மாலே. சேனேயோன் கழலுந்தாரும். (யுத்:2398)
12. பூ. தார் தந்த கமலத்தாள். (ஆ : 637)
13. சிறு மணி. (உ.வி) (சு : 727)

தார்ப்பணே - தூசிப் படையிலுள்ள முரசு. தார்ப் பெரும் பணேயின் விண்தழங்கு தாவினும். (கி : 457)

தார்ப்பூண் உரன் - கிண்கிணி மாலேயணிந்த மார்பு. தார்ப் பூண் உரனெரிந்தவும் ஒண்பொற் குரனெரிந்தவும். (சு : 1010)

தார் முரசம் - மாலேயணிந்த முரசம். பம்பை தார் முரசம் சங்கம். (யுத் : 2397)

தாரகை - விண்மீன். நட்சத்திரம். (எல்லாப் பொருளேயுந் தரிப்பது) தண்மதி தன்னெடும் தாரகை ஒவு வானமும். (பா : 1044)

தாரகைக்குழு - நட்சத்திரக் கூட்டம். தாரகைக் குழுவை வென்ற... முத்தாரம். (யுத் : 4343)

தாரகைச் சும்மை - ஓர் ஆபரணம். தாழத் தாரகைச் சும்மை பூட்டி. (பா : 1214)

தாரகைச் சுமை - ஓர் ஆபரணம். பாரத் தாரகைச் சுமையும் பூட்டி. (பால : 1214) [பா : பே]

தாரகைபுரை தரளநீழல் - நட்சத்திரங்களே ஒத்த முத்துக்களாலாகிய பந்தரின் நீழல். (பா : 1051)

தாரணி - பூமி. உலகம். தாரணி வந்த தம்பிக் குதவிய வள்ளலே. (ஆ : 216) தாரணி தாங்கிய கிரியிற் றங்கினுர். (ஆ : 1130). (யுத் : 1631)

தாரணித்தல் - நிதான நிலையடைதல்; இளைப்பாறுதல். தாரணித் தாங்கொரு கிரியிற் றங்கினுர். (ஆ : 1130) [பா : பே]

தாரணித்தேர் - பூமியாகிய தேர். தாரணித் தேரிற் சென்றனன் சிவிகை பின் செல. (கி : 687)

தாரணி தாங்கியமலை - பூமியைத் தாங்கியமலை. மலைகள் பூமியின் கீழ் நெடுந் தூரமளவும் வேரூன்றி நின்று பூமியைத் தாங்குதல் பற்றி தாரணி தாங்கிய மலை எனப்பட்டது. (வை. மு) தலை கிடந்தன தாரணி தாங்கிய மலை கிடந்தன போல. (யுத் : 3938)

தாரணி தேர் - கிண்கிணி மாலை யணியப் பெற்ற தேர். கம்மியர் சகட மொத்தன தாரணி தேரெலாம். (யுத் : 2098)

தாரம் - 1. மனைவி. தாரம் வெளவினன் என்ற சொல். (கி : 147) (கி : 337) தார நீங்கிய தன்மையனுதலின். (யுத் : 544) (அ:345) மாண்டது தாரம். (யுத் : 2872)
2. ஒரு பண். ஈளி தாரம் இயம்பிய வண்டுகள். (யுத் : 971)

தாராகணம் - நட்சத்திரத் தொகுதி. தாரா கணத்தொடும் அமைக அன்னுன். (பா : 681)

தாரி - வழி. வசம். இதுதான் உந்தாரிய தன்று. (யுத் : 248)

தாரியது - தரத்திலுள்ளது. வசத்திலுள்ளது. வழிப்பட்டது. (யுத் : 248)

தாரினம் - குதிரைக் கூட்டங்கள். காலின் கால் வரு தாரினங் குழுமின. (ஆ : 400)

தாரு - மரம். கற்பக விருட்சம். தரு என்பதன் விகாரம். தாருவோ வேணுவோ. (யுத் : 101) தாருவைச் சுட்டு [illegible] தணற் செய்து. (சு : 1220)

தாருகன் . 1. முருகனது வேற்படை சிதைத்த ஓர் அசுரன். தாருகன் குருதியன்ன குருதியில். (சு : 1000) தாருகன் என்னுந் தன்மைக் கொலைத்தொழிலவுணன் பின்னை இராக்கத வேடங் கொண்டான். (யுத் : 2515) (யுத் : 3773)

2. ஓர் அரக்க வீரன். அதிகாயனுக்குத் துணையா உடன் வந்தவன். இவன் இலக்குவனோடு பொருது இறந்தான். தாருக னென்றுளனெடுவன் தானெடு மேருவின் பெருமையான் எரியின் வெம்மையான். (யுத் : 1797)

தாரை - 1. [தாரா] நெகிழ்ந்து ஒழுகும் நீர்த்தொடர்ச்சி இடைய றாத ஒழுக்கு. நீர்த்தாரை. கண்களினுன்ற நீர்த்துளி தன்னெடுந் தாரைகள் தளத்தில் வீழ்தலால். (அ : 492) பசுங்கதிர் வழங்கு தாரையா. (சு : 151)

2. ஒழுங்கு. தொடர்ச்சி. பேரை ஒரு பொருட்கே வகையாற் பேர்த்தெண்ணும் தாரை நிலையை. (யுத் : 289) மருமம் தாரையின் எரியுண்ட மகரங்கள். (யுத் : 555)

3. ஊது கருவி. தாரையும் சங்கமும் தாளம் கொம்பொடு. (அ:966)

4. எக்காளம். குழலினிற் சங்கில் தாரையில் எழுகுரலின்றியே என்று மில்லதோர் அழுகுரல். ஆ : 595)

5. ஒரு போர்ச்சின்னக் கருவி. சக்கர மூலக்கை தண்டு தாரை வாள் பரிகம். (சு : 758)

6. வழி. நெறித்தாரை செல்லாத நிருதர். (ஆ : 361)

7. கூர்மை. வெறித்தாரை வேலரக்கர். (ஆ : 361) தாரைவாள். (யுத் : 470) (கி : 933)

8. கண்மணி. வாட்டாரை நெருப்புக வாய் மடியா. (ஆ : 915)

9. ஒளிக் கற்றை. கனகத்தாரைக் கோபுரம். (யுத் : 3598)

10. வாலியின் மனைவி. பேர்கலாத்தாரை சென்றனள். (கி : 607’

தாரைக் குருதி - தாரையாகப் பெருகுகின்ற இரத்தம். செந்தாரைக் குருதியொடு செமு நிலத்தைச் சேருக்கி. (ஆ : 339)

தாரை கொள்ளல் - தாரையாகப் பொழிதல். கன்று உள்ளிடத்தாரை கொள்ளத் தழைப்பன சாலியே. (ப) : 56)

தாரை சேய் - அங்கதன். (கி : 899)

தாரை நிலை - ஒழுங்கானநிலை. தொடர்ச்சியாய ஒழுங்கு நிலை. தாரை நிலையை. (யுத் : 289)

தாரை மாரி - தாரையாகப் பொழிகின்ற மாரி. இளைய வீரன் சர மெனும் தாரை மாரி. (யுத் : 186)

தாரை மைந்தன் - அங்கதன். தாரை மைந்தனும் சாம்பனும். (கி : 752)

தாரையுண்ட - ஒழுங்காக இருக்கின்ற தாரையுண்ட பேரண்டங்கள் அடங்கலும் தானே வாரியுண்டருள் செய்தவன். (யுத்:568)

தாரொலி - கிண்கிணி ஒளி. தாரொலி நிங்கின புரவி. (அ : 500)

தால் - நா. தமிழிலே தாலை நாட்டி. (பாபி : 10)

தாலப்படை - பனைமர மாகிய படை. அங்கதன் அங்கோர் தாலப் படை கைக்கொடு சென்று தடுத்தான். (யுத் : 1925)

தால பலம் - பனம் பழம். தலை தால பலத்தினேலும் கொத்தொப் பனகொண்டு. (ஆ : 918)

தாலம் - 1. நா. [தாலு - நாக்கு] துலைத்தாலம். (அ : 116)
2. பனைமரம். தாலப்படை. (யுத் : 1925) தாலஞ் சார்ந்த மாசுணம். (யுத் : 3614)

தால மீன் - பனை மீன். தைத்த அம் பொடுந்திரிந்தன தால மீன் சாலம். (யுத் : 559)

தாலமீன் சாலம் - பனைமீன் கூட்டங்கள். (யுத் : 559)

தாலி - 1. குழந்தையின் கழுத்தில் தொங்கவிடும் ஒருவகை ஆபரணம். தாலி ஐம்படை தழுவு மார்பிடை. (பா : 89)
2. மங்கல நாண். தாலியைத் தொடல் என்னும். (யுத் : 3165) தாலியம் பெருமலை. (சு : 661)

தாலி ஐம்படை - தாலியாகிய பஞ்சாயுதம். ஐம் படைத்தாலி. காத்தற் கடவுளாகிய திருமாலின் சங்கு சக்கரம் தண்டு வில்வாள் என்னும் ஐந்தாயுத வடிவாகச்செய்து குழந்தையின் கழுத்தில் தொங்க விடும் ஓர் ஆபரணம். (பா : 89)

தாலியைத் தொடல் - தம் கணவர் இறந்தலினால் தம் தாலிக்கு என்ன பங்கம் விளையுமோ என்று அஞ்சித் தொட்டுப் பார்த்தல். இயக்கர் தம் தேவிமார் மேலிரித் தவிர்கிற்பர் கொல்... தம் தாலியைத் தொடல் என்னுமற் றோர்தலை. (யுத் : 3165)

தாவம் - விரக தாபம். வஞ்சனைக் கொடு மாயை வளர்க்கு மென் நெஞ்சு புக்கென தாவத்தை நீக்கெனும். (ஆ : 310)

தாவர சங்கமம் - நிலைத்திணையும் இயங்குதிணையும். நிற்ப திரிவ. தாவர சங்கமம் என்னுந் தன்மைய யாவையும் இரங்கிட. (அ:993)

தாவரம் - நிலைத்திணை. (அ : 993)

தாவரிய - தாவுதற்கரிய. கடத்தற்கரிய. தாவரிய பேருலகத் தின் றென் சரங் கோலி. (யுத் : 1671)

தாவருதல் - வலிமை பொருந்துதல். தாவருந் தானவர் தருக்குத் தாழ்ந்தனர். (யுத் : 35)

தாவரும் - 1. தாவிவரும். தாவரும் பக்கம் எண்ணிரு கோடியின் தலைவன். (யுத் : 500)

2. அழியாத. தாவரும் பெருமையம்மா நீ இனித் தாழ்த்த தென்னே. (யுத் : 1256) (கி : 360)

3. வலிமை பொருந்திய. தாவருந்தானவர். (யுத் : 35)

4. தாவு அரும். நீங்குதலில்லாத. முரண்திசைப் பணைக்கையானை தாவருந் திசையினின்று சலித்திட. (யுத் : 1276)

5. வளப்பம் குறைதலில்லாத. தாவருந் திருநகர்த் தையலார். (சு . 979)

6. குற்றமற்ற. தாவரும் பொறையினன். (யுத் : 3886)

தாவரும் பதம் - அழிவில்லாத பரமபதம். தாவரும் பதம் எனக்கு அருமையோ தனிமையோய். (கி : 360)

தாவரும் பெருவலி - கெடாத பேராற்றல். ஈங்கிவன் தாவரும் பெருவலித் தம்பி. (கி : 209)

தாவல் - இளைப்பாறுமிடம். தாவி வருதற்கு இடமாக உள்ளது. தாவல் ஓவலம் என்றது தாங்கிய மா வெலாம். (யுத் : 675)

தாவன - தாவுவன. காற்றினுங் கடிதாவன...... புரவி. (யுத்:1204)

தாவாது - அழியாது. தாவா தொளிருங் குடையாய். (அ : 382)

தாவித்தல் - ஸ்தாபித்தல். நிலை நிறுத்தல். தாவியாது நிதெனுது. (ஆ : 651)

தாவிய - பரந்த. குருதிதாவிய ஆடகத் தட்டிடை. (அ : 1098)

தாவியாது - ஒரு நிலைப்படுத்த மாட்டாமல். தாவியாது நிதெனுது தையலானை மெய்யுறப் பாவியாத போதிலாத பாவி. (ஆ : 651)

தாவிவரல் - தாவிக் குதித்து வருதல். தன் பொருவில் கன்று தனி தாவி வரல் கண்டு. (அ : 279)

தாவில் வெண் கவிகை - கெடுதல் இல்லாத வெண்கொற்றக்குடை. தாவில் வெண் கவிகைச் செங்கோற் சனகன். (பா - 2202)

தாவுதல் - 1. பரவுதல். சுழலுதல். தார்ப் பெரும்பணையின் விண் தழங்கு தாவினும். (கி : 457)
2. வளர்தல். வன்ரேளான் சிறை வானந் தாயவே. (கி :995)
3. கடத்தல். தாவரிய பேருலகம் தாயினன். (யுத் : 1971) (யுத் : 2719)
4. பூசுதல். நெய் தாவும் வேலான். (பா : 990)

தாவுவார் புனல் - (அலைகள்) வீசுகின்ற பெரும் புனல். தெண்டிரை தாவு வார் புனற் சரயு எய்தினர். (அ : 919)

தாவுறுதல் - தாவுதல் உறல். தண்ணீர் தருகென்றவர் தாவுற ஓடி. (யுத் : 1930)

தாவெழுந்து - தாவி யெழுந்து. படையொடு மேலவர் மடியப் பல் பரி இடையிடை தா வெழுந் தழுந்து பண்பன. (யுத் 2299)

தாழ் – 1. தாள். தாழ்ப்பாள். நிறை நிதிச்சாலை தாழ் நீக்கி யாவையும் முறைகெட வறியவர் முகந்து கொள்கென. (பா : 291)
2. தாழ்ச்சி. தாழில் என்படை தருக்கறும். (யுத் : 3503)
3. தொங்குகின்ற. (வை.மு) புனைதாழ் முத்தின் பொற்றேடும் விலக்கி வந்தாய் காட்டாயோ. (கி : 31)

தாழ்குவர் - 1. இழிந்த நிலையுறுவர். தீது செய்தவர் தாழ்குவர். (யுத் : 183)
2. தொழுது வணங்குவர். வாழிய என அவர் மனனுறு கடவுள் தாழ்குவர். (பா : 312)

தாழ்குவன் - வணங்குவேன். ஈண்டவந்துனைத் தாழ்குவன் திருவடி. (அ : 561)

தாழ்குழல் - தாழ்ந்த கூந்தலையுடைய பெண். தையல் சிற்றிடை யாளொரு தாழ்குழல். (பா : 1167)

தாழ்குழலார் - தாழ்ந்து அசையும் நீண்ட கூந்தலையுடையராகிய மகளிர். பேர்கலாத் தாரை சென்றனள் தாழ்குழலாரொடும், (கி : 607)

தாழ்ச்சி - வணங்குதல். தாழ்ச்சியிற் பொருள் தரும் தருமமூர்த்தியை. (யுத் : 325)

தாழ்சடைக் கடவுள் - நீண்ட சடையையுடைய சிவபிரான். (யுத்:432)

தாழ்த்தல் - 1. தாமதித்தல். தாழா வந்தனே. (யுத் : 943) இனி யிறை தாழ்த்தியாயின். (யுத் : 1257) தாழ்க்கிற்பாயல்லே. (யுத் : 1382) தாழ்க்கிலேன். (யுத் : 1667) ஊறுமா நோக்கித் தாழ்த்தான். (கி : 619) தாழல். (யுத் : 1730) தாழின். (ஆ:803)
2. தாழ்த்திக் கொள்ளுதல். (வை.மு) இழித்துப் பேசுதல். (கலா) நீ இனித்தாழ்த்த தென்னே. (யுத் : 1256)
3. கீழ்ப்படுத்தல். தன்தனி முகத்தினுல் என்னைத் தாழ்த்து அறவென்றவள் துணைவனை இன்று வெல்குவேன். (யுத் : 465)

தாழ்த்து - தாழ்மைப்படுத்தி. கீழ்ப்படுத்தி. என்னைத் தாழ்த்து அறவென்றவன். (யுத் : 465)

தாழ்தடக்கை - தாழ்ந்துள்ள பெரியகை. தலையின் ஏந்தினன் தாழ் தடக்கைகளே. (அ : 795)

தாழ்தர - பின்னிடுமாறு. கடியவன் சரமும் தாழ்தர வீசினர். (யுத் : 2104)

தாழ்தல் - 1. விரும்புதல். தாழுமா மழை. (பா : 340)
2. மனந்தாழ்தல். தக்கதன்றென்ன ஓராள் தாழ்ந்தனள்.(பா:553)
3. படிதல். அத் தனியரசாட்சியில் தாழும் உள்ளமே. (அ : 23)
4. தோல்வியுறுதல். தாழும் மன்னிலை என்னுரை தலை நிற்பின். (அ : 177)
5. பொருந்துதல். சரந் தாழ் வில்லாய். (அ : 213) படந்தாழ் அரவு. (சு : 598)
6. தங்குதல். நறுந்தாழ் இளங் கொழுந்தை. (யுத் : 294)
7. வணங்குதல். தாழத்தாழாள். (பா : 998) தலையெடுத்தின் னமும் மகளிர்த் தாழ்தியோ. (சு : 452) தாழ்தலும். (கி : 73) தாழ்குவென். (சு : 611)
8. குறைதல். வாளமர் தாழுமே இராகவன். (ஆ : 818)
9. குவிதல். தாழ் கஞ்சமும் மலர்வுற்றன. (சு : 687)
10. ஒத்தல். பணந் தாழ் அல்குல். (ஆ : 672)
11. தணிதல். ஆழியும் இலங்கையும் அழியத் தாழுமோ. (சு:453)
12. இறங்குதல். விழுதல். வெண் முகில் தடம்புனல் பருகிடத் தாழ்வ போன்றவே. (பா : 828) தாழ்ந்து பாரிடை அழுந்துகின்ற படர் நெடும் பனிமாக்குன்றம். (சு : 9)
13. நிறைதல். தாழிருட் பிழம்பு. (யுத் : 270)
14. தவறுதல். பாணி தாழாக் கந்தார வீணை. (சு : 75)

15. குன்றுதல். தாழ் கஞ்சம். (சு : 687)
16. இழிந்த நிலையுறுதல். கிளர் பகையைத் தாழ்வியாதன செய்யும் என்று. (யுத் : 185) தீமை செய்தவர் தாழ்குவர். (யுத் : 687) தாழ்வர்; தாழ்ந்தோர். (யுத் : 1255)
17. வணங்குதல். தாழத் தாழாள். (பா : 998) தாழ்குவென் திருவடி. (அ : 567)
18. இளகுதல். தாழ்ந்த மனத்தான். (பா : 998)
19. இணங்குதல். தாழாள். (பா : 998)
20. மிகுதல். மதந் தாழ் வேழம். (யுத் : 221)
21. பதிதல். துணைவர் மேல் தாழ்ந்த அன்பான். (யுத் : 2193)

தாழ்ந்ததோர் கருணை - மனவிரக்கத்தைத் தெரிவிக்கின்ற ஒப்பற்ற கருணை. தாழ்ந்ததோர் கருணை தன்னுற் றலைமகனருளத் தள்ளி வீழ்ந்தனன் மேல். (யுத் : 3885)

தாழ்ப்ப - தாழச் செய்ப. சொரிய. தடமத அருவி தாழ்ப்ப. (பா : 570)

தாழ்வரை - மலைச்சரிவு. மலைச்சாரல். மலையடிவாரம். பெருநதி விரவும் சையமா நெடுந்தாழ் வரைத்தனிவரை. (ஆ : 1177) தடங் கிரிகள் தாழ்வரை யடுத்த நீர் ஒழிந்தன. (கி : 550)

தாழ்வித்தல் - 1. பின்வாங்கச் செய்தல். தாழ்வித்தேனே இத்தனை கேடும் வருவித்தேன். (யுத் : 2603)
2. கால தாமதஞ் செய்தல். தாழ்வித்திரல் நீர் பன்னுள் தருக்கிய அரக்கர் தம்மை வாழ்வித்தீர். (கி : 638) தாழ்வித்தல் தரும மன்றுல். (கி : 637)
3. வணக்குதல். தாழ்வித்த முடியன். (யுத் : 2888)

தாழ்வியாதான செய்தல் - அடங்கச் செய்யாதனவாய் மேலெழத் தூண்டுதல். (அண்) தாழ்ச்சியுண்டாக்காதன மேன்மைகள் செய்தல். இவை கிளர் பகையைத் தாழ்வியாதன செய்யும் என்று. (யுத் : 185)

தாழ்விலாப் படைகள் மூன்று - சிறுமையில்லா (பின்னடையாத) படைகள் மூன்று. பிருமாஸ்திரம், நாராயணாஸ்திரம், பாசுபதம். ஆர்க்கும் தாழ்விலாப் படைகள் மூன்றும் தொடுத்தனன் தடுத்து விட்டான். (யுத் : 3076)

தாழ்வினை - இழிவாக்கிடச் செய்யும் செயல். தாழ்வினை இதனின் மேற் பகரத்தக்கதோ. (யுத் : 56)

தாழ்வு - 1. [தாழ்த்து] குற்றம். சடை கொள் சென்னியர் தாழ்விலர் தாமித் தேற. (அ : 771)

2. தாமதம். (வை. மு) தாழ்வுற்று இனியிருந் தெனக் கெண்ணு வதில்லென எண்ணு. (ஆ : 316) அரக்கரானவரை யெல்லாந் தாழ்விலிர் கொணர்திர். (யுத் : 1226) (உ. வி) (யுத் : 4300)

3. குறைவு. இரு நதி பிறவிற் ரேயம் தாழ்விலாது இவண்வந் தெய்தற் கருமைத்தோர் தன்மைத் தென்ன. (யுத் : 4300)

4. தாழ்ந்த நிலை. மாள்விக்கும் தாழ்வில். (யுத் : 2888) [பா:பே] வாழ்விக்கும் தாழ்வில். (யுத் : 2888) ஆழ்விக்கும் தாழ்வில். (யுத் : 2888) [பா : பே]

தாழல் - காலந்தாழ்த்தல். உடனேகுதி தாழல் என. (யுத்:1730).

தாழா - 1. தவறாத. விஞ்சையர் பாணிதாழாக் கந்தார வீணைக் கனி. (சு : 75)

2. காலந் தாழ்த்தாது. தாழா வந்தனை என்னுடை மைந்த. (யுத்:944)

தாழி - 1- பானை. உதிரத்தாழி. (யுத் : 1436)

2. தயிர்ப் பானை. தாழி தரையாகத் தண்டயிர் நீராக. (ஆ:102) தாழித் தண்கடல். (சு : 656)

3. தோணி. குடம். உதிரத் தாழி ஒத்த வெங்குருதியின் மிதப் பன தலைகள். (யுத் : 1436)

தாழித் தண்கடல் - தாழிபோன்று அகன்று ஆழ்ந்த குளிர்ந்த கடல். (சு. 656)

தாழிப்படுதயிர் - தாழியிற் கடையப்படுந்தயிர். தாழிப்படு தயிர் ஒத்தார். (சு : 959

தாழிருஞ் சடைகள் - நீண்ட பெரிய சடைகள். தாழிருஞ் சடைகள் தாங்கி. (அ : 292)

தாழை - 1. தென்னை. துன்னுதாள் வளஞ் சுமந்த தாழையிற் பன்னு வான்குலைப் பதடி யாயினேன். (அ : 826)

2. செவ்விளநீர். கௌளி பாத்திரம். (பழையவுரை) (யுத்:333)

3. தாழைச்செடி. முட வெண்டாழை மேல்... ஓதிமம் துயில்வ கண்டு. (யுத் : 335)

தாழையின் குலை - தேங்காய்க் குலை. (அ : 926)

தாள் - 1. தாழ்ப்பாள். தம் துவாரம் புதவொடு தாளற. (சு : 724)

2. வலிமை. பேரடா நின்ற தாளோடு உலகெலாம் பெயரப் போவான். (யுத் : 259)

3. கால், பாதம். நங்குல நாயகன் தாளின் நல்கிய கங்கையைத் தந்து. (அ : 67) மலர்த்தாள் சென்னி புனைந்தனள். (பா : 1340) தாள் நிலாம் மலர் தூவினன். (அ ; 799) (யுத்: 4268)

4. காம்பு. பூவின் காம்பு. தாள்புரை தளிர். (அ : 706) (உ.வி) (அ : 799)

5. தாமரைத்தண்டு. தாட்படாக் கமலம். (கி : 76)

6. முயற்சி. வன்றாள் நிருதக் குலம். (ஆ : 706)

7. அடிமலை. மலையடி. தாளுயர் தடக் கிரியிழிந்து. (பா : 914) தலையு மாகமுந்தாளுந் தழீஇ. (பா : 17)

8. வில்லின் நுனி. மாத்திரை யளவில் தாள் மடுத்து. (உ. வி) (பா : 810)

9. துவஜதண்டம். தானை மாக்கொடி மழை பொதுத்துயர் நெடுந்தாள. (சு : 869)

10. அடி. அடிமரம். நற்றவத்தினோர்கள் தங்குதாள் பூவுயிர்த்த கற்பகப் பொதும்பர். (பா : 115) தாளார் மர நீழல். (யுத் : 2334)

11. கயிறு. தாள் வலந்தொளிர் தமனியக் கச்சு. (யுத் : 3610)

12. சக்கரம். துரகத் திண்டேர்த் தாண் முதற் காவல் பூண்டு செல்கென. (யுத் : 2361)

தாள் ஆறுடைப்பறவை - வண்டு. கற்பக நறுவிரை நான்ற பானம் வாயுற வெறுத்த தாள் ஆறுடைப் பறவை. (சு : 100)

தாள் சென்னியிற் புனைதல் - அடிகளைத் தலையிற் சூடிப் பணிதல். அன்னவர் அம் பொன் மலர்த்தாள் சென்னி புனைந்தனள் சிந்தை யுவந்தார். (பா : 1340) (அ : 378)

தாள் முதல் - 1. திருவடிகள். தாள் முதல் வணங்கிய தனித் திண்டேர்வலான். (அ : 569)

2. தேர்ச்சக்கரத்தினிடம், பக்கம். துரகத் திண்டேர்த் தாள் முதல் காவல் பூண்டு செல்கென. (யுத் : 2361)

தாள்வரை - பாத சைலம். தாள்வரை முழைவிழை கிரிநிகர் களிற்றின் மும்மத மழை விழும். (பா : 147) [பா : பே]

தாளதாமரை - தாளுள்ள தாமரை மலர். தாள தாமரை யன்னங்கள் தாவிட. (யுத் : 971)

தாளம் - தாளம் என்னும் இசைக்கருவி. தாளம் கொம்பொடு வார்விசி பம்பையும். (அ : 966)

தாளளவு - கால்களின் அளவு. அகன்ற பேராழி ஏழுந்தன்னிரு. தாளள வெனக்கடந் தேறும். (யுத் : 133)

தாளறுதல் - 1. அடி அகழப்படுத்ல். தண்டிருந்த பைந்தாமரைத் தாளற (யுத் : 970)

2. பாதம் அறுபடல். நாளெருவன் தாளற் றுருளக் கணை தள்ளிடுவான். (யுத் : 1710)

தாளாண்மை – முயற்சி. முயன்று தொழில் செய்தல். தாளாண்மையும் நிகராருமில் தனியாண்மையும். (யுத் : 1126)

தாளார் மரம் - தாள் பருத்த மரம். தாளார் மர நீலன் எறிந்ததனை. (யுத் : 2334)

தாளிணை - திருவடிகள். வரங்களின் வாரியன்ன தாளிணை. (யுத் : 448)

தாளின் மடுத்தல் - அடி முனையை மிதித்தல். தாளின் மிதித்தது நாணுதி வைத்தது நோக்கார். (பா : 783)

தாளின் வீழ்தல் - வணங்குதல். (அ : 912)

தாளுறத் தொழுதல் - பாதங்களிற் பொருந்தப் பணிதல், தாழ்ந்து தாளுறத் தொழுத மாருதி. (யுத் : 2765)

தாளுறு குரிசில் - தாளில் வீழ்ந்து கிடந்த பரதன். தாளுறு குரிசில் அத்தாய் சொற்கேட்டலும். (அ : 889)

தாளுறுத்தல் - தாளிடுதல். தாழிட்டு இறுக்குதல். நீளெழுத் தொடரும் நெடு வாயிலைத் தாளுறுத்தி. (கி : 597)

தாளெடுத்தல் - தாள் விசை கொள்ளுதல். ஓடுதல். வழி தோறும் தாளெடுத்தனர் கழித்தனர். (யுத் : 1557)

தாளைக் கையால் தைவரல் - கால்களைத் தடவுதல். தாமரைக் கையால் தாளைத் தைவரும் குறங்கைத் தட்டும். (யுத் : 2175)

தாளையேய் கமலத்தாள் - தண்டுடன் கூடிய தாமரையில் வீற்றி ருக்குந் திருமகள். தாளை யேய் கமலத்தாளின் மார் புறத் தழுவு வாரும். (பா : 1017)

தாருடின - அங்குசத் தாற் குத்துண்ட. (யுத் : 1700)

தாறு - 1. அங்குசம். தாற்றுக்கோல். இருப்பு முள்ளை நுனியிலுடையது. தாறு மாய் தறுகட் குன்றம். (பா : 570) தாருடின மால் களிறு. (யுத் : 1700)

2. குலை. தள்ளரும் பொன்னிறம் பொருந்தின பூகத் தாறெலாம். (கி : 560)

தாறு பாய்கரி - இருப்பு முட்கோலால் குத்தப்பெற்ற யானை. மழை யென முழங்கும் தாறு பாய்கரி. (பா : 902)

தாறு மாய் தறுகட் குன்றம் - இரும்பு முட் கோலை முறிக்கின்ற வன் கண்மையுள்ள களிற்றி யானை. (பா : 570

தான் - 1. அசை. மான் மறிக் கரத்தான் மழு வேந்துவான் தான் மறுத்திலன் தாதை சொல். (அ : 321) மெய்யைத் தான் சிறிது ணர்ந்து...... உய்யத்தானுகாதோ. (ஆ : 59) (யுத் : 1601)

2. ஜீவாத்ம சொரூபம். தன்னை எண்ணுமத்தகை புகுந்துளோர் துன்னு தண்டகம். (கி : 909)

3. இழிவு சிறப்பு. ஆரந் தாழ் திருமார்பற் கமைந்த தோர் தாரந் தானளலேனும். (சு : 636)

4. தற்பொருட்டு. அப் பெண்தானே ஆயின போது. (பா:587) தன்னையும் சுடுவது தரிக்கிலாமையால். (பா : 624)

5. தனித்தன்மை. உள்ளமுந் தானுநின் றூசலாடுவான். (பா: 842)

6. தானுக. தானே நல்கும். (அ : 212)

தான கற்பகம் - கொடைச் சிறப்புள்ள கற்பகத்தரு. தான கற்பகத் தண்டலை விண்டலம் போன புக்கன முன்னுறை பொன்னகர். (சு : 713)

தானநகரம் - (முதன்மைத்) தானத்தைப்பெற்ற இலங்கா நகரம். தான நகரத் தரக்கர் தலை மயங்கப் போன மகவுடையார் போலப் புலம்பினர். (யுத் : 1951)

தானம் - 1. மதநீர். சேண் விளங்கருவியிற் பெரியன ஆனைத் தானங்கள். (பா : 155)

2. ஈகை. கொடை. தான கற்பகம். (சு : 713)
3. இடம். தான நகரம். (யுத் : 1951)

தானவப் பெருங்கிரிகள் - அசுரர்களாகிய பெரிய மலைகள். தானவப் பெருங்கிரிகளை வாள்கொண்டு தடிந்தான். (யுத் : 3258)

தானவர் - தனு என்பவர் மைந்தர். காசிபமுனிவர் மனைவியான 'தநு' என்பவளது சந்ததியார். தேவர் தானவர் வெருவல் தவ் விடத் தனியருளு தாழ்சடைக் கடவுள். (கி : 46)

தானவர்க் கிறைவன் - தேவர்கட்குத் தலைவனான இந்திரன். தானவர்க் கிறைவன் திறை தந்தன. (யுத் : 3574)

தானவன் - அசுரன், (காலநேமி) சக்கரம் தானவன் உடலிற்றுக்குற. (அ : 775)

தானவாரி - மதவெள்ளம். மலர்கள் வயமாத் தானவாரியும் நீரொடு மடுத்தலில். (சு : 112)

தானாகிய தகைமைப்பொருள் - திருமால். (இராமன்) தானாகிய தகைமைப் பொருள் சனகன் குயிலுடனே. (பா : 1349, [பா : பே]

தானான தன்மை - எங்கு முளனாகை. தானாவதும் உணர்ந்தான் உணர்ந்துல கெங்கணுந்தானே யானான். (யுத் : 3375)

தானிமாலி - தானிய மாலி. இராவணன் மனைவி. அதிகாயன் தாய். தானிமாலி இரியலிட்டலறி ஓயாப் பூசலிட் டேங்கி வந்தாள். (யுத் 1942)

தானுடை - தனக்கமைந்த. (ப : 1921) தான் தோன்றுதற்கிடமான (பா : 975)

தானும் தனிமையும் - தனித்த நிலையில் தார்த்தனி வீரன்றானும் தனிமையும் அவர்மேற் சார்ந்தான். (சு : 949)

தானுருவு கொண்ட தருமம் - தருமந்தானே ஒரு புருடவடிவு கொண் டாற் போன்ற இராமமூர்த்தி. தானுருவு கொண்ட தருமந்தெரி சரந் தான் மீனுருவும். (ஆ : 534)

தானே தானே - தானே தனியாக. தானே தானே தஞ்சம் இலாதான் தகவில்லான் போனான் போனான் எங்களை நீத்திப் பொழுதென்னா. (அ : 594)

தானை -'1. ஆடை. சுந்தரத் தடக்கை தானை மடக்குற. (அ : 289) தானை முன் தனை ஒதுக்கி. (யுத் : 4371)

2. காலாட்படை. சேனை மெய்யுறு தானையான் வில்லின் கல்வியான். (அ: 1000) தானை அரக்கர். (யுத் : 1928)

3. படைக்கலம். யானையிலர் தேர்புரவி யாதுமிலர் ஏவும் தானையிலர். (யுத் : 75)

தானைக் கொழுந்து - சேனையின் முன்னணி. இராக்கதர் தானைக் கொழுந்து முந்திய துற்றது. (யுத் : 3640)

தானை நகரம் - சேனைகளையுடைய இலங்கை நகரம். (யுத் : 1951)

தானை நாயகன் - சேனாதிபதி. சால் பெருங் கேள்வியன் தானை நாயகன் நீலன். (யுத் : 384)

தானைப் புரவலன் - சேனைத்தலைவன். பொன்ற வந்தடைந்த தானைப் புரவலன் ஒருவன் தானே. (யுத் : 1409)

தானைமன்னவன் - சேனைகளையுடைய சக்கரவர்த்தி. தானைமன்னன் தமரொடுஞ் சார்ந்தனன். (பா : 1192)

தானை மாக் கொடி - போர்க் கொடிகள். தானை மாக் கொடி மழை பொதுத் துயர் நெடுந்தாள. (சு : 869)

தானைவீரப் பேராழி - காலாட் படையாகிய பெருந்திரள் தாரார் புரவிக் கடல் பின் செலத் தானை வீரப் பேராழி முகஞ்செலச் சென்றனன். (யுத் : 1978)

தானைவைப்பு - பாடிவீடு. படைவீடு. மந்தரத் தடந் தோள் வீரர் வலஞ் செய்தார் தானைவைப்பை. (யுத் : 458)

தி

தி - தீ. சுடுதியைத் துகிலிடைப் பொதிந்து. (யுத் : 353)

தி அந்தம் - திக்கின் முடிவுகள். ஓதநீர் தியந்தம் முட்ட (யுத்:658)

திக்க - திசை எல்லைக் கண்ணதாய். திக்க... நெடுந்திரள் கரம். (கி : 90)

திக்கணும் தேவர் - அஷ்டத்திக்கு பாலகர். (திக்கு ஆணும் தேவர் திக்கண் ஆம் தேவர். ஆணும்-அணவும்.) திக்கணும் தேவரோடு முனிவரும் பிறருந்தேடி. (யுத் : 284)

திக்கணி நின்ற யானை - திக்குக்கு அலங்காரமாய் நின்ற திக்கஜங்கள். திக்கணி நின்ற யானை சிரம் பொதிரெறிய. (யுத் : 2430)

திக்கயம் - திசையானை. திக்கய மல்லவாகிற் குரங்கின் மேற் சேறி போலாம். (சு : 931) திக்கயங்களும் மயங்கின. (கி : 170)

திக்கவந்தர நெடுந்திரள் கரம் சினவு தோள் - திக்க நெடுந் திரள் கரம்: அந்தர சினவு தோள் என இயையும். திக்க நெடுந் திரள் கரம் - திசை எல்லை வரை நீண்ட திரண்ட கைகள். அந்தர சினவு தோள் - விண் அளாவிய உயர்ந்த சினவுந் தன்மையுள்ள தோள். (அண்) திக்கு அவம் தரம் நெடுந்திரள் கரம் சினவு தோள் - எல்லாத்திக்குகளிலுமுள்ள உயிர்கள் அழிவடையும்படி நீண்ட திரண்ட கைகளும் கோபித்துப் பாய்கின்ற தோள்களும். திக்கவந்தர நெடுந்திரள் கரம் சினவு தோள் அக்கவந்தன். (கி:90)

திக்காசற வென்றான் - திசைகளையெல்லாம் குற்றமற வென்ற வனாகிய இராவணன். (யுத் : 3010)

திக்காம் நெறிவாய் - திசைகளின் எல்லைவரையில் நீண்ட வாய். (சு : 71) [பா : பே]

திக்கரவள் வாய் - திசைகளிலே பரவிய அவள் வாய். திக்காரவள் வாய் சிறிதாம் வகை சேணின் நீண்டான். (சு : 71)

திக்கின்மா - திசையானை. திக்கின் மாவெலாந் தொலைத்து. (ஆ : 263)

திக்கின் வேழம் - திசை யானை. திக்கின் மயக்கின் மதந்தாழ் வேழம். (யுத் : 220)

திக்கினை நிமிர்த்த கோலச் செல்வன் - பத்துத் திக்கிலு முள்ள கொடுமைகளைப் போக்கிச் செம்மையாக்கிய செங்கோலையுடைய தயரதன். (அ : 287)

திக்கு - 1. திசை. திக்குறும் செறிபரந் தெரியநின்ற கைக் குறுங்கண் மலைபோற் குமரர். (ஆ : 3) (சு : 1186)

2. ஆகரயம். திக்குறு மானம். (யுத் : 4248)

3. புகலிடம்.

திக்கு விசயம் - திசை வென்றி. திக்கு விசய மினி யொருகாற் செய்யாயோ. (யுத் : 1947)

திக்குறும் - எட்டுத் திசையிலும் பரவும். திக்குறும் நெடும்பழி. (யுத் : 382)

திக்கென்ற மனம் - திக் பிரமை கொண்ட மனம். திக்கென்ற மனத்தன். (யுத் : 2793)

திகிரி - 1. ஆஞ்ஞா சக்கரம். சக்கரம். உலகம் யாவையும் பொது வறத் திகிரியை உருட்டி. (பா : 521)

2. துருவ மண்டலம். கோளிரு நான்கிஞேடு ஒன்று கூடிய வாளுறு திகிரி போல் ஆரத்தான் தனே. (ஆ : 183)

3. ஆழிப்படை. எழு திகிரி அமரர் பதி. (யுத் : 3423)

திகிரி உந்தி - ஆஞ்ஞா சக்கரத்தைச் செலுத்தி. மேல் நின்று ஒரு தனித் திகிரி உந்தி. (அ : 664)

திகிரி உருட்டல் - ஆஞ்ஞா சக்கரத்தைச் செலுத்துதல். திகிரியை உருட்டி. (பா : 521)

திகிரிக்குறி ஒற்றி - தேர்ச் சக்கரத்தின் அடையாளத்தை உய்த்துணர்ந்து. திருமா நகரின் மிசைத்திரிய ஊருந் திகிரிக் குறி ஒற்றியுவந்தார். (ஆ : 612)

திகிரி பற்றும் ஏகசாதனன் - சக்கரப் படையைக் கொண்டுள்ள ஒப்பற்ற சாதனத்தையுடைய திருமால். (யுத் : 2516)

திகைத்தல் - மயங்குதல். சிந்தை செய்கையில் திகைத்தனே. (அ : 170) திகைத்தாள். (அ : 304) கோசலேயுந் திகையா. (அ : 384)

திகைப்பு - மயங்குதல். நடுக்கமும் திகைப்பு முற்ருன். (யுத் : 3443)

திங்கட்குழவி - இளஞ் சந்திரன். கோணுதற்குரிய திங்கட் குழவியும் (பா : 934)

திங்கட் போழின் எயிறு - திங்களேப் பிளந்தாற் போன்ற எயிறு. திங்கட் போழின் எயிற்ருள். (சு : 173)

திங்கள் - 1. சந்திரன். முளே வெண் திங்கள். (கி : 799)
2. மாதம். ஒரு திங்கள் அவதியாக. (கி : 775)

திங்கள் இளம்பிறை - இளம் பிறைச் சந்திரன். திங்கள் இளம் பிறை அன்று போலெனல் ஆகியது அச்சிலே. (யுத் : 3395)

திங்கள் சூடிய செல்வன் - இளம் பிறை சூடிய செல்வனுகிய சிவ பிரான். திங்கள் சூடிய செல்வனிற்ருேன்றினுன். (அ : 635)

திங்கள் போழ் - சந்திர மண்டலத்தை இரண்டு துண்டாக்கி வைத்த பிளவைகள். திங்கள் போழின் எயிற்ருள். (க : 173)

திங்கள் மண்டிலம் - சந்திர மண்டிலம். இக்கேண்மைய கிடந்த திங்கள் மண்டிலம் வதனம் என்று வைத்தனன். (கி : 801)

திங்கள் மாய நந்திய வாண்முகம் - மதியமும் ஒளி கெடும்படி அழகுடன் விளங்கிய ஒளியுள்ள முகம். திங்கள் மாய நந்திய வாள் முகத்தொரு தனி மயன்மகள் மணி மாடம். (சு : 290)

திங்கள் மேவும் சடைத் தேவன் - பிறைச் சந்திரனைப் பொருந்திய சடையையுடைய சிவபிரான். (பா : 342)

திங்கள் வகிர் - மதித்துண்டம். வகிர்த்திங்கள் சூடிய செல்வன். (அ : 635)

திங்கள் வெண் குடைகண்டோட - சந்திரன் வெண் கொற்றக் குடையைக் கண்டு ஓட. (பா : 893)

திங்களிற் பாதி - அர்த்த சந்திரபாணம். திங்களிற் பாதி கோடி இலக்குவன் தெரிந்து விட்டான். (யுத் : 2061)

திங்களின் கொழுந்து - பிறைச்சந்திரன். இளநிலா. (அண்) திங்களின் கொழுந்து சுற்றும் சிமயம். (கி : 923)

திசாதிசை - ஒவ்வொரு திக்கிலும். திக்குகள்தோறும். திசாதிசை போதுநாம்... ஒழிதும் வாழ்வென்ருன். (யுத் : 54)

திசாமுகம் - திசைகளின் இடம். எண்டிசாமுகம் இருண்டன. (பா : 491)

திசைஒன்பதொடொன்றும் - பத்துத் திசையும். ஒக்க நின்றதிசை ஒன்பதொடொன்றும் பக்கமும் நிழல் பரப்பி. (யுத் : 808)

திசைக்கரி - திசையானை. நிலையஞ்சின திசைவெங்கரி. (யுத்:1830) நீலுறு திசைக்கரி. (சு : 667)

திசைக்களிறு - திசையைத் தாங்கும் யானை. வன்றிசைக் களிறன்ன மயேந்திரம். (கி : 946)

திசைக் காவலர் - திக்குப் பாலகர். ஏருநெடும் பயத்தால் நெடுந் திசைக் காவலர் இரிந்தார். (யுத் : 1840)

திசை கட்டிய கரி - திக்குகளிற் கட்டிய யானைகள். திசை கட்டிய மால்கரி தெட்ட மதப் பசைகட்டின கிட்டின போர். (ஆ : 81)

திசைகள் எட்டு - எட்டுத்திசை. வளர்ந்தது திசைகள் எட்டும். (யுத் : 260)

திசை காக்கும் காவலர் எண்மர் - திசைகள் எட்டையும் காத்து நிற்பவர். முரட்டிசை முறையிற்றுங்கும் காவலர் எண்மர். (யுத் : 2708)

திசை காப்பாளர் - திக்குப் பாலகர். வேர்த்தனர் திசை காப்பாளர். (சு : 953)

திசை கிழிதல் - திக்குகள் பிளவுபடுதல். செவிடுசெல்லக் கிழிந்தன திசைகளெல்லாம். (யுத் : 2056)

திசை செவி டெறிதல் - திக்குகள் செவிடு படல். படியிடை இடி பொடித் தென்னச் சேணெறிந் தெழு திசை செவி டெறிந்தன. (யுத் : 1427) திசை செவி டெறிதர. யுத் : 3093)

திசைத்தல் - திகைத்தல். பித்தமயக்கம். திசைத்தது மில்லை எனக்கு வந்து நீயோர் இசைத்தது மில்லை. (அ : 204)

திசைத்திடுதல்-பேதுறுதல். திகைத்தல். மின் திசைத்திடும் இடைக் கொடியை நாடினர் விராய். (கி : 819)

திசை திசை 1. திக்குகளிளெல்லாம். சிந்தினன் சரமாரி திசை திசை. (யுத் : 2037)

2. **திசை தோறும்.** போந்தன சிந்திடத்திசை திசை யகற்றி. (ஆ : 453) (அ : 682)

திசைதிசையும் - பல திசைகளிலும். செந்தேன் பருகித் திசை திசையும் நீ வாழ. 1666)

திசை திரித்தாய் - திசைகளை நிலை குலையும்படி செய்தாய். (யுத் : 1123) [பா : பே]

திசைதொறும் திசைதொறும் - திசைகள் தோறும் திறத்திறம் படத் திசைதொறும் திசைதொறும் சிந்தி. (யுத் : 1445)

திசை நாலு - நான்கு திசைகள். அருங் கரணம் ஐந்து சுடர் ஐந்து திசை நாலும் ஒருங்கு குண மூன்றும். (யுத் : 3654)

திசை நான்முகன் - நான்கு திசைகளையும் நோக்கும் முகங்களை யுடைய பிரமன். தேவாதியருந் திசை நான்முகனும். (யுத்:2918)

திசை நிலைக்கடகரி - எட்டுத் திசையிலும் நிலைத்துள்ள மதயானை கள். (யுத் : 3747)

திசைநிலைக்களிறு - திசையானை. மூக்குடைக்கைகளிற்றிசை நிலைக் களிற்றை ஆய்வன. (பா : 835) (யுத் : 881)

திசை நிலைக் கும்பக்குன்று - திசை யானைகள். (யுத் : 484)

திசை நிலை யானை - திசையானை. தியந்த முட்டத்திசை நிலை யானையும் பெயர்ந்து விட்டவை யாவையும் பிளிறுவ. (யுத் : 658)

திசைபோதல் - பல திசைகளிலும் ஓடுதல். ஈருள் தயங்கிட புண்மேலுடை மேனியினர் திசைபோனர். (யுத் : 1931)

திசைமுக முனி - பிரமன். திசைமுகமுனி செவ்வே தந்தன உயிரெல்லாம் தன்னுயிரென நல்கும் அந்தணன். (அ : 711)

திசைமுகன் - பிரமன். நன்னெடுந்திசை முகனகத்தும் நம்மனோர்க் குன்னரு முயிருளும் ஒக்க வைகுவான். (அ : 784)

திசைமுகன் செய்த முட்டை - பிரமதேவன் படைத்த அண்ட கோளம். திசை முகன் செய்த முட்டை கீண்டிலது. (சு : 1312)

திசைமுகன் திருமகன் - வசிட்டன். நான்மறைத் திசைமுகன் திருமகன் செப்பும். (அ : 34)

திசைமுகன் படை - பிரமாஸ்திரம். திசை முகன் படையின் செய்கை. (யுத் : 2650)

திசை முகன் படைக்கலம் - பிரமாஸ்திரம். திசை முகன் படைக்கலஞ் செலுத்தப் பார்க்கிலேன். (யுத் : 2479)

திசை முகன் பாசம் - பிரமாஸ்திரம். திசை முகன் பாசந் தீண்ட வீக்கொண்டு வீழ யானே பரதனும். (யுத் : 2877)

திசை முகன் மகன் - புலத்தியன். உருத்திரன். (அண்) மற்றது திசைமுகன் மகனுதவியதால். (யுத் : 3098)

திசைமா - திசையானை. அவை ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வ பௌமம், சுப்ரதீபம் என்பன. நின்ற திசைமாவும் உலகும் ஆசையும் ஆலமென அன்ன அயில் மின்னி வரலும். (ஆ : 27)

திசைமுகத்தான் - நான்முகத்தை யுடையவனான பிரம தேவன். (யுத் : 3022)

திசைமுகத்தான் முதுமாப்படை - நான் முகனுக்குரிய பழைய பெரிய பிரமாஸ்திரம். திசைமுகத்தான் முதுமாப்படை துறந்தான். (யுத் : 3022)

திசை முகத்தொருவன் - நான்முகனாகிய பிரமன். திசைமுகத் தொருவன் வைவு இதாம் என. (யுத் : 566)

திசை முகத்தோன் - பிரமன். தேமன் உரிமைபுரியத் திசை முகத்தோன் ஓமமியற்ற. (யுத் : 305)

திசைமுகம் கிழிதல் - திக்குகளின் எல்லை கிழிதல். திசை முகங் கிழிய ஆர்த்தார். (யுத் : 2387)

திசை முற்றிய கரி - திசைகளின் எல்லையிலிருக்கும் யானை. கானத் தன திசை முற்றிய கரியின் தானத்தன காகுத்தன சரமுந்திய சிரமே. (ஆ : 458)

திசையாளும் மதகரி - திசைக்குரிய மதயானை. வெய்யோன் திசை யாளும் மதகரியைச் சிந்தூரம் அப்பிய போற் சிவந்த மாதோ. (பா : 714)

திசையானை - எட்டுத் திக்கிலுமுள்ள யானைகள். மூரித் திசையானை இரண்டென முட்டினரே. (கி : 273)

திசையானை ஊரும் புனிதன் - கிழக்குத்திசைக்குரிய ஐராவதம் என்னும் யானையை ஊரும் இந்திரன். பொரு திசை யானை யூரும் புனிதனைப் பொருவும் பொற்பர். (சு : 823)

திசையிடித்தல் - திசைகளில் பேரொலி தோன்றல். இன்னது போழ் தின் இடித்த வன்திசை. (யுத் : 822)

திசையின் பாவை மார் . திசை காக்கும் தெய்வ மகளிர். திசையிற் பாவைமார் நறுங் குழல்களும் பரிமளங் கமழ்ந்த. (சு : 1222)

திசையெட்டொடிரண்டு - திசைகள் பத்து. ஏழொத்துடனாந் திசை யெட்டொடிரண்டு முட்டும் ஆழிக்கிளர் ஆர்கலிக்கைம் மடங்காரப் பினைசை. (கி : 280)

திசையோர் - திக்குப் பாலகர். நின்ற தேவர் நெடுந் திசையோ ரொடுஞ் சென்று தத்தம செய்கை புரிந்தனர். (யுத் : 3923)

திசை வானவர் - திசை காவலர். திசையும் வானவரும் நின்ற திசைமாவும். (ஆ : 27)

திட்டியின் விடம் - கண்ணில் நஞ்சினைக் கொண்ட நாகம். திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை விட்டிலேயோ. (யுத் : 1298)

திட்டியின் விடத்து நாகம் - திட்டி விடம் என்ற நாகம். திட்டியின் விடத்து நாக மனையன சிந்தியார்த்தான். (யுத் : 1868)

திடம்- உறுதி. வன்மை. (த்ருடம்) திடத்திதுவே நலம் என்றயல் சென்றான். (ஆ : 1094)

திடர் - 1. மேடு. திட்டு. அக் கள்வன் வைகுறும் திடரினை நோக்குமால். (யுத் : 471) யானையின் திடரிடைச் சென்றவை ஒழுக்கச் சேர்ந்தன. (1775)

2. மலை. குன்று. கோள் மதித்திடர் கிடந்தன. (யுத் : 2089)

திடர் செய்தல் - திட்டாகச் செய்தல். ஓசையொண் கடலையுந் திடர் செய் தோடுமால். (யுத் : 1521)

திடர் பட்டது - மேடாயிற்று. துணிபட்டுதிர் கணையின் திடர் பட்டது பேரவைக்குழி. (யுத் : 3002)

திடல் - 1. மேடு. திட்டு. மேட்டிடம். திடலுறு கிரி. (சு : 11) திடலெலாம் தொடர்ந்து செல்ல. (சு : 32)

2. மலை. அரிக்குல வீரர் அன்றெறித்த திடல் துடைத்தன தசமுகன் சரம். (யுத் : 1157) மேருத்திடல். (கி : 277)

திடல் திறத்தல் - திட்டுக்கள் திறக்கப் பெறுதல். திடல் திறந்துகு மணித்திரள்கள். (யுத் : 585)

திடரேட்டம் - திடல் தோட்டம்; தோண்டப்பட்டது. (அண்) திடறு ஓட்டம்; திட்டானமேடு. (வை.மு) இவ்வுலகம் திடரேட்டமெனக் கிடந்ததெனவிரிதார் தெவ்வேந்தர் உடரேட்ட நெடுவேலாய். (பா : 728)

திடன் - உறுதி. பொழுதெலாம் தடுப்பது திடனால். (ஆ : 982)

திடுக்கம் - அச்சம். சென்றனன் யாவரும் திடுக்கமெய்தவே. (யுத் : 1325)

திடுக்கிடல் - நடுங்குதல். நினைக்குந் தோறும் திடுக்கிடும் நெஞ்சினர். (யுத் : 746)

திண் - வலிய. தங்குதிண் கரிய காளிமை தழைந்து தவழ. (ஆ:14) திண் கலுழன். (சு : 84)

திண்கால் - சிற்றுல வட்டம். (வை. மு) சாமரம். (கலா) திண்கால் உக்க மென்கால். (அ : 334) [பா : பே]

திண்டலம் - வலிய பூமி. திண்டலங் கடலானது நீர் செல. (யுத் : 645)

திண்டாடுதல் - வருந்துதல். எண்ணம் தடுமாறுதல். புண்டானுறு நெஞ்சு புழுக்கமுறத் திண்டாடினன் வந்த சினத்திறலோன். (யுத் : 1703) திண்டாடித் திசையறியா மறுகினர். (சு : 968)

திண்டிறல் - 1. மிக்க வலிமை. திண்டிறலரக்கன். (சு : 694) (யுத் : 839)

2. உறுதியான வெற்றி. (அண்) திண்டிறல் வலியும் தேசும். (பா : 667)

திண்டிறல் வலி - மிகவும் அதிகமான பலம். (வை. மு) (பா : 667)

திண்டேர் - திண்ணிய தேர். திண்டேர் ஏறுதி. (யுத் : 1693) (யுத் : 1848)

திண்டேரான் - வலிய தேராளி. (இராவணன்) திண் தேரானெடு எதிர்ந்து சீறினுன். (கி : 987)

திண்ணம் - நிச்சயம். வில்லியும் இளைய கோவும் வீவது திண்ணம். (கி : 960)

திண்ணம் செய்வன - தவறுமற் செய்ய வேண்டுவன. நம்பி தம்பியும் திண்ணம் செய்வன செய்து. (கி : 413)

திண்ணெடுங்கொற்றம் - உறுதியானபெரிய வெற்றி. (யுத்:1526)

திண்ணெடு மேரு - வலிய நெடிய மேரு. திண்ணெடு மேருவைத் திரட்டிற்றே என்பார். (பா : 756)

திண்ணென்யாக்கை - வன்மையுற்ற உடல். திண்ணென் யாக்கையைத் திசைமுகன் படைசென்று திருக. (சு : 1037)

திண்ணை - வீட்டின் வேதிகை. பளிங்குடை உயர்திண்ணை. (பா : 1269)

திண்பணை வெஞ்சின வேழம் - திண்மை வாய்ந்த பெரிய தந்தங்களை யுடைய கொடிய கோபத்தையுடைய யானை; ஐராவதம். (யுத் : 221)

திண்பிலவாய் - திண்மையுடைய பிலவழி. தடுக்கும் திண்பில வாய்ச் செலல் நன்றென. (கி : 843)

திண் போர்த் தொழில் - வலிய போர் முயற்சி. (யுத் : 3717)

திண்மை - 1. வலிமை. திண்மை இல்லை நேர்செறுநர் இன்மை யால். (ப : 84) பிறழாத் திண்மையும் முதல் யாவையும். (சு : 439)
2. நிலை கலங்காமை. கற்காணுந் திண்மையான். (அ : 1017)
3. கனம். வன்றிண் சிலையாய் கேண்மோ. (அ : 380) (அ : 366)
4. உறுதிகள். திடமான நம்பிக்கைகள். திண்மை அலமரச் செய்யலாமோ அறிந்திருந் தயர்ந்துளார்போல். (கி : 314)

திணிசுடர் இரவி - நிறைந்த கதிர்களையுடைய சூரியன். திணி சுடர் இரவியைத் திருத்தும் ஆறும். (அ : 125)

திணித்தடங்கிரி - 1. வலிய பெரிய மலைகள். திணித்தடங்கிரி வெடித்துகச் சிலையை நாண் தெறித்தான். (யுத் : 3634)

திணிதல் - நிறைதல். திணி சுடர் இரவி. (அ : 125) பொன் திணி சரளச் சோலை. (ஆ : 293)
2. செறிதல். பொன்திணி திரள் தோளான். (அ : 708)
3. வளைதல். வன்றேட் குயவன் திணி மட் கலத்தாழி யென்ன. (கி : 274) [பா : பே]

திணி நெடு மரம் - திண்மையான நீண்ட மரம். (யுத் : 3111)

திணிமர நிறை கான் – வலிய மரங்கள் நிறைந்த காடு. திணிமர நிறை கானிற் சேணுறு நெறி சென்றார். (அ : 689)

திணிமை - செறிந்தமை. திணிமையிழந்தாலும் ஒவ்வா இருளுடு. (ஆ : 702)

திணை - நிலம். ஒழுக்கம். ஐந்திணை நெறியளாவி. (ஆ : 225)

தித்தியா நின்ற சொல் - தித்திக்கும் சொல். தித்தியா நின்ற சொல் சிவந்த வாய்ச்சியர். (பா : 832)

திதி - அசுரர்களின் தாய். காசிபன் மனைவி. அந்த வேலையில் திதி பெருந்துயருழந்து. (பா : 504) மைக்கருங்கண் திதி என்பாள் அதினிரட்டி அசுரர் தமை வயிறு வாய்த்தாள். (ஆ : 201)

திங்நாகம் - திக்நாகம். திசையானைகள். திந்நாக மாவில் செறி கீழ்த்திசை காவல் செய்யும் கைந்நாகம். (சு : 40)

திமிங்கில கிலம் - திமிங்கிலத்தையும் விழுங்கவல்ல ஒரு நீர் வாழ் பிராணி. திமிங்கிலங்களும் திமிங்கில கிலங்களும் சிதறி. (யுத் : 557)

திமிங்கிலம் - திமி என்னும் மீனை விழுங்கவல்ல நீர்வாழ் பிராணி. (யுத் ; 557) (சு : 38)

திமிதம் - ஒலிக்குறிப்பு. கூத்தனில் திமிதமிட்டுத் திரியுந் திரைக் கடல். (யுத் : 661)

திமிதமிட்டு - திமிதம் என்னும் ஒலியைச் செய்து. (யுத் : 661)

திமிர் - இருள். மயக்கம். சூளி நல்கும் திமிராறு பிரமதத்தற் களித் தனன் திருவன்னுரை. (பா : 428)

திமிர்த்தல் - அசைவற்றுக் கிடத்தல். ஆர்கலி பொங்கில திமிர்த் தன. (யுத் : 3747)

திமிர்தல் - பிரமை கொண்டு நிற்றல் (உ. வி) மறத்துப் போதல். பொங்கிய ஆர்கலி திமிர்த்தன. (யுத் : 3747)

திமிர - நீங்க. குங்குமச் சேதகம் திமிர. (பா : 953)

திமிரம் - இருள். திமிரம தறவரு தினகரன். (பா : 305) விலகியது திமிரம் வளையும் வகைவினைய. (யுத் : 3418)

திமிரமா - 1. இருள் போற் கருநிறமுள்ள யானை. திமிரமா வுடற் குங்குமச் சேதகம் திமிர. (பா : 953)
2. காட்டுப் பன்றி. (உ. வி) (பா : 953)
3. கரும் பன்றி. திமிர மாவன்ன செய்கைய. (யுத் : 3570)

திமில் - 1. திமிலம். திமிங்கிலம். (கலா) பெருமீன் இனத்தில் ஒன்று சுனையிற் பனை மீன் திமிலோடு தொடர்ந்துள்ள. (சு : 50)
2 ஆரவாரம்.

திமிலத்திண் போர் - நெருங்கிய வலிய போர். (வை. மு) முழக் கத்தையுடைய வலிய போர். (கலா) சென்றதவ்விராமன் திண்டேர் விளைந்தது திமிலத் திண்போர். (யுத் : 3679)

திமிலம் - முழக்கம். நெருக்கம். (யுத் , 3679)

திமிலை - ஓர் இசைக்கருவி. (யுத் : 2397)

தியங்குதல் . 1. சோர்தல். தேறினர்களும் தியங்கினர் மயங்கினர் தி...கத்தார். (யுத் : 3631)

2. தியக்கங் கொள்ளுதல். மயங்குதல். விடத்தைத் தானே தேக்கினுன் என்ன நின்று தியங்கினுன் உணர்வு தீர்ந்தான், (யுத் : 2657)

தியந்தம் - [திஅந்தம்] திக்கு. எல்லை. திசையில் எல்லையான இடம். ஓத நீர் தியந்த முட்ட. (ரித் : 658)

தியம் பகம் - திரியம் பகம். எழுசுடர்க் கடவுள் தன் பல்லிறுத்த வன் வலிக்கமை தியம்பகமெனும் வில்லிறுத் தருளினுன். (கி : 85)

தியாகமா விநோதன் - தியாகத்தையே பெரும்பொழுது போக்காகக் கொண்ட சோழன். சென்னி நாட்டெரியல் வீரன் தியாகமா விநோதன் தெய்வப் பொன்னி நாடு. (யுத் : 2713)

திரங்குதல் - சுருண்டிருத்தல். திரங்கு செஞ்சடை. (சு : 354)

திரட்சி - உருட்சி. எறிசுடர் வயிரமோ திரட்சி எய்தில. (சு:530)

திரட்டல் - 1. கடைச்சல் பிடித்தல். திரண்டவடிவமாக அமைத்தல். காண்டற் கினிதாய்ப் பல கந்து திரட்டலாகி. (ஆ : 697)
2. சேர்த்தெடுத்தல். சேர எடுத்தல். முத்தீர்த்துப் பொன் திரட்டி கி : 764)
3. குவித்தல். சிரக் கொடுங்குவைக்குன்று திரட்டினுன். (யுத் : 2091)

திரண்ட தோளினன் - திரண்ட தோள்களையுடைய தசரதன். திரண்ட தோளினன் இப்படிச் செப்பலும். (அ : 32)

திரண்டமாடு - திரண்ட செல்வம். (யுத் : 518)

திரண் மரம் ஏழும் தீய எய்தவன் - திரண்ட மராமரங்கள் ஏழும் தீயுமாறு அம் பெய்தவனுகிய இராமபிரான். (யுத் : 437)

திரம் - 1. அழிவின்மை. திரம்பயில் அரக்கர். (பா : 1319)
2. வகை. இயல்பு.

திரம்பயில் அரக்கர் - தமக்கு அழிவில்லாமல் நிலைபெற்ற அரக்கர். (பா : 1319)

திரள் - 1. தோழியர் கூட்டம். பண்ணையும் ஆயமும் திரளும் பாங் கரும். (பா : 296)
2. குவியல் தொகுதிகள். ஓயா அருவித்திரள் உத்தரீயத்தை ஒப்ப. (சு : 41) தனியானைபடத் திரள் சாயனே. (அ:1012)
3. திரண்டதன்மை. திரள் தோள். (யுத் : நீ23)

திரள் சாய்த்தல் - குவியல் குவியலாக கொன்று குவித்தல். திரள் சாயேனே. (அ : 1012)

திரளல் - இறுகுதல். திருகில் பொன்னெடுந் தண்டிற் றிரண்ட வால். (சு : 1193)

திரி - மூன்று. தீ முகத்திரிசிகைப்படை. (ஆ : 26)

திரிக்கும் - திரும்பிவிடச்செய்யும். திரியும் என்பதன் பிறவினை. சென்று நின்றழியும் ஆவி திரிக்குமால். (யுத் : 1604)

திரிக - திரும்புக. திரிக திரிக என உரறு தெழி குரலர். (யுத்:3417)

திரிக திரிக - திரும்புக திரும்புக. (யுத் : 3417)

திரிகின்ற உள்ளம் - சுழற்சி கொண்ட மனம். (கலா) அலைபாய் கின்ற மனம். (வை.மு) திரிகின்ற உள்ளதானும் அகமலர்ந் தவன் முன் சென்றாள். (யுத் : 428)

திரிகை - வட்டவடிவம். சக்கரம். சுழல்வது எனக் காரணக் குறி. திரிகை ஒத்தது மண்டலம். (யுத் : 1169) குயவர் திரிகை. (யுத் : 3422)

திரிசங்கு - ஓர் அயோத்தியரசன். வன் திறல் அயோத்தி வாழும் மன் திரிசங்கு வென்பான். (பா : 671)

திரிசடை - விபீடணன் மகள். ஆயிடைத் திரிசடை என்னும் அன்பினால் தாயினு மினியவள் தன்னை நோக்கினாள். (சு : 360)

திரிசடையாள் - திரிசடை. திரி சடையாள் எம்மோய் மனவினில் சுடர் மாமுக மாட்சியாள். (யுத் : 3951)

திரிசிகைப் படை - முத்தலை வேல். (திரி - மூன்று; சிகை - தலை; படை - வேல்) வட வேலை பருகும் தீமுகத் திரிசிகைப்படை. (ஆ : 26)

திரிசிரத் தோன் - திரிசிரன். அதிகாயனுடன் வந்தவன். அழை யாய்திரிசிரத் தோனையும் நிலத்தோடு மிட்டரைப்பான்.(யுத்:1852)

திரிசிரா - திரிசிரஸ். கரனுடன் வந்த படைவீரன். தூடணன் திரி சிராத் தோன்ற லாதியர். (ஆ : 418) திரிசிரா வெனும் பேரழிந்து. (ஆ : 498)

2. இராவணன் புதல்வருள் ஒருவன். தேவராந்தகன் நராந்தகன் திரிசிரா வென்னும் மூவராம். (யுத் : 512)

திரித்தல் - 1. சுழற்றுதல். திரிசிகைப் படை திரித்தெறியவே. (ஆ : 26) திரிக்குமெல்லையில். (ஆ : 1117)

2. பிரயோகித்தல். அங்கியின் நெடும் படை வாங்கி அன்னது செங்கையிற் கரியவன் திரிக்குமெல்லையில். (ஆ : 1117)

3. திரும்பச் செய்தல், திருப்புதல். சென்று சென்றழியுமாவி திரிக்குமால். (யுத் : 1604) தேர் திரித்தனை தேவரும் காணவே. (யுத் : 3845)

4. சுழலும்படி கடைதல் மந்தரப் பெயர் வாசுகியோடும் சுந்தரப் பெரிய தோள்கள் திரித்தான். (யுத் : 828)

5. மாற்றுதல். சிந்தா குல மெந்தை திரித் திடுவான் வாந்தானென. (யுத் : 1713)

6. நிலை குலையும்படி செய்தல். கலக்குதல். திசை திரித்தாய். (யுத் : 1123)

திரித்திடுதல் - திரித்துப் போக்குதல். சிந்தாகுலம் எந்தை திரித்திடு வான். (யுத் : 1713)

திரித்து - கழற்றி. நெருப்பெனத் திரித்து விட்டான். (யுத் : 1402)

திரித்து நோக்குதல் - திரும்பிப்பார்த்தல். திரித்து நோக்கினர். (யுத் : 1149)

திரிதண்டு - முக்கோல். மாத்திரி தண்டயல் வைத்த வஞ்சன். (ஆ : 846)

திரிதருதல் - 1. திரிதல். இராமன் பெருவனத்திடை ஏழிரு பருவங்கள் பெயர்ந்து திரிதரச் செய்தி. (அ : 179) திரிதரும். (கி : 1008) (யுத் : 3269)

2. கரைபுரளுதல். கடல் சலியா வெம்பித் திரிதர. (பா : 1358)

திரிதருமம் - முன் பின்னாக மாறிப் பயன்தரும் முறைமை. தற்பயன் தான் திரிதருமம் இல்லையே. (யுத் : 196)

திரிதல் - 1. சுழலுதல். கறங்காகு மெனத்திரிய. (ஆ : 50) திருநான் மறையின் நெறியே திரிவார். (யுத் : 236) கரத்தினில் திரியா நின்ற மரத்தினை. (யுத் : 2387) (யுத் : 428)

2. திரும்புதல். திரிந்து நோக்கினான். (யுத் : 1496) திரிய வந்தாய். (யுத் : 1350) செப்பினை திரிதி. (யுத் : 929)

3. முறைபிறழ்தல். தான் திரி தருமமில்லை. (யுத் ; 196)

4. மிளிர்தல். மின்திரிந் தென்னநக்கு. (சு : 1125)

5. **நிலைகுலைதல்.** உலகுந்திரியுமால். (யுத் : 4150)

6. **மாறுபடல்.** அரசன் மெய்யில் திரிவானென்னில். (அ : 338) அறந்தலை திரிந்த வாழ்க்கை அரக்கர். (ஆ : 868)

7. **ஒழுகுதல்.** கள்ளந்திரிவார் அவர் கைதவன் நீ. (யுத் : 235)

8. **செல்லுதல்.** களிற் றிரிகின்ற தொர் ஆசையான். (யுத் : 1282)

திரிதலைச் சிறுவன் - திரிகூடமலை. நெடுநாள் தீர்ந்த திரிதலைச் சிறுவன் தன்னைக் காணிய விரைவிற் செல்லும் கனகமால்வரையும் ஒத்தான். (சு : 27)

திரிதி - திரும்பிவா. சென்றுளதுணர ஒன்றுசெப்பினை திரிதி. (யுத் : 929)

திரிந்தயர்தல் . சுழன்று தளர்தல். வேலையிற் புக்கழுந்தியதோர் மரக்கலம்போல் திரிந்தயர. (யுத் : 2687)

திரிந்து நிற்றல் - புறங்காட்டி நிற்றல். இராவணற் கழிந்து வெள்கிய நீலுறு திசைக்கரி திரிந்து நிற்பன. (சு : 667)

திரிபுதிங்யுணரா நெறி - தத்துவஞானம். பொறியினென்றி அயல் சென்று திரிபுந்தி யுணரா நெறியினென்றி. (ஆ : 47)

திரிபுர மெரித்த தேவன் - முப்புரம் தீயிட்ட சிவபிரான். திரிபுர மெரித்த தேவன் வரிசிலையிற்றதாக. (பா : 1377)

திரிபுவனம் - மூவுலகம். இவர் முதலோர் திரிபுவன முழுதாண்டு சுடர் நேமி செல நின்றோர். (பா : 725) தேவர் திரிபுவன நிலையர். (யுத் : 3424) (யுத் : 3091)

திரிய - 1. மீட்டும். மறுபடி. திருமாநகரின் மிசைத்திரிய ஊரும் திகிரிக் குறி ஒற்றி. (அ : 612) திரிய வந்தாய். (யுத் : 1350)

2. **திருகி. நிலைபெயர.** மராமரம் திரிய வாங்கி. (யுத் : 1022)

திரியல் - திரிதல். சாரிகை திரியலான மாருதி. (யுத் : 1185)

திரிய வருதல் - மீண்டும் வருதல். திரிய வந்தாய். (யுத் : 1350)

திரிய வாங்குதல் - திருகிப் பெயர்த்தல். மராமரம் வேரொடுந் திரிய வாங்கி. (யுத் : 1022)

திரியவூர்தல் - மீட்டுச் செலுத்துதல். திருமாநகரின் மிசைத்திரிய வூருந்திகிரிக் குறி ஒற்றி உவந்தார். (அ : 612)

திரிவ - ஜங்கமம். திரிவ நிற்ப செகதலத்து யாவையும். (பா : 690) திரிவ நிற்பன யாவையும். (யுத் : 552)

திரிவன - சரம். வாழும் மண்ணில் பூதங்கள் நிற்பன திரிவன இவற்றின் உண்ணிறைந்துள கரணத்தினூங்குள உணர்வும். (யுத் : 173)

திரிவான் - திரும்புவான். மகனைத் திரிவான் என்றாள். (அ : 347)

திரிவுறுதல் - சுழலுதல். இருவரும் திரிவுறும் பொழுதினின். (கி:186)

திரு- திருமங்கலியம். இவன் சிர மிருத்தலால் திரு வாங்கலம் என்றழு மாதரார் பலர். (சு : 1047)

2 வீரம். (செல்வம்) தங்களைத் திருவொடுங் காணார் இரங்கு கின்ற வல்லரக்கர். (சு : 1227)

3. செல்வப் பொலிவு. செல்வங்கள். திருவ. (யுத் : 3234) செறி பெருந்தானையும் திருவும் நீங்கலால். (அ : 978) திருவுறப் பயந்தனன் திறங் கொள் கோசலை. (பா : 284) (பா : 172)

4. நல்வினை. இருபது கரந்தலை ஈரைந் தென்னுமத் திருவிலி. (பா : 190)

5. திருத் தகவினதாகிய சிறந்த பொருள். திருக்குவால் மலி செல்வத்துச் செருக்குவேம். (யுத் : 4030)

6. அழகு. ஊழிநாயகன் திருவயிறு ஒத்ததிவ்வூர். (சு : 107) திருவுண்டகவசம். (யுத் : 2374)

7. சிறப்புணர்த்தும் அடை. கேகயர்க்கிறை திருமகள். (அ:160) திருக்கிளர் செல்வம். (கி : 667)

8. மேன்மை. உயர்ச்சி. திருவினில் திருவுளார் யாவர். (சு:535)

9. இராச்சியம். அரசச்செல்வம். இராச்சிய லட்சுமி. இராமற்குத் திருவும் பூமியும் சீதையிற் சிறந்தன என்றான். (அ : 74)

10. பொருள். திருக்குவால் மலி செல்வம். (யுத் : 4030)

11. இலக்குமி. (உ.வி) திருவினில் திருவுளார். (சு : 535)

12. பெண்கள். அரியோர் கேழலாய் இளையெனுந் திருவினை ஏந்தினனரோ. (அ : 1184)

13. பொலிவு. அரக்கர் திருவின் மார்பகந் திறந்தன. (ஆ : 446)

14. சீதாபிராட்டி. வட்ட முலைத்திரு வைகும் புட்டிரள் சோலை. (சு : 1243)

15. வெற்றித்திரு. வீரலக்குமி திரண்ட மாடும் தன் திருவொடு நிதியமுமிழந்து. (யுத் : 517)

திருக்கதை - சிறந்த சரிதம். நாரணர் திருக்கதை. (பாயி : 30)

திருக்கம் - மாறுபாடு. சிந்தையில் திருக்கமின்மை முனிவற எண்ணி. (சு : 1322)

திருக்கில் சிந்தை - மாறு பாடில்லாத மனம். திருக்கில் சிந்தையர். (கி : 827)

திருக்கிளர் கமலப்போது - அழகு மிக்க தாமரைப்பூ. முகங்களென்னும் திருக்கிளர் கமலப்பூவில் தீட்டின கிடந்த கூர்வாள். (பா : 872)

திருக்கு - 1. அகத்தும் புகத்தும் உள்ள பகைகள். எத்திருக்குங் கெடும் என்பதை எண்ணு. (பா : 302)

2. முறுகல். கடுமைப்படல். சேற்றவளை தன் கணவன் அருகிருப்பச் சினந்திருகி சூற்றவளை நீருழக்குந் துறைகெழு நீர்வள நாடா. (ஆ : 346)

3. மாறுபாடு. அத்திருக்குங் கெடும். (யுத் : 4145) (உ.வி) (ஆ : 346) திருக்கில் சிந்தையர். (கி : 827) சூலையின் திருக்கு. (யுத் : 207)

4. வஞ்சனை. திருக்கு நீங்கா மாயையின் மயங்குகின்றும். (கி : 654)

திருக்குவால் - பொருட்குப்பை. (யுத் : 4030)

திருக்குவால் மலி செல்வம் - பொருட்குவியலாக நின்ற ஐசுவரியம். (யுத் : 4030)

திருக்கொள் மார்பன் - திருமகளைத் தன்பாற் கொண்டு விளங்கும் திருமாலின் அம்சமான இராமபிரான். (யுத் : 3931)

திருகல் - மாறுபடுதல். திருகலையுடைய இந்தச் சகத்துளோர் தேரா. (பா : 212)

திருகிய சீற்றம் - மனம் மாறுபட்டதனால் தோன்றிய கோபம். திருகிய சீற்றத்தாற் செம்மையாய் நிறங் கருகிய அண்ணல். (அ : 1088)

திருகு - 1. மாறுபாடு. திருகு வெஞ்சினத் தரக்கர். (சு : 110) திருகுறும் சினத்துத் தேவர் தானவர். (சு : 755)

2. முதிர்ச்சி. திருகு சினத்தார் முதிர மலைந்தார். (ஆ : 734)

திருகு சினம் - மூண்டெழுந்த சினம். (ஆ : 734)

திருகுதல் - 1. மாறுபடுதல். செற்ற வாளுழுவை வன், செறி அதள் திருகுறச் சுற்றி. (ஆ : 15) பொரு சினந்திருகி. (யுத்:2513) திருகு வெஞ்சினத்தன. (யுத் : 337)

2. தணிதல். தனு ஒன்ருல் திருகாத சினந் திருகித் திசை யனைத்துஞ் செல நூறி. (336)
3. முறுகுதல். சினந்திருகி. (ஆ : 336)
4. மிகுதல். பொங்குதல். திருகினுர் சினம் முற்றினர் இராமனை. (ஆ : 472) திருகிய சீற்றம். (அ : 1088)
5. தலை முறிதல். அவ்வரக்கனைத் திருகி. (கி : 208)

திருகுவெஞ்சினம் - மாறுபட்ட கொடியசீற்றம். (யுத்:337) (சு:310)

திருகுறுதல் - முறுக்குண்டாக்குதல். சில்லலோதியைச் செங்கையில் திருகுறப் பற்றி. (ஆ : 317)

திருகை - மாறுபாடு. (அண்) திருக்கை என்னும் ஒருவகை மீன். (வை. மு) திருகை வேலைத்தரை. (பாயி. 30)

திருச்சரங்கள் - அழகிய அம்புகள். புலவர் கோமான் கைத் திருச்சரங்கள். (யுத் : 1686)

திருத்தகு நாடு - செல்வத்தால் சிறப்புற்ற நாடு. (பாண்டி நாடு) அத்திருத்தகு நாட்டினை அண்டர் நாடொத்திருக்கு மென்ருலுரை ஒக்குமோ. (கி : 943)

திருத்தம் - 1. தீர்த்தம். கரடிப் பெரும்படை விருத்தனிட்ட திருத்தம் வானவர் சென்னியிற் சென்றவால். (யுத் : 660)
2. (இலக்) வீரந் தங்கிய துறை. புண்ணிய தீர்த்தம். ஒருத்தர் மேல் ஒருவர் வீழ்ந்துயிரிற் புல்லினுர் திருத்தமேயனையவன் சிகரத்தோள்கள் மேல். (யுத் : 3901)

திருத்தல் (திருத்துதல்) - 1. செய்தல். மூவரும் திருத்திய திருத்தும். (அ : 37)
2. செவ்விதாக்குதல். நேர்மைபெறச் செய்தல். நெடுநாளில் திருத்திய வினைமுற்றிற் றென்ன. (அ : 709)
3. சித்தஞ் செய்தல். அமைத்தல். யான் இனிச் சென்றனன் கொணர்ந்து அடை திருத்தினுல் அது நுன் துணைக் கோமகன் நுகர்வது. (கி : 679) (அ : 658)
4. தீட்டிவைத்தல். சூலமேகம் திருத்திய தோளினுன். (யுத் : 1283)
5. சொல்லுதல். (அண்) நேர்மை பெறச் செய்தல். (வை. மு) இராகவன் புகழைத்திருத்தும் கவிக்கு நாயகன். (சு : 227)
6. நிலைபெறச் செய்தல். இவ்வுருக் காதை என்பழியொடு திருத்திக் காட்டினேன். (யுத் : 2725)

7. பரப்புதல். தருப்பையுந் திருத்தி. (ஆ : 1033)
8. முற்றுதல். முதிர்தல். தீமை திருத்தினர்.(கி : 331) [பா:பே]
9. நீதிவழுவாமல் அரசாளுதல். செய்யார் புனல் நாடு திருத்துதி யால். (யுத் : 2643)
10. விளக்குதல். பெற்றி திருத்திய தாகு மன்றே. (யுத் : 413)
11. மாசுபோகத்துடைத்துச் சீர் செய்தல். (யுத் : 1719) [பா: பே]
12. திறத்தல். செவ்வழித் தென்றலார்க்குத் திருத்தினீர் நீர்கொல். (ஆ : 725)

திருத்தம் - திருத்தமான செயல். (யுத் : 3901)

திருத்திக் கொணர்தல் - ஆராய்ந்து கொணர்தல். (வை.மு) தூயன வாக்கிக் கொணர்தல். (அண்) தேனும் மீனும் விருந்தினுக் கமைவதாகத் திருத்தினென் கொணர்ந்தேன். (அ : 658)

திருத்திய உணர்வு - திருந்திய நல்லறிவு' திருந்திய உணர்வு மிக்க செங்கதிர்ச் செல்வன் செம்மல். (யுத் : 436)

திருத்தியதாகும் - செவ்வனே விளங்கும். (வை.மு) சிறந்த முறையில் விளங்கும். (கலா) தவத்தினுலும் பிழைப்பிலன் என்னும் பெற்றி திருத்தியதாகுமன்றே நம் வயிற் சேர்ந்த செய்கை. (யுத் : 413)

திருத்துபு - திருத்தும் போது. கைவளை திருத்துபு கடைக்கணின் உணர்ந்தாள். (பா : 1238)

திருதி - மனவடக்கம். (த்ருதி-சாந்த நிலை) பொறுமை. திருதி என்ப தொன்றழிதர ஊழியிற் சினவும் பரிதி மண்டில மெனப்பொலி முகத்தினன். (யுத் : 549)

திருந்த நோக்குதல் - செவ்வனே பார்த்தல். திருநகர் முழுவதும் திருந்த நோக்கினுன். (யுத் : 16)

திருந்திழை - திருந்திய அணிகலன்களை யணிந்த ஒரு பெண். பின் ஒரு திருந்திழை துயரநான் தீர்க்ககிற்றிலேன். (கி : 217)

திருந்தினுர் - நேர்மைக் குணமுள்ளவர்கள். (வை.மு) ஒழுக்கத் தாற் சிறந்து விளங்கியவர். (கலா) செவ்வியர். (அண்) திருந் தினுர் பொன்றுவாரிற் பொருந்தினர் போயினுர். (கி : 944)

திருந்து மெய் கொள் பூசனை. - திருத்தமான உண்மையான பூசனை. தெய்வ வான் பெரும் படைகட்கு வரன்முறை திருந்து மெய் கொள் பூசனை இயற்றினம் விடுமிது விதியால். (யுத் : 2482)

திருநகர் - 1. வளநகர். (அயோத்திநகர்) திருநகர் தீர்ந்த வண்ணம் மானவ தெரித்தி. (அ : 663) திருநகர்ப் புரிசை வாயிலே. (அ : 986)

2. அழகிய நகர். (இலங்காபுரி) திருநகர் முழுவதும் திருந்த நோக்கினன். (யுத் : 16)

திருநதி - தெய்வநதி. கங்கை யென்னுமக் கரைபொரு திருநதி கண்டார். (பா : 509)

திரு நறை - சுகந்தம் என்னும் கொடி. சிந்து வாரம் திரு நறை தேக் கதில். (கி : 584) (பா : பே)

திருநாமம் - திருப் பெயர். பாடினன் திரு நாமங்கள் பன்முறை. (யுத் : 3936) (யுத் : 2203)

திருநாமம் சாத்துதல் - திருமண் தரித்தல். தன் திருநாமத்தைத் தானும் சாத்தியே. (பா : 1293)

திரு நான்மறை - திருவுடைய நான்கு வேதங்கள். (யுத் : 236)

திரு நெடுந்தோள் - அழகிய நீண்ட தோள்கள். குன்றனைய திரு நெடுந் தோட் குகன். (அ : 1057)

திருநெடு மால் - அழகிய பெரிய மாலாகிய கடவுள். நான் முகத் தொருவனும் திருநெடுமாலாம் அவனும். (யுத் : 126)

திருப்புலத்தல் - இலக்குமி தேவி அப்பாற்செல்லுதல். கப்பணம் திருப் புலக்க உய்த்தான். (யுத் : 3856)

திருப்பெயர் - திருநாமம். கடித்தன துடித்திலன் திருப்பெயர் மறவாதான். (யுத் : 218)

திருமகள் - சீதா பிராட்டி. திருமகள் இருந்த திசையறிந் திருந்தும். (சு : 425)

திருமகள் கொழுநன் - இராமபிரான். கொண்டணை திருமகள் கொழுநனை என்றான். (அ : 48)

திருமகள் தலைமகன் - இலக்குமிக்கு நாயகனான இராமபிரான். திருமகள் தலைமகன் புல்லிற் சேர எற்குரியதோ இஃது. (கி : 671)

திருமங்கை - தெய்வமங்கை. அகிற் சேறணிந்த முலைத் திரு மங்கை தன் வீறணிந்தவன். (பா : 13)

திரு மடந்தை சேடியாம் பாங்கினள் - அழகிற் சிறந்த இலக்குமியும் தனக்குப் பணிப்பெண்ணாய் அடிமைத் தொழில் புரியும் இயல்பின ளாகிய சீதை. திங்கிலாக் கற்பில் திருமடந்தை சேடியாம் பாங் கினள். (யுத் : 1669)

திருமடந்தை காந்தன் - திருமகளின் கணவன். ஏந்து தடந்தோள் இராமன் திருமடந்தை காந்தன் ஒருமுறை போய்க் காடுறைவானு யினன். (அ : 387)

திருமணி மகுடம் - அழகிய மணிமுடி. திருமணி மகுடஞ் சூடச் சேவகன் செல்கின்றனென்று. (அ : 268)

திருமறுமார்பன் - அழகிய ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவைக் கொண்ட மார்பினையுடைய திருமால். (வெ.ப) **இலக்குமியையும் ஸ்ரீவத்ஸம் என்னும் மச்சத்தையுங் கொண்ட திருமால்.** (வை.மு) (அண்) திருமறுமார்பன் நல்க அனந்தரும் தீர்ந்து. (யுத் : 1367) (பா : 496) [பா : பே]

திருமறை - சிறந்த வேதங்கள். திருமறை புகன்ற தானம் வீசினன் இயற்றி. (யுத் : 3608)

திருமறை புகன்ற தானம் - வேதங்கள் கூறிய தானங்கள். (யுத் : 3608)

திருமறை முனிவர் - சிறந்த நான்மறை வல்ல முனிவர். செயிர்ப் பறு தெய்வச் சிந்தைத் திருமறை முனிவர். (யுத் : 2786)

திருமனம் - அழகிய மனம். தூயமனம். செயிர் கிடத்தல் செல்லாத திருமனத்தாய். (ஆ : 199) வில்லியைத் திருமனம் வெதுப்பும் வேட்கையால். (யுத் : 464)

திருமனை - அழகிய மனை. இராகவன் திருமனை புக்கான். (அ : 49) (சு : 103)

திருமார்பு - அழகிய மார்பு. மால் திரு மார்பின் அணியுங் காசினு மகன்ற உளவெனின். (சு : 103)

திருமால் - 1. திருமகளோடு கூடிய மால். திருமாலாம் அவனே அல்லன். (யுத் : 3802)
2. **இராமன்.** திருமால் தெருளா. (ஆ : 1115) (யுத் : 3028)

திருமால் தனக்கிளையான் - இலக்குவன். (யுத் : 3028)

திருமி - திரும்பி. (வை.மு) வலத்துயர் நுங்கிய திங்களோடித் திருமிச் சிறுமின் பிறை தீமை குறைந்த தில்லை. (ஆ : 695)

திருமுகம் - ஓலை. கொற்றவன்றன் திருமுகங் கொள்கென்ருர். (அ : 796)

திருமுடியோன் - சக்கரவர்த்தி. நீதிலான்கொல் திருமுடியோன் என்ருன். (அ : 794)

திருமுதல் - திரும்பி வருதல். திருமு இச் சிறு பிறை. (அண்) (ஆ : 695)

திருமுற்றுதல் - செல்வ போகம் நீங்குதல். மூலமில் கனவில் திரு முற்றுற. (அ : 1083)

திருமேனி - அழகிய வடிவம். அந்தோ உன் திருமேனிக் கன் பிழைத்த வன் பிழையால். (ஆ : 339)

திருமேனிக் கருங்கடல் - திருமேனியை யுடைய நீலக் கடல் போல விளங்கும் மூர்த்தி. இருங் கடகக் கரதலத்திவ் வெழுதரிய திருமேனிக் கருங்கடலைக் கௌசலை என்பாள் பயந்தாள். (பா:740)

திருவ - செல்வத்தைப் பெற்றவனே. வானவர்க் கரிய திருவ. (யுத் : 3234)

திருவடி - 1. தெய்வத்தன்மை வாய்ந்த பாதங்கள். திருவடியாற் றுடைத்தாய் நீ. (ஆ : 61)
2. திருவடி நிலை. திருவடி முடியிற் சூட்டி. (யுத் : 454)
3 அனுமன் பெயர். சிறிய திருவடி. உவமையாலும் திருவடி யென்னுந் தன்மை. (கி : 1034)

திருவடி நிலை - பாதுகை. திருவடி நிலையைச்சூடி. (யுத் : 454) [பா : பே]

திருவடி புனைதல் - திருவடிகளைச் சூடுதல். எங்கோன் திருவடி புனைந்தேனல்லேன். (யுத் : 1622)

திருவடி வணக்கஞ் செய்தல் - உபய பாதங்களில் வணங்குதல். சென்றடைந்திராமன் தன்னைத் திருவடி வணக்கஞ் செய்தார். (யுத் : 3537)

திருவருள் முகத்தல் - அருள் பாட்டைப் பெறுதல். முகந்தனர் திரு வருள் முறையின் எய்தினர். (பா : 817)

திரு வரை - அழகிய அரை. (இடுப்பு) தன்னுடைத் திருவரைச் சீரை சாத்தினன். (அ : 985)

திருவளர் மார்பர்-வீரலக்குமி தங்கிய மார்பினையுடையவர். திருவளர் மார்பர் தெய்வச் சிலையினர் தேரர் வீரர் இருவரும் முனி பின் போன இரு வரு மென்னப் போயினர். (பா : 887)

திருவாழ் மார்பன் - இலக்குமி வாழ்கின்ற மார்பினை யுடையவன். திரு வாழ் மார்ப நின் மாயை எம்மால் தீர்க்கத் திருமோ. (யுத் : 2620)

திருவாளன் - திருமகள் கணவனுகிய இராமபிரான். உருமுற்றுந் திருவாளன் தெரியக் கண்டான். (யுத் : 3870)

திருவில் - இந்திரவில். (கலா) அழகிய ஒளி. (அண்) குண்டலந் திருவில் வீச. (பா : 1022)

திருவில்லிகள் - (நற்பேறில்லாத) பாக்கிய மில்லாத அரக்கர்கள். திரு வில்லிகள் தலை போய் நெடு மலை போலுடல் சிதைவார். (யுத் : 3362)

திருவிலி - 1. பாக்கிய ஹீனன். நல்வினையில்லாதவன். இராவணன். இருபது கரந்தலை ஈரைந் தென்னுமத் திருவிலிக் கன்னவை சிதைந் தவோ என்பார். (யுத் : 345) (பா : 190)
2. வாழ்வற்றவன். நற்பேறில்லாதவன். திருவிலீ மற்றிது எம் மறைப் பொருளெனத் தெரிந்தாய். (யுத் : 182)

திருவிளையாடல் - விளையாட்டுப் போன்ற செயல். வித்தக வில்லி னுற்குத் திருவிளையாடற் கேற்ற சித்திர இலக்கமாகும். (சு : 448)

திருவின் கேள்வன் - சீமானுன இராமன். (அண்) இலக்குமி கணவனுன இராமன். (வை.மு) திருவின் கேள்வினைக் கொணர் மின் சென்றெென. (பா : 333)

திருவின் திரு -திரு மகளுக்குந் திருவாக இருப்பவன். உலகின் தவமே திருவின் திருவே. (அ : 328)

திருவின் தொடர்போக பௌவம் - செல்வத்தோடு தொடர்ந்துள்ள இவ்வுலக இன்பமாகிய கடல். தோய்ந்தே கடந்தான் திருவின் தொடர்போக பௌவம். (பா : 172)

திருவின் நாயகன் - திருமகள் கேள்வன். திருவின் நாயகன் இவனென. (கி : 485)

திருவின்நீங்குதல் - இராச்சியத்தை விட்டிடுதல். இழத்தல் கொற்றவன் திருவினீங்கிச் செய்தவஞ்செயுநாள். (அ : 316)

திருவின் பெட்பினர்–செல்வ நிறையுடையவர். பெறலருஞ் சூழ்ச்சியர் திருவின் பெட்பினர். (அ : 11)

திருவின்முகத்துத் திருவன்னாள் - திருவில் முகத்து திரு அன்னாள். அழகையும் ஒளியையுமுடைய இலக்குமியை ஒத்த சீதை. (வை.மு) (சு : 602) [பா : பே]

திருவின் முகத்துத் திருவானாள் - திருமகளின் முன்பு திருமகளாய் விளங்கினாள். (முகத்து - முன்பு) (அண்) சு : 602)

திருவினல்லார் - திருமகளைக் காட்டிலும் அழகுமிக்கவர். செப்பருந் திருவின் நல்லார் தேர்மிசை சூழப்போனார். (பா : 886)

திருவினாயகன் - இலக்குமி மணாளனாகிய இராமபிரான். திருவின் நாயகன் ... படிந்திருவர்தாளும் முறையினிறைஞ்சினான். (பா:1190) (யுத் : 4194) (அ : 584) (ஆ : 990) (யுத் : 2439)

திருவினை - செல்வம் மிக்கவாழ்க்கை. இமையோ ரேத்தும் திருவினையும் இடுபதந்தேர் சிறுமையையும் முறையொப்பத் தெரிந்து நோக்கி. (கி : 770)

திருவுடம்பு - அழகிய உடல். அவஞ் செயத் திருவுடம் பலச நோற்கின்றான். (ஆ : 242)

திருவுளம் - 1. விருப்பம். திருத்தினன் கொணர்ந்தேன் என் சொல் திருவுளம் என்ன. (அ : 658) திருவுளமெனின். (அ:684)
2. நல்ல உள்ளம். வேதநூல் எனத்தகும் நின்திருவுளம்.(யுத்:412)

திருவுறை கமலம் - திருமகள் வசிக்கும் தாமரைமலர். திருவுறை கமல மன்னநாடு. (யுத் : 2712

திருவுறை மார்பகம் - திருத் தங்கிய மார்பின்கண். சீதை கொண்கனைத் திருவுறை மார்பகஞ் சேர்த்தான். (அ : 59)

திருவுறை மார்பன் - இராமன். திருவுறை மார்பனுந் தெளிவு தோன்றி. (கி : 213) (யுத் 1356)

திருவெண்ணெய்நல்லூர் - சடையப்ப வள்ளல் வாழ்ந்த ஊர். வாழ்வார் திருவெண்ணெய் நல்லூர் சடையப்பன் வாழ்த்து பெற. (பாயி : 2)

திருவைச் சேரும் அருமணம் - மகுடாபிஷேகம். (கலா) இராஜ்ய லக்ஷ்மியை அடைகின்ற பெறுதற்கரிய கலியாணம். (வை. மு) இராசலட்சுமியைக் கூடுகின்றதாகிய அரிய மணம். (அண்) அற்புதன் திருவைக் சேரும் அரு மணங் காணப் புக்கார். (அ:258)

திரை - உடம்பின் தோல் சுருங்குதல். நரைதிரை யென்றில்லாத நான் முகனே முதலமரர். (ஆ : 348)

திரை ஓத வேலை - அலைகளையும் பொங்குதலையுமுடைய கடல். செங் குருதி வெள்ளமுள்ள திரையோத வேலையொடு மொத்ததால். (யுத் : 2018)

திரைக்கங்கை - அலைகளையுடைய கங்கை. சிருங்கி பேரம் எனத் திரைக்கங்கையின் மருங்கு தோன்றும் நகர். (அ : 653)

திரைக் கடலழுவம் - அலைகளையுடைய கடற்பரப்பு. ஆய் பெருந் திரைக் கடலழுவத் தாழ்வன. (சு : 903)

திரைக்கரம் - திரைகளாகிய கைகள். திரையாகியகை. திரைக் கரத்தாலரைப்ப தேய்க்கும் மணியாழி. (யுத் : 10) இழைத்த வெண்திரைக் கரமெடுத்திலங்கையாள். (கி : 946)

திரைக்கும் மாசுணம் - இறுகக் கட்டிய மலைப்பாம்பு. எம்மருங்கும் திரைக்கும் மாசுணம் வாசுகி ஒத்தது. (சு : 1040)

திரைக்கை - அலைகளாகியகை. மந்தாகினி...... திரைக்கை நீட்டிச் செவிலியின் ஆட்டினுள். (அ : 638)

திரை செய் தீர்த்தம் - அலையெறிகின்ற பொய்கை. (பம்பைப் பொய்கை) அத்திரை செய் தீர்த்தமும் செய்தவ முண்மையால். (கி : 36)

திரை செய் வேலை - அலைவீசுகின்ற கடல். திரை செய் வேலைக் கொர் ஆகுலஞ் செய்தவே. (யுத் : 997)

திரை செறி கடல் - அலைகள் நிறைந்த கடல். கரை செயலரிய தோர் உவகை கைதரத் திரை செறி கடலென எழுந்து சென்றவால். (யுத் : 4188)

திரைத்தல் - 1. அலைத்துத் தள்ளுதல். குடரெலாந் திரைத்தன குருதியாறுகள். (அ : 1096)

2. மடக்கிப் பிடித்தல். செறிபுனற் பூந்துகில் திரைக்கை யாற்றி ரைத்து உறுதுணைக் கான் மடுத்தோடி. (கி : 559)

3. அலைமோதுதல். திரைத் தெழுந்துவந்து வள்ளல் மலர்த்தாளில் வீழ்வ தேய்க்கும் மணியாழி. (யுத் : 9)

4. திரட்டுதல். மின் திரைத்து அருக்கன் தன்னை விரித்து மீன் ஞெருக்க தொன்று நின்றிமைக்கின்ற தன்ன முடிபடி நெடிதின் வைத்தான். (யுத் : 1598)

திரை நிரைத்தல் - அலைகளை ஒழுங்காக அமைத்தல். நீர் திரை நிரைத்தவென நீள் திரை நிரைத்தார். (பா : 911)

திரைப்பரவை - அலைகளையுடைய கடல். திரைப் பரவைப் பேரகழித் திண்ணகர். (ஆ : 560) [பா : பே]

திரைப் பெருங்கடல் - அலைகளையுடைய பெரியகடல். திரைப்பெருங் கடலெனத் தொடர்ந்து பின்செல. (அ : 479)

திரையார் கடல் - அலைகள் நிறைந்த கடல். திரையார் கடல் சூழ் உலகின் தவமே. (அ : 328)

திரையெனும் நிமிர் கை - அலையென்னும் நீண்ட கை. திரையெனும் நிமிர்கையால் ஏந்தினள். (அ : 679)

திலகம் - 1. நெற்றிப் பொட்டு. கவசம் கழல் திலகம் முதல. (யுத் : 3371)

2. சிறந்து விளங்கும் திலகம் போன்றவள். சீதாபிராட்டி. தெய்வ மங்கையர்க்கு மேலாம் திலகம். (பா : 1217)

திலகஞ் செய்தல் - திலகம் தீட்டுதல். தெய்வ மங்கையர்க்கு மேலாம் திலகத்தைத் திலகஞ் செய்தார். (பா : 1217)

திலகவாணுதற் பிடி - திலகம் தீட்டிய ஒள்ளிய நெற்றியுடைய பெண் யானைகள். திலக வாணுதற் பிடிகளும் குருளையுஞ் செறிந்த உலவை நீள்வனம். (பா : 904)

திலகன் - திலகம் போன்றவன். ஆடவர் திலகன். (கி : 953) (பா : 1360)

திலதம் - 1- சுட்டி. வீரபட் டத்தினருகில் இணைந்திருப்பது.

2. நெற்றிப் பொட்டு. வில்லியர் திலகமன்ன நின் திருமேனி தாங்க. (யுத் : 1858) ஏடுண்ட பசும் பொற் பூவும் திலதமும். (யுத் : 2776)

திலோத்தமை - தெய்வப் பெண் தூண்டினன் அரம்பை மாருள் திலோத்தமை எனுஞ் சொல் மானை. (பா : 688) (சு : 292) (கி 276)

திவ்விய மதுரம் - மேலான மதுரம். திவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளில். (பா : 93) [பா : பே]

திவசம் - 1. நாள்- தினம். திவசமாம் நல்லறம். (ஆ : 99) யாம் இத்திவசத்தின் முடித்தும் வெம்போர். (யுத் : 2123)
2. பகல். திவசத் தெழு கதிரோன். (யுத் : 3015)

திவசமாம் நல்லறம் - நாடோறும் மேற் கொள்ளக் கூடிய நித்திய கருமம். (ஆ : 99)

திவலை - 1. துளி. நுட்பமான நீர்த்துளி. கூதிர் நுண்மணித் திவலைக் கோவை. (யுத் : 335) திவலையால் நனைந்து. (யுத்:4314)
2. மழை.

திவலைக் கோவை - திவலையின் திரள். கூதிர் நுண் குறும்பனித் திவலைக் கோவை. (யுத் : 335)

திவள்தல் (திவளுதல்) - 1. விளங்குதல். குருதிநீர் சுற்றித்திவள. (யுத் : 2574)
2. துவளுதல். (வை. மு) பிரகாசித்தல். (கலா) திவள அன்னங் கள் திருநடை காட்டுவ. (கி : 18)
3. அசைதல். (உ.வி) திவளப் பாற்கடல். (யுத் : 3219)
4. வெண்ணிறமுடையதாதல். (யுத் : 3219)

திளைத்தல் - 1. இடைவிடாது அனுபவித்தல். வள்ளல் மார்பில் உள்ளுறத் திளைக்கலாகு மாயில். (பா : 799)
5. நெருங்கிச் செல்லுதல். எழு முதல் இளைய ஏந்திக் குத்திய திளைப்ப. (சு : 818)

திளைப்பன - இடையறுது குலாவிக் களிப்பன. மென்முலை திளைப்பன முத்தொடு செம்பொன் ஆரமே. (பா : 145)

திறங்கொள் பணைமரம் - கிளைகளைக்கொண்ட பருத்த மரங்கள். (யுத் : 2465)

திறத்தல் - 1. பிளத்தல். கிழித்தல். கிழிதல். ஊன்திறந்துயிர் கொள்வேலினுய். (அ : 561) திசை திறந்து. (உ. வி.) புண் திறந்தன நெஞ்சன் பொருமலன். (யுத் : 3178)
2. வெளிப்படல். நசை திறந்திலங்கப் பொங்கி. (யுத் : 257) இசைதிறந்துயர்ந்தகை. (உ. வி) (யுத் : 257) விசைதிறந்துருமு வீழ்ந்தென்ன எற்றினன். (யுத் : 257)
3. பரவுதல். இசை திறந்துயர்ந்த கையால் எற்றினன். (யுத்:257)

4. வாய்விடுதல். புண்திறந்ததில் எரிநுழைந்தாலெனப் புகைவாள். (சு : 341)

5. விரிதல். திறக்கிலா அலர். (ஆ : 686)

திறத்தாறு - சிறந்தவழி.. உபாயம். உரிய வழிகள். அறிந்து திறத்தா றெண்ணி அறத்தா றழியாமை. (கி : 1025)

திறத்திறத் துலகம் - பல வேறு வகைப்பட்ட உலகம். தேவர்கள் முனிவர் மற்றும் திறத்திறத் துலகஞ் சேர்ந்தார். (யுத் : 2969)

திறத்திறம் - வரிசையாக. சென்றுநீர் பொருதிர் என்று திறத்திறம் செலுத்திக் கொன்றனை நீயே. (சு : 988)

திறத்திறம்பட - கூட்டங் கூட்டமாக. (வை. மு) பல கூறுகளாக. பலபல கூறுகள்பட. (அண்) கூறு கூறாக. (உ.வி) திறத்திறம்படத் திசைதொறும் திசைதொறும் சிந்திப் புறத்திேனுடினர். (யுத்:1445)

திறத்திறன் - 1. துண்டந் துண்டாக. செருத்திணி வாளினால் திறத்திறன் உங்களை அமர்த்துறைச் சிரங் கொய்து. (யுத் : 1549)

2. மேலான தரும மார்க்கம். சிறந்த அறநெறி. திறத்திறனாலே செய்தவ முற்றித் திருவுற்றாய். (ஆ : 739)

திறிந்துழியன்றி - நேரான வழியால் அல்லாமல். திறந்துழியன்றி வஞ்சித் தெய்துதல் சிறுமைத்தாகும். (ஆ : 766)

திறத்துளி - முறைப்படியே. (உளி - மூன்றும் வேற்றுமை யுருபின் பொருள்படுவதோர் சொல்) யாவையும் திறத்துளி யுணர்வ தோர் செம்மையுள்ளத்தாய். (அ : 558)

திறந்திறம் - 1. கூறு கூறாக. ஒவ்வொரு பகுதியாக. வயப்படை வருவிப்பாரைத் திறந்திறம் ஏவி. (கி : 629) திறந்திறம் முறையிற் றேரும் மையறு மரபின் வந்த அமைச்சரை. (யுத் : 901)

2. கூட்டங் கூட்டமாக. திறந் திறமாக நின்ற கவிப் பெருங் கடலை. (யுத் : 1656)

திறப் பெய்த - பிளவுபட. திறப் பெய்த வீழ்ந்தான். (யுத் : 1414)

திறம் - 1. மேன்மை. திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை. (பா : 284)

2. வகை. திறத்தின் வந்த தீதெலாம் அறுத்த உன்னை. (ஆ:71)

3. தன்மை. உடலும் ஆம். கண்ட திறத்திது கைதவம் ஐய. (பா : 444) மிகுந்திறம். (யுத் : 1655) (சு : 553)

4. முறைமை. திறத்துளி உணர்வதோர் செம்மையுள்ளத்தாய். (அ : 558) திறந் திறம்பிய காமச் செருக்கு. (சு : 1138)
5. வலிமை. திறத்துழியன்றி வஞ்சித் தெய்துதல் சிறுமைத்தாகும். (ஆ : 766)
6. திறமை. சாமர்த்தியம். ஒரு திறத்துணர நோக்கி. (ஆ:285)
7. வகை. கூறுபாடு. இருதிறத் தார்க்குஞ் செய்த வரம்பிவர் இருவர். (ஆ : 285) சினவீரர்தம் திறமும். (யுத் : 3377)
8. கூட்டம். அரக்கரென்பார் திறந்தனை உலகின் நீக்கி. (யுத்:869)
9. நிலைமை. இத்திறம் எய்திய காலையில். (யுத் : 339)
10. காரணம். இருவர் நாலெணையும் விஞ்சத்தகுந்திறன் நினைந் தேன். (யுத் : 1655) (யுத் : 455) (யுத் : 1179)
11. செயல். உய்திறந் துணிந்தான் அறமுன்னுவான். (யுத்:3840)
12. இடம். யார் திறம் புகழும் வாகையும். (கி : 544)
13. நேர்மை. தேவி தன்னைத் திறத்துழியன்றி வஞ்சித் தெய்துதல் சிறுமைத்தாகும். (ஆ : 766)
14. கூறுபாடு. அறத்திறம். (அ : 558)
15. கற்பு. தேமொழி திறத்தினால். (அ : 558)
16. பொழுது. அத்திறத்தினில...... (யுத் : 2075)

திறம்பல் (திறம்புதல்) - 1. தவறான வழியிற் செல்லுதல், வழுவுதல். மறந்திறம்பல். அறந்திறம்பல் அருங்கடி மங்கையர் திறந்திறம்பல். (கி : 337)
2. மாறுபாடு. பிறழ்தல். தெருளுடை மனத்து மன்னன் ஏவலில் திறம்ப அஞ்சி (அ : 294) அறத்துறை திறம்பினர் அரக்கர். (கி : 544) நன்னெறி திறம்பலுண்டெனின். (கி : 544)
3. கடத்தல். நெறி திறம்பாத் தன் மெய்யை நிற்பதாக்கி இறந்தான். (அ : 1059)
4. தவறுதல். நிறம் திறம்பினும். (அ : 163) கொற்றவன் கூறிய நாள் திறம்பினும் நாள் திறம்பும் எனக் கேட்டிலிர். (கி : 593) திறம்பினீர் மெய். (கி : 596)

திறம்பு காலம் - (உலகம்) நிலை கெட்டு மாறுபடுங் காலம். அதாவது சர்வ சங்கார காலம். திறம்பு காலத்துள் யாவையுஞ் சிதை யினுஞ் சிதையா அறம். (சு : 118)

திறல் - 1. வெற்றி. திண்டிறல் வலியுந் தேசும் உளவெனல் சீரி தன்றால். (பா : 667)

2- வல்லமை. வல்லமைப் புகழ். தேவியை விடுதியாயின் திறலது தீருமன்றே. (யுத் : 1256)

3. திறன். மூவருந் திருத்திய திருத்தும் அத்திறலோன். (அ:37)

திறல் திரிதல் - வலிமை திரிதல். திறல் திரிந்து அயர்வு தோன்றத் துளங்கி யழுங்கினன். (யுத் : 3837)

திறன் - 1. வரிசை. முத்தங் கொல்லோ முழு நிலவின் முறியின் திறனே. (சு : 542)

2. வழி. திறத்திறன். மறத்திறன். (ஆ : 738)

3. தகுதி. பிறர் மனை எய்திய பெண்ணைப் பேணுதல் திறனல தென்றுயிர்க் கிறைவன் தீர்ந்தனன். (சு : 502)

4. சாமர்த்தியம். நடந்திறன் நவில்வுறும் நங்கை மார்முகம். (கி : 552)

5. வகை. பெருந்திறனு முண்டோ. (யுத் : 108)

6. காரணம். இருவர் நாணொலியும் விஞ்சைத் தகுந்திறன் நினைந்தேன். (யுத் : 1655)

7. இகலுந்திறன். போர். திறனல்லதொர் ஆருயிருஞ் சிதையான். (யுத் : 1741)

திறனலது - தகுதியன்று. (சு : 552)

திறனிலா வஞ்சர் - வலிமை இல்லாத வஞ்சகர். அமர் செயும் திறனிலா வஞ்சர் தீவினையினல். (பா : 348)

திறை - 1. கப்பம். தானவர்க் கிறைவன் திறைதந்தன. (யுத்:3574)

2. திறைப் பொருள் வென்றவனுக்குத் தோற்றவர் அளிப்பது. இமையோர் திறை தந்தன. (யுத் : 1716)

தின்மின் தின்மின் - தின்னுங்கள் தின்னுங்கள். கொன்று குறைத்துக் குடராரத் தின்மின் தின்மின் என்று தெழித்தார் சிலரெல்லாம். (சு : 482)

தின்மை - தீமை. நன்மையுந் தின்மையன்றே நாசம் வந்துற்றபோது. (ஆ : 762) [பா : பே]

தின்றிடுதல் - இம்சித்தல். (இலக்) சென்றுற நெருக்கித் தின்றிடுதல் செய்கிலமெனின். (யுத் : 67)

தின்று தின்று - 1. குடித்துக் குடித்து. பிரசமெல்லாந் தின்று தின்றுவகை கூரும். (சு : 1261)

2. மென்று மென்று. வாரித் தின்று தின்றுமிழும். (யுத்:1395) நெருப்பை மீளத் தின்று தின்றுமிழ்கின்ருரிற் றுயருக்கே சேக்கை யாளுன். (யுத் : 1610)

தின்று தீர்தல் - தின்றுவிடுதல். தின்று தீர்குதும். (யுத் : 211)

தின்னத் தின்ன - பலமுறை கடித்துக் கொள்ள. எயிற்றிகல் வாயி னைத் தின்னத் தின்ன எரிந்தன திக்கெலாம். (யுத் : 1051)

தின்னு முன்னம் - தின்னுவதற்கு முன்பு. கொன்றிவர் தின்னு முன்னம் கூறுதி தெரிய என்ருன். (யுத் : 939)

தின்னுதல் - 1. அழித்தல். ஊன் தினும் செரு. (ஆ : 411)

2. கடித்தல். எயிறு பொடிபடத் தின்று. (கி:328) (யுத்:313)

3. இம்சித்தல். (யுத் : 67)

4. குடித்தல். பிரச மெல்லாம் தின்றுதின் றுவகைகூரும். (சு : 1261)

5. மெல்லுதல். நெருப்பை மீளத் தின்று தின்றுமிழ்கின்ருரில். (யுத் : 1610)

6. உண்ணுதல். காய்சின உழுவை தின்னிய வந்த கலையிளம் பிணையெனக் கரைந்தாள். (சு : 427) தின்பென். (யுத் : 255) கொன்று தின்றிடுமின். (யுத் : 313) தின்னப் போதுமோ. (யுத் : 3297)

7. ஒளி மழுங்கச் செய்தல். மின்னைக் கொல்லும் வெயில் தின் எயிற்ருல். (யுத் : 226)

தினகரன் - சூரியன். திமிரம தறவரு தினகரன். (பா : 305) (யுத் : 3420)

தினம் - நாள். இத்தினம் இருத்தி என்ருன். (யுத் : 4112)

தினவு - அரிப்பு. ஊன் தினும் செருப் பெருத் தினவுறு சிகரத் தோளினுன். (ஆ : 411) தினவு தீர்வுறச் சொறிந்தனர் என விருந்து ஐயன் தாங்கினுன். (சு : 893) (பா : 1366)

தினவுறு தோள்- தினவு மிகுந்த தோள். மொய்பொரு தினவுறு முழவுத் தோளினுன். (பா : 179) செற்ருேடிய திரள் தோளுறு தினவும் சிறிதுடையேன். (பா : 1366)

தினவு தீர்வுறுதல் - தினவு தீர்த்துக் கொள்ளுதல். செறிந்தன மயிர்ப்புறம் தினவு தீர்வுறச் சொறிந்தனர் என இருந்து. (சு : 893) இந்துவா லியாக்கை சொறிந்து தீர்வுறு தினவினர். (யுத் : 3267)

தினை - 1. தினைப் பயிர்.
2. ஒரு சிறிய அளவு. நெடு வேலைத் தினையின் மாத்திரைத் துணிபட வரன் முறை சிந்தினன். (யுத் : 1551)

தினைப் பொழுது - தினையளவு காலம். ஆந்தினைப் பொழுதினி லகறியால். (யுத் : 363)

தீ

தீ - 1. தீமை. தீக்கொண்ட வஞ்சன். (யுத் : 287) தீயடங்கிய சிந்தையாள். (அ : 128)
2. கொடுமை. தீயேறிகல் அறியேறென. (ஆ : 468) தீவிடத் தரவம். (ஆ : 877)
3. நெருப்பு. என்று தீயினை எய்தி. (யுத் : 4159)

தீ ஆளர் - தீயை யுடையவர். வேள்வித் தீயாளர். (கி : 638

தீக் கடைதல் - (அரணிக் கட்டையைக் கொண்டு) கடைந்து நெருப்பை உண்டாக்கல். அரணிதன்னால் தீக் கடைந்தியற்றி. (ஆ : 1033) [பா : பே]

தீக்கலம் - தீயிடுதற்குரிய விறகு அடுக்கிய ஈமப் பள்ளி. தீக்கலந் திருத்திச் செல்வனை வெய்தினேற்றினர். (அ : 920)

தீக்கலாம் - கெட்ட கலகம். கொடிய மாறுபாடு. தீக்கலாம் கொண்ட தேவர் சிரிக்கலாம். (யுத் : 1365) [பா : பே]

தீக்கு - திக்கு தீக் கெலாங் கொண்ட தேவர். திக்கு என்பதன் நீட்டல் விகாரம். (யுத் : 1365)

தீக்கும் - தீத்து அழிக்கும். (யுத் : 552)

தீக்கெலாம் - திக்குகளை யெல்லாம். தீக்கு - திக்கு என்பதன் நீட்டல். தீக்கெலாம் கொண்ட தேவர். (யுத் : 1365)

தீக் கொடுத்து - தகனம் முதலிய ஈமக் கடன்களைச் செய்து. உற்ற தீக் கொடுத்துண்குறு நீருகுத்து. (யுத் : 3919)

தீக் கொண்ட வஞ்சன் - தீமையே இயல்பாகக் கொண்ட வஞ்சகனாகிய இந்திர சித்து. (யுத் : 2877)

தீக் கொளுத்தல் - தீப் பிடித்தல். எரியின்மையும் தீக் கொளுத்திய வுந் தெரியாமையால். (சு : 1187)

தீகுவ - தீந்து போவன. *திரிகுவ திகுவ கனல்வ காட்டலால்.* (பா : 615)

தீங்கவன் - தீங்கையுடையவன். இராவணன். *திங்கவன் சிரத்ந்தி மேலும் உயிரினும் சீரிதம்மா.* (யுத் : 884)

தீங்கவி - இனிய கவி. *திங்கவி செவிகளாரத் தேவரும் பருகச் செய்தான்.* (பா : 32)

தீங்கிலாக் கற்பு - பழுதற்ற கற்புநிலை. (கலா) குற்றமற்ற பதிவிரதா தருமம். அறக்கற்பு. (வை. மு) எத்திறத்தார்க்கும் தீங்கு புரிதலில்லாத அறக்கற்பு. (அண்) *திங்கிலாக் கற்பின் திருமடந்தை சேடியாம் பாங்கினுள்.* (யுத் : 1669)

தீங்கு - 1. தீக்குணம். *ஒருத்தரை நலனும் திங்கும் தேரினும் உயிரினேம்பும் கருத்தினன்.* (யுத் : 436)
2. தீமை. *திங்கிழைப்பவர்கட் கெல்லாம் சீரியன்.* (யுத் . 2136)
3. குறை. *திங்கு சொல்லினை.* (யுத் : 114)

தீங்குறல் - துன்புறுதிருப்பாயாக. *நீ இனிச் சில்பகல் திங்குறல்.* (சு : 634)

தீச்சிகை - நெருப்பின் கொழுந்து. அக்கினிச் சுவாலை. *திச்சிகை சிவணும் சோதிச் செம்மணித்தூண்.* (யுத் : 791) *செய்ய கண் பொழி திச்சிகை.* (யுத் : 1569)

தீச் சுடர் - நெருப்புச் சுடர். பொறிகளின் தொகுதி. *தும்பி தொடர்ந்தயல் போன திச்சுடர் புண்டரிகத் தடமாமென வீழ்ந்து கரிந்தவே.* (சு : 1199)

தீச் செல்வன் - அக்கினி தேவன். *சினத்தினல் சுடுதியால் திச் செல்வா என்ருள்.* (யுத் : 4005)

தீச் செலவு - வெப்பமான பாலை நிலத்திற் செல்லுதல். *திச்செல வொழியவும் தடுக்கும் திண்பில வாய்ச்செலல் நன்று.* (கி : 843)

தீட்டரு மேனி மைந்தன் - எழுதுதற்கரிய வடிவழகு வாய்ந்த பரதன். *தீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவிற் பூட்டிய கையன்.* (அ : 1026)

தீட்டாத வேற்கண் - தீட்டப்படாத வேல் போன்றகண். *திட்டாத வேற்கட் சிறுதாய்.* (அ : 408)

தீட்டிய படிவம் - எழுதிய சித்திரப் பாவை. வரையப்பட்ட ஓவியம் *தீட்டிய படிவ மென்னத் தோற்றினன் திகைத்த நெஞ்சன்.* (யுத் : 3590)

தீட்டுதல் - 1. சொல்லுதல். *தெவ்வர் அம்பனைய சொல் தீட்டினுள் தனக்கு.* (அ : 460) (உ.வி) (சு : 552)
2. பொறித்தல். எழுதுதல். *மெய்ப்பேர் தீட்டியது.* (சு : 552)
3. விரைந்து நடத்துதல். *கவியின் வெள்ளமும் தென்புலக் கிழவனும் செய்கை தீட்டிட.* (யுத் : 1081)
4. சித்திரித்தல். *தீட்டரிய செய்கையது.* (சு : 552)
5. சிறப்பு ஓங்குதல். *தீட்டிய வாழ்வும்.* (சு : 1118)
6. கூர்மை பெறத் தீட்டுதல். தீட்டிய படை. (யுத் : 3209)

தீண்டருந் தீவினை - அணுகத் தகாத தீவினை. *தீண்டருந் தீவினை தீக்க.* (சு : 147)

தீண்டின்றி - தீண்டுதலுமில்லாமல். *அனையன் மேனி தீண்டின்றி மீண்ட தம்மா.* (யுத் : 2805) [பா : பே]

தீண்டுகிற்றிலன் - தொட்டானில்லை. தீண்டவில்லை. (ஆ : 905)

தீண்டுதல் - 1. பரிசித்தல். (வணங்குதல்) *செறிமலர்ச் சேவடி முடியிற்றீண்டினுன்.* (கி : 690)
2. படுதல். தொடுதல். *தீண்டில மீண்ட தம்மா.* (யுத் : 2805)

தீத்தல் - வெதும்பச் செய்தல். *தீத்த காமத்தெறு கதிர்த் தீயினுல்.* (கி : 37)

தீத்தலம் - ஈமப்பள்ளி. சிதை. (அ : 920) [பா : பே]

தீத்திரள் - நெருப்புப் பொறி. *தீத்திரள் செங்கண் சிந்த.* (பா : 566)

தீத் தொழில் - கொடுந் தொழில். *தீத் தொழிலியற்றுவர் என்ற தீயவர்.* (பா : 460) *தீத் தொழிலரக்கர்.* (யுத் : 401)

தீதர - தீயும்படி. *வடவை தீதர வினைதரு கடுவுடை விரிகொள் பாயலும்.* (பா : 202)

தீதிலாவாக உலகீன்ற தெய்வம் - தீங்குகள் யாவும் இல்லாதனவாய் ஒழிய இவ்வுலகினைப் படைத்தற்கு உதவிய தெய்வமாகிய திருமகள். (யுத் : 295)

தீ தின்மை - தீது இல்லாமை. *நம்பால் தீதின்மை செப்பி.* (யுத்:4122)

தீதல் - 1. கருகி வேதல். தீந்து போதல். (வை.மு) கரிகுவ தீகுவ கனல்வ. (பா : 615) தீண்டரும் தீவினை தீக்கத் தீந்து போய் மாண்டற வுலர்ந்தது. (சு : 147)

2. அழிதல். கண்டவர் நாட்டந்தீய உலகை நடுக்குவான். (ஆ : 315) உள்ளந் தீவர். (யுத் : 2145)

3. நெருப்புண்ணுதல். தீந்தவா கண்டும். (யுத் : 529)

4. உருகுதல். தீயில் வீழ்ந்து தீ மெழுகில் தேம்பினர். (அ:1156)

தீதிலர் - நீங்கின்றி உளரோ. தீதிலர் எந்தை என்னையர். (அ:834)

தீது - 1. குற்றங்கள். தீதற முயலின் ஐய சிந்தை நோய் தீரும் என்றான். (பா : 209) தீதுதீர் முனிவர். (சு : 462)

2. பாவம். தீமை. தீ தென்றுள்ளவை யாவையுஞ் செய்து எமைக் கோதென் றுண்டிலள். (பா : 397)

3. மரணம். தீதிலன் எங்கோன். (சு : 566)

4. ஐம்பொறி. தீதவித் தமையச் செய்த செய்தவச் செல்வம் நன்றே. (கி : 64)

5. குறைவானது. சிறு தொழில் முடித்தகறல் தீதெனல் தெரிந்தான். (சு : 691)

6. கெடுதல்கள். தீதறும் பெருஞ் சாகைகள் தழைக்கின்ற செயலால். (கி : 164)

7. துன்பங்கள். அவர் தீது தீர்ப்பது என் சிந்தைக் கருத்தரோ. (கி : 339)

8. தீங்கு. தீதிலர். (அ : 834) தீதில் வரவாக திரு நின்வரவு. (ஆ : 262)

தீந்துக - கரிந்து நீருய்ப் போம்படி. சீறி இவ்வுலக மூன்றுந் தீந்துகச் சினவா யம்பால் நூறுவென். (சு : 569)

தீந்தேற - கரிந்து போம்படி. உலகனைத்தும் கடலோடும் மலையோடும் தீந்தேறச் சுடுகிற்கும் படைக்கலங்கள். (பா : 748)

தீந்தேன் - நல்ல வாசனை எண்ணெய். விஞ்சை நாகமும் சுரந்த தீந்தேன். (ஆ : 573)

தீநிகர் சீற்றம் - நெருப்பை ஒத்த பெருங் கோபம். திருகு வெஞ்சினத் தீநிகர் சீற்றமும். (யுத் : 3152)

தீ நிகர் துன்பம் - நெருப்பினை ஒத்த துயரம். மாதா முதலோர்க்குப் புண்மேல் வைத்த தீநிகர் துன்பம் புகுவித்தேன். (யுத் : 2604)

தீநிகர் தொழிலாடைத் திரை - தீயை ஒத்து விளங்கும் சித்திர வேலைப்பாடமைந்த திரைச் சீலை. *குயிலினம் வதிகானம் தீநிகர் தொழிலாடைத் திரை பொருவன பாராய்.* (அ : 707)

தீநிறத்து அந்தி - தீப் போலும் செந்நிறத்தைக் கொண்ட அந்திக் காலம். *தீ நிறத்து அந்தி வந்திறுத்தது கறுத்த தண்டமே.* (யுத் : 462)

தீப் பொதி படி - அனலின் தன்மை நிறைந்த இடம். தீயின் வெப்பத்தைத் தம்மகத்தே கொண்டு படிந்து கிடக்கின்ற. *தீப் பொதி படியுடைப் பரலுடைப் பாலை.* (அ : 1087)

தீப சாலம் - விளக்குகளின் கூட்டம்.

தீபம் - விளக்குகள். *தெய்வமேனி படைத்த சேயொளி போன் மழுங்கின தீபமே.* (அ : 244) *தீபத்தின் எரிந்தெழ செங்கண்ணினர்.* (யுத் : 2325) (ஆ : 641) (சு : 1034) (யுத் : 615)

தீப மாலை - விளக்கு வரிசை. *பன்னுகோடி தீப மாலை......... பொன்னனார் எடுக்க.* (ஆ : 654)

தீம் - இனிமை. *கங்கைத் தீம் புனல் நாடன்.* (பா : 409)

தீம்புனல் உலகம் - இனிய கடல் சூழ்ந்த உலகம். (தீம்-புனலுக்கு இயற்கை யடைமொழி) *விண்ணில் தீம்புனல் உலகத்தில்.* (கி : 737)

தீ மருந்து - நெருப்பாகிய மருந்து. *பொங்குதீ மருந்தினால் வேது கொண்ட தென்ன மேனி வெந்து வெந்து.* (ஆ : 650)

தீ மாற்றம் - தீய சொற்கள். *இன்று தீ மாற்றம் சில விளம்பி வீடிப் போகாதே.* (ஆ : 347)

தீமைதிருத்தினர் - தீத் தொழிலின் முற்றினர். (கி:351) (பா : பே)

தீமை திருந்தினர் - தீய செயல்களைச் செய்தோர். (கி : 351)

தீமையோர் - தீத் தொழிலை இயற்கையாகவுடையவர். *வீவது முடிவென வீந்த தல்லது தேவரை வென்றவர் யாவர் தீமையோர்.* (யுத் : 82)

தீ மொய்த்த செம்மயிர் - தீ மொய்த்தாற் போன்றுள்ள செம்பட்டை மயிர். *தீ மொய்த்த அரக்கர்கள் செம்மயிரின் தாமத்தலை.* (யுத் : 2922)

தீய்க்கும் - தீய்த்துவிடும். செல்லுந் திசையையும் தீய்க்கும். (யுத் : 1237)

தீய்த்தல் - 1. அழியச்செய்தல். எரித்தழித்தல். தீய்க்கும். (யுத்:1217) 2. சுடுதல். மனத்தையும் நெருப்பில் தீய்க்குமால். (ஆ : 686)

தீய்தல் - கருகுதல். இந்தன செவிகள். (சு : 444) ஊழியுந்தீயும். (சு : 453) [பா : பே] தீய்ந்திலாப் பூவிலை. (சு : 573) சேறு தீய்ந்தன. (யுத் : 556)

தீய்ந்துறும் - தீய்ந்து போயிருக்கும். உலகமோ ரேழும் ஏழும் தீய்ந்துறும். (யுத் : 2649)

தீய கான் நெறி - கொடிய காட்டுவழி. தீய கானெறியினுய்த்தனன். (கி : 92)

தீய கானகம் - தீங்கு நிறைந்த காடு. தீய கானகம் திருவின் நீங்கி முன் போயினன். (அ : 910)

தீய சொல் - தீமை மிகுந்த சொல். தீ எரி செவியில் வைத்தனைய தீய சொல். (அ : 838)

தீயடங்கிய சிந்தையாள் - தீமை நிறைந்த சிந்தையுடையவள். கைகேசி. நெடுங் கொடும்பழி கொண்டு அரும் புகழ் சிந்தும் அத் தீயடங்கிய சிந்தையாள். (அ : 238)

தீய நிமித்தம் - கொடிய நிமித்தம். (பின்னே நிகழும் பயனை முன்னே அறிவிக்கும் குறி) இவ்வயின் உளவாம் தீய நிமித்தம். (ஆ:436)

தீய மந்தரை - கொடியளாகிய கூனி. தீய மந்தரை இவ்வுரை செப்பலும். (அ : 174)

தீயமைத்தல் - அக்கினியை அமைத்தல். இளையவன்தனை அழைத்திடுதி தீயென வளையொலி முன்கையாள் வாயிற் கூறினள். (யுத் : 3998)

தீயவள் - கொடியவள். தந் நேரில்லாத் தீயவள். (அ : 215)

தீயர் - தீக் குணமுள்ளவர். தீயரேயெனினும் உன்னோடுற்றவர் எனக்கு முற்றார். (கி : 105) தீயரன்றியுந் தீமையுஞ் செய்வரால். (சு ; 1196)

தீயவன் - தீக்குணமுள்ளவன். இந்திரசித்து. தீயவன் தன் மேலுள்ள பயத்தினுற் கலக்கந்தீரா. (யுத் : 2426)

தீய வெஞ்சொல் - மிகக் கொடிய சொல். தீய வெஞ்சொல் செவி சுடத்தேம்புவாள். (அ : 515)

தீயவை - தீவினை. குறையுந் தீயவை தூயவை குறைவில. (அ: 719)

தீயள் - தீயவள். தீயளென்று நீ துறந்த என் தெய்வமும் மகனும் தாயுந் தந்தையுமாம் வரந்தருக. (யுத் : 4049)

தீயன - கொடிய விலங்குகள். தீயன அவை யாவும் திசை திசை செல நூறி. (அ : 682)

தீயாற்றுதல் - சினத்தைத் தணித்தல். சிந்தையினின்று தேற்றுதல். தீயாற்றுகிலார். (அ : 439)

தீயிடைக் குளித்தல் - நெருப்பிலே உயிரை விடுதல். தீயிடைக் குளித்த அத் தெய்வக் கற்பினாள். (யுத் : 93)

தீயிடை நடத்தல் - நெருப்பிலே நடத்தல். தீயிடை நடப்பான் போலச் செறிபுனற்கிறைவன் சென்றான். (யுத் : 599)

தீயிடை நெய்வார்த்தல் - நெருப்பிலே நெய்யை வார்த்தல். தீயிடை நெய்வார்த்தன்ன வெகுளியான். (யுத் : 2073)

தீயிற்றூயவள் - தீப் போன்ற தூயவளாகிய சீதை. தீர்வருங் கேடருங் கற்பினாள் தீயிற்றூயவள். (சு : 1135)

தீயினம் - நெருப்புத் தொகுதிகள். (யுத் : 2378)

தீயினாவுதி ஒக்குதல் - ஓமத்தீயில் ஆகுதிகளைக் கொடுத்தல். தீயினாவுதி செங்கையின் ஒக்கினான். (அ : 1071)

தீயினாற் செய்த கண் - தீயினாற் செய்யப்பட்டாற் போன்ற கண்கள். தீயினாற் செய்த கண்ணுடையானெழுஞ் சிகையினால் திசை தீய. (யுத் : 1571)

தீயினும் எரியும் நெஞ்சு - தீயினும் மிக்கெரிகின்ற நெஞ்சு. தீயினும் எரியும் நெஞ்சன் தெரியலன் தெரிய நோக்கி. (யுத்:2660)

தீயினு முதிர்வுறச் சிவந்த கண் - தீயைக் காட்டிலும் விஞ்சச் செந்தீ நிறமாய்விட்ட கண். தீயினுமுதிர்வுறச் சிவந்த கண்ணினான். (யுத் : 1493)

தீயினை நயப்புறுதல் - நெருப்பை விரும்பிக் கொள்ளுதல். தீயினை நயப்புறுதல் செய்வினை தெரிந்தாய். (யுத் : 60)

தீயுண்ல் - நெருப்பு எரித்தல். ஓவியம் அமைந்த நகர் தீயுண உணர்ந்தாய். (யுத் : 61)

தீயுமிழ்தல் - நெருப்பைக் கக்குதல். *செஞ்சரம் என்பன தியுமிழ் கின்றன செல்லாவோ.* (அ : 1006)

தீயுமிழ் நெடுங்கணை - ஆக்கினேயாஸ்திரம். நெருப்பினைக் கக்குகின்ற பெரிய அம்புகள். *ஆயிர ஆயிர கோடியாய் வருந்தியுமிழ் நெடுங்கணை மனத்திற் செல்வன.* (யுத் : 1795)

தீயெரி - தீக்கும் எரி. அக்கினி ஜ்வாலை. *தி யெரியனைய திய சொல்.* (அ : 838)

தீயெழ நோக்குதல் - நெருப்பு எழும்படி நோக்குதல், *சீற்ற மின்றியும் தீயெழ நோக்குவான்.* (அ : 652)

தீயே யெனலாய பசிப்பிணி - அக்கினியே போன்று உடம்பினை எரிக் கின்றது என்று சொல்லப்படுவதாகிய பசியாகிய நோய். *தியே எனலாய பசிப்பிணி தீர்த்தல் செய்வாய்.* (சு : 68)

தீயை ஓம்புதல் - தீயை மேன்மேலுந் தோன்றச் செய்தல். அக்கினி காரியஞ் செய்தல். *செறிவுறு செம்மைய தியை ஓம்புவ.* (யுத்:579)

தீயொடு காலையும் பிழிந்து சாறு கொள் பெற்றியான் - நெருப்புடனே காற்றையும் பிழிந்து சாறு எடுக்கவல்ல வலிமையுடையவன். கும்பகருணன். (யுத் : 1337)

தீயோன் - கொடியவன். (இரணியன்) (யுத் : 171)

தீர் - வீடு. *குலமகள் மேல் உடைய காதல் தீர் ஆசை பழி என்றேன்.* (யுத் : 3888)

தீர்க்ககிற்பார் - நீக்குதற் குரியார். விலக்க வல்லவர்.(கிற்பு-வலிமை) *விதியை யார் தீர்க்க கிற்பார்.* (யுத் : 1389)

தீர்க்க பாதன் - வானரப் படைத்தலைவன். *தீர்க்க பாதனும் வின தனும் சரபனும்.* (கி : 722)

தீர்க்கல் - மாற்றுதல். (யுத் : 3995)

தீர்க்கலாந்தகையது - மாற்றலாம் படியானவகையை. *அது தீர்க்கலாந் தகையது தெய்வந்தேறுமோ.* (யுத் : 3995)

தீர்த்த சங்கமம் - தீர்த்தங்களின் கூட்டுறவு. *தாம கூடத் தீர்த்த... சங்கம ஏமகூடம்.* (கி : 828)

தீர்த்தம் - புண்ணிய நீர்த்துறை. *அயனுக்கும் அரும் பெறல் தீர்த்தம்.* (அ : 720)

தீர்த்தல் - 1. போக்குதல். நீக்குதல். இவன் விசயம் தீர்த்தானென உவந்தாடினர். (யுத் : 1140) (ஆ : 761) விதியையார் தீர்க்க நிற்பார். (யுத் : 1399)
2. தீரச்செய்தல். நூழில் தீர்த்தான். (யுத் : 2520)
3. முறித்தல். வெளில் தீர்த்த வரை புரையும் மிடலரக்கர். (யுத் : 3568)
4. பிளவுபடல். நாரில் தீர்த்த நாகபுரம் புக்கிழிந்த பகழிவழி நதியினேடி. (யுத் : 3568)
5. ஒழித்தல். ஒரு திருந்திழை துயரம் நான் தீர்க்ககிற்றிலேன். (கி : 217) நின்முகம் நோக்கிக் கூற்றும் வந்ததேயன்றே அஞ்சாது ஆரதன் வலிமை தீர்ப்பார். (கி : 378)

தீர்த்தன் - தூய்மையானவன். புண்ணிய தீர்த்தம் போல்பவன். திருமால். இராமன். தீர்த்தனென்றறிந்ததோ அவர் தம் சிந்தையே. (பா : 295) (யுத் : 3763)

தீர்தல் - 1. துறத்தல். பற்றுவிட்டு நீங்கல். விட்டொழித்தல். யாதுந்தீர்ந்தெமைக் கைதுடைத் தேகவுங் கடவையோ. (பா : 452) செயிரேது மிலாரொடு தீருதியோ. (கி : 500)
2. கெடுதல். தீர்வில் அன்பால். (சு : 57)
3. நீங்குதல். கடத்தல். தீர்விலேன் இது. (சு : 631) செம்மலும் இளைய கோவும் சிறிதிடந் தீர்ந்த பின்னர். (பா : 433) தீர்வினை சென்று நின்ற சீற்றத்தான். (கி: 632) ஒருவர் பால் ஒருவர் சென்று வேண்டுவரேல் அவர் சிறுமையிற்றீரார். (யுத் : 543) திரு தீர்ந்தனளாம். (அ : 830)
4. உயிர் நீங்குதல். இத்துணை பேரையும் இராமன் வெஞ்சரம் சித்திரவதை செயக் கண்டு தீர்தியோ. (யுத் : 381) தொல்லை நாள் செருவில் தீர்ந்தான். (யுத் : 2515)
5. இழத்தல். உணர்வு தேட உரைத்திலன் உயிருந் தீர்ந்தான். (ஆ : 1026)
6. அழிதல் செருக்கினில் தீர்தும் என்பார் தம்பினுர் செருக்க ரென்னு. (ஆ : 761) [பா : பே] தீரான். (யுத் : 520)
7. நிறைவேறுதல். உயிர் துறந்து தீர்திர். (யுத் : 1680) வாய்மொழி இன்று தீர்ந்ததோ. (யுத் : 89)
8. ஒழிதல். இன்றுலப்பினும் நாளையே உலப்பினும் நினக்கன்றிப் பிறர்க்கென்றுந் தீரான். (யுத் : 520) இறந்து தீர்தும். (கி : 8)

9. முற்றுதல். தீர்ந்த அருந்தவ முடையரம்மா அரக்கர் என்ற கத்துட் கொண்டான். (யுத் : 445) வென்று தீர்க. (யுத் : 1530)
10. தணிதல். சீற்றந் தீர்ந்தான். (ஆ : 1025)
11. விலகுதல். அளவில் செல்வந் தொடர்ந்துநும் பணியிற் றீர்ந்தால் அதுவும் நுந் தொழிலேயன்றே. (கி : 621)
12. நீத்தல். பள்ளி தீர்ந்திருந்தான் தன்னை. (யுத் : 439)
13 விலகிப் பிழைத்தல். சினத்துளா ரியாவர் தீர்ந்தார். (யுத் : 1607)
14. அடங்குதல். வானோ ரந்தரத்தொலியிற் றீர்ந்த. (யுத் : 4276)
15. சாதல். நின் இன்னலின் இருக்கை நோக்கி தீர்கிலேன். (அ : 661)
16. தவிர்த்தல். அதனைத் தீர்ப்பான் போக்கு எனக்கு அடுத்த. (கி : 1008)
17. செய்து முடித்தல். இன்னும் என்செய்வித்துத் தீர்திர் அம்மா. (யுத் : 1592)

தீர்திர் - தீர்வீரோ. செய்து முடிப்பீரோ. (அண்) இன்றும் என் செய்வித்துத் தீர்திர் அம்மா. (யுத் : 1592)

தீர்ந்த - நீங்கப் பெற்றன. வாய் நிறந் தீர்ந்தவே. (யுத் : 992)

தீர்ந்த தவம் - முற்றிய தவம். (யுத் : 445)

தீர்ந்தார் - உயிர் தப்பியவர். என் சினத்துளார் யாவர் தீர்ந்தார். (யுத் : 1607)

தீர்ந்திலேன் - பிழைத்தேன். யானும் மாயையில் தீர்ந்திலேனே. (யுத் : 2239)

தீர்ந்தின்று - தீராது. விடாது. இவ்வபின் நின்னை நீக்கி இன்னுயிர் தீர்ந்தின்றேகி. (அ : 550)

தீர்ப்பது - அறவே நீக்குவது. ஏதிலாரையும் எளிய ரென்றுரையும் தீது தீர்ப்பது என் சிந்தைக் கருத்தரோ. (கி : 339)

தீர்ப்பித்தீர் - போக்குவித்தீர். போக்கிவிட்டீர். அமரரை அச்சம் தீர்ப்பித்தீர். (யுத் : 1592)

தீர்வது - நீங்குவது. தீர்வது பொருளோ துன்பம். (யுத் : 2891)

தீர்வருமின்னல் - போக்க முடியாத துன்பம். நீக்க முடியாத தீங்குகள். எந்நாள் அவன் என்னை இத் தீர்வரும் இன்னல் செய்தான் அந்நாள் முதல் யானும் அயர்த்தில னுகும். (ஆ : 711) தீர்வரு மின்னல் தம்மைச் செய்யினும் செய்ய சிந்தைப் பேரருளாளர் தத்தஞ் செய்கையிற் பிழைப்பதுண்டோ. (யுத்:434)

தீர்விலேன் - நீங்கேன். தீர்விலேன் இது ஒரு பகலும். (சு : 631)

தீர்வினை சேர்தல் - நீங்குதற் குரிய செயல் சேர்தல். தெள்ளிய தெரிக்குந் தெவ்வர் தீர்வினை சேர்தலோடும்... வேறுபட்டார். (யுத் : 721)

தீர்வு - 1. பரிகாரம். நோய்தந்தவனே நுவல் தீர்வும் எனு. (யுத் : 243)

2. நீங்குதல். கெடுதல். தீர்விலன்பு. (அ : 217) (சு : 54) தீர்வரும் பிறவி தீர்தி. (கி : 372)

தீர - 1. முழுமையும். ஆர ஆயிர யோசனை ஆழமும் தீர நீண்டு பரந்த திமிங்கிலம். (யுத் : 664)

2. வீரிய முள்ள. தீரத் தொழில். (யுத் : 1607)

3. முடிவாக: தீரும்படி. தீரச் செய்வினை முனிவரும் தேவரும் செப்பும் பேர். (யுத் : 159)

தீரக் கொடியார் - முற்றும் வெய்யவர். அரக்கர். (யுத் : 1759)

தீரம் - குவியல். கனக தீரமும். (யுத் : 333)

தீரர் - தைரிய முடையவர். துணிவுடையவர். தீர ரென்றமரர் பேசிச் சிந்தினர் தெய்வப் பொற்பூ. (யுத் : 3103) (யுத் : 46)

தீரவாழ்க்கை - தைரியத்தோடு கூடிய வாழ்வு. வெறிப்போர்த் தீர வாழ்க்கையிற் றெவ்வரைச் செருவிடைப் பறித்த வீர வாழ்க்கையீர். (ஆ : 514)

தீரவினையவன் - அஞ்சாத வீரச்செயலையுடையவன். அங்கதன். (சு : 525)

தீராக்காதலன் - நீங்காத காதலையுடையவன். (அ : 662)

தீராப்பாதகம் - நீங்காத பாதகம். உன்பாவிக்கும்பி வயிற்றினிடை வைகித் தோன்றுந் தீராப் பாதகம் அற்று என் துயர் தீர. (அ:878)

தீராமாயம் - நீங்காத மாயம். தெய்வ வெம்படையும் தீரா மாயமும் வல்ல மாயோன். (யுத் : 867)

தீராவினையவன் - நீங்காத முயற்சியையுடையவன். அங்கதன். (அ : 525) [பா : பே]

தீவந்தோன்றிய முழைத்துணை - தீபங்காணப்படுகின்ற இரண்டு குகை. *திவந் தோன்றிய முழைத்துணையெனத் தெறகண்ணர்.* (யுத் : 3229)

தீவம் - விளக்கு. *தீவ மெனச் சில வாளி செலுத்த.* (யுத் : 2819) (யுத் : 3229)

தீவர் - அழிவர். (உ.வி) கொதிப்பர். *இளைய கோவை நோக்குவர் உள்ளந்திவர்.* (யுத் : 2145)

தீவிகை - விளக்கு. *பொங்கழல் சிகை இழந்தன திவிகை.* (அ:818)

தீவிடம் - கொடிய நஞ்சு. *குழைத்ததோ ரமுதுடைக் கோர நீக்கி வேறழைத்த திவிடத்தினை அருந்தலாகுமோ.* (அ:25) (யுத்:2014)

தீவிய - இனிமையான. *திவிய களிய வாகிச் செருக்கிய காமச் செவ்வி.* (கி : 478) *திவிய கனியதாகி.* (யுத் : 4240) *திவிய கன்னியாகி.* (யுத் : 4240) [பா : பே]

தீவிய களிய - இனிமையும் களிப்பு முடையன. (கி : 478)

தீவிய கன்னியாகி - இனிய கன்னித் தன்மையுடையதாகி. (அண்) (யுத் : 4240) [பா : பே]

தீவிய கனி - இனிய கனி. (யுத் : 4240)

தீவிழி - தீப் புறப்பட விழிக்குங் கண். நெருப்புப் பொறி புறப்பட விழிப்பது; கண். *போயினன் திவிழியான்.* (யுத் : 1672) *சுடர்க் கொழும்புகை திவிழி தூண்டிட.* (யுத் : 3149)

தீவிளக்கம் - சுவாலையுடைய (நெய்) விளக்கு. *திணிசுடர் நெய்யுடைத் திவிளக்கமோ.* (பா : 143)

தீவிளித்திடு தீபம் - நெருப்பின் ஒளியினால் அழைக்கும் கலங்கரை விளக்கம். *பேய் களிப்ப நடிப்பன பெட்புறும் தி விளித்திடு திபம் நிகர்த்தவால்.* (யுத் : 3992) *திவிளிப்புறு திபம்.* (யுத் : 3392) [பா : பே]

தீவினை - பாவம். (சு : 361)

தீவினை ஐந்து - பஞ்ச மகா பாதகம். அவையாவன கொலை, களவு கள்ளுண்டல் பொய்ம் மொழிதல் குரு நிந்தை என்பன. *திவினை ஐந்தின் ஒன்றும்.* (கி : 654)

தீவினை சலந்துடித்து - தீவினை வஞ்சகமாகத் துடித்து. (அண்) (சு : 361)

தீவினைச் சலம் - பாவத்தின் கொடுமை. (வை.மு) நான் செய் தீவினைச் சலந் துடித் தின்னமுந் தருவதுண்மையேயோ. (சு : 361) [பா : பே]

தீவினை செய்த வெவ்விய தீவினை - பாவங்கள் பண்ணிய கொடிய பாவச் செயல். (அரக்கர் போல்வார் செய்த தீவினைகள்) விரிந்திடு தீவினை செய்த வெவ்விய தீவினையாலும். (பா : 740)

தீவினை தீத்தல் - பாவச் செயல் சுடுதல். தீண்டருந் தீவினை தீக்க இந்துபோய் மாண்டற வுலர்ந்தது. (சு : 147)

தீவினை தீய நோற்றல் - பாவங்கள் ஒழியும்படி தவஞ் செய்தல். தீவினை தீய நோற்றுத் தேவரிற் பெற்றதென்றுள். (ஆ : 265)

தீவினை தெறும் தீ செய்ய தேவு - தீவினைகளையெல்லாம் பொடி செய்கின்ற தரும தேவதை. செய்ய தீவினை தெறும் தேவு நீ. (கி : 176) [பா : பே]

தீவினைப் பயன் - தீவினையின் பயன். அனையான் வகுத்தமைந்த வெந்தீவினைப் பயனெனத்தன அரக்கன் சொரி விசிகம். (யுத் : 3719)

தீவீழ் விறகு - நெருப்பினுல் விழுங்கப்பட்டு விழுகின்ற விறகு. வெந்துயர் வீங்கித் தீவீழ் விறகென வெந்து வீழ்வாள். (யுத்:1615)

தீவு - கடலாற் சூழப்பட்ட நிலப்பரப்பு. தீவு ஓரேழினும். (யுத்:3736)

தீற்றுதல் - 1. பூசுதல். தடவுதல். மண்ணெறிந்தவை புனலிற் றீற்றியே. (அ : 789)
2. ஊட்டுதல். தெரிவையர் தீற்றும் அகருதூபம். (சு : 124)
3. சொரிதல். கிழியொடு நெய் தீற்றி. (யுத் : 216)

தீன் - தீனி. உணவு. (தின்னப்படுவது. தீனி என்பது விகுதி கெட்டு வந்தது) யானுணுதன இங்கிவை என்னவே தீனுணுதன. (யுத் : 647)

து

துக்கம் - துன்பம். துக்கம் இத்தொடர்ச்சியென்று துறப்பரால் துணிவு பூண்டோர். (யுத் : 1361)

துகடவ - துகள்தவ. குற்றம் நீங்கும்படி. துகடவத் தொழில் செய் துறை கம்மியர் சகடம். (யுத் : 2098)

துகள் - 1. குற்றம். துகளறத் துணிந்து நோக்கின். (கி : 389)
2. தூசி. துங்கமுலையில் துகளுறச் சிலர் துயின்றார். (அ : 547)
3. மாயை. (இலக்) குற்றத்திற் கிடமான மாயை. துகளில் விஞ்சையர். (கி : 452)
4. பழுது துகள் தவத்தொழில் செய்துறைக் கம்மியர். (யுத் : 2098)
5. அணு. (அண்) சிறு பொடி. (வை. மு) உன்னையோர் துகட்ட னையு முன்னார். (ஆ : 613)

துகள்படுத்தல் - தூளாக்குதல். கவசம் துகள்படுக்கும். (யுத் : 3359)

துகள் படுதல் - தூசி படிதல். வனம் துகள் பட்டன. (ஆ : 42)

துகளெழுதல் - தூசி கிளம்புதல். எழுந்தது துகள். (அ : 1086)

துகில் - 1. ஆடைகள். நல்லாடை. தோலுள துகில் போலும். (அ : 673) தேர்பரி வாய்ந்த நற்றுகிலொடு வரிசைக்கேற்பன ஈந்தனன். (பா : 276) நீரிடுதுகிலர். (சு : 745)
2. வெள்ளையாடை. வெண்பட்டு. வான்பாற் கடல் கடுப்ப நீண்ட துகிற் கொடி. (பா : 567)

துகில் படுத்து - துணிக்கு சமமாக்கி. வன்றோல் துகிற்படுத்துரிக் கும் (யுத் : 268)

துகில் புரை நுரைநீர் - வெள்ளாடை போலும் நுரையினையுடைய் நீர். நகு மலர் நிறை மாலைக் கொம்புகள் நதிதோறும் துகில் புரை நுரை நீரிற் றோய்வன. (ஆ : 700)

துகில் போலுந் தோல் - நல்லாடை போலும் தோல் உடைகள். தோலுள துகில் போலும். (அ : 673)

துகிற்கலை - 1. துகிலாகிய ஆடை. முன்புனை துகிற்கலை சோர நெஞ்சமுங்கினார் சில நங்கைமார். (அ : 237)
2. மெல்லிய ஆடை. (உ. வி)

துகிற் கொடி - கொடிச் சீலைகள். நீண்ட துகிற்கொடி மிதிலை மாடத் தும்பரில் துவன்றி நின்ற முகிற் குலந்தடவுந்தோறும் நனைவன. (பா : 567)

துகிற்படுத்துரித்தல் - துணி கிழிக்குமாறு போல உரித்தல். வன் றோல் துகிற்படுத் துரிக்கும். (யுத் : 268)

துகைத்தல் - 1. மிதித்துழக்கல். அழுந்த மிதித்தல். அரக்கனை ஆரியச் சூழியானை துகைத்தது சோபனம். (யுத் : 3937) ஓடி உலகெலாந் துகைத்தான் துள்ளி. (யுத் : 258)

2. **தாக்கிவருத்தல்.** மரா மரங் கொடு துகைத்துளான். (யுத்:2023)

துங்கம் - 1. உயர்ச்சி. துங்கவன்றோள். (யுத் : 947) (யுத்:1986)

2. **பரிசுத்தம்.** துங்கமுலை. (அ : 547)

3. **பெருமை.** பரதனே துங்கமா முடி சூடுகின்றான். (அ : 299)

4. **மேடு. பூரிப்பு.** (உ. வி) (அ : 547) (யுத் :)

துஞ்சல் (துஞ்சுதல்) - 1. தங்குதல்.

2. **இறத்தல். உயிரை விடுதல்.** கொழுநன் துஞ்சும் எனவும். (அ : 339) துஞ்சினிரோ. (யுத் : 1625) துஞ்சினனை. (அ : 601)

3. **நித்திரை செய்தல்.** நயனியர் நவ்வியிற்றுஞ்ச. (அ : 1076) துஞ்சலில் நயனத்தைய. (யுத் : 450)

4. **மனவலிமை யின்றிச் சோர்தல்.** மாயக் கைகயார் துஞ்சு வரினி எனத் தோளைக் கொட்டுமால். (யுத் : 4172)

துஞ்சலில் நயனத்தையன் - இலக்குவன். துஞ்சலில் நயனத்தைய சூட்டுதி மகுடம் என்றான். (யுத் : 450)

துஞ்சுற்றனனே - இறந்து விட்டானே. நஞ்சிற்கொடியான் நடலைத் தொழிலால் துஞ்சுற்றனனே. (ஆ : 1102)

துடக்குதல் - இணைத்தல். மின் துடியோடு துடக்கிய தாரைய. (யுத் : 1699) [பா : பே]

துடி - 1. உடுக்கை. வன் துடி புரை இடை. (அ : 705)

2. **ஒரு வகைப் பறை.** கொட்டிய துடியினன். (அ : 1001) (யுத் : 3559)

3. **துடித்தல்.** துடிபுக் காயிடைத் தாமரை துறந்து குடி புக்காலென. (பா : 909)

4. **ஓர் இசைக் கருவி.** கரடிகை துடி வேய் கண்டை. (யுத் : 2397)

5. **போர்ப்பறை.** துடி எறி. (அ : 1005)

துடிக்கும் நெஞ்சினள் - துடி துடிக்கும் நெஞ்சினளாய். தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினள் ஊன்றிய வெகுளியாள். (அ : 137)

துடித்தல் - 1. நிறைந்து ததும்புதல். விடந்துடிக்கின்ற கண்டம். (யுத் : 2967)

2. நடுங்குதல். சடந்துடிக்கிலராய். (யுத் : 2967)

3. எடுத்தல். மேலே உயர்தல். விரித்தெழுதல். படந்துடிக்கின்ற நாகம். (யுத் : 2967)

4. துடித்தல். படபடத்தல். இடிந்துடிக்கின்ற துண்டே. (யுத் : 2967) இடந்துடியா நின்ருன். (யுத் : 1295)

5. உதிருதல். முரண் வெங்காலும் மென்றழை துடிப்புறச் சார்வுருது. (கி : 125)

6. மின்னுதல். (உ.வி) விடந்துடிக்கின்ற கண்டம். (யுத் : 2967)

7. சலித்தல். (உ.வி) படந்துடிக்கின்ற நாகம். (யுத் : 2967)

துடிப்பில - விரையாதே. என்தன் சோதனை நோக்கிச் செய்தி துடிப்பில என்ன சொன்ஞன். (யுத் : 3673)

துடிப்பு - 1. நாடிகளின் நடை. உயிர்ப்பிலன் துடிப்பு மில்லன். (அ : 592)

2. விரைவு. துடிப்பில. (யுத் : 3673)

3. துன்பம். பொருமையால் வரும் நடுக்கம். துடிப்பிலன். (யுத் : 218)

துடிபுக்கு - துடித்தல் கொண்டு. துடிபுக்காயிடைத் திருமகள் தாமரை துறந்து படி புக்கா லென. (பா : 902)

துடிபுரை இடை - உடுக்கை போன்ற இடை. உன்துடி புரை இடை மானத்துவள்வன. (அ : 705)

துடி மருங்குல் - உடுக்கை போன்ற இடை. பொலந்துடி மருங்குலாய் · (சு : 361)

துடியின் பாதக்குன்று - உடுக்கை போன்ற பாதங்களையுடைய யானை. (யுத் : 3459)

துடியன் - துடி யென்னும் பறையை யுடையவன். துடியன் நாயினன் தோற் செருப்பார்த்த பேரடியன். (அ : 646)

துடியெறி - போர்ப்பறை கொட்டுமின். (அ : 1005)

துடுப்பு - படகு செலுத்தற்குரிய கருவி. துடுப்பு வீசும் துவலைகள். (அ : 1048) துளிபடத் துழாவு திண் கோற்றுடுப் பிருகாலிற் ரேன்ற. (அ : 1052)

துடும்பல் - ததும்பல். ததும்பிக் கொந்தளித்தல். (கலா) பேரொலி. (வை.மு) துடும்பல் வேலை. (யுத் : 673)

துடை - தொடை யா மொரு நின் துடையிற் படுகிற்றும். (யுத்:1749)

துடைத்தல் - 1. ஒழித்தல். அழித்தல். பிறத்து யாவையும் காத்தவை துடைக்கும் திறத்து மூவர். (அ : 37) (யுத் : 139) அடல் துடைத்தும். (யுத் : 1157) திடல் துடைத்தான். (யுத் : 1157)
2. போக்குதல். சோக பங்கம் துடைப் பரிதால் என. (அ : 790)
3. எளிதே போக்குதல். இரு வினையும் துப்புறமும் நீர்த்த சுடர்த் திருவடியாற் றுடைத்தாய் நீ. (ஆ : 61)
4. தூர்த்தல். தசமுகன் சரமவை திசை சூழ் கடல் துடைத்தன. (யுத் : 1157)
5. பரவுதல். களத்தினின் றுயர் தரு பூழி உடல் துடைத்தன. (யுத் : 1157)
6. பூசித்துடைத்தல். உதிரமுந்துடைத்த தொண்புடவி. (யுத் : 1157)

துண்டத் தூண் - பிளந்த தூண். துண்டமாகிய கம்பம். துண்டத் தூணதனிற் றேன்றுங் கோளரி. (சு : 934)

துண்ட துண்டங் காணல் - சின்னபின்ன மாக்குதல். துண்டப் படையாற் சில துண்ட துண்டங்கள் கண்டான். (ஆ : 921)

துண்டம் - 1. மூக்கு. சிறையொடு துண்டஞ் செங்கண். (யுத்:2404)
2. பறவை மூக்கு. தோட்டிபோற் றேய்ந் தொளிர் துண்டத் தான் தனே. (ஆ : 182) (யுத் : 1638)
3. துண்டு. கண்டம். துண்டமாக்கினர் மூக்கு. (ஆ : 374) அற்றதுண்டங்கள் படப்படத் துணிந்தன அனந்தம். (யுத் : 1469)

துண்டமாக்குதல் - அறுத்தல். துண்டித்தல். துண்டமாக்கினர். (ஆ : 374)

துண்டவன் போழ் - துண்டுபட்ட வலிய பிளவுகள். உடலைத் துண்டவன் போழ்களிற் புரட்டினர் நிருதர். (யுத் : 1996)

துண்ட வெண்பிறை - துண்டமான வெண்பிறை. (யுத் : 3744)

துண்ட வெண்பிறைத்துணை - துண்டுபட்ட இரண்டு வெண்பிறைச் சந்திரர். (யுத் : 1784)

துண்ட வெண்பிறை நிலவு - துண்டமாகிய வெள்ளிய பிறைச் சந்திரனது நிலவு. (யுத் : 2471)

துண்ணெனல் - 1. திடுக்கிடல். நடுங்குதல். திரள்புயந் துளங்கத் துண்ணென. (அ : 448) எயினர் கோன் துண்ணென்றான் (அ : 1020)

2. அச்சக் குறிப்பு. (வை, மு) உறுமேறுந் துண்ணென வணையுங் காலிற் செல்வன. (யுத் : 3796)

துண்ணென்ற மனத்தினன் - திடுக்கிட்ட மனத்தினன். விண்டு நீங்கினர் உடலுகு பிறங்கல் வெண்ணீற்றைக் கண்டு துண்ணென்ற மனத்தினன். (பா : 518) [பா : பே]

துண்ணெனும் அவ்வுரை - அஞ்சித் திடுக்கிடுதற்குக் காரணமான அவ்வார்த்தை. துண்ணெனும் அவ்வுரை தொடர்ந்த தோகையும். (ஆ : 962)

துண்ணெனுஞ் சொல்லாள் - அஞ்சித் திடுக்கிடக்கூடிய சொல்லை யுடையவள். கைகேசி. துண்ணெனுஞ் சொல்லாள் சொல்லச் சுடர் முடி துறந்து மண்ணெனும் திருவை நீங்கி வழிக்கொளா முன்னம். (அ : 269)

துண்ணெனும் வினைத்தொழில் - திடுக்கிடும்படியான கொலைவினை. துண்ணெனும் வினைத்தொழில் தொடங்கியுளளேனும். (பா : 395)

துணங்கை - முடங்கிய இருகைகளையும் விலாப்புடைகளில் ஒற்றி அடித்துக் கொண்டு அசைந்தாடும் ஒருவகைக்கூத்து. அலகை தாணெறிந்தன கையெடுத் தாடின துணங்கை. (யுத் : 1427)

துணங்கைப் பறை - துணங்கைக் கூத்திலே அடிக்கும் பறை. குழு மலகை துணங்கைப் பறை துவைப்பப் பூழியணைமேற் றுயின்றனையோ போர்க்களத்தே. (யுத் : 1666)

துணங்கையாடுதல் - துணங்கைக் கூத்தாடுதல். கை யெடுத் தாடின துணங்கை. (யுத் : 1427)

துணர் - பூங்கொத்து. துணரீன்ற சாகைத் தன்கை கண்கள் புதைத்து. (பா : 1004) துணர்த்த தாரவன். (சு : 1132)

துணர்த்த தார்-பூங்கொத்துக்களாலாகிய மாலை. துணர்த்த தாரவன். (சு : 1132)

துணி - துண்டு. பிறவி வேரின் வன் றுணி கொழித்து. (கி : 905) துணியாம் வகை. (யுத் : 1843) துணியாகி. (யுத் : 1539)

துணிதல் - 1. தெளிதல். மன்னரின்றே வையம் வைகல் தான் தொன்மை யன்றெனத் துணியு நெஞ்சினுன். (அ : 933)
2. நிச்சயித்தல். உறவினைத் துணிகுவார். (கி : 92)
3. மனத் துணிவு. மகோதரன் துணிந்த நெஞ்சன். (யுத்:3199)
4. துணித்தல். துண்டு படுதல். அற்றுப் போதல். அண்ணல் தன் வடிக் கணை துணிப்ப. (யுத் : 1799) துணிந்ததென் வினைத் தொடர்பு. (பா : 322) (யுத் : 3682)
5. மனத்தில் உறுதி செய்தல். துன்னு தாரவன் துணை யெனக் கோடலே துணிந்தாய். (யுத் : 313) நன்று துணிந்தனை நீ. (யுத் : 1090)

துணிதிறன் - துணிந்து கூறிய கருத்து. தெளிந்து சொன்ன விஷயம். தூயவர் துணி திறன் நன்று. (யுத் : 395)

துணிந்தது - அழிந்தது. அற்றுப் போய் விட்டது. (பா : 322)

துணிந்தனர் - துணிபட்டார். சுடுசரத்தான் முன்பு துணிந்தார். (யுத் : 3778)

துணிந்தனன் - உடல் பிளவு பட்டான். (யுத் : 3682)

துணிபடத் துணிபட - முறியும்படி முறியும்படி. சொரிந்த பல் படை துணிபடத் துணிபடச் சரத்தாலரிந்து. (ஆ : 453)

துணிபடல் - முறிதல். துண்டு படல். சொரிந்த பல் படை துணிபடத் துணிபட. (ஆ : 453)

துணிபொருள் - மெய்ப் பொருளாகிய முழுமுதற் பொருள். தேர்ந்த பொருள். பரப் பிரும்மம். மற்றைத் துறைகளின் முடிவுஞ் சொல்லுந் துணிபொருள். (கி : 368)

துணிவதே - துணிவது பொருந்துமோ. மன்னர் மன்னனை வற்புறுத் தாதுடன் துன்னு கானந் தொடரத் துணிவதே. (அ : 315) [பா : பே]

துணிவிற்றன்று - உட்பட்ட தன்று. (அண்) உறுதியுடைய தன்று. (வை.மு) (ஆ : 273)

துணிவு - உறுதி தருவன. பெரியோர் துணிந்து செய்யத் தக்க தெனக் கொண்ட விஷயம். நிச்சயம். சொன்னனன்றே அன்ன வனுக்குத் துணிவெல்லாம். மரபிற்கேற்ற தொன்மையின் துணி விற்றன்ருல். (ஆ : 273) (ஆ : 737)

துனுக்கங் கொள்ளல் - அச்சுறுத்தல். அச்சங் கொண்டிடச் செய்தல். துங்கத் தோள் கொட்டி யார்த்தான் கூற்றையுந் துனுக்கங் கொண்டான். (யுத் : 1424)

துனுக்கந் தொடர்வுற்றுர் - நடுங்கினுர். (யுத் : 3798)

துனுக்கம் - 1. நடுக்கம். துறக்கும் மன்னவன் என்னும் துனுக்கமே. (அ : 91) (அ : 501) (யுத் : 514) (யுத் : 1678)
2. பதைப்பு. துனுக்கத்தால் நஞ்சு நுகர்ந்தாரென்றுலும். (ஆ : 601)
3. அச்சம். வானவர் வீரன்வில் இற்றபோது துனுக்கமுற் றேங்கினுர். (ஆ : 543)

துனுக்க மெய்தல் - மனநடுக்கமுறல். துனுக்க மெய்தா. (யுத்:2554)

துனுக்குறுதல் - திடுக்குறுதல். துனுக்குற்ற மனத்தன். (யுத்:2238)

துனுக்கெனல் - திடுக்கிடல். சோரும் வெள்கும் துனுக்கெனும். (ஆ : 307)

துணை - 1. இரண்டு. இரட்டை. துணைக்கரத்தாற் பற்றி. (கி : 299)
2. ஒப்பு. சமம். உவமை. துணையிலான்தனை. (யுத் : 168) கிளைத் துணை மழலை வண்டு கின்னர நிகர்த்த. (கி : 475) [பா:பே] தனித்தனி கிடைப்பரோ துணை. (கி : 211) (சு : 607)
3. தம்பி. துணையாளன். துணையின்றிச் சேறல் நன்ரே. (யுத் : 1377)
4. அளவு. காணுதொழிந்த தாலன்ரே உள்ள துணையும் உள தாவது. (சு : 604) சொற்றதுணை. (சு : 88)
5. கணவன். சுடு மயானத்திடை தன் துணையேக. (அ : 1060)
6. உதவி. துறப்பெனும் தெப்பமே துணைசெயாவிடின். (அ : 21)
7. சிநேகம். பின்னே பிறந்தானல்லதோர் துணையிலாத பிழை நோக்கி. (சு : 601)
8. கூட்டான பொருள். துஞ்சினுய்கொல் துணை பிரிந்தே னெனும். (யுத் : 3163)
9. அமைச்சன். (கலா) தந்தை துணை முந்துரைத்த சொன் முன்னே யுவக்கின்ற துரிசிலாத் திருமனத்தான். (அ : 1019)
10. உற்றதுணை. துணையிலான் தனைத் துணையெனவுடையவன். (யுத் : 168)

துணைக் கண் - இரண்டு கண். துணைக்கண் தசும்பு வேய்ந்தவர் ஒத்தவர். (அ : 772)

துணைக்கணவன் - வாழ்க்கைக்குப் பெருந்துணைவனான கணவன். (சு : 451)

துணைக் கரம் - இரண்டு கை. துணைக் கரத்தாற்பற்றி வாலினும் காலினும் வலியுறப் பறிப்பான். (கி : 299)

துணைக்கை மதவேழம் - இரண்டு கைகளையுடைய மதயானைகள். தாழ் தடக் கைத்துணைக்குறி கொளா மத வேழக்குழுவனார். (ஆ : 394)

துணைக்கொள்ளல் - துணையாகக் கொள்ளல். துணைக்கொண் டோமெனின். (யுத் : 375)

துணைச் சேடியர் - துணை செய்யும் பணிப் பெண்கள். தாயர் தவ்வையர் தன்துணைச் சேடியர் ஆயம். (ஆ : 523)

துணைத்தம்பி - துணையா யுள்ள தம்பி. தோன்று நெறிவாழ் துணைத் தம்பியை வாகைகொண்டோ. (அ : 431)

துணைத் தாதைபாதம் - தந்தையாரின் இரண்டு பாதம். தன்துணைத் தாதை பாதம் அத்திசை நோக்கித் தாழ்ந்து. (அ : 296)

துணைத் தாமரை - இரண்டாகிய தாமரை போன்ற கால்கள். துணைத்தாமரை நோவ. (பா : 848)

துணை நயனம் - இருகண்கள். (யுத் : 2721)

துணைபிரிபெடை - சேவலைப் பிரிந்த பெண்மயில். துணைபிரி பெடை தானச் சேவலொடு உறவாடித் திரிவதன் இயல் காணாய். (அ : 696)

துணைமலர்த் தடக்கை - தாமரை மலர் போன்ற இரண்டுபெரிய கை. தான் அவன் துணைமலர்த் தடக்கை பற்றினான். (அ : 1197)

துணையவர் - துணையாய மனைவியர். இன்றுணையவர்முலை எழுது சாந்தினும். (அ : 971)

துணையவன் - நட்பினனாகிய அவன். தசரதன். எப்பரிசு உயிருய்ந் தான் என் துணையவன் என்றான். (அ : 715)

துணையிலான்தனைத் துணையெனவுடையவன் - தனக்கு ஒப்பில்லாத திருமாலை ஆருயிர்த் துணையெனக் கொண்டவனாகிய பிரகலாதன். (யுத் : 168)

துணையின்மை - ஒப்பின்மை. மெய்ம்மைத் துணையின்மை சூழ்விற் செல்வந் துய்த்தி கொல். (அ : 599)

துணவர் - 1. துணையாயுள்ளவர். அறப் பெருந்துணவர். (யுத் : 1351)
2. நண்பர். கொண்டல் தன் துணவரைப் பார்த்திவை குணித்தான். (யுத் : 4068) துணவரேம். (கி : 209)
3. உடன் வந்தவர். துணவருந் தானுஞ் சிந்தியா நின்றனன். (யுத் : 316)
4. மந்திரிமார். வானரம் பெரிதென மறுவில் சிந்தையான் தூநிறச் சுடு படைத் துணவர்ச் சொல்லினுன். (யுத் : 323) (யுத் : 316)

துணவன் - 1. துண செய்பவன். அன்னவன் துணவனுகுமோ. (யுத் : 374)
2. நண்பன். உங்கள் குலத் தனிநாதற் குயிர்த் துணவன். (அ : 1017) (யுத் : 435)
3. கணவன். நின் ஒரு துணவன் தூயதாள் ஒருங்குடை உணர்வினேர். (சு : 586)

துணவா துணவா - துணவனே துணையாக வருக. வினையேன் துணவா துணவா என்ருன். (அ : 350)

துணவியர் - மனைவியர். இன் றுணவியர் முலை எழுது சாந்தினும். (அ : 971) [பா : பே]

துத்தரி - இரட்டைச் சின்னம். கொம்பு துத்தரி கோடதிர் பேரிகை. (அ : 647)

துத்திரி - இரட்டைச் சின்னம். (கலா) கொம்பு துத்திரி கோடதிர் பேரிகை. (அ : 647) [பா : பே]

துதி - புகழ்ச்சி. துதியறு பிறவி. (ஆ : 1005)

துதியறு பிறவி - புகழ்ச்சிக் குரியதல்லாத இப்பிறவி. (ஆ : 1005)

துதைதல் - 1. நெருங்கல். மொய்த்தல். திசையானை மதந்துதைந்த வண்டும். (சு : 312) துதையுங் குங்குமத் தோளொடு. ( )
2. நிறைதல். தொய்யில் வாசத்துவர் துதைந்தாடிய கையில் நாகம். (யுத் : 1293)

துந்து - ஓர் அரசன். துந்து வெனும் தானவனைச் சுடு சரத்தால் துணித்தானும். (பா : 731)

துந்துபி - பேரிகை. அந்தர துந்துபி முகிலினுர்த்தன. (பா : 473) [பா : பே]
2. ஓர் அசுரன். துந்துபிக் கடலினுன். (கி : 179)

துந்துமி - பேரிகை. தழங்கின துந்துமி. (பா : 265)

துந்துமி கொட்டுதல் - துந்துமி என்னும் பறையை அறைதல். கொம்பு துந்துமி கொட்டு முறைமையன். (அ : 647) [பா : பே]

துப்பழி செவ்வாய் - பவழமும் ஒப்பாகாமல் தோல்வியுறும் சிவந்த வாய். துப்பழி செவ்வாய் வஞ்சி. (ஆ : 735)

துப்பழிந்து - சீர் கெட்டு. துப்பழிந்துய்வது துறக்கந் துன்னவோ. (சு : 503)

துப்பிணை வயிர வாளி - வலிமை பொருந்திய உறுதியுள்ள அம்புகள். காலன் துப்பிணை வயிர வாளி விசையினும். (யுத் : 3880)

துப்பு - 1. வலிமை. வலிய பொருள். துப்புடைச் சேனை. (பா:662) துப்போ எனத் துணி ஆம் வகை. (யுத் : 1843) துப் பொப்ப தொர்படை. (யுத் : 3049)
2. தூய்மை. துப்புடை மணலிற்ருகி. (பா : 1115) துப்பிணை வயிர வாளி. (யுத் : 3880)
3. பகை. துப்புற முருக்கி உயிருண்பல் இது சூதால். (சு : 696)
4. பெருமை. தகுதி. மரியாதை. யான் துப்பழிந் துய்வது. (சு : 503)
5. பவழக் கொடி. துப்புறு பரவை ஏழும். (சு : 522)
6. நற்பவழம். துப்பினில் துப்புடை யாதைச் சொல்லுகேன். (ஆ : 245) பொன் மதில் துப்பிற் செய்தது போன்றது. (யுத் : 989
7. சிவப்பு. துப்பினில் துப்புடை யாதைத் சொல்லுகேன். (ஆ 245)

துப்பு நீராய தூய சுடர்கள் - பவளத்தின் ஒளியுடைய செவ்விய கிரணங்கள். (யுத் : 709)

துப்புறச் சிவத்தல் - பவளத்தை ஒப்பச் சிவத்தல். துப்புறச் சிவந்த வாய். (யுத் : 331) துப்புறச் சிவந்த வாய்த் தோகை. (யுத்:4201)

துப்புறழ் இளவாசச் சுண்ணம் - பவழம் போற் சிவந்து மென்மையும் வாசனையுங் கொண்ட கந்தப்பொடிகள். துப்புறழ் இளவாசச் சுண்ணமும் முதிர்தாதும் குப்பைகளென வாரிக் கொண்டனர் கனைவாரும். (பா : 1274)

துப்புறழ் துவர்வாய் - பவழம் போற் சிவந்த வாய். துப்புறழ் துவர் வாயிற் றூமொழி இவளோடும். (அ : 715)

தும்பி - 1. யானை. மஞ்ஞைத் தோகையும் தும்பிக் கொம்பும். (பா : 572) (யுத் : 1665)

2. கருவண்டு. பம்பு தேன் மிஞிறு தும்பி. (பா : 929)

3. வண்டு. துயில்வுற்ற குளிர் தும்பி. (கி : 523)

தும்பி ஈட்டம் - யானைக் கூட்டம். (அ : 647)

தும்பிக் கொம்பு - யானைத் தந்தம். மஞ்ஞைத் தோகையும் யானைக் கொம்பும். (பா : 574)

தும்புரு - 1. ஒரு கந்தர்வன். தோள்களின் இசையினைத் தும்புரு இசையின் ஏத்தவே. (ஆ : 571)

2. விராதனது பூர்வ ஜன்மப் பெயர். பேர் தும்புரு தனதன் சூழ் அம்பரத்துளேனரோ. (ஆ : 64)

தும்பை - 1. போர். ஒரு போர்த்துறை. தேவரை மேனாள் தும்பையின் தலை துரந்தது. (யுத் : 2505)

2. போர் செய்வோர் சூடும் மாலை. கவசம் படர் மார்பிடைச் சுற்றினான் நெடுந் தும்பையுஞ் சூடினான். (யுத் : 1059)

3. தும்பைமாலை. தும்பையும் சூடி. (யுத் : 3621)

தும்பை சூடுதல் - போருக்குச் செல்லும் போது தும்பை மாலை சூடுதல். நெடும் தும்பையுஞ் சூடினான். (யுத் : 1059)

தும்பைத் தொடையல் - தும்பை மலரால் தொடுக்கப்பட்ட மாலை. தும்பையந் தொடையல் வீரன் சுடுகணை துரப்ப. (யுத் : 1376)

தும்பை மாமலர் - சிறந்த தும்பை மலர். அளவில் தும்பை மாமலர் தூவினன் காரி எட் சொரிந்தான். (யுத் : 2557)

தும்பையந் தொடையல் - அழகிய தும்பை மலர் மாலை. யுத் : 2446)

துமி - துளி. திரை கடற் றுமி தழூர்புக வானவர் துள்ளினர். (யுத் : 661)

துமித்தல் - 1. அறுத்தல். வெட்டுதல். நின்னிரு நாசி துமிப்பதன் முன்பகல். (ஆ : 1094) துமிந்த. (யுத் : 1019) துமிந்து போய. (யுத் : 1112)

2. அழித்தல். திசையுளார் பரமுகத் தலை துமித்தருளுவான். (கி : 88)

துமிதம் - நீர்த்திவலை. (யுத் : 661)

துமிதல் - வெட்டுதல். அறுபடல். காலும் வாலும் துமிந்த கவிக்குலம். (யுத் : 1019)

துமிந்த - துண்டுபட்டன. அற்றன. அழிந்தன. ஒடிந்தன. (யுத்:1019)

துமிந்தன்-1. வானரப் படைத்தலைவன். தோடிவர்ந்த தார்க் கிரிபுரை துமிந்தனும் தொடர்ந்தான். (கி : 721)
2. வானரக் காவலாளன். மயிந்தனும் துமிந்தனும் என்னும் மாண்பினோர். (யுத் : 348)

துமிரன் - பொய்கையை ஆளும் அசுரன். தூநிவந்த வேல் துமிரன் என்னும் பேரான். (கி : 900)

துமிலப்போர் - பேராரவாரத்தோடு செய்யும் போர். துமிலப்போர் வல்லரக்கர்க்குச் சுட்டினுள். (ஆ : 382)

துமிலம் - 1. பேராரவாரம். துமிலப் போர். (ஆ : 382)
2. விரைவு. நெருக்கம். துமிலத்திண் செருவின்வாளிப் பெரு மழை சொரிய. (யுத் : 784)

துமுலம் - பேரொலி. இறுத்ததின் றுலகம் என்பதோர் துமுலம் வந் தெய்த. (யுத் : 1154)

துய் - 1. பஞ்சின் தொடர் நுனி. நாடகத் தொழிலன நடுவு துய்யன. (பா : 103)
2. பஞ்சு. துய்யைச் சுடு வெங்கனல். (அ : 420)

துய்த்தல் - உட்கொள்ளல். அனுபவித்தல். இன்பந் துய்த்துமேல். (யுத் : 32)

துய்ய - தூய்மை வாய்ந்த. துய்ய தேவர். (யுத் : 2581)

துயக்கு - 1 தளர்ச்சி- சோர்வு. துயக்கிலன் சுகேது என்றுளன் ஓர் தூய்மையான். (பா : 367) துயக்கலால் தேர்களென்று வந்த பாவி என்ன செய்கை செய்யுமே. (யுத் : 3345)
2. தொடர்பு. சம்பந்தம். சீதை துயக்கினுல் என்னைச் சுட்டாய். (சு : 730)
3. குற்றம். துயக்கில் கந்தர்ப்பரைத் துரந்து வாரின. (ஆ:414)
4. மயக்கம். சந்தேகம். ஞானம் வெளிப்பட உய்ந்த துயக்கிலார் போல். (சு : 51)
5. ஆசை. அவள் துயக்கின் மலரம்புற வெம்பும் சுவடுடைப் பொருவில் தோள். (யுத் : 805)

6. மனத் திரிவு. துயக்கிலா அன்பு. (யுத் : 3902)
7. பந்தம். துயக்கிலாதவர் மனமென. (யுத் : 4064)

துயர் - வருத்தம். கோகிலம் துயர்ந்த மென்குதலை. (சு : 416)

துயர் இயற்றுதல் - துயரை அடையும்படி செய்தல். துயர் தந்தலை இயற்றும் வேட்கையினுல். (யுத் : 1727)

துயர்க்கடல் - துயரமாகிய கடல் அருந்துயர்க் கடலுளாள் என் அம்மனை அழுத கண்ணள். (யுத் : 2358)

துயர்க்கடல் அடிவைத்தல் - துன்பமாகிய கடலில் கால் வைத்தல். அன்னமுந் துயர்க் கட லடிவைத்தாளரோ. (அ : 1152)

துயர்க்குக்கரை - துன்பத்திற்குக் கரை. கார் வரையைக் காணுதி மற்றது காண இத்துயர்க்குக் கரையுங் காண்டி. (யுத் : 2681)

துயர்க் கோள் - துன்பங் கொண்டிருத்தல். இந்திரன் துயர்க் கோளு நீங்கும். (சு : 1006) [பா : பே]

துயர் குடித்தல் - துயரத்தை உட்கொள்ளல். குடித்தாள் துயரை உயிரோடும். (யுத் : 2631)

துயர் குளித்தல் - துயரில் மூழ்குதல். துயர்க் கடலில் ஆழ்தல். அரக்கர் தம்மைக் கொன்றபின் அன்றே வெய்ய கொடுந் துயர் குளிப்பது என்முன். (ஆ : 1030)

துயர் கூரல் - துன்பம் மிகுந்து நிற்றல். தளர்ந்து துயர் கூரல் என்ன செயலோ. (யுத் : 2202)

துயர் கோள் - துயரங் கொள்ளுதல். இந்திரன் துயர் கோளு நீங்கும். (சு : 1006)

துயர்தல் - துயர் கொள்ளல். துயர்ந்து சுருண்டான். (யுத் : 2837)

துயர் துடைத்தல் - துன்பத்தைப் போக்குதல். மாதுயர் துடைத்த வார்த்தை மறப்பரோ. (யுத் : 419)

துயர் துறத்தல் - துயரை நீக்குதல். அருந்துயர் துறந்தார். (அ : 68) (அ : 331)

துயர்ந்த - வருந்திய. கோகிலம் துயர்ந்த மென்குதலை. (சு : 416)

துயர்ந்து - துன்பமுற்று. நெஞ்சு துயர்ந்து சுருண்டான். (யுத் : 2837)

துயர் வண்ணம் - துன்பவழி. உய் வண்ண மன்றி மற்றோர் துயர் வண்ண முறுவ துண்டோ. (பா : 559)

துயர் விட்டாய் - துன்பம் நீங்கினவளாவாய். (சு : 609)

துயர் விளைவு - துன்பத்தின் பெருக்கம். எங் கடுந்துயர் விளைவு கேளென. (ஆ : 128) [பா : பே]

துயரத்தின் கடல் வெள்ளம் - துன்ப மென்னும் கடல் நீர். வெந் துயரத்தின் கடல் வெள்ளத் தாழ்ந்தான். (அ : 221)

துயரம் நீக்குதல் - தேறுதல் கூறல். முனிவர் தம் தருமப் பன்னியர் தூய நீராட்டினர் துயர நீக்கினர். (அ : 1153)

துயர முழக்குதல் - துன்பங்களை அனுபவித்தல். நினைத்திருந்து துயர முழக்கிலேன். (யுத் : 4137)

துயரல் - வருந்தாதே. நீ துயரல் எந்தாய். (யுத் : 4230)

துயரிடை நைதல் - துன்பத்தில் அகப்பட்டு வருந்துதல். கண்ணிலா நாடு ஒரு துயரிடை நைவதே எனும். (அ : 886)

துயருக்கே சேக்கையாதல்-துன்பத்துக்கு இருப்பிடமாதல். துயருக்கே சேக்கையானான். (யுத் : 1610)

துயருதவல் - துன்பந்தருதல். துயர் தமக்குதவி மீளாத் துறக்கம் போய் வந்த தொல்லைத் தயரதன். (யுத் : 3539)

துயருழந்தயரல் - துன்பத்தில் வருந்தித் தளராதே. சொன்னது செய்தி ஐய துயருழந்தயரல் என்றான். (அ : 1182)

துயல் - பிறழ்வு. அசைவு. (சு : 417) (பா : 1146)

துயல்வரல்(துயல்வருதல்) - 1. அசைதல். குடகந் துயல்வர.(பா:1146) **2. தொங்குதல். தொங்கி அசைதல்.** அநேகவிதவன் தொடையல் மாலை துயல் வந்துலவு தோள் பொலியவே. (ஆ : 10)

துயல் வுறுதல் - இயல்பிற் பிறழ்தல். தூங்கிசைக் கானம் துயல்வுறுது ஒரு நிலை தொடர. (சு : 417)

துயலுறுது - பிறழ்தலில்லாமல். துயலுறுது ஒருநிலைபடர. (சு : 45) [பா : பே]

துயில் - உறக்கம். பெருந்துயில் நெடுங்காலம் உழைத்து. (யுத்:1545)

துயில்கில்லார் - தூங்கமாட்டார்கள். (சு : 489)

துயில் செய்தல் - நித்திரை செய்தல். தா ளாறுடைப் பறவை தேனவாம் விரைச் செங்கழுநீர்த் துயில் செய்ய. (சு : 100)

துயில் தரு - நித்திரை கொள்கின்ற. துயில் தரு கண்ணினன். (யுத் : 1286)

துயில் தேறுதல் - துயில் நீங்கித் தெளிதல். தேறி இன் துயில் செலவு தீர்ந்துளார். (கி : 901)

துயில் நறை - தூக்கமாகிய மது. (வை,மு) துயினறைக் களி பொருந்தினர். (சு : 359)

துயில் வதிதல் - துயில். துயில்வதி தண்டலை. (அ : 624)

துயில்வு - 1. தங்குதல். நாகருலகுந்தம் பாகார் மருங்கு துயில் வென்ன உயர் பண்ப. (சு : 97)

2. உறக்கம். கணிதமாக்களும் கூவுறு கோழியும் துயில்வு கொண்டனவே. (ஆ : 688)

துயிலுணர்தல் - உறக்கம் நீங்குதல். துண்ணெனத் துயிலுணர்ந் தெழுந்து சுற்றினர். (சு : 389)

துயிலுதல் - 1. தங்குதல். நீள மாலைய துயில்வன நீருண்ட கமஞ் சூல் காளமேகம். (அ : 738)

2. நித்திரை செய்தல். தொல்லாழித் துயிலாதே துயராழி நெடுங்கடலுள் துயில்கின்றனே. (பால : 717) துயின்றிலர். (அ : 540) துயில்கில்லார். (சு : 489)

துயிலுறுதல் - படுத்துத் தூங்குதல். பொலங்குழை மயிலினேடு துயில்வுற. (யுத் : 4238)

துயிலெழுதல் - உறங்கி எழுதல். துயிலெழு மயிலொன்றின் தூவியின் மணம் நாற. (அ : 610)

துயிலெனு மணங்கு - நித்திராதேவி. (அ : 665a)

துயிற் சுவை - உறக்கத்தின் சுகம். அணங்கைத் தீர்ந்து துயிற் சுவை மறந்தான். (யுத் : 712)

துயிறரும் புன்மை - (இராமன்) நாணற்பாயலில் நித்திரை செய்யும் புன்மை. பொற்றொடியோடும் ஐயன் துயில்தரும் புன்மை நோக்கி. (அ : 665c)

துரக்க - 1. துரத்தலால். தூண்ட. (கலா) அல்லவர் இயற்றிய அறமும் துரக்க நல்லருள் துறந்தனள். (அ : 175)

2. ஏவ. விரைந்து தொடர. சுரக்க வந்த காமநோய் துரக்க வந்த தோமினல். (ஆ : 66)

3. **செலுத்துதல்** நெறியலா நெறி துரக்கவும் அருந்தவத் துறையுள் நீங்கினேம். **(ஆ : 129)**

துரக்குவது - செலுத்துவது. இனி நாம் அம்பு துரக்குவதல்லால் வேருேர் சொல்லுண்டோ. **(யுத் : 922)**

துரகதம் - குதிரை. வெள்ளைக் குரகதக் குலங்கள் பூண்டு **(யுத் : 4280)**

துரகம் - குதிரை. துரக ராசி. **(அ : 992)**

துரக ராசி - குதிரைகளின் தொகுதி. (அ : 992)

துரங்கம் - குதிரை. தழலின் நாப்பண் கவன வேகத் துரங்கக் காதி வந்துதயஞ் செய்தான். **(பா : 429)**

துரத்தல் - 1. செலுத்துதல். யாம்படர் நெறிலயா நெறி துரக்கவும் அருந்தவத் துறையுள் நீங்கினேம். **(ஆ : 129)**

2. **உந்துதல்.** பிச்சமொய் சரங்கள் துறந்து செல்வன குருதி நீர் ஆறுகள் தோறும். **(யுத் : 1471)**

3. **நீக்குதல்.** துரக்கும் மெய்யுணர்வு இருவினைகளை. **(யுத்:1441)**

4. **விடுத்தல்.** செஞ்சரந் துரந்த செல்வன். **(யுத் : 1254)**

5. **வெருட்டல்.** குரங்குச் சேனை துரக்கின்ருன். **(யுத் : 1906)**

6. **மோதுதல்.** மரத்திடைத் துரப்பான். **(சு : 790)**

துரந்தன - 1. வெளிப்படுத்திய. விற்றுறந்தன வெங்கணை. **(யுத் : 1009)**

2. **தொடுக்கப்பட்டன.** பலபடத் துரந்தன. **(யுத் : 552)**

துரந்து கோடல் - போர்புரிந்து பகைவரைத் துரத்தி விட்டுக் கொள்ளுதல். புரந்து கோடலும் புகழொடு கோடலும் பொருது துரந்து கோடலும் என்றிவை தொன்மையிற் ருெடர்ந்த. **(யுத் : 545)**

துரப்பு - போக்குதல். துன்னிரும் நிழல் வழங்கிருள் துரப் பெளிதரோ. **(பால : 1124)**

துரிசு - 1. குற்றம். சொன் முன்னே உவக்கின்ற துரிசிலாத் திருமனத்தான். **(அ : 1019)**

2. **அழுக்கு.** துரிசடை புரிகுழல். **(யுத் : 1673)**

துரிதத்தில்எழுதல் - விரைவில் எழுதல். தூக்குறு தோளர் வாளர் துரிதத்தின் எழுந்த தோற்றம். **(சு : 8)**

துரிதம் - 1. விரைவு. துரிதத்தின் எழுந்த தோற்றம். (சு : 8) துரிதத் தேகினுன். (கி : 848) துரிதமான் தேர். (அ : 584)
2. விரைந்த லய விசேஷம். துரிதமாக்கள். (சு : 201) [பா:பே]

துரித மாக்கள் - துரிதமென்னும் விரைந்த லயவிசேஷத்தில் தேர்ந்த சனங்கள். (சு : 201) [பா : பே]

துரிதமானதேர் - விரைந்த நடையையுடைய குதிரைகள் பூட்டப் பட்ட தேர். (அ : 584)

துரு - குற்றம். துருவின் மாமணி ஆரம் துயல்வர. (பா : 1190)

துருக்கர் - சோனகர். (அரபு நாட்டவர்) துருக்கர் தர வந்த... பண்ணியல் வயப்பரிகள். (பா : 910)

துருத்தி - 1. தோற்பை. காற்றை உண்டாக்கத் தோலினல் செய்யப் பட்ட ஒருகருவி. தொகைக் கனற் கருமகன் துருத்தித் தூம்பென புகைக் கொடி கனலொடு புகைக்கும் மூக்கினுன். (ஆ : 1152)
2. வீசுகுழல். நீர்வீசுகருவி. பீச்சாங்குழல். மேகமென் துருத்தி கொண்டு. (ஆ : 573) தொளைகொள் தாழ்தடக்கை நெடுந் துருத்தியிற் றூக்கி. (அ : 765)

துருத்தித் தூம்பு - துருத்தியின் தொளை. தொகைக் கனற் கருமகன் துருத்தித் தூம்பென. (ஆ : 1152)

துருதம் - த்ருதம் என்ற சொல்லின் சிதைவு. விளம்பிதம். மத்யமம். துருதம் என்ற லயக்கிரமம் மூன்று வகை கொண்டது. கால விரைவு கொண்டது துருதம். வந் தொத்துந் துருதமாக்கள் விளம்புந் தந் நெறி வழாமை கந்தர்ப்ப மகளிராடு நாடகம். (சு : 201)

துருவம் - நிலைபெறுதல். (கலா) துருவத்தார் புரவி யெல்லாம். (யுத் : 4288)

துருவித் தேடல் - ஆராய்ந்து தேடல். துருவித் தேடிக் கொணர்கு வென். (யுத் : 2644)

துருவுதல் - 1. ஆராய்தல். துருவின் மாமணி ஆரம். (பா : 1190) துன்றும் மாளிகை துரிசறத்துருவி. (சு : 238)
2. தேடுதல். சோலை மாநிலந் துருவி யாவரே விடு கண்டுதாம் மீள வல்லவர். (பா : 91) துருவினன் வர வல்லேன். (அ : 682) துருவி மூட்டலால். (சு 671) துருவிப் போய். (சு : 261)

துருவை - செம்மறியாடு. துருவை மென்பிணை ஈன்ற வரி மருப்பிணை வன்தலை ஏற்றை. (பா : 61)

துலக்கம் எய்தல் - விளக்கம் அடைதல். இராவணன் துலக்க மெய்தினன் தோமில் களிப்பினே. (யுத் : 3579)

துலங்குதல் - விளங்குதல். துனிப்பட்டார் என்னத் துலங்கினர் (யுத் : 1543)

துலாம் - தூண்மேலுள்ள போதிகையின் கீழ் வாழைப்பூ வடிவில் அமைந்த அணிசெய் உறுப்பு. மரகதத் துலாம் செயிரறப் போதிகை கிடத்தி. (பா : 121)

துலை - துலா. துலாக் கோல். நிறை கோல். தராசு. துலைத்தாலம் (அ : 116) துலை புக்க பெரியோன். (யுத் : 416)

துலைத்தாலம் - துலாக் கோலின்நா. (அ : 116)

துலைபுக்க பெரியோன் - சிபி. (யுத் : 416)

துலைபுக்க வேந்தன் - துலாக்கோலில் ஏறி அமர்ந்த சிபி. புக்கடைந்த புறவொன்றின் பொருட்டாகத் துலை புக்க மைக்கடங்கார் மத யானை வாள் வேந்தன் வழி வந்நீர். (யுத் : 1574)

துவக்கு - கட்டு. பிணிப்பு. வேர் படைத்த வெம் பிறவியாற் றுவக்குறு வீடு. (யுத் : 2576)

துவக்குதல் - பிணித்தல். (யுத் : 2576)

துவசம் - கொடி. துவசமார் தொல்லமருள் துன்னுரைச் செற்றும். (ஆ : 99) (யுத் : 2318)

துவசமார் அமர் - வெற்றிக்கொடிகள் நிறைந்த போர். (ஆ : 99)

துவசர் - கள் விற்போர். துவசர் இல்லில். (சு : 207)

துவண்ட மேனி - மெலிந்த உடம்பு. தொழுதுயர் கையினன் துவண்ட மேனியன். (அ : 1114)

துவர் - 1. பவளம். துவரிதழ்த் தெரிவை நல்லார். (பா : 426) **2. சிவப்பு நிறம்.** குடைபவர் துவரிதழ் அலர்வன குமுதம். (பா : 74) துவரணிந்தன வென. (கி : 191) துவரிதழ். (கி : 557) துவர் துதைந்தாடிய. (யுத் : 1293) செந்துவர். (பா : 161)

துவர்த்தல் - பவழத்தின் தன்மையைக் கொள்ளுதல். சேயொளி துவர்த்த வாய். (ஆ : 1135)

துவரணிந்தன என - சிவப்புப் பூசப்பட்டன போன்று. (கி : 191)

துவரிதழ் - சிவந்த உதடு. துவரிதழ் அலர்வன. (பா : 74) துவரிதழ் வாய்த் தாளநகை. (பா : 217) (பா : 1068)

துவரினீண்மணித்தடம் - செந்நிறம் வாய்ந்த பெரிய மாணிக்கப் பாறை. துவரின் நீள் மணித்தடந் தொறும் இடந் தொறும் கவரி வால் புடை பெயர்வன. (அ : 741)

துவலை - திவலை. நீர்த்துளி. துடுப்பு வீசும் துவலைகள். (அ: 1048) தூநிற முத்தினம் துவலையோடும் போய். (யுத் : 631)

துவள்தல் - 1. துவளுதல். தளர்ந்து அசைதல். கோட்டித் துவளப் பாரிடைக் கிடந்தனர். (யுத் : 2574)

2. **துடித்தல் - நடுங்கல்.** முகில் வாயின் மின்துடித்தாலென்ன மன்னவன் மார்பிற் றுவள்கின்றாள். (அ : 597)

3. **அசைதல்.** துவள்வில இலவம். (கி : 792)

4. **வருந்துதல்.** மின்னிடை துவள ஏகி. (சு : 213) தோட்டார் கோதைச் சோர் குழல் தன்னைத் துவளாமல் மீட்டான் என்னும் பேரிசை கொள்ளான். (ஆ : 1172)

துவள - வருந்த. மின்னிடை துவள. (சு : 213)

துவளாமல் - வருந்தாமல். துவளாமல் மீட்டான் என்னும் பேரிசை. (ஆ : 1172)

துவளு நுண்ணிடையார் - அசையும் சிற்றிடையையுடைய பெண்டிர். துவளு நுண்ணிடையார் ஆடுந் தோகையங் குழாத்திற் றெக் கார். (அ : 255)

துவன்றுதல் - நிறைதல். சூடகத் தளிர்க்கை மாதர் தழுவினர் துவன்றித் தோன்ற. (அ : 1046)

2. **செறிதல்.** பத்திரப் பழுமரப் பொழில் துவன்று பழுவம். (ஆ : 2)

3. **நெருங்குதல்.** மின்னெடுந் துவன்றின மேகராசியே. (கி : 458) துகிற் கொடி மிதிலை மாடத் தும்பரிற்றுவன்றி நின்ற. (பா : 567)

துவனம்-ஒலி. (த்வநம்) துவன வில்லின் பொருட்டு (யுத் : 3694)

துவனி-முழக்கம். புவனியும் மலையும் விசும்பும் பொருவரு நகரு முடன் போர்த் துவனியில் அதிர. (சு : 772)

துவாரம்-வாயில் தம் துவாரம் புதவொடு தாளற. (சு:724)

துவிந்தன் - வாரை வாயில் காவலன். மயிந்தன் தம்பி. (துவிவிதன்) மயிந்தனும் துவிந்தனும் என்னும் மாண்பினோர். (யுத் : 348) [பா : பே]

துவைத்தல் - 1. ஒலித்தல். பல்லியந்துவைப்ப ஏகி. (பா : 276)
2. **முழங்குதல்.** பல்லியந் துவைத்த கடைத்தலையான். (பா:733)
3. **கடைதல்.** துன்றிருங் கருங்கடல் துவைப்பத் தோன்றிய மன்றலங் கோதையாள். (பா : 1325)
4. **அடித்தல்.** தோலுடை நெடும்படை துவைக்குந் தோறெலாம். (அ : 576)
5. **உழக்குதல்.** அன்னம் துவைப்பன. (கி : 930)

துழனி - 1. ஓசை. ஒலி. துன்னு கோளினொடு தாரகை தொடுத்த துழனிச் சன்ன விரம். (ஆ : 12)
2. **ஆரவாரம். பேரொலி.** வானத்தன்றங் கெழுந்தது துழனிப் பொம்மல். (யுத் : 455)

துழனிப் பொம்மல் - பேரொலியின் மிகுதி. (யுத் : 455)

துழாய் - துளசி. இணர்த் துழாய்த் தொங்கல். (யுத் : 4018) இலை கொள் தண்டுழாய் இராமன். (யுத் : 1173)

துழாயலங்கல் - துளசி மாலை. வண்டுழா யலங்கலாய். (யுத் : 396) [பா : பே]

துள்ளல் (துள்ளுதல்) - 1. துடித்தல். மன்னுயிர் தமக்கு நீள் வலமுந்துள்ளவே. (பா : 272)
2. **மகிழ்ச்சிக் கூத்தாடுதல்.** திரை கடற் றுமித மூர் புக வானவர் துள்ளினர் அமுதம் இன்னும் எழும் எனும் ஆசையால். (யுத் : 661)
3. **உதய மாதல். (வை.மு) கிளம்பி ஆடுதல். (அண்)** வேய் புனர் பூசமும் விண்ணுளோர் புகழ் தூய கர்க்கடகமும் எழுந்து துள்ளவே. (பா : 282)
4. **விட்டு விட்டு ஒலித்தல்.** தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும். (பா : 59) [பா : பே]
5. **மிகுதி. (அண்)** மத்தொலி துள்ளல் போய். (பா : 59)
6. **சஞ்சலப்படுதல்.** துள்ளும் பொறி. (யுத் : 235)

துள்ளல் புரிதல் - துள்ளுதலைச் செய்தல். அலர் மாரி தூர்ப்பா ரானுர் துள்ளல் புரிந்தார். (யுத் : 3800)

துள்ளி - 1. ஆமை. துள்ளி கொள்வன தூங்கிய மாங்கனி. (பா : 64)

2. துளி. கருங்கண் வரும் துள்ளிதரு வெள்ளம். (சு : 258 துள்ளி வெள்ளம். (கி : 462) துள்ளி நறுமென் புனல். (யுத் : 10))

துள்ளிக் கண்ணீர் - கண்ணீர்த்துளி. துள்ளிக் கண்ணீர் பொடித் திலன். (யுத் : 2851)

துள்ளிடை - துடிக்கும் சமயம். துடிக்கும் பொழுது. துள்ளிடைப் புருவங் கோணி. (சு : 206)

துள்ளியின் இரதம் - பாதரசத்துளி. துள்ளியின் இரதந் தோய்ந்து. (யுத் : 721)

துள்ளி வெள்ளம் - நீர்த்துளிகளின் பெருக்கம். ஆய்மலர் தூர்த்தன ஒத்தன துள்ளி வெள்ளமே. (கி : 462)

துள்ளும் பொறி - 1. சஞ்சலப்படும் இயல்பினதாகிய மனம். ஒருவழி நில்லாது துள்ளித்திரியும் பஞ்சேந்திரியம். (அண்) துள்ளும் பொறியின் நிலை சோதனைதான் வெள்ளந்தரும் இன்னமுதே விதியோ. (யுத் : 235)

2. எழுகின்ற தீப்பொறி. கொல்லன் ஒல்லுலையில் துள்ளும். பொறியிற் சுடும். (யுத் : 5)

துளக்கம் - 1. அசைவு. ஏவுண்டு துளக்க மெய்தா. (யுத்:2374)

2. மனக்குழப்பம். துளக்கமில் ஆற்றல்வீரர். (யுத் : 2427)

3. நடுக்கம். வீடணன் துளக்க முற்றுன். (யுத் : 2855)

துளக்கமுறல் - நடுங்குதல். துளக்கமுற்றுன், (யுத் : 2855)

துளக்கு - 1. நடுக்கம். துளங்கு மெய்யினுர். (யுத் : 2939)

2. வருத்தம். புரந்தராதியர் இரக்கமும் அவலமும் துளக்கு மெய்தினர். (சு : 888)

துளக்குதல் - 1. அசைத்தல். துளக்குறு நிலையனல்லன். (யுத்:1421) மகுட கோடி துளக்கொலி. (சு : 260)

2. ஆட்டுதல். வெங்களி துளக்கலால். (யுத் : 4170)

துளக்குறுத்தல் - ஆட்டுதல். நல்குரவு ஒழிந்த தாமெனும் பெருங் களி துளக்குறுதலால் அமரர். (பா : 499)

துளங்கல் (துளங்குதல்) - 1. அசைதல். நிலை கலங்கல். துடும்பல் வேலை துளங்கிய தில்லையால். (யுத் ' 672) துளங்கலில்லாத் தனிக்குன்று. (அ : 602) நின் இறை துளங்குறு புருவமென் சிலை இடை துளங்குற இசையுமோ. (கி : 509)

2. வருந்துதல். சோருதல். துளங்குதல் துயருழந் துயிர்த்தலன்றி மற்றயலொன்றுஞ் செய்குவதறியாள். (சு ; 334)

3. கலங்குதல். மாயவிற்கு நாம் தோற்றவாறெனு மனம் துளங்குகின்றதால். (பா : 750)

4. துடித்தல். உயிர் சோரச்சோரத்துளங்குகின்றார் சிலர். (சு : 269)

5. விளங்குதல். ஒளிசெய்தல். ஒளிவீசுதல். பிறைதுளங்குவன அனைய. (கி : 509) புண்டுளங்கியன கண்கள் கனல் பொங்க. (ஆ : 8) துளங்கொளி. (சு : 529)

6. களித்தல். தொழுதனன் மனமுங்கண்ணுந் துளங்கினன். (யுத் : 4233)

7. சலித்தல். நடுங்குதல். துளங்கு மெய்யினர். (யுத் : 2939)

8. பிறழ்தல். மறை துளங்கினும். (கி : 509)

9. நிலை மாறுபடல். மதி துளங்கினும் வானும் ஆழ் கடல் வையமும் நிலை துளங்கினும் (கி : 509)

10. சோர்தல். துஞ்சினனலன் துளங்கினன் என்பது துணியா. (யுத் : 1170)

துளபம் - துளசி மன்றலந் துளபமாலை. (யுத் : 261)

துளபவானவன் - துழாய் மாலையணிந்த திருமால். மாவியலுதய மாம் துளவ வானவன். (சு : 774)

துளவ வானவன் - துழாய் மாலையணிந்த திருமால். (அ : 774 [பா : பே]

துளவியல் தும்பை - துளசியின் தன்மைபொருந்திய தும்பை. ஆறொடு ஏர் பெறத் துளவியல் தும்பையும் சுழியச் சூடினன். (யுத் : 1077) [பா : பே]

துளவினேன் - துளசி மாலையணிந்த திருமால் தழைத்த தண்டுளவினேன் தலைவனல்லனென்றழைத்தவன். (அ 892)

துளவு - துளசி. துளவியல் தும்பை. (யுத் : 1077) (யுத் : 3540)

துளவை - துளசி. துளவை ஆய்முடியாய். **(யுத் : 4025)**

துளி - நீர்த்துளி. குழுமி மேகங்கள் குளிர்துளி கொணர்ந்த. **(அ : 730)** துளிபடத் துழாவு திண்கோல். **(அ : 1052)**

துளிமாரி - துளிகளையுடைய மழை. மாருத் தனிச்சொல் துளிமாரி வழங்கி வந்தான். **(அ : 418)**

துளை - துளைக் கருவிகள். கின்னரத் தொலி துளை யொலி. **(பா:153)**

துளைக்கைமா - யானை. சுற்றுறு துளைக்கை மாவும். **(யுத் : 3607)**

துளை யொலி - துளைக் கருவிகளின் ஓசை. (பா : 153)

துற்ற - 1. தூர்த்தன. இடை யிடையே முறிந் தெங்கும் துற்ற அல்லவும். **(யுத் : 1538)**
 2. நெருங்கிய. துற்ற வெம்மை கைம்மிக. **(யுத் : 3349)**
 3. சூழ. சுந்தரியர் எனைப் பலரும் கை தலையிற் பெய்திரங்கித் தொடர்ந்து துற்ற. **(யுத் : 4147)** [பா : பே]
 4. உண்ண. திசை யானை மதம் துதைந்த வண்டுந்துற்ற. **(சு : 312)**

துற்றல் - 1. தூர்த்தல் (யுத் : 1538)
 2. நெருங்கியிருத்தல். (யுத் : 3349)
 4 சூழல். தொடர்ந்து துற்ற. **(யுத் : 4147)**
 3. செறிதல். அயிர் துற்றிய கடன் மாநிலம். **(பா : 1360)**

துற்று - கவ்வி. மாநிலக் கோயில் நின்று துற்றெரி பருகிட நெரிவுற உருகி. **(சு : 1215)**

துற்றுதல் - உட்கொள்ளுதல். பணைத்த பண்ணையில் துற்றிய புகுதரும் தோற்றத்தால். **(ஆ : 1156)** துற்ற. **(சு : 312)**

துற - தூர்க்க. தூர்ந்து விட. தூளியினிமிர் படலம் போய் இமையவர் விழிதுற. **(சு : 768)**

துறக்க நகர் - அமராவதிநகர். உடம்பொடு துறக்க நகர் உற்ற வரை ஒத்தார். **(பா : 1245)**

துறக்கநாடு - வானாடு. வானோர் துறக்கநாடு அருகிற் கண்டான். **(சு : 2)**

துறக்கம் - முத்தியுலகம். உலகமெல்லாம் பிணி முதற்பாசம் வீசித் துன்னரும் தவத்தினெய்தும் துறக்கம் போல் தோன்றிற்றன்றே. **(ஆ : 662)**

2. சுவர்க்கம். புண்ணியம் புகுந்தோர் புகுவது துறக்கம். (பா : 97)

3. தேவலோகத்துச் செல்வங்கள். துறக்கந்தான் பறந்து வந்து படிந்தது. (1072)

துறக்கல் – மரணம் ஒழிதல். துஞ்சுறு பொழுதிற் றந்தாய் துறக்கல் என்றுவந்து சொன்னுள். (சு : 1321)

துறக்கை - துறந்து பற்றறுதல். பின் பாசத்தை மறக்கையும் மகனே வலியாவது துறக்கை தானும் என்ருள். (யுத் : 4155)

துறந்தசெல்வன் - துறவுச் செல்வத்துதயுதுடயவனுன பரத்து வாசன். துறந்த செல்வன் நிணயத் துறக்கந்தான் பறந்து வந்து படிந்தது. (அ : 1072)

துறந்து - 1. விட்டு. கோல் துறந்து. (அ : 1)

2. அப்பாற்பட்டு. தூய மறையுந் துறந்து திரிவாய். (யுத்:2209)

துறந்து திரிவாய் - அப்பாற்பட்டு நிற்பாய். (யுத் : 2209)

துறப்பு - 1. விட்டுவிடுதல். அப்பாற்படுதல். துறப்பரும் முகிலிடைத் தோன்றும் மின்னென. (பா : 1038)

2. கைவிடுதல். துறப்பிலர் அறம் எனல். (அ : 560)

துறவி - துறத்தல். துறவியின் உறவு பூண்ட தூயவர் துணவன் (யுத் : 435)

துறவியின் உறவுபூண்ட தூயவர் துணவன் - துறவறத்தில் உறவு கொண்டுள்ள தூயவர்களுக்குத் துணவனுன இராமபிரான். (யுத் : 435)

துறவு - துறவறம். துறத்தல். அருஞ்சிறப் பமைவருந்துறவும்' (அ : 22)

துறவு பூண்டோர் - துறத்தலே மேற்கொண்டோர். துக்கம் இத் தொடர்ச்சியென்று துறப்பரால் துணிவு பூண்டோர்' (யுத் : 1361) [பா : பே]

துறுகுவர் - அடைவர். சோர்பொழு தணிநகர் துறுகுவர். (பா : 311)

துறுதல் - 1. அடர்தல். அயிர் சுற்றிய கடன்மா நிலம். (பா : 1360)

2. **செறிதல். நெருங்குதல்.** துறும் போதினில் தேன் துவைத் துண்டு. (பா : 986) விரல் துறு கைத்தலம். (யுத் : 1487) கற்றைவிரி பொற்சடை மயிர்த்துறு கலாபம். (பா : 1228)

3. **அடைதல்.** தாளுறு தடக்கை வேறுவமை சாலுமோ. (சு : 536)

4. **அமுக்குதல்.** தொடை யொன்றினைக் கணைமிசைத் துறு வாய் இனி என்றான். (யுத் : 3029)

5. **தூர்த்தல்.** எங்கும் துற்ற அல்லவும். (யுத் : 1538)

6. **நெருங்குதல். அணுகுதல்.** இடையிடை துறுவன சுடுகணை. (யுத் : 1809) மெய்த்துறு மரந்தொறும். (சு : 590)

7. **நெருங்கி நிறைதல்.** மாடம் ஈண்டித் துறுதலால். (யுத் : 791)

துறு மயிர் - அடர்ந்த மயிர். முன்கையிற் றுறுமயிர் முள்ளிற் றுள்ளுற. (யுத் : 3825)

துறுமலர் வாகை - நெருங்கிய வாகை மலர் மாலை. இனியிடை விடலுளதேல் சூடலை துறுமலர் வாகை யென. (யுத் : 3094)

துறு முதல் - பல விடத்தும் பரவியிருந்த பொருள் ஒருங்கே வெளிப் படல். பால் துறும் பனிமுலை ஆவின் பான்மையான். (ஆ : 1121)

துறை - 1. ஒழுங்கு வரிசை. துறையறம். (சு : 542)

2. **கடல்.** முத்தமிழ்த் துறையின் முறை போகிய உத்தமக் கவிகள். (பா : 8)

3. **நூல்.** (உ.வி) (பா : 8)

4. **நீர்த்துறை. படித்துறை. ஆற்றில் நீராடுதற் குரிய இடம்.** துறையாடும் நிறையாறும். (கி : 771) பிதிர்ந்து சாறு பெருந் துறை மண்டிட சிதர்ந்து சிந்தி யழிந்தன தேங்கனி. (அ : 812) (உ.வி) (பா : 30) (பா : 276) (சு : 771)

5. **இடம்.** துறை தொறும் பரந்த சூழ்ச்சிப் பல் பெருஞ் சமயஞ் சொல்லும் பொருள். (பா : 30)

6. **அகமும் புறமு மாகிய பொருட் கூறுபாடு. சந்த பேதம்.** துறையடுத்த விருத்தத் தொகைக்கவி. (பா : 7)

7. **நல்லொழுக்கம்.** மன்னர்க்கு முன்னஞ் சொன்ன துறை திறம்பாமற் காக்கத் தோன்றினன். (கி : 311)

8. **செயல்.** வீரராயவர் புரிவது ஆண்மைத் துறை யென லாயிற்றன்றே. (கி : 319)

9. ஒரே இடம் அல்லது முடிவு. ஒருபடிப்படல். உண்ணிமை நிமிர் செல்வம் ஒரு துறை செலவென்னும் கண்ணுற லரிதம்மா. (பா : 1282)

10. கரை. துறையினின்றுயர் மாங்கனி தூங்கிய சாறும். (பா : 544)

11. பலவகை. கரண வகைகள். துறையறி கலவிச் செவ்வி. (பா : 1102)

12. வரலாறு. ஒழுங்குபட்ட வரலாறு. துறை எனக் யாதெனச் சொல்லு சொல்லென்ருன். (யுத் : 4175)

13. நூற் கேள்விகளின் வழி. (அண்) துறையறி துணைவர். (யுத் : 341)

துறை தொறும் துறை தொறும் - இடந்தோறும் இடந்தோறும். சொரியுஞ் சோரியின் துறை தொறும் துறை தொ்றும் சுழிப்ப (யுத் : 1468)

துறை நிறையாறு - படித்துறைகள் நிரம்ப உள்ள ஆறு. துறை யாடும் நிறையாறும், (கி : 771)

துறைபொரு - ஆறு போல. (அண்) துறை பொரு குருதி சொரிந் தார். (சு : 775)

துறையறி கலவிச் செவ்வி - கரணவகைகள் அறிந்த புணர்ச்சிக் கேற்ற தகுதி. (பா : 1102)

துறையின் நீங்கிய அறம் - நெறியின் நீங்கிய அறம். அருள் துறை யின் நீங்கிய அறமும். (அ : 1165)

துறையோர் - நல்லொழுக்க நெறி நிற்கும் பெரியோர். துறையோர் நூன் முறை மௌலி சூட்டினன். (கி : 414)

துறை விடுதல் - துறையில் ஓடம் முதலிய செலுத்தல். தூய கங்கைத் துறைவிடுந் தொன்மையான். (அ : 645)

துன்ப துளையாட்டு - துன்புற்ருய் போல விளையாடும் விளையாட்டு. துன்ப விளையாட் டிதுவேயுமுன்னைத் துன்பந் தொடர்பின்மை இன்ப விளையாட்டாமெனினும். (யுத் : 2619)

துன்பு - துன்பம். துன்படைத்த மனத்தன் சுமாலி சேய். (யுத்:1030) துன்புருக்கவும் சுற்றியுருக்கொணு என்புருக்குந் தகைமைய திட்டதாய். (யுத் : 4126) (அ : 686)

துன்பொடுந்துயிலல் - துன்பத்தால் மூர்ச்சையுறுதல். துன்பத்தால் ஐயன் துன்பொடுந் துயிலலானுன். (யுத் : 2669)

துன்மதி - 1. துர்ப்புத்தி. விரவு நன்மையென் துன்மதி விளம்பு. (யுத் : 180)
2. கெடுமதி - கெடுமதியையுடைய இராவணன். துன்மதி இநிதியே சிறையிடை இறைவன் தேவியை. (யுத் : 353)

துன்முகன் - 1. வானரப்படைத் தலைவன். வெம்படை கொண்டு துன்முகன் தொடர்ந்தான். (கி : 716)
2. இராவணன் மந்திரியருள் ஒருவன். வன்மையால் துன்முகன் என்பவன் இனைய சொல்லுவான். (யுத் : 43) (யுத் : 503) (யுத் : 1047)

துன்றி - அடர்ந்து. காடுதுன்றி விசும்பு கரந்தென. ஆ : 393)

துன்றிருங்குழல் - அடர்ந்த கரிய கூந்தலையுடைய சீதாபிராட்டி. துன்றிருங் குழலை விட்டுத் தொழுதுவாழ் சுற்றத்தோடும்.(யுத்:956)

துன்று - அடர்ந்த. துன்று கரு நறுங்குஞ்சி எயினர் கோன். (அ : 1020)

துன்றுதல் - செறிதல். அடர்ந்திருத்தல். நெருங்குதல். துன்று தாமரைக் கண்பனி சோர்கின்ருன். (அ : 787)

துன்றுதார் - மலர்கள் நெருங்கிய மாலை. துன்று தாரவன். (யுத் : 122)

துன்றுபுரிகோதை-அடர்ந்த நெரிந்த கூந்தலையுதுடைய சீதுத. துன்று புரி கோதை எழில்கண்டு. (பா : 1234)

துன்னங்கொள்ளுதல் - துளைக்கப்படல். அம்பிட்டுத் துன்னங் கொண்ட புண்ணுடை நெஞ்சம். (யுத் : 1378)

துன்னம் - துளை. கிழிவு. துன்னங் கொண்ட புண். (யுத்:1378)
2. தையல். (உ.வி) (யுத் : 1378)

துன்னரு நெறி - நெருங்குவதற் கருமையான வழி. துன்னரு நெறியின் வந்து தொடர்ந்திலிர். (யுத் : 1625)

துன்னல் - கிட்டல். சமீபித்தல். விஞ்சை வேந்தர்கள் துன்னினர் முறை முறை துறையிற் சுற்றவே. (ஆ : 567)

துன்னலர் - பகைவர். துன்னினர் துன்னலர் என்பது சொல்லார். (பா : 446) (சு : 1111)

துன்னலன் - பகைவன். துன்னலன் ஒருவன் பெற்ற புகழெனச் சுட்ட தன்றே. (ஆ : 669)

துன்னுதார் - வேண்டாதார். துன்னுதார் வாயின் வைதன ஒத்தன அத்துணை மழுவொடு கொலைவாளும். (யுத் : 212)

துன்னூர் - பகைவர். துவசமார் தொல்லமருள் துன்னுரைச் செற்றும். (ஆ : 99)

துன்னி -\நெருங்கி. சார்ந்து. ஆழியைத் துன்னி. (பா : 113

2. அடைந்து. மாசறு சுடர்மணி மண்டபந் துன்னி. (பா:188)

துன்னிடல் - நெருங்கல். தொக்க பூதமவை ஐந்தொடு துன்னிட்டு. (யுத் : 808)

துன்னிமித்தம் - துர் நிமித்தம். தீக்குறி. சொலத்தகாத் துன்னி மித்தங்கள் எங்கணும்வர. (யுத் : 107) (யுத் : 3338)

துன்னிய - நிலைத்த. துன்னிய தானம் உயர்ந்தவர் கொள்க. (பா : 446)

துன்னினர் - நண்பர். உறவினர். துன்னினர் துன்னலர் என்பது சொல்லார். (பா : 446)

துன்னினன் - நெருங்கினன். அத்துன்னு மாநகரினின் றெதிர்வரத் துன்னினன்- (பா : 1132)

துன்னு கானம் - மரங்கள் நெருங்கிய காடு. துன்னுகானந் தொடரத் துணிவதோ. (அ : 315)

துன்னுதல் - 1. பொருந்துதல். பொருந்தும் நிகழ்ச்சி. துன்னுதல் இடையுளதென நனி துணிவான். (ஆ : 105)

2. **வருதல்.** உன் பெருங்கடற் சேனையோடுந் துன்னுதி. (கி : 426)

3. **அடைதல். பெறுதல்.** துப்பழிந்துய்வது துறக்கந்துன்னவோ. (சு : 503)

4. **நெருங்குதல். பின் தொடர்தல்.** வாழிய வென்றயின் மன்னவன் துன்னவந்தான். (அ : 186)

5. **தைத்தல்.** துன்னெடுஞ்சீரையுஞ் சுற்றி. (அ : 480)

6. **போலுதல்.** மின் துன்னு மருங்குல். (சு : 498)

7. **அணுகுதல்.** இளவலை என்னுழை துன்னச் சொல்லுதிர் -(யுத் : 4138) துன்னிய பொன்னகர். (கி : 869)

8. **அடர்ந்திருத்தல்.** துன்னிருள். (கி : 848)
9. **நிறைதல்.** துன்னொளி. (சு : 110)
10. **செறிதல்.** துன்னு போர்ப்படை. (யுத் : 2486)

துன்னொளி - நிறைந்த ஒளி. அழகைப் பருகும் இந்நகர் துன்னொளி பரத்தலில். (சு : 110)

துனி - 1. கோபம். துனியறு முனிவரர் தொடர்ந்து சூழ்வர (பா : 246)
2. **துன்பம்.** துனியின்றி உயிர் செல்ல. (பா : 734)
3. **வெறுப்பு. மனத்துள்ள கறு.** துனியுழந் தயர்வதென் னே (யுத் : 1257) துனியிருந்த வன்மனத்தினள். (ஆ : 316)
4. **ஊடல்.** துனிவரு நலத்தொடு சோர்கின்ருள். (பா: 1096)
5. **துன்னி என்பதன் இடைக்குறை.** துனிவரு நலனெனத் தொடர்ந்து தோற்கலா நனிவரு பகை. (அ : 23)
6. **குற்றம். அபராதம். பிழை.** துனியறு புருவம். (சு : 362) யாமுயன்ற துனிகள் என்கொலோ. (யுத் : 2563)
7. **மிக்க மனக் கலக்கம்.** துனிவரு துன்ப நீ துறத்தி தொல்லை யோய். (யுத் : 2741)
8. **பிரபஞ்சத்துயர்.** (உ.வி) துனியறு முனிவரர். (பா : 246)
9. **மாறுபாடு.** முனிவருஞ் செறுநரான தேவர். (யுத் : 1370)
10. **அச்சம்.** துனியுழந்திடத் துயர்தரு கொடுமனத் தொழிலோர் (யுத் : 4110)

துனிபடல் - அச்சமுறல். துனிப்பட்டாரென்னத் துளங்கினர் (யுத் : 1543)

துனியுறு புலவி. - துபரம் மிகுதற்குக் காரணமான ஊடல். துனியுறு புலவியைக் காதற் சூழ் சுடர் பனி யெனத் துடைத்தலும் (பா : 1110)

துனியுறு முனிவன் - பெருங்கோபம் மிக்க முனிவன். கோசிகன். நான்முகனையும் படைப்பென் ஈண்டெனுத் தொடங்கிய துனியுறு முனிவன் தோன்றினுன். (பா : 320)

துருவரு துன்பம் - மனங் கலங்குதற்குக் காரணமான துன்பம். துனிவரு துன்ப நீ துறத்தி. (யுத் : 2741)

துனிவரும் - துனிக்கும். வெறுக்கும். வரும் - துணைவினை. துனிவரும் செறுநர். (யுத் : 1370)

துனே - விரைவு. துனேபரித்தேர். (சு : 935)

துனேதல் - விரைதல். துனேயும் வாம் பரித் தேரினன். (ஆ:508) துனேயும் வேகத்தால் உருமேறுந் துண்ணெனை. (யுத் : 3796)

துனேவலம் - விரைந்து செல்லும் வலிமை. துனேவலத் தயிரா வதம். (பா : 490)

தூ

தூ - 1. தசை. தூநிறப்படைக்கலத் துணேவர். (யுத் : 323) தூ வெழு குருதி வெள்ளம். (பா : 1381) தூவகலாத வைவாய் எஃகு. (யுத் : 1227) தூவுண்ட வயிர வாளி. (யுத் : 2374) (யுத் : 1177) (பா : 729) (அ : 543) (ஆ : 352) (ஆ : 403)

2. சுத்தம். வெண்மை. தூமதியை. (சு : 342)

தூக்கறுத்தல் - கூரையிலிருந்து தொங்குவனவும் மிகவும் நீண்டிருப்பவுமான நாணற் புல்லேயும். மூங்கிற் கைகளேயும் அறுத்து ஒழுங்கு படுத்தல். அயிலுடைச் சுரிகையாலருகு தூக்கறுத்து. (அ : 783)

தூக்கிக்கொள்ளத் தகும் - ஏற்றுக் கொள்ள வேண்டும். கேட்கத் தக்கது. (அண்) (யுத் : 4161)

தூக்கிய – நிமிர்ந்து. வீங்கிய. தூக்கிய அனுமன் மெய்ம்மயிர் சுறுக் கொள. (சு : 1110)

தூக்கு - உறி. குண்டிகை தூக்கினர் குந்திய நடையினர் (பா : 858)

தூக்குதல் - 1. தொங்க விடுதல். தொங்குதல். கொழுந்து ஒளி கஞலத் தூக்கி. (பா : 1086)

2. தாங்குதல். தொலேவிலாத் தூணி தூக்கினன். (யுத்:1076)

3. அளவிடல். ஆலோசித்தல். நுதியுடை மதியின் ஒன்றுந் தூக்கிலன். (ஆ : 787)

4. ஒப்பிடுதல். அமரரோடு அசுரர் போரைத் தூக்கினர் முனிவர். (யுத் : 2004)

5. ஆராய்தல். பின் தூக்கின் இது சாலப் பிழையாகும் (சு : 221)

6. **தணிந்து சிறிதாய்ப் பெருகுதல்.** அடுத்த நீர் ஒழிந்தன அருவி தூங்கின. (கி : 556)

7. **ஏற்றுக்கொள்ளல்.** ஒரு மாற்றம் நீ தூக்கிக் கொள்ளத் தகும் எனச் சொல்லினன். (யுத் : 4161)

தூக்குறி - தூய்மையான கோலம். தூய பொற் புயத்துப் பொதி தூக்குறி. (பா : 1036)

தூகின்றார் - கொப்பளிக்கின்றார். தொண்டை வாய்ப் பெய்து தூநீர் கொழுநர் மேற்றூகின்றாரும். (பா : 1018)

தூங்க - ஒலிக்க. தண்ணுமை தழுவித் தூங்க. (பா : 572)

தூங்க மளி - தொங்குகின்ற படுக்கை. தோளின் நாற்றிய தூங்க மளித்துயில். (சு : 271)

தூங்கிய - தொங்குகின்ற. தூங்கிய மாங்கனி. (பா : 64)

தூங்கிருள் - தொங்கும் இருள். பேரிருள். நெடுந் தூங்கிருள் அடைய. (யுத் : 3045)

தூங்குதல் - 1. செறிதல். தூங்கிருட் பிழம்பு. (பா : 113) தூங் கொலி ஆறு. (அ : 641)

2. **தொங்குதல்.** வாலிடைத் தூங்கச் சுற்றி. (யுத் : 943) சோரு நாகம் நிலனுறத் தூங்குமால். (யுத் : 653) தூங்கின பாய்பரி. (சு : 921) தூங்க. (யுத் : 1336)

3. **தங்குதல்.** செஞ்சரம் தூங்கு தூணி. (ஆ : 549) சொன்னன சொன்னன செவியிற் றூங்கவும். (சு : 500)

4. **பெருகுதல்.** (உ வி) அருவி தூங்கின. (சு : 500)

5. **இடையறு தொழுகல். வீழ்தல்.** மாங்கனி தூங்கிய சாறும். (பா : 540)

6. **சோர்ந்து விழுதல்.** முலை மிசைத் தூங்கிய முகத்தர். (யுத் : 3899)

7. **காரியத்திற் கருத்தின்றியிருத்தல். கவலையின்றி இருத்தல்** சொன்ன எல்லையினூங்கினுந் தூங்கினன். (கி : 565) சொற்பிரி யாப்பழி சுமந்து தூங்குவேன். (சு : 501)

8. **ஒலித்தல்.** தைவரு மகரவீணை தண்ணுமை தழுவித்தூங்க. (பா : 572) (உ.வி) (சு : 500)

9. **சோர்தல். சோம்புதல்.** தூங்கலில் குயில்கெழு சொல்லி னும்பரின் ஓங்கிய அழகினள். (ஆ : 839)

10. **அசைதல்.** கற்பகவல்லியர் தோளின் நாற்றிய தூங்கமளித் துயில். (சு : 271)
11. **மெத்தென எழுதல்.** தொளையுறு புழை வேய் தூங்கிசைக் கானம். (சு : 417)
12. **தாமதித்தல். காலந்தாழ்த்தல்.** நானுடைத் தூய்மைகாட் டவும் இத்துணை தூங்கினேன். (சு : 629)
13. **பொழிதல். பெய்தல். சொரிதல்.** (அண்) தூங்கு மாரி எனச்சொரி வாளிகள். (யுத் : 1031)
14 **உறங்குதல்.** சொரிந்த சோரி தன் வாய்வரத் தூங்குவான். (யுத் : 1280)
15. **தணிதல்.** அருவி தூங்கின. (கி : 550)
16. **சோம்புதல்.** தூங்கலில் குயில் கெழுசொல். (ஆ : 839)

தூங்கொலி - மிக்கஒலி. சுழிபட்டோங்கிய தூங்கொலியாறு. (அ : 642)

தூச்சுடர் மாடம் - தூய ஒளியினையுடைய மாளிகைகள். (யுத்: 791)

தூசி - முன்னணிப்படை. தூசியும் இரண்டு கையும் நெற்றியும் சுருண்டு நீர் மேற் பாசியினெதுங்க. (யுத் : 1887)

தூசி செல்லுதல் - முன்னணியிற் செல்லுதல். வாலிசேய் தூசி செல்ல. (யுத் : 4282)

தூசினுத்தரிகம் - பஞ்சினாலாகிய மேலாடை. கோசிகத்துகில் உற்ற கொழும் கனல் தூசினுத்தரிகத்தொடு சுற்றுரு. (சு : 1207)

தூசினெடு வெண்படமுடைக் குடில்கள் - (வெண் தூசினெடு படமுடைக் குடில்கள்) வெண்மையான நீண்ட துகில்களாலாகிய படமாடங்கள். (அண்) வெண்ணிறமுள்ள ஆடைகளினு லியன்ற விருது கொடியையுடைய கூடாரம். (வை. மு) தூசி, படம் துணி விசேடங்கள். குடில் - கூடாரம். (கலா) (பா : 915)

தூசு - ஆடை. அரையாடை. [அந்தரீகம்] உத்தரிகத்தொடு தூசு வீசினர். (யுத் : 2082)

தூசு செல்லுதல் - முன்னணியிற் போதல். வாலி சேய் தூசு செல்ல. (யுத் : 3132) [பா : பே]

தூசு நீக்கி - ஆடைகளை அவிழ்த்து. களித்த தேவர் எல்லாரும் தூசு நீக்கி ஏறிட ஆர்த்த போது. (யுத் : 3129)

தூசு நீவி - **ஆடையின் முடிச்சு.** (கலா) **ஆடையின் கொய்சகம்.** (அண்) நிறஞ்செய் கோசிக நுண்தூசு நீவி நீவாத அல்குற் புறஞ்செய் மேகலையும். (பா : 214)

தூசு வீசி ஆர்த்தல் - **ஆடையை அவிழ்த்து வீசி ஆரவாரித்தல்.** தேவர் எல்லாரும் தூசி வீசி ஏறிட ஆர்த்தபோது. (யுத்:3129) [பா : பே]

தூசு வீசுதல் - **அரை ஆடையை எடுத்து ஆகாயத்தில் எறிதல். மகிழ்ச்சிக்குறி.** ஊசல் நீங்கினர் உத்தரிகத்தொடு தூசுவிசினர். (யுத் : 2082)

தூசுறை - **தூசினாலாகிய உறை.** வெண்ணிலா... இலங்கைகாவலூர் தூசுறையிட்டது போன்று தோன்றிற்றால். (சு : 154)

தூசுறையிட்டது போன்று - **தூசுறை இடப்பட்டது போன்று.** (சு:154)

தூடணன் - **கரனது படை வீரன்.** தூடணன் திரிசிராத் தோன்ற லாதியர். (ஆ : 418)

தூண் - 1. **மாமிசத்தடி.** அலகை தூணெறிந்தன கையெடுத்தாடின துணங்கை. (யுத் : 1427)

2. **கம்பம்.** தூணில் நின்றுளனென்னிற் கள்வன் நிரப்புதி நிலைமை என்றான். (யுத் : 253) துண்டத் தூணதனிற்றோன்றுங் கோளரி. (சு : 934)

தூண்டகு திரள் புயம் - **தூணின் தன்மை வாய்ந்த திரண்ட தோள்கள்.** அன்பனும் தூண்டகு திரள் புயம் குலுங்கத் துண்ணென. (அ : 448)

தூண்டர நிவந்த தோள் - **தூண்போல் உயர்ந்த தோள்கள்.** தூண்டர நிவந்த தோளான் பின்னரும் சொல்லுவான். (அ : 1033)

தூண்டரு விளக்கனாள் - **தூண்டுதல் வேண்டாத விளக்குப் போன்றவளான சீதை.** தூண்டரு விளக்கனாள் இனைய சொல்லினாள். (சு : 597)

தூண்டல் செய்யா மணிவிளக்கு - **தூண்டுதல் செய்ய வேண்டாத இரத்தினதீபம்.** தூண்டல் செய்யா மணிவிளக்கின் சுடரால் இரவைப் பகல் செய்தார். (பா : 532)

தூண்டற் கொத்த சிந்தையினர் - தூண்டி விடுவதில் முனைந்த மனத்தையுடையவர். (அரக்கியர்) (சு : 489)

தூண்டிடு தேர் - தூண்டி ஓட்டுதற்குரிய தேர்கள். தூண்டிடு தேர்களும் துரக ராசியும். (அ : 992)

தூண்டுதல் - 1. செலுத்துதல். இரதம் இன்னே தூண்டினை மீள்வ தாக்கின். (அ : 549)

2. அனுப்புதல். ஏவியனுப்புதல். தூதுவன் ஒருவன் தன்னை இவ்வழி விரைவில் தூண்டி. (யுத் : 921)

3. உண்டாக்கி வளர்த்தல். தூண்டி நின்ற தொன்மைதான். (ஆ : 70)

4. வளர்தல். தூண்டு சின வாள் நிருதர். (ஆ :169)

தூண்திரள் தடந்தோளான் - தூண்போலத் திரண்டுள்ள பெரிய தோள்களையுடைய அனுமன். (கி : 602) [பா : பே]

தூணம் - தூண். அம் சாரியை. தோண் மிடைந்தன தூண மிடைந்தென. (பா : 845) செம்மணித் தூணஞ் சேர்த்திய அவ் வெழில் மண்டபம். (யுத் : 17)

தூணி - அம்பருத்தூணி. அம்புப் புட்டில். மெய்ம்மை போல் என்றுந் தேய்வுருத் தூணியார்த்து. (யுத் : 336)

தூணெறிதல் - 1. தூண் பொருந்துதல். தூணை ஒத்தல். அடல் வலித் தூணெறிந்தனைய விரல்கள் கோதையொடு சுவடெறிந்த தொரு தொழில்பட. (யுத் : 2013) (உ.வி) (யுத் : 1427)

2. தூண்களை வீசுதல். தூணெறிந்தன கையெடுத்தாடின துணங்கை. (யுத் : 1427)

தூதர் - தூதுவர். துன்னருந் தூதர் சென்றார். (யுத் : 1937)

தூதரைக் கோறல் - தூதுவர்களைக் கொல்லுதல். மறத்து நீங்கிய ஆதரைக் கோறலும் அழிவு செய்யினுந் தூதரைக் கோறலும் தூய்தன்றாம் என. (யுத் : 404)

தூதன் - இராம தூதனாகிய அனுமன். தூதனிட்ட மலையின் துவலை யால். (யுத் : 656)

தூதனைப் பெற்ற செல்வன் - கேசரி. சிவன் காண் அயன் காணெ னுந் தூதனைப் பெற்ற செல்வன் அவன் காண் நெடுங் கேசரி யென்பவன். (யுத் : 834)

தூதியர் - தூது விடப்பட்ட மகளிர். தூதியர் முறுவல் நோக்கி உயிர் வந்து துடிக்கின்ருரை. (சு : 209)

தூது - தூதுவர். ஓலையும் தூதும் போக்கினுன். (பா : 815) (யுத் : 3508) (யுத் : 3945)

தூது செல்லல் - தூதராகப் போதல். தருமமே தூது செல்ல. (பா : 565)

தூதுந்தல் - தூதினைச் செலுத்துதல். தேறல் மாந்தித் தூதுந்தலிற் பொழுதுபோம் சிலர்க்கவ் வொண்ணகர். (பா :161) [பா : பே]

தூது புகுதல் - தூதுவனுகப் புகுதல். நீ என் கொலடா இரும் புரத்தினுள் தருந் தூது புகுந்தபின் அரக்கரைக் கொன்றது. (சு : 1150)

தூது போக்கல் - தூதனுப்பல். ஒருத்தி பையுளாள் சுந்தரனெருவன் பால் தூது போக்கினுள். (பா : 1080)

தூதுவர் - ஒற்றர். அயிந்தரவாய் முதல் துன்னு போர் கண்ட தூதுவர் ஓடினுர். (யுத் : 1044)

தூதுவன் - தூதன். தூதுவன் ஒருவன் தன்னை இவ்வழி விரைவில் தூண்டி. (யுத் : 921)

தூதுளங்கனி - தூதுளம் பழம். தூதுளங்கனியை வென்று துவர்த்த வாய் வெண்மை தோன்ற. (சு : 203)

தூநவின்ற வேல் - பகைவரின் தசைகள் தோய்ந்த வேற்படை. தூநவின்ற வேலரக்கர். (சு : 1088)

தூப் போலக் கனி - மாமிசம் போன்ற கனி. தூப் போலக் கனிபல வும் சுவையுடைய தரவல்லேன். (ஆ : 352) [பா : பே]

தூபம் - 1. கரும்புகை. தூப முற்றிய காரிருட்பகை. (அ : 246)
2. தூமம். புகை. தூபமே பெருகும் வண்ணம் எரியெழச் சுட்ட தன்றே. (யுத் : 615) தூபத்தினுயிர்ப்பர். (யுத் : 2325)
3. வாசனைப் பொருளால் ஆகிய புகை. மனத்தான் மலர் புனல் சாந்தமொ டவி தூபமும் வகுத்தான். (யுத் : 3043)

தூப முற்றிய காரிருட்பகை–கரும் புகை போன்று சூழ்ந்து கொண்ட கரிய இருளாகிய பகை. (அ : 246)

தூம்பு - மதகு. செங் கழுநீர்க் குளத் தூம்பு காலச் சுரிவளை மேய்வன. (பா : 66) தூம்புறழ் குருதிமண்ட. (யுத் : 2009)

2. மதகின் துளை. தூம்பெனத் தெரிந்த மூக்கினள். (ஆ : 368) தூம்புறங்கும் முகத்தின. (யுத் : 1287)

3. துவாரம். தொகைக்கனற் கருமகன் துருத்தித் தும்பெனப் புகைக் கொடி கனலொடு புகைக்கு மூக்கினன். (ஆ : 1152)

தூம்புறங்கும் முகம் - துவாரம் பொருந்திய முகம். தூம் புறங்கும் கனவரைக் கைம்மலை. (யுத் : 1287)

தூம் பெனத் தெரிந்த மூக்கு - மதகின் தொளை போன்று தெரிந்த மூக்கு. தூம்பெனத் தெரிந்த மூக்கினள் வாயினள். (ஆ : 368)

தூமக் கண் அரக்கன் - தூமிராட்சன். புகைநிறமான கண்களை யுடைய இராக்கதன். தூமக்கணரக்கனும் தொல்லமர் யார்க்குந் தோலா மாபக்கனும். (யுத் : 1977)

தூமக் கண்ணன் - தூமிராட்சன். தூமக்கண்ணனும் அனுமனும். (யுத் : 2301)

தூம கேது - புகைக் கொடி. வால் நட்சத்திரம். தூம கேது புவிக் கெனத் தோன்றிய வாமமேகலை மங்கையர். (அ : 114)

தூமத்தார் குழல் - நறும் புகை யூட்டிய கூந்தல். தூமத்தார் குழல் தூமொழித் தோகைபால் காமத்தாலன்று கல்வியினல் என்ருள். (பா : 1187)

தூம நாட்டத்தன் - தூமி ராட்சன். தூம நாட்டத்தன் என்றுளன் தேவரைத் துரந்தான். (யுத் : 505)

தூமம் - புகை. தூமத் தார்குழல். (பா : 1187)

தூமம் கால்தல் - புகை எழச் செய்தல். தூமங் கால்வன. (யுத்:960)

தூம முண் குழலியர் - புகையூட்டப் பெற்ற கூந்தலையுடைய பெண் கள். தண்ணகில் தூமமுண் குழலியர். (பா 1055)

தூம வெங்கனல் - புகை பரந்த வெவ்விய தீ. தூம வெங்கனல் அந்தணர் சொரிந்த ஓம வேள்வி. (யுத் : 137) (யுத் : 2953)

தூம வேலரக்கர் - புகையுமிழும் வேற்படை ஏந்திய அரக்கர். தூம வேலரக்கர் தம் நிணமும் சோரியும் ஓம வெங்கனலிடை உகு மென்றுன்னிய தாமரைக் கண்ணன். (பா : 467)

தூமுரன் - பொய்கையரக்கன். துமிரன். தூ நிவந்தவேல் தூமுரன் எனும் பேரான். (கி : 900) [பா : பே]

தூய்தன்று - நல்லதன்று. (யுத் : 404)

தூய் நீராடி - பரிசுத்தமாக நீராடி. பாற்கடலில் தூய் நீராடி. (யுத் : 3866)

தூய்மை - தூய தன்மை. மற்றிதன் தூய்மை எவ்வாறுரைப்பது. (யுத் : 4091)

தூய - தூவிய. வீசிய. தூய துவலையால். (யுத் : 679)
2 தூய்மையான. சிறந்த. கிழங்குங் கனிகளுந் தூய தேடிக் கொணர்ந்தனர். (அ : 632)

தூய கங்கை - தூயதாகிய கங்கை. தூய கங்கைத் துறை விடுந் தொன்மையான். (அ : 645)

தூயகை - தூய்மையான கை. ஐயனை நாடித் தன் தூய கையிற் றெழலுறுவான்தனை. (அ : 833)

தூய கோசலை - தூய மனமுடைய கோசலை. துன்னருந் துயர் கெடத் தூய கோசலை பொன்னடி தொழுவன். (அ : 880)

தூய தம்பி - தூய்மை மிக்க தம்பி. தூய தம்பியுந் தானும். (அ:58)

தூய தவங்கள் தொடங்கிய தொல்லோன் - புனிதமான தவங்களைத் தொடங்கி முடித்த பழையோனான கௌசிகன். (பா : 776)

தூய தாய் - கௌசலை. ஐயனைத் தந்த அத் தூய தாயைத் தொழலுறுவான்தனை. (அ : 833) [பா : பே]

தூய தாள் - தூய்மையுடைய திருவடிகள். உன்னொரு துணைவன் தூய தாள் ஒருங்கிடையுணர்வினோர். (சு : 586)

தூயது துறக்கம் - தூயதாகிய வீட்டுலகம். இதுவன்றோ தூயது துறக்கமென நெஞ்சு துணிவுற்றார். (கி : 858)

தூய நீர் - தூய்மையான கங்கை நீர். முனிவர்தந் தருமப் பன்னியர் தூய நீராட்டினர். (அ : 1153)

தூயவன் - 1. தூய்மையானவன். பரத்து வாசன். தூயவன் உயிர் போலும் அருளுற்றான். (அ : 717) பிரகலாதன். (யுத்:213)
2. தூய்மையானவன். தசரதன். அயர்ந்து தேருத் தூயவன் இருந்த சூழல். (அ : 288)
3. தூய்மையானவன். சிவன். அவிர் மதியணிந்த தூயவன். (பா : 507)

4. பரிசுத்தகுணமுள்ளவன். இராமன். தூயவன் பணியா முன்னம் சொல்லுவாள். (ஆ : 265)

5. தூயோனுகிய இறைவன். (யுத் : 212)

தூயவன்தனைத் துணை யெனவுடையவன் - பிரகலாதன். (யுத்:212)

தூயவாசகம் - தூய்மையான சொல். தூயவாசகஞ் சொன்ன தோன்றலை. (அ : 910)

தூயவை - தூய காரியங்கள். தூயவை துணிந்த போது பழிவந்து தொடர்வதுண்டோ. (யுத் : 1360)

தூயன் - தூய்மையுடையவன். நன்றுணர்வு உரையுந் தூயன். (சு : 515)

தூயன - நல்ல விலங்குகள். தூயன உறைகானம். (அ : 682)

தூயை - தூய்மையுடையை. மாயா உயிர்தன்னைத் துறந்தாயாகின் தூயையுமாதி. (அ : 879)

தூர் - 1. சேறு. தூரிடை உறங்கும் ஆமை. (பா : 37)

2. அடிமரம். தூரிடை மரத்துமோதும். (யுத் : 1397) தூரொழுக்க மருமையின். (சு : 1202)

3. புதர். (உ.வி) தூரிடை மரம். (யுத் : 1397)

தூர்க்கத் தூர்க்க - தூர்க்குந்தோறும். தூர்க்கத் தூர்க்க நின்று ஆர்த்தன சில சில. (யுத் : 625)

தூர்க்கும்மனம் - தூர்த்துவிட வேண்டும் என்னும் மனம். அலைக்கு மாழி அடங்கிட அங்கையால் மலைக்குலங்களில் தூர்க்கும் மனத்தினன். (ஆ : 299)

தூர்த்தல் - 1 நிரப்புதல். தூர்த்தன கனகமாரி. (ஆ : 259 தூர்க்கும் மனத்தினன். (ஆ:299) தூர்த்தார். தூர்த்த. (அ:259)

2 அடைத்தல். சூர் கனகராசியொடு கோடிமணியாலும் தூர்மின் நெடுவீதியினை. (அ : 281)

3. மறைதல். ஆயிரமாயிரம் அம்பால் தூர்த்தனர். (சு : 910)

4. மூடுதல். அழித்தல். சூழிக்கொடுங் கடுங்காற்றதனுடனே வரத்தூர்க்கும். (யுத் : 3045)

தூர்த்தன் - காமுகன். காதலன். விசயப்பாவை தூர்த்தன். (யுத் : 2545)

தூர்தல் - 1. மறைதல். காரும் வானமும் கதிரும் நாகமும் தூருமே அவர் பெரியதோள்களால். (கி : 120)

2. நிறைந்திருத்தல். நிரம்புதல். கங்கை மடுத்திடை தூராதோ. (அ : 1013)

தூர்ப்பு - நிரப்புதல் பலவகைப் படைகள் தூர்ப்படங்கின. (யுத் : 1199)

தூரம் - நெடுந்தொலை. சேய்மை. தூரமில்லை மயிலிருந்த சூழல் என்று மனஞ் செல்ல. (யுத் : 8) (ஆ : 975)

தூரவட்ட வெண்டிசை - சேய்மையும் வட்டமுமான எட்டுத்திசைகள். தூரவட்ட எண்திசைகளைத் தனித்தனி சுமக்கும் பார எட்டினோடு. (ஆ : 526)

தூரி - ஓர் இசைக்கருவி. பாண்டில் போர்ப்பணவம் தூரி. (யுத் : 2397)

தூரியக்குரல் - வாச்சிய முழக்கம். தூரியக்குரலின் வானின் முகிற் கணந் துணுக்கங் கொள்ள. (ஆ : 424)

தூரியம் - 1. பேரிகை. தூரியக்குரல். (ஆ : 424)

2. மத்தளம். துளிக்குரன் மேகம் வள்வார்த்தூரியம் துவைப்ப போன்ற. (கி : 475)

3. முரசம். மும்மைத் தூரியம் அடங்கின. (சு : 253)

4. இசைக்கருவிகள். பேரியங்கள் முருடு ஆகுளி பெட்குந் தூரியம் கடலினின்று துவைப்ப. (யுத் : 816)

தூருதல் - மறைதல். கதிரும் நாகமும் தூருமோ. (கி : 120) **தூர்தல் பார்க்க.**

தூவணை குருதிச் செக்கர்ச் சுவடு - தசையோடு பொருந்திய இரத்தக் கறையாகிய சிவந்த சுவடு. (யுத் : 900)

தூவல் 1. போடுதல். கோபுர வாயிலில் தூவினன் துகைத்தான். (யுத் : 959) தூவிய மலர்த் தொகை. (சு : 707)

2. சிந்துதல். வெளியே சிந்துதல். வாய்வழி உதிரந்தூவுவான். (யுத் : 3826)

தூவி - 1. சிறகு. பறவையின் இறகு. தூவியன்னம். (பா : 543)

2. தோகை. மயிலொன்றின் தூவியின் மணநாற. (அ : 696)

3. மென்மையான இறகு. தூவியன்னமன்னள். (கி : 494)

தூவியன்னம் - சிறகுகளையுடைய அன்னம். தூவியன்னந் தம்மின மென்று நடை கண்டு தொடர. (பா : 543)

தூளி - தூள். தூசி. புழுதி. தூளியின் படலைவந்து தொடர்வுற. (ஆ : 426)

தூளி பொங்குதல் - புழுதி மேலெழுதல். துன்றிருந் தூளி பொங்கித் துறுதலால். (சு : 941)

தூளியின் நிமிர் படலம் - (நிமிர் தூளியின் படலம்) மேலே கிளம்புகின்ற புழுதியின் தொகுதி. தூளியின் நிமிர் படலம் போய் இமையவர் விழிதுற. (சு : 768)

தூளியின் படலை - தூசியின் தொகுதி. (திரள்) தூளியின் படலை வந்து தொடர்வுற. (ஆ : 426)

தூளி வெள்ளம் - புழுதிக்கூட்டம். கடலையெல்லாம் தூர்த்தது .. தூளி வெள்ளம். (பா : 892)

தூற்றுதல் - 1. வாரியிறைத்தல். நீற்றியல் நுணுகுறப் பிசைந்து நீங்கெனத் தூற்றினன். (யுத் : 1476)
2. வீசுதல். தென்றல் தூற்ற. (யுத் : 1582) தென்றல் தூற்றும் குறுந்திவலை. (யுத் : 5)

தூறு - புதர். தூற்றிளங் கொடி முதல் தூறு நீங்கிய குன்றெனப் பொலிந்தன குவவுத் தோள்களே. (அ : 971) தூறுமாமரம். (யுத் : 972) மரத்தொடுதூறு. (ஆ : 902)

தூறுமாமரம் - அடர்ந்துள்ள மரங்கள். (யுத் : 972)

தெ

தெங்கிள நீர் - தெங்கின் இளநீர். தெங்கிள நீரெனத் தெரிந்த காட்சிய. (அ : 970)

தெங்கின் இளநீர் - தென்னையின் இளநீர். செம்மாந்த தெங்கின் இளநீர். பா : 991)

தெங்கின் குரும்பைகள் - தென்னை மரத்தின் குரும்பைகள். பிறங்குமுலை தெங்கின் குரும்பைகள் பொருஞ் செவிலி மங்கையர். (அ : 542)

தெங்கு - தென்னமரம். தெங்கிளம் பாளை. (கி : 934)

தெசந்தொகக்கிரீவன் - தெசம் தொகு அக்கிரீவன். இராவணன். (கிரீவம் - கழுத்து) நின் தோளுடை வன்மையால் தெசந் தொகக் கிரீவனைக் கடிந்து. (யுத் : 4071)

தெசம் - தசம். பத்து. (யுத் : 4071)

தெசரதன் சிறுவன் - இராமபிரான். (யுத் : 763)

தெட்ட - முதிர்ந்த. (ஆ : 81)

தெட்ட மதம் - முதிர்ந்த மதம். (அண்) மதம் முற்றியதாற் பெருகிய மதநீர். (கலா) கனிந்த மதம். (வை.மு) திசை கட்டிய மால் கரி தெட்டமதப் பசை கட்டின கிட்டின பற்பல போர். (ஆ : 81)

தெட்டவர் - தெளிந்தவர். பரமஞானம் போய்த் தெட்டவர் அல்லரேல்... யாவர் விடுளார். (அ : 20)

தெட்பு - தெளிவு. உலகமூன்றில் தெட்புறு பொருள்களெல்லாம் இதனுழைச் செறிந்த வென்றுல். (சு : 95)

தெட்புறு பொருள் - தெளிவாய் ஆராயப்பட்ட பொருள். முதிர்ந்த பாதார்த்தம். (பயைவுரை) (கலா) குற்றம் நீங்கிய உயர்ந்த பொருள். (சு : 95)

தெண்டிரை - தெளிவான அலைகள். தெண்டிரை தாவு வார் புனற் சரயு. (அ : 919)

தெண்டிரைக்கடல் - தெளிவான அலைகளையுடைய பாற்கடல். தெண்டிரைக்கடல் கடைதர வலியது தேடிக் கொண்ட மத்து. (யுத் : 141)

தெண்டிரைக்கலம் - தெளிவான அலைகளையுடைய கடலிற் செல்லும். மரக்கலம். தெண்டிரைக்கலமென விரைவிற் செல்கின்ருன். (ஆ : 961)

தெண்டிரையுலகம் - தெளிவான அலைகளாற் சூழப்பட்ட இவ்வுலகம். தெண்டிரை யுலகந்தன்னிற் செறுநர்மாட் டேவல்செய்து பெண்டிரின் வாழ்வரன்றே. (ஆ : 1022)

தெண்ணீர் - தெளிவான நீர். தெண்ணீர் சோர்கின்ற அருவிக் கண்ணுள். (யுத் : 874) (பா : 1115)

தெப்பம் - புணை. துறப்பெனும் தெப்பமே துணை செயாவிடின். (அ : 21) மாணையின் கொடியால் ஒங்கு தெப்ப மொன்றமைத்து. (அ : 725)

தெம் - பகைவர். (யுத் : 2168)

தெம்மடங்குதல் - பகைவர் ஒடுங்குதல். தெவ் மடங்குதல்· தெம் மடங்கப் பொருதடக்கை. (யுத் : 3868)

தெம் மடங்கிய சேணிலம் - தெவ் மடங்கிய சேண்நிலம். பகைவர் ஒடுங்கிய பெரிய பூமி (யாகிய கோசல நாடு) அயோத்தி யென்பதன் மொழி பெயர்ப்பு. தெம்மடங்கிய சேணிலம் கைகயர் தம்மடந்தை உன் தம்பியதாமென. (சு : 348)

தெம் முறை துறந்து வெல்லல் - பகைவர் முறை தவறி வெல்லுதல். தெம் முறை துறந்து வென்ற செங்களம். (யுத் : 2168)

தெம்முனை - தெவ்முனை. பகைவரது போர்முனை. போர்க்களம். தெம் முனை இராமன் பாதம் வணங்கிட. (யுத் : 1410)

தெய்வக்கடலவன் படை - வாருணாஸ்திரம். கடல் தெய்வமாகிய வருணதேவன் படை. (யுத் : 2380)

தெய்வக்கற்பினள் - 1. தெய்வத்தன்மை வாய்ந்த கற்பரசி. (வேதவதி) தீயிடைக்குளித்த அத்தெய்வக்கற்பினள். (யுத்:93) **2. தெய்வத்தன்மை வாய்ந்த கற்பினையுடையவள். கைகேசி.** திண்டலும் உணர்ந்த அத்தெய்வக் கற்பினள் நீண்ட கண் அனந்தரும் நீங்ககிற்றிலள். (அ:141)

தெய்வக் கற்பு - தெய்வத்தன்மை பொருந்திய கற்பு. தேவர்க்குந் தெரிவரிய தெய்வக் கற்பின் பேர் மகளைத் தழுவுவான் உயிர் கொடுத்துப் பழிகொண்ட பித்தா. (யுத்:3893) தன் அருந்தெய்வக் கற்பு. (சு:295)

தெய்வ கீதங்கள் - தெய்வத்தைப்பற்றிய இன்னிசைப் பாடல்கள். தெய்வ கீதங்கள்பாடத் தேவரு மகிழ்ந்து வாழ்த்த. (அ:267)

தெய்வச் சிந்தைத் திருமறை முனிவர் - தெய்வச் சிந்தனையையே புரியும் நான்மறை வல்ல முனிவர். (யுத் 2786)

தெய்வச் சிலையினர் - தெய்வத் தன்மை பொருந்தின வில்லை யுடையவர். திருவளர் மார்பர் தெய்வச் சிலையினர். (பா:887)

தெய்வஞ் சீறல் - தெய்வக் கோபம். தெய்வஞ் சீறியோ ஓங்கிய விதியினே. (அ:853)

தெய்வச் செயல் - தெய்வீகமாக நிகழும் காரியம். செய்வம் என்று எண்ணின் தெய்வச் செயல் ஒன்றும் தெரியின். (யுத்:2244) [பா:பே]

தெய்வச் செயலன்ன கணை – தெய்வச் செயல் போன்று செயல் புரிய வல்ல அம்பு. (யுத்:1870)

தெய்வத்தச்சன் - மயன். இயற்றினன் கணத்தின் என்பரால்... ...தெய்வத் தச்சனே. (யுத்:13)

தெய்வத் தச்சன் காதலன் - நளன். தெய்வத் தச்சன் மெய்த்திரு நெடுங்காதலன் சேர்ந்தான். (கி:724)

தெய்வத்தரு - 1. கற்பக விருட்சம். பூவுடை யமரர் தெய்வத்தரு வென விசும்பிற் போனுன். (யுத்:2697)
2. தெய்வத்தன்மை வாய்ந்த தேவதாரு போன்ற மரங்கள். (கி : 109)

தெய்வத் திண்டேர் - தெய்வத் தன்மையுள்ள வலிய தேர். ஆண்டகை தெய்வத் திண்டேர் அணுகியது. (யுத்:3677)

தெய்வத் தேன் - தெய்வத் தன்மை வாய்ந்த தேன். அது செவிப் புலம் நுகர்வதோர் தெய்வத்தேன் கொலாம். (அ:956)

தெய்வதம் - தெய்வம். ஆவி நைந்திற அடுத்த தென் தெய்வதங் காள் எனும். (அ:1309) தருமக் கற்பின் தெய்வதந் தன்னே. (யுத்:2859) (அ:531)

தெய்வ நன்னூல் - வேதம். தெய்வ நன்னூல் வித்தகன் ஒருவன். (யுத்:4318)

தெய்வ நாண் - தெய்வ் வில்லின் நாணெலி. கலங்கலீர் எனச் செவித்தல நிறுத்தினன் சிலேயின் தெய்வநாண். (பா:469)

தெய்வநாயகன் - தெய்வங்கட் கெல்லாம் தலேவன். சீதை நாயகன் வேறுள்ள தெய்வ நாயகன். (யுத்:940) (யுத்:427) (யுத்:2150)

தெய்வ நாயகி - இலக்குமி தேவி. தெய்வ நாயகி சென்னியிற் சூடிய தெரியல். (பா:485)

தெய்வ நாறு செஞ்சாந்தம் - தெய்வத் தன்மையாக (இயற்கையாக) மணம் வீசுகின்ற செஞ்சந்தனக் குழம்பு. கையில் நாகமெனக்

கடன் மேனியில் தெய்வ நாறு செஞ்சாந்தமும் சேர்த்தினன். (யுத்:1293)

தெய்வநிதி - தெய்வத் தன்மையுள்ள நவநிதி. தெய்வ நிதிக் கிழவன். (யுத்:1716)

தெய்வ நிதிக் கிழவன் - தெய்வத் தன்மை வாய்ந்த நவநிதிகட்குத் தலைவனான குபேரன். (யுத்:1716)

தெய்வ நீராடல் - தெய்வத் தன்மையுள்ள தீர்த்தங்களில் அபிஷேகஞ் செய்தல். தெய்வ நீராடற் கொத்த செய்வினை வசிட்டன் செய்ய. (யுத்:4315)

தெய்வ நீராறு - ஆகாய கங்கை. தெய்வநீராற்றுத் தெண்ணீர் வானவர் மகளிர் ஆட்ட மஞ்சனமாடு வாரை. (சு:199)

தெய்வ நெடும் படைக் கலங்கள் - சிறந்த தேவாஸ்திரங்கள். தெய்வ நெடும் படைக் கலங்கள் விடுவர் சிலர். (யுத்:3356)

தெய்வ நெறி - தெய்வ சங்கற்பம். தெய்வீகமான வழி. (அண்) மலர்மேல் அவ்வள்ளல் கடைநாள் நிருமித்தவென்ன உயிரோடெழுந்து நிலை நின்ற தெய்வ நெறியால். (யுத்:2217)

தெய்வப் பகழி - தெய்வத் தன்மை வாய்ந்த அம்பு. தெய்வப் பகழி யாற் சிதைந்து வீழ்த்தி. (யுத்:2133)

தெய்வப் படை - தெய்வத்தன்மை வாய்ந்த ஆயுதம். இதனைத் தெய்வப்படையினுற் சமைக்கினல்லால். (யுத்:2548) தெய்வப் பல்படைகாணுன். (சு:185)

தெய்வப் படைக் கலம் - தெய்வத் தன்மையுள்ள படைகள். கோமகற்கினிய தெய்வப் படைக்கலங் கொடுத்தி என்னு. (பா:418)

தெய்வப் பத்தினி - தெய்வத் தன்மை பொருந்திய பத்தினி. (யுத். 2842)

தெய்வப் பருதி - தெய்வத் தன்மை வாய்ந்த சூரியன். கடவுட் சூரியன். பாயிருள் சீய்க்குந் தெய்வப் பருதியைப் பழிக்கு மாலை. (யுத்:607)

தெய்வப்பள்ளி - தெய்வத் தன்மையுள்ள படுக்கை. தெய்வப் பொங்கிரும் பள்ளி புக்கார். (யுத் : 2117)

தெய்வப் பாசம் - தெய்வத் தன்மையுள்ள (மந்திர பலமுள்ள) கயிறு. கையிற் கால்களில் மார்பு கழுத்தில் தெய்வப் பாச முறப்பிணி செய்தார். (யுத் : 222)

தெய்வப்பாடல் - தெய்வத்தன்மையுடன் கூடிய உயர்ந்த பாடல். அருட்பாடல். தெய்வப் பாடலானல்லன். (யுத் : 892) (பா : 1007)

தெய்வப்பாணி - திவ்வியமான ஒலி. அமுதினுன்ற பாடலும் முழ வின் தெய்வப்பாணியும். (யுத் : 2790)

தெய்வப்புலமை - தெய்வத்தினருளாற் பெற்றபுலமை. தெய்வத் தன்மை வாய்ந்த புலமை. தெய்வப்புலமைக் கம்ப நாட்டாழ்வார். (பாயி : 2)

தெய்வப்பூ - தெய்வத்தைப் பூசனை செய்தற்குரிய பூ. (யுத் : 637

தெய்வப் பூதலம் - தெய்வத்தன்மை பொருந்திய பூமி. பொறை தவிர்ந்துயிர்க்குந் தெய்வப் பூதலம். (பா : 51)

தெய்வப் பொற்பூ - தெய்வத்தன்மை வாய்ந்த கற்பக மலர்கள். பொன்மலர். பொங்கொளி விசும்பிற்றங்கும் தெருடரும் புலவர் வாழ்த்திச் சிந்தினர் தெய்வப் பொற்பூ. (சு : 1336) (யுத் : 3103)

தெய்வப்பொன்னி - தெய்வத்தன்மையுடைய காவிரி. தெய்வப் பொன்னியெனலாய புனலாறுமுள. (ஆ : 175)

தெய்வப் பொன்னி நாடு - தெய்வத்தன்மை வாய்ந்த காவிரி வளஞ் செய்யும் சோழநாடு. தெய்வப் பொன்னிநாட் டுவமை வைப்பைப் புலன்கொள நோக்கிப்போனுர், (யுத் : 2713)

தெய்வப்போது - கற்பகமலர். தெய்வப் போதுகு பந்தர் நின்று மந்திரத் திருக்கை புக்கான். (யுத் : 2793)

தெய்வம் - 1. தெய்வசங்கற்பம். *கற்ற நூலுற நோக்கித் தெய்வம் நுனித்தறங் குறித்து.* (அ : 8)

2. **தெய்வத்தன்மை.** (வை.மு) தெய்வ வாட் கண். (கி : 791) தெய்வ வெம்படை. (யுத் : 867)

3. **ஒளி.** (கலா) (கி : 791)

4. **தெய்வங்கள்.** தெய்வம் சீறியோ. (அ : 853) தெய்வமோ என்னும். (யுத் : 1614)

5. **குலதெய்வம். குலதெய்வம் போன்றவள்.** யாவர் தெய்வமே. (சு : 535)

தெய்வமணி - பரிசவேதி ரசமணி. ஆண்டகை தன் மோதிரம் அடுத்தபொருளெல்லாம் திண்டளவில் வேதிகை செய் தெய்வமணி கொல்லோ. (சு : 557)

தெய்வ மணிவிளக்கு - தெய்வத்தன்மை வாய்ந்த ரத்னதீபங்கள். சிந்தித்தது உதவும் தெய்வ மணிவிளக்கொளிருஞ் சேக்கை. (சு : 201)

தெய்வமரணம் - பெருமை வாய்ந்த சாவு. தெய்வத்தன்மை வாய்ந்த முடிவு. தெய்வீக மரணம். சிறந்த சாவு. மொய்யமர் முடித்துத் தெய்வமரணம் என்தாதை பெற்றது என்வயின் வழக்கன்ருமோ. (யுத் : 422)

தெய்வமரம் - ஆல், அசோகு, அரசு என்பன. தோட்டொடுந் துதைந்த தெய்வ மரந்தொறும் துதைந்த புள். (சு : 733)

தெய்வ மருந்து - தேவாமிர்தம். தெய்வமருந்திழந்தவரின் விம்மி. (அ : 593)

தெய்வ மனம் - தெய்வ உள்ளம். எண்ணுக்கும் அறிவிலாத அறிவிஞேர் இருந்து நோக்கும் கண்ணுக்கும் கருதுந் தெய்வ மனத்திற்குங் கடியனுனன். (யுத் : 2702)

தெய்வமாக்கதை - தெய்வத்தன்மை வாய்ந்த சிறந்த கதை. பொய்யில் வேள்விப் புலமையினேர் புகல் தெய்வமாக்கதை மாட்சி தெரிக்கவே. (பா : 6)

தெய்வமாக்கவி - தெய்வத்தன்மையுள்ள சிறந்த பாடல்கள். தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே. (பா : 6) [பா : பே]

தெய்வமாக்குன்று - மருத்துமலே. தெய்வமாக்குன்று தாங்கிய குரிசில் போயினுன். (யுத் : 2772)

தெய்வ மாத்தச்சன் - விசுவகர்மா என்னும் தேவர்களின் சிற்பி. தெய்வ மாத்தச்சன் துணிவின் வந்தனன் தொட்டழகிழைத்த அத்தொழில்கள். (சு : 103)

தெய்வ மாத்தேர் - தெய்வத் தன்மையுள்ள பெரிய தேர். வானுளோரும் தேருதது மற்றவனேறிய தெய்வமாத்தேர். (யுத்:1971)

தெய்வ மாநகர் - தெய்வத் தன்மை வாய்ந்த பெரிய நகரம். அயோத்தியாம் தெய்வ மாநகர் ஒத்தது அப்படை செல்லாறரோ. (அ : 973).

தெய்வ மானம் - தெய்வீகமான விமானம். (யுத் : 2626) [பா:பே]

தெய்வ மீன் - திருமாலின் அம்சமாகிய மீன். மச்சாவதார மூர்த்தி. உய்ய ஏழுலகு மொன்ருன நீருழல் தெய்வமீன் ஒத்தது அச்செம் பொற்றேரரோ. (அ : 533)

தெய்வமேனி - தெய்வத் தன்மையுடைய உடம்பு. நல் ஐம்புலன்கள் அவிந்தடங்கி நடுங்குவான் தெய்வமேனி படைத்த சேயொளி போன் மழுங்கின தீபமே. (அ:244)

தெய்வ வரம் - தெய்வத் தன்மையுள்ள வரம். மாற்றலர் ஈந்த தெய்வ வரத்திஞல் வந்த தென்ருன். (யுத் : 2379)

தெய்வ வன் பாசம் - தெய்வத்தன்மை வாய்ந்த வலிய அரவக்கணே. (நாகபாசம்) தெய்வ வன்பாசஞ் செய்த செயலிந்த மாயச் செய்கை. (யுத் : 2179)

தெய்வ வாளி - தெய்வத் தன்மை வாய்ந்த அத்திரம். திருமகள் நாயகன் தெய்வ வாளிதான்... இருவரின் ஒருவணக் கடலில் இட்டதால். (பா : 470)

தெய்வ வான் படைக்கலம் - தெய்வத் தன்மையுள்ள சிறந்த படைக் கலம். (பிரமாஸ்திரம்) வஞ்சனு மவருடை மனத்தையறிந்து தெய்வ வான் படைக்கலந் தொடுப்பதற் கமைந்தான். (யுத்:2474) (யுத் : 147)

தெய்வவான் பெரும் படைகள் - தெய்வத் தன்மை வாய்ந்த மிகவும் உயர்ந்த போர்க் கருவிகள். தெய்வவான் பெரும்படைகட்கு வரன்முறை திருந்து மெய்கொள் பூசணே இயற்றினம் விடுமிது விதியால். (யுத் : 2482)

தெய்வவான் மரகதமலே - தெய்வத் தன்மையுள்ள பெரிய மரகதத் தின் மயமானமலே. திரைகெழுபயோததித் துயிலும் தெய்வவான் மரகத மலேயிணே வழுத்தி நெஞ்சிஞல். (பா : 191)

தெய்வ வானக மகளிர் - வானுலகத்துத் தெய்வ மகளிர். தெய்வ லோகத்து வனிதையர்கள். உருப்பசி முதல தெய்வ வானக மகளிர் வந்தார். (யுத் : 2775)

தெய்வ விமானம் - புட்பகம். தெய்வத் தன்மையுள்ள விமானம். தெய்வ விமானத்திடை யேற்றி. (யுத் : 2626)

தெய்வ வில் - இந்திர வில். (வை.மு) **தெய்வத் தன்மைகொண்ட வில்.** (கலா) (யுத் : 1152)

தெய்வ வீடு - விமானம். திக்குற நினைப்பிற் செல்லும் தெய்வ வீடொக்க நின்றிமைப்பன உம்பர் நாட்டினும். (பா : 124)

தெய்வவெம்படை - தெய்வத்தன்மை வாய்ந்த கொடிய ஆயுதங்கள். (யுத் : 867)

தெய்வ வெறி - தெய்வீக நறுமணம். விண்ணுறைவோர் தம் தெய்வ வெறியொடும் வேறுளோர் தம் தண்ணறு நாற்றந் தம் மின் தலைதடுமாறு நீரால். (யுத் : 4́93)

தெய்வ வென்றி வில்-1. வெற்றி பொருந்திய இந்திர வில். (வை.மு) தெய்வ வென்றி வில்லென விழுநிழல் விரிந்திட. (யுத் : 1152) **2. தெய்வத் தன்மையும் வெற்றியுங் கொண்ட வில். இராம பிரானது கோதண்டம்.** (கலா) தெய்வ வென்றி வில்லென இரு நிலம் வீழ்ந்திட மேன்மேற் கன்றி ஓடிடக் கனமழை நிகர்த்தன கற்கள். (யுத் : 1152) [பா : பே]

தெய்வ வேதியர் - தெய்வத் தன்மை வாய்ந்த அந்தணர். தெய்வ வேதியர் விழைவும் அஃதே. (யுத் : 2131)

தெய்வ வேரி - தெய்வ மணம். விசும் பெலாம் உலவுந் தெய்வ வேரியின் மிடைந்து விம்ம. (யுத் : 636)

தெரி - சொல்லுதி. தெரி எமக்கீது. (அ : 386) [பா : பே]

தெரிக்கிலாதான் - அறிவியாதவன். மீட்சி செய்திற மிலையால் என்ருன் தேவர்க்குந் தெரிக்கிலாதான். (யுத் : 2219)

தெரிகுதிர் - அறிவீர். தெரிந்திருப்பீர். (அண்) அன்னவன் பெய ரினைத் தெரிகுதிர் பெருமையீர். (ஆ : 849)

தெரிஞ்சு - தெரிந்து. அவ்வழித் தெரிஞ்சு உறவென மிகுந் தெளிவு. (அ: 22)

தெரிஞ்சுற - தெரிந்துற. தெரிஞ்சுற நோக்கினர். (ஆ : 124)

தெரித்தல் - 1. தெரிவித்தல். தெரியச் செய்தல். திருவுளம் தெரித்தி என்ருள். (கி : 614) திருநகர் தீர்ந்த வண்ணம் மானவ தெ́ரித்தி என்ருன். (அ : 663) அப்படி இப்படியிற் செய்யப் படு கிற்றி தெரித்தனனல். (யுத் : 1726)

2. காட்டுதல். சீற்றமாம் அபிநயந் தெரிக்கின்றாரினே. (பா : 1067)

3. ஆராய்தல். செறித்தானுடல் சில பொற்கணை சில நாணறத் தெரித்தான். (கலா) (யுத் : 3017)

தெரிதல் - 1. அறிதல். சிந்தனை தெரிந்திலம். (பா : 1081) தெரிகுதி. (யுத் : 2737) தெரிகுதிர் பெருமையீர். (ஆ : 849) தாய் தெரிந் துலகு காத்த தவத்தியை. (யுத் : 723) தெரிகிலேன் இவ்வுருத் தெரியும் வண்ணம் நீ பொருக்கென வீடணு புகறியால் என்றான், (யுத் : 1331)

2. விளங்குதல். தழல்தெரி தறுகணான். (யுத் : 899)

3 வெளிப்படுத்தல். நூறுயிரம் யாளியின் நோன்மை தெரிந்த சீயம். (யுத் : 1971)

4. காணப்படுதல், தூம்பெனத் தெரிந்த மூக்கினள். (ஆ : 368)

5 தெளிதல். தெளியப்படல். தாய் தெரிந்து. (யுத் : 723)

6. ஆராய்தல். நோய் தெரிந்துணரான். (யுத் : 723)

7. நிகழ்தல். (கலா) தென்பாலெழுந்து வடபால் நிமிர்ந்து வருகின்ற செய்கை தெரிய. (யுத் : 2199)

8. தேடுதல். திருநதியின் இருகரையுந் தெரிதிர் மாதோ. (கி : 772)

தெரிதல் தேற்ரு - தெரிவரிதாகிய. மாகமீனெடு மலர்கள் தம்மில் வேற்றுமை தெரிதல் தேற்ருத் தேனுகு சோலை. (ஆ : 656)

தெரிதல் தேற்ரும் - தெரிந்து தெளியப் பெற்றிலோம். அறிய மாட்டோம். (ஆ : 1041)

தெரிந்து - 1. தெளிந்து. தெரிந்து நான்மறைத் திசைமுகன் திருமகன் செப்பும். (அ : 34)

2. ஆராய்ந்து. தெரிந்து தேறுதற்கு. (யுத் : 390)

தெரிப்புறுதல் - விளங்கச் செய்தல். திக்கெலாந் தெரிப்புறு செறி சுடர்ச் சிகை. (ஆ : 178)

தெரிய - புலப்பட. நெஞ்சினுறு சிந்தை தெரிய. (ஆ : 23)

தெரியக் காணுதல் - விளங்கப் பார்த்தல். நன்கு காணுதல்: அறம் வளர்க்குங் கண்ணுளன் தெரியக்கண்டான். (யுத் : 3869) தேர்ந் ததே தேரின் அல்லால் யாவரே தெரியக் கண்டார். (அ : 254

தெரியக் கேட்டல் - விளங்கக் கேட்டல். *தீயவன் பகர்ந்த மாற்றம் சேவகன் தெரியக் கேட்டான்.* (யுத் : 2368)

தெரியச் சொல்லுதல் - விளங்கச் சொல்லுதல். *இவன் சாரன் என்பதுந் தெரியச் சொன்னுன்.* (யுத் : 719)

தெரியப்பார்த்தல் - விளங்க ஆலோசித்துப்பார்த்தல். *பாவமோ முன் நீ செய்த தருமமோ தெரியப்பாராய்.* (சு : 459)

தெரியல் - மாலே. *திலக வாணுதல் சென்னியிற் சூடிய தெரியல்.* (பா : 484)

தெரியலான் - மாலே புனேந்தவன். (இராமன்) *அத் தோட்டலர் தெரியலான் நிலேமை சொல்லுங்கால்.* (யுத் : 4254)

தெரியன் மாலே - அணிந்தாரைத் தெரிந்து கொள்ளற் கேற்ற சிறப்புடைய மாலே. *விலங்கல் மார்பில் தோட்டலர் தெரியன் மாலே வண்டொடும் சுறுக்கொண்டேற.* (சு : 930)

தெரிவு - 1. தெரிந்து கொள்ளல். தெளிவு. *பின்னரே தெரிகுதி தெரிவில் பெற்றியாய்.* (யுத் : 2737) *தெரிவு அருநிலேய.* (சு:101)
2. தெரிதல். புலனுதல். *கரை தெரிவிலாத போகக்களிப்பு.* (யுத் : 4320)

தெரிவு தருதல் - அறிந்து தெரிவித்தல். *தழும்பிய தேவரும் தெரிவு தந்திலர்.* (யுத் : 3731)

தெரிவுறக் காட்டுதல் - தெரியும்படி காட்டுதல். *கனக மால்வரை இயல்பெலாந் தெரிவுறக்காட்டும்.* (அ : 737)

தெரிவுறுத்தல் - காட்டுதல். *போதுமின் யானது தெரிவுறுத்துவென்.* (ஆ : 222)

தெரிவுறுதல் - 1. காணுதல். *செவ்வழியுள்ளத்தானும் தெரிவுற எதிர் சென்றெய்தி.* (கி : 57)
2. கற்றல். *பகலோன்முன் தேர்முன் நடந்தே ஆரிய நூலுந் தெரிவுற்றீர்.* (கி : 1022)
3. தோன்றுதல். *கண்ணுறத் தெரிவுற்றது கட் செவி.* (கி:575)

தெரிவை – 1. 25 முதல் 31 வயதுக்குட்பட்ட பருவப்பெண். *எல்லாம் உகுத்து ஒரு தெரிவை நின்ருள்.* (பா : 1155)
2. பெண். *தெரிவைமார்க் கொரு கட்டளே எனச் செய்த திருவே.* (அ : 768t)

தெரிவை நல்லார் - பெண்கள். அஞ்சொல் துவரிதழ்த் தெரிவை நல்லார் தோன்றினர். (பா : 426)

தெரிவைமார் - மகளிர். தெரிவைமார்க் கொரு கட்டளை யெனச் செய்த திருவே. (அ : 769) அரசுடைத் தெரிவைமாரை இன்றியே அமைவதுண்டோ. (யுத் : 3973)

தெரிவையர் - மனைவியர். தெரிவையர் அரற்ற. (யுத் : 2117)

தெரினும் - தெரியினும். தெரிந்திருந்தாலும். உலகை முற்று விக்கும் முறை தெரினும் காலம் பார்த்திறை வேலை கடவாத கடலொத்தான். (சு : 317) [பா : பே]

தெருட்டி - தெளிந்து. தெளிவு பெற்று. எண்ணுவசேகறப் பன் முறை தெருட்டிச் செய்தபின் வாகையென்றொரு பொருள் வழுவற் பாலதோ. (கி : 543)

தெருட்டுதல் - 1. தேறுதல் கூறல். எங்கோக்கு யாதும் தீங்கிடையூ றெய்தாமல் தெருட்டுதிர். (யுத் : 2685)
2. அறிவு மூட்டுதல். தெளிவித்தல். நின் மைந்தனை மனங்கொளத் தெருட்டி. (யுத் : 4035) சேகறத் தெருட்டி. (யுத் : 1346)
3. கலக்கம் நீங்கத் தெளிவித்தல். தேற்றுதல். வாழி மாதவன் சொலால் மனந் தெருட்டுவாய். (அ : 567)

தெருட்டுதிர் - தேற்றரவு சொல்லுமின்கள். (யுத் : 2685)

தெருண்டமேலவர் - தெளிந்த அறிவினையுடைய பெரியோர். தெருண்டமேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம் மருண்ட தன்மையை மாற்றுவர் எனுமிது வழக்கே. (பா : 905)

தெருண்மனத்தார் - தெளிந்த மனமுடையார். தெருண்மனத்தார் செயுஞ் செயலிதாகுமால். (அ : 939)

தெருமரல் - 1. கலங்குதல். என்னே தெருமரல் செப்புக. (பா:687)
2. சோகம். துன்பம். தேனுக அருவி சிந்தித் தெருமரலுறுவ போல. (ஆ : 1039)
3. சுழற்சி. தெருமரல் உழந்தழிவான். (யுத் : 4114)

தெருமருகின்றது - மனஞ்சுழன்று வருந்தல். தருமமென்றொரு பொருள் தன்னையஞ்சி யான் தெருமருகின்றது. (கி : 538)

தெருள் - 1. அறிவினுகிய தெளிவு. தெருளுடை மனத்து மன்னன். (அ : 294) தெருள்மனத்தார். (அ : 938) தெருளுறு சிந்தை வந்த தேற்றமீதாகில். (யுத் : 433) (சு : 1144)
2. ஞானம். (கலா) தெருளும் நான்முகன். (சு : 436)

தெருள் தருதல் - மெய்யுணர்வு மிகுதல். தெருள்தரு மிஜைய வீரன் செய்வன செய்கலாதேன். (யுத் : 4234)

தெருளாவினை - வினைப்பயன் இன்னவென்று தெளியப்படாதவினை. தெருளாவினை நியவர் சேரலர் தோள். (பா : 1253)

தெருளிலா உலகு - தெளிவில்லாத இவ்வுலகம். தெருளிலா உலகிற் சென்று நின்று வாழ் பொருளெலாம். (பா : 705)

தெருளுதல் - 1. ஐயமறத் தெரிந்து கொள்ளுதல். தெருளாது இது என்னே. (ஆ : 702)
2. துன்பம் நீங்கித் தெளிதல். தெருளும் நீ இனிச்சில் பகல் திங்குறல். (சு : 634) திருமால் தெருளா. (ஆ : 1115)

தெருளும் - தெளிந்த. தெருளும் நான்முகன். (சு : 432)

தெருளுறல் - தேறுதல். ஐயமற அறிதல். தெருளாது இது என்னே. (ஆ : 702) அருளுடைக் குரிசில் வாளி அந்தர மெங்குந் தாமாய்த் தெருளுறத் தொடர்ந்து வீசிச் செல்வன. (யுத் : 2540)

தெருளுறு சிந்தை வந்த தேற்றம் - தெளிவு பொருந்திய திருவுள்ளத்திலுண்டான உறுதியான எண்ணம். தெருளுறு சிந்தை வந்த தேற்றம் ஈதாகிற் செய்யும் அருளிது வாகிற் கெட்டேன் பிழைப்பரோ அரக்கரானேர். (யுத் : 433)

தெலுங்கர் - தெலுங்குநாட்டுத் தலைவர்கள். தெலுங்கர் கருநடர். (பா : 1196)

தெவ் - பகைமை. பகைவர். தெவ் விடைதர நின்ருர்க்கும் செறி கழற் புளிஞர் கோமான். (அ : 1036)

தெவ் முனை - போர் முனை. தெம்முனை இராமன் பாதம். (யுத் : 1410)

தெவ்வடக்கும் வலியவர் - பகைவர்களை அடக்குந் திறல் வாய்ந்த வீரர்கள். தெவ்வடக்கும் வலியவர் தேறினர். (யுத் : 2096)

தெவ்வடுசிலை - பகைவரை வெல்லத்தக்கவில். தெவ்வடு சிலையினுய். (அ : 851)

தெவ்வர் - பகைவர். தெவ்வர் ஊன் செய்த வடிவே லுரோம பதன். (பா : 240) தெவ்வர் தொழும் வீரர். (ஆ : 1106) தெவ்வர் முறுவல் என்புகழையுண்ண. (யுத் : 3876) (யுத்:3879)

தெவ்வரம் பனைய சொல்தீட்டினாள் - பகைவரது கூரிய அம்புபோன்ற சொல்லைக் கூறியவள். கைகேசி. (அ : 460)

தெவ்வரைச் செறிஞர் - பகைவரை நெருங்கிச் சேர்ந்தவர். அறிஞரேயாயினும் அரிய தெவ்வரைச் செறிஞரே யாவரேற் கெடுதல் திண்ணமால். (யுத் : 379)

தெவ்வழி ஆற்றல் - பகைவரை அழிக்கவல்ல ஆற்றல். (யுத் : 3491)

தெவ்விடைதரல் - பகைவர் வருந்துதல்,' பின்னிடுதல். தெவ்விடை தர நின்றார்க்கும் செறிகழற் புளிஞர் கோமான். (அ : 1036)

தெவ்விடை வில்லவன் - பகைவர்கள் பின்னிடுதற்குக் காரணமான வில்லையுடையவன். இலக்குவன். தெவ்விடை வில்லவனுந்தனி சென்றான். (ஆ : 1075)

தெவ்வுரை என்றோ ருலகு மில்லாத சீற்றத்தான் - 1. தெவ் என்ற உரை ஒருலகும் இல்லாத சீற்றத்தான். தனக்குப் பகைமை என்ற பேச்சும் உலகமொன்றிலும் இல்லையாம்படி செய்த கோபமுடையவன். (வை.மு)
2. தெவ் என்ற ஓர் உரை. பகை யென்ற சொல்லே ஒருலகத்திலும் இல்லாதவாறு செய்த கோபத்தை யுடையவன் (அண்) இராவணன். (ஆ : 341)

தெவ்வுரை நீக்கினன் - எதிர்த்துவரும் பகைவர் தனக்கு உண்டு என்ற சொல்லை நீக்கினவன். இந்திரசித்து. வரும் தெவ்வுரை நீக்கினன் அறியச் செப்பினார். (சு : 1071)

தெவ்வுலகம் - பகைவருலகம். அதாவது தேவருலகம். தெவ் வுலகத்துங்காண்டி அலைகடலுலகிற் காண்டி. (ஆ : 631)

தெவிட்டினர் - தெவிட்டுமாறு மிகுதியாக உண்டவர். செவிவயின் அமிர்த கேள்வி தெவிட்டினார். (பா : 886)

தெழிக்குநர் - அதட்டுகின்றவர். சொல்வேறு தெழிக்குநர் சுற்றுற. (யுத் : 1696)

தெழித்தல் - 1. அதட்டுதல். உரப்பி அடக்குதல். வைதனர் தெழித் தனர். (பா : 464) தெழித்தார். (சு : 481) தெழிக்குநர். (யுத் : 1696)

2. **இரைதல்.** தெழித்தனள் உரப்பினள். (அ : 150)

3. **வருத்துதல்.** தெழித்திழித்துரப்பி. (சு : 481)

4. **முழக்குதல்.** தெழிக்குஞ் சொல்லாள். (யுத் : 1849)

5. **பழித்தல்.** தெழித்த வாய்கள். (யுத் : 3342)

6. **அதட்டி ஆரவாரித்தல்.** தெழித்தார் பலர். (ஆ : 465)

தெழி தெழித்தல் - இரைச்சலிட்டு அதட்டுகின்ற சொல் முழக்கம். கழலும் சங்கும் தெழிதெழித் துரப்புஞ் சொல்லும் உற்றுட ஞென்ருயோங்கி. (சு : 762)

தெழிப்பு - 1. பேரொலி. ஆரவாரம். அப்பொருப்பு மெய்வில் தெழிப்பு முண்டென்ப போல். (யுத் : 3707) தெழிப்போடும் பெய்யும் வானிடை இடியினும் பெருத்தது வளர்ந்தது பெருங் கோபம். (யுத் : 1569)

2. **அதட்டொலி.** தெழிப்பு மார்ப்பும் முழங்கின முகிலின் மும்மை. (யுத் : 1862) தெழிப்பினேங்கும் ஒல்லொலி. (யுத் : 2401) வீரர் தெழிப் பொலியும். (யுத் : 3452)

3. **வீர முழக்கம்.** பொறுக்கலாமையால் இடித்த வான் தெழிப் பினுல் இழந்த குன்றெலாம். (யுத் : 1498)

தெள் - தெளிவு. தெள்ளுறுமதி. (அ : 940)

தெள்வார் மழை - தெளிவான நீரைப் பொழிகின்ற மேகம். தெள் வார் மழையும் திரையாழியும் உட்கநாளும் வள்வார் முரசம்மதிர் மாநகர். (பா : 165)

தெள் விளி - தெளிந்த இசை. தெள் விளி சிறியாழ்ப் பாணர். (பா : 39) தெள்விளியாழ். (யுத் : 205)

தெள்விளி சிறியாழ்ப்பாணர் - தெளிந்தஇசையோடு கூடிய சிறிய யாழையுடைய பாணர்கள். (பா : 39)

தெள்விளிப் பாணி - தெளிவுள்ள வாய்ப்பாட்டு. தெள்விளிப் பாணித் தீந்தேன் செவிமடுத்தினிது சென்ருர். (பா : 575)

தெள்விளியாழ் - தெளிந்த இனிய ஓசைக்கிடனுகிய யாழ். தெளி வான இசையையுடைய யாழ். உள்ளுற உணர்வினிதுணர்ந்த ஓசை ஓர் தெள் விளியாழிடைத் தெரியும் செய்கையின். (யுத் : 205)

தெள்ளமுதச் செஞ்சிலை - இனியரசத்தையுடைய கரும்பாகிய செந்நிறவில். செய்யிற் கொள்ளுந் தெள்ளமுதச் செஞ்சிலை யொன்று கையிற் பெய்யிற் காமனு நாணுங் கவினர். (பா : 1007)

தெள்ளமுதோடெழுந்தவள் - தெள்ளிய அமுதுடன் தோன்றிய இலக்குமி. தெள்ளமுதோடெழுந்தவளும் இழிந்தொதுங்கித் தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி. (பா : 766)

தெள்ளரி பாண்டி பாணிச் செயிரியர் - தெளிந்த வண்டின் ஓசை போலும் தக்கேசிப் பண்ணுகிய பாட்டில் வல்ல பாணர். தெள்ளரி பாண்டி பாணிச் செயிரியர் இசைத்தேன் சிந்த. (பா : 883)

தெள்ளருங் காலகேயர்-தெளிதற்கரிய பெருவலிபெற்ற காலகேயர். (யுத் : 3201)

தெள்ளிதின்மேல் - தெள்ளிதின் உணர்ந்தபின். (யுத் : 398)

தெள்ளிய பொருள் - தெளிந்து அறிந்த கருத்து. எள்ளலை யாமெனின் இயம்பலாற்றுவன் தெள்ளிய பொருளென அரசற் செப்பினன். (யுத் : 84)

தெள்ளியீட்டிய அரக்கர்தானை - ஆராய்ந்து சேர்த்த அரக்கச்சேனை. தெள்ளி ஈட்டிய அரக்கர் தானை இருநூறு வெள்ளம் கொண்டு· **(யுத் : 909)**

தெள்ளுதல் –தெளிதல். தெள்ளுநீரிடைக் கிடந்து பார் சுமக்கிறன் சேடன். (கி : 167)

தெள்ளுநீர் - தெளிவானநீர். தெள்ளுநீர் உலகு. (கி : 837)

தெள்ளுறுதல் – குளிர்ந்த கிரணத்தைப் பெற்றிருத்தல். தெள்ளுறு மதியிலா இரவும். (அ : 940)

தெள்ளொலி - தெளிவான ஒலி. தெள்ளொலிச் சிலம்புகள். **(அ : 502)**

தெளி - தெளிவு. சாரம். அமுதின் தெளி அன்னதொர் மொழியாள். **(அ : 619) [பா : பே]**

தெளிகின்றது - விளக்கமடைவது. அருக்கன் நிற்பத் தெளிகின்றது நீள் சுடர் மேன்மையன்றே. (ஆ : 719)

தெளித்து - தெளிந்து. கலக்கத்தை நீக்கி. தெளித் தாடத்தகு தீர்த்தன் மாட்டுயிர் அளித்தானே. (கி : 988)

தெளிதல் - ஆராய்தல். அவ்வழித் தெரிஞ்சுறவென வரு தெளிவுமாய் வரும் பெருஞ்சிறகு. (அ : 22) தெளிவருங் களிப்பு. (யுத் : 4258) [பா : பே]

தெளிவருங் களிப்பு - தெளிவில்லாத மயக்கம். தெளிவருங் களிப்புச் செய்யுந் தேம்பிழித் தேறல் ஒத்தான். (யுத் : 4258)

தெளிவி – தெளியச் சொல்லுதி. அந்தமில் சோகத்து அழுகுரல் தான் என்கொல் சிந்தை தெளிந்தோய் தெளிவி எமக்கு. (அ : 386)

தெளிவு - 1. தெளிந்த அறிவு. தீயிடை நுழைவதோர் தெளிவினை யுடையான், (ஆ : 110)
2. மேலே தெளிந்துள்ள சுவைமிக்க பாகம். அமுதின் தெளி வன்னதொர் மொழியாள். (அ : 619)

தெளிவுடைச் செம்மல் - தெளிதலையுடைய இலக்குமணன். நோக் கித் தெளிவுடைச் செம்மல் செப்பும். (ஆ : 792)

தெற்கு - தென்திசை. நமனுலகு. தற்கடங்கியுலந்தவர் தம்முயிர் தெற்கடங்க நிறைந்து செறிந்தவால். (யுத் : 1010) தெற்குள்ளன பொருப்பும். (யுத் : 2)

தெற்கூடுருவ - தெற்கு ஊடுருவ. தென் திசையைத் துளைத்து செல்லும்படி. (சு : 583)

தெற்ற - முட்ட. கவரி தெற்ற. (யுத் : 4323)

தெற்ரு - பொருந்தப் பிணைத்து. கடங்கலுழ் தடங்களிறு கை கொடுகை தெற்ரு வடங்கொள நுடங்கு மிடையாள். (பா : 391)

தெற்றி - 1. திண்ணை. தெற்றியெலாமுடல். (சு : 794)
2. பின்னிக்கட்டி. நகை எரிக்கற்றை தெற்றி. (சு : 276)
3. தடுத்து. முட்டி. புரவியும் அரக்கருந்தெற்றி. (யுத் : 1201) குன்றம் தெற்றி. (சு : 830)
4. தடுமாற்றமுற்று. தெற்றிவாளெயிறு தின்று. (யுத் : 2038)

தெற்றிடல் - நெருங்குதல். தேரும் மாவும் படைஞரும் தெற்றிட. (யுத் : 1062)

தெற்றிப் பிணங்கிடு தாளர் - பின்னிக்கொண்டு ஓடமுடியாதபடி மாறுபட்ட தாள்களையுடையவர். (சு : 745)

தெற்றிய - சேர்த்துக்கட்டிய. பின்னியமைத்த. பற்றிய கோளரி யாளி பணிக்கண் தெற்றிய பாத சிலம்பு. (ஆ : 1081)

தெற்றின – தெறித்த. தெற்றின புருவத்தோன். (யுத் : 2052)

தெற்றுதல் - 1. தடுத்தல். பிணப் பெருங் குன்றம் தெற்றி. (சு. 830)
2. **முட்டுதல்.** புரவியும் அரக்கருந் தெற்றி. (யுத் : 1201) கவரி தெற்ற. (யுத் : 4323)
3. **கடித்தல்.** தெற்றினர் எயிறுகள் திருகினர் சினம். (ஆ:471)
4. **நெருங்குதல்.** தேரும் மாவும் படைஞருந் தெற்றிட. (யுத் : 1062)
5. **சேர்த்துக் கட்டுதல். பின்னுதல்.** கைகொடுகை தெற்று. (பா : 391)
6. **தடுமாறுதல்.** வேகவாளிகள் புகப்புகத் தெற்றி வாளெயிறு தின்று கைத்துணை பிசைந்து. (யுத் : 2038)
7. **நெறித்தல்.** தெற்றின புருவத்தோன். (யுத் : 2052)
8. **செறிதல்.** களிறும் மாவும் அரக்கரும் நெருங்கித் தெற்ற. (யுத் : 2518)

தெற்றென - விரைவாக. தியவன் தடந்தேர் சுற்றித் தெற்றெனச் சென்ற சேனை. (சு : 821)

தெற - பிரிக்க. அழிக்க. வாலியென் றளவிலா வலியினுன் உயிர் தெறக் காலன் வந்தனன். (கி : 80)

தெறல் - 1. வருத்துதல். பகைத்து வருத்துதல். தேடரு நலத்த புனலாசை தெறலுற்ருர். (பா : 1246) செறிந்தாராய தீவினை யன்னுர் தெறலெண்ணுர். (சு : 488)
2. **கொதித்தல்.** வன்தெறு பாலை. (அ : 1089)
3. **சுடுதல்.** ஒன்ருத காமக்கனல் உள் தெறலோடு. (ஆ:705)
4. **அழித்தல்.** வாலியென் றளவிலா வலியினுன் உயிர்தெறக் காலன் வந்தனன். (கி : 80)

தெறலுற்ருர் - தாபமடைந்தவர். தேடரு நலத்த புனலாசை தெறலுற்ருர். (பா : 1246)

தெறித்தல் - 1. சிதறி விழுதல். தைத்த அக்கணை தெறிப்ப மெய் சிலிர்த் துதறவே. (ஆ : 33)
2. **துண்டுபடுதல்.** அண்ணல் வெங்கணை அறுத்திடத் நெறித் தெழுந்து. (யுத் : 565)

3. நாணொலி செய்தல். தன் வெஞ்சிலை நாணைத் தெறிவுற்ருன். (யுத் : 3447) தெறிப்புற்ருன். (யுத் : 3447) [பா : பே]

தெறிப்புற்ருன் - தெறித்தான். (யுத் : 3447) [பா : பே]

தெறிவுற்ருன் - தெறித்தான். (யுத் : 3447)

தெறு - அழிக்கும் இயல்புள்ள. தீத்த காமத் தெறு கதிர்த் தீயினுல். (கி : 37)

தெறுகண் – சினத்தாற் சூடேறிய கண். கனன்று காயும் கண். தெறு கண் தீயுக. (யுத் : 337) திண் கோடைக்கதிரின் தெறு கண்ணுன். (யுத் : 228)

2. அழிக்கின்ற கண். தீட்டிய வாளெனத் தெறுகண் தேவியர். (சு : 1108)

தெறுகண்ணுன் - சுடும் விழிகளை யுடையவன். (யுத் : 228)

தெறுகணை - அழிக்கும் அம்பு. தெறுகணை வலியிற்றீர்ந்தான். (யுத் : 3106)

தெறுகாவல் - வருந்துகின்ற காவல். தெறு காவல் தூண்டற் கொத்த சிந்தையினுர். (சு : 489)

தெறுகுநர் - பகைவர். தெறுகுநர் இன்மையின் வன்ருேள் தினவுற உலகு திரிந்தார். (சு : 766)

தெறுசினம் - அழிக்கும் வெகுளி. தெறுசினத்தவர்கள் முப்புரம். (யுத் : 99)

தெறுத்தல் – உயிர்களை யழித்தல். தெறுத்து வந்த தீதெலாம் அறுத்த உன்னை. (ஆ : 71)

தெறுதல் – 1. வருத்துதல். தெறு காவல் தூண்டற் கொத்த சிந்தையினுர். (சு : 489)

2. அழித்தல். எதிர்த்து அழித்தல். தன்னையுந் தெறும் தரும மென்றிறை தாழான். (யுத் : 511) தெறும். (சு ; 283) சீதை தந்தை'உன் தாதையைத் தெறுகிலன். (அ : 171)

3. சுடுதல். காய்தல். திண்கோடைக் கதிரிற்றெறு கண்ணுன். (யுத் : 228) (யுத் : 3715) தெறு பொறி பிதிர்வ திக்கின். (யுத் : 2523) [பா : பே]

4. கொல்லுதல். தெறுங்கால் புரை மறவோன். (யுத் : 2997)

5. கிழித்தல். தெறுகில அனுமன் உடல். (யுத் : 3096)

தெறுபகை – கொடிய பகை. உட்டெறு வெம்பகை யாவது லோபம். (பா : 450)

தெறுபாலை - கொடிய பாலை. வன்றெறு பாலையை மருதமா மெனச் சென்றது. (அ : 1089)

தெறுவிலார் – போர் வலிமையற்ற பதடிகள். மற்றோர் தேயத்தார் தேயஞ் சேர்தல் தெறுவிலார் செருவிற் சேறல். (சு : 130) [பா : பே]

தென் - வண்டுகள். தேன் என்பதன் விகாரம். தென்னுண் தேன். (பா : 586)

தென் கலை – தமிழ். வடகலை தென் கலை. (பாயி : 18)

தென் சொல் - தென் மொழியாகிய தமிழ். வட சொற்குந் தென் சொற்கும் வரம்பிற்றாய். (கி : 769)

தென் சொற்கடந்தான் – தமிழ் மொழியிலுள்ள நூல்களைக் கற்றுத் துறை போகியவன். தென் சொற் கடந்தான் வடசொற்கலைக் கெல்லை தேர்ந்தான். (அ : 433)

தென் தமிழுரைத் தோன் - அகத்தியர். தென்தமி ழுரைத்தோன் முன்னை. (சு : 462)

தென் தலை யாழி - தென்புறத்துக் கடல். தென்றலை யாழி சூழ்ந்த திண்மதில் இலங்கை. (யுத் : 3135)

தென்தலை யாழி தொட்டான் சேய் - அழகிய இடத்தையுடைய கடலைத் தோண்டின சகர புத்திரரின் வமிசத்தில் தோன்றிய இராமபிரான். (யுத் : 3135) [பா : பே]

தென் திசைக்கிழவன் - யமன். ஏசில் தென்திசைக் கிழவன்தன் எரிமுனை எழுவும். (சு : 879)

தென்திசையான் - தெற்குத்திக்குப் பாலகனாகிய யமன். தென்றிசை யான் வன்றூதரு மெய்தினர். (யுத் : 2353)

தென் நகு குடம் - இனிமை விளங்கும் குடமுழவு. தென்னகு குடமுட் பாடல் சித்திய ரிசைப்ப. (சு : 281)

தென்புலக் கிழவன் - தெற்குத் திசைக்குரிய தேவனான யமன். தென்புலக் கிழவனூர் மயிடமோ. (கி : 180) (யுத் ; 1081)

தென்புலக் கோமகன் – இயமன். தென்புலக் கோமகன் தூதிற் செல்கெனே. (அ : 553)

தென்புலத்தவன் - யமன். தென்புலத்தவன் எரிநரகிற் சிந்திய. (கி : 840) [பா : பே]

தென்புலத் துய்த்தல் - உயிர் கவர்தல். முறையிலோபைத் தென் புலத் துய்ப்பனென்று செப்பினன். (கி : 354)

தென்புலம் - 1. தெற்கு. தென்புலக் கோமகன். (அ : 553) **2. யமலோகம். வைவஸ்வதநகரம்.** (கலா) புக்கார் நமனுர் உறை தென்புலமே. (யுத் : 2920)

தென்புலம் படர்தல் - எமனுலகம் செல்லுதல். போயவர் உயிரும் போகித் தென்புலம் படர்தல் பொய்யாது. (சு : 955)

தென்வரை - பொதிய மலை. தென்வரைச் சாந்து. (பா : 897)

தென்றமிழுரைத்தோன் - தென் தமி ழுரைத்தோன் பார்க்க.

தென்றல் - தென்றற்காற்று. தென்றலைப் பகைக்கச் செய்த சீதையைத் தருதி. (ஆ : 763) (யுத் : 469)

தென்றல் தூவுதல் - தென்றல் வீசுதல். சாமரை தென்றல் தூவ. (யுத் : 2707)

தென்றலழல் மிகுதல் - தென்றல் வெப்பம் மிகுதல். அழன் மிகு தென்றலும் முன்னின் மும்மடியாய் முலை வெந்துக. (ஆ : 306)

தென்றலைப் பகையைச் செய்தல் - தென்றற் காற்றை வெய்யதாய் வருத்துமாறு செய்தல். தென்றலைப் பகைபைக் செய்த சீதை. (ஆ : 763) [பா : பே]

தென்றற்புலி - தென்றலாகிய புலி. வீழ் மலயக் குன்றிற் குலமா முழையிற் குடிவாழ் தென்றற் புலியே இரை தேடுதியோ (பா : 1251)

தென்றிசைக்கிழவன் – யமன். தென்றிசைக்கிழவன் தூதர். (யுத் : 1261)

தென்றிசைக்கிழவன் எரிமுனை எழு - தெற்குத் திக்குக்குரிய யமனுடைய நெருப்பை முனையிலுடைய தண்டாயுதம். (சு : 879)

தென்னகர் - 1. கட்டளைப்பட்ட நகர். இலங்கை. (கலா) இராவணன் தென்னகர். (யுத் : 4235 தென்னகரிலங்கை. (யுத் : 2700)

2. தெற்கிலுள்ள நகர். இலங்கைத் தென்னகர். (சு : 1304)

தென்னகு குடம். தென் நகு குடம் பார்க்க.

தென்னம் - தென்னை. குருவிந்தம் தென்னம் வெள்ளி. (ஆ : 655) [பா : பே]

தென்னுண்டேன் – வண்டுகளுண்ணும் தேன். (பா : 586)

தே

தே - தெய்வம். தேவியல் நேமியானில். (சு : 308) கயிலையி லிருந்த தேவைத் தனித்தனி கடுத்தல் செய்தார். (சு : 12)

தேக்கடை - தேக்கிலை. தேக்கடைப் படலையிற் செறிவு செய்து. (அ : 781)

தேக்கடைப் படலை - தேக்கிலை கொண்டு செய்த பரப்பு. (வை.மு) தேக்கிலைப்படலை. (அண்) (அ : 781)

தேக்கர் - பெருக்கம். மான்மதத் தேக்கரும். (பா : 1126) [பா:பே]

தேக்கி - தொகுத்து. கொண்டு. செங்கதிர்ச் செல்வன் செய்த வென்றியை நிறையத் தேக்கிப் பொங்கிய தோளினுன். (யுத் : 890)

தேக்கிடுதல் - அளவிற்கு மேற் கொண்டு தெவிட்டல். நெருப்புத் தின்று தேக்கிடுகின்றது. (சு : 1228)

தேக்கு - 1. தேக்கமரம். தேக்குயர் கல்லதர். (அ : 156) தேக்கெறிந்து வருதலில். (பா : 21) சிந்து வாரத் தரு நறை தேக்ககில். (கி : 584)

2. ஏப்பம். (பா : 21)

தேக்குதல் - 1. நிறைவித்தல். நிறையப் பெறுதல். சிந்தனை முகத்தில் தேக்கிப் போயினை என்ற போது. (அ : 1027) குருதி தேக்கினுன். (யுத் : 1317)

2. குடித்தல். செம்பொத்த குருதி தேக்கி உடலையுந் தின்பென் என்ருன். (யுத் : 255)

3. நிரம்பப் பருகுதல். திவளப் பாற் கடல் வறள்படப் பருகினர் சில நாள். (யுத் : 3219) முகிலினை முகந்து தேக்கி. (யுத் : 2116)

விடத்தைத் தானே தேக்கினன் என்ன நின்று தியங்கினன். (யுத் : 2657)

4. **மனத்துக்கொள்ளல்.** செங்கதிர்ச் செல்வன் செய்த வென்றியை நிறையத் தேக்கி. (யுத் : 980)

5. **தேங்கச் செய்தல்.** குடைந்து வையகம் புக்குறத் தேக்கிய குருதியாற் குடர் சோர. (யுத் : 1539)

தேக்குயர் கல்லதர் - தேக்கமரங்கள் உயர்ந்துள்ள கல் நிறைந்த வழி. தேக்குயர் கல்லதர் கடிது சேணிடைப் போக்கிய பொருள் எனக்கின்று போந்ததால். (அ : 156)

தேக்கெறிதல் - ஏப்பமிடல். தேக்க மரங்களை முறித்துக் கொண்டு வருதல். தேக்கெறிந்து வருதலில் திம்புனல் வாக்குந்தேனுகர் மாக்களை மானுமே. (பா : 21)

தேங்கனி - இனிமையான பழங்கள். அழிந்தன தேங்கனி. (அ:812)

தேங்குழை - இனிய தழைகள். தெள்ளு தேங்குழை யாவையுந் தின்கில. (பா : 852)

தேசத்தார் - உலகத்தார். தேசத்தார் என்னை என்னே சிந்திப்பார். (யுத் : 2161)

தேசத்தார் அரசன் மைந்தன் - கோசலதேசத்தரசன் தசரதன் மகனான இராமபிரான். (யுத் : 2246)

தேசம் - நாடு. நிலம். இமையோருலகு மற்றைத் தேச முதன் முற்றுமொர் இமைப்பின் உயிர் தின்ப. (ஆ : 754)

தேசர் - தேவர்கள். தேஜஸ் உள்ளவர். தேசருக் கிடுக்கண் செய் தான். (யுத் : 923)

தேசி - 1. சூரியன். தேஜஸை யுடையவன்.

2. **இந்திரன்.** (உ.வி) தேசியைச் சிறையில் வைத்தான். (யுத் : 923) [பா : பே]

3. **ஒளி வடிவினளாய சீதாபிராட்டி.** (அண்) (யுத் : 923)

தேசிகற் பிழைத்தல் - குருவினிடத்து அபசாரப்படல். முன்னர்த் தேசிகற் பிழைத்து வேறோர் நினக்கிதன் நாடி நின்றாய். (பா : 672)

தேசிகன் - குரு. தேசிகற் பிழைத்து. (பா : 672)

தேசு - ஒளி. (தேஜஸ்) தேசுடைத் தந்தை ஒப்பான். (பா : 211)

தேசுண்ட திங்கள் - ஒளியால் சூழப்பட்ட சந்திரன். வயங்கு வெங் கதிர்த் தேசுண்ட திங்களும் என்னத் தேய்ந்துளாள். (சு : 397)

தேசுலா மணிமண்டபம் - ஒளி வீசும் மணிமண்டபம். (யுத் : 3925)

தேட்டம் - தேடுவது. தேடுதல். தேட்டந்தான் வாளெயிற்றில் தின்னவோ. (ஆ : 345)

தேடரு மாமணி சீதை - தேடுதற்கரிய கன்னியா ரத்னமாகிய சீதை. தேடரு மாமணி சீதையெனும் பொற் சூடக வால்வளை. (பா:782)

தேடி நான் முகனுங் காணச் சேயவன் - சருவகாலமுந் தேடி பிரமனுலும் காண இயலாத சேய்மையிலுள்ளவனுகிய திருமால். (யுத் : 258)

தேடிய தவம் - (முற்பிறப்பில்) தேடிவைத்த தவம். தேடிய தவமே யன்ன திரிசடை. (யுத் : 2645)

தேடுவார் - இறைநிலை முதலியவற்றை நாடுபவரான ஞானிகள். தேடுவார் தேட நின்ற சேவடி. (யுத் : 459)

தேண்டி - தேடி. இடைத் தேண்டி அவ்வரக்கனைத் திருகி. (கி:208) (ஆ : 705)

தேண்டுதல் - தேடுதல். தேண்டினர் இன்னமுந் திரிகின்ருர் கொலோ. (சு : 1279) தேண்டிக் கொடு வந்தனளாகு மன்றே. (ஆ : 705)

தேண்டுவார் - தேடுபவர். விரித்தல் விகாரம். தேவியைத் தேண்டு வார்த் தேடுகின்றீர். (கி : 623)

தேந்தளவு - தேனையுடைய முல்லைகள். தேந்தளவுகள் செய்யுஞ் சிறு குறுநகை காணுய். (அ : 698)

தேம் - தேன். இனிமை. தேமரு நறுங்குழல் திருவினீங்கிய தாமரை. (ஆ : 494) தேமுதற்கனி. (யுத் : 637) (கி : 931)

தேம்படு - தேன் பொருந்திய. தேம்படு படப்பை மூதூர். (யுத் : 4333)

தேம்படு படப்பை - தேன் பொருந்திய சோலைகள். (யுத் : 4333)

தேம்பல் - குறைதல். தேய்தல். தேம்பற்பிறை சென்னிவைத்தான், (யுத் : 1964)

தேம்பற்பிறை சென்னி வைத்தான் - குறைதலையுடைய பிறைச் சந்திரனைத் தலையில் வைத்த சிவபிரான். (யுத் : 1964)

தேம்பிடுதல் - மெலிதல். தமியன் யாக்கை தேம்பிடும் எண்ணரும் பருவங்கள் இறந்தான். (ஆ : 981)

தேம்பிழி – இனிய தேன். பிழிந்தெடுக்கப் பட்டதாகிய தேன். (யுத் : 4258)

தேம் பிழித் தேறல் - இனிய மதுவின் தெளிவு. (யுத் : 4258)

தேம் பிழி நறவம் - தேனுற் சமைத்த கள். தேம் பிழி நறவ மாந்தி. (பா : 39)

தேம் பிழி மகர யாழ் - இனிய மகர யாழ். தேம்பிழி மகர யாழின் வண்டுகள் இனிது பாட. (பா : 35)

தேம்பின - வருந்தின. வருந்தினவாய். தேம்பின குவிந்த போலுஞ் செங்கழுநீரும். (அ : 581)

தேம்பு சிற்றிடை - வருந்துகின்ற நுண்ணிய இடை. தேம்பு சிற்றிடைச் சீதை. (பா : 1178)

தேம்புதல் . 1. வாடுதல். ஆருயிர் செவ்விரா துணர் வோய்ந்துடல் தேம்புவாள். (சு : 358)
2. வருந்துதல். செங்கிடை தரங்கங் கெண்டை சினைவரால் இனைய தேம்ப. (பா : 581)
3. மெலிதல். யாக்கை தேம்பிடும். (ஆ : 981)
4. விம்மியழுதல். தீயில் வீழ்ந்து தீ மெழுகிற்றேம்பினர். (அ : 1156)

தேம் பொழிதுழாய்முடிச் செங்கண் மாலவன் - தேனைப் பொழிகின்ற துழாய் மாலையை அணிந்த முடியினையும் சிவந்த கண்ணையுமுடைய திருமால். (பா : 823)

தேமரன் - நறுமணமுள்ள மரம். (கி : 524)

தேமரனடுக்கிதணிடைச் செறி குரம்பை - மணமுள்ள சந்தன முதலிய மரப்பலகைகள் அடுக்கியுள்ள பரணிற் பொருந்திய குடிசை. (கி : 524)

தேமரு தாமரை - தேன் பொருந்திய தாமரை. (ஆ : 343)

தேமரு தெரியல் - நறுமணம் பொருந்திய மாலை. தேமரு தெரியல் வீரன். (ஆ : 1041)

தேமரு நறுங்குழல் திரு - கண்ணுக்கினிய நறுமணம் மிக்க கூந்தலை யுடைய திருமகள். தேமரு நறுங்குழல் திருவின் நீங்கிய தாமரை ஒத்துள தவள மாடமே. (அ : 494)

தேமலர் - 1. தேனுடைய மலர்கள். தேமலர் கொய்கின்றாரும். (பா : 951) உரங்கொள் தேமலர்ச் சென்னி. (சு : 354)

2. நறுமண மலர்கள். தேமலர் நிரந்த கூந்தல். (ஆ : 628)

தேமலர்த் தொகை - தேன் நிறைந்த மலர் மாலைகள். தேமலர்த் தொகையிழந்தன தோகையர் ஓதியே. (அ : 818)

தேமலர் மாரி - தேனையுடைய பூக்களின் மழை. சிந்து தேமலர் மாரி சிறந்திட. (பா : 1193)

தேமலர் மேலவன் - உந்தித் தாமரையில் தோன்றிய நான்முகன். செய்திலன் எமைத் தேமலர் மேலவன். (கி : 341)

தேமலரோன் அம்மான் - தேனையுடைய தாமரை மலரில் தோன்றிய வனான பிரமனது தந்தையாகிய திருமாலின் அவதாரமான இராமபிரான். தேமலரோன் அம்மானும் அருத்தியனுயினனால். (ஆ : 780)

தேமறை - 1 இனிய வேதம். சங்கீதம். (கலா) திரித்த கோலினர் தேமறை பாடினர். (ஆ : 140)

2. தெய்வத்தன்மையுடைய வேதங்கள். திருவினுயகன் இவ னெனத் தேமறை தெரிக்கும் ஒருவன். (கி : 485)

தேமன் - தேவேந்திரன். தேமன் உரிமை புரிய. (யுத் : 305)

தேமா - இனிய மாமரம். வாழை மரகதம் வயிரம் தேமா. (ஆ : 655)

தேமாம் பலம் - தேமாங்கனி. தேமாம் பலம்பெய் மந்திகள். (அ : 768)

தேமாம் பலம்பெய் மந்திகள் - தேமாங்கனிகளை எறிந்து விளையாடு கின்ற பெண் குரங்குகள். (அ : 768)

தேமுதற் கனி - இனிமை மிக்க பழங்கள். இனிமையைத் தம்மிடத்தே கொண்ட பழங்கள். (அண்) தேமுதற் கனியுங்காயுந் தேனி னேடுனும். (யுத் ; 637)

தே மொழி - தேன் போன்று இனிய மொழியினையுடைய சீதை. தேமொழி திறத்தினல். (ஆ : 1145)

தேமொழித்திரு - தேன் போன்ற இனிய சொற்களைப் பேசுகின்ற இலக்குமியின் அம்சமான சீதாபிராட்டி. பொன் மதின் மிதிலை பூத்த தேமொழித் திருவை. (யுத் : 4342)

தேய்க்க வேண்டுவது - அழிக்க வேண்டுபவை. தேயினும் நாளெ லாந் தேய்க்க வேண்டுவது ஆயிர வெள்ளம். (யுத் : 490)

தேய்கை ஒத்த - தேய்தல் பொருந்திய. தேய்கை ஒத்த மருங்குல் மாதர். (அ : 233)

தேய்த்தல் - 1. அழித்தல். கொல்லுதல். தேய்க்க வேண்டுவது. (யுத் : 490)
2. உராய்தல். திமிரமாவொடும் சந்தொடுந் தேய்க்குமால். (பா : 953)
3. இழைத்தல்.

தேய்தல் - 1. வலிமை நுணுகுதல். மெலிதல். சென்றுன் இன்றே டென்னும் தன்மை எய்தித் தேய்ந்தான். (அ : 362)
2. மாய்தல். குறுகா வாழ்க்கை எம்பியோ தேய்ந்தான் எந்தை புகழன்றே தேய்ந்தது. (சு : 984)
3. கழிதல். மெள்ளத் தேய்ந்தன நாள் சில. (பா : 1348)
4. குறை பெறுதல். குறைபடுதல். குறைந்து காட்டுதல். ஒவலில் ஒருவன் செய்வினை தேவரு முனிவரு முணரத் தேயுமோ. (யுத் : 193) (அ : 644)
5. வருந்துதல். நீ தேய்வதென்... மேயவன் தன்னேடும் எண்ணி மேலினித் தூயது நினைக்கிலை. (யுத் : 473)
6. அழிதல். தேய நின்றவன். (யுத் : 3776) ஆயிரம் வெள்ள மான அரக்கர் தம் தானை ஐய தேயினும் ஊழிநூறு வேண்டு மால். (யுத் : 760) (யுத் : 490)
7. மெலிதல். உயிர்ப்பாரம் குறைந்துதேய. (அ : 1061) தேய்ந்த தேய்வற. (யுத் : 1070)
8. குறைதல். உணர்வு தேய்ந்து வருந்தின. (சு : 1259) தேய்ந்த ஆயுளர். (யுத் : 1013) தேய்ந்து மெலிகின்ற பழியன். (யுத் : 3133)

தேய்ந்த ஆயுளர் - குறைந்த ஆயுளையுடையவர்கள். (யுத் : 1013)

தேய்ப்பன - தேய்க்கப்படும் பொருள். பூசத்தக்க பொருள். எய்திய தந்தகாரம் திண்டற்கெளிதாய்ப் பல தேய்ப்பன தேய்க்கலாகி. (ஆ : 697)

தேய்ப்புண்ட - தேய்க்கப்பட்ட. தேய்ப்புண்டதம்பி யாக்கை. (சு : 999) தேய்ப்புண்டவனும். (யுத் : 1686)

தேய்வது - வருந்தல். நீ தேய்வதென். (யுத் : 473)

தேய்விலா முகமதி - தேய்தல் இல்லாத முகமாகிய சந்திரன். தேய்விலா முகமதி விளங்கித் தேசுற. (அ : 149)

தேய்வு - 1. மெலிவு, ஓர் தேய்வு வந்துற்ற போழ்தில். (ஆ:666) **2. தேய்த்தல்.** பெருங்கடல் கோட்டத் தேய்வை ஒத்தது என்னடிமைப் பெற்றி. (யுத் : 2845)

தேய்வுறத் தேய்வுற - தேயத்தேய. தேய்வுறத் தேய்வுறப் பெயர்ந்து. (ஆ : 565)

தேய்வை - தேய்த்த கலவைப் பூச்சு. தேனும் ஆரமும் தேய்வையும் நாறுமால். (சு : 245)

தேயத்தவர் - தேயத்திலுள்ளார் அனைவரும். தேயத்தவர் செய்குதல் செய்திடினும். (யுத் : 1742)

தேயத்தான் - இடத்திலுள்ளான். தான் எத்தேயத்தான் என்னு வண்ணங் கரந்தனன். (யுத் : 2382)

தேயத்தின் தலைவன் மைந்தன் - நாட்டிற்கெல்லாம் தலைவனான தசரத சக்கரவர்த்தியின் மகன் இலக்குவன். (யுத் : 1104)

தேயம் - 1. இடம். தான் எத்தேயத்தான் என்னுவண்ணம் கரந்தனன். (யுத் : 2382) (ஆ : 806)
2. நாடு. தேயத்தின் தலைவன் மைந்தன். (சு : 1104) **தேசம் என்பதன் திரிபு.**

தேயு நுண்ணிடை - மிகச்சிறுகிய இடுப்பு. தேயு நுண்ணிடை சென்று வருந்தவும். (பா : 59)

தேர் - 1. தேர்த்தட்டு. தேரிடைக் கொண்ட அல்குல். (பா : 1030) **2. அல்குல். (உவமை)** சிந்தியோடு கலையுடைத் தேர் கொலோ முந்தி ஓங்கின. (யுத் : 3942)

3. பேய்த்தேர். வேனிலோடருந் தேரிடை விழ்ந்தனர். (சு : 1198)

4. இரதம். தேர்வலான் செப்புவான். (அ : 550)

தேர்க்குழாம் - தேர்களின் கூட்டம். ஆடன்மான் தேர்க்குழாம். (அ : 131)

தேர்குவாய் - நாடி அறிவாய். மற்றவன் சிந்தையைத் தேர்குவாய். (கி : 567)

தேர் கெழுமறவர் - தேர்வீரர். (சு : 824)

தேர்தல் - 1. தேடுதல். காலின் மைந்தன் தேர்வான் வருகின்றனன் (சு : 57)

2. ஆராய்ந்தறிதல். நீ அப்புண்டரீகத்தையுற்ற பொழுதது பொருந்தித் தேர்வாய். (கி : 801)

3. தெரிந்ததாகக் கூறுதல். தேர்ந்ததே தேரினல்லால். (அ:254)

தேர்துடித்தல் - தேர்துள்ளிக் கீழேவிழுதல். துடித்தன பரித்தேர். (ஆ : 532)

தேர்ந்தது - கண்டது. தேர்ந்ததே தேரினல்லால் யாவரே தெரியக் கண்டார். (அ : 254)

தேர்ப்பாகன் - தேர் செலுத்துபவன். நாயகன் பின்னுந் தன் தேர்ப் பாகனை நோக்கி. (அ : 590)

தேர்ப்பொறி - தேரின் உறுப்புக்கள். கூட்டினன் தேர்ப்பொறி. (அ : 577)

தேர் மடிதல் - தேர் அழிதல். மடிந்ததேரும் மானமாக் குழுவும் (சு : 955)

தேர்முக அல்குலாள் - தேர்த்தட்டுப் போலும் அரைப்பக்கமுடையவள். சீதை. இவற்குத் தோன்றிய 'தேர்முக அல்குலாள் செவ்வி கேளெனு. (பா : 764)

தேர்முரண் ஆழி - வலிய தேர்ச்சக்கரங்கள். (யுத் : 2443)

தேர் மிசைக் கொள்ளல் - தேர்மீது ஏறிக்கொள்ளல். ஓர் கொண்டல் போல் அவன் நெடுந்தேர் மிசைக் கொண்டான். (அ : 51)

தேர் முழங்கரவம் - தேர்கள் ஒலிக்கின்ற ஒலி. தேர் முழங்கரவம் வெண்டிரை முழங்கரவமே. (பா : 1122)

தேர்வலான் - தேர்ப்பாகன். தேர்வலானும் வேயுயர் கானந்தானும் தம்பியுமிதிலைப் பொன்னும் போயினன் என்ருன். (அ : 590)

தேர்விலார் - கொள்ளமாட்டார்கள். தேர்விலார் செருவிற்சேறல். (சு : 130)

தேரிடிப்பு - தேரின் முழக்கம். வாசிச் சிரிப்புத் தேரிடிப்பு. (யுத் : 2399)

தேரிடை வித்தகன் - தேர்த்தொழிலில் தேர்ந்தவனுன சுமந்திரன். (அ : 576)

தேரில் திரிவான் - சூரியன். தேரில் திரிவான் மகன். (கி : 273)

தேரின் சுவடு - தேர்த் தடம். தேரின் சுவடு நோக்குவார். (அ:612)

தேரினம் - தேர்த்தொகுதிகள். (ஆ : 400)

தேரிறுதல் - தேர் மீது ஆரோகணித்தல். பைம்பூட் பருமணித் தேரிறுனன். (யுத் : 4280)

தேருடை நெடுந்தகை - தேரையுடைய சூரியன். தேருடை நெடுந் தகையும் மேலை மலை சென்ருன். (கி : 890)

தேரூர்குவார் - தேர்ப்பாகர். அத்தேரூர்குவார் உயிரும் பூட்டும் புரவியினுயிரும் உண்டான். (யுத் : 2124)

தேரை - தவளை. சேரையென்று புலம்புவ தேரையே. (கி : 934) ஆமை மேல் வருந் தேரையின். (பா : 855)

தேரை தாலாட்டுதல் - தவளை தாலாட்டுதல். பாலுண்டு துயிலப் பச்சைத் தேரை தாலாட்டும் பண்ணை. (பா : 44)

தேவ - தலைவனே. தேவனே. தேவ நும்வரவு நோக்கி விம்மலுற் றனையான் ஏவ வினவிய வந்தேன் என்ருன். (கி : 59) (யுத் : 3881)

தேவதாரம் - தேவதார மரம். தேவ தாரத்தும் சந்தினும் பூட்டின சில மா. (பா : 898)

தேவதேவர் - சிவபெருமான். தேவதேவர் பிடித்த போர்வில். (அ : 247)

தேவதேவர் மூவர் - முதல் தேவர் மூவர். திசைமுகனே முதலாய தேவ தேவர் மூவர்க்கும் முடிப்பரிய காரியம்- (யுத் : 409)

தேவதேவன் - மகாதேவன் என்னும் நாமம் படைத்த சிவபெருமான். (வை.மு) தேவதேவன் செறிசடைக் கற்றையுள். (அ : 638) [பா : பே] குலேயாத் தேவ தேவனும் விரிஞ்சனும் சிரதலங் குலேந்தார். (யுத் : 1188)

தேவ பாடை - வடமொழி. தேவ பாடையின் இக்கதை செய்தவர் மூவரானவர். (பா : 10)

தேவர் - எப்பொழுதும் மகிழ்ந்து நிற்பவர். தேவருக்கொரு தலைவராம் முதற் றேவரெனின். (கி : 48)

தேவர் இறை - இந்திரன். (கி : 877)

தேவர்க்கும் தம்மோய் - இலக்குமி. ஆவித்துணையை அமுதிற் பிறந்தாளைத் தேவர்க்குந் தம்மோயை ஏவினர் பாற்செல்ல. (யுத் : 293)

தேவர்க்குந் தாய் - விண்ணோர்களுக்குந் தாயாய் விளங்கும் சீதை. (யுத் : 4000)

தேவர்க்குந் தெரிவரிய தெய்வக்கற்பின் பேர்மகள் - தேவர்கட்கும் தெரிதற்கு இயலாத தெய்வக் கற்பினையுடைமையால் பெற்ற புகழினையுடைய சீதை. (யுத் : 3893)

தேவர்க்குந் தேவன் - 1. திருமால். தேவர்க்குந்தேவன் என்னக் கரியவாய். (கி : 797)
 2. இராமபிரான். தேவர்க்குந் தேவன் தம்பி. (யுத் : 2550)

தேவர்க்குந் தேவு - இராமபிரான். தேவர்க்குந் தேவைச் சேர்ந் தேன். (யுத் : 3067)

தேவர்கள் தேவன் - மகாதேவன். சிவபெருமான். தேவர்கள் தேவன் தெய்வ வாள் விற. (கி : 987)

தேவர் செய்கையன் - தேவர்க்குரிய சாத்துவிக குணமுடைய பிரகலாதன். தேவர் செய்கையன் அங்ஙனம் உரைசெய. (யுத் : 171)

தேவர் தம் தச்சன் - விசுவகன்மா. கற்றதேவர்தந் தச்சன் நீலக் காசினல் திருந்தச்செய்தது. (யுத் : 301)

தேவர்தம்படை - தேவர்படை. துய்ய தேவர்தம் படைக்கெலாம். (யுத் : 2581)

தேவர் தம் பிரான் - தேவாதி தேவனுன இராமபிரான். செம்புனற் சுவடு நோக்கி இது நெறியென்று தேவர் தம் பிரான் பகழி தூண்டத் தலையற்றுத் தலத்தனுனன். (யுத் : 2383)

தேவர்தம் முலகு - தேவர் உலகம். (பா : 621)

தேவர்தம் முலகுளான் - தேவருலகத்திலுள்ள ஒரு விண்ணவன். உரைசெயின் தேவர்தம் முலகுளான் அலன். (பா : 621)

தேவர்தம்முர் - தேவலோகம். தேவர்தம் மூரும் நாகருலகமும் உலைந்தவே. (ஆ : 361)

தேவர் தேவன் - தேவர்தம் தேவனுகிய சிவபெருமான். தேவர் தேவன் செறிசடைக் கற்றையுள். (அ : 638)

தேவர் தேவியர் - தேவரும் அவர் தேவிமாரும். (சு : 442)

தேவர் நா - அக்கினி. தேவர்தம் நாவுள் ஆகுதிநயக்கும் வேள்வி வாய். (பா : 341)

தேவர் முரட்படை - வலிமை வாய்ந்த தெய்வப் படைக்கலம். (யுத் : 1740)

தேவர் முறைபில் வைத்தல் - தேவர்களை அவரவர்க்குரிய முறைபில் (பதவியில்) வைத்தல். உலகில் தேவர் முறையில் வைத்து. (யுத் : 1216)

தேவராந்தகன் - தேவர் அந்தகன்; தேவர்க்கு அந்தகன். நீட்டல் விகாரம். இராவணன் புதல்வன். தேவராந்தகன் நராந்தகன் திரிசிரா என்னும் மூவர்... இராவணற்கரும் பெரும் புதல்வர். (யுத் : 512)

தேவராலயங்கள் - தேவாலயங்கள். ஆடரங்குகள் அம்பலம் தேவராலயங்கள். (சு : 228)

தேவரின் மெய்யன் - தேவர்கள் உண்மைக்கடவுளாகிய இராமபிரான். ஐயனைம்படை தாமும் அடித்தொழில் செய்ய வந்தயல் நின்றன தேவரின் மெய்யன் அன்னவை கண்டிலன். (யுத் : 3397)

தேவருக் கமுதமீந்த குன்று - தேவர்களுக்குத் திருப்பாற் கடலைக் கடந்து அமுதத்தைக் கொடுத்த மந்தரமலை. தேவருக் கமுத மீந்த குன்றென அயோத்தி வேந்தன் புகழெனக் குலவு தோளான். (சு : 195)

தேவரை வென்றவன் - இந்திரசித்து. (யுத் : 2111)

தேவன் - 1. சிவபெருமான். தேவன் சென்னிப்பண்டை நாளிருந்த கங்கை நங்கையும் பதைத்தாள். (யுத் : 595)

2. கடவுள். வானவருலகைச் சிந்தவென்ற நாள் சிறியன் கொல் நீ சொன்ன தேவன். (யுத் : 125)

3. இறைவன். தலைவன். தேவ. (யுத் : 2254)

தேவாசுரர் - தேவர்களும் அசுரர்களும். (யுத் : 2918)

தேவாசுரர் ஆதியர் - தேவர்கள் அசுரர்கள் முதலானவர்கள். தேவாசுரர் ஆதியர் செய்செருவில். (யுத் : 1733)

தேவாசுரர் வேலையில் - தேவர்களும் அசுரர்களும் கூடிய கடலில். தேவாசுரர் வேலையில் வந்தெழு திங்களென்ன. (சு : 46)

தேவாதி தேவர் - நித்திய சூரிகள். (வை.மு) **தேவர்; அதிதேவர்; உயர்ந்த தேவர்கள்.** (கலா) தேவாதி தேவர் பலராலுமுந்து திருநாம மோது செயலோய். (யுத் : 2203)

தேவாதியர் - தேவர் முதலானவர். இவர் பதினெண் கணத்தவர் என்பர். தேவாதியருந் திசைநான் முகனும். (யுத் : 2918)

தேவாந்தகன் - இராவணன் புதல்வன். திரிந்தான் ஒரு தனியே நெடுந் தேவாந்தகன் சினத்தான். (யுத் 1841)

தேவி - மனைவி. தேவியும் இளவலுந்தொடர. (அ : 558) (ஆ:41)

தேவிமார் - மனைவியர். தேவருமவுணரும் தேவி மாரொடும் கூவல் செய் தொழிலினர். (ஆ : 843)

தேவியல் நேமியான் - தெய்வத் தன்மையுள்ள ஆழிப்படை யேந்திய திருமால். தேவியல் நேமியானிற் சிந்தை மெய்த் திருவினைகப் பொய்யுறக் குறங்கு வானை. (சு : 308)

தேவியைப் பிரித்த பாவி வஞ்சன் - சீதாபிராட்டியைக் கவர்ந்து பிரியச் செய்த பாதகனாகிய வஞ்சகன். பஞ்செனச் சிவக்கும் மென் கால் தேவியைப் பிரித்த பாவி வஞ்சனுக்கிளைய என்னை வருக என்றருள் செய்தானே (யுத் : 432)

தேவு - 1. தெய்வத்தன்மை. தேவு மாதவன். (பா : 341) தேவு சேவடி தீண்டலும். (கி : 600)

2. தெய்வம். சேனையர் தருமத்தின் தேவை. (அ : 1112) தேவர்க்குந் தேவை. (யுத் : 3067)

தேவுகாதல் சீரியோன் - தெய்வக் காதலாற் சிறந்தவனுகிய இவன். (அண்) தேவர்களை வருத்துதலேயே தனக்குச் சிறப்பாகவுடைய அரக்கன். (ஆ : 72)

தேவு சேவடி தீண்டலும் - வழிபடு தெய்வத்தின் செவ்விய திருவடி (சிந்தையிலும் சென்னியிலும்) பொருந்திய அளவில். (அண்) தெய்வத்தன்மையுள்ள சிவந்த திருவடி பட்டமாத்திரத்தில். (வை.மு) தேவு சேவடி தீண்டலும் தீண்டரும் பாவ மாமெனப் பற்றழிந்திற்றவால். (கி : 600)

தேவுமாதவன் - சிறந்த தவத்தை மேற்கொண்டவனுகிய கோசிகன். (பா : 34)

தேவேந்திரன் - தேவர்களுக்கு அரசனுன இந்திரன். (யுத் : 3011)

தேள் - தேள். புருவத் தேளிரண்டு நெரியச்சினவு செங்கட் கோளிரண்டு சுடருந் தொடர்வதிற் குறுகலும். (ஆ : 43) (சு : 271)

தேற்றத்தின் நெறி - துணிவினுல் வந்த நடத்தை. தேற்ற மீதே தேற்றத்தின் நெறியுமீதே. (சு : 600)

தேற்றம் - 1. தெளிவு. செம்மையில் திறம்பல் செல்லாத் தேற்றத் தார். (அ : 11)

2. துணிவு. மனவுறுதி. தெருளுறு சிந்தைவந்த தேற்ற மீதாகில். (யுத் : 433)

3. சித்தாந்தம். வேதத்தின் வரம்பின் தேற்ற மெய்ப்பொருள். (யுத் : 175)

4. தேர்ச்சி. (உ.வி) (அ : 9)

தேற்றலர் - தேறலர். அறிபாதவர். தன்வினைப் பொருளில் வந்த பிறவினை. ஏவலின் வன்மையை எண்ணல் தேற்றலர். (ஆ:688)

தேற்ரும் - தேரும். தன்வினைப் பொருளில் வந்தபிறவினை. யாமது தெரிதல் தேற்ரும். (ஆ : 1041)

தேற்றி - தெளிவித்து. தேற்றித் தம்பியை. (அ : 792)

தேற்றுதல் . தெளிவித்தல். அஞ்சுவித்தானும் ஒன்ருல் அறிவுறத் தேற்றியானும். (சு : 480)

தேறல் - 1. தேன். கள். பொன் செய்தண்ணறும் தேறல் வள்ளம். (பா : 1056)

2. பழங்களின் சாறு. பாய்ந்த சூதப் பசுந் தேறலால். (அ:813)
3. மது, அளிக்குந் தேறலுண்டு ஆடுநர் பாடுநராகி. (சு : 125)

தேறுதல் - 1. ஆராய்தல். நன் மருந்தால் தேறுற்றுயிர் பெற்றியல் வுந் சில தேறலுற்ருன். (சு : 577)
2. நம்புதல். தேற்ருது செய்வார்களைத் தேறுதல் செவ்விதன் ருல். (கி : 270)
3. தெளிதல். நன் மருந்தால் தேறுற்று. (சு : 577)
4. துணையாகத் தெளிதல். என்னையே தேறினள் துயரம் நான் தீர்க்க கிற்றிலேன். (கி : 216)
5. அறிதல். அது தீர்க்கலாந்தகையது தெய்வந் தேறுமோ. (யுத் : 3995)
6. தைரியமுறல். தேறினர் நின்றனர். (யுத் : 2268)

தேறுற்று - தெளிந்து. (சு : 577)

தேன் - 1. பெண்வண்டு. தேனவாம் விரைச் செங்கழு நீர்த்துயில் செய்ய. (சு : 100)
2. தேன் வண்டு. நன் மணத்தில் மட்டும் மொய்க்கும். சுரும்பு மூசு தேன் பள்ளி ஆடிடங்கள் (கி : 825)
3. தேன்போன்ற இனிய இசை. வங்கியம் பல தேன் விளம்பின. (அ : 245)
4. நறுமணம். நான நாண்மலர் விரையகில் நாவி தேன் நாறும் சோணைவார் குழல். (அ : 755)
5. வண்டுகள் தொகுக்கும் தேன். தேனும் மீனும். (அ : 658)
6. கரும்பு முதலியவற்றின் சாறு. ஆலைவாய்க் கரும்பின் தேனும். (பா : 40)
7. வாசனை எண்ணெய். விண்ணவர் தருவும் விஞ்சை நாகமும் கரந்த திந்தேன். (ஆ : 573)
8. பூவின் தேன். தேன் முகமலருந்தாராய். (யுத் : 4217)

தேன் குலம் - தேனீக்கள். தேனினம். (யுத் : 2749)

தேன்விட்டுகு மலர் - தேனைச் சொரியும் தாமரை மலர். தேன் விட்டுகு மலரோன் படை. (யுத் : 3027)

தேன்விடு துளவம் - தேன் ஒழுக விடுகின்ற துளசி. தேன்விடு துளவத்தாராய். (யுத் : 2159)

தேன் விளம்புதல் - தேன் போன்று இனிமையோடு ஊதப்படுதல். வங்கியம் பல தேன் விளம்பின. **(அ : 245)**

தேனகு குழலாள் - வண்டுகள் மகிழும் கூந்தலையுடையவள். தேனகு குழலாள் தன் திருமண வினைநாள். **(பா : 1263)**

தேனகு நறவ மாலை - வண்டுகள் களிப்பதற்குக் காரணமான தேன் நிறைந்த பூமாலை. தேனகு நறவ மாலைச் செறி குழற்றெய்வ மன்னுள். **(பா : 1021)**

தேனகுமழலை - இன் சொல். தேன்போல விளங்குகின்ற முற்றாத இளஞ்சொல். தேனகு மழலை இன்சொல் உருப்பசி முதல தெய்வ வானக மகளிர். **(யுத் : 2775)**

தேனடைந்த சோலை - தேன் பொருந்திய சோலை. தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டு. **(அ : 1130)**

தேனமர் தெரியலான் - தேன் பொருந்திய மாலையை யணிந்த அரசன். தேனமர் தெரியலான் தேவர் கைதொழ வானகமெய்தினன். **(அ : 836)**

தேனிசை - தேன்போல இனிய கீதம். தேனிசை மாந்தினர். **(சு : 126)**

தேனிமிர் அலங்கற்பைந்தார் - வண்டுகள் ஒலிக்கின்ற அசைதலை யுடைய பசுமையான மலர்மாலை. (யுத் : 4329)

தேனிவர் தடவரை - தேன் பொருந்திய பெரிய மலை. (யுத் : 630)

தேனிற்றீஞ்சுவை - தேனின் தீஞ்சுவை. தென்னுண்டேனிற்றீஞ் சுவை. **(பா : 586)**

தேனின் மொழி - தேன்போன்ற சொற்கள். வாசத்தேனின் மொழி யுற்று. **(ஆ : 257)**

தேனீ - தேனைக்கவரும் வண்டுகள். இரதம் ஈட்டுறும் கவிஞரைப் பொருவின தேனீ. **(கி : 481)**

தேனு - 1. பசு. தேனுவுடன் கந்தருவமற்றுமுள பிற பயந்தாள். **(ஆ : 202)**

2. காமதேனு. அவ்வில் வரம்பினர்க்கு ஈ தேனுமிட்டதே. **(கி : 936)**

3. தேன். உகரச் சாரியை. உப்புத் தேனு நெய் ஒண்டயிர் பால்கரும்பு அப்புத்தானென்றுரைத்தன ஆழிகள். **(யுத் : 3394)**

தேனேபுரை கண் - தேன்போலச் சிவந்த கண். தேனேபுரை கண் கனலே சொரிய. (சு : 852)

தை

தைக்கும் - நிலை நிறுத்தும். (வை. மு) சேர்த்துப் பொருந்த வைக்கும். (கலா) நாமநிறுத்திப் பேரிசை தைக்கும் நவையில்லோன். (கி : 1015)

தைத்தது - புகுந்தது. (அண்) குளித்தது. (கலா) திரும்பிப் புகுந்தது. அவ்வழித் தைத்தது பூதம். (பா : 268)

தைத்தல் - 1. சேர்த்தல்.
2. நிலைநிறுத்தல். பேரிசை தைக்கும் நவையில்லோன். (கி : 1015)
3. பொருந்தச் சொல்லுதல். தங்கள் தங்கள் இடங்கள் மறுத்தமை தைப்பாய். (சு : 683a)
4. குளித்தல். தைத்தது பூதம். (பா : 268)
5. மூடுதல். தொடு சிலையால் தைத்தான். (யுத் : 3369)

தையல் - 1. பெண். தாடகை எனும் பெயர்த் தையலாள். (அ:147)
2. அழகுடையவள். கட்டழகுடையவள். தமியை நீ வருதற்கொத்த தன்மையென் தையல் என்ருன். (ஆ : 266)

தையல் பாகன் - சிவபிரான். தையல் பாகனுஞ் சதுமுகக் கடவுளுங் கூடி. (பா : 496) (யுத் : 800)

தையலர் - மங்கையர். தையலர் அருகு தூவி வாழ்த்தினர் தழுவ. (யுத் : 2158)

தையலார் - மங்கையர். தையலாரை உய்யவந்து அஞ்சல் அஞ்சல் என்கிலாத ஆண்மை என்ன ஆண்மையே. (பா : 798) (யுத் : 4290) [அ : 268]

தையலாள் - பெண். தாடகை எனும் பெயர்த் தையலாள். (அ : 147) (கி : 738)

தையற் கடல் - மகளிர் கூட்டம். தையற் கடலின் றெடுத்தவணைத் தைலக் கடலின் தலையுய்த்தார்- (அ : 606)

தைலக் கடல் - எண்ணெய்க் கடல். தைலக் கடலில் தலை உய்த்தார். (அ : 606)

தைவந்திடுதல் - தடவிக் கொடுத்தல். செய்ய கையால் தைவந்திடு கோசலையை. (அ : 366)

தைவரல் (தைவருதல்) - தடவுதல் (தைவர் - பகுதி) நாவி நன்குழல் நானிலம் தைவரப் பரப்பி. (அ : 184) தாமரைக் கையால் தாளைத் தைவரும். (யுத் : 2175)

தொ

தொக்கடங்கி - தோல் சுருங்கி. தொக்கடங்கித் துயில்தரு கண்ணினன். (யுத் : 1285)

தொக்கது - திரள். மீன் தொக்க தொன்று நின்றிமைக்கின்ற தன்ன முடி படி நெடிதின் வைத்தான். (யுத் : 1598)

தொக்கு - 1. தோல். தொக்கடங்கித் துயில்தரு கண்ணினன். (யுத் : 1286)

2. **உடம்பு.** (ஆகு) (உ. வி) தொக்குடன் தயங்கி. (பா : 124)

தொக்குறுத்த - முறித் தெடுத்துக் கொண்ட. தொகுதியாகப் பறித்த. (அண்) தொக்குறுத்த மரத்த துவன்றின. (கி : 598)

தொகாத - வந்து கூடாதன. தெய்வ மாக்களிறும் ஓராழிச் சூரியன் தனித் தேருமே இந்நகர்த் தொகாத. (சு : 106)

தொகுத்தல் - 1. திரட்டிக் கூறல். பிறர் யார் அஃ துணர்ந்து தொகுக்கவல்லார். (யுத் : 1976)

2. **கட்டுதல்.** வானரேசர் தொகுத்த திச்சேதுகண்டாய். (யுத் : 4086)

தொகுதரு காதல் - நிறைந்த காதல். தொகுதரு காதற்குத் தோற்ற சீற்றத்தோர். (அ : 1090) தொகுதரு காதற்குத் தோற்ற... நெற்றியாள். (பா : 1091)

தொகுதல் - 1. சுருங்குதல். தொகு பீலி கோலின நடமாடல். (அ : 693)

2. **வந்து கூடுதல். சேர்தல்.** இந்நகர்த் தொகாத. (சு : 106) யாவையும் தொகுப. (யுத் : 2031)

3. **அழிதல்.** தசந் தொகு அக்கிரீவனை என்பதை. தொக்குத் தடிந்து என்று பொருள் கொள்ளுமிடத்து தொகல் அழிதல். (உ. வி) (யுத் : 4071)

4. **தொகுதியாதல்.** தொக ஒருக்கிய ஞான மொன்றெவரினுந் தூயான். (யுத் : 1175)

5. **சேர்தல்.** முரண் தொகும் சிலை. (யுத் : 1202)

தொகுதி - மொத்த எண். ஊறின சேனையின் தொகுதி உன்னுவார். (ஆ : 405)

தொகை - 1. கூட்டம். தொகை முரட் சேனை. (அ : 999) தொகை நிலைக் குரங்கு. (யுத் : 57)

2. **மிகுதி.** தொகைக் கனற் கருமகன். (ஆ : 1152)

3. **தொகுத்தல்.** தொகையுறக் கூறுவன். (யுத் : 385)

4. **அளவு.** தொகையில் அன்பினல் இறைவன் துஞ்ச. (அ : 1167)

5. **கணக்கு.** தொகை செய்வார்க்கரிய தோளால். (யுத் . 277)

6. **தொகுதி திரள்.** தொகை யிழந்தன தோகைய ரோதியே. (அ : 818) (அ : 999)

7. **தொக்கு நிற்றல்.** தொகை நின்ற ஐயம் துடைத்திலையோ எந்தாய். (ஆ : 104)

தொகைக் கனல் - மிக்க நெருப்பினையுடை உலைக்களம். தொகைக் கனல் கருமகன் துருத்தித் தூம்பென. (ஆ : 1152)

தொகை செயல் - எண்ணித் தொகை சொல்லுதல். தொகை செயற்கரிய தோளான். (யுத் : 277)

தொகை நிலை - ஒன்று கூடி நிற்றல். தொகை நிலைக் குரங்குடை மனிதர். (யுத் : 57)

தொகை நின்ற ஐயம் - தொகுத்து நின்ற ஐயுறவு. முனிவர் சூளுற்றபோதே தொகை நின்ற ஐயம் துடைத்திலையோ. (ஆ : 104)

தொகை முரட் சேனை - கூட்டமான வலிய படை. தொகைமுரட் சேனையைத் துகளின் நோக்குவான். (அ : 999)

தொகையார் - கூட்டத்தார். இந்நின்ற தொகையார். (யுத் : 3231)

தொகையில் நின்றவர் - இனத்திற் பொருந்தியவர். தொகையில் நின்றவர்க் குணர்த்தியென். (யுத் : 2596)

தொகையுற - தொகுத்தல் பொருந்த. சுருக்கமாக. தொகையுறக் கூறுவென். (யுத் : 385)

தொகையுறக் கூறல் - சுருக்கமாகக் கூறுதல். (யுத் : 385)

தொகை விடுதல் - தொகுதியாக நாட்டுதல். மீத்தொகைவிட்ட வெண் கொடி. (யுத் : 976)

தொங்கல் - 1. குடைகளின் விளிம்பில் தொங்க விடப்படும் குஞ்சங்கள். தொங்கல் வெண்குடை தொகைப் பிச்சம். (பா:1120)
2. மாலை. தொங்கற் குழாம். (பா : 872)
3. இரு மருங்குந் தொங்கவிடப்படுகின்ற தொடை மாலை. தொங்கலுங் குடையும் தோகைப் பிச்சமும். (பா : 893)
4. இடையில் அணியும் அணி. குஞ்சம். (அண்) வெய்யவன் நகையிள வெயிலெனத் தொங்கல் நாற்றியே. (பா : 1129)
5. மயிற் பீலியாற் செய்த ஒருவகை விருது. (கலா) (பா:872)
6. கீழிறங்கிய வரிசை. தொடையமை நெடுமழைத் தொங்கலா மெனை. (ஆ : 247)

தொட்ட - தோண்டப்பட்ட. (கலா) **கைக் கொண்ட.** (அண்) **பெரிய.** தொட்டவார்சுணை. (அ : 744) **பற்றிய** (வை. மு) தொட்ட மாசுணம். (அ : 744) [பா : பே]

தொட்ட தொட்ட இடந் தொறும் - தொட்ட இடங்களிலெல்லாம். சொன்னவன் தொட்ட தொட்ட இடந்தொறுந் தோன்றுனுயின் என்னுயிர் யானே மாய்ப்பல். (யுத் : 256)

தொட்டல் - 1. தோண்டுதல். சகரர் தொட்டலால் சாகரம் எனப் பெயர் தழைப்ப. (பா : 520) மண் தொட்ட. (அ : 320)
2. மீட்டல். மகர வீணை தன் தோடவிழ் மலர்க்கரம் சிவப்பத் தொட்டனன். (பா : 1078)

தொட்டான் - தொடுத்தான். சூல வெங்கூற்றினைத் தொட்டான். (யுத் : 1463)

தொட்டில் - குழந்தைகள் உறங்கும் தொட்டில். கால்மணித் தொட்டிலுமிழ்ந்தன மகவும் சோரவே. (அ : 497)

தொட்டு நுகர்தல் - வாங்கிப் புசித்தல். இட்டார் கடுவல்விடம் எண்ணுடையான் தொட்டானுகரா ஒருசோர்விலனுல். (யுத்:245)

தொடக்கப் பொறி - தொடக்குதலையுடைய யந்திரம். தொடக்கப் பொறிகூடத் தழுவிக்கொள்ள. (யுத் : 3554)

தொடக்கம் - ஆரம்பம். தொடக்கத்து எல்லாம் நெடுங்கரத்தா லெடுத் தெறிந்தான். **(யுத் : 3721)**

தொடக்கறுத்தோர் - பற்றை நீக்கிக்கொண்டார். தொடக்கறுத் தோர் சுற்றமே. **(ஆ : 100)**

தொடக்கு - 1. தொடர்பு. செக்கர் வானம் தொடக்கற்று வீழ்ந்த தொத்தே. **(பா : 416)**
2. பற்று. தொடக்கறுத்தோர் சுற்றமே. **(ஆ : 100)**
3. கட்டு, பிணிப்பு. தோட்டியின் தொடக்கில் நிற்கும் துணைக் கை மாலி யானை யன்னன். **(யுத் : 2194)**
4. சங்கிலி. (கலா) துன்பினைத் தொடக்கும் மாயத்தொல் வினை தன்னை நீக்கி. **(கி : 56) [பா : பே]**

தொடக்குதல் - (தொடக்குதல்) 1. பிணித்தல். தளைத்தல். தொடக் குந் தோரணம். **(பா : 156)**
2. தடுத்தல் - மாட்டிக் கொள்ளுதல். நிருதர் ஓடினர் தூடணன் விலக்கவும் நில்லார் பரந்த குருதி நீரிடை வார்கழல் கொழுங் குடர் தொடக்க. **(ஆ : 503)**
3. தொடங்குதல். (யுத் : 535)

தொடக்கும் என்னில் - கட்டுப்படுமெனின். செயப்படுபொருளில் வந்தது. நாம்போரைத் தொடங்கி விடுவோமாயின். (அண்) தொடக்கு மென்னிலிவ் வுலகொரு மூன்றையும் தோளால் அடக்கும் வண்ணமும் அழித்தலும் ஒரு பொருளன்ருல். **(யுத் : 535)**

தொடங்கல் - தொடங்காதே. புன்மை தொடங்கல். **(யுத் : 2829)**

தொடங்குதல் - ஆரம்பித்தல். யானைமீதிருந்து போர் தொடங்கு சூரர். **(யுத் : 3351)** தொடங்கிய வேள்வி. **(யுத் : 3075)** தொடக்கும் என்னில். **(யுத் : 535)**

தொடர் - 1. உவம வாசகம். வான் தொடர்திரு. **(அ : 952)**
2. சங்கிலி. கயிறு. தொடர் மஞ்சம் போலுள பரண். **(அ:673)** எழுத் தொடர் மரங்களால் எற்ற முற்றிய விழுத்தலை முழுவதும் சிதறி வீழ்ந்தன. **(யுத் : 1993)**

தொடர்ச்சி - 1. சம்சார பந்தம். தொடர்பு. துக்கம் இத் தொடர்ச்சி யென்று துறப்பரால் துணிவு பூண்டோர். **(யுத் : 1361)**

2 அன்புத் தொடர்பு; அத் தொடர்பு பற்றிய நிகழ்ச்சி. (அண்) சந்தர்ப்பம். (உ.வி) வேளை. உயிரைத் துறப்பானுறுகின்ற தொடர்ச்சியின்வாய். (ஆ : 1114)

தொடர் செய்தல் - பூட்டுதல். கட்டுதல். செய் தொடர்க்கன வல்லியும் புரோசையும் சிந்தி. (சு : 1218)

தொடர்தல் - 1. தொடர்பு கொள்ளுதல். நன்மையிற் றொடர்ந் தார்க் குண்டோ கேடு. (யுத் : 266)
2. **நெருங்குதல்.** தொடர் நெடு மரங்கள் சுற்றி. (யுத் : 2009)
3. **பின் வருதல்.** யாங் காண்குறு மளவையும் தொடர்ந்து பேரவே யருள். (யுத் : 4074)
4. **இசைதல்.** வாரண உரித் தொகுதி நீவி தொடர. (ஆ:15)
5. **இடையறாது வரல், வழிதல்.** அயிலம்பு விண்மேல் ஓடு கின்றன உயிரையுந் தொடர்வன ஒத்த. (ஆ : 448) தொல் வன் மாரியிற் றொடர்வன சுடுசரந் துரந்தான். (யுத் : 1158)
6. **செல்லுதல்.** அன்ன மணியாளை ஒருகைச் சொல்லு மெல்லிலையின் முகந்து விசும்பு தொடர. (ஆ : 20) தன்தோ ளொத்த துணை மென் கொங்கை நோக்கங்குத் தொடர்கிலாமை. (யுத் : 1222) தொடர்தும் தேரின்சுவடு. (அ : 611)
7. **வாதுக்கழைத்தல்** (உ. வி) **மாறுபட்டுச் செய்தல்.** (யுத்:4102) அரக்கியர் தொடர்குவர் தொடர்ந்தால் ஏனை நாகியர் அருநடக் கிரியை ஆய்ந்திருப்பர். (சு : 121)
8. **ஊகித் துணர்தல்.** அடையாளத்தின் தொடர்வையே தொடர்தி. (சு : 525)
9. **ஒத்தல்.** கல்லொடுந் தொடர்ந்த நெஞ்சம் கற்பின் மேற் கண்டதுண்டோ. (சு : 445)
10. **சேர்தல்.** துறந்த உயிர் வந்திடை தொடர்ந்தது கொல் என்கோ. (சு : 553)

தொடர்ந்து சுற்றல் - ஒரு சேரச் சூழ்தல். தோகையைத் தொடர்ந்து சுற்றித் தீய வல்லரக்கிமார்கள் தெழித் திழித்துரப்பி. (சு : 481)

தொடர்படுத்தல் - கட்டுதல். கட்டி எடுத்துச் செல்லல். மெய் கொள் வாலினுல் மிடல் இராவணன் தொக்க தோளுறத் தொடர்படுத்த நாள். (கி : 186)

தொடர்பின்மை - தொடர்தல் இல்லாமை. துன்ப விளையாட்டிதுவேயு முன்னைத் துன்பந் தொடர் பின்னே இன்ப விளையாட்டா மெனி னும். (யுத் : 2619)

தொடர்பு - தொடர்தல். தொடர்பின்மை. (யுத் : 2619)

தொடர் மஞ்சம் - பூட்டப்பட்ட கட்டில். தொடர் மஞ்சம் போலுள பரண். (அ : 673)

தொடற்கரு மரக்கியர் - தொடுவதற்குக் கூடாத (மிக பயங்கரமான அல்லது அருவருப்பைத் தருகின்ற) அரக்கிமார்கள். தொடற்கரு மரக்கியர் காவற் சுற்றுளாள். (சு : 393)

தொடர்வு - 1. ஒற்றுமை. அடையாளத்தின் தொடர்வு. (சு : 527)
2. தொடர்ச்சி. அடையாளத்தின் தொடர்வையே தொடர்தி. (சு : 527)

தொடி - 1. வளையலில் ஒரு வகை. தொடி மணி இமைக்குந் தோளாய். (யுத் : 887)
2. வளை. தொடிக்கை மக்கள். (சு : 876)

தொடு - 1. பூணுதல். தொடுகழற் செம்பொன் மௌலி. (யுத்:453)
2. தொடுத்தல். விடுதல். மாலுமக்கணம் வாளியைத் தொட்ட தும். (பா : 411)

தொடுக்கிலன் - தொடுத்தானல்லன். ஆவி உண்ணென வடிக்கணை தொடுக்கிலன். (பா : 395)

தொடுக்குதல் - தொடுத்தல். தொடுக்குறு கவியான் மற்றைத் தொகையினை முடிவு தோன்ற ஒடுக்குறுத்துரைக்குந் தன்மை. (யுத் : 4304) மத யானையும் அழிதேர்களும் பரியும் தொடுக் குற்றன விசும் பூடுறத் சுமந் தோங்கின வெனினும். (யுத்:3366)

தொடுகடல் - ஆழமுடையதாகத் தோண்டப்பட்ட கடல். புரவி வெள்ளம் சுற்றுறு கமலம் பூத்த தொடு கடற்றிரையிற் செல்ல. (பா : 891)

தொடுகழல் - பாதுகை. (யுத் : 453)

தொடுகழல் செம்பொன் மௌலி - அணிந்த வீரக்கழலையுடைய திரு வடிகளாகிய செம்பொன் மணிமுடி. தொடு கழற் செம்பொன் மௌலி சென்னியிற் சூட்டிக் கொண்டான். (யுத் : 453)

தொடுத்த தொடுத்த - மேன்மேலும் தொடுத்துவிட்ட. தொடுத்த தொடுத்த சரங்கள் துரந்த. (சு - 916)

தொடுத்தல் - 1. கட்டுதல். வேங்கையிற் தோங்கினில் வயின் தொறுந் தொடுத்துக் குனிந்த ஊசல். (அ : 760)

2. **இணைத்தல்.** துகிலொடு தொடுத்த செம்பொன் தகட்டிடைத் தொடுத்த முத்தம். (அ : 1050)

3. **கோத்துவிடுதல்.** மாலும் அக்கணம் வாளியைத் தொட்டதும் (பா : 411)

4. **அடர்த்தியாக இருத்தல்.** அல் தொடுத்தன்ன குஞ்சியன். (அ : 649)

5. **சொருகுதல்.** ஆளியின் நெல் தொடுத்து நெரித்த புருவத் தன். (அ : 649)

6. **தொடர்ந்திருத்தல்.** தொடுத்த மாதவிச் சூழலில். (அ:759)

தொடுதல் - 1. தோண்டுதல். கருங்கடல் தொட்டனர். (கி:217)

2. **பரிசித்தல்.** இருமாதரைச் சிந்தையாலுந் தொடேன் என்ற செவ்வரம். (சு : 640)

3. **வாங்குத்ல்.** தொட்டான் நுகரா. (யுத் : 245)

4. **பூணுதல்.** தொடுகழற் செம் பொன் மௌலி· (யுத் : 455)

5. **கைக்கொள்ளுதல்.** தொட்டவார்சுனை சுடரொளி மணி யொடுந்தூவி. (அ : 744) சூல வெங் கூற்றினைத் தொட்டான். (யுத் : 1463)

6. **பிடித்தல்.** ஒரு கைத் தொட்ட முத்தலை அயில் தொழில் மிடற்கழுவொடே. (ஆ : 6)

7. **சுட்டுதல்.** தொட்டதோர் சுரிகையாளன். (யுத் : 1589)

8 **கையினல் தொடுதல்.** யான் தொட்ட தொட்டஇடந் தொறும். (யுத் : 256)

9. **அளாவுதல்.** வானைத் தொட்ட வெஞ்சோதிமோலி. (யுத்:4384)

தொடுபடை - செலுத்தப்பெறும் படைகள். இலகு தொடு படைகள். (யுத் : 3418)

தொடு புலிவாலினன் - தொடுக்கப்பட்ட புலிவாலையுடையவன். தயங் குறச் சூழவிட்ட தொடு புலிவாலினன். (அ : 648)

தொடு வேலை - தோண்டப் பட்ட கடல். பண்டு சுட்டான் இவகன் பதியைத் தொடு வேலையொடுங் கட்டான் கொல். (யுத் : 1954)

தொடை - 1. செய்யுள். எதுகை மோனை முதலிய செய்யுள் உறுப்புக்கள். தொடை நிரம்பிய தோமறு மாக்கதை. (பா : 11)
2. அம்பு. விற்றொடை இராமன் கோத்து விடுதலும். (சு:450) தொடை இழி இருலின் தேனும். (அண்) (பா:40) வில்லிடைத் தொடை கொடு விட்டான். (யுத் : 3777)
3. ஒழுங்கு. ஒழுங்காகத் தொடர்ச்சிப் படுதல். தொடையமை நெடுமழை தொங்கலாமென. (ஆ : 247)
4. இடையருமை. தொடர்ச்சி. தொடை பேராத் துயிலானை. (யுத் : 1213) (உ. வி) (பா : 4329) தொடையமை நெடுமழைத் தொங்கி. (ஆ : 247)
5. தொடுப்பு. தொடுத்தல். நூறு நூறு வாளி ஓர் தொடை கொண்டு. (சு:1026) கதிர் முகப் பகழி எண்ணிரண்டினோ டிரண் டொரு தொடை தொடுத் தெய்தான். (யுத்:1455) தொடை நின்ற பகழி மாரி. (யுத் : 1873) தொடைக் கலந் திராமன் வாளி தோன்றுதன் முன்னர். (யுத் : 907) தொடையுறு வற்கலை யாடை. (யுத் : 1071) ஒரு வெங்கணை தொடை பெற்றதொர் குறியால். (யுத் : 3364)
6. கயிறு. மாட்டும் புரவி ஆய மெலாம் தொடை யழிந்த. (சு : 1161)
7. வில் நாண். (உ. வி) விற் றொடையின் விடுகணையால். (யுத் : 408) தொடைக் கலந்திராமன் வாளி தோன்றுதன் முன்னம். (யுத் : 907)
8. தொடுக்கும் முறைமை. அமைப்பு. செய்யுட் கொண்ட தொடை யெனத் தொடையை நீக்கி எல்லையில் செல்வந் தீரா இசையென. (யுத் : 1240)
9. தேன் கூடு. தொடையூற்றில் தேன் துளிக்கும் நறுந்தாரான். (பா : 329)
10. மாலை. மன்றலந் தொடை மன்னன். (ஆ : 189)
11. தொடுக்குமிடம். வெஞ்சரம் ஐந்து ஒரு தொடையினிற் சேர்த்தி. (யுத் : 1190)
12. துடை என்னும் உறுப்பு. தொடையின் மேல் மலர்ந்த தாரார். (யுத் : 2411)

தொடை தொடுத்தல் - ஒரு தொடுப்பினில் தொடுத்தல். பகழி எண்ணிரண்டினோ டிரண்டு ஒரு தொடை தொடுத் தெய்தான். (யுத் : 1455)

தொடை நிரம்பிய தோமறு மாக்கதை - செய்யுள் நிரம்பிய குற்ற மற்ற பெரிய கதை. (பா : 11)

தொடை நின்ற - தொடுக்கப்பட்ட. தொடை நின்ற பகழி மாரி. (யுத் : 1872)

தொடை பேராத் துயிலான் - தொடர்தலைக் கொண்டு நீங்காத துயிலை யுடையவன். (யுத் : 1273)

தொடை மேவுங்கோல் - எய்தற்குத் தொடுத்து எய்யப்படும் பூமாலை கட்டிய மேய்க்குங் கோல். தொடை மேவுங் கோலைக் கொண்ட மன்மத ஆயன். (பா : 1008)

தொடையல் - தோளணி மாலை. தோடுழுத நறுந் தொடையல். (யுத் : 3872)

தொடையல் மாலை - தொடுத்தலைக் கொண்ட பூமாலை. மருக் கமழ் தொடையன் மாலை மார்பினன் பரதன். (யுத் : 4271)

தொடையிழி இருலின் தேன் - தொடுத்த அம்பினின்றும் ஒழுகுகின்ற தேனடையிலுள்ள தேன். தொடையிழி இருலின் தேனும் மாலைவா யுடுத்த தேனும் வரம்பிகந் தோடி. (பா : 40)

தொடையின் - வரிசையாக. விற்றொடையின் விடுகணையால் வெந் தொழியும். (யுத் : 408)

தொடையின் தாரார் - தொடுக்கப்பெற்ற மாலையினர். (யுத்:2411)

தொடையின் மேல் மலர்ந்த தா ;ரார் . தொடையின்மேற் பொருந்திய மாலையை யுடையவர். (அண்) தொடுத்த நிலையில் மலர்ந்த பூமாலையை அணிந்தவர். (வை. மு) மேல் மலர்ந்த தொடையின் தாரார் - மேலே விளங்கும்படி தொடுக்கப் பெற்றமாலையினர். (கலா) (யுத் : 2411)

தொடையுறு வற்கலை - தொர்டுத்தாற் போன்ற மரவுரி. (யுத் : 1071)

தொண்டு - அடிமை. தொண்டெனத் ததிமுகன் தொழுது தோன் றினன். (சு : 1295)

தொண்டு கொள்ளல் - தன்னடிப்படுத்தல். கனகன் இப்பாரை தொண்டு கொண்டது. (யுத் : 3772)

தொண்டை - 1. கழுத்து. தொண்டை நீங்கிய கவந்தம். (ஆ:507)
2. கொவ்வைப்பழம். தொண்டைக் கனிவாய் துடிப்ப. (யுத்:1668)

தொண்டைக் கனிவாய் - ஆதொண்டைப் பழம் போன்ற வாய். (யுத் : 1668)

தொண்டை நாடு - தொண்டைமான் நாடு. அப்புறத்து நீர் மேவு தொண்டைநா டுறுதிர். (கி : 772)

தொண்டைவாய் - கொவ்வைப் பழம்போன்றவாய். கொவ்வை வாய். தொண்டை வாயினிர் சொல்லுமின் ஈண்டென்ருன். (அ : 89) தொண்டைவாய் மயில். (சு : 511)

தொண்டை வாய்ச்சியர் - கொவ்வைக் கனியனைய செவ்வாயினை யுடைய மகளிர். தொண்டை வாய்ச்சியர் நிறை யொடும் நாணொடும் தொடர்ந்த கெண்டையும்முள. (அ. 55)

தொத்தினம் - கூட்டம். தொத்தாகிய இனம். நிலத்தின் தொத்தின மிருள்வர. (அ : 130)

தொத்து - 1. திரள். கூட்டம். தொகுதி. முறை யமுதத் தொத்தின் துள்ளி வெள்ளியினந் தொடுத்த கொல்லோ. (சு : 542)

2. **பூங்கொத்து.** (அண்) மெய்ம் முகிழ்த்த தொத்தின் தொகை கொல். (சு : 542)

3. **கொத்து.** நிலத்தின் தொத்தினம் இருள் வரத்தூண்ட. (அ : 130)

4. **அரும்பு.** (உ.வி) (சு : 342)

தொத்துதல் - பற்றிநிற்றல். மண் தொத்த நிமிர்ந்த பன்றி. (சு : 934) உருமின் தொத்தப் பொலி கனகக் கிரி. (யுத் : 2509)

தொத்துப் படுதல் – தொகுதிப் படுதல். பல முகிலாத் தொத்துப் படு நெடுந்தாரைகள் சொரிந்தா லெனத் துரந்தான். (யுத்:3723)

தொத்துறு கனல் - தொகுதியாக அமைந்த தீ. தொத்துறு கனலின் வீழ்ந்த பஞ்சென. (யுத் : 3316)

தொய்யல் - 1. சேறு நிரம்பிய பள்ளம். நெகிழ்ந்த சேற்றுக் குழம்பு. மதமழை அருமையால் தொய்யிலைக் கடந்தில சூழியானையே. (பா : 835) சூழியானை மதம்படு தொய்யல். (யுத் : 1000) தொய்யற்பட ரழுவம். (யுத் : 1837)

2. **துன்பம்.** தொய்யல் மாநிலச்சுமை. (அ : 62)

3. **பெருக்கு.** நயன வாரியின் தொய்யல் வெஞ்சுழியிடைச் சுழிக்கு மேனியள். (சு : 585)

4. **சோர்வுபடுதல்.** அறியாத் தொய்யற் சிந்தையேம் யாவரை யாதென்று துதிப்போம். (சு : 113)

தொய்யில் - வரிக்கோலம். குங்குமச் சந்தனக் குழம்பினால் மகளிர் தோள்களிலும் தனங்களிலும் எழுதும் வரிக்கோலம். தொய்யில் வெய்யமுலை. (பா : 1183)

2. **சந்தனக் குழம்பு.** தொய்யில் வாசத் துவர் துதைந்தாடிய கையில் நாகம். (யுத் : 1293)

தொய்யில் மாலை - (பா : 149) [பா : பே]

தொல் புரமட்டான் - பழைமையான முப்புரங்களைச் சுட்டழித்தவனான சிவபெருமான். தொல் புரமாட்டான் அன்னாரேனும் அஞ்சுவர் எய்தற்கு. (சு:179)

தொல்லர் - பழமையானவர். பல்லதிகாரத் தொல்லர் பெயர்ந்தார். (சு : 1222)

தொல்லருங்காலம் - பழமையான அரிய காலம். தொல்லருங்கால மெல்லாம் பழகினும். (யுத் : 429)

தொல்லறச்சான்றென நின்றவன் - பழைமையான தருமத்திற்குச் சாட்சி போன்றவன். (நீதி நெறிக்கு வழிகாட்டியானவன்) அனுமான். (யுத் : 4253)

தொல்லறப் படிவம் - அறத்தின் வடிவம் போன்ற உடம்பு. தன்னை நல்கியத் தரும நல்கினான் மன்னு தொல்லறப் படிவம் நோக்கினான். (அ : 914)

தொல்லார் படை - மூலப் படை. பழமையானவரின் படை. தொல்லார் படைவந்து தொடர்ந்ததென. (யுத் : 3453)

தொல்லாழி - பழமையான பாற்கடல். ஆயிர வாய் மணி விளக்க மழலுஞ் சேக்கைத் தொல்லாழித் துயிலாதே. (பா : 717)

தொல்லுயிர் - பழமையான உயிர்கள். தொல்லுயிர் உண்பது போலு முனிவினன். (யுத் : 958)

தொல்லை - 1. பழமை. தொல் சால் எண்குணனும். (யுத் : 303)

2. **பூர்வம். ஆதி.** தொல்லையின் ஒன்றேயாகி. (பா : 30)

3. **பழவினைத் துன்பங்கள்.** தொல்லை மறக்க முற்றார். (கி:773)

தொல்லை நல்வினை - பூர்வ புண்ணியம். முற்பிறப்பிற் செய்த நல்வினை. தொல்லை நல்வினையென உதவுஞ் சூழ்ச்சியார். (அ :10)

தொல்லை நாயகன் - பழமையான தலைவன். தொல்லை யாவர்க்கும் நாயகன் மலர்க்கழல் நணுகி. **(யுத் : 329)**

தொல்லை நாள் - பழைமையான (முன்) ஒருகாலம். துவன வில்லின் பொருட்டொரு தொல்லை நாள் எவன வீசன் என்பார் பொர ஏற்று. **(யுத் : 3694) (யுத் : 2515)**

தொல்லை நாள் மாதிரங் கடந்தவன் - பழமையான காலத்தில் திசைகளை வென்றவன். முன்பு திக்கு விசயஞ் செய்த இராவணன். தூதுவர் ஓடினர் தொல்லை நாள் மாதிரங்கடந்தவற் குறுதி. **(சு : 1068)**

தொல்லை நான்மறை வரன்முறை துணி பொருட் கெல்லாம் எல்லை கண்டவன் - பழமை வாய்ந்த நான்கு வேதங்கள் மரபு வாழுவாது அறுதியிட்டுக் கூறிய எல்லாப் பொருள்கட்கும் முடிவு எல்லையாக அமைந்தவனாகிய இறைவன். (யுத் : 158

தொல்லைப் பொருப்பு - பழைமையான மலை. எரிகின்றமோலி மேரு எனுமத் தொல்லைப் பொருப்பின் மிசையே விளங்கு சுட ரோனின் மும்மை சுடர. **(யுத் : 2198)**

தொல்லைய - பழமையாக நடைபெற்று வருவன. இவை தொல்லைய வன்றே. **(யுத் : 2260)**

தொல்லைய தாக்குவது - பழைமை போல் ஆக்குவது. நன்னிறந் தொல்லைய தாக்குவ தொன்று தொல்லையோய். **(யுத் : 2745)**

தொல்லையதுணர்தல்-நிகழ்ந்து போனவற்றையுணர்தல். (வை.மு.) **நெடுந்தூர நிகழ்ச்சிகளையுணர்தல். (கலா.) அரக்கனது இயல் பான மாயச் செயலையுணர்தல். (அண்)** தொல்லையதுணரத்தக்க வீடணன் துளக்கமுற்றான். **(யுத் : 2856)**

தொல்லையோன் - பழமையானவன். தொல்லையோய். **(யுத்:2745)**

தொல்லை வால் - பழமையான (பெரிய) வால். (சு : 1159)

தொல்லோன்-பழமையானவன். மிடலோரும் தொல்லோன் சொல்லே நன்றென அஃதே துணிவுற்றார். **(யுத் : 3445)**

தொல்வல் மாரி - பழைய வலிய மழை. வல்வன் வார் சிலை இடக் கையின் வாங்கித் தொல்வன் மாரியிற் றொடர்வன சுடுசரந் துரந்தான். **யுத்: (1158)**

தொல்வினை - பழவினை. தொல்வினைத் தொடு கடற்சுழி. (யுத்:175)

தொலைக்குவென் - அழிப்பேன். தும்பியைத் தொலைத்த தென்னத் தொலைக்கு வென். (யுத் : 3676)

தொலைத்தல் - 1. வலியழித்தல். திக்கின் மா வெலாந் தொலைத்து. (ஆ : 263)

2. **அழித்தல்.** யான் அரியின் ஏறு தும்பியைத் தொலைத்த தென்னத் தொலைக்குவென். (யுத் : 3676)

தொலைதல் - 1. தோற்றொழிதல். நூபுர மொலிக்கும் கோலக் காலுக்குந் தொலையு மென்றால். (கி : 789)

2. **வருந்துதல்.** (வை. மு) அரக்கரால் தொலைந்து. (பா : 186)

தொலைவிலாத் தூணி - எடுக்க எடுக்க அம்பு வற்றாமலுள்ள அம்புப் புட்டில். அட்சய தூணீரம். நவையறு கவிஞர் நாவருஞ் சொல் லெனத் தொலை விலாத் தூணி தூக்கினான் (யுத் : 1076)

தொலைவு - 1. இறுதி. முடிவு. எண்ணிறாலும் தொலைவிலா. (யுத் : 2542)

2. **அழிவு.** சரம் தொலைவிலாத தூணி. (யுத் : 3621) தொலை வருந்தானை. (யுத் : 3210) (பா : 662)

தொலைவுறல் - 1. வருந்துதல். நினைந்தவை சூலமாகத் தொலை வுறும் எல்லையின். (ஆ : 1064)

2. **அழிதல்.** சேனை யாவுந் தொலைவுறத் துணித்தலோடும். (பா : 662) சம்பரன் தொலைவுற்ற வேலை. (அ : 178)

தொழத் தொழ - பல முறை வணங்க. ஒருத்தன் மனையுற்றாள் பொன்னடி தொழத் தொழ மறுத்தல் புகழ் போலாம். (யுத்:62)

தொழல் (தொழுதல்) - 1. வணங்குதல். தொழற்குரிய தேவரும் குரவரே. (அ : 1171) சுற்றத்தார் தேவரொடுந் தொழ நின்ற கோசலை. (அ : 1056) தூதனை முறை முறை தொழுது துள்ளு வான். (யுத் : 4168) திசை நோக்கித் தொழுகின்றான். (அ:1022) தொழுதானை வணங்கினான். (அ : 1024) தொழுதுழி. (யுத் : 954)

2. **விடைபெறுங் குறிப்பு.** (கலா) போகின்றாளைத் தொழுது புரவலன் சுமித்திரை மேகந்தோய் மணிக்கோயிலை எய்தினான். (அ : 324)

தொழலுறுதல் - தொழப்பார்த்தல். ஐயனை நாடித் தன் தூய கையில் தொழலுறுவான் தனை. (அ : 833)

தொழாத கொற்றம் - தான் யாரையுந் தொழ வேண்டாத கொற்றம். தொழாத கொற்றக் குடைத்தொழில் தம்பிகொள்ளக் கொடுத்துழி. (யுத் : 954)

தொழில் - வேலைப்பாடு. தொழில் மாய் சிற்பங்கள். (ஆ : 91)

தொழில் மாய் சிற்பங்கள் - வண்ணம் முதலிய வேலைப்பாடு கால அளவில் மாய்தற் குரிய சித்திரங்கள். (ஆ : 91)

தொழிலாடைத்திரை-ஓவிய வித்தகரின் சித்திர வேலைப்பாட மைந்த திரைச் சீலை. குயிலினம் வதிகானம் தீ நிகர் தொழிலாடைத் திரை பொருவனபாராய். (அ : 707)

தொழிலுரிமை - பணியினை உரிமையோடு ஏற்றுக்கொள்ளும் நிலை. நானுன் தொழிலுரிமையினுள்ளேன். (அ : 685)

தொழு - 1. சிறை. தொழுமரம். மின்னைத் தொழுவளைத்த தென்ன மிளி ரொளியாய். (யுத் : 301)

2. விலங்குகள் அடைக்குமிடம். கொட்டில். கூடுகள். கப்பணம் முதலிய கைப்படை தொழுவினிற் புலியனுன் உடலில் தூவினுர். (யுத் : 3450) [பா:பே] தொழுவில் நின்றன போன்றன சூழிமா. (யுத் : 3688)

3. இரேவதி நட்சத்திரம். (கலா) மின்னைத் தொழு வளைத்த தென்ன மிளிரொளியாய். (யுத் : 10)

4. கொப்பம். (உ.வி) தொழுவில் நின்றன போன்றன சூழிமா. (யுத் : 3688)

தொழுகுலம் - தெய்வம். குலதெய்வம். (வெ.ப) (வை.மு) யாவர்க்கு குந் தொழுகுலமாம் இராமன். (அ : 1059)

தொழுகுவார் - தொழுவார். அயல் நின்றுரைத் தொழுகுவார். (யுத் : 2785)

தொழுதகை மடந்தையர் – யாவராலும் தொழப்படும் தகுதி வாய்ந்த மகளிர்கள். மாநகர்த் தொழுதகை மடந்தையர். (பா : 142)

தொழுத கையினன் - தொழுகின்ற கையினனுய். தொழுத கை யினன் சுமந்திரன் முன்னின்று சொல்லும். (அ : 45)

தொழுதல் - தொழல் பார்க்க.

தொழுதி - தொகுதிக் கூட்டம். சோலையின் தொழுதிக் கற்பக தருவும். (சு : 422)

தொழுதுயர்கை - வணங்க உயர்த்திய கைகள். தொழுதுயர் கையினன். (யுத். 477)

தொழுதெழுதல் - தொழுது எழுந்திருத்தல். இன்னதே கடிதியற்றுவ னெனத் தொழு தெழுந்தான். (யுத் : 2484)

தொழுந்தகைமை - வணங்கும் தன்மை. தொழுந்தகை அமைச்சர். (யுத் : 1677)

தொழுந்தொறும் தொழுந்தொறும் - 1. பலமுறையாக வணங்கி வணங்கி. தொழுந் தொறும் தொழுந் தொறும் களி துளங்குவார். (பா : 193)

2. **வணங்குந்தோறும் வணங்குந் தோறும்.** அவன் தொழுந் தொறும் தொழுந்தொறும் ஆசி சொல்லுவார். (ஆ : 126)

தொழும்பு - அடிமை. அடித்தொண்டு. முன்னைத் தொழும்புனக்கே யாமன்றே. (யுத் : 30)

தொழுவம் - மாட்டுக் கொட்டில். தொழுவினிற் புலியனான். (யுத் : 3438)

தொழுவளைத்தல் - தொழுமரத்திலே பிடித்து அகப்படுத்தி வைத்தல். (வை. மு) **இரேவதி நட்சத்திரம் வளைத்து வைத்தல்.** (கலா) மின்னைத் தொழு வளைத்த தென்ன மிளிர் ஒளியாய். (யுத் : 301)

தொழுவார் தொழு தாள் அரி - யாவராலும் தொழப்படும் தேவர்களால் தொழுது போற்றப்படுகின்ற திருவடிகளையுடைய திருமாலாகிய இராமபிரான். (யுத் : 1780)

தொள்கு - 1. யானையைப் பிணித்தற் கமைத்த தளை. (அண்) மூரிவெங்களி நல்யானை தொள்கொடுங் கிடந்த தென்ன. (கி : 310)

2. **விலங்கு.** (வை. மு) (கி : 310)

3. **சேறு.** (கலா) (கி : 310)

4. **வலை.** தொள்கின் தலைஎய்திய மானெனச் சோர்ந்து நைவாள். (ஆ : 942)

தொள்தல் - துளைத்தல். தோட்ட தன் செவி. (யுத் : 4141)

தொள்ளாயிர கோடி - தொள்ளாயிரங் கோடிக் கணக்கு. வலிகொள் தொள்ளாயிர கோடிப் பாழிவெம்புயத் தரியொடும் இடபனும் பெயர்ந்தான். (கி : 721)

தொள்ளாயிரம் - ஒன்பது நூறு. தொள்ளாயிரம் கடும் போர்க்கணே துரந்தான். (யுத் : 3016)

தொள்ளை - தொளை. வெவ்வராச் செய் தொழிலில் துயில் செவித் தொள்ளையான். (ஆ : 1155) தொள்ளைக் குமிழி. (கி : 795)

தொளை - துளை. துவாரம். மூக்குத் தொளை. தொளை முகத்திற் சுருதி விளம்பின. (அ : 804)

தொளை எஞ்சுதல் - தொளைகளில் அச்சத்தால் மதம் பெருகாமற் குறைதல். சொரிமதத் தொளை எஞ்சின. (அ : 681)

தொளை கட்டிய கிளை - தொளை அமைக்கப்பட்ட வேய்ங்குழல். தொளை கட்டிய கிளை முட்டிய சுருதிச் சுவையமுது. (அ : 622)

தொளை கட்டிய கிளை முட்டிய சுருதி - வேய்ங்குழலில் உந்தியினின் றெழுந்த காற்றுத் தாக்குதலால் எழுந்த இசை. (அ : 622)

தொளை கொள் தாழ் தடக்கை - துளையினை யுடைய தொங்குகின்ற பெரிய நீண்ட தும்பிக்கை. தொளை கொள் தாழ் தடக்கை நெடுந் துருத்தியில் தூக்கி. (அ : 765)

தொளைபடு குழல் - புல்லாங்குழல். தொளைபடு குழலினோடு யாழ்க் குத் தோற்றன. (அ : 474)

தொளை முகம் - மூக்குத் தொளையை யுடைய முகம். தொளை முகத் திற் சுருதி விளம்பின. (அ : 804)

தொளையுறு புழை வேய் - புழை வேய்த் தொளை. உள்ளீடற்ற (குழலாயிருக்கின்ற) மூங்கிலின்கண் இடப்பட்ட தொளை. (அண்) துளை செய்யப் பெற்றுள்ள (உட்புறம் இபற்கைபான துவாரத்தை யுடைய) வேய்ங்குழல். (வை. மு) தொளையுறு புழைவேய்த தூங் கிசைக் கானம் துயலுருதொரு நிலை தொடர. (சு : 417)

தொளை யெஞ்சுதல் - தொளை எஞ்சுதல் பார்க்க,

தொளை வாளெயிறு - துவார முள்ள கூரிய கொடிய பற்கள். வழிந்த நாகத்தின் வன்றொளை வாளெயிற்று இழிந்த கார் விடம். (ஆ : 296)

தொன் மரம் - பழைய பெரிய மரம். (யுத் : 2015)

தொன்முறை - பழைமையான நீதி. கேழில் ஞாலம் கிளத்திய தொன் முறை. (யுத் : 1002)

தொன் முறை நெறி - பழமையான நீதி வழிகள். தொன் முறை நெறி தெரிந்தவனுஞ் சொல்லுவான். (யுத் : 378)

தொன்முனி - வசிட்டன். அலகில் தொன்முனி ஆங்கவற் குரைத் திட. (பா : 521)

தொன்மை - 1. மரபு. மன்னரின்றியே வையம் வைகல்தான் தொன்மையன் றெனத் துணியு நெஞ்சினன். (அ : 933)
2. பழவினை. அந்தரம் வருதலும் அணைய தீர்தலும் சுந்தரத் தோளினிர் தொன்மை நீரவால். (ஆ : 1000)
3. பழைய நிலை. போக்கின வனமெனுந் தொன்மை. (ஆ:450)

தொன்மைப் பேரகழ் - பழமையான பெரிய அகழி. தசமுகன் தொன்கைப் பேரகழ் வானரந் தூர்த்தலால். (யுத் : 974)

தொன்மையராயவர் - பழமையான பெரியோர். தூயவர் முறை மையே தொடங்குந் தொன்மையராயவர். (யுத் : 80)

தொன்மையான் - பழையோன். தூய கங்கைத் துறைவிடும் தொன்மையான். (அ : 645)

தொன்று - பழைமை. தொன்று வந்தன்பு செய்யுந் துணைவனு மவனே. (யுத் : 415)

தொன்று நிலை - பழைய பரமபதத்திலுள்ள நிலை. இவ்வோ நின் தொன்று நிலை யென்றால். (ஆ : 101)

தொன்றுவந் தன்பு செய்யும் துணைவன் - பல நாளாகப் பழகிவந் தன்பு செய்கின்ற நண்பன். (யுத் : 415) (யுத் : 780)

தொன்னகர் - 1. இலங்கை. தொன்னகர தணைக் கடிகெடச் சுடுதும். (யுத் : 2812) தொன்னகர் அரக்கர். (ஆ : 589)
2. பழைமையான நகரம். நாகர் தம் தொன்னகரம். (ஆ:858)

தொன்னாள் - தொல் நாள். நெடுங்காலம். தொன்னாள் பிரிந்த துயரால். (யுத் : 2200)

தொன்னியமம் - பழைமையான நித்திய கடன்கள். எழுந்து தொன்னியமத் துறை முடித்து. (பா : 718)

தொன்னிலை - பழைமையான நிலைமை. தொன்னிலை ஒருவரால் துணியற் பாலதோ. (யுத் : 189)

தொன்னெறித்தாகும் - பண்டு தொட்டு வந்த முறையையுடைய தாகும். (ஆ : 715)

தொன்னெறி முறை - பழைமையான முறை. அன்னவன் தனைக் கொணர்ந் தலங்கன் மாமுடி தொன்னெறி முறைமையிற் சூட்டக் காண்டியால். (அ : 950)

தோ

தோகை - 1- பெண்கள். தூவி மட அன்ன முள தோகையர்கள் இல்லை. (கி : 857)

2. கலாபம். தொடர்ந்து போவன தோகை மஞ்ஞைகள். (பா : 83)

3. மயில். தோகையின் ஆடினுரே. (பா : 787)

4. மயில் போலும் பெண். துனியிருந்த வன் மனத்தினள் தோகையைத் தொடர்ந்தாள். (ஆ : 316) தோகையுஞ் சில வாசகம் இன்னன சொன்னுள். (சு : 681)

தோகைக் கொம்பின் அன்னவர் - பீலிகளையுடைய கொம்பு போன்ற மகளிர். மலர் கொய்யும் தோகைக் கொம்பினன்னவர். (பா : 584)

தோகைப் பிச்சம் - மயிற் பீலியாற் செய்த பிச்சம். எடுபிடி வகையுள் ஒன்று. தொங்கலுங்குடையுந் தோகைப் பிச்சமும் சுடரை ஒட்ட. (பா : 893)

தோகை பாகன் - உமாதேவியைப் பாகத்திலே கொண்ட சிவ பெருமான்: தோகை பாகனை நோக்கி நீ அருந்தவந் தொடங்கு. (பா : 526)

தோகை மஞ்ஞை - தோகையோடு கூடிய ஆண்மயில்கள். மடந்தை மாரொடுந் தொடர்ந்து செல்வன தோகை மஞ்ஞையே. (பா:83)

தோகையர் - பெண்கள்: தோகையர் குழாம்! (அ : 253) (ஆ:585) (ஆ : 77)

தோகைய ரோதி - மகளிர் கூந்தல்: தேமலர்த் தொகையிழத்தன தோகைபரோதியே: (அ : 818)

தோகை யன்னவர் - மயிலை ஒத்த சாயலையுடைய பெண்கள்: (யுத் : 3621)

தோகையிள அன்ன நிரை - தோகைகளையுடைய இள அன்னங் களின் வரிசை: படுகர் புளின முன்றில் தோகை இள அன்ன நிரையிற் சிலர் துயின்ருர். (அ : 545)

தோச்சனன் - தோய்த்தனன். தோச்சனன் வாலது. (சு : 1241) [பா : பே]

தோட்கானம் - தோட்களின் தொகுதி. அமரரை இருக்கை நின்றுங் கட்ட தோட்கானஞ் சுற்ற. (யுத் : 1589)

தோட்ட - 1. தொட்ட. துளையுடைய. துளைக்கப்பட்ட. உடல் தோட்ட நெடு வேலாய். (பா : 728) தோட்ட தன் செவி பொத்தி. (யுத் : 4141)

2. **தோண்டிய.** கடல் தோட்டாரெனின். (பா : 728)

3. **தோண்டி எடுக்கப்பட்ட.** தோட்ட நுங்கின் தொளையுறு மூக்கு. (ஆ : 375)

தோட்டடம் குலுங்குதல் - தோளிடங்கள் குலுங்குதல். நாட்டந் தியெழ நலந்திகழ் ஆரமும் மார்பும் தோட்டடங்களும் குலுங்க நக்கு. (யுத் : 112)

தோட்ட நுங்கு - தோண்டப்பட்ட பனை நுங்கு. தோட்ட நுங்கில் தொளையுறு மூக்கினைக் காட்டெனு எழுந்தான். (ஆ : 375)

தோட்டம் - பள்ளம். இவ்வுலகம் திடல் தோட்டம் எனக் கிடந்த தென. (பா : 728)

தோட்டவர் - துளைக்கப்பட்டவர். கேள்வியால் செவிகள் முற்றும் தோட்டவர் உணர்வின் உண்ணும் அமுதத்தின் சுவையாய் நின்றான். (ஆ : 1203)

தோட்டனன் - பெயர்த் தெடுத்தான். (யுத் : 2717)

தோட்டார் - தோண்டினர். கடல் தோட்டாரெனின் வேறோர் கட்டுரையும் வேண்டுமோ. (பா : 728)

தோட்டார் கோதை - இதழ்கள் நிறைந்த பூ மாலை. (ஆ : 1172)

தோட்டி - அங்குசம். மாலையை நீட்டலும் தோட்டியால் வாங்கி. (பா : 490) (சு : 817)

தோட்டின் முடங்கல் - ஓலைத்திருமுகம். சாதனந் தோய்த் துடைச் சுற்றுமண் மூடு தோட்டின் முடங்கல் நிமிர்த்தனன். (அ : 798)

தோட்டு நுங்கினர் - தோண்டி நுழைந்தனர். தோட்டு நுங்கினர் புவியினைப் பாதலந் தோன்ற. (யுத் : 514)

தோடணைமவுலி - மலர்மாலை சூடிய முடி. (யுத் : 4282)

தோடவிழ் அலங்கல் - இதழ்கள் விரியப்பெற்ற மாலே. தோடவிழ் அலங்கல் என் சேய்க் குணர்த்துமின். (யுத் : 2554)

தோடவிழ் கோதை - இதழ்கள் விரிந்த மாலேகள். உம்பர் தம் அரம்பை மாதர் தோடவிழ் கோதை நின்றும் துறந்த மந்தார மாலே. (பா : 938)

தோடு - 1. பூ இதழ் மலர். தோடு துற்ற மலர்த் தாரான். (பா : 241)

2. ஓலே. பொன் திணிந்த தோட்டு அரும் பெறல் இலச்சினே போக்க. (அ : 73)

3. பனே ஓலே. தோடுண்ட சுருள். (யுத் : 2776) தோட்டின் முடங்கல். (அ : 798)

4. ஓர் அணி. (யுத் : 2776)

5. புருஷர் காதணி. (கலா) செழுந்தோடும் பல் கலனும் வில் வீச. (பா : 238)

6. மலர் மாலே. தோடணி மவுலி. (யுத் : 4282)

தோடுண்ட சுருள் - பனந் தோட்டிஞல் இயன்றது போன்ற பொன்ஞற் செய்த சுருள் என்னும் அணி. (யுத் : 2776)

தோடுழுதல்-அகவிதழ் பொருந்துதல். தோடுழுத நறுந் தொடையல். (யுத் : 3172)

தோண்மை - தோள் வீரம். ஆடவர் தோண்மையே இவள் பேர் சொலத் தோற்குமால். (பா : 308)

தோணி - ஓடம். வந்தது தோணியே. (அ : 1062) அரக்கர் வேலேக்கோர் தோணிபெற்றனர். (யுத் : 1064)

தோத்திரம் - புகழ்தல். தோத்திரத் தொருவனென உரைக்கும். (யுத் : 3038)

தோதவத்தி - சுத்தமான ஆடை. தோதவத்தித் தூய் மறையோர் துறையாடும் நிறையாறும். (கி : 771)

தோம் - 1. குற்றம். தோஷம். தோமிலர். (அ : 626) (அ : 909) (யுத் : 389)

2. வருத்தம். மானமும் போக்கருங் காதலும் தூண்ட நின்றிடை தோமுறும் ஆருயிர். (ஆ : 1050)

தோமரம் - 1. இருப்புலக்கை (அண்) கை வேல். (கலா) சுடர்த் தோமரம். (யுத் : 846) எழுக்களும் தோமரத் தொகையும் (ஆ : 401)

2. உலக்கை. சூலம் வாள் மழுத் தோமரம். (ஆ : 378)

3. தண்டாயுதம். ஒரு வகை எறியும் ஆயுதம். சூல மழு வாளொடயில் தோமர முலக்கை. (சு : 164)

4. பெரிய தண்டாயுதம். தோமர முலக்கை. (சு : 817)

தோமிலான் - குற்ற மில்லாதவன் (ஆகிய பரத்துவாசன்) தூய சாலை குறுகினன் தோமிலான். (அ : 1071)

தோமுறும் ஆருயிர் - துன்புற்று வருந்தும் அரிய உயிர். (ஆ:1050)

தோய் - தோய்ந்து. பொருந்தி. விசை தோய் அவண விண்ணிடை விரைந்து. (ஆ : 38)

தோய் கணீர் - நிறைந்த கண்ணீர். (வை.மு) **தேங்கிய கண்ணீர்.** (கலா) தொழுது நின்ற தன் தம்பியைத் தோய் காணீர் எழுது மார்பத் திறுகத் தழுவினான். (யுத் : 4139)

தோய் கயம் - குளிக்கின்ற தடாகம். நீராடுதற்குரிய தடாகம். தோய் கயத்து மரத்துமென்சிறை துள்ளி மீதெழு புள்ளெலாம். (அ : 233)

தோய்தல் - 1. மூழ்குதல். புணர்தல். மங்கையர் தோய்தலால் பொய்கை காதற் கொழுநரும் போன்றதே. (பா : 1032) இடரில் தோய்ந்தாள். (யுத் : 1617)

2. அனுபவித்தல். கருத்து முற்றத் தோய்ந்தே கடந்தான் திருவின் தொடர் போக பௌவம். (பா : 172)

3. ஒத்தல். பொருந்துதல். மஞ்சு தோய் புய மைந்தர். (அ : 240)

4. தம்மிடத்துப் படிந்திருத்தல். கற்பகங் கொடுத்த பலவும் தோய்தலிற் பரிமளங் கமழ்வன பாராய். (அ : 761)

5. படிதல். நிறை மாலைக் கொம்புகள் நதி தோறும் துகில் புரை நுரை நீரில் தோய்வன. (அ : 700)

6. பதிதல். அடியிணை படியிற் றோயத் திருவிங்கு வருவாள் கொல்லோ. (ஆ : 283)

7. பொருந்துதல். சோகம் வந்துறுவது தெளிவு தோய்ந்தன்றே. (சு : 674)

8. படர்தல். சுணங்கு தோய் முலையாள். (யுத் : 3935)

9. **நிறைதல்.** தோய் கணீர். (யுத் : 4139)

10. **கலத்தல்.** தோய்ந்தும் பொருளனைத்தும் தோயாது நின்ற சுடரே. (ஆ : 100)

11. **நீராடுதல்.** தோய்வரேல். (யுத் : 4090)

தோய்ந்தும் தோயாது நிற்றல் - உலகிலுள்ள பொருளனைதிலும் கலந்துறைந்தும் அப்பொருள்களின் குற்ற நற்றங்கள் தன்கண் சாராது சுயவொளியுடன் நிகழ்ந்திருத்தல். தோய்ந்தும் பொருளனைத்தும் தோயாது நின்ற சுடரே. (ஆ : 101)

தோய் படைத் தொழில் - தோய்த்து வடிக்கப்பட்ட படைக் கலங்களை ஏவுதலாகிய போர்த்தொழில். (யுத் : 3487)

தோயம் - 1. தண்ணீர். கருமக் கம்மியன் தோய்த்த தண்புனலொத்தது தோயமே. (கி : 37)

2. **நீர்.** நால் வகை மேகமும் தூக்கினுலன்ன தோயத்ததாய். (சு : 244)

3. **புண்ணிய தீர்த்தம்.** ஏழ்கட லதனிற் ரேயம் இருநதி பிறவிற் ரேயம். (யுத் : 4300) (யுத் : 3924)

தோரணத் தெரு - தோரணங்களை யுடைய தெரு. தோரணத் தெருவினில் சிறியன திசைகள். (பா : 155) [பா : பே]

தோரணம் - 1. தோரண கம்பம். கொடிமரம். வன்ரோரணங்கள் புணர் வாயிலும். (பா : 163)

2. **கோப் பெருவாயில். கட்டுவாயில். தோரணவாயில்.** கனக தோரணத் தொடும்... சாய்ந்தான். (சு : 1037) தோரண மாளிகை. (பா : 156) தோரணத் தெழுவாற் பாடுபட்டவர். (யுத் : 521)

3. **மகர தோரணம்.** தோரணம் நட்டு மேல் துகில் பொதிந்து. (யுத் : 4183)

தோரணம் நடுதல் - தோரணம் நாட்டுதல். (யுத் : 4183)

தோரண மாளிகை - தோரணங்கள் கட்டப்பட்ட மாளிகைகள். (பா.156)

தோரண வாயில் - வெளி வாயில். கோப்பெரு வாயில். (சு : 1037)

தோல் - 1. கேடகம். கிடுகு. தூக்குறு தோலர். (சு : 8) பொன் முகங்காண்ப தோர் தோலும். (யுத் : 1517)

2. அழகு. புகழ். மானத் தோல் விசைத் தோள்கள் பொங்க. (சு : 17)

3. யானை. நகழ்வன சிலவரு தோல். (யுத் : 1812) தோல் கிளர் திசை. (சு : 886

4. தோல்வி. தோலாவிற் றெழில் வீரம் விளைத்தார். (சு:1242) நீரிடைத் தோற்றவன்றே. (யுத் : 642) எறிந்த. படைக் கெலாந் தோலுங் காட்டி. (யுத் : 3102)

5. விலங்குகளின் மேல் தோல் சருமம். தோலுடை நிமிர்கோல். (அ : 678)

6. தள்ளுதல். (வை.மு) (அ : 678)

தோல் உகுத்தல் - தோலுரித்தல். முதிர்ந்த மெய்யெலாம் தோலு குத்தாலென. (யுத் : 468)

தோல் மயிர்க்குந்தளம் - தோலின் மீதுள்ள மயிர்ச் செறிவுகள். தோல் மயிர்க்குந்தளம் சிலிர்ப்ப விசைத் தெழுந்தான்.(யுத்:2687)

தோல்வி - தோற்றுப் போதல். மறந்திறம் பாத தோலா வலியின ரெனினும். (சு : 461) யாவர்க்கும் தோலாதான். (யுத் : 1543)

தோலடி - நீர் வாழ் பறவைகளுக்கு நீரில் நீந்துவதற்குக் கருவியாக விரல் களினிடையே பரவியே தோல்களையுடைய பாதம். தோலடிக் கிளையன்னம். (கி : 931)

தோலடிக் கிளையன்னம் - தோல் பரவிய கால்களையுடைய கூட்ட மான அன்னம். (கி : 931)

தோலா - இழிவுபடாத. தோற்காத. தோலா மனு நூலின் வாழ்விற் செல்வம் துய்த்தி கொல். (அ : 599) தோலா வலியினர். (சு : 461)

தோலாத - தோல்வியடையாத இந்திரற்குந் தோலாத நன்மகன். (யுத் : 1946)

தோலா மனு நூல் - தோல்வியுருத மனு நூல். தோலா மனுநூலின் வாழ்விற் செல்வந்துய்த்தி கொல். (அ : 599)

தோலார் - தோற்கமாட்டார். ஆரிடைத் தோலார் மேலோர். (யுத் : 642)

தோலான் - தோற்கமாட்டான். எவனுக்குந் தோலான். (யுத்;3514)

தோலின் வினையுறு செருப்பு - மரவடி. துணை பரிகரிதேர் ஊர்தி என்றிவை பிறவும் தோலின் வினையுறு செருப்புக் கீந்தான். (யுத் : 4267)

தோலுடை நிமிர்கோல் - கைப்பிடியில் தோற்கட்டமைந்த நீண்ட துடுப்பு (அண்) **தள்ளும் தன்மையுடைய நீண்ட துடுப்பு.** (வை.மு) தோலுடை நிமிர் கோலில் துழவிட எழுநாவாய். (அ : 678)

தோலுடை நெடும்பணை - தோலையுடைய முரசங்கள். (கலா) **யாமந் தோறும் ஒலிக்குந் துந்துபி.** (பழையவுரை) தோலுடை நெடும் பணை துவைக்குந் தோறெலாம். (ஆ : 576)

தோலுதல் - தள்ளுதல். தோலுடை நிமிர்கோல். (அ : 678)

தோழம் - தொழுவம். கொட்டில். தோழ மாமதில் இலங்கை மால் வேட்ட மேற்றொடர்ந்தார். (யுத் : 3275)

தோழமை - தோழமையுடையோம். தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல்லன்றோ. (அ : 1008)

தோழி - உயிர்த்தோழி. தோழியன்ன சுமித்திரையும் துளங்கி ஏங்கி உயிர் சோர. (அ : 600)

தோள் - 1. கை. மானத் தோள்களால் வாரி வாரி. (சு : 306)
2. **புயம். புயவலிமை தோளாற்றல்.** (யுத் : 1945) (யுத் : 1097) எறும் வலித் தோள் பிணித்துஊர்த்த மேகநாதன். (சு : 1017)
3. **டோள் என் பதன் திரிபு.** (கலா) கற்பகவல்லியர் தோளின் நாற்றிய தூங்கமளித்துயில். (சு : 271)

தோள் கண்டார் தோளே கண்டார் - தோள்களைப் பார்த்தவர்கள் (அத் தோள்களினழகிற்கு ஓர் எல்லையில்லாமையினுற்பிற உறுப்புக் களிற் கண்களைச் செலுத்த இயலாமல்) அத்தோள்களையே பார்த்துக் கொண்டிருந்தனர். (பா : 1166)

தோள்களைப்புடைத்தல்-தோள்களைத்தட்டுதல். தோள்களைப் புடைத்த வாறும். (யுத் : 736)

தோள் கொட்டுதல் - தோளிடத்தே அடித்தல். வீரர் செயல். தோள் புடை கொட்டி ஆர்த்தார். (யுத் : 3446) ஆ : 930)

தோள் தூக்கு தூணி - தோளில் தூக்கிய அம்புப் புட்டில். (யுத்:1016)

தோள் நோக்கி நிற்றல் - தோளைப் பார்த்துக்கொண்டிருத்தல். தன் தோள்வலி மிகுதி என்று பாராட்டி நோக்குதல். மானிவன் மெல்லம்பு மெய்யுருவ நீண்டனவாம் தாமின்ன நின்றூராந் தோள் நோக்கி. (யுத் : 1663)

தோள் பார்த்தல் - தன்வலிமைச் செருக்குத் தோன்றத் தோளைப் பார்த்தல். என்னை உதைத்துருட்டி மூக்கரிந்த நரனிருந்து தோள் பார்க்க நான் கிடந்து புலம்புவதோ. (ஆ : 333)

தோள் புடை கொட்டி யார்த்தல் - தோள்மேல் தட்டி ஆரவாரித்தல். இது செய்பவர் ஆர் என விண்ணுளோர்கள் தோற்ருது நின்ருர் தம தோள் புடை கொட்டி ஆர்த்தார். (அ : 930)

தோள் புடைத்தல் - தோளைத்தட்டுதல். ஏந்து வன்னெடுந் தோள் புடைத்து. (யுத் : 1554)

தோள் புரை இளவேயின் தொகுதி - தோளை ஒத்த இளைய மூங்கிற் பண்ணைகள். தோள் புரை இளவேயின் தொகுதிகள் இவை காணுய். (அ : 706)

தோள் பொறைத் துபர் தீர்தல் - தோள்கள் சுமப்பதலாகிய துன்பம் நீங்கப் பெறுதல். அமைந்த வில்லும் அருங்கணைத் தூணியும் சுமந்த தோளும் பொறைத் துயர் திருமால். (ஆ : 132)

தோள்முதல் - தோளின் கண். முதல் - ஏழனுருபு. தோள்முதற் கமைந்த வில்லான். (அ : 669)

தோள் வலயம் - தோள் வளை. வாகு வலயம். தகர்ந்து சிந்தின வடித்த தோள் வலயத்தின் வயங்கு காசரோ. (கி : 248)

தோள் வலி - தோளின் வலிமையெல்லாம். சமைத்த தோள்வலி தாங்கின ரெனினும் அமைச்சர் சொல்வழி ஆற்றுதல் ஆற்றலே. (அ : 112)

தோள் வளை - வாகு வலயம். உம்பருக்கரசன் மால்கரியின் ஓடை எயிறின் கிம்புரிப் பெரிய தோள்வளையொடுங்கிளரவே. (ஆ : 13)

தோள் வனம் - தோள்களாகிய காடு. திரண்ட தோள் வனம். (ஆ : 875)

தோள் வாடை - தோள்களின் காற்று. அவ் விருபது திண்டோள் வாடை வீறிய பொழுது பூளைவீ யென வீவனன்றே. (ஆ : 873)

தோள்விசையின் வீசி - தோள் வலிமையால் விரைவாக வீசி. மீட்டொரு சிகரம் வாங்கி விங்கு தோள் விசையின் வீசி ஓட்டினான். (யுத் : 1097)

தோள் விசைத்தல் - தோள்களை விரைவாக ஆட்டுதல், தட்டுதல். தோடியின் தோள் விசைத் தெழுந்து சுற்றினார். (கி : 899)

தோளணி வலயம் - தோள்களில் அணிந்த வாகு வலயம். சுந்தரத் தோளணி வலயம் தொல்லை நாள் மந்தரஞ் சுற்றிய அரவை மானுமே. (பா : 1300)

தோளாண்மை - தோள்வலி. நிகராரு மில் தலியாண்மையும் இனி நின் தோளாண்மையும் இசையோடுடன் துடைப்பேன் ஒரு புடைப்பால். (யுத் : 1126)

தோளாம் மலை - தோளாகிய மலை. தோளாம் மலையெலாம் அற்ற. (யுத் : 1111)

தோளாற்றல் - புயவலிமை. தோளாற்றல் என்னுகும். (சு : 314) மெலிந்தாயோ தோளாற்றல். (யுத் : 1945)

தோளான் - தோளையுடையவன். கண்டாள் கருணனைத் தன் கண் கடந்த தோளானை. (யுத் : 1670)

தோளியர் - தோளையுடைய மகளிர். அமைத்திரள் கொள் தோளியர். (பா : 1230)

தோளின் தினவு - தோளில் போர்விழையும் தினவு. செற்றேடிய திரள் தோளுறுதினவும் சிறிதுடையேன். (பா:1366) (பா : 179)

தோளினைத் தின்னுகின்ற சோம்பு - தோள்களை வருத்துகின்ற சோம்பல். இவ்வமர் எனக்கருளி நின்றென் தோளினைத் தின்னுகின்ற சோம்பினைத் துடைத்தி என்றான். (ஆ. 430)

தோளினை நோக்கல் - மகிழ்ச்சிக் குறிப்பு. ஐயன் ... தன்ன தோளிணையை நோக்கி. (யுத் : 3883) தம்பி கொற்றவை தழீஇய பொற்றோள் மலையினை நோக்கும். (யுத் : 3140)

தோளுக் கெல்லை பொன் றில்லை - தோள்களின் வலிமைக்கு முடிவு சிறிதும் உண்டாகாது. (சு : 1018)

தோளுலாங் குண்டலம் - தோளில் வந்து உலாவுகின்ற குண்டலம். தோளுலாம் குண்டலம் முதல தொல்லணி. (அ : 981)

தோளுறு தினவு - தோள்களிற் பொருந்திய தினவு. (பா : 1366)

தோளெனும் மந்தரம் - தோளாகிய பெரிய மந்தர மலை. மாலை மால் வரைத் தோளெனும் மந்தரம் திரிய காலை வேலையினுற்றது கழிந்த நீர். (அ : 726)

தோளென உயர்ந்த குன்று - தோள்களைப் போல உயர்ந்த மலைகள். தோளென உயர்ந்த குன்றின் சூழல்கள் இனிது நோக்கி. (பா : 927)

தோற்கலா - தோற்காமல். தோற்கலா நனிவரும் பெரும் பகை. (அ : 22)

தோற்செருப்பு - தோலாலாகிய வார்ச் செருப்பு. தோற் செருப் பார்த்த பேரடியன். (அ : 646)

தோற்பது-தோற்றுப் போவது. இந் நல்லவன் தோற்பதே. (ஆ:945)

தோற்பித்தீர் - தோற்கும்படி செய்தீர். தோற்பித்தீர் மதிக்கு மேனி சுடுவித்திர். (யுத் : 1592)

தோற்றஞ் செய்தான் - தோன்றினன். தொன்னகர் காண்பான் போலக் கதிரவன் தோற்றஞ் செய்தான். (யுத் : 780)

தோற்றம் - 1. புகழ். நடையின் நின்றுயர் நாயகன் தோற்றத்தின் இடை நிகழ்ந்த இராமாவதாரம். (பா : 11)

2. **உயர்ச்சி.** இலங்கையின் அளவிற்றன்றால் இவ்வுரு இயைந்த தோற்றம். (சு : 16)

3. **பிறவி. பிறத்தல்.** தோற்ற மென்னுமத் தொல்வினைத்தொடு கடற் சுழிநின் றேற்று நன் கலம். (யுத் : 175) அரக்கன் கொல்லத் துஞ்சினள் என்றுஞ் சொல்லப் பெற்றேன் தோற்றமீதால். (யுத் : 2844)

4. **தோல்.** (உ.வி) சுற்றிய சீரையும் உழையின் தோற்றமும். (பா : 251)

5. **காட்சி.** (அண்) உழையின் தோற்றம். (பா : 251)

6. **வல்லமை.** ஆரமர் ஆற்றெனும் தோற்றம் வல்லையாமெனின். (யுத் : 1217) [பா : பே]

7. **தோன்றிய வரலாறு.** அச்சிலை பண்டவன் தன்னையோட்டித் துயரின் தலை வைத்திலன் கொண்டது தோற்றமீதால். (யுத் : 1938)

8. **எண்ணம்.** தோற்றனனே இனி என்னுந் தோற்றத்தால் ஆற்றல் சால் அமரரும் அச்சமெய்தினர். (யுத் : 3746)

9. **தோன்றுகை.** இவனை வெல்லத் தோற்றத்தோர் கூற்ற முண்டே. (யுத் : 935)
10. **ஆகாரம். ஆகிருதி.** வெருவருந் தோற்றம். (யுத் : 278)
11. **இயல்பு.** காதலென்பதுவுமோர் கள்ளின் தோற்றமே. (யுத் : 4173)

தோற்றல் - 1. விளங்குதல். சூழிருங்கதிர்களெல்லாம் தோற்றிடச் சுடருஞ் சோதி ஆழியின் நடுவட்டோன்றும் அருக்கன். (சு:827)
2. **தோல்வியடைதல்.** இந்திரற்குந் தோலாத நன்மகன். (யுத் : 1949) ஆவிதோற்றிலேன். (யுத் : 1594) தோற்கின் ருர்களும். (சு : 430) தோற்ருேர் தோற்பர். (யுத் : 1255) தோலார். (யுத் : 642)

தோற்ற வந்த தோர் கனவு - வந்து தோன்றியதொரு (தீய) கனவு தோற்ற வந்ததோர் கனவு கண்டான் எனச் சொன்ஞன். (யுத் : 164)

தோற்றி - தோற்பாய். இமையவரென்னுந் தன்மை சொற்ற வாறன்றியேயுந் தோற்றி நீ என்றுஞ் சொன்ஞய். (யு : 773)

தோன்றினர் - தோற்றமளிப்பவர். கொடுந்தொழிலால் தோற்றினர் இவர். (யுத் : 3230)

தோற்று - 1. தோல்வியுற்று. மென்னடை தோற்று இளமகளிரைச் சுமப்ப போன்றவே. (அ : 962)
2. **கீழ்ப்படிந்து.** கூற்றும் நீ தன்னுயிர் கொள்ளும் கூற்றெனத் தோற்று நின்னேவல் தன் தலையிற் சூடுமால். (யுத் : 36)

தோற்றும் - தோற்ருேம். உனக் காரமர் தோற்றும் என்று தொழுதுயர் கையணை. (கி : 334)

தோற்றுள கூற்றின் சூழல் - தோற்றவனுன யமனது இடம். துணை யின்றிச் சேறல் நன்ருே தோற்றுள கூற்றின் சூழல். (யுத்:1377)

தோன்றல் - 1. தலைவன். கான்றலை நண்ணிய காளைபின் படர் தோன்றலை. (அ : 997) (யுத் : 4141)
2. **மகன்.** காலின் தோன்றல். (சு : 197) இராவணன் தோன்றல். (யுத் : 2453)
3. **வீரன்.** தூடணன் திரிசிராத் தோன்றலாதியர். (ஆ : 418)

தோன்ருு நடுவன் - கண்ணுக்குத் தெரியாத யமன். தோன்ருு நடுவனே செய்யத்தக்க நாளுலந்தார்க்குத் தூத. (யுத் : 949)

தோன்றல் தோன்றல் – மகனே மகனே. தோன்றல் தோன்றல் என்றாள். (அ : 350) [பா : பே]

தோன்றி - செங்காந்தள் மலர். தோன்றிகள் அரங்கின் மாடே விளக்கினம் ஒத்த. (கி : 475)

தோன்றுதல் - 1. வருதல். சுடர்த் தேரேறித் தோன்றினன். (அ : 609) தோன்றலை. (ஆ : 266)

2. நிலை கொள்ளல். நிற்றல். சூடகத் தளிர்க்கை மாதர் தழுவினர் துவன்றித் தோன்ற. (அ : 1046)

3. காணப்படுதல். உயர்ந்து தோன்றும் அதிதிகழ் வெற்பு. (யுத் : 4094) தோன்றளலாமெனின். (1060)

4. விளங்குதல். நெறியில் தோன்றினாய். (யுத் . 2768)

தோன்றுற்று - தோன்றி. தோன்றுற்று நின்றாள் சுரசைப் பெயர் சிந்தை தூயாள். (சு : 66)

ந

ந - 1. பெருமையை உணர்த்துஞ் சொல். நச்சிலை. (உ. வி) (பா : 752)

2. எதிர்மறை குறிக்குஞ் சொல். நமித்திரர். (பா : 271)

3. மேன்மை குறிக்கும் இடைச் சொல். நச்சிரப்படை நாலிரு கோடிக்கு நாதன். (யுத் : 510)

நக்க - 1. தாழ்த்த. நாளொடு கோளினை நக்க. (சு : 412)

2. மலர்ந்த. கற்பகம் நக்க பூவும். (சு : 1222)

நக்கரம் - முதலை. [நக்ரம்] நக்கரக் கடல் நாலொரு மூன்று. (யுத் : 3222)

நக்கல் - உண்டல். ஞாலமும் நாகமும் விசும்பும் நக்குறும் சூலம். (யுத் : 1536)

நக்காள் - சிரித்தாள். சொல்லினன் நல்லறிவாளன் நக்காள். (சு : 69)

நக்குதல் - குடித்தல். கொடிய கண்ணர் கள்ளொடு குருதி . நக்கி. (சு : 284) நாய்நக்க. (யுத் : 1640)

2. தாழ்த்தல். நாளொடு கோளினை நக்க. (சு : 412)

3. தீண்டி வருத்தல். வாளி நக்க. (யுத் : 1640)

4. **தீண்டி நக்குதல்.** (உ. வி) (யுத் : 1640)

5. **தீண்டுதல்.** திங்களை நக்குகின்ற இருள். (சு : 741)

6. **அழித்தல்.** ஞாலமும் காகமும் விசும்பும் நக்குறும் சூலம். (யுத் : 1536)

7. **நக்கிச் சுவைத்தல்.** நாய் அவன் உடலை நக்க. (யுத்:1640)

நக்குபு - நக்கும் பொருட்டு. நக்க. பாற்கடலுற் றொரு பூசை முற்றவும் நக்குபு புக்கென. (பா : 4)

நக - வெளிப்பட. நெருப்பு நக நக்கான். (சு : 851)

நகம் - 1. மலை. பன்னகமும் நகு வெள்ளிப் பனிவரையும். (பா : 324) (யுத் : 1107)

2. **மரம்.** நக நிறைகானின்வைகும் தம்மினத்தவரு மல்லர். (யுத் : 719)

நகர் - 1. நகரம். நன்னகரதனை நோக்கி. (சு : 93)

2. **மனை. பாசறை.** இறைவர்க்கும் பிறர்க்கு மெல்லாம் நன்னகர் நொய்திற் செய்தான். (யுத் : 706)

3. **நகர மாந்தர்.** மங்கையைப் பயந்த மன்னன் வளநகர் வந்ததன்றே. (பா : 1118)

4. **அரண்மனை.**

நகர் தீர்தல் - நகரைத் துறத்தல். திருநகர் தீர்ந்த வண்ணம் மானவ தெரித்தி என்ன. (அ : 663)

நகரணி - நகரை அலங்கரித்தல். அந்நகர் அணிவுறும் அமலை. (அ : 136)

நகரணிவுறும் அமலை - நகரத்தை அலங்கரிக்கின்ற பேரார வாரம். (அ : 136)

நகர மகளிர் - நகரத்து மகளிர். தெரிந்திலர் திருநகர் மகளிர் செய்கையே. (பா : 1320)

நகர மாந்தர் - நகரப் பெருமக்கள். மந்திரக் கிழவரும் நகர மாந் தரும். (அ : 935) திருகன் மாநகர் மானைவீரர். (அ : 1158)

நகரி - 1. நகரமக்கள். கரைசெய் வேலை போல் நகரிகையெடுத் துரை செய் பூசலிட்டுயிர் துளங்குற. (அ : 917)

2. **நகரம்.** இந்நகரொ டெண்குறிக்கலாத் தேவர்தம் நகரி யைச் செப்புகின்ற தென். (அ : 151) தென்னெடு நகரி காக்க விருப்பாக்கன் என்னச் சொன்னுன். (யுத் : 912)

நகருளார் - நகரத்திலுள்ள மக்கள். (அ : 464)

நகல் - 1. விளங்குதல். நகலின் ஆலை நறும்புகை. (பா : 72)

2. நகுதல். சிரித்தல். நகு வெள்ளிப் பனிவ்ரையும் பாற் கடலும். (பா : 324)

3. மகிழ்தல். நகல் மதிக்கில. (யுத் : 105)

நகல் மதிக்கில - நகுதலைக் கொள்ளாதனவாய். மகிழ்தலைச் செய்யாவாய். நகல் மதிக்கில மறுப்பொலிய வாளொளியிழந்துய்தல் நண்ணும் பகல்மதி. (யுத் : 105)

நகழ்தல் - வழுக்குண்டு போதல் நகழ்வன சில வருதோல். (யுத் : 1812)

நகில் - தனம். மடவார் நகிலினேடிகலுவ நனிவளர் இளநீர் (பா : 76) நகில் முகத்தின் ஏவுண்டு. (பா : 608)

நகு(தல்) – 1. விளங்குதல். பல்நக்க தரளம் ஒக்கும். (ஆ : 788) நகுங் கதிர். (யுத் : 829) ஊனகு படைக்கலம். (பா : 463) மின்னகு கிரிகள். (சு : 820)

2. இகழ்தல். எள்ளி நகைத்தல். கஞ்சங்களை மஞ்சன் கழல் நகுகின்றது கண்டாள். (சு : 620) மலைகளை நகுந் தடமார்பர். (சு : 885) வானகும் மண்ணுமெல்லாம் நகும்... நானகு படைஞரெல்லாம் நகுவர் என்றதற்கு நாணன்... சானகி நகுவள் என்றே மானத்தாற் சாம்புகின்ருன். (யுத் : 1229)

3. ஒப்புருபு. அவமதித்தல். (அண்) வேல்நகு நெடுங்கட் சீதை. (யுத் : 1229)

4. பரிகாசமாகச் சிரித்தல். ஏளனஞ் செய்தல். புன்மையோர் வைகுறும் நரகையும் நகும் வயிற்றினன். (ஆ : 1155) (உ.வி) (அ : 620)

5. சிரித்தல். கண்கள் கலுழ்ந்தே நகுகின்ருள். (சு : 486)

6. நிறைந்திருத்தல். தேனகு நறவ மாலை. (பா : 1021)

நகை - 1. புன் சிரிப்பு. நகை யொளி விளங்க. (அ : 471)

2. சிரிப்பு. நகை மிகக் கண்கள் தீ நாற. (அ : 999)

3. பல். இன்னகையவர் சிலம்பு. (பா : 157)

4. பரிகாசம். நகைப் புலத்த தாமன்றே. (யுத் : 440)

5. இனிய பண்புகள். நகை நிறை வில்லா உள்ளத் திராவணன். (யுத் : 719)

6. ஒளி. நகை யோடை. (யுத் : 2200) நகை மழுவாளன். (யுத் : 421)

7. பற்கள். முத்திருத்தி அவ்விருந்தனைய மொய்ந் நகையொடும்... சென்றனுகினர். (ஆ : 2) நஞ்சு காலும் நகை நெடு நாகம். (ஆ : 1049)

நகை செய்தல் - (ஏளனச் சிரிப்புச்) சிரித்தல். அவரை நோக்கி நகை செய்து. (பா : 392)

நகை தருதல் - சிரித்தல். தேவியர்கள் உன் மேல் ஒண்ணகை தரத்தர. (யுத் : 62)

நகை நாறுதல் - சிரிப்பில்தோன்றுதல். நாமத்திண்போர் முற்றிய கோபம் நகை நாறும்... பகுவாய்கள். (யுத் : 3556)

நகைப்புலம் - 1. பிறர் பரிகசிப்பதற் குரிய பொருள். அறிஞர் கேட்கின் நகைப் புலத்த தாமன்றே. (யுத் : 410)

2. பிறர் நகைத்தற்குரிய இடம். நகைப் புலம் பொதுவறநடந்து. (யுத் : 371)

நகைப் புலன் - நகைப்புணர்ச்சியை விளைவிப்பது. தக்கார் யார்க்கும் நகைப்புலன் பிறிதுண்டாமோ. (சு : 1156)

நகை பிறத்தல் - சிரிப்புத் தோன்றுதல். நகை பிறக்கின்ற வாயன். (யுத் : 3605)

நகைப்புலம் பொதுவற . நகைப்புக்குரிய இடம் பிறருக்கு உரித்தாகாது, தனக்கே உரித்தாகுமாறு. (யுத் : 371)

நகையாய வினைத்தொழில் தேறினர் - நகை வினைக்குங் காரியங்களில் தேறியவர். வேறும் இந் நகையாய வினைத்தொழில் தேறினர் பலர் காமிக்கும் செவ்வியோய். (சு : 1146)

நகையில் முகம் - சிரித்தலில்லாத முகம். ஊனெடுமீனுகர் நாற்ற மேய நகையின் முகத்தினன். (அ : 652)

நகையிழந்த முகம் - ஒளியிழந்த முகம். நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானை. (அ : 1021)

நகையுடை முகம் - சிரிப்புப் பொருந்திய முகம். பயனுறு பண்பிற் றீரா நகையுடை முகத்தையாகி இன்னுரை நல்குவாவால் (கி : 418)

நகையுறல் - ஏளனஞ் செய்தல். சிரித்தல். உலகின் வேந்தினைப் பகையுற வருதலும் துறந்த பண்பிது நகையுறலன்றியும் நயக் கற் பாலதோ. (யுத் : 369) நகையுறலின்றியே நயந்து கேட்டியால். (யுத். 385)

நகையெரி - விளங்குகின்ற நெருப்பு. நகையெரிக் கற்றை தெற்றி. (சு : 276)

நகை யெயிற்றீட்டம் - ஒளியுடைய பற்களின் கூட்டம். இற்றன நகை எயிற் றீட்டம். (சு : 781)

நகையொடும் புகை யுக - வெகுளி நகையுடனே புகை தோன்ற. நன்று நன்றென நகையொடும் புகையுக நக்கான். (யுத்: 543)

நங்கள் - எங்கள். நங்கள் நவை தீர்க்கும் நாயகமே. (ஆ : 103)

நங்காய் - நங்கையே. உய்யேன் நங்காய் உன்னபயம் எம்முயி ரென்றான். (அ: 218)

நங்கை - பெண்டிரிற் சிறந்தவள். நங்கை மற்று நின் கற்பினை உலகுக்கு நாட்ட அங்கிபுக்கிடென்றுணர்த்திய அது மனத் தடையேல். (யுத் : 4042) (யுத். 3945)

நங்கைமார் - பெண்கள். நந்தினர் நகையொளி விளக்கம் நங்கை மார். (அ : 471)

நச்சடை படை - விஷந்தடவிய ஆயுதங்கள். நச்சடை படைகளால் நலியும் ஈட்டதோ. (சு : 1044)

நச்சி - விரும்பி. நீர்க்கோல வாழ்வை நச்சி, (யுத் : 1373)

நச்சிரப்படை - சிறந்த தலைமையான படை. மிகவும் மேம்பாடு பெற்ற படை: (ந. உயர்வுப் பொருள். சிரம் - தலைமை.) நச்சிரம் சிறந்த தலைமை. நச்சிரப்படை நாளிரு கோடிக்கு நாதன். (யுத் : 501)

நச்சிலை - 1. நசிலை. பெருமை பெற்ற வில். (வை.மு.)
2. நச்சு இலை. விருப்பம் இல்லை. (அண்) நச்சிலை நங்கைமேல் நாட்டு வேந்தென்பார் (பா : 758) இனி நச்சிலை என்பதோர் நவையிலாள். (யுத் . 3977)

நச்சு - 1. ஆசை. ஞால முற்றுறு கடையுகத்தும் நச்சருக்காலன். (சு : 669) இனி நச்சிலை. (யுத் : 3977) உயர்நிலை நச்சிலேன். (யுத் 4156)
2. நஞ்சு. நச்செனச் கொடிய கண்ணர். (சு : 284)

நச்சுடை வடிக்கண் - நஞ்சினையுடையமாவடுவின் பிளவு போன்ற கண்கள். நச்சுடை வடிக்கண்மலர் மங்கை இவள் என்ருல். (பா : 1237)

நச்சுத்தீ - நச்சுத்தன்மையுள்ள நெருப்பு. நச்சுத்தீயே பெண்ணுரு அன்ரும் என நாணு. (அ : 216)

நச்சுதல் - விரும்புதல். நச்சிலேன். வேறு நானென்றும் நச்சிலேன். (கி : 678) நச்சி. (ஆ : 292) நச்சினேன். (யுத் : 1591) உயிர் நிலை நச்சிலேன். (யுத் : 4156)

நச்சுயிர்த்தல்-நஞ்சைப் போலுங் கொடிய சொற்களைச் சொல்லுதல். நலிவிடை அமுது வாயால் நச்சுயிர்த்து. (சு : 205)

நச்சுவேற் கருங்கண் - நஞ்சு பூசிய வேல் போன்ற கரிய கண். நச்சுவேற் கருங்கட் செவ்வாய் நளிர் முகம் மதுவுட் டோன்ற. (பா : 1057)

நசை - 1. விருப்பம். ஆசை. இச்சை. நசையாலே மூக்கிழந்து. (ஆ : 334) தண்ணீருண்ணசை யுலர்ந்த நாவர். (யுத் : 2116)

2. (இலக்) பரிகாசக் கருத்து - பிரகலாதன் பேராசையை சோதிக்கும் விருப்பம். நசைதிறந்திலங்கப் பொங்கி. (உ.வி) (யுத்: 257)

நசைதிறத்தல் - உள் விருப்பம் வெளிப்படல் (இலக்) பரிகாசக் கருத்து வெளிப்படல். (உ.வி.) நசைந்திறதிலங்க. (யுத் : 257)

நஞ்சங்களை வெலவாகிய நயனம்-நஞ்சுகளையும் வெல்லும் வன்மை மிக்க கண்கள். நஞ்சங்களை வெலவாகிய நயனங்களையுடையாள். (அ : 620)

நஞ்சடுத்த நயனியர் - விடத்தை பொத்த கண்களையுடைய மகளிர். நஞ்சடுத்த நயனியர் நவ்வியிற் றுஞ்ச. (அ : 1076)

நஞ்சடை கண்டன் - விடம் தங்கப்பெற்ற கண்டத்தையுடைய சிவ பிரான். (யுத். 3281)

நஞ்சம் - விஷம். மின்னும் வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள். (ஆ : 255)

நஞ்சனையான் - விடம்போன்று மிகக் கொடியவன். நஞ்சனையானகம் புகுந்த நங்கையான் உஞ்சனெ னிருத்தலும் உலகம் கொள்ளுமோ. (சு : 505)

நஞ்சிலன் - நைந்திலன். ஐயனதல்லல் கண்டும் நஞ்சிலன். (அ : 202)

நஞ்சின் வெய்யவன் - நஞ்சுபோற் கொடியவஞன இராவணன். நஞ்சின் வெய்யவன் கையெரிந் துருமென நக்கான். (யுத்: 129)

நஞ்சினுற் செய்த நெஞ்சினுன் - விஷத்தினுற் செய்தது போன்ற கொடிய நெஞ்சையுடையவனுகிய இராவணன். எஞ்சிலி யாக்கையை எடுத்துக்கொண் டகல்வனென் றெண்ணி நஞ்சினுற் செய்த நெஞ்சினுன் பாரின்மேல் நடந்தான். (யுத் : 1170)

நச்சினை மிடற்றுவைத்த நகைமழுவாளன் - ஆலகால விடத்தைக் கண்டத்தில் வைத்துக்கொண்ட ஒளி பொருந்திய மழுவையுடைய சிவபிரான். (யுத் : 421)

நஞ்சு - 1. விடம். நஞ்சு தீர்க்கினும் தீர்கிலாது அது நலிந்தென்ன. (அ : 105) நஞ்சிடை அமிழ்தங்கூட்டி நயனங்களான வென்ன. (பா : 1216)

2. நைந்து. என்புருகி நெஞ்சுருகி நஞ்சுருகி நிற்பார். (அ: 273)

நஞ்சு கக்குதல் - விஷத்தை வெளிப்படுத்தல். நஞ்சு கக்கி எரி கண்ணினர். (யுத் : 818)

நஞ்சு சூழ் விழிகள் - விடம் நிறைந்தாற் போன்ற கண். நஞ்சு சூழ் விழிகள் பூமழையின் மேல்விழ நடந்து. (பா : 1145)

நஞ்சு தீர்க்கினும் தீர்கிலாது - உடம்பில் ஏறிய நஞ்சு மந்திர மொழியால் தீர்க்க முயன்ருலும் தீராது. நஞ்சு தீர்க்கினுந் தீர்கிலாது அது நலிந்தென்ன. (அ : 165)

நஞ்சு தோய் அமுதம் - நஞ்சில் தோய்க்கப்பட்ட அமுதம். (யுத்:1591)

நஞ்சு நுகர்வார் - விஷத்தை உண்பவர். நஞ்சு நுகர்வாரை இது நன்றெனலும் நன்ருே. (ஆ : 753)

நஞ்சு மஞ்சுவிழி - விஷமும் அஞ்சுகின்ற விழி. நஞ்சு மஞ்சுவிழி நாகியர். (யுத் : 817)

நஞ்சுருகி - நைந்துருகி. ஆவுருகு மாபோல் என்புருகி நெஞ்சுருகி நஞ்சுருகி நிற்பார். (அ : 279)

நஞ்சுறுபிரிவு - விடத்தை யொத்த பிரிவு. நஞ்சுறு பிரிவினை நாளின் நீளமோர் தஞ்சுற விடுவதோர் தயாவு தாங்கலால். (ஆ : 686)

நட்டல் 1. விரும்பிச் சேர்தல். நரிஉண்டி யுகப்பன நட்டனவால். (யுத் : 2928)

2. நட்புக்கொள்ளுதல். அருக்கன் மாமகனை யண்மிப் பாங்குற நட்டு. (யுத் : 4207) ஆவி யொன்றுக நட்டான். (சு : 1128) நட்டனர் தேவருய்ய. (சு : 578)

நட்டவாமென - செங்குத்தாக நட்டாற்போல. நட்டவாமென வீழ்ந்தன. (யுத் : 1437)

நட்டன - விரும்பிவந்து சேர்ந்தன. (வை.மு) நடுவில் நின்றன. (கலா) கான்நரி உண்டி யுகப்பன நட்டனவால். (யுத் : 2928)

நட்டனர் - நட்புக் கொள்ளுவாராயினர். (சு : 578)

நட்பு - 1. உறவு. அன்னர் செய்வினைக்குதவும் நட்பால். (அ:579)

2. நட்புத்தன்மை. நட்பகத்திலா அரக்கரை நருக்கி. (யுத்:4104)

நட - வருக. இனிதிரு நட எம்பால். (சு : 672)

நடக்கால் காட்டுதல் - நடனக் காலைக் காட்டுதல். நடனஞ் செய்யும் காலின் முறையைக் காட்டுதல். (அண்) படிமக் கூத் தமைவிப்பான் நடக்கால் காட்டுங் கண்ணுள ரொக்கும் நமரங்காள். (யுத் : 3553)

நடக்கிரியை - நடனத்தின் நுண் செயல்கள். ஏனை நாகியர் அரு நடக் கிரியை ஆய்ந்திருப்பார். (சு : 121)

நடக் கோல் - நடனக் கோல். (யுத் : 3553) [பா : பே]

நடத்தல் . 1. செல்லுதல். நன் னெடுந் தேர் மிசை நடத்தல் மேயினன். (அ : 983)

2. நீங்குதல். நடந்தது புணர்ச்சி தரு கேதம். (சு : 255)

3. நடத்துதல். நடாவுறப் பணிந்து. (யுத் : 4320)

4. செலுத்துதல். வீசுதல், வலி நடத்திய வாள். (கி : 22)

5. தொடர்ந்து செல்லுதல். (உ. வி) (கி : 22)

6. சுவாதீனமாக இருத்தல். நணுகவும் நிமிரவும் நடக்கு ஞானத்தர். (பா : 1304)

நடத்தல் மேயினன் - நடப்பானுயினன். நடத்தல் மேயினன் நவைக் கண் நீங்கினன். (பா : 335)

நடத்துதல் - 1. செலுத்துதல். வலி நடத்திய வாள். (கி : 22)

2. எழச் செய்தல். ஒலி நடத்திய திரை தொறும். (கி : 22)

நடந்த - **பரவிய.** வையக முற்றும் நடந்த வாய்மை மன்னன். (அ : 208)

நடநவில் தருதல் - **மகிழ்ந்து நடனமாடுதல்.** மறை நாலும் நட நவில்தரு நாவான். (அ : 710)

நட நவில்தல் - **1. நடனத்தைப் பழகிக் கொள்ளுதல்.** அவர் பயில் நடமே கேகயம் நவில்வன. (பா : 80)

2. ஆனந்தக் கூத்தாடுதல். நமனும் வரிசிலையும் அறனும் நட நவில. (யுத் : 3423)

நடம் - **நடனம்.** நடந்திற னவில்வுறு நங்கைமார் முகம். (கி : 552) விடுதியால் நடம். (சு : 976)

நடம் கிளர்தர - **மகிழ. (கலா) கூத்தாட. (அண்)** பாந்தள் ஏந்து பார் நடங் கிளர்தர. (பா : 287)

நடலைத்தொழில் - **ஏமாற்றும் வஞ்சனைத் தொழில்.** நஞ்சிற் கொடி யான் நடலைத் தொழிலால் துஞ்சுற்றனனே. (ஆ : 1102)

நடவி - **நடாத்தி.** ஒரு கோல் நடவி. (அ : 327)

நடாய - **1. செலுத்தப்படுகின்ற.** வானிடை நடாய நெடுமானம். (சு : 711)

2. நடத்திய. உண்டாக்கிய. பரப்பிய. இம்மையினுதவி நல்லிசை நடாய நீர். (அ : 24)

நடாயினர் - **நடத்தினர்.** அவையாவையும் நடாயினர். (யுத் : 3404)

நடாவுற - **செலுத்த.** பரதனைத் தனது செங்கோல் நடாவுறப் பணித்து. (யுத் : 4320)

நடித்து வாழ்தல் - **வெளிவேஷங் காட்டிப் பிழைத்தல்.** நடித்து வாழ் தகைமையதோ அடிமைதான். (சு : 315)

நடு - **1. நடுப்பகல். உச்சி.** காலைக்கதிரோன் நடுவுற்றதோர் வெம்மை காட்டி. (அ : 416)

2. மார்பு. நாம இந்திரன் வச்சிரப் படையும் என் நடுவட் போமெனுந் துணை போதுமோ. (கி : 301)

3. நடுவிலே. இடையிலே. நடுவினிப் பகர்வ தென்னே. (யுத் : 453) நடுவினிப் பிழைப்பதென்னே. (யுத் : 597)

4. இடை. நடை நீரழியச் செய்தாரோ நடுவிலாதார். (கி : 28)

5. நடுவு நிலைமை. நடுவின் தலை புணரா வலி யென்பதொர் அறிவின் தரு செயலோ. (பா : 1370) நடுவொக்குந் தனி நாயகன். (யுத் : 232)

6. இடை. நிகழ்காலம். முன்பு பின்பு நடு இல்லாய். (யுத்:2619)

நடுக்கம் - சலனம். மின்னையுற்ற நடுக்கத்து மேனியாள். (அ:513)

நடுக்கு - அச்சத்தினால் வரும் நடுக்கம். எண்டிசை சுமந்த யானை நடுக்குற விசும்பிற் செல்லும் நாயகன் தூதன். (சு : 24)

நடுக்குதல்-நடுங்கும்படி செய்தல். ஆழியை நடுக்கினன். (யுத்:627) உலகை நடுக்குவான். (ஆ : 375) நடுக்கினான் உலகை. (யுத் : 1083)

நடுக்குறு சந்தம் - குளிர்ந்த சந்தனம். நடுக்குறு சந்தம் சிந்தூரத் தொடு நரந்த நாகம். (பா : 24)

நடுக்குறுதல் - அஞ்சுதல். அஞ்சி நடுங்குதல். நடுக்குரு இருள். (சு : 1083) யானை நடுக்குற. (சு : 24) காதல் நடுக்குறு மனத் தன். (சு : 309)

நடுங்கல் - அஞ்சுதல். நடுக்கமடைதல். நடுங்கன்மின் எனுஞ் சொலை நவின்று. (கி : 885)

நடுவண் - நடுவிலே. நடுப்பகு. தி அலைகடல் நடுவண் ஓர் அனந்தன் மிமிசை. (பா : 185) பாற்கடல் நடுவணார் என்பர். (யுத்: 373)

நடுவணதகழி - நடுவிலுள்ளதான அகழி. சொன்ன மூன்றினுள் நடுவண தகழியைத் தொடர்ந்தான். (சு : 240)

நடு வண தகழி - நடுவி லுள்ள தான அகழி. சொன்ன மூன்றினுள் நடுவண தகழியைத் தொடர்ந்தான். (சு : 240)

நடுவன் - யமன். ஆயுள் முடிவிலே யாவரிடத்தும் ஒரு தன்மையாக நடத்தலால் நடுவன் என்று ஒரு பெயர். நடுவனே செய்யத் தக்க நாளுலந்தார்க்குத் தூத. (யுத் : 949)

நடுவிலாதார் - இடை யில்லாதவராகிய சீதாபிராட்டியார்; நடுநிலை யற்றவர். நடை நீரழியச் செய்தாரே நடு விலாதார். (கி : 28)

நடுவின் தலை புணரா வலி - நடுவுநிலைமையிற் பொருந்தாதவலிமை. புற நின்றவர் இகழும்படி நடுவின் தலை புணராத் திறனின்று உயர் வலி என்பதோர் வலியோ. (பா . 1370)

நடுவு - 1. நடுவு நிலைமை. நடுவின் தலை புணராத் திறன். (பா : 1370) நடுவொக்கும் தனி நாயகன். (யுத் : 231)

2. நீதிநெறி. நடுவில்லா வாரங் கொண்டார். (ஆ : 740) [பா : பே]

நடுவு ஒக்கும் தனி நாயகன் - எல்லார்க்கும் நடுவாய் நிற்றலில் ஒத்த இயல்பினையுடைய ஒப்பற்ற தலைவனாகிய திருமால். (யுத் : 231)

நடுவு நோக்குவார் - நடுவு நிலை ஒன்றையே நோக்குபவர்கள். நல முதல் நலியினும் நடுவு நோக்குவார். (அ : 6)

நடுவுறுதல் - உச்சியை அடைதல். செங்கதிர்ச் செல்வனும் நடுவுற. (அ : 723)

நடு வொக்குந் தனி நாயகன் - நடுவுநிலைமை தவறுதுள்ள ஏக நாயகன். (யுத் : 231)

நடை - 1. ஒழுக்கம். நல்லொழுக்கம்- நடை வருந் தன்மை நீர் நன்றி தென்றிரேல். (அ:948) நடையிற்படு நீதியர். (யுத்:1749)
2. நீதி நெறி. முறை. நடை யல்லா வாரங் கொண்டார். (ஆ - 739)
3. நிகழ்ச்சி முறை. நீதியின் நடை துறந்துயிர் கோடலும் நன்மையோ. (யுத் : 3842)
4. உலகியல் நடை. (பா : 9)

நடையிள வன்னம் - நடையால் அழகிய இளைய அன்னங்கள். இடை யிடை எங்கணும் களியருதன நடை இள அன்னங்கள். (பா:146)

நடையிற்படு நீதியர் - நல்லொழுக்கத்திலே பொருந்தி நின்ற நீதிமான்கள். (யுத் : 1749)

நடையுறு நியமம் - ஒழுக்கங்களுக்குரிய செய் கடன்கள். வேதியர் நடையுறு நியமமும் நவையின்ருகுக. (பா : 292)

நடை வருந்தன்மை நீர் - நல்லொழுக்கநெறியிற் செல்லும் நீங்கள். என் அன்னை செய்கையை நடை வருந்தன்மைநீர் நன்றி தென்றிரேல் (அ : 948)

நண்டு - நண்டு. நண்டெனச் செல்லும் நாவாய். (அ : 1052)

நண்ணலார் - பகைவர். நம்பி நீ நண்ணலார்பாற் சென்று. (யுத் : 929) நண்ணலார் செய்கை நாண. (சு : 1264) (யுத் : 3879)

நண்ணன் மேயினர் - சென்றடைந்தார். உயர் நறை மலரவனிடம் நண்ணன்மேயினர். (பா : 187)

நண்ணூர்-பகைவர். நண்ணூர் வியந்தெழு மறுபத்தேழு கோடியாம் விரர். (யுத் : 4328)

நண்ணினர் - உறவினர் உருவ வேற்றுமை நண்ணினர் நோக்க வும் அயிர்ப்பு நல்கவே. (யுத் : 1065)

நண்ணுதல் - 1. சமீபித்தல். நணியர் வந்து மனிதர். (யுத் : 733) நண்ணூற்று. (யுத் . 225)

2. மேற்கொள்ளுதல். நாடு நண்ணினூர். (கி . 906)

3. அடைதல். நற்றவப் பள்ளி வாயிலை நண்ணினன். (அ:119)

4. அறிதல். தத்துவம் நண்ணினன். (அ : 654)

5. வருதல். நன்னுதல் மேயினன். (சு : 381)

6. பொருந்துதல். நண்ணருஞ் சோதியாந் தன்மையில் துயிறன் மேயினன். (அ : 1185)

7. கலத்தல். உள்ளுளன் புறத்துளன் ஒன்றும் நண்ணலான். (யுத் : 205)

8. உள்ளத்தால் நெருங்குதல். நண்ணினை மனிதரை. (யுத்:312)

நண்ணுதல் மேயினன் - வந்தான். (சு : 381)

நண்பகல் - நடுப்பகல். இரவும் நண்பகலும் எனலாயினர். (யுத் : 3692)

நண்பிர் - நண்பர்களே. நண்பிர் நல்லது யுரிமின். (கி : 1008) (கி : 998)

நண்பு - அன்பு. யான் உதவற்கு நேர்வல்... நண்பால் எனச் சொல்லினன். (சு : 69)

நண்பு செய்தல் - நண்பு பூணல். ஏயும் நம் பகைவனுக்கினிய நண்பு செய் நீயுமே நிகர் பிறர் நிகர்க்க நேர்வரோ. (யுத்:309)

நண்பு பூணுதல் - நட்புக் கொள்ளுதல். மனிதரை நண்பு பூண்டனை. (யுத் : 312)

நண்பு முற்றுதல் - நட்பு முதிரப் பெறுதல். முன்புற அனையர்பால் நண்பு முற்றினை. (யுத் : 311)

நணியர் - சமீபித்து விட்டனர். நெருங்கிவிட்டனர். நணியர் வந்து மனிதர். (யுத் : 733)

நணுகல் (நணுகுதல்) - 1. நெருங்குதல். அன்பரை நணுகி. (யுத் : 2318)

2. **சேரல்.** நவ்வி போல் விழியினுள் தன் வனமுலை நணுக லுற்ருன். (பா : 551)

நணுகவும் நிமிரவும் நடக்கு ஞானத்தர் - உலகிய லோடு ஒன்றிச் சுருங்கவும் அவ் வியல்பை விட்டு மேலோங்கி விரியவும் வல்ல ஞானியர்கள். நணுகவும் நிமிரவும் நடக்கு ஞானத்தர் உணர் வினின். (பா : 1304)

நத்து - சங்கு. அம் சுவள் நத்தின் முத்தொளிராரம். (சு : 174) நத் தொலி முர சொலி. (யுத் : 1990)

நத் தொலி - சங்கின் ஒலி. [நத்து - நந்து என்பதன் விகாரம்] (யுத் : 1990)

நதம் - மேற்கு நோக்கிச் செல்லும் ஆறு. நிலம் வகிர்ந்த குழிவாய் நத முலாவு நளி நீர் வயினழுந்த. (ஆ : 45)

நதி - 1. ஆறு. நதியினும் குளத்தும். (பா : 982)
2. **நதி நீர்.** நதிகாய் நெடு மானம். (யுத் : 1683)

நதிகாய் நெடு மானம் - ஆற்று வெள்ளத்தையும் கொதிப்புற்று வற்றச் செய்யும் கடுங் கோபம். நதிகாய் நெடுமானமு நாணுமுரு. (யுத் : 1683)

நதிதரு நிதியம் - ஆறுகள் கொணர்ந்து குவித்த செல்வம். நன் மலை யல்லது நதிதரு நிதியம். (பா : 47)

நதி நீங்குதல் - நதியைக் கடத்தல். நீங்கினன் அந்த நெடு நதி இருகையால் நீந்தி. (அ : 725)

நதியினுங் குளத்தும் பூவா நளினம் - ஆறுகளிலும் குளங்களிலும் மலராத தாமரை மலர்கள். நதியினுங் குளத்தும் பூவா நளினங் கள் குவளையோடு மதி நுதல் வல்லிபூப்ப நோக்கிய மழலைத்தும்பி. (பா : 983)

நதி விடுதல் - நதியில் ஓடம் முதலியவற்றைச் செலுத்துதல். விடு நதி கடி தென்ருன். (அ : 617)

நந்தமக்கு - நமக்கு. எடுத்து நந்தமக்கியம்புவ என. (அ : 759)

நந்தல் - கெடுதல். கேடு. அழிதல். குறைதல். நந்தலில் கேகயன் பயந்த நங்கைதான். (அ : 536) நந்தலில் அறம். (அ : 1073) நந்தலில் புவிக்கண் இடர் பிற்களைதல் நன்ருல். (சு : 615)

நந்தலனுகி - கெடாதவனுகி. மானம் நந்தலனுகி மனுநெறிபோன தண்குடை வேந்தன் புகழ் என. (பா : 16) [பா : பே]

நந்தலில் தெய்வம் – அழிவில்லாத தெய்வம். இவை முறையிற் சாற்றிய நந்தலில் தெய்வமாய் நல்கும். (யுத் : 1950)

நந்தலில், நகர் - குறை வில்லாத அயோத்தி நகர். அவனி காவலர் நந்தலில் நகருளார். (அ : 464)

நந்தலில் புவி - கெடுதல் இல்லாத பூமி. நந்தலில் புவிக்கண் இடர் பிற்களைதல் நன்ருல். (சு : 615)

நந்தலில் விளக்கம் - அணையாத விளக்கு. நந்தலில் விளக்க மன்ன நங்கையும் நடக்கலுற்ருள். (பா : 1224)

நந்த வனங்கள் - அழகிய பூந்தோட்டங்கள். நந்த நந்த வனங் களில் நாண் மலர்க் கந்த முந்திய கற்பகக்கா. (அ : 1079)

நந்தவானம் - நந்தவனம். நந்த வானத்து நாண்மலர். (சு : 725)

நந்தனவனம் - 1. அழகிய சோலை. (அசோகவனம்) நந்தன வனத்துள் நின்ற நாயகன் தூதன். (சு : 826)
2. தேவருலகத்துப் பூந்தோட்டம். வானவர்கள் நந்தன வனத்தையுமடித்து. (சு : 701)
3. மகிழ்ச்சியூட்டும் பூங்கா. சின்னந்தருமலர் சிந்திய செறி நந்தனவனம். (அ : 624)

நந்தாத - கெடாத. நந்தாத பெருந் தவ நாடு. (ஆ . 89)

நந்தா விளக்கு - 1. சுயம் பிரகாச மான சோதி விளக்கு. அணை யாது நீண்டு ஒளி வீசும் விளக்கு. தூண்டா விளக்கு. நந்தா விளக்கின் வரும் எங்குல நாதன். (சு : 579) நந்தா விளக்கனைய நாயகனே. (அ : 1125)
2. தூண்டா விளக்குப் போல்பவள், திருமகள்- செந்தாமரைப் பொகுட்டிற் செம்மாந்து விற்றிருக்கும் நந்தா விளக்கை. (யுத் : 294)

நந்தி - 1. நந்தியாவட்டை. நந்தியின் திரட்பூ (கி : 783)
2. இராவணனுக்குச் சாபங் கொடுத்த நந்தி. மேலை நாள் நாலுதோள் நந்தி தான் எடுத்த சாபத்தால். (யுத் : 92)

நந்தி சாபம் - நந்தி இட்ட சாபம். நந்திதான் நவின்ற சாபத்தால் கூலவான் குரங்கினுற் குறுகும் கோளது வாலிபாற் கண்டனம். (யுத் : 92) (யுத் : 118)

நந்தியம்பதி - நந்திக் கிராமம். நந்தியம்பதியிடை நாதன் பாதுகம். (அ : 1205) (யுத் : 4280) (யுத் : 4115)

நந்தினர் - செழிக்கப் பெற்றவர். நந்தலில் அறம் நந்தினராமென. (அ : 1073)

நந்து - 1. சங்கு. பல் நந்துகு தரளம் தொகு படர் பந்திகள். (அ : 624) கூனல் நந்தெலாம். (கி : 563)

2. **முத்து.** வால் நந்து இரிந்துக. (சு : 725)

3. **சங்கவாத்தியம்.** மூக்கில் தாக்குறும் மூரி நந்து. (பா . 88)

நந்துகு தரளம் - சங்குகள் சிந்திய முத்துக்கள். (அ : 624)

நந்துதல் - 1. குறைதல். நந்தலில் விளக்க மன்ன நங்கை. (பா : 1224) நந்துறு தூம வெங்கனலென. (யுத் : 2947)

2. **கெடுதல். அழிதல். அவிதல்.** நந்தலில் புவி. (சு : 616) மொய்யமர் நந்தினர் தம்மொடு நனி நடந்ததோ. (யுத் : 51)

3. **மிகுதல். வளர்தல். கொழித்தல்.** பொன்னந்திய நதிகண்டு. (அ : 624)

4. **தழைத்தல். பெருகுதல். வளர்தல்.** நந்த நந்தவனங்கள். (சு : 1079)

5. **வாடுதல்.** நந்தா நாண்மலர் சிந்தி. (கி : 400)

6. **இறத்தல்.** மொய்யமர் நந்தினர் தம்மொடு. (யுத் : 51)

7. **விளங்குதல்.** நளிர் திங்கள் மாய நந்திய வாண் முகத்தொரு தனி மயன் மகள். (சு : 290)

நந்துறல் - அவிந்து கொண்டிருத்தல். நந்துறு தூம வெங்கனலெனப் பொலிந்து தோன்றினன். (யுத் : 2947)

நந்துறை புளினம் - சங்குகள் தங்கிய மணற் குன்றுகள். (அ:624)

நம் - நம்முடைய. ஆலமன்ன நம்மரக்கர்கள். (யுத் : 216)

நம்பரம் - நம் சார்பில். நம்பரத் தடங்கு மெய்யன். (யுத் : 771)

நம்பன் - 1. சிவபெருமான். நமக்குச் சிறந்தான். (கலா) (வை.மு) நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன். (பா : 14)

2. **விரும்பப்படத் தக்கவன். (அண்) இராமன்.** அறிவு வந்துதவ நம்பனை அறிந்து பகர்வான். (ஆ : 47)

நம்பன் மாதுலன் - மலையரசன். பர்வதராஜன். (பா : 14)

நம்பி - 1. பூரணன். எல்லா நலங்களும் நிறைந்தவன். வந்த நம்பியைத் தம்பி தன்னொடும் முந்தை நான்மறை முனிக்குக் காட்டி. (பா : 334)
2. ஆடவரிற் சிறந்தவன். நம்பியை நளிர்முடி சூட்டி. (அ:48)
3. கடவுள். பரமாத்மா. குணநிறைவுடையவன்; இறைவன். நன்றே நம்பி குடி வாழ்க்கை. (யுத் : 1)
4. சிறந்த வீரன். நம்பிக் கொரு நன் மகனே இனி நான். (யுத் : 1687)

நம்பிகுடி•வாழ்க்கை - இறைவன் நிலை. (அண்) இருப்பும் வாழ்க்கை வரலாறும். (கலா) (யுத் : 1)

நம்பி குலக் கிழவன் - ஆடவரிற் சிறந்த (அரக்கர்) குலத் தலைவன். மாலியவான். நம்பி குலக்கிழவன் கூறும் நலமோராய். (யுத்:1949)

நம்பியர் - பெரியோர். வினை தேரா நம்பியர் இருக்க. (யுத் : 59)

நம்பு - விருப்பம். நம்பு பாமாலையாலே நாருக்கின் றமுத மீந்தான். (பாயி : 10)

நம்புதல் - அன்பு கொள்ளுதல். விசேடப்பற்றுக் கொள்ளுதல். நம்பிய பரதனோடு. (யுத் : 4279)

நம்மனோர் - நம்மை பொத்தவர். நன்னெடுந் திசை முகனகத்தும் நம்மனோர்க் குன்னரு முயிருளும் ஒக்க வைகுவான். (அ : 784)

நம்மின் வலியார் - மன வலிமையுடையவர் நெஞ்சழுத்த முள்ளவர்கள். மாளாத நம்மின் மனம் வலியார் ஆர் என்பார். (அ : 399)

நம்முன் - நம் அண்ணன். எவ்வழி யுறைந்தான் நம்முன். (அ:1030)

நம - நம்முடைய. கூறுவது மானுடரை நன்று நம கொற்றம். (யுத் : 64) வீடண சென்று தா நம தேவியைச் சீரொடும். (யுத் : 3957)

நமரங்காள் - நம்மவர்களே. நாகக் குன்றம் சென்றன காண்மின் நமரங்காள். (யுத் : 3548)

நமன்-1. யமன். ஆயிர கோடி தூதர் உளர்கொலோ நமனுக் கம்மா. (சு: 955) உம்பர் வானத்தொருதனிநமன். (யுத்: 525) நமனை இன்றிவன் கண்ணிடை நிறுத்துவனென்னுங் கற்பினன். (யுத். 1526) (யுத்: 4358)

2. யமன் பிரதானி. வருகாலனுமவன் தூதரும் நமன் தானு மவ் வரைப்பின் இருகாலுடையவர். (யுத்: 3365).

நமன்தமர் - யமபடர். ஓய்வன நமன்தமர் கால்கள் ஓயவே. (யுத் : 1795)

நமன்திசை – தெற்குத்திக்கு. (யுத்: 910)

நமன்திசை வாயில் – தெற்குத்திக்கு வாயில். நமன் திசை வாயில் நண்ணி. (யுத்: 910)

நமனர் - யமன். நமனர் கொல்லச் சாகிலன். (யுத்: 147) அறி யாரோ நமனர். (யுத்: 395)

நமனர்பதி - இறந்தவர் சென்றடையும் யமன் உலகம். எதிரே பொருவோர் நமனர் பதிபுக்குறைவோர். (யுத்: 1712)

நமனர் போர்த்தண்டு - யமனது கதாயுதம். வார்த் தங்கிய கழலான் ஒருமரனின்றது நமனர் போர்த் தண்டினும் வலிதாயது கொண்டான். (யுத்: 1833)

நமனுருறை தென்புலம் – யமன் வாழும் தெற்குலகு. வைவஸ்வத நகரம். புக்கார் நமனர் உறை தென்புலமே. (யுத்: 2920)

நமனுக்கும் நமன் – யமனுக்கும் யமனனவன். கூற்றுவனுக்கும் கூற்றுவனாக மேம்பட்டவன். (அண்) இந்திரசித்து. நல்லை போர் வா வா என்றான் நமனுக்கும் நமனாய் நின்றான். (யுத்: 2981)

நமனைக் கண்ணிடை நிறுத்தல் – இதுவரை மறைந்து நின்ற யமனை கண்ணுக்கெதிரே நிறுத்துதல்; கொல்லுதல். (யுத்: 1526)

நமனையுறுதல் - இறத்தல். உம்பர் வானகத்தொரு தனி நமனைச் சென்றுற்றான். (யுத் : 525)

நமித்திரர் – பகைவர். நமித்திரர் நடுக்குறு நலங்கொள் மொய்ம் புடை நிமித்திரு மரபுளான். (பா : 271)

நமை - நம்மை. இடர்க் கடலுள் இட்டுநீத்தான் நமை என்பார். (அ : 611)

நமைப் புரந்தாள் - நம்மை வளர்த்தவள். பயந்து நமைப்புரந்தாள் மதியின் பிழையன்று. (அ : 426)

நமோ நாராயணாய - அஷ்டாக்ஷர மந்திரம். பிரணவ மின்றி வந்தது. ஓம வேள்வியின் உறுபத முய்ப்பது மொருவன் நாமம் அன்னது கேள் நமோ நாராயணாய. (யுத் : 172)

நய - விரும்பு. நன்மகன் இந்த நாடிறவாமை நய வென்றான். (அ : 217)

நயக்கல் - விரும்புதல். பழிபட வந்த வாழ்வை யாவரே நயக்கற் பாலார். (யுத் : 3055)

நயக்கலீர்கள் - விரும்பாதீர்கள். வலங்கடிந் தேழையராய மன்னரை நலங்கடிந்தறங்கெட நயக்கலீர்கள். (அ : 484)

நயத்தல் - 1. விரும்புதல். விரும்பி நிற்றல். தேவர்தம் நாவுள் ஆவுதி நயக்கும் வேள்வியால். (பா : 341) நயத்தினை நயந்து. (யுத் : 1253) நயக்கலீர்கள். (அ : 484)

2. அன்பாற் சிறத்தல். நயந்தார் உயத் தங்களின்னுயிருங் கொடுத்தார். (பா : 1186)

3. ஆசை வைத்தல். பிழைப்பினி உண்டென நயவேல். (யுத் : 1217)

நயத்துறை - நீதியின்வழி. (யுத் : 927)

நயத்துறை நூலின் நீதி - அரசியல் நீதி நெறிகளை அறிவுறுத்தும் நூல்களிற் சொல்லப்பட்ட நெறிமுறைகள். (அண்) அறிஞர் ஆய்ந்த நயத்துறை நூலின் நீதி நாந் துறந்தமைதல் நன்றோ. (யுத் : 927)

நயந்து கேட்டல் - விரும்பிக் கேட்டல். குரங்கின் சொல்லென நகையுறலின்றியே நயந்து கேட்டியால். (யுத் : 385)

நயந்து கொள்ளல் - விரும்பி ஏற்றல். நஞ்செனக் கொடியனை நயந்து கோடியோ. (யுத் : 377)

நயப்பு - அன்பு. நயப்புறு சித்தரை நலிந்து வவ்வின. (ஆ : 414)

நயப்புறுதல் - விரும்புதல். தீவினை நயப்புறுதல் செய்தனை. (யுத்:60)

நயப்புறுதல் செய்தல் - விரும்பி மேற்கொள்ளுதல். (யுத் : 60)

நயம் - 1. அழகு, முறைமை. நன்னயக்கால். (அ : 1055A)

2. **பொருள்.** பரிணதர் தெரிந்த நூலின் நன்னய முணர்ந் தோணுகி. (பா : 669)

3. **உண்மை.** நன்ருே பழுதுளதோ நடுவுரை நீ நயமென்ன. (பா : 1354)

4. **நன்மை.** நன்றியை மறந்திடு நயமில் நாவினேன். (அ:897)

5. **முறைமை. நீதி.** நயத்துறை நூலின் நீதி. (யுத் : 927) (உ.வி) (யுத் : 1252)

6. **இனிமை.** நயம்பட உரைத்த நாவும். (யுத் : 1219) நயத் தினை நயந்து. (யுத் : 1252)

7. **நீதி நூல்.** நயந் தெரி அனுமன். (கி : 643)

நயமில் நாவினேன் - நன்மை யில்லாத நாக்கினையுடையவன். நன்றி யை மறந்திடு நயமில் நாவினேன். (அ : 897)

நயன் - நல்லது. நீதி. (கலா) நாதனும் நயனி தென்ருன். (யுத் : 1345)

நயனக்கதி - கட்பார்வை செல்லும் தூரம். அருணன் தன் நயனக் கதிக்கு முந்துறு கலினமான் தேரோன். (பா : 489)

நயனக் கூர் வேல்-கண்களாகிய கூரிய வேல்கள். யாணர்க் குழை தொடர் நயனக் கூர்வேல் குமரர் நெஞ்சுருவக் கோட்டி. (சு : 211)

நயன கோசரம் - கண்ணுக்கு விஷயமாதல். புலப்படல். தெரிதல். நறைகமழ் அலங்கலான் நயன கோசரம் மறைதலும். (பா: 603)

நயனந் தொடர்ந்த ஒளி – புறக்கண்ணுக்கு புலனுகின்ற ஒளிவடிவு. ஒன்று நயனந் தொடர்ந்த ஒளியால் வானந்தொடர்ந்த பத மென்னும் (யுத்: 2207)

நயனம் – கண். இருபது நயனம் மின்திறப்பன ஒத்தன (சு: 466) (யுத்: 450)

நயனம் இமைப்பிலன் - கண் விழித்தபடியே இமையாதவனுய் நித் திரை இல்லாதவனுய். எங்குல் எல்லை காண்பளவும் நின்ருன் இமைப்பிலன் நயனம் என்ருன். (அ : 1034)

நயனம் பொடித்தல் - கண்கள் கக்குதல். பொடித்த தி நயனங்கள் (யுத்: 1438)

நயன வாரி - கண்களினின்று பொழிகின்ற நீர். நயனவாரியின் தொய்யல் வெஞ்சுழியிடைச் சுரிக்கும் மேனியன். (சு: 585)

நயனவேல் - கண்களாகிய வேலாயுதம். தையலாள் நயன வேலும் மன்மதன் சரமும் பாய. (பா: 552)

நரகத்தார் - நரக வாசிகள். நரகத்தார் சொர்க்கத்தார் நம்பி நம்மோடு எல்லாரும் பகைஞரே. (யுத்: 3892)

நரகதர் - நகரத்தைபடையக்கூடிய பாவிகள். நரகதர்க் கற நல்கு நலத்த நீர். (அ: 1081)

நரகதேயம் - நரகலோகம். நரகதேயத்துள் நடுக்குறு இருளையும் நக்க. (1083)

நரகம் - 1. நரக உலகம். நரக முண் டென்னு நல்லுரை பேணலன். (அ : 903)

2. **துன்பம்.** நண்ணுவார் நரகமென் றெண்ணி. (யுத் : 104)

நரக மெய்தல் - நரக மடைதல். உரக மன்ன சொல் யானுனக் குரைசெயி னுரவோய் நரக மெய்துவன். (யுத் : 167)

நரகன் - நரகஞ் சேர்தற்குரியன். (இராவணன்) இந் நல்லவன் தோற்பதே நரகன் வெல்வதே. (ஆ : 945)

நரகிடை வீழ்தல் - நரகில் வீழ்தல். இன்னோர் புகு மெய்க்கொடு நரகிடை விரைவின் வீழ்க யான். (அ : 895)

நரகில் வீழ்வார் - நரகத்திலே விழுவார்கள், விழுபவர்கள். உயிரினேம் பாக்கையனும் ஒருவன் செய்த உதவியிற் கருத்திலோனும்...... மீள்கிலா நரகின் விழ்வார். (யுத் : 423)

நரகு - நரகம். புகலாம் பின்னை நரகன்றிப் பொருந்திற்றுண்டோ. (யுத் : 1365)

நரசிங்கம் - மானுட மடங்கல். நகம் பல் ஏன்றிவை இல்ல தோர் நர சிங்கமனை யான். (யுத் : 494) வன்றூணிடைத் தோன்றிய மாநரசிங்க மென்ன. (கி : 266) (யுத் : 2514)

நரந்தக்கா - நரந்த மென்னும் மரங்களின் சோலை. நாகமும் நரந்தக் காவும் நளின வாவிகளும் நண்ணி. (கி : 108)

நரந்த நரைக்குழல் - கஸ்தூரியின் மணங்கமழும் கூந்தல். நரந்த நறைக்குழல் நங்கையும் நாமும். (பா : 778)

நரந்தம் - 1. கஸ்தூரி, நரந்த நறைக் குழல். (பா : 778)

2. ஒரு வகை வாசனைப்புல். நாரத்தை. (கலா) நாகமும் நரந்தக் காவும் நளின வாவிகளும் நண்ணி. (கி : 108)

நர நாரணன் - குரு சிஷ்ய முறையைத் தெரிவிப்பதற்கு திருமால் தானே நரனாகவும் நாராயணனாகவும் கொண்ட அவதாரம். அந் நரன் அல்லனாகின் நாரணன் அனையனன்றேற் பின்னரன் (யுத் : 2072)

நரபாலர் - அரசர். பனிவார் கடல் புடைசூழ் படி நரபாலரை அருளா. (பா : 1369)

நரம்பியல் கின்னரம் - நரம்பினாலியன்ற கின்னரம். அமுத ஏழிசை நரம் பியல் கின்னரம் முதல நன்மையே நிரம்பின. (யுத்:2761)

நரம் பிழைத்தன பாடல் - யாழ் நரம்புகளைக் கொண்டு பாடிய பாடல். புரம் பிழைப்பருந் தீப்புகப் பொங்கியோன் நரம் பிழைத்தன பாடலின் நல்கிய வரம் பிழைக்கும். (சு : 1145)

நரம்பினோ டினிது பாடி - கண்டமும் கருவியும் ஒக்கப்பாடி. (கலா) யாழ் நரம்பினோ டிசைய இனிது பாடி. (அண்) புருவங்கள் தம்மினுட நரம்பி னோடினிது பாடி. (பா : 940)

நரம்பு - 1. யாழ் நரம்பு. நரம்பி னோடினிது பாடி. (பா : 940)
2. நரம்பின் ஓசை. நெய்திரள் நரம்பிற்றந்த மழலையின். இயன்ற பாடல். (பா : 572)
3. யாழ். வீணை. கிளையினும் நரம்பினும் நிரம்பும் கேழன. (அ : 474)

நரம்பு வருடுதல் - நரம்புகளைத் தடவுதல். கின்னரங்கள் இன்னரம்பு வருடு தொறும். (கி : 771)

நரம் பெறிவுறுதல் - நரம்பை விரல்களால் தடவி எறிதல். குழுவு நுண்டொளை வேயினும் குறிநரம் பெறிவுற்றெழுவு தண்டமிழ் யாழினு மினிய சொற்கிளியே. (அ : 764)

நரர் - மானிடர். மற்றை நரருயிர் பிரிந்த யாக்கை. (யுத் : 2395)

நரல் - ஒலி. மீன் நரல் வேலை. (யுத் : 1510)

நரலை - 1. ஒலி. நந்தா தொலிக்கும் நரலைப் பெரு வேலை யெல்லாம். (பா : 968)
2. கடல். நரலையும் நடுங்க ஆர்த்து. (சு : 1261)

நரன் - 1. மனிதன். நசித்துப் போகும் இயல்புடையவன். உன்னையேவும் நரன் கொலாம் உலக நாதன். (யுத் : 941)

2. **நாராயணன் சீடனான ஒரு முனிவன்.** அந்நரன் அல்லனாகில் நாரணன். (யுத் : 2072)

நராந்தகன் - இராவணன் புதல்வன். (மனிதர்க்கு யமன் போன்றவன்) (யுத் : 512) நாந்தக மின்னத் தேரை நராந்தகன் நடத்தி வந்தான். (யுத் : 1885)

நராபதி - மன்னவர். நராபதியாகிப் பின்னும் நமனையும் வெல்லுவாரே. (யுத் ; 4358)

நரி - நரிகள். தலை மேல் நெடு நரி ஏறின. (ஆ : 468)

நருக்குதல் - கொல்லுதல். நட் பகத்திலா அரக்கரை நருக்கி. (யுத் : 4104)

நருமதை - ஒரு புண்ணிய நதி. மேதியின் நாகு சேர் நருமதை யாறு நண்ணினர். (கி : 824) (யுத் : 4089)

நரை - மயிர் வெளுத்தல். நரை திரை யென்றில்லாத நான் முகனே முதலமரர். (ஆ : 348) நரை திரை மூப்பிவை மாற்றி. (பா : 724)

நரைதிரை – நரையும் திரையும். நரை – மயிர் வெளுத்தல். திரை - உடம்பின் தோல் சுருங்குதல். இவை இரண்டும் மூப்பின் இயல்புகள். நரை திரை என்றில்லாத நான் முகனே முதலமரர். (ஆ. 348)

நரை திரை மூப்பு இவை - நரை திரை மூப்பு என்னும் உடற்குறைகள். நரை திரை மூப்பிவை மாற்றி. (பா: 724)

நல் - 1. பெரிய. அற்பினற் றிரைபுரள் ஆசை வேலையன் (ஆ: 838)

2. **அழகிய.** நன்னகர். (சு : 93)

3. **சீரிய.** களி நல்யானை. (பா: 626)

நல்கல் - அளித்தல். படைத்தல். மற்றும் நல்வழி நல்க வேண்டி. (யுத்: 2233) பெரும்படை நல்கல் அன்றியே. (1111) நல்காய் முனிவாயேல். (அ: 215)

நல்கி - உபசரித்து. இவ்வயின் நனியுறை என்றவற் கமைய நல்கி. (ஆ: 127)

நல்கிய - தோற்றுவித்த. நங்குல நாயகன் நரைவிரி கமலத் தாளின் நல்கிய கங்கை. (அ: 67)

நல்கியது - அருளியது. நன்மை செய்தது. கேகயன் மடந்தை வாசகம் நல்கியது அரிவையர் நடுவிற்கே கொலாம். (அ: 974)

நல்குதல் - 1. செய்தல். உதவுதல். நய்குவதென்னினி. (கி: 200)

2. உயிரளித்தல். அனுமன் வேண்ட நல்கினன் நம்மை இன்னும். (கி: 645)

3. கொடுப்பது. உதவுவது. நன்னெடும் பெரும்படை நல்க லின்றியே. (அ: 1111)

4. அருளுதல். நன்மை செய்தல். கேகையன் மடந்தை வாசகம் நல்கியது அரிவையர் நடுவிற்கேகொலாம். (அ: 974)

5. உபசரித்தல். இவ் வயின் இனியுறை என்றவற் கமைய நல்கி. (ஆ : 127)

6. அன்பு கொள்ளுதல். வேண்டின தாயின் நல்கும் மண்டல மகர வேலே. (ஆ : 721)

7. கருணை செய்தல். நல்கினுன் என்னற் பாற்ருே. (யுத்:1089) கொல்லும் இறை நல்கானுல். (யுத் : 1597)

8. கொண்டாடுதல். நின்னிலே நன்றெனு நல்கா எதிர் நடவா. (யுத் : 1145)

9. பொறுத்தல். நாணிலாத என் நவையை நல்குவாய். (கி : 141)

10. இணங்குதல். மேனுள் அகலிகை யென்பாள் காதல் இந்திரன் உணர்த்த நல்கி எய்தினுள் இழுக்குற்ருளோ. (யுத் : 1597) [பா : பே]

11. தருதல். நீயே பற்றி நல்கலே போலும். (ஆ : 797)

நல் குரவு - வறுமை. நல்குர வொழிந்த தாமெனும் பெருங் களி துளக்குறுத்தலால். (பா : 499)

நல்கூர்ந்தவர் - வறியவர். கனகம் நல்கூர்ந்தவர் கைப்பட்டென்ன. (யுத் : 4189)

நல்லது - சிறந்தது. நாசம் வந்துற்ற போது நல்லதோர் பகையைப் பெற்றேன்- (யுத் : 1249)

நல்லணி - 1. நல்ல அணிகலன்கள். நல்லணி மணிச்சுடர் தவழ்ந்திட நடந்தாள். (பா : 1225)

2. **நல்ல அணிகலம் போன்றவள்.** நன் மகனுக்கிவள் நல்லணி யென்ருர். (பா : 1340)

நல்ல தல்லதோ - நல்லதன்ருே. செய்கை தேர்கிலா நாயெனத் தரிவது நல்ல தல்லதோ. (அ : 1192)

நல்லமர் - சிறந்த போர். (யுத் : 1452)

நல்லமிழ்து - சிறந்த அமுதம். நறைத்துறை முதிர்ச்சியுறு நல்ல மிழ்து பில்குற்று. (பா : 1232)

நல்லரசு - சிறந்த ஆதிபத்தியம். நாய் தரக் கொள்ளும் சீயம் நல்லரசு. (யுத் : 948)

நல்லவர் - 1. நல்லொழுக்க முள்ளவர். நாட்டார் நன்னூலும் கேட்டார் இவ்வுரை கேட்பாரோ. (சு : 651)

2. **நன்மையுடைய அமைச்சர்.** ஞால மன்னர்க்கு நல்லவர் நோக்கிய கால மல்லது கண்ணு முண்டாகுமோ. (அ : 116)

நல்லவன் - தூயவன். **நல்லவன்.** முகமே நம்பி நடந்தனன் என்னும் மாற்றம் சொல்லலும். (அ : 589) நல்லவன் உரை செய நம்பிகூறலும். (அ : 955) (ஆ : 945)

நல்லவா புரிது - நன்ருகச் செய்வேன். (யுத் : 253)

நல்லவை - நல்ல அவை. அரசன் இனி திருந்த நல்லவையினு யினுன். (அ : 385)

நல்லறப்பயன் - நல்ல தருமத்தின் பயன். நின்குல மைந்தனை வேதியர் முதலோர் யாரும் யாஞ்செய்த நல்லறப்பயனென விருப்பார். (அ : 39)

நல்லறம் - 1. நல்ல அறங்கள். அடருஞ் செல்வமளித்தவன் ஆணையால் படரும் நல்லறம் பாலித்து. (அ : 788)

2. **சீரிய இல்லற ஒழுக்கம்.** வனிதையர்க்காக நல்லறத்தின் மாண்பெலாம். (சு : 403)

நல்லறமூர்த்தி - சிறந்த தருமஸ்ருபி. இறையவன் இராமனென்னும் நல்லறமூர்த்தி யென்னில். (யுத் : 3124)

நல்லற வீரன் - நல்ல தருமத்தையுடைய வீரன். அனுமன். வெயர்த் திலன்மிசை உயிர்திலன் நல்லற வீரன். (சு : 803)

நல்லறிவாளர் - நல்ல அறிவினையுடையவர். செல்லிடத் தல்லது ஒன்றுரைத்தல் செய்கலா நல்லவறிவாளர். (கி : 558)

நல்லறிவாளன் - பிரகலாதன். நாடி நான் தருவன் என்ற நல்லறி வாளன். (யுத் : 258)

நல்லறிவு - 1. மெய்ஞ்ஞானம். செய்தவம் அருஞ்சிறப்புதவ நல்லறிவு கைதர. (ஆ : 124)
2. ஆன்மா. நல்லறிவு போன்றான். (யுத் : 2153)

நல்லன நிமித்தங்கள் - நல்லனவாகிய நிமித்தங்கள். நல்லன நிமித்தங்கள் நனி நிகழ்ந்தன. (யுத் : 405)

நல்லாண் மகள் - அழகியவளான பெண். நல்லவளாகிய பெண். மாண்ட கற்புடையாள் மலர் மார்பக மாண்டிருக்கும் நல்லாண் மகள் என்னுமால். (ஆ : 312)

நல்லார் - 1. பெண்கள். அயிற்கண் நல்லார். (சு : 205)
2. நல்ல பெண்டிர். நல்லார் புகழ் பேணி நாண்பா லோரோ நங்கையர் தம்பால் நணுகாரே. (அ : 224)

நல்லாள் - நல்ல குணமுள்ள மனைவி. நல்லாளுடனே நடநீ எனலும். (ஆ : 90)

நல்லாறு - சன்மார்க்கம். நல்லாறுடை வீடணன். (யுத் : 1731)

நல்லான் - நல்லவன். தயரதன். வில்லார் தோளான் மேவினன் வெங்கானக மென்ன நல்லான் அன்றே துஞ்சினன். (சு : 874)

நல்லியல் நவை யறு கவிஞர் - நல்ல தன்மையுள்ள குற்றமற்ற கவிஞர். (யுத் : 1076)

நல்லியற் கவிஞர் - நல்ல இபல்பைக் கொண்ட சிறந்த கவிஞர். நல்லியற் கவிஞர் நாவிற் பொருள் குறித்தமர்ந்த நாமச் சொல். (யுத் : 1240)

நல்லியன் மங்கல நாள் - நல்ல இயல்பு வாய்ந்த மங்கல நாள். நல்லியல் மங்கல நாளும் நாளை. (அ : 100)

நல்லீரப் பயன் - சிறந்த கருணையின் பயன். (வை. மு) **அன்பின் விளைவான பயன்.** எனக்கோர் நல்லீரப்பயன் நண்ணும். (கி : 993)

நல்லுயிர் நல்குவது - சஞ்சீவ கரணி. போயின நல்லுயிர் நல்குவ தொன்று. (யுத் : 2745)

நல்லுரை - நல்ல சொல். நரகம் உண்டெனும் நல்லுரை பேணலன். (அ : 903)

நல்லுறுப் பமையும் நம்பியர் - நல்ல இலக்கணமுள்ள உறுப்புக்கள் அமைந்த ஆண் மக்கள். நல்லுறுப்பமையு நம்பியரின் முன்னவன். (கி : 85)

நல்லே நல்லே - நீ மிகவும் சமர்த்தன். அடுக்கு இகழ்ச்சிக்குறிப்பு. நல்லே நல்லே இஞ் ஞாலத்து நின்னெக்கு நல்லார் இல்லை இல்லையால். (சு : 1017)

நல்லையாகுதி - நல்லவனுவாய். (யுத் : 1217)

நல்லையுமல்லே - நல்லையு மாகாய். எனக்கு நல்லையு மல்லே என் மகன் பரதன் தனக்கு நல்லையுமல்லே. (அ : 162)

நல்லோர் - பெண்டிர். நல்லோர் சித்திரமெனத் தனி திகைத் துருகி நிற்பார். (அ : 280)

நல்வரவு - நன்மைதரும் வருகை. இவன் வரவு நல்வரவே எனத் துணிந்தேன். (யுத் : 411)

நல்வலம் - மிக்கவலிமை. குரக்கு நல்வலம். (சு : 1040)

நல்வழி - மேன்மையான நல்வகைகள். மற்றும் நல்வழி நல்க வேண்டி. (யுத் : 2235)

நல் வினே - புண்ணியம். (அ : 117) நல்வினேப் பயன். (கி : 382)

நல்வினே ஊற்றத்தினுர் – நல்வினேயில் பற்றுமிக்க பெரியோர். ஓர் வில் நல்வினே ஊற்றத்தினுர். உரை. (அ : 117)

நலங்குடி போதல் - அழகு கெடுதல். நனி வருந்தி நலங்குடி போயிட. (பா : 1175)

நலங்குதல் - மனம் உடைதல். நாணத்தாற் சிறிது நலங் கினளிருந்து. (யுத் : 3307) தான் நலங்க விட்ட கோளெலாம் கிடந்த தொருசிறை. (ஆ : 564)

நலங் கெடுதல் - அழகு குன்றுதல். நலங்கெட மெலிந்த தோள்கள். (யுத் : 530)

நலஞ்செய்வினே - நல்வினே. என் நலஞ் செய்வினே உண்டெனினும். (பா : 323)

நலத்த புனல் - நன்னீர். தேடரு நலத்த புனலாசை தெறலுற்ருர். (பா : 1126)

நலத்தின்மேல் நலம் - அழகிற்குமேல் ஓர் அழகு. நலத்தின் மேல் நலமும் உண்டோ. (கி : 788)

நலத்துள் நீங்கினுள் - எல்லா நன்மைகளேயும் இழந்தவள். (அ:1117)

நலத்தை யுண்ணல் - இன்பத்தை அனுபவித்தல். மங்கை இளநலம் மைந்தர் உண்ணவே. (பா : 1109)

நலம் - 1. தன்மை. (வை.மு.) உலேவிலா நலங்கூடு கோசலம் என்னும் கோதிலா நாடு. (பா : 92)

2. நன்மை. மேம்பாடு. (அண்) (பா : 92) தீவிணேயேன் நலங் காண நடந்தணேயோ. (ஆ : 198)

3. பெருமை. சிறியோர் நாள் பருகின றென்ருல் வென்றி நலத்தின் பழுதன்ரே. (ஆ : 734) நலங்கெட மெலிந்த தோள் கள் வீங்கி. (யுத் : 530) நன்னலந் தொலேந்து சோரும் அரக்கன். (ஆ : 669)

4. செவ்வி அழகு. எண்ணரு நலத்தினுள். (பா : 598) துனி வரு நலத்தொடு சோர்கின்ருள். (பா : 1096) கரையறு நன்னலக் கடல். நலத்தின்மேல் நலமுண்டாமோ. (கி : 878)

5. அன்பு. (அண்) நஞ்சினும் வலிது நம்நலம் என்ருர் சிலர். (அ : 481)

6. செல்வம். விண்டவர் நலத்தையும் விரித்துரை செய்கேனே. (சு : 613)

7. இன்பம் - நிருதர்தம் அருளும் பெற்றேன் நின்னலம் பெற் றேன். (ஆ: 280) மாதர் நலம் பேணுது வளர்ந்தீர். (கி: 1023)

8. நற்குணம் - நற்குணச் செயல்கள். நற்பண்புகள். நலங்கொள் மைந்தன். (அ : 60) உற்றுநின்ற நலமிது. (கி: 314)

நலம்சுரந்தன பெருங்குறி - நன்மை தருவனவாகிய பெரிய குறிப்பு. நலஞ் சுரந்தன பெருங்குறி முறைமையின் நல்க. (யுத்: 2558)

நலம்பெய் கொம்பு - அழகு மிகுந்த பூங்கொம்பு. சிலம்பு மேகலே யும் மொலி செய்திட நலம்பெய் கொம்பின் நடந்துவந்தெய்தி னுள். (பா: 1168)

நலம்பெய் வேதியர் - உலகினுக்கு நன்மையினேச் செய்கின்ற வேதம் வல்ல முனிவர். (அ: 768)

நலமிக்கோன் - நல்லிலக்கணம் மிக்கிருக்கின்றவன். நாயகன் உலகுக் கெல்லாம் என்னலாம் நலமிக்கோயை மேயினன். (கி: 101)

நலன் - 1. இன்பம் துளிவரு நலனெனத் தொடர்ந்து. (அ: 23)
2. தருமம். மிக்கது நலனேயாக வீடு பேறளிக்கு மன்றே. (யுத்: 1361)
3. நல்ல செய்தி. (வை. மு) பூவை நன்னிலையில் உளள் என்னும் நலன் எனக்கு நல்குமால். (319)

நலார் - நல்லார், பெண்டிர், மனைவியர். அயிர்ப்பர் தங்கணவரை அந்நலார். (யுத்: 2300) ஓவியம் புரை நலார். (சு: 973)

நலி - வருத்தம். நலி கொடா நெடுஞ் சேமம். (யுத்: 203)

நலிகிற்கும் – வருத்தும். யார் நலிகிற்கும் ஈட்டார். (அ : 430)

நலிகொடா நெடுஞ்சேமம் - வருத்தந்தராத மிக்க பாதுகாத்தற்றொழில். நலிதலைச் செய்யாதவாறு செய்யும் நிலைத்த புரத்தற்றொழில். (அண்) நாமமும் அவன்பிற நலிகொடா நெடுஞ்சேமமும் பிறர்களாற் செப்பற் பாலவோ. (யுத் : 203)

நலிஞ்சு - வருந்தி. (ஆ . 68)

நலிஞ்சு தின்னுதல் - வருத்திக் கொன்று தின்னுதல். நலிஞ்சு தின்னு நாமவேல்... அக்கிலிஞ்சன். (ஆ : 68)

நலித்தியேல் - துன்புறுத்துவாயாகில். (யுத் : 2031)

நலிதர - வாட்ட. வறுமை நோய் நலிதர. (பா : 496)

நலிதல் - 1. அழிதல். நலமுதல் நலியினும். (அ : 6)
2. ஒடித்தல். நம்முடைச் சிலைகள் போல் நலிவவாமோ. (யுத் : 101)
3. வருத்துதல். நலியலிர் விடுமின் என்றனை. (யுத் : 78) எனையார் நலிகிற்கும் ஈட்டர். (அ : 438) நீயிதுரைத்து நலிவாயோ. (ஆ : 744) தரிக்கிலை நலித்தியேல். (யுத் : 2031)
4. வருத்திக்கொல்லுதல். நஞ்ச மன்னரை நலிந்தால் அது வஞ்சமன்று. (கி : 569)

நலிந்தோர் - வருந்தியவர். நல்லோய் நின்னை நலிந்தோரைக் கொல்லேம் எம்முயிர் கொண்டு. (சு : 648)

நலியலீர் - வருத்தாதீர். (யுத் : 718)

நலியினும் - அழிவதாயினும். (அ : 6)

நலிவு - வருத்தம். யானும் உலகமும் நலிவு தீர்ந்தாம். (யுத் : 611)

நவ் – மரக்கலம். கப்பல். நவ்வி எனவும் வழங்கும். நவ் வெனச் சென்ற நாவாய். (அ : 1050)

நவ்வி - 1. பெண் மான். மான். நாவி விரி கூழை இள நவ்வியர். (அ : 541)
2. நாவாய். நவ்விகள் பாயொடு வேலையிற்றிரியும் பண்பின. (யுத் : 2298)

நவ்விகள் - மரக்கலங்கள். (யுத் : 2298)

நவ்வி நோக்கியர் - மான் போன்ற விழியினர் ஆகிய மகளிர். மயில்கள் நவ்விநோக்கியர் நலங்கொள மேகலை பொலஞ் சாயற் செவ்வி நோக்கின போல்வன. (பா : 906) (கி : 17)

நவ்வி போல் விழியினுள் - மான் விழியாள். நவ்வி போல் விழி யினுள் தன் வன முலை நணுகலுற்றுன். (பா : 551)

நவ்வியின் விழியவள் - மான் போன்ற விழியையுடைய சீதை. நவ்வியின் விழியவளொடு. (ஆ : 108)

நவசு - ஆகாயம். மேகம். [நபஸ்] நவ செய்வன் தலை இழிந்த தம் அன்பரை அணுகி. (யுத் : 2318)

நவசெய் வன் தலை - நவசு ஏய். (ஏய் - எய் என விகாரம்) வானத்தை ஒத்த கரிய தலை. (யுத் : 2318)

நவஞ் செய்தல் - புதுமை விளைத்தல். நவஞ் செயத் தகைய இந் நளின நாட்டத்தான். (ஆ : 242)

நவநிதி - குபேரனது ஒன்பது வகை நிதிகள். அரமடந்தையர் கற்பகம் நவநிதி அமிர்தம். (பா : 495)

நவம் - 1. புதுமை. (ஆ : 242)
2. ஒன்பது. நாலாயிர நவ யோசனை. (யுத் : 1827)

நவமணி - ஒன்பது வகை இரத்தினங்கள். நவமணித் தடங்கள். (கி : 109) நவ மணி யணி. (க : 470)

நவமணிக்காழ் - ஒன்பது வகை இரத்தினங்களாலியன்ற ஆரம். நவ மணிக்காழும் முத்தும் மாலையும். (யுத் : 4343)

நவமை - புதுமை. நவமை நீங்கிய நற்றவன். (ஆ : 148)

நவமை நீங்கிய - பழமையாகிய. (ஆ : 148)

நவில் - 1. ஒத்த. கல் நவில் தோளினாய். (பா : 366)
2. பொருந்திய. தூ நவின்ற வேல். (யுத் : 1117)

நவில்வுறுதல் - ஆடுதல். நடந்திறன் நவில்வுறு நங்கைமார் முகம். (கி : 552)

நவிலல் (நவிலுதல்) - 1. சொல்லுதல். நங்கையர் மனத்தவம் நவிலற் பாலதோ. (சு : 401) கரும்பனைய செஞ் சொல் நவில் கன்னியர். (அ : 542) நவின்றான். (யுத் : 167)
2. பழகுதல். பயிலுதல். கோகிலம் நவில்வன இளையவர் குதலை. (பா : 80) நடந்திறம் நவில்வுறும் நங்கைமார். (கி : 552)
3. சாமர்த்திய மாகச் செய்தல். (உ. வி) (கி : 552)
4. பொருந்துதல். தூ நவின்ற வேல். (யுத் : 1177)
5. ஒலித்தல். களை நவில் அன்னம். (கி : 7)

நவை - 1. குற்றம். தீநெறி. நவையிற்றன்றால். (யுத் : 2652) நவையர். (யுத் : 3413) நவையின் நண்ணலார். (கி : 905)
2. துன்பம். உலகினி நவையின் றென்றனர். (பா : 289)
3. குறை. நங்கள் நவை தீர்க்கும் நாயகமே. (ஆ : 103) வேறோர் நவையிலை. (யுத் : 4099)
4. வருத்தம். பிரிவு செய்த நவையிலா நவையிலுள்ளம். (ஆ : 1042)
5. இகழ்ச்சி. நவையிலா நவை. (ஆ : 1042)
6. பொல்லாங்கு. நவையே செய்தானாலும். (சு : 1159)

நவைக் கண் நீங்கினான் - குற்றங்களினின்று நீங்கினவன் (விசுவாமித்திரன்) நடத்தன் மேயினான் நவைக் கண் நீங்கினான். (பா : 335)

நவையனைத்துந்துறந்தவன் - இராமன். (யுத் : 3857)

நவையிலா நவை - இகழ்ச்சியில்லாத பெரு வருத்தம். நவையிலா நவையினுள்ளத் தெண்ணியது அறிதல் தேற்றாம். (ஆ : 1042)

நவையின் நீங்கினான் - குற்றத்தினின்றும் நீங்கினவன். (நளன்) (யுத் : 627)

நழுவிச் செல்லுதல் - அகப்படாமல் நழுவிச் செல்லுதல். தழுவிக் கொள்ளக் கள்ளமனப் பேயவை தள்ளி நழுவிச் செல்லு மியல் பின காண்மின் நமரங்காள். (யுத் : 3554)

நள் - 1. விருப்பம். நள்ளுறு கதிரிலாப்பகல். (அ : 940)

2. **நடு. இடை.** கங்குலின் நள். (அ : 186) இருளின் நள்ளிற் போன நம்பி. (அ : 617) அல்லின் நள். (சு : 359)

3. **இரவு.** நள்ளிற் சாகிலன் பகலிடைச் சாகிலன். (யுத் : 146)

4. **நடுச்சாமம்.** கங்குல் நள்ளிற் செறிந்த இருட் பிழம்பு. (பா : 635)

5. **நடுப்பொழுது.** (சு : 356)

நள்ளடைதல் - நடு யாமத்தை எட்டுதல். நாழிகை கங்குலின் நள்ளடைந்த பின்றை. (அ : 186)

நள்ளா இருள் - விரும்பப்படாத இருள். எங்கும் நள்ளா இருள் வந்து. (ஆ : 697)

நள்ளாது - உடன்படாது. பொருந்தாது. நள்ளாதிந்த நானிலம். (அ : 211)

நள்ளார் - பகைவர். மின்படை செல்ல நள்ளார் பெரும்படை இரிந்து பேர. (யுத் : 1895)

நள்ளி - 1. நண்டுகள். இழைபடு பெடையொடும் எள்ளில் நள்ளி கள் புழையடைத் தொழுகின. (கி : 564)

2. **பெண் நண்டு.** நள்ளி வாங்கு கடையிள நவ்வியர். (கி:934)

நள்ளிரா - நள்ளென்னும் ஒலி படைத்த இரவு. நாளு நாளு நடந் தன நள்ளிரா நீளமெய்தி ஒருசிறை நின்றன. (யுத் : 1002)

நள்ளிற் சிறந்த இருட் பிழம்பு - நடுச் சாமத்தில் மிக்க இருள் தொகுதி. (பா : 635) [பா : பே]

நள்ளிற் செறிந்த இருட் பிழம்பு - நடுச் சாமத்தில் திரண்ட இருள் தொகுதி. (பா : 635)

நள்ளிற் போதல் - இரவின் நடுவிலே புகுதல். வயங்கிருளின் நள்ளிற் போன வரிசிலைக்கை நம்பி. (அ : 617)

நள்ளுதல் - பொருந்துதல். பற்றுக் கொள்ளுதல். எங்கும் நள்ளா இருள் வந்தகன் ஞாலம் விழுங்க லோடும். (ஆ : 699)

நள்ளுறப் பொருந்தல் - நடுப் பொழுது வந்தடைதல். அல்லும் நள்ளுறப் பொருந்தலும். (சு : 359)

நள்ளுறுகதிர் - எல்லோரும் விரும்புகின்ற சூரியன். நள்ளுறு கதிரிலாப் பகல். (அ : 940)

நள்ளுறுதல் . விரும்புதல். (அ : 940)

நள்ளென் றொலித்தல் - நடு விடங்களில் ஒலித்தல். தெள் ளொலிச் சிலம்புகள் சிலம்பு பொன் மணி நள் ளொலித்தில. (அ : 502)

நளன் - வானரப் படைத்தலைவன். சேது அணைகட்டியவன். நளன் வருகென்றனன் கவிக்கு நாயகன். (யுத் : 620)

நளி - 1. பெருமை. நளி நீர்ப் பொய்கை. (கி : 772) நளி மாதிர விதி. (பா : 162)

2. குளிர்ச்சி. நளிர் முகம் மதுவுட் டோன்ற. (பா : 1057)

நளி நீர் - பெருமை மிக்க நீர். (கி : 772)

நளி நீர் நிலங்கள் - பெரிய கடல் சூழ்ந்த பூமி. (அ : 60)

நளி நீர்ப்பண்ணை - குளிர்ந்த நீர் வளம் மிக்க மருத நிலம், (கி : 779) [பா : பே]

நளிமலர் - ஒளிர்கின்ற தாமரை மலர். நளி மலர் அரக்கர்கள் நால்வர். (யுத் : 358)

நளிமலர்க் கோயில் - சிறந்த மலர்களாற் புனையப்பட்ட அரண்மனை. அரக்கன் போய்த் தன் நளி மலர்க் கோயில் புக்கான். (யுத் : 2252)

நளிமலை யாக்கையன் - குளிர்ந்த மலை போன்ற உடம்பினையுடைய வன். விடணப் பெயர் நளி மலை யாக்கையன். (யுத் : 358) [பா : பே]

நளிமாமலை - பெரியதொரு மலை. நளிமாமலை மலைதாவினன் நடந் தான் கடற் கிடந்தான். (யுத் : 3377)

நளி முடி - பெரிய முடி. நம்பியை நளிமுடி சூட்டி. (அ : 48) சித்திர நளி கவித்தற்கு. (அ : 73)

நளிர் - 1. பெருமை. நளிர் மா மகுட கோடி. (ஆ : 574) நம்பியை நளிர் முடி சூட்டல். (அ : 181)

2. குளிர்ச்சி. நளிர் கடல் இலங்கை. (சு: 18) [பா: பே]
3. ஒளிர்கின்ற. நளிர் மணித் தேர்களும் நாஞ. (யுத்: 3270)

நளிர் கடல் - குளிர்ச்சியான கடல். (சு: 18) [பா: பே]

நளிர் கடல் நாடு - குளிர்ந்த கடல் சூழ்ந்த நாடு. நெய்தல் நிலம். (அண்) நாடு நாட்டு நளிர் கடல் நாட்டிலோர். (யுத்: 682)

நளிர் கடல் நிலம் - குளிர்ந்த கடல் சூழ்ந்த நிலம். நளிர் கடல் நிலமெல்லாம் உன்னுடையது. (அ: 685)

நளிர் கடல் வளாகவைப்பு - குளிர்ந்த கடலாற் சூழப்பட்ட இடமான பூமி. நளிர் கடல் வளாக வைப்பிற் காவன் மூன்றுலக மோதுங் கடவுண் மாமரத்தைக் கண்டான். (யுத்: 2703)

நளிர்தல் - செறிதல். ஓங்கிய பிணப் பேர் நளிர் மாமலை. (யுத்: 3377)

நளிர் நிலா - ஒள்ளிய நிலவு. நாணிலாம் நகையில் நின்ற நளிர் நிலாத் தவழ்ந்த தென்கோ. (பா: 1209)

நளிர் புனல் - தண்ணிய நீர்வளம். நளிர் புனற் கேகய நாடு நண்ணிஞன். (பா: 1397)

நளிர் புனற் கங்கையாறு - குளிர்ந்த நீரையுடைய கங்கையாறு. நளிர்புனற் கங்கையாற்றில் நண்டெனச் செல்லு நாவாய். (அ: 1052)

நளிர் மணி - ஒலிக்கின்ற மணிகள். நளிர் மணித் தேர்களும் நாஞ. (யுத்: 3270)

நளிர் மலர் - ஒளிர்கின்ற தாமரை மலர். நளிர் மலர்க் கையினன். (யுத்: 358)

நளிர் வல்லி - குளிர்ந்த வல்லியென்னும் கொடிகள். நானிற நளிர் வல்லிக்கொடி நவை இலபல்கி. (அ: 707)

நளிரடி - குளிர்ந்த அடியினையுடைய சீதை. நன்ஞளும் நளின நாணும் நளிரடி நுதலை நாடி. (கி: 799)

நளில் - நள்ளில். நடுவிடத்தில். நளில்தீர்த்த நாகபுரம். (யுத்: 3568)

நளினக்காடு - தாமரைக்காடு. வாரிக்கடல் பூத்த நளினக் காடு. (யுத்: 3550)

நளினக்கை - தாமரைமலர் போன்ற கை. (சு: 93)

நளின நாட்டத்தான் - தாமரை மலர் போலுங் கண்களை யுடையவன். நவஞ் செயத் தகைய இந் நளின நாட்டத்தான். (ஆ : 242)

நளினப்பள்ளி - தாமரை மலராகிய படுக்கை. நாளங்கொள் நளினப் பள்ளி. (ஆ : 228)

நளின பாதம் – தாமரை மலர் போன்ற திருவடிகள். ஐயத்தாள் நளின பாதம் வணங்கலும் குழைந்து வாழ்த்தி. (அ : 298)

நளினம் - தாமரை. நளினத்து நீ தந்த நான்முகனர். (அ : 102) நளினம் நாணும் நளிரடி நுதலே நாடி. (கி . 799)

நளினம் போற்கையான் - தாமரை மலர் போன்ற கையை யுடைய இராமன். நளினம் போற் கையான் இன்றென் கண்ணெதிர் நின்றும் கழிவானேல். (அ . 218)

நற்கணர்-நல்லறிவுடையவர். நற்கணர் நல்லறம் துறந்த நாளினும். (சு . 458)

நற்கணர் நல்லறம் - நல்லறிவுடையார் மேற்கொள்ளும் இறைவனடி யடைதல் (சரணகதி) ஆகிய நல்லறம். (அண்) நல்லவழியிற் பொருந்திய சிறந்த தருமம். (வை. மு) (சு : 458)

நற்காதை - நல்லதாகிய காதை. இராமாயணம்- இனைய நற்காதை முற்றும் எழுதினோர். (பாயி : 22)

நற்குணக் கடல் ஆடுதல் - நல்ல குணமாகிய கடலில் முழுகித் திளைத்தல். அவர் நற்குணக் கடலாடுதல் நன்றரோ. (பா : 2)

நற்குணம் - நல்ல குணம். நற்குணக் கடல் ஆடுதல். (பா : 2)

நற்புதல்வன் - நன்மகன். கானகம்பற்றி நற்புதல்வன் காயுண. (அ: 574)

நற்புறம் - சிறந்த மேனி. நற்புறக் கோதை. (யுத்: 1074)

நற்பெருங் கல்விச் செல்வம் - சிறந்த பெரிய கல்விச் செல்வம். (யுத்: 2778)

நற்பெருந் தவத்தளாய நங்கை - நல்ல பெரிய கற்பொழுக்கமாகிய தவத்தையுடைய சீதாபிராட்டி. (சு: 1308)

நற்பெற்ற – நல் பெற்ற, நன்மை பெற்ற. நற்பெற்ற வேள்வி நவை நீங்க நீ இயற்றி. (அ: 1126)

நற்பொருள் - 1. சிறந்த விஷயம். நற்பொருள்தரு முனிவருந் தொடரப் போயினன். (பா: 232)

2. நல்ல உபதேசம். என்னொரு நற் பொருள் உணர்த்தினன் என்று நாட்டினன். (யுத்: 362)

நற்றந்தை - பெற்ற தந்தை. நற்றந்தை நீ தனித் தாயு நீ. (பா: 334)

நற்றவப் பள்ளி - நல்ல தவஞ் செய்வார் உறையும் சாலை. நற்றவப் பள்ளி வாயிலை நண்ணினன். (அ: 654)

நற்றவம் - நல்ல தவம். நற்றவமனைத்து மோர் நவையிலா வுருப் பெற்றிவணடைந்தெனப் பிறங்குவான் தனை. (பா: 251)

நற்றவர் - சிறந்த தவ முனிவர். நற்றவர் அனுச்சை கொடு நன் மனை புகுந்தான். (பா: 1243)

நற்றவன் - சிறந்த தவ முனிவன். கோசிகன். உற்றபகல் நற்றவனுரைத்தான். (பா: 1242)

நற்றாய் - 1. அன்புமிக்க தாய். ஈன்ற நற்றாயெனக் கருது பேரருளினன். (பா: 1142)

2. பெற்றதாய். நற்றாயினும் நல்லன். (சு: 57)

நற்றாயம் - சிறந்த பிறப்புரிமை. (யுத்: 410)

நற்றிரைக்கடல் - பெரிய அலைகளையுடைய கடல். (சு: 762)

நற்றுணைவர் - சிறந்த தோழர்கள். (யுத்: 341)

நற்றெரிதல் - நன்றாக உணர்தல். நெடுநாளில் திருந்தின தவ முற்றிற்றென்று நற்றெரிகின்றான். (அ. 709) (பா: பே)

நற்றொடி - சிறந்த தொடியென்னும் வளையல். நற்றொடிச் சீதையை நினைதொறும் உயிர்த்துயிர் தேய்வானை. (சு: 303)

நற - நறா. நறவு. கள். வெண்ணிற நற நிறை வெள்ள மென்னவும். (பா: 1047)

நறத்துறையமுது - தேனிடத்தே வதிகின்ற முற்றிய சிறந்த அமுதம். நறத்துறை முதிர்ச்சியுறு நல்லமிழ்து பில்குற் றறத்தின் விளைவொத்து. (பா: 1213)

நறவக் குருதிக்கடல் - மணமுள்ள குருதிக்கடல். நறவக் குருதிக் கடல் வீழ் நகைவாள் சுற வொத்தன. (யுத்: 3459)

நறவம் - 1. கள். தேன். கோதைகள் சொரிவன குளிரிள நறவம். (பா: 82)

2. மணம். நறவக் குருதிக்கடல். (யுத் : 3459)

நறவு - 1. கள். உவகையின் நறவு. (கி : 178) உவகை மாநற வுண்டோர் சிலர். (பா : 194)

2. தேன். பசை நறவின் வினை கட்டியின் மதுரித் தெழு கிளவி. (அ : 622)

3. தேன்கூடு. (இலக்கணை) தேன்குலங் கலங்கிய நறவிற் சென்ற வால். (யுத் : 2749) ஈயொத்தன நிருதக்குலம் நற வொத்தனன் இறைவன். (யுத் : 3368)

நறியன - நல்ல. (அண்) மிகவும் சிறந்தன. (வை. மு) நறியன கனியுங் காயுங் நறவிவை தரவல்லேன். (அ : 681)

நறியன உறுபதம் - நறுமணமும் சுவையுமுடைய மிக்க உணவுப் பண்டங்கள். நறியன உறுபதம் நுங்கிய ஒருவன். (ஆ : 904)

நறுந்தாழ் – மறுமணம் மிக்குள்ள. பரிமளம் தங்கிய நறுந்தாழ் இளங்கொழுந்தை. (யுத் : 294)

நறும்புனல் - நறுமை வாய்ந்த புனல். நல்ல நீர். கயந்தருநறும் புனல் கையில் திண்டலும். (பா : 453) (ஆ : 1093) (அ : 426)

நறும்பூ - மணமுள்ள பூக்கள். நறும் பூவும் வேண்டுமல்ல எனத் தெய்வ வெறியே கமழும் நறுங்குஞ்சி. (சு : 546)

நறுமலர் - நறுமணம் வாய்ந்த மலர். குசும்பையின் நறுமலர்ச் சுண்ணக் குப்பை. (யுத் : 1765)

நறுமுகை - நறு மணமுள்ள அரும்புகள். சேடுறு நறு முகை விரிந்த செங்கிடை. (கி : 557)

நறு மேனி - இனிதாகத் தோன்றுகின்ற மேனி. (வை.மு.) நல்ல மேனி. (அண்) மாந்தளிர் நறுமேனி மங்கை. (அ : 694)

நறுமை - 1. நன்மை. கயந்தறு நறும் புனல். (பா : 453)

2. நன் மணம். நறு வெறி வயங்கி. (யுத் : 2558)

நறு விரை - நல்ல வாசனை. நான நாண்மலர்க் கற்பக நறு விரை நான்ற பானம். (சு : 100)

நறு வெறி - நறு மணம். நறு வெறி வயங்கி. (யுத் : 2558)

நறை - 1. தேன். நறை நெடுங் கடல். (யுத் : 671) மறையவர் கை நறை மலரும். (பா : 714)

2. நன் மணம். நான நாண் மலர் நறையகில். (அ : 755) நறைக் குழல். (பா : 778)

3. கள். மது. பருகினேன் நறை. (அ : 902)

4. ஒரு நறு மணக் கொடி. சிந்து வாரம் திரு நறை தேக்ககில். (கி : 584)

நறைக் கடல் - தேன் கடல். நறை நெடுங் கடல் ஒத்தன நாமநீர். (யுத் : 671)

நறைக்களி - கள்ளுண்டகளிப்பு. துயில் நறைக்களி பொருந்தினர். (சு : 359)

நறைச் சாடி - கட் பானை. தண்ணறைச் சாடியுட்டன் வாட் கணின் நிழலைக் கண்டாள். (பா . 1059)

நறைச்சுனை - தேன் ஊற்று. பூ நறைச் சுனைமடுத் துண்டிசை முரலுந் தும்பி. (ஆ : 840)

நறைத்தரு - கற்பக விருட்சம். நறைத்தருவுடைய கோனும் நான் முகக் கடவுள் தானும். (பா : 681)

நறைத்தருவுடைய கோன் - மணமுள்ள கற்பகத் தருவையுடைய இந்திரன். (பா : 681)

நறை நெடுங் கடல் - நெடிய தேன் கடல், (யுத் : 671)

நறை பாய்வன மலர் - தேனொழுகப் பெற்றனவாகிய மலர். நறை பாய்வன மலர் வாயளிபடர. (அ : 625)

நறைமதம் - நல்ல மணமுள்ள மதநீர். நறைமத அருவி. (யுத்:1107)

நறையலங்கல் - தேன் நிரம்பிய மலர் மாலை. குஞ்சியைச் சூழ்ந்த நறையலங்கல் வண்டார்த்திட. (அ : 51)

நறைவிரி கடுக்கை - வாசனையோடு மலர்ந்த கொன்றை. நறைவிரி கடுக்கை மென்பூ. (கி : 474)

நறைவிரி கமலம் - தேனோடு மலர்ந்திருக்கின்ற தாமரை மலர். நறைவிரி கமலத் தாளின் நல்கிய கங்கையைத்தந்து. (அ : 67)

நறைவிரி புறவம் - மணம் வீசப்பட்ட காடுகள். நந்தனவன மல நறை விரிபுறவம். (பா : 79)

நன்கு - நன்மை. நல்ல. நன்கு ஏடகங்கள். (யுத்:3380) நின்னருள் இன்றுதானுளதேல் அரிதேதிந்த வென்றி வீரற்கு. (பா : 652)

நன்பறை - மங்கல முரசம். வள்ளுவர் யானைமிசை நன்பறை யறைந்தனர். (பா : 294)

நன்பால் - நன்மையுடன். (கலா) **பால் - இடம். கருடனுடைய வெண் கழுத்துக்கு உவமை யாகுபெயர்.** (வெ. ப) நன்பால் விளங்கு மணி கோடியோடு. (யுத் : 2199)

நன்மகன் - திருமகன். சிறந்த மகன். கன்னியருந்ததி காரிகை காணு நன்மக னுக்கிவள் நல்லணி என்ருர். (பா : 1340) (அ : 217) (யுத் : 1946) (யுத் : 3167)

நன் மணி - நல்ல மணி. சிறந்த ரத்தினங்கள். நன் மணிப் பொன்னெடுந் தேரொடும் பவனி போனவன். (அ : 480) புதையும் நன்மணிப் பொன்னுருள் அச்சொடும் சிதைய. (யுத் : 2079)

நன்மத்தம் - நல்ல ஊமத்தம் பூ. நன்மத்த நாகந்தலை சூடிய நம் பனே போல். (சு : 573)

நன்மதன் – நல்ல வலிமை. உலகேழின் நன்மதன் அழிப்ப ரொரிமைப்பின் நனிவில்லால். (ஆ : 611)

நன்மதிக் கிழவர் - நல்ல அறிவுடைய தோழர். நன்மதிக் கிழவர் தம்மை நோக்கிய ஞான மூர்த்தி. (யுத் : 4241)

நன்மதியோர் - நல்லறிவினையுடைய பெரியோர். (ஆ : 1077)

நன்மலை - நல்லமலை. கனிந்த நீலத்தின் நன்மலை. (ஆ : 239)

நன்மனை - அழகிய அரண்மனை. நற்றவர் அனுச்சை கொடு நன் மனை புகுந்தான். (பா : 1243)

நன் முறை - 1. நல்ல முகமன். (கலா)
2. ஒழுக்கநெறி. (அண்) உரைதரு மன்பால் தொக்க நன்முறை கூறி. (அ : 711)

நன்மை - 1. ஆசி மொழி. ஞால நாயகன்தன் தேவி சொல்லினள் நன்மை என்ருன். (சு : 1253)
2. உபகாரம். தாயினும் உயிர்க்கு நல்லான். (யுத் : 4236)
3. உத்தமம். எய்திய நல்விருந்து. (ஆ : 931)
4. மிகுதி. பெரிது. தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி தோன்றினள். (பா. 766)
5. சிறப்பு. விராவு நல்லமர் விளைக்குதும். (யுத் : 1452)

நன்ருகுக - அங்கீகாரக் குறிப்பு. நன்ருகுக என்று. (யுத் : 1753)

நன்ருய்த்து - நல்லதாயிற்று. காணு தொழிந்தே னென்ருல் நன்ருய்த் தன்ரே கருமம் என்ருன். (அ : 361) [பா : பே]

நன்றி - 1. நல்லது. நன்மை பயப்பது. நன்றி ஈதென்று கொண்டால் நயத்தினை நயந்து. (யுத் : 1253)
2. நல்லசெயல். படப் பொருவதன்றி இவர் செய்வதொரு நன்றியுளதோ. (யுத் : 3397)

நன்றிது - நல்லது. நன்றிது நன்றெனு நயந்த சிந்தையாள். (சு: 365)

நன்றியை மறந்திடும் நயமில் நாவினேன் - பிறர் செய்த நன்றியை மறந்து பேசும் நன்மையில்லாத நாவினையுடையோன். (அ: 897)

நன்று - 1. பெரிது. நன்றே நம்பி குடிவாழ்க்கை. (யுத்: 1) நன்ருெளிர் முகத்தனுகி. (பா: 1383)
2. அங்கீகார வார்த்தை. அத்த நன்றென அன்பினே டறிவிப்பதானுர். (அ: 76)
3. பாராட்டு. நன்று சொல்லினை. (அ: 181)
4. எள்ளற் பொருட்டு. எனையோ தயரதன்தன் மக்கள் நலிகிற்பர் இது நன்று வலியன்ரே. (ஆ: 758)
5. வியப்புக்குறி. ஒரு விலான் நன்றி நம்படை நாற்பது வெள் ளமும் கொன்று நின்றபடி எனக் கூறினுன். (யுத்: 2109)
6. நன்ருக. கடைப்பிடி நன்றென. (அ: 103)

நன்று கேட்டல் - ஐயந் திரிபறக் கேட்டல். நன்று கேட்டு கடைப் பிடி நன்றென. (அ: 103)

நன்று சொல்லுதல் - 1. நன்ருகச் சொல்லுதல். அங்கீகார வார்த்தை. நன்று சொல்லினை. (அ : 181)
2. நல்லதைச் சொல்லுதல். நன்று சொல்லினை. (அ : 48)

நன்று நன்று - 1. இகழ்ச்சிக் குறிப்பு. நன்று நன்றுன் கருணை யென்னு நெருப்பு நக நக்கான். (சு : 855) நன்று நன்றென் வலியென நாணுமால். (ஆ: 1053)
2. உவகைக் குறிப்பு - அங்கீகாரக் குறிப்பு. நன்று நன்று நின் னிலையென அருளிறை நயந்தான். (ஆ: 525). நன்று நன்று இவ்வுலகுடை நாயகன் தன் திருத்தேவி தவத் தொழில். (சு: 633) (கி: 157) (யுத். 412)

3. கோபக் குறிப்பு. பொங்கி நன்று நன்றென்ன நக்கு. (யுத்:257)

நன்று வரவு - வரவு நன்ருயிருந்தது. நன்று வரவென்று பல நல்லுரை பகர்ந்தான். (ஆ: 164)

நன்றெனல் - அங்கீகார வார்த்தை. நன்றென உவந்து வீரன் நான்முகன் படையை வாங்கி. (யுத் : 1882)

நன்னகர் - நல்ல பாடி வீடு. (யுத் : 706)

நன்னகரம் - நல்ல நகரம். அவன் நன்னகரத்தன. (ஆ : 858)

நன்னதி - நல்ல ஆறுகள். (ஆ : 177)

நன்னலக்கடல் - நல்ல அழகாகிய கடல். (ஆ : 84)

நன்னலம் - 1. பேரழகு. சிறந்த அழகு. பெண்ணின் நன்னலம் பெற்றதுண்டே கொலோ. (பா : 709) (பா : 766) கரையறு நன்னலக்கடல். (ஆ : 840)
2. பெண்மைக் குணங்கள். உயங்கு முணர்வும் நன்னலமும் உருகிச் சோர்வாள். (பா : 627)

நன்னலமாக வாங்குதல் - அழகு அமையச் செய்தல். நான் முகன் புனைந்த பொற்பின் நன்னலமாக வாங்கி. (யுத் : 706)

நன்ஞடு - நல்ல உலகம். ஒன்ரு நன்ஞட்டுய்க்குவர். (ஆ : 595)

நன்ஞள் காணுதல் - இன்பந்தருங் காலத்தைக் காணுதல். நல்ல காலம் உண்டாதல். சின்ஞள் நீ இடர் தீராதாய் இன்ஞ வைகலின் எல்லோரும் நன்ஞள் காணுதல் நன்றன்ரே. (சு:658)

நன்ஞன் மறையான் - சிறந்த நான்கு வேதங்களேயு முணர்ந்த முனிவன். வான்மீக னென்னும் நன்ஞன் மறையான் அது நாற்பது வெள்ள மென்னச் சொன்ஞன். (யுத் : 1976)

நன்னிதி - நல் நிதி. நல்ல பொருள்கள். நன்னிதி முதலிய அளப்பரும் வெறுக்கை. (யுத் : 3629)

நன்னிதிக்குவை - நல்ல பொருட் குவியல். நன்னிதிக் குவையும் நனி நல்கி. (அ : 92)

நன்னிறம் தொலேய தாக்குவது - ஸாவர்ணிய கரணி. போயின நல்லுயிர் நல்குவ தொன்று நன்னிறந் தொலேய தாக்குவ தொன்று தொலேயோய். (யுத் : 2745)

நன்னீர் - 1. நல்ல நீர். நன்னீர்ச்சிறை. (பா : 689) கண்ணகல் நன்னீர்க் கரை. (கி : 891)
2. மிக்க நீர். வேலை நன்னீர். (சு : 21)
3. புண்ணிய நீர். குளிர் நன்னீர்...... தடக்கை ஈந்தான். (பா : 1331)

நன்னுதல் - 1. அழகிய நெற்றி. நன்னுதன் மகளிர். (ஆ : 268)
2. அழகிய நெற்றியையுடையவள். சீதாபிராட்டி. (யுத் : 4206) (ஆ : 914)

நன்னுதலவள் - நல்ல நெற்றியை யுடையவள். நன்னுதலவள் நின் கேள். (அ : 685)

நன்னுதலார் - நல்ல நெற்றியை யுடையவர். தேவியர். நன்னு தலார் மூவருக்கும் நாலு கூறிட்டளித்தான். (பா : 739)

நன்னுதலி - நல்ல நுதலை யுடையவள். சீதாபிராட்டி. திறந் தெரிவ தென்னைகொல் இந் நன்னுதலி செய்கை. (சு : 553)

நன் னெடுங்கவிஞன் - நல்ல பெரிய கவிஞன். ஆற்றல் நன்னெடுங் கவிஞன். (யுத் : 1011)

நன் னெடுங் கானம் - நல்ல நெடிய காடு. (கி : 71)

நன் னெடுங் கூந்தல் - அழகிய நீண்ட கூந்தலையுடைய சீதாபிராட்டி. நன்னெடுங் கூந்தலை நோக்கி நாயகன் என்னெடும் பிரிவினுல் துஞ்சினன் என்ருன். (அ : 1150)

நன்னெடுஞ் செல்வம் - சிறந்த பெருஞ் செல்வங்கள். இன்ன தோர் தன்மை யனிகழ்வுற் றெய்திய நன்னெடுஞ்செல்வமும் நாளும் நாமற மன்னுயி ரிழத்தி என் றிறைஞ்சி வாழ்த்தினேன். (யுத் : 208)

நன்னெடு நீறு - நல்ல மிகுதியான திரு நீறு. (யுத் : 1551)

நன்னெறி - 1. புண்ணியச் செயல். கடையுற நன்னெறி காண் கிலாதவர். (பா : 1113)
2. ஆகாயம். [ஸத்பதம்] தூசு வீசினுர் நன்னெறி துன்னினுர். (யுத் : 2082)
3. அற நெறி. சன்மார்க்கம். திறத்துறை நன்னெறி திறம்ப லுண் டெனின். (கி : 544) (யுத் : 4332)

4. **நல்வழி.** வெவ்வழி விலக்கி நன்னெறியை மேவினுன் (யுத் : 474)

நன்னெறி நூல் - ஒழுகலாறு கூறும் சாத்திரம். முன்னிய நன்னெறி நூலவர் முன் வந்து. (பா : 446)

நன்னெறி விலக்கும் பொறி - நன்னெறி செல்லும் ஒருவனை அந்நெறியிலிருந்து விலக்கிப் புன்னெறி செலுத்தும் இந்திரியங்கள். நன்னெறி விலக்கும் பொறி என எறியும் கராத்தது. (பா:106)

நன - அகன்ற. நனந்தலை அனந்தன். (யுத் : 143)

நனந்தலை - அகன்ற இடம். இடப் பரப்பு. நடுவிடம். (அண்) ஆயிர நனந்தலை அனந்தன். (யுத் : 143) நனந்தலைப கொங்கைகள். (ஆ : 601) நனந்தலை அமளி. (ஆ : 683)

நனந்தலை அமளி - பெரிய படுக்கை. (ஆ : 683)

நனம் - இட மகன்ற. பெரிய நனந்தலை அமளியிற் றுயிலும் நங்கைமார். (ஆ : 683)

நனி - 1. மிகவும். மிகுதி. மிக்க. தாமரைப்பூ நனி முகிழ்த்தன. (அ : 770) நனி முதல் வேதங்கள். (யுத் : 366)

2. **நன்கு.** நனி வந்து காண. (யுத் : 1134) ஓதாது ஓதி நனி உணர்ந்தான். (யுத் : 305) [பா : பே]

3. **பல.** நல்லன நிமித்தங்கள் நனி நிகழ்ந்தன. (யுத் : 405)

நனி தவ - மிகமிக. நனிதவ உயர்ந்தன பனிதோய் மால்வரைக் குலத்தில் யாவையுமில்லை. (பா. 100)

நனி திண்ணம் - மிகவும் நிச்சயம். தீதாய் விளைதல் நனி திண்ணம். (யு : 30)

நனி நடத்தல் - அடியோடு போய்விடுதல். நந்தினர் தம்மொடு நனி நடந்ததோ. (யுத் : 51)

நனி நெடுந் தூண் - மிகப்பெரிய தூண். நாயக மணியிற் செய்த நனி நெடுந்தூணின் நாப்பண். (கி : 664)

நனி மாதவம் - மிக்க பெருந்தவம். நனி மாதவ முடையாய். (பா : 1369)

நனி முதல் வேதம் - மிக்க முதன்மை பெற்ற வேதம். நனிமுதல் வேதங்கள் நான்கும். (யுத் : 366)

நனை - 1. பூ, அரும்பு, மொட்டு. நனைவரும் கொம்பனார். (சு: 177)
2. தேன். நறுங் கோதை யொரு நனை சின்னமும் நீத்த நல்லார். (பா : 986)

நனை சின்னம் - தேன் கசிந்த விடுதிப் பூ. நறுங் கோதை யோடு நனை சின்னமும் நீத்த நல்லார். (பா : 986)

நனை வரு - மொட்டுகள் அரும்புகின்ற. நனைவரு கற்பகம். (பா : 318)

நா

நா - 1. நடு. இலைகளின் நடுவே அமைந்த ஈர்க்கு. அடை நாக்கரிந்து. (சு : 1201)
2. நாக்கு. பாவங்கள் சிகைக் கொழுந்திது வெனத் திருகு நாவினன். (ஆ : 1152) நாவுறக் குழறிட. (கி : 948)

நா அம்பு - சொல்லம்பு. நா அம்பா லென் ஆருயி ருண்பாய். (அ : 223)

நாக்கரிதல் - நாக்கை அறுத்தல். ஆக்கரிய மூக்குங்கை அரி யுண்டாள் என்றுரை நாக்கரியுந் தயமுகனார். (ஆ : 349)

நாக்கு - நா. நாக்கரியும் தயமுகனார். (ஆ : 349)

நாக அடுக்கல் - பாம்புகளைக் கொண்ட அடுக்கல். (யுத் : 3549)

நாக உயிர்ப்பு - நாகம் போன்று பெருமூச்சு விடுதல். வெந்நாக உயிர்ப்பினன். (யுத் : 2355)

நாகக் கணை - நாகம் போலும் வடிவமுள்ள அம்பு விசேடம். ஆயிர கோடி நாகக்கணை தொடுத் தரக்கன் எய்தான். (யுத் : 2058)

நாகக்கள் - நாகவிடம் போன்று கொடுமையுடைய கள். நச்செனக் கொடிய நாகக் கள்ளொடு குருதி நக்கி. (சு : 284)

நாகக் கன்று - யானைக்கன்று. நாகக்கன்று வளர் தடஞ் சாரல் மகேந்திரம். (கி : 774)

நாகக் குருளை - நாகப் பாம்பின் குட்டி. கூர்வா ளெயிற்று வெங் குருளை நாகம். (கி : 502)

நாகக் குன்றம் - யானைகளாகிய மலைகள். (யுத் : 3448)

நாகச் சிரஞ் செய் நூபுரம் - பாம்பின் தலைபோற் செய்யப்பட்ட நூபுரம் என்ற அணி. பாத சாலகமும் நாகச் சிரஞ் செய் நூபுரமும் வண்டும். (பா : 1223)

நாகச் சிரம் - பாம்பின் தலை. (பா : 1223)

நாகணைத் துயில்நீத்தான் - ஆதி சேஷ சயனத்தில் உறங்குவதை விட்டு அயோத்தியின் வந்து திரு அவதரித்தவன். (யுத் : 4350)

நாகணைத் துயிலில் தீர்த்தான் - பாம்பணையிலே பள்ளி கொண்டு துயில்கின்ற நிலையினின்று நீங்கியவன். (யுத் : 4350) [பா : பே]

நாகணைப் பள்ளிநீங்கினன் - பாம்புப் படுக்கையிற் படுத்தலை நீங்கி அவதரித்த திருமாலாகிய இராமன். படஞ்செய் நாகணைப் பள்ளி நீங்கினன். (அ : 1159)

நாகணைப் பள்ளியான் - பாம்புப் படுக்கையிற் பள்ளி கொண்டவனாகிய திருமால். பண்டை நாகணைப் பள்ளியானுந்தியிற் பயந்த அண்டம். (சு : 119) [பா : பே]

நாகணை வள்ளல் - ஆதி சேடனாகிய பாம்பணையில் பள்ளி கொண்டுள்ள வள்ளலாகிய அரங்கநாதன். நண்ணி நாகணை வள்ளலை. (அ : 120)

நாகத்தனி ஒரு வில்லி - (பொன்) மலை யாகிய ஒப்பற்ற வில்லை யுடைய சிவபெருமான். (ஆ : 464)

நாக நம்பன் - யானை போன்ற கம்பீரனான இராமபிரான். நாக நம்பன் இளங்கிளை. (சு : 6830)

நாகப் போது - சுர புன்னைமலர். கோடுலாம் நாகப் போதோடு இலவங்க மலருங் கூட்டி. (பா : 943)

நாகபுரம் . பாதாள லோகம். உலகங் கீண்டு நளிறீர்த்த நாகபுரம் புக் கிழிந்த பகழி. (யுத் : 3568)

நாகம் - 1. பாம்பு. வெங்கண் நாகக் கரத்தினன். (அ : 635) மானும் வேழமும் நாகமும். (பா : 952)

2. மலை. இந் நாக மன்னன் எறிகாலென ஏகும் வேலை. (சு : 40) (யுத் : 1220)

3. புன்னை. சுர புன்னை. மாதர் தோள் மானும் வேழமும் நாகமும். (பா : 952)

4. பாதாள லோகம். நாக மொன் றகன் கிடங்கு. (பா : 107) நாக நாடுக நானில நாடுக. (கி : 749)
5. ஆண் யானை. யானை. பொன் நாகமும் நாகமும் நாண நடந்தான். (பா : 781) வெங்கண் நாகக் கரத்தினன் (அ:63)
6. மேலுலகம். வான். (வை. மு) யானை. (அண்) நாகமொன்றிய நல்வரை. (சு : 683)
7. இராகு கேதுக்கள். காரோடு நிறக் கதநாக மன்னுன். (யுத் : 2327)

நாகம் மனன் - நாகம் அனன். (அன்னன்) யானையை ஒத்தவன். தயரதன். நாகம் மனன் இடையிங்குளதிடையூறென நடவான். (பா : 1353)

நாகம் வாழ் மூக்கு - பாம்பு உறைகின்ற மூக்குத் துவாரம். புற்றுப் போன்றுள்ள மூக்குத் துவாரம். நாக்கினூடும் செவியினும் நாகம் வாழ்மூக்கினூடும் சொரிந்தன மூளையே. (யுத் : 983)

நாகமேயனைய நம்ப - (பகைவர்மேற்) பாம்புபோற் சீறுந் தன்மை யுள்ளநம்பனே. (யுத் : 2132)

நாகமேழு - மேலேழுலகம். ஞால மேழு நாக மேழு மானுதன் வென்றி வில்லை வேத நாதன் நா ணெறிந்த வேலைவாய். (யுத் : 33 85)

நாகர் - 1. தேவர்கள். நொய்தி னுரமுதங் கொண்ட நோன் மையே நுவலும் நாகர். (சு : 22) (யுத் : 109)
2. படமும் வாலுமுடையராய் மனித உருவமும் தெய்வப் பிறப்புமான தொரு சர்ப்ப ஜாதியார். எற் படர் நாகர் தம் இருக்கை. (கி : 6)

நாகர்தம் நாடு – அமராவதி. இம்பர்த் தோன்று நாகர்தம் நாட்டின் எழில் காட்டி. (பா : 585)

நாகர் நாடு - நாகருலகம். ஆழ்ந்த ஒப்புறு நாகர் நாடும். (சு: 522)

நாகர் பாவை - தெய்வப் பெண். மாடத்தும்பர் ஓர் நாகர் பாவை. (யுத் : 798)

நாகர் புரம் - நாக லோகம். பூதல வரைப்பின் நாகர் புரத்தின் அப் புறத்த தாக. (யுத் : 774)

நாகர் வைப்பு - பாதாளம். நாகர் வைப்பும் இருள்கெடச் சென்றன இரவி போல்வன. (யுத் : 583)

நாகரிகம் - கண்ணேட்டம். நாக்கரியுந் தயமுகனுர் நாகரிக ரல்லாமை. (ஆ : 349)

நாகரிகர் - கண்ணேட்ட முடையவர். (ஆ : 349)

நாகருலகு - 1. சர்ப்ப ஜாதியாரது லோகமாகிய பாதாளம். பேருழைய நாகருலகிற் பிறிதின் வானின். (ஆ . 260)
2. தேவர்கள் வாழும் மேலுலகம். (அண்) நாகாலயங்களொடு நாகருலகுந் தம் பாகார் மருங்கு துயில் வென்ன உயர் பண்ப. (சு : 97)

நாக லோகம் - பாதாள லோகம். (வை.மு.) நெடு நாக லோகம். (யுத் : 2018)

நாகவுயிர்ப்பு - நாகம் போற் பெருமூச்சு விடுதல். வெந்நாக வுயிர்ப் பினன். (யுத் : 2355)

நாகாலயங்கள் – தேவர்கள் வாழுமிடம். (வை. மு.) **தேவர்கள் வாழும் மாளிகைகள்.** (கலா) **நாகர்கள் வாழும் இடங்களை யுடைய கீழுலகு.** (அண்) நாகாலயங்களொடு, நாகருலகும் (சு : 97)

நாகியர் - நாகர் மகளிர். ஏனை நாகியர் அருநடக் கிரியை ஆய்ந் திருப்பர். (சு : 121) நஞ்சும் அஞ்சும் விழி நாகியர். (யுத் : 817)

நாகிளங் கமுகு - மிகவும் இளைய கமுகு மரம். நாகிளங் கமுகின் வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல். (யுத் : 1215)

நாகிளமை - மிக்க இளமை. நாகிள அன்னம். (பா : 1038)

நாகு - 1. இளமை. நணைச் சிலம்புவ நாகிள வண்டு. (பா : 62)
2. பெண். எருமை நாகீன்ற கன்று. (பா : 48)
3. கன்று. இளங்கன்று. மேதியின் நாகு சேர் நருமதை. (கி : 824)

நாங்கள் - நா மெல்லாம். அன்னவர்க்கேசரண் நாங்களே. (பா:1)

நாசம் - கேடு. அழிவு. நாசம் வந்துற்ற போது நன்மையுந் தீமையன்றே. (ஆ : 762) நாசம் வத்துற்றபோது நல்லதோர் பகையைப் பெற்றேன். (யுத் : 1249)

நாசி - மூக்கு. நாஸிகா என்பதன் திரிபு. மருந்தனைய தங்கை மணி நாசி. (ஆ : 617) (யுத் : 1444) நாசியர். (அ : 814)

நாசி புதைத்த கை - பிராணுயாமஞ் செய்து பழகிய கை. நாசி புதைத்த கை நாற்றலர். (பா : 858)

நாஞ்சில் - 1. ஏப்புழை. ஒரு மதிலுறுப்பு. கடி பொழில் கனக நாஞ்சில் மண்டல மதிலும். (சு : 3) (யுத் : 994)
2. கலப்பை போன்ற ஒரு போர்க் கருவி. நாம வேல் உலக்கை வாள் நாஞ்சில். (யுத் : 1323) (யுத் : 1621)
3. கோட்டை.

நாட் கொள்ளுதல் - நல்ல நாள் பார்த்துத் தொடங்குதல். இராவணன் மணியுடை மகுடத் தலை துமித்தற்கு நாட்கொண்டதொத்த தோர் தன்மை. (ஆ : 320)

நாட் செய் கோலம் - நாட் காலையில் செய்து கொள்ளும் அலங்காரம். நாட்செய் கோலத்தின் துறையற அஞ்சனந் துறந்த நாட்டங்கள்· (அ : 972)

நாட் செய்தல் - அன்று மலர்தல். நாட் செய்த கமலத்தண்ணல். (ஆ : 1021)

நாட்டங்கள் தீயுக நோக்குதல் - கண்கள் கோபாக்கினி சிந்தும்படி பார்த்தல். மிடலுள் நாட்டங்கள் தியுக நோக்கினன். (ஆ : 961)

நாட்டம் - 1. கண். பத்திரம் புரை நாட்டம் பதைப்பற. (சு : 265) (யுத் : 3572)
2. நோக்கம். இனிப் பெண்ணுட்டம் ஒட்டேன் இப் பேருலகத்துள் என்ருன். (அ : 415)

நாட்டம் எரிபுமிழ்தல் - கண்கள் நெருப்புப் பொறியைச் சொரிதல். நாட்டந்தான் எரியுமிழ நல்லாள் மேல் பொல்லாதாள் ஒட்டந்தாள். (ஆ : 345)

நாட்டம் ஓரெட்டுடையான் - பிரமன். உமைக்கு நாதற்கும் ஓங்கு புள்ளூர்திக்கும் இமைப்பில் நாட்டம் ஓரெட்டுடையானுக்கும். (அ : 112)

நாட்டல் - குறித்தல். தேவரின் இங்கு யாவரினி நாட்ட வல்லார். (ஆ : 563)

நாட்டவல்லார் - (ஒப்பாக) நிலை நிற்கக் கூடிய திறமையுள்ளவர். (ஆ : 563)

நாட்டார் - நாட்டுப் பொது மக்கள். (சு : 651)

நாட்டுதல் - 1. அறிவித்தல். என்றொரு நற் பொருளுணர்த்தினன் என்று நாட்டினான். (யுத் : 362)
2. நிலை நாட்டல். நீ இற முன் அங்கியாருனை எடுத்து நாட்டுவார். (யுத் : 1302) ஊனம் நாட்டின் இழத்திர் உயிர். (யுத் : 3581) (ஆ : 563) நாட்டுங்கால். (சு : 440) நாட்டுறின். (சு : 528) நாட்டும். (யுத் : 682)

நாட்டுளார்கள் - நாட்டுப் பகுதியிலுள்ள மக்கள் நந்தலில் நகருளார் நாட்டுளார்கள் தம் சிந்தை என் புகல்வது. (அ : 464)

நாட் படா - நாட் செல்லாத - நாளாகாத. புதுமையான. நாட்படா மறைகளாலும் நவை படா ஞானத்தாலும் கோட்படாப்பதம். (கி : 78)

நாடகம் - ஆடுதல். நர்த்தனம். நாடக மயில். (அ : 185) நாடக மயிலோ டாடும் அரம்பையர். (பா : 940)

நாடகம் நவிலுதல் - கூத்தாடுதல். அரிவையர் களி கூரும் நாடகம் நவில்வாரும். (பா : 1275)

நாடகமயில் - நாடகம் ஆடிய மயில். கூத்தாடுகின்ற மயில். நவ்வி வீழ்ந்தென நாடக மயில் துயின்றென்ன. (அ : 185) காரின் வரவுகண்டுவக்கும் நாடக மயிலென நடப்ப. (சு : 418)

நாடகவரங்கு - நடன சாலை. ஐய நுண்ணிடையார் ஆடும் நாடக அரங்கு கண்டார். (பா : 572)

நாட நாட - தேடித் தேடிக் கொணர்தலால். காடும் நாடும் மரங்களும் கற்களும் நாட நாட நளிர்கடல் வைப்பிலோர் பூடு மாடுதலில்லை இப்பூமியில். (யுத் : 682)

நாடறியாத் துயர் . உலகத்துயிர்கள் பட்டிராத கொடுந் துன்பம். நாடறியாத் துயரிழைத்த நவையரக்கி நின் அன்னை தன்னை நல்கும் தாடகை. (ஆ : 359)

நாடி - 1. நரம்பு. குழுவிற் கொண்டார் நாடி தொடக்கப் பொறி கூட்ட. (யுத் : 3553)
2. நாட்டவள். மிதிலை நாடி. (அ : 782)

நாடியர் - நாட்டார். நாட்டு மகளிர். விஞ்சை நாடியர். (அ : 756) நாக நாடியர். (சு : 1058)

நாடு - 1. மருத நிலம். (அண்) மடவார் படி நெடு நாடவை போனர். (அ : 625)
2. உலகம். மூன்று நாட்டிலு முள்ளவர் யாவருமுடிய வூன்றினன். (யுத் : 3636)
3. ஊர். நாடுளதனையும் ஓடி. (யுத் : 3879)
4. நாடு தேசம். வீசும் நீர் நாடு நண்ணினர். (கி : 905)

நாடுதல் - 1. தேடுதல். குடைந்துல கனைத்தையும் நாடும் கொட்பினல். (சு : 512) அதனை நாடுறுதிர். (கி : 772)
2. ஆராய்தல்.

நாடுதல் புரிஞர் - தேடுதலைச் செய்பவர். (கி : 43)

நாடுதல் புரிதல் - தேடுதல். புக்கு அந்நகரத் தினிது நாடுதல் புரிந்தார். (கி : 856)

நாடு திருத்துதல் - நாட்டை நீதி வழுவாமல் அரசாட்சி செய்தல். நாடு திருத்துதியால். (யுத் : 2643)

நாடு நண்ணினர் - 1. நாட்டை அடைந்தார். (கி : 905)
2. சீதையைத் தேடுதல் தொழிலை மேற்கொண்ட வானர வீரர். (கி : 905) (உ. வி)

நாடுறுதிர் - 1. தேடுங்கள். தொண்டை நாடுறுதிர் உற்றதனை நாடுறுதிர். (கி : 772)
2. நாட்டை அடைவீர். தொண்டை நாடுறுதிர். (கி:772)

நாண் – 1. இடையணி.
2. மங்கல நாண். தாவரு நாண் முதலணியால். (பா : 197) (சு : 622)
3. வெட்கம். ஞான முனிக்கொரு நாணிலை என்பார். (பா:780) நடந்தாய் இடையே என்றலும் நாண் ஆம். (சு : 598)
4. வில்நாணி. நாணுலாவு மேருவோடு நாணுலாவு பாணியும். (பா : 796) செவித்தலம் நிறுத்தினன் சிலையின் தெய்வ நாண். (பா : 469)
5. நாணெலி. (உ.வி) (பா : 469)

நாண் தெறித்தல் - வில்லின் நாணியை விரலால் தெறித்து ஒலியெழுப்பல். அரக்கன் வெஞ்சிலையை நாண் தெரித்தான். (சு : 1015) [பா : பே]

நாண் தொழில் - வில்லின் நாணினைத் தெறித்தலாகிய தொழில். (யுத் : 2979)

நாண்பால் - நாணத்தின் பகுதி. நாண்பாலோரா நங்கையர். (அ : 224)

நாண் பொரு வரிவில் - நாணி பூட்டப்பட்ட கட்டமைந்த வில். நாண் பொரு வரிவிற் செங்கை. (யுத் : 2057)

நாண்மதி - உரிய காலத்தில் தோன்றும் சந்திரன். (ஆ : 686)

நாண்மலர் - அன்று (அப்பொழுது) அலர்ந்தமலர். புதிய மலர். நீத்த நீர்ப் பொய்கையின் நிறைந்த நாண்மலர். (யுத் : 1463) நாண் மலர்ப் பெண். (கி : 901) (அ : 249) (யுத் : 464) முருக்கின் நாண்மலர். (யுத் : 1467)

நர்ண் மலர்க்கணை - நாண் மலராகிய அம்பு. நார நாண் மலர்க் கணையால் நாளெலாந் தோளெலாம் நைய எய்யும் மாரனர். (யுத் : 3911)

நாண்மலர்க் கோயில் - அன்று பூத்த தாமரை மலர்க் கோயில்கள். கடி நெடுந் தாளுடைக் கமலத் தறங்கொள் நாண்மலர்க் கோயில்கள் இதழ்க் கதவடைப்ப. (பா : 480)

நாண் மலர்ப் பாதம் - அன்றலர்ந்த மலர் போன்ற பாதம். நல்கி நாயகன் நாண் மலர்ப் பாதத்தைப் புல்கி. (அ : 97)

நாண் முதல் - நாளின் முதற்கூறு. காலை. நாண் முதற் கமைந்த யாவும் நயந்தனன் இயற்றி. (அ : 699)

நாண் முறி - புதிய தளிர். கைகளால் நணையும் நாண்முறியுங் கொய்து நல்கினன். (பா : 1041)

நாண்மை - நாணம். நாண்மையே யுடையார் பிழைத்தால். (பா : 398)

நாணங் கூர்தல் - நாணம் மிகுதல். கொன்றவர் தம்மைக் கொல்லுங் கேர்ளிலா நாணங் கூரப் பொன்றினர் என்பர். (யுத் : 2864)

நாணம் - இகழ்ச்சி. வெட்கந் தரும் நிலை. தமக்குற்ற நாணம் பார்த்ததும். (யுத் : 2854)

நாணம் பார்த்தல் - வெட்கந்தரும் நிலையைக் காண்டல். (யுத்:2854)

நாணல் - தருப்பைப் புல். பிரித்த நாணல் மாலைவாய்ப் பாரின் பாயல் வைகினர். (அ : 665)

நாணலின் புல்லு - நாணற் புல். பூக்கிளர் நாணலின் புல்லு வேய்ந்து. (அ : 781)

நாணாளும் - நாடோறும், நாள் நாளும். நாளும் நாளும், தினந்தோறும். நாணாளும் வணங்கிய நன்முடியால். (ஆ : 98) நாணாளுந் தான் நல்கிய காவல். (சு : 170)

நாணி - 1. நரம்புக்கருவி. நாணியின் முறையிற் கூடாது. (யுத் : 2782)
2. நாண். வில்லின் நாணினைச் செவ்வழிக் கோதையிற் றரிக்க. (யுத் : 1085)

நாணிலள் - நாணமில்லாதவள். நாணிலள் ஐயன் நொய்யள் நல்லளும் அல்லள் என்றான். (ஆ : 270)

நாணிலா நகை - நாணில் ஆம் நகை. வெட்கம் காரணமாக வெளிப்படுகின்ற நகை. நாணிலாம் நகையின் நின்ற நளிர் நிலாத் தவழ்ந்த தென்கோ. (அ : 1209)

நாணிலி - நாணமற்றவள். (சூர்ப்பநகை) சொன்ன நாணிலி அந்தகன் தூதென. (ஆ : 381)

நாணிழல் - புதிய ஒளி. நக்க செம் மணி நாறிய நாணிழல் பக்கம் வீசும் பள்ளி. (சு : 270) [பா : பே]

நாணுட் கொள்ளல் - வெட்கத்தை உள்ளத்திற் கொள்ளுதல். நின்றுணர் கேள்வியாளன் அருள் வர நாணுட் கொண்டான். (கி : 625)

நாணுடைத் தூய்மை - நாணோடு கூடிய தூயநிலைமை. (சு : 629)

நாணுதல் - 1. குவிதல். (அண்) நாணின தொகு பீலி கோலின நடமாடல். (அ : 693)
2. வெள்குதல். மனக்கூச்சங் கொள்ளுதல். (வை. மு) நாண லன். (அ : 903) உனை நாணுக. (யுத் : 1684) நாணினை. (யுத் : 62)

நாணுரு மேரு - நாணினது பேரிடி முழக்கம். விற்புய லண்ட கோளங் கிற் றெத்துடையப் படு நாணுருமேறு கேளா. (அ:417)

நாணெறிதல் - குணத்தொனி செய்தல். விரலாற் சுண்டிவிடுதல். அரக்கன் வெஞ்சிலையை நாணெறிந்தான். (யுத் : 1427) மிடல் வலோன் நாணெறிந்து முறை முறை தொடர்ந் துலகமி யாவையும் நடுக்கினுன். (யுத் : 2013)

நாணேற்றுதல் - வில்லின் நாணியைச் சேர்த்துக் கட்டுதல். நெடு நாண் ஏற்றுரு முனம். (யுத் : 1204)

நாணைச் செவித்தலம் நிறுத்தல் - வில் நாணியைக் காதளவும் இழுத்து நிறுத்தல். கவித்தனன் கரதலம் கலங்கலீர் எனச் செவித்தலம் நிறுத்தினன் சிலையின் தெய்வநாண். (பா : 469)

நாணொலி – விற்களின் நாணொலி முழக்கம். தலைவர் சிங்க நாதமும் சிலையினு ணொலிகளும். (யுத் : 2496) சிலை கொள் நாணொடிய கோதை யொலியேறு. (ஆ : 24)

நாத்தழும்ப அரற்றல் – நாவிற்குத் தழும்பேறுமாறு பல கூறி அரற்றுதல். நாத்தழும்ப அரற்றி நடுங்குவார். (அ : 530)

நாத்தழும் பேறுதல் - பலமுறை சொல்லுதலால் நாவுக்குப் பழக்க முண்டாதல். நாத்தழும் பேறிய வரத்தர். (யுத் : 3443)

நாதர் – இறைவர். பாகர். தலைவர். தொலைவிலா நாதரின்றி. (யுத் : 2542)

நாத வீணை - ஒலிமிக்க வீணை. நாத வீணை இசை நாரதர் பாட. (யுத் : 813)

நாதன் - 1. தலைவன். நச்சிரப்படை நாலிருகோடிக்கு நாதன். (யுத் : 501)
2. **இராமபிரான்.** நாதனும் நலனி தென்ருன். (யுத் : 1345)

நா தாம் பற்று மழலை - நாவின்கண் நன்கு பொருந்துமாறு வெளி வரும் மழலை. நாதாம் பற்று மழலை நங்கைமார் ஏங்கினுர். (அ : 394)

நாந்தகப் பாரவாளி - நாந்தக மென்னும் பெருமை பொருந்திய வாட்படையை யுடையவன். நாந்தகப் பாரவாளி வீரவாளி வேக வாளி பாயவே. யுத் : 3352)

நாந்தகம் - வாள். நாந்தகவுழவர். (ஆ : 597) நாந்தகம் மின்னத் தேரை நராந்தகன் நடத்திவந்தான். (யுத் : 1885)

நாந்தகவுழவர் - வாளால் உழுது போராகிய பயிரைச் செய்து வெற்றியாகிய விளைவைப் பெறுபவர். நாந்தகவுழவர்மேல் நாட்டு தண்டத்தர். (ஆ : 597) (யுத் : 439)

நாப்பண் - நடுவில். நடு. அந்நகரத்து நாப்பண். (அ : 416) இலங்கை நாப்பண். (சு : 199)

நாம் - 1. அச்சம். நாமுற வல்லவர். (யுத் : 389) (கி : 840) நாமுறு நெஞ்சர். (யுத் : 4353) நாம்அற. (யுத் : 2442) (யுத்:2764)
2. பேர். (நாமம்) நன்புலன் நடுக்குற உணர்வுநாமற. (கி : 840) தாயினன்பணைத் தழுவினன் தனி நாயகன் பெருந்துயர நாமற. (யுத் : 2764) நாமற. (யுத் : 208)
3. தன்மை முன்னிலையில் வருதல். நீர். இம் முறை உருவோ நாம் எய்துவ தென. (அ : 172) [பா : பே] நடந்தவரோ நாமென்ன. (ஆ : 343)
4. தன்மைப்பெயர். மேல் நாம் சொன்ன மாந்தர்க்கு விளைந்தது இனிநாம் விளம்புவாம். (அ : 608) (பா : 106)

நாம - அச்சத்தையுடைய. நாகமொன் றகன்கிடங்கை நாம வேலையாமெனு. (பா : 107)

நாமக் கஞ்சுகத்தர் - கஞ்சுகியர் என்ற பெயரினர். நாமக்கஞ் சுகத்தர் கதைபற்றிய கையர். (யுத் : 818)

நாமகள் - சரசுவதி. கங்கையாளொடு கரியவள் நாமகள் கலந்த சங்கமாதலின் பிரியலென். (அ : 720)

நாம கூடப் பெருந்திசை - மரச் செறிவால் அச்சந்தருமாறு மறைபட்டுக் கிடக்கின்ற பெரிய திசை. நாம கூடப் பெருந்திசை நல்கிய... ஏமகூடத்தடங்கிரி. (கி : 828)

நாமச்சொல் - 1. புகழமைந்த சொல். மந்திர நாமச் சொல். (ஆ : 1077)
2. சிறப்புப் பொருந்திய சொல். நல்லியற் கவிஞர் நாவிற் பொருள் குறித்தமர்ந்த நாமச் சொல்லென. (யுத் : 1240)

நாமடந்தை - கலைமகள். நாமடந்தை யழுதாள். (யுத் : 2628)

நாமத்தர் - பேருடையவர். இன்ன நாமத்தர் இளையரென்றியம்புதி. (யுத் : 840)

நாமத் தாலழிதல் - பெயரைச் சொல்லிச் சொல்லி மெலிதல். நாமத் தாலழிவாளொரு நன்னுதல். (பா : 1187)

நாமத்திண் போர் - அச்சம் விளைக்கின்ற திண்ணிய போர். (யுத் : 3456)

நாம நீர் - அச்சத்தைத் தருங் கடல். நறை நெடுங் கடல் ஒத்தது நாமநீர். (யுத் ; 571)

நாம நூல் - புகழையுடைய நூல். புகழ் மிக்க சாத்திரம். நாமுதற் படுவ மெய்யும் நாம நூற் பொருளும் மன்னோ. (பா : 36) (யுத் : 366) (யுத் : 2057)

நாமப் பொறி துடைத்தல் - பெயரடையாளத்தையும் அழித்தல். இந்திரனை நாமப் பொறிதுடைத்த எம்பியோ. (யுத் : 1659)

நாமம் - 1. விளக்கம். நாம கூடப் பெருந்திசை. (கி : 828)

2. **அச்சம்.** நாம வேல். (பா:785) நாம வெங்கணை. (யுத்:1531) நாம மின்றெனக் குனித்தனர். (பா : 499) நாமநீர். (யுத் : 671) நாமக் கடற் பல்லிய நாற்கடல் மேலுமார்ப்ப. (யுத் : 1977)

3. **பெயர்.** நாமக் கஞ்சுகத்தர். (யுத் : 818) (யுத் : 137) நாமத்தா லழிவாள் ஒரு நன்னுதல். (பா : 1187)

4. **புகழ். பிரசித்தி.** நாம நூல். (ஆ : 689) நாமப் பாற்கடல் சுற்ற. (யுத் : 438) நாமக்குன்று. (யுத் : 1181)

5. **சிறப்பு.** நாமக் குன்றின் மேலிவர் கோளரி ஏறென. (யுத் : 1181)

6. **பெருமை.** நாமப் பல்லாயிர கோடி பனிச்சுட ரீன்ற திங்களெல்லாம். (ஆ : 718)

7. **திருமண் காப்பு.** ஆழியான் அளவின் நாமம் நெய்ச்சுடர் விளக்கில் தோற்ற. (சு : 832) தன்திரு நாமத்தைத் தானுஞ் சாத்தியே. (பா : 1293)

நாமம் நிறுத்தல் - பெயரை நிலைநாட்டுதல். நம் நாம நிறுத்திப் பேரிசை தைக்கும் நவையில்லோன். (கி : 1013)

நாமம் பயிற்றுதல் - பெயரைச் சொல்லிப் பழகுதல். என் அனுசனை... இன்னுயிருண்டவன் நாமம் பயிற்றவோ நினைப்பயந்தது நான். (யுத் : 181)

நாம மேரு - பெருமை பொருந்திய மேருமலை. (ஆ : 239)

நாம வாளெயிறு - அச்சந்தருகின்ற கூரிய பல். நாம வாளெயிற் றோர் கத நாகம். (ஆ : 305)

நாம வில் - பகைவர்க்கு அச்சந்தரும் வில். நாம விற்கை இராமன். (அ : 236)

நாம வேல் - அச்சந் தரும் வேற்படை. நாம வேற் சனகன். (பா : 785) நாம வேல் பொலிஞ்ச வென்றிபூணு மக்கிலிஞ்சன் மைந்தனுயினேன். (ஆ : 67)

நாமறக் கொல்லுதல் - பெயருமின்றி அழியுமாறு கொல்லுதல். குரங்கை நாமறக் கொன்று தின்று. (யுத் : 53) நன் நெடுஞ் செல்வமும் நாளும் நாமற மன்னுயிரிழத்தி என்றிறைஞ்சி வாழ்த்தினேன். (யுத் : 208)

நா மறுதல் - பேரு மில்லை யாதல். குரங்கை நாமறக் கொன்று. (யுத் : 53)

நாமாண்டற - நாக்கு வற்றி யுலர. நாமாண்டற அயல் நின்றவர் நடுவே புக நடந்தான். (யுத் : 1853)

நாமுதற் குழறிட நடுங்கு சொல்லினன் - நாக்கு அடியோடு குழறுத லால் நடுக்கம் மிக்க சொல்லினன். நாமுதற் குழறிட நடுங்கு சொல்லினன் யாவிர் இவ்விருக்கையுள் இருந்துளீர் என்றான். (யுத் : 836)

நாமுதற்படுவ - நாநுனியில் விளங்குவன. நாமுதற்படுவ மெய்யும் நாமநூற் பொருளும் மன்னே. (பா : 36)

நா முறல் - அச்சங் கொள்ளுதல். நாமுற வல்லவர் நம்மை நண்ணி னால். (யுத் : 389)

நாமுறவல்லார் — யாரும் அஞ்சத்தக்க வலிமையுடையவர். (யுத் : 380)

நாய் - 1. நாய். வஞ்சினக் கரடி நாய் வேங்கை. (ஆ : 412) நாயொத்தேன். (ஆ : 1188) (யுத் : 948)
2. சூதாடு கருவியுள் ஒன்று. பளிங்கு நாய் தொட்டு. (பா : 580)

நாய்கன் - வணிகன். தனி நாய்கன் நைந்து நீங்கச் செயலோரா மீகாமனைப் போல் நைவுற்றான். (அ : 605)

நாயகக் கோயில் - 1. அரசு வீற்றிருத்தற்குரிய அரண்மனை. (அண்) சர்வலோக நாயகனான திருமாலின் கோயில். (வை. மு) முனியைத் தாழ்ந்து நாயகக் கோயி லெய்தி. (யுத் : 4289)
2. நாளோலக்கத்திற் குரிய அரண்மனை. நளனியற்றிய நாயகக் கோயிலுள். (கி : 582) (யுத் : 4294) (யுத் : 4295)

நாயகக் கோலம் - தலைசிறந்த அலங்காரம். நன்றென நங்கை நேர்ந்தாள் நாயகக் கோலங் கொள்ள. (யுத் : 3961)

நாயகப் பரிதி - தலைமைபெற்ற சூரியன். தூய பொற் சுடர்களெல்லாம் சுற்றுற நடுவட் டோன்றும் நாயகப் பரிதி போன்றான் தேவரை நடுக்கங் கண்டான். (யுத் : 2403)

நாயகம் - 1. தலைமை. சுடர்க்கெலாம் நாயக மணையதோர் மாலை. (அ : 149) நாயகப் பரிதி. (யுத் : 2403)
2. சிறப்பு. நளனியற்றிய நாயகக் கோயில். (கி : 582)

நாயக மணி - சிறந்த நவ ரத்தினங்கள். தலைமை சான்ற நவ ரத்தினங்கள். சுற்றில் நாயக மணியிற் செய்த நனி நெடுந்தூண். (கி : 664)

நாயகர் - 1. தலைவர். படைத்தலைவர். நாயகர் நெடுந்தலை துமியும். (யுத் : 2442)
2. மாலுமிகள். நாயகர் ஆளொடு மவிய நவ்விகள் பாயொடு வேலையிற் றிரியும் பண்பின. (யுத் : 2298)

நாயகன் - 1. தலைவன். அரசன். நாயகன் இறுதியும் நவிலற் பாலதோ. (கி : 963)
2 கணவன். நாயகன் வனம் நண்ணலுற்றானென்றும் மேய மண்ணிழந் தானென்றும் விம்மலள். (அ : 515)
3. தலைவனாகிய இறைவன். நாயகன் தனி ஞானி. (யுத் : 149)

நாயகன் தனி ஞானி - எவ்வுயிர்க்குந் தலைவனான இறைவனை உணர்ந்து போற்றும் ஒப்பற்ற ஞானி. (யுத் : 149)

நாயகனார் - தலைவர். இராமபிரான். நாயகனார் சொன்ன குறியுண்டு. (சு : 548)

நாயடியேன் - நாய் போல ஏவின செய்தற்குரிய அடியவனான யான். நாவாய் வேட்டுவன் நாயடியேன் என்றான். (அ : 655)

நாயினம் - நாய்க்கூட்டம். நாயினஞ் சீயங் கண்ட தாமென நடப்பதல்லால். (யுத் : 760)

நாயினுங்கடைப்பட்டோன் - நாயைக் காட்டிலும் தாழ்மைப் பட்டவன். அங்கணத் தழுக்குத் தின்னும் நரியொடும் வாழ்வதுண்டோ நாயினுங் கடைப்பட்டோனே. (யுத் : 1649)

நாயினேன் - நாய் போற் கடைப்பட்ட யான். நடுவினிப் பகர்வதென்னே நாயினேனே உடனுதித்தவர்கேளாடும் ஒருவன் என்றுரையா நின்ருய். (யுத் : 453)

நாயுண்ட எச்சில் - நாய் தின்று எஞ்சிய எச்சில். நச்சினேனுயின் நாயுண்ட எச்சிலே அது இதற்கு ஐயம் இல்லையால். (கி : 678)

நாயுணும் உணவு – நாய் உண்ணும் (எச்சில்) உணவு. என் மதலையாக்கை நரியுணக் கண்டேன் ஊணின் நாயுணும் உணவு நன்ருல். (யுத் : 3180)

நாயுயிர் - நாய்ப்பிறவி. இழித்துக் கூறப்படும் நாய்ப்பிறவி. நுணங்குமாவி நாயுயிராகு மன்றே. (யுத் : 1595)

நாயேன் - நாய் போற் கடைப்பட்டவன். உன்னை நீயுணராய் நாயேன் எங்ஙனம் உணர்வேன் உன்னை. (யுத் : 606)

நார் – 1. நாணி. நாண்கயிறு. நாரு மூரியுமரு நம்முடைச் சிலைகள் போல். (யுத் : 101) (அ : 449)

2. அன்பு. அன்பினுலாகும் பாசபந்தம். அன்பின் நார் அருத சிந்தையனுமன். (சு : 1173) நன்றி கொன்றரு நட்பொடு நாரறுத்து. (கி : 567)

நாரணன் - 1. நாராயணன். அந்நரனல்லனுகில் நாரணன். (யுத் : 2022) (யுத் : 3859)

2. திருமாலாகிய இராமபிரான். வீடணன் நாரணன் முன் சொல்லாடினன். (யுத் : 1731)

நாரணன் விளையாட்டு - திருமால் இராமனுகத் தோன்றிப் புரிந்தருளிய திருவிளையாடல்கள். நாரணன் விளையாட் டெல்லாம் நாரதன் முனிவன் கூற. (பாயி : 1)

நாரத முனிவன் - நாரதர். நாரத முனிவற்கேற்ப நயம்பட உரைத்த நாவும். (யுத் : 1219)

நாரதர் - நாரதமுனிவன். நாத வீணையிசை நாரதர் பாட. (யுத் : 813)

நாரதன் – நாரத முனிவன். வீணையின் நரம்பிடை விளைத்த தேமறை வாணியின் நாரதன் செவியின் வார்க்கவே. (ஆ : 572) மேனித்திருநாரதன் வீணையிசைத் தேன். (ஆ : 77)

நாரம் - 1. தண்ணீர். நார முண்டெழுந்த மேகம். (ஆ : 664) நார நாண்மலர்ப் பொய்கை. (சு : 631)
2. **அன்பு.** நாரங் கொண்டார் நாடு கவர்ந்தார். (ஆ : 740)
3. **ஆன்மா, உயிர்.** நாரவாளி. (யுத் : 3352)
4. **நாணி.** நார நாண்மலர்க் கணையால் எய்யும். (யுத் : 3911)

நாரவாளி – நாரங்களை ஆள்பவன், உயிர்களை ஆள்பவன். (யுத் : 3352)

நாரறுத்தல் - கட்டற ஒழித்தல். நன்றி கொன்றரு நாரறுத்து (கி : 567)

நாராயண நரர் என்று - நாராயணன் நரன் என்று. நாராயண நரர் என்று இவருளராய். (யுத் : 3031)

நாராயணன் - நார அயநன். நாராயணன் என்ற பெயர் படைப்புப் பொருள்களெல்லாம் சேர்விடமானவன் என்றும் படைப்புப் பொருள்களைத் தனக்குச் சேர்விடமாக வுடையவன் என்றும் ஊழி வெள்ளத்து நீரைத் தனக்கு இருப்பிடமாகவுடையவன் என்றும் பொருள்படும். (அண்) தீரா ஒரு நாள் வலி சேவகனே நாராயணனே தனி நாயகனே. (சு : 494)

நாரி - பெண். நாரியர்க்குறை வாமிடம் நண்ணினன். (சு : 262) (ஆ : 859)

நாரி பாகத்தன் - மனைவியை இடப் பாகத்திற் கொண்ட சிவபிரான். நாரி பாகத்தன் வாளுடைத் தடக்கையன். (ஆ : 859)

நாரியர் - பெண்கள். நான வார் குழல் நாரியரோடலால்.(பா:1181) நாரியரில்லை இஞ்ஞால மேழுமென்ன. (அ : 207)

நாரியோர் பாகத்தண்ணல் - பார்வதி தேவியை இடப்பாகத்திற் கொண்டவனை பரமசிவன். நான் முகன் விடையை யூரும் நாரியோர் பாகத்தண்ணல். (யுத் : 4217)

நாரை - ஒரு பட்சி. பள்ளி நீங்கிய பழன நன்னுரை. (பா : 540)

நாரைக்குழு - கூட்டமான நாரை. கொடிறு தாங்கிய வாய்க்குழு நாரை வாழ்தடறு. (கி : 938)

நால் - நான்கு. நாலிடைப்பட்ட சேனை. (யுத் : 1894) மாதிரம் நால் கலங்க. (யுத் : 3710)

நால்தல் - தொங்குதல். நர்ல்வன குடரன. (யுத் : 1812)

நால் நிலம் - நால்வகைப்பட்ட நிலப்பகுதிகள். நானிலம் பார்க்க. (கி : 278)

நால்வகைச் சதுரம் - நாற் சதுரம். நால்வகைச் சதுரம் விதிமுறை நாட்டி. (பா : 100)

நால்வகைத்தானை - நாற்படைகள். நால் வகைப் பன்னெடுந் தானையைப் பாற நூறினுன். (யுத் : 1801)

நால்வகை மேகம் - புட்கலா வர்த்தம் முதலிய நான்கு மேகங்கள். (அண்) நான்கு திசைகளினின்றும் வரும் மேகங்கள். (வை. மு) (உயர்ந்த) நாளு நிறத்தையுடைய மேகம் ஏழும். (கலா) (பழையவுரை) மேக்கு நால் வகை மேகமும் கீழ்விழத் தூக்கி ளுலன்ன தோயத்ததாய். (சு : 244)

நால்வரின் - நாலாந்தலை முறையில். நான் முகனுக் கொரு நால் வரின் வந்தாய். (யுத் : 2827)

நால்வரை - யானை. தொங்குகின்ற மலை போன்ற வாயினையுடைய யானை. நால்வரைக் கொணர்ந்துடன் பிணித்தாலன்ன நடையார். (யுத் : 3265)

நால்வன குடரன - வெளித் தொங்குகின்றனவான குடல்களை யுடையன. (யுத் : 1812)

நாலஞ்சு - இருபது. நாலஞ்சாகிய கரங்கள். (யுத் : 3613)

நாலாயிர நவயோசனை - முப்பத்தாருயிரம் யோசனை. நர்லாயிர நவ யோசனை நனி வன் றிசை எவையும் மாலாயின மத வெங்கரி திரிகின்றன. (யுத் : 1827)

நாலாயின நவயோசனை - முப்பத்தாருயிரம் யோசனை. (யுத் - 1827) [பா : பே]

நாலிடைப்பட்ட சேனை - நாலாகப் பொருந்திய (ராட்சத) சேனை. நாலிடைப்பட்ட சேனை நாயகன் தம்பி எய்த கோலிடைப்பட்ட தெல்லாம் பட்டது குரங்குச் சேனை. (யுத் : 1894)

நாலிரண்டாய கோடி - எட்டுக்கோடி. நாலிரண்டாய கோடி நவையில் நாவாய்கள். (அ : 1045)

நாலிரு கோடி . எட்டுக் கோடி. நச்சிரப்படை நாலிரு கோடிக்கு நாதன். (யுத் : 501) நாலிரு கோடியன். (யுத் : 599)

நாலின் - நான்கின். வன்பெரும் பூதங்கள் நாலின் ஆற்றலும் ஆற்றுழி நண்ணினுய். (கி : 350)

நாலினேடு மூன்று - ஏழு. நாலி னேடுலக மூன்றும் நடுக்குற. (சு : 33)

நாலு - நான்கு. நன்னுதலார் மூவருக்கும் நாலுகூறிட் டளித்தான். (பா : 739)

நாலுதல் - 1. தொங்குதல். பாம்பு நான்றெனப் பாய் பசுந் தேறலே . பா : 66) மயிர் நாலும் உரு. (அ : 710)

2. வெளிப்படுதல். முழை நால் அரவு இவர் குடர் நால. (சு : 966)

3. பெருகுதல். கிரியின் நாலும் அருவிபோற் குருதி. (யுத் : 2068)

4. தொங்குதல்போல் உட்செல்லுதல்.

நாலு தோள் நந்தி - நான்கு தோள்களையுடைய நந்தி. (யுத் : 92)

நாலுபாலும் - நாற்புறத்திலும். வாடை நாலு பாலும் வீச. (யுத் : 3341)

நாலும் ஐந்தும் - ஒன்பது. மற்றை யோர் நாலும் ஐந்தும் யோசனை மலைந்து புக்கார். (யுத் : 2535)

நாலு முகத்தான் – பிரமன். நாலு முகத்தான் உதவுற்ருன். (கி : 1013)

நாலுமுகத்தான் உதவுற்ருன் - சாம்பவன். (கி : 1013)

நாலு வாரிபின் நீர் - நான்கு திசையிலுள்ள கடல்களின் நீர். (அ : 262)

நாலு வேதம் - நான்கு வேதங்கள். நாலு வேதமா நவையில் ஆர் கலி. (கி : 115)

நாலைந்தாய் - இருபதாகி. இரவி கொழுங் கதிர் சூழ் கற்றை மண்டலங்கள் பன்னிரண்டும் நாலைந்தாய் வயங்கமன்னே. ஆ : 563)

நாலைந்து - இருபது. புயம் நாலைந்தினே டியைந்தாய். (யுத் : 1125) மன்னுடைச் சேனை வெள்ளம் நாலைந்தும். (யுத் : 2360) கை நாலைந்தும் தலை பத்தும். (ஆ : 893) தடக்கை நாலைந்து பத்துத் தலையொடும் உடையான். (சு : 29)

நாலைம்பது - இருநூறு. வெள்ளமான நாலைம்பதோடும். (யுத் : 901)

நா லொரு மூன்று - ஏழு. நக்கரக் கடல் நா லொரு மூன்றுக்கு நாதர். (யுத் : 3222)

நா லொன்று மூன்று - ஏழு. நா் லொன்று மூன்றுமான புவனங்கள் நடுங்க லோடும். (யுத் : 3070)

நாவடக்குதல் - வாயை மூடும்படிச் செய்தல். ஒலி யடக்கல். நற்றிரைக் கடல்களோடு மழைகளை நாவடக்க. (சு : 762)

நாவம் - ஓடங்கள். நாவ வேட்டுவன் நாயடியேன். (அ : 655) [பா : பே]

நாவம்பு - சொல்லம்பு. நாவம் பாலென் ஞுருயி ருண்டார். (அ : 223)

நாவலம் பெருந் தீவு - சம்புத்தீவம். நாவலம் பெருந் தீ வென்ன. (யுத் : 2703)

நாவலர் - பண்டிதர். சொல்வன்மையுள்ள புலவர். நாவலர் இயற்றிய நாளின் நாமநூல். (ஆ : 688)

நாவ வேட்டுவன் - நாவம் வேட்டுவன். படகுகளையுடைய வேடன் (அ : 655)(பா : பே)

நாவன் - நாவினையுடையவன். விஞ்சை கற்பதொர் நாவன் அனற்படுகையன். (பா : 440)

நாவாய் - 1. கப்பல். பிறவிப் பெரிய கடல் கடக்க உய்த்து மீண்ட நாவாயில் தாமும் போவார் ஒக்கின்றார். (அ : 603) (யுத் : 3451)

2. படகு. நாவாய் வேட்டுவன். (அ ! 655) கணக்கிறந்த நாவாயான். (அ : 1011)

நாவாய் வேட்டுவன் - படகுகளை யுடைய வேட்டுவன். நாவாய் வேட்டுவன் நாயடியேன் என்றான், (அ : 655)

நாவி - 1. கஸ்தூரி. நாவி விரி கூழை. (அ : 641)
2. **புழுகு நெய்.** நாவி நன்குழல். (அ : 184)

நாவி நாறோதி நவ்வி - கஸ்தூரிப் புழுகு வாசனை வீசப்பெற்ற கூந்தலையுடைய மான் போன்ற சீதை. நாவி நாறோதி நவ்வி நயனமும் குயமும் புக்குப் பாவியாக் கொடுத்த வெம்மை. (ஆ : 648)

நாவி விரி கூழை - கஸ்தூரி மணம் மிக்க கூந்தல். (அ : 541)

நாவினர் - நாவீறுடையவர். முந்திய நாவினர் உரையின்படி. (பா : 10)

நா வுலர்தல் - நா வறண்டு போதல். நடுங்கி நா வுலர்ந்து அஞ்சினர் சிலர். (யுத் : 2946) (யுத் : 1488)

நா வேதல் - நா வெந்து போதல். நாவும் வெந்துகும் என்றான். (யுத் : 167) வெம்மைப் பகரினும் பகரு நா முடிய வேம் வேறு யாவை வேவாதவே. (பா : 347)

நாழ் மலர் - அன்றலர்ந்த மலர். நாள் என்பது நாழ் எனத் திரிந்தது. நாழ் மலர்த் தெரியல் வீர. (யுத் : 803)

நாழி - அளவு கருவி, படி. நாழி நவை தீர் உலகெல்லாமாக. (ஆ : 103)

நாழிகை - 1. ஒரு நாளின் அறுபதில் ஒரு கூறானகாலம். கருவி நாழிகை பாதியில். (சு : 252)
2. **பொழுது.** நாழிகை கங்குலின் நள்ளடைந்த பின். (அ : 186)

நாள் - 1. நட்சத்திரம். செழுங்கதிர் கோள் நாள் திங்கள். (பா : 680) நாள்முதல். (யுத் : 2361)
2. **வாழுநாள். ஆயுள்.** நாளும் தஞ்சென முன்னம் தானே தாதைபாற் கொடுத்து. (யுத் : 421) உமைக் கொற்றவன் கூறிய நாட்டிறம்பினும் நாட்டிறம்புமெனக் கேட்டிலிர். (கி : 593) நாள் அனைத்தையும் கடந்தனன். (ஆ : 989) உன் நாள் உல வாய் நீ. (யுத் : 300)
3. **புதுமை.** நாமப் பேர் பம்ப நாள் தழைக்குங் கதை. (பாயி:4)
4. **காலம்.** நாட்படாமறைகள். (கி : 76)

5. பகல். பொங் கொளி சிதைவரு நாள்வரச் சிவந்த தாமரை. (யுத் : 1075)

6. பட்சம். முன்னுளில் இரண்டாம் பிறை. (யுத் : 3007)

7. சூரியன். நாள்களைச் செய்யும் சூரியன். பழக்க நாள்வரு மேருவை. (யுத் : 1565)

8. தவணை நாள். கொற்றவன் கூறிய நாள் திறம்பினும். (கி : 593)

நாள் உலத்தல் - வாழ்நாள் சிதையப்பெறுதல். உன் நாள் உலவாய் நீ. (யுத் : 300) நாளுலந்தர்ர்க்குத் தூத. (யுத் : 947)

நாள் ஏழிரண்டின - பதினான்கு நாட்கள் ஆயின. உந்தையார் இறுதி எய்தி நாள் ஏழிரண்டின். (அ : 913)

நாள்கள் இறுதல் - ஆயுள் நாள்கள் முடிதல். நாள்கள் இற்றன. (சு : 781)

நாள் செய்தல் - அன்று மலர்தல். நாட் செய்த கமலம். (ஆ : 1021)

நாள் தழைக்குங் கதை - புதுமை மிகுவதாகிய கதை. (பாயி : 4)

நாள் தொலைதல் - வாழ்நாள் தொலைதல். தோற்றுக் கையன்றெழிந் தவன் நாளவை தொலையவும். (யுத் : 1562)

நாள் நின்றுளனுதல் - எஞ்சியுள்ள ஆயுள் உடையனுதல். நின்றுள நாளினுலே பொன்றுதுளனுயினன். (ஆ : 713)

நாள் பருகுதல் - ஆயுளை ஒழித்தல். சிறியோர் நாள் பருகின ரென்றல் வென்ற நலத்தின் பழியன்றே. (ஆ : 734)

நாள் எண்ணுதல் - நாடோறும் தன் வாழ்நாள் குறித்து எண்ணுதல். (வை.மு) (கலா) நாள் தோறும் தான் வாழ்ந்த நாளை எண்ணிக் கழித்தல். (அண்) தசமுகக் கூற்றம் தன்னுயிர்மேல் நண்ணுஞ் செய்கைய தெனக்கொடு நாடொறும் தன் நாள் எண்ணும் செய்கையன். (யுத் : 518)

நாள் பிழைத்தல் - வாழ் நாள் தவறுதல். பிழைத்ததால் உனக்கு அத்திரு நாளொடு. (யுத் : 1545)

நாள் மலர் - அப் பொழுதலர்ந்த மலர். நஞ்சினையிடுவார் நாண் மலர் புனைவார். (அ : 249)

நாள் முதல் - 1, நாளின் முற்கூறு.
2. உதய காலம். காலை. நாண் முதற் கமைந்த யாவும். (அ : 669)
3. நட்சத்திரம் கோள் முதலியவை. நாண் முதல் திங்கள் தன்னைத் தழுவிய அனைய நண்பான். (யுத் : 2361) (அ : 940)

நாள் மேல் தோன்றுதல் - வாழ் நாள் மேல் யமன் தோன்றுதல். அம்புலி யாண்டும் ஆவி துஞ்சு மாறின்றி வாழ ஒண்ணுமோ நாண் மேல் தோன்றின். (யுத் : 3304)

நாள் விரை - புதுமணம். கதம்ப நாள் விரை கள்ளவிழ் தா தொடும்ததும்பு. (பா : 1037)

நாள் வேங்கை - நாள் மலரை யுடைய வேங்கை மரம். நாள் வேங்கை கோங்கு. (பா : 24) [பா : பே]

நாளத்தாள் - துளையுடைய தண்டு. ஊன்றிய கழுநீர் நாளத் தாளினால் ஒருத்தியுண்டாள். (பா : 1065)

நாளம் - தாமரைத் தண்டு. பூவின் காம்பு. (வை.மு) நாளங் கொள் நளினப்பள்ளி. (ஆ : 228) வாசங் கலந்த மரை நாள நூலின் வகையென்ப தென்னை. (யுத் : 2215)

நாளவாம் மீன் - நாள்கள் எனப்படும் நட்சத்திரங்கள். நாளவாம் மீன் தோய் மாடம். (யுத் : 798)

நாளறுக் காலம் - நாள்கள் இடையறுத நெடிய வாழ்நாள். சிரஞ் சீவித்தன்மை. கவிக்கு நாளறுக் காலமும் காட்டுங்கொல் என் தன் கற்பென்றாள். (யுத் : 3976)

நாளறு நறுமலர் - அன்றலர்ந்த நறிய மலர். நாளறு நறுமலர் அமளி நண்ணினாள். (பா : 610)

நாளனைத்தையும் கடந்தனன் - வெகு பிராயமானவன். நாளனைத் தையுங் கடந்தனன் தமியன் நந்தாதை. (ஆ : 989)

நாளின் நூல் - சோதிட சாஸ்திரம். நாவலர் இயற்றிய நாளின் நாமநூல். (ஆ : 688)

நாளினும் - நாள்தோறும். நாளினும் அறமறந் தவனும். (அ : 894)

நாளீர் - ஆயுள் நாளை யுடையீர். மேலை விரிஞ்சன் வீயினும் வியா மிகை நாளீர். (கி : 1017)

நாளும் நாளும் - நாள்தோறும். நாளு நாளு நடந்தன நள்ளிரா நீளமெய்தி. (யுத் : 1002)

நாளுலத்தல் - ஆயுள் முடிதல். வாழ்நாள் முடிவெய்தல். நாளுலந் தார்க்குத் தூத. (யுத் : 949)

நாளுலந்தழிதல் - ஆயுள் ஒழிந்து படுதல். விண்ணும் மண்ணும் என்மேல் வந்தாலும் நாளுலந்தொழியு மன்றே. (ஆ : 430)

நாளுற்ற இருக்கை - நாளோலக்கம். கோளுற்ற வன் நெஞ்சு சுடக் குழைவான் நாளுற்ற இருக்கையில். (யுத் : 1710)

நாளுறு நல்லறம் - எந்நாளும் நிலைபெற்றுள்ள நல்லறம். (அ : 889)

நாளொடு கோளும் - நட்சத்திரமும் கிரகங்களும். நாளொடு கோளு நின்றமை நாடினர். (பா : 289)

நாளொத்த நளினம் - அப் பொழு தலர்ந்த தாமரை. நாளொத்த நளினமன்ன முகத்தியர். (யுத் : 1222)

நாளொளி கொள் மணி-நட்சத்திரங்களின் ஒளியைக் கொண்டுள்ள இரத்தினங்கள். பெரிய நாளொளி கொள் நாஞ விதமணிப் பித்திப் பத்தி. (சு : 197)

நாற்கடல் - நான்குதிசையிலுமுள்ள நான்கு கடல்கள். நாற்கடலு டுத்தபாரின் நாயகன். (யுத் : 438) (யுத் : 1977) (யுத் : 1079)

நாற்கடலுடுத்த பாரின் நாயகன் புதல்வன் - தசரதன் மகனாகிய இராமபிரான். (யுத் : 438)

நாற்பது - நான்குபத்து. நாற்பது வெள்ளம். (யுத் : 1976)

நாற்பெரும்பண் - பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி. நாற்பெரும் பண்ணும் நயப்புறப் பாடினான். (சு : 273)

நாற்றங்கேட்டல் - நாற்றத்தை உணர்தல். இவளைப் போல் நாற்றங் கேட்டலும் தின்ன நயப்பதோர் கூற்றுண்டோசொல்லாய். (பா : 405)

நாற்றம் - நறுமணம். நாற்றம் மல்கு போது. (கி : 165)

நாற்றம் மல்கு போது - நறு மணம் மிக்க மலர்கள். (கி : 165)

நாற்றுதல் - 1. தொங்க விடுதல். நாற்றிய தூங்கமளித் துயில். (சு : 271) இருகை நாற்றி. (உ.வி) (யுத் : 945) (யுத் : 2862) வெறுங்கை நாற்றினன். (யுத் : 1212)

2. குவிதல். தாதையைக் கொன்றுன் பின்னே தலைசுமந்திருகை நாற்றி. (யுத் : 945)

நாறு - நாற்று. நட்ட செந்நெலின் நாறு வளர்க்குமே. (பா : 57) நாறு நாறுவ. (கி : 941) நாறு தன் குலக்கிளை யெலாம் நரகத்து நடுவான் சேறுசெய்து. (யுத் : 841)

நாறுதல் - 1. கமழ்தல். மணம் வீசுதல். காலுதல். நந்தவானத்து நாண்மலர் நாறின. (சு : 725)

2. தோன்றுதல். வெளித்தோன்றுதல். நாகம் வந் தடர்ப்பினும் உணர்வு நாறுமோ. (சு : 674) கதிர் நாறும் அளவையில். (அ : 178) அறங்கள் நாறும் மேனியார். (கி : 231) தாறு நாறுவ வாழைகள். (கி : 941) (கி : 901)

3. விளங்குதல். நாறிய நகைமணி. (ஆ : 248) தாழையின் சோறு நாறுவ. (கி : 641)

4. ஒழுகுதல். மன்றல் பொருந் தேனுறு நலஞ் செறி தொங்கலி னுன். (உ. வி.) (ஆ : 85)

6. மலர்தல். கட் புலம் புறத்து நாரு வன் பறம். (சு : 7)

நாறுமுடி - நாற்று முடி. படுங்கமல மலர்நாறு முடி பரந்த பெருங் கிடக்கை. (யுத் : 3567)

நான் - தன்மைப் பெயர். மாய விற்கு நான் தோற்றவாறென மனந் துளங்கு கின்றதால். (பா : 750) (அ : 360) நானுடைத் தூய்மை காட்டவும். (சு . 629) (பா : பே)

நான்கு - நான்கு. நான்கு தோள். (அ : 236)

நான்கு கால் ஓங்கல் - நான்கு கால்களையுடைய மலைபோன்ற யானை. ஐராவதம். (யுத் : 1336)

நான்கு நான்கும் - நான்கும் நான்கும் ஆகிய எட்டு. நெடுந்திசை நான்கு நான்கும் மறைந்தன. (யுத் : 1398)

நான்கு மூன்று - ஏழு. இராமன் கை நிமிர்ந்த சாபம் ஒன்றினல் நான்கு மூன்று கடிகையின் உலந்த தென்றுர். (யுத் : 3588)

நான்மறை - நான்கு வேதங்கள். வண்டாய் அயன் நான் மறை பாட. (பா : 634)

நான் மறைக் கிழவர் - நான்கு வேதங்களுக்கும் உரிமையுள்ள அந்தணர். நற்பயன் தவத்தினுய்க்கும் நான்மறைக் கிழவர். (அ : 258)

நான்மறைக்குழு - அந்தணர் கூட்டம். கோவும் நான் மறைக் குழுவும் முன் செல. (அ : 919)

நான் மறைக் கொழுந்து - நால் வேத மாகிய கொடியின் கொழுந்து. முதிய நான் மறைக் கொழுந்து மேற்படர்தரக், கொழு கொம் பாயினுன். (பா : 253)

நான்மறைத் துணிவிற்றுணிந்த மெய்த்துணிவு - நான்மறைகளின் தெளிந்த முடிபாகிய உப நிடதங்களில் ஆராய்ந்து துணியப்பட்ட மெய்ப்பொருள். சொன்ன நான்மறைத் துணிவிற் றுணிந்த மெய்த் துணிவு நின்னலாதில்லை. (யுத் : 4019)

நான் மறைப் புலவர் - நான்கு வேதங்களை ஓதிக்கொண்டிருக்கும் தேவர். புரந்தரன் முதல்வராகிய நான் மறைப் புலவர். (யுத் : 3130)

நான் மறை புகலும் வேள்வி - நான்கு வேதங்களை உச்சரிக்கின்ற யாகம். நான் மறை புகலும் வேள்வியிற் பூம் புகை. (பா : 72)

நான் மறை புகன்ருன் - நான்கு வேதங்களையும் வெளியிட்டருளிய திருமாலின் அம்சமாகிய இராமபிரான். (யுத் : 4070)

நான் மறை யாளர் – நான்கு வேதமும் வல்ல அந்தணர். நான்மறை யாளர் கைத்தான மென்னத் தழைத்தது நீத்தமே. (பா : 16)

நான் மறையின் கனி - நான்கு வேதங்களின் இனிய பயனுகிய இராமபிரான். கண்டான் இமையோர் இறை காசினியின் கண் தான் அரு நான் மறையின் கனியை. (ஆ : 97)

நான் மறையெனு நடையினுர் - நான்கு மறைகளே என்னும் ஒழுக்கம் செறிந்தவர். மிக விளங்கினர்கள் தாம் நர்ல்வரும் பெர்ருவில் நான் மறை யெனும் நடையினுர். (பா : 441)

நான்முகக் கடவுள் - பிரமதேவன். கண்ணுதற் பரமன் தானும் நான்முகக்கடவுள் தானும். (யுத் : 3477)

நான்முகச் சதுரம் - நான் முகமாக அமையும் சதுரம். நான் முகச் சதுரம் நாட்டி. (யுத் : 706)

நான் முகத் தொருவன் - பிரமதேவன். உன்னி நான் முகத் தொருவன் நின்றூழ் முறையுரைப்ப. (யுத் : 174)

நான் முகத்தோன் சேய்மதலை தோன்றல் – பிரமனுடைய புதல்வனுக்கு மகனுக்கு மகன். (கும்பகருணன்) (யுத் : 1659)

நான் முகன் - பிரமன். மயன் செய்த தவத்தால் நான் முகனளித் துளதி மாநகர நல்லோய். (கி : 875)

நான் முகன் படைத்த தெய்வ வென்றியம்படை - பிரமாஸ்திரம். (யுத் : 2252)

நான் முகன் மைந்தன் மைந்தன் - இராவணன். பிரமதேவனது குமாரனான புலத்திய முனிவனுக்குக் குமாரனான விசிரவசு முனி வனது குமாரன். வையந்தந்த நான் முகன் மைந்தன்மகன் மைந்தன் ஐயன் வேதம் ஆயிரம் வல்லோன். (சு : 483)

நான் முகனர் - பிரமதேவன். (சு : 187)

நான்றல் - 1. வழிதல். நன்னெடுங் கண்களில் நான்ற நீர்த்துளி. (அ : 492)

2. சொரிதல். பெருக்கெடுத்தல். கற்பக நறு விரை நான்ற பானம். (சு : 100)

நானகு பகைஞர் - நான் வென்று அவமதித்த பகைவர். நானகு பகைஞரெல்லாம் நகுவரென்றதற்கு நாணன். (யுத் : 1229)

நான சாரம் - கஸ்தூரியின் சாரம். நானசார முண்டிருந்த சீதச் சந்தனம். (ஆ : 664)

நானந் தீட்டுதல் - பரிமள தைலத்தைச் சிரசில் தேய்த்தல். பவள வாய் சேகர விளக்கி நானந்திட்டி. (யுத் : 3964)

நான நெய் - 1. நீராடுதற்குரிய தைலம். நான நெய் நன்குரைத்து நறும்புனலான கோதற ஆட்டி. (யுத் : 3583)

2. கஸ்தூரிப் புழுகு. நான நெய்யூட்டப்பட்ட நவையிலாக் கலவை. (யுத் : 3962)

நான நெய் விளக்கம் - வாசனையூட்டப்பட்ட நெய் விளக்குகள். நான நெய் விளக்கம் நாலிரு கோடி நங்கையர் அங்கையி லெடுப்ப. (சு : 409) [பா : பே]

நான நெய்விளக்கு - வாசனையூட்டப்பட்ட நெய் விளக்குகள். (சு : 409)

நானப் புனல் - கஸ்தூரி கலக்கப்பட்ட திரவ வடிவமான வாசனை நீர். பெய்ம்மலர்த் திறமு நானப் புனலொடு சேக்கையும். (யுத் : 3582)

நானம் - 1. புனுகு. நான நாண்மலர் நறையகில். (அ : 755)

2. கஸ்தூரி. இழுதும் நானமும் சுண்ணமுந் தூவினர். (பா:296)
3. வாசனைப் பொடி. நறுஞ் சுண்ணம் நான நன்குரைத்தார். (அ: 1074)
4. தைலம். நானந் திட்டி. (யுத் : 3964)
5. நீராட்டம். நானப் புனல். (யுத் : 3582)

நானவார் குழல் - கஸ்தூரி மத மணிந்த கூந்தல். நானவார் குழல் நாரிய ரோடலால். (பா : 1181)

நாணு - 1. பலவகையான. நாணு வீற்று மண்டலத்தியாவையும் வீழ்கில. (கி : 165)
2. என்னைப் போல். நாணு வளர்க நீ. (யுத் : 303)
3. மிகப்பல. நளிர் மணித் தேர்களும் நாணு. (யுத் : 3270)

நாணு வளர்க நீ - நீ என்னைப் போலவே சிறப்புற்று வாழ்வாயாக. (யுத் : 303)

நாணுவிதம் - பலவிதம். பலவகை. நாணுவித நளிர் போகமு நுகர்கின்ற அந்நாள் வாய். (பா : 1349) நாணுவிதம் புரண்டிருண்ட வாட்கண். (ஆ : 270) நாணுவிதப் பெருஞ்சாரிகை. (யுத் : 3375)

நானிலக் கிழத்தி - பூமி தேவி. நாயகக் கோயிலெய்தி நானிலக் கிழத்தியோடும் சேயொளிக் கமலத்தாளும் களி நடஞ் செய்யக் கண்டான். (யுத் : 4289)

நானிலக் கிழவன் மைந்தன் - சக்கரவர்த்தி திருமகன். (யுத்:2412)

நானிலப் பொறை - பூபாரம். சற்றும் நையுமா றின்றிக் காத்தான் நானிலப் பொறைகள் தீர்ந்தே. (யுத் : 4356)

நானிலம் - பூமி. நாக நாடுக நானிலம் நாடுக. (கி : 749) நானிலத் தோர் தந்தாய். (அ : 1125)(யுத் : 108)

நானிறச் சுரும்பு - பலவகையான நிறங்களையுடைய சுரும்புகள். நானிறச் சுரும்பும் வண்டும். (கி : 470)

நானிறம் - பலவகையான நிறம். நானிற நளிர் வள்ளிக் கொடி. (அ : 707)

நானுடைத் தூய்மை - நான் கொண்டுள்ள கற்புநிலையின் பரிசுத்தம். (சு : 629)

நி

நிகர் - ஒப்பு. வலியால் நின்ருயொடு நிகரார். (யுத் : 1130)

நிகர்க்க நேர்தல் - சமமாக ஒத்து வருதல். (வை. மு) (யுத் : 309)

நிகர்த்தல் - ஒத்தல். மழ விடைப் பாகன் காண்டகுஞ் சடைக் கங்கையை நிகர்ப்பன காணுய். (அ : 743) கானுயர் வரை நிகர் கார்த்த வீரியன். (சு : 456) கன்மலை நிகர்க்கல. (ஆ : 239) பிறர் நிகர்க்க நேர்வரோ. (யுத் : 309)

நிகழ்த்தல் - 1. சொல்லுதல். நங்கை நிகழ்த்தினுள். (யுத் : 3945) நின்றன நிகழ்த்தினன் புணர்ப்பில் நெஞ்சினுன். (யுத் : 27) நிகழ்த்துவாய். (யுத் : 575) நின்தனைப் பிரிந்ததுண்டோ யானென நிகழ்த்தினுனல். (யுத் : 4116) அயோத்தியில் நின் றிசைத்துள தன்மை நிகழ்த்துவாம். (யுத் ; 4124) நிகழ்த்தரும் புகழோன். (யுத் : 4041)

2. மேற் கொண்டியற்றல். நினைவுறு காரியம் நிகழ்த்து நெஞ் சினுன். (யுத் : 19) நீர் கருதுகின்றதை நிகழ்த்தும். (யுத்:3666)

நிகழ்தல் - 1. விளங்குதல். நிகழ்ந்திடு கதைகள் தம்மில். (பாயி : 15)

2. உண்டாதல். தோன்றுதல். இடை நிகழ்ந்த இராமாவதாரம். (பா : 11)

3. செல்லுதல். காமனு மருந்துயர்க் கடலில் மூழ்கினுனுமென நிகழ்ந்தது அவ்வளவில் சேனையே. (அ : 975)

4. பெருகுதல். நிகழுங்கள் நெடு நீல முகிழ்த்தலால். (யுத்:969)

5. நடத்தல். மேன்மேல் நிகழ்ந்தவா நிகழ்க. (யுத் : 1651)

நிகழ்ந்த தன்மை - நடந்த விதத்தை. தன்னுல் நடந்த விதத்தை. தன்னுல் நிகழ்ந்த தன்மை தானே தெரியச் சொன்னுள். (அ:332)

நிகழ்ந்ததை - நிகழ்ந்தது. நிகழ்ந்த செயல். ஐ–சாரியை. அரச நின் புதல்வர் போயபின் நிகழ்ந்ததை இது என நெடிது கூறினுர். (பா : 817)

நிகழ்வு - நடக்க வேண்டிய செயல். மேனிகழ்வ துண் டவுரை கேளென விளம்பும். (அ : 548)

நிகழும் கள் - பெருகுகின்ற தேன். (யுத் : 969)

நிகும்பலை - ஒரு தேவாலயம். [நிகும்பலா] அங்கு வேள்வி முற்றினால் பகைவர் தவறாது அழிவர். யான் போய் நிகும்பலை விரைவின் எய்தித் துனியறு வேள்வி வல்லை இயற்றினால் முடியுந் துன்பம். (யுத் : 2807)

நிகும்பன் - 1. இராவணன் படைத்தலைவன். செறுத்த நெருப்பை வென்றவன் நிகும்பன் என்றுளன் ஒரு நெடியோன். (யுத் : 495) (யுத் : 905) (யுத் : 1926)
2. கும்பகருணன் புதல்வருள் ஒருவன். (யுத் : 1692)

நிகும்பிலை - நிகும்பலை. (கலா) (யுத் : 2807) [பா : பே]

நிச்சயம் - 1. சாசுவதம். பிச்சமும் கவிகையும் பெய்யும் இன்னிழல் நிச்சய மன்றெனின். (அ : 26)
2. மனத் துணிவு. நிச்சயம் எனும் கவசம். (ஆ : 509)
3. மெய். நிச்சயம் பகலுந்தம் இமைகள் நீங்கல. (ஆ : 684)

நிசரத கணைகள் - உண்மையான இரத்தக் கணைகள். பகைவர் உடலைத் தைத்து இரத்தக் கறை படிந்த அம்புகள். வரமும் வாழ்வும் ஓர் நிசரத கணைகளால் நீறு செய்ய. (பா : 201)

நிசாசரர் - இரவிற் சஞ்சரிப்பவர். அரக்கர். தெற்கு வாயிலிற் சென்ற நிசாசரர். (யுத் : 1041)

நிசாசரன் - அரக்கன். இரவிற் சஞ்சரிப்பவன். பிசாசன் என்றொரு பெயர் பெற்ற பெய்கழல் நிசாசரன். (யுத் : 54) (யுத் : 2130)

நிசி - இரவு. நனி இருளைக்கவ்விய நிசியொரு கடையுறும் அளவில். (ஆ : 108)

நிசிசரர் - இரவிற் சஞ்சரிப்போர். அரக்கர். அலந்தார் நிசிசர ராமென இமையோரொடு மார்த்தார். (ஆ : 460)

நிசிசரன் - அரக்கன். இடைந்து போய் நிசிசரற்கு இராமன் எவ்வம் வந்தடைந்த போ தழைக்குமே. (ஆ : 820)

நிடதம் - ஒரு மலை. இம் மலைக்கும் ஒன்பதினாயிர முளதாலி யோசனையினிடத மென்னும் செம்மலை யுளது. (யுத் : 2680)

நிடத மென்னும் செம்மலை - நிடத மென்னும் செவ்வியமலை. (யுத் : 2680)

நிணங்கொள் பிணக்குவை - கொழுப்புள்ள பிணக்குவியல். என் அம்பாலே கொன்று குவித்த நிணங்கொள் பிணக்குவை. (அ : 101)

நிணப் பல் - நிணம் படிந்த பல். சுடர்க்கணை கூற்றின் நிணப் பல்லோடு பாய்தலினுல். (யுத் : 3456)

நிணம் - 1. கொழுப்பு. தூம வேல் அரக்கர் தம் நிணமும் சோரியும். (பா : 467) நிணப்பல். (யுத் : 3456)
2. இறைச்சி. நிணமுண்ட நெடு வெண் பல். (ஆ : 20) நிணப் பெருஞ் சேறு. (யுத் : 2172)

நித்த நியமத் தொழில் - நாள் தோறும் முறைப்படி செய்ய வேண்டிய வேலைகள். நித்த நியமத் தொழில் முடித்து நெடு வானத்துத் தமர் உறங்கினர். (சு : 260)

நித்தர் - நித்திய சூரிகள். விண்ணுளோர்களும் நித்தரும் முறை முறை நெருக்கி ஆர்ப்புற. (பா : 283)

நித்திய நியமம் - நித்திய கருமங்கள். நித்திய நியம முற்றி. (பா : 888)

நித்தில நன்னகை - முத்துப்போன்ற அழகிய பற்கள். வாள் நித்தில நகையார்களை. (அ : 441) [பா : பே]

நித்திலம் - 1. பல். நீண்டானதுரைத்தலும் நித்திலந் தோன்ற நக்கு. (அ : 423)
2. முத்து. நித்தில முறுவல். (கி : 826)

நித்தில முறுவல் - முத்துக்களாகிய பற்கள். தாமரை முகமும் நித்தில முறுவலும் காண்பரால் முழுதுங் காண்கிலார். (கி : 826)

நித்தில வெண்ணகை - முத்தை ஒத்த வெள்ளிய பற்கள். வாணித்தில வெண்ணகையார் தர. (ஆ : 441)

நிதம்பபாரம் - நிதம்பச்சுமை. நிதம்பபாரத்தொர் நேரிழை.(பா:1037)

நிதம்பம் - அல்குல். (பா : 1037)

நிதி - 1. பொன். மான்முகன் காசுமா நிதியுங்கொடு. (யுத்:3925)
2. பொருள். நீதிவழி நேய நீட்டும்... மாதர். (ஆ : 803)

நிதிக்கிழவன் - குபேரன். தெய்வ நிதிக்கிழவன். (யுத் : 1716)

நிதிகிழவன் - குபேரன். இறுகின நிதிகிழவன் பேரிசை கெட அளகை யெறிந்தார். (சு : 766)

நிதிச்சாலை - கருவூலம். பண்டாரம். நிறைநிதிச் சாலை தாழ் நீக்கி. (பா : 291)

நிதிநெடுங் கிழவன் - குபேரன். நிதிநெடுங் கிழவனை நெருக்கி. (சு : 882)

நிதி மும் மூன்று - குபேரனுடைய ஒன்பது நிதிகள். நலங்கிளர் நிதி மும் மூன்றும் நல்குவென். (கலா) (யுத் : 1632) [பா : பே]

நிதியம் - 1. பொன். கோடிமேலும் நிதியங் கொடுத்தனன். (அ : 798)

2. செல்வம். நிதியமும் புனைபொற் பூண்களின் வருக்கமும் வரம்பில நனி வழங்கினான். (யுத் : 4180)

3. சங்கம் பதுமம் முதலிய ஒன்பது நிதியங்கள். இழையும் ஆடையும் மாலையும் சாந்தமும் ஏந்தி உழையர் என்ன நின்று உதவுவ நிதியங்கள். (சு : 122)

நிதி யிரண்டு - சங்கநிதி பதுமநிதி என்னும் இருவகைச் செல்வங்கள். நலங் கிளர் நிதியிரண்டும் நல்குவென். (யுத் : 1632)

நிதியின் குவை - செல்வக் குவியல். கொள்ளக் குறையா நிதியின் குவையும் முதலாமெவையும் கள்ளக் கைகேசிக்கே உதவி. (அ : 357)

நிதியின் வெறுக்கை - பொருளின் திரள். மேவு காதல் நிதியின் வெறுக்கையும் பூவின் வானவர் கொண்டனர் போகவே. (அ : 825)

நிந்தனை - 1. பழிப்புக் குரிய செயல். நிந்தனை இதன் மேலுண்டோ. (யுத் : 944)

2. பழி. நிந்தனை அரக்கி. (ஆ : 273) நிந்தனை நறவம். (யுத் : 406)

நிந்தனை நறவம் - இகழத்தக்க கள். நிந்தனை நறவமும் நெறியிலூன்களும் தந்தன கண்டிலேன். (யுத் : 406)

நிந்தனை நிகழ்த்தல் - பழித்தல். நிந்தனை செய்தல். நிந்தனை தேவரை நிகழ்த்தினேன். (அ : 896)

நிபம் - காரணம். வெய்யன் வர நிபம் என்னை கொல். (பா:1363) ஊடு வந்துற்ற தென் கொலோ நிபம் என உலைந்தார். (யுத்:2562)

நிமலப் பாதம் - குற்ற மற்ற திருவடிகள். ஆழியான் நிமலப்பாதம். (ஆ : 382)

நிமித்தம் - 1. தீக்குறி. துன்னிமித்தம். எதிரிலாதவர் இறுதியின் நிமித்தமா எழுந்தாண்டு. (ஆ : 321)
2. அறிகுறி. சகுனம். நல்லன நிமித்தங்கள் நனி நயந்துள. (யுத் : 405)

நிமித்திரு மரபுளான் - நிமி என்னும் மன்னனின் சிறந்த மரபிலே தோன்றின தசரதன். நிமித்திரு மரபுளான் முன்னர் நீர்மையின் சுமித்திரைக் களித்தனன். (பா : 271)

நிமித்து - நிமித்தம். கொலை வாளரக்கனோடு ஏற்றுப்போர் செய்த தென்னிமித்தென. (கி : 985)

நிமிர்கின்ற நிமிர்ச்சி - எழுகின்ற எழுச்சி. நீர்மேற் கடல்மேல் நிமிர்கின்ற நிமிர்ச்சி நோக்கா. (சு : 64)

நிமிர் கோல் - 1. நீண்ட துடுப்பு. தோலுடை நிமிர் கோலிற் றுழவிட. (அ : 678)
2. ஓங்கிய முக்கோல். (திரி தண்டம்) குடையினன் நிமிர் கோலன். (அ : 710)

நிமிர்ச்சி - 1. உயர்வு. வேகந்தருவன தடக்கை தள்ளா நிமிர்ச்சிய. (சு : 39)
2. ஓங்குதல். எழுச்சி. நீற்மேற் கடன்மேல் நிமிர்கின்ற நிமிர்ச்சி நோக்கா. (சு : 64)

நிமிர்தல் - 1. ஓங்குதல். மா மங்கு பாதகம் விடங்கனல் வயங்கி நிமிர. (ஆ : 14)
2. நீளுதல். முடுகிக் கைத்தவற்றின் நிமிரக்கன்றி விசிறும் எய்த்த மெய்ப் பெரிய கேழலென. (ஆ : 33) நிமிர் குழல் மடவார். (பா : 428)
3. விளங்குதல். இருட் பிழம்பை நக்கி நிமிரும் நிலாக்கற்றை. (பா : 635)
4. வளர்தல். சுடர்க் குதிரையின் வாய் முகத்திடை நிமிர்ந்து. (அ : 26) (உ.வி) இன்றது நிமிர்வது. (யுத் : 2369)
5. பெருகுதல். படியடங்கலும் நிமிர் பசுங்கண் மாரியால் பொடியடங்கின மதிற்புறத்து வீதியே. (அ : 496)
6. போதல். போக்கல். முன்னுடைத் தாய தீய முழுப்பகை மூவர்க்கின்றி நின்னிடைத்தாய தன்றே இன்றது நிமிர்வ தென்றான். (யுத் : 2369)

7. **கடத்தல். மேம்படுதல். கடந்து வெல்லுதல். வென்றுயர்தல்.** சேனை வெள்ளம் உலகொரு மூன்றின் மேலும் மீண்டுள அதனை ஐய எங்ஙனம் நிமிர்ந்த தென்ருன். (யுத் : 3544) உலகொரு மூன்றையும் நிமிர்வாய். (யுத் : 2488)

8. **மேலும் மேலும் மிகுதல்.** மேக்கு நிமிர் விம்மலள் விழுங்கலுறு கின்ருள். (சு : 556)

9. **எடுப்பாக ஒலித்தல்.** மகர யாழ் எடுத்த இன்னிசை நிறங் கிளர் பாடலாக நிமிர்வ. (பா : 140)

10. **பரத்தல்.** நிமிர்ந்த வெங்கதிர்க் கற்றையும் நீங்குற. (பா : 695)

11. **மேலெழுதல். உயர்தல்.** நீர்மேற் கடல்மேல் நிமிர்கின்ற நிமிர்ச்சி நோக்கா. (சு : 64) கடுத்த கராம் கதுவ நிமிர்கை யெடுத்து. (ஆ : 49)

12. **மிகுதல்.** ஈசன் இவ்வுலகினை யழிக்கு நாளெழும் ஓசையின் நிமிர்ந்தது ஒல்லென் பேரொலி. (அ : 690) கைதலை வைத்த பூசல் கடலொடு நிமிருங்காலை. (யுத் : 3599)

13. **தோன்றி வளர்தல்.** பேதியாது நிமிர்பேத உருவம் பிறழ் கிலா. (ஆ : 1)

14. **எழுந்து வீசுதல்.** நிமிர்ந்த மாருதத்தினும் மண்ணின் மேல் எவற்றினுமாளான். (யுத் : 146)

15. **அப்பாற் படுதல்.** நேடி நூல் தெரிந்துளோர்தம் முணர் விற்கு நிமிர நின்ருன். (யுத் : 613)

16. **மேடாதல்.** குவிந்தன பிணக்குவை சுமந்து கோணிலம் நிமிர்ந்தது. (யுத் : 1083)

17 **விரைந்து வருதல்.** அக்கல் நீந்தரு நெருப்புச் சிந்தி நிமிர்தலும். (யுத் : 1090)

18. **தீர்த்தல்.** நெடும் பகை நிமிர வந்தாய். (யுத் : 2370)

19. **ஒளிர்தல்.** நிமிர வல்லாய். (யுத் : 2488)

20. **உயர்தல். மேலே செல்லுதல். புறப்படுதல்.** நீளுறு சேனையினேடு நிமிர்ந்தான். (யுத் : 2835)

21. **எட்டாமல் உயர்தல்.** கல்விக்கு நிமிர்ந்த கீர்த்திக் காகுத்தன் தூதனுகி. (யுத் : 2843)

22. **தலை நிமிர்தல்.** நின்ற வா ளெயிற் றரக்கனு முவகையின் நிமிர்ந்தான். (யுத் : 2489)

23. **மேன்மை பெறுதல்.** நிலவைச் செஞ் சடை வைத்தவன் வரந்தர நிமிர்ந்தார். (யுத் : 3217)

நிமிர்ந்த கூட்டம் - அளவிறந்த கூட்டம். நிமிர்ந்த கூட்டச் சுற்றமும் தானும் உள்ளந் தூயவன். (அ : 656)

நிமிர்ந்த சேனை - பெரிய சேனை. பரதனும் நிமிர்ந்த சேனையைப் பின்தரு கென்று. (அ : 1113)

நிமிர்வு - 1. உள்ளத்தின் ஊக்கம். அரக்கன் நிமிர்வெய்தி வேரே நிற்கும் மீள்கில னென்னு விடலுற்றுன். (யுத் : 3803)

2. **நிமிர்தல்.** வானோர் நிருமித்தன படைபற்றற நிமிர்வுற்றன. (யுத் : 3714)

நிமிரச் செல்லுதல் - நேராகப் பாய்ந்து செல்லுதல். இவன் யாரென்று நிமிர்கின்ற எல்லை நிமிரச் சென் றுன்னுமுன்னர் உடனுயினுன் இவ்வுலகேழு மூடு சிறையான். (யுத் : 2214)

நிமைப்பு - இமைப்பு. ஒரு கணம். நிருதர் கோ மகன் நினைந்துமிச் செல்வ தோர் நிமைப்பில். (யுத் : 3623) [பா : பே]

நியமத்துறை முடித்து - நித்திய கருமங்களைச் செய்து முடித்து. (பா : 718)

நியமம் - செய்கடன். கர்மானுஷ்டானம். மாலைவாய் நியமஞ் செய்து. (அ : 665)

நியாயம் - நடுவுநிலைமை. நீதி. நிறந் திறம்பினும் நியாயமே திறம்பினும். (அ : 163)

நியாய மத்தனைக்கு மோர் நிலயமாயினுன் - எல்லா நீதிகளுக்கு மோர் இருப்பிடமான இராமபிரான். திருவுள முருகப் புல்லினுன் நியாய மத்தனைக்கு மோர் நிலயமாயினுன். (அ : 1120)

நிர் - நீர். இரும்புண்ட நிர். (ஆ : 916)

நிரத்தல் - 1. பரவுதல். பணை நிரந்தன பாட்டொலி நிரந்தன. (அ : 53)

2. **நிரம்புதல்.** நிரக்கும் நல்லொளி பரந்தன உல கெலாம் நிமிர. (யுத் : 2308)

3. **திரளாதல்.** நிரந்த பேய்க்கணம். (யுத் : 1471)

4. **வரிசையாக அமைதல்.** (உ. வி) (யுத் : 1471)

நிரந்த - 1. நிறைந்தன. சாம கீதம் நிரந்தவே. (அ : 245)
2. வரிசையாக அமைந்த. கரந்தை மத்தமோ டெருக்கலர் கூவிளம் நிரந்த பொற்சடை நின் மலக் கொழுந்து. (பா : 529)
3. திரளாகிய. நிரந்த பேய்க்கணம். (யுத் : 1471)
4. நிறைந்த. தேமலர் நிரந்த கூந்தல். (ஆ : 628)

நிரந்தரம் - 1. எப்பொழுதும். இடைவிடாமல். நிரந்தரம் இமைப்பிலா நெடுங்கண் ஈண்டிய புரந்தரன். (அ : 237) (யுத் : 4125) (அ : 1149) (யுத் : 4047) (சு : 335)
2. இடையீடின்றி. நிரந்தரம் நெடும்பிணம் விசும்பின் நெஞ்சுற. (யுத் . 1780)

நிரந்தன - பரவின. பணை நிரந்தன. (அ : 53)

நிரப்பினோர் - வறுமையுற்றவர். நேர்வரு தாயத்து நிரப்பினோர். (யுத் : 387)

நிரப்பு - வறுமை. நிரப்பினோர். (யுத் : 387)

நிரப்புதல் - 1. சொல்லி முடித்தல். மாயமான் வந்த தாதியா நின்றது நிரப்பினனரோ. (ஆ : 1003)
2. செய்து முடித்தல். நிறைவு செய்தல். நிற்றேடி வருந்த நிரப்பினையோ. (ஆ : 1108)
3. விவரமாகக் கூறுதல். சடாயுவைத் தருக்கினுலுயிர் நீக்கினர் யார் அது நிரப்புவீர் என்ருன். (கி : 974)
4. திருட்டாந்தப்படுத்தல். நிறைவு செய்தல். நிரப்புதி நிலைமை. (யுத் : 252)
5. இயற்றுதல். பொருள் வழித் தண்டமிழ் நிரப்பும் புலவர் சொற்றுறை புரிந்தவும் போன்றன சரங்கள். (யுத் : 1444)
6. வறுமையுறுதல். நேர்வரு தாயத்து நிரப்பினோர். (யுத் : 387)

நிரப்புதி நிலைமை. அந்த நிலைமையைப் புலப்படுத்தி நிறைவு செய்வாயாக. (யுத் : 253)

நிரம்புதல் - 1. திருத்தியடைந்திருத்தல். (வை.மு)
2. நிறைதல். (அண்) நேய நெஞ்சின் விரும்பி நிரம்பினன். (அ : 785) (அ : 174) நிரம்பல. (கி : 804)
3. மிகுதல். மொய்யராகம் நிரம்ப ஆசை மேன் முருங்குதீயின் முழங்க. (அ : 239)

நிரம்புறுதல் - நிரம்புதல். பொருந்தல். வரம்பிலா மதகரி உறையும் அவ்வனம் நிரம்புற வளர்ந்தன. (சு : 380) நிரம்புறு மன்பால். (அ : 654a)

நிரயம் - நரகம். நிரய முற்றிய சகரர்கள். (பா : 536)

நிரல் - வரிசை. நிரல் படக் கதிர்க் குழாம் நிமிர. (சு : 1082) நிரற்றுறு பறவைக் குலம். (யுத் : 2818)

நிரவுதல் - நிரம்புதல். நிரவிய தேரின் தன் மேல் நெடுந்தலை கிடந்த. (யுத் : 1113)

நிரற்றுறு பல் பறவைக்குலம் - (நிரல்துரு) வரிசையாக நெருங்கி யிருந்த பல பறவைக் கூட்டம். (யுத் : 2818)

நிராசனர் - தேவர். உணவை வேண்டாதவர். [அசனம்] நின்று வேள்வியையு முற்றி நிராசனர் வருக என்றான். (பா : 677)

நிராயுதன் - ஆயுதம் இல்லாதவன். மறைந்து நிராயுதன் மார்பின் எய்யவோ வில்லிகல் வல்லதே. (கி : 327)

நிருத்தம் - நடனம். கூத்து. நிருத்தமாடினர் நின்று விளம்புவார். (ஆ : 140)

நிருதக் கடல்தானை - நிருதரின் சேனைக் கடல். சாய்ந்ததால் நிருதக் கடற்றானையே. (யுத் : 1013)

நிருதக்குலம் - அரக்கர் கூட்டம். அரக்கர்குடி. நிருதக்குல முடித்து வினை முற்றிப் பொருக்க அகல் கென்னினும் அது இன்று புரி கின்றேன். (சு : 614) (யுத் : 3368)

நிருதர் - அரக்கர். நிருருதி என்னும் திக் பாலகியின் மரபிலே தோன்றியவர் என்ற காரணம்பற்றி அரக்கருக்குப் பெயர். ஈரமில்லா நிருதர். (யுத் : 8)

நிருதர்க்கிறை - அரக்கர்க் கரசனான இராவணன். (ஆ : 692)

நிருதர் முதலவன் . விபீடணன். (யுத் : 3929)

நிருதன் - அரக்கன். நிருதன் பாரொடுங்குறு பருப்பதமெலாம் வேரொடுங் கடிதெடுத்து. (ஆ : 29)

நிருதி - 1. அரக்கி. நீர் நாட கேளென்று நிருதி கூறும். (ஆ : 362) **2. தென் மேற்கு.** நிருதியிற் பிறந்த வீரர். (சு : 823)

நிருதித்திக்கில் நின்றவன் - நிருதித்திக்கில் நின்ற திசைக்காவலன். (யுத் : 3804)

நிருதித்திக்கு - தென்கிழக்கு. (கலா) தென்மேற்கு. (வை.மு) நிருதித்திக்கில் நின்றவன். (யுத் : 3804)

நிருபர் - அரசர். நிருபர்க் கொரு பழிபற்றிட. (பா : 1361)

நிருபர்க்கு ஏந்தல்-அரசர்களுக்குத் தலைவனான தசரத சக்கரவர்த்தி. நிருபர்க் கேந்தலும் தூய நற் புனல் படீஇ. (பா : 264)

நிருமித்தல் - 1. படைத்தல். நின்னுள்ளே என்னை நிருமித்த. (சு : 815) நிருமித்தாய். (யுத் : 290) மீள நிருமித்த என்ன. (யுத் : 2217)

2. தொடுத்தல். (வை.மு) நிருமியாவிட்ட நெடுங்கணை. (யுத் : 555)

3. மனத்தால் சங்கற்பித்தல். எண்ணுதல். (உ.வி) (யுத் : 555)

நிரை - 1. வரிசை. ஒழுங்கு. நிரையார் கலையின் கடலே. (அ:328)

2. கூட்டம். செறிவு. நிரைவளை முன்கை. (சு : 1056)

நிரைத்தல் - 1. வரிசையாக அணிதல். வரிசைப் படுத்தல். நீளர வச்சரி தாழ்கை நிரைத்தாள். (ஆ : 1085) கண்ணநீர் நிரைத் திடையிடை விழ. (அ : 453)

2. முறையே பயிலுதல். இரைத்த மறை நான்கினெடு இயைந்த பிறயாவும் நிரைத்த நெடுஞானம், (ஆ : 160)

3. இபற்றுதல். நேமிப் பெயர் யூக நிரைத்து. (யுத் : 2907)

நிரைவளை - முன் கையிற் செறிந்த வளை. நிரை வளை மகளிர். (சு : 1056)

நில் - நில்லாய். நில்லாய். (சு : 176) (யுத் : 1724) நில்லடா நில்லு. (யுத் : 2981) நில்லா உயிர். (சு : 958) நில்லும் நில்லும். (ஆ : 20) நின் மின். (சு : 1152) நிற்றும். (யுத் : 3311) நிற்றி ஈண்டு. (அ : 656) நின்று நின்று. (யுத் : 1385) நின்ற. (கி:806) நின்றது. (ஆ : 567) நின்றன. (பா : 330) நின்றெழுந்தான். (அ : 1021)

நில்லடா நில்லு நில்லு - நில் அடா நில்லு நில்லு. நில்லடா நில்லு நில்லு நீயடா வாசி பேசிக் கல்லெடா நின்ற தென்னே. (யுத் : 2981)

நில்லாய் நில்லாய் - நில் நில். நில்லாய் நில்லாய் என்றுரை நேரா. (சு : 176)

நில்லா வுயிர் - உடல் நிற்க மாட்டாது தவிக்கின்ற உயிர். மாடே தனி நில்லா உயிரொடு நின்றுரே. **(சு : 958)**

நில்லும் நில்லும் - நில்லுங்கள் நில்லுங்கள். நில்லும் நில்லு மென வந்து. **(ஆ : 20)**

நில - நிலவு. நில இலங்கிய துகில். **(சு : 1208)**

நிலக்கிழத்தி - பூமிதேவி. என்னே பெரு நிலக்கிழத்தி நோற்றும் பெற்றிலள் போலும் என்று. **(அ : 663)**

நிலக் கிழவர் - அரசர். இரு நிலக் கிழவ ரெல்லாம். **(அ : 257)**

நிலக் குலக் கொழுந்து - பூமிதேவி. (கலா) (வை.மு) **நிலமகளின் குலக் கொழுந்து போன்ற அயோத்திமாநகரம்.** வாழ் நிலக் குலக் கொழுந்தை மௌலி சூட்டியன்னவே. **(பா : 118)**

நிலக் கொடி - நில மாது. பூமிதேவி. உம்பரும் உய்ந்தார் நிலக் கொடியுந் துயர் நீத்தனள். **(பா : 301)**

நிலத்தியல் நீரியல் - நீரினது தன்மை நிலத்தினது தன்மையைப் பொறுத்தது. நிலத்தியல்பு நீரின் இயல்பு ஆதல். வலத்தியல் அழிவதற் கேது மையறு நிலத்தியல் நீரியல் என்னும் நீரதால். **(யுத் : 1300)**

நிலந்தீதல் - நிலம் கொதிப்புறுதல். இரு நிலந்தீந்து நிணையும் நெஞ்சமும் சுடுவ தோர் நெடுஞ்சுர நேர்ந்தார். **(அ : 727)**

நிலம் - 1. இடம். வானரம் நிலையில் நின்றன செல்ல நிலம் பெரு. **(யுத் : 667)**
2. நிலமகள். நிலம் பொறை இதுவென நிமிர்ந்த கற்பினள். **(ஆ : 1139)**

நிலம் கம்பித்தல் - நிலம் அசைதல். கதிரும் வானமும் சுழன்றன நெடு நிலங் கம்பித்த. **(யுத் : 209)**

நிலம் குழிபடல் - பூமி குழிதல். குந்தி வந்தனன் நெடு நிலங் குழிபடக் குரை கடல் கோத்தேற· **(யுத் : 1567)**

நிலம் சேர்த்துதல் - நிலத்திற் கொன்று குவித்தல். உயிர் தேறினரை நெடு நிலஞ் சேர்த்தினன். **(யுத் : 2112)**

நிலம் புணர்தல் - அரசாளுதல். குமரன் புணரான் நிலமே!வனமே போவானே யாமென்று. **(அ : 350)**

நிலம் புல்லுதல் - நிலத்தில் விழுந்து வணங்கல். *சீறடிப் பூமுக நெடு நிலம் புல்லி.* (ஆ : 826)

நிலம் பொறை நீங்குதல் - பூமியின் பாரம் ஒழிதல். *இரு நிலம் பொறை நீங்க.* (யுத் : 1568)

நிலம் பொறை யாற்றல் - அரசாளுதல். *நிலம் பொறை யாற்றலன் நெஞ்சம் தூய்தெனு.* (அ : 887)

நிலம் முதுகுளுக்கல் - பூமி தாங்கமாட்டாது நெளிதல். *உய்த்தனர் நில முதுகுளுக்கிக் கீழுற வைத்தனர்.* (பா : 759)

நிலம் முயங்குதல் - தரையில் விழுதல். *மயங்கினுன் நிலம் முயங் கினுன்.* (யுத் : 2038)

நிலம் விரல் கிளைத்தல் - கால் விரலால் நிலத்தைக் கீறிக்கொண்டிருத்தல். நாணத்தின் செயல். *நிறங்கரிந்திட நிலம் விரல் கிளைத் திட நின்ருன்.* (யுத் : 1212)

நிலமகள் - பூமிதேவி. *நிலமகள் முகமோ.* (பா : 94) *இருநில மகள் கையேந்தி.* (கி : 474)

நிலமகள் முதுகாற்றல் - பூமிதேவி முதுகின் நோவை ஆற்றிக் கொள்ளல். *நெடு நிலமகள் முதுகாற்ற.* (பா : 753)

நில மடந்தை - நிலமாகிய நங்கை. *நெடுநில மடந்தை புறமயிர்த் தலம் பொடித்தன போன்றன பசும்புல்.* (கி : 486)

நில மடந்தை முதுகுளுக்குறல் - பூமிதேவி யாகிய பெண் முதுகு சுளுக்கினளாதல். *மூரி நீராடை இரு நில மடந்தை முதுகுளுக் குற்றனள் முரல.* (சு : 419)

நிலமா மகள் - பூமாதேவி. *நிலமாமகள் பேர்வளென.* (யுத் : 1698)

நிலமா தென்னும் திரு - பூமி தேவி என்ன பிராட்டி. *செய்யாள் என்னும் பொன்னும் நிலமா தென்னும் திருவும் உய்யார் உய்யார்.* (அ : 360)

நில முயங்குதல் - தரையிற் சோர்ந்து விழுதல். *உதிர வாரி சோர் வுற மயங்கினுன் நில முயங்கினுன்.* (யுத் : 2038)

நிலயம் - உறைவிடம், இருப்பிடம். *கருணையின் நிலயமன்னுன்.* (யுத் : 921)

நிலவரை - பூமியின் எல்லை. *நிலவரைத்தரு பொருள் வழித் தண்ட மிழ் நிரப்பும் புலவர்.* (யுத் : 1444)

நிலவரைப்பு - நிலவுலகம். பெருநில வரைப்பில் மன்னும் மன்னுயிர்க்கு இராமனின் மன்னவரில்லை என்ன உன்னியும். (அ : 33)

நில விலங்கிய துகில் - நிலவு போல விளங்கும் வெண்ணிறமான ஆடை. நில விலங்கிய துகிலினை நெருப்புண. (சு : 1208)

நிலவின் தாரைவாள் - நிலாக் கதிர்களாகிய வாள். (யுத் : 470)

நிலவின் தோற்றம் - நிலவின் காட்சி சொரிந்த பாலொத்தது நிலவின் தோற்றமே. (சு : 51)

நிலவினுக்கிறை - சந்திரன். நிலவினுக் கிறையு மீனு நீங்கின. (யுத் : 3210)

நிலவு - சந்திரன் போன்ற பளபளப்பு. கேடகம் வெயில் வீசக் கிளரயில் நிலவீன. (பா : 1277)

நிலா - 1. நிலவு. நெடு நிலா. (பா : 1047-8) கேழுலாம் முழுமதி நிலாவிற் கிள ரொளி இருளைக்கீற. (சு : 31) தண்ணிலா. (சு : 150)

2. நிலவு போன்ற ஒளி. வெயில்களும் நிலாக்களும் புரள. (யுத் : 2491)

நிலாக்கணை - அர்த்த சந்திர பாணம். வெண்ணிலா முரட்கணை தூர்த்தனன். (யுத் : 2469)

நிலாக்கதிர் - சந்திர கிரணம். நீக்க மின்றி நிமிர்ந்த நிலாக்கதிர் தாக்க வெந்து தளர்ந்து சரிந்தனள். (பா : 642)

நிலாக் கற்றை - நிலவின் தொகுதி. இருட் பிழம்பை நக்கி நிமிரும் நிலாக்கற்றை. (பா : 635) நிலாச்சுடர்ப் பனிமென் கற்றை. (ஆ : 668)

நிலாம் - நிலாவும். ஒளிரப்பெற்ற. பூணிலாமுலை மேல் ஆர முத்தையான் புகல்வ தென்னோ. (பா : 1209)

நிலாம் மலர் - விளக்கம் மிக்கமலர்.

நிலா முன்றில் - நில வெறிக்கும் முற்றமாகிய அரமியத்தலம். மேனி வந்தெழுந்த மா்ட வெண்ணிலா முன்றில் நண்ணி. (சு : 278)

நிலாவுதல் - தோன்றுதல். உண்டாதல். உள் நிலாவிய துயரம் பிடித்துந்த. (பா : 328) வான் நிலாம் நெடு வாடையும். (அ : 239

நிலை - 1. நிலைத்து நிற்றல். உயிரின் நிலை காணுதியோ. (ஆ : 908) நிலைக்கலாமையும். (யுத் : 399)

2. இருப்பிடம். கொடுமைக்கோர் நிலையே போல்வான். (கி : 893)

3. யாவரினும் உயர்ந்த தலைமை நிலைமை. நிலையெடுத்து நெடு நிலத்து நீ இருக்க. (ஆ : 325)

4. பூமி. நிலைமிசை விசும்பிடை நெருக்க. (ஆ : 422) நிலையின் மேல் பதைக்குந் தாளள். (யுத் : 3189) [பா . பே]

5. நிற்றற் குரியது. நிலை முகவலயங்கள் நிமிர்ந்து நீங்கிட. (பா : 819)

6. நிற்றற் குரிய நீர்மை யுடையது. நிலை மிகு தடங்கள். (ஆ : 119)

7. நல்வழி. நிலை கோடலில் வென்றி அரக்கர். (யுத் : 3464)

8. தன்மை. நில்லா உலகின் நிலை நேர்மையினல். (ஆ : 783)

9. ஆழம். (உ.வி) (ஆ : 119)

10. நிலயம். நெறியார் மறையின் நிலையே. (அ : 328)

நிலைக்குவடு - நிலைத்த உபரிகைகள். நிலைக் குவட்டியிடை நின்ற நங்கைமார். (அ : 490)

நிலை கிடந்த - அசைவற்றுக்கிடந்த. நிலை கிடந்த உடல் நிலத்தே என்றுன். (யுத் : 3928)

நிலை கிடந்த கோபுரம் - நிலைகளை யுடைய கோபுரம். (வை.மு) நிலை கிடந்த நெடு மதிற் கோபுரம். (யுத் : 1289)

நிலை குலைதல் - நிலை கெடல். நிலை தடுமாறல். வச்சிர முட்டி தன் நிலை குலைந்து விழுதலின். (யுத் : 1017)

நிலை கெடுத்தல் - நிலை கெடுத்து வெல்லுதல். எண்டிசை காக்கு மாக்களை நிலை கெடுத் தேனெனும் மாற்றம் நேருநீ. (சு : 452)

நிலை கோடல் - நிலை மாறுதல். நன்னெறியை ஏற்றல். நிலை கோடலில் அரக்கர். (யுத் : 3464)

நிலைத்தலை குலைந்து சாய்ந்தார் - நிலை பெறுதவர்களாய்த் தளர்ந்து தரையில் சாய்ந்தார்கள். (யுத் : 2149) [பா : பே]

நிலை தடுமாறி நிற்றல் - இயல்பான தன்மை நிலை குலையப்பெறல். தஞ்சொற்கள் குழறித் தத்தம் நிலை தடுமாறி நின்றுர். (பா:1220)

நிலை தருதல் - இறவாது உயிரோடு நிற்றல். நின்றுந் நிலை தருவா யெனின். (யுத் : 1144)

நிலை நிற்றல் - பதவியில் நிலையில் இருத்தல். தேவரோ அவுணர் தாமோ நிலை நின்று வினையிற் றீர்ந்தார். (சு : 459)

நிலை நிறுத்தல் - நிலை பெறச்செய்தல். ஊழி பலவும் நிலை நிறுத்தற்கு ஒருவன் நீயே உளையாளுய். (சு : 599)

நிலை பெறுத்தல் - காத்தல். நிலை பெறச்செய்தல். உலகம் யாவையும் தாமுளவாக்கலும் நிலைபெறுத்தலும். (பா : 1)

நிலை பேர மறித்தல் - நிலை பேரும்படி மறித்துத் தள்ளுதல். புற்றின் வள்ளுகிரால் நிலைபேர மறிப்ப நிகர்ப்பனவால். (யுத் : 2930)

நிலை மிகுதடங்கள் - நிலைக்கு மேற்பட்டு ஆழமான குளங்கள். இந் நெறி பழுவமும் இனிய சூழலும் நிலை மிகு தடங்களும் இனிது நீங்கினுர். (ஆ : 119)

நிலை முகம் - நிற்றற்குரிய இடம். நிலை முக வலயங்கள் நிமிர்ந்து வீங்கிட. (பா : 819)

நிலை முக வலயங்கள் - தம்மிடம் நிலை பெற்ற தோள்வளை. நிலை யான இடத்தைக் கொண்ட தோள்வளை. (பா : 819)

நிலைமை நிரப்புதல் - நிலைமையை ஞாபகப்படுத்துதல், காட்சியளவை யாற் காட்டுதல். நிரப்புதி நிலைமை என்ருன். (யுத் : 253)

நிலையம் – வீடு. நெஞ்சு பூத்த தாமரையின் நிலையம் பூத்தாள். (கி : 32)

நிலையறிதல் - நிலையுடையவனுக அறிதல். நீயறிதி எப்பொருளும் அவை யுன்னை நிலையறியா. (ஆ : 55)

நிலையா - தடைப்பட்டு நிற்காமல். எரியின் வார்கணை இராமன் விட எங்கு நிலையாது உருவி ஓட. (ஆ : 34)

நிலையாத நிலை - சஞ்சல நிலை. நிலையாத நிலையுடையேன் நேய நெஞ்சின் நலங்காண நடந்தனையோ. (ஆ : 198)

நிலையிட - அளவிட. நிலங்கள் தாங்குறும் நிலையினை நிலையிட. (அ : 60)

நிலையில் தீர்தல் - நிலையழிதல். தேர்ப்பாகன் நிலை கண்டே நிலையில் தீர்ந்தார். (அ : 587)

நிலையில்லாத் தீவினை - நிலையில்லாத பாபம். நிலையில்லாத் தீவினையும் நீ தந்ததன்றே. (ஆ: 103)

நிலையில்லா வாழ்வு - நிலையில்லா உடலோடு வாழ்வது. அந்தோ நிலையிலா வாழ்வை இன்னும் நினைவனே நினைவிலாதேன். (யுத் : 3191)

நிலையெடுத்து - உயர்ந்த தலைமையை மேற்கொண்டு. (ஆ : 325)

நிவத்தல் - 1. மேலெழுதல். நிவந்தன புருவம் நன்னுதலில். (பா : 492)

2. உயர்ந்திருத்தல். மதி தொட நிவந்தன மகர தோரணம். (அ : 128)

3. பொலிதல். உள் நிவந்த நகையும் ஒன்று. (பா : 707)

4. வளர்தல். கோவையார் வடக் கொழுங்குவடு ஓடிதர நிவந்த. (பா : 898)

5. மேலாதல். (உ. வி) (பா : 707)

6. நிறைந்திருத்தல். தூ நிவந்த வேல். (கி : 900)

7. உயர்ந்து விளங்குதல். நிவந்த நீராள். (கி : 662) [பா : பே] நிவந்த வேதியர். (ஆ : 135) நிவந்த அந்தணர். (அ : 72)

8. ஓங்கி எழுதல். புனலிடை நிவந்த தாமரை. (யுத் : 4005)

நிவப்பு - உயர்வு. நிவப்புறு நிலனெனும் நிரம்பு நங்கையும். (அ : 30)

நிவர்தல் - ஓங்குதல். மேல் நிவர் முனிவனல்லன். (யுத் : 2806)

நிழல் - 1. ஒளி நிலவு. தண்ணிழல் பரப்பவும். (பா : 176)

2. அருள். (உ. வி) (பா : 176)

3. பிரதி பிம்பம். மாசில மதியின் கதிர் வழங்கு நிழலெங்கும் வீசுதிரை வெண்புனல் விழுங்கியது போலும். (பா : 915)

4. சாயல். நெய்ஞ் ஞிறை நெடு வேலி நிழலுறு திற முற்றி. (அ : 695) [பா : பே]

5. தேக காந்தி. மேனி நிறம். நிழல் வீரையனுனுடனே நெடு நாள் உழல்வீர். (சு : 493)

நிழலீனுதல் - நிழலைத் தருதல். பயின்மர நிழலீன. (அ : 691)

நிழலுறு பூண் - ஒளி மிக்க ஆபரணங்கள். நிழலுறு பூணினர். (ஆ : 410)

நிழற்கள் - நிழல். நிழற்கள் போல் புறஞ் செய் தம்பியருள் பொலிந்தனன். (பா : 1191)

நிழற்றல் - நிழல் செய்தல். முத்ததாகி மண்ணனைத்தும் நிழற்றமேல் விரித்த பந்தல். (அ : 235)

நிற்கு - உனக்கு. நிற்கு யாம் ஓங்கிய புதல்வர் என்று உறவு கூர்ந்தனர். (பா : 381) நிற்கு இது பொருளென உணர்கிலென்" (பா : 475) நிற்கிது தகுவதன்ருல். (பா : 659)

நிற்ப - தாவரம். திரிவ நிற்ப. (பா : 696) நிற்ப செல்வன (அ : 942)

நிற்பன - அசரம். எண்ணில் பூதங்கள் நிற்பன திரிவன. (யுத்:173)

நிற்பனவும் நடப்பனவும் - அசையாப் பொருளையும் அசையும் பொருளையும். நிலையிலா வுலகினிடை நிற்பனவும் நடப்பனவும். (ஆ : 561)

நிற்பு - நிலை. பொய்யிலா நிற்பின் நின்றன நீதி. (பா : 90)
2. சத்தியவசனம். (கலா) (பா : 90)

நிற்புறல் - நிற்றல். நற்புதுக் கோதைதன் நளினச் செங்கையின் நிற்புறச் சுற்றிய காட்சி. (யுத் : 1074)

நிற்றல் - 1. நிலைத்தல். நிலைபெறல். புன்மையின் நின்ற நீராய். (ஆ : 763) பொன்னின்ற வடிம்பின் வாளி. (யுத் : 1880)
2. நிலை பிறழாது தங்குதல். ஓங்கறன் நின்று நோக்கி நிறுத்தும் நினைப்பினுர். (ஆ : 372) விளிதி விழியெதிர் நிற்றியேல். (யுத் : 315) நீரைக்கொடு நீரெதிர் நிற்கொணுமே. (யுத் : 1759) நிற்றிர். (ஆ . 435) நிற்க கிற்றிரோ. (யுத் : 2975) (யுத் : 2413)

நிற்றி - நில். நிற்றி ஈண்டென்று புக்கு. (அ : 656)

நிற்றீரும் - நின்தீரும். நின்னல் நீங்கும். (கி : 102)

நிற்றும் - நிற்போம். மேகமே யனையான் கண்ணின் எங்ஙனம் விழித்து நிற்றும். (யுத் : 3311)

நிற்றேடி - நின்னைத்தேடி. (ஆ : 1108)

நிறக்கற்றை - ஒளித் தொகுதி. அவிரொளிக் காசின் தன்னிறக் கற்றை. (சு : 413)

நிறங்கிளர் பாடல்-வண்ணம் விளங்குகின்ற வாய்ப்பாட்டு. (வை.மு) ஒத்து இசைக்கும் மிடற்றுப்பாடல். (அண்) இசை விளங்கும் வாய்ப்பாட்டு. (கலா) இறங்குவ மகரயாழ் எடுத்த இன்னிசை நிறங்கிளர் பாடலால் நிமிர்வ. (பா : 140)

நிறஞ்செய் கோசிகம் - (பல நிறங்காட்டி) ஒளி விடுகின்ற பட்டு. நிறஞ்செய் கோசிக நுண்டுசு நீவி. (பா : 1214)

நிறத்திணிகல் - நிறத்தைக் கொண்ட வலிய கற்கள். மணிநிறத் திணிகல் தொடர்ந்த பாறையில் வேய் இனம் சொரி கதிர் முத்தம். (அ : 763)

நிறந்த - மிகுந்த. என்னெஞ்சின் நிறந்த புண்ணும் நீக்கினை. (யுத் : 4046)

நிறப்பெரும் படைக்கலம் - ஒளியமைந்த பெரிய வேல் முதலிய ஆயுதங்கள். நிறப்பெரும் படைக்கலம் நிறத்தின் நேருற மறப் பயன் விளைக்குறும் வன்மை அன்றரோ. (அ : 560)

நிறம் - 1. தேகம். பெண்ணிறம். (யுத்:466) மின்னின் நிற மெல்லாம் பூண்ட தொளிர் பொம்மல் நிறம். (சு : 557) (உ.வி) (அ : 163) நிறத்தது. (யுத் : 469)

2. ஒளி. நிறம் திறம்பினும் நியாயமே திறம்பினும். (அ : 163)

3. குணம். நிறம் பொலீர் உங்கள் தீவினை நேர்ந்ததால். (கி : 596)

4. மார்பு. பெரும் படைக்கலம் நிறத்தின் நேருற. (அ : 560)

5. வர்ணம். பூவை நிறவ. (யுத் : 3424) நிறங் கரிந்திட நின்றுன். (யுத் : 1212)

6. சிறப்பு. பெருமை. மேன்மை. மேம்பாடு. வலியுஞ் செல்வமும் நிறமுனக் களித்தது. (யுத் : 1302) தேவரும் பேணத்தக்க நிறங் கெட இனைய சொன்னுய். (யுத் : 1646)

7. முறைமை. செய்தவம் நிறம் திறம்பாவகை இயற்றும் நீதியால். (யுத் : 81)

8. தன்மை. பிறை நிறத் தெயிறு. (யுத் : 851) நிறம் திறம் பாவகை. (யுத் : 81)

9. முகப்பு. தூநிறச் சுடு சரம். (கி : 529)

10. உயிர் நிலையான கருத்து. மறையின் நிறத்தைச் சிறுங் கொல். (ஆ : 973)

நிறம் பொலீர் - குணங்கெட்டவர்களே. (கி : 596)

நிறீஇ - நிறுவி. முன்பு நின்றிசை நிறீஇ. (அ : 559)

நிறுத்தல் - (நிறுத்துதல்) 1. நிலை நாட்டுதல். செயற்படுத்திக் காட்டுதல். ஓங்கறன் நின்று நோக்கி நிறுத்தும் நினைப்பினர். (ஆ : 372) நீரையுண்பது நெருப்பெனும் அப்பொருள் நிறுத்தான். (யுத் : 568)

2. **எடை பார்த்தல்.** மேரு விழுக்கலான் நிறுக்க. (யுத் : 977)

3. **ஆராய்தல்.** கின்னரர் முறை நிறுத்தெடுத்த கிளையுறு பாடல். (சு : 417)

நிறுவர் - நிலைத்து நிற்பர். நிறுவுவர் என்பது விகாரப்பட்டது. நிலையாக வைக்கப்படுவர். இறுவரம்பினில் இராம என்றோர் உம்பர் நிறுவர் என்பது நிச்சயமாதலால். (பாயி : 16)

நிறுவுதல் - 1. கேட்டல். (வை.மு) நீ விடை தருகென நிறுவினன். (ஆ : 110)

2. **நிலை பெறச் செய்தல்.** நின்வயின் அடைந்த காரியம் நீதியும் தருமமும் நிறுவி. (அ : 938)

நிறை - 1. அறிவு. நிறையெனும் அங்குசம் நிமிர்ந்து போயதே. (பா : 603)

2. **மனஉறுதி.** நெருக்கி யுட்புகுந் தருநிறையும் பெண்மையும் உருக்கி. (பா : 617) பிறந்துடை நலநிறை பிணித்த யந்திரம். (பா : 622)

3. **மறைத்ததொரு காரியம் பிறர் அறியாமல் ஒழுகல்.** (கி :)

4. **நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்துதல்.**

5. **மன அடக்கம்.** நாணும் மடனுந்தன்னிறையும். (பா : 1155)

6. **காப்பன கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம்.** நீல மா முகிலனுன்தன் னிறையினோடறிவு நிற்க. (அ : 276)

7. **கற்பு நிலை.** கேழிலாள் நிறை இறை கீண்டதாமெனின். (சு : 400)

8. **மன நிலை.** சச்சரிப் பாணி கொட்டி நிறை தடுமாறுவாரும். (சு : 284)

நிறை கதிர்க் கடவுள் - சூரியன். நிறைந்த கிரணங்களையுடைய சூரிய பகவான். நில ஆர் கலித் தேரொடு நிறை கதிர்க்

கடவுள்... மூலதாமரை முழுமலர் முளைத்தென முளைத்தான். (பா : 508)

நிறை குணம் - நிறைந்த குணம். மும்மையின் நிறை குணத்தவன் நின்னினும் நல்லனால். (அ : 300)

நிறை கோடல் - தங்குதல். நாண் நிறை கொண்ட பின்னர். (யுத் : 1228)

நிறைஞ்ச - நிறைந்த. ஓர் நிறைஞ்ச பூந்தவி சேறி. (பா : 1191)

நிறைதல் - 1. களித்தல். நறவுண்டு நிறைகின்றேனல். (கி : 655)
2. நிரம்புதல். நிறையும் நீர்மலர் நெடுங்கனி கிழங்கு காய் கிடந்த. (அ : 719) உண்ணிறை மானம். (யுத் : 1228)
3. பொதிந்து நிற்றல். பண்ணிறை பவளச் செவ்வாய். (யுத் : 1228)

நிறை தவம் - நிறைந்த தவம். நிறை தவ மன்னதொர் செயலாள். (அ : 619)

நிறைப் பேரணை - நிறையாகிய பெரிய அணை. நிறைப் பேர் அணை நிரந்தன அறி வெனும் பெரும்புனல். (அ : 53)

நிறைபு - நிறைதல். நிறைபுடைப் புணரி. (யுத் : 3277)

நிறை மகவுடையவர் - பல மக்களை யுடையவர். நிறை மகவுடையவர் நெறி செல் ஐம் பொறி குறை மக குறையினும் கொடுப்பரா முயிர். (அ : 488)

நிறையடிக் கோல வால் - பருத்த அடியையுடைய அழகிய வால். (வை. மு) **பருத்து நிறைந்த அடிப்பக்கத்தையுடைய அழகிய வால்.** (கலா) **ஆற்றல் நிறைந்த பருத்த அழகிய வால்.** (அண்) நிறையடிக் கோல வாலின் நிலைமையை நினையுந் தோறும் பறையடிக் கின்றது. (கி : 379)

நிறையருள் - முழுக்கருணை. (கலா) **நிறைந்த அருள்.** (அண்) நீண்டவனும் மாருதியை நிறையருளாலுற நோக்கி. (கி : 775)

நிறையிரும் பல் பகல் - நிறைந்த மிகப்பல நாள். நிறை இரும் பல் பகல் நிருதர் நீள் நகர்ச் சிறையிருந்தேனை. (சு : 499)

நிறையுற வாங்கிவிட்டான் - நிறைதலுறப் பூரணமாக வளைத்து விட்டான். ஒரு பிறை வாய் வாளி நிறையுற வாங்கி விட்டான். (யுத் : 3124)

நிறை வருநேயம் - நிறைந்த பக்தி. (யுத் : 352)

நிறைவு - நிறைதல். புழுங்கு வெஞ்சினச் சுறவது நிறையுடைப் புணரி. (யுத் : 3277)

நின் - நினது. நின் பெருஞ் செவ்வி கண்டு. (பா : 494) நின் னினைவு என். (பா : 530) நின்னன்னை சாபம். (பா : 651) (யுத் : 251) (யுத் : 1250)

நின்மின் - நில்லுங்கள். கொன்மின் என்றனன் கொல்லியர் சேர்தலும் நின்மின் என்றனன் வீடணன் நீதியான். (சு : 1152)

நின்மின்கள் நின்மின் - நில்லுங்கள் (சற்று) நில்லுங்கள். நின்மின்கள் நின்மின் என்று. (யுத் : 2976)

நின்ற - 1. உவமவுருபு. மின்னின்ற கண்ணினுள். (கி : 806)
2. பொருந்திய வானின்ற உலகம். (கி : 806) மின்னின்ற படையன். (சு : 759)
3. உரிய. நா நின்ற சுவை. (கி : 806)
4. எஞ்சி நின்ற மற்றை. நின்ற போது அலர்வதுண்டோ. (அ : 581)
5. நிலைத்த. புன்மையின் நின்ற நீராய். (ஆ : 762)

நின்றது - எஞ்சியது. மேல் நிகழ்ச்சி. இங்கு நின்ற துரைத்தும். (ஆ : 557)

நின்றன - நிலைத்திணைப் பொருள். அங்குமிங்கும் நின்றனவுந் திரிந்த. (பா : 330)

நின்றனவுந் திரிந்தனவும் - இடம்விட்டுப் பெயராது ஒரே இடத்தில் நிலைத்திருப்பனவும் இடம் விட்டு சஞ்சரிப்பனவுமாகிய தாவர சங்கமப் பொருள்கள் அனைத்தையும். (கலா) நிலையிலா வுலகினிடை நின்றனவுந் திரிந்தனவும் நெறியின் ஈந்த மலரின் மேல் நான் முகன். (ஆ : 569) [பா : பே]

நின்றீவது - நின்றது. பிரிவோடடியேன் நின்றீவது நின்னை நெடுஞ் செருவிற் கொன்றீவதொர் கொள்கை குறித்தலினோ. (யுத் : 2640)

நின்று - 1. போல. சிலம்பினின்று சிலம்புவ. (அ : 232)
2. விட்டு விட்டு. (கலா) (அ : 232)

நின்று நிலாவ - மனத்திற் பதியும்படி. நெஞ்சில் நின்று நிலாவ நிறுத்துவாய். (கி : 569)

நின்று நின்று - 1. நின்று நின்று. நின்று நின்று நெடிதுயிர்த் தானரோ. (அ : 820) நின்று நின்றுன்னியுன்னி நெடிதுயிர்த் தலக்கணுற்ருன். (யுத் : 2193)

2. நின்ற வண்ணம். நின்று நின்றுயிர்த்த வண்ணம் வெதும் பினுள். (யுத் : 1610)

3. தடைப்பட்டுத் தடைப்பட்டு. சிற்றத்தி கன்று கண்ணின் வழிச்சுடர் கான்றிட நின்று நின்று நெடிதுயிர்த் தானரோ. (யுத் : 1048)

நின்றுயர் பழி - நிலைத் தோங்கிய பழி. நிலைத்து நின்று மேன் மேலும் வளரும் பழி. நின்றுயர் பழியை அஞ்சி நேர்ந்திலன் தடுக்க. (அ : 586)

நின்று வாழுயிர் - நிலைத்திணை. அசரம். சென்று நின்று வாழ் உயிரெலாம் உறைவதோர் உடம்பு மாயினுன். (பா : 177)

நின்றெழிந்தான் - செயலற்று நின்ருன். விற்கையி னின்றிடை வீழ விம்முற்று நின்றெழிந்தான். (அ : 1021)

நின்னணை - உன்மேல் ஆணை. கூறெரி சாம் இது சரதம் நின்னணை சாற்றினேன். (அ : 1198) நின் யாக்கை தன்னை ஆர்ந்தே பசிதீர்வென் நின்னணை. (சு : 70) [பா : பே]

நின்னில் - நில் நில். நின்னில் என்றிடித்த சொல்லன். (ஆ : 889) நின்னில் என்று நெருங்கிய போது. (ஆ : 1048)

நின்னிலை - நின் நிலைமை. (யுத் : 1145)

நின்னுடைய - உன்னுடைய. நின்னுடைய வேள்வி காணிய வந்தார். (பா : 720)

நின்னுழை - நின்னிடம். வடதிசை வருமந்நாள் நின்னுழை வருகின்றேன். (அ : 687)

நின்னேர் - நினக்கு ஒப்பாவார். நின் நேர் பிறருளரோ. (யுத்:1144)

நின்னை - உன்னை. நின்னை ஈன்றுள பயத்தினில் நிரம்புவது யாதோ. (அ : 65) நின்னை ஒப்பவர் யாருளர். (அ : 1070) நின்னைத் தூயவன் பிரிந்த பின்பு. (சு : 517)

நினக்கு - உனக்கு. நினக் கொன்ரு நிலை நிறுவிட நேமியான் தனைக்கொன்ருள். (அ : 1163) நினக் கொலாதாகின். (பா : 672)

நினை - நினைப்பு. அளப்பரும் வெறுக்கை நினையின் நீண்டதோர் பெருங்கொடை யருங்கடன் நேர்ந்தான். (யுத் : 3629)

நினைகை - எண்ணுதல். மண்ணை என்வயின் தருமென நினைகையுந் தவிர. (அ : 1110)

நினை கோலம் - கருதிச் சொல்லப்பட்ட அலங்காரம். மேல் நினை கோலங் கோடல் விழுமியதன்று வீர. (யுத் : 3960)

நினைதல் - 1. இலட்சியஞ் செய்தல். துன்னிமித்தங்கள் தோன்றின தோன்றவும் அன்னதொன்றும் நினைந்திலன். (யுத் : 3689)

2. ஆலோசித்தல். சிந்தித்தல். ஒல்வது நினையினும் உறுதி ஓரினும். (யுத் : 49) நினைத்திர். (கி : 882) நினைகிலை. (யுத் : 473) யாதானு நினைதியேல். (யுத் : 306)

3. அறிதல். நினைதியாமெனிற் பகர். (யுத் : 3787)

4. கருதுதல். நினைத்திலீர்; அறநெறி நினைக்கிலாதவர். (ஆ:864) நினைந்திலை. (யுத் : 1960)

நினைந்தது - கருதிய காரியம். நினைந்ததென் இடையூறுண்டோ நெடுமுடி புனைதற்கு. (அ : 298)

நினைந்தது மறந்தது மிலாத நெஞ்சினுள் - மண்டோதரி. (யுத்:3895)

நினைப்பரிது - நினைக்கவும் அரியது. நெஞ்சுற்ற தொர் பெற்றி நினைப்பரிதால். (ஆ : 771)

நினைப்பின - எண்ணங்கள். எனைப்பல நினைப்பின மனத்துள் எண்ணுவான். (ஆ : 192)

நினைப்பு - 1. சங்கற்ப சக்தி. மனத்தினின் உலகெலாம் வகுத்து வாய்ப் பெயும் நினைப் பினனுயினும் நேமியான். (கி : 541)

2. மனம். மனோ வேகம். நீண்டான் வயக்கதி நினைப்பின் நெடி தென்ன. (சு : 87)

3. நினைவு பிரஞ்ஞை. நினைப்பும் உயிர்ப்பும் நீத்தானை. (யுத் : 2630)

4. எண்ணம். நீண்டுயர் நினைப்பனுகி. (யுத் : 1224)

5. நினைந்த அக்கணம். நினைத்தற்குரிய ஒருகணப் பொழுது. துரகமின் றெனினும் நிருதர் கோமகன் நினைந்துழிச் செல்வ தோர் நினைப்பில். (யுத் : 3623) (யுத் : 3656)

நினையல் - 1. நினைக. துறக்கமே முதல வாய தூயன யாவை யேனும் மறக்குமா நினையலம்மா. (அ : 667)

2. நினைப்பு. மனஅறிவு. நினையல் ஒவிடா நெடிய வன்பழி புனைதலோ ஐய புதல்வராதல் தான். (அ : 1174) (யுத் : 2382)

3. எண்ணக்கூடாது. நெய்யுறு விளக்கனுய் நினையல் வேறு என்ருன். (சு : 514)

நினையலாவ தொன்றன்று - நினைதல் பொருந்துவ தொன்றன்று. மானிட ஞெருவனென் றிவனை நினையலாவ தொன்றன்று. (ஆ : 440)

நினையின் - நினைவின் என்பதன் திரிபு. நினையின் நீண்ட தோர் பெருங்கொடை. (யுத் : 3629)

நினையின் நீண்ட தோர் பெருங்கொடை - நினைக்கவும் முடியாதபடி ஒப்பற்ற அருமையான தானம். (வை. மு) நினைப்பைக் காட்டிலும் நீண்டதானபெரிய கொடை. (கலா). (யுத் : 3629)

நினையும் மாத்திரை - நினைக்கின்ற அளவில். (யுத் : 1551)

நினைவதன் முன்னம் - நினைக்குங் காலத்திற்குள். அதி விரைவாக. நினைவதன் முன்னம் நீர் போய். (யுத் : 1225)

நினைவர் - இறைவனை இடைவிடாது நினைக்கின்றவர். (அண்) தியானிப்பவர். நினைவர்க்கு நெஞ்சினுறு காமமுற்றி யறியாமை நிற்றி. (யுத் : 2210)

நினை வரும் அருவினை - நினைத்தற்கும் அரிய காரியம். நினை வரும் அருவினை முடிக்க நின்றுளோன். (கி : 1117)

நினைவாளன் - (நிமித்தங்களின் நன்மை தீமைகளை) அறிபவனுகிய ஆராய்ச்சியாளன். (நிமித்திகன்) நின்றே நெறியுணர்வான் ஒரு நினைவாளனை அழையா. (பா : 1354)

நினைவித்தல் - நினைக்கும்படி செய்தல். முன்னே நினைவித்த தானுலும். (ஆ : 1002)

நினைவிலார் - அறிவிலார். நீயும் நினைவிலார் போல நெஞ்சம் நெகிழ்தியோ. (யுத் : 2165)

நினைவு - 1. மனே வேகம். (அண்) துணிவு. (கலா) நினைவின் வள்ளல் பின் வந்தயல் நின்றனள். (அ : 521)

2. வருத்தம். நினைவுடைச் சொற்கள் கண்ணீர் நிலம் புகப் புலம்பா நின்ருன். (சு : 517)

3. ஆலோசனை. வெல்லுமா நினைவென். (யுத் : 3834)

4. கருத்து. பாரிடைப் பருவமோர் ஆயிரந்திர நின்று மாதவம் புரிதியேல் நினைவு முற்றுதி. (பா : 505)

நினைவு முற்றுதி - நின் கருத்து நிறைவேறப் பெறுவாய். (பா : 505)

நினைவுறும் - நினையும். கருதிய. எண்ணிய. பாக்கியம் எனக்குள தென நினைவுறும் பான்மை போக்கி. (பா : 475) நினைவுறு காரியம் நிகழ்த்தும் நெஞ்சினன். (யுத் : 19)

நீ

நீ - முன்னிலைப் பெயர். நற்றந்தை நீ தனித்தாயும் நீ (பா : 334) மாதவ எழுந்திலாய் நீ. (பா : 658)

நீக்கல் - அழித்தல். உலகம் யாவையும் தாமுள வாக்கலும் நீக்கலும் நீங்கலா. (பா : 1) பிறப்பை நீக்குறும் மாதவம். (அ : 31) உயிரை நீக்குவென். (அ : 951)

நீக்கிடம் - வெற்றிடம். வெளியிடம். நெருங்கின மறைப்ப ஆண்டோர் நீக்கிடம் பெறுது விம்மும் பெருந்தடங் கண்ணி. (பா : 1164)

நீக்கின்றது - விடுகின்றது. ஆவி நீக்கின்ற தொத்தது. (அ : 509)

நீங்கலா - இடையருத. நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா .. விளையாட்டு. (பா : 1)

நீங்கள் - நீவிர். எங்கள் நாயகர் நீங்கள். (யுத் : 2577)

நீங்காவினை - நீங்காது நின்று செய்யுங் காரியம். நீங்கா வினையிலாமையில் வெந்ததவ் விலங்கை. (சு : 1216)

நீங்கிடுதல் - இறத்தல். நீங்கிடச் சில பகல் என்பது கருதா. (சு ; 227) [பா : பே]

நீங்குதல் - 1. கடத்தல். நீங்கலாற்றலள் சனகி யென்று அண்ணலும் நினைந்தான். (அ : 728)

2. விலகுதல். நீங்குமின் நீங்குமின் என்று (பா : 1145)

3. வருதல். எவ்வழி நீங்கியோய். (கி : 59)

4. போய்விடுதல். ஒல்லை நீங்குதி. (யுத் : 315)

நீசம் - தாழ்வு. வடாது திசை மேனுள் நீசமுற வானிநெடு மாமலயம் நேரா. (ஆ : 157)

நீசமுறல் - தாழ்ச்சியுறல். (ஆ : 157)

நீசர் - ஏழைப் பணியாட்கள். பூசன் முகத்தொரு கான்முனை போதர நீசரை ஈருதியோ கொடு நாசி. (யுத் : 2264)

நீசன் - 1. கீழ்மகன். ஈனன். சொன்ன நீசன் கை தொடுவதன் முன் துகைத்துழக்கி. (சு : 468) (ஆ : 809)
2. இராவணன். (யுத் : 3724)

நீட்டம் - மனஞ் செல்லுதல். நீண்டு செல்லுதல். மெய்யினீட்டத்து இலங்கையாம் என் மகள். (யுத் : 686)

நீட்டல் (நீட்டுதல்) - 1. கொடுத்தல். நீட்டவே. (ஆ : 578) நிரைத்த மாமணி யாரமும் நீதியமும் நீட்டி. (அ : 180) வல்வில் நீட்டிதென நீட்டினன் தேவர் கோன்கை. (பா : 1378) நேர்ந்தனன். (சு : 552)
2. செலுத்தல். சூன் முகிலின் நீர்த்தாரையின் அம்பு அவர் நீட்டினரால். (யுத் : 2913)
3. நீளவைத்தல். நீட்டினுன் உலக மூன்றும் நின்றெடுத்தளந்த பாதம். (அ 802)
4. மிகுதியாகச் செயல். ஐயன் நீட்டிய சேனை கண்டு அன்பினுற் கையை நீட்டிய தன்மையுங் காட்டுமால். (யுத் : 686) நிதிவழி நேயம் நீட்டும் மாதர். (ஆ : 803)
5. நீள மாதல். கையை நீட்டிய தன்மை. (யுத் : 686)
6. தலைமயிரைச் சடையாகத் தொங்கவிடல். முண்டித்தும் நீட்டியும் முறையால் வீடுபெற்றவர். (யுத் : 161)
7. தகுதல். செய்தல். நிதிவழிநேய நீட்டும் மாதர். (ஆ : 803)
8. (காலம்) தாழ்த்தல். நீட்டி இனி என்பயன். (சு : 608)
9. செல்லுமாறு தூண்டுதல். நீட்டிய பகழி ஒன்ருல் முதலொடு முடிக்க நின்ருன். (சு : 1118)

நீடம் - கூடுகள். நிந்தையில் சகுந்தங்கள் நீடம் நோக்கின. (அ : 677) [பா : பே]

நீடருச்சனை - சிறந்த உபசாரங்களாகிய வழிபாடுகள். (யுத் : 4109)

நீடருஞ்சுரபி - பேரருமை வாய்ந்த பசு. காமதேனு. (பா : 659)

நீடருதல் – சிறப்பு மிகுதல்- பேருவமை வாய்ந்திருத்தல். நீடருஞ் சுரபி தன்னை எற்கருள் என்னலோடும் இயம்பலன் யாதும். (பா : 659)

நீடவம் - நீள்தவம். பெரிய தவம். நீடவம் ஒழிவறு பகலெலா மொருங்கே செய்ய. (பா : 523)

நீடி நிமிர்தல் - நீண்டு படர்தல். நீடி எங்கும் நிமிர்ந்த நெடுங் கொடி. (ஆ : 393)

நீடிய - நீண்ட. (சு : 1193) நீடிய உயிர்ப்பினர். (பா : 831)

நீடு - 1. பெருமை பொருந்திய. சிறந்த. நீடந்தணாளர்க்கும் கைம் முறை யளித்தனன் கனக மாரியே. (பா : 275)
2. வெகுகாலம். நீடு இருத்தி. (சு : 991)

நீடுகள் - நீள்துகள். மிக்கபுழுதி. (யுத் : 4106)

நீடுதல் - 1. நீண்டிருத்தல். அருகு நீடிய ஆடகத் தாரைகள். (சு : 1193)
2. மிகுதல். தென் பளிக்கறையுந் தேடினர் அறிவின் நீடினர். (க : 903)

நீடுயிர்த்தல் - நெடு மூச்சு விடுதல். ஒன்றும் இயம்பலள் நீடுயிர்க்க லுற்றாள். (அ : 189)

நீடுரகன் - நீண்ட பாம்பு. நிரந்தரம் புவி முழுவதுஞ் சுமந்த நீடுரகன். (சு : 1015)

நீண்ட - உயர்ந்தவையாயுள்ளன. வானரம் வானின் நீண்ட. (க:521)

நீண்ட தமிழ் - காலத்தால் பழைய அளவிறந்த நூல்களையுடைய தமிழ். நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான். (ஆ:153)

நீண்டதன்றிது - இது நெடுந்தூரத்த தன்று. நீண்டதன்றிது நிறை புனல் நாட்டுக்கு. (அ : 721)

நீண்டவன் - நெடியோன். நாராயணன். நீண்டவன் கழல்தாழ் நெடியோய். (கி . 35)

நீண்டனென் இருந்து - நீண்ட காலம் இருந்துவிட்டு. (ஆ : 862)

நீணகர் - பெரிய நகரம். நிருதர் நீள் நகர். (சு : 499)

நீணிதி - 1. நீள் நிதி. பெரிய செல்வம். தூர்த்தனர் நீணிதி சொல்லினார்க் கெலாம். (அ : 124)
2. பெரிய செல்வம் போலப் பாராட்டத்தக்கது. நெருங்கிய அமரர்க் கெல்லாம் நீணிதி யாவரன்றே. (யுத் : 4091)

நீணிரயம் - நீள் நிரயம். பெரிய நரகம். எங் குரவர் முடிய நீணிரயத்தினில் அழுந்திடு முறைமை கடியு மாறு. (பா : 522)

நீணில மூலம் - நீண்ட பூமியின் அடிப்பாகம். பாதாளம். நெடுவரை நீணில மூலமே முட்டலின். (யுத் : 658)

நீணிலை யறநெறி - நீடித்து நிற்பதாகிய அறநெறி. நீணிலை அற நெறி நின்று ளோர்க்கெலாம் ஆணியை. (ஆ : 946)

நீணுதலி - நீண்ட நெற்றியை யுடையவள். (சுயம் பிரபை) நீணுதலி யோடும் குன்று புரை தோளவர் எழுந்து நெறிகொண்டார். (கி : 889)

நீணெடுங்கார் - நீண்ட பெரிய மேகம். (யுத் : 2108)

நீணெறி - 1. நீண்ட வழி. நினையும் வீரன் அந்நீணெறி நோக்கலன். (கி : 606)

2. அர்ச்சிராதி மார்க்கம். நீள் நெறி பார்க்க. (பா : 1293)

நீத்த எக்கர் - தொகுதியான மணற்குன்று. அரக்கர் தம் உடலுகு கறைத்தோல் நீத்த எக்கரின் நிறைந்துள. (யுத் : 522)

நீத்தநீர் - 1. பெருக்கான நீர். வெள்ள நீர். (வை.மு) நீந்துதற்கு ஆழமுடை நீர். (அண்) நீத்தநீர்ப் பொய்கையின் நிறைந்த நாண்மலர். (யுத் : 463) நீத்த நீரில் நெடியவன் மூழ்கலும். (கி : 137)

2. கடல். நீத்த நீருடைகல நீரதாகுமால். (அ : 943)

நீத்தம் - 1. வெள்ளம். நீந்தப்படுவது. கல்லிடைப் பிறந்துபோந்து கடலிடைக் கலந்த நீத்தம். (பா : 30) நீத்தாய் ஓடின உதிரப் பெருநதி. (சு : 967)

2. கடல். நீத்த மதனின் முளைத்தெழுந்த நெடு வெண்திங்கள். (பா : 637)

3. நீர். நெறி கடந்து பரந்தன நீத்தமே. (பா : 71)

4. தொகுதி. நீத்த எக்கர். (யுத் : 522) கூந்தல் நீத்தம். (கி : 802)

5. பெருக்கு. பல்பிணப் பெருங்கரை கடந்தில நீத்தம். (யுத் : 1468)

6. ஆறு. தெண்டிரை நீரொலி நீத்தன நீத்தம் போலவே. (அ : 500)

நீத்தல் - விடுதல். அதிர் பெருங்குரல் நீத்த. (யுத் : 1541)

நீத்து - 1. வெள்ளம். நீந்துதற்குரியது என்ற காரணம் பற்றி வந்தது. நின்றன நெடுங்கணீர் நிலத்து நீத்துக. (அ : 462)

2. விட்டு. இரவலரும் நல்லறமும் யானுமினி என்பட நீத்தேகினையே. (ஆ : 197)

நீத்தென - நீங்கினாற் போல. நீங்கிய தன்மை போல. தாமரை நீத்தெனப் பார் துறந்தனள் பங்கயச் செல்வியே. (அ : 810) (அ : 819)

நீதி - 1. மெய். நீதியா நின்ற வினையெலாஞ் செய்தும் வெல்லலாந் தன்மையனல்லன். (ஆ : 440)

2. தன்மை. நிலை. நீதியை நோக்கி நீயே நினைதியால். (கி : 795)

3. தருமத்துக்குக் கட்டுப்பட்டிருக்குந் தன்மை. நீதியோன். (யுத் : 1544) வந்தனை நீதியும் பிறவும் மாண்பமைந்து. (யுத்:406)

4. தருமம். (உ. வி) (யுத் : 406)

5. நிலைமை. வாச நாண் மலர் நெருக்கிடு தடமென இருந்த நீதியான். (யுத் : 475)

6. இயல்பு. நியதி. நீதி வரு நாளும் நிற்றி. (யுத் : 2206)

7. முறைமை. அறிஞர் ஆய்ந்த நயத்துறை நூலின் நீதி நாந்துறந்தமைதல் நன்றே. (யுத் : 927)

8. மனுநீதி. நீதியார் கருணையின் நெறியினர். (கி : 83)

9. ஒழுக்கநெறி.

நீதித் தனியாறு - நீதி என்ற பேராறு. தள்ளரிய பெரு நீதித் தனியாறு புக மண்டும் பள்ளமெனுந் தகையானை. (பா : 741)

நீதிநலம் - நீதி நெறி. நல்ல நீதி மார்க்கம். நீதி நலத்தின் வினை ஓர்வான். (சு : 178)

நீதி நெடுந்தவம் - முறைமை தவறாத பெரிய தவம். நின்னாலியை நீதி நெடுந்தவம். (ஆ : 88)

நீதியார் - நீதியை நிலைநிறுத்துகின்றவர்கள். நீதியார் கருணையின் நெறியினர். (கி : 83)

நீதியால் வந்ததொரு நெடுந் தருமநெறி - முறைப்படி அமைந்ததான ஒப்பற்ற சிறந்த தருமசாஸ்திர வழி. நீதியால் வந்ததொரு

நெடுந் தரும நெறியல்லால் சாதியால் வந்த சிறு நெறி அறியான் என் தம்பி. (யுத் : 1375)

நீதியான் - நீதிநெறி நிற்பவன். (விபீடணன்) நீதியானை நெடுமுடி சூட்டுவாய். (யுத் : 3922)

நீதியோன் - நீதிமுறை தவறுதவன். (விபீடணன்) நீதியோனுடன் பிறந்தனை யாதலின் நின்னுயிர் நினக்கீவன். (யுத் : 1544)

நீதி வழுவா வரு நன்னெறி - நீதி மாறுபடாது வரும் நல்ல நெறி. இயைந்த நீதி வழுவாவரு நன்னெறி நின்னறிவாகு மன்றே. (அ : 422)

நீதி வித்தகன் - நியம நீதி தவறுத எல்லாம் வல்லவன். கோசிகன். (அண்) இராமன். (கலா) நீதி வித்தகன் தன்னருள் நேர்ந்தனிர்' (பா : 700) நீதி வித்தக நீ இவற் சேர்ந்தனை. [பா : பே] (யுத் : 3945) பரத்துவாசன். (யுத் : 4103)

நீதி விரத மெய்த்தாதை - நீதியையே விரதமாகக் கொண்ட சத்திய சீலனுன தந்தை. (தசரதன்) வரதனும் எய்தி மைதீர் மாதவர்த் தொழுது நீதி விரத மெய்த் தாதை பாதம் வணங்கி மாடு இருந்த வேலை. (பா : 1323)

நீந்தரு நெறி- கடத்தற்கரிய நெடுவழி. நீந்தரு நெறியினுற்ற நெருக்கினுற் சுருக்குண்டற்றுக் காந்தின மணியும் முத்துஞ் சிந்தின. (பா : 873)

நீந்தா இன்னலின் நீந்தாமே - நீந்திக் கரைகாண முடியாத துன்பக் கடலுள் நீந்தாதபடி. (சு : 649)

நீந்தாய் நீந்தாய் - நீந்துக நீந்துக. வசை வெள்ளம் நீந்தாய் நீந்தாய் நின் மகனேடும் நெடிது என்ருன். (அ : 229)

நீந்துதல் - 1. நீந்திச் செல்லுதல். தாண்டிப் போதல். (கலா) அரிது கொல் இராக்கதற்கு ஆழி நீந்துதல். (யுத் : 47)
2. கடத்தல். நீந்தரும் நெறியினுற்ற நெருக்கினல். (பா : 873)
3. அரிதிற் கடத்தல். வழிச் செல்லல். ஆறுங் கானும் அகன் மலையுங் கடந்தேறி ஏழ்பகல் நீந்தி. (அ : 810)
4. விரைவிற் கடத்தல். நினைவதன் முன்னம் நீர்போய் நெடுந் திசை எட்டும் நீந்தி. (யுத் : 1225)
5. வெல்லுதல். நீ ஒரு தனி உல கேழும் நீந்தினுய். (யுத் : 91)

நீப்பு - நீங்குதல். நீப்புண்ட உயிரவாகி. (சு : 999)

நீப்புண்ட - நீங்குதல் அடைந்த. (சு : 999)

நீய் - நீ. நீய் தந்தனே. (யுத் : 243) [பா : பே]

நீயாவான் - நீ. நீயாவான் யார் என அன்பின் இறைஞ்சினன். (அ : 655)

நீயிர் - நீங்கள். நீவிர். நீயிர் அன்னவள் குதலையிர் ஆதலின். (கி : 489) நீயிரே நினைவின் முன்னே நெடுந்திரைப் பரவை ஏழும் தாய். (கி : 1029) (யுத் : 3258)

நீயிர்கள் - நீங்கள். நீயிர்கள் நின்மின் நின்மின். (யுத் : 2987)

நீர் - நீர்த்துறை. பன்னநந்துகள் தாளந் தொகு படர் பந்திகள் படுநீர். (அ : 624)

2. நீர்மை. நற்குணம். நீர் கெழு தன்மையாய் (யுத் : 476)

3. கடல். நீரிடைக் கிடந்தபடி. (கி : 166) (உ.வி) (யுத் : 957) நீரினும் முழக்கினன். (யுத் : 2286) (சு : 1059)

4. சிறுநீர். நீரிடு துகிலர். (சு : 745)

5. தன்மை. இவ்வீங்கு நீர் நாற நாண்மலர்ப் பொய்கை. (சு : 631)

6. நீர்க்கடவுள். வருணன். நீரிலேபட்ட. (யுத் : 957)

7. நீர் நிலை. தண்ணீர். நீர் மேற் பாசி. (யுத் : 2535)

8. முன்னிலைப் பெயர். நீங்கள். ஒன்று நீர் கேண்ம். (பா : 199) நீர் போய் அவதரித்திடுமின். (பா : 205) (அ : 13) (அ : 86) (கி : 68)

9. பெருவெள்ளம். நீர்த்தரங்க வேலி. (கி : 239)

10. பிரளயம். (உ.வி) (சு : 1059)

11. நீர்க்கடவுளால் ஆளப்படும் உலகம். (அண்) (யுத் : 927)

நீர்க்காக்கை - நீரில் வாழும் காக்கை. இது கரண்டம் எனவும் பெயர் பெறும். ஊழ்முறை முழுகி நீர்க்கருங்காக்கை முளைக்குமே. (கி : 939)

நீர்க்குமிழி - நீரிலே தோன்றும் குமிழி. குருதி நீர்க்குமிழிக் கண்ணுன். (யுத் : 3181)

நீர்க்கொப்பூழ் - நீரிலே எழும் குமிழி. நெறியிருங் கூந்தல் நங்கை சிறடி நீர்க் கொப்பூழின் நறியன. (அ : 383)

நீர்க் கொள்ளை - புது வெள்ளம். குண்டலக் கோல மைந்தர் குடைந்த நீர்க் கொள்ளை. (பா : 43)

நீர்க் கோலம் - நீரில் எழுதிய எழுந்து கோலம். நீரில் எழும் குமிழி முதலிய கோலங்கள். நீர்க்கோல வாழ்வை நச்சி. (யுத் : 1373)

நீர்கள் - நீங்கள். நீவிர். நீர்கள் நீங்குமின் நீங்குமின் என்று. (பா : 872) [பா : பே] கனப்படை வரிசிலைக் காளை நீர்கள் யார், (ஆ : 192) (யுத் : 2577)

நீர்கெழுதன்மை - நற்குணம் விளங்குகின்ற இயல்பு. நீர்கெழு தன்மையாய். (யுத் : 476)

நீர்ச்சாறு - புதுப்புனல் விழவு. (கலா) மைந்தர் குடைந்த நீர்க் கொள்ளைச்சாற்றில். (பா : 43) [பா : பே]

நீர்ச்சிறை - 1. குளம். (அண்) (பா : 875)

2. அணை. (கலா) செய்களின் மடுவில் நன்னீர்ச்சிறைகளில் நிறையப் பூத்த நெய்தலும் குமுதப்பூவும். (பா : 875)

3. நீர்த்தேக்கம். கரை கட்டித் தடுத்த நீர் நிலை. துறையும் குளிர்ந்த சாரல் நீர்ச்சிறையும். (கி : 903)

நீர்ச்சுழி - ஓடும் நீரிலே தோன்றும் சுழிகள். பொங்கும் நீர்ச்சுழி போவன போன்றவே. (அ : 640)

நீர்த்த - நிறத்தையுடைய. துப்புறழு நீர்த்த சுடர்த் திருவடியால் துடைத்தாய் நீ. (ஆ : 61)

நீர்த்தரங்க வேலை - அலைகளோடு பொருந்திய பெரு வெள்ளத்தினை யுடைய கடல். (கி : 293)

நீர்த்தாரை - நீர் ஒழுங்கு. சூன் முகிலின் நீர்த்தாரையின் அம்பவர் நீட்டினரால். (யுத் : 2913)

நீர்த்துகுதல் - தாரை தாரையாய்ப் பெருகுதல். சிந்துதல். நெடுங் கணீர் நிலத்து நீர்த்துக. அ : 462) [பா : பே]

நீர் தொறும் - நீர் தோறும். நீர் நிற்கும் இடங்கள் தோறும். தெளிந்த நீர் தொறும்... பிறழ்ந்த ஆடன் மீன். (கி : 556)

நீர் தோய்தல் - நீராடுதல். நீர் தோய்ந்தனன் சரயு நற்றுறைக் கண் எய்தியே. (அ : 276)

நீர் நசை - நீர் (குடிக்க வேண்டு மென்ற) விருப்பம். தாகம். பருந்தடர் சுரத்திடைப் பருகு நீர் நசை வருந்தருந் துயரினுன் மாளலுற்ற மான். (யுத் : 3991)

நீர் நல்கிக் கடன் கழித்தல் - இறந்தவர்க்கு நீரை நல்கி நீர்க்கடன் செய்தல். பட்டால் எள்நீர் நல்கிக் கடன் கழிப்பாரைக் காட் டாய். (யுத் : 1355)

நீர் நாய் - நீரில் வாழும் நாய். ஒலி நடத்திய திரை தொறும் உகள் வன நீர் நாய். (கி : 22)

நீர்ப்பண்ணை - நீர் விளையாட்டு. அங்கவர் பண்ணை நன்னீர் ஆடு வான் அமைந்த தோற்றம். (பா : 1015)

நீர்ப்பவள வல்லி - நீரின்கண் தோன்றும் பவளக் கொடி. (அண்) நீளு நீர்ப்பவளவல்லி நிரையொளி நிமிர்வதென்ன. (யுத் : 2070)

பீர் மத்து - மந்தர மலை. கடலைக் கடைந்த மத்தான மந்தர மலை. நீர் மத்தின் நிமிர்ந்த தோளான். (யுத் : 1891)

நீர் முகில் - காளமேகம். நீர் முகில் இடியினோ டெழுந்தாலன்ன ஈட்டினுன். (அ : 646)

நீர்மேலைக் கோலம் - நீரின்மேல் எழுதிய கோலம். (யுத் ; 3871) [பா : பே]

நீர்மை - 1. இயல்பு. தன்மை. நீனிறப் பெருங்கரி நிரைத்த நீர்த் தெனச் சூனிற முகிற் குலந்துவன்றி. (கி : 449)

2\. **முறை. முறைமை.** முன்னர் நீர்மையின் சுமித்திரைக் களித்தனன். (பா : 271)

3 **பண்பு** என் நீர்மையினுல் விண்ணோர் எதிர் கொண்டிட ஏகினனுல். (அ : 374)

4\. **அன்பு. தன்மை.** நின்று மற்றின நீர்மை நிகழ்த்தினுன். (ஆ . 209)

நீர் மொக்குள் . நீரில் எழும் மொக்குள் .விண்ணினீர் மொக்குளின் விளியு மாக்கையை. (அ : 1144)

நீர் விளையாடல் - புனல் விளையாடல். ஆன நீர் விளையாடலை நோக்கினுன். (பா : 1045)

நீர் வீரையனுன் . கடல் நீரை ஒத்த நிறத்தையுடைய இராமபிரான். (யுத் : 2336)

நீர் வெள்ளம் - வெள்ள நீர். கடிதின் மேலை வேலையிற் பாய்ந்து மீண்ட நீர் வெள்ளம். (அ : 726)

நீரணைத்த முகில் - நீராகிய கருவைக் கொண்ட முகில். நிரணைத்த முகிலாமென நின்ருன். (யுத் : 821)

நீரம் - நீர். அம்முச் சாரியை பெற்றது மாதவர் நெஞ்செனத் தெளிந்த நீரம். (கி : 556)

நீரவர் - தன்மையர். ஆன தூயவ ரோடுடனுடினுர் ஞானநீர ராகுவர் நன்றரோ. (பா : 1033)

நீராட்டல் - அபிஷேகஞ் செய்தல். மற்றும் மூதறிவாளர் உள்ளஞ் சான்றவர் முதல் நீராட்ட. (யுத் : 4312)

நீரால் தெளித்தல் - நீரைக்கொண்டு தெளித்தல். நிணைப்புமுயிர்ப்பும் நீத்தாளை நீராற்றெளித்து. (யுத் : 2630)

நீராழி - 1. பாற்கடல். நீராழியிழிந்து நெடுந்தகையைத் தாராய் அமர் என்றனர். (யுத் : 1744)
2. நீர்க்கடல். (கலா) நீராழி யொடாழி நிறீயது போல். (யுத் : 2908)

நீரிடைக் கிடந்தபடி - கடலாற் சூழப்பட்ட பூமி. நீரிடைக்கிடந்த படியின் மேல் நின்ற மேருமால் வரையினும் பழைய. (கி : 166)

நீரிடைக்கிடந்து பார்சுமக்கின்ற சேடன் - கடலினிடையே பொருந்திய பூமியைத் தாங்குகின்ற ஆதிசேடன். (கி : 167)

நீரிடை முகில் - நீர் நிறைந்த கருமுகில். நீரிடை முகிலின் மின் போல் வானிடை நிமிர. (யுத் : 1886)

நீரிடை வீழ்தல் - கடலின் நீரிலே விழுதல். வன்றலை நீரிடை விழுந்தது நெருப்பொடன்று போய். (யுத் : 3817)

நீரிலேபட்ட - வருணலோகப் பிராணிகள். (யுத் : 957)

நீரின்மத்து - மந்தரமலை. (நீர் - பாற்கடல்) போரின் மத்தனும் பொருவய மத்தனும் புலவர் நீரின் மத்தன்ன பெருமையர். (யுத் : 506)

நீரினுன் - கடலில் ஒளித்தான். ஆருலா நேமியான் ஆற்றல் தோற்றுப் போய் நீரினுன். (ஆ : 590)

நீருடையாடையாள் - கடலாகிய நீரை ஆடையாகவுடைய பூமிதேவி. நீருடையாடையாளும் நெளித்தனள் முதுகை என்ருல். (பா:896)

நீருண்ட கமஞ்சூல் காளமேகம் - நீரை உட்கொண்ட நிறைந்த கருக்கொண்ட காளமேகம். நீருண்ட கமஞ்சூற் காளமேகமும் நாகமுந் தெரிகில காணுய். (அ : 738)

நீருண்ணுதல் - நீர் பருகுதல். ஊறு மென்கனி கிழங்கிஞேடுண்டு நீருண்டார். (அ : 724) நீருண்டு மீளும் போதகம். (ஆ : 226)

நீருழல் தெய்வ மீன் - ஊழி வெள்ளத்தின்கண் திரியும் தெய்வத் தன்மையுள்ள திருமாலின் அம்சமான மீன். உய்ய ஏழுலகு மொன்ருன நீருழல் தெய்வ மீன் ஒத்தது அச் செம்பொற் றேரரோ. (அ : 533)

நீரொரேழு - கடல்கள் ஏழு. நீரொ ரேழு முடிவில் நெருக்குநாள் மேரு மால் வரை என்ன விளங்கினன். (யுத் : 1062)

நீரோடளித்தல் - நீரோடு கொடுத்தல். கைப்புனலோடு தத்தஞ் செய்து அளித்தல். எந்தை அடித்தலத்துரைத்து நீரோடளித் திடின் அணைதும் என்ன. (பா : 427)

நீல் - நீல நிறம். நீல் நிறத்து விண். (கி : 138) நீனிறக் குன்றின். (சு : 411) நீலுறு திசைக்கரி. (சு : 667)

நீல் நிறம் - நீல நிறம். (கி : 138)

நீலக்காசு - நீல அரதனம். தேவர்தம் தச்சன் நீலக் காசினல் திருந்தச் செய்தது. (யுத் : 801)

நீலக்கிரி - நீலமான மலை. நீலக்கிரி மேனிமிர் பொற்கிரி நேர்வான். (யுத் : 1925)

நீலக் குன்றம் - நீல மலை. (மகேந்திர மலை) நெரிந்து கீழ் அழுந்தும் நீலக்குன்றம். (சு : 4) மாவணை நீலக்குன்றம். (யுத் : 900)

நீலகண்டன் - சிவபிரான். நீலகண்டன் நெடுஞ் சூலம் ஆமிதாங் கொலோ. (கி : 301)

நீலகிரி - ஒருமலை. மேரு வினைக் கடந்தப்பால் ஒன்பதினுயிரமுள வோசனையை விட்டால் நேரணுகு நீலகிரி தானிரண்டாயிரமுள யோசனையின் நிற்கும். (யுத் : 2681)

நீலங்கொண்டார் கண்டன் - நீலநிறங்கொண்டமைந்த கண்டத்தை யுடைய சிவன். (யுத் : 4223)

நீலச்சிகரக்கிரியன்னவன் - சிகரங்களையுடைய நீல மலை போன்றவன் (இராவணன்) நீலச்சிகரக்கிரியன்னவன் ...மாலைப் பிறைப் பிள்ளையைக் கூவுதிர் வல்லையென்றான். (ஆ : 691)

நீலச்சுருள் - கூந்தல். (கலா) **மிகக்கறுத்த கூந்தல்.** (வை.மு) **நீல மணிச்சுருள்.** (அண்) வண்டின் கேளொடு கிடந்த நீலச்சுருளும். (பா : 577) இருண்ட நீலச்சுருள். (ஆ : 703)

நீலம் - கருங்குவளை. செங்களி சிதறி நீலஞ் செருக்கிய தெய்வ வாட்கண். (கி : 791)

நீல மாமணி நிற நிருதர் வேந்தன் - சிறந்த நீல ரத்தினம் போன்ற கருநிறத்தையுடைய இராக்கதர்க்கு அரசனான இராவணன். (ஆ : 232)

நீலமாமுகில் - இராமபிரான். இலங்கையில் வேட்டங் கொண்ட நீல மாமுகில். (யுத் : 4223)

நீல மாமுகிலனான் - சிறந்த நீல மேகம் போன்ற நிறம் வாய்ந்த இராமன். நீல மாமுகிலனான் தன் நிறையினோடு அறிவு நிற்க. (அ : 276)

நீலமாய நிறத்தன் - நீல நிறமுள்ளவனான இராமபிரான். நீலம் ஆய நிறத்தன் நினைப்பிடைச் சூலமாகத் தொலையுறு மெல்லையின். (ஆ : 1064)

நீல மால் - நீல நிறமுள்ள திருமால். நீல மால் நேமியில் தலையை நீக்கிய கால நேமியைப் பொருங்கவந்தக் காட்சியான். (ஆ : 1157)

நீல மால்வரை - நீலம் என்கின்ற பெரிய மலை. நீலமலை. கரியவன் என்ன நின்ற நீலமால் வரையைக்கண்டான். (யுத் : 2714)

நீலமாலை - சீதாபிராட்டியின் சேடி. நுடங்கிய மின்னென நொய்தின் எய்தினாள் நெடுந்தடங்கிடந்த கண் நீலமாலையே. (பா : 805)

நீல வண்டினம் - நீல நிறமுடைய வண்டின் கூட்டம். நீல வண்டினம் படிந்தெழ வளைந்தன நிமிர்வ கோல வேங்கையின் கொம்பர்கள். (அ : 752)

நீல வல்லிருள் - கரிய வலிய இருள். நீல வல்லிருள் நீங்கலும். (அ : 1083)

நீல வாடை - நீல நிற ஆடை. பொன்னின் மாமதிட் குடுத்த நில வாடை போலுமே. (பா : 113)

நீல வான்துகில் - நீல நிறத்தையுடைய சிறந்த புடவை. (யுத் : 589)

நீலன் - வானரப்படைத்தலைவன். அரியும் மற்றெனது கூறு நீலன் என்றறைந்திட்டானுல். (பா : 206) (பா : 712)

நீலுறுதிசைக்கரி - கரிய நிறமுடைய திசையானைகள். நீலுறு திசைக்கரி திரிந்து நிற்பன. (சு : 667)

நீவா - நீங்காத. நின்ற நிலை நீவா அறங்கருது சிந்தை முனி அந்தணரின். (கி : 518)

நீவி - 1. கொய்சகம். ஆடையின் முடிச்சு. நிறஞ்செய் கோசிக நுண்டுசு நீவி. (பா : 1214)

2. உடை. அரை வஸ்திரம். வாரணத்தொகுதி நீவி தொடர. (ஆ : 15)

நீவுதல் - 1. தடவுதல். நீவி அந்தழைபட உடுத்த பொன்னிறத் தூசு. (சு : 413)

2. பூசுதல். ஆரமும் அகிலும் நீவி அகன்ற தோள் அமலன். (சு : 541)

நீழல் - ஒளி. தயங்கு தாரகை புரை தரள நீழலும். (பா : 1051)

நீள் - நீட்சி. தோளொடு தோள் செலத் தொடர்ந்து நோக்குறின் நீளிய வல்ல கண் நெடிய மார்பென்ருர். (ஆ : 240) நீள் ஓடு திசை. (யுத் : 2686)

நீள் குரவர் - பெருந் தொகையினரான முன்னோர்கள். நினது நீள் குரவர் முன்பு இறந்தனர் அருந்தவன் முனிவினுல். (பா : 525)

நீள் நெறி - அர்ச்சிராதி மார்க்கம். நீணெறி சென்று மீளாக்குறி சேரச் சேர்த்திடும் தன் திருநாமம். (பா : 1293)

நீள்பதம்-வைகுந்த லோகம். அண்ட கோளகைக் கப்புறத் தென்னை யாளுடைய கொண்டல் நீள்பதத் தெய்தி. (பா : 482)

நீள் புனல் - மகா தீர்த்தம். தெய்வ நீள் புனலாடல் திருத்திட. (யுத் : 3926)

நீள் வரம் - பெரிய வரம். எங்கும் நீள் வரங்களால் அரக்க ரென்பவர் பொங்கு மூவுலகையும் புடைத் தழித்தனர். (பா:198)

நீள நீள் பவளவல்லி நிரை - நீளமாக நீண்டுள (மிக நீண்ட) பவழக் கொடிகளின் வரிசை. *நீள நீள் பவள வல்லி நிரை யொளி நிமிர்வதென்ன.* (யுத் : 2070)

நீளம் - 1. கூடுகள். பறவைக் கூடு. நீடம் என்பதன் போலி. *நீள நீங்கிய பறவையின் விண்ணுற நிமிர்ந்தான்.* (ஆ : 1178) *நள்ளிரா நீள மெய்தி ஒருசிறை நின்றன.* (யுத் : 1002) (யுத் : 2818)

2. நீட்சி. *நீளம்மாலைய துயில்வன நீருண்ட கமஞ்சூல் காள மேகம்.* (அ : 738) *நீளங்கொள் சிலையோன்.* (ஆ : 228)

3. எல்லை. *ஆசை நீளத் தரற்றினன்.* (ஆ : 803)

4. நீளமான வழி. *பாய் வரு நீளத் தாங்கண் இருந்தனர்.* (சு : 1249)

நீள மாலை - நீண்ட வரிசை. (அ : 738)

நீளரசு – பெரிய அரசுரிமை. நெடிய அரசாட்சி. *மாடணைந்தவர்க் கின்பமே வழங்கி நீளரசின் நாடணைந்தவர் புகழ்ந்திட வீற்றிரு நலத்தால்.* (யுத் : 4069) (யுத் : 4051)

நீளரத்தங்கள் - மிக்க உதிரத்துளிகள். *நீளரத்தங்கள் சிந்தி நெருப்புக நோக்கும் நீரான்.* (ஆ : 723)

நீளாண்மை - மிக்க பராக்கிரமம். மனோதிடம். பெரிய துணிவு. (அண்) *நீளாண்மையினுடனே எதிர் நின்றாய்.* (யுத் : 1126)

நீளிது - மிகவும் அதிகமானது. *அந்தரம் நீளி தம்மா.* (யுத் : 1241)

நீளிய - 1. உயர்ந்த. அளவிடற்கரிய. *விண்ணின் நீளிய நெடுங் கழுதும்.* (சு : 662)

2. நீட்சியுடைய. *நீளியவல்லகண்.* (ஆ : 240) *காதம் நீளிய மலைகள்.* (யுத் . 1570)

நீளிருங் களங்கம் - நீண்ட காலந்தாங்கியிருந்த பெரிய களங்கம். *நீளிருங் களங்க நீக்கி நிறை மணி மாட நெற்றிச் சாளரந் தோறுந் தோன்றும் சந்திரவுதயங் கண்டார்.* (பா : 577)

நீளுதல் - 1. நீண்டிருத்தல். *பெரும் பகலும் நீளிரவும் என்றிவை பிணிக்கும் பொரும்பரிகளாக நனி பூண்டது பொலந்தேர்.* (யுத் : 3654)

2. மிகுதியாதல். *அந்தரம் நீளிதம்மா.* (யுத் : 1241)

3. **விரைந்து செல்லுதல்.** மானுடவன் மெல்லம்பு மெய்யுருவ நீண்டனவாம். (யுத் : 1663)

நீளு நீர்ப் பவளவல்லி - **நீளுந் தன்மையுள்ள நீரின் கண் தோன்றிய பவளக்கொடி.** (அண்) (யுத் : 2070) [பா : பே]

நீளெழு - 1. **நீண்ட தூண்கள்.** நீளெழுத் தொடர் வாயினுங் குழையொடு நெகிழ்ந்த. (அ : 54)

2. **நீண்ட உழலை மரம்.** (அண்) நீளெழுத் தொடருந் நெடு வாயில். (கி : 537)

நீளெழுத் தொடரும் நெடு வாயில் - **நீண்ட உழலை மரத்தோடு பொருந்திய நெடிய வாயில்.** (கி : 597)

நீளோடு திசை - **நீளமாக நீண்டு ஓடுகின்ற திசை.** தடக்கை வீச நீளோடு திசை போதா. (யுத் : 2686)

நீற்றியல் - **நீற்றின் தன்மை** நீற்றியல் நுணுகுறப் பிசைந்து நீங்கெனத் தூற்றினன். (யுத் : 1476)

நீற்றுக் குப்பை - **புழுதித் தொகுதி.** நீற்றுக் குப்பையின் மேருவை நூறுவ. (யுத் : 3766)

நீறணிந்த கடவுள் - **திருநீறு பூசிய சிவபெருமான்.** நீறணிந்த கடவுள் நிறத்தவான் ஆறணிந்து சென்று ஆர்கலி மேய்ந்து. (பா : 13)

நீறு - **விபூதி.** யாவர்க்கும் அறிவரும் அரன் மேனிபுனையும் நன்னெடு நீறென நூறிய புரவலன். (யுத் : 1551)

நீறு சென்று - **பொடியாகி.** மாறுகின்ற மரனும் மலைகளும் நீறு சென்று நெடு நெறி நீங்கிட. (கி : 574)

நீறு தோய் வனிதையோர் கூறினன் - **வெண்ணிறு பூசிய மங்கை பங்கனாகிய சிவபிரான்.** செம்மணித் தூணம் நீறு தோய் வனிதை யோர் கூறினன் வடிவு காட்டின. (அ : 129)

நீறுபடுதல் - **தூளாகச் சிதறுதல்.** விலங்கல் நீறுபடு வேலையில். (யுத் : 2033) நீடிய அரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை சூடிய சிலை யிராமன். (பாயி : 23)

நீறு பூசி - **திருநீற்றைப் பூசுகின்ற சிவபிரான்.** (யுத் : 3156)

நீறெழல் - **துகளாய்ப் போதல்.** இற்றுச் சூலம் நீறெழல் காணு. (சு : 184)

நீனிற அரக்கர் - நீல் நிற அரக்கர். கரிய நிறமுள்ள அரக்கர். (சு : 669)

நீனிறங்குன்று - நீல் நிறக்குன்று. நீல நிறமுள்ள குன்றம். (சு : 411)

நீனிற ஞாயிறு - நீல நிறமுள்ள சூரியன். நீனிற ஞாயிறன்ன நெடியவன். (யுத் : 3542) [பா : பே]

நீனிறத் திராவணன் - கருநிறத் திராவணன். நீனிறத் திராவணன் முனிவு நீக்குவான். (சு : 884) நீனிற ஞாயிறு. (யுத் : 3542) [பா : பே]

நீனிற நாயிறு - நீல நிறமுள்ள சூரியன். நீனிற நாயிறன்ன நெடியவன். (யுத் : 3542)

நீனிற நிருதர்கோன் - கருநிறமுள்ள அரக்கர் தலைவன். (இராவணன்) நீனிற நிருதர்கோன் எய்த. (யுத் : 3744)

நீனிறம் - நீல நிறம். கண்ணகன் நீனிற வரையினில். (ஆ : 180) (சு : 47)

நீனிற மேகம் - நீல நிறமுள்ள மேகம். வெய்யவன் தன்னைச் சேர்ந்த நீனிற மேக மொத்தான். (யுத் : 2173)

நீனிற வரை - நீல நிறமுடைய மலை. (ஆ : 180)

நு

நுகம் - காளைகளின் கழுத்திற் பூட்டப்படும் மரம். தொளை கொள் வான் நுகச் சுடர் நெடுந் தேர். (யுத் : 1448)

நுகர்தல் - 1. உண்ணுதல். அன்பின் அறவோர்கள் தமைவிட்டு என்னையே நுகர்தி என்றனள். (ஆ : 40)
2. இன்பம் அனுபவித்தல். (வை. மு) நறுங் கூந்தலின் சுறு நாறுகின்றது நுகர்ந்திருந்தும் நாமெலாம். (யுத் : 25) [பா : பே]
3. உண்ணுதல். ஊன் நுகர் அரக்கர். (ஆ : 162) நுகர்தியோ. (பா : 1057)

நுகர்ந்திருந்தும் - உட் கொண்டிருந்தோம். (கலா) (யுத் : 25) [பா : பே]

நுகருவது - உண்பது. நெடிது நாளுண்ட எச்சிலை நுகருவ தின்ப மாகுமோ. (அ : 26)

நுங்கண் மரபினோர் - உங்கள் முன்னோரான அரசர். நுங்கள் மரபினோர் புகழ்களெல்லாம் உன் புகழ் ஆக்கிக் கொண்டாய். (அ : 1028)

நுங்கள் - உங்கள். நுங்கள் குலம். (ஆ : 64)

நுங்கி - உண்டு. வங்க வேலைவாய் மடுப்ப நுங்கி மீனெலாங் களிக்கு மாதோ. (பா : 40) [பா : பே]

நுங்குதல் - 1. கையகப்படுதல். நானிலந் தடவித் தோட்டு நுங்கினர். (பா : 514)

2. **உண்ணல்.** கந்தார வீணைக் களி செஞ்செவி தாழ்ந்து நுங்க. (சு : 75)

3. **விழுங்குதல். உட்கொள்ளல். விழுங்கியுண்ணல்.** வையம் நுங்கிய வாயிதழ் துடித்தது. (கி : 146) நுங்கினன். (யுத் : 1278) காகாதிகள் நுங்குதல் காணுதியால். (யுத் : 1758) நுங்கி. (பா : 40) [பா : பே] உறுபதம் நுங்கிய ஒருவன். (அ : 904)

நுங்குவர் - விழுங்குவர். இனித் தீர்த்தலில்லையேல் நுங்குவர் உலகை ஓர் நொடியின் என்றனர். (பா : 198)

நுங்கை - உன் தங்கை. நுங்கை மூக்கினைத் துணிவித் தோரால். (யுத் : 3059)

நுசுப்பு - இடை. மின் பிறழ் நுசுப்பினர். (பா : 294)

நுட்சிலம்பி - சிறிய சிலந்தி. நுட் சிலம்பி வலந்தன நுண்டுகில். (பா : 861)

நுட்பம் - நுண்ணிய பொருள். விரிஞ்சன் வெம்படை யென்ருலும் வேதத்தின் நுட்பங் கூறும் அரிந்தமன் தன்னை யொன்று மாற்றலது. (யுத் : 2676)

நுட்புலம் - நுண்புலம். நுண்ணறிவு. நுட்புல நுணங்கு கேள்வி நுழைவினரெனினும். (சு : 95)

நுடக்கம் - துவட்சி. சிறு கொடி நுடக்கந்தீரக் குயிலுறுத் தமைய வைத்த கொள் கொம்பென்றுணர்ந்து கோடி. (கி : 784)

நுடங்கிட - துவள. மின்னையேய் இடை நுடங்கிட விரைந்து தொடர்வாள். (ஆ : 140)

நுடங்குதல் - 1. மெலிதல். நூறி யோசனை அகலமும் ஆழமும் நுடங்கக் கூறு செய்தனர் என்பரால். (பா : 515)

2. துவண்டு அசைதல். நுடங்கிய துகிற் கொடி. (பா : 828)

3. அசைதல். நுடங்கலால் நரைத்த கூந்தல் நங்கை மந்தாகினி. (அ : 639)

4. மடங்குதல். நுடங்குளை மடங்கல் மா. (யுத் : 2069)

நுடங்குளை மடங்கல் மா - மடங்கியுள்ள பிடரிமயிரை யுடைய சிங்கம். (யுத் : 2069)

நுண் - சிறிய. கேழ்ல நுட் சிலம்பி. (பா : 861) நுண் குறும் பனித்திவலை. (யுத் : 335)

நுண் குறும்பனித்திவலை - மிகச் சிறிய பனித்துளிகளின் வரிசை. (யுத் : 335)

நுண்ணிடை - நுண்ணிய இடை. குழைந்த நுண்ணிடை (அ:745)

நுண் திரைப் புரை - நுண்ணிய சிவிகைத் திரையிலுள்ள தொளை; நுண் திரைப்புரை நோக்கிய நோக்கினைக் கண்டு. (பா : 862

நுண் பொடி - நுண்ணிய பொடி. படையாவும் நுண் பொடியாயின. (யுத் : 2137)

நுண்மணல் - நுண்ணிய மணல். வேலை யென்றிசைக்கும் சுனையின் நுண்மணல் தொகையன. (யுத் : 3627)

நுண்மைக் கணக்கு - நுட்பமான அளவு. காலமாக் கணிக்கும் நுண்மை அளவையுங் கடந்து நின்ற மூலமா முடிவிலாத மூர்த்தி. (அ : 276)

நுணங்க - சூட்சும மாக. நுண்ணிதாக. நான்முக முற்று நுணங்க வுணர்ந்தாய். (யுத் : 2827)

நுணங்கிய நூலவர் - நுண்ணிய நூலறிவுடையவர். (பா : 100) (பா : பே)

நுணங்கு கல்வி - நுட்பமாக ஆராய்ந்து கற்கும் கல்வி. நுணங்கு கல்வியான். (யுத் : 1527)

நுணங்கு கேள்வி - நுட்பமான நூற்கேள்வி. நோக்கினன் நின்றனன் நுணங்கு கேள்வியான். (கி : 975) நுணங்கு கேள்வியார். (ஆ : 1158)

நுணங்குதல் - 1. குறைதல். நுணங்கி நின்றுணருமாவி. (யுத் : 1595)

2. நுண்ணிதாக ஆதல். நுட்பமாதல். நான்முக முற்றும் நுணங்க உணர்ந்தாய். (யுத் : 2827) நுணங்கு கல்வியான். (யுத் : 1527) தவநுணங்கியரும். (யுத் : 1333)

நுணித்தல் - நுண்ணிதாக ஆராய்தல். நுணித்தறங் குறித்து. (அ : 8) [பா : பே]

நுணுகுற - நுண்ணிதாக. நீற்றினும் நுணுகுறப் பிசைந்து நீங்கெனு. (யுத் : 1476)

நுதல் - 1. லேடமம். நெற்றி. மதியின் பாகந்தரு நுதலாள். (அ:621)

2. புருவம். விற்கொள் வாணுதல் (அ : 753) வில்லோக்கும் நுதல் என்றாலும். (ஆ . 633)

நுதல் விழி - நெற்றிக்கண் எரிதரும் நுதல்விழிப் பொங்கு கோபஞ் சுட. (பா : 342)

நுதலுதல் - கருதுதல். என்னை இராமன் பால் வாலின் ஈர்த்து வைத்தலை நுதலியன்று. (யுத் : 1412

நுதற் சூட்டு - நெற்றிப்பட்டம். மொய்வித்தகன் தடந்தோளினும் நுதற் சூட்டினும் மூழ்க. (யுத் : 3052)

நுதி - 1. கூர்மை. நுண்மை. நோக்கிய கண்களை நுதி கொள் மூக்கினால் காக்கைகள் கவர்ந்துண்ணக் காண்டியால். (சு : 666) நுதிகொள் வேலிணை. (பா : 599)

2. முனை. தாளின் மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார். (பா : 783)

3. நுனி கருங் கயல்களிற் பிறழ்கண் மூக்கினுதி காண. (கி : 863) வாலின் நுதியாற் பல. (யுத் : 1835)

நுதியிழை மதி - நுண்ணிதாக ஆராய வல்ல புத்தி. நோக்கிய மானை நோக்கி நுதியிழை மதியின் ஒன்றுந் தூக்கிலன். (ஆ : 787) [பா : பே]

நுதியுடை மதி - கூர்த்த மதி. நுதியுடை மதியின் ஒன்றுந் தூக்கிலன். (ஆ : 787)

நுந்த நுந்த - எறியுந் தோறும் எறியுந் தோறும். அடுக்கு தொறுப் பொருளது தேவரை வென்றவன் நுந்த நுந்த முறை முறை நூறினன். (யுத் : 2111)

நுந்துதல் - 1. எய்தல். நுந்த நுந்த. (யுத் : 2111)
2. தருதல். கொடுத்தல். வெங்கதமா நூருயிர மாயினும் நுந்து வனல். (யுத் : 1717)
3. வலுவில் தள்ளிப் போக்குதல். மாய்த்துக் கொள்ளுதல். நுந்துவென் உயிரினை. (கி : 954)

நுந்தை - உன் தந்தை. மூலமே தந்த நுந்தையாம்என. (கி : 445)

நுந்நிலை - நும்நிலை. உம் நிலைமை. (யுத் : 359)

நும் - உம்முடைய. நும் கணவன். (அ : 868) நுந்நிலை சொல்லுமின். (யுத் : 359)

நும் குலம் - உம்முடைய குலம். நும் குலங் கடிந்தான் வலி கொண்ட கொண்டலை. (அ : 484)

நும் பணி - நும் கட்டளை. மன்னவன் பணியன்ருகில் நும் பணி மறுப்பனே. (அ : 295)

நும்பி - உன் தம்பி. நன்று நும்பிக்கு நானிலம் நீ கொடுத்து ஒன்றி வாழுதி ஊழிபல என்ருள். (அ : 301)

நும்மகன் - உங்களுடைய மகன். நெறியின் ஈங்கிவன் நும்மகன். (அ : 85)

நும்மினை - உன்னை. நும்மினைக் கொல்லாம். (சு : 1131)

நும்முடை - உங்களுடைய. நும்முடைச் சூழல் எல்லாம். (சு : 738)

நும்முன் - உம்முடைய தமயன். காக்கலாம் நும்முன் தன்னை எனின் அது கண்டதில்லை. (யுத் : 1365)

நும்முனர் - நுமது தமயன். நும்முனர்க்கு ஏற்றிலா ஏவலாள னேன். (யுத் : 4176)

நுமர் - நும் இனத்தவர். நுமரோடும் பொய்கையின் கரை பிற்படப் போதிரால். (கி : 758)

நுரை - நீர்க்குமிழிகளின் தொகுதி. சுதைக்கண் நுரையைப் பொருவு தூசு. (பா : 913) நீரும் நுரையும் என. (யுத் : 1060)

நுரைக் கொழுந்து - நுரையின் கொழுந்து. நுரைக் கொழுந் தெழுந் தோங்கி நுடங்கலால். (அ : 639)

நுரைத் தொகை - நுரைத் தொகுதி. தூய மலர்போல் நுரைத் தொகையும் முத்துஞ் சிந்தி. (யுத் : 4)

நுரையைப் பொருவு தூசு - நுரையை ஒத்த ஆடை. மெய்யை சுதைக்கணுரையைப் பொருவு தூசு கொடு தூய்தாய் உதிர்த்தனர். (பா : 913)

நுவல்தல் - 1. பேசுதல். சொல்லுதல். நுவலக் கருதும் ஒன்றும் நுவல்கில்லாள். (சு : 550) நோய் தந்தென்னை நோவன செய்து நுவலாதே. (அ : 214) நுவறக்கீர். (கி : 1013) நுவன்மின். (யுத் . 1938) நுவலகிற்றிலன். (பா : 605) நுவலகிற்கிலம். (கி : 953) நுவல. (யுத் : 1824)
2. விரும்புதல். இது நுவல் காலையில் இளையோன் கொன்றான். (யுத் : 1840)
3. சிறப்பித்துக் கூறப்படல். நோய்தந்தவனே நுவல் தீர்வு மெனு. (யுத் : 243)

நுவல்வது-சொல்லுவது. நுவல்வதோர் கிலாது. (அ : 9126)

நுழைகிற்க - நுழைதலால். வேல் வெம்புண் நுழைகிற்க உழைக்கும் ஆனை. (அ : 200)

நுழைதல் - இடையே புகுதல். எரிந்த பூவுள இடையிடை நுழைய. (அ : 56) (யுத் : 2150) தழைந்த சந்தனச் சோலை தன் செலவினைத் தடுப்ப நுல்ழந்து போகின்ற தொக்கின்ற மதியினை நோக்காய். (அ : 745) நுழைந்தனிர். (யுத் : 729)

நுழைய - நுழையா நிற்க. (அ : 56)

நுளைச்சியர் - வலைச்சிறுமிகள். கோணெறி கற்றிலாத கருங்கண் நுளைச்சியர். (பா : 60) நாகமும் நாறின நுளைச்சியர் ஐம்பால். (கி : 491) (யுத் : 334)

நுறுக்குதல் - 1. தகர்த்தல். படைகளால் நுறுக்கினார். (யுத்:1803)
2. பொடியாக்குதல். நுறுக்கினன். (யுத் . 1896)

நுறுங்குதல் - பொடியாதல். நூறிய சரமெலாம் நுறுங்க. (ஆ:474)

நுன் - நின். அது நுன் துணைக் கோமகன் நுகர்வது. (கி : 679) சாலிவந்தான் நுன் திருவடிவுகாணுன். (அ : 565) [பா : பே] நுன்பால். (சு : 933)

நுன்பால் - உன்னிடம். (சு : 933)

நுன்கண் - உன்னிடம். மூவுலகின் தனி நாயகம் மேவுகின்றது நுன்கண் விலக்கினே. (சு : 442)

நுன்னின் - நின்னால். நோயு நீங்கினென் நுன்னினென் எங்களை நீயும் நீங்குதியோ. (ஆ : 211)

நுன்னை - உன்னை. நுன்னை இத்தன்மையை ஆக்கிப் போனவர் ஆர் கொல் என்றுனவன். (ஆ : 370)

நுனித்தல் - 1. கூர்ந்தாராய்தல். கூர்ந்தறிதல். நோற்ற நோன்பு உடைய வாழ்நாள் வரமிவை நுனித்த வெல்லாம். (சு : 449)
2. நுட்பமாக அறிதல், கூறுதல். நான்முகற்கும் வகுப்பரிது நுனிப்பதொரு வரம்பிலாற்றல். (ஆ : 561)
3. எண்ணுதல். நுனிப்படா நின்ற வீரன். (யுத் : 3684)

நுனித்துக் காட்டல் . நுட்பமாகக் காட்டல். நோன்பின் மாதவர் நுனித்துக் காட்ட. (யுத் : 4315)

நுனித் துன்னல் - ஆராய்ந்து தெளிதல். இது சங்கரன் கவச மென்றுணர்வுற நுனித்துன்னி. (யுத் : 1553)

நுனிப்படுதல் - ஆராய்ச்சி பொருந்துதல். கூரிய ஆலோசனை பொருந்தியிருத்தல். நுனிப்படா நின்ற வீரன். (யுத் : 3634)

நுனிப்பரு நுண்வினைச் சிலம்பு - ஆய்ந்தறிய முடியாத நுண்ணிய செய் தொழில்கள் அமைந்த சிலம்பு. (பா : 1311)

நுனை - நுனி. கொதி நுனை வேற்கண் மாதர். (பா : 933) புன்னுனைப் பனிநீர் அன்ன மனிசர். (யுத் : 1258) [பா : பே]

நூ

நூக்கலாகலாத காதல் - விலக்கல் இயலாத காதல். (ஆ : 649)

நூக்குதல் — 1. உந்தித் தள்ளுதல். தள்ளி விடுதல். நூக்கினர். (யுத் : 1423) விண்படர்வென் என்று உருத்தெழுவாளை நூக்கி. (ஆ : 318) நூக்கினன். (கி : 599) வேர் மேற்பட வன்தலை கீழ்ப்பட நூக்கி. (ஆ : 318)

2. உந்தி நீந்துதல். மானப் பொங்கு வெங்களிறு நூக்கிக் கரை யொரீஇப் போயிற்றம்மா. (அ : 1042) களிறு நூக்கி. (யுத் : 1896)

3. செலுத்தல். நூக்கிய களிறும். (யுத் : 1108) நூக்குவ கணிப்பில. (யுத் : 1790) நூக்கினர். (யுத் : 1804)

4. அசைத்துத் தள்ளுதல். தாக்கினர் கைத்தலம் சலித்ததன்றி நூக்கினரில்லை. (யுத் : 1433)

5. பெயர்த்துத் தள்ளுதல். பை நாக நூக்கும் வீரர். (சு : 1248)

6. எதிர்த்தல். நூக்கிய களிறும் தேரும் புரவியும் நூழில் செய்ய. (யுத் : 2004)

7. தூண்டுதல். நூறு வாயென மாதலி நூக்கினன். (யுத்:3811)

8. விலகுதல். நூக்கலாகலாத காதல். (ஆ : 649)

நூக்குறுத்து - அசைத்து அசைக்கப்பட்டு. இலங்கை வெற்பு நூக் குறுத் தங்கு மிங்கும் தள்ளுற நுடங்கும் நோன்மை. (சு : 91)

நூபுரக் குரல் - சிலம்பொலி. புதுக் குதலையர் நூபுரக் குரலின் வழங்கு மேகலைக் கிண்கிணி வயின்தொறும் மறையும். (சு:108)

நூபுரம் - சிலம்பு. நூபுரங்கள் புலம்ப. (அ : 245) நூபுர மடந் தையர் கிடந்தலற. (யுத் : 980)

நூபுரம் புலம்பல் - நூபுரம் ஒலித்தல். நூபுரம் புலம்பிட. (யுத்·3897)

நூல் - 1. பூணூல். சூனிறக் கொண்மூக் கிழித்திடைத் துடிக்கும் மின்னென மார்பின் நூல் துளங்க. (சு : 44)

2. (நூற்ற) நூல். (கற்கும்) நூல். புத்தகம். நூல்வரைத் தொடர்ந்து பயத்தொடும் பழகி. (பா : 100)

3. சாஸ்திரம். கலை. உத்தமன் ஓது நூல் மல்கு கேள்வி அவ் வள்ளலை நோக்கினன். (அ : 102)

4. மேகலை. சங்கொடு சிலம்பு நூலும் பாத சாலகமும் தாழ. (சு : 210)

5. தர்க்கம் முதலிய நூல்களின் கொள்கை. புத்தகம். அது நூலை மாறு கொண்டிருந்தது. (சு ; 531)

நூல் ஊழ் - (சிற்ப) நூலின் மரபு. நூல் விதி. நூல் ஊழுறக் குவித்தமைத்த (பா : 118)

நூல் தோய்தல் - கலைகளிலே ஆழ்தல். நூல் தோய்ந்த சிந்தைக் கவுசிகன். (பா : 650)

நூல்படத் தொடர்தல் - நூல் இடைப்பட்டது போன்று கோணது தொடர்ந்திருத்தல். நூல்படத் தொடர்ந்த பைம்பொற் சித்திர நுனித்த பத்திக் கோல்படு மணிகளாய குலமணி. (யுத் : 794)

நூல்வரை வழிசெய்தான் - நூல்களிற் கூறும் முறையால் வழியாகிய அணையைக் கட்டியவன்; நளன். (யுத் : 705)

நூல்வலி காட்டல் - தான் கற்ற நூல்களின் பெருமையைக் காட்டுதல். நூல் வலி காட்டுஞ் சிந்தை நும் பெருந்தூதன். (யுத்:882)

நூலினுல் நுணங்கிய அறிவு - சாஸ்திரங்களினுல் நுணுக்கமாகக் கூறப்படவற்றை அறிந்த அறிவு. நூலினுல் நுணங்கிய அறிவு நோக்கினே. (யுத் : 78)

நூலுத்தரியம் - பூணூலாகிய உத்தரியம். எடுத்த நூல் உத்தரியத் தொடு எய்தி நின்று உடுத்த பானிறத்துகில் ஒழிந்த போன்றவே. (கி : 550)

நூலுரை வழி செய்தான் - சிற்ப சாஸ்திர முறைப்படி வழி (சேதுவை) அமைத்தவனுன நளன்- (யுத் : 705)

நூலுறு மருங்குல் - நூலின் இழையை ஒத்த இடை. மனமுமெய்யுந் தன் நூலுறு மருங்குல் போல் நுடங்குவாள். (பா:604)

நூலூழ் - நூல் ஊழ் பார்க்க.

நூலொன்று வரிவில் - தனுர் வேதத்தோடு பொருந்திய கட்டமைந்த வில். நூலொன்று வரி விலான். (யுத் : 3070)

நூழில் - அழித்தல். கொல்லுதல். கொன்று குவித்தல். களிறும் தேரும் புரவியும் நூழில் செய்ய. (யுத் : 1108) (யுத் : 2520)

நூழில்கள் - கொன்று குவிக்குந் தொழில். நூழில்கள் சால் மாருதுழல் சாரிகை வந்தனனுல். (யுத் : 3466)

நூழில் செய்தல் - அழித்தல். அழித்துக் குவித்தல். நூழில் செய்ய. (யுத் : 1108) (யுத் : 2004)

நூழில் தீர்த்தல் - கொன்று குவித்தலைத்தீரச் செய்தல். மூரி நுகம் பயில் தேரினேடு நூழில் தீர்த்தான். (யுத் : 2520)

நூழில் படுதல் - கொன்று குவிக்கப்படல். நாருயிர கோடியின் நூழில் பட. (யுத் : 2921)

நூழில் வெம்போர் - கொல்லுதல் தொழிலைக் கொண்ட வெவ்விய போர். வெய்தினுற்ற தானை முறைவிடா நூழில் வெம்போர் செய்தன. (யுத் : 2364)

நூழிலாக்குதல் - பகைவரைக் கொன்று குவித்தல். நூழிலாக்கும் வெஞ்சமம். (யுத் : 3513)

நூழை - துவாரம். துளை. நூழைக் கைம்மலை. (பா : 828)

நூழைக் கைம்மலை - யானை. (பா : 828)

நூற்கடல் - 1. கடல் போற் பரந்த நூல். நூற்கடற் புலவர். (யுத் : 818)
2. நூலாகிய கடல். எல்லையில் நூற்கடல் ஏற நோக்கிய நல்லியல் நவையறு கவிஞர். (யுத் : 1076)

நூற்கடலன்னவர் - கலைக்கடல் போன்றவர். நூற்கடலன்னவர் சொற்கடன் நோக்கி. (பா : 1343)

நூற்கடற் புலவர் - நூற்பரப்பாகி கடலினை அளவிட்டறிந்த மதிவல் லோரான அறிஞர்கள். (யுத் : 918)

நூற்கல் - நூல் செய்தல். நொய்தின் நெர்ய்ய சொல் நூற்க லுற்றேன். (பா : 5)

நூற் பெருங்கடல் - பெரிய கடல் போன்ற நூலறிவு. நூற் பெருங் கடல் நுணங்கிய கேள்வியான். (சு : 301)

நூற்றட மார்பன் - முன்னூல் அணிந்த விசாலமான மார்பினை யுடையவன். வசிட்டன். நூற்றட மார்பனும் நொய்தின் எய்தப் போய். (அ : 121)

நூற்றிதழ்க் கமலம் - நூறு இதழ்களையுடைய தாமரை மலர். கடல் வணன் உந்தி உந்திய நூற்றிதழ்க் கமலம். (அ : 1186) (யுத் : 711)

நூற்றிரண்டு - 1. இரண்டு நூறு. நூருக இரண்டு. நூற்றி ரண்டாய வெள்ள நுன் பெரும் படைஞர் சுற்ற. (யுத் : 911) (யுத் : 1043)
2. நூறும் இரண்டும். (உ.வி) வாளெயிற்றரக்கர் தானை நிலையுறச் செறிந்த வெள்ளம் நூற்றிரண்டெனினும். (யுத்:1236)

நூற்றிரு கோடி - இருநூறு கோடி. நொறில்பரி நூற்றிரு கோடி. (யுத் : 3495)

நூற்றுக் கோடி - நூறு கோடி. நூற்றுக் கோடியம்பெய்தனன் இராவணன் ஒரு நொடியில். (யுத் : 3766)

நூறுக நூறி - சாம்பலாகும்படி அழித்து. ஓரிமை ஒடுங்கா முன்னம் பாடி நூறுக நூறி மீண்டது. (யுத் : 613)

நூறுயிரங்கோடி - நூறு ஆயிரங்கோடி. லட்சங் கோடி. குன்று நூறுயிரங் கோடியாயின. (யுத் : 587)

நூறுயிர கோடி - லட்சங் கோடி. நொய்திற் கூடிய சேனை நூறுயிர கோடி எய்த. (கி : 724)

நூறுயிரம் - லட்சம். நின்ற நூறுயிரம் பகழி நீட்டலால். (யுத்:587) (யுத் : 1717) (பா : 999)

நூறுயிரவர் - லட்சம்பேர். இற்ற வாளரக்கர் நூறுயிரவரும் இழந்த தோளார் முற்றினர் உலந்தார். (சு : 1176)

நூறிக் கொல்லல் - பொடியாக்கிக் கொல்லல். குனிப்படா நின்ற வில்லால் ஒல்லையில் நூறிக் கொன்றான். (யுத் : 3684)

நூறி நூறி - பொடிப் பொடியாக்கி. வெங்கணை நூறி நூறி இராமன் நுறுக்கினான். (யுத் : 3855)

நூறியசரம் - அழிக்குந் தன்மையுள்ள அம்பு. (வை. மு) சரம் நூறிய, அழிந்தன. (அண்) நூறிய சரமெலாம் நுறுங்க. (ஆ : 474)

நூறிய சரமெலாம் நுறுங்க - அழிந்தனவாய் அம்புகளெல்லாம் நொறுங்க. (ஆ : 474)

நூறிரு கோடி - இரு நூறு கோடி. நொறில்பரி நூறிரு கோடி. (யுத் : 3495) [பா : பே]

நூறு - 1. சாம்பல். நூறுக நூறி. (யுத் : 613)
2. நூறு என்னும் எண். திண்சரம் நூற்றினால். (ஆ : 547)
3. அழிப்பாய். ஓடி நூறு என்று விட்டான். (யுத் : 613)

நூறு கோடிய - நூறு கோடிக் கணக்குள்ளன. நூறு கோடிய நூறு நூறுயிர கோடி வேறு வேறெய்த சரமெலாம் சரங்களால் விலக்கி. (யுத் : 1163)

நூறு சத கோடி - பதினாயிரங் கோடி. படைத்தலைவர் நூறு சத கோடியர் தடுத்தலரியார். (யுத் : 3404)

நூறுதல் - 1. அழித்தல். மெய்யே என்தன் வேறற நூறும் வினை நோக்கி நையா நின்றேன். (அ : 218)

2. பொடியாக்குதல். ஒழிப்பது. வானரரையெல்லாம் வேரோடு மடங்க நூறுவதே கருமம் என்பது நுவன்ருன். (யுத் : 68)

3. ஒழித்தல். மீளாவினை நூறும் விடைக்கிளையான். (யுத்:2334)

4. கொன்றழித்தல். மரங்களும் நூறு மாயிரமுங்கொடு நூறினர். (யுத் : 2097) நூறு. (யுத் : 613)

5. நுறுக்குதல். நால்வகைப் பன்னெடுந்தானையைப் பாற நூறினுன். (யுத் : 1801)

6. துகள் செய்தல். பாறுகு சிறையென விசும்பிற் பாறிட நூறினுன். (யுத் ; 1527)

நூறு நூருயிரங்கோடி - நூறு லக்ஷம் கோடி. நூறு கோடிய நூறு நூருயிரங் கோடி வேறு வேறெய்த சரமெலாம். (யுத் : 1163)

நூறு நூருயிர கோடி - ாறுலக்ஷம் கோடி. நூறு நூருயிர கோடி நோன்கழல் மாறுபோர் அரக்கரை. (யுத் : 2945)

நூறு நூறிஞேடு ஐயிருநூறு - கோடி. நூறு நூறிஞேடு ஐயிரு நூறவை வேறு வேறு திசையுற. (யுத் : 3855)

நூறு நூறு - பல நூற்றுக்கணக்கான. நூறு நூறு குடங்களும் நுங்கினுன். (யுத் : 1278) (சு : 1026)

நூறு நூறு கோடி - மிகப் பல கோடி. (வை. மு) கோடி கோடி மடங்கு. நூக்கலாகலாத காதல் நூறு நூறு கோடியாய்ப் பூக்க. (ஆ : 649)

நூறுபடுதல் - சுக்கு நூருகப் பொடிபட்டுப் போதல். உண்டை நூறுடை நூறுபட்டுளதென உதிர்த்தான். (யுத் : 3775)

நூறுபத்து - ஆயிரம். நூறு பத்துடைப் பத்தியின் நொறில் பரி பூண்ட ஆறு தேரினும் அகன்றது அனுமன் தன் தடந்தோள்.

நூறும் ஆயிர கோடியும் - நூற்றுக் கணக்காகவும் ஆயிரக் கோடிக் கணக்காகவும். (வை. மு) நூற்றுக் கணக்காவும் ஆயிரக் கணக் காகவும் கோடிக் கணக்காகவும். (அண்) நூறும் ஆயிர கோடி யும் கடுங்கணை நுழைய. (யுத் : 558)

நூறும் ஆயிரமும் - நூறும் ஆயிரமுமாக. நூறும் ஆயிர முங்கணை நொய்தினின் வேறு வேறுபடுதலின். (யுத் : 1032) ஆறும்

ஏழும் அறுபதும் ஐம்பதும் நூறு மாயிர முங்கணை நுங்கி வந்து. (யுத் : 2112)

நூறும் இருநூறும் - நூறும் இருநூறுமாக. நூறும் இரு நூறும் நொடிப்பளவின் ஏறுந் நுதி வேலினிறைப் பொழுதில் சீறுங்கவி சேனை சிதைக்கு மெனு. (யுத் : 2350)

நூறும் ஐம்பதும் - நூறும் ஐம்பதுமாக. நூறும் ஐம்பதும் ஒரு தொடையினில் தொடுத்து. (யுத் : 1459)

நூறுவது – நீருக்குவது. வேறு பெயராத வகை வேரொடு மடங்க நூறுவதுவே கருமம். (யுத் : 68)

நூறுவர - வழுவாமற் பொருந்த. (வை.மு) புலனுக. (அண்) அமை யுமாறு. (கலா) நூன்முக நுனித்த நெறி நூறுவர நொய்தா மேன்முக நிமிர்ந்து. (கி : 875)

நூறெடிரு நூறு - முந்நூறு. வெள்ள மொரு நூறெ டிரு நூறு மிடைவீரர். (க : 163)

நூறெடுநூறு - இருநூறு. இந்திரன் இகலினிட்ட நூறெடு நூறு பூண்ட நொறில் வயப்புரவி நோன் தேர். (சு : 936)

நூன்மந்திர நெறி - சாஸ்திரங்களிற் கூறிய மந்திரங்களின் முறைமை. நிரம்பு நன்னூன் மந்திர நெறியினை வல்லான் (ஆ : 104)

நூன்மரபு - நூல்களின் மரபு (அண்) நீதிசாஸ்திரம் முதலியவற்றின் முறைமை. (வை. மு.) சாஸ்திர பிரமாணமான முறை. (கலா) மந்திரங்கெழுமுநூன் மரபுணர்ந்துதவுவான். (கி : 93)

நூன்முகம் - சாஸ்திரங்களின் முக்கியாம்சம். (வை.மு.) நூல்களின் சிறந்த கருத்துக்கள். (அண்) நூன்முக முற்றும் நுணங்க உணர்ந்தாய். (யுத் : 2827)

நூன்முகம் நுனிந்த நெறி - சிற்ப நூலில் நுட்பமாகக் கூறப்பட்ட நூற்றுக்கணக்கான துறைகள். (அண்) யோக சாஸ்திரத்திற் கூறியுள்ள நுட்பமான வழி. (வை.மு.) (கி : 875)

நெ

நெக்க - பிளந்தன. உக்க சில நெக்க. (சு : 700)

நெக்க உகுதல் - பிளந்து சிதறுதல். உக்க சில நெக்க. (சு : 700)

நெக்கன - ஞாபகத்திற்கு வருந்தன்மை குறைந்தன. நெக்கன விஞ்சைகள் நீலையிற்றீர்ந்தன. (யுத் : 3815)

நெக்கனள் உருகுகின்ருள் - நெகிழ்ந்து உருகுகின்றவளாய். (அண்) வாணுதல் ஒருத்தி உள்ளம் நெக்கனள் உருகுகின்ருள். (பா:1161)

நெக்கு - நெகிழ்ந்து. திவினைப் பயனெனச் சிந்தை நெக்கு நோக்கு வோர். (அ : 508)

நெக்கென - நெகிழ்ந்து. நெக்கென உருகுகின்ருள். (பா : 1161) [பா : பே]

நெகிழ்த்தல் - தளர்தல். கையவண் நெகிழ்தலோடும். (கி : 38) கையவண் நெகிழ்ந்தனன் நெகிழ்ந்திலன் கடுங்கணை கவர்தல். (கி : 296)

நெகுதல் - 1. **நெகிழ்தல்.** நெக்கன நெகிழ்ந்தன நின்ற குன்றமே. (கி : 235) சிந்தை நெக்கு. (அ : 508)
2. **வருந்துதல்.** (அண்) நெஞ்சால் ஒன்றும் உய்வழி காணுள் நெகுகின்ருள். (சு : 490)
3. **உடைதல். மனம் முறிதல்.** (வை. மு). (சு : 490)
4. **பிளவுபடல்.** நெக்க மேகத்துதிக்கும் நெருப்பென. (யுத்:3732)
5. **பொடியாதல்.** நெக்கிலா மலைகளும். (யுத் : 3732)
6. **சிதைதல்.** (வை. மு) (கி : 1036)
7. **நொருங்குதல்.** (அண்) ஊழின் நெடுவாய சிகர கோடி. (கி : 1036)

நெகுதற் கொத்த நெஞ்சு - அன்பினல் நெகிழ்ந்து உருகுதற்கு ஏற்ற உள்ளம். நெகுதற் கொத்த நெஞ்சும் நேயத்தாலே ஆவி உகுதற் கொத்த உடலு முடையேன். (அ : 355)

நெஞ்சகம் - மனம். வஞ்சனையர்ல் வந்த வர வென்பது என்னு டைய நெஞ்சகமே என்னை நினைவித்த தாஞலும். (ஆ : 1002)

நெஞ்சம் - 1. **மனம். இதயம்.** நெஞ்சம் மையிற் கரியாள். (அ:240)
2. **மார்பு.** தந் நெஞ்சம் தாமே தடவாரோ. (யுத் : 1661)

நெஞ்சம் எரிதல் - மனம் கோபத்தினுற் பற்றி எரிதல். எரிந்தது நெஞ்சம். (யுத்: 822)

நெஞ்சம் காணுதல் - கருத்தை அறிதல். மனநிலையை உணர்தல். கண்டேன் நெஞ்சம். (அ : 543)

நெஞ்சம் கிழிதல் - மனம் பிளத்தல். நீண்டன செவிகள் நெஞ்சம் கிழிந்தன. **(யுத் : 2403)**

நெஞ்சம் கூருதல் - இதயம் பிளத்தல். அரு நெஞ்சம் கூருகி ஓடாத இத்தனையே குற்றமே. **(அ : 597)**

நெஞ்சம் கோடல் - மனத்திற் கொண்ட குறை. எம்முன் தன்னைப் பணி யென நெஞ்சங் கோடலுண்டு. **(சு : 932)**

நெஞ்சம் தடவுதல் - செருக்கின் குறிப்பு. விழி யஞ்சி வாழ்கின்றுர் தந்நெஞ்சம் தாமே தடவர்ரோ தானவர்சுள். **(யுத் : 1661)**

நெஞ்சமுங் கருமமு முறையும் - திரி கரணங்களும். தஞ்சமுந் தருமமுந் தகவு மேயவர் நெஞ்சமும் கருமமு முறையுமேல். **(யுத் : 1303)**

நெஞ்சரங்குதல் - மனங் கலங்குதல். நெஞ்சரங்க வெய்ய கர்மன் எய்யவே. **(பா : 798)**

நெஞ்சழலல் - மனங் கொதித்தல். அரக்கன் நெஞ்சழன்ருன். **(யுத் : 2460)**

நெஞ்சழிதல் - மனங் கலங்குதல். அழிவுறும் நெஞ்சினன் அரற்றினனரோ. **(ஆ : 196)** கண்ணீர் நிலங்கொண்டுபடர நின்று நெஞ்சழிவானை. **(யுத் : 2903)**

நெஞ்சிறுதல் - மனம் முறிதல். இற்றதோர் நெஞ்சனுகி. **(அ:665)**

நெஞ்சினுற் பிழைப்பிலாள் - மனமாரச் செய்த தவறிலாத இவள். நெஞ்சினுற் பிழைப்பிலாளை நீ அழைத்திடுக. **(பா : 562)**

நெஞ்சினும் வலி துயிர் - இதயத்தினும் உயிர் வலிதாக உள்ளது. நெஞ்சினும் வலிதுயிர் நினைப்பதென் சில. **(அ481)**

நெஞ்சினுறு காமம் - உள்ளத்தின்கண் நிலவும் ஆசை: நினைவர்க்கும் நெஞ்சினுறு காமமுற்றி அறியாமை நிற்றி. **(யுத் : 2211)**

நெஞ்சினொடு சொல்லல் - மனப்பூர்வமாகச் சொல்லுதல். வல்லிதனை யூர்வ தொரு மாதலி யெனப் பேர் சொல்லுவார் எனத் தொழுது நெஞ்சினொடு சொன்னுன். **(யுத் : 3665)**

நெஞ்சினொடு புல்லுதல் - மார்போடு சேர்த்துத் தழுவுதல். நீண்ட கையினுலவரை நெஞ்சினொடு புல்லி. **(யுத் : 691)**

நெஞ்சு - 1. இதயஸ்தானம். வஞ்சன் நெஞ்சுறப்பட்டது. (ஆ : 807)
2. **மார்பு.** நிருதர் நெஞ்சுருவத்தச்சு நின்றன. (ஆ : 506)
3. **நடுவிடம்.** நிரந்தர நெடும் பிணம் விசும்பின் நெஞ்சுற. (யுத் : 1780)

நெஞ்சுதடவுதல் - மார்பைத் தடவுதல். வீரக் குறிப்பு. தந்நெஞ்சம் தாமே தடவாரோ தானவர்கள். (யுத் : 1661)

நெஞ்சு பறை போதல் - மனம் பறை கொட்டுவது போன்று துடித்தல் - உஞ்சுபிழையாய் உறவினேடு மென உன்னு நெஞ்சு பறை போதும். (ஆ : 753)

நெஞ்சு புழுக்கமுறல் - மனம் உளைதல். புண்டானுறு நெஞ்சு புழுக்கமுற. (யுத் : 1702)

நெஞ்சு பூத்த தாமரை - மனமாகிய மலர்ந்த தாமரை. என் நெஞ்சு பூத்த தாமரையின் நிலயம் பூத்தாள். (கி : 32)

நெஞ்சுருகுதல் - மனம் உருகுதல். என்புறக் குளிரும் நெஞ்சுருகும். (யுத் : 327)

நெட்டில் - உயர்ந்த மேன்மாடம். உபரிகை. அகிற்புகை நெட்டில் உமிழ்ந்தன. (அ : 497)

நெட்டிலைச் சரம் - நீண்ட இலை வடிவான அம்பு. நெட்டிலைச்சரம் வஞ்சனை நெஞ்சுறப்பட்டது. (அ : 807)

நெட்டுலை - பெரிய உலை. நெட்டுலைக் கழுநீர் நெடுநீத்தம். (பா:57)

நெடிது - 1. நீண்ட. நெடிது நாள் வளர்த்து. (யுத் : 1373) நெடிதாசி. (சு : 72((சு : 73)
2. **செவ்வையாக.** (வை.மு) நீண்டதாயினும் நின்ற நீதியாய் நெடிது கேட்டியால். (கி : 114)
3. **விரைவாக.** (வை.மு) நிகழ்ந்ததை இதுவென நெடிது கூறினர். (பா : 317)
4. **விரித்து.** (அண்) (பா : 817)
5. **நெடு நேரம்.** முடிபடி நெடிதின் வைத்தான். (யுத் : 1598)
6. **நெடுந்தூரம்.** விண்மேல் நெடிதோடினர் ஆருயிர் விட்டார். (யுத் : 1930)

நெடிது நாணுழத்தல் - பெரிய நாணத்தால் வருந்துதல். நெடிது நாண் உழக்கும் நெஞ்சர். (சு : 758)

நெடிதுயிர்த்தல் - பெருமூச்சு விடுதல். அலமரும் உயிரினேடு நெடிதுயிர்த் தயர்கின்றுரை. (சு : 208) நின்று நின்று நெடிதுயிர்த்தனரரோ. (அ : 820)

நெடிதுவத்தல் - மிகமகிழ்தல். நின்ற அக்காலின் மைந்தன் நெடிதுவந் தடியில் தாழ்ந்தான். (கி : 73)

நெடிது நல்குதல் - பேருதவி புரிதல். இன்று விகலா தெவரும் எம்முடன் நின்று வாழுமா நெடிது நல்கினுய். (யுந் : 2769)

நெடிது நாள் வளர்த்து - நீண்ட காலம் அருமையாக வளர்த்து. நெடிது நாள் வளர்த்துப் பின்னர்ப் போர்க் கோலஞ் செய்து விட்டாற்கு. (யுத் : 1373)

நெடிது நிற்றல் - நீண்ட நேரத்துக்கு முன்னம் ஏறி நிற்றல். நினேவதன் முன்னஞ் செல்லும் மானத்தின் நெடிது நின்ருன். (யுத் : 2872)

நெடிய - அகன்று நீளமாயுள்ளன. நெடிய மார்பு. (ஆ : 240)

நெடிய கற்படிவம் - நீண்ட கல்வடிவம். நெடிய கற்படிவமாம் ஆலிகை. (கி : 84)

நெடிய காதல் – மிக்க பேரன்பு. நெடிய காதலங் கலசத் தாட்டினன்.

நெடிய காதலினேன் - பேரன்புடையவன். (இலக்குவன்) (யுத்:3829)

நெடிய குன்று - பெரிய குவடு. நிலங் கொழுந் தோயுர்ந்தனைய தோர் நெடிய குன்றின் மேல். (அ : 1091)

நெடியகை - நீண்ட கரம். நெடிய கையால் காட்டினன் ஓர் ஆழி. (சு : 553)

நெடிய கொடுமை - கொடும் பாவம். உம் நெடிய கொடுமை நீங்கி வீடுறுதிர். (கி : 1772)

நெடிய தானே நெருக்கினன் - பெரிய படைச் செறிவுடையவன். (அ : 646)

நெடிய நம்பி - புருஷோத்தமன். இராமன். நெடிய நம்பி தோளின் கண் மனம் வைத்து அன்ன சுடர் மணித் தடங்கள் கண்டாள். **(ஆ : 228)**

நெடியவன் - 1. நெடியோன் ஆகிய திருமால். நெடியவன் குறியகை நீரின் நீட்டினன். **(பா : 432)**

2. பெரியோன் ஆகிய இராமபிரான். நிற்றி ஈண்டென்று புக்கு நெடியவற் றெழுது. **(அ : 656)** நெடியவன் முனியு மென்றஞ்சி நின்றனன். **(அ : 862)**

நெடியன் - நெடியவன். (யுத் : 2342)

நெடியன் குறியன் என்னு நீர்மையினன் - நெடியனும் குறியனும் ஆகுந்தன்மை யுள்ளவனன அனுமான். (யுத் : 2342)

நெடியாய் - ஞான சீல விருத்தனே. (வை. மு) நெடியாய் உனதடி யேன் குலத் தோடற முடியேல். **(பா : 1371)**

நெடியோரின் நெடியோர் - பெரியோர்களுக்குள் பெரியோர்கள். நின்ற தவ முற்று நெடியோரின் நெடியோரும் உன்ற னருள் பெற்றிலர்கள். **(ஆ : 167)**

நெடியோன் - 1. பெரியோன். நெடியோய் என் நலஞ் செய்வினை யுண்டெனினு மன்று. **(பா : 323)**

2. பெருமையுடையோன். நிலை மேற் கொண்டு மெலிகின்ற நெடியோன் தன் முன். **(யுத் : 7)** அற மொக்கு நெடியோன். **(யுத் : 3402)**

நெடுகு - நீண்ட. நெடுகு கூனல் வால். **(அ : 766)**

நெடுகு கூனல் வால் - நீண்ட வளைந்த வால். (அ ; 766)

நெடுங் கஞ்சுகம் - நிலையங்கி. மெய்ப்பை. மெய் புகத் துன் னெடுங் கஞ்சுகத்துகிலர். **(ஆ : 575)**

நெடுங் கட்சீயம் - பெரிய கண்களையுடைய நரசிங்கப் பெருமான். நினைவதன் முன்னம் கொன்று நின்றதந் நெடுங்கட்சீயம். **(யுத் : 273)**

நெடுங்கட லிலங்கை - நெடிய கடல் சூழ்ந்த இலங்கை. (யுத்:89)

நெடுங்கண் - நீண்ட கண். பெருங்கண். நெடுங்கண் முத்தினம். **(பா : பே)** நெடுங் கணயில் வீசி. **(ஆ : 261)** நெடுங் கணலி. **(அ : 191)**

நெடுங்கணம் - நெடிய கூட்டம். சிலைக் கடுங்கணை நெடுங்கணம் சிறையுடன் செல்வ. (யுத் : 1428)

நெடுங் கணீர் - மிக்க (நீண்ட) கண்ணீர். (அ ; 462)

நெடுங்கதி - நற்பதவி. நிரய முற்றிய சகரர்கள் நெடுங்கதி செல்ல. (பா : 536)

நெடுங்களிமால் யானை - உயர்ந்த மதச் செருக்கையுடைய யானை. (யுத் : 1586)

நெடுங்கரப் பூட்கை - நீண்ட துதிக்கையுடைய யானைகள். (பூட்கை - அணிகள் புணைந்தகை) புக்கன கடலிடை நெடுங்கரப் பூட்கை. (சு . 850)

நெடுங்காதல் - பேரன்பு. நெடுங்காதல் தூண்டடவே. (அ : 958)

நெடுங்காராழி - நீண்ட கரிய கடல். (யுத் : 2817)

நெடுங்கால் - சண்ட மாருதம். ஊழிநாள் நெடுங் காலென ஓடுவ (யுத் . 1000)

நெடுங் குன்றம் - நெடிய மலை. நன்னெடுங் குன்றமும் நாணும் தன் துணைத் தனி மாருதி தோளிணை தழுவி. (கி : 157)

நெடுங் கேசரி . பெருமைபெற்ற கேசரி. (யுத் 834)

நெடுங் கோயில் - நெடிய மாளிகை. மைந்தனும் தந் நெடுங் கோயில் சென்றடைந்தான். (அ : 72)

நெடுஞ்சரம் - நெடுந்தூரம் செல்லும் அம்பு. நீண்ட அம்பு. கும்பானு நெடுஞ்சரந் துரக்க. (யுத் ; 1024; (யுத் : 3359)

நெடுஞ்சிகை - மிக்க ஜ்வாலை. நெடுஞ்சிகை விரா மழுவினன். (கி : 87)

நெடுஞ் சிகைவிரா மழுவினன் - மிக்க ஜ்வாலை பொருந்திய மழுவா யுதத்தை யுடையவன். தெவ்விராவகை நெடுஞ்சிகை விரா மழுவினன் அவ்விரா்மணையும் மாவலி தொலைத்தருளினன். (கி : 87)

நெடுஞ்சிரம் - நீண்ட காடு. நெடுஞ்சுரத் தென்று போவ தெனு எழும். (அ : 307)

நெடுஞ்சிரர் - பெருமை சான்ற தேவர்கள். (யுத் : 3360)

நெடுஞ்சிலைவலான் - நீண்ட வில் வலியுடையோன். நெடுஞ்சிலை வலானுக்கு ஏவல் செய்யடியேன் யானே. (கி : 71)

நெடுஞ்சூழல் - தூரத்திலுள்ள இடம். தவமியற்ற யாமிருந்த நெடுஞ்சூழல். (ஆ : 342)

நெடுஞ் செல்வம் - அரசாட்சியாகிய பெருஞ்செல்வம். நெடுஞ் செல்வம் நெருக்கவும். (கி : 583) (சு : 547)

நெடுஞ்சேமம் - நிலைத்த புரத்தல் தொழில். (யுத் : 205)

நெடுஞ்சொல் - நெடுமொழி. வஞ்சினம். இந்த நெடுஞ்சொல் அவ் வேழை கூறுமுன்னே. (அ : 205)

நெடுந்தகை - 1. மிக்க தகுதி. நெடுந்தகை மாருதி. (யுத் : 2972)
2. பெருமைக்குணம். சூர நெடுந்தகை. (ஆ : 344)
3. பெருந்தன்மையனான இராமபிரான். நெடுந்தகை இவனைக் கொன்றல் உன்னிலன். (யுத் : 1213)

நெடுந்தகை மன்னவர் - பெருமைக்குணம் வாய்ந்த மன்னர். நிவந்த அந்தணர் நெடுந்தகை மன்னவர். (அ : 72)

நெடுந்தடக்கை - நீண்ட பெரிய கை. (யுத் : 2035)

நெடுந்தடங் கிடந்த கண் - நீட்சியும் பெருமையுமான கண்கள். நெடுந்தடங் கிடந்தகண் நீல மாலையே. (பா : 805)

நெடுந் தரும நெறி - ஒப்பற்ற சிறந்த தருமநெறி. நீதியால் வந்த தொரு நெடுந்தரும நெறியல்லால் சாதியால் வந்த சிறுநெறியறி யான் என் தம்பி. (யுத் : 1575)

நெடுந்தலை - நெடிய தலை. திண்டரு நெடுந்தலை தழுவிச் சேர்ந் தன. (யுத் : 1794)

நெடுந்தறி - நீண்ட தூண். நெடுந்தறி நேடினையோ. (யுத் : 795)

நெடுந்தாதை - பெருமை வாய்ந்த தந்தை. தசரதன். நெடுந்தாதை முன் போன பேரிருவர். (பா : 1134)

நெடுந்திரு - அளவின்மிக்க செல்வம். நீருலாவு மிலங்கை நெடுந்திரு. (யுத் : 751) (யுத் : 1680)

நெடுந்தீ - தீப்பிழம்பு. புகையோடு நெடுந்தீப் பொங்க. (யுத் : 276)

நெடுந்துணை - மிகப் பெரிய துணை. பெயர்த்தும் போர் செயற் குற்றது நெடுந்துணை யுடைமையால் என்றுள். (கி : 251)

நெடுந்துயர் - பெருந்துன்பம். படியேழு நெடுந்துயர் பாவிடவும். (சு : 497)

நெடுந்தூளி - மிக்க தூளி. வன்திசை பேர்வுறத் தொத்தி மீள்கில வானெடுந் தூளியே. (யுத் : 1003)

நெடுந்தேர் - நெடிய தேர். (யுத் : 3656)

நெடு நகர் - பெரிய நகரம். நெடுநகர்த்திரு. (சு : 300)

நெடுநதி - பெரிய ஆறு. நீங்கினன் அந்த நெடுநதி இருகையால் நீந்தி, (அ : 725)

நெடு நல்லறம் - மிகச் சிறந்த புண்ணியம். நெடு நல்லறத்தின் பயன் ஊட்டுங்காலத்து. (சு : 440)

நெடு நன்னீர் - மிக்க புண்ணியமுள்ள நீர். (வை.மு) வெள்ளநீர். (அண்) சேலுடை நெடு நன்னீர். (அ : 678)

நெடு நாடவை - கோசல தேசம். (வை.மு) பெரிய மருத நிலப் பகுதிகள். (அண்) மடவார்படி நெடுநாடவை போனார். (அ : 625)

நெடு நாள் - நெடுங்காலம். இடர் உனக்கிழைத்தேன் நெடுநாள். (அ : 788)

நெடு நிலம் - நீண்ட நிலப்பகுதிகள். நெடு நிலம் கம்பித்த. (யுத் : 209) திரிவரேல் உடன் திரிதரும் நெடுநிலம். (யுத் : 3269)

நெடு நிலா - மதியத்து நிலா. பெரு நிலவு. தண்ணிற நெடு நிலாத் தழைத்த தெங்குமே. (பா : 1067)

நெடுநிலை - உபரிகை. எரிந்தன நெடுநிலை ஏழும். (சு : 1223)

நெடுநிலை மாடம் - உயர்ந்த நிலைகளோடு கூடிய மாடம். புயல் தொடு குடுமி நெடு நிலை மாடத்திந் நகர் புகலுமாறெவனோ. (பா : 96)

நெடு நிழல் - பேரொளி. மிக்க ஒளி. நெடு நிழல் பூத்த கற்பக முழுவனம் கவின. (சு : 413)

நெடுநீர் - வெள்ளநீர். சேலுடை நெடு நன்னீர் சிந்தினர் விளையாட. (அ : 678)

நெடுநீளம் - மிக நீண்ட பொழுது. நெடுமை மிகுதி குறித்தது. நீளம் காலநீட்சி குறித்தது. ஒளிர் நன்னீர் நீக்கி நிறை கண்ணிணை ததும்ப நெடு நீளம் நோக்கும். (சு : 556)

நெடும்பகல் - ஆண்டு. பன்னெடும் பகல் பாரளிப்பாய் (அ : 90)

நெடும் பகை - நெடிய பகை. பெரிய பகை. வலிமைமிக்க பகை. என்னையே நோக்கி இந்நெடும்பகை தேடிக்கொண்டேன். (யுத் : 3081) உற்றுறு நெடும்பகையுடையவர். (யுத் : 380)

நெடும்பகை நிமிர்தல் - பழைய பகையைத் தீர்த்தல். நெடும்பகை நிமிரவந்தாய். (யுத் : 2370)

நெடும்படைத்தலைவர் - பெரிய சேனைத்தலைவர். நீலனை முதலா வுள்ள நெடும் படைத்தலைவர் நின்றார். (யுத் : 2441)

நெடும்பழி - பெரும்பழி. திக்குறும் நெடும்பழி. (யுத் : 382)

நெடும் பாரப்பழி - நெடுங்காலமாய் பாரமாகக் கொண்டிருந்த பகைமை. பல்லாலே இதழதுக்கும் கொடும்பாவி நெடும் பாரப் பழி திர்ந்தாளே. (யுத் : 3890)

நெடும்பிணம் - நீண்ட பிணங்கள். நிரந்தன நெடும்பிணம் விசும்பின் நெஞ்சுற. (யுத் : 1780)

நெடும்பிரிவு - நீண்ட பிரிவுத்துயர். நாயகன் என்நெடும் பிரிவினால் துஞ்சினான் என்றான். (அ : 1150)

நெடும்புகழ் - பரந்த கீர்த்தி. நெடும் புகழ் பைங்கழலான் புடைத் தான். (யுத் : 2343)

நெடும் புதல்வன் - நெடிய புதல்வன். நின்னெடும் புதல்வன் தனை நேமியான் தொன்னெடும் முடி சூட்டுகின்றான் என்றார். (அ : 90)

நெடும்புனல் - மிக்க நீர். மேகநெடும்புனல். (யுத் : 2279) நீறு தோய் மணிமேனியர் நெடும் புனல் படிந்தார். (அ : 724)

நெடும் பெருந்தேவர் - நெடிய பெருந்தேவர்கள். நீண்ட சிறந்த தேவர்கள். (யுத் : 3718)

நெடுமணிச் சுடரின் நீத்தம். பெரிய மாணிக்க மணியின் கதிர்க் கற்றையாகிய ஒளிவெள்ளம். (யுத் : 281)

நெடுமந்திரம் - சிறந்த மந்திரம். நெடுமந்திரம் இயம்பி வைது கொன்றனனே. (யுத் : 1462)

நெடுமரம் – பெரிய மரம். நின்றேனு நின்றேன் நெடுமரம் போல் நின்றேனே. (ஆ : 997)

நெடுமனம் - சிறந்த மனம். நீ ஐயா தவமிழைத் துடைமையால் நெடுமனம் தூயையா உடைமையால் உறவினைத் துணிகுவார். (கி : 92)

நெடுமனை – நெடிய வீடு. நெடுமனை வாயில். (ஆ : 684)

நெடுமனையின் மாசு துடைத்த மனத்தினள் - பெருமை மிக்க மனை வாழ்க்கையில் ஏற்பட்ட குற்றத்தை அறவே துடைத்த மனத்தினளாகிய சீதை. (யுத் : 3944)

நெடுமாமுகில் - நீண்ட பெரிய மேகங்கள். (யுத் : 2925)

நெடுமால் - பெரிய திருமால். என் ஆணை கடக்கலாத செங்கண் நெடுமால் முதற்றேவர் சிரிக்க என்னை. (யுத் : 1963)

நெடுமால் சிவன் எனும் மேலவர் - திருமால் சிவபிரான் என்ற உயர்ந்தோர். வில்லிங்கிது நெடுமால் சிவனெனு மேலவர் தனுவே கொல்லென்று கொண்டயிர்த்தான். (யுத் : 3018)

நெடுமால்வரை - நெடிய பெரிய மலை. (யுத் : 1849)

நெடுமானம் - 1. சிறந்த மானம். (வை.மு.)
பெருமிதம். (கலா) வீரவில்லின் நெடுமானம் வெல்ல நாளும் மெலிவானை. (யுத் : 8)
2. மிக்க மானம். தன்னதாய நெடுமானம் துயரம் காதல் இவைதழைப்ப. (யுத் : 12)
3. மிக்க அவமானம், அதனால் தோன்றிய சினம். நதிகாய் நெடுமானமும் நாணுமுரு. (யுத் : 1683)

நெடுமீன் - பெரிய வால் மீன். நட்சத்திரம். வெற்ற விண்ணிடை நின்று நெடுமீன் விழுவபோல். (ஆ : 28)

நெடு முகடு - உயர்ந்த முகடு. (யுத் : 261)

நெடுமுடி - 1. நீண்ட சிகரம். நீண்ட மால்வரை மதியுற நெடு முடி நிவந்த தூண்டு மாமணிச் சுடர்க் கற்றையிற் றேன்ற. (அ : 743)
2. நீண்ட கிரீடம். ஆண்டகை நெடுமுடி அரசர் கோமகன் யாண்டையான். (அ : 835)

நெடுமுடிவின் கனல் - உலகை அழிக்கும் ஊழித்தீ. அனையான் நெடுமுடிவின் கனல் கால்வான். (பா : 1365)

நெடுமேனுள் - மிகப் பழங் காலம். வேதக் கொழுஞ் சுடரை நாடி நெடுமேனுள் ஓதத்தினூடு வரு கைடவனை ஒத்தாள். (சு : 77

நெடுமை - 1. அளவின்மை. நெடுங்கனி கிழங்கு காய் கிடந்த. (அ : 719) நீண்ட தமிழால். (ஆ : 153)
2. பெருமை. நன்னெடுந் திசை முகன். (அ : 784) என் நெடுவணக்கம். (அ : 568)
3. உயர்ச்சி. அண்ட நெடுமுகட்டிருந்த முன்னோன். (யுத்:261)
4. நீண்ட தன்மை. நெடுஞ்சுவர். (யுத் : 280)

நெடு மைந்தர் - பெருமை வாய்ந்த வீரர். நெடு மைந்தற் கடையெனப்படுவன் வாழியாய். (யுத் : 2433)

நெடுமையினுன் - நெடியவன். கங்கையின் ஆழமிட்ட நெடுமையினுன். (அ : 648)

நெடு வஞ்சகம் - மிக்க வஞ்சகம். நெடு வஞ்சமும் பாவமும் பொய்யும் வல்ல நாம். (யுத் : 1302)

நெடு வணக்கம் - எட்டுறுப்பும் நிலந்தோய விழுந்து வணங்கும் வணக்கம். சாஷ்டாங்க நமஸ்காரம். எற் பயந் தெடுத்த மூவர்க்கும் குறைவிலா என்னெடு வணக்கங் கூறி. (அ : 568)

நெடுவரவு - தலைநிமிர்ந்து வருகை. ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் வரவு. வீரர் தன்னெடு வரவு பார்க்கும் கொய்ந்நாக நறுந்தேன் சிந்தும் குன்று. (சு : 1248)

நெடுவரை - பெரிய மலை. நீண்டமலை. சிகரவண் குடுமி நெடு வரை எவையும். (சு : 407) நெடுவரையைப் பறிப்பர் பலர். (யுத் : 3357) நெடுவரை முழையென. (கி : 285)

நெடு வலி - மிக்க வலி. மெலியா நெடு வலி. (யுந் : 1123)

நெடு வாடை - பெரிய வாடைக் காற்று. நெடு வாடை மலைந்த. (யுத் : 3461)

நெடு வாயு - நீண்ட பிராணவாயு. கற்றங்கியின் நெடுவாயுவின் நிலைகண்டவர். (யுத் : 1141)

நெடு வானரச்சேனை - பெரிய குரங்குப்படை. (யுத் : 1963)

நெடு வீடு - விசாலமான பெரிய முத்தியுலகம். நெடு வீடு காட்ட. (யுத் : 2203)

நெடு வெண்டிங்கள் - மிக்க வெண்ணிற முள்ள சந்திரன். நீத்த மதனின் முளைத் தெழுந்த நெடு வெண்டிங்களெனும் தச்சன். (பா : 637)

நெடு வெள்ளிப் பருப்பதம் - சிறந்த வெள்ளி மயமான கைலாய மலை. (பா : 746)

நெடு வேணி - நீண்ட சடை. விரியமைத்த நெடு வேணி புறத் தசைய. (யுத் : 4148)

நெய் - 1. தேன். நெய் திரள் நரம்பில் தந்த மழலையின் இயன்ற பாடல். (பா : 572) (கி : 198)

2. **நிணம்.** நெய் கொள் சோரி. (யுத் : 3393)
3. **நெய்.** வெண்ணெயும் சேந்த நெய்யும். (பா:26) (யுத்:2643)
4. **நெய்ப்பூச்சு** நெய்ந்நிலைய வேலவன். (அ : 203)

நெய்கிடந்த கனல் - நெய் பெய்யப்பெற்ற நெருப்பு. நெய்கிடந்த கனல் புரை நெஞ்சினன். (யுத் : 3171)

நெய்குழல் - நெய்கின்ற குழல். நெய்குழலுறு மிழையென நிலை திரிவார். (பா : 309)

நெய்குழலுறு மிழை - நெய்கின்ற குழலுடனே விடாது பொருந்திய நூலிழை. (பா : 309)

நெய் கொள் ஓதி - புழுகு நெய்தடவப் பெற்ற கூந்தல். எண்ணெய் பூசிய கூந்தல். தையலாளை ஓர் தாரணி தோளினன் நெய்கொள் ஓதியின் நீர் முகந்தெற்றினன். (பா : 1038)

நெய் கொள் சோரி - நெய்ப்புடைய குருதிநீர். (அண்) **நிணத்தைக் கொண்ட சோரி.** (வை.மு) நெய் கொள் சோரி நிறைந்த நெடுங் கடல். (யுத் : 3393)

நெய்சுடர் விளக்கு - நெய் விடுதலாற் சுடர்விட்டெரியும் தீப்பிழம்பு. நெய்சுடர் விளக்கிற்றேன்றும் நெற்றியே நெற்றியாக. (சு : 832)

நெய் சொரி கனல் - நெய் பெய்த நெருப்பு. ஐயிரு பதின்மர் மைந்தர் அவிந்தமை அரசன் காண நெய் சொரி கனலிற் காந்தி. (பா : 664) [பா : பே]

நெய்ஞ்ஞிறை நெடுவேல் - நெய் நிரம்பப் பூசப்பட்ட நீண்ட வேற் படை. நெய்ஞ்ஞிறை நெடுவேலின் நிறமுறு திறமுற்றி. (அ : 695)

நெய்த்தல் - நெய் பூசினாற்போல மினு மினுத்தல். பளபளப்போடு கூடியிருத்தல். நீண்டு குழன்று நெய்த்திருண்டு. **(சு : 546)** நெய்த்திருண்டுயரு நீள்வரை மீதில். **(யுத் : 809)**

நெய்த்தலைப் பால் கலந்தனைய நேயம் - தேனிற் பால் கலந்தாற் போன்ற இனிய நட்பு. கைத்தலத் தன்னவை கொணர்ந்து காட்டினான் நெய்த்தலைப் பால் கலந்தனைய நேயத்தான். **(கி : 198)**

நெய்த்தலையழல் - நெய்யைத் தன்னிடத்துக் கொண்ட நெருப்பு. நெய்த்தலையழலிற் காந்தி எரிகின்ற நீலன். **(யுத் : 1404)**

நெய்த்திருண்டு - பளபளப்புடையதாய்க் கருநிறமுற்று. (அண் நெய்ப்புடனே இருள் நிறத்தை யடைந்து. நெய்த்திருண்டுயரும் நீள்வரை மீதில். **(யுத் : 809)**

நெய்த்தோர் - இரத்தம். நிமிர்ந்த செஞ்சரம் நிறந்தொறும் படுதலும் நெய்த்தோர் உமிழ்ந்து வந்தன மகரங்கள். **(யுத் : 557)**

நெய்தல் - 1. கருநெய்தல் மலர். காவியும் கருங்குவளையும் நெய் தலும் காயாம் பூவையும் பொருவான் அவன். **(கி : 494)**

2. நெய்தல் நிலம். நெய்தல் வேலி குறிஞ்சி நிகர்த்ததால். **(யுத் : 646)**

நெய்தல் வேலி - நெய்தல் நிலங்கள். நெய்தலின் எல்லை. (யுத்:646)

நெய்தலையுற்ற வேல் - நெய் பூசப் பெற்ற முனைகளையுடைய வேல். நெய்தலையுற்ற வேற்கை நிருதர். **(சு : 927)**

நெய்தவழ் வயிரப்பாறை - வெண்ணெய் போல் விளங்கும் வயிரப் பாறை. நெய் நவழ் வயிரப் பாறை நிழலிடைத் தோன்றும் போதைக் கொய்து இவை தருதிர் என்று கொழுநரைத் தொழு கின்றுயம். **(பா : 950)**

நெய் தவழ் வேள்வி – நெய் மிகவும் பயிலுவதான வேள்வி. செய்தனன் வானவர் யாவருஞ் செயலாற்று நெய்தவழ் வேள்வி யை முற்றினன். **(பா : 437)**

நெய்தாவும் வேல் - நெய் பூசப்பெற்ற வேல். நெய்தாவும் வேலா னெடு நெஞ்சு புலந்து நின்றுள். **(பா : 990)**

நெய்திரள் நரம்பு - தேன் தாரை போன்று உருட்சியான நரம்பு. (பா : 572)

நெய் துடைத்தல் - நெய் பூசப் பெறுதல். நெய் துடைத்தடையலர் நேய மாதர்கள் மைதுடைத் துறைபுகும் வயங்கொள் வேலிஞய். (அ : 452)

நெய்ந்நிலைய வேல் - நெய் பூசப்பட்ட வேற்படை. நெய்ந்நிலைய வேலரசன். (ஆ : 600)

நெய்ந்நிலை வேல் - நெய்ப் பூச்சு நிலை பெற்ற வேல். (அண்) நெய் தடவிக் கூர் செய்யப்பட்ட அழியாத வேல். (வை.மு) நெய்ந்நிலை வேலவன். (அ : 203)

நெய்ப்பு - நெய்ப்புத்தன்மை. முளரிக்கானின் நெய்க்கின்ற வாண் முகத்த. (யுத் : 3566)

நெய் பொழிகனல் - நெய்யைச் சொரிந்த நெருப்பு. ஐயிரு பதின்மர் மைந்தர் அவிந்தமை அரசன் காணு நெய் பொழி கனலிற் பொங்கி. (பா : 664)

நெய்யமை ஆவுதி - நெய்யோடு பெய்யும் ஆவுதிகள். நெய்யமை யாவுதி யாவையும் நேர்ந்தான். (பா : 1334)

நெய்யழல் வேள்வி - நெய் பெய்யப்பட்ட நெடிய நெருப்பு எரியும் வேள்வி. (யுத் : 227)

நெய்யாகுதி - நெய்யாகிய பூர்ணுகுதி. பொழிந்த நெய்யாகுதி வாய்வழி பொங்கி எழுந்த கொழுங்கனல் என்ன எழுந்தான். (பா : 775)

நெய்யார் அழல் - நெய் பெய்து வளர்த்த அரிய நெருப்பு. நெய்யார் அழலுற்றது உற்ருர் அந் நீணகரார். (அ : 401)

நெய்யார் ஆடல் - மகிழ்ச்சிக்கு அறிகுறியாக எண்ணெய் தேய்த்து முழுகுதல். நெய்யாராடல் கொள்கென்று நிகழ்த்து கென்ருன். (யுந் : 2624) [பா : பே]

நெய்யார் பெரு வேள்வி நிரப்பல் - நெய் நிரம்பப் பெய்யப் பெறும் பெரு வேள்விகளைப் பூர்த்திசெய்தல். நெய்யார் பெரு வேள்வி நிரப்பி நெடுஞ் செய்யார் புனல் நாடு திருத்துதியால். (யுத்:2643)

நெய் யெரி - நெய் வார்க்கப்பட்டு எரிகின்ற நெருப்பு. கமலக் கால்கள் நெய் யெரி மிதித்தா லென்ன நிலத்திடைப் பதைத்தாள். (யுத் : 1613)

நெய்வளர் விளக்கம் - நெய் கொண்டு எரிகின்ற விளக்கு. நெய் வளர் விளக்கமாட்டி. (பா : 1219)

நெய் விழா - நெய்யாடல் விழா. உலகெலாம் உவகை நெய்விழாப் பரம்பின. (யுத் : 2761)

நெய்விளக்கம் - நெய் விளக்கு. நீண்ட சோதி நெய் விளக்கம் வெய்ய வென்றங்கவை நீக்கித் தூண்டல் செய்யா மணி விளக்கின் சுடரால் இருளைப் பகல் செய்தார். (பா : 632)

நெரித்தல் - 1. முரித்தல். துன்பத்தின் அறிகுறி. கைகளை நெரித்தாள் கண்ணில் மோதினுள். (யுத் : 1613) கையைக் கையின் நெரிக்கும். (அ : 305)

2. நொருக்குதல். மதக்கரியை யுற்றரி நெரித்தென மயக்கிச் சுதைத்தலனிடைக் கடிதடிக் கொடு துகைத்தான். (யுத் : 850)

நெரிதல் - 1. வளைதல். கிளர் புருவங் கடைநெரிய. (பா : 1364) நெற்ருெடுத்தன்ன நெரிந்த புருவத்தான். (அ : 649) [பா : பே]

2. சினத்தல். உரன் நெரிந்து விழ என்னை உதைத் துருட்டி. (ஆ : 333) சிரன் நெரிந்தவும். (சு : 1010)

3. நொருங்குதல். வாலினுல் உரம் வரிந்தனர் நெரிந்துக வலிப்பர். (கி : 285) யுத் : 1842)

4. அடர்ந்து 'நிற்றல். நெருங்குதல். நெரியும் பல்பிணம். (யுத் : 1468)

5. துகள் படுதல். நிருதர் வெஞ் சேனை போல் நெரிய. (யுத் : 1022)

6 பொடிப் பொடியாய் நெரிதல். குன்றிடை நெரிதர. (யுத் : 3091)

7. நசுக் குண்ணல். மண்ணின்தலை திரியும்படி நெரிகின்றன. (யுத் : 1821) நெரிய வன்தலையைக் காலால் உதைத்து மாநிலத்திலிட்டான். (யுத் : 2389)

நெரிந்த புருவம் - ஏறிவளைந்த புருவம். (அ : 649) [பா : பே]

நெரிந்தார் - நெரிபட்டவர். (யுத் : 1841)

நெரிந் தெழு புருவம் - சுருங்கி நிமிரும் புருவம். நெரிந் தெழு புருவத்தான் தன் நிறத்துற்று நின்றதன்றே. (யுத் : 2373)

நெரிபட்டழி தேர் - நெரிபட்டு ஒழிந்த தேர். நெரிபட்டழி தேரிடையே சிலர் நின்ருர். (யுத் : 1933)

நெரியாதுயிர் நிலைத்தார் - நெரிந்திடாமலே உயிர் நிலைத்து நின்றவர்கள். நெரிந்தார்களும் நிலையாதுயிர் நிலைத்தார்களும் நெருக்கால் எரிந்தார். (யுத் : 1841)

நெரியும் பல்பிணைப் பெருங்கரை - நெருக்கமாக நின்ற பல பிணைப் பெருங்கரை. நெரியும் பல் பிணைப் பெருங்கரை கடந்தில நீத்தம். (யுத் : 1468)

நெருக்கல் - பரவசப்படுத்தல். செல்வ நெருக்கவும் நனை நறுந்துளி நஞ்ச மயக்கவும் தனையுணர்ந்திலன். (கி : 589)

நெருக்கால் எரிந்தார் - நெருக்கத்தினுல் எரிந்திட்டனர். (யுத்:1841)

நெருக்கி - வலோற்காரமாக. நெருக்கி உள் புகுந்து அருநிறையும் பெண்மையும் உருக்கி என் உயிரை உண்டவன். (பா : 617)

நெருக்கிடுதல் - நெருங்கி இருத்தல். தாமரை வாசநாண் மலர் நெருக்கிடு தடமென இருந்த நீதியான். (யுத் : 475)

நெருக்கி நேர்தல் - 1. நெருக்கி எதிர்தல். குரக்கு வேலையும் ஒன்றொடொன்றெதிரெதிர் கோத்து நெருக்கி நேர்ந்தன. (யுத் : 3499)
2. கிட்ட அணுகி எதிர்த்தல். இவனைக் கண்டிறை நிற்றலென் பிறிதென நெருக்கி நேர்குவார். (யுத் : 346)

நெருக்கி யசைத்தல் - நெருக்கிக் கட்டுதல். வஞ்சனை யரக்கனை நெருக்கி நெடு வாலால் அஞ்சினுடன் அஞ்சுதலை தோளுற அசைத்தே. (சு : 693)

நெருக்கின் உலத்தல் - நெருக்கத்தினுல் அழிதல். ஓடிப் புகுவாயில் நெருக்கின் உலந்தார். (யுத் : 1929)

நெருக்கு - நெருக்கம். மாடவாயில் நெருக்குறவந்து மன்னர் பரசியே வணங்குந் தோறும். (யுத் : 4326) நெருக்கால் எரிந்தார். (யுத் : 1841) ஓடிப் புகுவாயில் நெருக்கினுலந்தார். (யுத் : 1929)

நெருக்குதல் - 1. வருத்துதல். அரக்கர்... நெருக்கவும். (ஆ:129)
2. வலோற்காரஞ் செய்தல். நெருக்கி யுள்புகுந்து. (பா:617)
3. அடர்த்தல். தாங்கி நீக்குதி நிருதராங்கு நெருக்குவார் நெருக்கா வண்ணம். (யுத் : 3317)

நெருங்கடல் - செறிந்த போர், நெருங் கடல் விளைப்பர் நெடு நாள் என நினைத்தான். (சு : 168)

நெருங்கப் பேர்த்த - நெருங்கும்படி எடுத்த. (வை. மு) வேரோடும் பேர்த்த. அண்) ஓர் நெருக்கடி உண்டாம்படி எடுத்த. (உ. வி) பிணையொன்று கண்ணுள் பங்கன் பெருங்கிரி நெருங்கப் பேர்த்த பணை யொன்று திரள் தோள். (யுத் : 1377)

நெருங்கமர் - நெருங்கிய போர். (சு : 168) [பா : பே]

நெருங்கிய உரை - அண்மையிற் பகர்ந்த சொல். ஒருங்கமர் புரிகிலேன் நின்னொடு யான் என நெருங்கிய உரையினை நினைந்து நேர்கிலேன். (யுத் : 1491)

நெருங்குதல் - அண்மையிற் செல்லுதல். (கி : 161)

நெருநல் - நேற்று. நெருநலினும் வந்திலனோ நானென்றாள். (ஆ : 342)

நெருப்பாமென உயிர்த்தல் - நெருப்புப் போல மிகு வெப்பமாகப் பெரு மூச்சு விடுதல். மறவோய் இகலெதிரே நில்லா யென நிகழ்த்தா நெடு நெருப்பா மென உயிர்ப்பான். (யுத் : 1125)

நெருப்பிலே பட்ட - அக்கினி தேவனுலகிலே தோன்றிய பிராணிகள். நீரிலே பட்ட சூழ்ந்த நெருப்பிலே பட்ட. (யுத் : 957)

நெருப்பின் கற்றை - நெருப்பின் தொகுதி. நிறைந்தன பொறியின் குப்பை நிமிர்ந்தது நெருப்பின் கற்றை. (யுத் : 1874)

நெருப்பின் தோற்றத்த - நெருப்பின் தோற்றத்தை யுடையனவான. துரந்தனன் நெடுஞ்சரம் நெருப்பின் தோற்றத்த. (யுத் 1798)

நெருப்பினன் - நெருப்பைக் கையிலே ஏந்தியவனான சிவபிரான். நெருப்பினன் பொருப்பினன். (ஆ : 590)

நெருப்பினுக்கரசன் - அக்கினி தேவன். நீலனை உலக முண்ணும் நெருப்பினுக் கரசன் என்றார்- (யுத் : 766)

நெருப்பு - 1. அக்கினி தேவன். சினக் கடாய் கடாய் வந்து செறுத்த நெருப்பை வென்றவன். (யுத் : 496) [பா : பே]
2. அக்கினி தேவனுலகம். சூழ்ந்த நெருப்பிலே பட்ட. (யுத்:957)

நெருப்புக் கண்ணன் - (நெற்றியிலே) நெருப்புக் கண்ணையுடைய சிவபிரான். நெற்றியின் நெருப்புக் கண்ணன் நாம வேல். (யுத் : 3126)

நெருப்புக்கும் நெருப்பு - நெருப்பையும் சுடும் நெருப்பு. அவ்வரக் கன் சீற்றம் நெருப்புக்கும் நெருப்பு. (கி : 1005)

நெருப்புடை வேள்வி - தீ வளர்த்துச் செய்யப்படும் யாகம். நெருப் புடை வேள்வியின் பகை. (யுத் : 2302)

நெருப்புண்ணல் - 1. நெருப்பை உட்கொள்ளுதல். இருந்தனன் நெருப்புண்டானென. (அ : 852)
2. நெருப்பிலே கிடத்தல். நெய் கொள் நீருண்டு நெருப்புண்டு நீண்டமை நிறைந்த வைகொள் வேல். (அ : 772 (a))

நெருப்புயிர்த்தல் - நெருப்பைப் போலப் பெரு மூச்சு விடுதல். நெடிதுன்னி முனிந்து நெருப்புயிர்ப்பான். (யுத் : 1959)

நெருப்புரைத்தல் - நெருப்பை உரையிடல். நெருப்புரைத்தாலு நீண்ட மின்னுரைத்தாலும் ஒவ்வா இலங்கொளி அலங்கல் வேலோய். (யுத் : 1250)

நெருப்பு வீசும் உரும் - தீ உமிழும் இடி. அத்தனையோருங் குன்ற மளப்பிலர் அசனி ஏற்றேடொத்தன நெருப்பு வீசும் உருமென ஒருங்க உய்த்தார். (யுத் : 2129)

நெருப்பெழ நிமிரப் பார்த்தல் - கண்களிலிருந்து தீப் பொறி பறக்க நிமிர்ந்து பார்த்தல். நின்றவன் தன்னை அன்னுன் நெருப்பெழ நிமிரப் பார்த்து. (யுத் : 939)

நெருப்பை மீளத் தின்றுதின் றுமிழ்கின்றுரில் - தீயினை மீளவும் மென்று மென்று வெளிப்படுத்துவார் போல். நெருப்பை மீளத் தின்று தின்று உமிழ்கின்றுரில் துயருக்கே சேக்கையானுள். (யுத் : 1610)

நெல் - 1. வாகை. மூங்கில். (உ.வி) நெல்லினுல் அலக்கும் காலும் நிரப்பினுன். (யுத் : 707)
2. செந்நெல். தண்டலை நெல்லினும் நீர் துறந்தன. (அ:811) நெல்லொக்கும் புல்லென்றுலும். (ஆ : 636) (யுத் : 3359)

நெல் சினை - சூல் கொண்டுள்ள நெற்பயிர். சினை வரால் பகழி ஆவம் நெற்சினை யேனும் செப்பம். (கி : 778)

நெல்லி - நெல்லிக்கனி. அங்கையின் நெல்லி. (யுத் : 3996) கைந்நிலை நெல்லியின் கனியிற் காட்டுகேன். (சு : 676)

நெல்லின் நாறு - நெற் பயிரின் நாற்று. நட்ட செந்நெலின் நாறு வளர்க்குமே. (பா : 57)

நெல்வால் - சிறிய அளவுக்கு எடுத்துக் காட்டும் அளவை. இராவணன் மேல் நெல் வாலும் அருத நிறம் பிறழா வல்வாய் மடியா வயிரப்படையான். (அ : 86)

நெளித்த - குழித்த. நிலம் புக மிதித்தனள் நெளித்த குழி வேலைச் சலம் புக. (பா : 389)

நெளிதல் - 1. அஞ்சுதல். நடுக்குற்று வருந்துதல். (அண்) உடல் நலிவும் உள்ளத் தச்சமும் கொள்ளல். முகிலின் நின்றுன் அது கண்டு இமையோர்கள் நெளிந்தனரால். (யுத் : 1695)

2 தத்தளித்தல். நின்றன இல்லை எல்லாம் கிடந்தன நெளிந்த பார்மேல். (யுத் : 1116) நெளிந்தார். (யுத் : 1928) அனைய படை நெளிய. (யுத் : 3416)

3. சுருளுதல். முதல்வர் எவரு முடன்விளிய அனைய படை நெளிய. (யுத் : 3416)

4. வளைந்து ஊர்தல். நெளிந்துறை புழு. (கி : 655)

நெளிப்பது - வளையச் செய்வது. தண்டொன்று இம்பர் ஞாலத்தை நெளிப்பது. (யுத் : 2505)

நெளிப்புற - நெளிக்கும்படி. தாரணி நிலை நிலாது முதுகை நெளிப்புற. (ஆ : 396)

நெற் சினை - நெல் சினை. பார்க்க.

நெற்றழைக்கற்றை - நெற் பயிர்த் தழைகளின் தொகுதி. செங்கதிர் கான்ற நெல் தழைக் கற்றையும் கற்பகம் ஈன்றளிக்க நுகர்ந்தன யானையே. (அ : 1080)

நெற்றி - 1. முன்னணிப் படை. முன்படை. நெற்றியின் அரக்கர் பதி செல்ல. (யுத் : 696) (சு : 832)

2. முகத்து மேற்பக்கம். ஆழியான் அளவில். நாமம் செய் சுடர் விளக்கிற்ரேன்றும் நெற்றியே நெற்றியாக. (சு : 832) (யுத் : 1505)

3. மேலிடம். மாட நெற்றி. (பா : 577)

4. முன்பு; முகப்பு. நின்றனன் நீலன் என்பான் குண திசை வாயில் நெற்றி. (யுத் : 897)

5. உச்சி. சிகரம். நீளுறு மேருவின் நெற்றி முற்றிய வாளிரவியிற் பொலி மௌலியான் தனை. (ஆ : 183) (யுத் : 2701)

6. கட்டளை.

நெற்றிக்கண் - நெற்றியிலுள்ள கண். முப்புரமுருங்கச் சுட்ட கொற்றவன் நெற்றிக் கண்ணின் வன்னியுங் குளிர்ந்த வன்றே. (சு : 1171)

நெற்றிக் கண்ணன் - சிவபிரான். நெற்றிக் கண்ணன் மலை. (யுத் : 3179)

நெற்றிப் பிறையாள் - இளஞ் சந்திரன் போன்ற நெற்றியையுடையவள். நெற்றிப் பிறையாள் முன நின்றிடலும். (ஆ : 778)

நெற்றியிற் கற்றை நாற - புருவ மயிர்க்கற்றை நெற்றியிற் சென்று விளங்க. கண்ணிற் கடைத்தியுக நெற்றியிற் கற்றை நாற. (அ:409)

நெற்றியினழலும் செங்கண் நிறக் கடவுள். (யுத்:4092)

நெற்று - முற்றியுதிர்ந்த காய். ஆளியின் நெற்றெடு ஒத்து நெரி புருவத்தினுள். (அ : 649)

நெறி - 1. நிமித்தங்களின் நடை முறை. நின்றே நெறியுணர்வான் ஒரு நினைவாளனை அழையா. (பா 1354)

2. முறை. முறைமை. வீடணன் நெறியிற் செல்வான். (யுத் : 3547) நெறி திறம்பாத் தன்மெய்யை நிற்பதாக்கி இறந்தான். (அ : 1049)

3. ஆறு செல்வழி. நெறி கடந்து பரந்தன நீத்தமே. (பா : 71)

4. நல்லொழுக்க நெறி. சன்மார்க்கம். நெறி கடந்து பரந்தன நீத்தமே. (பா : 71)

5. அறநெறி. நீதிமுறை. நெறியின் திறம் திறம்பினும். (அ : 163) நெறியின் நோன்மையை நேர் நின்றுணர்ந்த நீ. (கி : 340) (யுத் : 379)

6. இடம். வாழிடம்- உலகு யாவையும் எவ்வுயிருந் தந்தான் உறையும் நெறி தந்தனனல். (ஆ ; 89)

7. பெருவழி. வழி. நெறி இடுநெறி வல்லேன். (அ: 681)

8. உபாயம். நினையுந் தேவர்க்கும் நமக்கும் ஒத்து ஒரு நெறி நின்ற அனகன். (அ : 731)

9. சமயம். பல்லியல் நெறியிற் பார்க்கும் பரம்பொருள் என்ன (பா : 1213)

10. நன்னெறி. தோன்றோ நெறி வாழ் துணைத்தம்பி. (சு;431)

11. கட்டளை. அந்த நெறியை அவர் செய்ய. (யுத் : 2635)

12. தூயவழி. அருள் நெறி. (யுத் : 356)

13, காட்டுவழி. நடத்தலரிதாகு நெறி. (சு : 549)
14. மேற்கொண்ட வழி. (கலா) (உ. வி) (யுத் : 279)

நெறிக்கொள் மாதவர் - தவநெறியையே தமக்குரிய வாழ்க்கையாகக் கொண்டுள்ள தவத்தினர். நெறிக் கொள் மாதவர்க்கு முன்னே நேர்ந்தனென் நிருதராவி பறிக்குவென் யானே என்னும் அம் மொழி பழுதுறுமே. (ஆ : 428)

நெறி காமின்கள் - வழியைக் காவல் செய்யுங்கள். காமின்கள் நெறியென்னு. (அ . 1023)

நெறிகுழல் - சுழற்சியான தலைமயிர். நெருங்கி நீரொடுநெறி குழல் சுறுக்கொள நீங்கி. (சு : 1216)

நெறி கொள்ளல் - போதல். குன்றுபுரை தோளவர் எழுந்து நெறி கொண்டார். (கி : 889)

நெறி செல்லுதல் - வழியறிந்து செல்லுதல். வழியிற் செல்லுதல். இருளினும் நெறி செல்வேன். (அ : 682) (அ : 688)

நெறித்த - வளைத்த. நெறித்த நெற்றியர். (பா : 837)

நெறித்தாரை - நல்லொழுக்க வழி. நெறித்தாரை செல்லாத நிருதர். (ஆ : 361)

நெறிதரல் - வழிகாட்டல். என் சொல் நெறி தரக் கடிது போதி. (யுத் : 2678)

நெறிதல் - 1. சுழலுதல். நெறி குழல் சுறுக்கொள. (சு : 1216)
2. நெறிப்படுதல். படியிடை இடி பொடித் தென்னச்சேண் நெறிந் தெழு திசை செவி டெறிந்தென. (யுத் : 1427)
3. வளைத்தல். (உ. வி) (யுத் : 1427)

நெறிதூரஞ் செல்லல் - நெடிய வழி செல்லுதல். செல்லுவென் நெறிதூரம். (அ : 683)

நெறிந்த குழல் - சுருண்ட கூந்தலையுடையாய். (சு : 610)

நெறிந்தலர் குஞ்சியான் - நெறிப்புமிக்கு விரிந்து கிடக்கும் தலை மயிரையுடையவன். நெறிந்தலர் குஞ்சியான் நெடிது வீழ்ந்தனன். (அ : 837)

நெறிந்து - சுருண்டு. நெறிந்தார் ஓதிப் பேதை. (சு : 488)

நெறிநின்ருர் - நன்னெறியினின்று பிறழாத மேலோர். அருந் தெய்வம் நின்னலால் இல்லாமை நெறி நின்ருர் நினையாரோ. (ஆ : 56)

நெறி நின்று - நல்லொழுக்கத்திலே தவருது நின்று. நெறி நின்று புலன்கள் ஐந்தும் வென்றவன். (சு : 515)

நெறிப்பு - நெறித்தல். சுருண்டிருத்தல். நெறிப் புண்டரீகம் போலும் முகத்தியர். (யுத் : 955)

நெறிபிழைத்தோர் - துன்மார்க்கர். அரக்கர். நெறி பிழைத் தோர்க் கெலாம் துடி த்தவர் லிடக் கண்ணெடு தோளுமே. (ஆ : 546)

நெறி பிறந்துமிலென் - (உனக்கு) முறைப்படி பிறந்த மகனல்லேன். (யுத் : 72)

நெறி புகுதல் - நெறியின் வழி யொழுகுதல். மனுவின் நெறிபுக்க வேல் அவ் விலங்கும் புத்தேளிரே. (கி : 349)

நெறி பெருமை - வழி பெருமை. நெடுந் தெருச் சென்றனன் நெறி பெருமை அரிதினின் நீங்குவான். (அ : 526)

நெறி போதல் - பிரயாணப்படுதல். நெறி போதலுறு நாளின் ஆண்ட நகர் ஆரையொடு வாயிலகலா முன். (சு : 550)

நெறிமுறை - உலக வழக்கம். நெறி முறையால் ஈன்றெடுத்த தாயாவார் யாவரே. (ஆ : 53)

நெறி முறைமை - நெறிப்பட்ட முறைமை. இராமற்கு நெறிமுறைமை யினுல் திருவும் பூமியும் சீதையிற் சிறந்தன. (அ:74)

நெறியலா நெறி - தீய நெறி. யாம்படர் நெறியலா நெறி துரக்க வும் அருந்தவத் துறையுள் நீங்கினேம். (ஆ : 129)

நெறியார் மறை - நல்ல நெறிகள் நிறைந்துள்ள வேதம். நெறியார் மறையின் நிலேயே. (அ : 328)

நெறியிடு நெறி - பெருவழி சிறுவழி. நெறி இடு நெறிவல்லேன். (அ : 681)

நெறியில் ஊன் -கொலே முதலிய தீ நெறியால் வந்த ஊன். (அண்) நன்னெறியுடையோர்க்குத் தகாத இறைச்சி. நிந்தனே நறவமும் நெறியில் ஊன்களும். (யுத் : 406)

நெறியிற்றன்று - நல்ல நெறியிற் சேர்ந்ததன்று. நின்ற நின்னிலே நெறியிற்றன்று. (ஆ : 824)

நெறியின் திறம் - அறநெறியின் பெருமை. நெறியின் திறம் திறம்பினும். (அ : 103)

நெறியின் மாக்கள் - நெறியினையுடைய மனிதர்கள். பொறிமயிர்க் கவுதாரிகள் போற்றுறும் நெறியின் மாக்களும் முந்தி நெருங்கினர். (அ : 806)

நெறியோர் - ஒழுக்கமுடையார். நன்னெறி நடப்போர். நீ தந்த தன்றே நெறியோர்கணிலாதது. (அ : 428)

நெறிவயிற் பேதியா நிலைமை - நல்ல நெறியினின்றும் எக்காரணத் தாலும் பிறழாத உறுதிநிலைமை. நீதியார் கருணையின் நெறியினர் நெறிவயிற் பேதியா நிலைமையார். (கி : 83)

நெறிவு - வளைவு; சுருண்ட தன்மை. நெறிவுறீஇ. (கி : 803)

நெறிவுறுதல் - நெறித்தலைச் செய்தல். நெறித்தலைப் பொருந்தி நிற்றல். பேரிருட் பிழம்பு தோய்ந்து நெறிவுறீ இப் பிறங்கு கற்றை. (கி : 802)

நென்னல் - நேற்று. நெருநல் என்பதன் விகாரம். நென்னற் கண்ட திருமேனி இன்று பிறிதாய் நிலை தளர்வான். (யுத் ; 6) (யுத் : 955)

நே

நேசத்தார் - அன்புடையவர். அனகன் தம்பி பிணிப்புண்ட படியைக் கண்டு நேசத்தார் எல்லாம் வீழ்ந்தார். (யுத் : 2161)

நேசத்தாரைகள் - அன்பினுற் சொரியுங் கண்ணீர். பாசத்தாற் பிணிப்புண்ட அத்தம்பியும் பசுங்கண் நேசத்தாரைகள் சொரிதர நெடுநிலஞ் சேர்ந்தான். (கி : 306)

நேசம் - அன்பு. நேசமுமற்றுர் செய்வன செய்தே நிலை நின்றேன். (யுத் : 2611)

நேசமற்றுர் - அன்பில்லாதவர். (யுத் : 2611)

நேசன் - பக்தன். நின்று பூசனை செய்கின்ற நேசற்கு. (யுத் : 4159)

நேடி நூல் தெரிந்துளோர்தம் உணர்விற்கும் நிமிர நின்ருன் - இராம பிரான். (நல்ல) ஞான நூல்களை ஆராய்ந்து மெய்ப்பொருளைத் தெரிந்த அறிஞர்களின் உணர்விற்கும் எட்டாது அப்பாற்பட்டு நின்றவன். (யுத் ; 613)

நேடுதல் - 1. தேடுதல். தேடிக்கொள்ளுதல். நெடுந்தறி நேடினையோ. (யுத் : 259) உயிர் நேடுவேம் போல் உடலவிளயக் கண்டும் (யுத் : 297) நேட அரிது. (கி : 223)
2. நாடுதல். நிலையர் உயிரேன் நிலை நேடினர்போய் உலையா வலியா ருழைநீர் உரையீர். (ஆ . 889) [பா : பே] நேடினை போய். (ஆ : 1101)
3. தேடியடைதல். நேடினும் வாலி காலனே. (கி : 178)

நேடுவார் - தேடுவார். கண்டிலர் நேடுவார். (அ : 630)

நேத்திரத்தர் - கண்களையுடையவர். எரி விழிக்கும் நேத்திரத்தர். (யுத் : 820)

நேத்திரம் - கண். (யுத் : 820)

நேமி - 1. சக்கரம். நேமிமால்வரை. (பா : 174)
2. ஆணைச்சக்கரம். உருளுடைய நேமியால் உலகை ஓம்பிய மன்னன். (ஆ : 133)
3. திருமால். சூராறுத்தவனும் சுடர்நேமியும். (ஆ:139) (கி:38) (யுத் : 3162)
4. சூரியன். அயோத்தியாளுடைய நிழலெனப் பொலியுமால் நேமிவான்சுடர். (பா : 133)
5. சக்கர வாளம். நிறக் கருங்கடலுள் நேமியின் நின்று. (யுத் : 826)
6. சோதிமண்டலம். ஒளிவட்டம். நேமி கோளொடுந் திரிவ தென்ன. (யுத் : 280)
7. பூமி. கருநிறக் கடலுள் நேமி. (யுத் : 826)

நேமிஉழவன் - ஆஞ்ஞா சக்கரத்தைச் செலுத்துபவன். (ஆ : 616)

நேமிக்குன்றம் - சக்கரவாளகிரி. குலவரை நேமிக்குன்றம் என்ற வானுயர்ந்த கோட்டின் தலைகளும். (கி : 380)

நேமிச்சுடர் - வட்ட வடிவமான ஒளிப்பிழம்பாகிய சூரியன். நின்று தாழ்த்தருள் நேமிச்சுடர் குணக்குன்று தோன்றளவும்.(யுத்:4163)

நேமித்தேர் - சக்கரங்களையுடைய தேர். தனிநின்ருன் ஒருநேமித் தேரொடு. (சு : 960)

நேமிப்படையோன் - சக்கரப் படையையுடைய திருமால். (யுத்:3792)

நேமிப்பாடு - சக்கரங்கள் ஓடுதல். (வை.மு.) சக்கரங்கள் படுதல். (கலா) சக்கரம் ஆழப்பதிதல். (அண்) ஆயிரகோடி தேரும் புக்கன நேமிப் பாட்டிற் கிழிந்தன புவன மென்ன. (யுத்:2430)

நேமிப்புள்-சக்கரவாகப் பறவை. வெஞ்சிறை நீங்கிய வினையினரென நெஞ்சுறக் களித்தன நேமிப்புள்ளெலாம். (ஆ : 685) (யுத் : 779)

நேமிப்பெயர் யூகம் - சக்கரயூகம். நேமிப் பெயர் யூகநிறைத்து நெடுஞ் சேமத்தது நின்றது. (யுத் : 2907)

நேமிப்பெருமான் - சக்கரப்படையைக் கொண்ட பெருமான்; நர சிங்க மூர்த்தி. நேமிப் பெருமானும் ஒன்ருத சீற்றத்தை உள்ளே ஒடுக்கினுன். (யுத் : 291)

நேமி பொறுத்தவன் - திருவாழி ஏந்திய திருமால். நேமி பொறுத்த வன் மா மார்பிற் றிருவிற் பொலி மாலையினுன். (ஆ : 82)

நேமி மால்வரை - மால் நேமி வரை; பெரிய சக்கரவாள மலை) நேமி மால் வரை மதிலாக. (பா . 174)

நேமியங்கையன் - சக்கரப்படையையுடைய திருமால். (யுத் : 3156)

நேமியன் - சக்கரப் படையை யுடைய நாராயணன். மின்னு நேமி யன் மேவிடம் மேவினுன். (அ : 92)

நேமியன் மேவிடம் - நாராயணமூர்த்தி பொருந்தியுள்ள கோயில் (அ : 92)

நேமியான் - 1. திருமால். (இராமன்) நேமியான் தானே நேர்ந்து. (யுத் : 3314)

2. ஆஞ்ஞா சக்கர முடையவன். (தசரதன்) நேமியான் தனைக் கொன்ருள். (அ : 1163)

நேமியினுன் - ஆழிப் படையினையுடைய திருமாலின் அம்சமாம் இராமபிரான். (யுத் : 3576)

நேமியினேர் - அரசர், சக்கரவர்த்திகள். இவை நேமியினேர்க்கு நின்ற பாதி. (பா : 169)

நேமியுருட்டுதல் - ஆணைச் சக்கரத்தை உருட்டுதல்; ஆட்சி செய்தல். நின் குல மன்னர் நேமி பண்டுருட்டிப் பெருமை எய்தினர். (அ : 35)

நேமியுழவன் - நேமி உழவன் பார்க்க.

நேமியோன் - ஆணையாகிய சக்கரத்தையுடைய இராமபிரான். நேமி யோன் பணியன்ருல். (சு : 316) (யுத் : 705)

நேமி வாளம் - சக்கரவாகப் பட்சி. நேமி வாளங்கள் உறைவ கண்டு. (ஆ : 228)

நேமி வேந்தன் - ஆணைச் சக்கரத்தையுடைய சக்கரவர்த்தி. இருந் தனன் நேமி வேந்தனே. (பா : 280)

நேமி வேந்து - ஆணைச் சக்கரத்தையுடைய மன்னன். (தசரதன்) நீக்கிஞன் தன்னுயிர் நேமி வேந்தென்ருள். (அ ; 857)

நேயத்தால் நலிதல் - அன்பின் காரணமாக வருந்துதல். நின்றவர் நலிவரால் நேயத்தாலெஞ. (அ : 1206)

நேய நெஞ்சு - நண்பு வாய்ந்த மனம். மன அன்பு. அன்புள்ள மனம். அரும்பெற லன்பினுன் நேய நெஞ்சின் விரும்பி நிரப்பினுன். (அ : 785) அன்னது நினைத்திலை என்வயின் நேய நெஞ்சினல். (அ : 1109) நேய நெஞ்சின் நலங்காண நடந்தனையோ. (ஆ:198)

நேயம் - 1 அன்பு. உயிர்க்கு நேயமும். (யுத் : 328) அடையலர் நேய மாதர். (அ : 452)

2. நட்பு. நெய்த்தலைப் பால் கலந்தனைய நேயத்தான். (கி : 198)

நேய மங்கையர் - அன்பிற்குரிய பெண்கள். வேந்தன் நேய மங்கை யர் தாம் செல்வார். (பா : 878)

நேயமாதர் - காதல் மனைவியர். (அ : 452)

நேர் - 1. சமம். ஒப்பு. நேரிழையர் யாவர் இவர் நேர் என நினைந் தான். (ஆ : 260)

2. உவமை. நெல்லொக்கும் புல்லென்ருலும் நேருரைத்தாக வற்ருே. (ஆ : 633)

3. நுண்மை. நில்லா உலகின் நிலை நேர்மையினுல். (ஆ:783)

4. ஒளித்து நில்லாமல் நேரில் வருதல். நேருமன்று மறைந்து நிராயுதன் மார்பின் எய்யவோ வில்லிகல் வல்லதே. (கி : 327)

நேர் ஆதல் - ஒத்தல்.

நேர்கடன் - செய்தற் குரிய கடமைகள். இளைய தோன்றலால் அன்று நேர் கடன் அமைவதாக்கினுன். (அ : 927)

நேர்குதல் - 1. எதிர்ப்பட்டு அருள் செய்தல். நெடியாய் அடியேன் நிலை நேர்குதியோ. (யுத் : 234)

2. **எதிர்த்தல்.** நெருக்கி நேர்குவார். (யுத் : 346)

நேர் செறுநர் - எதிர்த்து நின்று பொருவார். திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால். (பா : 84)

நேர்த்தது காணல் - நேராகக் காணல். புறகிட்டேற்ற புண்ணுடைத் தழும்பு போலாம் நேர்த்ததும் காணலுற்றது. (யுத்:3875)

நேர்தடுத்தல் - நேரே கலந்து தடுத்தல். எங்ஙனே} கலந்து நேர் தடுத்து வீரர் தாமும் ஒன்று செய்யுமா சலத்தினல். (யுத்:3343)

நேர்தல் . 1. பொருந்துதல். மொய் புனீர் நீத்தமோடி நெடுந்திரை நேருற. (ஆ : 556) மான நேர்ந்து. (பா : 16)

2. **நட்புக் கொள்ளுதல்.** நீ யமால் நேர்தியால். நீயமான் நேர்தியால். (வை.மு.) (கி : 89)

3. **நிறைதல்.** பூநேர் பொழிலின் புறனே நிறுவா. (ஆ : 96)

4. **விடை சொல்லல்.** விம்மி நிற்குமிது என் பயத்த தென்று இளையவன் நேர்ந்தான். (ஆ : 978)

5. **உடன்படல். இசைதல்.** தன் மகற்குப் பார் கொள்வான் எள்ளுறிய கருமம் நேர்ந்தாள் இவளென்பார். (அ : 402) உதவ நேர்ந்திலன். (ஆ : 861) நேர்தியோ. (யுத் . 317)

6. **கொடுத்தல்.** வானினெடு மாமலயம் நேரா. (ஆ : 157)

7. **எதிர்ப்படுதல்.** செருவில் நேரும் நிருதரைத் தேடுவார். (ஆ : 371) அரக்கர் வந்து நேரினும் நேர்வர். (சு : 137)

8. **செய்தல்.** நேருதும் என்றுர். (சு : 1231) (யுத் : 3629) மானிடர் மற்றங்கவர் வாளால் நின் மருகிக்கும் நாழி இழக்கும் நிலை நேர்ந்தார். (ஆ : 733)

9. **அதிர்தல். எதிர்த்தல்.** தனித்தொருத்தர் நேரும் வந்து காலினுன். (யுத் . 3333) நேர்வார். (சு : 473) இன்னம் நேர்குதி போலும். (யுத் : 123) [பா : பே] இலங்கையை நேர்ந்தோம். (யுத் : 532 உரையினை நினைந்து நேர்கிலன். (யுத் : 1497)

10. **பயனளிக்க முன்வரல்.** நிறம் பொலீர் உங்கள் தீவினை நேர்ந்ததால். (கி : 596)

11. **கூறுதல்.** ஓதுவ தென்பெயர் நினைக்கிது நேர அனையர் அஞ்சுவர். (யுத் : 178)

12. **போதியனவாதல்.** கணந்தரு குரங்கொடு கழிவதன்றிது நிணந்தரு நெடுந்தடிக்குலகு நேருமோ. (யுத் : 1326)

13. அணுகுதல். தாய் போற் கவல்வாளை நின்ற உருப்பசியும் மேனகையும் நேர்ந்தெடுத்து. (யுத் : 1950)

14. விரும்புதல். மனமொப்பிவருதல். பிறர் நிகர்க்க நேர்வரோ. (யுத் : 309) உரைத்தபின் இராமன் ஒன்றுரைக்க நேர்ந்திலன். (அ : 453) இயம்ப நேர்ந்திலன். (அ : 462)

15. வாக்களித்தல். நெறிகொள் மாதவர்க்கு முன்னே நேர்ந் தனன். ஆ : 428)

16. சேர்தல். வந்தடைதல். இளையோன் நின்ற நீர்மையும் நினைவு நீ தேர்ந்தெம்மின் நேர்தல் நன்று. (யுத் . 4622) (உ : வி) (ஆ : 556) (உ. வி) (ஆ : 157) இலங்கையை நேர்ந்தோம். (யுத் : 552)

17. ஒத்தல். மின்னேர் எயிற்று வல்லரக்கர். (சு : 601) நேர்வார். (யுத் : 1243)

18. இசைதல். இணங்குதல். இன்றிது நேரா யென்னின். (யுத் : 1642) நேர்வோர். (அ : 508) நேர்கிலன். (அ : 520)

19. முடிவு செய்தல். நீ இது முடித்தி என்று நேர்ந்தனை நினைவின் எண்ணிரயினை. (சு : 813)

20. செல்லுதல். நேர்ந்து யான் வீரனுள்ளம் வினவுவன். (கி : 607)

21. உபதேசித்தல். (உ.வி) நினக்கிது நேர அனையர் அஞ்சுவர். (யுத் : 178)

22. அருள் செய்தல். அடியேன் நிலை நேர்குதியோ. (யுத்:234)

23. இருத்தல். உள் நேர் ஆவி வேண்டிடினும். (அ : 213)

நேர்தடுத்தல் - நேரே தடுத்தல். எங்ஙனே கலந்து நேர் தடுத்து வீரர் தாமும் ஒன்று செய்யுமா சலத்தினால். (யுத் : 3343)

நேர்ந்தனிர் - பெற்றுக் கொண்டுள்ளீர்கள். நீதி வித்தகன் தன்னருள் நேர்ந்தனிர். (பா : 700)

நேர்ந்திலன் - விரும்பாதவனாய். முனிவன் ஒன்றியம்ப நேர்ந்திலன் நின்றனன். (அ : 462)

நேர் நிற்றல் - எதிரே நிற்றல். நேர் நின்று பொன்றுதியெனினும் நல்லை யாகுதி. (யுத் : 1217)

நேர் பறித்தல் - நேரே பறிக்கப்படல். நில மரங்கிய வேரொடு நேர் பறித்து அலமருந்துய ரெய்தியவாயினும். (யுத் : 678)

நேர் பொருதல் - எதிர் பொருதல். நேர் பொரும் பரவை பிறழ் திரை தவழ்ந்து. (சு : 423)

நேர்மின் - வாருங்கள். இவ்வழி நேர்மின் அடா என வீங்கு தோளன் மலைதலை மேயினான். (ஆ : 385)

நேர்மை - 1. சூக்குமம். நுண்மை. உள் நேராவி வேண்டிடினும் இன்றே உனதன்றோ. (அ : 213)

2. **செவ்வை.** நெறியின் நோன்மையை நேர் நின்றுணர்ந்த நீ· (கி : 345)

3. **ஒழுங்கு முறை.** நில்லா உலகின் நிலை நேர்மையினால் வல்லாரும் உணர்ந்திலர். (ஆ : 783)

நேர்வரு - ஈடாக அமைந்த. ஒத்த. அந்தரத்தின் நேர்வரு சொல்லாள். (சு : 175) பொன்னேர்வரு வரிவில். (யுத் : 3369)

நேர்வரு தாயத்து நிரப்பினோர் - நேரான பங்காளிகளால் வறுமையுற்றவர். (யுத் : 386)

நேர்வரு தாயத்து நிரம்பினோர் - நேரான பங்காளிகளால் வறுமையுற்றவர். (யுத் : 386) [பா : பே]

நேர்வுறல் - 1. சந்தித்தல். நின்ற வஞ்சன் இராமனை நேர்வுற (யுத் : 3850)

2. **பொருந்தல்.** பூகம் நேர்வுறச் சுற்றிய மணிவடம். (ஆ:598)

நேர் வெல்லல் - வஞ்சியாது எதிர் நின்று வெல்லல். நேர் வென்ற திண்கொடியொடும். (பா : 1127) [பா : பே]

நேரலர் - பகைவர். அல் நேரலருடனே திரி நிழலே யெனலானான். (யுத் : 3373)

நேரா - 1. நேர்ந்து. சேர்ந்து. வானின் நெடு மாமலைய நேரா. (ஆ : 157)

2. **கொடுத்து.** (உ. வி) (ஆ : 157)

3. **சித்தமாகி.** நில் நின்று காண்டி யான் செய் நிலையென விரும்பி நேரா. (ஆ : 427)

நேரார் - பகைவர். தாக்குறு செருவில் நேரார் தாளர வீசத்தாவி. (சு : 8) [பா : பே]

நேரிது - அழகாக உள்ளது. இகழ்ச்சிக் குறிப்பு. யாரிது பட்டார் என் போல் எளி வந்த வண்ணம் என்னும் நேரிது பெரிதென் றேதும். (யுத் : 2177)

நேரிதுணர்தல் - செவ்வையாக உணர்தல், நெறியின் நோன்மையை நேரிதுணர்ந்த நீ. (கி : 348) [பா : பே]

நேரிபன்ற வன்திசை - நேராக உள்ள வலியதிசை. புறம் போய் நேரியன்ற வன்திசை தொறும் நின்ற மா. (சு : 106)

நேரிழை - நேர்மையான அணிகள் (பூண்டபெண்) நேரிழை ஒருத்தி நீரால். (யுத் : 3183)

நேரிழையார் - பெண்கள். (ஆ : 343)

நேருநர் - எதிர்ப்பவர். ஒப்பாவார். நெய்ந்நிலைய வேலரசன் நேரு நரை இல்லான். (ஆ : 600)

நேரேபட்டவர் - நேரே போர் செய்து இறந்தவர். நேரே பட்டவர் பட மாடேதனி நில்லா உயிரொடு நின்றுரே. (சு : 958)

நேரொடுங்கலில் - நேரே அடங்குதல் இல்லாத. (வை. மு) நேரே ஒடுங்க நேர்ந்தமையால். (அண்) நேரொடுங்கலில் பகையை நீதியால் வெல்லும் சோர்விடம் பெரு உணர்வினன் சூழ்ச்சியே போல. (பா : 899)

நை

நைதல் - 1. வருந்துதல். புழுங்கி நைந்தான். (யுத்:713) (யுத்:4268) மெய்யே என்தன் வேரற நூறும் வினை நேர்க்கி நையாநின்றேன். (அ.218)

2. தளர்தல். பையுளுற் றுயங்கி நைவான். (ஆ : 656)

3. தேய்தல். நன்புலன் நடுக்குற உணர்வு நைந்தற. (கி:840) [பா : பே]

4. மெலிதல். தனி நாயகன் நைந்து நீங்கச் செயலோரா மீகாமன். (அ : 605) நைந்த தென்றுலகம் நைய. (யுத் : 4268)

நைந்துநீங்க - மெலிந்தொழிய. (அண்) இறந்துபோக. (வை. மு) (அ : 605)

நைந்து நைந்து - மிகவும் நைந்து. உள்ள நைந்து நைந்திரங்கி. (பா : 804)

நைய - 1. அடங்க. இடாவு பிங்கலையால் நைய. (பா : 693)
2. வருந்த மாமகள் மேல் விளைந்ததோர் காதலால் நைய நைய. (அ : 244)

நைய நைய - வருந்த வருந்த. காதலால் நைய நைய நல் ஐம் புலன்கள் அவிந்தடங்கி நடுங்குவான். (அ : 244)

நையல் - வருந்தாதே. நாண் மலர்க் கிழவனை நோக்கி நீ செய்தி நையல். (பா : 523)

நையு நொய்ய மருங்குல் - நையச் சிறுத்துள்ள மெல்லிதான இடை. துடிபோலிடை நையும் நொய்ய மருங்குலொர் நங்கை. (பா:1183)

நைவளம் - நட்டபாடை என்னும் பண். நறை செவி பெய்வதென்ன நைவள அமுதப்பாடல் முறை முறை நணுகப் போனர். (பா:876)

நைவீரலீர் - வருந்துதற் குரியரல்லீர். நைவீரலீர் மைந்திர் இனித் துயரால். (அ : 1058)

நொ

நொ - 1. துன்பம். எனக்கு நொவிட. (சு : 430)
2. வருந்துதல். நொவ்விடை மடந்தைதன் இருக்கை நோக்கினன். (சு : 383)

நொச்சி - மாற்றூர்க்கு எதிருன்றித் தம் மதில் காப்போர் சூடும் மாலே. உழிஞையைத் துடைக்க நொச்சி உச்சி மேற் கொண்டதுன்னூர். (யுத் : 903)

நொடி - 1. கணப் போது. நுங்குவர் உலகை ஓர் நொடியில் என்றனர். (பா : 198)
2. அழிவு. கொடியவர் யாவரும் குலங்கள் வேரற நொடிகிலர். (அ : 884)
3. கைந் நொடி. நொடியாற் பல கொன்றுன். (யுத் : 1835)

நொடிகுவது - சொலல் வேண்டுவது. ஆழியாய் நொடிகுவ துள தென நுவல்வதாயினன். (யுத் : 2736)

நொடித்தல் - 1. சொல்லுதல். (வை. மு) உச்சரித்தல். நொடிவருங் கமலத் தண்ணல். (கி : 96)
2. கைந் நொடிப் பொழுது. மாண்டார்க் கெல்லாம் உயிர் தரும் வலத்த தென்றல் நொந்தவர் நொய்வு தீர்க்கச் சிறிதன்றே நொடித்தன் முன்னே. (யுத் : 3534)

நொடிதல் - 1. கூறுதல். நொடிதி நின்குறை யென. (கி : 183) நொடிகுவதுளது. (யுத் : 2736)

2. அழிதல். கொடியவர் யாவரும் குலங்கள் வேரற நொடிகிலர். (அ : 884) குலங்கள் வேரற நொடிவென் யான். (அ:884) [பா : பே]

3. விடை கூறுதல். உன்னி வந்த நிலை என்கொல் என்று நெடியோன் விளம்ப நொடிவான். (ஆ : 964)

நொடிதி - சொல். குறுகி முன் நொடிதி நின் குறையென. (கி : 183)

நொடிப்பளவு - கைந் நொடிப்பொழுது. நொடிப்பளவில்... சீறுங்கவி சேனை சிதைக்குமென. (யுத் : 2350)

நொடிப்பு - கையினால் நொடித்தல். நொடிப்பளவில். (யுத் : 2350)

நொடிவருங் கமலத்தண்ணல் - சொல்லுதற்கரிய சிறப்பையுடைய தாமரையில் தோன்றிய பிரமதேவன். (வை. மு) அழிவில்லாத தாமரையில் வீற்றிருக்கும் பிரமதேவன். (அண்) (கி : 96)

நொடிவு - 1. சொல்லுதல். (வை. மு) (கி : 96)

2. அழிவு. (அண்) (கி : 96)

நொதுமல் - பட்சபாத மின்மை. நொதுமல் திண்டிறல் அரக்கன திருக்கையை நுவன்றேன். (யுத் : 528)

நொந்த - வருந்திய. நொந்த சிந்தை இளையவன். (அ : 789)

நொந்தவர் நொய்வு - நொந்தவருடைய நோவு. நொந்தவர் நொய்வு தீர்க்கச் சிறிதன்றே. (யுத் : 3534)

நொந்திருத்தல் - வருந்தியிருத்தல். சிந்தையின் நொந்திருந்து தேய்வுறல். (யுத் : 2955)

நொந்து நொந்து - மிகவும் வருந்தி. வருந்தி வருந்தி. ஆவி சால நொந்து நொந்து அழுங்குவானு மாயினன். (ஆ : 651 (ஆ : 652)

நொந்து மாழ்குதல் - வருந்தி மனங் கலங்குதல். (அ : 9126)

நொந்துளார் - வருந்தியவர். தேவரில் நொந்துளாரையும்... (அ:105)

நொப்பம் - நொய்ப்பம். நொய்ம்மை. புத்தியின் சிறுமை. எளிமை. அந் நொப்பமேகொல் பிறிதே கொல் ஆரிவ்வதிரேக மாயை யறிவார். (யுத் : 2205)

நொம்மென - ஆராயாது. விரைவாக. நொம்மெனக் கொல்லாம் நெஞ்சம் அஞ்சலை நுவறி என்றுன். (சு : 1131)

நொய்தின் - 1. விரைவில். நொய்தின் ஐயன் வில்லேற்றுமேல் இடர்க்கடல் ஏற்றும். (பா : 750) (யுத் : 2159)
2. **இலகுவாக.** (உ. வி) (பா : 750)
3. **மெதுவாக.** கொல்லலிர் குரங்கை நொய்திற் பற்றுதிர் சொணர்திர் என்றுன். (சு : 752)
4. **அலட்சியமாக.** நொய்தினிது கூறினுன். (யுத் : 2031)

நொய்தின் நொய்ய - மெல்லிதினும் மெல்லிய. அற்பத்தினும் அற்பமான. நொய்தின் நொய்ய சொல் நூற்கலுற்றேன். (பா : 5)

நொய்தினில் - இலேசாக. நூறுமாயிர மூங்கணை நொய்தினின் வேறு வேறு படுதலின். (யுத் : 1032)

நொய்து - 1. மெல்லியது. உள்ளீடில்லாதது. நொய்தின் நொய்ய சொல். (பா : 5)
2. **எளிது. எளிதாக.** நொய்தில் அங்கவன் நொறில்பரித் தேர் பட நூறி. (ஆ : 527) நொய்து நோக்கி. (யுத் : 2664)
3. **அற்பமானது.** அது நொய் தெனத் தவிர்ந்தான். (யுத்:141)
4. **விரைவு. விரைவாக.** நொய்தாய்வர. (உ. வி) (அ:1099) நொந்துளாரையும் நொய்துயர்ந்தாரையும். (அ:105) [பா : பே]
5. **அற்பமானது.** நொய்தாய்வர வேகமும் நொய்திலனுல். (ஆ : 1099)
6. **தளர்ச்சி** வேகமும் நெய்திலனுல். (ஆ : 1100)
7. **மென்மையாக.** நொய்தலர் தாமரை... சீறடி கைகளிற் றீண்டினுன். (அ : 140)

நொய் துயர்ந்தார் - விரைவாய் உயர்ந்தார். (அ : 105) [பா : பே]

நொய்தென - விரைவாக. நொய்தென அரக்கனை நெருங்க நொந்தன செய்தனன். (யுத் : 3750)

நொய்மை - மென்மை. நொய்யகால் தகை விரல்கள். (கி : 776) [பா : பே]

நொய்ய - மெல்லிய. சால நொய்யவே தொய்ய வென்றே பலபட ஒலிப்பதம்மா. (பா : 1219) (கி : 776) [பா : பே]

நொய்யது - எளிமையைத் தருவது. தாழ்வாகும். இனியிது புரிதல் நொய்யதாகு மென்று ஆரும் என் காவலின் நுழைந்தார். (யுத் . 184)

நொய்யவே நொய்ய - மிகவும் நொய்ம்மையுடையன. சேர்த்திய சிலம்பு சால நொய்யவே நொய்யவென்றே பலபட நுவல்வ தம்மா. (பா : 1215)

நொய்யள் - இழிகுண முடையள். நொய்யள் நல்லளும் அல்லள் என்றான். (ஆ : 270)

நொய்வு - தளர்ச்சி. நோய்வு. நொந்தவர் நொய்வு தீர்க்கச் சிறி தன்றே. (யுத் : 3534)

நொவ்விடை - வருந்துகின்ற இடை. நொவ்விடை மயிலன்னாள். (யுத் : 4053) நொவ்விடை மடந்தைதன் இருக்கை நோக்கினான். (சு : 383)

நொவ்வியல் - நோய்படுந்தன்மை. எவ்வகை உரகமும் இரியல் போயின நொவ்வியலுற்றென. (யுத் : 3812)

நொறில் - விரைவு. வேகம். நொறில் வயப்புரவி நோன் தேர். (சு : 936) நொறிற் கனற்பொறி. (சு : 1110) (யுத் : 1180) நொறிற்பரி. (யுத் : 1449)

நொறுக்குதல் - தூளாக்குதல். வேறுற நொறுக்கி நுண் பொடி பரப்பினான். (யுத் : 2023)

நோ

நோக்கம் - கண். அஞ்சன நோக்கம். (பா : 1157)

நோக்கருங் காரிகையாள் - காண ஒண்ணாத அழகுடைய பெண். கண்டு நோக்கருங் காரிகையாள்தனைக் கொண்டு போவல் இலங்கையர் கோக்கென. (ஆ : 374)

நோக்கல் - 1. எதிர் பாராதே. (அண்) எதிர் பார்ப்பது. (வை.மு) ஏழைமை எண்ணி நோக்கல். (சு : 472)
2. பார்த்தல். திருமுகம் நோக்கலம். (கி : 8)

நோக்கலன் - மனத்தில் நினையாமல். வெவ்வியது அன்னையால் விளைந்த திண்டொரு கவ்வையென் றிறையுந்தன் கருத்தின் நோக்கலன். (அ : 565)

நோக்கழி - நோக்கழகின் அழிவு. நோக்கினுல் நமை நோக்கழி கண்ட நுண்மருங்குல். (கி : 482)

நோக்கறவு - காண்பதற்கில்லா தொழிதல். நோக்கறவும் எம்பியர் கள் மாளவும். (யுத் : 1664)

நோக்கி - நினைந்து. ஆலோசித்துப்பார்த்து. கமலத்துக் கடவுள் தானே ஒரு திறத்துணர நோக்கி (ஆ : 285)

நோக்கி நோக்கி - 1. பார்த்துப் பார்த்து கடைக்கணுல் நோக்கி நோக்கி இரு கணீர் கலுழப் போனுன். (யுத் : 3087)
2. பல முறை ஆராய்ந்து கொண்டு. ஒன்றியம்புவது யாதென நோக்கி நோக்கி அரிதென நொந்துளேன். (யுத் : 3946)

நோக்கிய - 1. உவமவுருபு. இந்து நோக்கிய நுதலி. (ஆ : 315)
2. வீசுகின்ற. கந்த நோக்கிய சோலே. (ஆ : 315)

நோக்கினுர் நோக்கினுர் - பார்த்துப் பார்த்து நின்றவர்கள். நோக் கினுர் நோக்கினுர் முன். (யுத் : 286)

நோக்கினுல் நுவலல் - கண் பார்வையினுல் கூறல். நோக்கினுல் சுமந்திரன் நுவலலுற்றதை. (அ : 937)

நோக்கு - 1. குறிப்பறியுந் தன்மை. நோக்குடைக் கோக் குமரரும் அடிகுறுக. (பா : 359)
2. பார்த்தல். பார்வை. நோக்கறவும் எம்பியர்கள் மாளவும். (யுத் : 1664) மென்னேக்கினதே கடுவல் விடமே. (பா : 1261)
3. அழகு. மாவியல் நோக்கினுளைக் கொணர்கென. (பா:1202) பெண்ணின் நோக்குடையாள். (ஆ : 373)
4. தோற்றம். பிறவியிற் பெரிய நோக்கிற் பிசித முண் டுழலும் பெற்றிச் சிறையன என்ன நோக்கித் தேவரும் திகைக்க. (யுத் : 2049)
5. பெருமை. ஒளி. நோக்கிழந்தனர் வானவர் எங்களால். (யுத் : 1547)
6. வலி. (உ.வி) (யுத் : 1547)
7. கண். தன்னேக் கெரிகால் தகைவாளரவின். (பா : 1261)
8. இடம். பல நோக்கினது. (பா : 1261)
9. சிந்தனே. விம்மி நிற்கும் நோக்கும் இது என் பயத்தது. (ஆ : 978)
10. மனத்தினுல் சிந்தித்துப் பார்த்தல். ஒன்றியம்புவது யாதென நோக்கி நோக்கி அரிதென நொந்துளேன். (யுத் : 3946)

நோக்குடைக் குமரர் - குறிப்பறியுந் தன்மையுள்ள அரசிளங் குமரர்கள். (பா : 359)

நோக்குதல் - 1. மனத்தான் ஆராய்தல். முற்ற நோக்கினுன் மொழிதல் மேயினுன். (அ : 1169) இருமை நோக்குறும் சான்றவர். (அ : 1154) என்ன பேற்றினை ஈகுவ தென்பதை உன்னி நோக்கி உரை மறந்தோவினேன். (யுத் : 3947) நோக்கார். (யுத் : 2129)

2. கருதுதல். சொற் கொடு நெஞ்சம் போழ்ந்தாள் உன்னிப் புன்மையை நோக்கிப் புலர்கின்ருன். (அ : 221) (அ : 565)

3. தேடிச் செல்லுதல். மந்தியுங் கடுவனும் மரங்கள் நோக்கின. (அ ; 777)

4. மேற்கொள்ளல். இராமனும் நெறியை நோக்கினுன். (அ : 1146)

5. பாதுகாத்தல். ஓங்காரம் நின்று நோக்கி நிறுத்து நினைப்பினுர். (ஆ : 372)

6. உவமவுருபு. இந்து நோக்கிய நுதலி. (ஆ : 315)

7. துய்த்தறிதல். பெண்ணின் நேர்க்கும் சுவை. (அ : 628)

8. வீசுதல். கந்தம் நோக்கிய பொழில். (ஆ : 312)

9. காணுதல். நோக்கில் தென்திசையல்லது நோக்குருன். (யுத் : 4128) திருமுகம் நோக்கலம். (கி : 8) நேர்க்குவார் நோக்காமை. (யுத் : 1580) சுளித்து நோக்குருன். (யுத் : 1677) யாரவை நோக்ககிற்பார். (யுத் : 1421)

நோக்குருன் - பாராதவனுய். நோக்கில் தென்திசையல்லது நோக்குருன் ஏக்குற்று. (யுத் : 4128)

நோக்குறு - காணப்படுகின்ற. நோக்குறு முகமும் கையும். (யுத் : 285)

நோக்கெரிகால் அரவு - கண்களிருந்து நெருப்பை உமிழுந்தன்மையுள்ள பாம்பு. தன்னேக்கெரிகால் தகைவாளரவின் பன்னேக்கினதென்பது. (பா : 1261)

நோக்கெனும் நுதிகொள்வேல் - பார்வையாகிய கூரிய வேல். கோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேலினை. (பா . 599)

நோக்கெனும் பாசம் - பார்வையாகிய பாசம். பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து. (பா : 600)

நோதல் - வருந்துதல். நோதலாங்கில்லாத அன்பனையே நோக்கினன். (யுத் : 295)

நோம் - வருந்துவான். நோம் உறுநிலை நோய் நுவலகிற்றிலன். (பா : 605)

நோய் - வருத்தம், துன்பம். நோய் தந்தென்னை நோவன செய்து நுவலாதே. (அ : 214)

நோய் கொண்டு - நோயைக் கொண்டிருந்து. நோய்கொண்டு மருந்தைச் செய்யா ஒருவ. (யுத் : 1908)

நோய் செயல் - துன்பம் செய்யற்க. (யுத் : 3956)

நோய் தந்தவனே நுவல் தீர்வு - பிறவிப் பிணியைத் தந்தவனாகிய நீயே சிறப்பித்துக் கூறப்படும் தீர்த்தற்குரிய மருத்துவனும் ஆவாய். (யுத் : 243)

நோய் தந்தென்னை நோவன செய்து நுவலாதே - வருத்தத்தைக் கொடுத்துவிட்டு மேலும் துன்புறுத்தக்கவற்றைச் செய்து பேசாதே. (அ : 215)

நோய்மை - நோயின் தன்மை. காமநோய். மாதவத்தால் வந்த தூய்மை தூயவள் தன் வயின் தோன்றிய நோய்மையால் துடைக்கின்றனை. (சு : 1137)

நோயாற்றுகில்லார் - துன்பங்களைப் பொறுக்க இயலாதவர். தனிச் சிந்தையினின்று செற்ற நோயாற்றுகில்லார் உயிர்போல் நுடங்கிடையார். (அ : 439)

நோயிரல்லீர் - நோயின் தன்மையீர் அல்லீர். நோயிரல்லீர் நுங் கணவன்றன் உயிருண்டீர். (அ : 868)

நோவதாக - வருந்தும்படி. நோவதாக இவ்வுலகை நோய் செய்த பாவகாரி. (அ : 1164)

நோவன செய்தல் - துன்புறுத்தல். கற்பினிற் சிறந்துளாளை நோவன செய்தல் தீதென. (யுத் : 3065)

நோவு - துன்பம். கைத்தலஞ் சலித்ததன்றி நூக்கினாரில்லை யாரும் நோவு செய்தாருமில்லை. (யுத் : 1423) வரம்பில் காலமும் நொந்தனன் இராமன் என் நோவை நீக்குவான் வந்தனன். (அ : 27)

நோற்ற நோன்பு - செய்த தவம். (சு : 445)

நோற்றல் - 1. தவஞ்செய்தல். பெருநிலக்கிழத்தி நோற்றும் பெற்றிலள் போலும். (அ : 663) நோற்பல். (கி : 432)
2. அனுஷ்டித்தல். அறம் நோனர். (ஆ : 774)

நோற்றுடைத் தவத்தினேன்மை - நோற்றுள்ள தவத்தின் வன்மை. நோற்றுடைத் தவத்தின் நோன்மை நோக்கினர். (யுத் : 2379)

நோன் - வலிமை. நொறில் வயப் புரவி நோன்தேர். (ஆ : 936)

நோன்கழல் - வலியவீரகண்டை. நோன்கழல் ஆற்றல் சால் துன் முகன்- (யுத் : 1044)

நோன் சிலையோன் - வலிய வில்லையுடைய இராமன். தேவருங் கைதொழ நோற்றிருந்தனன் நோன் சிலையோன். (அ : 792)

நோன்பின்துறையோன் - தவத் துறையில் தேர்ந்த கலைக்கோட்டு முனிவன். சொற்பெற்ற நோன்பின் துறையோன் அருள் வேண்டி. (அ1126)

நோன்பினோர் - தவத்தையுடையவர். குறைவில் நோன்பினோர் சொல்லென. (யுத் : 1477)

நோன்பு - தவம். விரதம். வினையறு நோன்பினரல்லர். (அ : 187)

நோன்புகழ் - மிக்க புகழ். நோன்புகழ் ஆக்கிய நிருதன். (யுத் : 2722)

நோன்மை - 1. வலிமை. நொய்தின் ஆரமுதங்கொண்ட நோன்மை. (சு : 22) நெறியின் நோன்மை. (கி : 345) நோன்பிணம் (யுத் : 1796) நோன்கணை. (யுத் : 1577) நோன்மைசால் கவியரசு. (கி : 44)
2. பெருமை. (வை. மு) துன்பங்களைத் தாங்கிக்கொள்ளும் வன்மை. (அண்) நோயுறு துயரென நுடங்கல் நோன்மையோ. (ஆ : 1124)
3. தன்மை. இலங்கை வெற்பு நூக்குறுத்தங்குமிங்கும் தள்ளுற நுடங்கு நோன்மை. சு : 91)
4. மனவுறுதி, வலிமை. நடுக்குறும் நோன்மையின் ஆளும் அவ்வரசே யரசு. (அ : 111)

நோன்மைசால் கவியரசு - வலிமை மிக்க குரங்கினத்து அரசன் சுக்கிரீவன். (கி : 44)

நோன்றல் - பொறுத்தல். வருணன் நோனது. (யுத் : 4093)

நோன்ருள் - வலிய கால்- இயல் நோன்ருள் வேற் பெருங்கடல் புடைபரந்து. (சு : 301)

நோனுது - பொறுக்கமாட்டாது. வருணன் நோனுது இவ்விடை வந்து கண்டாய் சரணென இயம்பிற் றென்ருன். (யுத் : 4033) (பா . 970)

நோனர் - 1. பகைவர். நோனர் மாபுரமடங்கலும் இரிந்தயர. (யுத் : 860)
2. செய்யாதார். அனுட்டியாதவர். அறம் நோனர் ஈண்டார் ஈண்டார். (ஆ : 749)

ப

ப∴றலை - பல தலைகள். பாற் பெருங்கடல் பஃறலைப் பரப்பிடை (சு : 301) அரக்கன் பஃறலை. (சு : 1105) (யுத் : 3392)

ப∴றலைப்பாந்தள் - பல தலைகளையுடைய பாம்பாகிய ஆதிசேடன். படங்கிளர் பஃறலைப் பாந்தள் ஏந்துபார். (பா : 287)

ப∴றலையரவு - பல தலைகளையுடைய பாம்பு. கெடுத்தது ஒருமணி நேடும் பஃதலை அரவு. (சு ; 425)

ப∴றலை வாளி - பல தலைகளையுடைய சரங்கள். வாய்விளித் தெழு பஃறலை வாளிகள். (யுத் : 3392)

ப∴றவம் - பல வகைத் தவம். பயன் படைத்தனம் பஃறவத்தா லென்ருர். (யுத் : 3854)

ப∴றழும்பு - பல்தழும்பு. பலவாகிய தழும்புகள். பாசப் பஃறழும்பு. (யுத் : 1984)

ப∴றிசை - பல திசை. பக்கம் விசும் படைச்சுடர் பஃறிசை புக்குப் போகப் பொடிப்பன போக்கில. (யுத் : 3710)

ப∴றிரை - பல அலைகள். பழகிற் றல்லாப் பஃறிரை தூங்கும் படர் வேலை. (யுத் : 3552)

பக்கம் - 1. பக்கத்திலிருக்கும் பணியாளர். சுற்றமும் பக்கமும் பெயர் கெனப் பரிவின் நீக்கினுன். (அ : 3)
2. பக்கத்தைச் சேர்ந்தவரான சேனை. திசை முகன் முதலா மூவரும் பக்கம் நோக்கியே மொழிதர முனிவான். (யுத் : 500)

3. மருங்கு. நல்வினைப் பயனென நேர்வோர் பக்கம் நோக்க லென். (அ : 508)
4. சிறகு. பல்லாயிரத்தின் முடியாத பக்கம் அவை வீச வந்து படர் கால். (யுத் : 2216)
5. பக்கபலம். பல் பதினயிரர் தேவர் பக்கமா எல்லையில் சேனை கொண்டெதிர்ந்த இந்திரன். (யுத் : 1983)
6. இடம். மேகத் துதிக்கும் நெருப்பெனப் பக்கம் வீசும் படைச் சுடர். (யுத் : 3710)
7. பகுதி. தக்கில தென்னும் பக்கம். (கி : 320)
8. பட்ச பாதம். (உ. வி) தகுகில தென்னும் பக்கம். (கி:320) [பா : பே]

பக்கம் நோக்கி மொழிதல் - பக்கம் பார்த்துப் பேசுதல். திசை முகன் முதலா மூவரும் பக்கம் நோக்கியே மொழிதர முனிவான். (யுத் : 500)

பக்கம் பக்கம் - இரண்டு பக்கங்களிலும். பக்கம் பக்கம் இருகூறு நூருயிரவர் பற்றினர். (சு : 1166)

பக்க மின்னுமணி மேரு–எல்லாப் பக்கங்களிலும் ஒளிவிட்டு விளங்கு கின்ற அழகிய மகா மேருமலை. பக்க மின்னு மணி மேரு சிகரம் குழைபட. (ஆ :9)

பக - 1. மிகும்படி. மற் பக மலர்ந்த தோள் மைந்தர். (சு:373)
2. தோற்று உடைந்தோடும்படி. மற்பக மலர்ந்த திண்டோள் வானவர். (பா : 249)
3. ஒழிய. [பக.] மற்பக மலர்ந்த தோள் மன்னர் மன்னனே. (அ : 844)

பகட்டினம் - எருமைக்கடா. எறி பகட்டினம் ஆடுகள் ஏற்றினம். (அ : 1806)

பகட்டு வெம்முலை - பெரிய விரும்பத் தக்கமுலை. பாசிழை மடந் தையர் பகட்டு வெம்முலை பூசிய சந்தனம். (கி : 553)

பகட்டெழில் மார்பகம் - பெருமையும் அழகுங் கொண்ட மார்பு. பகட்டெழில் மார்பகம் திறப்ப ஆயிரம். (யுத் : 1555)

பகடு 1. ஆண் யானை. பகட்டினர்- (யுத் : 4284) எறி பகட்டி னம். (அ : 806) பகட்டினுல் தூர்க்கும் வேலையை. (யுத்:2093)

2. எருமைக்கடா. கடும் பகடு படி தோய்ந்த கடும் பரம்பு. (யுத் : 3567)

3. பெருமை. பகட்டெழில் அகல் மார்பம். (யுத் : 1553) பகட்டு வெம்முலை. (கி : 553)

பகர்தல் - சொல்லுதல். வந்தது பகர்தி. (யுத் : 949) இப்பொழுதே பகர்ந்திடு. (அ : 194) பகர்ந்திர். (கி : 329) பாடுஇளி ஒரு வராற் பகரற் பாலதோ. (யுத் : 1788)

பகர்வது - கூறுவது. வார மென்னினிப் பகர்வது. (அ : 39)

பகரவரிய பதம் . சுவர்க்கம். பகர வரிய பதம் விரவ. (யுத்:3413)

பகல் - 1. சூரியன். பச்சிலைத் தாமரை பகல் கண்டாலென. (கி : 537) பகலின் மேலினனே. (யுத் : 2346)

2. காலம். இவண் வந்து. தவம் முற்றும் பகல் தானும் முடித்தனன். (ஆ : 92) ஒரு பகல் உல கெலாம் உதரத்துட் பொதிந்து. (பா : 284) பல பகலும் வைகிய பயிற்றியராயினும். (யுத் : 2297.)

3. பாதி. எண்ணு நாளினில் உளபகற் கூதிரும் இறுதியுற்ற தால். (கி : 839) [பா : பே]

4. பகற் காலம். பகல் மதி. (யுத் : 105)

5. முகூர்த்தம். இற்றை இப் பகலின் நொய்தின் எய்தி. (சு : 476)

6. நாள். பன்னிரு பகலிற் சென்று. (சு .1339) (ஆ : 850)

7. ஆகாயம். பார் மேனலினே பகன் மேலினனே. (யுத்:2346)

பகல் மதி - பகற் பொழுதிற் காணப்படுஞ் சந்திரன். (யுத் : 105)

பகலவன் - சூரியன். பகலவன் சேயும் நீயும். (யுத் : 457)

பகலவன் அனையான் - எங்கும் ஒரு வெறுப்பின்றி தன்மையனுகி விளங்கும் சூரியனை ஒத்த இராமன். சேலுடை மொழியாளும் பகலவன் அனையானும். (அ : 678)

பகலவன் குலமைந்தன் - சூரியகுலத்தில் தோன்றிய இராமபிரான். பகலவன் குலமைந்தன் பணிக்கின்றான். (ஆ : 134)

பகலவன் சேய் - சுக்கிரீவன். (யுத் : 457)

பகலவன் வழிமுதற் பாரின் நாயகன் - சூரியன் மரபில் தோன்றிய முதன்மையுடையவனும் பூமிக்குத் தலைவனுமான இராமபிரான். (யுத் : 351)

பகலிடுமின் - பகற்காலத்துத் தோன்றும் மின்னல். (வை.மு) ஒளியைச் செய்கின்ற மின்னல். (அண்) துகிலொடு நெடுங் கொடிச் சூலம் மின்னுவ பகலிடு மின்னணிப் பரப்புப் போன்றவே. (பா : 128)

பகலோன்குல மருமான் - சூரியகுலத்தில் தோன்றிய இலக்குவன். (யுத் : 3029)

பகழி - அம்பு. உடல் நிறை பகழி. (யுத் : 3126)

பகழிக்கோல் - அம்பு. வரி விற் சிந்திய பகழிக்கோல். (யுத் : 963)

பகழித்தெய்வம் - தெய்வத்தன்மையுள்ள பாணம். ஓரிமை ஒடுங்கா முன்னம் பாடி நூருக நூறி மீண்டது அப்பகழித்தெய்வம். (யுத் : 613)

பகழி தூண்டுதல் - அம்பு செலுத்துதல். தேவர்தம்பிரான் பகழி தூண்ட. (யுத் : 2383)

பகழிநாகம் - அம்புகளாகிய நாகம். பாவகாரியர் உயிர்ப்பதமலால் இரைபெரு பகழி நாகம். (யுத் : 100)

பகழிப்புத்தேள் - பாண தேவதை. அம்புத் தெய்வம். அவன் சிரத்தைத் தள்ளிப் பூமழை வானோர் சிந்தப் பொலிந்தது அப் பகழிப் புத்தேள். (யுத் : 3125)

பகழி மாரி - அம்பு மழை. பல் பெரும் பகழி மாரி. (யுத் : 875) (யுத்: 2990) (ஆ : 541) (யுத் : 1872)

பகழி மாரி வித்துதல் - அம்பு மழையை விதையைத் தெளிப்பது போன்று தூவுதல். விசையுறு பகழிமாரி வித்தினன். (யுத்:3681)

பகழியின் மதில் - பாணத்தினாலாகிய மதில். பகழியின் மதிலைக் கிட்டினன். (யுத் : 1496)

பகழி யுண்ணக் கொடுத்தல் - அம்புக்கு உண்ணுமாறு பறிகொடுத்தல். என்மகனை மாட்டா மனிதன்தன் உந்து சிலைப் பகழிக்கு உண்ணக் கொடுத்தேனே. (யுத் : 1946)

பகழி விதைத்தல் - அம்புகளை வித்துதல். சில பகுவாய் அயிற் பகழி விதைத்தான். (யுத் : 3014)

பகற்கதிர் - சூரிய கிரணம். பகற்கதிர் மறைய. (பா : 567)

பகிர் - பாகம். துண்டு. பாதி. மூன்றிலொன்று. கௌசலை கரத்தின் ஓர்பகிர் தாமுற அளித்தனன். (பா : 268)

பகிர்தல் - பிளவாதல். பகிர்ந்தன பரப்பும். (யுத் : 863)

பகிர்படுதல் - 1. துண்டுபடுதல். பிளத்தல். பகிர்படக் குடரைக் கொய்யும். (யுத் : 268)
2. பிரிதல். பரதனும் இளவலும் ஒரு நொடிபகிராது. (பா:310)
3. வெளிப்புறத்திலே சரிந்து விழுதல். (அண்) (யுத் : 268)
4. இரு கூறுக்குதல். பகிர்ந்தன சில. (யுத் : 1836)

பகிரண்டம் - வெளியேயுள்ள வேறு அண்டம். பகிரண்ட முதல மற்றும் அளந்தது. (யுத் : 260)

பகிரதன் - சூரிய குலத்தரசன். கங்கையைக் கொணர்ந்தவன். இவனெடு மரபிற் பகிரதன் எனும் பார்த்திவன் வந்தவதரித்தான். (பா : 520)

பகிரதி – கங்கை. பகிரதன் கொணர்ந்திடுதலாற் பகிரதியாகி. (பா : 538)

பகுத்தபத்தி - ஏற்படுத்திய வரிசை. பாயிர முணர்ந்த நூலோர் காமத்துப் பதித்த பத்தி ஆயிரமல்ல போன. (யுத் : 1595)

பகுத்த வான்மதி - அட்டமிச் சந்திரன். பகுத்த வான்மதி கொடு பதுமத்தண்ணலே வகுத்த வாணுதலியர் வதனம். (அ : 535)

பகுத்தல் - 1. பெயர்த் தெடுத்தல். பாதவம் ஒன்று பகுத்தான். (சு : 1237)
2. பிளத்தல். பகுத்தன பாங்கு நின்ற. (அ : 744)

பகுதல் – 1. பிளவுபடல். மண்பக அடித்தன. (அ : 859)
2. ஒழிதல். மற்பக மலர்ந்த தோள். அ : 844) (பா : 949)

பகுதி - 1. மூலப் பிரகிருதி. வேதம் பொதுவுறப் புலத்து நோக்கும் பகுதியை ஒத்தான். (யுத் : 1184) (யுத் : 4020)
2. பிரிவு. தேவர் மனிதர் முதலிய பகுதிகள். முந்து நீர் முளைத்த சினையின் பந்தமும் பகுதிகள் அனைத்தையுஞ் செய்தோன். (யுத் : 4032)
3. பாகம். பைங்கழலரக்கரோடு முடன் சென்ற பகுதிச் சேனை. (சு : 989)
4. சேனை. பந்தி பந்தியாய் மடிந்தது வானரப் பகுதி. (யுத்:1160)
5. வகுத்தல். பத்துநா றமைந்த கோடி வெள்ளத்தாற் பகுதி செய்த அத்தனை கடலும் மாள. (யுத் : 262)

பகுதி செய்தல் - வகுத்தல். பகுத்துரைத்தல். (அண்) (யுத் : 262)

பகும் - வலி குறையும். சொற் பகும். (ஆ : 255) [பா : பே]

பகுவாய் - 1. பிளவுபட்ட வாய் பகுவாய் முழைதிறந்து. (பா : 392) (யுத் . 218)
2. பெரிய வாய். அரற்றினுன் பகுவாயார. (யுத் : 3886)

பகை - 1. ஐம்புலன்கள். தோற்கலா நனிவரு பெரும் பகை நவையின் நீங்கி அத்தனி யரசாட்சியில் தாழும் உள்ளம். (அ : 23)
2. பகைவர். உன் அரும் பகை முடிப்பன். (யுத் : 881)

பகை இலங்கை - பகைவர் ஊராகிய இலங்கை. (சு : 599)

பகைகள் மூன்று - காமம் வெகுளி மயக்கம் என்னும் முப்பகை. துறந்தரும் பகைகள் மூன்றுந் துடைத்தவர். (சு : 461)

பகைஞர் - பகைவர். பகைஞர் பெட்பினுதிரந் தோய் முகத்தது. (ஆ : 26)

பகை தீர்த்தல் - பகைமையைத் தீர்த்துக்கொள்ளுதல். சேறி சென்றுன் பழம்பகை திர்த்தி என்ருன். (யுத் : 2359)

பகை தேடிக் கொள்ளல் - பகைவரை வலியத் தேடிக்கொள்ளுதல். என்னையே நோக்கியான் இந் நெடும் பகை தேடிக் கொண்டேன். (யுத் . 3081)

பகைப்பது - பகைமை கொண்டு போர்செய்வது. பகைப்ப தெங்ஙனம். (கி : 257)

பகைப் புலஞ்சார்தல் - பகைவரிடத்தைச் சார்தல். நகைப்புலம் பொதுவுற நடந்து நாயக பகைப்புலஞ் சார்தலோ பழியின் நீங்குமோ. (யுத் : 371)

பகைப் புலத்தோர் - பகையிடத்தைச் சேர்ந்தவர். பகைப்புலத்தோர் துணையல்லர் என்றிவணைப் பற்றேமேல். (த்யு : 410)

பகைப்புலம் - பகைவரது தேயம். துணையில்லாதவர்க்கு இன்னு பகைப்புலம் தொலைத்து நீக்கல். (ஆ : 1192) [பா.பே]

பகைப்புலன் - 1. பகைவர் இடம். பகைப்புலன் அணுகி உய்த்தார் பகர்ந்தது பகர்ந்து. (சு : 1156)
2. பகையாகிய ஐந்து புலன்கள். தம்பகைப்புலன் மாசற மாய்ப்ப தென். (அ : 113)

பகைப்புலன்கள் ஐந்து - பகையாயுள்ள பஞ்சேந்திரியங்கள். தம் பகைப் புலன்கள் ஐந்தவிக்கும் பொங்கு மாதவம். (பா : 98)

பகை முடித்தல் - பகைவனைக் கொல்லுதல். அம்புக்கு முன்னஞ் சென்றுன் அரும்பகை முடிப்பன் என்று வெம்புற்ற மனம். (யுத் : 881)

பகைமேற் புகுதல் - ஒரு பகையின்மேற் போர் செய்யப் புகுதல். பூண்டொரு பகைமேற் புக்கென் புத்திரரோடும் போனார் மீண் டிலர். (யுத் ; 3181)

பகையடுந்திகிரி-பகைவரைக் கொல்லவல்ல ஆழிப்படை. மற்றைப் பகையடுந்திகிரி பற்றும் ஏகசாதனனும். (யுத் : 2516)

பகையாடுதல் - பகைவரை வெல்லுதல். (வை மு) பகையை உண் டாக்குதல். (அண்) காடு புகுந்துடனே பகையாடியவா பரிவேதுமிலேன். (யுத் : 2639)

2. பகைமை பாராட்டுதல். பகையாடிய வானவர் பல்வகையூர் புகையாடிய நாள்புனைவாகையினான். (யுத் : 1738)

பகையுற வருதல் - பகைவர் நெருங்க வருதல். பகையுற வருதலுந் துறந்த பண்பிது. (யுத் : 369)

பங்கம் - 1. போதாமையாகிய குறைவு. சொற் பங்கமுற நிமிர் இசையின் சும்மையை. (ஆ : 184)

2. குற்றம். பங்கமில் குணத்தெம்பி பரதன். (அ : 299)

3. அழுக்கு. மாசு. சோகபங்கம் துடைப்பரிது. (அ : 790)

4. தோல்வி. நங்குலத்துக் கொவ்வாப் பங்கம் வந்துற்ற தன்றிப் பழியும் வந்துற்ற தென்றான். (யுத் : 1233)

5. அழிவு. அல் பங்கமுற வரும் அருணன். (ஆ : 184)

6. சேறு. புகையினொடு பங்க முற்றனைய வினை. (கி : 42) [பா : பே]

பங்கமில் குணம் – குற்றமற்ற குணம். (அ : 299)

பங்கமுறல் - 1. குறைவடைதல். (அண்) தோல்வியடைதல். (கலா) சொற் பங்கமுற நிமிர் இசையின் சும்மையை. (ஆ . 184)

2. துண்டுபடல். தானையை வீற்று வீற்றுப் பங்கமுற நூறி. (யுத் . 1963)

பங்கயச் செல்வி . திருமகள். சீதேவி. தாமரை நீத்தெனப் பார் துறந்தனள் பங்கயச் செல்வியே. (அ : 811)

பங்கயத்த கானம் – தாமரைக்காடு. கந்த நாறு பங்கயத்த கானம். (பா : 108)

பங்கயத் தண்ணல் மீளாப்படை - தாமரை மலரில் வீற்றிருக்கும் பெரியோனுகிய பிரமதேவனது கொன்றன்றி மீளாத பிரமாஸ்திரம். (யுத் : 2795)

பங்கயத்தணங்கு - தாமரை மலரிலுள்ள திருமகள். பங்கயத் தணங்கைத் தந்த பாற்கடல். (பா : 1118)

பங்கயத்தயன் - திருமாலின் நாபிக் கமலத்தில் தோன்றிய பிரமன். பங்கயத்தயன் பண்டுதன் பாதத்தின் அங்கையில் தரும் கங்கையின் ஆடினுன். (அ : 633)

பங்கயத்தவள் - திருமகள். (கி : 805)

பங்கயத் திருந்த பொன் - தாமரை மலரில் தங்கிய திருமகள். பங்கயத் திருந்த பொன்னை ஆகத்தில் ஒருவன் வைத்தான். (ஆ : 635)

பங்கயத்துப் பரத்துவன் - தாமரை மலர் மாலையணிந்த பரத்துவாச முனிவன். எங்கள் நாயகற்கு இன்னமுதீகுவான் பங்கயத்துப் பரத்துவன் வேண்டலால். (யுத் : 4164)

பங்கயத்தொருவன் - பிரமன். பங்கயத் தொருவன் தானே பசும் பொனுற் படைத்ததம்மா. (சு : 741) (யுத் : 3997) (யுத் : 4297)

பங்கய நயனம் - தாமரை மலர் போன்ற விழிகள். பங்கய நயனத் தண்ணல். (யுத் : 710)

பங்கயம் - தாமரை. சேற்றில் முளைப்பது. [பங்கஜம்] அரிமலர்ப் பங்கயத் தன்னம். (கி : 8)

பங்கய ராசி - தாமரை மலர்க்கூட்டம். பாவைமார் முகமென்ன முன்ன மலர்ந்த பங்கயராசியே. (அ : 247)

பங்கயவனம் - தாமரைக்காடு. பாங்கு வெங்கனல் பங்கய வனங்களாய்ப் பரந்த. (அ : 728)

பங்கன் - பக்கத்திலே கொண்டவன். பிணையொன்று கண்ணுள் பங்கன். (யுத் : 1377)

பங்கி - 1. தலை மயிர். குடுமி. மயிர் முடி. (ஆண்மயிர்) கள்ளுறக் கனிந்த பங்கி அரக்கர். (சு:123) மயிர்ப் பங்கியான். (யுத்:1285) மின்திரண்டனைய பங்கி விராதன். (ஆ : 870)

2. வகை. நீதி. வாணி முந்தின பங்கி அம்பரமெங்கும் விம்மின. (அ : 245)

பங்கு - 1. முடத்தன்மை. நொண்டியானது. ஒருத் தலைப்பாரத் தொருத்தலைப் பங்குவின் ஊர்தி எருத்து. (அ : 66)

2. பக்கம் - பங்குபெற்றொளிர் பதுமாராகத்தொளி. (கி : 21)

பங்குவின் ஊர்தி எருத்து - முடத்தன்மையுடைய வண்டியிற் பூட்டப் பட்ட எருது. (அ : 66)

பங்குனி - பங்குனி மாதம். (பா : 1344) (சு : 185)

பங்குனி உத்தரம் - பங்குனித் திங்களில் கூடும் உத்தர நட்சத்திரம். பங்குனி உத்தரமான பகற் போது. (பா : 1344)

பங்குனி மலர்ந்தொளிர் பலாசவனம் - பங்குனி மாதத்தில் மலர்ந்து விளங்குகின்ற புரசமரக்காடு. புரசம்பூ செந்நிற முடையது. பங்குனி மாதத்தில் புரச மரத்தின் இலைகளெல்லாம் உதிர்ந்து சிவந்த மலர் மயமாகவே காணப்படும். பங்குனி மலர்ந்தொளிர் பலாசவன மொப்பார். (சு : 185)

பச்சிமம் - மேற்கு. பின்புறம். பச்சிமத்தினும் முகத்தினும் மருங் கினும் பகழி உமிழ. (யுத் : 2463)

பச்சிரத்தம் - புதிதாக வரும் இரத்தம். பச்சிரத்தம் வந்தொழுகிட. (சு : 1019) பச்சிரத்தம் பொழிதல் வீர வெகுளியின் மெய்ப்பாடு. (யுத் : 40)

பச்சிலை - 1. தமாலம் என்னும் மரம். பச்சிலை கண்டில் வெண்ணெய். (பா : 24)

2. பசிய இலை. பச்சிலை வண்ணமும் பவளவாயுமாய்க் கைச் சிலை ஏந்தி நின்றதனைக் கண்ணுற்றாள். (யுத் : 3977) பச்சிலைத் தாமரை. (சு : 537)

பச்சை - 1. இளமை. இளைஞர். பச்சை யாமெனப் பயமனத் துண்டென வாழுங் கொச்சை மாந்தர். (ஆ : 509)

2. பசுமை. பச்சை மேனி. (சு : 1141)

பச்சைத் தேரை - பச்சைத்தவளை. பச்சைத் தேரை தாராட்டும் பண்ணை. (பா : 44)

பச்சைமலை ஒத்தபடிவம் - பசிய நிறத்தையுடைய மலைபோன்ற வடி வம். பச்சை மலை ஒத்தபடிவத் தடவிராமன். (பா : 1237)

பச்சைமா ஏழு-(சூரிய னுடைய) பசுமை நிறமுடைய குதிரைகள் ஏழு. மால்வரைப்பாழி மாமுகட்டுச்சிப் பச்சைமா ஏழும் ஏறப் போய் ஆறும் ஏறினர். (பா : 340)

பச்சை மேனி - பசுமையான உடல். பச்சை மேனி புலர்ந்து பழி படூஉம் கொச்சை ஆண்மை. (சு : 1141)

பச்சையம் புரவித் தேர் - அழகிய பச்சைக் குதிரைகள் பூண்ட தேர். பச்சையம் புரவித் தேரதால். (ஆ : 690)

பச்சைவெம்புரவி - கொடிய பச்சைக் குதிரைகள். பச்சை வெம் புரவி வீயா. (யுத் : 3110)

பசந்தனர் - நிறம் வேறுபட்டனர். (ஆ : 547a)

பசப்பு - பசுமை நிறம். பசலை நோய். உன்னிறம் பசப்புற. (சு:366)

பசலை - பசுமை நிறம். பசப்பு. ஆசை நோய் காரணமாக மகளிர்க்கு வரும் பச்சை நிறம். விற்றங்கு புருவம் நெற்றி வியர்வரப் பசலை விம்ம. (பா : 1160) பசலை வானகம். (அ : 537)

பசலை பூத்தல் - பசலை தோன்றுதல். புருவத்தார் மேனியெல்லாம் பொன்னிறப் பசலைபூத்த. (யுத் : 4288)

பசலை வானகம் - பச்சை நிற முள்ள வானம்; இருண்ட வானம். (அ : 537)

பசி - பசி. மென்று தின்று விளியாது விரியும் பசி. (ஆ : 11) இருந்து பசியால் இடர் உழந்தவர்கள். (சு : 558)

பசித்தழல் - பசியாகிய தீ. இடந்தன மூளைகள் இனிதினுண்டன கடந்தன பசித்தழல் கரடி காதுவ. (யுத் : 1999)

பசிப்பிழை - பசித்துன்பம். பெண்பாலொருநீ பசிப்பிழை யொறுக்க நொந்தாய். (சு : 69)

பசியுழத்தல் - பசியினால் வருந்துதல். தாய் பசி யுழந்துயிர் தளர. (அ : 893)

பசு - பசு பசுப்போல்பவன். வீடணப்பசு. (யுத் : 3528) பசுவாய் வழிதோறும் மேய்வுற்றார். (சு : 969)

பசுங்கண் - 1. ஊனக்கண். பராவமுதைப் பசுங் கண்ணின் நோக்கினர். (அ : 628)

2. தம் நோக்குக்கு இலக்காயினாரைக் குளிர்விக்க வல்ல கண். (அண்) (அ : 628)

பசுங்கண் மாரி - பசுமையான கண்ணீர் மழை. படியடங்கலு நிமிர் பசுங்கண் மாரியால்பொடி யடங்கின. (அ : 496)

பசுங்கதிர் - குளிர்ச்சியான கிரணங்களையுடைய சந்திரன். விசுறு பசுங்கதிர்க் கற்றை வெண்ணிலா. (சு : 154)

பசுங்கல் - கருங்கல். அம்மி. அரைக்குங்கல். (வை.மு) கருங்கல் உரல். (கலா) பள்ளியரவிற் பேருலகம் பசுங்கல்லாக. (யுத் : 10)

பசுங்கழற்கண் - பசிய கழற்சிக்காய் போன்ற கண். பசுங்கழற் கண்ண பேயும். (யுத் : 1910)

பசுங்காய் - முற்றாத பச்சைக்காய். கழல் இளம் பசுங்காய். (யுத் : 2152)

பசுங்காற்று - இளங்காற்று. தூய பொற் கவரித் திரள் இயக்கிடச் சுழிபடு பசுங்காற்றின் மீய கற்பகத் தேன்துளி விராயன. (சு : 303)

பசுங்குருதி - புதிய இரத்தம். பசும் பெருங் குருதியாய். (யுத்:1912)

பசும் குழவி - இளங் குழந்தைகள். சிவந்த வாய்ச்சியர் கைம் மறந்தன பசுங்குழவி. (அ : 509)

பசுஞ்சுடர் - பசிய ஒளி. கோடைப் பரிதியின் நடு வட்டோன்றும் பசுஞ்சுடர் மேகம். (யுத் : 2385)

பசுந்தலை - புதிய தலை. பசுந்தலை கொணர்திர் பாரித்து. (யுத்:1609)

பசுந்தேறல் - பசிய தேன். பாம்பு நான் றெனப் பாய் பசுத் தேறலே. (பா : 66)

பசுநறு - புதிய மது. ஆக்கிய அமிழ் தென அம்பொன் வள்ளத்து வாக்கிய பசுநறு. (பா : 1052)

பசு நறுந்தேறல் - 1. புதிய மணமுள்ள மதுத் தெளிவு. பளிக்கு வள்ளத்து வார்த்த பசு நறுத் தேறன் மாந்தி (பா : 578)
2. பசுமையான தேன் போன்ற சாறு. பாய்ந்த சூதப் பசுநறுந் தேறலால் சாய்ந் தொசிந்து முளைத்தன சாலியே. (அ : 813)

பசுநிறக்கிளி - பச்சைக் கிளிகள். பஞ்சரத்தொடு பசுநிறக் கிளிகள் வெந்து பதைப்ப. (சு : 1209)

பசும் படுகுருதி - புதிதாக வெளிப்பட்ட பசியகுருதி. (யுத் : 1765)

பசும் பரி - பச்சைக் குதிரை. பருதி வானவன் பசும்பரி புரைவன பாராய். (அ : 739)

பசும் பாகு - புதிய தாம்பூல சாரம் - சிந்துரப் பவளச் செவ்வாய்த் தேம்பசும் பாகுதிற்றி. (யுத் : 3966)

பசும் புகைப்படலம் - பசிய புகைப்படலம். பரிய காரகில் சுடநிமிர் பசும் புகைப்படலம் (அ : 754)

பசும் புடைச்சோலை - புடை பசும் சோலை. பக்கங்களில் பசுமையான சோலை. பசும் புடைச் சோலைத் தாங்கோர் பவளமால் வரை. (சு : 90)

பசும் புண் - புதுப் புண். சில பசும் புண்கள் அசும்பு ஊற. (சு : 304)

பசும் புணின் நீர் - பச்சைப் புண்ணிலிருந்து வெளிவரும் உதிரம். பசும் புணின் நீரும் வாரியதனை நிறைத்ததே. (யுத் : 1023)

பசும் புல் - பசிய புல். நெடு நில மடந்தை புறமயிர்த்தலம் பொடித்தன போன்றன பசும்புல். (கி : 486)

பசும் புலால் - புதுப் புலால். பசும் புலால் நாறும் வேலை பரிமளங் கமழ்ந்த தன்றே. (யுத் : 636)

பசும் புனல் - 1. பசுமையான நிறத்தை யுடைய நீர். பசும் புனல் பெரும்பரவை. (யுத் : 3774)

2. புதிய குருதி. புண்ணின் மீச்சென்ற பொழிபுலால் பசும் புனல் பொறிப்ப. (சு : 1031) (யுத் : 219)

பசும் பொற்பள்ளி - பசிய பொன்னாற் செய்யப்பட்டுள்ள படுக்கை. வெள்ளி வெண்மாடத் தும்பர் வெயில் விரி பசும்பொற் பள்ளி. (பா : 39)

பசும் பொன் - உயர்ந்த பொன். பசும் பொன்னுட்டவர். (யுத் : 2559)

பசும் பொன் மானம் - பசிய பொன்னாற் செய்யப்பட்ட விமானங்கள். வெயிலுக விளங்கும் பசும்பொன் மானங்கள் போவன வருவன பாராய். (சு : 772)

பசும் பொன்னுட்டவர் - பசிய பொன்னுட்டிலிருப்பவர்களாகிய தேவர்கள். (யுத் : 2559)

பசுமை - 1. புதுமை. பசு நறுந்தேறல். (பா : 578) பசும் புனல். (சு : 1031) பசுங்குருதி. (யுத் : 1573)

2. குளிர்ச்சி. பசும் பனி. (ஆ : 658) பசுங்கதிர். (சு : 151)

பசுவின் பாகன் - ஆன்மாவின் அருகில் இருக்கின்ற பசுபதி யாகிய சிவ பிரான். பங்கயத் தொரு வனும் பசுவின் பாகனும். (யுத் : 3996)

பசு வெண்டிங்கள் - வெண்ணிற முள்ள இளைய பிறைச் சந்திரன். மாலுறு குடக வானின் வயங்கிய வந்து தோன்றும் பாலுறு பசுவெண்திங்கள். (யுத் : 710)

பசை - 1. பற்று. அன்பு. பசையில் தங்கலில் சிந்தையர் பல்லோர். (யுத் : 221) பசைந்த சிந்தை. (அ : 1179)
2. இரக்கம். (உ.வி) பசையில் தங்கலில் சிந்தை (யுத் : 221)
3. ஈரம். பருதி வானவன் நிலம் பசையறப் பருகுவான். (பா : 346)
4. சாரம். பசை நறவு. (அ : 622)

பசைந்த சிந்தை - அன்பு கொண்ட மனம். (அ : 1179)

பசை நறவு - பசுந் தேன். சாரமான தேன். (அ : 622)

பசையில் தங்கலில் சிந்தையர் - இரக்கத்திற் பொருந்துத லில்லாத வலிய நெஞ்சத்தினர். (அசுரர்) (யுத் : 221)

பஞ்சடி - செம்பஞ்சுக் குழம்பு பூசிய அடி. ஒருத்தன் மேல் ஒருத்தி பஞ்சடி உதைத்தலும் பொடித்தன உரோம ராசியே.(பா:1082)

பஞ்சணி விரலினர் - செம்பஞ்சுக் குழம்பை அணிந்த விரல்களை யுடைய பெண்கள். (பா : 1157) [பா : பே]

பஞ்சணை - பஞ்சு மெத்தை. பஞ்சணை பாம்பணையாகப் பள்ளிசேர் அஞ்சன வண்ணனே இராமனுதலால், (ஆ : 954)

பஞ்சதாரை - சர்க்கரை. பாரமுதருந்தப் பஞ்ச தாரை யாய்ச் செய்தான். (பாயி : 12)

பஞ்ச பாதகர் - ஐந்து கொடுஞ் செயல் புரிந்தவர். பஞ்ச பாதக ரேனுஞ் சாரிற் பெருக்கிய ஏழுமூன்று பிறவியும் பிணிகள் நீங்கி. (யுத் : 4091)

பஞ்சம் - கருப்பு. பஞ்சகாலம். பஞ்சமுறு நாளில் வறியோர்களையும் ஒத்தனர். (யுத் : 3402)

பஞ்சமம் - பஞ்சமம் என்னும் ஸ்வரம். அஞ்சலின் சுவை யரம்பைய ரோடும் பஞ்சமஞ் சிவனும் இன்னிசை பாட. (யுத் : 817)

பஞ்சமிப் பெயர் படைத்துளதிதி - பஞ்சமி என்னும் பெயர் கொண்ட திதி. பஞ்சமிப் பெயர் படைத்துள திதி இன்று பயந்த. (யுத் : 4060)

பஞ்சரக் கிளி - கூட்டுக் கிளி. வஞ்சகக் கொடிய பூசை நெடு வாயில் மறுகும் பஞ்சரக் கிளி எனக் கதறு பாவையை விடா. (ஆ : 25)

பஞ்சரங்குதீ - பஞ்சு அழிதற்குக் காரணமான தீ. பஞ்சுக்கூட்டத்தை அழிக்கும் அக்கினி. பஞ்சரங்கு தீயின் ஆவிபற்ற. (பா : 798)

பஞ்சரம் - 1. கூடு, பறவைக்கூடு. பஞ்சரத் திருந்தழும் கிளியிற் பன்னினர். (அ : 491) (ஆ : 25)

2. அம்புக் கூடு. வஞ்சன் மேனியை வார்கணை அட்டிய பஞ்சரம் எனலாம் வகை பண்ணினன். (யுத் : 3835)

பஞ்சவடி - ஐந்து ஆல மரங்களையுடைய இடம். (வடம்-வடி) பனிதரு படிவப் பஞ்சவடியெனும் பருவச் சோலைத் தனியிடம். (ஆ : 231)

பஞ்சளாவிய சீறடி - செம்பஞ்சு ஊட்டிய சிறிய அடிகள். விஞ்சை நாடியர்...... பஞ்சளாவிய சீறடிச் சுவடுகள் பாரார்ய். (அ : 756)

பஞ்சானனம் - சிங்கம். வெஞ்சாயை யுடைக் கதிர் அங்கதன் மீயும் பாயும் பஞ்சானனம் ஒத்தது. (பா : 963)

பஞ்சி - 1. செம்பஞ்சுக் குழம்பு, பஞ்சு. பஞ்சி வான் மதியை ஊட்டிய அனைய படர் உகிர். (பா : 102) பஞ்சி போர்த்த, (கி : 488)

2. பஞ்சித்திரி. வியன் கருப்பூர மென் பஞ்சி மீக்கொளீஇ. (ஆ : 577)

3. பஞ்சு. பஞ்சி எரியுற்றென வெந்தழிவர். (யுத் : 3410)

பஞ்சி சூழ் மெல்லடி - செம்பஞ்சணிந்த மெல்லிய அடிகள். பஞ்சி சூழ் மெல்லடிப் பாவைமார் பண்ணைசூழ். (பா : 1145)

பஞ்சி மெல்லடிப் பாவை - செம் பஞ்சுக் குழம்பு ஊட்டிய மென்மைத் தன்மை வாய்ந்த அடிகளையுடைய பாவை போல்பவளாகிய சீதாபிராட்டி. பஞ்சி மெல்லடிப் பாவையு மாடினள். (அ : 637)

பஞ்சியங் கமலம்பூத்த பசுஞ்சுவடு - செம்பஞ் சூட்டிய அடித்தாமரைகள் படுதலாலுண்டான மெல்லிய அடித்தடம். பஞ்சியங் கமலம் பூத்த பசுஞ் சுவடுடைத்து மன்னே. (பா : 935)

பஞ்சி யூட்டுதல் - செம் பஞ்சுக் குழம்பு ஊட்டப்படுதல். பஞ்சியூட்டிய பரட்டிசைக் கிண்கிணிப் பதுமம். (சு : 99)

பஞ்சிவர் விரல் - செம்பஞ்சுக் குழம்பு படர்ந்த விரல். பஞ்சிவர் விரலினர். (பா : 1157)

பஞ்சின்றிப் பழுத்த பாதம் - செம்பஞ்சு ஊட்டப்பெருமல் இயற்கையாகவே சிவந்துள்ள பாதம். (பா : 1215)

பஞ்சின்றி அமுத நெய் மாட்டிய விளக்கே - திரியில்லாமல் அமுதமாகிய நெய் பெய்து ஏற்றிய விளக்குப் போல்பவளே. (அ : 751)

பஞ்சு - 1. செம்பஞ்சு. பஞ்சிவர் விரலினர். (பா : 1157)
2. செம்பஞ்சுக் குழம்பு. பஞ்சினை அணிவார். (அ : 249) பஞ்செனச் சிவக்கும் மென்கால் தேவி. (யுத் : 432)
3. ஆடை. வெண்ணூற் பஞ்சிடைப் படுத்தாலன்ன வெண்ணிலா. (அ : 582)
4. திரி. வீறு பஞ்சின்றி அமுதநெய் மாட்டிய விளக்கே, (அ : 751)
5. பஞ்சு. பஞ்சுப்பொறி. கன்லின் வீழ்ந்த பஞ்சு. (யுத் : 3316) பஞ்செரி யுற்றதென்ன. (யுத் : 3197)

பஞ்சு பட்டது படல் - (காற்றில் அகப்பட்ட) பஞ்சு போல் நிலை கெடல். வயங்குகிரி வாத விதையிற் பஞ்சு பட்டது படப் படியின் மேல் முடுகியே. (ஆ : 7)

பஞ்சு பூத்த விரல் - செம் பஞ்சுக் குழம்பு விளங்கிய விரல். பஞ்சு பூத்த விரற் பதுமம் பூத்த அடியாள். (கி : 32)

பஞ்செனச் சிவக்கும் மென் கால் - செம்பஞ்சுக் குழம்பு ஊட்ட வேண்டு மென்று சொன்னாலும் அதனையும் பொருமற் சிவந்து போகுந்தன்மை யுள்ள திருவடிகள். பஞ்செனச் சிவக்கும் மென் கால் தேவி. (யுத் : 432)

பஞ்செனச் சிவக்கும் மென்பாதம் - பஞ்சு என்று சொன்னவுடனே அது உறுத்துமே என்றஞ்சிச் சிவக்கும் மெல்லிய பாதங்கள். பஞ்செனச் சிவக்கும் மென்பாதப் பேதையர் அஞ்சனக்கண். (கி : 556)

பட்ட - அனுபவித்த. முன்பு தாம் பட்ட வான் படரொழிந்து. (யுத் : 4247)

பட்ட தன்மை யுணர்தல் - முன்பு நிகழ்ந்த தன்மையை உணர்தல். (பூர்வ ஜன்ம ஞானம்பெறல்) பட்ட தன்மையுமுணர்ந்து. (ஆ:46)

பட்ட பட்ட விடம் - பட்ட பட்ட இடங்கள். மெய்யின் விசையாற் பட்ட பட்ட இட மெங்கும் உடலூறு படலும். (ஆ : 30)

பட்டம் - 1. நீரோடை. (கலா)

2. நீர்க்கரை. (வை.மு)

3. நாற்றங்கால். (அண்) பட்ட மென் கமுகு ஓங்கு படப்பை போய். (பா : 57)

4. நீர் நிலை. (அண்)

5. நெற்றியணி. பட்டவாணுதல் மடந்தையர். (பா : 542)

6. வீரபட்டம். அளவறு செஞ்சுடர்ப்பட்ட மார்த்தனன். (யுத் : 1077)

7. வழி.

பட்ட வாணுதல் - நெற்றியணியை யுடைய ஒளி பொருந்திய நுதல். பட்ட வாணுதல் மடந்தையர். (பா : 542)

பட்டழிதல் - இறத்தல். பட்டான் கொல் அதன்றெனிற் பட்டழிந் தான் கொல். (யுத் : 1954)

பட்டறுதல் – இறந்தொழிதல். பாழி வன் புயத் திகல் வயவர் பட்டற. (அ : 1101)

பட்டன பட்டன - மிகவும் இறந்தன. விட்டன விட்டன விடுகணை விடுதொறும் பட்டன பட்டன படர் மத கரிபல. (யுத் : 1813)

பட்டனன் பட்டனன் - இறந்தான் இறந்தான். பட்டனன் பட்டனன் என்று பார்த்தவர் விட்டு லம்பிட நெடு விசும்பிற் சேறலும். (யுத் : 1478)

பட்டிகை - அரைப்பட்டிகை என்னும் அணி. அரைக்கச்சை முத்தின் பத்திவான் தொகைவரி பட்டிகைச் சுடரும் சுற்றிட. (பா : 1309)

பட்டிடுதல் - இறத்தல். அவர் வெல்லப் பட்டிடுதுமேல் அதுவும் நன்று. (யுத் : 65)

பட்டி மண்டபம் - 1. சாத்திர அறிஞர் கூடும் மண்டபம். பன்னருங் கலை தெரி பட்டி மண்டபம். (பா : 154)

2. புலவர் சொற்போர் நிகழ்த்து மிடங்கள். பாடல் வேதிகை

பட்டி மண்டபம். (சு : 228)

பட்டொழிதல் - உயி ரொழிந்தழிதல். கட்ட மானிடன் கொல்ல என் காதலன் பட்டொழிந்தனனே எனும். (யுத் : 3158)

பட - பொருந்த. அதிதியரை எதிர் கொள் பரிசு பட. (யுத்:3419)

படகம் . தம்பட்டம். இசைக் கருவி. ஒருவகைப் போர்ப்பறை. படகம் புடைத்திட. (யுத் : 1061)

படங்கொள் நாகம் - படத்தையுடைய பாம்பு. (அ : 772. b)

படங்கொள் பாம்பு - படத்தைக் கொண்டுள்ள பாம்பு. படங்கொள் பாம்பணை துறந்தவற்கினியவன். (யுத் : 2467)

படப்பட - படுந் தொறும் படுந் தொறும். படப்படத் துணிந்தன அனந்தம். (யுத் : 1469)

படம் - 1. திரைச்சீலை. நங்கை மார் முகம் படந்திறந் தொருவலிற் பொலியும் பான்மை போல். (கி : 552)

2. கொடி. தூசினெடு வெண்பட முடைக்குடில்கள் தோறும். (பா : 915)

3. பாம்பின் படம். படங்கொள் பாம்பணை. (யுத் : 2467) படந் தாழ் அரவை. (சு : 598)

படமாடம் - கூடாரம். வாளெழ நிரைத்தபட மாடமவை புக்கார். (பா : 914)

படர் - 1. துன்பம். படருழந் துருத நோயுறுவாள். (சு : 346) பட்டவான் படர். (யுத் : 4247)

2. படைவீரர். [படர்] படரெலாம் படப்படும் பருமயானையின் திடரெலாம் உருட்டின. (அ : 1096) படர் கிடந்தனர் பல்படைக் கையினர். (யுத் : 2089)

3. பரந்த. பரிய மாமதிலும் படர் வாயிலும். (கி : 602)

4. நெருக்கமான. மரன்படர் வனம். (யுத் : 66)

படர் உறல் . தொடர்ந்து வருதல். படருற உளன் உம்பி. (அ:687)

படர் சிறை வண்டு - பரவிய சிறகுகளையுடைய வண்டுகள். படர் சிறை வண்டிரிந்தன. (யுத் :;970)

படர் சினம் - மிக்க கோபம். பண்ணுறு படர்சினப் பருமயானையான். (அ : 2)

படர்த்தல் - செலுத்தல். படரும்படி செய்தல். ஒரு குன்று படர்த்தினனுல். (யுத் : 2340)

படர்தல் - 1. சூழ்ந்து செல்லுதல். பற்பல மங்கையர் படர. (சு : 409) [பா : பே]
2. பருத்தல். படர் புயம். (ஆ : 35)
3. செல்லுதல். படர் மழை. (யுத் : 441) யாம் படர் நெறியலா நெறி. (ஆ : 129) படர்வர். (யுத் : 547)
4. சேர்தல். வருதல். பாதகர் நம் வயிற் படர்வரா மெனில். (யுத் : 381)
5. பரவுதல்- படர் கணை. (பா:495) மரம் படர்கானம். (ஆ:429)
6. அகலமாயிருத்தல். படர்ந் தொளி பரந்துயிர் பருகுமாகமும். (பா : 620) படர் செவிப் பாழியான். (யுத் : 128)
7. ஒளி வீசுதல். படருகிர் பங்கயச் செங்கால். (பா : 102)
8. தொடர்தல். கௌசிகி தரிக்கலாற்ருள் மீதுரப் படரலுற்ருள். (பா : 432)
9. மிகுதல். சரம்படர் புட்டில். (ஆ : 429) பழிபடர் மன்னவன். (பா : 361)
10. அடைதல். ஒட்டிப் படர்ந்த தண்டகம் இவ்வுலகத் துளதன்றே. (அ : 611)
11. ஓடுதல். நீங்குதல். பனிபடர் காடுடன் படர்தல் மெய் யென்ருன். (அ : 1194)
12. உயர்ந்து வளர்தல். (வை. மு) பாடலம்படர் கோங்கொடும். (சு : 717)
13. விரிதல். படர் செவி. (யுத் : 1287)
14. ஏறுதல். மானமீப் படர்ந்தான். (யுத் : 4067)
15. கிளைத்து நீளுதல். படர்பணை குவிவன. (யுத் : 1813)

படர் நீர் - பரவிய கடல் நீர். (யுத் : 3624)

படர் பங்கயம் - படர்ந்துள்ள தாமரைக்கொடி. படர் பங்கய நன்னீர் அன்னந் துயில்வதி தண்டலை. (அ : 624) [பா : பே]

படர்பணை - கிளைத்து நீண்டதந்தங்கள். (யுத் : 1813)

படர் பந்தி - பெரிய வரிசை. பன்னந் துகு தாளந் தொகு படர் பந்திகள் படுநீர். (அ : 624)

படர் மழை - வானத்திற் சஞ்சரிக்குந் தன்மையுள்ள மேகம். படர் மழை சுமந்த காலைப் பகர்வரும் அமரர் கோமான் அடர்சிலை துறந்த தென்ன ஆரந் திர் மார்பினானை. (யுத் : 441)

படர்வான் - விரிந்த விண்ணுலகம். பண்ணும் பரிமாவுடையாய் அடைவாய் படர்வான் என்று. (அ : 381)

படருறுதல் - படர் உறல் பார்க்க.

படலொம் படைத்தாள் - துன்பங்களை யெல்லாம் தோற்றுவித்தவள். படரெலாம் படைத்தாளைப் பழி வளர்க்குஞ் செவிலியை. (அ:1061)

படல் - படுதல். இறத்தல். சிலர் சிலரிடிப்புண்டுப் பட்டார். (சு : 785)

படலம் - தொகுதி. புகைப் படலம். திக்கெலாம் துன்றிய பெரும் புகைப் படலஞ் சுற்றலால். (யுத் : 570)

படலை - 1. தொகுதி. கூட்டம். கொடிப் படலை. (பா : 827) மூடின திருட் படலை. (ஆ : 605)

2. திரள். தூளியின் படலை வந்து தொடர்வுற மரமுந் தூறும். (ஆ : 426)

3. படலம். படல். பொறிப் பிதிர் படலைச் செந்தீ. (ஆ : 1015)

4. புகைப்படலம். கரையில் நுண்புகைப் படலையிற் கரந்தனர். (சு : 1210)

5. பரப்பு. (வை.மு) தேக்கிலைப்படலையாற் செறிவு செய்து. (அ : 781)

படாமுகமலை - நெற்றிப்பட்டத்தை யணிந்த முகத்தினையுடைய மலை; யானை. வேந்தர் வேந்தன் படாமுக மலையிற் றேன்றி.(பா.1114)

படி - 1. தன்மை. பண்பு. பரவு நல்லொழுக்கின்படி பூண்டது. (பா : 23) யான் பட்டபடி இதுகாண். (ஆ : 339) பாம் பெனும் படிய; மலையன்ன படிய. (யுத் : 3783) (யுத் : 748)

2. நெறி. பிறவிக் கடல் கடக்கும்படி பயிற்றி. (ஆ : 52)

3. பூமி - நிலம். தரை. படியின்மேல் வைம்மையைப் பகரினும் பகரு நா முடிய வேம். (பா : 347) மாப்படி. (யுத் : 503) அப்படி இப்படியிற் செய. (யுத் : 1726)

4. உவமானம். ஒப்பு. ஒத்த பிறிதொன்று. படியிலாள். (ஆ:314) படியெடுத்துரைத்துக் காட்டும் படித்தன்று. (சு : 527) கற்படி வயிரத்தின் கல். (யுத் : 791) படியுரைத் தெடுத்துக் காட்டும்

படித்தன்று. (சு : 527) [பா : பே] பரிதிப்படி பொலிவுற்றதை. (யுத் : 3012)

5. நிலைமை. படி இனதாதலின். (யுத் : 2736)

6. தலைமுறை. இருபத் தொரு படிகால். (பா : 1361)

7. முறை. அவனும் உற்ற படி யெலாங் கேட்டு நெஞ்சிற் பரு வர லுழந்தான். (அ : 585)

8. வடிவம். உருவம். தனி ஐங்கரக்கரியும் கொலை யஞ்சுதல் புரிகின்றது கரியின்படி கொளலால். (யுத் : 1830)

படி இட்டு - கீழே தள்ளி. முடிப்பத்திகளைப் படி இட்டு. (ஆ : 919)

படி ஏழு - ஏழுலகம். படியேழும் நெடுந்துயர் பாவிடவும். (சு : 497)

படிகத்தின் தலம் - படிகத்தால் இயன்ற தலம். படிகத்தின் தல மென்றெண்ணிப் படர்சுனை முடுகிப்புக்க... முகத்தினர்.(பா.945)

படிக மாலை - பளிங்கு மணி மாலை. புத்தகம் படிக மாலை குண்டிகை (பாயி : 32)

படிகாரர் - வாயிற்படி காப்போர். படிகாரிர் எம் வரவு சொல்லுதிர் மன்னவற்கே என்றார். படிகாரிர் - விளி. (அ : 793)

படிகாரன் - வாயில் காப்போன். [பிரதிஹாரன்] வேத்திரம் பற்று மங்கையினன் படிகாரன். (யுத் : 744)

படிகாரிர் - வாயில் காப்பவர்களே. (அ : 793)

படிகால் - ஏணிக் கால். (படிக்கால்) ஊர்புக அமைத்த படிகால் கொல். (சு : 161) [பா : பே]

படிகை - 1. அம்பாரி. பருமமும் முதுகிடு படிகையும். (யுத் : 1808)

2. தவிசு. (அண்) (யுத் : 1808)

3. படிந்த இறுக்குவார். (உ. வி) (யுத் : 1808)

படி சுமந்த பாம்பு - பூமியைச் சுமக்கின்ற ஆதிசேடன். (யுத் : 4003)

படித்தல் - 1. பொருந்திப் பாடுதல். பாணியின் அளந்து இசை படிக்கின்றனென. (ஆ : 833)

2. சொல்லுதல். சொல்லும் போய் நீருமென்னப் படித்தனன். (சு : 1271)

3. பழகுதல். படித்தேனன்றே பொய்ம்மை. (யுத் : 2612)

படித்தலம் - பூமி முழுவதும். படித்தலம் காவலன் பெயரற் பாலரோ. (அ : 883)

படித்தன்று - தன்மையுடைய தன்று. படியுரைத் தெடுத்துக் காட்டும் படித்தன்று. (சு : 527)

படிதல் - 1. முழ்குதல். தோய்தல். நிருபற் கேந்தலும் தூய நற் புனல் படீஇ. (பா : 264)

2. தங்குதல் - பொருந்துதல். கட்படி கோதையை நாடினர். (ஆ : 1071) விற்படி திரள் தோள் வீரன். (யுத் : 792) கற்படி வயிரத்தின்கால். (யுத் : 792)

3. பரவுதல். மீள வெந்துயர் இருளின் வெள்ளம் படிந்தது. (யுத் : 2840)

4. அடங்கிக் கிடத்தல். உட்படி கோபம். (ஆ : 1071)

5. தாழ்தல். பருவமேகம் படிந்தது போற்படிந்து. (பா : 1190)

6. கிடந்துறங்குதல். பங்கய முகிழ்த்தன எனச் சிலர் படிந்தார். (அ : 547)

7. அடங்கிப் போதல். பழுதடையாக் காமிப்பது முடிவிப்பது படிகின்றது கண்டான். (யுத் : 3037)

8. படிந்து நிற்றல். அற்படி நிறம். (யுத் : 791)

9. விழுதல். கொடி யொடு கொடுஞ்சினப் புரவி கூட்டறப் படிந்தன. (ஆ : 484)

10. செறிதல். அற்படி நிறத்த வேனும். (யுத் : 792)

11. தோன்றுதல். ஒள்வாள் இழை படிந்த வெண்ணிலவு ஈன. (யுத் : 812)

படிப்பது - உச்சரிப்பது. கூறுவது. பற்றறப் படிப்பதன்னுன் பேர் என்பான். (பா : 435)

படி பூணுதல் - தன்மையுடைய தாதல். பரவு நல்லொழுக்கின்படி பூண்டது. (பா : 23)

படிமக் கண்ணடி - வடிவம் பார்க்கும் கண்ணடி. (அ : 26)

படிமக் கூத்து - இன்னவாறு ஆட வேண்டும் என்னும் மாதிரிக் கூத்து. அபிநயக் கூத்து. மடக்கோவில்லா வார்படிமக் கூத்தமை விப்பான் நடக்கால் காட்டும் கண்ணுளர். (யுத் : 3553)

படிமம் - உடலம். உருவம். [பிரதிமா] (யுத் : 3553)

படி முறை மாறல் - நிலைமைக் கேற்றவறு முறையே மாறி மாறித் தோன்றுதல். பானலுண் கண்ணும் வண்ணப் படி முறை மாற. (சு : 278)

படிமேற் புரளுதல் - துயரத்தால் தரைமேற் புரளுதல். புண் தாங்கு நெஞ்சத்தினளாய்ப் படிமேற் புரண்டாள். (அ : 436)

படிமை - தன்மை. ஒருவர் மும்மடி இராவணன் எனும் படிமை யோர். (யுத் : 3408)

படியகத்து - தரையில். பொன் துன்னும்படியகத்து. (ஆ : 338)

படியிலாள் - ஒப்பில்லாத அழகி. படியிலாள் மருங்குள்ளளவும் எனை அவன் பாரான். (ஆ: 314)

படியுறப் புரளுதல் - தரையிலே கிடந்து புரளுதல். பேரரா இடி யுறத் துவளுவ தென்னும் இன்னலன் படியுறப் புரண்டனன் பலவும் பன்னினுன். (அ : 556)

படியுறுதல் - அமைதல். குஞ்சரம் படியுறு பதாகை மீது. (ஆ:415)

படிவந் தீட்டும் பலகை - வடிவம் எழுதற் குரிய சித்திரப்பலகை. படிவந் தீட்டும் ஐய நுண் பலகை. (கி : 782)

படிவம் - 1. வடிவம். பாதங்கள் இவையென்னிற் படிவங்கள் படிவங்கள் எப்படியோ. (ஆ : 48)

2. உடலுறுப்பு. பல் கலன் பிறவுமப் படிவமானவே. (கி:200)

3. தோற்றம். பார் குலாம் முழுவெண் திங்கள் பகல் வந்த படிவம் போலும் ஏர் குலாம் முகத்தினுள். (கி : 615)

4. உடம்பு. பன்னு தொல்லறப் படிவ நோக்கினுன். (அ : 914)

5. பேருருவம். பண்டை நூல் கதிரோன் சொல்லப் படித்தனன் படிவம். (கி : 75)

6. வடிவழகு. உருப்படிவம் மன்மதனை ஒந்துளரே யாயினும். (ஆ : 329)

படிவளர் குழி - பூமியில் வளர்கின்ற குழி. படிவளர் குழியினுள்ள... மள்ளர் கொள்வார். (பா : 53)

படீஇ . மூழ்கி. முழுகி. தூயநற்புனல் படீஇ. (பா : 204)

படு - மிக்க கொடுமையை உணர்த்துவதோர் தமிழுபசர்க்கம். காம்பனைய தோளியை ஒளித்த படுகள்வன். (கி : 860)

படுக்கலாது - கொன்றொழிக்காமல். பரிபவஞ் செய்ஞ்ஞரைப் படுக்க லாது. (யுத் : 29)

படுக்குவென் - கொல்வேன். விரைந்து சென்று படுக்குவென். (ஆ : 796)

படுகடல் - முழங்குங் கடல். பாடு பட்டவர் படுகடல் மணலினும் பலரால். (யுத் : 521)

படுகர் - 1. மடு. நீர் நிலை. பூகவன மூடு படுகர்ப் புளின முன்றில். (அ : 545)
2. படுகை. (உ.வி) (அ : 545)

படுகள்வன் - பெருந்திருடன். பெரிய கள்வனாகிய இராவணன். (கி : 860)

படுகளம் - போர்க்களம். ஆனைப்படுகளம் பாழ்படச் சாய்ந்ததால் நிருதக்கடல் தானையே. (யுத் : 1013) சேற்றுச் செம்புனற் படுகளப்பரப்பு. (யுத் : 1206)

படுகாரம் - சாமர்த்தியம். பாகாய செஞ்சொலவர் வீசு படுகாரம். (உ.வி) பழையவுரை. (சு : 98)

படுகால் - ஏணி. விண்ணோர் ஊர்புக அமைத்த படுகால் கொல். (சு : 161)

படு கொலையான் - பெரிய கொடுமைக்காரன். கருணை யென்பது கண்டறியான் பெரும் பருணிதன் கொல் படு கொலையான் என்றாள். (பா : 1164)

படுத்தல் - 1. அழித்தல். வாலியைப் படுத்தாயலை மன்னற வேலியைப் படுத்தாய் விறல் வீரனே. (கி : 326) படுத்தான் வானவர் பற்றுரை (சு : 657) நின்னையும் படுத்தனை. (யுத்:1301) ஞாலம் படுப்பான். (ஆ : 929)
2. கொல்லுதல். பழியினை உணர்ந்தியான் படுக்கிலேன் உனை. (யுத் : 315) படுக்குவென். (ஆ : 796) படுக்கலாத. (யுத் : 29) படுக்கலாது. (யுத் : 29) [பா : பே] பேடையைப் படுத்து. (யுத் : 418) [பா : பே]
3. தாக்குதல். தைத்தல். தண்டார்க் காமுகர்ப் படுவ மாதர் கண்களும் காமனம்பும். (பா : 36)
4. உண்டாக்குதல். பலிக்கடல் படுத்ததன்றே. (யுத் : 2102)

படுத்தவர் - நசுக்கப்பெற்றவர். அடுத்த நாட்டரசியலுடைய ஆணை யாற் படுத்தவர். (யுத் : 388)

படுத்தொழிந்தனை - இறந்தொழியச் செய்துவிட்டாய். (யுத் : 155)

படுதயிர் - கடையப் படுந்தயிர். படுதயிர் மத்தானன். (சு : 959)

படுதல் - 1. உண்டாதல். நீரிலேபட்ட. (யுத்:957) மா முகிற்படுவ வாரிப் பவளமும் வயங்கு முத்தும். (பா : 36) சேறுபட்டதும். (யுத் : 1524)

2. தங்குதல். தாமரைப் படுவ வண்டும் தகைவரு திருவும். (பா : 36)

3. விளங்குதல். நாமுதற் படுவ மெய்யும் நாமநூற் பொருளும். (பா : 36)

4. தைத்தல். காமுகர்ப் படுவ மாதர் கண்களும் காமனம்பும், (பா : 36) ஏறுபட்டதும். (யுத் : 1524)

5. இறத்தல். இறந்து விழுதல். நீர் படக்கடவீர் அலீர். (யுத் : 2576) படுவதே துணிந்தாயாயின். (யுத் : 949) விதி கொடுந்தப் படக்கருதியோ பகர்மின் வந்த பரிசு. (பா : 393) போரிலே பட்டு விழ. (யுத் : 957) யானை பட்ட அழிபுனல் யாறு. வானரச் சேனைபட்டது. (யுத் : 1012) படுகிற்கிலம் படுகிற்றும். (யுத் : 1749) சாலப்படுதுவர். (யுத் : 2009)

6. அநுபவித்தல். பூக்கள் பட்டன பூவையும் பட்டனள். (பா : 642)

7 முழங்குதல். படுகடல் மணலினும் பலரால். (யுத் : 521)

8. தோன்றுதல்- சிலைமா மேகம் சோணைபட. (அ : 1012)

9. சிதறுதல். குடர் சூறை பட. (அ : 1012)

10. அகப்படுதல். சிக்குதல். ஒட்டாதவர் ஒன்றிலர் ஊழ்வலியாற் பட்டார். (யுத் : 1750) ஊழியிற் பட்ட காலில் உலகங்கள் பட்டா லொப்ப. (யுத் : 1395)

11. விழுதல். உளைந்த மால்வரை உருமிடிபட ஒடிந் தென்ன. (ஆ : 443) படுதி. (யுத் : 353)

12. நீங்குதல் - செல்லுதல். தாட்படாக் கமல மன்ன தடங்க ணான். (கி : 76)

13. கேடடைதல். கிளர்படாதாகி. (கி : 76) படுத்தவர் பட்டவர். (யுத் : 388)

14. ஒலித்தல். வெடிக்கின்ற அண்ட மென்னப் படுவது தம்பி வில் நாண். (யுத் : 2229)

15. பொருந்துதல். தாட் படாக் கமலம். (கி : 76) இடம்படு சில்லியின் ஈர்த்த தேர். (யுத்:2290) பட்ட நல் வலம். (கி:118) பொலன் கொள் நாண் வலம் படப்போக்கி. (யுத் : 1202)

16. பெருகுதல். காணப்படல். கடம் படு கரி. (யுத் : 2290) பட்டது செம்புனீர். (யுத் : 1012)
17. தாக்குதல். நூறு மாயிரமுங் கணை நொய்தினின் வேறு வேறு படுதலின் வெம்பியே. (யுத் : 1092)
18. அழிதல். தோற்றல். கலின மாப்பட. (யுத் : 2290) புலிபடு மதுகை மைந்தர். (சு : 205)
19. மறைந்து கிடத்தல். ஊரிலே பட்டா யென்றுல். (யுத்:957)
20. கலத்தல். யாறெலாம் பானல் பட்ட. (யுத் : 1012)
21. நிகழ்தல். வாளாற் படுத்தனன் இங்கு வீழ்ந்தேன் இது இன்று பட்ட தென்றுன். (ஆ : 1012) படு பொருள். (பா : 186) இது பட்டது பண்டொரு நாள். (1750)
22. அமைதல். கிளிப்படா மொழியவள். (கி : 10)
23. பெருகுதல். ஆறுபட்டதும். (யுத் : 1524) படுப்பது–கொல்விப்பது. தம்மைப் படுப்பதோர் விதி கொடுந்த விளைந்தது தானென்றுன். (யுத் : 743)

படுபொருள் . நிகழும் காரியம். படுபொருள் உணர்ந்த அப்பரமன். (பா : 186)

படும் - படுக்கும். அனந்தன் உச்சியிற் படம் படும் எனப்படும் கவியின் கற்பல. (யுத் : 2290)

படுமதகரி - மதம் பொருந்திய யானை. படுமதகரி பரி சிந்தின. (யுத் : 3473)

படுமதம் - மிக்கமதம். பாத்த யானையின் பதங்களிற் படுமத நாற. (பா : 903)

படு மழை - பொழிகின்ற மழையின் ஒலி. முழங்குகின்ற மேகம். பாணினம் ஞிமிருகப் படுமழை பணையாக. (அ : 693)

படு மாரி - சொரியும் மழை. படுமாரி நெடுங்கணை. (யுத் : 2925)

படு முரசு - ஒலிக்கின்ற முரசு. படுமுரசறைந்தனர். (அ : 657)

படுவது - 1. இறப்பது. படுவதே துணிந்தாயாகில் வந்தது பகர்தி. (யுத : 949)
2. மறைவது. அத்தமித்தல். முந்திப்படுவதே நன்றெனப் பட்டான். (யுத் : 2479)

படை - 1. சேனை. கைவளர் நெடும்படை கூட்டினுலன்றி. (கி.223) படை கூட்டும். (கி : 593)
2. ஆயுதம். அடும்படை அரக்கர். (கி : 223)
3. போர். படை யொழிந்திடுக நம்பதியுளே. (பா : 292)
4. கலப்பை. கொழு. படையுழ எழுந்த பொன்னும். (பா : 38)
5. வேற்படை. படை அமை விழியாள். (யுத் : 4083)

படைக் கடல் - சேனுசமுத்திரம். படைக் கடலின் வைகுங் கொண்ட லென. (யுத் ; 692)

படைக் கண் - வேலாயுதம் போலும் கண். பையரவிது வென்றஞ்சிப் படைக் கண்கள் புதைக்கின்ருரும். (பா : 950)

படைக்கணர்-மாதர். பண்டே உலகேழினு முள்ள படைக்கணரைக் கண்டேன். (ஆ : 704)

படைக்கலச் சாலை - ஆயுதசாலை. சில்லியுண்டையிற் றிரண்டன படைக்கலச்சாலை. (சு : 1217)

படைக்கலம் - ஆயுதம். நிறப்பெரும் படைக்கலம் நிறத்தின் ஞேருற. (அ : 560)

படைக்கலவாரி - ஆயுதத் திரள்கள். அரக்கர் தம் படைக்கலவாரி. (யுத் : 1439)

படைக்கல விஞ்சை - போர்க்குரிய ஆயுதங்களைக் கையாளும் வித் தைகள் (யுத் : 3087)

படைக்காவலன் . படைத்தலைவன். வெம்படைக் காவலன் நெருக்க நேர்ந்து. (யுத் . 1024)

படைக்குநர் சிறுமை-படைத்துத் தருகின்றவரின் திறமைக் குறைவு, (அண்) சிருட்டிப்பவரது வேலைத்திறக் குறைவு. (வை. மு) படைக்குநர் சிறுமை யல்லால் எண்பிறங் கழகிற் கெல்லையில்லை யாம் என்ன நின்ருள். (ஆ : 284)

படைக்கு நாயகர் - படைத்தலைவர். படைக்கு நாயகர் கண்ணுறு பொறிகளும். (யுத் : 1320)

படைக்கை வீரர் - ஆயுதங்களை ஏந்திய வீரர். பல் பதினுயிரம் படைக்கை வீரரே. (ஆ ; 397)

படை செலாறு - சேனை செல்லும் வழி. அயோத்தியார் தெய்வமா நகர் அருந்தெரு வொத்தது அப்படை செல் ஆறரோ. (அ:979)

படைஞர் - படைவீரர். செஞ்செவே படர்வர் என் படைஞர். (யுத் : 547) (யுத் : 2029)

படைத்தடங் கண் - வாட் கள் போன்று கூரிப பெரிப கண். பாயல் துறந்த படைத்தடங் கண் மென்ருேள் ஆயிழை. (அ : 187)

படைத்தல் - 1. தோற்றுவித்தல். படரெலாம் படைத்தானே. (அ:1061)
2. உண்டாக்கல். எழுப்புதல். நாஞெலி படைத்த பொழுதே (ஆ : 23)
3. செய்தல். ஓர் பூசனை படைத்நிர். (யுத் : 2576)
4. தம்முடைய வாகச் செய்தல். பெருந்தலை வரும் படைத்த தேர்களும். (ஆ : 470)
5. அடைதல். பெறுதல். படைத்ததோர் உவகை தன்னை வேருெரு வினயம் பண்ணி உடைத்தது விதியே, (யுத் : 1625) பழந்தனம் இழந்தன படைத்தவரை ஒத்தாள். (சு : 524)
6. ஒத்தல். (கலா) அலைபடைத்த. (யுத் : 1429)
7. பொருந்தி நிற்றல். அலைபடைத்த வாளரக்கர், (யுத்:1429) கொலைபடைத்த. (யுத் : 1429)

படைத் தொழில் - போர்த் தொழில்.

படை நாஞ்சில் - கற்படுத்துச் செய்பப்பட்ட நாஞ்சில் என்ற உறுப்பு. (நாஞ்சில் - அம்பு ஏவும் புழைபமைந்த இடம்) பதனமும் மதிலும் படை நாஞ்சிலும். (யுத் : 994)

படை நெடுங்கண் - வாள் போற் கூரிய நீண்டகண். படை நெடுங் கண்ணுற் குவளைக் கோட்டகங் கடுத்தது. (சு : 126)

படை நெடுங் கண்ணுர் - வேல் போலும் நீண்ட கண்களையுடைய மாதர்கள். படை நெடுங் கண்ணுர் வட்டாட் டாடிடம் பலவுங் கண்டார். (பா : 580)

படை நெடுங்கண் வாள் - நீண்ட கண்களாகிப வாளாயுதங்கள். படை நெடுங்கண் வாள் உறைபுக. (பா : 256)

படைப்புணரி - சேனையாகிய கடல். (யுத் : 3271)

படைப் பெருந்தலைவர் - பெருமை வாய்ந்த படைத்தலைவர். படைக்குரிய பெருந்தலைவர். படைப் பெருந்தலைவர் நிற்க. (யுத்:2409) (ஆ : 468) (யுத் : 4082)

படை மாணரசு - படைக் கலங்களால் மாட்சிமைப்பட்ட அரசர்கள். படை மாணரசைப் பலகால் மழுவால் எறிவான். (அ : 352)

படையமை விழியாள் . வேலாயுதம் போன்ற கண்களை யுடையவள். படையமை விழியாட்கு ஐயன் இனையன பகரலுற்றான். (யுத் . 4083)

படையிலாப் படை - படைக்கலம் இல்லாத சேனை. படைக்கல முடைய நாம் அப்படையிலாப் படையை ஈண்ட அடைக்கலம் புகுவதல்லால் இனிப்புகும் அரணும் உண்டோ. (யுத் : 907)

படையுறு நோக்கினாள் - வேல் வாள் என்னும் ஆயுதங்கள் போன்ற கண்களையுடையவள். (பிராட்டி) களியுறக் கனிந்த காமர் பண்ணுறு கிளவிச் செவ்வாய் படையுறு நோக்கினாளை எண்ணுறு திறத்தும் காணார். (கி : 916)

படையூற்றம் - போர்ப் பயிற்சி. படையூற்றமிலன். (பா : 329)

படையெடுத்தல் - படை எழுதல். அண்ணலோடு உடற்றவே கொலாம் இப்படை எடுத்தது என்றெடுத்த சீற்றத்தான். (அ : 998)

படை வேலை - சேனையாகிய கடல். (யுத் : 2022)

பண் - 1. இசை. ஸ்வரம். பண்ணிறஞ் செறிந்திடை பரந்த தென்னவும். (பா : 1047)

2. இசையின்பம். பண் தரு கிளவியார். (பா : 571)

3. (ஆகு) வேதம். பண்ணின் நோக்கும் பராவமுறை. (அ:628)

4. அலங்காரம். இரணப் பண்ணின் படர் தலையிற்பட படி கின்றன பலவாம். (யுத் : 1818) தேர் பரி யானை பொருந்திய பண்ணொளி. (யுத் : 2280)

5. பண்ணை, நீர் நிலைகள்; அவற்றிலுள்ள உயிர்கள். மறுவில் பண் துயின்றன. (கி : 41)

6. பண்களின் இசை. பண்ணோ ஒழியா பகலோ புகுதா. (பா : 1254)

7. சேணம். கல்லணை. பண்ணமை குண்டையின் பாகனும். (யுத் : 3433)

8. பெருமை. பண்ணவன் ஆயிர நாமம். (யுத் : 233)

9. அணி வகுப்பு. (கலா) அமைந்துள்ள ரீதி. (வை.மு) சேனையை யாரும் பண்ணை விழுங்க உணர்ந்திலர். (யுத் : 2275)

10. போர்க்கோலம். பண் மணிக்குலம். (சு : 875)

பண்கள்புக் கலம்பும் நா - இராகங்கள் படிந்து தூய்மைப்படுத்தும் நாக்கு. பண்கள் புக் கலம்பும் நாவை உயிரொடு பறிக்கின் ருரும். (யுத் : 3185)

பண்களாற் கிளவி செய்தல் - சொற்களை இசை கொண்டு இயற்று வித்தல். பண்களாற் கிளவி செய்து பவளத்தால் அதர மாக்கி. (யுத் : 1588)

பண்கனிந்த பண் - இசை மிக்க பாடல். பண் கனிந்த பண்ணைக் கானமும். (யுத் : 2233)

பண் கனிந்த பண்ணைக்கானம் - இசைமிக்க பாடற்றெகுதி. (யுத் : 2233)

பண்கனிந்தெழு பாடல் - பண் அமைந்து எழுகின்ற இசைப் பாடல். மாதர் மென் செவிப் பையரா நுழைகின்றன போன்றன பண் கனிந்தெழு பாடலே. (அ : 237)

பண் குடை வண்டினம் பாட - (குடை வண்டு பண்பாட) மலரைக் குடைந்து மதுவுண்ணும் வண்டின் கூட்டம் இன்னிசை எழுப்ப. (பா : 1284)

பண்டருங் கிளவியார் - இசை யின்பந்தருஞ் சொல்லர். பண்டரு கிளவியார்தம் புலவியிற் பரிந்த கோதை. (பா : 571)

பண்டாரம் - 1. பொக்கசம். வச்சை மாக்கள் பண்டாரம் ஒக்கின் றன. (ஆ : 937)

2. நிதிவைக்குமிடம். பொரு பேயின் பண்டாரத்திடை யிட் டார் தம்முடல். (சு : 968)

பண்டி - வண்டி. பண்ணின புரவிதேர் பகடு பண்டியும் மண்ணினை மறைத்தன. (அ : 959)

பண்டிகள் பண்டிகள் - கூட்டமான வண்டிகள். பன்மை பற்றிய அடுக்கு. பண்டிகள் பண்டிகள் பரிசிற் செல்வன. (பா . 840)

பண்டிதர் - புலவர். பண்டிதர் பழையவர் கிழவர். (யுத் : 20)

பண்டிரிதல் - இசை மாறுபடல். பண்டிரிந்து சிதையப் படர் சிறை வண்டிரிந்தன. (யுத் : 970)

பண்டு - முன்னுள், முன்பு. உந்தையை உயிர் பண்டுண்டான். (யுத் : 924) பண்டு போல். (யுத் : 528)

பண்டுடைத் தீவினை - முன் பிறவிகளிற் செய்த தீவினை. நான் பண்டுடைத் தீவினை பயந்த பண்பினுல். (யுத் : 2723)

பண்டை - பழைமையான. பண்டை வரையளித்த குலமாட நகர் புகுவேம். (ஆ : 360) பண்டைத் தெண்டிரைப் பரவை நீர். (யுத் : 134) பண்டை நூல். (கி : 75) (அ . 1203)

பண்டை நாள் - பண்டைக் காலம். பண்டைநாள் இராகவன் பாணி வில்லுமிழ் உண்டையுண்டதனை. (அ : 138)

பண்டை நூல் - 1. பழைமையான இலக்கணம் முதலிய கலைகள். பண்டைநூல் கதிரோன் சொல்லப் படித்தனன் படிவம். (கி : 75)

2. வேதம். பண்டை நூல் தெரி பரத்துவன். (அ : 1203)

பண்டைய - பண்டு அளித்தன. பண்டைய இன்று பரிந்தளித்தி. (அ : 19)

பண்டை யுறையுள் - பழைய வாழிட மாகிய கடல். பண்டையுறை யுட் கெதிர் படைக் கடலின் வைகும் கொண்டலென. (யுத்:692)

பண்டொடர்தல்-பண்ணைத் தொடர்தல். பாடல் நீத்தன பண்டொடர் பாண்குழல். (அ : 817)

பண்ணமை குண்டையின் பாகன் - தவிசு அமைந்த விடையினை ஊரும் சிவபிரான். (யுத் , 3433)

பண்ணல் - இசைக்கலைத் தொழில் எட்டனுள் ஒன்று. பண்ணும் நரம்பில் பகையா இயல பாணி ஓதை. (பா : 971)

பண்ணவன் - 1. கடவுள். ஆதி தேவன். பரஞ்சுடர்ப் பண்ணவன். (கி:464) பரகதி யுணர்ந்தவர்க் குதவும் பண்ணவன். (பா:191)

2. வலிமையுடையவன். (இலக்குவன்) பண்ணவன் வருக என்ருன். (அ : 657)

3. பெருமையுடையவன். ஆதிப் பண்ணவன் ஆயிர நாமம் ஓதுற்ருன். (யுத் : 233)

பண்ணிமை - இசைகளாகிய இமை. பண்ணிமையடைந்த பல கட்பொருநர் பாடல். (சு : 257)

பண்ணியல் வயப்பரிகள் - அலங்காரம் அமைந்த வலிய குதிரை கள். பண்ணியல் வயப்பரிகள் பந்தியில் நிரைத்தார். (பா:910)

பண்ணின புரவி - அலங்கரிக்கப் பெற்ற குதிரை. பண்ணின புரவி தேர் பகடு பண்டியும் மண்ணினை மறைத்தன. (அ ; 959)

பண்ணின் நோக்கும் பராவமுது - இசையமைதியுடைய வேதங்களால் அறியப்படும் அமுத உருவாக விளங்கும் இராமபிரான். பண்ணின் நோக்கரும் பராவமுதைப் பசுங் கண்ணின் நோக்கினர். (அ : 628)

பண்ணுதல் - 1. அலங்கரித்தல். பண்ணுறு கடகரி. (அ : 155) பண்ணு புரவி படைவீரர். (யுத் : 3426) பண்ணும் பரிமாவுடையாய். (அ : 381)
2, செய்தல். என்ன தன்மை பண்ணுமே. (யுத் : 3346)

பண்ணுற - ஒத்துப் போக. பதங்களில் தண்ணுமை பாணி பண்ணுற. (பா : 144)

பண்ணுறு கடகரிப் பரதன் - அலங்கரிக்கப்பட்ட மதகளிறு போன்ற பரதன். (அ : 155)

பண்ணுறு கிளவி - இசைப் பாடல் போன்ற சொற்கள். பண்ணுறு கிளவிச் செவ்வாய்ப் படையுறு நோக்கினளே. (கி : 916)

பண்ணுறு வயப் புரவி - அலங்காரம் அமைந்த வலிய குதிரைகள். பண்ணுறு வயப் புரவி பந்தியின் நிரைத்தார். (பா : 910) [பா : பே]

பண்ணெனும் கிளவி - இசை போல இனிய சொற்கள். பண்ணெனும் கிளவியாற் பன்னி ஏங்கினள். (அ : 1151)

பண்ணை - 1. வயல். தேரை தாராட்டும் பண்ணை. (பா : 44)
2- படகு. படகு போன்ற வயிறு. (வை. மு) உயிரெலா முருங்க வாரித் தான் பற்றிய கரத்தினன் பணைத்த பண்ணையில் துற்றிய புகுதருந் தோற்றத்தான். (ஆ : 1156)
3. தொகுதி. (அண்) (ஆ : 1156) பறந்தலை யதனின் வந்த பல பெருங் கவியின் பண்ணை. (யுத் : 1425)
4. கூட்டம். விண்ணவர் பண்ணை யார்ப்ப. (ஆ : 926) பரந்த தேர் களிறு பாய் புரவி பண்ணையில் தரந்தர நடந்தன. (பா : 1286) (சு : 603)
5. மகளிர் கூட்டம். பண்ணையும் ஆயமும் திரளும் பாங்கரும். (பா : 296) (யுத் : 3584)
6. விளையாட்டு. மைந்தர்கள் பண்ணைகள் பயிலிடம். (பா:136)
7. நீர்நிலை. அளக்கர்ப்பண்ணை வெம்புனல் படப்பட. (யுத்:565)

8. சேணம். சேணமாகியபடகு. (வை. மு) வயல்கள். (அண்) பவரின மணிகுவிக்கும் பண்ணைய உவரியைப் புதுக்கின உவரி ஆறரோ. (ஆ : 487)

9. வகுப்பு. வகை. எண்ணை விழுங்கிய சேனையை யாரும் பண்ணை விழுங்க உணர்ந்திலர் பண்பால். (யுத் : 2275)

பண்ணைக் கானம் - இசை இனிய பாட்டுக்கள். பான முந்துயிலும் கண்ட கனவும் பண் கனிந்த பண்ணைக் கானமும். (யுத்:2233)

பண்ணொளி - அலங் காரங்களின் ஒளி. அணிகளின் ஒளி. தேர் பரி யானை பொருந்திய பண்ணொளி. (யுத் : 2280)

பண்திறந்தன புலம்பொலி- கனராகங்களை உயர்த்துப் பாடினாற் போன்று இன்னிசை எழுமாறு புலம்புகின்ற ஒலி. (யுத் : 3502)

பண்பழிதல் - குணமழிதல். வெள்ளி பண்பழிந்து. (யுத் : 3219)

பண்பிறந்தவர் - பண்பு இறந்தவர், குணத்தினால் மேம்பட்டவர். பண் பிறந்தவர்க் கருங்கல மாகிய பாவாய். (யுத் : 4044)

பண்பு - 1. அழகு. பால் நிறப்பட்டின் மாலையுத்தரியம் பண்புற. (சு : 411)

2. உவமையாதற் குரிய குணம். பண்பின் முடிவுள உவமைக் கெல்லாம். (சு : 527)

3. தன்மை. பால் கிளர் மீனிடை யாடிய பண்பால். (யுத்.2276) பவளமும் குவளைப் பண்பிற்றால். (சு : 528)

4. வீரப்பாடு. பண்டு போர் மழுவாளியைப் பண்பினாற் கொண்டவில்லை வருணன் கொடுத்தனன். (ஆ : 545)

பண்புற - தகுதியாக. பண்புற நெடிது நோக்கி. (ஆ : 284)

பண் பெற்றார் - நற்குணமுடையவர். பண் பெற்றாரோடு கூடாப் பகை பெற்றாய். (யுத் : 1620)

பண் மலர்கின்ற செவ்வாய் - பண்ணிசை தோற்றும் பவளம் போன்ற செவ்வாய். பண்மலர் பவளச் செவ்வாய்ப் பனி மலர்க் குவளை யன்ன கண் மலர்க் கொடிச்சிமார். (பா : 930)

பணங்கிளர் அரவு - பட மெடுத்த பாம்பு. (யுத் : 3981)

பணத்தரா-படத்தினையுடைய பாம்பு. அரிமணிப் பணத்தரா அரசன் நாட்டினும் .(பா : 357)

பணம் - நாகபடம். பணாமணி. (யுத் : 885) அரா வரசர் கோன் பணங் கிளர் தலை. (சு : 140) பணம் அயிர்ப் பெய்தும் அல்குல். (யுத் : 802)

பணம் அயிர்ப் பெய்தும் - நாக படம் என்று ஐயுறு மாறுள்ள. (யுத் : 802)

பணவம் - ஓர் இசைக் கருவி. (யுத் : 2397)

பணாமுடி - படத்தோடு கூடிய முடி. ஆயிரம் பணாமுடி யனந்தன். (பாயி : 25)

பணா மணி - பாம்பின் படத்திலுள்ள ரத்தினம். பன்னகாதிபர் பணாமணி வலியிற் பற்றி. (சு : 280) (யுத் : 885) (ஆ : 12)

பணி - 1. பொருள்கள். வேலைப் பாடமைந்த பொருள்கள். மணியினும் பொன்னினும் வனைந்த வல்லது பணிபிற தியன்றன பாங்கு மில்லையே. (பா : 125)

2. செய்யுங் காரியம். தொழில். அடியேன் செய்யும் பணி இனி தளித்தி என்றான். (பா : 210)

3. அருள் செய். பார் காத்தற் குரியாரை பணி நீ என்றடி பணிந்தான். (பா : 736)

4. ஏவல். நியமித்தல். கட்டளை. தெய்வ மடந்தையர் சேடியர் தாதி மாரெனத் தம்பணி கேட்பவே. (அ : 1078) பூண்டதோர் பணியின் வல்லை அனையரைக் கொண்டு புக்கான். (யுத்:1224)

5. பாம்பு. [பணீ] படத்தையுடையது. வீங்கணைப் பணி மிசை மேக மன்னவன். (சு : 532)

6. வேலைப்பாடு. பணி பழுத்தமைந்த பூண். (யுத் : 472)

பணி அருள் - பணித்த கட்டளை. ஆதியான் பணி அருள். (யுத் : 4036)

பணிக்குலம் - 1. அணிகலத் தொகுதி. பணிக்குலமும் மணிக்குலமும் தகர்ந்து சிந்த. (யுத் : 3867)

2. சங்குக் கூட்டம். பணிக்குலமும் தழங்கா கடல் வாழ்வன போல். (யுத் : 2911)

பணி கொள்ளுதல் - ஏவல் கொள்ளுதல். வானவரைப் பணி கொண்ட மருகாவோ மருகாவோ. (ஆ : 335)

பணி செய்தல் - ஏவல் புரிதல். சிலையாயுந் தனு வேதம் தெவ்வரைப் போற் பணி செய்ய. (பா : 743)

பணித்த - நியமித்த. கட்டளையிட்ட. சொன்ன. பணித்த மாற்றம் சொல்லிய வந்தேன். (யுத் : 940)

பணித்தல் - சொல்லுதல், செய்தல். (கலா) பரதன தியல்பு இன்றே பணிக்குவென். (யுத் : 4113) பணிக்கின்ருன். (ஆ : 134) பணித்திர். (கி : 68)

பணிமாறுதல் - சுழற்றி வீசுதல். (வை. மு) அரம்பை மேனகை திலோத்தமை உருப்பசி யாதி யாயவர்... தளிரடி கரந் தொடச் சாமரை பணிமாற. (சு : 292) [பா : பே]

பணிமுறை தழுவல் - முறைப்படி செய்யுங் குற்றேவலே மேற் கொள்ளுதல். ஏவரும் விசும் பிருள் இனிய ஈண்டினுர் தாவரும் பணி முறை தழுவும் தன்மையார். (சு : 145)

பணி முறை மாறல் - பணிவிடைகளைக் காலத்தே செய்தல். முன்னின பணி முறை மாறி முந்துவர்ர். (சு : 144)

பணி மொழி - கட்டளை. பணி முறை கடவாதான். (அ : 689)

பணியணி முத்தம் - ஆபரணங்களிற் பொருந்தின முத்து. பணி யணி இன முத்தம். (பா : 276) [பா : பே]

பணியரங்கம் - பாம்பாகிய உடலிடம். பணியரங்கப் பெரும் பாயற் பரஞ்சுடரை. (பா : 722)

பணியனுகி - கட்டளையின் படி நடப்பவனுய். பால் நிறுத் தந்நுணன் பணியனுகி நின் கோல் நினைத்திலன் என உலகங் கூறலும். (சு : 84)

பணியிடைப் பள்ளியான்-பாம்பணையிற் பள்ளிகொள்ளும் பரந்தாமன். அப் பணியிடைப் பள்ளியான் பரந்த மார்பிடை மணி. (அ:125)

பணியில் தீர்தல் - ஆற்றும் சேவையினின்று த்விர்தல். (கலா) கட்டளையிலிருந்து விலகல். அவயம் நீவிர் அருளிய அளவில் செல்வம் தொடர்ந்து நும் பணியிற் றீர்ந்தால் அதுவும் நுந் தொழிலே யன்றே. (கி : 621)

பணிலம் - சங்கு. பணில மார்த்தன. (ஆ : 399)

பணியினிற்றல் - யானிவன் பணியின் நிற்பன். (யுத் : 1633)

பணியினீங்கலா ஆழி - பணியில் நீங்காமல் இருக்கின்ற ஆணைச் சக்கரம். நின் பணியின் நீங்கலா ஆழியை இனி அவற் களிக்க எண்ணியோ. (அ : 847)

பணை - 1. பருமை. பருமன். (யுத் : 1378) அப்பணையினு முயர்ந்த தோளான். (கி : 611) [பா : பே] பணை மருப்பு. (ஆ : 563)
2. கொம்பு. தந்தம். பணைமுகப் பரும யானை. (யுத் : 4287) (யுத் : 3880)
3. கிளை. எண்ணில் கேள்வி யாகம் முதற் றிண்பணை போக்கி. (பா : 167) உயர் மரப் பணையின் உம்பரான். (சு : 390)
4. முரசு. தழுவு சங்குட னெழும் பணை தழங்கிட. (பா:1144)
5. வாத்திய ஒலி. பணை நிரந்தன. (அ : 53)
6. மூங்கில். புல்லாங் குழல். வேய்ங் குழல். சங்கமும் பணையும் கொம்பும். (பா : 893)
7. பறை. மேருவை உள்ளுறத் துளைத் தொரு பணை யாக்கி. (யுத் : 1565) கோற்றரு திண் பணை கொட்டினிர் கொண்டூர் சாற்றுமின். (யுத் : 2258)
8. சங்கம்.
9. இசைக் கருவிகள். போர்ப்பணை முழங்கப் போனான். (யுத் : 2396)
10. தந்தம். திண் பணை வெஞ்சின வேழம். (யுத் : 221) திக்கிற் சினமத யானைகள் வயவெப் பணை புக்கிற்றன போகா தன புற முக்கன முதுகின். (யுத் : 1138)

பணைக்குலம் - போர்ப்பறை வாத்தியங்களின் தொகுதி. (யுத்:2911)

பணைக்கை - பருத்த கரம். பணைக்கை கோடு துன்றிய கரிகளும். (யுத் : 1195) பணைக்கை யானைக் கோடு. (யுத் : 3872)

பணை கொட்டுதல் - பறை கொட்டுதல். திண்பணை கொட்டினிர் கொண்டு. (யுத் : 2258)

பணைத்தல் - பருத்தல். திசை யானை மருப் பிறுத்துப் பணைத்த மார்பால். (யுத் : 3893) பணைக்கை யானை. (யுத் : 1276)

பணை நெடு முதல் . பருத்த பெரிய அடிமரம். பணை நெடு முதலும் நீங்க. (யுத் : 3111)

பணை முகம் - தந்தங்களையுடைய முகம். பணைமுகப் பருமயானை. (யுத் : 4287)

பணை மென்றோள் - மூங்கில் போன்ற மெல்லிய தோள். (யுத்:811)

பணையம் - பந்தயப் பொருள். விஞ்சை மன்னவர் முடியும் பூணும் மாலையும் பணையமாக. (சு : 280)

பணைபொன்று திரள்தோள் - பகுத்தலைப் பொருந்திய திரண்ட தோள். பெருங்கிரி நெருங்கப் பேர்த்த பணை யொன்று திரடோள் கால பாசத்தாற் பிணிப்ப. (யுத் : 1377)

பத்தர் - வசப்பட்டவர். பேதையர் சொன்னவும் பத்தர் சொன்ன வும் பன்னப் பெறுபவோ. (பா : 8)

பத்தி - 1. பக்தி. காலனுற்றல் கடிந்த கணிச்சியான் பாலினுற்றிய பத்தி பயத்தலால். (கி : 350)

2. அன்பு. பத்தியின் உறையும். (சு : 286)

3. வரிசை. பளிங்குடை நெடுஞ்சுவர் படுத்த பத்தியில். (அ : 132) (யுத் . 3206) காமத்துப் படுத்த பத்தி ஆயிரமல்ல போன. (யுத் : 1595) கொற்றக்கரி பதினுயிரம் ஒரு பத்தியிற் கொல்வான். (யுத் : 1829) பத்திப்படர் நெடுந்தெரு. (சு : 286) அவன் தோள் பத்தொடு பத்தின் நெடும் பத்தியில்தத்தி (ஆ : 925) (பா : 832)

4. கூட்டம். பத்தி ஆனிரை. (பா : 888)

5. தூரம். இடை வெளி. பல்லொடு பல்லுக் கெல்லை ஆயிரக் காதப் பத்தி. (யுத் : 286)

6. பற்றி. (வை. மு.) ஒழுங்கு. (கலா) முடித்தலை கீழுற பத்தி வன்தடந் தோளுறப் பற்றுவான். (யுத் : 1028)

பத்திபத்தி பின் - வரிசை வரிசையாக. பத்தி பத்தியின் எய்குவ பல்கணை. (யுத் : 2075)

பத்திரச் சிறை - பாதுகாப்பாயுள்ள சிறகுகள், (ஆ : 903)

பத்திரட்டி - இருபது. பத்திரட்டி நன்பகல். (கி : 736) அங்கை பத்திரட்டியான். (சு : 741)

பத்திரம் - 1. அழகு. (அண்) பத்திரப் பழுமரப் பொழில். (ஆ:2.)

2. இலை. (வை. மு) (ஆ : 2)

3. பாதுகாப்பு. பத்திரச் சிறைகளை விரிக்கும் பண்பினுன். (ஆ ; 902)

4. பூவிதழ். தாமரை இதழ். பத்திரம் புரை நாட்டம் பதைப்பற (சு : 265)

5. மலை. (அண்) பத்திரத் தலையென. (ஆ : 447)

6. மங்களம். சுபம். (வை. மு.) (உ. வி) (ஆ : 2)

7. அம்பு. (வை. மு) (ஆ : 447)

பத்திவன்தலை - வரிசையாக வுள்ள வலிய தலைகள். பத்திவன் தலைப் பாம்பின் பரங் கெட. (யுத் : 1003)

பத்திவன் தலைப் பாம்பு - ஆதிசேடன். (யுத் : 1003)

பத்தினி - 1. பதிவிரதை. (சீதாபிராட்டி) பத்தினியை விட்டேகுதி யால். (ஆ : 906) தெய்வப் பத்தினி தவத்துளானை. (யுத்:2942) (யுத் : 2883)

2. மனைவி. இராமன் பத்தினி. (கி : 989)

பத்திஞெடு பத்து - இருபது. தடந் தோள் பத்திஞெடு பத்து டையவன் உடல் பதைப்பக் குத்தினன். (யுத் : 847)

பத்தினே டெட்டு - பதினெட்டு. அம்பு பத்தினே டெட்டையும் நான்கினு லறுத்தான். (யுத் : 1456)

பத்து - 1. பக்தி. பத்துடை விரல் புடைபரந்த பண்பெனச் சித்திரச் சேவடிக்கழலுஞ் சேர்த்தினுன். (யுத் : 1072)

2. பத்து என்னும் எண். பத்துத்தலை. (சு : 29

பத்துடை யேழு - எழுபது. பத்துடை ஏழுசான்ற வானரப் பரவை (யுத் : 2813)

பத்துத்திசை - பத்துத் திக்குகள். எண்டிசை பூமி ஆகாயம் ஆகிய பத்துத்திசை. பத்துத் திசையும் செவி டெய்தின. (யுத் : 1921)

பத்து நாலு - பதிஞன்கு. பத்து நாலென அடுக்கிய உலகங்கள். (யுத் : 4079)

பத்து நாலும் - பத்தும் நாலும். எத்தனைக் குள ஆண்டுகள் ஈண்டு அவை பத்தும் நாலும் பகல் அலவோ. (அ : 317)

பத்து நூறமைந்த கோடி - ஆயிரங் கோடி. சேனை பத்து நூற மைந்த கோடி வெள்ளத்தாற் பகுதி செய்த அத்தனை கடலும் மாள. (யுத் : 262)

பத்து நூருயிர கோடி - பத்து லட்சங் கோடி. வானரச் சேனை ஆன்ற பத்து நூருயிர கோடியோடு அமையத் தோன்றினுன். (கி : 706)

பத்து நூருயிரப்பத் தெனுங் கோடி - நூறு லட்சங் கோடி. இயைந்த பத்து நூருயிரப் பத்தெனுங் கோடி உயர்ந்த வெஞ்சின வானரப் படை. (கி : 718)

பத்து நூருபிரப் பத்தியின் இரட்டி தொகுத்த கோடி - பத்து லட்சம் வரிசைகளையுடைய தொகுத்த இரண்டு கோடி. பகுத்த பத்து நூருயிரப் பத்தியின் இரட்டி தொகுத்த கோடி வெம்படை கொண்டு துன்முகன் தொடர்ந்தான். (கி : 716)

பத்து நூறு - ஓராயிரம். கோலொரு பத்து நூற்ருற் குதிரையின் தலைகள் கொய்து. (யுத் : 1877)

பத்து நூறு கோடி - பத்து நூறு கோடி யென்னும் கணக்கு. பத்து நூறு கோடிக்கு மேற் பனிபடு சிகரம் எத்த மேற் செல எறிந்தனர். (யுத் : 1150)

பத்துள தலை - பத்தாகவுள்ள தலைகள். பத்துள தலையும் தோளும். (சு : 448)

பத்தொடு நாலும் - பதினுன்கு. பயிலும் காலம் பத்தொடு நாலும் படர்கானத்து அயில்கின்றேனுக்கு ஆவன நல்கி அயிலாதாய். (யுத் : 2601) (யுத் : 4062)

பத்தொடு பத்து - இருபது. அவன் தோள் பத்தொடு பத்தின் நெடும் பத்தியில் தத்தி. (ஆ . 925)

பத்தொரு நாலு - 1. நாற்பது. பத்தொரு நாலு படுத்த பரப்பின அத்தனை வெள்ளம் அரக்கர் அவிந்தார். (யுத் : 2263)
2. பதினுன்கு. ஆண்டு பத்தொரு நாலு இன்றுடன் ஏறுமா யின். (யுத் : 4062)

பத்தோடு பத்து - பத்தோடு சேர்ந்த பத்து; இருபது (ஆ : 925)

பதகர் - பாதகரான அரக்கர். பாய் திரைப் பரவை தோறும் காண் குறும் பதக ரென்ன. (யுத் : 3547)

பதகன் - பாதகி. பாவி. கொடியோன். கொடும் பாதகன். பனி போலகன்ற பதகன் துரந்த உரகம். (யுத் : 2215) அப்பதகன் மூதூர். (யுத் . 918) பதக. (யுத் : 1911) (அ : 900)

பதகனேன் - தீவினை யேனுகிய யான். படைக் கலங்களைச் சுமக் கின்ற பதகனேன். (யுத் : 2589)

பதகி - பாதகி. பவனனிற் றிரிகுநர் பதகி மைந்தர்கள். (பா:382)

பதங்கம் . 1. பறவைகள். பதங்கம் முடிவு ஒத்த . (கி : 522)
2. விட்டிற் பூச்சி. பதங்கம் ஆரழல் விளக்கினில் வீழந்தென. (யுத் : 3437)

பதங்கள் - பாதங்கள். பதங்கள் தீப்பருகிடப் பதைக்கின்றுர் சிலர்- (கி : 842)

பதங்கன் - சூரியன். உருப்பதங்கனை ஒப்பன சில கணை. (யுத்:1430)

பதங் கொள்தல் - வசப்படுத்தல். இனியன கழறிப் பதங் கொள் பாகன். (பா : 901)

பதடி - 1. உள்ளீடு இல்லாதது. பதர். தாழையின் பன்னு வான் குலைப் பதடி யாயினேன். (ஆ : 926)

2. அறிவிலி. இருப்புக் கம்மியற் கிழை நுழை ஊசி யொன்றி யற்றி விருப்பிற் கோடியால் விலைக் கெனும் பதடி. (யுத் : 3787)

பதணம் - மதிலுள் மேடை. பதணமும் மதிலும். (யுத் : 994)

பதம் - 1. இடம். உலகம். மாத்த யானையிற் பதங்கள். (பா : 903) விசும்பெனும் பதம். (சு : 596)

2. நடனத்துப் பயன்படும் ஒரு வகை இசைப் பாட்டு. பதங்களில் தண்ணுமை பாணி பண்ணுற. (பா : 144)

3. பாதம். என்னையாளுடைய கொண்டல் நீள் பதம். (பா:482) (யுத் : 1430) (யுத் : 3338)

4. சொல். தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதம். (கி : 308) இல்லை வேறினிப் பெரும் பதம். (யுத் : 158) முது மொழிப் பதம். (யுத் . 3253)

5. உணவு. இடுபதம். (அ : 905)

6. பரமபதம். வீரன் மேலைத்தன் பதமே ஒத்தான். (யுத்:1184)

7. பக்குவம். பதங் கொள் பாகன். (பா : 901)

8. பதவி. தேரின் மேலினின்று இரவிதன் பெரும் பதம் செலுத்தும். (யுத் : 136)

9. அதிகாரத் தொழில். என்பதம் இழந்தே னென்னக் கூற்ற மும் குலுங்கி யஞ்ச. (யுத் : 2007)

10. நிலை. எண்ணுறு பெரும் பதம் வினையின் எஞ்சிட. (யுத் : 1786) ஓம வேள்வியின் உறுபத முய்ப்பது. (யுத் : 172)

பதம் சரித்தல் - பதவிலே சஞ்சரித்தல். தொழிலாற்றுதல். சாரு மானத்திற் சந்திரன் தனிப்பதஞ் சரிக்கும். (யுத் : 136)

பதம் பெரு - காலடி வைததிருக்கப் பெருத. செருப்பதம் பெரு அரக்கர். (யுத் : 1430)

பதம் பெறுதல் - காலூன்றி நிற்றல். (யுத் : 1430)

பதயுகத் தொழில் - கூத்து. சாந்திக் கூத்து. விநோதக் கூத்து. (கலா) அணிதலும் புனைதலு மாகிய தொழில். (அண்) பதயுகத் தொழில் கொடு பழிப்பிலாதன. (பா : 141)

பதயுகம் - இரண்டு பாதங்கள். தாளிணைகள். (பா : 141) பஞ்சின் மெல்லடியாள் பங்கன் பதயுக மல்ல யாதும் அஞ்சலித் தறியாச் செங்கை யாணையாய். (கி : 381) [பா : பே] (யுத் : 4326)

பதலை - தோற் கருவி வகை, ஒரு கட்பகு வாய்ப்பறை. வழங்கின பதலை ஓதை அண்டத்தின் வரம்பின் காறும், (யுத் : 2363)

பதவலிச் சலங்கை - வலிபதச் சலங்கை; பாதத்தில் வல்லியை ஒத்த சலங்கை. (வை.மு) வலிய காலில் அணிந்த சலங்கை. (அண்) பதவலிச் சலங்கைப் பைந்தார்ப் பாய்பரி. (யுத் :4345)

பதவி - நிலை, தெய்வப் பதவி யந்தணர். (கி : 626)

பதவிய - அழகிய. (வை.மு) பதவியாக வுள்ள. (அண்) மறுவில் விஞ்சைகள் பதவிய இருமையும் பயக்கப் பண்பினல் உதவிய ஒருவன். (அ : 1188)

பதவியல் - புல்லின் தன்மையுள்ள. (பதவு இயல்) பதவியல் மனித ரேனும். (சு : 477)

பதவிபலறிவு - பக்குவமான இயல்புள்ள அறிவு. பதவியல் அறிவு பயந்தால் அதின் நல பயனுளதுண்டோ. (சு : 771)

பதவு - 1. பக்குவம். (வை. மு)
2. புல். (அண்) பதவியல் மனிதரேனும். (சு : 477)

பதனம் - பதணம். மதிலின் உள் மேடை- பதனமும் மதிலும் படை நாஞ்சிலும். (யுத் : 994)

பதாகை - பெருங்கொடி. கொடி. படியிடை யற்று வீழ்ந்த வெற்றி யம் பதாகை ஒத்தாள். (பா : 415) சித்திரப் பதாகை ஈட்டம். (சு : 818) பன்னிறத்த பதாகைப் பரப் பெலாம். (யுத் : 992) பதாகையின் குழாந் தழைத்தன. (பா : 130)

பதாகைக்காடு - பெருங் கொடிகளின் திரள். (யுத் : 2046)

பதாகைப் பரப்பு - பெருங் கொடிகளின் தொகுதி. (யுத் : 992)

பதாகை யற்று வீழ்தல் - கொடி அறுந்து வீழ்தல். தீய உற்பாதம். முந்தி உற் பாதமாகப் படியிடை அற்று வீழ்ந்த வெற்றியம் பதாகை ஒத்தாள். (பா : 415)

பதாகையின் குழாம் - கொடியின் கூட்டங்கள். (பா : 130)

பதாகை யீட்டம் - கொடிக் கூட்டம். (சு : 818)

பதாதி - 1. காலாட் படை. பார் மிசை நடந்தது பதாதி வெள்ளமே. (அ : 965) பதாதி யீட்டம். (சு : 816) இற்றவிந்தன பெரும் பதாதி. (யுத் : 2039) பதாதிய பௌவம். (அ:965) (யுத்:2039)
2. தரையில் நின்று போர் செய்பவன். இவன் பதாதி என்று. (யுத் : 1464)

பதாதிப் பௌவம் - காலாட் படையாகிய கடல். (அ : 965)

பதி - 1. அரசன். பதியின் பிழையன்று. (அ : 426)
2 பதியம். பதிபடுகொடி. (பா : 53)
3. நகரம், ஊர், பதிவந் தெய்தினன். (பா : 808)
பதியுறு கேடு. (ஆ : 645)

பதிபடு கொடி - பதிய மிடப்பட்டு வளர்க்கப்படும் கொடி. (பா:53)

பதிற்று - பத்து மடங்கு. தனது வன்கதி பதிற்றின் முடுகி. (ஆ : 36)

பதிற் றைந்து - ஐம்பது. பதிற் றைந்து கோடி நெடிய வானரப் படை, (கி : 712)

பதின்ம ரோடடுத்த நால்வர் - பதினன்கு பேர். நிருதர் சேனையின் நாயகர் பதின்மரோடடுத்த நால்வரே. (ஆ : 404)

பதினயிரம் - பத்து ஆயிரம். கொற்றக்கரி பதினயிரம் ஒரு பத்தியிற் கொல்வான். (யுத் : 1829)

பதினயிரம் பதுமம் - பதினயிரம் பதுமம். பதுமம் என்பது ஒரு பேரெண், கோடியினுற் பெருக்கியகோடி. கோடா கோடி. தேர் பதினயிரம் பதுமம் (யுத் : 492)

பதினல் - பதினலு. பதினலாண்டு. (யுத் : 4287)

பதினலாயிரம் - பதினன்கு ஆயிரம். இன்னல் அம்பர வேந்தற் கியற்றிய பன்னலம் பதினயிரம் படை. (சு : 351)

பதினலுள்ள - பதினன்கு என எண்ணப்பட்டுள்ள. உலகமும் பதினலுள்ளவென்றி மாக்கடலும். (கி : 637)

பதினெட்டு - பத்துடன் கூடிய எட்டு. ஏர் செழு திசையும் சாரி பதினெட்டும் இயல்பின் எண்ணி. (சு : 824)

பதினெண் பாடை - பதினெட்டு மொழிகள். ஆரியம் முதலிய பதினெண் பாடையில். (கி : 14)

பதினெழு - பதினேழு. பதினெழு வெள்ளத்தோடும். (யுத் : 896)

பதினெழுவோர்கள் - பதினேழு பேர். (சு : 1230)

பதுமச் செங்கண் ஆழியாய் - செந்தாமரை போன்ற சிவந்தகண்களையுடைய சக்கரவர்த்தியே. (கி : 73)

பதுமத் தண்ணல் - பிரமன். பதுமத் தண்ணல் நிருமித்த எழிலி. (சு : 815) (அ : 535) (யுத் ; 528)

பதுமத்தாள் - திருமகள். பதுமத் தாளும்... மாயன் ஆயிரம் மௌலி மேலாள். (சு . 1313)

பதுமத் திருந்தமாது - திருமகள். பதுமத் திருந்த மாதழுதாள். (யுத் : 2628) [பர் : பே]

பதுமத் தோன் படை - பிரமன் வாளி. பிரமாத்திரம். பாசம் போய் இற்றுற் போலப் பதுமத் தோன் படையும் இன்றே நாசம் போய் எய்தும். (யுத் : 2663)

பதுமப் போதினுள் - செந்தாமரை மலரில் வாழும் திருமகளினது அவதாரமான சீதா பிராட்டி. (யுத் : 3999)

பதும பீடத்தன் நகர் - பிரமனது நகரமாகிய மனோவதி. பனிவரையும் பாற் கடலும் பதும பீடத்தன்னகரும். (பா : 324)

பதும பீடம் - தாமரைத் தவிசு. பதும பீடத்துமிப் பெருந் தகைமை சான்ற அந்தணன். (ஆ : 1193)

பதுமம் . 1. தாமரை. பஞ்சி போர்த்த மெல்லடி யெனப் பொலிந்தன பதுமம். (கி : 488)

2. ஒரு பேரெண். கோடாகோடி. தேர் பதினுயிரம் பதுமம். (யுத் : 492)

பதுமம் பவளம் பூத்த அடி - தாமரை பவளத்தைத் தோற்றுவித்தாலன்ன அடிகள். பஞ்சுபூத்த விரல் பதுமம் பவளம் பூத்த அடியாள். (கி ; 32)

பதுமலர்ப் பாவையர் - தாமரை போன்ற பாதங்களையுடைய பாவை போல் அழகிய மகளிர். (பா . 241)

பதும மலர்மேல் மாது - செந்தாமரையில் தங்கியுள்ள திருமகள். (யுத் : 2628)

பதும ராகம் - பத்மராகம் என்ற மாணிக்கம். செம்மணி. பதும ராகத் தொளி பாய. (கி : 21)

பதுமுகன் - வானரப் படைத் தலைவன். பதுமுகன் என்பவன் புகுந்தான். (கி : 720)

பதுமை - தாமரையை இடமாகக் கொண்ட திருமகள். பதுமை போன்ரெளிர் பொற்பினுள். பா : 373)

பதைத்தல் - 1. துடி துடித்தல். பாத மலர் சிவப்பத் தாம் பதைத்துப் பார் சேர்ந்தார். (அ : 391)
2. அசைதல். அசைந்து வீசுதல். சாமரை பதைப்ப. (சு : 422)
3. விரைதல். அரக்கனும் பதைக்க எய்தான். (யுத் : 2062)
4. துள்ளிக் குதித்தல். நெய் யெரி மிதித்தா லென்ன நிலத் திடைப் பதைத்தாள். (யுத் : 1613)
5. வருத்தல். இளங் கோளரி பதைத்தான். (யுத் : 3013)

பதைத்தெழுதல் - துடித்தெழுதல். பதைத்தெழுந்து கைதொழா. (அ : 1162)

பதைப்பு - 1. துன்பம். துடிப்பு பதைப்பை நீக்கினுன். (அ : 616)
2. இமைத்தல். நாட்டம் பதைப்பறச் சித்திரங்களென இருந்தார் சிலர். (சு : 265)

பதையாது - விரைவு படாது. பொன் மதில் தாவிப் பதையாதே ஏகாய் என்றுன். (சு : 177) [பா.பே]

பந்தணி விரலினுர் - பந்தை அழகு செய்கின்ற விரலையுடையவள். (பா : 1080)

பந்தம் - 1. தொடர்பு. பந்த ஞாட்புறு பாசறை. (அ : 735)
2. கட்டு. பந்த முந்து கழல் பாடுபட ஊடு படர்வோன். (ஆ : 17)
3. திரள். தொகுதி. கவந்த பந்தக் களிநடங் கண்டிட. (ஆ : 137) (யுத் : 1191) (யுத் : 2594)
4. தீப்பந்தம். பந்தமுங் கப்பணப் படையும். (ஆ : 402)
5. கட்டுப் படுத்தும் ஓர் படை. (உ. வி) (ஆ : 402)

6. பற்று. மாயாப் பந்தமா வினையம் மாளப் பற்றறு பெற்றி யோர். (ஆ : 422)

7. பிணிப்பு. (கலா) (ஆ : 423)

பந்த மாவினையம் - பிணிக்கின்ற பெரிய வினைகள். (ஆ : 423)

பந்தர் - பந்தல். விரி சிறைப் பந்தர் வீசி. (கி : 54) பந்தர் பெற்றது போன்றது. (யுத் : 960) (யுத் : 632)

பந்தரின் உரிமை செய்தல் - பந்தல் போலக் கவிந்து கொண்டு உரிய பணிவிடைகளைச் செய்தல். வானவர் மகளிர் யாரும் பந்தரின் உரிமை செய்ய யான் இவன் பணியின் நிற்பன். (யுத் : 1633)

பந்தனம் - கட்டு. சேதுபந்தனம் செய்தனன். (யுத் . 752)

பந்தனை - 1. கட்டு. அணை. [பந்தநா] செறிகடல் பந்தனை செய்குதல். (யுத் : 621)

2. தொகுதி கூட்டம். பந்தனைப் பகையைச் செற்று. (யுத்:1411)

3. உறுதி. (உ. வி) (யுத் : 1411)

பந்தனை செய்குதல் - அணை கோலுதல். செறி திரைக் கடல் பந்தனை செய்குதல் பணி நமக்கென. (யுத் : 621)

பந்தனை செய்தல் - பத்திரப் படுத்தல். சுற்றிய தூசின் மூற்றப் பழுதுருவகை பந்தனை செய்தனன். (சு : 690)

பந்தி - 1. வரிசை. சந்தனப் பந்தி செய்தூண். (பா : 122 பரியின் பந்தி. (பா : 836) (உ.வி) (யுத் : 4125)

2. ஒழுங்கான. தம்முனூர் பந்தியங் கழற் பாதம் அருச்சியா. (யுத் : 4125)

3. பத்தி. (உ.வி) எதுகை நோக்கித் திரிபு. (யுத் : 4125)

4 குதிரை லாயம். பந்தியம் புரவி. (உ.வி) (பா : 870)

பந்தி பந்திகளாய் - வரிசை வரிசைகளாய். பந்தி பந்திகளாய் நெடுங்கடுங்கணைபடா. (யுத் : 560)

பந்தி பந்தியாய் - வரிசை வரிசையாய். சரத்தாற் பந்தி பந்தியாய் மடிந்தது வானரப் பகுதி. (யுத் : 1160)

பந்தி பந்தியின் பற்குலம் - வரிசை வரிசையாகவுள்ள பற்களின் தொகுதி. (யுத் : 1567)

பந்தியில் பந்தியில் - வரிசை வரிசையாக. பந்தியிற் பந்தியிற் படையை விட்டவை சிந்துதல் கண்டு நீ தேம்புதல். (யுத்:1307)

பந்து - விளையாடும் பந்து. பந்தினை இளையவர் பயிலிடம். (பா:79)

பப்பரர் - பப்பர வீரர். பப்பரர் எயினர் சீனர். (பா : 662)

பப்பு நீர் - பரவுந்தன்மை. பரவிய இயல்பு. பம்பு நீர்மை. பப்பு நீராய வீரர். (யுத் : 709)

பம்ப - 1. செறிய. பல்வகைப் புருவக் கொடி. பம்பிட. (கி : 610)
2. மிக ஒலிக்க. பாதச் சிலம்பினொலி வேலை யொலி பம்ப. (சு : 77)

பம்பரம் - பம்பரம் என்னும் கருவி. வாலிடைக் கொடுந்தொழி லரக்கரைச் சுற்றி வீசலிற் பம்பரமாமெனச் சுழன்றுர். (சு : 780)

பம்பி - செறிந்து. (அண்) ஒலித்து. (கலா) எழுந்து. (வெ ப) (வை.மு) பம்பி மேகம் பரந்தது. (பா : 14)

பம்புதல் - நெருங்குதல். மொய்த்தல். பம்பு தேன் மிஞிறு. (பா : 928)
2. ஒலித்தல். மிக் கொலித்தல். பம்பை பம்பின. (அ : 245) (யுத் : 1372) பம்புறு நெடுங்கடற் பறவை. (யுத் : 574)
3. பரவுதல். பம்புறு நெடுங்கடல். (யுத் : 874) (உ.வி) (யுத் : 1372)
4. நெருங்குதல். பம்பும் மணிதாரணி. (யுத் : 1718)
5. எழுதல். பம்பி மேகம் பரந்தது. (பா : 14)
6. மிகுதல். பம்பிப் பொங்கும் கங்கை. (பா : 585)
7. செறிதல். நிறைதல். பம்பு பேரொளிய. (யுத் : 2154)

பம்பு திண் புரவி - பரந்த வல்லமை வாய்ந்த குதிரைப் படை. பம்பு திண் புரவியும் படைஞரும் புடைவர. (பா : 1133)

பம்பு படை - நிறைந்த படை. அதிர் பேரிகை பம்பை பம்பு படையினன். (அ : 647)

பம்பை - 1. ஓர் இசைக் கருவி. (அ : 245)
2. பறை. பம்பை பம்பு படையினன். (அ : 647)
3. பொய்கை. பம்பை யாம் பொய்கை கண்டார். (ஆ : 1205)

பம்மல் - 1. நெருக்கம். பிணத்தின் பம்மற் குப்பையின் பரப்பே. (யுத் : 1114)

2. திரள். தொகுதி. படையுறு பிணத்தின் பம்மற் பருப்பதம். (யுத் : 2171)

பம்மற் குப்பை - நெருங்கிய குவியல். (யுத் . 1114)

பய் - பை. படம். பய்யும் கோடிப் பஃறலை யோடும். (யுத் : 3805) [பா : பே]

பயங்கள் தீர்தல் - அச்சம் நீங்கப்பெறுதல். வானவர் பயங்கள் தீர்ந்தார். (யுத் : 4213)

பயங் கெழுகுமரர் - செல்வப் பயன்கள் மிகுதியுடைய இளங்குமரர்கள். பயங் கெழு குமரர் வட்டாட்டாடிடம். (பா : 582)

பயஞ் சுற்றுதல் - அச்சஞ் சூழ்ந்து கொள்ளுதல். சொல்லினுர் பயஞ் சுற்றத் துளங்குவார். (யுத் : 3147)

பயத்த துன்பம் - அச்சத் துடனியைந்த துன்பம். பயத்த துன்பமே உருவு கொண் டென்னலாம் படியான். (யுத் : 4114)

பயத்தல் - 1. விளைதல். பெறுதல். உண்டாதல். இன்னுயிருண்டவன் நாமம் பயிற்றவோ நினைப் பயந்தது நான். (யுத் : 181)

2. தருதல். சொல்லுதல். பருகலுற்ற அமுது பயந்த நாள். (யுத் : 3940)

3. பயனளித்தல். புண்ணியம் பயக்கின்றுழி யரிய தெப் பொருளே. (ஆ : 1179)

பயந்த - பெற்ற. எற் பயந் தெடுத்த மூவர். (அ : 568) பற்றிய தவத்தினிற் பயந்த மைந்தற்கு. (அ : 848)

பயந்தது - பயப்பட்டது. பின் வாங்கியது. பழி கொண்டு பயந்தது. (யுத் : 1101)

பயந்த நாள் - சொன்ன பொழுது. (யுத் : 3940)

பயந்தவர் பெற்றவர். பயந்தவர்களும் இகழ் குறளன். (பா : 454)

பயந்தவள் - பெற்றவள். தனைப் பயந்தவள் நேயமும் தாங்கி. (யுத் : 4134)

பயந்திரண்டனைய நெஞ்சு - அச்சந் திரண்டாற் போன மனம். பயந் திரண்டனைய நெஞ்ச கால் திரண்டனைய கால் கடுநடை கலினப் பாய்மா. (அ : 1045)

பயந்தீர்தல் - அச்சம் நீங்குதல். மாதவரும் வேதியரும் பயந் தீர்த்தார். (யுத் : (1581)

பயப் பய - மெல்ல மெல்ல. பயப் பழத் தழுவும் பாங்கர். (கி : 57) பயப் பயக் கொண்டு போனுர். (பா : 868) (ஆ : 648) (கி : 560)

பயம் - 1. அற முதல் நாற்பொருள். நூல்வரைத் தொடர்ந்து பயத்தொடும் பழகி. (பா : 100)

2. அகழி நீர். பயத் தொடும் பழகி. பா : 100)

3. பயன். பலன். பதியுறு கேடுவந்து குறுகிய பயத்தினுனும் . (ஆ : 645)

4. அச்சம். பக்கம் நின்றவை பயத்தினிற் புயற் கற்றைப் பசும் புனல் பகு வாயிற் கக்க. (யுத் : 219) இறப்பெனும் பயத்தை விட்டாய். (யுத் : 1351) பயத்தின் விம்முவார். (சு:810)

5. செல்வப்பயன். பயங் கெழு குமரர். (பா : 582)

பயம் பிடரினுந்தல் - அச்சம் பிடரியைப் பிடித்துத் தள்ளுதல். பெரும் பயம் பிடர் பிடித்துந்த. ஆயிரம் பிணக்குவை மேல் விழுந்துளே வார். (சு : 805)

பயம் பிடித்தல் - அச்சத்தாற் பீடிக்கப்படுதல். அச்சங் கொள்ளுதல். பெரும்பயம் பிடிப்பரன்றே. (யுத் : 2224)

பய முண்ணுதல் - அச்சங் கொள்ளல். சிலர் பய முண்டு பட்டார். (சு : 765)

பயமுற்றுக் குலேவாதல் - அச்சங் கொண்டு நடுங்குதல். கூருயின பயமுற்றெரு குலேவாயின. (யுத் : 1824)

பய மோர்வார் - அச்சத்திஞல் வரும் பயனே ஆராயுந்திறத்தை யுடையவர். பழையம் யாமெனப் பண்பல செய்வரோ பருணிதர் பயமோர்வார். (சு : 293) [பா : பே]

பயல் - பக்கம். பாதி. முதலிலும் கடைசியிலும் போலிபெற்று பையர் எனவும் வரும். (அண்) ஆளி பொங்கும் மரம் பையர் ஓதியே. (பா : 959)

பயன் - பிரயோசனம். பலன். படந்தாழ் அரவை ஒரு கரத்தாற் பறித்தா யெனினும் பயனின்றுல். (சு : 598)

2. காரிய ரூபமான பிரபஞ்சம். விகுதியினுட் பயன் பயந்தது. (யுத் : 139)

3. விளே பொருள்களாகிய நற்பயன். இருதுவும் பயனுமாய். (கி : 360)

பயன் தீர் நோன்பு - பயனற்ற விரதங்கள். பயன் தீர் நோன்பின் ஆவியல் மனிதர். (சு : 475)

பயன் துய்த்தல் - பயனை அனுபவித்தல். பயனுமாய்ப் பயன் துய்ப் பானுமாய். (யுத் : 204)

பயன் மரம் - பயன்படுமரம். பார் கெழு பயன் மரம் பழுத்தற்ரு கவும். (அ : 82) [பா : பே]

பயனிகத்தல் - பயனின்றிக் கழிதல். உனக்கு நான் முயல் அடிமை யின் பயனிகந்தறுவ தாகென்ருன். (யுத் : 2435)

பயனில் பழியாக்கை - பயனற்றதும் நிந்தனைக் குரியது மான உடல். பாக்கியத்தால் இன்றென் பயனில் பழி யாக்கை போக்கு கின்றேன். (ஆ : 1101)

ப்யனுய்த்தல் - பயனை அனுபவித்தல். (யுத் :)

பயிர் - 1. ஒலி. ஒலிக்கின்ற. பயிர் கிளை வேயின் கீதம். (பா:789)
2. பயிர்ப்பு. பயிரொன்று கலையுஞ் சங்கும். (பா : 1155)
3. அழைத்தல். பேடையைப் பயிரும் குரலிரங்கின. (அ:734)

பயிர் கிளை வேயின் கீதம் - புல்லாங்குழலி லிருந்து ஒலிக்கின்ற பலதிறப்பட்ட பாடல். (பா . 789)

பயிர்தல் - 1. கூவுதல். கூப்பிட்டழைத்தல். (கலா) அழைத்தல். (அண்) துயராலே தொலையாத என்னையும் பயிராயோ. (கி : 3904)
2. அருவருத்தல். (வை.மு) (கி : 394)
3. பொருளுள்ளததால். அயிரா நெஞ்சம் ஆவியு மொன்றே எனுமச் சொற்பயிரா எல்லைப் பாதகனேர்கும் பரிவுண்டோ. (யுத் : 2602)

பயிர்வு - ஆரவாரம். கள்ளுண்டுள்ளந் தள்ளத் தம்மறிவு தள்ளப் பயிருற. (சு : 285)

பயிராதது - தவருதது. (வை.மு) பயிராத தொர் பொருளின்ன தென்றுணர்வீர். (யுத் : 3033)

பயிராததொர் பொருள் - இன்னது இது வென்று இசைக்க முடியாத பொருள். (கலா) அருவருப்பில்லாத தொர் பொருள். (பழைய வுரை) (யுத் : 3033)

பயிரியர் - இன்னேசை யுண்டாக்குபவர். பயிரியர் வேயின் கீதம். (பா : 789) [பா : பே]

பயில் - செறிவு. பயிலுறுத்துரி போர்த்த நற்பண் பென. (பா:694)

பயில்வன - நிகழ்வன. பயில்வன பழுதில. (சு : 368)

பயில்வுறுதல் - பொருந்து மாறு இருத்தல். விண்முகிற் கணங்கள் எங்கும் பயில்வுறத் திவலே சிந்திப் பயப் பயத் தழுவும் பாங்கர். (கி : 54)

பயிலல் - 1. நெருக்கம். பயில் சிறை அரச அன்னம். (பா : 45)

2. ஒப்புருபு. சரம்பயில் நெடுந்துளி. (கி : 526)

3. பழகுதல். பந்துகள் மடந்தையர் பயிற்றுவார். (பா : 137) வெம்மை பயின்ருன். (யுத் : 2256)

4. நெருங்குதல். பருவரல் என் வயிற் பயிலற் பாலதோய். (ஆ : 1120)

5. பொருந்தித் தங்குதல். பருவரல் என் வயிற் பயிலற் பாலதோ. முகம் பயில் கலினப்பாய்மா. (யுத்:2320) (ஆ:1126)

பயிலா - பயின்று. படைபல சிலே யொடு பயிலா. (பா : 307)

பயிலா இசை - பயிலாத (அபூர்வமான) இசை. பண்ணுந் நரம்பிற் பயிலா இசைப்பாணி ஓதை. (பா : 971)

பயிலுதல் - 1. பொருந்துதல். பழகுதல். பயில்விர் குருதிகள். (யுத் : 3753)

2. தங்குதல். பருவரல் என் வயிற் பயிலற் பாலதோ. (ஆ:1120)

பயிலுறுத்தல் - செறியச் செய்தல். யாணேயுரித்த நாட் பயிலுறுத் துரி போர்த்த நற்பண் பென. (பா : 694)

பயிலெயிறு - பொருந்திய பற்கள். பயிலெயிற் றிரட்டைப் பணே மருப் பொடிய. (சு : 415)

பயிற்றல் (பயிற்றுதல்) - 1. கூறல். உரிப பற்பல உரை பயிற்றி. (பா : 278)

2. தெரியக் காட்டல். வேலொடு வாள் வில் பயிற்றலின். (பா : 103)

3. பழக்குதல். இன்னுயிருண்டவன் நர்மம் பயிற்றவோ உனேப் பயந்தது நான். (யுத் : 181) (உ. வி) (பா : 103)

4. அடைகாத்தல். முட்டை முட்டப் பயிற்றிய. பருவம் ஒத்த காலத்துள். (யுத் : 205)

பயிற்றி - சொல்லி. உரிய பற்பல உரை பயிற்றி. (பா : 278)

பயிற்றியர் - பழக்கத்தை யுடையவர். இட்ட கல்லொடும் வயிற்றிடைப் புகப்பல பகலும் வைகிய பயிற்றியராயினும்.(யுத்:2300)

பயிறல் - பழகுதல். பொருந்தி ஆடுதல். கூத்தாடுதல். தலையிலா ஆக்கை ஈட்டம் பயிறலைப் பார்க்கும். (யுத் : 2423)

பயின் மரம் - நெருங்கிய மரம். பிசினுள்ள மரமுமாம். பயின் மரம் நிழலின. (அ : 681)

பயோததி - பாற்கடல். திரை கெழு பயோததி. (பா : 191) (யுத் : 2683)

பரக்கழி - 1. நாண மற்ற செயல். ஒருவன் பூண்ட தோர் பரக்கழி யாமெனப் பரந்து நீண்டதால். (யுத் : 3896)
2. பெரும்பழி. (அண்) பரக்கழி இது நீ பூண்டாற் புகழையார் பரிக்கற் பாலார். (கி : 316)

பரக்கு - அழிவு; பெருங்கேடு; அப கீர்த்தி. (பழையவுரை) பரக்கழி (யுத் : 3896)

பரக் கழிவு - பெரும் பழி. (கலா) பரக்கழிவு இது நீ பூண்டால். (கி : 316) [பா : பே]

பரகதி - பரமபதம். பரகதி உணர்ந்தவர்க் குதவும் பண்ணவன். (பா : 191)

பரங் கிடந்த மாதிரம் - பாரந் தாங்கிய திக்குகள், பரங்கிடந்த மாதிரம் பரித்த பாழி யானை. (ஆ : 652)

பரங்கொள் வானவர் - பெருமையினைக் கொண்ட தேவர்கள். (யுத் : 2966)

பரசம் - ஒரு வகை ஆயுதம். (சு : 165)

பரசு - 1. கோடரி. பரசுடைக் கடவுள். (யுத் : 3973)
2. புகழும். பரசு வானவன். (பா : 655)

பரசுடைக் கடவுள் - சிவபிரான். (யுத் : 3973)

பரசுதல் - துதித்தல். பரசியே வணங்குந் தோறும். (யுத் : 4326)

பரசுராமன் - சமதக்கினி முனிவன் புதல்வன். பரிவறு சிந்தையப் பரசுராமன். (பா : 1391)

பரஞ்சுடர் - பேரொளிப் பிழம்பாகிய பரம் பொருள். பரஞ்சோதி. பண்டை நான் மறைக்கு மெட்டாப் பரஞ்சுடர். (யுத் : 4081) (கி : 464)

பரஞ்சுடர் ஒருவன் - எல்லா ஒளிகளுக்கும் மேலான ஒளி வடிவமான உயர்ந்தோன். பரமசிவன். பரஞ்சுடர் ஒருவனைப் பொருவும் பான்மையான். (சு : 981)

பரஞ்சுடர்ப் பண்ணவன் - பரஞ்சோதியாகிய சிவபிரான். (கி : 464)

பரடு - கண்டைக்கால். பரட்டிசை. (சு : 99)

பரண் - தினை முதலியவற்றைக் காவல்புரியும் பொருட்டு உயர்ந்த கால்களைக்கட்டி மேலே குறுக்காகக் கிளை முதலியவற்றைப் பரப்பி அமைத்த உயர்ந்த இருக்கை. தொடர் மஞ்சம் போலுளபரண். (அ : 673)

பரணி - பாத்திரம். ஜாடி. (கலா) ஒண்டளச் சேறிடு பரணி. (கி : 16)

பரத்தல் - பரவுதல். மிகுதல். விரிதல். விடம் பரந்தனைய தாய வெண்ணிலா. (ஆ : 1045)

பரத்தின் நிற்றல் - இம்மை மறுமைப் பயன்களைக் கருதாது பரம் பொருளையடையும் முயற்சியில் ஈடுபட்டு நிற்றல். பரத்தினிற்கும் பரத்துவன் எனும் பேர் வரத்தின் மிக்குயர் மாதவன் (அ : 1064) [பா : பே]

பரத்தின் நீங்கல் - வினைச்சுமை யற்றிருத்தல். பரத்தின் நீங்கும் பரத்துவன். (அ : 1064)

பரத்துவன் - பரத்து வாசன். (அ : 1133) பங்கயத்துப் பரத்துவன். (யுத் : 4164)

பரத்துவாசவன் - பரத்துவாச முனிவன். பரத்துவாசவன் உறை விடம் இது. (யுத் . 4101)

பரத நூல்பகர்தல் - பரத நூல் கூறும் நாட்டிய முறையை ஒத்து ஒலித்தல். பாடகம் பரதநூல் பகர. (பா : 1146)

பரதன் - இராச்சிய பாரத்தைப் பரிக்கும் வல்லமை யுடையவன். உதித்திடு மற்றைய ஒளியைப் பரதன் எனப் பெயர் பன்னினி னன்றே. (பா : 300)

பரதாரம் - பிறர் மனைவி. பரன் - அந்நியன். தாரம் - மனைவி. ஆசில் பரதார மிவை அஞ்சிறை யடைப்பேம். (யுத் : 64)

பரந்தரு - உடலைத்தந்த. பரந்தரு நான் முகன். (ஆ : 249)

பரந்தொழுகுதல் - பரந்து ஓடுதல். ஓதியோடு அன்றவூர் உதிரமுந் தெரிகிலாது இடைபரந் தொழுகியே. (சு : 972)

பரப்பு - 1. பரவிய நிலம். தென்றிசை மன்று சூழ்ந்த பரப்பு. (கி : 930)
2. தொகுதி. சேனையின் பரப்பினுன். (அ : 1093)
3. இடம். வரைப்பரப்பு, வானப்பரப்பு, கரைப்பரப்பு கடற் பரப்பு. (யுத் : 683)

பரம் - 1. மேலானது. தனி மூலத்தரும்பரமே. (ஆ : 49)
2. பரம்பொருள். நீ யாதி பரமும். (ஆ : 54) (யுத் : 4022)
3. பெருமை. பரங்கொள் வானவர். ( )
4. பரமார்த்தம். பயிராத தொர் பொருளின்ன தென்றுணர்வீர் இது பரமால். (யுத் : 3033)
5. உடம்பு. பரந்தரு நான் முகன். (ஆ : 249)
6. வசம். எம்பரத்த தாக்கி அரசுரிமை. (அ : 1128)
7. சுமை. பாரம். பொன்னின் நிறைபரஞ் சொரிந்து (பா : 151) (கி : 88) சேனைப்பரம். (யுத் : 2393)
8. மேன்மை. (உ.வி) (ஆ : 249)
9. திருமால். (உ.வி) (ஆ : 249)
10. முன். (அண்) (ஆ : 552)
11. தொகுதி. சேனைப் பரம். (யுத் : 2393) (யுத் : 100)
12. சார்பு. நம்பரத்தடங்கு மெய்யன். (யுத் : 771)

பரம்பரம் - முதன்மையான மேலான கடவுள். நீயாதி பரம்பரமும். (ஆ : 54)

பரம்பரன் - மேலான பரம்பொருள். பரம்பரனே. (ஆ : 1186) (யுத் : 3882)

பரம்பரை - தலைமுறைத் தொடர்பு. புயலவன் திசைப் போர் மத யானையின் இயல் பரம்பரை ஏழிரு கோடியால். (யுத் : 3572)

பரம்பி - பரவும்படி. பிணத்தின் குப்பை வரம்பில பரம்பி ஆர்த்து மலைகின்ற பொழுதின். யுத் : 2012)

பரம்பிற் காந்தும் இனமணித் தொகை - பரம்படிக்கப் பெற்ற இடங் களில் ஒளிவிடுகின்ற நவரத்தினங்களின் தொகுதி, (பா : 38)

பரம்பு - பரம்படிக்கும் பலகை. பலகையால் சமப்படுத்திய நிலம். பரம்பெலாம் பவளம். (பா : 33) (பா : 38)

பரம்பொருள் - மேலான பொருள். ஓதிக் கேட்பது பரம்பொருள் இன்ன மொன் றுளதோ. (யுத் : 160)

பரமஞானம் - மேலான ஞானம். பரஞானம். பரமஞானம் போய்த் தெட்டவர். (அ : 20)

பரமபதம் - வைகுந்தம். திருமால் உலகு. அராவணை அமலன் உலகெனும் பரமபதம். (பாயி : 21)

பரமர் - மேலான தேவர். மேம்பட்டவர். பர மராம் அரன் முதல் தலைவர். (கி : 88)

பரமன் - 1. மேலோன். பரமன் அன்னவன் பெயர் அறிகு வென் எனப் பறிப்பான். (கி : 303) [பா : பே]

2: சிவபிரான். என்று பரமன் பகர. (யுத் : 3412)

பரமார்த்தம் - பெரும் பொருள். (யுத் : 4021)

பரமுகம் - அலட்சியம். (வை. மு) பர முகப்பகை துமித்து. (கி : 88)

பர முருக்குதல் - (பரம் முருக்குதல்) முன் வருத்துதல். (அண்) மிகுதியாக அழித்தல். (வை. மு) உல கேழையும் பர முருக்கிய பாவத்தினால். (ஆ : 552)

பர முனி - சிறந்த முனிவன். பரத்துவன் எனு நாமப் பரமுனி. (அ : 709)

பர மேட்டி - பரமேஷ்டி. மேலான வேள்வி வடிவாக இருப்பவன். உயர்ந்த நிலையிலுள்ளவன். பரம் பொருள். (அண்) சிறந்த தாகிய பரமபதத்தில் இருப்பவன். (வை. மு) இரண்டு மொக்கின்ற பண்பார் அறிவார் பர மேட்டி. (ஆ : 1185) பண்டும் இன்றும் அமைக்கின்றபடியை ஒருவாய் பர மேட்டி. (யுத் : 2618)

பரல் - பருக்கைக் கற்கள். பொரி பரல் படர் நிலம். (பா : 357) பரற் றுறு பல பழுவத்தெரி. (யுத் : 2818)

பரல் மொய் கான் - பரற் கற்கள் நெருங்கிய காடு. முடி சூடாமற் வெம்பரல் மொய் கானிடை மெய்யே நெடியோன் நீங்க. (அ : 220) [பா : பே]

பரவல் - புகழ்தல். பரவ லருங் கொடை. (ஆ : 195)

பரவு - புகழ்தற் குரிய. பரவு நல்லொழுக்கு. (பா : 23)

பரவுதல் - 1. புகழ்தல். (பா : 23)

2. போற்றுதல். துதித்தல். (வை.மு) (அ : 107)

3. வணங்குதல். (அண்) யாவதெப் பொருள். இம்மையும் அம்மையும் தேவரைப் பரவுந்துணை சீர்த்ததே. (அ : 107)

4. பாடுதல். திருக்கதையறிந்தனுதினம் பரவுவோர். (பாயி:20)

பரவை - 1. கடல். பரந்து நிற்பது பற்றிக் கடலுக்குக் காரணக் குறி. அகலரும் பரவை. (சு : 5)

2. பரந்திருத்தல். பரவை யல்குல் தோகையர். (அ : 253)

பரவைக்குழி - கடலாகிய பள்ளம். துணி பட்டுதிர் கணையின் திடர் பட்டது பரவைக் குழி. (யுத் : 3002)

பரவை மணல் - கடலினுடைய மணல். பரவை நுண் மணல் எண்ணினும். (யுத் : 180) பரவை மணலிற் பலர். (யுத் : 3469)

பரவை யென்னுங் குழி - கடல் என்ற சிறுகுழி. பரவை யென்னுங் குழியினைக் கருதிச் செய்த குமண்டை. (யுத் : 616)

பரவை யேழ் - ஏழு கடல். ஒலிதிரைப் பரவை ஏழும். (யுத் : 269) வாம் புனற் பரவை யேழும். (யுத் : 3207)

பரற்றருகானகம் - பரல் தரு கானகம். பருக்கைக் கற்கள் நிறைந்த காடு. பறற்றரு கானகத்தரக்கர். (ஆ : 1116)

பரற்றுறு தொல் பழுவம் - (பரல்துறு) பரற்கற்கள் நெருங்கியுள்ள பழமையான காடு. (யுத் : 2818)

பரன் - பரம்பொருள். கருதின கருதின காட்டு கின்றது தரு பரனருள் இலிச்சான்று வேண்டுமோ. (யுத் : 197)

பராகம் - துகள். பரவிய கனகநுண் பராகம். (கி : 831)

பராபரம் - பராபரப் பொருள். உயர்வற உயர் நலமுடைய கடவுள். (அண்) தானுமாகப் பராபரமாகி நின்ற பண்பினைப் பகருவார்கள் (யுத் : 4358)

பராவமுது - மேலான அமுதம். இராமன். பண்ணின் நோக்கும் பராவமுதை. (அ : 628)

பராவரும் - 1. அளவிட்டுப் புகழ்தற்கரிய. துதித்தற்கரிய. பரா வருஞ் சிரத்தையாரும் பத்தி. (ஆ : 276) பராவரும் நலத் தொருவன் மைந்தன். (ஆ : 616) பராவரு மறைப் பொருள். (யுத் : 198) (அ : 144)

2. பராவி (பாவி) வருகின்ற. பராவரும் பழி. (சு : 676)

பராவி - தொழுது. தெய்வமும் பராவி. (பா : 1219)

பராவு - (பராவுதல்) 1. புகழ்தல். துதித்தல். பராவரும் புதல்வர். (அ : 144) தேவர்ப்பராவினின் நீங்கினேன் அப்பழிபடு பிறவி. (ஆ : 276)
2. அதிசயித்தல். பராவுந்தொல் செருமுறைவலிக் சூரியன பகர்ந்து. (யுத் : 1452)
3. சொல்லுதல். வளைந்த தானை பராவருங் கோடி ஐந்தும். (யுத் : 2392)

பரி - குதிரை. (உச்சைச்சிரவம்) வாம் பரி. (பா : 945) [பா;பே] வயப்பரிகள். (பா : 910) வெய்ய களிறு பரியாளொடு இரதம் விழ. (யுத் : 3425)

பரி ஆழி - குதிரைவாய் நுரை நீர்.

பரிக்குழுக்கள் - குதிரைகளின் கூட்டம். (யுத் : 3743)

பரிகம் - இரும்புத்தடி. கேடயம். (சு : 7h8)

பரிகலம் - பத்திரம். பொன்னின் மணிப் பரிகலம். (பா : 739)

பரிசிலர் - பரிசில் மாக்கள். வன்கண் உலோபர் கடத்தலைப் புலர்ந்து நிற்கும் பரிசிலர். (அ : 815)

பரிசு - 1. தன்மை. இயல்பு. பகர்மின் வந்த பரிசு. (பா : 393)
2. விதம். ஒரு பரிசு தான் பொரு... ஆவது. (சு : 532) யானுடைக் கற்பினை எப்பரிசு இழைத்துக் காட்டுகேன். (சு : 508)
3. செய்தி. விளைந்த பரிசு இனி நாம் விளம்புவாம். (அ : 608) [பா : பே]
4. உரியதனிச் சிறப்பு. பண்டிகள் பண்டிகள் பரிசிற் செல்வன. (பா : 840)
5. காணிக்கை. ஒவலர் உதவிய பரிசின் ஓங்கல் போல். (ஆ : 566)

பரிசை - கேடயம். வலயங்கற் பரிசை. (யுத் : 1323) [பா : பே]

பரிஞ்சு - பரிதாபத்துடன். (பழையவுரை) பரிஞ்சு இறை அழுங்குகின்றேன். (2841) [பா : பே]

பரிணதர் - அறிவின் பக்குவம் முதிர்ந்தவர். பருணிதர். பரிணதர் தெரிந்த நூலின் நன்னய முணர்ந் தோனுகி. (பா : 669)

பரிணதன் - தத்துவ ஞானி. பெரும் பரிணதன் கொல். (பா : 1182) [பா : பே]

பரிணமித்தல் - வளர்தல்.

பரித்த காவினர் - காத்தண்டினைத் தாங்கியவர்கள். பரித்த காவினர் பப்பரர். (பா : 852)

பரித்தல் - 1. தாங்குதல். பரித்த செல்வம். (சு : 359) (ஆ : 652)
2. தரித்தல். பொறுத்தல். பூணுதல். புகழையர்ர் பரிக்கற் பாலார். (கி : 316)
3. பந்தனஞ் செய்தல். உயிர்ப்பிடை பரிப்ப. (கி : 864)

பரித்தேர் - குதிரைகள் பூட்டிய தேர். ஆயிரம் பரித் தேரவன்- (யுத் : 3017)

பரிதல் - 1. அற்று நீங்குதல். அறுதல். இழையிற் கோத்த நூல் பரிந்தன. (பா : 613) பரிந்த மேகலை. (அ : 478)
2. இரங்குதல். பரியும் நின் குலப் புதல்வன். (அ : 168)
3. விரைந்து செல்லுதல். பரிந்த அண்ணல். (யுத் , 1466)
4. அன்பு கொள்ளுதல். பாரிற் செல்கின்ற வறுமையைப் பார்த் தனன் பரிந்தான். (யுத் : 1178)
5. வருந்துதல். இமையோர் பரியலுற்றனர் உலைந்தார். (யுத் : 1169)

பரிதி - 1. சூரியன். சேட்டகன் பரிதிமார்பன். (சு : 733)
2. ஒளி. பரிதி பற்றிய பல் பகல் முற்றினர். (அ : 626)
3. விளக்கம். பரிதி வாளினர். (ஆ : 609)

பரிதிசேய் - சூரியன் மகன் சுக்கிரீவன். (யுத் : 2229)

பரிதிபடுதல் - சூரியன் அத்தமித்தல். பரிதிபட்டான். (யுத் : 2183)

பரிதிபற்றிய பல் கலன் - சூரியன் போல் ஒளிவிடும் ஆபரணங்கள். பரிதிபற்றிய பல் கலன் முற்றினர். (அ : 626) [பா : பே]

பரிதி பற்றிய பல் பகல் - ஒளிபொருந்திய பல பகல். (அ : 626)

பரிதி மண்டிலம் - சூரிய மண்டிலம். (பா : 345) [பா : பே]

பரிதி மைந்தன் - சுக்கிரீவன். (யுத் : 1092)

பரிதிவானவன் - சூரியன். பரிதி வானவன் நிலம் பகையறப் பருகுவான். (பா : 346) [பா : பே] (அ : 584)

பரிந்த சிந்தை - இரக்கங் கொண்ட சிந்தை. தன் பால் பரிந்த சிந்தை அம்மன்னவன் கருதிய பயனும். (அ : 34)

பரிந்த பூ - (கூந்தலிலிருந்து) நழுவிய பூ. பரிந்த பூவுள. (அ:56)

பரிந்தவன் - அன்பு கொண்டுள்ளவன். பரிந்தவன் பையு ளெய்தி. (அ : 663)

பரிந்திலர் - வருந்தாதவர். பரிந்திலர் தேறி முந்தைத்தம் சிந்தை யராயினர். (அ : 1084)

பரிப் பந்தி - குதிரைச் சாலே. பாய்பரிப் பந்தி. (சு : 727)

பரிபவஞ் செய்ஞ்ஞர் - பழியை விளக்குஞ் செயலேச் செய்பவர். உங்கை மூக்கரிந்த வீரரைப் பரிபவஞ் செய்ஞ்ஞரைப் படுத்தி லாத நீ. (யுத் : 29)

பரிபுரம் - சிலம்பு. பரி புரம் புலம்ப. (பா : 873)

பரிமள கந்தம் - மிக்க நறுமணம். கருப்புரஞ் சாந்தும் கலவையு மலருங் கலந்துமிழ் பரிமள கந்தம். (சு : 408)

பரிமளம் - நறுமணம். பசும்புலால் நாறும் வேலே பரிமளங் கமழ்ந்த தன்றே. (யுத் : 636) பரிமளங் கமழ்வன பாரார்ய். (அ : 761)

பரிமா - குதிரை. காய் கரி தேர் பரி மாத்தா ராயிர கோடி. (யுத் : 2908) [பா : பே]

பரிமுக மகளிர் - குதிரை முகமும் மானிட சரீரமும் உடையவர்கள். (அ : 747) [பா : பே]

பரிமுக மாக்கள் - 1. மனித உடலும் குதிரை முகமுங் கொண்ட தெய்வ மக்கள். பாடலால் ஊடல் நீங்கும் பரிமுக மாக்கள். (பா . 943)
2. கின்னரர். உருத் தெரிகின்ற பளிக்கறைச் சில பரிமுக மாக்களேப் பாராய். (அ : 247)

பரிமுக மாதர் - குதிரை முகமும் மனித சரீரமும் உடைய மாதவர் கள். (பா : 943) [பா : பே]

பரிய - பெருமையுடையன. பெரிய. மேரு மால்வரையினும் பரிய. (கி : 166) [பா : பே] பரியகா ரகில்சுடநிமிர் புகைப் படலம். (அ : 754)

பரியல் - 1. விரைந்து செல்லுதல். படித்தலங் காவலன் பரியற் பாலனே. (அ : 883) [பா:பே]
2. வருந்துதல். இமையோர் பரியலுற்றனர். (யுத் : 1169)

பரியலுறுதல் - வருந்துதல். இமையோர் பரியலுற்றனர். (யுத்:1169)

பரியு நெஞ்சு - வருந்தும் மனம். விரகினெய்தினர் பரதனை வணங்கினர் பரியு நெஞ்சினர். (அ : 934) பழுதிது என்றனன் பரியு நெஞ்சினன். (கி : 132)

பரிவியற்றல் - அன்பு செய்தல். பெற்றவன் தன்னைப் போலப் பெரு பரிவியற்றி நின்றார். (அ : 266)

பரிவில்லவர் - அன்பில்லாதவர். நின்கட் பரிவில்லவர் நீள்வனத் துன்னை நீக்க. (அ : 424)

பரிவினன் - அன்புடையவன். (குகன்) பண்ணவன் வருக என்றான் பரிவினன் விரைவிற் புக்கான். (அ : 657)

பரிவினீக்குதல் - அன்பு மொழியாற் போகச் செய்தல் நிருபரும் பொருவில் சுற்றமும் பக்கமும் பெயர்கெனப் பரிவில் நீக்கினான். (அ : 3)

பரிவு - 1. அன்பு. பரிவிகந்த மனம். (அ : 519)
2. வருத்தம். பழக்கனே டிரந்தவர் பரிவு தீர்தர வழங்கவும் (பா : 159)
3. இரக்கம். பரிவறு சிந்தையப் பரசுராமன். (பா : 1391)
4. துன்பம். பைந் தொடித் திருவின் பரி வாற்றுவான். (கி : 347)
5. ஆசை.

பரி வேள்வி - அசுவ மேத யாகம். (பா : 273)

பருகல் (பருகுதல்) - 1. பானஞ்செய்தல். பருகலுற்ற அமுது. (யுத் : 3940) பருகு நீர் நசை. (3991)
2. விழுங்குதல். பருகிய நோக்கெனும் பாசம். பா : 600)
3. அனுபவித்தல். பருகுதிர் போலும் நுங்காவி நாண் மலர்க் கண்ணியர் காதல் நீர். (கி : 595)
4. அழித்தல். பருகு தீமடுத்து. (சு . 1193)

பருகிடல் - தாக்குதல். பதங்கள் தீப்பருகிடப் பதைக்கின்றார். (கி : 842)

பருகுதீ - அழிக்கின்ற. நெருப்பு. (சு : 1193)

பருஞ்சிறை - பெரிய சிறகுகளை யுடைய சடாயு. (அண்) பருஞ்சு இறை. பருந்து இனமாகிய கழுகுகளுக்கு அரசனாகிய சடாயு. (கலா) பருஞ்சிறை இன்னன பன்னி உன்னுவான். (ஆ : 956)

பருஞ்சு - பருந்து. போலி. (கலா) பருஞ்சு இறை. (ஆ : 956)

பருணன் - கை தேர்ந்தவன். திறமுடையவன். (போர்த்திறம்) பருணிதன் என்பதன் விகாரம். பண்ட மரிற் பருணன் தன் பெரும் பாசமும் பறிப்புண்டு. (யுத் : 519)

பருணிதர் - 1. புலவர்கள். பர்வரும் கிழமைத் தொன்மைப் பருணிதர். (கி : 807)

2. சான்றோர். பண்பல செய்வரோ பருணிதர். (சு : 293)

3. அறிவுடையோர். (உ.வி) (சு : 293) பருணிதர் தண்டம் இதன்ருல். (யுத் : 2262)

4. பக்குவ சாலிகள். பன்னெறி தோறும் தோன்றும் பருணிதர். (யுத் : 4332)

பருணிதன் - ஞானி. பெரும் பருணிதன்கொல் படு கொலையான் என்றுள். (பா : 1182)

பருதி - 1. வட்ட வடிவம். (கலா)

2. உருள். (அண்) படியொடு படிந்தன பருதித் தேர்ப்பணை. (ஆ : 484)

3. சூரியன். பருதி மேற்கொண்டு பாய்ந்தனனுமென. (யுத்:482) பருதி கான் முளை. (யுத் : 1482)

பருதிக் கனல் கதுவுற்றுடல் வற்றின - கதிரவனுடைய உடற் பகுதிகள் தீச்சுடராற் கதுவப்பட்டுப் பற்றி எரிந்தன. (யுத் : 3002)

பருதி கான் முளை - சூரியன் மகனாகிய சுக்கிரீவன். (யுத் : 1482)

பருதிமண்டிலம் - சூரிய மண்டிலம். பருதி மண்டில மெனப்பொலி முகத்தன். (யுத் : 549)

பருதிவாள் - சூரியன் போல் ஒளி வீசும் வாள். (கலா) விளக்கம் மிக்க வாள். (அண்) பருதி வாளினர் கேடகத் தடக்கையர். (ஆ : 503) [பா : பே]

பருதிவானம் - சூரியன் செல்லும் ஆகாயம். நெடும் பருதிவானம். (யுத் : 632)

பருதி வானவன் - சூரியன். வடக் கெழுந் திலங்கை செல்லும் பருதி வானவன். (சு : 29) (அ : 739)

பருந்தடர் சுரம் - பருந்துகள் நிறைந்த பாலைவனம். (யுத் . 3991)

பருந்து - கழுகினத்தைச் சேர்ந்த ஒரு பறவை. பருந்தொடு நிழல் சென்றென்ன இயலிசைப் பயன் துய்ப்பாரும். (பா : 46) (யுத் : 951)

பருப்பதம் - மலை. நெடு வெள்ளிப் பருப்பதம். (பா . 742) (கி : 578)

பருமக் கட்டின்மேல் - பருமத்தின் மீது கட்டுதலையுடைய அம்பாரி. பருமக்கட்டின் மேலிழந்தும். (யுத் . 3360)

பருமம் - 1. யானை மேல் தவிசு. கழுத்திலிடப்பட்ட தவிசு. (அண்) பண்ணுறு படர்சினப் பருமயானையான். (அ : 2) (யுத் : 1808)
2. பருமை. (உ.வி) சேணம். பரும யானையின் திடரெலாம் உருட்டின. (அ : 1096)
3. கல்லணை. தவிசு. பருமமும் முதுகிடும் படிகையும். (யுத் : 1808) பருமக்கட்டு. (யுத் : 3360)
4. அலங்காரங்கள். வாளியினம் பாயப் பருமக் குலம் வேவன வால். (யுத் : 2929)

பருமயானை - எருத்தத்தில் தவிசைத் தாங்கிய யானை. (அ : 2)!

பருமித்தல் - அலங்காரங்கள் கொள்ளல். பருமித்த கிரியிற் றோன்றும் வேழம். (சு : 815)

பருவச் சோலை - இளஞ் சோலை. பனிதரு படிவப் பஞ்சவடி யெனும் பருவச் சோலைத் தனியிடம் (ஆ : 231).

பருவத் தேவர் - ஆறுபருவங்கட்கும் உரிய தேவர். பாரிடு பருவச் சோலை பாரிக்கும் பருவத் தேவர். (சு : 745)

பருவந் தந்த கேள்வர் - மீண்டும் வரும் பருவத்தைத் தெரிவித்த நாயகர். பந்த ஞாட்புறு பாசறை பொருள் வயிற் பருவந்தந்த கேள்வர். (அ : 735)

பருவ நாள் - பருவ காலம். பௌர்ணமி. பகல் மதிக்குவமை யாயின வெலா மிரவுகால் பருவநாளின் அகல் மதிக்குவமை யாயின கொலோ. (யுத் : 195)

பருவ நோக்கல் - கார் காலத்திலே (மேகத்தை) நோக்குதல். பருவ நோக்கும் கணமயிற்குழு. (யுத் : 802)

பருவம் - 1. வருடம். ஆண்டு. பருவமோர் ஆயிரந்திர. (பா:505) ஏழிரு பருவங்கள். (அ : 179) (யுத் : 344)
2. ஆண்டில் ஆறில் ஒரு கூறுகிய பருவம். பருவ மேகம். (கி : 485)
3. பருவங்களுக்குரிய செயல். யாவுந்தத்தம் பருவஞ் செய்யா. (ஆ ; 662)
4. காலம். பருவத்தால் வாடை வந்த பசும்பனி. (ஆ : 658)
5. பௌர்ணமி. பருவ நாளில். (யுத் : 105)
6. கார்காலம். பருவ நோக்கும் கணமயிற் குழு. (யுத் : 802) பருவ மேகம். (பா : 1190)
7. இளமை. பருவச் சோலை. (ஆ : 231) பருவ மங்கையர். (பா : 54)

பருவ மங்கையர் - மங்கைப் பருவ மடைந்த மகளிர் பருவ மங்கையர் பங்கய வாண்முகம். (பா : 54)

பருவமாரி - பருவ காலத்து விடாமழை. பொழிந்ததம்மா பொழி படப் பருவமாரி. (சு : 953)

பருவ மேகம் - கார் காலத்து மேகம். பருவ மேகம் படிந்தது போற் படிந்து. (பா : 1190)

பருவரல் - துன்பம். பருவரல் இன்ப மென்றி ரண்டும் ஒக்க நோக்கிய யோகர். (அ : 508) (ஆ : 1126)

பருவரலிகவாதான் - துன்பத்தினின்று நீங்காதவன். பணி மொழி கடவாதான் பருவரலிகவாதான். (அ : 689)

பருவரற் பரவைபுகல். துன்பக்கடலுள் அழுநதுதல், பார் மிசைப் பதைத்து வீழ்ந்தான் பருவரற் பரவை புக்கான். (அ : 1031)

பருவரன் மயக்கு - துன்பத்தினுலான மதிமயக்கம். தன் பருவரன் மயக்கால் சுற்றும் ஓடும். (ஆ : 323)

பருவலி - மிக்க வலிமை. பருவலிக்கரம். (யுத். 2125) பருவலி படைத்தோர். (யுத் : 1856)

பருவலிக்கரம் - பருத்த வலிய கைகள். (யுத் : 2123) யுத் : 1167)

பருவலித்தண்டு - பருத்த வலிமையுள்ள தண்டாயுதம். பருவலித் தண்டொடும்... ஓடினுன். (யுத் : 1035)

பல் - 1. வாயிலுள்ள பல். பல் தொடுத்தன்ன பல்குகவடியன் (அ : 649)

2. பல. பல் பதினுயிரம். (யுத் : 1983)

பல்கலை நூல்வல்லார் - பல கலை நூல்களில் வல்லவர். பல்லாயிர கோடியர் பல் கலைநூல்வல்லார்' (யுத் : 3448)

பலகால் - பலதரம். காண்பது... பிணத்தின் பம்மற் குப்பையின் பரப்பே பல்கால். (யுத் : 1114) (யுத் : 1435)

பல்குதல் - 1. மிகுதல் மிக்குத் தோன்றுதல். பல் தொடுத்தன்ன பல்கு கவடியன். (அ : 649)

2. பெருகுதல். இருட்பள்ளத்தினன்றியே வெளியிற் பல்குமோ. (யுத் : 397)

பல்கும் - பெருகும். பருவ மொத்தருவி பல்கும் கடா நிறையாறு பாயும் கடலொடும் கங்கை சேர்ந்தான். (பா - 1114)

பல்கொடி - பலகொடி. மேல் கிளர் பல்கொடி வெண்டிரை வீச. (யுத் : 2276)

பல்கோடி - பல கோடி. இமைப் பல்கோடி இரவி வெட்க. (சு:109)

பல் சனம்- பல மக்கள். (அ : 1072) [பா : பே]

பல் சனர் - பல மக்கள். (அ : 1072)

பல் தொகையது - பலவாகிய தொகைகளை யுடையது. எண்ணில் அடங்குவதன்று. சொற்ருர்கள் சொற்றதுணை பல்தொகைய தன்ரே. (சு : 88)

பல்பகல் - பல நாள். நெடுங்காலம். நிறை இரும் பல்பகல் நிருதர் நீணகர்ச் சிறையிருந்தேனே. (சு : 499) அடுத்த பல்பகல். (அ : 759) எண்ணரிய பல்பகல். (கி : 881)

பல்பகல் ஆற்றுதல் - பல நாட்கள் (கொடுப்பதாகச் சொல்லிக்) காலம் கடத்துதல். இயன்றென்று மாற்றலன் உதவலன் வரம்பில் பல்பகல் ஆற்றினன் உழற்றும் ஓர் ஆதவன். (அ : 906)

பல் பதினுயிரம் - பல பதினுயிரக் கணக்கு. பல் பதினுயிரந் தேவர் பக்கமா எல்லையில் சேனை கொண்டெதிர்ந்த இந்திரன். (யுத் : 1983)

பல்ல - பல. பல்ல அப்படை படப்படுபுரவிய. (யுத் : 1435)

பல்லணம் - 1. சேணம். [பல்யயனம்] குதிரைச் சேணம். முதுகிவிட்ட தவிசு. மாப் பல்லணங் கலினப் புரவியிட்ட. (சு : 870) (யுத் : 3212)

2. பல் அணம். பல்லும் மேல் வாயும். குரந்துணிந்து கண் சிதைந்து பல்லணங் குலைந்து. (யுத் : 3344)

பல்லதிகாரத் தொல்லர் - பழைமையான அதிகாரங்களில் உள்ளவர்கள். பல்லதிகாரத் தொல்லர் பெயர்ந்தார். (யுத் : 1232)

பல்லம் - அம்பு வகையுள் ஒன்று. இதயமும் பிளந்தன பல்லம். (ஆ : 518)

பல்லவங்காரப் பண்பு - பலவகைப்பட்ட அலங்காரத்தின் தன்மை. பழுதிலாத பல்லலங்காரப் பண்பே காகுத்தன் பகழி மாதோ. (யுத் : 1240)

பல்லவச் சயனங்கள் - தளிர்ப் படுக்கைகள். (அ : 759) [பா:பே]

பல்லவ சயனங்கள் - தளிர்ப் படுக்கைகள். சூரர மகளிர் படுத்து வைகிய பல்லவசயனங்கள் பாராய். (அ : 759)

பல்லவ சயனம் - தளிர்ப் படுக்கைகள். விஞ்சைப் பாவையர் வைகத் தியந்த பல்லவ சயனங் கண்டார். (பா : 946)

பல்லவத்தம்பன் - இலை வடிவமான அம்புகளை யுடையவன். பல்லவத் தம்பன் அம்பிக்கு நாதன். (அ : 627)

பல்லவப்படை - அம்புகளாகிய போர்க் கருவிகள். (கலா) பல்ல அப்படை - பலவான அந்த அம்புகள். (வை.மு) பல்லவம் படை - தளிர் போன்ற செந்நிறம் வாய்ந்த அம்புகள். (உ.வி) பல்லவப் படை படப்படு புரவிய. (யுத் : 1435)

பல்லவப் பள்ளி-தளிர்ப்படுக்கை. பாடும் பொழிலும் மலர்ப் பல்லவப் பள்ளி மன்னே. (பா : 164) [பா : பே]

பல்லவம் - 1. இலை. பல்லவத் தம்பன். (அ . 647)
2. அம்பு. (கலா) (யுத் : 1435)

பல்லாண்டிசை - பல்லாண்டுப் பாடல். அருங்கல மன்னர் தந்த பலாண் டிசை. (பா : 1332)

பல்லாண்டிசைத்தல் - வாழ்த்துப் பாட்டுப் பாடுதல். சுந்தரி பல்லாண் டிசைப்பஉல கேழுந்தொழு தேத்த. (ஆ : 332) (பா : 237) (பா : 241)

பல்லாயிர கோடி - பல ஆயிர கோடி. மன்னுயிர் தாம் பல்லாயிர கோடி பரந்துளவால். (ஆ : 783) பல்லாயிர கோடி யண்டம். (யுத் ; 288) பல்லாயிர கோடியர். (யுத் : 3448)

பல்லாயிரங் கோடி – பல ஆயிரங்கோடி. பல்லாயிரங் கோடியண்டம். (யு : 288) [பா : பே]

பல்லாயிர மாயிரம் - பல்லாயிரம் ஆயிரம். மிகப் பல ஆயிரம். பல்லாயிர மாயிரம் காசினம். (சு. 49)

பல்லாயிர மிருள் - மிக்க இருள். பல்லாயிரம் இருள் கீறிய பகலோன். (ஆ : 456)

பல்லார் படை - வெள்ளிய பற்கள் போற்பொத்துகின்ற தம்ஷ்ட்ர பாணம் பொருந்தியவரான பதாதியரின் சேனை. பல்பிறை வெண் பல்லார் படை நின்றது. (யுத் : 2919)

பல்லால் அதரத்தையதுக்குதல் - பல்லினுல் உதட்டைக் கடித்தல். சினக்குறி. சொல்லாத முன்னம் சுடரைச் சுடர்தூண்டு கண்ணுன் பல்லால் அதரத்தை அதுக்கி விண்மீது பார்த்தான். (யுத் : 1957)

பல்லாலே இதழதுக்குதல் - பல்லினுல் உதடுகளைக் கடித்தல். பல்லாலே இதழதுக்கும் கொடும்பாவி. (யுத் : 3892)

பல்லிடைக் கிழித்தல் - பல்லை இளித்தல். (அண்) அச்சத்தின் செயல். வெருவித் தம் பல்லிடைக் கிழித்திரிவ. (யுத் : 74)

பல்லிடைக் கிழித்திரிவ - பல்லைக் கடித்துக் கொண்டு. வாயிதழ் களைத் திறந்த வண்ணம் ஓடப் போகின்றன. (யுத் : 74)

பல்லியச் சில்லி. பல்வகை வாத்தியம் போல் ஒலிக்கும் சக்கரம். பல்லியச் சில்லி பாரின் நிச்சய மற்று நீங்கா. (யுத் : 3110)

பல்லியம் - பல் இயம், வாத்தியம். வாத்திய ஒலி. தெருவினுர்ப் புறும் பல்லியந்தேர் மயில். (கி : 933)

பல்லியம் துவைத்தல்- பல வாச்சியங்கள் முழங்குதல். பல்லியந் துவைத்த கடைத்தலையாய். (பா : 733)

பல்லியம் மொழிதல் - பலவகை வாத்தியங்கள் ஒலித்தல். மொழிந் தன பல் இயம். (பா : 249)

பல்லியல் நெறி - பலவகைப்பட்ட சமய நெறி. பல்லியல் நெறியிற் பார்க்கும் பரம்பொருள் என்ன யார்க்கும் இல்லை உண்டென்ன நின்ற இடை. (பா : 1213)

பல்லியலுலகுறு பாடை - உலகத்துப் பொருந்திய பலவகை இயல் பமைந்த பாஷை. (யுத் : 1076)

பல்லினுல் இதழதுக்குதல் - பல்லினுல் உதடுகளைக் கடித்தல். வெகுளியின் மெய்ப்பாடு. பல்லினுல் இதழதுக்கினன். (யுத் : 1167)

பல்லுயிர்க்கு ஒருயிர் என நின்ற இராமன் - உயிர்கள் பலவற்றிற்கும் ஓர் உயிர்போன்ற இராமன். இயங்கு பல்லுயிர்க்கு ஒருயிர் எனநின்ற இராமன்... சானகி இருந்துழிச் சார்ந்தான். (அ:510)

பல்லுளைப் பரிமா - பலவான தலையாட்டத்தினையுடைய குதிரைகள். பனிவென்ற பதாகை யென்றும் பல்லுளைப் பரிமா வென்றும். (யுத் : 2002)

பல்லெலாமுறத் தோன்றும் பருவாயள் - பற்களெல்லாம் நன்கு வெளிப்பட்டுத் தோன்றுகின்ற திறந்த பெரிய வாயையுடையவள். (ஆ : 362)

பல்லெறிதல் - பல் சிதறி விழுதல். பல்லெறிந்தன தலை. (யுத்:2289)

பல்லோர் - பலர். (யுத் : 221)

பல - பலவற்றை. என்றின்ன பல பன்னி. (ஆ : 338)

பலப்பல - பல பல. ஒன்றல பலப்பல உறுதி ஓதினன். (யுத்:316)

பலபட - பலவாருக. நொய்யவே நொய்யவென்றே பலபட நுவல்வ தம்மா. (பா : 1215)

பல பல - பலப்பல. ஒன்றல பலபல உறுதி ஓதினன். (யுத் : 316)

பலபலவும் - பலபல தெய்வங்களையும். பன்னலாமென் றுலகம் பல பலவும் நினையுமால். (ஆ : 56)

பலம் - 1. பழம். தாழை இன்பலம். (பா : 222) தேமாம்பலம். (சு : 768)

2. படை. சேனை. மைந்தர் பலத்தை என் அம்பாலே கொன்று. (அ : 1013) தந்திரக்கடலை நீந்தித் தன் பெரும் பலத்தைச் சார்ந்தான். (யுத் : 1347) (யுத் : 3640)

3. வலிமை. அன்னுன் பலத்தையும் தொலைத்து. (யுத் : 2182)

பலவின் கனி - பலாப் பழம். கோட்ட தேம்பலவின் கனிக் கூன் சுளை. (கி : 935)

பலவின் கனிக் கூன் சுளை - பலவின் கூன் கனிச் சுளை. இனிய குடம் போன்ற பலாப் பழத்தின் சுளை. (கி : 935)

பல வென்னும் ஒன்று - ஒரு சுருதி பல என்று கூறும். தானந்த மில்லை பல வென்னும் ஒன்று. (யுத் : 2207)

பலாசவனம் - புரச மரக்காடு. பங்குனி மலர்ந் தொளிர் பலாசவன மொப்பார். (சு : 165)

பலாண்டிசை பரவல் - பல்லாண்டு வாழ்த்துப்பாடல். நீடுழி வாழ்க வென்று பாடுதல் பல்லாண்டு இசைத்தல் ஆகும். (அண்) பல்லாண்டு இசையுடன் பாடுதல். (வை.மு) பன்னக மகளிர் சுற்றிப் பலாண்டிசை பரவ. (சு : 214) வான நாட்டு மாதரும் மற்றை நாட்டுப் பையரவல் குலாரும் பலாண் டிசை பரவ. (யுத் : 2158)

பலாண்டு கூறல் - பல்லாண்டு பாடல் பாட்டொடு வான நாட்டுப் பூவையர் பலாண்டு கூற. (சு : 215) சிந்துரப் பவளச் செவ் வாய்த் தெரிவையர் பலாண்டு கூற. (யுத் : 4327)

பலி - 1. பூசை. தளி துறந்தன பலி. (அ : 498)

2. தேவர்களுக்கிடும் உணவு. ஆசை பத்திற்கும் இன்றே பலி ஈவது பார்த்தி. (ஆ : 918)

3. தன் முயற்சியாலன்றிப் பிறர் தரும் உணவு. பலியுண் வாழ்க்கைப் பேய். (யுத் : 1908)

பலி ஈவது - பலி இடல். (ஆ : 918)

பலிக்கடன் - பிண்டம் (பலி) முதலிய பிதுர்க்கடன். பேதப் பலிக் கடன் பலவும் முற்றி. (ஆ : 1037) (யுத் : 3589)

பலி பூணுதல் - பலியிடப்படுதல். மதமா கரி பலி பூண்டன. (ஆ : 466)

பலியுண் வாழ்க்கைப் பேய் - பலியை யுண்ணும் வாழ்க்கையை யுடைய பேய். பலி யுண் வாழ்க்கைப் பேய் கொண்டு வெல்ல வந்த பித்தனே. (யுத் : 1908)

பவ்வம் - கடல். எங்கும் பரந்தது குருதிப் பவ்வம். (யுத் : 1106)

பவணம் - 1. நாக லோகம்.

2. பவனம். காற்று. எதுகை நோக்கி விகாரப்பட்டது. பவணத் தன்ன வேக வெஞ்சிறை. (யுத் : 3809)

பவ நோய் - பிறவிப் பிணி. பவ நோயின் மருத்துவன். (அ : 709)

பவம் - பிறப்பு. பவங்களைத் தீர்க்கும் புனித மாநதி. (பா : 423)

பவர் - செறிவு. நெருங்கிய. பவர் சடை யந்தணன். (பா : 465) துணைப்பவர் நெடும்பணை. (கி : 191)

பவர் சடை யந்தணன் - அடர்ந்த சடையையுடைய அந்தணன். (விசுவாமித்திர முனிவன்) (பா : 465)

பவர்தல் - 1. நெருங்குதல். பவர் நெடும் பணை. (கி : 191)
2. நன்கமைதல். (கலா) செறிதல். (வை.மு) நெருங்கியிருத்தல். (அண்) பவர்ந்த வாணுதலினுள். (கி : 793)

பவழக் காடு - பவழக்காடு. கோதையால் வேலையுள் மிடைந்த பவளக் காடெனப் பொலிந்தது. (சு : 128) [பா : பே]

பவழமால் வரை - பெரிய பவழமலை. ஓர் பவழமால் வரையிற் பாய்ந்தான். (சு : 90) [பா:பே]

பவளக் காடு - பவழக்காடு பவளக்காடுடைப் பாற்கட லொத்தப் பரவை. (யுத் : 2574) (யுத் : 584)

பவளக் குன்று - ஒரு குன்று. அரக்கர் வாழிடம். பவளக் குன்றினில் உறைபவர். (யுத் - 3219)

பவளக் கொடி - பவளத்தின் கொடி. நீரின் இறங்கும் பவளக் கொடி சுற்றின. (சு : 47)

பவளக் கொம்பர் - பவழக்கொடி. பாகியல் கிளவியாள் பவளக் கொம்பர் போன்று ஏகுமின் ஈண்டென எதிர்வந் தெய்தினுள். (ஆ : 837)

பவளக் கோடு - பவளமலை. ஓதியால் வேலையுள் மிடைநத பவளக் கோடெனப் பொலிந்தது. (சு : 128)

பவளக் கோல் - பவளக் காம்பு. பவளக் கோலிவர் கவானர சன்னம். (கி : 4)

பவளச் செவ்வாய் - பவளம்போற் சிவந்த வாய். பன்னெடுங் காதத்தேயும் சுடவல்ல' பவளச் செவ்வாய் அந் நெடுங் கருங் கண் தி. (யுத் : 713)

பவளத்தால் அதரமாக்கல் - உதடுகளைப் பவழத்தாற் செய்தல். பண் களாற் கிளவி செய்து பவளத்தால் அதர மாக்கி. (யுத் : 1588)

பவளத் தீவு - பவளமலை. பவளத் திவினில் உறைபவர். (யுத் : 3219) [பா:பே]

பவளந்தருமிதழ் - பவளத்தின் தன்மை வாய்ந்த இதழ். பவளந்தரு மிதழான். (அ : 621)

பவளம் - பவழம். பவளந்தருமிதழ். (அ : 621)

பவள மால்வரை - பெரிய பவளமலை. பவளமால்வரை அருவி. (அ : 741) (சு : 91)

பவள மாளிகை - பவளத்தினாலாய மாளிகை- தையல் பாகனிற் பொலிந்து தோன்றும் பவள மாளிகையைப் பாராய். (யுத் : 300)

பவளவல்லி - பவளக் கொடி. பாற்கடற் படுதிரைப் பவள வல்லி. (அ : 139)

பவளவாய் - பவளம் போன்ற வாயிதழ். பவளவாய் கறிக்கும். (யுத் : 2176) (யுத் : 397/)

பவளவாயார் - பவழம் போன்ற வாயையுடைய மகளிர். பவள வாயார் ஊடலுங் கடைக் கண்ணோக்கும். (யுத் : 2790)

பவனம் - காற்று. பவனம் வரான். (ஆ : 819)

பவனன் - வாயுதேவன். பவனனின் முடுகி நடந்தார். (சு : 772)

பவனனுக்கினிய நண்பன் - வாயுதேவனுக்கு இனிய நண்பனான அக்கினிதேவன். பவனனுக்கினிய நண்பன் பயந்தெடுத்தவன். (யுத் : 4344)

பவனி - உலா. பொன்னெடுந் தேரொடும் பவனி போனவன். (அ : 480)

பவனி உலாவுதல் - பவனி வருதல். தேவர்தம் ஊரின் மேலும் பவனி உலாவுவரான். (யுத் : 3839)

பவனி போதல் - உலாச் செல்லுதல். பவனி போனவன். (அ:480)

பவித்திரம் - தூய்மை. பரிசுத்தமான பொருள். பரிவினில் தழிஇய எம்மிற் பவித்திரம். (அ : 659) அமலன் சரத்தினில் வேறினிப் பவித்திரமுள தெனல் தகுமோ. (யுத் : 2593)

பழக்கம் - வழக்கம். பழைமை. (அண்) பழக்கநாள் வரு மேருவை. (யுத் : 1565)

பழகிற்றில்லா - பழகுதல் இல்லாத. பழகிற்றில்லா பஃறிரை. (யுத் : 3452)

பழகும் - பழகிய. பழகும் அதிதியரை. (யுத் : 3419)

பழங்கண் - துன்பம் வறுமை. பழங்கணோ டிரந்தவர். (பா : 159)

பழங்கதை - பழைய வரலாறு. முந்தையோர் பழங்கதையையும் புதுக்கிய தலைவன். (சு : 842)

பழநகரம் - தொன்மை வாய்ந்த இடம். விண்ணுலகம். அமரர் பழநகரம். (யுத் : 3413)

பழநறை - பழைய கள். பழையர்தம் மனையன பழநறை. (பா:81)

பழம்பகை - பழைய பகைமை. சென்றுன் பழம்பகை தீர்த்தி என்ருன். (யுத் : 2358)

பழம்புணர்வு - பழைய புணர்ச்சி நிகழ்ச்சிகள். (அண்) முன் துய்த்த புணர்ச்சிக் கரணங்கள். (வைமு) பழமையான கரணங்கள். பண்டு இறந்தன பழம்புணர்வு அகம்புகப் பன்னி. (யுத் : 3502)

பழமொழி - பழைய மொழி. முன்னே கூறிய சொல். தொன்று தொட்டு வழங்கிவரும் மொழி. பாம்பின் கால் பாம்பறியும் என மொழியும் பழமொழியும் பார்க்கிலீரோ. (ஆ : 428)

பழனம் - 1. நீர் நிலை. பழனம் நீத்து இள வெயிலெழுதும் மெய்யன் (கி : 561)

2. கழனி. பகலிடை மலர்ந்த தோர் பழனம் போன்றதே. (அ : 475)

பழி - 1. தீங்கு. விதியின் தன்மை பழியல விளைந்த தொன்ரே. (ஆ : 1030)

2. நிந்தை. நிந்தனை. பழி வளர்க்கும் செவிலி. (அ : 1061)

3. நிந்திக்கப்படும் காரியம். பாவியர் உறும்பழி இதிற் பழியு முண்டோ. (யுத் : 6) பழி இது. (யுத் : 1600)

பழி கூட்டிக் கொள்ளுதல் - பழியை உண்டாக்கிக் கொள்ளுதல். கொம் பிழை மானின் பின் போய்க் குலப்பழி கூட்டிக் கொண்டீர். (ஆ : 1023)

பழி கொண்டு பயமடைதல் - பழி வருமே என்பதை மனங்கொண்டு பயப்படுதல். பழி கொண்டு பயந்தது. (யுத் : 1101)

பழி கொள்தல் - பழியைப் பெறுதல். இயம்பலாகாச் சொல்லையே உரைத்தாய் என்றும் பழிகொண்டாய் என்னச் சொன்னாள். (யுத் : 1650)

பழிச்சி - புகழ்ந்து. முனிவர் தாள் பழிச்சி. (பா : 280)

பழிச்சு - துதி மொழிகள். பழிச் சொடும் பெயர்ந்து போனான். (பா : 691) (யுத் : 4333)

பழிச்சுதல் - புகழுதல். மன்னவன் பின்னரும் பாங்குடை முனிவர் தாள் பழிச்சி. (பா : 280)

பழித்தல் - கீழ்ப்படுத்தல். கஞ்சமலர்ப் பழிக்கும் கையபயம் காட்டினுன். (யுத் : 292)

பழி தீர்த்தல் - பழிக்குப் பழி வாங்குதல். இப்பழி நின்ருல் திரிய வந்தேன் இவண் என்ருன். (அ : 705)

பழிப்பருஞ் சிந்தை - பழிப்பில்லாத மனம். பழிப் பருஞ் சிந்தையாள் பாற் சிந்தனை படர (யுத் : 2226)

பழிப்பு - வசை. குற்றம். காணுதி பழிப்பிலாதாய். (சு : 476) யாதுமோர் பழிப்பிலள் என்றனை. (யுத் : 4017)

பழிபடர் மன்னவன் - பழி மிக்க மன்னவன். பழிபடர் மன்னவன் படைத்த நாட்டின். (பா : 361)

பழிபடல் (பழிபடுதல்) - 1. (உவமையாகாமையின்) பழியடைதல். வசை நிகழ்தல். பாந்தள் தேரிவை பழிபடப் பரந்த பேரல்குல். (அ : 767)

2. பழி விளைதல். ஆடவர் யாண்டும் வெஃகாப் பழிபட வந்த வாழ்வை யாவரே நயக்கற் பாலார். (யுத் : 3055) பழிபட வாழ்கிற்பாரும் பார்த்திபருளரோ. (யுத் : 1647)

பழிபட வந்த வாழ்வு - பழி விளையுமாறு வந்த வாழ்வு. (யுத்:3055)

பழிபட வாழ்தல் - பழி யுண்டாக உயிர் வாழ்தல். பழிபட வாழ்கிற்பாரும். (யுத் : 1647)

பழிபடு பிறவி - பழிக்கப்படுகின்ற சன்மம். தேவர்ப் பராவினின் நீங்கினேன். இப்பழிபடு பிறவி என்ருன். (ஆ : 276)

பழி பார்த்தல் - பழி யுண்டாகப் பார்த்தல். பதகனேன் பழி பார்த்து அடைக்கலப் பொருள் காத்தவாறழகிது என்றழுதான். (யுத் : 2589)

பழிபாவம் - பழிக்கப்படுவது பாவத்தை யுண்டாக்குவது. பழியிது பாவமென்று பார்க்கிலை. (யுத் : 1600)

பழிமறுத்தல் - பழியென்பது பாராமை. சாத்திஞேடும் வானிடைப் புகுதியன்றே யான்பழிமறுக்கில் என்ருன். (யுத் : 3061)

பழிமுளுதல் - பழி புதிதாக நேர்தல், (வை.மு) பழிமுற் படுதல். (கலா) பழி மேன்மேலும் கிளைத்தல். (அண்) மூளு முளதாய பழி என்வயின் முடித்தோர். (ஆ : 619)

பழியிற்ரும் - பழியுடைத்தாம். நினக்கிது பழியிற்ருமால். (யுத்:2858)

பழியின் மூழ்குதல் - நிந்தனைக்கு உள்ளாதல். பாடவம் விளம்பினம் பழியின் மூழ்கினும். (கி : 952) [பா:பே] (யுத் : 26)

பழியுரை - பழிச்சொல். சான்றவர் பழியுரைக் கஞ்சி. (கி : 957)

பழியெனும் முருங்கு தீ - பழியாகிய முறுகி வளர்க்கின்ற நெருப்பு. மூட்டிய பழியெனும் முருங்கு தியவித்து ஆட்டினை கங்கைநீர் ஆட்டினை. (கி : 687)

பழிவரு நெறி – பழி வருதற்குக் காரணமான வழி. மற்ருெரு பழிவரு நெறிபடர் பதகனுகையான். (அ : 900)

பழிவளர்க்குஞ் செவிலி - பழியை வளர்க்கும் செவிலித்தாய். படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்குஞ் செவிலியை.(அ 1061)

பழு - விலா எலும்பு. பழுவற்றுகும் மத வெங்கரி. (யுத் : 3364)

பழுத்தல் - 1. நிரம்புதல். பணி பழுத்தமைந்த பூண். (யுத்:472)
2. முதிர்தல். மிகுதல். பிணி பழுத்தமைந்ததோர் பித்தினுள்ளத்தான். (யுத் : 472)
3. செந்நிறமாதல். பஞ்சின்றிப் பழுத்த பாதம். (பா : 1215)

பழுதற - குற்றமற. பழுதற வினவிய பொருளைப் பண்புறத்... தெரியச் சொல்லினுன். (யுத் : 477)

பழுதறு பெண்மை - குற்றமில்லாத பெண் தன்மை. பழுதறு பெண்மையோடும் இளமையும் பயனின்றேக. (ஆ : 272)

பழுதிலாமையினுல் - தீங்குருத வண்ணம். பழுதிலாமையினுல் தாரப்பாற்று. (யுத் : 4139)

பழுது - 1. பயன் படாதது. பழுதிலாத பல்லலங்காரப் பண்பு (யுத் : 1241)
2. குற்றம். தவறு. பழுது வாழி. (ஆ : 41) (யுத் : 4139) பழுது சொல்லிய தென். (யுத் : 169) முன்னினி எதிர்க்கிலேன் என்று முற்றிய பின் இகல் பழுதெனப் பெயர்ந்து போயினுன். (யுத் : 1481)
3. அழிவு. தீங்கு. இமுதையர் பழுதுரைக்கெளிதோ. (ஆ : 455)
4. வீண். ஆருயிர் கொளப்படாதே இழைத்தது பழுதே யன்ருே. (யுத் : 2040)

பழுதுசொல்லல் - தவறுடையதாகச் சொல்லுதல் குற்றமுடையதாகச் சொல்லல். வேதியின் ... முனியப் பழுது சொல்லியதென். (யுத் : 169)

பழுதுபோதல் – பிழைபடல். அன்னது பழுதுபோமோ. (ஆ : 787)

பழுதுரு ஒரு பெற்றியின் உணர்விஞர்-குற்றம் பொருந்தாத ஒரே விதமான தன்மையை யுடையவர்கள். ஒரே விதமான தன்மை யுடையவர்கள்' (கலா) (யுத் : 391)

பழுமரம் – 1. ஆலமரம். பழு மரம் பறிக்கப் பறவைக்குலம் தழுவி நின்ருெருவன் தனித் தாங்குவான். (யுத் : 674) பழுமரப் பொழில். (ஆ : 2)

2. பழங்களைக் கொடுக்கும் மரம். பார்நுகர் பழுமரம் பழுத் தற்ருகவும். (அ : 82)

பழுவக்குன்று – சோலைகளையுடைய மலைவழிகள். (சு : 1339)

பழுவச்சோலை – பெருஞ்சோலை. (வை.மு) ஒருபொருட் பன்மொழி. (அண்) (அசோகவனம்) பாரிடு பழுவச்சோலை பாரிக்கும் பருவத் தேவர். (சு : 745)

பழுவம் 1. சோலை. நீண்ட பூம் பழுவம். (பா : 415)

2. வனம். காடு. மரப் பொழில்துவன்று பழுவம். (ஆ : 2)

3. தொகுதி. பழுவநாட் குவளை. (ஆ : 227)

பழையம் யாம் - யாம் நெடு நாளாகப் பழக்க முடையோம். பழையம் யாமெனப் பண்பல செய்வரோ பருணிதர் பயனேர்வார். (யுத் : 293)

பழையவர் - கள்விற்போர். பழையவர் தம் மனையன பழ நறை. (பா : 21)

பழையர் - பழகினவர். பண்டிதர் பழையர்...... சார் கென. (யுத் : 20)

பள்ளக் கடல் - ஆழமான கடல். பள்ளக் கடல் கொள்ளப்படர் படி பேரினும். (யுத் : 1147)

பள்ளத்துப் பாயும் நன்னீர் - பள்ளமான இடத்திலே ஓடிப்பாயும் தெளிவான நீர். பள்ளத்துப் பாயு நன்னீர் அனையவர் பானல் பூத்த வெள்ளத்துப் பெரிய கண்ணர். (பா : 1151)

பள்ள நீர் அயோத்தி - ஆழமான நீரையுடைய அகழி சூழ்ந்த அயோத்தி. (சு : 478)

பள்ளநீர் வெள்ளம் - பள்ளத்துப் பாயும் வெள்ளம். பள்ளநீர் வெள்ள மன்ன பரதன். (அ ; 1183)

பள்ளப் புண்டரீகம் - ஆழ்ந்த நாபிக்கமலம். பள்ளப் புண்டரீகத்து வைகும் புராதனு. (யுத் : 604)

பள்ளம் - 1. ஆழம். அள்ளற் பள்ளப் புனல். (அ : 357) வேலைப் பள்ளம். (சு : 604) பள்ளக் கடல். (அ : 617)
2. கடல். தனி யாறு புக மண்டும் பள்ளம். (பா : 741)
8. பள்ளத்தாக்கு. பள்ளமொடு மேடு தெரியாதவகை சோர் குருதி பம்பி எழலால். (யுத் : 3403)

பள்ள வெள்ளம் - ஆழமான நீர் வெள்ளம். பாற் கடற் பள்ள வெள்ள மெனப் படருந் நிலா. (பா : 709)

பள்ளி - 1. படுக்கை. பாயல். பள்ளியில் மைந்தரோடு ஊடிய பண்பு நீங்கி. (சு : 212)
2. முனிவர் இருக்குமிடம். உறையுள். அருந்தவனும் அறமார் பள்ளியது சேர்ந்தான். (அ : 608)
3. நித்திரை. பள்ளி நீங்கிய பங்கயப் பழன நன்னுரை. (பா : 540)

பள்ளிச் சேக்கை - படுக்கை. அமளி. என்பது சொல்லிப் பள்ளிச் சேக்கை நின்றிழிந்து. (யுத் : 2231)

பள்ளிதீர்தல்- பள்ளிகொள்வதை விடுதல். விண்ணவர் தொழுது வேண்டப் பள்ளிதீர்ந் திருந்தான் என்னப் பெர்லிதரும் பண் பினனை. (யுத் : 439)

பள்ளி நீங்குதல் - பாயலினின் றெழுதல். மேலை நாள் பள்ளி நீங்கிய பான்மையில் தோன்றினன். (அ : 636)

பள்ளி மேவுதல் - படுக்கையை யடைதல். விரிதிரைப் பாற்கடல் பள்ளி மேவினன். (பா : 456)

பள்ளியரவு - படுக்கையாகிய அரவு. ஆதிசேடன். பள்ளி யரவிற் பேருலகம். (யுத் : 10)

பளிக் கறை - 1. பளிங்குக் கற்களாலாகிய அரங்கு. பளிக் கறைச் சில பரி முகமாக்கனைப் பாராய். (அ : 747)
2. பளிங்குப் பாறை. (வை.மு) பளிங்கினலாய அறை. தெள்ளு பூந்தடமும் பளிக்கறையுந் தேடினர். (கி : 903)

பளிக்குநாய் - பளிங்கினுற் செய்த நாய் வடிவமான காய். பளிக்கு நாய் சிவப்பத் தொட்டு. (பா : 580)

பளிக்கு நுகம் - பளிங்கால் இழைத்த நுகத்தடி. பெரும் பியலில் பளிக்கு நுகம் பிணைத்து. (பா : 765)

பளிக்குப் பீடம் - பளிங்குப் பீடம். பாய்ந்த பொற் கா்லுடைப் பளிக்குப் பீடமே. (பா : 355)

பளிக்கு மாடம் - பளிங்குக் கற்களாற் செய்த மாடம். அழகுறச் சமைத்த பீடம் ஏனுற்ற பளிக்கு மாடத்திட்டனர். (யுத் : 4310)

பளிக்கு மால்வரை - பெரிய பளிக்கு மலைகள். பளிக்கு மால்வரை முந்திப்படுத்தின. (யுத் : 652)

பளிக்கு வள்ளம் - பளிங்குக் கிண்ணம். பளிக்கு வள்ளத்து வார்த்த பசு நெடுந் தேறன் மாந்தி. (பா : 578)

பளிங்கறை - பளிங்குப்பாறை. பூந்தடமும் தென்பளிங்கறையுந் தேடினர். (கி : 904)

பளிங்கினுய இருக்கை - பளிங்கினுலாகிய இருப்பிடம். பொய்யெனப் பளிங்கினுய இருக்கை. (யுத் : 901)

பளிங்கு - பளிங்குக் கற்கள். தெளிவுற்ற பளிங்குறு சில்லிகொள் தேர். (யுத் : 3463) பளிங்கினுல் விளங்குகின்ற மாரனுமருளச் செய்த மாளிகை. (யுத் : 796) கல்லடித்தடுக்கி வாய் பளிங் கரிந்து கட்டி. (பா : 116)

பற்கள் - பல்லின் வரிசை. வெம்புனீர் பற்களோடுஞ் சொரிதர. (யுத் : 984)

பற்குலம் - பற்களில் கூட்டம். பந்திபந்தியின் பற்குலம் மின்குலம் பாகுபாடுற. (யுத் : 1567) (யுத் : 219)

பற்பகல் - பல நாள். பற்பகல் நிழற்றும் நின் கவிகை பாய் நிழல். (அ : 844)

பற்பல - பலப்பல. என் கன்று கின்ற தெண்ணிப் பற்பல இவரை அம்மா. (கி : 53)

பற்றலர் - 1. பகைவர். ஈனமுறு பற்றலரை எற்றி. (சு : 692)
2. பற்றூர். பற்றமாட்டார். மெய்ந் நெறி நன்மையன் பாத மல்லது பற்றலர் பற்றிலார். (பா : 3)

பற்றற நீக்கல் - அன்பினை அடியோடு ஒழித்தல். பாசத்தன்பினைப் பற்றற நீக்கலும் ஈசற் கேகடன். (யுத் : 4158)

பற்றறு பெற்றியோர் - ஆசைகள் அற்ற உயர் நிலையடைந்த ஞானியர். (கலா) பற்றுக்களை ஒழித்த தகுதிவாய்ந்த துறவியர். பந்தமா வினையம் மாளப் பற்றறு பெற்றியோர். (ஆ : 423)

பற்று - இலக்காக. (யுத் : 5)

பற்றுநிற்றல் - இலக்காகி நிற்றல். காமன் பூங்கணைக்கும் பற்று நின்றான். (யுத் : 5)

பற்றுமழலை - பொருளமையாத மழலைச் சொல். நாதாம் பற்றுமழலை. (அ : 394)

பற்றார் - பகையர். படுத்தான் வானவர் பற்றாரை. (சு : 657)

பற்றிலார் - ஆசையில்லாதவர். மெய்ந் நெறி நன்மையன் பாத மல்லது பற்றிலர் பற்றிலார். (பா : 3)

பற்றினன் கொணர்வென் - பற்றிக்கொண்டு வருவேன். (7 ஆ:96

பற்று - 1. பற்றுசு. பொடி. பற்றார்ந்த செம் பொற் கவசம். (அ:411)
2. யான் எனும் உணர்வு. பற்றறு பெற்றியோர். (ஆ : 423)
3. தொடர்பு. கோபமு மறனு மானக் கொதிப்பு மென்றினைய வெல்லாம்...... பற்றுவிட்ட. (ஆ:641) அல் பற்றழிய. (ஆ:719)
4. ஆதாரம் . தாங்குமிடம். அனுமன் பற்றினல் அகழ் புகுந்து. (சு : 153)
5. முன்னமே அடைந்திருக்கின்ற பொருளின் மேலுள்ள அபிமானம். பற்றவா வேரொடும் பசையற. (பா : 344)
6. ஆசை. விருப்பு. ஆசை பற்றி யறையலுற்றேன். (பா : 4)
7. பொருத்து பற்றார்ந்த செம்பொற் கவசம். (அ : 411)
8. வேர். பாசத் தன்பினைப் பற்றற நீக்கலும். (யுத் : 4158) பற்றறக் கட்ட போதன்றி. (கி : 537)
9. இலக்கு. வந்தடுத்த பழிக்கும் காமன் பூங்கணைக்கும் பற்று நின்றான் பொற்றேளை. (யுத் : 5) [பா : பே]

பற்றுண்ட - கைப்பற்றப்பட்ட. பற்றுண்ட நாளே மாளாப் பாவி யேன். (யுத் : 1621)

பற்றுண்ணல் - பிடிபடல். என்தாரம் பற்றுண்ண. (ஆ : 997) அரக்கனாற் பற்றுண்டாய். (சு : 1074)

பற்றுதல் - 1. கொள்ளுதல். ஏற்றுக் கொள்ளுதல். சேர்த்துக் கொள்ளுதல். பற்றுதல் பழுதென. (யுத் : 1391)

2. நெருப்பு மூண்டெழுதல். (வை.மு) புரம் பற்றிய போர் விடையோன் (ஆ : 913)

3. காரணமாதல். (அண்) ஆ : 913)

4 வசிக்குமிடமாகக் கொள்ளல். கலந்து நிற்றல். அலகில் பல் பொருளும் பற்றி முற்றிய அரிகாண். (யுத் : 250)

5. தன் வசமாக்கிக் கொள்ளுதல். பற்றுதல் இந்திரற்கும் அரிய இலங்கையே. (யுத் : 990)

6. பிடித்தல். பற்றுமின் என்றனன். (யுத் : 2256)

7. அடைதல். சேர்தல். வானகம் பற்றிலா வலிமை. (அ : 574) பரிதி வானவனும் கீழ்பாற் பருவரை பற்றுமுன்னம், (அ : 584)

8. பொருந்துதல். பரிதி பற்றிய பல் பகல். (அ : 626)

9. கையிற் பிடித்தல். வெண்மதிப் பாதியான் பிடித்த வில் பற்றப் போதுமோ. (பா : 1385)

10. விரும்பி மேற்கொள்ளல். போனகம் பற்றிய பொய்யின் மன்னன். (அ : 576)

11. பொருந்துதல். பரிதி பற்றிய பல் பகல். (அ : 626)

12. உறுதியாகக் கொள்ளுதல். என் சொற் பற்றுதியாயின். (கி : 384)

13. இடமாகக் கொள்ளுதல். காடு பற்றியும் கனவரை பற்றியும். (யுத் : 161)

14. கைப்பற்றுதல். பற்றி நீர்தருதிர். (யுத் : 1609)

பற்று விடுதல் - 1. மனம் பற்றுதலை விடுதல். (ஒழித்தல்) பற்று விட்டிலங்கைத் தெய்வது போயினது (யுத் : 770)

2 பற்றியிருந்த தன்மை (தொடர்பு) நீங்குதல். பற்று விட்டது மெய்ம்மை. (யுத் : 3595)

பற்றெடுத்தன்ன பல்கு கவடியன் - பற்களைத் தொடுத்து வைத்தாற் போன்ற பலவாகிய பலகறை மாலைகளை யணிந்தவன். (அண்) (அ : 649)

பற்றெடுத்தன்ன பல் சூற் கவடியன் - பற்களை வைத்துத் தொடுத் தாற் போன்ற உட்குடைவுள்ள பல கறைகளாலியன்ற ஆரத்தைப் பூண்டவன். (வை.மு) (அ : 649) [பா : பே]

பறத்தல் - 1. விரைந்து கடத்தல். நிலங்குழியுறக் கால்கொடு பறப்பார். (ஆ : 504) [பா . பே] துறக்கந்தான் பறந்து வந்து படிந்தது. (அ . 1072)
2. புள் முதலியன பறத்தல்.

பறத்தி - பறந்து போவாய். ஓடுவாயாக விரைவாய். பறத்தி நின்னெடும் பதிபுகக் கிளையொடும். (யுத் : 1214)

பறந்தலை - போர்க்களம். பறந்தலை யதனின் வந்த பல பெருங் கவியின் பண்ணை. (யுத் : 1425)

பறவைக் கேறு - கருடன். பாந்தளுக் கரசெனப் பறவைக் கேறெனப் போந்துருத்தது நெருப்பனைய போர்கணை. (யுத் : 3439)

பறவைப் பந்தர் - போர்களத்தில் பிணந் தின்னும் பொருட்டு வந்த கழுகு முதலிய பறவைகளின் கூட்டம். பரந்தன பறவைப் பந்தரே. (பா : 472) (யுத் : 990)

பறவையாம் பறை - பறவைகளாகிய வாச்சியம். மீதறை பறவை யாம் பறையும். (பா : 626)

பறவையின் அரசன் - பறவையின் அரசனாகிய கருடன். அறங்கிளர் பறவையின் அரசன். (சு : 533)

பறவை வேந்தன் - புள்ளரசனாகிய கருடன். பறவை வேந்தனுக் கிளைய மென் சுமதி. (பா : 511

பறழ் - புலி முதலிய வற்றின் குட்டி. வன்பறழ் வாயிற் கௌவி வல்லியம் இரிந்த மாதோ. (சு : 7)

பறித்தல் - 1. இழுத்தல். துகிலினைப் பறித்து நீக்கினர். (அ : 487) கையினுற் பறித்து அடிப்படுத்த தப்பகடு. (பா : 490)
2. பேர்த் தெடுத்தல். பறிக்கும் மார்பிற் பகழியை. (யுத்:3176)
3. களைந்தெறிதல். அணிபறித்தழகு செய்யும் அணங்கு. (யுத் : 937)
4. நீக்குதல் - போக்குதல். அணிபறித்தழகு செய்யும் அணங்கு. (யுத் : 937) பறிக்குவென். (ஆ : 428) பறித்தனன். (யுத் : 2690)
5. கவர்ந்து செல்லல். இராவணன் பறிப்பத் தாரநீங்கிய தன்மையன். (யுத் : 544) பறிப்புண்டும். (யுத் : 955)

பறிதல் - 1. வழுக்குதல். பறியுண்ணல். விழிகள் பறிந்தனர். (சு: 776)

2. (கை) கடத்தல். பாகரைப் பறிந்தோடி. (பா : 1539) (யுத் : 1539)
3. சாய்தல். பறிந்தன தேர்க்குலம் படியில். (சு : 1009)
4. கெடுதல். பாவமும் அருந்துயரும் வேர் பறியுமென்பார். (அ : 283)

பறிப்பு - நீக்குதல். பறித்தல். பறிப்பரு வலி. (ஆ : 1141)

பறிப்புண்ணல் - கவரப்படுதல். பங்கஞ் செய்யப் பெறல். ஒருவனுற் புணைந்த மௌலி பறிப்புண்டும் வந்திலாதான். (யுத் : 955)

பறிப்புறும் - பறித்து இழுப்பான். பல்லினுற் பறிப்புறும். (கி : 302) [பா : பே]

பறை - கிணை. பேரிகை. பறை புரைவிழி. (சு : 776)
2. பறவை. பறையற்றமில் விசை பெற்றன. (யுத் : 1819)

பறைதல் - 1. கூறுதல். பேசுதல். பறையுந்துணை அன்னது பன்னெறி போய் மறையும். (ஆ : 785) பறைகின்ருள். (சு : 297)
2. ஓடுதல்.

பறை புரை விழி - தோற்பறை போன்று அகன்ற கண்கள். (சு : 776)

பறை போதும் - பறை கொட்டுவது போலத் துடிக்கும். என் நெஞ்சு பறை போதும். (ஆ : 752)

பறையடிக்கின்றது - பறையடிப்பது போன்று நெஞ்சு துடிதுடிக் கின்றது. கண்டகன் நெஞ்சம் உன்தன் நிறையடிக் கோல வர்லின் நிலைமையை உன்னுந் தோறும் பறையடிக்கின்றது. (கி : 379)

பறை யடித்தல் - பறையைக் குறுந்தடிகொண்டு அடித்தல். காவற் பறை யெடுத்தொரு கடுவன் நின்றடிப்பது பாராய். (அ : 758)

பறையிடுதல் - பறையடிப்பது போன்று நெஞ்சுப் படபடத்தல். பறை யிடும் நெஞ்சினன். (கி : 969)

பன்மணித்தண்டு - பல மணிகள் பதிந்த பொன்னுலாகிய தண்டு. (ஆ : 936)

பன்மழை போர்த்த வானம் - பல மேகங்கள் மூடிய ஆகாயம். (யுத் : 2085)

பன்முறை - பலமுறை. பன்முறை விட்டழைக்கும் உழைக்கும் வெதும்புமால். (யுத் : 3158)

பன்மைய - பலவாக. படிவன. ஒத்தன பறவைப் பன்மைய. (யுத் : 2447)

பன்றி - வராகமூர்த்தி. பாரொடுக்குறும் நெடும்பன்றி போன்றன. (யுத் : 1785)

பன்னக அரசன் - ஆதிசேடன். ஓர் அமளி மீமிசைப் பன்ன அரசென. (சு : 218)

பன்னகப் பாயல் - பாம்பணைப் பள்ளி. பன்னகப் பாயலுட் பள்ளி நீங்கினுன். (அ : 459)

பன்னகம் - 1. பாம்பு. பன்னக அரசர். (சு : 280)
2. ஆதி சேடன். பன்னக மணிவிளக்கு. (பா : 1312)
3. பல நகம்; பல மலை. வர பன்னகம். (யுத் : 835)
4. பல்லும் நகமும். கர பன்னகம். (யுத் : 835)

பன்னக மகளிர் - நாக கன்னியர். (சு : 214)

பன்னக மணிவிளக்கு - நாகரத்தினங்களாலான தீபம். பன்னக மணிவிளக்கழலும் பாயல். (பா : 1312)

பன்னகவனிதையர் - நாக கன்னியர். (சு : 144)

பன்னகாதிபர் - பன்னக அதிபர். பாம்புகளுக்குத் தலைவர். பன்னகாதிபர் பணமணி. (ஆ : 12)

பன்னசாலை-இலைகளாற் கட்டப்பட்ட குடிசை. இலைக்குடில். (பர்ணம்-இலை) பாசிழை மடந்தையர் பன்னசாலை செய்து. (பா : 219. (யுத் : 708) (யுத் : 4109)

பன்னப் பெறுபவோ - ஆராயப்படுவன அல்ல. பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ. (பா : 8)

பன்னல் - 1. துதித்தல். பன்னலாம் என்றுலகம் பலபலவும் நினையுமால். (ஆ : 54)
2. சொல்லுதல். பன்னலாந்தர மல்லன். (யுத் : 2564)

பன்னலம் - பல் நலம். பல சிறப்பினையுடைய. பன்னலம் பதினுலாயிரம் படை. (சு : 351)

பன்னலாந்தர மல்லன - சொல்லத் தரமல்லாதன. பொன்னின் மால் வரைக் குரிஇயினம் மொய்ப்பன போலப் பன்னலாந்தர மல்லன சுடர்க்கணை பாய்ந்த. (யுத் : 2564)

பன்னுகர் - பல் நாகர். பல பாம்புகள். (கலா) பலவாகிய நாகங்கள். பன்னகர் என்பதன் விகாரம். பன்னுகர் சென்னி மணி• (யுத் : 2200)

பன்னி - 1. பத்தினி குரு பன்னியை நோக்கினேன். (அ : 902) மனையின் மாட்சியை அழித்திழி மாதவப் பன்னி. (பா : 547) (ஆ : 3)

2. கற்புடைய பெண்.

3. பலவாறு சொல்லி. பிரலாபித்து. பன்னி ஏங்கினள். (அ : 1151)

4. சிந்தித்து. பன்னுளும் பன்னி ஆற்று மதியெனும் பண்பதாகி. (கி : 799)

பன்னி நீக்கரும் பாதகம் - சொல்லி முடியாத (மிக்க) பாதகம். பன்னி நீக்கரும் பாதகம் பாருளோர் என்னின் நீக்குவர். (அ : 634)

பன்னி மொழிதல் - பலவார்த்தை கூறுதல். இன்ன பன்னி மொழிவான். (யுத் : 2202)

பன்னியழிதல் - சொல்லிச் சோர்தல். சொற்களை மிகுதியாகக் கூறி மனம் வருந்துதல். இன்ன பன்னியழிந்தான். (யுத் : 2837)

பன்னியெடுத்தழைத்தல் - சொல்லி உரக்கக்கூவி யழைத்தல். என்பன பலவும் பன்னி எடுத்தழைத் திரங்கி ஏங்கி. (யுத் : 3184)

பன்னிரண்டாயிர கோடி - பன்னிரண்டாயிரங் கோடி. பனசன் என்பவன் பன்னிரண்டாயிர கோடிப் புனித வெஞ்சின வானரப் படைகொடு புகுந்தான். (கி : 711)

பன்னிரண்டு - பன்னிரண்டு. பன்னிரெண்டி யோசனை படர்ந்த மெய்யினன். (கி : 848)

பன்னிரு - பன்னிரண்டு. பன்னிரு பகலில். (சு : 1339)

பன்னிரு பகலில் - பன்னிரண்டாம் நாள். (சு : 1339)

பன்னிறத்த பதாகை - பல நிறத்தைக் கொண்டனவான பெருங் கொடிகள். பன்னிறத்த பாதகைப் பரப்பெலாம் செந்நிறத்தன நிறந்திர்ந்தவே. (யுத் . 992)

பன்னு - சிறப்பித்துச் சொல்லுகின்ற. தன்னை நல்கிய தருமம் நல்கினன் பன்னு தொல்லறப் படிவம் நோக்கினன். (அ : 914)

பன்னுதல் - 1. சொல்லுதல். பற்பல பன்னி நின்று. (ஆ : 324)

2. பல்காற் சொல்லுதல். இன்னே இன்னே பன்னி இரந்தான் (அ : 215)

3. ஆராய்தல். பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ. (பா : 8)

4. துதித்தல். பன்னலாம் என்றுலகம் பல பலவு நினையுமால். (ஆ : 56)

5. சிறப்பித்துக் கூறுதல் மன்னு மறைப்பொருள். (பா : 739) (அ : 914)

6. விவரித்துக் கூறுதல். உறுதிகள் பலவும் பன்னினன். (யுத் : 353)

7. மிகுதியாகக் கூறுதல். (யுத் : 2202)

8. ஓதுதல். பன்னுமாமறைத் தபோதனன். (யுத் : 4105)

பன்னுமாமறை த்தபோதனன் - பரத்துவாசன். (யுத் : 4105)

பன்னூல் - பல நூல். பல நூலறிவு. பன்னூல் விதங்களால் அவன் மெல்லென மெல்லென விளம்பும் இதங்கள். (பா : 901)

பன்னூறு - பல நூறு. உங்காரத்தா லுக்கது பன்னூதிராகி. (யுத் : 3799)

பன்னெடுங் காதம் - பல நீண்ட காதம். பன்னெடுங் காதத் தேயுஞ் சுட வல்ல...... இ. (யுத் : 713)

பன்னெடுங் காலம் - பல நீண்ட காலம். (கி : 821)

பன்னெடு நாள் - பல் நெடு நாள். மிகப்பல நாள். பன்னெடு நாளும் அழிவுற்றுன். (சு : 490)

பன்னெறி - பல துறைகள். (யுத் : 4332)

பனசம் - பலாச மரம். (வை.மு) பலா மரம். (அண்) (கலா) மாணிக்கம் பனசம் (ஆ : 655)

பனசன் - வானரப் படைத்தலைவன். உருமென உறுக்குறு நிலையன் பனசன் என்பவன். (கி : 711)

பனி - 1. குளிர்ச்சி. பனி மாருதம். (ஆ : 301) பனிக் கடல். (யுத் : 288) பனி நீர்க் கங்கை. (பா ; 329)

2. பனிக் கட்டி. பனி நீர். (உ.வி) (ஆ ; 301)

3. துன்பம். பனி நின்ற பெரும் பிறவிக் கடல். (ஆ : 52)

4. அச்சம். (உ.வி) (ஆ : 52) பனி வென்ற பதாகை யென்றும். (யுத் : 2002)
5. சொல். (வை.மு) (உ.வி) பாகடர்ந்த பனிக் கனிவாய்ச்சியர். (பா : 1035)
6. பனி மூட்டம். மூடு பனி. மூடும் பனி துடைத்து. (யுத்:1379)
7. நீர். பனிவரு கண்ணர். (யுத் : 3330)

பனிக்கடல் - குளிர்ச்சியான கடல். (யுத் : 2403) (யுத் : 288)

பனிக்கடை - குளிர்ச்சி பொருந்திய கடைக்கண்கள். பரிந்த பூவுள பனிக்கடை முத்தினம் படைப்ப. (அ : 56)

பனிக்கலை - குளிர்ந்த (பதினாறு) கலை. பனிக்கலையெலா நிரம்பிய திங்கள். (யுத் : 538)

பனிச்சீதம் - சீதப்பனி. பனி நீர்த்துளிகள். பனிச் சீத நுண் துளி மலர் அமளி சேர்த்தினர். (பா : 610)

பனி சோர்தல் - நீர்த்துளிகளைச் சிந்துதல். துன்னு தாமரைக் கண் பனி சோர்கின்றான். (ஆ : 787)

பனித்தல் - 1. நடுங்குதல். பனிக்கற்சுரம். (சு : 544)
2. துளித்தல். பனித்த தேனொடும். (பா : 4007)
3. அஞ்சுதல். பனியாமது மேதை. (யுத் : 1751)
4. வியர்த்தல். பனித்தது குழவித்திங்களே. (பா : 1069)
5. ஒலித்தல். சிலம்பொலி பனிப்ப. (யுத் : 3502)
6. நீர் துளித்தல். நயனங்கள் பனிப்ப நின்றான். (கி : 616)

பனி துடைத்தல் - பனியைப் போக்குதல். மூடும் பனி துடைத் துலகஞ் சுற்றும் பரிதியில் திரிவன் காண்டி. (யுத் : 1379)

பனிநீர் - பனித்துத்துளி. புன்னுனைப் பனிநீர். (யுத் : 1260)

பனிப்படுதல் - பனியானது ஒழிதல். பனிப்படா நின்ற தென்னப் பரக்கின்ற சேனைபாறி. (யுத் : 3684)

பனிப் பிறை - குளிர்ந்த பிறைச் சந்திரன். பனிப் பிறையைப் பழித்த நுதல். (பா : 218)

பனிப்பு - 1. வாடுதல். பனிப்பருந் தாமரைப் பாதம். (பா : 1311)
2. குளிர்ச்சி. பனிப்புற்று அசும்பு பாய்கின்றது. (யுத்: 3774)

பனிப்புயல் - பனிமழை. பூவீ வீ புரை பனிப்புயற்குத் தேம்பிய தாளதாமரைமலர். (பா : 610)

பனிப்புறல் - 1. குளிர்ச்சி பொருந்தல். பனிப்புற்று அசும்பு பாய்கின்றது. (யுத் : 3774)
2. நீர் சோர்தல். கண் பனிப்புற. (சு : 268)

பனிபடர் காடு - குளிர்ச்சி நீங்கிய காடு. (படர்தல் - ஓடுதல்; நீங்குதல்) நான் பனிபடர் காடு உடன் படர்தல் மெய் என்ருன். (அ : 1194)

பனிமலர் - குளிர்ச்சியான மலர். (யுத் : 2478)

பனிமலர்த் தவிசின் மேலான் - குளிர்ச்சி பொருந்திய தாமரை மலரின்மேல் உள்ளவனுகிய பிரமன். (யுத் : 3058)

பனிமலை - குளிர்ந்த மலைகள். பனிமலை யருவி. (சு : 175)

பனிமாக் குன்றம் - குளிர்ச்சி பொருந்திய பெரிய மலை. (மகேந்திர மலை). பாரிடை அழுந்துகின்ற படர்நெடும் பனிமாக் குன்றம். (சு : 9)

பனியுடை வேலை - குளிர்ச்சி பொருந்திய கடல். பனியுடை வேலைச் சின்னீர் பருகினன் பரிதி என்று துனியுழந் தயர்வ தென்னே. (யுத் : 1257)

பனிவருகண் - நீர்த்துளி எழுகின்ற கண். பனிவரு கண்ணர் விம்மிப் பதைக்கின்ற நெஞ்சர். (யுத் : 3330)

பனிவருங் கண் - கண்ணீர்த் துளிகள் பெருகுங் கண். பனிவருங் கண் ஓர் பாசிழை அல்குலாள். (பா : 1175)

பனிவருங் கான் - அச்ச முண்டாதற்கிடமான காடு. பனிவருங் கானிடைப் பழிப்பில் நோன்புடை முனிவர் தம் வெகுளியின் முடிபென்ருர் சிலர். (ஆ : 593)

பனிவரு மலர்க்கண் - ஆனந்த நீர்த்துளி ஒழுகும் தாமரை மலர் போலுங்கண். பனிவரு மலர்க்கண் அப்பரதன் கோல் கொள. (பா : 1317)

பனிவரை - 1. இமயமலை. இந்திரன் புயப்பனிவரை. (யுத் : 1981)
2. குளிர்ந்த மலை பல் நகமும் நகு வெள்ளிப் பனிவரையும். (பா : 324)

பனி வென்ற பதாகை - அஞ்சுதலை வென்ற கொடிகள். பனிவென்ற பதாகை யென்றும் பல்லுளைப்பரிமா என்றும். (யுத் : 2009)

பனுவல் - நூல். பால்வரு பனுவலின் துணிவு.. (யுத் : 384)

பனை - பனைமரம். பனந்துண்டம். பனைக்கை வன் குரங்கு. (யுத்:746)

பனைக்கை - பனை போலும் கை. பெரியகை. பாற்செறி கடலிற் றோன்றும் பனைக்கை மால் யானை என்ன. (பா : 875) (யுத் : 746) (யுத் : 754)

பனைக்கை மா - யானை. பனந்துண்டுகள் போன்ற துதிக்கையினை யுடைய யானை. துணிந்தன பனைக்கை மாவை. (யுத் : 2040)

பனைக்கைவன் குரங்கு - பனைமரம் போன்ற வலிய கைகளையுடைய குரங்கு. (யுத் : 746)

பனைசெய் கை - பனைமரம் போன்ற துதிக்கை. பனைசெய் கையினுற் பறித்தடிப் படுத்ததப்பகடு. (பா : 490)

பனைத் தடக்கை. பெரிய பனை போன்ற கை. பிளிறு மேகத்தைப் பிடியெனப் பெரும் பனைத்தடக்கை களிறு நீட்டும் அச்சித்திர கூடம். (அ : 736)

பனை மீன் - மீனினத் தொன்று. ஒள்ளிய பனை மீன் துஞ்ச. (சு:23) சுனையிற் பனைமீன் திமிலோடு தொடர்ந்து துள்ள. (சு : 50)

பனை மேலுறைவாய் - பனையில் வாழும் அன்றிற் பறவையே. பனைமே லுறைவாய் பழிபூணுதியோ. (பா : 1249)

பனையவா நெடுங்கரம் - பனைமரம் போன்ற நீண்ட துதிக்கை. பனையவாம் நெடுங்கரப் பரும யானையாய். (அ : 83)

பனையின் நீள் கரம் - பனை போன்று நீண்டகை. பனையின் நீள்கரம் பற்றிய கையினுள். (சு : 521)

பா

பா - 1. கவி. விருத்தம். (கலா) நம்பு பாமாலையாலே நரருக்கின்ற முத மீந்தான். (பாயி : 10)

2. நூல். (கலா) பாடல். (அண்) பறையடுத்தது போலும் என்பாவரோ. (பா : 7) நான் தமிழ்ப் பாவினுல் இது உணர்த்திய பண்பரோ. (பா : 10)

3. பரவுதல்- பாகின்ற கீர்த்தியண்ணல். (யுத் : 4205)

4. நெசவுப்பா. பாவின் பஞ்செனத் திந்தது அவ்வெரி. (யுத் : 4005) [பா : பே]

பாக்கியம் - 1. நல்வினை. அறம். பேறு, பாக்கிய மன்றி என்றும் பாவத்தைப் பற்றலாமோ. (கி : 429) பாக்கிய மனைய நின் பழிப்பில் மேனி. (சு : 666) பாக்கியம் பழுத்தன்ன மயிலை. (யுந் : 53) (ஆ : 787)

2. நல்வினைப் பயன். பாக்கியம் பெரும் பித்தும் பயக்குமோ. (யுத் : 3946) உலகஞ் செய்த பாக்கிய மனைய வீரன். (யுத்:1108)

பாக்கியம் பழுத்தன்ன மயில் - புண்ணியப் பயன் போன்ற வளாய மயி லன்ன சாயலையுடைய சீதாபிராட்டி. (யுத் . 530)

பாக சாதனன் - இந்திரன். [பாக பிரஸனன்] பாகன் என்னும் அசுரனைக் கொன்றவன். (வை மு) பாக சாதனன் தனைப் பாசத்தார்த்து. (பா : 189) (யுத் : 2516)

பா கடர்ந்து - இனிமை செறிந்து. சர்க்கரைப் பாகு போன்று இன் சுவை மிகுந்து பாகடர்ந் தமுது பில்கும் பவளவாய். (யுத் : 3964)

பாகத்தாள் - உமா தேவி. பாகத்தாள் இப்போது ஈசன் மகுடத்தாள். (சு : 1315)

பாகத் திங்கள் - பிறைச் சந்திரன்- பாகத் திங்களின் மௌலி யண்ணல். (யுத் : 2901)

பாகத்திந்து - பிறைச்சந்திரன். பாகத்திந்து வெள்ளெயிறு இமைத் திட. (யுத் : 1567)

பாகம் - 1. பிளவு. மதித்திண் பாகம். (பா : 394)

2. துண்டு. பாகவீணையின் கொடி. (ஆ : 979)

3. பாதிபாகம். செம்பாகம். பாகத்தின் மேற்படக் கொன்றுய்- (யுத் : 531) அன்னவர் பட்ட நல்வலம் பாக மெய்துவான். (கி : 118)

4. ப்க்கம். பகுதி. பாகத்தில் ஒருவன் வைத்தான். (ஆ : 635) பாக முள்ளே செறித்தெனச் சுரிக்க வீசி. (யுத் : 1415)

பாகர் - ஓட்டுபவர். தேரும் பாகரும். (யுத் : 1023)

பாகவான் பிறை - பாதியாயுள்ள சந்திரன். பாகவான் பிறை போல் வெவ்வாய்ச் சுடுகணை· (யுத் : 3117)

பாகவிணையின் கொடி - அழகிய வீணை எழுதிய கொடி. பாக வீணையின் கொடி யொன்று கிடந்தது பார் மேல். (ஆ : 979)

பாகன் - ஓட்டுபவன். செலுத்துவோன். பதங்கொள் பாகனும் மந்திரி ஒத்தனன். (பா : 901)

பாகனைய சொல்லி - வெல்லப் பாகைப் போன்ற இன் சொல்லை யுடைய சீதை. பாகனைய சொல்லியொடு தம்பிபரிவிற் பின் போக முனி சிந்தை தொடர. (ஆ : 176)

பாகியல் கிளவி - சர்க்கரைப் பாகின் தன்மை யுடைய சொற்கள். கோகில நவில்வன இளையவர் குதலைப் பாகியல் கிளவிகள். (பா : 80) பாகியல் கிளவி யோர் பவளக் கொம்பர். (ஆ : 837)

பாகியல் பவளச் செவ்வாய் - சர்க்கரைப்பாகு போன்ற இனிமை இயல்பும் பவழம் போன்ற செம்மை நிறமுடைய வாய். பாகியல் பவளச் செவ்வாயப் பணைமுலை பரவை யல்குல் தோகையர் குழாம். (அ : 253)

பாகின் மென் மொழி - பாகு போன்று இனிய மென்மையான மொழி. ஒரு பாகின் மென் மொழியாள். (பா : 1184) [பா : பே]

பாகின்ற - பரவுகின்ற. பாகின்ற கீர்த்தி அண்ணல். (யுத் : 4205)

பாகு - 1. சர்க்கரைப் பாகு. வெல்லப்பாகு. பாகொக்குஞ் சொல் (பா : 584)

2. கருப்பஞ்சாறு. ஊறு பாகு மடையுடைத்து. (அ : 810)

3. உறுப்புவகை. (அண்) பாகார் இஞ்சிப் பொன் மதில். (சு : 177)

4. ஒரு பகுதி. (அண்) நாக ருலகுந்தம் பாகார் மருங்குமில வென்ன உயர் பண்ப. (சு : 97)

5. பாக்கு. குற்ற பாகு கொழிப்பவர். (பா : 60)

6. தாம்பூல ரசம். பவளச் செவ்வாய்த் தேம் பசும் பாகு திற்றி. (யுத் : 3966)

7. அழகு. (கலா) (சு : 177) பாக வீணையின் கொடி. (ஆ:979)

8. பாகம். (வை.மு) நாக ருலகுந்தம் பாகார் மருங்குதுயில் வென்ன வுயர் பண்ப. (சு : 97) [பா : பே]

9. பாகின் இனிமை. பாகடர்ந்து. (யுத் : 3964) பாகடர்ந்த பனிக்கனி வாய்ச்சியர். (பா : 1035)

பாகுபாடு - தனித்தனியே விளங்கித் தோன்றுதல். பந்திபந்தியின் பற்குலம் மீன் குலம் பாகுபாடுற. (யுத் : 1567)

பாகொன்று குதலை - சர்க்கரைப் பாகு போன்ற மிக இனிய மழலைச் சொல். பாகொன்று குதலை யாளை. (கி : 1004)

பாங்கராயினர் - அனுக்கராயுள்ளோர். (யுத் : 2593)

பாங்கர் - 1. பாங்கு. பக்கம். திவலை சிந்தப் பயில்வுறத் தழுவும் பாங்கர். (கி : 54) பகை ஞரைக் கடிந்து பாங்கர் வந்துற்றனர். (சு : 1292)

2. தோழர் கூட்டம். பண்ணையும் ஆயமும் திரளும் பாங்கரும். (பா : 296

3. இடம். பளிக்கறை அமளிப் பாங்கர். (பா : 949)

பாங்கனுள் - பாங்கி. பக்கத்திலுள்ள தோழி. பார்த்தனள் ஒருத்தி தன் பாங்கனுளையே. (பா : 1100)

பாங்கினுள் - அழகுடையவள். திருமடந்தை சேடியாம் பாங்கினுள் (யுத் : 1669)

பாங்கு - தகுதி. பொருத்தம். அணி தூசாதியாய பாங்குள மற்றவை யருளி. (பா : 218)

2. பக்கம். பாங்கிசை முரன்றன தும்பி. (அ : 732)

3. நல்லொழுக்கம். பாங்குடை முனிவர். (பா : 280)

4. இடம். பாங்கு வெங்கனல் பங்கய வனங்களாய்ப் பரந்த. (அ : 728)

5. நன்மை. பாங்கின் உத்தரியம். (அ : 1043)

6. அருகு. அதன் பாங்குற நடந்தனள் பங்கயப் போதினுள். (யுத் : 3999)

7. இயல்பு. திருமடந்தை சேடியாம் பாங்கினுள். (யுத் : 1669)

பாசடை - 1. பாசி. (கலா)

2. பசிய அடை; பசிய இலை. பாசடை வாயின் தொறும் பரந்த பண்பது. (கி : 9) விழுங்குடரின் பாசடைய. (யுத் : 3566)

பாசடைக் கமலம் - பச்சிலைகளால் தழைத்த தாமரை மலர். பர்சடைக் கமலத்தோன். (பா : 813)

பாசடைப் பொய்கை - பசிய இலைகள் பரவிய பொய்கை. பாசடைப் பொய்கை பூத்த பங்கயம். (யுத் : 790)

பாசத்தன்பு - அன்பு வைத்தற் குரிய இடத்து அன்பு. பாசத்தன் பிணைப் பற்றற நீக்கலும். (யுத் : 4158)

பாசத்தால் ஆர்ப்புண்டல் - நாக பாசத்தாற் கட்டுப்படுதல். ஐய வெம் பாசந்தன்னல் ஆர்ப்புண்டார். (யுத் : 2244)

பாசத்தாற் பிணித்தல் - (நாக) பாசத்தாற் கட்டுதல். பிழைத்திவர் போவரல்லர் பாசத்தாற் பிணிப்பின். (யுத் : 2134)

பாசப்பிணக்கு - பாச பந்தம். பிறந்திறந் துழலும் பாசப் பிணக் குடைப் பிணியிற்றீர்ந்தார். (சு : 461)

பாசம் - 1. கயிறு. தெய்வப் பாசமுறப் பிணி செய்தார். (யுத்:222)
2. நாக பாசம். வெப்பாரும் பாசம் வீக்கி வெங்கணே வளைக்கும் மெய்யன். (யுத் : 2152) பாசமும் இற்றது (யுத் : 2264)
3. கயிற்றேணி. கப்பணப் படையும் பாசமும். (ஆ : 402)
4. சூடேற்றிய இரும்புச் சலாகை. சுற்றுண்ட பாசநாஞ்சில் சுமை யொடும் சூடுண்டு. (யுத் : 1621)
5. கட்டு. வீக்கிய கவசபாச மொழித்து. (யுத் : 3143)
6. சுற்றத்தார். (வை.மு) (கலா) யமபாசம். (அண்) மறை வாணர் செஞ்சொலறிவாளர் என்றிம் முதலோர் பாசங்கலந்த பசிபோலகன்ற பதகன் துரந்த உரகம். (யுத் : (22|5)
7. சம்சாரபந்தம். (ஆகு) இப்பாசம் மாய்க்கும் மாயம். (யுத் : 2153)
8. ஒரு படை. பாசாயுதம். பாலமும் பாசமும் அயிலும் பற்றுவார். (யுத் : 1800)
9. பற்று. பிணிமுதல் பாசம் வீசி. (ஆ : 662)

பாசவிசிப்பு - பாசத்தினது பிணிப்பு நாகபாசத்தின் கட்டு. பாச விசிப்பிணை நோக்கும். (யுத் : 2176)

பாசறை - படைவீடு. பகைமேற் சென்றோர் உறையுமிடம். பாசறையிற் பொருள் வயினிற் பிரிந்து போன...... கொழுநர். (பா : 715) பாசறைப்படை. (யுத் : 963) (அ : 735)

பாசறைப் படை - பாசறையிலுள்ள படை. (யுத் : 963)

பாசறைப் பொருள் வயின் - படைவீடாகிய பொருளின் பொருட் டாக. (வை.மு) பந்த ஞாட்புறு பாசறைப் பொருள் வயிற் பருவந் தந்த கேள்வரை. (அ : 735)

பாசறையிற் பிரிவு - பகைமேற் சேறலான் நிகழும் பிரிவு. பாசறை யிற் பொருள்வயினிற் பிரிந்துபோன...... கொழுநர். (பா : 715)

பாசி - பாசி. நீர்மேற் பாசி. (யுத் : 2535) (யுத் : 1887)

பாசிலை - பச்சிலை. பாசிலை துன்று வனம். (ஆ : 1070)

பாசிழை - பசும் பொன்னணிகள். பசுமையான பொன்னாலாகிய ஆபரணங்கள். பாசிழை மடந்தையர். (பா : 219) பாசிழை மகளிர். (பா : 794) (பா : 980) (கி : 553) (சு : 1207)

பாசிழை மகளிர்-பசும் பொன்னணிகள் பூண்ட சேடியர். (பா:794) (யுத் : 4291)

பாசிழை மடந்தையர் - பைம்பொன்னாலாகிய அணிகளையணிந்த (விலை) மகளிர். (பா : 219)

பாசுபதம் - பசுபதி சம்பந்தமான அஸ்திரம். பாம்பிற்றரு வெம்படை பாசுபதத்தினேடும். (யுத் : 1964)

பாட்டி - தாய் தந்தையின் தாய். பருந்துணப்பாட்டி யாக்கை படுத்தநாள். (யுத் : 951)

பாட்டொலி - வாய்ப்பாட்டின் ஒலி. பணை நிரந்தன பாட்டொலி நிரந்தன. (அ : 53)

பாடகக் காலினர் - பாடகத்தை யணிந்த மகளிர். பாடகக் காலினரைப் பயப் பயக் கொண்டு போனர். (பா : 868)

பாடகச் செம்பதும மலர்ப்பாவையர் - பாடகமணிந்த செந்தாமரை போன்ற பாதங்களை யுடைய பாவை போன்று அழகிய மகளிர். (பா : 241)

பாடகத்தரம்பையர் - பாடகமென்னும் காலணியை யணிந்த தேவ மாதர்கள். பாடகத்தரம்பையர் மருளப் பல்வித நாடகத் தொழிலினை நடிப்ப வொத்தவே. (ஆ : 486)

பாடகம் - ஒருவகைக் காலணி. பாடகக் காலடி. (பா : 123)

பாடக மெல்லடி பஞ்சனையார் - பாடகம் என்னும் அணியை அணிந்த மெல்லிய பாதம் பஞ்சு போன்றதாக வாய்க்கப் பெற்றவர்.(சீதை) பயில் பாடக மெல்லடி பஞ்சனையார் செயிரேது மிலாரொடு இருதியோ. (கி : 500)

பாடம் - ஒளி. பல்லாயிர மாமணி பாடமுறும்... அணி. (ஆ : 84)

பாடமுறுதல் - பளபள வென்று ஒளி செய்தல். (ஆ : 84)

பாடல் - பாட்டு. கொடிச்சியர் எடுத்த இன் குறிஞ்சிப்பாடல் கேட்டு அசுணமா வருவன காணுய். (அ : 760) நைவள அமுதப் பாடல். (பா : 876)

பாடல் பகர்தல் - பாடலைப் பாடுதல். நைவள அமுதப்பாடல் முறை முறை பகர்ந்து போனார். (பா : 876) [பா : பே]

பாடல் வேதிகை - இசை பாடுதற்குரிய மேடைகள். பாடல் வேதிகை பட்டி மண்டபம் முதல் யாவும் நாடி ஏகினன். (சு : 228)

பாடலம் - 1. பாதிரி மரம். பாடலம் பவளம். (ஆ : 655)
2. செம்மை நிறம். பாடலம் படர் கோங்கு. (சு : 721)

பாடவம் - 1. திறமை. பாடவத் தொழில் மன்மதன். (ஆ : 297)
2. களிப்பு. பாடவ நிலையினர். (ஆ : 416)
3. பெருமை. சடாயுவைப் போல வீடுதல் பாடவம். (கி : 967)
4. வீண் பெருமை. (வை.மு) வல்லமை. (கலா) ஆடவர் திலகனுக் கன்பினேம் எனப் பாடவம் விளம்பினம். (கி : 952)

பாடி - 1. பாடியபடி. (வை.மு) ஓசை செய்த வண்ணம். பாடி நீருக நூறி. (யுத் : 613)
2. படைவீடு. சேனைக்கெல்லாம் இழைத்தியாற்பாடி. (யுத்:705) பாடித்தலை யுற்றவர் எண்ணிலர் பட்டார். (யுத் : 1929)
3. இருப்பிடம் ஊர். (அண்) (யுத் : 613)

பாடியரற்றுதல் - கீதம்பாடி ஆரவாரித்தல். ஆடினன் அமுதான் பாடி யரற்றினன். (யுத் : 258)

பாடிவீடு - படைவீடு. பாடி வீட்டினை வலஞ்செய்க. (யுத் : 457)

பாடி வைப்பு - படைவீடு. வலஞ்செய்தார் பாடிவைப்பை. (யுத்:458) [பா : பே]

பாடு - 1. இடம். பறவையும் விலங்கும் பாடமைந்துறைவன. (கி : 830)
2. பெருமை. பாடியல் களி நல்யானை. (அ : 1046) பாடமைந்து. (யுத் : 1076) கொற்றவன் பாடுஇனி ஒருவராற் பகரற் பாலதோ. (யுத் : 1788)
3. துன்பம். பாடுறுபசி. (யுத் : 418) (உ.வி) (யுத் : 521) பாடுறு புண்கள். (யுத் : 2116)
4. ஒளி. வயிரங்கள் பொறியிற் பாடுற. (பா : 1300)
5. அழிவு. பாடுபட்டவர் படுகடல் மணலினும் பலரால். (யுத் : 521) பாடுறநீக்கி. (யுத் : 2643)
6. பக்கம். பெடையைப் பாடணைத்து.

7. தழும்பு. கோடுளதனையும் புக்குக் கொடும்புறத் தழுந்து புண்ணின் பாடுளது. (யுத் : 3879)

8. தங்குதல். வண்டு பாடிலாத் துரிசடை புரிகுழல். (யுத்:1674)

9. நல்லறிவு. பல்லியல் உலகுறு பாடை பாடமைந்து. (யுத் : 1076)

10. வேலைப்பாடு. பாடாமை கிண்கிணி. (கி : 99) [பா : பே]

11. சிறப்பு. பாடுறு பெரும்புகழ்ப் பரதன். (யுத் : 4252)

பாடுதல் - பாட்டுப்பாடுதல். அவன் குணங்களை வீணையில் பாடு கேனோ. (பா : 1077)

பாடுபடல் - 1. ஒலித்தல். (அண்)

2. நிலை தடுமாறி அவதியுறல். (கலா)

3. கெம்பீரமாதல். (வை மு.)

4. வருத்த முண்டாதல். (வெ.ப) பந்த முந்து கழல் பாடுபட வூடு படர்வோன். (ஆ : 17)

5. துன்பப்படல். அழிந்தொழில் பாடுபட்டவர் படுகடன் மணலினும் பலரால். (யுத் : 521)

பாடு பாடுறல் - பலவகையாகப் பக்கத்திற் பொருந்தி விளங்குதல். பற்குலம் மின்குலம் பாடுபாடுற. (யுத் : 1567) [பா : பே]

பாடுறுதல் - சிறப்புப் பெறுதல். பாடுறு பெரும் புகழ்ப்பரதன். (யுத் : 4252)

பாடுறு பசி - பெரும்பசி. வருத்துகின்றபசி. (யுத் : 418)

பாடுறு பெரும் புகழ் - சிறப்புப்பெற்ற மிக்ககீர்த்தி. (கலா) கவிஞர் பாடுகின்ற பெரிய புகழ். (வை.மு) பாடுறு பெரும்புகழ்ப் பரதன். (யுத் : 4232)

பாடை - பாஷை. பல்லியல் உலகுறு பாடை. (யுத் : 1076)

பாண் - 1. பாணர். பாணினம் ஞிமிறுகு. (அ : 693)

2. பாட்டு. சுரும்பு பாண்செய. (பா : 541)

பாண்குழல் - பாணரது புல்லாங்குழல். பாடல் நீத்தன பண் தொடர் பாண் குழல். (அ : 817)

பாண் செய்தல் - பாடுதலைச் செய்தல். நறுமலர் யாழின் சுரும்பு பாண் செயத் தேர்கை நின்றுடுவ சோலை. (பா : 541)

பாண்டி - தக்கேசி என்னும் பண். தெள்ளரி பாண்டி பாணிச் செயிரியர் இசைத் தேன் சிந்த. (பா : 883)

பாண்டிதர் - பண்டிதர். பாண்டிதர் நீரே பார்த்தினி துய்க்கும்படி வல்லீர். (கி : 1026)

பாண்டிபாணி - தக்கேசி என்னும் பண். (பா : 883)

பாண்டில் - 1. ஒரு வாச்சியம். கஞ்சதாளம். பாண்டிலும் சங்கும் வழங்கு கம்பலே. (பா : 489) (யுத் : 4325)
2. வண்டி. பாண்டிலின் வைத்த ஓர் பாவை. (பா : 84)
3. தாளம். (கலா) தெள்ளரிப் பாண்டிற் பாணி. (பா : 883) [பா : பே)

பாண்டிலின் வையம் - எருது பூண்ட வண்டி. பாண்டிலின் வைத்தோர் பாவை தன்னேடும். (பா : 841) [பா : பே]

பாண்டிற் பாணி - தாளத் தோடு கூடிய இசை. (பா : 883) [பா:பே]

பாண்டு அம்மலே - பாண்டு என்னும் அழகியமலே. கங்கை வந்திழிவ தென்னலாம் பாண்டு அம்மலே. (கி : 914)

பாண்டுவின் மலே - பாண்டு மலே. பாண்டுவின் மலே என்னும் பருப்பதம். (கி : 763)

பாணம் - வாளி. என்னே இந்தப் பரிபவப் படுத்தும் பாணம் பொறித்த போது. (யுத் : 1235) [பா : பே]

பாணர் - பாட்டுப் பாடுவோர். தெள்விளி சிறி யாழ்ப்பாணர். (பா : 39)

பரணி - 1. தாளம். கைத்தாளம். பாணிதள்ளா நடம். (சு : 133) பாணி தாழாக் கந்தார வீணைக் களி. (சு : 75)
2. முறை. வீணேயுங் குழலும் தத்தம் மிடறும் வேற்றுமையிற் றீர்ந்த பாணி தள்ளாட. (சு : 282) பாணியில் தள்ளி. (யுத்:2782)
3. தாளஒலி. முழவின் தெய்வப் பாணி. (யுத் : 2790)
4. தாள உறுப்பினுள் ஒன்று. தாள ஒழுங்கு. (வை.மு) வகுத்த பாணியின் ஆரியர் அருநடம் நடிப்ப. (ஆ : 581)
5. கை. செங் கேழ்ப் பாணி. (பா : 777)
6. பாட்டு. தாள ஓசை. பண்ணும் நரம்பிற் பகையா வியற் பாணி ஓசை. (பா : 971)

7. ஓசை. (அண்) கைத்தாளம். (வை.மு) பாண்டில் நிரம்பு சில்லரிப் பாணியும். (சு : 1089)

8. இசைப் பாட்டு. பாணியின் பங்கியம்பரம் எங்கும் விம்மின. (அ : 245)

9. கூத்து நல்லார் ஆடியபற் பாணி. (கி . 476)

10. நீரோட்டம். நீர். பாணித்தண் பளிங்கு. (ஆ : 655)

11. பக்கம். இடம். இளவல் நின்ற பாணியின் விலங்கா முன்னம். (யுத் : 3677)

12. தாள அறுதி பாணியின் அளந்து இசை படிக்கின்றனென. (ஆ : 833)

பாணித்தல் - காலந் தாழ்த்தல். தாமதித்தல். பொழுது நீட்டித்தல். பாணிக்க நின்று பயனுவ தென்னே. (ஆ : 969) ஆண்டு இறை பாணியாது. (கி : 573) பாணித்தது. (யுத் : 1134) பாணித்தல் வீர மன்றால். (யுத் : 1856)

பாணித் தீந்தேன் - வாய்ப் பாட்டாகிய இனிய தேன். தெள் விளிப் பாணித் திந்தேன் செவி மடுத்தினிது சென்றார். (பர் : 975)

பாணித்து நின்று - தாமதித்து நிற்றலால். பாணித்து நின்று பயனுவ தில்லை. (ஆ : 969) [பா : பே]

பாணியில் தள்ளுதல் - பாட வேண்டிய முறைமையினின்றுந் தவறுதல். பாணியில் தள்ளிக் கால மாத்திரைப் படாது. (யுத்:2782)

பாணிபண்ணுற - தாளம் பண் தம்முள் ஒத்துப் பொருந்த. பதங்களில் தண்ணுமை பாணி பண்ணுற. (பா : 144)

பாணினம் - பாணர் கூட்டம். பாணினம் முரிமிருக. (அ : 693)

பாத்த யானை - அணியணியாகப் பகுத்துக் கட்டப்பட்ட யானை. (பா : 903)

பாத்தல் - பகுத்தல். அணியணியாகப் பகுத்தல். பாத்த யானை. (பா : 903)

பாதகம் - பாவம். பன்னரி நீக்கரும் பாதகம். (அ : 634) பாதகக் கடுந்தொழில் அரக்கன். (ஆ : 87)

பாதகர் - பாவிகளாகிய அரக்கர். பாதகர் பரவை யென்னுங் குழியினைக் கருதிச் செய்த குமண்டை. (யுத் : 616)

பாதக வஞ்ச அரக்கர் - கொடுஞ் செயலையுடைய வஞ்சனை நிறைந்த அரக்கர். அப்பாதக வஞ்ச அரக்கரையே ஒப்பாய். (கி : 496)

பாதக வரக்கன் - இந்திரசித்து. (யுத் : 3131)

பாத்தக வரக்கி - சூர்ப்பணகை. (யுத் : 4202)

பாதக விருள்செய் கஞ்சுகம் - துன்பம் விளைக்கும் இருளாகிய கருஞ்சட்டை. பாதக இருள்செய் கஞ்சுகமும் பற்றலால். (சு:626)

பாதகன் - பாவி. துன்பம் விளைவிப்பவன். அந்தப் பாதகன் வீரத் தோள்களின் வீக்கம் எண்ணு. (சு : 269)

பாதங்கள் - அடிகள். பாதங்கள் பெயர்தொறும். (அ : 860) பாதங் கள் இவை யென்னிற் படிவங்கள் எப்படியோ. (ஆ : 48)

பாதசாலகம் - பாதசரம். சங்கொடு சிலம்பு நூலும் பாதசாலகமுந் தாழ. (சு : 210)

பாத சிலை - அடியிலிடப்பட்ட கல். (வை.மு) (அண்)அடிவாரப் பகுதி. (கலா) மயேந்திரம் அண்டந் தாங்கும் பொன்னெடுந் தூணின் பாத சிலை எனப் பொலிந்து நின்றான். (கி : 1037)

பாதத்து ஆர்த்த தோர்துகள் - பாதத்திலே ஒட்டிக் கொண்டுள்ள தான ஒரு துகள். அவனும் மற்று அத்தாபதன் தம்பி பாதத்து ஆர்த்த தோர் துகளுக் கொவ்வான். (யுத் : 1243)

பாத பங்கயம் - திருவடித் தாமரை. வாளுழவன் பாத பங்கயம் பணிந்தனன். (அ : 59)

பாதபம் - மரம். (சு : 1237) [பா : பே]

பாதம் - 1. செய்யுள் அடி. வாங்கரும் பாத நான்கும் வகுத்த வான்மீகி. (பா : 32)
2. கால். பாத லக்கமத வெற்பவை படைத்த வலியான். (ஆ : 18)
3. அடி. பாத பங்கயம். (அ : 59)

பாத மலர் - பாதமாகிய தாமரை மலர். பாதமலர் சிவப்பத் தாம் பதைத்துப் பார் சேர்ந்தார். (அ : 391)

பாதலக்கம் - கால் என்பதனையுடைய லக்ஷம். ஒன்றே கால் லக்ஷம். (ஆ : 18)

பாதலம் - பாதாளம். அம் மலை பாதலத்துச் சாய்ந்தது. (யுத்:2716) இறக்கம் கீழிலாப் பாதலம். (யுத் : 3227)

பாதவம் - மரம். பாதவம் ஒன்று பகுத்தான். (சு : 1237)

பாதாளம் - பாதாள லோகம். கீழ் பாலடுத்த பாதாளம். (யுத்:1226) பாதளத் துறைவிர் என நான் முகன் பணிப்ப. (யுத் : 3224)

பாதி - அரை குறை. இவை நேமியினேர்க்கு நின்ற பாதி முழுதும் இவற்கே பணி கேட்பமன்னே. (பா : 169)

பாதி மாமதி சூடி - பாதியான (கலே குறைந்த) பெரிய சந்திரனேச் சூடிய சிவபிரான். பாதி மாமதி சூடியும் பைந்துழாய்ச் சோதி யானும். (பா : 698)

பாதியின் மதிமுகப் பகழி - அர்த்த சந்திர பாணம். சாதியின் நிமிர்ந்த தோர் தலேயைத் தள்ளினுன் பாதியின் மதிமுகப் பகழி ஒன்றினுல். (யுத் : 3816)

பாதுகம் - 1. திருவடிநிலே. பாதுகந் தலேக்கொடு. (அ : 1204)
2. பாதங்கள். பஞ்சின் மெல்லடியாள் பங்கன் பாதுகம். (கி : 381)

பாதுகை - மரவடி. புனேயுந்தம்முனுர் பாதுகைப் பூசனே. (யுத்:4130)

பாதுகைப் பூசனே - பாதுகைகளுக்குச் செய்யும் பூசனே. (யுத்:413)

பாதைகள் - மரக்கலங்கள். நீர் என்று பொருளுள்ள பாத என்ற சொல் இலக்கணேயால் மரக்கலத்தை யுணர்த்தும். (செல்லும் மார்க்கங்கள்) பாதைகள் சொரிவன பருமணி கனகம். (பா : 82)

பாந்தள் - 1. பாம்பு. காந்தளின் முகை கண்ணிற் கண்டு ஒரு மஞ்ஞை பாந்தளி தென்ன உன்னிக் கவ்விய படிபாராய். (அ : 698)
2. பாம்பின் படம். பாந்தளின் அல்குலார். (பா : 873)
3. ஆதிசேடன். பாந்தளின் நெடுந்தலே வழுவிப்பாரொடும்... போந்தது போல். (யுத் : 1327)

பாந்தள் மிசைக் கிடந்தபார் - ஆதிசேடன் என்னும் ஆயிரந்தலேப் பாம்பின் மேலிருந்த பூமி. கைகேசி மெய்ப் புதல்வன் பாந்தள் மிசைக்கிடந்த பாரளிப் பானுயினுன். (அ : 387)

பாந்தளின் மகுட கோடிபரித்த பார் - ஆதிசேடன் என்னும் பாம்பினுடைய (பலவான) நுனிகளினுற் சுமக்கப்பட்ட பூமி. பாந்தளின் மருட கோடி பரித்த பாரதனின் வைகும் மாந்தர்கள் விலங் கென்றுன்னும் மனத்தன். (பா : 213)

பாந்தளுக் கரசு - ஆதிசேடன். பாந்தளுக்கர செனப் பறவைக்கே றெனப் போந்துருத்தது நெருப்புனைய போர்க்கணை. (யுத்:3439)

பாப்பரும் பாதலம் - பாம்புகள் உறைகின்ற அருமையான பாதாள உலகம். பாப்பரும் பாதலத்துள்ளும் பல்வகைக் காப்பரு மலை களும் பிறவுங் காப்பவர். (யுத் : 3442)

பாப்பு - பாம்பு. பன் மணிப் பஃறலைப் பாப்பிடை. (சு : 301) (யுத் : 3442)

பாபம் - பாவச் செயல். பாபமே இயற்றினுரை. (யுத் : 615) (ஆ : 641)

பாப முற்றிய பேதை - தீவினை முற்றிய கைகேசி. (வை.மு) பாப முற்றிய பேதை செய்த பகைத் திறம். (அ . 246)

பாம்பணை - ஆதிசேடனுகிய பாயல். பாம்பணை துறந்தவன். (யுத் : 2467) பாம்பணை அமலன். (யுத் : 3102)

பாம்பணை துறந்தவன் - பாம்பணையை விடுத்து இராமனுக அவதாரஞ் செய்தவன். (யுத் : 2467)

பாம்பணைப் பரன் - பாம்பணையில் துயிலும் மேலோனுகிய திருமால். (கி : 1006)

பாம்பறியும் பாம்பின் கால் - பாம்பு தங்குமிடத்தைப் பாம்பு தான் அறியும். பாம்பறியும் பாம்பின் கால் என மொழியும் பழமொழி யும் பார்க்கிலீரோ. (ஆ : 363)

பாம்பிவர் தறுகண் சம்புமாலி - சர்ப்பம் போல மேலெழுந்து சீறு கின்ற, அஞ்சாமைக் குணத்தையுடைய சம்புமாலி. (சு : 812)

பாம்பிழைப் பள்ளி - பாம்பினுல் ஆக்கப்பட்ட படுக்கை. (கலா) பாம்பு உண்டாக்கிய பாயல். (அண்) பாம்பாகிய அணிகலன் போன்ற படுக்கை. (வை.மு) பாம்பிழைப் பள்ளி வள்ளல் பகைஞு ரென்றுணரான். (யுத் : 718)

பாம்பிற்றரு வெம்படை - அரவத்தின் உருவிற் பொருந்திய நாகஸ் திரம். நாக பாசம். (யுத் . 1964)

பாம்பு கான்ற பனிமதி - (இராகு கேதுக்களென்னும்) பாம்பினுலுட் கொள்ளப் பெற்று வெளிப்பட்ட குளிர்ந்த சந்திரன். பாம்பு கான்ற பனி மதிப் பான்மையாள். (யுத் : 3946)

பாம்பு நான்றென - பாம்பு தொங்குவதைப் போல. பாம்பு நான் றெனப் பாய் பசுந் தேறலே. (பா : 66)

பாமக் கடல் - பரவிய கடல். (அண்) (பாம் - பரவும்) ஒளியையுடைய கடல். (வை.மு) வெவ் வடவைக் குடனே பாமக் கடல் நின்ற தொர் பான்மையதே. (யுத் : 2907)

பாமக் குருதி - பரவிய குருதி நீர். (யுத் : 3460)

பாமம் - 1. பரப்பு. (அண்) ஆழம். (கலா) பாமமா கடல் கிடங்காக (பா . 174) (உ.வி) (யுத் : 2907)

2. ஒளி. பாமக் கடல். (யுத் : 2907) பாமமா கடல்கள் எல்லாம். (பா : 785)

பாம மாகடல் - ஆழமான பெரிய கடல். (பெரும்புறக் கடல்) நேமி மால்வரை மதிலாக நீள்புறப் பாமமா கடல் கிடங்காக. (பா:174)

பாமமா கடல்கள் - ஒளி பொருந்திய பெருங் கடல்கள். பாமமா கடல்களெல்லாம் பன்மணி தூவியார்த்த. (பா : 785)

பாமறைக் கிழத்தி - கலைமகள். பாவிற் குரியளாய் வேதத்திற் கூறப்படுபவள். பாமறைக் கிழத்தி ஈந்த பருமுத்தமாலை. (யுத் : 4342)

பாய் - படகுகளின் பாய். பாயுடை நெடுங்கலம். (சு : 901) நெடிய பாயின் நவ்வெனச் சென்றவன்றே. (அ : 1050)

பாய்தல் - 1. பரவுதல். பாய் பெரும் பாழ் வயிறு. (அ : 893)

2. வேகமாகப் பிரவேசித்தல். தாமரை ஏய்ந்த தன் கோயிலே எய்துவாளெனப் பாய்ந்தனள். (யுத் : 4005)

3. ஆட்டுதல். மள்ளர் ஆலை பாய் அமலை. (பா : 34)

4. பெருகுதல். மிகுதியாக உண்டாதல். பாய்ந்த தாரையில். (பா : 134) பாடுறு புண்கள் தோறும் பசும் புனல் பாயப் பாய. (யுத் : 2116) பாய் மதயானை. (யுத் : 979)

5. ஓடுதல். பாய்ந்த பொற்காலுடைப் பளிக்குப்பீடமே. (பா:355)

பாய்ந்த பொன் - ஓடவிட்ட பொன். (பா : 355)

பாய் நிழல் - பரவிய நிழல். பற்பகல் நிழற்றும் நின் கவிகைப் பாய் நிழல். (அ : 844)

பாய்பரி - பாய்ந்து செல்லும் குதிரை. சுழிகொள் பாய்பரி துள்ள. (பா : 847) [பா : பே] (யுத் : 1700)

பாய்பரி மா - தாவிச் செல்லுமியல் புள்ள குதிரை. பாய் பரி மா இம்பர் நடவாதன ஈகுவெனுல். (யுத் : 1718)

பாய் பெரும்பாழ் வயிறு - பரந்த பெரிய பாழ்வயிறு. தாய் பசி யுழந்துயிர் தளரத் தான் தனிப் பாய்பெரும் பாழ் வயிறளிக்கும் பாவியும். (அ : 893)

பாய்மா - குதிரை. கடு நடைக்கலினப் பாய்மா. (அ : 1045) (யுத் : 2520)

பாயப்பாய - மிகுதியாக ஊறுதலால். புண்கள் தோறும் பசும்புனல் பாயப் பாய வீடினர் சிலவர். (யுத் : 2116)

பாயல் - 1. படுக்கை. (ஆதிசேடன்) பாயலுதறிப் படுப்ப போன்ற திரையின் பரப்பம்மா. (யுத் : 4) புழுதியே பாய லாகப் புரண்ட நாள். (யுத் : 3060) புற்பாயலான். (யுத் : 4115)
2. பள்ளியணை. பாற்கடலன்ன தோர் பாயல் அணைந்தான். (பா : 1343)

பாயலுதறிப் படுத்தல் - படுக்கையை உதறி விரித்தல். புடைசுருட்டிப் பாயலுதறிப் படுப்பதே யொத்த திரையின் பரப்பம்மா. (யுத்:4)

பாயிரம் - 1. விருது. வரம்பு. (அண்) பாயிரப் பெரும்படை. (கி : 715)
2. வரலாறு. முறையாக ஆராய்தல். வரலாற்று முறை. பாயிர முணர்ந்த நூலோர். (யுத் : 1595)

பாயிர முணர்ந்த நூலோர் - வரலாற்று முறையால் ஆராய்ந்தறிந்த நூலை யுடையவர். பாயிர முணர்ந்த நூலோர் காமத்துப் பதித்த பத்தி ஆயிரமல்ல போன பத்தென்பர் பொய்யே. (யுத் : 1595)

பாயிருள் - பரந்த இருள். (யுத் : 603) பரந்துபட்ட இருள். (பா : 1259)

பார் - 1. பூமி. பாரிடந் தெடுத்தமா. (ஆ : 1161)
2. தேரின் அடிப்பாகத்திலுள்ள நெடுஞ்சட்டம். நெரிந்தன தடஞ்சுவர் நெரிந்தன பெரும்பார். (சு : 834)
3. பாறையான நிலம். சுற்று முற்று பாரெலாம் போழ்ந்த மாகிடங்கு. (பா : 109)

பார்க்கிலா - பொருட்படுத்தாத. தனை எறிந்து கொல் வெனென் றேற்கவும் பார்க்கிலாச் செறிந்த தாரவன். (பா : 396)

பார் குலாம் செல்வன் - இவ்வுலகம் விரும்பும் செல்வன். பார் குலாஞ் செல்வ நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை ஈர்கிலாக் கள்வனேன். (அ : 661)

பார் சேகரத் தென்றிசை - பூமிக்கு மணிமுடி போற் சிறந்த தென் திசை. பார் சேகரத் தென்திசைக் கடிது செல்கின்றூர். (கி : 824)

பார்த்த பார்த்த - கண்ட கண்ட. பார்த்த பார்த்த திசை தொறும். (யுத் : 2085) பார்த்த பார்த்த இடந் தொறும். (யுத் : 3830)

பார்த்தல் - 1. ஆராய்ந்து பார்த்தல். அன்னையே அறம் பார்த்திலை யாம் என்றான். (அ : 315)
2. காணுதல். (யுத் : 2085)
3. எண்ணுதல். பழி பார்க்கிலான். (சு : 443)

பார்த்தனில் - பூமியைக் காட்டிலும். பார்தனில் என்பது ஓசையின்பம் நோக்கிப் பார்த்தனில் என்று வந்தது. பார்த்தனிற் பொறையின் மிக்க பத்தினி. (யுத் : 610)

பார்த்திபர் - மன்னர். பழிபட வாழ்கிற்பாரும் பார்த்திபர் உளரோ பாவம். (யுத் : 1647)

பார்த்திபன் - அரசன். பார்த்திபன் எழுந்து பொங்கி. (பா : 660)

பார்ப்பன குலம் - அந்தணர் குலம். பார்ப்பன குலத்துக் கெல்லாம் தனி முதற்றலைவனான உன்னை. (யுத் . 3058)

பார்ப்பான் - வேதியனாகிய பிரமன். பார்ப்பான் குண்டிகை இருந்த நீரும் குளு குளு கொதித்தவன்றே. (யுத் : 595) பார்ப்பான் தருமுலகு. (யுத் : 3040)

பார்ப்பு - 1. பறவைக் குஞ்சு. பறப்பவற்றின் இளமை. சேக்கையிற் பார்ப்பைப் பார்க்கும் பறவை. (ஆ : 224)
2. குஞ்சு. (பாரில் வசிப்பன) (கலா) புள்ளினம் பார்ப்பொடே. (சு : 721) தாயெரி வீழக் கண்ட பார்ப்பு. (யுத் : 1612)
3. பார்த்தல். பார்வை. பார்ப்படங்கின கண்ணெலாம். (யுத் : 1199) பணங்கிளர் அரவென எழுந்து பார்ப்புறு. (யுத் : 3981)

பார்ப்புற - பார்த்தல் உற. (சு : 1057)

பார்ப்புறப் பார்ப்புற - பார்க்குந் தோறும். பார்ப்புறப் பார்ப்புறப் பயத்தினுற் பதைத்து ஊர்ப்புறத் திரியலுற் ரேடுவார் பலர் (சு . 1051)

பார்ப்புரு - பார்த்து எழுந்து பார்ப்புரு. (யுத் : 3981)

பார்ப்புறின் - ஆராயுமிடத்து. (அ : 449)

பார்ப்புறும் - காணத்தக்க அழகமைந்த. பார்ப்புறு நாருள தனுவுளாய். (அ : 449) [பா : பே]

பார் படைத்தவன் படை - பிரமாஸ்திரம். பார் படைத்தவன் படைக்கொரு பூசனை படைத்திர். (யுத் : 2576)

பார் பொறை - பூமியின் பாரம். பார் பொறை நீக்கினுன் என்றுரைத்த தெப்பரிசு மன்னே. (பா : 896)

பார் மகள் - பூமிதேவி. பார் மகளைத் தழுவினையோ. (யுத் : 3893)

பார் மகள் குருதியுண்ணல் - பகைவனைக் கொன்று அவன் இரத்தப் பெருக்கைப் பூமிதேவி குடிக்கும்படி செய்தல். மானுடன் தன் ஊற்றுர் குருதிப்புனல் பார்மகள் உண்டிலாளேல். (யுத் : 1962)

பார்மகளைத் தழுவல் - பூமி தேவியைத் தழுவுதல். மண்கவ்வுதல். பின்னைப் பார்மகளைத் தழுவினையோ திசையானை மருப்பிறுத்த பணைத்த மார்பால். (யுத் : 3893)

பார்மிசை வருதல் - பாதசாரியாய் வருதல். தரையில் நடந்து வருதல். பார்மிசை வருவாரும் பண்டியில் வருவர்ரும். (பா : 1279)

பாரகம் - பூமி. பூமியாகிய இடம். கிளர்நீர் உடுத்த பர்ரகம். (அ : 1731) தந்த பாரகம். (அ : 1181) (யுத் : 885) ஏழு பாரகம். (பா : 1123)

பாரகர் - பராங்கதர். கரைகண்டோர். வேதபாரகர். (பா : 698)

பாரணங்கு - பூமகள். பாரணங்கினைத் தாங்குறும் பல்வகை வாரணங்களை வென்றவன். (யுத் : 3853)

பாரம் - 1. எதிர்க்கரை. நவமணித் தடங்கள் நீரும் பாரமும் மருங்கும். (கி : 109)

2. கனம். பார வெஞ்சிலை. (ஆ : 23)

3. பெருமை. பாரம் நீங்கிய சிலையினன். (யுத் : 544) பாரமா மதில். (யுத் : 4074) அரசியற்பாரம். (கி : 313)

4. மிகுதி. வள்ளுகிர்ப் பார மான்ற ஏற்றருங் கரம். (யுத்:279)

பாரம் நீங்கிய - பெருமை நீங்கிய. அற்பமான. (யுத் : 544)

பார மாமதில் - மிகப் பெரிய மதில். பார மாமதில் அயோத்தி. (யுத் : 4074)

பார மாரம் - பெரிய கொடுஞ்சுமையான மரம். பார மாரம் முடி யுடைத் தலையிடைப் படலும். (சு : 1028)

பார வில் - பெருமை பெற்ற வில். பெரிய வில். வானவர் புகழுண்ட பாரவில். (யுத் : 1154)

பாரவெஞ்சிலை - சுமையாகத் தொங்குகின்ற கொடிய வில். (யுத் : 2177)

பாராயணமறை - இடைவிடாது ஓதப்பெறும் வேதங்கள் பாராயண மறை நான்கையுங் கடந்தோர் இவர். (யுத் : 3031)

பாரார் - பார்க்க மாட்டார்கள். அயலொருவர் பாரார் என்றே யரிந்திர். (ஆ : 353)

பாரி - 1. இரவில் காவலாளர் முழக்கும் ஒருவகை வாத்தியம். (கலா)

2. கொட்டு முழக்குடன் கூடிய இராக்காலம். (அண்)

3. பாரிப்பு; சொற்பரப்பு. (வை.மு) நெடுங்கடல் விளம்பும் பாரியு மடங்கின. (சு : 253)

பாரிடம் - பூதம். பாரிடமே இது. (ஆ : 1161) பாரிடம் துனைந் தெழுந்தன. (யுத் : 3783)

பாரித்தல் - 1. பலரும் அறியச் செய்து பரப்புதல். பண்டைத்தன் நாமத்தின் காரணத்தைப் பாரித்தான். (யுத் : 1668)

2. பரப்புக் கொள்ளுதல். பாரிடை இழித்து போய்ப் பாரித்தார். (யுத் : 2428)

3. முயற்சி கொள்ளுதல். விடாமுயற்சி செய்தல். பாரித்துற்ற தொன்றியற்றுவீர். (யுத் : 1609)

4. விவரித்தல். (உ.வி) (யுத் : 1668)

பாரிய - பார்க்கும்படி. பாரிய விருத்தலோடும் பகையிருள் இரிந்து பாற. (யுத் : 2170)

பாரிருள் - பூமியில் உள்ள இருள். இரதமொன்றூர்ந்து பாரிருளை நீக்கும் அவ்வரதன். (அ : 885)

பாரின் பாயல் - தரைப் பள்ளி. பூமியாகிய படுக்கை. விரித்த நாணல் மாலைவாய்ப் பாரின் பாயல் வைகினன். (அ : 665)

பாரினுள் . பூமிதேவி. பாரினுள் முதுகுந் நெடும் பாழ்பட. (யுத்:653)

பாரை - 1. ஒருவகை மீன். குழிகல்லுமாம். பாரையின் தலைய கோடி பரப்பினுன். (யுத் : 2062)
2. கடப்பாரை. பாரையின் தலைய கோடி. (யுத் : 2062)

பால் - 1. பக்கம். கணிச்சியான் பாலினுற்றிய பத்தி. (கி : 350) ஏவினுர் பாற் செல்ல. (யுத் : 293)
2. விதி. பால் நிறுத்தந்தந்தணன் பணியன் ஆகி நின் கோல் நினைந்திலன். (சு : 884)
3. பகுப்பு. பால்வரு பனுவல். (யுத் : 384) பான்முக முற்ற பெரும் பழி. (யுத் : 2827)
4. உரிமை. வேதியர் வணங்கற் பால இறைவன். (யுத் . 3124)
5. குணம். தன்மை. இயல்பு. ஏயின இதுவலான் மற் றேழைமைப் பால தென்னே. (கி : 654) உண்பால் ஒருத்தி. (சு : 82)
6. பகுதி, பங்கு. தம் பால். பால் வரும் உறுதி யாவும் தலை வற்குப் பயக்கு நீரார். (அ : 18)
7. மணி பிடியாத கதிரின் பால். முது மேதிகள் கதிர் மேய்வன கடைவாய் பால் பாய்வன. (அ : 625)
8. ஏழனுருபு. இடம். கூறிய மனிதர் பாற் கொற்றங் கொள்ளலை. (யுத் : 90) நன்பால், மின்பால். (யுத் : 2199)
9. பசு முதலியவற்றின் பால். பால் கொளும் புரவி. (யுத்:3071)
10. வெண்மை. பால்வளை. (பா : 786)

பால் கொளும் புரவி - பால் போன்று வெளுத்த குதிரைகள். (யுத் : 3071)

பால் பரந்தனைய இன் சொல் - பாலின் இனிமை மிகுந்தாற் போன்ற இன் சொல். பால் பரந்தனைய இன் சொல் தடம்படு கண்ணி னுள் தன் தனிமையை நினையலுற்றுன். (ஆ : 1045)

பால்வருபனுவ்ல் - பல பகுப்புக்கள் பொருந்திய நூல். பால்வரு பனுவலின் துணிவுபற்றிய சால் பெருங் கேள்வியன். (யுத்:384)

பால்வளை - 1. வெண்மையான வளை. வெண்சங்கம். பால்வளை தெரிவார். (அ : 249) பால்வளை யமிர்தளாய பல்லியந்துவைப்ப. (பா : 789)

பால் வேலை - பாலாழி. பால் நல் வேலையைப் பருகுவ. (யுத்:2460)

பாலகில்லர் - வாலகில்லியர் என்னும் இருடியர். பகவானது மயிரி னின்றுந் தோன்றியவர். (வை.மு) பண்டைய அவன் தரு பால கில்லரும் முண்டரும் மோனரும். (ஆ : 120)

பாலமளி - பாற்கடற் சயனம். பாற்கடலில் ஆதிசேடனாகிய படுக்கை. பாலமளி அந்நாள் எழுந்தபடியே கடிதெழுந்தனன் இராமன். (யுத் : 3641)

பாலமை - 1. மிக்க இளமைப் பருவத்தின் தன்மை. பாலர் தன்மை, பால்ய குணம், சிறுபிள்ளைத் தன்மை. பாலமை தவிர் நீ. (கி : 384)
2. பான்மை. தன்மை. புரவி நான்கொரு பாலமை புணர்ந்தன. (பா : 1316)

பாலன் - சிறுவன். பாலன் நீ இனையன பகரற் பாலையோ. (யுத் : 78)

பாலிகை - பாலிகைக் கிண்ணம். இளம் குளிர் முளைஆர் நற்பாலிகை இனம். (பா : 1269)

பாலிகை அட்டிவைத்தன - பாலிகையில் தோன்றி யுள்ளன. (யு : 1427)

பாலித்தல் - 1. அளித்தல். இன்பம் பாலியா முன்னர். (கி : 390)
2. செய்வதாக மேற் கொள்ளுதல். காத்தல். படரும் நல்லறம் பாலித்து. (அ : 788)

பாலித்து - காத்து. (அ : 788)

பாலின் ஊட்டுவார் - பாலூட்டுவார். (அண்) (கலா) பாற் சோற்றை ஊட்டுகின்ற மகளிர். மக்களைப் பாலினூட்டுவார். (பா : 89)

பாலின் பஞ்சு - பால்போன்ற வெண்ணிறமான பஞ்சு. பாலின் பஞ்செனத் தீந்த தவ்வெரி. (யுத் : 4005)

பாலின் வெள்ளத் தாழி - பாலினாலாகிய பெருக்கை யுடைய கடல். பாற் கடல். (யுத் : 2870)

பாலின்வேலை - மிகுதியான பால். சேர்வுறு பாலின் வேலைச் சிறு துளி தெளித்த வேனும். (யுத் : 115)

பாலுடை மொழியாள் - இனிமையால் பாலும் தோல்வியுறும் மொழியினையுடைய சீதாபிராட்டி. பாலுடை மொழியாளும் பகலவன் அனையானும். (அ : 678)

பாலுள பவளச் செவ்வாய் - பாலின் சுவையமைந்த பவளம் போன்ற சிவந்த வாய். பாலுள பவளச் செவ்வாய்ப் பணைமுலை நிகர்த்த மென்றோள் வேலுள நோக்கினுள் ஓர் மெல்லியல். (பா : 1106)

பாலுறுதல் - பகுப்பு உறுதல். பிளவு படுதல். பாலுறு பசுவெண் திங்கள். (யுத் : 710)

பாலுறு பசுவெண் திங்கள் - பகுப்பாகப் பொருந்திய வெண்ணிற முள்ள இளைய பிறைச் சந்திரன். (யுத் : 710)

பாலுறு பிரை- பாலிற் சேர்ந்த பிரைத்துளி. காதல் நோய் பாலுறு பிரை யெனப் பரந்த தெங்குமே. (பா : 604)

பாலை - 1. பாலை நிலம். பாலை சென்றடைந்து பரதன் சேனையே. (அ : 1085) தீப் பொதிபடி உடைப் பாலுடைப் பாலை. (அ : 1087)

2. பாலை என்னும் பண். பாலையாழ். (ஆ : 654)

பாலையாழ் - பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்ற நால்வகைப் பண்களுள் பாலை என்னும் பண்ணுக்குச் சிறந்த யாழ். (ஆ : 654)

பாலையேய் நிறம் - பால் போன்ற வெண்மை நிறம். பாலையேய் நிறத்தொடு பண்டுதான் படர் ஓலையேய் நெடுங்கடல் ஓடிற்றில்லையால். (அ : 996)

பாவகம் - 1. உட்கருத்து, அபிப்பிராயம். தன்மை. மனக்குறிப்பு. பாவகம் இன்னதென்று தெரிகிலர் பதைத்து விம்ம. (யுத் : 1227) பாடுவார்கள் பயில்நடம் பாவகத்து ஆடுவார்கள். (யுத் : 3584)

2. கொடுமை. பாவகர் உளரே. (யுத் : 3308)

பாவகர் - கொடியோர். இவர் துணை ஆற்றல் முற்றும் பாவகர் உளரே. (யுத் : 3308)

பாவகன் - 1. அக்கினி. வடவைக்கடல். நெடுங்கடல் குடிக்கும் பாவகன் சிகைக் கொழுந்திது. (ஆ : 1152)

2. பரிசுத்தன். தூய்மைப் படுந் தன்மையன். பறவையின் குலங்கள் காக்கும் பாவகன். (யுத் : 2222)

பாவகாரி - பாவி. தீவினையாளன். இவ்வுலகை நோய் செய்த பாவகாரி. (அ : 1164) (சு : 1092)

பாவகாரியர் - பாவகாரிகள். முற்றறிவருக் கழிவு செய்யும் பாவ காரியர் உயிர்ப் பதமலால் இரைபெரு பகழி நாகம். (யுத் : 100)

பாவத்தை மணம் புணர்தல் - பாவத்தை மனைவியாகக் கட்டிக் கொள்ளுதல். வெம் பாவத்தை மணம்புணர் மஞ்ஞளர். (யுத் : 3263)

பாவந்தீர்க்கும் உருமொத்த சிலையினோர் - தீவினையைப் போக்கும் இடி போன்ற முழக்கினையுடைய வில் வீரராகியஇராமலக்குமணர். (அ : 580)

பாவ பண்டாரம் - பாவங்களாகிய பொருட்குவியல். பாவத்தின் பொக்கசம். பாவத்தின் நிதிக்கூடம். பாவ பண்டாரமன்ன செய்குன்றம். (யுத் : 801)

பாவம் - 1. தீவினை. பாவத்து அனைவரும் தோற்க. (யுத் : 3330)

2. இரக்கப் பொருள்தருஞ் சொல். பழிபட வாழ்கிற்பாரும் பார்த்திபர் உளரோ பாவம். (யுத் : 1647)

3. பிராணி. [பாவம் - பவம்; பிறப்பையுடைய பிராணி] பல பாவமிசைக்கும் கடி தடவத்தினள். (உ.வி) (ஆ : 1083) [பா:பே]

பாவம் அஞ்சு - பஞ்சமகா பாதகம். (யுத் : 459) [பா:பே]

பாவம் ஐந்து - பஞ்சமகாபாதம். நன்னீர் ஆடுவார் பாவம் ஐந்தும் நீங்கி மேலமரராவார். (யுத் : 459)

பாவருங் கிழமை - செய்யுள் முயற்சியின்றி இயற்றும் உரிமை. (கலா) செய்யுள் செய்வதிற் பொருந்திய உரிமை. உரிமை - புலமை. பாவருங் கிழமைத் தொன்மைப் பருணிதர் (கி : 80 7)

பாவனம் - சுத்தஞ் செய்கை. தூய்மை. அடைத்த சேது பாவன மாயது. (யுத் : 4088)

பாவனை - அபிநயம். இந்திர சால மென்னத் தானவை உருவிற் றோன்றும் பாவனைத் தகைமை. (யுத் : 2784)

பாவி - 1. பாதக முடையாள். பல்லாலே இதழதுக்குங் கொடும் பாவி. (யுத் : 3892)

2. பாவஞ் செய்பவன். தன்குல முழுதுங் கொல்லும் பாவி. (யுத் : 950)

3. பரவி. உதிரப்புனல் பாவி வேலையுலகு பரந்தவால். (யுத் : 3384)

பாவித்தல் - நினைத்தல். எண்ணுதல். எண்ணியிருத்தல். பாவியாக் கொடுத்த வெம்மை. (ஆ : 648) அல்லிற் பாதியால் அனைய துன்பம் அகற்றுவான் பாவித்தேற்கு. (யுத் : 2710)

பாவியா - இடைவிடாது நினைக்கப்பட்டு. (ஆ : 648)

பாவியாதபோது இலாத - எண்ணாத வேளையிராத. தையலாளை மெய்யுறப் பாவியாத போதிலாத பாவி. (ஆ : 651)

பாவியேன் - தீவினையுடைய யான். பாவியேன் இவண் மடியக் கடவேனே. (ஆ : 335) (ஆ : 311)

பாவிற்றிலை - பரவவில்லை. நின்ற கால் மண்ணெலாம் நிரப்பி அப்புறம் சென்று பாவிற்றிலை. (பா : 454)

பாவுண்ட கீர்த்தியான் - பரவிய கீர்த்தியை யுடைய இலக்குவன். (யுத் : 2183)

பாவுதல் - பரவுதல். படர்தல். பெருகுதல். படியேழும் நெடுந்துயர் பாவிடவும். (சு : 497) மீப்பாவிய இமையோர் குலம்.(யுத் : 3041

பாவை - 1. பெண்.(சீதை)பஞ்சரக் கிளி யெனக்கதறு பாவையை விடா. (ஆ : 25)

2. பெண் போன்ற ஓவியம். சித்திரப் பாவையின் செயலார். (சு : 1210)

3. பதுமை. பாவை பேசுவ போல். (சு : 268)

பாவையர் - பெண்கள். பொன் விலைப்பாவையர் மனமும் போற் பசையு மற்றதே. (பா : 356)

பாழ்புறம் - வெற்றிடம். ஏழிரெண்டாகிய உலக மேழினும் பாழ்புறங் கிடக்குறு படியது. (யுத் :4244)

பாழ்த்தல் - பயனறுதல். பாழ்படல். பாழ்த்தபாவி. (அ : 1061)

பாழ்படுதல் - 1. பாழிட மாதல். பாரினுள் நெடு முதுகும் நெடும் பாழ்பட. (யுத் : 653) படுகளம் பாழ்பட. (யுத் : 1013) நெஞ்சு பாழ்பட்டானை. (சு : 305)

2. அழிந்தொழிதல். எய்கணை மாரியாலே இறந்து பாழ் படுதும் பட்டால். (யுத் : 1355)

பாழ் வயிற்றலகை - பாழ்த்த வயிற்றையுடைய பேய். துவன்றிய நிணச் சேறு ஆன்ற பாழ் வயிற்றலகையைப் புகல்வ தென். (ஆ : 521)

பாழ் வயிறளித்தல் - பாழ் வயிற்றுக்கு உணவளித்தல். தாய் பசி உழந்துயிர் தளரத் தான் தனிப்பாய் பெரும் பாழ்வயிறளிக்கும் பாவியும். (அ : 893)

பாழி - 1. வலிமை. பாழித்தடந்தோள். (கி : 280) பாழிசால் இரணியன். (யுத் : 310) பாழிமா முகடு. (பா : 340) பாழிப்புயம். (பா : 1359) பாழியான் வயிரப்படி. (யுத் . 1000) பாழி நெடுந் தோள் வீரா. (சு : 599) பாழி துற்று. (யுத் : 3924) பாழிச் சிகை பரப்பி. (யுத் : 3024)

2. பெருமை. அகலம் பாழிநன் னெடுங் கிடங்கு. (சு : 242)
3. பருமை. பாழிமா மேரு. (சு : 31)
4. வீரம். பாழித் தோள் நெடும் படைக்கலப் பதாதி. (சு:873)
5. துளை. படர் செவிப் பாழியான். (யுத் 1287)
6. குகை. (கலா) உள்ளாழ்ந்திருத்தல். (வை.மு) பாழி பொரு வன் பிலன். (கி : 888) பாழிவாய் மடித்து. (யுத் : 2522)
7. அகலம். பாழிவன் தடந்திசை. (யுத் : 133)
8. புற்று. பாம்புறங்கும் படர் செவிப் பாழியான். (யுத் : 1287)

பாழிச்சிகை - வலிய ஜ்வாலை. அனற் கொழுந்து. பாழிச்சிகை பரப்பித் தனிபடர்கின்றது. (யுத் : 3024)

பாழித்திசை - வலியதிசை. பாழித்திசை நின்று சுமந்த பணைச் சூழிக்கரி தள்ளுதல் தோள்வலியோ. (யுத் : 1736)

பாழித்தீ - வலிமிக்க தீ. பாழித்தீச்சுட வெந்தது என் நகர் (சு : 1226)

பாழிதுற்றுதல் - வலிமை மிகுதல். பாழிதுற்றரி பற்றிய பீடம் (யுத் : 3924)

பாழிப்புயம் - வலிய புயம். வன்மை செறிந்த புயம். பாழிப்புயம் அம்புருவப் படலும். (யுத் : 2322) (பா : 1359)

பாழிமாக்கடல் - வலிய பெரிய கடல். பாழிமாக்கடல் கடைந் துளான். (யுத் : 470)

பாழிய - வலிமையுடைய. பாழிய மற்றைத்தம்பி. (யுத் : 4281)

பாழியந் தடந்தோள் - பருத்து அழகிய பெரிய தோள். (கலா) வலிய பெரிய தோள். (அண்) பாழியந் தடந்தோள் வீர மாருதி. (கி : 73)

பாழியம்புயம் - வலிய அழகிய தோள். பாழியம் புயத்து நின் பணியின் நீங்கலா ஆழியை. (அ : 847)

பாழியாள் வயிரப்படி - வலிமையைக் கொண்டு உறுதியுள்ள பூமி. பாழியாள் வயிரப்படி பன்முறை பூழியாக்கின பொன்னெடுந் தேர்களே. (யுத் : 1000)

பாளை - தென்னை கமுகு முதலியவற்றின் பாளை. பாளை தந்த மது. (பா : 55)

பாளைத்தேன் - பாளையிலிருந்து வடிகின்ற கள். அரிதலைப்பாளைத் தேனும் சோலை வாய்க்கனியின் தேனும். (பா : 40)

பாளை தந்த மது - தென்னம் பாளை தந்த கள். பாளை தந்த மதுப் பருகிப் பரு வாளை நின்று மதர்க்கும் மருங்கெலாம். (பா : 55)

பாளை தாதுகு நீர் - பாளையிலுள்ள மலர்கள் சிந்தப்பெற்ற நீர். பாளை தாதுகு நீர் நெடும் பண்ணைய. (யுத் : 971)

பாளை விரி - விரி பாளை. பாளை விரி ஒத்துலவு சாமரை. (பா : 914)

பாற்கடல் - திருப்பாற் கடல். பாற்கடலன்ன தொர் பாயல். (பா : 1343)

பாற்கடல் அழுவம் - பாற்கடலின் பரப்பு. முதல் பாற்கடலழுவத் தன்றெழுவா ளென ஆயினுள். (அ : 641) பாற்கடல் முவத் துள்ள தொத்தது அப்பதகன் மூதூர். (யுத் : 918)

பாற் கடலன்ன தொர் பாயல் - திருப்பாற் கடற் பள்ளி போலும் பள்ளியணை. (பா : 1343)

பாற்கடற் கள்வன் - திருமால். (யுத் : 3155)

பாற்கடற் சேக்கை - திருப்பாற் கடற் பாம்பணைப் பள்ளி. உறைந்த பாற்கடற் சேக்கையுட னெரீஇ. (அ : 516)

பாற்கடற் பள்ளியான் - திருமால். படந்துடிக்கின்ற நாகப் பாற்கடற் பள்ளியானும். (யுத் : 2967)

பாற் பெருங் கடல் - பெரிய பாற்கடல். (சு : 301)

பாற்றடங்கடல் - பெரிய பாற்கடல். பாற்றடங்கடல் ஒத்தது பார் என்றான். (அ : 829)

பாற்றினம் - பருந்தின் கூட்டம். (ஆ : 399)

பாற - சிந்த. தனித்தனி தலைகள் பாறச் சூழ்கின்ற வீரம். (யுத் : 2974)

பாருடு களம் - பருந்துகள் வட்டமிடுகின்ற போர்க்களம். கும்ப கருணனுர் பாருடு வெங்களத்துப் பட்டார். (யுத் : 1673) (யுத் : 2347)

பாருடுதல் - பருந்துகள் சூழ்தல். பாருடுமுகத்தன. (யுத் : 1717)

பாறி - நிலைகெட்டோடி, மாறி. அறமாற்றலர் வாழ்வெனப் பாறி விந்தது செல்வம். (அ : 1084)

பாறிரண்டனைய மெய்ய - பால் திரண்டாற் போன்ற உருவ முடையன. பால் திரண்டனைய மெய்ய பயந்திரண்டனைய நெஞ்ச. (அ : 1045)

பாறு - 1. பருந்து. பாறு பின்செல. (பா : 902) (யுத் : 1527)
2. மாறு. (வை.மு) பாறு பொருகின்றன பருந்திவை. (யுத் : 857)
3. கழுகு. (கலா) (யுத் : 857)

பாறுகு சிறை - பருந்து உகுக்கின்ற இறகுச் சட்டை. பாறுகு சிறையென விசும்பிற் பாறிட நூறினன். (யுத் : 1527)

பாறுதல் - 1. வலி கெடுதல். அனுமன் பாறினன் ஈடுறுமிவனைக் கொண்டெளிதின் எய்தினேன். (யுத் : 1501)
2. சிந்துதல். சிதறியோடுதல். அடிசிதறுதல். விசும்பிற் பாறிட நூறினன். (யுத் : 1527) பாற நூறினன். (யுத் : 1801) தலைகள் பாறச் சூழ்கின்ற வீரம். (யுத் : 2974) புள்ளினம் பாறவே (சு : 721) [பா : பே]
3. நிலை மாறுதல். பாறி வீந்தது செல்வம். (அ : 1084)

பான்முகப் பரவை - பாலைத் தன்னிடம் கொண்ட கடல். பான்முகப் பரவைப் பள்ளிப் பாம்பணைப் பரன். (கி : 1006)

பான் முகமுற்ற பெரும்பழி - பழிக்கத்தக்க பகுதிகளெல்லாம் இடம் பெற்ற பெரிய பழி. (அண்) தீய பகுதிகளில் முதன்மை பெற்ற பழி (கலா) செய்பத்தகாத வென்று விலக்கப்பட்ட பகுதிகளில் முதன்மை பெற்ற பெரும்பழி விளைக்கும் செயல். (வை.மு) (யுத் : 2827)

பான்மை - 1. தன்மை. மௌலி பறிப்புண்டும் வந்திலாதான் இனிப் பொரும் பான்மையுண்டோ. (யுத் : 955) விளக் கெதிர் வீழ்ந்த விட்டிற் பான்மையை வியக்க வேண்டா. (யுத் : 1608)
2. கடமை. வீரத்தின் பான்மை தீர்ப்பான். (சு : 993) [பா:பே]
3. முறைமை. பாக்கியம் எனக்குளதென நினைவுறும் பான்மை போக்கி நிற்கு இது பொருளென உணர்கிலென். (பா : 475)

பானத்தான் - குடியை யுடையவன். பானத்தானல்லன். (யுத்:892)

பானத்தானம் - மது பானஞ் செய்யுமிடங்கள். பானத்தானமும் பாய்பரிப் பந்தியும். (சு : 727)

பானம் - 1. மதுபானம். பானமும் துயிலும். (யுத் : 2233) பானத் தானல்லன். (யுத் : 892)
2. தேன். நான நாண்மலர்க் கற்பக நறுவிரை நான்ற பானம். (சு : 100)

பானல் - 1. நீலோற் பலம். விள்ளும் வீயுடைப் பானல். (பா : 653)
2. கருங் குவளை. மாழை பானல் வேல் காவியான கண்ணி. (ஆ : 651)
3. கருநெய்தல். பானலும் குவளையும். (யுத் : 332)
4. கடல். யானைபட்ட அழிபுனல் யாறெலாம் பானல் பட்ட. (யுத் : 1012)

பானல் வேலை - சிறந்த பாற்கடல். பானல் வேலையைப் பருகுவ. (யுத் : 2460)

பானிறக் குன்றம் - பால் போலும் வெண்ணிற முடைய மலை போன்ற யானை. ஐராவதம். (யுத் : 2562)

பானிறத் தன்னக்குழாம் - பால் போன்ற வெண்ணிற முள்ள அன்னக் கூட்டம். பால் நிறத் தன்னக் குழாம் படர்ந் தென்னப் பற்பல மங்கையர் படர. (சு : 409)

பானிறப்பட்டு - பால்போன்ற வெண்மை நிறமுடைய பட்டு. பானிறப் பட்டின் மாலை யுத்தரியம். (அ : 411)

பானிற வமளி - பால் போன்ற வெண்ணிற முள்ள படுக்கை. செம் பொன் மண்டபத்துளாங்கோர் பானிற அமளி சேர்ந்தான். (ஆ : 656)

பானு - சூரியன். பானுவால் நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான். (பா : 14)

பானுகர் புதல்வர் - பால் நுகர் புதல்வர். பால் குடிக்கின்ற புதல்வர். பானுகர் புதல்வரோடும் குலங்களோடடங்கக் கொன்று. (யுத் : 2866)

பானுரை - பாலின் நுரை. ஆவிவிரி பானுரையின் ஆடை பணை யாக. (அ : 541)

பி

பிங்கலை - வலது மூக்கால் விடும் சுவாசம். இடாவு பிங்கலையால் நைய. (பா : 693)

பிச்சம் - 1. மயிற் பீலியாற் செய்த எடு பிடிவகையுள் ஒன்று. தொங்கலும் குடையுந் தோகைப் பிச்சமும் சுடரை ஓட்ட. (பா : 893)
2. மயிற் பீலிக் குஞ்சம். தொங்கல் வெண் குடை தொகைப் பிச்சமும் படவிராய். (பா : 1120)
3. மயில் தோகைக் குடை. (உ.வி) (பா : 893)

பிச்சர் - பித்தர். பிச்சரா மன்ன பேச்சினன். (அ : 651) பிச்சர் சொல்லுவ சொல்லினை. (யுத் : 113) பிச்சரில் திகைத்தவன். (யுத் : 2284)

பிச்சி - பைத்தியம் பிடித்தவள். பிச்சி நீ என் செய்தாய். (பா:1057)

பிச்சை - ஐயம். பிச்சையும் இடுதும் என்று உணர்வு பேணலா வச்சையர். (ஆ : 684)

பிசாசன் - இராவணன் படைத்தலைவருள் ஒருவன். பிசாசன் என்றொரு பெயர் பெற்ற நிசாசரன். (யுத்:54 (யுத்:502) (யுத்:2272)

பிசிதம் - மாமிசம். ஊன். பிறவியிற் பெரிய நோக்கிற் பிசிதமுண்டுழலும் பெற்றிச் சிறையன. (யுத் : 2049)

பிசைதல் - 1. சிதைத்தல். அள்ளும் பிசையும் துவைக்கு மால். (யுத் : 2094) (யுத் : 271) பிசைந்து தின்ன. (ஆ ; 879) (சு : 900)
2. ஆராய்தல். பெருந்திசையனைத்தையும் பிசைந்து நேடினேன். (கி : 695)

பிசைதொழில் - பிசைந்தெறியும் வீரத் தொழில். பிசைதொழில் மறவர். (யுத் : 22)

பிசைந்து - ஆராய்ந்து. (கி : 695)

பிசையுங்கையினுன் - (தினவு தீரும் பொருட்டுப்) பிசைகின்ற கையையுடையவன். (கி : 895)

பிசையுறுதல் - பிசைதல். பிசையுறுங் கையை. (யுத் : 1940)

பிஞ்ஞகன் - சிவபெருமான். பிஞ்ஞகன் பிடித்த அப்பெருவில் இற்ற அன்றினும். (அ : 42)

பிடர் - 1. கழுத்து. கழுத்தின் புறம். விதி நின்றது பிடர் பிடித் துந்துகின்றது. (யுத் : 1313) பின்பு நின்றவர் பிடர்க்கும் இவ் விசை ஒக்கும். (யுத் : 1431)
2. பின்பக்கம். பேணலாம் மணியின் பித்தி பிடரெலாம் ஒளிகள் விம்ம. (சு : 742)

பிடர்த்தலை - பிடரிபிடம். பிடர்த்தலை வயங்கு வாளிகள்.(யுத்: 1505)

பிடர் பிடித்துந்துதல் - கழுத்தைப் பிடித்துத் தள்ளுதல். விதிபிடர் பிடித்துந்துகின்றது. (யுத் : 1313)

பிடரி - முதுகு. பாராழி பிடரில் தங்கும் பாந்தளும். (கி : 780)

பிடவம் - ஒரு மலர்ச்செடி. ஆய்ச்சியர் முழவிற் பிழிந்த பால்வழி நுரையினைப் பொருவுவ பிடவம். (கி : 490)

பிடவு - பிடவ மரம். புடைதவழ் பிடவினும் மாவலர் சொரி சூழல். (அ : 696)

பிடி - 1. பெண் யானை. புனைமடப்பிடி. (கி : 807)
2. பெற்றுக்கொள். பெருகிய செல்வ நீபிடி என்றுள். (அ : 1088)
3. உறுதி. பிடியில் தடவும் சிலை நாண் பெரும்பூசல் ஓசை. (அ : 412) [பா : பே]

பிடித்தரு நடையினள் - பெண் யானையின் நடையை ஒத்த நடையை யுடையவள். பிடித்தரு நடையினள் பெண்மை நன்று. (ஆ : 243)

பிடித்தல் -1. கொள்ளுதல். பின்னவற்கு அரசு நல்கித்துணை யெனப் பிடித்தான். (சு : 520)

2. மேற் கொள்ளுதல். கடைப் பிடித்தல். கைக் கொள்ளுதல். பிறந்த என் உறுதிநீ பிடிக்கலாய். (யுத் : 324) பிடிக்கும். (யுத் : 137)

3. பரவுதல். செவி தொறும் அனுமனுர்ப்புப் பிடிக்கின்றது. (யுத் : 2229)

4. அடைதல். பேரியலாளர் செய்கை ஊதியம் பிடித்து மென்னுர். (யுத் : 2223)

5. கைப்பற்றுதல். மதியாலே பிடித்தாய் வையம். (அ : 597)

6. பற்றுதல். காமம் பிடிப்பாய் பிழைப்பாயோ. (யுத் : 1948)

7. தரித்திருத்தல். வைத்திருத்தல். பின்னை ஆவி பிடிக்கின்றிலேன். (சு : 635) [பா : பே]

8. கவர்ந்து செல்லுதல். பூங்குழலாளை வானறிய மண்ணறியப் பிடித்தான் இவ்வடலரக்கன். (சு : 328)

9. மனத்தில் நினைத்தல். உறுதியாகக் கொள்ளுதல். பின்னை நின்றது செய்குவென் என்பது பிடித்தான். (சு : 468) பெருமானுரை பிடித்தோம். (யுத் : 3035)

10. முற்றுகை செய்தல். பிடித்த வானரம் பேரெழில் தோள்களால் இடித்த மாமதில். (யுத் : 1001)

11. கையிற் பற்றுதல். பிடித்துடையர். விற்பிடிக்கிலேன். (யுத் : 1504)

12. கடைப் பிடித்தல். வேத நூன் மரபுக்கேற்ற ஒழுக்கமே பிடிக்கவேண்டும். (யுத் : 1359)

பிடித்திருத்தல் - உறுதியாக மேற்கொண்டிருத்தல். பிடித்திருந்த கருத்ததுவும் பிடித்திலேனே. (யுத் : 3905)

பிடித்திலிர் போலும் - பிடித்து நிறுத்தவில்லை போலும். படித்தலம் காவலன் பெயரற் பாலனே பிடித்திலிர் போலும் நீர் பிழைத்திரால். (அ : 883)

பிடித்துடையர் - கொண்டுள்ளார்கள். உலகும் யாவும் நாசமுற்றிட நடப்பன கொடுத்தன பிடித்துடையர் நம்ப. (யுத் : 98)

பிடித்தும் - பிடிப்போம். அவன்பாற் செல்லும் உள்ளத்தைப் பிடித்தும் நாம். (பா : 1152)

பிடிப்பேன் - மேற்கொள்ளுவேன். நகர்க்கே ஏகு நாள் வேண்டு முருப் பிடிப்பேனன்றே. (ஆ : 265)

பிடிமதம் பிறத்தல் - பெண் யானைகள் மதப் பெருக்குடையனவாதல். பிடிமதம் பிறந்தன. (சு : 372)

பிடியுண்ணல் - பேயினுற் பிடிக்கப்படுதல். பிடியுண்டாரெனத் துயிலும் பெற்றியார். (கி : 898)

பிடுங்குதல் - 1. பெயர்த்தல். மலை பிடுங்கினர் வாசுகி பிணித்தனர். (பா : 500)
2 வலிய வருதல். (வை.மு) வலிந்து வருதல். (கலா) பிடுங்கு கின்ற உரையினர் பேசுவார். (யுத் : 3587)
3. கைப்பற்றுதல். உயிரைப் பிடுங்கி உண்குவர். (யுத் : 3281)

பிண்டம் - 1. சோற்றுருண்டை. வெண் சோற்றுத் திரள். தூய நற் சுதை நிகர் பிண்டம் ஒன்று. (பா : 267)
2. கருப்பிண்டம். பிண்டத்தின் கருவாம் தன் பேருருக்களை. (யுத் : 3480)

பிண்டி - அசோகம். ஏலக் கொண்டீன்ற பிண்டி இளந்தளிர். (கி : 789) பிண்டியந்தளிர். (பா : 951)

பிண்டிபாலம் - எறிபடைவகை. (சு : 136)

பிணக்கு - 1. மாறுபாடு. சமயங்கள் பிணக்கும் பிணக்கை (கி : 739) அவள் செய் மாயப் பெரும்பிணக்கு. (பா : 433)
2. பந்தம். பிறந் திறந் துழலும் பாசப்பிணக்கு. (பா : 502)
3. பகைமை. பே யொத்தேன் பேதைப் பிணக்கறுத்த எம்பெரு மான். (அ : 1188)

பிணக்குவடு - பிணங்களாகிய மலைகள். பிணக்குவடு இடறச் செல்வான். (சு : 999)

பிணக்குவை - பிணக்குவியல். காரும் வானமுந் தொடுவன பிணக் குவை கண்டான். (யுத் : 1201)

பிணக்குன்று - பிணமலைகள். குப்புற்றீர் பிணக்குன்று சுமந்து கொண்டு. (யுத் : 989) உயர் பிணத்தும்பர் ஒன்று குன்றுகள். (யுத் : 3537)

பிணங்கு - 1. கோபி. பிணங்கி எதிர் ஊடினவரல்லர். (சு : 254)

2. வளைந்த. பிணங்கெயிறு. (சு : 68) பிணங்குறுவால். (சு : 670) [பா : பே]

3. பின்னிக்கிடக்கும். பிணங்குறு குடர். (சு : 670)

பிணங்குதல் - 1. வேறுபடல். மாறுபடல். பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணவும். (அ : 142) பிணங்குஞ் சிந்தையாய். (சு : 1293) பிணங்கினுல் ஆவதில்லை. (யுத் : 1386)

2. பேசித்தர்க்கஞ் செய்தல். பிணங்கினுல் ஆவதில்லை. (யுத் : 1386)

3. கலகஞ் செய்தல். கொம்பினைச் சேர்ந்தவை யுய்யப் பிணங்குவன. (பா . 767)

பிணங் கெயிறு - வளைந்த பற்கள். (சு : 68)

பிணத்தின் குப்பை - சவக் குவைகள். பிணத்தின் குப்பை வரம்பில. (யுத் : 2012) பிணத்தின் பம்மற் குப்பை. (யுத் : 1014)

பிணந்தலைப்பட்டது - பிணமயமாய் ஆயிற்று. பிணந்தலைப் பட்டது பெயர்வதெங்கினி உணர்ந்தது கூற்றம். (யுத் : 1326)

பிணப் பெருங்காடு - பெரிய பிணக்குவியல். பிணப் பெருங்காட்டில் இறங்கும் ஏறும் அத்தேர்பட்டது யாதெனவுரைப்பாம். (ஆ:523)

பிணப் பெரும் பிறக்கம் - பெரிய பிணக்குவியல்கள். வரையுறு பிணப் பெரும் பிறக்கம். (சு : 664)

பிணம் - சவம். பிணத்தின் பம்மற்குப்பை. (யுத் : 1014) பிணஞ் சுமந்தோட. (யுத் : 1561)

பிணமால் வரை - பெரிய சவமலை. பிணமால் வரை ஒன்றல்லன பலவாய். (யுத் : 1842)

பிணா - பெட்டை. முன்றில் தொறும் பிணா வோடுறங்கும் மகரங்கள். (சு : 47)

பிணி - 1. கட்டு. பிணியை வீட்டி. (பா : 660) நிறை பிணித்த யந்திரம். (பா : 622)

2. நோய். பிணியுடையவ னென்றும் பேதினன். (அ : 689)

3. பந்தம். பிணியற நோற்று நின்ற பெரியவன். (அ : 263)

4. காம நோய். பிணிப மூத்தமைந்ததோர் பித்தினுள்ளத்தான். (யுத் ; 472)

பிணிக்க - வருத்த. வான்பேரிடர் பிணிக்க நண்ணவும். (அ : 142)

பிணி செய்தல் - கட்டுதல். தெய்வப்பாசமுறப் பிணி செய்தார். (யுத் : 222)

பிணித்தல் - 1. கட்டுதல். நால்வரைக் கொணர்ந்துடன் பிணித் தாலன்ன நடையார். (யுத் : 3625)

2. உண்டாக்குதல். பிரிவுத்துயர் பீழைபிணித்தது. (யுத் : 4100)

பிணிப்ப - வருத்த. பெரும்பிணி பிணிப்ப. (ஆ : 630)

பிணிப்பு - 1. பற்று. பேராசை. உளப்பரும் பிணிப்புரு லோபம். (பா : 384)

2. பந்தம். பிறத்தலாற் றுறும் பேதைமை பிணிப்புற (யுத் : 3791)

பிணி முதற் பாசம் - நோய் முதலிய கருமபந்தம். பின்னரும் உலக மெல்லாம் பிணி முதற் பாசம் வீசித் துன்னருந் தவத்தினெய் தும்துறக்கம் போல் தோன்றிற்றன்றே. (ஆ : 662)

பிணியழுக்கு - நோயினுற் பற்றப்பட்ட அழுக்குடம்பு. தன்னைத்தான் ஓரா முழுப் பிணி யழுக்கின் மேலே பின்னைத்தான் பெறுவதம்மா நறவுண்டு திகைக்கும் பித்தோ. (கி : 656)

பிணியறுப்பவர் - பாசப் பிணியை அறுக்கவல்ல பிரமன்முதலியோர். (அண்) அவித்தை என்ற நோவைச் சேதிப்பவர். (வை.மு) பிணியறுப்பவரிற் பெற்ற வரம். (யுத் : 2137)

பிணியிற் பேர்தல் - நோயில் அகப்படுதல். அவ்வுருப் பேருங்காற் பிணியிற் பேருமால். (ஆ : 302)

பிணை - 1. பெண் மான். பிணை யொன்று கண்ணுள் பங்கன். (யுத் : 1377)

2. விலங்கின் பெண். துருவை பென்பிணை ஈன்ற ஏறு. (பா : 61)

பிணை ஒன்று கண்ணுள் பங்கன் - மான் போன்ற கண்ணையுடைய உமாதேவியைப் பாகத்திலே கொண்ட பரமசிவன். (யுத் : 1377)

பிணைதல் - பொருந்துதல். பணையின் பிணைமத வெங்கார். (யுத் : 1823)

பிணை நெடுங்கண்ணுள் - பெண் மானைப் போலும் நீண்ட கண்களை யுடைய சீதாபிராட்டி. (யுத் : 785)

பிணையுறுதல் - பொருந்துதல். பிணையுற்ற தன்னின் நேரா. (யுத் : 3555)

பித்தயானை - பித்தேறிய யானை. வெறிபிடித்த யானை. பித்த யானை யிணங்கிப் பிடியிற் கை வைத்த. (பா : 854)

பித்தர் - 1. கலங்கிய மனத்தினர். வேறு வேருகப் பிறழ உணர் கின்ற மயக்க உணர்விணர். (அண்)

2. விபரீத ஞானிகள்' வேறு வேறுணர் பித்தருமுளர் சிலர் வீடு பேறிலார். (யுத் : 191)

பித்தன் - 1. காமப்பித்துக் கொண்ட இராவணன். பித்தன் மகன். (யுத் : 3019)

2. பித்தன் - பித்துக்கொண்டவன். பலியுண் வாழ்க்கைப் பேய்கொண்டு வெல்லவந்த பித்தனே. (யுத் : 1908)

3. போர்ப்பித்துக் கொண்டவன். பித்தன் தட மார்பொடு தோள்கள் பிளந்தான். (யுத் : 1917) பிசாசன் என்றுளனெரு பித்தன். (யுத் : 502) (யுத் : 507)

பித்தனுகிய ஈசன் - பித்தனுகிய சிவன். (யுத் : 128)

பித்தி - 1. பைத்தியக்காரி. பித்தி நிற்பிறந்த சேயொடும் நீ துயர் படுக. (அ ; 151)

2. சுவர். சொன்னம் பேணலாம் மணியின் பித்தி. (சு : 742)

3. அடைச்சுவர். முந்தி நாட்டின் முகட்டினை முற்றுறல் பித்தி பிற்பட. (யுத் : 1003)

பித்திகை - 1. கருமுகை. சிறு சண்பகம். பித்திகைக் கத்திகை. (பா : 972)

2. படித்துறைச் சுவர். பேர்ந் தொளிர் நவ மணி படர்ந்த பித்திகை (கி : 3)

3. கூந்தல். ஞாங்கர் உற்பலம் உழத்தியர் பித்திகை நாற. (கி : 491)

4. மதிற்சுவர். அண்டப் பித்திகை பூசின. (கி : 247)

பித்திப் பத்தி - சுவர் வரிசைகள். பெரிய நாள் ஒளிகொள் நானு ளிதமணிப் பித்திப் பத்தி. (சு : 197)

பித்து - 1. பைத்தியம். தேவரிற் பித்துற வல்லரே. (ஆ : 592) தத்துறும் உயிரொடும் புலன்கள் தள்ளுறும் பித்து. (சு : 675)

2. விபரீத ஞானம். மயக்க உணர்வு. மாறுபட்ட உணர்ச்சி. நின் பித்தின்றி உணர்தியேல். (யுத் : 188)

3. பேராசை. கொள்ளக் கூடாத கருத்து.

4. அறிவின்மை பிள்ளைகள் உரைத்த ஒப்பைப் பெரியவர் உரைக்கிற் பித்தாம். (கி : 796)

5. அறிவுத் தெளிவின்மை. பகுத்தறிவின்மை. பித்தம் என்பதில் அம் கெட்டுப் பித்து என நின்றது. இப்பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேசலாமோ. (கி : 271)

6. உன் மத்தம். பாக்கியம் பெறும் பித்தும் பயக்குமோ. (யுத் : 3946)

பித்துண்டது பேர்வுறுமா பெறுதும் - கொண்ட பைத்தியம் நீங்கும்படியான உபாயத்தைச் செய்வோம். (யுத் : 244)

பித்துறல் - பைத்தியம் மிகுதல். தேவரிற் பித்துற வல்லரே பிழைப்பில் சூழ்ச்சியார் முத்திறத் துலகையும் முடிக்க எண்ணுவார். (ஆ : 592)

பித்தேறினர் - பித்தம் மிகப் பெற்றவர். எத்தேவர்கள் எத்தானவர் எதிர்வார் இகல்வல்லோர் பித்தேறினரல்லால். (யுத் : 1131)

பிதற்றி - பிதற்றுபவன். பிறர் பகழி பிதற்றியாக யான். (அ : 903)

பிதாமகன் - பிரமன். பின்னர் வானவரை நோக்கிப் பிதாமகன் பேசுகின்றான். (பா : 205)

பிதிர் - விடுகதை. மூதுரைப் பெருங் கதைகளும் பிதிர்களும் மொழிவார். (சு : 234)

பிதிர்த்தல் - உதிர்த்தல். பொடியாதல். மதிபிதிர்ப்பாள் போல். (அ : 182)

பிதிர்த்தார் - சொரிந்தார். பிதிர்த்தார் எரி. (ஆ : 465)

பிதிர்தல் - 1. சிதறல். சிந்துதல். பொறிபிதிர் படலைச் செந்தீ. (ஆ : 1014) தனிக்கதிர் பிதிருமாறும். (அ : 1015) செறி பொறி பிதிர்வதிக்கின். (யுத் : 2523)

2. உதிர்தல். பொருகையாலிடை பிதிர் வித்தான். (சு : 694)

3. தூள்படுதல். பிதிர்ந் தெழுந்தார்த்த பொடிக் குழீஇ அண்டம் படைத்தவன் கண்ணையும் புதைத்த. (யுத் : 2492) பிதிர்ந்தன மலையும் பாரும். (யுத் : 2045)

பிதிர்ந்தது - பொடியாயிற்று. பிதிர்ந்த தெம்மனத் துயர்ப்பிறங்கல். (பா : 250)

பிதிர்ந்து - சிந்தி. பிதிர்ந்து வீழ்ந்தது தன்னையும் சுமத்திரை தனக்கு நல்கினன். (பா : 273)

பிதிர்வித்தல் - உதிரும்படி செய்தல். சுரிகையால் எதிர் உருவிக் குத்தலும் அதனைச் சொற்கொடு வருதூதன் பொருகையால் இடை பிதிர்வித்தான். (சு : 469)

பிதுங்குதல் - வெளிப்பட்டல். உயிர் பிதுங்கலாமுடலினர். (கி:842) பிதுங்கினர். (யுத் : 2957)

பிய்த்தல் - வள்ளல். கிழித்தல். நெடுங்கையும் தலையும் பிய்யா நொய்தினின் நிமிர்ந்து போனன். (யுத் : 1898)

பியல் - பிடரி. இணையேற்றின் பணையேற்றபெரும் பியலில் பளிக்கு நுகம் பிணைத்து. (பா : 765) இளைய கோவைப் பியல் கொண்டான். (யுத் : 2068)

பியைதல் - பிசைதல். பியையுங் கையினன். (கி : 896) தடக்கையாற் பியையும். (சு : 788)

பிரகத்தன் - இராவணன் சேனாதிபதி. பிரகத்தன் என்றுளன் ஒரு பித்தன். (யுத் : 507)

பிரகரம் - அடி. தண்டனை. பிரகர நெடுந் திசைப் பெருந் தண்டேந்திய கரதலத் தண்ணல். (ஆ : 570)

பிரசம் - 1. தேன். கழை தாக்கலின் வந்திழி பிரசம். (அ : 749) (சு : 1260)

2. தேனீ. (அண்) வரம்பு அகல் நெடும் பிரசம் வைகல் பல வைகும் முரம் பினின் நிரம்பல முழைஞ்சிடை நுழைந்த.(கி:526)

3. மத நீர். வண்டுகள் பிரச மாந்திடும் கடகரி. (உ.வி) (பா : 146)

பிரட்டர் - பிரஷ்டர். நெறி பிறழ்ந்தார். மனிதரை முறைமை குன்றப் பிரட்டரிற் புகழ்ந்து. (யுத் : 3053)

பிரத பூசனை - இறந்துபட்ட உடலுக்குச் செய்யுங் கிரியைகள். பிரத பூசனைக்குரிய பேறிலேன். (அ : 924)

பிரதம் - பிணம். பிரேதம் என்பதன் மரூஉ. பிரத பூசனை. (அ:924)

பிரமதத்தன் - சூளியின் மகன். நிறை தவன் சூளி நல்கும் திமிரறு பிரமதத்தன். (பா : 428)

பிரமன் - பிரமதேவன். அன்றேற் பின்னரான் பிரமன் என்பார்ப் பேசுக. (யுத் : 2072)

பிரளயம் - உலக உயிரெலாம் இறக்க நேரும் கற்ப முடிவு. அசுரர்கள் தம் பிரளயமே அமரர் கூற்றே. (யுத் : 3887)

பிராட்டி - தலைவி. இன்னு இடர் தீர்ந்துடனேகென எம்பிராட்டி சொன்னுல் அதுவே துணையாம். (அ : 442)

பிரான் - கடவுள். எம்பிரான். (அ : 850)

பிரிகல்லான் - பிரிந்து உயிர் தரித்திருக்கும் வலிமையற்றவன். ஆவியு முலைகின்ருன் அடியிணை பிரிகல்லான். (அ : 670)

பிரிகலம் - பிரியோம். நின்னைப் பிரிகலம் விளிதும் என்ன. (யுத்:3088)

பிரிந்த கந்த ஓதியர் - கணவரைப் பிரிந்த நறுமணம் வாய்ந்த கூந்தலை யுடையவர். கேள்வரை உயிருறத் தழுவிப் பிரிந்த கந்த ஓதியர் சிந்தையிற் கொதித்தது. (அ : 735)

பிரிதல் - 1. பிரிந்திருத்தல். அயோத்தியிற் பிறந்த பின்பும் பிரியலள் ஆயினுள். (அ : 516) பிரிந்தபினை. (ஆ : 531)
2. இழத்தல். மணிபிரியரவு. (அ : 593)

பிரிந்தவர் - பிரிந்து சென்றவர். பிரிந்தவர் கூடினுற் பேசல் வேண்டுமோ. (பா : 601)

பிரிப்பு - பிரிக்கும் வகை. விடிவு கண்டிலர் ஒட்டிய உடல் பிரிப்பு உணர்கிலாமையால். (பா : 1111)

பிரியவற்று - பிரிந்திருக்க வல்லது. உன்னிற் பிரியவற்றே உலகம் என்னினும். (அ : 356)

பிரியானுக அருளுதி - பிரியாதிருக்கும் வண்ணம் அருளுதி. (யுத் : 1577)

பிரிவரும் ஒருபெருங் கோல் - எவ்விடத்தும் நீங்காத ஒப்பற்ற செங்கோல். எங்கும் செல்லும் அரசாணை. (கி : 846)

பிரிவித்தனென் - பிரிந்து போகும் செயலைப் புரிந்தேன். ஒருதையலை யான் பிரிவித்தெனன் என்பதோர் பீழை பொருது. (ஆ : 1103) [பா : பே]

பிரிவிஞேய் மாசுணம் - பிரிவு நோயாகிய பெரும் பாம்பு. மருடரு பிரிவிஞேய் மாசுணங் கெட. (கி : 465)

பிரிவு - பிரிதல். (பிரிவுத்துன்பம்) அதுவன்றிப் பின்புள திடை மன்னும் பிரிவுளது என உன்னேல். (அ : 686)

பிரிவு நோய் - விரக நோய். பிரிவு நோய் அகன்ருர். (யுத் : 2502)

பிரிவுமுற்றினுன் - பிரிந்தான். ஒரு சொல் நீர்மைத்து. உனே மூல மென்றுணர்வரப் பிரிவுமுற்றினுன். (யுத் : 400)

பிரிவெனும் பிணி - பிரிவென்கின்ற நோய். நின் பிரிவெனும் பிணியினுல்... தனக்குரிய மெய்ந் நிறுவிப் போய் உம்பரான். (அ : 1122)

பிரிவெனும் மாசுணம் - பிரிவெனும் பாம்பு. மருடரு பிரிவெனும் மாசுணங் கெடக் கருடனேப் பொருவின கால மாரியே. (கி : 465) [பா : பே]

பிரிவெனும் விம்முறுநிலே - பிரிவு என்கின்ற மனம் வருந்துதற் குரிய நிலே. மன்னவன் பிரிவெனும் விம்முறு நிலேயால். (அ : 32)

பிருகு - ஒரு முனிவன். இரிசிகன் தந்தை. பிருகுவின் மதலேயாய பெருந்தகை. (பா : 431)

பிரெத பூசனே - பிரேத பூசனே. (ஆ : 924) [பா : பே]

பிரை - 1 உறை மோர். பாலுறு பிரையெனப் பரந்த தெங்குமே (பா : 604)
2. மோர்த்துளி. பாலேத் திரிக்கும் மோர்த்துளி. கற்கும் கல்வியின் பிரையுளது. (யுத் : 187)

பிரைசம் - தேன். பிரைச மொத்தினிய சொல்லார். (பா : 1203)

பிரையுண்ட பால் - பிரைகுத்தின பால். பிரையுண்ட பாலின் உள்ளம் பிறிதுற. (யுத் : 2120)

பிரையுறு பால் - பிரையிடப்பட்ட பால். பிரையுறு பாலென நிலேயிற் பின்றிய உரையினர். (ஆ : 594)

பில்குதல் - சிந்துதல். நீர்கசிதல். துளித்தல். வெளியிடுதல். அமுது பில்கும் பவளவாய். (யுத் : 3964)

பில்குற்று - சிந்தி. துளித்து. நல்லமிழ்து பில்குற்று. (பா : 1232)

பிலத்த பாந்தள் - பூமியின் கீழிடத்தில் அளையில் வாழ்கின்ற பாம்பு. (அண்) பாழிகளில் உறையும் பாம்பு. (கலா) பிரிந்துறை மகளிரும் பிலத்த பாந்தளும் எரிந்துயிர் நடுங்கிட. (கி : 453)

பிலத்தின் வாயின - குகை போன்ற வாயினை யுடையன. பிறைக் கடை எயிற்றின பிலத்தின் வாயின. (சு : 906)

பிலதீவு - பிலத்தீவு இன்று மது மேல்கடல் இயக்கில் பிலதீவா நின்று நிலைபெற்றுளது. (கி : 889)

பிலம் - 1. சுரங்கம். இரத்தினம் தோன்றும் கனி. பிலஞ் சுரக்கும் நிதியம். (பா : 69)

2. மலைக்குகை. அந்தகனும் அஞ்சிப் பிலம்புக. (பா : 389)

3. பாதலம். நாகர் பிலம். (ஆ : 24)

4. புற்று. பிலமுக நுழையும் வாய்முகம் வரியர வனையன வருவ. (யுத் : 3757)

பிலவயிறு-குகை போன்ற வயிறு. ஆழ்பில வயிற்றைப் போழ்வாய். (சு : 80)

பிலவாய் - பிலத்தை ஒத்த வாய். பல்லுடைப் பிலவாய். (யுத்:1912) பிறைக்கடை பிறக்கிட மடித்த பில வாயள். (பா : 390) பின்று கின்ற பிலனிற் பெரிய வாய். (ஆ : 11)

பிலன் - பாதாளம். தீய பிலனுட் பிறவி சென்ற தென. (கி : 858) (யுத் : 1328)

பிலிற்றும் - துளிக்கும். பொழியும். கலைக்கோட்டு முனிவரின் வான் பிலிற்றும். (பா : 216)

பிழம்பு - 1. திரட்சி. திரள். இருட் பிழம்பு. (பா : 113) பிழம்புள தழும்பு. (யுத் : 3874)

2. கற்றை. வெயிற் பிழம்பு. (பா : 132)

3. தொகுதி. இருட் பிழம்பு. (பா:132) நிழற் பிழம்பு. (சு:543)

4. உருவம். பிழம்பின திரிவன என்னும் பெற்றியார். (யுத்:3731)

5. ஒளிப்பிழம்பு. (கலா) வெளிவானகம் இலதாம் வகை விழுந் தோங்கிய பிழம்பால்நளி மாமலை மலைதாவினன் நடந்தான் கடற் கிடந்தான். (யுத் : 3377)

பிழம்புள தழும்பு - பிழம்பாக உள்ள தழும்பு. தழும்பாக வுள்ள திரட்சி (யுத் : 3874)

பிழி - தேன். தேம்பிழி மகரயாழின் வண்டுகள் இனிதுபாட. (பா : 35)

பிழித் தேறல் - மதுவின் தெளிவு. தெளிவரு களிப்புச் செய்யும் தேம் பிழித் தேற லொத்தான். (யுத் : 4258)

பிழிதல் - 1. சுறத்தல். பிழிந்த பால்வழி நுரை. (கி : 490)
2. வடிதல். வடித்தல். பிழியுந் தேனிற் பிறங்கருவித் திரள். (ஆ : 152) விண்ணின் மேகத்தை வாரிவாய்ப் பிழிந்திடும் விடாயர். (யுத் : 3266)
3. பிழிவது போன்று வருந்துதல். உயிருகப் பிழிந்தான். (சு : 848)

பிழியுந் தேனிற் பிறங்கு அருவித்திரள் - வடிகின்ற தேனினது விளங்குகின்ற அருவித் தொகுதி. (ஆ : 152)

பிழை - 1. தவறு. குற்றம். (வை.மு) பின் தூக்கின் இது சாலப் பிழை பயக்கும். (சு : 341) பிழையிற்ருமோ. (யுத் : 3064)
2. குறை. (அண்) பிறையை எட்டினள் பிடித்து இதற்கிது பிழையென்னு கறை துடைக்குறும் பேதை. (அ : 756)
3. குறைவு. பின்னே பிறந்தானல்ல தோர் துணையிலாத பிழை நோக்கி உன்னு நின்றேனுடைகின்றேன். (சு : 601)
4. அதர்மம். வெறுங்கையன் பிழையிற்று என்னு. (யுத் : 2530)

பிழைக்கல் - பிழை செய்தல். உயிர் பிழைத்தல். (ஆ : 636)

பிழைக்கலாற்ருய் – பிழைசெய்யாய்; இறந்துவிடுவாய். பிள்ளைபோற் பேச்சினுளைப் பெற்றபின் பிழைக்கலாற்ருய். (ஆ : 636)

பிழைத்தது - தவறு செய்தது. பிழைத்தது பொறுத்தல் என்றும் பெரியவர் கடனே' (பா : 557) பிழைத்தது பொறுத்தனென். (யுத் : 186)

பிழைத்தல் – 1. தப்பிப் பிழைத்துய்வது. ஈடேறுதல். உயிர் பெறல். பிழைத்திட. (யுத் : 354) பிறப் பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ. (அ : 21) யான்பிழைத்துய்ந்தனன். (அ : 27)
2. நழுவி விழுதல். பொன் பிழைக்கப் பொதிந்தனர் போலவே. (அ : 308)
3. குற்றஞ் செய்தல். தவறுசெய்தல். பிழையாதாற்குப் பிழைத் திரே. (கி : 28) பித்தேறிணையாதல் பிழைத்தணையால். (ஆ.912) பிழைத்ததன்மை இது. (கி : 340)

4. தவறுதல். தவறிப் போதல். நரகமும் பிழைப்பதின்றால். (கி : 629) பிழைப்பின்றும். (கி : 975 (யுத் : 4051)

4. நீங்குதல். பெரும் பழி சூடினேன் பிழைத்ததென்னரோ. (கி : 219)

6. தவறான எண்ணங்கொண்டு கைவிடுதல். இப்பெய்வனை பிழைக்கின் இறக்கும் பல்லுயிர். (யுத் : 4034))

7. குறைபாடு. பெருந்துயர் தவத்தினானும் பிழைப்பிலன் என்னும் பெற்றி. (யுத் : 403)

பிழைத்திரால் - பிழை செய்துவிட்டீர்களே. பிழைத்திரால் எனும். (அ : 883)

பிழைப்பது - தவறான காரியத்தைச் செய்தல். பிள்ளைஎன இதனைக் கொண்டு விளையாடிப் பிழைப்ப செய்தாய். (யுத் : 877)

பிழைப்பு - 1. தவறு. பிழைத்தல். பிழை செய்தல். எம்பெருமான் பின் பிறந்தார் இழைப்பரோ பிழைப்பென்றான். (அ : 1022) பிழைப்பிலா மறை. (அ : 892)

2. ஈடேறுதல். உய்யும் நெறி. கடைத்தேறுதல். நமக்கிங் கென்னோ பிழைப்பம்மா. (யுத் : 1)

3. உயிர் பிழைத்திருத்தல். பிழைப்பினி உண்டென நயவேல். (யுத் : 1217) பிழைப்பில முடிந்தாய் என்ன. (யுத் : 1639) எங்கோ னம்பிற் கிளையொடும் பிழையாய். (யுத் : 1652)

பிழைபுல்லல் - குற்றத்தைப் பொருட்படுத்தாதே. (அண்) என்பாற் குற்றங் கொள்ளாதே. (கலா) குற்றத்தைக் கொள்ளாதே. பொறுத்தருள்வாய். (வை.மு) உனக்கபயம் பிழைபுல்லல் என்னவும் பொங்கினாய். (கி : 333)

பிழை பேணல் - பிறர் செய்த குற்றங்களைப் பொறுத்து அவர்களை அன்பினாற் பேணல்(அண்) தவற்றினின்று தன்னைப் பாதுகாத்தல். (கலா)குற்றங்கள் தன் பக்கல் வாராதபடி குறிக்கொண்டு காத்தல். (வை.மு) பெருமை என்பதிதென் பிழை பேணல் விட்டு ஒருமை நோக்கி ஒருவற் குதவலோ. (கி : 322)

பிழை பொறுத்தல் - குற்றத்தைப் பொறுத்தல். அத்த என் பிழை பொறுத்தருளுவாய். (யுத்:319) பிழையிது பொருத்தி. (யுத்:1630)

பிழையாதிது பிழையாது - இது தப்பாது தப்பாது. அடுக்கு குறிப்பினால் தப்புதல் ஒரு தலை என எதிர்மறைப் பொருள் தரும். (யுத் : 1852)

பிழையிற்று - தப்பு. பிழையுடையது. தவறுடைய செயல். (அண்) பெண்டிரில் திறம்பினுரைத் துறந்தது பிழையிற்ருமோ. (யுத்:3064)

பிழையுடைய விதியார் - தவறுதலை யுடைய பிரமனர். பிழையுடை விதியார் செய்த... மகளிர். (யுத் : 2234)

பிழையேன் பிழையேன் - பிழைத்திருக்க மாட்டேன் பிழைத்திருக்க மாட்டேன். கைகேசிக்கு வரங்கொடுத்துப் பிழை செய்த யான் பிழைத்திருக்க மாட்டேன். (உ.வி) உன்னைப் பெற்றேன் அருமை அறிவேன் பிழையேன் பிழையேன் என்ருன். (அ : 356)

பிள்ளப்படுதல் - சிதைக்கப்படுதல். பிள்ளப்பட்டன நுதலோடைக் கரி. (சு : 957)

பிள்ள விரிதல் - விரியும்படி திறத்தல். பிள்ளவிரித்த பிலப்பெரு வாயர். (சு : 923)

பிள்ளாய் - பருவத்தால் இளையோனே. பிள்ளாய் பெரியாய் பிழை செய்தனையால். (ஆ : 1105)

பிள்ளை - 1. அறிவு நிரம் பாதவர். பிள்ளைகள் உரைத்த ஒப்பைப் பெரியவர் உரைக்கிற் பித்தாம். (கி : 796)

2. இளங் குழந்தை. (ஆகு) குழவியின் மொழி. பிள்ளை போற் பேச்சினுள். (ஆ : 636) ஆலினிலையிற் பிள்ளை. (யுத் : 233)

3. மகன். (இராமன்) பிள்ளையைக் கொணர்க என்ருள். (அ : 264) பிள்ளை கான்புக. (அ : 856) (யுத் . 214)

பிள்ளைச் சொல் - மழலைச் சொல். பிள்ளைச் சொற் கிளி யன்னுள். (ஆ : 1011)

பிள்ளைத் தென்றல் - இளந் தென்றல். மெல்லிய தென்றற் காற்று. பின்னல் திரை மேல் தவழ்கின்ற பிள்ளைத் தென்றல். (யுத் : 6)

பிள்ளை மாக்களிறு - இளைய பெரிய ஆண்யானை. கண்டிலன் பிள்ளை மாக்களிறும் பிடியீட்டமும். (அ : 824)

பிள்ளைமான் - இளமான். பிள்ளைமான் நோக்கி. (பா : 848)

பிள்ளைமை - சிறு பிள்ளைத் தன்மை. அறியாமை. பிள்ளைமை விளம் பினை பேதை நீ. (யுத் : 84) பிள்ளைமை துறந்தா னென்னப் பேதுறு நிலையனுகி. (யுத் : 1381) எள்ளரு வேள்வி நின்றினி தியற்றுதல் பிள்ளைமை. (யுத் : 2952)

பிள்ளை வாளரா - கொடிய பாம்புக் குட்டி. உயிர்ப்புடை வெள்ளைப் பிள்ளை வாளரா ஊர்வ போன்ற. (யுத் : 712)

பிளவா மனம் - பிளவு படாத மனம். மழுவாள் வரினும் பிளவா மனனோடு அழுவேன். (யுத் : 2644)

பிளிறல் (பிளிறுதல் -ஒலித்தல். வீரிடல். முழங்குதல். பிளிறியோடும் பிடி. (ஆ : 388) பிளிறு மேகம். (அ . 736)

பிளிறு மேகம் - முழங்குகின்ற மேகம். (அ : 736)

பிளிறுதல் - பிளிறல் பார்க்க.

பிற்கொண்டார் - திருப்பிக் கொண்டார். முற்கொண்டான் அரக்கன் என்னு முளரிவாள் முகங்கள் தேவர் பிற்கொண்டார். (யுத் : (2068)

பிற்பயப்பயன் - பின்னே நுகர்தற்குரிய வகையில் முதிராத நிலை யிலுள்ள வினைப் பயன். (யுத் : 196)

பிற்பயன் - பின்னால் விளையும் பயன். பிற்பயன் உணர்தல் தேற்றுப் பேதை. (யுத் : 2778)

பிற்போது - பின்பு. பிற்போதுற்றனன் மைந்தன். (யுத் : 2180)

பிறக்கம் - 1. விளக்கம். மணியால் ஓங்கற் பிறக்க முற்ற மலை நாடு. (கி : 773)
2. உருவம். (உ.வி) (சு : 664)
3. குவியல். வரையுறு பெரும் பிணப்பிறக்கம். (சு: 664)
4. மலை. (கலா) பிணத்தின் பிறக்கமே. (யுத் : 2108)

பிறக்கமுறல் - விளங்கிநிற்றல். மணியார் ஓங்கற் பிறக்கமுற்ற மலை நாடு. (கி : 773)

பிறக்கல் - பிறத்தல். பிறக்கலன்னதோர் பிழையது. (பா : 962) [பா : பே]

பிறக்கி ஈட்டி - விளக்கமுறும்படி ஒன்று கூட்டி. பெண்களானுர்க்குள் நல்ல உறுப்பெலாம் பிறக்கி ஈட்டி. (யுத் : 1588)

பிறக்கிட - விளங்க. பின்ற; பிந்த. (வெ.ப) பிறைக்கடை பிறக்கிட மடித்த பில வாயள். (பா : 390)

பிறக்கும் - பிறப்பிக்கும். பிறக்கும் என்பதோர் பிழையது. (பா : 962)

பிறக்கை - பிறப்பெடுத்தல். (யுத் : 4155)

பிறக்கொணு - பிறக்க ஒண்ணு. உண்டாக்க முடியாத. பெய்கடற் பிறந்து அயல் பிறக்கொணு மருந்து. (பா : 803)

பிறகிடல் (பிறகிடுதல்) - பின்னே வருதல். உருண்டு கால் தொடர் பிறகிடு தறியொடும். (பா : 9(0)

பிறகு - பின்புறம். பிறகில் நின்றனன் பெருந்தகை. (யுத் : 2465)

பிறங்கடை - வழித்தோன்றல். திகிரிப்படி காத்தவர் பிறங்கடைப் பெரியோய். (பா : 404)

பிறங்கப் பிணித்தல் - விளங்கக்கட்டுதல். கலுழனுந் துணுக்குறச் சுற்றி பிணித்தது அப்பெருமாருதி தோள்களைப் பிறங்க. (சு:1036)

பிறங்கல் - 1. விளங்கல். நெடுந்தூரத்திலுள்ளவர்க்கும் விளங்குதல். பிணித்ததப் பெருமாருதி தோள்களைப் பிறங்க. (சு : 1036) பெருந்துளி பிறங்க. (யுத் : 2173)
2. மலை. வெள்ளியம் பிறங்கல். (பா : 486)
3. நிலை மாறுதல். பிறங்கு சருகும். (பா : 531)
4. பெருத்தல். பிறங்கு முலை. (அ : 542)
5. நிறைதல். பிறங்கிய தசையொடு நறவும் பெற்றனை. (யுத் : 1309)
6. ஒலித்தல். பிறங்கு தெண்டிரைப் பெருங்கடல். (யுத் : 179)
7. வெளிப்படுதல். பெருந்துளி பிறங்கவானின் வெய்யவன் தன்னைச் சேர்ந்த நீனிற மேகம் ஒத்தான். (யுத் : 2173)
8. செறிதல். பிறங்கியவாழை.

பிறங்கலின் கோடு - மலைச் சிகரம். பிறங்கலின் கோடு நேர் முடித்தலம். (யுத் : 1029)

பிறங்கிணர் - விளங்குகின்ற பூங்கொத்துக்கள். பிறங்கிணர் நறுங் குழலர் அன்பர் பிரியாதோர். (சு : 254) [பா : பே]

பிறங்கிய வாழை - திரளான வாழைப்பழங்கள். பிறங்கிய வாழை அரிய மாக்கனி. (அ : 769)

பிறத்தல் - வெளிவருதல். பிளந்தது தூணும் ஆங்கே பிறந்தது சியம். (யுத் : 260)

பிறத்தி - பிறக்கச் செய்து. (வை.மு) பிறத்தி யாவையுங் காத்து அவை பின்னுறத்துடைக்கும் திறத்துமூவர். (அ : 37)

பிறத்து - பிறக்கச் செய்து. (அண்) (உ.வி) (அ : 37)

பிறந்தகம் - பிறப்பிடம். மண் பிறந்தகமுனக்கு. (யுத் : 4044)

பிறந்த கோபம் - உண்டான கோபம். பிறந்த கோபம் கைம்மிகக் கனன்ற தல்லால் தளர்ந்திலர் காளைவீரர். (யுத் : 2066)

பிறந்த துன்பு - மனத்தே தோன்றிய துன்பம். பின் இளையவனொடும் பிறந்த துன்பொடும் நன்னெடுந் தேர்மிசை நடத்தன் மேயினான். (அ : 985)

பிறந்தபயன் - பிறவியின் பயன். இறந்தவர் பிறந்த பயன் எய்தினர் கொல் என்கோ. (சு : 553)

பிறந்தபார் - பிறந்தமையால் தனக்குரிய பூமி. பிறந்த பார் முழுவதும் தம்பியே பெறத்துறந்து. (சு : 363)

பிறந்த மாமணி - அமைக்கப்படுகின்ற பெரிய மணி. பதிக்கப் படுகிற சிறந்த இரத்தினங்கள். கலத்தினிற் பிறந்த மாமணியிற் காந்துறு நலத்தினிற் பிறந்தன. (யுத் : 3985)

பிறந்தமை - தோன்றியமை. கோளில் கீடம் போல் நிலத்தினிற் பிறந்தமை நிரப்பினையரோ. (யுத் : 3985)

பிறந்தன - பொருந்தியன. நலத்தினிற் பிறந்தன. (யுத் : 3985)

பிறந்தனென் - பிறந்த பயன் பெற்றவனுவேன். நீ எனைவந்துயிர் கொள்ளப்பெற்றிடின் இன்று பிறந்தனென் என்றுள். (ஆ : 1092)

பிறந்தாயாதி - பிறந்த பயனை எய்தினவள் ஆவாய். மாயா உயிர் தன்னைத் துறந்தாயாகின் உலகத்தே பிறந்தாயாதி. (அ : 879)

பிறந்தார் பெயருந்தன்மை - மக்களாகப் பிறந்தவர்கள் மனம் மாறுந் தன்மை. பிறந்தார் பெயருந்தன்மை பிறரால் அறிதற் கெளிதோ. (அ : 331)

பிறந்தானெனப் பெயர்தல். தோன்றியது போல வெளிப்படல். இறந்தானெனக் கொடு ஓர் இமைப்பதனின் முன்னம் பிறந்தானெனப் பெரிய கோளரி பெயர்ந்தான். (சு : 83)

பிறந்திலன் - பிறந்தும் பிறந்திலனுயினுன். பிறந்திலன் பரதன் நீ பெற்றதால் என்ருள். (அ : 153)

பிறந்திலனுக்கல் - பிறவாதவன் போலச் செய்தல். என்னைப் பிறந்திலனுக்க வந்தீர். (யுத் : 1596)

பிறந்துடை நலம் நிறை - உடன் பிறந்து என் உரிமையானதும் நன்மையானது மான மனஉறுதி. பிறந்துடை நலநிறை பிணித்த யந்திரம். (பா : 622)

பிறந்துடைய வஞ்சனை - பிறவிதொட்டுத் தோன்றியுள்ள வஞ்சனை. பெற்றுடைய பெருவரமும் பிறந்துடைய வஞ்சனையும் பிறவும். (யுத் : 408)

பிறந்து நீயுடைப் பிரிவில் தொல்லறம் - முத்தமகனுகப் பிறந்து உனக்கே உரித்தாகப் பெற்ற விரிக்கமுடியாத பழைமையான தருமம். (அ : 1166)

பிறந்துரிமை - தோன்றிப் பெற்ற உரிமை. உரனில் நீ பிரிந்துரிமை யாதலால் அரசு நின்னதே ஆள்க. (அ : 1176)

பிறந்துலகம் முற்றுடைய கோ - தலைப்பிள்ளையாய்ப் பிறந்தமையால் உலகம் முழுவதற்கும் உரிமையுடைய இராமன். பிறந் துலகம் முற்றுடைய கோவைப் பிரியாது மொய்த் திண்டியுறைதும். (ஆ : 404)

பிறந்துல குடைய மொய்ம்பினேன் - தயரதனுக்கு முதல் மகனுகப் பிறந்து உலகம் முழுதுமே தனக்கு உரிமையாகவுடைய வலிமை மிக்க இராமன். (அ : 483)

பிறப்பு - 1. உயர் குடிப் பிறப்பு. பிறப்பின் மேன்மைப் பெரியவர். (அ : 7)
2. உதயம். பிறப்பு மிறப்பு மொழிவுற்ற இருநாற் பகலின் இலங்குமதி. (சு . 545)

பிறப்பு மாறுதல் - பிறவிக் குரிய ஒழுக்கம் மாறுதல். வஞ்ச மனத்தினை பிறப்பு மாறினை. (யுத் : 314)

பிறப்புரு நெறி - பிறத்தலில்லாத நெறி. ஒரு பிறப்பினை அடைத வில்லாத நெறி. (அண்) அழித்துமோர் பிறப்புரு நெறி சென்றன்மயாம் கழித்தும் இவ் வாக்கையை. (யுத் : 3435)

பிறப்பெனும் பெருங்கடல் - பிறவி என்கின்ற பெரிய கடல். துறப்பெனுந் தெப்பமே துணை செயாவிடின் பிறப் பெனும் பெருங்கடல் பிழைக்கலாகுமோ. (அ : 21)

பிறர் பழி பிதற்றி - பிறருடைய பழியைப் பிதற்றித் திரிபவன். பிறர் பழி பிதற்றியாக யான். (அ : 903)

பிறர் பிறர் - மிகவும் வேறுபட்டவர். பிறர் பிறர்க் கெண்ணி நோக்கி இயம்பரும் இன்பத்தை. (அ : 628) [பா : பே]

பிறர்மனை நோக்குதல் - அயலார் மனைவியைப் பார்த்தல். பிறர் மனை நோக்குவேமை உறவெனப் பெறுதி போலாம். (யுத் : 1352)

பிறரைச் சீறிஞேன் - காரணமின்றிப் பிறரைச் சினந்தவன். பிறன் கடை நின்றவன் பிறரைச் சீறிஞேன். (அ : 890)

பிறவா வெய்யோன் - தோற்றம் அற்றவஞன சூரியன். பின்னுள் பிறக்குமாறிது வென்பான் போற் பிறந்தனன் பிறவா வெய்யோன். (அ : 667)

பிறவி - 1. பிறப்பு. பிறவிப் பெரிய கடல். (அ : 603) (அ : 22) பிறவி வெந்துயர்ப் பெருஞ்சிறை. (ஆ : 124)
2. பிறவிப் பிணி. தீர்வரும் பிறவி தீர்தி. (கி : 372)

பிறவிக் கட்டம் - பிறவித் துன்பம். கட்டவன் பிறவி தந்த கடையானவுடல். (ஆ : 46)

பிறவிக்கடல் - பிறப்பாகிய கடல். இப்பிறவிக் கடல் கடந்தேன். (ஆ : 61)

பிறவிக்கடல் கடத்தல் - பிறப்பாகிய கடலைத் தாண்டுதல். (ஆ : 61)

பிறவி நோய் - பிறவி என்னும் நோய். பேர்வரும் பிறவி நோய்க்கு மருந் தென நின்ருன். (யுத் : 445)

பிறவிப் பேரிடர்-பிறவித் தொடர்பாகிய பெரிய துன்பம் (யுத்:3979)

பிறவி மயல் - பிறபிஞ லுண்டாகிய குற்றம். மாயப் பிறவி மயல் நீக்கி மாசிலாக் காயத்தை நல்கி. (ஆ : 1188)

பிறவியின் பகைஞன் - பிறவியை வென்ருெழிக்க வல்ல விரோதி. புன்புலப் பிறவியின் பகைஞன் போலுமால். (யுத் : 327)

பிறவி யென்னுமிவ் விருஞ்சிறை - பிறவி என்கின்ற இப் பெரிய சிறைச்சாலை. பிறவி யென்னும் இவ் விருஞ்சிறை கடத்தலின் இனியதியாவதே, (அ : 22)

பிறவி வேர் - பிறப்புக்குரிய காரணமாகிய வினைகள். பிணி கொழுத்த வெம் பிறவி வேரின் வன்துணி கொழித்து. (கி:904)

பிறழ்தல் - 1. மிகுதல். மின்னிச் சுடரும் பிறழ் பேரொளியான். (ஆ : 76)

2. விளங்குதல். தவளக் கங்கணங்களு மிலங்கிய கரம் பிறழவே. (ஆ : 16)

3. வேறுபடுதல். (வை.மு) பேதியாது நிமிர் பேத வுருவம் பிறழ் கிலாது. (ஆ : 1)

4. நீங்குதல், (அண்) (ஆ : 1)

5. மாறுதல். பின்பு நின்றவர் பிடர்க்கும் இவ் விசை ஒக்கும் பிறழா. (யுத் : 1431)

பிறழ்ந் தொளிர்தல் - ஒளி வீசி விளங்குதல். பின்னெழில் கொள் வாளிணை பிறழ்ந் தொளிர் முகத்தாள். (அ : 256)

பிறன் கடை நின்றவன் - பிறன் மனைவியைப் பெற விரும்பி அவன் வாயிலில் நின்றவன். அறங் கெட முயன்றவன் அருளில் நெஞ்சினன் பிறன் கடை நின்றவன். (அ . 890)

பிறிகுதல் - அப்பாற் போய்விடுதல். உன்னோ டமருஞ் செய்யேன் பிறிகுவன். (யுத் : 1418)

பிறித்தவர்க்கு - பிறிது அவர்க்கு. பிறிது – வேறு. பிறிது என்பது செய்யுள் நோக்கிப் பிறித்து என நின்றது. செய்யுள் விகாரம். பிறித்தவர்க்குற்றது என்னை பெற்றியோய். (சு : 1278)

பிறிதல் - 1. நீங்கல். பிறிந்தார் சீற்றம். (சு : 488)

2. அப்பாற் போதல். பிறிந்தனர் இமையோர். (யுத் : 1150) பிறிகு வென். (யுத் . 1418) பிறிந்து போவதே கருமம் இப் பொழுது. (யுத் : 2474)

பிறிதாதல் - வேறுபடுதல். நின்னிற் பிறிதாய். (யுத் : 242) மனம் பிறிதாகும் வண்ணம். (சு :445)

பிறிதாம் - வேறுபடும். சிந்தனை பிறிதாம். (அ : 167)

பிறிது - 1. மற்றொன்று. வேறு. நாகருலகிற் பிறிது வானின். (ஆ : 260) பிரிந்தனர் சிந்தனை பிறிதொன்றுமென. (கி : 835) [பா : பே] (சு : 76)

2 உடல். (வை.மு) உணர்வும் உயிரும் பிறிதாகி. (ஆ : 103)

பிறிதுற - வேறொரு வகையாக. அது துடைக்க எண்ணிப் பிறிதுறப் பேசலுற்றான். (ஆ : 867)

பிறிதுறல் (பிறிதுறுதல்) - 1. வேறுபாடு. வேறுபடுதல். நாளும் இளமையும் மாண்டு மாண்டு பிறிதுறும் நிலைமைய. (சு : 437) 2. நீங்குதல். சலம் பிறிதுற மனந் தளர்ந்து கூறுவாள். (அ : 887)

பிறிதோர் மாற்றம் - பிறிது ஒரு மறு மொழி. பிறிதோர் மாற்றம் பெருந்தகை பேசலன். (அ : 526)

பிறிதொரு சான்று - வேறோர் காரணம். அடைந்தோர் தம்மை ஏமுற இனிதி னோம்பிப் பின்னும் வீடளிக்கு மென்றாற் பிறி தொரு சான்று முண்டோ. (யுத் : 420)

பிறியார் - பிரியார். பிறியார் பிரிவேதென்னும். (அ : 326)

பிறிவரும் - விட்டு நீங்காத. பிறிவருங் கருணையும் மெய்யும் பேணினான். (யுத் : 399)

பிறிவு - பிரிவு. பிறிவருங் கருணை. (யுத் : 399)

பிறிவெனும் பீழை - பிரிவு எனப்படுகின்ற துன்பந் தருஞ் செயல். பிறிவெனும் பீழை தாங்கள் பிறந்த நாட் டொடங்கி என்றும் உறுவ தொன்றின்றி ஆவி ஒன்றென நினைந்து நின்றான். (யுத் : 1658)

பிறை - பிறைமதி. (யுத் : 112)

பிறைக் கடை எயிறு - கடைப் பிறை எயிறு. வாயின் இருபுறத் தோரங்களிலும் உள்ள பிறைச் சந்திரன் போன்ற பற்கள். பிறைக் கடை எயிற்றன. (சு : 906)

பிறைக்குலம் - பிறைச் சந்திரன் போன்ற வக்கிர தந்தம். பூட்டி வாய் தொறும் பிறைக் குலம் வெண்ணிலாப் பொழிய. (யுத் : 112)

பிறை சூடும் பிஞ்ஞகன் - பிறை மதியைச் சூடும் சிவபெருமான். பிறை சூடும் பிஞ்ஞகன் தன் புரம் பெற்றாயோ. (யுத் : 3891)

பிறை சூடும் பிஞ்ஞகன் தன் புரம் - சிவ பெருமானுடைய கைலாச புரம். (யுத் : 3891)

பிறைத்தலை வாளி - அர்த்த சந்திர பாணம். பிறைத்தலை வயிர வாளி மழை யெனப் பெய்யுங் கையான். (யுத் : 1899)

பிறை நுதலார் - பிறை போன்ற நெற்றியையுடைய பெண்கள். பெருந் தடங்கண் பிறை நுதலார். (பா : 67)

பிறைப் பிள்ளை - இளம் பிறைச் சந்திரன். குழவித்திங்கள். மேலை மாலைப் பிறைப் பிள்ளையைக் கூவுதிர் வல்லை என்ருன். (ஆ 691)

பிறை மருப்பு - பிறை மதி போலும் கொம்பு. ஒரு பிறை மருப்பு யானை. (அ : 746)

பிறைமுகக் கொடுங்கடுஞ்சரம் - பிறை முகமுடைய கொடிய கடிய அம்பு. (யுத் : 3768)

பிறை முகச் சரம் - அம்பு வகையில் ஒன்று. தோய்விலாப் பிறை முகச் சரம் சிரந்துமித்த. (ஆ : 518)

பிறையுடை நுதலார் - பிறைச் சந்திரன் போன்ற நெற்றியையுடைய மகளிர். பிறையுடை நுதலார்க் கேற்ற பிறந்த இற்கடன்கள். (யுத் : 1618)

பிறை யெனும் நுதலவள் - பிறை போன்ற நெற்றியை யுடையவள். பிறை யெனும் நுதலவள் பெண்மை என்படும். (பா : 603)

பிறைவாய் வாளி - பிறைவாய் அம்பு. (யுத் : 3124)

பிறை வாளெயிறு . பிறைச் சந்திரன் போன்று ஒளி தங்கிய வளைந்த பற்கள். பிறை வாளெயிற் றரக்கர். (ஆ : 465)

பிறை வெண் பல்லார் - வெண்மையான பிறைச் சந்திரனை ஒத்த வக்கிரப் பற்களையுடைய அரக்கர். பல் பிறை வெண் பல்லார் படை நின்றது. (யுத் : 2919)

பின் - 1. காரியம். பின்னிலேன் முன்னிலேன். (யுத் . 290)
2. முடிவு. இறுதி. பின்னும் நீ முன்னும் நீயே. (யுத் : 606)
3. தம்பி. பின்னிணைக்குரிசில் தன்னைப் பெருங்கையால் வாங்கி. (யுத் : 4270) (கி : 113)
4. பின்னல். மயன் மடந்தை தன் பின்னவிழ் ஓதியும் பிறங்கி விழ்ந்தன. (சு : 378)

பின் செலல் - பிந்திவிடுதல். பின்னே தொடர்ந்து செல்லல். ஒன்பதினுயிர கோடி யூகந்தான் முன் செலப் பின்செல ஞாங்கர் மொய்ம்புற. (கி : 684)

பின்தருக - பிற்பட வருக. சேனையைப் பின் தருகென்று, (அ:1113)

பின்தரும் பிலன் - பின்னிக் கொண்டிருக்கின்ற குகை. பின் தரும் பிலனிடைப் பெய்யுமாறுபோல் வன்றிறல் இருகரம் வழங்க மாந்தியே. (யுத் : 1325)

பின்துணை - பின் பிறந்த தம்பி, எருவை வேந்தன் தன் பின் துணையாகிய பிழைப்பில் வாய்மையான். (கி : 898)

பின் தோன்றினேன் - தம்பி. தோன்றல் பின் தோன்றினேன். (ஆ : 219)

பின் பிறந்தார் - பின்னே (தம்பியாகப்) பிறந்தவர்கள். எம்பெருமான் பின் பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு. (அ : 1022)

பின் பிறந்தாள் - பின்னே பிறந்தவள். தங்கை. மாதுலனுர் பொன்றவும் என் பின் பிறந்தாள் மூக்கறவும் வாழ்ந்தேன். (யுத் : 1664)

பின்பு - 1. முதுகுப்புறம். பின்பலான் மற்றெத் தேவரையும் முகங் கண்டறியாத ஈட்டான். (யுத் : 1975)
2. பிற்காலம். முன்பு பின்பின்றி (அ : 114)
3. ஏழனுருபு. முதுகின் பின்பு நின்றவர். (யுத் : 1431)

பின்பு புடை - சங்காரம். இறுதி நிலையாகிய நாசம். முன்பு பின்பிரு புடை யெனுங் குனிப்பரு முறைமைத்தம் பெருந்தன்மை. (யுத் : 4021)

பின்வந்தவன் - தம்பி, பின் வந்தவனே யறிபெற்றியது. (யுத்:1723 பின் வந்தவனு முயிரிழந்த பிழையை நோக்கிப் பெருந்துயரால் முன் வந்தவனும் முடிந்தான். (யுத் : 2623)

பின்ற - பிந்த. பின்னிட. வேலுங் கொலை வாளும் பின்ற. (பா-589

பின்றலினேர் - பின் வாங்கியவர். பின்றலினேரை வலிந்து பிடித்தார். (யுத் : 2257)

பின்ருதவர் பின்றுதல் - பின்னிடாது நின்றவர் பின்னிடுதல் பின்ருதவர் பின்றி யிரிந்து பிரிந்தார். (யுத் : 1928)

பின்ருதவலம் ஒருவருக்கும் பின்னடையாத வெற்றி. பின்ருத வலத்துயர் பெற்றியன். (யுத் : 2339)

பின்றுதல் - 1. பின்னுதல். இணைத்தல். இருள் சிந்திப் பின்றின எனலாகும் பிடிதரு சிறுமா. (அ : 699)

2. மாறுபடல். (கலா) (அ : 699) பின்னைப் பின்றுமென்றாலும். (யுத் : 415)

3. நீண்டதாதல். பின்றுகின்ற பிலவாய். (ஆ : 11)

4. பின்வாங்குதல். தோற்றல் பின்றிலர். (யுத் : 2320) பின்று வாய் கொலாம். (அ : 1162) ஒல்கிப் பின்றுமேல் அவனுக்கன்றே பழியொடு நரகம் பின்னை. யுத் : 1253) பின்றுவர். (கி . 284) பின்றலிலார். (யுத் : 2258) பின்றினென் உனக்கு. (யுத் . 1504)

5. தவறுதல். உரைத்த சொல் பின்றுமென் றுணரேல். (யுத் : 4153)

6. பின்னிடுதல். செல்லச் செல்ல வழிதொலையா திருத்தல். (உ.வி) (ஆ : 11)

7. காலந்தாழ்த்தல். பின்றுதல் நீதரோ. (சு : 1293)

8. மீளுதல். பின்றரு பிலன். (யுத் : 1325)

பின்றை - பின். இலங்கை புக்குத் திருவினைக் குறித்து மீண்ட பின்றை வந்தளக்கர் வேலை பெரும்படை இறுத்ததன்றே. (யுத் : 4210)

பின்ன - வேறாக. (அண்) ஒரு தன்னிற் பின்ன கவசத்த பொருள் இல்லை. (யுத் : 3643)

பின்னகம் - வேறுபட்டது. (யுத் : 3643)

பின்ன கவசத்த பொருள் இல்லை - 1. பின்ன கவசத்த பொருளில்லை- (தன்னின்) வேறாகத் தன்னை உட்படுத்தி அடக்கிக்கொள்ளுதற் குரிய கவசமாந் தன்மையுடைய பொருள் இல்லை. (அண்)
2. பின்னக வசத்த பொருள் இல்லை - பேதமான ஆட்சியை யுடைய (பரம்) பொருள் (வேறு) ஒன்றுமில்லை. (கலா) தன்னக வசத்துலகு தங்க ஒரு தன்னிற் பின்னக வசத்த பொருள் இல்லை. (யுத் : 3643)

பின்னதாய காரியம் - பின் நிகழ்ந்த செயல். (யுத் : 11)

பின்னம் - 1. துண்டம். பின்னங்கள் உகிரிற் செய்து. (பா : 951)
2. வேறு பாடு. வேறுபட்டது. பின்னமாய் ஒன்றுதல் பிரிந்தே யோ பிரியாதோ. (ஆ : 60) (யுத் : 3643)

பின்னமாதல் - உடைந்து போதல். சின்னபின்னமாதல். தீவினை நெஞ்சம் ஆவி பின்னமே ஆயதில்லை. (யுத் : 2838)

பின்னமாய் ஒன்றுதல் - வேறாகியும் ஒன்றாகியுமிருத்தல். (ஆ : 60)

பின்னர் - முடிவில். பின். அது அலது உறுதி பின்னர் இல்லெனக் கருதியும். (அ : 33) (யுத் : 403) [பா : பே]

பின்னல் - பிணைதல்.

பின்னல் திரை - பிணைந்த வண்ணம் தோன்றுகின்ற திரை. பின்னற்றிரை மேற்றவழ்கின்ற பிள்ளைத் தென்றல். (யுத் : 6)

பின்னவன் - தம்பி என்பின்னவன் பெற்றசெல்வம் அடியனேன் பெற்றதன்றோ. (அ : 295) பின்னவன் இவன் என்பதும் பேணலை. (கி : 335)

பின்னவிழ் ஓதி - பின்னல் அவிழ்ந்த கூந்தல். மயன் மடந்தை தன் பின்னவிழ் ஓதியும் பிறங்கி வீழ்ந்தன. (சு : 378)

பின்னுள் - அடுத்தநாள். பின்னுள் அவிராமனெனும் பெயரான் தன்னுருயிர் கொண்டு சமைக்குவனுல். (யுத் : 1690)

பின்னுன் - தம்பி. இதிழைத்துளவன் பின்னுனையும் இப்படிச் செய்து. (யுத் : 1707)

பின்னி - நெருங்கி. இணைந்து. கலந்து. பின்னிச் சுடரும் பிறழ்பே ரொளியான். (ஆ : 76)

பின்னிணைக்குரிசில் - தம்பியும் பரதனுடன் இணைபிரியாது வாழ்பவனு மாகிய சத்துருக்கன். பின்னிணைக் குரிசில் தன்னைப் பெருங் கையால் வாங்கி. (யுத் : 4210)

பின்னி நின்றிழைத்தவர் - நூலாக இயற்றினவர். பிழைப்பிலா மறையைப் பின்னி நின்றிழைத்தவர் உளரெனும் இழுதை நெஞ்சினுன். (அ : 892) [பா : பே]

பின்னிரை - பின்னணி. பின்வரிசை (அண்) பின்னிரை நிற்றிர். (யுத் : 2413)

பின்னிலன் - தனக்குப்பின் எஞ்சி நிற்பது எதுவும் இல்லாதவன். (யுத் : 189)

பின்னிலேன் முன்னிலேன் - (முன்னிலேன் பின்னிலேன்) நின்னை யன்றி ஆதியாக ஒன்றை யுடையேனல்லேன் பின்னர் சென்ற டையும் அந்தமாக ஒன்றை யுடையேனல்லேன். (அண்) உன்னை யன்றி ஒரு காரணமுமிலேன். (வை மு) (கலா) பின்னிலேன் முன்னிலேன் எந்தை பெருமானே பொன்னுளே தோன்றிய தோர் பொற்கலனே பொன்றேனே. (யுத் : 290)

பின்னுசடையோர் - திரித்துவிட்ட சடையோர். தவசிகள். பரத்து வனே ஆதியாம் பின்னு சடையோரும். (அ : 1133)

பின்னுதல் - 1. கலத்தல். மின்னிற் செறி கற்றை விரிந்தன போற் பின்னிச் சுடரும் பிறழ் பேரொளியான். (ஆ : 76)
2. முறுக்கேறுதல். வழுவுறப் பின்னி மூசுமாசுண்ட சடையின் மாலை கழுவினன். (யுத் : 4266)

பின்னும் - அன்றியும். பின்னும் மற்றுடை எவையும். (சு : 450)

பின்னுறப் பிணித்தல் - பின்னே பொருந்தும்படி கட்டுதல் ஆயிரங் கண்ணினுனைப் பின்னுற வயிரத் திண்டோள் பிணித்தது. (யுத் : 2188)

பின்னுறுவது - பின்னே நேரும் தீப்பயன். பின்னுறுவ தோராதே பேதுறுவேன். (ஆ : 995)

பின்னை - 1. பின்பு. பின். (யுத் : 403) பின்னை ஏது முதவுந்துணை பெருர். (ஆ : 41)) பின்னை முனிவுற்றிடும் எனத் தவிர்தல் பேணுது. (ஆ : 750) வாழுதி பின்னை மன்னே. (யுத் : 1607)
2. பின் பிறந்தவள். உலக மூன்றுங் காவலோன் பின்னை. (ஆ : 263)
3. இனி நிகழ்வன. பின்னையறியோம் முன்னறியோம். (யுத் : 2615)

பின்னை எண்ணுவான் - சிறப்பினுல் பின் எண்ணத்தக்கவன். பின்னை எண்ணுவான் பிரகத்தன் என்றெரு பித்தன். (யுத் : 507)

பின்னோர் - குலத்தில் பின்பு உதித்தவர். அவன் பின்னோரை என்னுனும் அளப்பரிதால். (பா : 724)

பின்னோன் - தம்பி. ஆர்க்கின்ற பின்னோன் தனை நோக்கினன் தானுமார்த்தான். (கி : 267) (யுத் : 251)

பினை - பின். பின்னை. உற்றுயிருள்ளே தேய வுலந்தாய் பினை யன்றே பெற்றனை செல்வம். (ஆ : 738)

பீ

பீடம் - ஆசனம். ஓர் தவிசுடைப் பீடம். (யுத் : 1230) பளிக்குப் பீடம். (பா : 355)

பீடிப்பு - துன்பம். பீடிக்கப் படுகின்ற. குத்தாற் பீடிப்புறு புண்ணுடலோடு பெயர்ந்தார். (யுத் : 1929)

பீடிப்புறுதல் - பீடிக்கப்படுதல். (யுத் : 1929)

பீடு - பெருமை. பின் செய்தோம் சில அவை இனிப்பீடின்று பெறுமோ. (யுத் : 532)

பீடை - தவறு. பெண்ணுடைத் தன்மைய தாய பீடையால். (யுத் : 1515)

பீரிடுதல் - இரத்தம் வடிதல். நெக்குப் பீரிடும் உருவர். (சு : 754)

பீலி - 1. தோகை. மயிலுடைப் பீலியின் விதானம். (அ : 783)
2. ஒரு துளைக்கருவி. சிறுசின்னம். (அண்) பொங் கொலிவரி கண் பீலி. (யுத் : 2398)

பீலித்தழை - மயில் பிச்சம் (அண்) பீலி என்ற இசைக்கருவி. (கலா) பீலிக்குடை. (வை.மு) ஆனையின் கோடும் பீலித் தழைகளும். (யுத் : 2537)

பீழை - துன்பம். [பீடா] பீழை பிணித்தது. (யுத் : 4100) தன்னெடும் பீழை நீங்கத் தழுவினள். (யுத் : 4319) பிரிவெனும் பீழை. (யுத் : 1658)

பீழை பிணித்தது - துயரை உண்டாக்கியது. (யுத் : 4100)

பீறுதல் - கிழித்தல். பூந்துகிற் கலாபம் பீறி- (சு : 284) பீறிற்றும் அண்டம். (யுத் : 3638)

பீனதனத்தவள் - பருவ மங்கை. (அண்) (பா : 780)

பீனதனம் - தடமுலை. மானவன் இச்சிலை கால் வளையானேல் பீனதனத்தவள் பேறிலள் என்பார். (பா : 780)

பீனம் - பருமை. பீனதனத்தவள். (பா : 780)

பு

புக்கடைதல் - சரணமாக அடைதல். புக்கடைந்த புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க. (யுத் : 1574)

புக்க புகல்தல் - நடந்த செய்திகளை உள்ளபடி சொல்லுதல். பொய் தவிர் பயத்தையொழி புக்கபுகல் என்றான். (ஆ : 610)

புக்கரப் பெருந்தீவு - புக்கர மென்னும் பெரிய தீவு. புக்கரப் பெருந் தீவிடை யுறைபவர். (யுத் : 3222)

புக்கவழி - புகுந்த குலம். புக்க வழிக்கும் போந்த வழிக்கும். (சு : 485)

புக்குக் காட்டுவது - (உட்பொருளை) உட்புகுந்து நுணுகியறிந்து அறிவித்தல். புக்குக் காட்டுவதரிது இது. (யுத் : 174)

புக்குற்று - புகுந்து. யாவையும் புக்குற்று முற்றின. (யுத் : 994)

புகட - புகவிட என்பதன் மரூஉ. போகட எனவும் மருவி வரும். மரனெடு வெற்பினம் புகட. (யுத் : 2098)

புகப்புக - பலபடியாகப் பாய. புகை வேக வாளிகள் புகப்புக. (யுத் : 2038)

புகர் - 1. தாமரை மொட்டு. புகர் முகப்பகழி. (பா : 412)
2. புள்ளி. புகர் முக யானை. (பா : 713) புகர் மலைக்கிறை (கி : 70)
3. குற்றம். புகரில் வானரம். (கி : 603) (யுத் : 793)
4 ஒளி. விளக்கம். பொழிந்தார் புகர் வாளிகள். (ஆ : 923)

புகர் மத்தப்பூட்கை - புள்ளிகளையுடைய மதயானை. (யுத் : 1891)

புகர் மத்தப் பூட்கை - புள்ளிகளையுடைய மதயானை. (யுத் : 1891)

புகர்மலை - புள்ளிகளையுடைய மலை போலும் யானை. புயல் தரு மதத்திண் கோட்டுப்புகர் மலைக் கிறையை ஊர்ந்து. (கி : 70) மாமழையன புகர் மலை. (யுத் : 1807)

புகர் முகக்கடுங்கணை - ஒளி வாய்ந்த கடுமையான அம்பு. ஒரு புகர் முகக் கடுங்கணை புத்தேள் இறுத்து மாற்றிது வல்லையேல் என்று கோத் தெய்தான். (யுத் : 1457)

புகர் முகப் பகழி - ஒரு வகை அம்பு. தாமரை பொட்டுப் போன்ற முகத்தை யுடைய ஒரு வகை யம்பு. (வெ.ப) புகர் முகப் பகழி யென்னும் மன்னெடுங் காலவன் காற்றடித்தலும். (பா : 414)

புகர் முகம் - அம்பு. (ஆகு) ஒளி பொருந்திய அம்புக்கு அன்மொழி. புண்ட ரிகத்தின் முகையன்ன புகர்முகம். (யுத் : 3775)

புகர் வாளி - பொன்னிற அம்புகள். (கலா) ஒளியுள்ள அம்புகள். (வை.மு) அரக்கன் பொழிந்தான் புகர் வாளிகள். (ஆ : 923)

புகர் வேழம் - செம் புள்ளிகளைக் கொண்ட யானை. பொன்னின் னோடை மின் பிறழ் நெற்றிப் புகர் வேழம். (யுத் : 3555)

புகல் - 1. புகுதல். புகலறு முழை. (சு : 5)
2. பாதுகாப்பு. அடைக்கலம். புகலிடம். சரணம். உன்புகல் அவர். (யுத் : 311)
3. இடம். தங்கியிருக்குமிடம். தாமிருந்த தகையரக்கர் புக லொழிய. (ஆ : 341) இரவிதன் புகல் கடந்து. (கி : 192)
4. விரும்புதல். புகழுதல். புகலும் வாளரிக் கண்ணியர். (பா:955)
5. சொல்லுதல். சொல்லுகின்ற. புலமையினோர் புகல் தெய்வ மாக்கதை. (பா : 6)
6. பிறத்தல். குலம் புக்கு ஆன்ற முதியவர். (கி : 329)
7. சொல்லுதி. அவ்வரக்கன் எங்கே புகல் என. (ஆ : 1026)

புகல்தல் - சொல்லுதல். புகலரிய பண்பிற்றுமால். (கி : 767) புகறி. (யுத் : 610) (யுத் : 133) புகல்வான். (அ : 372) புகல்கிலாத. (கி : 8)

புகல் பகர்தல் - அடைக்கலமாக விரும்பிச் செல்லுதல். பற்றுதலன்றி யுண்டோ புகலெமைப் பகர்கின்றானை. (யுத் : 414)

புகல் புகல் - சரண் புகுதல். உம்மையே புகல் புக்கேமுக்கு இதின் வரும் உறுதியுண்டோ. (கி : 67) (பா : 210)

புகல் புகுந்தோர் - சரணாக வந்தடைந்தவர். தம்மைப் புகல் புகுந் தோர்க்குப் பொன்ரு ஆருயிர் கொடுத்துக் காத்தார். (யுத் : 425)

புகல் பெற - புகுதலைப் பெற; தோன்ற. மீன் புகல் பெற வெயில் ஒதுங்க. (அ : 534)

புகல் மருவி - அடைக்கல மாகப் பொருந்தி. விண்டவர் நம்புகல் மருவி வீழ்வரோ. (யுத் : 396)

புகல்வதானுன் - கூறுவானாயினுன். புனைகுழலாட்கு வந்த காரியம் புகல்வதானுன். (கி : 617)

புகலிடம் - 1. சரண்புகக் கூடிய இடம். அடைக்கலம். போனாற் புகலிடமில்லை. (யுத் : 1359) யாவர்க்கும் புகலிடமான செங்கண் மால். (பா : 98)
2. இருப்பிடம். எம்புகலிடம் வனமே யால். (அ : 671)

புகலுறு விதி - நேரிட வேண்டிய முறை. (வை.மு) சிறப்பித்துக் கூறக் கூடிய அருள். (அண்) புகலுறு விதியால் மேயினை. (ஆ : 113)

புகழ் - 1. புகழுடம்பு. (ஆகு) பேராக்காதை என் புகழினோடு நிலை பெற. (யுத் : 3081)

2. புகழ் பெற்ற குலம். துலை புக்க பெருந்தகைதன் புகழிற் பூத்த அறனென்றுந் திருமனத்தான். (பா : 244)

புகழ் ஆர்த்தல் - கீர்த்தி ஆர வாரித்தல். புகழ் பலராலும் சொல்லப் படுதல். புகழும் ஆர்த்தன. (யுத் : 2762)

புகழ் கொண்டு மாய்தல் - புகழைக் கைக் கொண்டு உயிரை விட் டொழிதல். மருந்தெனின் அன்றுயிர் வண்புகழ் கொண்டு பின் மாயயேனோ. (அ : 1010)

புகழ் நிறுவுதல் - புகழை நிலை நிறுத்தல். பூண்ட பெரும் புகழ் நிறுவித் தம் பொருட்டாற் பொன்னுலகம் புக்கதாதை. (ஆ:207)

புகழ்ப்பகை - புகழுக்குப் பகையாதல். புன்பகை காட்டும் யானோர் புகழ்ப் பகைக் கொருவன் போலாம். {யுத் : 880)

புகழ் பொதிந்த மெய் - புகழுடம்பு. இசை நிரம்பிய சரீரம். புகழ் பொதிந்த மெய்யே போற் பூத்து நின்ற வேங்கடம். (கி : 769)

புகழ் மகள் - கீர்த்தியாகிய மகள். புகழ் மகளைத் தழுவிய கை. (யுத் : 3893)

புகழ் வல்லி - புகழாகிய கொடி. விளையுந் தன் புகழ் வல்லியை வேரறுத் தென்ன. (சு : 183)

புகழ் வேட்ட பொருள் - புகழையே விரும்பிய செல்வம். பெருஞ் சேனை ஈவுதனை மேற் கொண்ட செம்மன்னர் புகழ் வேட்ட பொருளே போல் தேய்ந்ததால். (பா : 771)

புகழமுது - புகழாகிய அமுதம். இராமன் பரக்குந் தொல் புகழமுது. (சு : 175)

புகழின் சேக்கை - புகழுக்கு இருப்பிடமாக உள்ளவன். (ஆ : 838)

புகழின் புகழே - புகழ்க்குப் புகழ் போன்றவனே. புகழின் புகழே மின்னின் மின்னும் வரிவிற் குமரா. (சு : 354)

புகழின் வாழ்க்கை - புகழ் எங்கும் பரவி வாழ்வதற்கு நிலைக்களமாகத் திகழ்பவர். சீதாபிராட்டி. பொற்பினுக் கழகினை புகழின் வாழ்க்கையை. (யுத் : 3980)

புகழின் வாழ்வு - புகழுக்கு வாழ்விடமானவன். தசரதன். மெய்க் கணியே புகழின் வாழ்வே. (ஆ : 197)

புகழுக்கு அழிதல் - புகழ் அழியுமே என்று வருந்துதல். கணவன் புகழுக்கு அழிவாள். (அ : 349)

புகழைச் சுடுதல் - புகழை இழக்கச் செய்தல். புகழோடு யிரைச் சுடு வெந்தீயோய் நின்போற்றீயோருளரோ. (அ : 341)

புகழைப் புதுக்குதல் - புகழைப் புதுப்பித்தல். ஆண்மையாலே புதுக்கினன் புகழையம்மா. (யுத் : 1423)

புகழை வாயால் அருந்துதல் - புகழை வாயால் உண்டிடுதல். புகழை மிச்சமில்லாமல் ஒழித்தல். வாயால் அருந்தினேன் அயோத்தி வந்த அரசர்தம் புகழையம்மா. (யுத் : 1622)

புகழொடு கோடல் - தன் மேன்மை கருதிப் பிறர் காணிக்கையாகக் கொடுப்பனவற்றைக் கொள்ளுதல். புரந்து கோடலும் புகழொடு கோடலும் பொருது துரந்து கோடலும் என்றிவை தொன்மையிற் றொடர்ந்த. (யுத் : 545)

புகற்சி - விருப்பம். அனையவள் புகன்ற சீற்றத்தாற் கொன்றிலை போலுமால். (ஆ : 1127)

புகறரு முறை - புகல்தரு முறை. சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற விதிப்படி. பொய்வழியின் முனி புகறரு முறையால். (பா : 303)

புகறி - புகலுதி. சொல்லுதி. செய்வது புகறி. (ஆ : 642) இப் பொன்றலில் பகழிக்கப்பால் இலக்கமென் புகறி. (யுத் : 611) புதுக்குமா புகறிபோய் என்றான். (யுத் : 4184) (யுத் : 932) (யுத் : 1337)

புகன்ற சீற்றம் - விரும்பிச் செய்த வெகுளிக்குக் காரணமான தீங்கு. (ஆ : 1127)

புகாமுன்னம் - புகுந்தவுடனேயே. கொண்டு போய் வனம் புக்கேன் புகாமுன்னம் தாங்கரிய பேராற்றல் தாடகையே தலைப்பட்டாள். (பா : 745)

புகுத்து - வரவிடு. நாயகன் புகுத்து ஈங்கென. (யுத் : 745)

புகுதல் - 1. தோன்றுதல். குலம் புக்கான்ற முதியவர். (கி : 329)
2. நடத்தல். மனுவின் நெறி புக்கவேல். (கி : 349)
3. பொருந்துதல். முரண்புகு தீவினை. (யுத் : 360)
4. தொடங்குதல். நிகழ்தல். உலகொரு மூன்றினோடும் புக்க போரெல்லாம் வென்று. (யுத் : 3196)
5. சரணாக அடைதல். அரக்கரைச் செருவிடை முருக்கிப் போந்தவா கண்டும் நானிங்குப் புகுந்தது. (யுத் : 529)
6. பிரவேசித்தல். போக்கிய சேனைதன்னில் புகுந்துள இறையும் போதா. (யுத் : 1938) அங்கி புக்கிடு. (யுத் : 4042) புகுவார்களும். (யுத் : 670) புகுத்து. (யுத் : 745)
7- ஏறிக்கொள்ளல். புன்றொழிற் குரங்கெனது தோளிடைப் புகுதி. (சு : 1334)
8. அமைதல். பொன் புகுந் தொளிர் வடிம்பின. (யுத் : 1431)
9, நேர்தல். பொன்றுந் தன்மை புகுந்தது போய். (யுத் : 4153)
10. சென்று கூடுதல். பூரியர் ஒருவழிப் புகுந்த தாமென. (கி : 14)

புகுதி - 1. அறிதல். தத்துவ ஞானம். புகுதியில் லாதவர் புலத்திற் றுகுமோ. (யுத் : 199)
2. புகுந்தறிவது. ஓர்ந்துணர்தல். தத்துவங்கள். புகுதி யாவர்க்கும் அரிய. (யுத் : 4020)
3. அறிவு. புகுதி கூர்ந்துள்ளார் வேதம். (யுத் : 1184)
4. ஏறிக் கொள். தோளிடைப் புகுதி. (சு : 1334)

புகுந்த - நடந்தவை. நடந்த வரலாறுகள். போந்த தென்னை புகுந்த என் புந்தியோய்க் காந்துகின்றது கட்டுரையீர். (ஆ : 213)

புகுந்தது - நிகழ்ந்தது. இது இங்குப் புகுந்தது என்றான். (யுத் : 1249) (யுத் : 363)

புகுந்துள துரைத்தல் - நிகழ்ந்ததைக் கூறுதல். ஓதிய கல்வியாளர் புகுந்துள துரைக்கலுற்றார். (யுத் : 2245)

புகும் - புகுதும் என்பதன் விகாரம். நெருக்குடை வாயிலூடு புகுமெனின். (யுத் : 3212)

புகுவாயில் - நுழையும் வாயில். புகுவாயில் நெருக்கின் உலந்தார். (யுத் : 1929)

புகை - நெட்டுயிர்ப்பு. புண்ணுற்ற தீயிற் புகையுற் றுயிர் பதைப்ப. (அ : 390)

புகைக் கண்ணன் - தூமி ராட்சன். வான் புகைக் கண்ணன் வந்திங்கு ஏவுதி எம்மை என்றுன். (யுத் : 2254)

புகைக் கொடி - நெருப்புக்குக் கொடி எனத் தக்க புகைகள். தோன்றின புகைக் கொடி உமிழ்ந்தது கொடுந் தீயே. (யுத்:209)

புகை செய்தல் - உக்கிர மிகுதி தோற்றுவித்தல். புகை செயா நெடுந்திப் பொங்க. (யுத் : 277)

புகைதல் - 1. வருந்துதல். புண்திறந்ததில் எரி நுழைந்தாலெனப் புகைவாள். (சு : 341)

2. கோபித்தல். புதிய கூற்றனையாள் புகைந் தேவிய. (பா:410)

புகைந்து - கோபித்து. (பா : 410)

புகை நிறக் கண்ணன் . தூமி ராட்சன். (யுத் : 57)

புகைப்படலம் - புகைத் தொகுதிகள். புகைப்படலம் விம்ம. (யுத் : 600)

புகைப் பிழம்பு - புகைத் தொகுதி. அளக்கர்க் கோடு நீர்த்தெழக் கொழும் புகைப் பிழம்பு மீக் கொள்ள. (யுத் : 556)

புகையாடுதல் - சுட்டெரித்தல். தீப்பற்றிப் புகைபரத்தல். பற்றி யெறிதல். புகையாடு காடு புகுந்து. (யுத் : 2639) வானவர் பல்வகையூர் புகையாடிய நாள். (யுத் : 1738)

புகையின் பொருகண்ணவன் - தூமிராட்சன். (யுத் : 2320)

புகையும் நெஞ்சு - கோபத்தீ மூண்ட மனம். பொன்னின்ற வடிம்பின் வாளிப் புட்டிலன் புகையு நெஞ்சன். (ஆ : 427)

புகையும் வெஞ்சுரம் - புகைந் தெரிகின்ற வெப்பம் மிகுந்த காடு. நீ புகையும் வெஞ்சுரம் புகுத. (அ : 1167)

புகையுயிர்த்தல் - புகையுண்டாகுமாறு பெருமூச்சு விடுதல், புகையு யிர்ப்பான் கோக்கின்றன தொடுக்கின்றன கொலையம்புகள். (யுத் : 1119)

புகையெழவிழித்தல் - கண்களினின்றும் புகை கிளம்ப உக்கிரமாகப் பார்த்தல். அரக்கபல்போர் புரிதியோ என்னேடென்னுப் புகையெழ விழித்துப் பொங்கி. (யுத் : 1095)

புகைவித்தல் - அழித்தல். வானம் புக்கு அவர் இருக்கை புகை வித்து. (ஆ : 758)

புகை வெய்துயிர்த்தல் - புகை போல் வெப்பமாகப் பெருமூச்சு விடல். புகை வெய்துயிர்க்கும் விழுங்கும் புழுங்குமால். (அ : 306)

புங்கம் - 1. அம்புமுனை. அம்பின் கூர்நுனி. மார்பிற் புங்கமும் தோன்ற வண்ணம்... வாளி ஒன்றுபுக் கொளிக்க எய்தான். (யுத் : 1093)
2. கூர்மை. புங்கவாளி. (யுத் : 3350) (யுத் : 1872)
3. அம்பு. புலவர் சொற்றுறை புரிந்த போன்றன புங்கம். (யுத் : 1444)
4. சிறப்பு. (உ.வி) புங்கவாளி. (யுத் : 1872)
5. அம்பின் அடிப்பகுதியாகியகுதை. புங்கமே கலையெனப் புக்கபோலுமால். (யுத் : 3814)

புங்கவர் - சிறந்தோர். (ஆ : 131c)

புங்கவன் - 1. சிறந்தவன். காளை போன்றவன் என்று பொருள் படும் வடசொற்றிரிடரின் விகாரம். (வை.மு) புரவலர். புங்கவன். (கி : 599) புக்கனன் புங்கவன் போர் வேட்டு. (யுத் : 1177) (யுத் : 357) [பா : பே]
2. பரமசிவன். காலன்தன் காலமும் காலால் அறுக்கும் புங்கவன். (கி : 153)

புஞ்சம் - கூட்டம். திரட்சி. அரண்டு அருகும் செறி அஞ்சன புஞ்சம். (ஆ : 1073)

புட் சிலம்பிடு பொய்கை - பறவைகள் ஒலிக்கின்ற பொய்கை. (அண்) புள்-அன்னம். (கலா) புட் சிலம்பிடு பொய்கையும் போன்றதே. (பர் : 861)

புட்டகு சோலை - புள் தங்குகின்ற சோலை. புட்களால் மேம்பட்ட சோலை. புட்டகு சோலையின் புறத்துப் போர்த்தென விட்டது. (அ : 539)

புட்டரு பாகன் - திருமால். (பா : 697) [பா : பே]

புட்டிரள் சோலை - பறவைக் கூட்டம் நிறைந்த சோலை. வட்ட முலைத்திரு வைகும் புட்டிரள் சோலை. (சு : 1243)

புட்டிருப்பாகன் - கருடாருடரான திருமால். புண்டரீகனும் புட்டிருப் பாகனும். (பா : 697)

புட்டில் - 1. அம்பருத் தூணி. வாளிக்குழு வழுவலில் புட்டிலொடு கோடி. (ஆ . 177)

2. விரற் சரடு. கோலஞ் சார் நெடுங் கோதையும் புட்டிலுங் கட்டி. (யுத் : 3614)

புட்பகம் - புஷ்பக விமானம். புட்பகத்தினை வதிகென நினைந்தனன் புவியில். (யுத் : 4104) (யுத் : 2934)

புட்பகமானம் - புட்பக விமானம். யான் இப்புட்பகமாம் அதிற் புக நின்றேன். (யுத் : 2932)

புட்பகவிமானம் - இராவணனது வான வூர்தி. புனைமணிப் பொலி புட்பக விமானம். (சு : 1225) (சு : 25) (யுத் : 4064)

புடவி - பூமி. பூழி உடறுடைத்தன உதிரமுந் துடைத்த தொண் புடவி. (யுத் : 1157) (கி : 970)

புடை - 1. பக்கம். பசும் புடைச் சோலை. (சு : 90) புடை நின்ருர். (யுத் : 1872) (கி : 164) புடைகாப்போர். (யுத் : 811) (சு : 1166)

2. பருத்த தன்மை. திரையாற் புடை கொண்டெறி குருதிக் கடல். (யுத் : 1828)

3. அரைப் புறம். மேற் புடையுறு வயிரவாள் பொலிய வீக்கினன். (யுத் : 1071)

4. வருத்தல். ஏல்புடைப் பாசம்... சுற்றி. (யுத் : 2143)

5. அடித்தல். அடி. தன் ஏடவிழ் அங்கைப் புடையே கொடு கொன்று அடன் மாருதி போனன். (யுத் : 1927) (யுத் : 1127)

6. சார்பு. (வை.மு) ஓதி மந்தனிப் பெடையொடும் புடையிருந் துறைவ. (கி : 164)

புடைக்க - மோத. புடைக்க வன்திரையெடுத்து. (யுத் : 467) [பா : பே]

புடைக்கை - மோதுதல். புடைக்கை வன்திரை. (யுத் : 467)

புடை காப்போர் - பக்கங்களில் நின்று காவல்புரிவோர். (சு : 1166)

புடை கொள்ளுதல் - பருத்தல். புடை கொண்டெறி குருதிக் கடல். (யுத் : 1838)

புடை சுருட்டி - உட்புறத்திலே சுருட்டி. புடை சுருட்டிப் பாயலுதறிப் படுப்பதே போன்ற திரையின் பரப்பம்மா. (யுத் : 4)

புடை சுற்ற - புடை பெயர்ந்து திரிந்து கொண்டிருப்ப. பெருஞ் சேனை புறத்தும் அகத்தும் புடைசுற்ற. (யுத் : 3) அரம்பையர் குழாம் புடைசுற்ற. (சு : 408)

புடைசுற்றுந்துணை - பக்கத்திலே எடுத்துச் சொல்லும் உவமானப் பொருள். புடை சுற்றுந் துணையின்றிப் புகழ் பொதிந்த மெய்யே போற் பூத்து நின்ற... வேங்கடம். (கி : 769)

புடை செலல் - பக்கத்தில் வருதல். ஒன்று தன் பெருந்துணைவரும் புடை செல. (யுத் : 537)

புடைத்த - உவமவுருபு. அலை புடைத்த வாளரக்கர். (யுத் : 1429)

புடைத்தல் - 1. தட்டல். நாணிறத் தன்னெடுந் தோள் புடைத் தார்த்தான். (சு : 1016)
2. குத்துதல். கடிப்பார் புடைப்பார். (கி : 279)
3. அடித்தல். போர்த்த சங்கப்படகம் புடைத்திட. (யுத்:1016) சாரதி தரைப்படப் புடைத்தான். (சு : 1022)
4. மோதுதல். புடைக்கை வன்திரை யெடுத்தார்க்கும் போர்க் கடல். (யுத் : 467)

புடைப்பு - குத்து. தாக்குதல். அடித்தல். இனிநின் தோளாண்மையும் இசையோடுடன் துடைப்பேன் ஒரு புடைப்பால். (யுத் : 1126) (யுத் : 2365) வன்கிரிகள் விண்ணில் புடைப்புறக் கிளர்ந்து பொங்கி. (ஆ : 900) புடைப் பாற்றுதி கொல்லாம். (யுத் : 1127)

புடைபடுத்தல் - சூழப்பெறுதல். ஐயைந்தடுத்த யோசனையின் அடவி புடைபடுத்த வையந்திரிந்தார். (ஆ : 1140)

புடை புடை - நான்கு பக்கங்கள். புயல்தொடு கடலின் விழுந்தார் புடை புடை சிதை வொடு சென்றார். (சு : 779)

புடை பெயர்த்தல் நிலைபெறச் செய்தல். (வை.மு) கீழ் மேலாம் படி புரிதல். (கலா) பேருலகில் யாவு மொரு நாள் புடை பெயர்த்தே. (யுத் : 76)

புடை பெயர்தல் - 1. ஒதுங்குதல். கழிதல். ஊழி பெயர்ந்தெனக் கங்குல் ஒரு வண்ணம் புடைபெயர, (பா : 718)
2. தோற்றேடுதல். மணி இழையின் வெயில் புடை பெயர்வன. (பா : 73)
3. இடத்தை விட்டுப் பெயர்தல். கரைபுரண்டு வருதல். கடையுக முடிவினில் எவையுங் கால் படப் புடை பெயர் கடலென எழுந்து போயதே. (பா : 825)

புடையிருத்தல் - ஓரிடத்திலே தங்குதல். (அண்) சார்பிலிருந்து உறைதல். (வை மு) ஆதியண்ட முன் அளித்தவனுலகின் அங்கு அவனூர் ஓதிமம் தனிப் பெடையொடும் புடை யிருந்துறைவ. (கி : 164)

புடை யுண்ணல் - அடியுண்ணல். தோளிற் புடையுண்டயர் சூரியன் மைந்தன். (யுத் : 1919)

புடை விசித்தல் - பக்கத்திலே கட்டுதல். வென்றி வாள் புடை விசித்து. (பா : 336)

புடைவிம்முதல் - பக்கங்களில் விளங்கப் பெறுதல். பூங்குலை குலாவு குளிர் சோலை புடை விம்மி. (ஆ : 174)

புண் - 1. வருத்தம் புண் தாங்கு நெஞ்சத்தனளாய். (அ : 436) 2. சரீர ஊறு. எறிவேல் பாய்ந்தபுண். (பா : 328) பூவும் புண்களும் தெரிந்தில மாருதி புயத்தில். (சு : 802)

புண்டரம் - கழுகு. வரும் புண்டரம். (ஆ : 916) மாப் புண்டரம். (யுத் : 2348)

புண்டரிகக்கண் - தாமரை மலர் போன்ற கண். புண்டரிகக்கணுழிப் புரவலன். (கி : 75)

புண்டரிகத்தவள் - திரு. செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற திருமகள். புண்டரிகத்தவள் வதனம் போன்றது. (கி : 849)

புண்டரிகம் - தாமரை. (கி : 75)

புண்டரிக மொட்டின் பொகுட்டு - உந்தித் தாமரை அரும்பின் உள்ளிருந்த சிறிய கொட்டை. அண்டப் பெருங் கோயிற்கெல் லாம்... மலராத புண்டரிக மொட்டின் பொகுட்டே புரையம்மா. (ஆ : 1184)

புண்டரிக மொட்டு - தாமரை மொட்டு. பண்டரிதன் உந்தியயன் வந்த பழ முந்தைப் தண்டரிக மொட்டனைய மொட்டினது. (யுத் : 3652)

புண்டரிகத்தவள் - திருமகள். புண்டரிகத்தவள் வதனம் போன்றது. (கி : 849)

புண்டரிகப் புதுமலர் - அன்றலர்ந்த செந்தாமரையாகிய புதியமலர். (ஆ : 1135)

புண்டரிகை - இலக்குமிதேவி. புண்டரிகை போலுமிவள் இன்னல் புரிகின்ருள். (சு : 607)

புண்டரீகக் கட்புரவலன் - தாமரை மலர்போன்ற கண்ணையுடைய இராமபிரான். புண்டரீகக் கட்புரவலன் பொருக்கென எழுந்து. (அ : 51)

புண்டரீகக் கண் அம்மான் - புண்டரீகாட்சன்; செந்தாமரை போலும் திருக்கண்களை யுடைய திருமால். பொன்கனுன் ஆவியுண்ட புண்டரீகக் கண் அம்மான். (யுத் : 251) புண்டரீகக் கண் வென்றிப் புரவலன். (யுத் : 4081)

புண்டரீகக் கண் வென்றிப் புரவலன் - தாமரை மலர் போன்ற கண்களையும் வெற்றியையும் உடைய காப்புக்கடவுளான இராம பிரான். (யுத் : 4081)

புண்டரீகக்கை - தாமரை மலர் போன்ற கை. புண்டரீகக்கை கூப்பிப் புனன் முகந்திறைக் கின்ருரும். (பா : 1018)

புண்டரீகத்தடங்காடு - தாமரைகளாகிய பெரியகாடு. புண்டரீகத் தடங்காடு பூத்தொரு கொண்டல் வந்திழிந்தென. (ஆ : 961)

புண்டரீகத்தடம் - தாமரைத் தடாகம். புண்டரீகத்தடம் புரையும் புங்கவன். (யுத் : 357) [பா : பே] புண்டரீகத் தடம் போவ போன்றவே. (பா : 840)

புண்டரீகத் தனிமுதல் - தாமரை மலரில் தோன்றிய ஒப்பற்ற படைப்புக்கடவுளான நான்முகன். புண்டரீகத் தனி முதற்கும் போக்கரு விண்டுவின் உலகு (அ : 1142)

புண்டரீகத்துப் புராதனன் - திருமாலின் நாபிக் கமலத்தில் தோன்றிய பழையவனுன பிரமன். புண்டரீகத்துப் புராதனன் தன்னெடும் பொருந்தி அண்ட மூலத்தொ ராசனத் திருத்தினே யழக (யுத் : 4040)

புண்டரீகத்து வைகும் புராதனன் - தாமரை மலரில் தங்கியுள்ள பழையோனுகிய பிரமன். (யுத் : 4297)

புண்டரீகம் - 1 வெண்டாமரை. இனம்பற்றி செந்தாமரையையும் உணர்த்தும். வதனம் வாய் கண் கை காலெனப் புண்டரீகத் தடம் பூத்து. (யுத் : 1497) (யுத் : 2719)

2. புலி. பொறிப் புண்டரீகம் போலும் ஒருவன். (யுத் : 955)
3. தாமரை போலும் முகம். புரைதபுகமல நாட்டம் நீ அப்புண்டரீகத்தை யுற்ற பொழுது பொருந்தித் தேர்வாய் (கி : 801) [பா : பே]

புண்டரீகன் - 1. பிரமன். (பா : 697)
2. இராமன். (யுத் : 2647)

புண்டரீகை - தாமரை மலரை இடமாகவுடைய இலக்குமிப் பிராட்டி. புண்டரீகை மென்பதத் திசை புணர்த்தினள். (பா : 482)

புண்டாங்கு நெஞ்சம் - புண்ணைத் தாங்கிய நெஞ்சம். புண்தாங்கு நெஞ்சத் தனளாய்ப் படிமேற் புரண்டாள் (அ : 436)

புண்ணிடை அயில் - புண்ணில் பாய்ந்த வேல். வெய்ய சொல் புண்ணிடை அயில் எனச் செவி புகாமுனம். (அ : 1123)

புண்ணிடை எரிபுகல் - புண்ணிலே நெருப்பு புகுதல். புண்ணிடை எரிபுக்கென்ன மானத்தாற் புழுங்கிநையும். (யுத் . 1941)

புண்ணிடைப் பொழி புதுப்புனல் - விரணங்களினின்றும் வழிகின்ற புதிய உதிர நீர். புண்ணிடைப் பொழிபுதுப் புனல் பரந்து விழவும். (ஆ : 44)

புண்ணிய - புண்ணியவானே. யாவர்க்கும் களைகணுகும் புண்ணிய. (பா : 1388)

புண்ணியத்துறைகள் - புண்ணிய தீர்த்தங்கள். புண்ணியத்துறை களாடி. (அ : 292)

புண்ணியந் தொடர் வேள்விகள் - புண்ணியம் தொடர்தற்குக் காரணமான வேள்விகள். புண்ணியந் தொடர் வேள்விகள் யாவையும் புரிந்த அண்ணலே. (அ : 36)

புண்ணிய நதி - புண்ணிய தீர்த்தங்கள். புண்ணிய நதிகள். புண்ணிய நதியாடிப் புனிதரை வழிபாடுற்று எண்ணிய சில நாளிற் குறுகுதும். (அ : 675) (அ : 292) [பா : பே]

புண்ணியப் புனல் ஆட்டல் - மந்திரிக்கப்பட்ட புண்ணிய நீரால் மஞ்சனமாட்டுதல். நாகணை வள்ளலை நான் மறைப் புண்ணியப் புனலாட்டி. (அ : 120)

புண்ணியப் புனல்கள் ஆடல் - புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல். பூழிவெங்கானம் நண்ணிப் புண்ணியப் புனல்களாடி. (அ : 292) [பா : பே]

புண்ணியம் - 1. தவம். புண்ணியம் புரிந்தோர் வைகுந் துறக்கம். (ஆ : 1197)
2. நற்கருமம். புலத்தியன் மரபின் வந்து புண்ணிய மரபு பூண்டாய். (யுத் : 3203)

புண்ணியம் புரிந்தோர் - புண்ணியஞ் செய்தவர்கள். புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்கம். (பா : 97) (ஆ : 1197)

புண்ணியம் பூத்தல் - புண்ணிய பலன் மலர்ந்து பயனளித்தல். நீ ஈண்டு எய்துதி என்னுந் தன்மை பொருந்திட இன்றுதானென் புண்ணியம் பூத்தது. (ஆ : 1201)

புண்ணிய மரபு - பரிசுத்த குலம். புலத்தியன் மரபின் வந்து புண்ணிய மரபு பூண்டாய். (யுத் : 3203)

புண்ணிய மூர்த்தி - புண்ணியமே உருவெடுத்தாற் போன்றவன். (இராமபிரான்) நவையறு குணங்க ளென்றும் பூணெலாம் பொறுத்த மேனிப் புண்ணிய மூர்த்தி. (யுத் : 1603)

புண்ணிய மென்றொரு பொருள் - நல்வினை என்பதொரு பொருள். இனி முடியாதிருப்பேனே புண்ணிய மென்றொரு பொருள் என் னுழை நின்றும் போயதால். (சு : 323)

புண்ணியர் - புண்ணியஞ் செய்தவர்கள். மலரயனுதிப் புண்ணியர் ஏத்து வான் புகழினர். (அ : 943)

புண்ணியன் - புண்ணிய மூர்த்தியாகிய இராமபிரான். நாள் தொறும் புண்ணியன் தொழு கழல் பரதன். (அ : 689) அனலன் போயப் புண்ணியன் பொலன் கொள் பாதம் மேயினன் வணங்கி. (யுத் : 2166)

புண்ணியா - நல் வினையுடையவனே. ஓர் ஏழைக்காப் பொருப்பு வில்லைப் பொடி செய்த புண்ணியா. (பா : 1169)

புண்ணில் எரி நுழைதல் - புண்ணில் கனல் நுழைதல். புண்திறந்த தில் எரி நுழைந்தாலெனப் புகைவாள். (சு : 341)

புண்ணில் வேல் நுழைதல் - புண்ணில் வேற்படை நுழைதல். வெந்த கொடும் புணில் வேல் நுழைந்த தொப்ப. (அ : 205) அனங்கன் அழல்படத் துறந்த வெந்துறு புண்ணில் வேல் நுழைந் தென்ன வெண்மதிப் பசுங் கதிர் விரவ. (சு : 420)

புண்ணிற் கோலிடுதல் - புண்ணில் அம்பு நுழைத்தல். புண்ணிற் கோலிட்டாலன சொல்லி. (சு : 484)

புண்ணிற் புதுநீர் பொழிய - புண்ணினின்றும் புதிய குருதி நீர் பொழியா நிற்க. புண்ணிற் புது நீர் பொழியப் பொலி புள்ளின் வேந்தன். (ஆ : 924)

புண்ணின் பாடு - புண்ணிஞற் பட்டது. புண்ணிஞ லுண்டாகிய தழும்பு. எல்லை யானைக் கோடுளதனையும் புக்குக் கொடும் புறத் தழுந்த புண்ணின் பாடுளது. (யுத் : 3879)

புண்ணினீர் - இரத்தம். மன்னரை முவெழுது பொழுது நூறிப் புலவுறு புண்ணினீர் முழுகிஞன். (சு : 356) புண்ணினீர்ப் புணரி. (சு : 662)

புண்ணினைக் கோலுறுத்தல் - புண்ணைக் கோல்கொண்டு குத்துதல். புண்ணினைக் கோலுறுத் தனைய பொம்மலால். (யுத் : 3990)

புண்ணினூடு உறுவேல் - புண்ணின் நடுவில் நுழையும் வேல். புண்ணினூடுறு வேலென மனம் மிகப் புழுங்கி. (ஆ : 977)

புண்ணீர் - இரத்தம். புளிக்குங் கண்டகர் புண்ணீருள் குளிக்கும் பேய். (சு : 659)

புண்ணுடை நெஞ்சு - புண்பட்ட மனம். அம்பிட்டுத் துன்னங் கொண்ட புண்ணுடை நெஞ்சோடைய கும்பிட்டு வாழ்கிலேனி யான். (யுத் : 1378)

புண்ணுழை அயில் - புண்ணிலே நுழையும் வேல். வெய்ய சொல் புண்ணுழை அயிலெனச் செவி புகாமுனம். (அ : 1123) [பா:பே]

புண்ணுற்ற தீ - புண்ணில் பட்ட நெருப்பு. புண்ணுற்ற தீயிற் புகையுற்றுயிர் பதைப்ப. (அ : 390)

புண்ணுறு புலவு வேல் - புண்தன்மை பொருந்திய மாமிசம் படிந்த வேல். புண்ணுறு புலவு வேலோய். (யுத் : 1363)

புண்தழும்பு - புண்களும் தழும்புகளும். பகழிக் கூர்வாய் தடிந்த புண் தழும்புமின்றி. (யுத் : 3143)

புண்திறத்தல் - 1. புண்களின் வாய்பிளத்தல். புண்டிறந்து குருதி பொழிந்துக. (யுத் : 1021)

2. புண் கீறுதல். புண் திறந்து அதில் எரி நுழைந்தாலெனப் புகைவாள். (சு : 341)

புண்தொடர்வு - புண்படுதல். புண்டொர்வகற்றிய புயத்தினெடு புக்கேன். (சு : 613)

புண்மேல் வைத்த தீ நிகர் துன்பம் - புண்ணிடத்தே தீ நுழைந்தாற் போன்ற பெருந்துன்பம். (யுத் : 2604)

புணர் - 1. இரண்டு. (கலா)

2. நெருங்கிய. புணர்முலை. (அ : 394)

புணர்ச்சி - 1. கலவி. புணர்ச்சி தருகேதம். (சு : 259)

2. நட்பு. அன்பு பொழிகின்ற புணர்ச்சியானும். (கி : 437)

புணர்ச்சிதரு கேதம் - புணர்ச்சியால் ஏற்பட்ட களைப்பு. நடந்தது புணர்ச்சிதரு கேதம். (சு : 253)

புணர்த்த - கோத்த. குழலியர் புணர்த்த சூழ்ச்சி. (பா : 227)

புணர்த்த பொருள் - செய்த சூழ்ச்சி. கைகொடகலப் போவார் புணர்த்த பொருளாகுமென்று தெருளா. (ஆ : 967)

புணர்த்தல் - 1. ஆலோசித்துச் செய்தல். குழலியர் புணர்த்த சூழ்ச்சி. (பா : 227)

2. கற்பித்துக் கூறல். பொய்ந் நிலையோர்கள் புணர்த்த வஞ்ச முண்டோ. (அ : 203)

3. செய்தல். புரிதல். முத்திறத் துலகையும் முடிக்க எண்ணு வார் இத்திறம் புணர்த்தனர். (ஆ : 592) மாயை புணர்த்து வென். (யுத் : 1584)

4. ஒன்று சேர்த்தல். துணர்த்த தாரவன் சொல்லிய சொற்களைப் புணர்த்து நோக்கி. (சு : 1132) புணர்த்தேன். (கி : 875)

5. முயற்சியோடு பொருந்துதல். நின்று புணர்த்தியேல் யாதுனக்கியலாதது. (கி : 512)

புணர்த்துதல் - 1. பொருந்தும்படி செய்தல். உபயோகப்படுத்திப் பார்த்தல். நல் வாய்மை பொது நெறி நிலையதாகப் புணர்த்துதல் புலமைத் தென்னு. (யுத் : 762)

2. ஆக்குவித்தல். ஆக்கிவிடுதல். விபரீதம் புணர்த்துவிட்டீர். (யுத் : 1593)

புணர்த்து நோக்கி - ஒன்று சேர்த்துப் பார்த்து. (சு : 1132)

புணர்தல் - 1. வந்து சேர்தல். பழி அவற் புணரும். (கி : 171)
2. மணஞ் செய்தல். அப்பொய்யின் மங்கையர்க் கேய்ந்த புணர்ச்சி போற் செய்திலன் எமைத் தேமலர் மேலவன். (கி : 341)
3. கூடுதல். தானே புணர்வதோர் வினையம் போற்றி. (யுத் : 1584)

புணர்ந்திடுதல் - அடைதல். பொய்யாதன வந்து புணர்ந்திடுமால். (யுத் : 237)

புணர்ப்பது - சூழ்ச்சியுடன் செய்ய வேண்டுவது. போய் ஐயா புணர்ப்பதென்னே என்பது பொருந்திற்றன்றே. (ஆ : 765)

புணர்ப்பு - 1. சூழ்ச்சித்திறன். ஆலோசனை. மாண்டனன் எந்தை நின் கொடும் புணர்ப்பினுல். (அ : 863) புணர்ப்பில் நெஞ்சினுன். (யுத் : 27)
2. கூட்டுறவு. ஒரு பாறையின் புணர்ப்பு நீங்கி. (சு : 1285)
3. மனப் பிணிப்பு. மனப்பற்று. அன்புப் பிணிப்பு. நின்னை நீங்காப் புணர்ப்பினுல் தொடர்ந்து போந்து. (யுத் : 4234)
4. ஒன்றியிருந்த நிலை. (உ.வி) (சு : 1285)

புணர்வது - அடையப் போவது. பெருகுறும் பேன்று வென்று புணர்வது பூவுண் வாழ்க்கை ஒரு குரங்கு. (சு : 755)

புணர - சேர. பட. மென்முலை மேற்பனி மாருதம் புணர ஆருயிர் வெந்து புழுங்குவாள். (ஆ : 301)

புணரி - 1. கடல். புணரி சூழ் மகிதலம். (கி : 86) (யுத் : 566)
2. கடல் போன்ற பெருந்திரள். இராக்கதப்புணரி. (யுத்:3288)

புணரிக்கணக்கர் - பதினுயிரங்கோடி என்னும் அளவை யுடையவர். புக்க படைஞர் புணிரிக் கணக்கர். (சு : 1166)

புணரிக் கணக்கு - சமுத்திரம் என்னும் அளவு. பதினுயிரங் கோடி. (சு : 1166)

புணரி மேலான் - திருமால். பாற்கடலில் வைகும் திருமால். பூவுளான் புணரி மேலான் பொருப்பினுன் முதல்வராய யாவரும். (யுத் : 1276)

ணில் - புண்ணில். வெந்த கொடும் புணில். (அ : 205)

புனீர் - புண்ணீர். இரத்தம். தறுகணூடு வெம்புனீர் சொரிய நின்றான். (யுத் : 1372) (யுத் : 984)

புணை - தெப்பம். ஆழியை நீந்தப் புணைகள் தேடின சில. (யுத் : 3285) புணையுறு திரடோள். (யுத் : 1624)

புணையுறு தோள் - தெப்பம் போலப் பொருந்திய தோள். (யுத்:1624)

புத்தான கொடுவினை - புத் தென்று சொல்லப்பட்ட கொடிய நரகம். (பா : 215)

புத்திரர் - புத்திரர். புத்திரர் குருக்கள். (யுத் : 318)

புத்திரன் - மகன். என் புத்திரனேடும் போனர். (யுத் : 3181)

புத்தீர்த்திட்டு - நரகத்தை நீக்கி. (கி : 764)

புத்து - ஒரு நரகம். (புத் என்னும் நரகம்) புத்தான கொடுவினை. (பா : 215) புத்திர்த்திட்டலையாமல். (கி : 764)

புத்துறவு - புதிய உறவு. புத்துறவுறப்பழி புகுந்தது எனநாணி. (ஆ : 620)

புத்தேள் - தெய்வம். தேவர். கடுங்கணை புத்தேள் இறுத்து. (யுத் : 1457)

புத்தேள் வலங்கிளர் வாள் - இறைவனது வெற்றித்திறன் விளங்கும் வாட்படை. சந்திரகாசம். புத்தேள் வலங்கிளர் வாளும் வேண்டில் வழங்குவன். (யுத் : 1632)

புத்தேளிர் - தெய்வம். மனுவின் நெறிபுக்கவேல் அவ்விலங்கும் புத்தேளிரே. (கி : 349)

புத்தேளிறுத்து - தெய்வத்தைத் தங்கச் செய்து. (யுத் : 1457)

புதல் - புல், புல்பை. வாய்ப்புதல் பூட்டில புரவிகள். (அ : 505)

புதல்வரை யளிக்கும் வேள்வி - புதல்வர்த் தரும் மகம். புத்திர காமேஷ்டியாகம். பூதல முழுதுங் காக்கும் புதல்வரை யளிக்கும் வேள்வி இதற முயலின். (பா : 209)

புதல்வி - மகள். பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி. (ஆ : 263)

புதவம் - கதவு. கோபுர வாயில். மகர தோரணம் புதியன வலந்தன புதவ ராசியே. (அ : 128)

புதவராசி - கதவுகளின் கூட்டம். (அ : 128)

புதவு - கதவு. தம் துவாரம் புதவொடு தாளற. (சு : 724)

புதா - பெருநாரை. (சு : 246)

புதிதுண்டது - முன்னம் அடையாத ஒரு புதிய விருந்துண்டமை. கை யார முகந்து கொடந்தகனுர் ஐயா புதிதுண்டதறிந்திலையோ. (ஆ : 908)

புதிய கூற்று - புதிய யமன். புதிய கூற்றனையாள். (பா : 410)

புதிய கூற்றனையாள் - புதிய யமனைப் போன்ற வளாகிய தாடகை. (பா : 410)

புதியதோர் முறுவல் - ஓர் இளநகை. புன்சிரிப்பு. மாதவள் தானும் ஆண்டு வந்து நீருண்டு மீளும் போதக நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள். (ஆ : 226)

புதியன - புதிய காட்சிகள். புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார். (பா : 983)

புதுக்களி யாட்டம் - புதிய களிப்பு மிக்க ஆடல். பூங்குழல் மகளி ராடும் புதுக் களியாட்ட நோக்கி வீங்கிருங் காதல் காட்டி. (அ : 285)

புதுக் குடி யேற்றல் - புதிதாகக் குடியேறச் செய்தல். பொன்னெடு நாட்டை யெல்லாம் புதுக் குடி யேற்றிற் றன்றே. (யுத் : 3121)

புதுக்குதல் - 1. புதிதாக வெளிப்படுத்தல். என்று மில்லாத ஒன்றை உண்டாக்குதல். மீண்டும் நிலைபெறச் செய்தல். (அண்) புன்னிலைக் குரக்கியல் புதுக்கினேன். (கி : 694) புதுக்கினன் புகழை. (யுத் : 1423)

2. இழந்ததை மீண்டும் தேடிவைத்தல். (கலா) தன் செயலால் புதுப்பித்து நிறுவுதல். (அண்) முந்தையோர் பழங்கதை புதுக்கிய தலைவன். (அ : 842)

புதுக்குவான் - புதுப்பிப்பவன். பண்டு பூத்த அண்டம் பழைதென்று புதுக்குவானும் போன்றுளதால். (பா : 637)

புதுக் கொண்ட வேழம் - புதுமையாகப் பிடித்து வந்த யானைகள். புதுக் கொண்ட வேழம் பிணிப்போர் புனைபாடல் ஓதை. (பா : 973)

புதுப்பிழை - செய்த புதுப் பிழைகள். புலிபடு மதுகை மைந்தர் புதுப்பிழை உயிரைக் புக்கு நலிவிட. (சு : 205)

புதுப்புனல் - புதுவெள்ளம். புதுப்புனலாடும் பொம்மல். (யுத்:3600)

புதுப்புனல் குடைதல் - புதுநீராடுதல். புதுப்புனல் குடையும் மாதர் பூவொடு நாவிபூத்த கதுப்புறு வெறியே நாறுங் கருங்கடல் தரங்கம் என்ருல். (பா : 42)

புதுப்புனலாட்டுதல் - புதிய புனலால் திருமஞ்சனம் செய்தல். பொழிந்த உண்கணீர் புதுப் புனலாட்டினர் புலம்ப. (அ : 512)

புதுப்புனலாடும் பொம்மல் - புதுப்புனலாடும் கூட்டம். புண்ணினீ ராறும் பல் பேய் புதுப் புனலாடும் பொம்மல். (யுத் : 3600)

புதுமணத் தடங்கள் - புதிய மணத்தைக் கொண்ட தடாகங்கள். புதுமணத் தடங்கள் தோறும். (பா : 31) [பா : பே]

புதுமணம் - புதிதாகச் செய்யும் கலியாணம். பூவையர் பலாண்டு கூறப் புது மணம் புணர்கின்ருரை. (சு : 215)

புதுமணற்றடங்கள்-புதுமணல் பரப்பப்பட்ட தடாகங்கள். புதுமணல் தடங்கள் தோறும். (பா : 31)

புதுமலர் - அப்பொழுதலர்ந்த மலர். புண்டரீகப் புதுமலரில். (ஆ : 1135)

புதுமலர்ச் சோலை - அன்றலர்ந்த மலர்கள் நிறைந்த சோலை. போக பூமியையும் ஏசும் புதுமலர்ச் சோலை புக்கார். (கி : 108)

புது மழை - புதிய மழை. புது மழையின் துள்ளி தாங்கி. (யுத்:3564)

புதுமனை புகுதல் - புதிதாகக் கணவர் மனைக்குச் செல்லுதல். கிருகப் பிரவேசம். பொன்னகர் வீதி தோறும் புதுமனை புகுகின்ருரை. (சு : 214)

புதுமை - செய் கோலம். புதிய அலங்காரம். பொங்கிளங் கொங்கைகள் புதுமை வேறுஇல. (அ : 970)

புதுமை பார்ப்பார் - புதுமைகளைக் காண நேர்பவர்கள். புதியன கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்பார். (பா : 983)

புதுவதுதந்தது - புதிதாகத்தானே கொணர்ந்தது. தன்னதுள்ளுறு முணர்ச்சியாற் புதுவது தந்தது என்னசொல் அவனியம்பியது. (யுத் : 166)

புதுவலி - புதியதாக உண்டான வலிமை. சேது பந்தனஞ் செய் தனனென்றதிப் போது வந்த புதுவலியோ. (யுத் : 752)

புதைத்ரல் - மூடிக்கொள்ளுதல். கூற்றுந்தன்விழி புதைத்ததே. (அ : 861)

புதைதர - மறைய. எங்கும் விண் புதைதர. (பா : 1120)

புதையிருட் பொழுது - எல்லாப் பொருளையும் மறைக்கின்ற இருட் பொழுது. புதையிருட் பொழுதினும் மலரும் பொங்கொளி. (யுத் : 1075)

புதைவு செய்தல் - அழுந்தி மறைதல். புதைவு செய் இருள். (யுத் : 783)

புந்தி - புத்தி. மன்னுயிர் போனகம் தனக்கு என்றெணும் புந்தியன். (பா : 402)

2. மனம். திருமகன் புந்திநாதன் தூண்டு தேரினும் முந்துற. (அ : 821) புந்திபோய்க் காந்துகின்றது. (ஆ : 213)

3. அறிவு. புந்தி வேறுற்ற போழ்தில் தீவினை இயற்றுமேனும். (கி : 363) புலவர் புந்தியான். (யுத் : 3988)

4. தந்திரம். என்று புந்தியாற் புகல்கின்றேற்கும் ஆம்வகை ஆயிற்றில்லை. (ஆ : 768)

புந்தியோர் - புத்திமான்கள். புந்தியோர் எண்ணின் நுண்ணிய. (யுத் : 3858)

புந்தியில் வைத்தல் - மனத்திற் கொள்ளுதல். போகை நன்று இவன் என்பது புந்தியில் வைத்தாள். (சு : 681)

புந்தியின் அனுக்கம் - மனத்துன்பம். புந்தியின் அனுக்கந் தீர்ப்பான் தன்னுடைக் கோயில் புக்கான். (யுத் : 2159)

புமான் - புருஷன். (புமாந்) அப்புமானுற்றது யாவருற்றாரரோ. (யுத் : 3175)

புயங்கம் - பாம்பு. மருட்டி யெழு மொருதலைய புயங்கம். (ஆ:204)

புயத்தின் குன்று - புய மலை. கொலை யொடுங்கா நெடும் புயத்தின் குன்றொடும். (யுத் : 2291)

புயத்துறை - தோள் வலி கொண்டு செய்யும் போர்த்துறை. புயத் துறை வலியரேனும். (யுத் : 927)

புயம் - தோள். புயங்களுக்குவமை ஏற்குமோ. (சு : 538)

புயல் - மழை. மேகம். புயலொடு பொதிந்த வாடை. (சு : 91)

புயல் தரு மதத்திண் கோட்டுப்புகர் மலேக்கு இறை - மேகம் போலப் பொழியும் மதத்தினையும் திண்மையான கொம்புகளையும் உடைய தாய்ப் புள்ளிகளையுடைய மலே போன்ற ஐராவதம் என்னும் யானைக்குத் தலைவனாகிய இந்திரன். (கி : 70)

புயல் தருமதம் - மேகம் போலப் பொழியும் மதம். புயல்தரு மதத் திண் கோட்டுப் புகர் மலேக் கிறையை ஊர்ந்து. (கி : 70)

புயல் பொரு தடக்கை - மேகம் போன்று கைம்மாறு கருதாது கொடுக்கவல்ல நீண்டகை. புயல் பொரு தடக்கை நீ புரக்கும் பல்லுயிர் வெயிலிலதே குடை. (கி : 692)

புயல் பொழி அருவிக் கண்ணன் - மேகம்போற் பொழிகின்ற அழுகை நீர் அருவியையுடைய கண்களையுடையவன் இராமன். (யுத் 3539)

புயல் பொழிதடக்கை - மழை போன்று வழங்கவல்ல பெரிய கை. புயல் பொழி தடக்கையால் தொழுது. (பா : 254)

புயலவன் - இந்திரன். புயலவன் திசைப் போர் மத ஆனையின் இயல் பரம்பரை ஏழிரு கோடியால். (யுத் : 3572)

புயலவன் திசை - இந்திரனுடைய திக்கு. கீழ்த்திசை. (யுத் : 3572)

புயலியற் கூந்தல் - கருமுகில் போலுங் கூந்தல். புயலியற் கூந்தன் மாதர்குழாத் தொடும் தாரை போனாள். (கி : 641)

புய லொடு பொதிந்த வாடை - மழையோடு கூடிய பெருங் காற்று. புயலொடு பொதிந்த வாடை தாக்குறத் தகர்ந்து சாயும் கலம். (சு : 91)

புயவ்லி - தோள்வலி. (யுத் : 3889)

புயலொத்த தடக்கை - வரையாது வழங்கும் பெரிய கை. பொன்னொத்த மேனிப் புய லொத்த தடக்கையானை. (அ : 419)

புயற்கறை - மேகத்தினை யொத்த கரிய நச்சுக்கறை. (அண்) (யுத் : 219)

புயற் கறைப் பசும் புனல் கக்க - மேகம் போலப் பொழிந்த புதிய இரத்த நீரைச் சொரிய. (வை.மு) மேகம் நீர் பொழிவது போன்று புதிய இரத்த நீரை வெளியிட. (கலா) மேகத்தினை ஒத்த கரிய நச்சுக் கறை படிந்த குருதியைச் சொரிய. (அண்) பக்க நின்றவை பயத்தினிற் புயற் கறைப் பசும்புனல் பகுவாயிற் கக்க. (யுத் : 219)

புயலெருடு குடுமி - மேகம் வந்து படிகின்ற உச்சி. புயல் தொடு குடுமி நெடு நிலை மாடம். (பா : 96)

புயன் மகிழ் புரி குழல் - காளமேகத்தை ஒத்த முறுக்கிவிட்ட கூந்தல். புயன் மகிழ் புரி குழல் பொடியளாவுற. (சு : 978)

புரக்கல் - ஆட்சிபுரிய. (கலா) இரண்டினில் ஒன்று பார் புரக்கல் பேர விட்டவன். ஆ: 526) [பா : பே]

புரங்கடந்த அப்புனிதன் - திரிபுரத்தை வென்ற பரிசுத்த மூர்த்தி யாகிய அச்சிவபெருமான். (யுத் : 3295)

புரங்களெய்த புங்கவன் - முப்புரத்தை யழித்த பரமன். புரங்க ளெய்த புங்கவற்குமுண்டு தேர். (யுத் : 3333)

புரசை - புரோசை. கழுத்திடுகயிறு. புரசை யானையின் வீதியிற் போதவும். (சு : 642)

புரசை மாக்கரி - கழுத்திடு கயிறு தாங்கிய யானைப்படை. புரசை மாக்கரி நிருபர். (அ : 47) [பா : பே]

புரசையானை - கழுத்திடு கயிற்றையுடைய யானை. (சு : 642) (அ:917)

புரஞ்சுடு கடவுள் - திரிபுரத்தை எரித்த சிவபெருமான். புரஞ்சுடு கடவுளும் புள்ளின் பாகனும். (யுத் : 3430)

புரஞ்சுடு மொருவன் - திரிபுர தகனஞ் செய்த ஒப்பற்ற சிவ பெருமான். புரஞ்சுடு மொருவன் தோற்றத்த. (யுத் : 5440)

புரட்டல் (புரட்டுதல்) - 1. வீழ்த்தல். பொன்னெடுங் கேடகம் புரட்டி. (யுத் : 1531)

2. புரளும்படி செய்தல். பாழிவன் புயங்க ளோடரக்கன் பஃறலை பூழியிற் புரட்டல் என் பூணிப்பாம் என. (சு : 1105)

3. அலைத்தல். துண்டவன் போழ்களிற் புரட்டினர். (யுத்:1997) புரட்டுவன் தலையை. (யுத் : 3054)

புரத்தல் - 1. காத்தல். தாரணி புரந்த சால கடங்கர். (ஆ : 274) ஒன்று பார் புரக்க விட்டவன். (ஆ : 529)

2. ஈடேற்றுதல். புரக்கும் நன்கடன். (யுத் : 2459)

புரத்துறை வோர் - நகரவாசிகள். நிருபர்க்கும் புரத்துறை வோர்க்கும். (அ : 47)

புரந்தரன் - இந்திரன். நான் முகனும் புரந்தரனும். (பா : 329)

புரந்தரன் பகை - இராவணன். ஆ புரந்தரன் பகை அற்றதாமெனு. (யுத் : 3897)

புரந்தரன் பெரும் பகைஞன் - இந்திரசித்து. புரந்தரன் பெரும் பகைஞனைப் போர் வென்ற உன்தன் பரந்துயர்ந்த தோளாற்றல். (யுத் : 4047)

புரந்தனர் - இந்திரன். கடை முறையே புரந்தரனர் பெருந்தவ மாய்ப் போயிற்றம்மா. (யுத் : 3908)

புரந்த ராதியர் - இந்திரன் முதலிய தேவர்கள். பொத்தினர் செவி களைப் புரந்தராதியர். (யுத் : 1990) (சு : 888)

புரந்து கோடல் - பிறருக்கு உதவி செய்து வேண்டிய பொருள்களைக் கொள்ளுதல். புரந்து கோடலும் புகழொடு கோடலும் துரந்து கோடலும் என்றிவை தொன்மையிற் றொடர்ந்த. (யுத் : 545)

புரம் - 1. நகரம். புரங்கள் நேரிலா நகரம். (பா : 338)
2. உடல். இம்மாரிச் சீகரம் வெப்புறப் புரஞ்சுட வெந்து விவதோ. (கி : 534) மாபுரந் தவிர்ந்து விண்வழிச் சென்றுர் சிலர். (யுத் : 3897) (யுத் : 2849)
3. திரிபுரம். கணிச்சி வானவன் விண்ணிடைப் புரஞ்சுட வெகுண்ட மேலை நாள். (கி : 542) புரஞ்சுடு கடவுள். (யுத்:3430) (யுத் : 3440)

புரமட்டான் - முப்புரங்களையுஞ் சுட்டழித்த சிவபெருமான். தொல்புர மாட்டான். (சு : 179)

புர மூன்றெரித்த போர்வில் - முப்புர மெரித்த போர் செய்தற்குரிய வில். இறைவன் புர மூன்றெரித்த போர் வில்லிறுத்தாய். (அ : 353)

புரவலர் - அரசர். புரவலர் முனிவர் யாரும். (அ : 287)

புரவலன் - அரசன். காப்பாற்றுபவன். புரவலன் உறுபொருள். (அ : 891) பூவலயத்தை யாண்ட புரவலன் புதல்வன் போலாம். (சு : 1119)

புரவி - குதிரை. அச்சேற்றை நீறு செய்தன புரவியின் குரம். (சு : 871) விசையாடற் பசும் புரவிக் குரமிதிப்ப. (பா : 714)

புரவிக்கடல் - குதிரைச் சேனையாகிய கடல். (யுத் : 1694)

புரவிக்கூட்டு - குதிரைகளைப் பூட்டும் நுகம். புரவிக் கூட்டறப் படியொடு படிந்தன. (ஆ : 484)

புரவிச் செண்டாடுதல் - குதிரையில் இருந்து வையாளி வருதல். (வையாளி வீதியில் ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியும் அமைய நடத்திப் பழகுதல்) வாலுளைப் புரவியில் பொருவில் செண்டாடிப் போர்க்கலை தெரிதலிற் பொழுது போம் சிலர்க்கு அம் மாநகர். (பா : 160)

புரவியாலித்தல் - குதிரைகள் ஆரவாரஞ் செய்தல். துருவத்தார்ப் புரவி யெல்லாம் மூங்கையர் சொற் பெற்றென்ன அரவப் போர் மேக மென்ன ஆலித்த. (யுத் : 4288)

புரவியீட்டம் - குதிரைக்கூட்டம். பொடிமிசைப் புரண்டவும் புரவி யீட்டமே. (அ : 995)

புரவு - பாதுகாத்தல். புரவு நல்லொழுக்கின்படி பூண்டது. (பா:23) [பா:பே]

புரள்தல் (புரளுதல்) - 1. சாதல். அழிவெய்தல். பூதம் ஐந்தொடும் பொருந்திய உருவினுற் புரளான். (யுத் : 148) புரண்டவாறும். (யுத் : 1872)

2. எல்லை மீறுதல். சிந்தை புரண்டு மீதிடப் பொங்கிய உவகையர். (அ : 32)

3. பூமியுற் புழுதிபடியும்படி உருண்டுபோதல். புரண்டனள். (யுத் : 1613) சொற்கொடு நெஞ்சம் போழ்ந்தாள் உள்ளப் புன்மையை நோக்கிப் புரள்கின்ருன். (அ : 221) [பா : பே] படியிடைப் புரள்தலோடும். (யுத் : 2384)

4. மாறி மாறி விளங்குதல்: வெயில்களும் நிலாக்களும் புரள. (யுத் : 2491)

புராதனம் - பழைமை. புராதனம் அறையும் அண்டர் பொற்பதம். (அண்) (பாயி : 21)

புராதனமறை - பழைமையான வேதம். (வை.மு) புரான மறையும் அண்டர் பொற்பதமும் பொன்று நாள் அதனினும் பொன்ரு அராவணை யமலன் உலகு. (பாயி : 21)

புராதனர் - பழைமையோர். எவையும் போமே பொருளென்ற புராதனர். (யுத் : 239)

புராதனன் - பழைமையோன். பூவின் வந்த புராதனன். (சு : 627)

புராரி - திரி புரங்களை எரித்த சிவன். பூந்த விசுகந்துளோனும் புராரியும் புகழ்தற் கொத்த சாந்தன். (பா : 213)

புரி - முறுக்கு. புரியாகப் பின்னப்படுதல். புரிமென் கூந்தலார். (பா : 830) புரிந் தோடின. (யுத் : 3004)

புரி குழல் - 1. முறுக்கப்பெற்ற கூந்தல். (சு : 978) (ஆ : 318)
2. கடை குழன்ற கூந்தல். பொம்மென்னவண்டலம்புரி குழல். (பா : 771)
3. நெறிப்புள்ள கூந்தல். பின்னப்பட்ட கூந்தல். பொன்னரி மாலை கொண்டு புரிகுழல் புனையலுற்றாள். (பா : 1062)

புரிசை - மதில். பொன்னின் மாநகர்ப்புரிசை. (பா : 337)

புரிசைப் பொன்மதில் - வட்ட வடிவமுள்ள பொன்மயமான மதில்கள். புரிசைப் பொன்மதில்... அயோத்தியாளுடை நிழலெனப் பொலியுமால். (பா : 133) [பா : பே]

புரிசை வாயில் - மதில் வாயில். போயினன் திருநகர்ப்புரிசை வாயில். (அ : 986)

புரித்தல் - போர்த்தல். (அண்) புரிதல். (வை.மு) (கலா) உலகுக் கோருறை புரித்தனன் நான்முகன் என்னும் பொற்பதே. (சு : 139)

புரித்தனன் - போர்த்தான். (அண்) புரிந்தனன். (வை.மு) அமைத் தான். (கலா) புரிந்தனன் என்பது எதுகை நோக்கிப் புரித்தனன் என வலித்தது. (கலா) (சு : 139)

புரிதரல் - 1. அடைதல். யாரும் புரிதரப்படும் பொலங்கழல். (யுத்:3613)
2. மிகுதல். பேயினும் பெரிது பேர் நரிகளும் புரிதரும். (யுத் : 108)

புரிதல் - 1. விரும்புதல். புரிந்து நோக்கினன். (யுத் : 332) புரிந்த. (யுத் : 1438) (யுத் : 1466) புரிபவர். (பா : 1184)
2. முறுக்குதல். புயன் மகிழ் புரிகுழல் பொடியளாவுற. (சு : 978)
3. புரியாகப் பிரிதல். நெடு நீலம் பூண்டு புரிந்து கடை சுருண்டு. (சு : 546)
4. வரிக்கப்படல். (வை.மு) புரியும் மழவர்தம் மனையன மண வொலி. (பா : 81)
5. ஓம்புதல். செந்தழல் புரி செல்வன். (அ : 711)

6. சூழ்தல். புரிந்த அந்நெடுஞ் சேனையங் கருங்கடல். (உ.வி) (யுத் : 1466)

7. செய்தல். பொரு தொழில் யாவையும் புரிந்து போவதும். (யுத் : 47) புனமானை நாடுதல் புரிஞர். (கி : 43)

8. உடன்படல். அன்றியும் படையொடும் பொருது பொன்றுதல் புரிதிரோ. (யுத் : 2453)

9. நினைதல். விலங்கெனுப் புரிந்து. (பா : 220)

10. அனுபவித்தல். புண்டரிகை போலுமிவள் இன்னல் புரிகின்ருள். (சு : 607)

புரிது - புரிவேன். அது கண்டு பின்னர் நல்லவா புரிது. (யுத் : 253)

புரிந்தழுதல் - மிகவும் இரக்கங் கொண்டழுதல். பூமாமடந்தை புரிந்தழுதாள். (யுத் : 2629)

புரிந்து - நினைந்து. விலங்கெனுப் புரிந்திருந்தவரென இணைய செய்தான். (பா : 220)

புரிந்து நோக்குதல் - விரும்பிப் பார்த்தல். பூ நிறச் சோலையும் புரிந்து நோக்கினுன். (யுத் : 332)

புரிவு - செயல். வருமதன் புரிவை நோக்கிக் கூசின உலக மெல்லாம். (யுத் : 2983)

புருட மேதம் - நரபலி செய்யும் யாகம். வதைபுரி புருட மேதம் வகுப்ப ஓர் மைந்தற் கொள்வான். (பா : 683)

புருடன் - ஜீவாத்மா. மற்றதற்கு மேல் நின்ற புகுதியாவர்க்கு மரியவப் புருடனு நீ. (யுத் : 4020)

புருவக் கார்முகம் - புருவங்களாகிய விற்கள். புருவக் கார்முகக் கருந்தடங் கண்ணியர். (ஆ : 582)

புருவங்கள் குதித்தல் - புருவங்கள் கீழும் மேலுமாகக் குதித்தல். புருவங்கள் குதித்துக் கூத்து நின்ருடின. (அ : 858)

புருவங்கள் குனித்தல் - புருவங்கள் நெரிப்புக் கொள்ளல். புருவங் கள் குனித்துக் கூத்து நின்ருடின. (அ : 858) [பா : பே]

புருவங் கோட்டுதல் - புருவத்தை வெகுளி தோன்ற வளைத்தல். பொருவன கண்டு தன் புருவங் கோட்டினுன். (யுத் : 337)

புருவத் தேள் - தேள் போன்ற புருவம். புருவத் தேள் இரண்டு நெரிய. (ஆ : 43)

புருவப் போர் வில் - புருவமாகிய போர் செய்யும் வில். (வை.மு) புருவமும் போர் செய்யும் வில்லும். (அண்) நாசியிற் புகையுறக் குனிப்புறும் புருவப் போர்விலான். (அ : 998)

புருவம் - புருவங்கள். மீ நிவந்த கொழுங்கடைப் புருவம் நெற்றி முற்றச் சென்றன. (பா : 330)

புருவங்கள் நெரித்தல் - புருவங்கள் கோபத்தாற் சுருங்கி நெருங்குதல். (கலா) நெரிந்த புருவங்கள் நெடு நெற்றியினை முற்ற. (ஆ : 606)

புருவம் பேர்த்தல் - புருவம் இடம் பெயர்ந்து மேலுறல். கோபத்தின் செயல். பெயர்ந்தா சைக்கரி இரியப் புருவம் பேர்த்தாய். (யுத் : 3888)

புரை - 1. குடிசை. ஆச்சிரமம். தங்குமிடம். பொருக்கென எழுந்து பேரய்ப் புரையுட் புக்கனர். (பா : 221) எமதாகும் புரையிடை. (அ : 713)

2. குற்றம். புரையுறு புன்றொழிலரக்கர். (சு : 664) புரை தபு கமல நாட்டம். (அ : 588)

3. உயர்ச்சி. மேன்மை. புரை விளக்கிடுக. (பா : 682)

4. வீடு. விழுந்த பனியன்ன திரை வீசு புரை தோறும். (பா : 919)

5. தன்மை. உக்க அந்தமும் நமக் குரைசெயும் புரையவோ. (கி : 90)

6. துளை. துவாரம். பந்தரைப் புரைத்துக் கீழ் வந்திழிகின்ற கொழுநிலா. (பா : 1061) (யுத் : 200)

7. குகை. குகையின் உள்ளறை. கொடுமுடிப் புரைகள். (கி : 821) இருள்... கதிரவற்கஞ்சி ஏமுறப் புக்கதே யனைய தோர் புரை. (கி : 844)

8. உவம வுருபு. பொன்புரை மேகம். (யுத் : 2042) வாள்புரை விழியாய். (அ : 706)

9. ஒரு பகுதி. பொகுட்ட தோர் புரையில் வைகுமால். (யுத் : 200)

10. இடம். கால் புகப் புரை யின்றாகென. (யுத் : 2363)

11. இடைவெளி. வழுத்தரும் பொகுட்டதோர் புரையில் வைகுமால். (யுத் : 200)

புரைசை . புரசை. கழுத்திடு கயிறு. புரைசை மால்கரி. (அ : 47) [பா : பே]

புரைசை மாக்கரி - கழுத்திடு கயிற்றை யணிந்த யானைப்படை. (அ : 47)

புரைசை மால்கரி-கழுத்திடு கயிற்றினையுடைய பெரிய யானைப்படை. (அ : 47) [பா : பே]

புரைத்தான்-ஒத்துத் தோன்றினான். பூவடிவுடைப் பொருவில் சேவடி புரைத்தான். (கி : 887)

புரைத்து - துவாரஞ் செய்து. (பா : 1061)

புரைதபு கமல நாட்டம் - குற்றமற்ற தாமரை மலர் போன்ற கண்கள் (அ : 588)

புரைதபுத்து - குற்றம் போக்கி. போதிகைத் தலத்து வச்சிரம் புரைதபுத் தடுக்கி. (பா : 117)

புரைதபு தவம் - குற்ற மற்ற தவம். புரைதபு தவத்தின் யான் படைத்த போதுமே. (ஆ : 842)

புரைதபு நாள் - குற்ற மற்ற நாள். புரைதபு நாளொடு பொழுது நோக்குவான். (அ : 86)

புரைதரல் - ஒத்தல். பொருந்துதல். தன்னேர் புரைதரு தம்பியர். (பா : 1352)

புரைதல் - 1. பொருந்துதல். நஞ்சு தொக்கெனப் புரை நயனத் தார்களும். (ஆ : 412)
2. ஒத்தல். பூவடியுடைப் பொருவில் சேவடி புரைந்தான். (கி : 887)

புரையிடை - தபோவனத்தில். புகலிடம் எமதாகும் புரையிடை இதுநாளில்... வருவானெனன். (அ : 713)

புரையுறுதல் - ஒத்தல். கடலினைப் புரையுறும் அருவிக் கண்ணி னன். (கி : 970)

புரைவன - ஒப்பன. பொற்றகடுறு நீலம் புரைவன பல காணாய். (அ : 701) கஞ்சமும் புரைவன கழல். (சு : 595)

புரோசை - புரசை. யானை கட்டும் கயிறு. செய் தொடர்க்கன வல்லியும் புரோசையும் நீக்கி. (சு : 1218)

புல் - 1. தருப்பை. கல்லிடைப் படுத்த புல்லின். (அ : 1031) நூனெறியடுக்கிய புல்லிற் கருணையங்கடல் கிடந்தது. (யுத்:539)
2. அற்பமான. கதிரின் நாயகன் சோணலாம் புல்லொளி செலுத்தி. (ஆ : 244) புன்னிலை. (கி : 694) இந்தப் புல்லுயிர் விட்டிலாதேன். (யுத் : 2846)
3. புல். பசும் புல். (கி : 486) புல் தரை. (கி : 671) புன்னுனைப் பனி நீர். (யுத் : 1258)
4. புறக்காழனவான மூங்கில் முதலியன. புல்லொடு பிறவு மெல்லாம் பொடிப் பொடியாகி. (யுத் : 1400)

புல் குதல் - 1. பொருந்துதல். புல்கு காதற் புரவலன். (அ : 102) (கி : 200)
2. சார்தல். (உ.வி) புல்கிய பூணும். (கி : 200)

புல்லடகு - புல்லிய கீரை யுணவு. என் முன் உடன் வந்தான் கையார் கல்லைப் புல்லடகுண்ண. (அ : 873)

புல்லணை - புல்லால் ஆகிய அணை. வீரன் வைகிய புல்லணை மருங்கில் தான் பொடியின் வைகினன். (அ : 991)

புல்லர் - 1. மூடர். கல்லாப் புல்லர். (பா : 413)
2. இழிந்தோர். அற்பர். அந்தணர் தன்மையை மறந்த புல்லர். (ஆ : 136) (யுத் : 2647)

புல்லல் - 1. ஒன்று சேர்தல். தழுவுதல். புல்லலேற்ற திருமகள். (சு : 547)
2. பொருட்படுத்தாதே. பொறுத்தருள்க. பிழை புல்லல் என்னவும் புல்லலை பொங்கினுய். (கி : 333)

புல்லல் ஏற்ற திருமகள் - எஞ்ஞான்றும் தழுவி யுறைதலைப் பொருந்திய சீதாதேவி. (சு : 547)

புல்லலர் - விரும்பி ஏற்கமாட்டார். கால மெல்லாம் பழகினும் தூயரல்லார் புல்லலர். (யுத் : 429)

புல்லலை - ஏற்றுக் கொள்ளாது. (கி : 333)

புல்லனேன் - புன்மையேனுகிய யான். இவ்வுலகுக்கு இடர் கொடுத்த புல்லனேன். (அ : 1129)

புல்லிட - 1. தொட்டு. நாண்மலர்ப் பாதத்தைப் புல்லிப் போற்றி வணங்கி. (அ : 97)

2. தழுவி. என்றலும் எழுந்து புல்லி. (ஆ : 672)

புல்லிட - பொருந்தும்படியாக. வாள் விரிக்கும் வெள்ளி மாமரம் புல்லிடக்கிடத்தி. (பா : 116)

புல்லிடுதல் - பொருந்தி நிற்றல். செறிந்த தேர்கள் தாம் புல்லிடு சுடரெனப் பொலிந்த வேந்தரால். (பா : 826)

புல்லிடை - தூய்மையற்ற இழிந்த முற்றம். இவ்வழகையெலாம் புல்லிடையே உகுத்தீரே. (ஆ : 349)

புல்லிடை யுக்க நல்லமுதம் - தூய்மையற்ற இழிவான இடத்திற் சிந்திய நல்ல அமுதம். எல்லையில் குணங்களும் பரதற் கெய்திய புல்லிடை யுக்க நல்லமுதம் போலுமால். (அ : 159)

புல்லிடை யுகுத்தல் - வீணுக்குதல். பயன்படா தொழிதல். வில்லினும் வாளினும் விரிந்த ஆண்டொழில் புல்லிடை யுகுத்தனென். (அ : 905) (ஆ : 349)

புல்லிது - இழிந்தது. தூதரை எறிதலென்பது புல்லிது. (யுத் : 403)

புல்லிய - 1. பொருந்திய. புல்லிய பழி. (பா 556)

2. அற்பமான. பொருந்தாத. புல்லிய உவமைத்தாமால். (கி : 783)

புல்லிய நெய்தல் - இழிந்த நெய்தல் நிலம். புல்லிய நெய்தல் தன்னைப் பொரு வரு மருத மாக்கி. (பா : 28)

புல்லிய முறுவல் - புன்சிரிப்பு. புல்லிய முறுவல் தோன்றப் பொருமையும் சிறிது பொங்க. (சு : 752)

புல்லிறுத்தது - வளமடைந்து புல்லிற் படுத்தது. புல்லிறுத்தது யாவும் புகன்று. (ஆ : 219)

புல்லு - புல். நாணலின் புல்லு வேய்ந்து. (அ : 781)

புல்லுதல் - 1. புணர்தல். (வெ ப) நங்கைமார்களைப் புல்லுதிரோ. (ஆ : 511)

2. கையால் தொடுதல். நாண்மலர்ப் பாதத்தைப் புல்லிப் போற்றி. (அ : 97)

3. தழுவுதல். தோழமை நல்லியலருங்கடன் கழித்த நம்பியைப் புல்லுதியோ. (ஆ : 947)

4. பொருந்துதல். வில்லும் வெங்கணையும் வீரர் வெஞ்சமத் தஞ்சினர் மேற்புல்லுந வல்ல. (கி : 506)
5. சேர்தல் புல்லினர் உலகினே. (கி : 822)
6. பொருந்தியிருத்தல். தேவர்கள் தாம் புல்லிடு வேந்தராற் பொலிந்த. (பா : 826)
7. தேடுதல். புல்லினர் உலகினே. (கி : 822)
8. விரும்பி ஏற்றுக்கொள்ளுதல். புல்லலர். (யுத் : 429)
9. அழுந்தியிருத்தல். தோளில் புல்லிய பகழி வாங்கி. (யுத் : 3085)

புல்லு வேய்தல் - புல்லினுற் கூரை வேய்தல். (அ : 781)

புல்லெடுத்தல் - புல்லே வாயினுற் கவ்வுதல். போரில் தோற்றவர் இங்ஙனஞ் செய்தல் மரபு. புல்லெடுத்தவர்க ளல்லம் வேறுசில போரெடுத்தெதிர் புகுந்துளோம். (யுத் : 2026)

புல்லெயிறு - சிறிய பல். புல்லெயிற்றிளங் கன்னியர். (அ : 731)

புல்லொளி - அற்பமாகிய ஒளி. கதிரின் நாயகன் புல்லொளி செலுத்தி. (ஆ : 244)

புல்வாய் - மான். புலிப்போத்தும் புல்வாயும் ஒரு துறையில் நீருண்ண. (பா : 725) (ஆ : 910)

புலக்க - புலவி கொண்டாற் போல. (அப்பாற் செல்லும்படி) நெடுங்கப் பணம் திருப்புலக்க உய்த்தான். (யுத் : 3856)

புலக்கு - புலனுக்கு. மெய்ப் பொருள் வில்லுந்தாங்கிக் கால் தரை தோய நின்று கட்புலக்குற்றதம்மா. (கி : 384)

புலக்குறி - வேதம் நீதி நூல்களிற் கூறிய இலக்கணங்கள். புலக் குறி அறநெறி பொருந்த நோக்கினர். (யுத் : 349)

புலக்குரித் தொரு பொருள் - புலக்கு உரித்து ஒரு பொருள். அறிவுக்கு ஏற்றதொரு செய்தி. புலக்குரித் தொரு பொருள் புகலக் கேட்டியால். (அ : 1107)

புலக்குறியறம் - விவேகத்தினல் உரைக்கத்தக்க அறம். (யுத் : 349)

புலத்தல் - 1. ஊடல். மடவார் புலந்த காலே. (அ : 742)
2. துன்புறுதல். உலந்தன புலந்த. (சு : 839)

புலத்தியன் - இராவணன் முதலியோரின் பாட்டன். புலத்தியன் வழிமுதல் வந்த பொய்யறு குலத்தியல்பு அழிந்தது. (யுத்:1300)

புலத்தியன் மருமான் - புலத்தியன் வழித் தோன்றலாகிய கும்ப கருணன். (யுத் : 1446)

புலத்திற்றுகி - அறிவினிடத்ததாய். (வயல்களுக்கு உரியதாய்) ஆன்ற பொருள் தந்து புலத்திற்றுகி. (ஆ : 225)

புலத்திற்றுகுமோ - புலப்படுந்தகையதோ. அது புகுதியில்லாதவர் புலத்திற்றுகுமோ. (யுத் : 199)

புலத்திற்றுதல் - அறிவினர் அறியப்படுதல். புகுதி யில்லாதவர் புலத்திற்றுகுமோ. (யுத் : 199) (ஆ : 225)

புலந்தவர் - ஊடியவர். [புலவி] புலந்தவர்க் குதவிசெய் புதிய தூதுமாய். (பா : 1048)

புலப்படார் - வெளிப்பட்டுத் தோன்றார். பொன்றினன் என்ற போதும் புலப்படார். (யுத் : 3882)

புலம் - 1. பொறி. கண் முதலிய ஐந்து. கட்புலம். (சு : 95)
2. அறிவு. நுட்புலம். (சு : 95) புலக்குறி. (யுத் : 349)
3. இடம். பகைப்புலம். (யுத் : 371) தென்புலம். (அ : 553)
4. வேதம். ஆய்வரும் புலத்தறிவு மேவினய். (அ : 1173)
5. விஷயம் கண்ணெனும் புலங் கொள் வாயில் சிக்கென அடைத்தேன். (பா : 1161)
6. விளை நிலம். வயல். ஆன்ற பொருள்தந்து புலத்திற்றுகி. (ஆ : 225)
7. நூல். (உ.வி) புலக் குறியற நெறி. (யுத் : 349)
8. திசை.

புலம் நடத்தல் - தம்மிடத்தை விட்டு அப்பாற் செல்லுதல். புலம் பொதுவுற நடந்து நாயக பகைப்புலஞ் சார்தலோ. (யுத் : 371)

புலம்பல் - 1. அழுதல். பிதற்றல். போகக் கண்டு புலம்பும் அப் புன்மையாள். (ஆ : 308)
2. வாய் விட்டுக் கதறுதல். ஆம்பலைச் சேரை யென்று புலம்புவ தேரையே. (கி : 934) புலம்பலன். (யுத் : 2653)

புலம்பி - தனிமையுற்று. புலம்பி நைய. (அ : 296)

புலம்பு - அழுகை. (அண்) பிதற்றொலி. (வை.மு) புக்கினி வென்றும் என்றால் புலம்பன்றிப் புலமைத்தாமோ. (சு : 909)

புலம்புதல் - சோக மெய்தல் புலம்பலுற்றுன் வழிப் போதலுற்ருன் தனை. (கி : 329)

புலம்பும் பூசல் - புலம்புகின்ற ஆரவாரம். கண்டவர் புலம்பும் பூசல். (யுத் : 3184)

புலம்புறு - புலம்புகின்ற புலம்புறு குரிகில் தன் புலர்வு நோக்கினுள். (அ : 887)

புலமக்கள் தருமம் - அறிவுடை மக்களாகிய தேவர்களின் தருமம். செயல். புல மக்கள் தருமம் பூண்டால். (யுத் : 1369)

புல மகன் - அறிஞன். வேறொரு புல மகன் விரும்பி வாங்கினன், (பா : 818)

புலமை - 1. அறிவுடைமை. பொருமென நினைகையும் புலமைப் பால தோ. (அ : 1110)
2. ஞானக் கண். போனவன் அக நிலை புலமையின் உணர்வான். (ஆ : 106)

புலமை உள்ளம் - அறிவு மிக்க மனம். பொற்றடந் தேர்வலான் புலமை யுள்ளத்தான். (அ : 936) புகலுதிர் புலமை யுள்ளத்திர். (யுத் : 2724)

புலமை நூலோர் - அறிவுடைய நூலோர். ஆக்கமுங் கேடுந்தாஞ் செய் அறத்தொடு பாவ மாய போக்கி வேறுண்மை தேரார் புலமை நூலோர். (கி : 425)

புலமையோர் - அறிவுடையோர். நான்மறைப் புண்ணியப் புனலாட் டினர் புலமையோர். (அ : 120)

புலர்த்தல் - உலர்த்தல். அகிலாவி புலர்த்தும் நல்லார். (பா : 972)

புலர்தல் - 1. வாடுதல். உள்ளம் புலர்ந்தது. (அ : 198)
2. உலர்தல். வாய்கள் புலர்ந்தன. (யுத் : 2407)
3. குறைதல். பதம் புலர்ந்த வேகமா. (யுத் : 3336)
4. தளர்தல். இமையோர்களும் புலர்ந்தார். (யுத் : 3008)
5. பொழுது விடிதல். புலர்ந்த காலையில் பொறிவரி அம்பெனும் தும்பி கலந்த தாமரை. (யுத் : 2310)

புலர்வு - 1. முகமும் அகமும் வாடுதல்.
2. துயரம். (கலா) புலம்புறு தூரிசில்தன் புலர்வு. (அ : 887)

புலரி - 1. உதய காலம். புலரியம் கமலம் போலும் பொலிவு. (பா : 673)
2. சூரியன். தாமரைப்பூ நனி முகிழ்த்தன புலரி போனபின். (அ : 776) [பே : பே]

புலவர் - தேவர்கள். புலவர் போற்றும் மூவர். (அ : 749)

புலவர் கோமான் - தேவர்கட்கெல்லாந் தலைவனான திருமாலின் அமிசமான இராமபிரான். புலவர் கோமான் கைத்திருச் சரங்கள் உன்தன் மார்பிடைக் கலக்கற்பால. (யுத் : 1636) (யுத் : 2656)

புலவர் நாடு - தேவருலகம். புத்திர்த்திட்டலையாமற் புலவர் நாடுதவுவது. (கி : 764)

புலவர் புந்தியான் - ஞானிகள் மனதில் வீற்றிருப்பவன். இராமன். சாதியால் அன்றெனில் தக்கதோர் நெறி போதியால் என்றனன் புலவர் புந்தியான். (யுத் : 3988)

புலவன் - பேரறிஞன். (சாம்பன்) புலவன் சொன்ன நற்குன்றம். (யுத் : 2715)

புலவி - 1. ஊடல். பிணக்கு. வலிய நெடும் புலவியினும் வணங்காத மகுட நிரை. (ஆ : 562)
2. முனிவு. போனவள் புலவி நோக்கி. (ஆ : 798)

புலவியில் கரைகண்டவர் - ஊடலின் முடிவெல்லையைக் கண்டவர். ஊடல் தணியப்பெற்றவர். புலவியின் கரை கண்டவர் அமிழ் துணப்புணரும் கலவியின் கரை கண்டிலர் மண்டினர் கடன் மேல். (சு : 1208)

புலவு - 1. புலால். புலவு வேற்கைப் புளிஞர் கோன். (அ : 1029) (யுத் : 3680)
2. புலால் நாற்றம். புலவு நாறலகை. (யுத் : 1638)

புலவு நாறலகை - புலால் நாற்றம் வீசுகின்ற பேய்கள். புல்லுவ அலங்கன் மார்பம் புலவு நாறலகை யெல்லாம். (யுத் : 1638)

புலவு வேல் - புலவு நாற்றம் வீசுகின்ற வேல். புண்ணுறு புலவு வேலோய். (யுத் : 1363)

புலவோர் - தேவர்கள். இது காணிய வந்தனர் புலவோர். (யுத் : 1452)

புலன் - 1. புலம். அறிவு சிற்ப நூலறிவு. விவேகம் புலன் கொள்புந்தியார். (யுத் : 330) புலக்குரித்து. (அ : 1107) புலனில் பேய். (ஆ : 1011)

2. பொறி. ஞானேந்திரியங்கள். அலந்தலையுற்ற அரும் புலன்கள் ஐந்தும். (அ : 198)

3. ஐம்பொறி இன்பம். பொன்னேக்கியர் தம் புலன் நோக்கிய புன்கணேரும். (ஆ : 931)

புலன்கள் - ஞானேந்திரியங்கள். அரும்புலன்கள் ஐந்தும். (அ:198)

புலன்கள் வீக்குதல் - பொறிகளை அடக்குதல். வெங்கனல் முழுகியும் புலன்கள் வீக்கியும். (சு : 401)

புலன் கெடுதல் - ஐம்புல ஆசை கெடுதல். வெங்குலப் புலன் கெட விடு நண்ணினர். (அ : 17)

புலன் கொடு நோக்குதல் - கண்ணாலும் அறிவாலும் கூர்ந்து நோக்கியறிதல். புக்கு நின்று தன் புலன் கொடு நோக்கினன் பொருவருந் திருவுள்ளம் நெக்கு நின்றனன். (சு : 300)

புலன் கொள்தல் - அறிவமைந்து நிற்றல். பொருளுற எண்ணிய புலன் கொள் புந்தியார் (யுத் : 330)

புலன் கொளுவுதல் - அறிவு கொளுத்துதல். இனையன வையப் போனகற்கு விளம்பிப் புலன் கொளீஇ. (அ : 119)

புலன் கொளீஇ - அறிவு கொளுத்தி. (அ : 119)

புலனேக்கலுற்றார் - புலன் நோக்கலுற்றார். பொறிகளால் நுகரப்படும் பொருளின் கண் விருப்புற்றாராகிய தேவர்கள். நூலேந்து கேள்வி நுகரார் புலன் நோக்கலுற்றார். (சு : 42)

புலனேக்கிய அறிவு - விஷயங்களை ஆராய்ந்தறிகின்ற அறிவு. பகுத்தறிவு. புலன் நோக்கிய அறிவின் மேலதன்றோ அறத்தாறு தான். (கி : 345)

புலால் - 1. புலால் மணம். பூவின் மண நாறுவ புலால் கமழ்கிலாத. (சு : 707)

2. மாமிசம். பொழிபுலால் பசும்புனல் பொறிப்ப. (சு : 1031)

புலால் நாறுதல் - புலால் நாற்றம் வீசுதல். பசும்புலால் நாறும் வேலை பரிமளங் கமழ்ந்ததன்றே. (யுத் : 636)

புலால் வெறி பூத்தல் - புலால் நாற்றத்தைத் தோற்றுவித்தல். புலால் நாற்றம் வீசுதல். பூவின் மாலை புலால் வெறி பூத்த வால். (யுத் : 3687)

புலி - புலி மான்திரள் புலிகண்ட தாமெனப் போனான். (யுத்:517) அடு புலி துரந்த ஆடு. (யுத் : 521) தென்ற லொன்றொரு புலி. (யுத் : 469)

புலித்தானை - புலித் தோலாடை. புலித்தானைப் போர்வையான் போர் வில். (பா : 769)

புலி துரந்த ஆடு - புலியினால் துரத்தப்பட்ட ஆடு. (யுத் : 521)

புலிப் பறழ் - புலிக்குட்டி. போதகத்தின் மழக் கன்றும் புலிப் பறழும் உறங்கிடனும் பொருந்திற்றம்மா. (கி : 771)

புலிப் போத்து - ஆண்புலி. புலிப் போத்தும் புல் வாயும். (பா:725)

புலியடு மதுகை - புலியும் தோல்வியடையும்படியான வலிமை. புலியடு மதுகை மைந்தர். (சு : 205)

புலியினதள் - புலித் தோல். புலியினத ளுடையானும் பொன்னுடை புனைந்தானும். (ஆ : 563)

புலிவால் - புலியினது வால். தயங்குறச் சூழ விட்ட தொடு புலி வாலினான். (அ : 648)

புலை - 1. இழிவான தொழில். இழிவு பொருந்தியதன்மை. புலையாடற் கொன்றும் உன்னைய். (ஆ : 747) புன் புலைப்பிறவி. (யுத் : 327) புலையுறு மரணம். (யுத் : 1371)
2. மாமிசம். புலையின் வாழ்க்கை யரக்கர். (யுத் : 650)
3. இழிந்தோர். இலங்கை மூதூர்ப்புலை யெலாம் மாண்ட பின்னை. (யுத் : 1356)

புலைச்சிந்தை - கீழ்மையுள்ளம். இழிந்த எண்ணம், புலைச்சிந்தை யால் என் சொனாய் தீயோய். (அ : 161)

புலைப்பிறவி - இழிவான பிறப்பு. புன்புலைப் பிறவியின் பகைஞன் போலுமால். (யுத் : 327) [பா : பே]

புலையாடல் - ஈனத்தொழில் செய்தல். புலை 1 பார்க்க. (ஆ : 747)

புலையுறு மரணம் - இழிவான சாவு. புலையுறு மரண மெய்தல் எனக்கது புகழதேயால். (யுத் : 1373)

புவனத்துச்சிக்குச்சி - புவனத்தின் அழகிய பூமுகட்டின் உச்சி. பொன்னுடைப் புவனத்துச்சிக்குச்சியுட் புதையப் போனுன். (யுத் : 2360)

புவனம் - உலகம். ஈரெழு புவனம். (சு : 446) (சு : 1109)

புவன மூன்றும் நாயகம் - மூவுலகத்தையும் ஆட்சி செலுத்தற்குரிய இறைமைக்குணம். புவன மூன்றும் நாயகம் உன்னதன்ரூ. (கி : 314)

புவனி - உலகம். (அ : 323)

புவனி நாதன் - உலக சக்கரவர்த்தி, தசரதன். புவனி நாதற் ரெழுது போயினுன். (அ : 323)

புவி - 1. தரை. புவி மிதலறிப் புரள. (அ : 370)
2. பூவுலகம். புவி ஏழின் எல்லையேற்ற நெடுஞ்செல்வம். (சு : 547)

புவித்தடம் படர்மேரு - பூமியிடம் நெடுந்தூரம் பரவியுள்ள மேரு மலை. புவித்தடம்படர் மேருவைப் பொன்முடி கவித்து. (சு:1084)

புவித்தலை உயிர் - உலகிலுள்ள உயிர்கள். அவித்தஜம் புலத்தவ ராதியுள புவித்தலை யுயிரெலாம். (அ : 954)

புவித்திரு - பூமிதேவி. நவையில் புவித்திரு நாண நடப்பாள். (ஆ : 1084)

புவிப் பாவை - பூமி தேவி. புவிப் பாவை பரங்கெட. (அ : 414)

புவிப் பாவை பரங்கெடல் - பூமி தேவிக்கு பாரங் குறைதல். புவிப் பாவை பரங்கெடப் போரில் வந்தோரை யெல்லாம் அவிப்பானும். (அ : 414)

புவிபுகழ் சென்னி பேரமலன் - உலகத்தாரால் புகழப்படுகின்ற சோழ ஞகிய அமலன். புவிபுகழ் சென்னி பேரமலன் தோள் புகழ் கவிகள் தம் மனையென. (கி : 852)

புவி புரத்தல் - உலகை ஆள்தல். பொருவில் எம்பி புவி புரப்பான். (அ : 514)

புவியெனுந்திரு - பூமி தேவி என்கின்ற பெருமகள். பொன்னுயிர்த்த பூமடந்தையும் புவியெனுந் திருவும் இன்னுயிர்த் துணை இவ னென நினைக்கின்ற இராமன். (அ : 38)

புவியேழின் எல்லையேற்ற நெடுஞ் செல்வம்-ஏழுலகங்களையும் எல்லை யாகவுடைய பெரிய செல்வம். (சு : 547)

புழு - புழு. மண்ணிடைப் புழுவின் வாழும் மானுடர் வலியரென்ருய். (ஆ : 879)

புழுகு - கஸ்தூரிப் புழுகு. பூசிய சந்தனம் புழுகு. (கி : 553)

புழுங்க எழுதல் - கோபித் தெழுதல். பொங்கு வெங்கொடுமை என்பது புழுங்கி எழ. (ஆ : 14)

புழுங்கா - மனம் வெதும்பி. புழுங்கா மாகவரை அற்றுக உதைத் தனள். (பா : 394)

புழுங்கி - கோபித்து. மறங்கொடு புழுங்கி நிருதன். (ஆ : 29)

புழுங்குதல்- 1. வேதல். வெம்புதல். வெய்துயிர்க்கும் விழுங்கும் புழுங்குமால். (அ : 306)
2. வெகுளுதல். சினத்தல். புழுங்கின எதிரெதிர் பொருவ போன்றவே. (கி : 466)
3. தவித்தல். (வை.மு) யாதெனப் புழுங்கும். (கி : 301)
4. வேர்த்தல். புட்டிலொடு கோதைகள் புழுங்கி எரி கூற்றின் அட்டிலென லாய. (யுத் : 3644) புழுங்கி நைந்தான். (யுத்:713)
5. வெதுப்புறுதல். புண்டானுறு நெஞ்சு புழுங்குறுவேன். (ஆ : 1104)

புழுங்கு வெஞ்சினம் - வெம்புகின்ற கொடுங் கோபம். புழுங்கு வெஞ்சினத் தஞ்சனப் பொறி வரி யரவம். (யுத் : 538)

புழுங்கு வெம்பசி - புழுங்குதற்குக் காரணமான கொடிய பசி. புழுங்கு வெம்பசியொடு புரளும் பேரரா. (பா : 352)

புழுதி - தூசி. புழுதியாடிய மெய்யினர். (அ : 511)

புழுதியாடிய மெய் - புழுதி படிந்த உடம்பு. (அ : 511)

புழை - 1. துவாரம். தொளே. புண்ணிலாம் பெரும் புழை. (பா:328) புழைத்த வாளி. (ஆ : 810)

2. வளையின் வாயில். நள்ளிகள் புழையடைத் தொடுங்கின. (கி : 564)
3. நுழைவாயில் மென் மலர்ப் புழையும் வாசப் பொதும்பும். (சு : 718)
4. குகை. மேருப்புழை. (யுத் . 1286)

புழைத்தல் - துவார முண்டாக்குதல். துளைத்தல். அனங்கன் வாளி புழைத்த தம் கொங்கை. (அ : 270) புழைத்தபோல (சு : 335)

புழைத்த வான் பெருவழி - துளைத்த வானத்தின் பெரிய வழி. பகழிபுக்கிருவர் மார்பிடைப் புழைத்த வான் பெருவழி போகக் காண்டியால். (அ : 1103)

புள் - 1. பட்சி. பறவை புள்ளின் குறிகொள்வான். (பா : 1354)
2. வண்டு.

புள் திருப்பாகன் - திருமால். புண்டரிகனும் புட்டிருப்பாகனும். (பா : 697)

புள்ளரசு - 1. சடாயு. புள்ளரசும் இன்னு உயிர்ப்பான். (ஆ : 999)
2. சம்பாதி. பொய்யுரை செய்யான் புள்ளரசு. (கி : 1009)

புள்ளாடிய கடும் போர்க்கணை - (ஊனுக்காகப்) பறவைகள் சுழலும் கொடிய போர் அம்புகள். (யுத் : 3016)

புள்ளி - 1. மதிப்பு. பெருமை. புள்ளி மால்வரை. (பா : 15)
2. புள்ளி போன்ற நிழல். புள்ளி கொள்வன பொன் விரி புன்னை. (பா : 64)
3. புள்ளி. புள்ளி நாரை. (கி : 935)
4. பெருந்தொகைக் குறிகளைக் கணக்கிடுவோர் நூற்றுக்கு ஒரு புள்ளியெனச் சங்கேதம் வைத்து எண்ணுவார்; அப்படி வைக்கும் புள்ளி. படை வீரர் தொகுபகுதி புண்ணினெடு குறிகள் புள்ளியென. (யுத் : 3426)

புள்ளிக்கர்க்கடம் - புள்ளிகளையுடைய நண்டு. காயும் புள்ளிக் கர்க்கட நாகம். (அ : 596)

புள்ளிக்குறி - புள்ளியாகிய குறிகள். புள்ளிக் குறியிட்டென ஒண் மீன் பூத்த வானம். (பா : 635)

புள்ளி மால்வரை - இமயமலை. பெருமை பொருந்திய பெரியவரை. (பா : 15)

புள்ளி மானுரி ஆடையன் - புள்ளிமான் உரிவையை ஆடையாக வுடைய சிவபிரான். (யுத் : 514)

புள்ளியம் புறவு - புள்ளிகளை யுடைய மணிப்புருக்கள். புள்ளியம் புறவிறை பொருந்து மாளிகை. (பா : 120)

புள்ளி வெங்கடகரி - செம்புள்ளிகளையுடைய கொடிய மதயானைகள். தகர்ந்து சாய்கிரி புள்ளி வெங்கடகரி புரள்வ போன்றவே. (கி : 460)

புள்ளி வெண் மொக்குள் - புள்ளியாயெழுகின்ற வெண்ணிற முள்ள கொப்புளம். வெதும்புமேனி புள்ளி வெண் மொக்கு ளென்னப் பொடித்து வேர்கொதித்துப் பொங்க. (சு : 307)

புள்ளின் குறி - பறவைகளின் நிமித்தங்கள். புள்ளின் குறிகொள் வான் இன்றே வரும் இடையூறது நன்றுய்விடும் என்றுன். (பா : 1354)

புள்ளின் குறிகொள்வான் - பறவைகளின் நிமித்தங்களை அறிபவன். (பா : 1354)

புள்ளின் பாகன் - கருடனை ஏறிச் செலுத்துவோனுகிய திருமால். புரஞ்சுடு கடவுளும் புள்ளின் பாகனும். (யுத் : 3430)

புள்ளின் வேந்தன் - 1. கருடன். மற்றை வெம்புள்ளின் வேந்தன் வருகிலன். (யுத் : 2875)

2 சடாயு. புள்ளின் வேந்தன் ஓய்வினன் உணர்வுந்தேய உரைத்திலன் உயிருந் தீர்ந்தான். (ஆ : 1026)

புள்ளினுக்கரசு - சடாயு. பூட்டிய கைகளாலப் புள்ளினுக் கரசைக் கொள் கென்று ஊட்டிய நன்னீர். (ஆ : 1036)

புள்ளுறங்காதன பொய்கை - நீர் நிலைகள் புட்களின் ஒலி நீங்காதன வாகும். பூவுறங்கினும் புள்ளுறங்காதன பொய்கை. (பா : 543)

புள்ளூர்தி - கருடனை ஊர்தியாகக் கொண்ட திருமால். உமைக்கு நாதற்கும் ஒங்கு புள்ளூர்திக்கும். (அ : 112)

புளகம் - கண்ணுடி. சேடகப் புளகச்சில்லி. (யுத் : 2398)

புளகு - மயிர்க்கூச்சு. உதைக்குந் தோறும் மயிர் புளகு உதிக்கின் ருரை. (சு : 205)

புளகுதித்தல் - மயிர் சிலிர்க்கப் பெறுதல். (சு : 205)

புளி - புளிச்சுவை. புளி யளாந் தேறல். (யுத் : 2783)

புளிஞர் - வேடர். வெவ்விய புளிஞரென்ன விலங்கியே மறைந்து வில்லால் எவ்விய தென்னை. (கி : 353)

புளிஞர் கோன் - வேடர் தலைவனான குகன். புணைகழற் புலவு வேற்கைப் புளிஞர் கோன். (அ : 1029)

புளித்தல் - வெறுத்தல். வெறுப்புண்டாக்குதல். புளிக்கும் கண்டகர். (சு : 659)

புழியளாங் தேறல் - புளிச்சுவை பொருந்தியகள். அமுதினேடும் புளியளாந் தேறலென்ன வெங்குரல் எடுத்த பாடல். (யுத்:2783)

புளினத் திட்டு - மணல் மேடுகளாகிய திட்டுக்கள். மின்னும் கரையில்லாப் புளினத் திட்டில். (யுத் : 3550)

புளினம் - மணற்குன்று. அயல் நந்துறை புளினம். (அ : 624)

புளினர் வேந்தன் - வேடர் தலைவனாகிய குகன். தழுவின புளினர் வேந்தன். (ஆ : 1025)

புளைதல் - துளைபடல். விசையால் புளைந்த பாய்பரி புரண்டன. (ஆ : 443)

புற்பாயல் - புல்லினாலாகிய படுக்கை. இவுளிப்பந்தி வந்த புற்பாயலான். (யுத் : 4115)

புற்றரவு - புற்றிலுள்ள பாம்பு. (சு : 554)

புற்றினூடு நுழை நாகம் - புற்றிலே நுழைகின்ற பாம்புகள். புற்றினூடு நுழை நாக மன்ன புகை வேகவாளிகள் புகப்புக. (யுத் : 2038)

புற்று - பாம்பு வசிக்குமிடம். அரிய புற்றுறைவ. (யுத் : 100) புற்றரவு. (சு : 554)

புற்றுடைய காடு - புற்றினையுடைய காடு. சின்னாளிற் புற்றுடைய காடெல்லாம் நாடாகிப் போமென்பார். (அ : 404)

புற்றுறை யரவு - புற்றிலே வசிக்கின்ற பாம்பு. புற்றுறை யரவெனப் புழுங்கு நெஞ்சினர். (யுத் : 58)

புறக்கடல் - அண்டத்துக் கப்பாலுள்ள கடல். அப்புறக் கடலுஞ் சுவையற்றதால். (யுத் : 679)

புறக்கொடை காத்தல் - புறங்கொடுத் தோடுவதைத் தடுத்து நிற்றல். தம்பி புறக்கொடை காத்து நிற்பக் கொன்று நின் தலைகள் சிந்தி. (யுத் : 1604)

புறகிடுதல் - புறமுதுகு காட்டுதல். போர்த்தலை புறகிட்டுற்ற புண் ணுடைந் தழும்பு. (யுத் : 3875)

புறங்காத்தல் - பாதுகாத்தல். மாப் போரிற் புறங் காப்பேன். (ஆ : 352)

புறங்கையால் தகைதல் - புறங்கையால் தடுத்தல். எறிதரப் புறங் கையாற் றகைந்து. (சு : 1286)

புறங் கொடுத்தல் - முதுகு கொடுத்தல். போரிடைப் புறங்கொடுத் தஞ்சிப் போந்தவர். (யுத் : 387)

புறங் கொள்ளல் - பாதுகாத்தல். அனையவர் தம்பால் வாழ்வியாது அயல் எவ்வழிப் புறங்கொண்டு வாழ்வார். (யுத் : 185)

புறஞ்சாய்தல் - ஒரு பக்கமாகச் சாய்தல். சேணினின்று புறஞ் சாய்ந்து கங்குற்றூம்பின் செல்ல. (ஆ : 677)

புறஞ்சிலிர்த்தல் - உடல் முழுவதும் சிலிர்த்தல். (வை.மு) தளிர்த்தன மயிர்ப்புறஞ் சிலிர்ப்பத்தண்மையால் குளிர்ந்தது அக்குரிசில் வால். (சு : 1170)

புறஞ்செய்தல் - 1. புறத்தே நின்று பாதுகாத்தல். நிழற்கள் போல் புறஞ் செய்தம்பியருட் பொலிந்தானரோ. (பா : 1191)
2. **அழகு செய்தல்.** புறஞ் செய் மேகலையுந்தாழ. (பா : 1214)

புறத்தலம் - உடம்பிடம். புறமயிர்த்தலம் பொடித்தன போன்றன பசும்புல். (கி : 480)

புறத்திறன் - அறத்திற்கு மாறான மறநெறி. அறத்திறனலே எய்தினை யன்றெ அது நீயும் புறத்திறனலே பின்னுமிழக்கப் புகுவாயோ. (ஆ : 739)

புறத்துப் போக்குதல் - வெளியே அனுப்பிவிடுதல். அப்புறப்படுத்தல். மக்கள் தம்பியர் போன்றவரல்லாரைப் புறத்துப் போக்கினன். (யுத் : 21)

புறத்துலகு - வெளியுலகு. வானத்தொடுங்கலில் பெருந்தலை புறத்துலகொடொன்ற. (கி : 885) [பா : பே]

புறத்துறல் - வெளியே வருதல். புறத்துற எதிரே வந்து போர்தரப் புகறி. (யுத் : 931)

புறத்தொழில் - குற்றேவல். வெளித் தொண்டு. பூவைபோல் நிறத் திறைற்குப் புறத்தொழில் புரிந்தவன்றே. (பா : 421)

புறந்தருதல் - 1. பாதுகாத்தல். புறந்தரும்பண்பிஞய உயிரொடும் பொருந்திஞனே. (யுத் : 869)

2. முதுகு காட்டல். வானவர் போர் கிழிந்து புறந்தரப் போர் செய்தான். (யுத் : 1027)

புறநிலே - அப்பாலுள்ள. புறநிலேப் பெருஞ் சக்கர மால்வரைப் பொருப்பு. (யுத் : 3223)

புறநிலேப் பெருஞ் சக்கர வாளவரைப் பொருப்பு - புறத்தே நிலேத் துள்ள பெரும் சக்கரவாளம் என்கின்ற பெரிய மலே. (யுத்: 3223)

புறநிற்றல் - 1. புறத்திலே நிற்றல். அலியென்பவர் புறகின்றவர். (யுத் : 1143)

2. மறைவிலே நிற்றல். புற நின்ருர்க்கும் பழிபட வாழ்கிற் பாரும் உளரோ. (யுத் : 1647)

புறநின்றவர் - புறத்திலுள்ள வீரர். (யுத் : 1143)

புறநின்ருர்க்கும் பழிபட - மறைவிலிருந்து ஆரவாரித்துத் தூற்றும் பழி யுண்டாக. (யுத் : 1647)

புறப்படல் - வெளியேறல். புறப்பட. (யுத் : 4037)

புறப்படு புறப்படு - வெளிப் புறப்படு புறப்படு. வெகுளி விரைவு பற்றியது அடுக்கு போர்அடா பொருதியாயிற் புறப்படு புறப்படு என்ருன். (யுத் : 259)

புறப்பாம மாகடல் - பரவிய பெரும் புறக்கடல்- நேமி மால்வரை மதிலாக நிள் புறப்பாம மாகடல் கிடங்காக. (பா : 174)

புறப்பொருள் - வெளிப்படையான பொருள். நான் மறை அகப் பொருள் புறப்பொருள் அறிவார். (யுத் : 162)

புறம் - 1. முதுகு. பின்பக்கம். செருவிற் புக்கிற்றன போகாதன புற முக்கன. (யுத் : 1138)

2. உடல். மேனி. புன்புற மயிரும் பூவா. (சு : 7) நற்புறக் கோரை. (யுத் : 674)

3. வெளி வேடம். புறங்காண அகங்காண. (அ : 50

4. மற்றை யுலகத்தவர். (வை.மு) புறங்காண. (ஆ : 50)

5. வீரம். மறம் திறம்பல் வலிய மெனுமனம் புறந்திறம்பல். (கி : 337)

6. அக்கிரம வழி. (உ.வி) (கி : 337) அறத்திற்குப் புறம்பான செயல். (யுத் : 2632)

7. பக்கம். ஒரு பால். போக்கிலா வகை புறம் வளைத்துப். பொங்கினர். (யுத் : 1883)

8. வெளி. புறங்கிடந் துழைப்ப தென்னே. (யுத் : 2867)

9. இடம். புறமும் உள்ளும் நிறையப் புகுந்த வால். (யுத்:3582)

10. புறம்பானர். புறம் ஏதுமிலாரொடு பூணகிலாய் மறமே புரிவார் வச மாயினையோ. (யுத் : 2633)

11. ஏழனுருபு. கான்புறம் சேறலில். (அ : 561)

புற மயிர்பூத்தல் - உடல் மயிர் முளைத்தல். புன்புற மயிரும் பூவா (சு: 7)

புறமாதிர வீதி - புறத்தே யுள்ள திசைகளின் கடை எல்லை ஒழுங்கு. மண் மேலினரோ புற மாதிர வீதியாரோ. (கி : 279)

புறவடி - அடிப்புறம். மழலையாள் தான் புறவடிக் கிழுக்கம் மன்னே. (கி : 777)

புறவம் - 1. காடு. முல்லை நிலம். பூவியல் புறவ மெங்கும். (கி:478)

2. புறா. பேடை நல்லணி முனிந்தன மென்னடைப் புறவம். (அ : 507) [பா : பே]

புறவு - 1. முல்லை நிலம். முதிரைகள் புறவினுள்ள. (பா : 53)

2. புறா. புள்ளியம் புறவு. (பா : 120) புறவொன்றின் பொருட் டாகத் துலைபுக்க மைக்கடங்கார் வாள் வேந்தன். (யுத் : 1574)

புறன் - 1. வெளியுலகு. புறன் அவன் அலருற. (சு : 502)

2. பக்கம். இந் நகரின் புறனெர் குன்றிடை இறுத்தான். (யுத் : 704)

3. புறம். புறன் நின்று காண்டல் போக்கி. (யுத் : 3320) (அ : 1)

புன்கட் பொறி யாக்கை - புல்லிய கண்ணையுடைய இவவுடம்பு. (அண்) துன்பத்தைத் தருகின்ற ஐம்பொறிகளையுடைய உடல். (வை.மு) (அ : 424)

புன் கண் - 1. துன்பம். புன்கணர் புன் கண் நீக்கும் புரவலன். (யுத் : 722) புன்கட் பொறியாக்கை பொறுத்து. (அ : 424 காதற் புன்கண் நோய். (யுத் : 1502)
2. வறுமை பொன் னேக்கியர் தம் புலனேக்கிய புன்கணேர். (ஆ : 931)

புன்கணர்-1. வருந்துபவர். புன்கணர் புன்கண் நீக்கும் புரவலன். (யுத் : 722)
2. இழிகுண முடையோர். பொய்க்கரி புகலும் புன்கணர். (சு : 808)

புன்கணேர் - பொலிவிழந்த கண்ணையுடையோர். வறுமையுடைய காரணத்தால் பொலிவிழந்த கண்ணையுடையவர் ஆவர்; ஆதலின் ஆகு பெயராய் வறியவர் என்னும் பொருளையுணர்த்திற்று. பொன் நோக்கிய தம் புலனேக்கிய புன்கணேரும். (ஆ : 931)

புன் கவி - புல்லிய கவி கல்லாதான் செய்த இழிந்த கவி. இறையும் ஞானமிலாத என் புன் கவி. (பா : 9) புன் கவியெனத் தெளி வின்றி. (பா : 106)

புன்கை - சிறிபகை. சேட்டிளங் கடுவன் புன்கையில். (கி : 936)

புன் தொழில் - ஈனமாகிய செய்கை. புன் தொழில் விலக்க மேற் கொளாய் (சு : 451)

புன்பகை - புல்லிய பகை. எங்கள் வானரத் தொழிலுக் கேற்ற புன்பகை காட்டும் யான். (யுத் : 880)

புன்புலப் பிறவி - அறிவைப் புல்லி தாக்குகின்ற பிறவி. புன் புலப் பிறவியின் பகைஞன். (யுத் : 327)

புன்புலம் - 1. புல்லிய அறிவு. அற்பஞானம். (யுத் : 327)
2. புல்லிய இடம். புன் புலக் களத்திடைப் பொருத. (யுத்:1081)

புன் புறப் பிறவியின் பகைஞன் - புல்லிய உடம்போடு கூடிய உயிர் களின் பிறவி நோய்க்குப் பகைவனகிய கடவுள். (யுத் : 327)

புன்புறமயிர் - சிறிய உடம்பு மயிர். புன்புற மயிரும் பூவா... வன்பறழ். (சு : 7)

புன் பொறிநா - கீழ்மையுள்ள நா வாகிய பொறி. நின் புன் பொறி நாவைச் சேதியாது. (அ : 164)

புன் போர் - புல்லிய போர். இழிந்த போர். புன்போரென நின்றயல் போயினனுல். (யுத் : 2335)

புன் மக்கள் தருமம் - புல்லிய மக்களாகிய அரக்கர்களின் செயல். புன்மக்கள் தருமம் பூண. (யுத் : 1369)

புன் மகன் - அற்ப பிராணி. ஒழுக்கமற்றவன். புன்மக கேட்டி. (யுத் : 1640) புன்மகன் கேட்டி. (யுத் : 1640) [பா : பே]

புன்மை - 1. சிறுமை. எளிமை. சொற்கொடு நெஞ்சம் போழ்ந் தாள் புன்மையை நோக்கிப் புலர்கின்ருன். (அ : 221) மரம் போல நின்ருெழிந்த புன்ருெழிலேன். (ஆ : 996)
2. இழிவு. பழி. இதன் மேலோர் புன்மை தெரிப்பின் வேறினி எற்றே. (ஆ : 733) பிறப்பெனும் புன்மை. (யுத் : 1352) புன்தலைக் குரங்கு. (சு : 890)
3. இழிந்த செயல். ஈனம். விணை வென்ரேன் செய்யும் புன்மை யாது கொல். (சு : 483)
4. ஆசௌசம். தீட்டு. புன்புலத் தரக்கன் தன்னைத் தீண்டிய புன்மை தீர. (யுத் : 837)
5. பாவம். தீவினைகள். மலங்கள். (கலா) சேதுவென்னும் இங்கிதின் எதிர்ந்தோர் புன்மை யாவையும் நீக்குமன்றே. (யுத் : 4089)
6. சிறுமை. புன்போர். (யுத்:2335) சிறு புன்கை. (கி : 935) புன்மயிர். (கி : 1021)
7. இழிகுணம். புலமைதிர் புன்மை. (கி : 1029)
8. அற்பமானது. (செயல்) புன்மை தொடங்கல். (யுத் : 2829) புல்லனேன். (அ : 1129) மாமாயப் புன்பிறவி. (ஆ : 996)

புன்மை தொடங்கல் - புல்லிய செயலைத் தொடங்காதே. (யுத் : 2829)

புன்மை சால் ஒருத்தி - கீழ்த்தன்மை மிக்க ஒருத்தி. (யுத் : 4010)

புன்மைப் புகழ் - புகழுக்கு இழிவாக்குவது. (வை.மு) (கலா) யாரைப் போமென வைப்போம் என்பது புன்மைப் புகழன்றே. (கி : 1015)

புன்மையின் நின்ற நீராய் - அற்ப விஷயத்திற் பொருந்திய குணத்தையுடையவனே. புன்மையின் நின்ற நீராய் செய்வது புகறி. (ஆ : 762)

புன்றலைப்புனம் - புன் செய்யாகிய தினைப்புனம். புன்றலைப்புனம் காப்புடைபோதர. (பா : 65)

புன்றவர் - புல்லிய தவத்தையுடையவர். புன்றவர் இருவர் போரைப் புகழ்தியோ. (யுத் : 1255)

புன்றொழில் - 1. புன்மையான செய்கை. இழிந்ததொழில். புன்றொழிற் குரங்கொடு புணரும் நட்பனே. (கி : 262) புன்றொழிலினர் இசை பொறுத்தல் புலமைத்தோ. (யுத் : 63) (சு : 454) புன்றொழில் இராவணன். (யுத் : 891)

2 புல்லிய தொழிலாகிய பிழை. வணங்குதி வணங்கவே உன் புன் றொழில் பொறுக்கும்- (யுத் : 275)

3. கீழாகிய தொழில். அரக்கன் செய்த புன்றொழில் பொறையிற்றுமால். (யுத் : 3885)

புன் றொழிலினர் - அற்பத் தொழிலைச் செய்திட்டவர். (யுத் : 63)

புன் றொழிற் கிராதர் - இழிவான செயல் புரியும் வேடர்கள். புன்றொழிற் கிராதராகிப் போகெனப் புகறலோடும். (பா : 677)

புன் றொழிற் புலையரசு . தாழ்வான செயலால் இழிந்த அரச பதவி. (அண்) இழிவான தொழிலைச் செய்ய வேண்டிவரும் கீழ்மையான அரசு. புன் றொழிற் புலை யரசினை வெஃகினேன். (யுத் : 2587)

புன்னிலை - அற்பத்தன்மை. என் புன்னிலைக் குரக்கியல் புதுக்கினேன். (கி : 694)

புன்னுனை - 1. புல்லின் நுனி. புன்னுனைப்பனி நீர். (யுத் : 1258)
2. புல்லிய நுனி. புன்னுனைப் பகழி. (யுத் : 2185)

புன்னுனை நீர் - புல்லின் நுனியில் தங்கியிருக்கின்ற நீர்த்துளி. புன்னுனை நீரின் நொய்தாப் போதலே புரிந்து நின்ற இன்னுயிர் இழத்தல் அஞ்சி. (ஆ : 882)

புன்னுனைப் பகழி - புல்லிய நுனியை யுடைய அம்பு. இறுக்கிய பாசமிற்றால் புன்னுனைப் பகழிக் கோயுந் தரத்தரோ. (யுத் : 2185)

புன்னுனைப் பனிநீர் - புல்லின் நுனியில் ஒட்டிக்கொண்டுள்ள பனிநீர். புன்னுனைப் பனி நீரன்ன மனிதர். (யுத் : 1285)

புன்னை - புன்னை மரம். புன்னைக் குறும்பூ நறுந்தாது. (யுத் : 6) (யுத் : 332)

புன்னைக் குறும்பூ - புன்னையின் குறிய மலர். (யுத் : 6)

புன்னைப் பூந்தாது - புன்னை மலரின் மகரந்தத்தாதுக்கள். புன்னைப் பூந்தாது மானும் பொற்பொடி யப்பி விட்டார். (பா : 1218)

புனங்காக்கும் கொற்கொள் வேற்கணூர் - தினைப் புனம் காவல் புரிகின்ற கொற்றெழில் வாய்ந்த வேல் போலுங் கண்களையுடைய கொடிச்சியர். (அ : 753)

புனங் காவற்பறை - தினைப்புனம் காவற்கு வைத்த பறை. அகன் புனங் காவற் பறை யெடுத் தொரு கடுவன் நின்றடிப்பது பாராய். (அ : 758)

புனங் கொள் கார்மயில் - காட்டில் வாழ்கின்ற கார் காலத்துக் களிக்கும் மயில். புனங்கொள் கார் மயில் போலுமொர் பொற் கொடி. (பா : 1176)

புனங் கொள் குரங்கு - கொல்லையில் திரிகின்ற குரங்கு. புனங் கொள் புன்றலைக் குரங்கு. (யுத் : 839)

புனத்துழாய் - புனத்தில் விளைகின்ற துளசி. புனத்துழாய் மாலை மார்பிர். (யுத் : 2881)

புனத்துழாய் மாலை - காட்டில் விளைகின்ற திருத்துழாய் மாலை. (யுத் : 2881)

புனத்துறை மயில் - தினைக் கொல்லையில் தங்குகின்ற மயில். புனத் துறை மயிலனுள். (பா : 1107)

புனம் - 1. விளை நிலம். காடும் புனமும். (பா : 164)
2 காடு. புனங் கொள் கார் மயில். (பா : 1176) (ஆ : 772) புனமயில் சாயலின். (ஆ : 840) புனத்துழாய். (யுத் : 28)
3. தினைப்புனம். புனங்காவற் பறை. (அ : 758)
4. கொல்லைப்புறம். புனங் கொள் புன்றலைக் குரங்கு. (யுத்:839)
5. நந்தவனம். புனத்துழாய் மாலையான். (யுத் : 1607)

புனமான் - கொல்லையில் வாழும் மான். (மான் போன்ற பிராட்டி) புன மானை நாடுதல் புரிஞர். (கி : 43)

புனர் பூசம் - புனர் பூச நட்சத்திரம். வேய் புனர் பூசம். (பா:282)

புனல் - 1. உண்ணுநீர். வானுறு நண்ணிப் புனல் வற்றிட நக்கும். (பா : 162)
2. கடல். அள்ளற் பள்ளப் புனல்சூழ் அகன் மாநிலம். (அ : 357)
3. நீர் நிலை. இரும் புனலாடிய... மைந்தரும் மாதரும். (பா : 1043)
4. நீர் வளம். புனல் திருநாடு. (அ : 864)

புனல் குடைதல் - நீராடுதல். நீரில் மூழ்கி விளையாடுதல். புதுப் புனல் குடையும் மாதர். (பா : 42) அலை புனல் குடையுமால். (சு : 1272)

புனல் நாடு - நீர்வளம் மிக்க நாடு. (யுத் : 2643)

புனல் படிதல் - புனலில் முழுகுதல். நீறுதோய் மணிமேனியர் நெடும்புனல் படிந்தார். (அ : 724)

புனல் படீஇ - நீரிலே குளித்து. நிருபர்க் கேந்தலும் தூயநற் புனல் படீஇ. (அ : 264)

புனல் யாறு - நீராலாகிய யாறு. யானைபட்ட வழி புனல் யாறெலாம். (யுத் : 1012)

புனல் வழங்காமை - நீரைப் பாய்ச்சாமை. மலர்ந்த வாயில் புனல் வழங்காமையால் உலர்ந்த. (அ : 815)

புனல் வறந்த கானயாறுகள் - நீரற்ற காட்டாறுகள். வானயாறு மின் மலர்ந்தன வெனப் புனல் வறந்த கான யாறுகள் கணமணி யிமைப்பன காணாய். (அ : 755)

புனலவன் - வருணன். எகினம் யாவையும் புனலவன் புகழின் வீந்தவால். (யுத் : 573)

புனலாசை - நீர் வேட்கை. தேடரு நலத்த புனலாசை தெறலுற்றார். (பா : 1246)

புனலின் படை - வாருணாஸ்திரம். புனலின் படை தொடுத்தான் அதுவே கொடு பொறுத்தான். (யுத் : 3021)

புனலின்மை - நீரில்லாமல் வறண்டு போதல். நதியின் பிழையன்று நறும் புனலின்மை. (அ : 426)

புனலேறுதல் - நீரைக்கடத்தல். அனையர் அப்புன லேறினர். (அ : 707)

புனற் கிறைவன் - நீர்க்குரிய கடவுளாகிய வருணன். தியிடை நடப்பான் போல் நெடும் புனற் கிறைவன் சென்ருன். (யுத்:599)

புனற் கொடி - நீர்ப்பெருக்கு. பொருபுனற் கொடிவரின். (பா : 528)

புனற் சிறை - புனல் கட்டப்பெறும் நீர் நிலேகள். மைக்கரி புனற் சிறைகள் ஏரு. (பா : 923)

புனற் பண்ணே - நீர் விளேயாட்டு. வெண்டிரை பாயும் திம்புனற் பண்ணே. (பா : 1013)

புனன் மொண்டிடுமோதை - நீரை முகக்கின்ற [ஓசை. புனல் மொண்டிடு மோதையின் மேல் கையார் கணே சென்றதலால் கண்ணில் தெரியக் காணேன். (அ : 376)

புனஞடு - நீர்நாடு. (சோழநாடு) அணேய பொன்னி அகன் புனல் நாடொரீஇ. (கி : 943) (கோசலநாடு) செய்யார் புனல்நாடு திருத்துதியால். (யுத் : 2643)

புனித நூல் - தூய்மையான நூல்கள். புனித நூல் கற்றுணர் புந்தி யோய். (யுத் : 3971)

புனிதம் - தூய்மை. புனிதமான அத் தீர்த்தம் அகன் கோதாவரி யென்பர். (கி : 764)

புனித மாதவத் தணங்கு - பரிசுத்தமான பெருந்தவத்திணேயுடைய பிராட்டி. புனித மாதவத் தணங்கிணேச் சுமந்தனன் போவென் இனிதின் என்பது நிணேந்து. (சு : 469)

புனித மாதவம் - தூய பெரிய தவம். அரச நிற்குறு பொருளறியில் புனித மாதவ மல்லதொன்றில் லெனப் புகன்ருன். (அ : 41)

புனிதர் - தூயவராகிய பெரியோர். புண்ணிய நதியாடிப் புனிதரை வழிபாடுற்று. (அ : 675)

புனிதவாளி - பரிசுத்தமான அஸ்திரம். புக்கோடி உயிர் பருகிப் புறம்போயிற் றிராகவன்தன் புனிதவாளி. (யுத் : 3865)

புனித வேதியர் - தூய மறையவர். புனித வேதியர்க்கும் மேலுறை புத்தேளிர்க்கும் இனியன இழைத்தி. (அ : 564)

புனிதன் - தூயவன். (கண்ணபிரான்) பொறிவரி யரவிஞடும் புனிதன். (பா : 26) (சிவபிரான்) புனிதன் எய்த வில் காணிய வந்தனன் என்ன. (பா : 809)

புனிற்று - அணிமையில் கன்றை ஈன்ற பசு. பொழிந்த மாநிலம் புற்றரக் குமட்டிய புனிற்று. (கி : 490)

புனிற் றீன்ற கன்று - ஈன்றணிமை யுள்ள கன்று. புனிற்றீன்ற கன்றையும் ஊட்டில பறவை. (அ : 505)

புனிறு - ஈன்றணிமை. புனிற்றீன்ற கன்று. (அ . 505)

புனை - 1. தண்ணீர். பூம்புனைச் சிலம்புவ புள்ளினம். (பா : 62)

2. அழகு. புனைநகர் அணிவீர். (பா : 1263) புனைதாள். (ஆ : 964)

புனைகலம் - அணி. அழகின் புனைகலத்தை. (யுத் : 293)

புனைகழல் - அணிந்த வீரக்கழல். புனைகழல் இராகவன் புயத் தையோ. (சு : 398) [பா : பே]

புனைதல் - 1. நிரப்புதல். நிசாசரன் மேனியைப் புனைவன் வாளியினால் என்னப் பொங்கினன். (யுத் : 3834)

2. அணிதல். ஆவி யந்துகில் புனைவ தொன்றன்றி மற்றறியாள். (சு : 340)

3. ஏற்றல். நெடிதாசி புனைந்து போனன். (சு : 73)

4. சூட்டுதல்- நினையலோவிடா வன்பழி புனைதலோ. (அ : 1174)

புனைந்துரை . சிறுமை யுள்ளதைப் பெருமையாக வருணித்துக் கூறுவது கட்டு மொழி. இன்ன போலு மென்றுரைத்த போதும் புனைந்துரை. (கி : 782)

புனைமணி இருக்கை - அலங்கரிக்கப் பெற்ற நவமணிகளா லாகிய ஆசனம். பூவணை மாற்றி வேறோர் புனை மணி இருக்கை புக்கான். (யுத் : 900)

புனைமலர்த் தடக்கை - அழகிய செந்தாமரை மலர் போன்ற பெரிய கை. அண்ணலும் அருத்தி கூரப் புனைமலர்த்தடக்கை நீட்டிப் போந்தினி திருத்தி என்றான். (கி : 98)

புனைமா மகுடம் - அலங்கரிக்கப்பெற்ற சிறந்த முடி. அவனைப் புனைமா மகுடம் புனைவித்து. (அ : 336)

புனையாரம் - சூடும் பூமாலை. பொன் சேர் மென்காற் கிண்கிணி யாரம் புனையாரம். (பா : 594)

புனையு நூன் முனிவன் - பூணூல் அணிந்த வசிட்ட முனிவன். (யுத் : 4161)

புனைவு - கூட்டிக் கூறும் புனைந்துரை. வஞ்சனை மொழி. புரவலன் உறு பொருள் புனைவில் வாரினேன். (அ : 891)

பூ

பூ - 1. பூமி. பூவின் ஓரிட மின்றியே நாடினன். (பா : 513) பூப்புண் தர. (யுத் : 2349) பூவெனும் நாமம். (யுத் : 4286) பூமின் கேள்வன். (பா : 550)

2. அழகு. பொலிவு. பூவியல் வாளியால். (ஆ : 496) பூநிற விமானம். (யுத் : 4285) பூவராவு வேல். (உ. வி) (ஆ : 510)

3. மலர். பூநீர் ஆட்டுவார் அமரர் மாதர். (சு : 198) பூநிறச் கண்கள். (யுத் : 153) பூவடி. (யுத் : 4265) பூவரு புரிகுழல். (கி : 948)

4 கூர்மை. பூவெழுமழு. (அ : 77)

5. ஓர் அணி. ஏடுண்ட பசும் பொற் பூவும். (யுத் : 2776)

6. தாமரை. பூவரு மழலை யன்னம். (கி : 807) சீறடிப் பூமுகம் நிலனுறப்புல்லி. (ஆ : 826)

பூக் கவர்ந்துண்ணி - பூவைப் பறித்துண்ணும் குரங்கு. மாக்கவந் தனும் வலி தொலைந்த வாலியர்ம் பூக்கவர்ந் துண்ணியும் போலும். (யுத் : 1499)

பூக்கிளர் பந்தர் நீழல் - மலர்களின் கிளர்ச்சிமிக்க பந்தலின் நிழல். (யுத் : 3132)

பூகக் கழுத்து - பாக்கு மரம் போன்ற கழுத்து. பூகக் கழுத்தொடு மறையப் போர்த்த நங்கை. (கி : 616)

பூகத் தாறு - பாக்கு மரத்தின் குலைகள். தள்ளரும் பொன்னிறம் பொருந்தின பூகத் தாறெலாம். (கி : 560)

பூகம் - 1. கமுகு. பூக ஊசல் புரிபவர். (பா : 1184)

2. கமுகின் கழுத்து.

பூகவனம் - கமுகவனம். பூகவன மூடு படுகர்ப் புளின முன்றில். (அ : 545)

பூகவூசல் - பாக்கு மரத்தில் தொங்கவிட்ட ஊஞ்சல். பூகவூசல் புரிபவர். (பா : 1184)

பூங்கணை - மலரம்பூ பூக்களாகிய அம்பூ. காமன் பூங்கணை. (யுத் : 5) (யுத் : 463) பூங்கணையால் உயிர் வாங்குமவனும். (ஆ : 356) (ஆ : 883)

பூங்கழற் காவலன் - பூப் போன்ற மெல்லிய திருவடியை யுடைய இராமன். அப்பூங்கழற் காவலன் வனத்துப் போயது தீங்கிழைத்த தனினே. (அ : 853)

பூங்குலாநகர் - அழகு விளங்குகின்ற அயோத்திமாநகரம். (யுத் : 4063)

பூங்குழல் - 1. பூச்சூடிய கூந்தல். போகாவுயிர்த் தாயர் நம் பூங் குழற் சீதை என்றே ஏகாய். (அ : 443)
2. சீதாபிராட்டி. பூங்குழற் கற்றையின் நாவி நாண்மலர் கங்கையு நாறினுள். (அ : 638)

பூங்குழை மகளிர் - பொலிவுமிக்க காதணிகளை யுடைய பெண்டிர். (யுத் : 2231)

பூங்கொம்பர் - மலர்க் கொம்புகள். பொய்கை யன்னங்களேந்திய பூங்கொம்பர் பொலிவ. (கி : 19)

பூச்செலாதவள் - பூவின் மீது அடிவைத்துச் செல்ல மாட்டாத மென்மையான பாதங்களை யுடையவள். சீதாபிராட்டி. பூச்செலா தவள் நடை போல்கிலாமையால். (யுத் : 573)

பூசப் பூச - பூசுந் தோறும். பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினுள். (பா : 643)

பூசம் - பூச நட்சத்திரம். பூசமும் மீனமும் பொலிய நல்கினுள் (பா : 285)

பூசல் - 1. பகைமை. இன்னும் பூசல் விரும்புதியோ. (கி : 31)
2. அழுகை. உறுதன்மை ஈதெனக் கரையாதே னிடு பூசல். (கி : 397)
3. போர். ஒன்றோடொன்று மோதுகை. பூசலே பிறிதில்லை. (யுத் : 963)
4. ஆரவாரம். பேராரவாரம். பூசலின் எழுந்த வண்டு. (பா : 573)
5. பொல்லாங்கு. (வை.மு) துன்பம். (அண்) ஒரு மாற்றம் பேசில் பூசல் பெரிதாமோ. (கி : 24)

6. வருத்தம். ஒரு மாற்றம் பேசில் பூசல் பெரிதாமோ. (கி : 24)

பூசல் முகம் - போர் முகம். பூசல் முகத் தொரு கான் முனை போத. (யுத் : 2264)

பூசல் மேகலை - ஆரவாரிக்கும் மேகலை. பூந்துகி லோடும் பூசல் மேகலை சிலம்பு பூண்ட மாந்தளி ரெய்த. (யுத் : 2780)

பூசலார் - பூசிக்கொள்ளாதவர். மயக்கந் தன்னுற் பூசினர்க் கிரட் டியானுர் பூசலார் புகுந்துளோரும். (யுத் : 4291)

பூசலிடுதல் - 1. பேரொலிபடக் கதறுதல். புரண்டவன் பூசலிட்டான். 2. ஆரவாரஞ் செய்தல். நூபுரமு மேகலையு நாலுமற லோதிப் பூமுரலும் வண்டு மிவை பூசலிடு மோசை. (ஆ : 258)

பூசனை - 1. தேவ பூசை. மெய் கொள் பூசனை விதிமுறை இயற்றி. (யுத் : 2581) (யுத் : 4159)
2. கௌரவிக்கை. உடைத்த பூசனை வரன் முறை இயற்ற. (யுத் : 3236)

பூசனைத் தொழில் புரிதல் - பூசித்தல். பூசனைத் தொழில் புரிந்து. (யுத் : 2377)

பூசனை படைத்தல் - பூசனை செய்தல். பார் படைத்தவன் படைக்கு ஒரு பூசனை படைத்திர். (யுத் : 2576)

பூசனை பேணுதல் - உபசாரஞ் செய்தல். புக்குறையிட நல்கிப் பூசனை முறை பேணி. (அ : 717)

பூசாதொருகாற் போகாது - ஒருதரமாவது பூசாமற் போகாது. (யுத் : 6)

பூசுதல் - 1. இயைதல். ஆயிரம் உருவொன்ருகப் பூசினபிளப்பு. (யுத் : 2983)
2. படிதல். மாசு புடை பூச. (கி : 863)
3. பொருந்தித் தடவுதல். அண்டப் பித்திகை பூசின வெண் மயிர் பொடித்த வெம் பொறி. (கி : 247)
4. புனைந்து கொள்ளுதல். அப்பிக்கொள்ளுதல். வாசம் மென் கலவைச் சாந்து என்றினைய பூசினர்க்கு இரட்டியானுர் பூசலார் புகுந்துளோரும். (யுத் : 4291)

பூசுரர் - அந்தணர். பூசுரர்க் கலக்கணீந்தான். (யுத் : 923) இராக் கதப் பூசுரர். (யுத் : 2556)

பூசுரர்க் கொரு கடவுள் - பிராமணர்களுக்கு ஒப்பற்ற கடவுள். பூசுரர்க் கொரு கடவுள் மேற் சென்றது போலாம். (யுத்:3764)

பூசுரேசர் - நிலத் தேவருள் தலைவர். பூசுரேசர் வேதங்களியம் பினர். (சு : 74)

பூசை - பூனை. ஒரு பூசை முற்றவும் நக்குபு புக்கென. (பா : 4) (பா : 554)

பூஞ்சதுக்கம் - பூவேலைப்பாடுள்ள சதுரமான பலகை. பூக்கள் வைக் கப்பட்ட பலகையுமாம். அன்ன பூஞ் சதுக்கம். (சு : 418)

பூஞ்சிலம்பு - அழகிய சிலம்பு. (யுத் : 3620)

பூட்கை - 1. யானை. புழைக்கை என்பதன் திரிபு. திசைப் பூட்கை. (சு : 863) (யுத் : 1020) (யுத் : 496)
2. அணிகள் புனைந்த கை. (அண்) புக்கன கடலிடை நெடுங் கரப் பூட்கை. (சு : 850)

பூட்கைக் குப்பை - யானைத் திரள்கள். பூட்கைக் குப்பைகள் இடைந்தன. (யுத் . 1770)

பூட்சி - 1. கோட்பாடு. மேற்கொள்ளும் உறுதி. கொள்கை மேற் கோள். உறுபொருள் புகலும் பூட்சியோர். (யுத் : 78) [பா : பே] தாதை சொல் புரக்கும் பூட்சியான். (அ : 1196)
2. திருமேனி, உருவம். புண்டரீகத் தடம் புரையும் பூட்சி யான். (யுத் : 357)

பூட்டமைத்தல் - பூட்டினை மாட்டுதல் உடம்பிற் பூட்டுதல் கவசம் பூட்டமைத்திட்டனன். (அ : 1094)

பூட்டவிழ்தல் - கச்சு அவிழ்தல். (அ : 87)

பூட்டறுதல் - தேரினின்றும் விலகுதல். புண்ணுற உயிருகும் புரவி பூட்டற. (யுத் : 1786)

பூட்டு - 1. தலைக் கோலத்தில் ஓரணி. (அண்) தலைக் கோலத்தின் உறுப்பாய் நெற்றிக்குமீது வட்டமாய்க் கட்டப்படும் பதுமராகக் கற்களினாலியன்ற ஓர் ஆபரணம் போலும். பூட்டறப் பூட்டு மிட்டார். (பா : 1206)
2. கச்சு. கச்சின் முடி. பூட்டவிழ் கொங்கையர். (அ : 87)

3. கோப்பு. (கலா) வயப் பரி பூட்டுந் தேரும் பொடித் துகளாயவே. (யுத் : 1034)

பூட்டுதல் - 1. உண்ணுமாறு கொடுத்தல். இணைத்தல். வாய்ப்புதல் பூட்டில புரவிகள். (அ : 805)
2. கட்டுதல். தேவ தாரத்தும் சந்தினும் பூட்டின சிலமா. (பா : 898)
3. அணிதல். பூட்டுவார் முலை. (சு : 198)
4. பிணித்தல். (அண்) பூட்டுறு பாசம். (யுத் : 2194)

பூட்டுவார் முலை - கச்சணிந்த தனபாரம். (சு : 198)

பூடு - பூண்டு. ஓர் பூடும் ஆடுதலில்லை இப்பூமியில். (யுத் : 682)

பூண் - 1. வாகு வலயம். பூணியன் மொய்ம்பினன். (பா : 809)
2. ஆபரணம். அணிகள். பூணினும் புகழே அமையும். (பா : 105) (கி : 200) பூணுற்ற திரள் தோள் வீரன். (யுத்:4310)

பூண்கள் - அணிகள். பூந்துகில் ஆய அப்பூவை பூண்களே. (கி : 202)

பூண்டக - பூணத் தகுதியாக. பூண்டகக் கோலம் வல்லை புனைந்தனை. (யுத் : 3959)

பூண்ட தேரவன் - (ஏழு குதிரைகள்) பூட்டிய தேரையுடைய சூரியன் மகன். (கி : 743)

பூண்ட மாதவன் - பெருந்தவத்தை மேற்கொண்ட முனிவன். (பரத்து வாசன்) பூண்ட மாதவன் அம்மொழி விரும்பினன் புகல. (அ : 721)

பூண்ட விரதம் - மேற்கொண்ட விரதம். பூண்ட விரதத்தை விடுதும் என்றல் நகை யுடைத் தாகுமன்றே. (ஆ : 795)

பூண்டன - பூட்டப் பட்டன. ஆளிகள் பூண்டன. (ஆ : 398)

பூண்பாய் - பற்றுள்ளவனுவாய். பூண்பாய் போல் நிற்றியால். (ஆ : 1181)

பூண்பால் - அணிகலத்தின் பகுதி. நாண் மடம் அச்சம் இவையே தம் பூண்பாலாகக் காண்பவர். (அ : 224)

பூண் வெறுக்கை - அணிகலன்களின் மிகுதி. களித்து வீசி வெறுத்த பூண் வெறுக்கையாலே தூரும் இவ் வீதியெல்லாம். (சு : 134)

பூணலம் - ஆபரணத்தின் அழகு. ஆபரணம் போன்று செய்யும் அழகு. பணி பழுத்தமைந்த பூணலத்தின் பண்பினுல். (யுத் : 472)

பூணுதாய் - பெறுகின்ருபில்லை. (வை.மு) எப் பொருளினும் சிறிதும் பற்றுப் பூணுய் நீ. (அண்) பூண்பாய் போல் நிற்றியால் யாதொன்றும் பூணுதாய். (ஆ : 1182)

பூணுரணி - பூண்பதற் குரிய அரிய அணிகலன்கள். பூணுரணியும் முடியும் பொன்னுசனமும் குடையும். (அ : 361)

பூணித்தல் - பிரதிஞ்ஞை செய்தல். பூணித்திவை உரை செய்தனே. (யுத் : 1134)

பூணிப்பு - 1- விரதம். தீர்மானம். அரக்கன் பஃறலை பூழியிற் புரட்டல் என் பூணிப்பாம் என ஊழியான் விளம்பிய உரை. (சு : 1105)

2. பிரதிஞ்ஞை. சூளுரைத்தல். பூணித்திவை உரை செய்தனே. (யுத் : 1134)

3. சங்கற்பம். கொள்கை. உறுதி. பூணிப்பொன் றுடையனுகி. (யுத் : 1856) (உ.வி) (சு : 1109)

4. சிறப்புடையதாகப் பூணப்பட்ட மேற்கோள். பூணிப் பொன் றுடையனுய் புகுந்தநான். (யுத் : 1855)

பூணியல் - அணிகலனுக ஒழுக்கத்தை மேற்கோண்டவளே. பூணியல் தின சாயல் பொலிவது பல கண்ணுற் காணிய எனலாகு களிமயில் இவை காணுய். (அ : 693)

பூணியன் மொய்ம்பினன் - வாகு வலயங்க ளணிந்த தோள்களை யுடைய குமாரன். (இராமன்) பூணியன் மொய்ம்பினன் புனிதன் எய்த வில் காணிய வந்தனன் என்ன. (பா : 809)

பூணினும் புகழே யமையும் - அணிகளைக் காட்டிலும் (எமக்குப்) புகழே போதுமானது. பூணினும் புகழே யமையும் என்றிணைய பொற்பில் நின்றுயிர் நனி புரக்கும்...... திருபர். (பா : 105)

பூணுதல் - 1. பெறுதல். உடையராதல். பூண்ட மணி யாழி வயமா நிமிர் பொலந்தேர். (யுத் : 3645)

2. பற்று. பற்றிக்கொள்ளுதல். யாவர்க்குங் கண்ணுகிப் பூண்பாய் போல் நிற்றியால் யாதொன்றும் பூணுதாய். (ஆ : 1182)

3. கவிந்து கொள்ளுதல். (உ.வி) (ஆ : 1182)

4. மேற் கொள்ளுதல். பூண்டதோர் பணியின். (யுத் : 1244) பூணு. (யுத் : 1369) [பா : பே] பூணுது. (யுத் : 1369) பூண்டாரெல்லாம் பொன்றுவர். (யுத் : 2605)

5. அணிதல். பொன்னடி இரண்டும் பூண்டான். (யுத் : 1371)

6. நட்புரிமையை மேற்கொள்ளுதல். புறமேது மிலாரொடு பூணகிலாய். (யுத் : 2633) பூணலையோ. (யுத் : 2633) [பா : பே]

பூணொளி - அணிகலன்களின் ஒளி. பூணொளி பேர்ந்தன. (அ:802)

பூத்தமரம் - பூப் பூத்த மரம். பூத்த மரம் போற் புண்ணுற் பொலிகின்ருன். (சு : 854)

பூத்தல் - 1. முளைத்தல். புன்புற மயிரும் பூவா. (சு : 7)

2. தோன்றுதல். தோற்றுவித்தல். செய்தல். விமலன் உந்தியிற் பூத்தவன். (அ : 949) பவளம் பூத்த அடியாள். (கி : 32) பூவின் மாலை புலால் வெறி பூத்ததால். (யுத் : 3687)

3. உண்டாதல். உண்டாக்குதல். உண்டாகிப் பொலிவுறுதல். அவற்கு அச்சம் பூத்ததே. (பா : 1099)

4. ஊட்டுதல். பஞ்சு பூத்த விரல். (கி: 32)

5. ஒத்தல். பவளம் பூத்த அடியாள். (கி : 32)

6. மலர்தல். நெஞ்சு பூத்த தாமரை. (கி : 32) (ஆ : 432) துணை நலம் பூத்தன. (யுத் : 2719)

7. எப்பொழுதும் வசித்தல். தாமரையின் நிலயம் பூத்தாள். (கி : 32)

8. படர்தல். நஞ்சு பூத்த தா லென்ன. (கி : 32)

9. பயனைத் தருதல். இன்றுதான் என் புண்ணியம் பூத்தது.

10. விளங்குதல். புகழ் பொதிந்த மெய்யே போற் பூத்து நின்ற. (கி : 769) (பா : 1016)

11. பொலிவு பெறல். கற்பகம் பூத்ததன்ன பொருவில் தடக்கை. (ஆ . 385)

12. ஒளி செய்தல். தையலார் முகங்கள் செய்ய தாமரை பூத்தவன்றே. (பா : 1016)

பூத்தவன் - படைத்தவன். (அ : 776)

பூத்தவிசு - தாமரை மலராகிய இருப்பிடம். பூத்தவிசு உகந்தவன். (யுத் : 3443)

பூத்தொடர் சாலே - அழகு பொருந்திய பன்னசாலே. (ஆ : 846)

பூத் தொடர் மன்றுகள் - மலர் மண்டபம். பலநிறப் பூக்களேயுடைய பல கொடிகள் படர விட்டுள்ள மண்டபம். பொன்றிணி மன்றுகள் அல்ல பூத் தொடர் மன்றுகள். (பா : 131)

பூதகணத்தரசு - பூதகணங்களுள் அரச பூதம். பொற்கலத்துச் சுதையனேய வெண் சோறு ஓர் பூதகணத்தர சேந்தி அனல் நின்றும் போந்ததால். (பா : 738)

பூதங்கள் - பொருள்கள். எண்ணில் பூதங்கள் நிற்பன திரிவ• (யுத் : 173)

பூத நாயகன் - பஞ்ச பூதங்களே நியமிக்கும் நாயகன்; திருமால். பூத நாயகன் புவிமகள் நாயகன். (பா : 493)

பூதம் - 1. பேருருவுடைய உயிர். பிராணி. பூத மத்தனேயும் ஓர் வடிவு கொண்ட புதிது. (ஆ : 18)

2. நிலம் முதலிய ஐந்து ஒன்றினேடொன் ெறவ்வர்ப் பூதங்கள். (ஆ : 48)

பூதம் ஒரைந்து - ஒப்பற்ற ஐந்து பூதங்கள். பூதமோர் ஐந்தினில் பொருந்திற்றன்றியே. (ஆ : 1154)

பூதமைந்தும் விலங்கிய விகாரப்பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம் - பஞ்ச பூதங்களும் (தனித்தனியே மிக்கிருக்குந் தன்மையை விட்டு மாறி) ஒன்ருகச் சேர்ந்ததனு லானதும் (அறுவகை) விகாரப் படுதலேயுடையதும் (தேவர் மனிதர் விலங்கு தாவரம் என்னும்) பாகு பாடு பொருந்தியதுமான மிக்க பிறப்பு. (வை.மு) (நிலம் நீர் தீ காற்று வானம் ஆகிய) பஞ்ச பூதங்களும் (தனிப் பொருள்களாயுள்ள தன்மை நீங்கி தம்முட் கலப்புற்று) தம் தனி நிலேயினின்று) மாறிய மாறு பாட்டினுல் (ஆகிய சராசர) பேதங் கள்மிகுந்த பகுதி. (வெ.ப) பொருள் தோறும் உலகத்தார் கற்பித் துக் கொண்டு வழங்குகின்ற கற்பனே. (அண்) வேறுபாடுற்ற வீக்கம் - திரிதலுடைமையான் உளதாய அறியாமையின் மிகுதி. (அண்) ஐந்து பூதங்களும் தம் நிலேயிலிருந்து மாறுபட்டுத்

தோன்றும் வேறுபாடுகளின் மிகுதித் தோற்றம். (கலா) வீக்கம் - மிகுதி; அதாவது கட்புலனும் படி பருத்துத் தோன்றும் பல வகைத் தோற்றங்கள். அலங்கலிற் ரேன்றும் பொய்ம்மை யரா வெனப் பூத மைந்தும் விலங்கிய விகாரப் பாட்டின் வேறு பாடுற்ற வீக்கம். (சு : 1)

பூதரப் புயத்து வீரர் - மலைபோன்ற புயத்தையுடைய வீரர். (கி:64)

பூதரம் - மலை. (பூ-பூமி; தரம்-தாங்கல்) (கி : 64)

பூத ரோதரம் - பூதர உதரம். மலையின் உள்ளிடம். (வை.மு.) மேருமலை. (கலா) பூத ரோதரம் புக்கென ஓடினர். (யுத்:3145)

பூதலம் - 1. நிலவுலகம். பூதல மெல்லாம் விரியுஞ் சிந்தனைக் கோசலைக் குடைமையாம். (அ : 168) (சு : 16)
2. நிலவுலகின் ஒரு பகுதி. விதேகநாடு. இப்போது நீ இவண்போத இப் பூதலம் ஏது செய்ததவம். (பா : 649)

பூதல மென்னும் நங்கை - பூமி என்கிற பெண். (யுத் : 1221)

பூதல வரைப்பு - பூமியின் எல்லை. பூதல வரைப்பின் நாகர்புரத் தின். (யுத் : 774)

பூதி - புழுதி. பெருகு நீரொடு பூதியும் வாயுவும். (பா : 531)

பூந்தண் சேக்கைப் புனிதன் - தாமரை ஆசனத்தையுடைய புனித னான பிரம தேவன். பூந்தண் சேக்கைப் புனிதனையே பொரு ஏய்ந்த கேண்மைச் சதாநந்தன். (பா : 656)

பூந்த விசுகந்துளோன் - தாமரை மலரை ஆசனமாகக் கொண்ட பிரமன். புந்தவிசுகந்துளோனும் புராரியும். (பா : 213)

பூந்துகில் - 1. பூக்களாகிய ஆடை. (அண்) செறி புனற் பூந்துகில் திரைக்கையால் நிரைத்து. (கி : 559)
2. அழகிய ஆடை. (வை.மு) (கலா) (கி : 559) (யுத் : 2780)

பூந்துணர் - பூங் கொத்துக்கள். (பா : 1158)

பூந்துணர் வாளி மாரி - பூங் கொத்துக்களாலாகிய அம்பு மழை. மதனன் எங்கும் பூந்துணர் வாளி மாரி பொழிகின்ற பூசல் நோக்கி. (பா : 1158)

பூந் தென்றல் - பூமணத்தோடு கூடிய தென்றற் காற்று. பூந் தென்றல் புகுந்துறை சாளரம். (ஆ : 716)

பூநனை - 1. பூவரும்பு. பூ நனை சினை துன்றி. (அ : 707)
2. (தேனுல்) ஈரமாயுள்ள பூ. பூநனை கூந்தன் மாதர். (பா:1148

பூநிறக் கண்கள் - தாமரை மலர் போன்ற கண்கள். பூநிறக் கண்கள் புனலுக மயிர்ப்புறம் பொடிப்ப. (யுத் : 153) [பா : பே]

பூநிறக் கோலவான் தனி நெடுங்கூறை - பூத்தொழில் செய்யப் பட்டநிறம்மிக்க அழகிப ஒப்பற்ற புத்தாடை. (யுத் : 589)

பூநிற விமானம் - பொலிவு வாய்ந்த நிறத்தினையுடைய விமானம். (யுத் : 4285)

பூ நின்றெய்யும் பொருகணை வீரன் - பொருகணை பூ நின்றெய்யும் வீரன். போர் செய்கின்ற அம்பாகக் கொண்டு மலர்களை எதிர் நின்று தொடுக்கின்ற வீரனுகிய மன்மதன். (ஆ : 1062)

பூ நீர் - பன்னீர். (கலா) மலர்கள் நிறைந்த நீர். பூநீர் ஆட்டுவார் அமரர் மாதர். (சு : 198)

பூப்புண்தர - பூப்போலும் சிவந்த நிறமுள்ள புண்படுதலால். (அண்) பூமிதேவி புண்ணைப் பெற்றிருக்க. (யுத் : 2349)

பூப் பொதிய விழ்ந்தன நடையன் - மலரின் இதழ்கள் மெல்ல மெல்ல விரிதல் போல மெல்ல மெல்ல நடக்கும் நடையை யுடையவன் (ஆ : 834)

பூப்போலும் மெல்லியல் - பூப்போலும் மென்மையான தன்மையுடையவள். இப் பூப் போலும் மெல்லியலாற் பொருளென்னே புகல்வீரால். (ஆ : 352) [பா : பே]

பூம் பந்தர் - அழகிய மலர்களினுலாகிய பந்தர். சந்தப் பூம் பந்தர் வேய்ந்த தமனிபூ அரங்கு. (சு : 201)

பூம் பள்ளி - மலர்ப்பள்ளி. மலரமளி. உயிரினேடும் உருகு பூம் பள்ளி நீங்கி. (பா : 794) (யுத் : 1666)

பூம் பொழிற்சாலை - மலர் வனத்தினிடையே யுள்ள பன்னசாலை. (ஆ : 293)

பூமகள் - 1. சீதேவி. பூமகளும் பொர்ருளும் என நீ என் மாமகள் தன்னெடு மன்னுதி. (பா . 1331)
3. பூதேவி. மண்மகள். இராமன் நாளையே பூமகள் கொழுநனுய்ப் புனையும் மௌலி. (அ : 122)

பூமகள் கொழுநன் - மண்மகளின் தலைவன். (அ : 122)

பூமகன் - பிரமன். பூமகனுலகு புக்காள். (பா : 432) உலகமீன்ற பூமகன். (யுத் : 4301)

பூமகன் தந்த மாதவன் - தாமரை மலரில் வாழும் பிரமதேவன் பெற்ற பெருந்தவ முடைய வசிட்டன். பூமகன் தந்த அந்தப் புனித மாதவன் வந்தெய்த. (யுத் : 4301)

பூமட மயில் - செந்தாமரை மலரில் எழுந்தருளியுள்ள இளமையான மயில் போன்ற திருமகள். பூமட மயிலினைப் பொருவும் பொற் பொடும். (பா : 370)

பூமரம் - பூக்கள் நிறைந்து விளங்கும் ஒருவகை மரம். பூமரங்கள் எரிந்து பொரிந்தவே. (சு : 717)

பூமலர்த்தவிசு - பொலிவுடைய தாமரை மலராகிய படுக்கை. (யுத் : 4342)

பூமழை - மலர் மாரி. வானவர் பூமழை பொழிந்தனர் உவந்தார். (சு : 331) (பா : 1333) (யுத் : 454)

பூமாமடந்தை - பூமி தேவி என்னும் பெண். நில மகள். குழையாள் தனை ஈன்ற பூமா மடந்தை புரிந்தழுதாள். (யுத் : 2629)

பூமாரி பொழிதல் - மலர் மாரி பெய்தல். இமையோர் பூமாரி பொழிந்து புகழ்ந்தனரால். (யுத் . 2331)

பூமி - 1. பூவுலகம். பூமியும் அயோத்திமா நகரம் போலுமே. (பா : 174)

2. தரை. பூமியில் வளர்த்தும். (யுத் : 2175)

பூமியைப் புணர்தல் - அர சுரிமையை ஏற்றல். முடி புனைதல். நலங் கிளர் பூமியென்னும் நங்கையை நறுந்துழாயின் அலங்கலான் புணருஞ் செல்வம். (அ : 256)

பூமின் கேள்வன் - பூமி தேவிக்கு நாயகன். இராமபிரான். பூமின் கேள்வன்... இவ்வா றடுத்தவாறு அருளு கென்றுன். (பா : 550)

பூரணகுடம் - நீர் நிறைந்த குடம். பூரண கும்பம். பூரண குட மெங்கும் புனைதுகில் புனைவாரும். (பா : 1266) பூரண குடத்து நீர் நறவிற் பொங்கு மால். (சு : 375)

பூரண பொற் குடம் - நீர் நிறைந்த பொற்குடம். நற் பூரண பொற் குடம் பொலியவைத்து. (யுத் : 4183)

பூரணம் - முழுமை. பூரணத் தடந் திசை. (யுத் : 3226)

பூரணமங்கல கலசங்கள் - மங்கள கரமாக வைக்கப்பெற்ற நீர் நிறைந்த குடங்கள். வெடித்தன பூரணமங்கல கலசங்கள். (சு : 299)

பூரண மணிக் குடம் - இரத்தினங்களாலமைந்த நீர் நிறைந்த குடம். மணிகள் பொருந்திய நிறைகுடம். (அண்) பூரண மணிக்குட முடைந்து போயதால். (யுத் : 2935)

பூரி - பொன். (யுத் : 4321)

பூரி சேர்த்தல் - பொன் பொருந்தல். பசும் பூரி சேர்த்தி மாமணித் தூணிற் செய்த மண்டபம். (யுத் : 4321)

பூரித்தல் - நிறைத்தல். நாலு வாரியின் நீரும் பூரித்து. (அ : 262)

பூரிய - குற்றமுள்ள. கீழ்மையான. மிகுதியான. பூரிய வெம் பழி (சு : 1277) [பா : பே]

பூரியர் - 1. கீழ்மக்கள். பூரிய ரேயும் தம்மைப் புகல் புகுந் தோர்க்குப் பொன்ரு ஆருயிர் கொடுத்து. (யுத் : 425) பூரிய ரெண்ணிடை வீழ்வன். (அ : 207)

2. அற்பகுண முடையவர். தம்மைப் பெரிதாகக் கருதும் அற்பர். (கலா) பூரியர் ஒருவழிப் புகுந்ததா மென. (கி : 14)

பூரியர் குழாம் - கீழ்மக்கள் கூட்டம். பேரியும் இயம்பல சென்ற பேதைமைப் பூரியர் குழாத்திடை அறிஞர் போலவே. (அ : 966)

பூவக நிறைந்த புளினம் - பூமியிலே நிறைந்த மணற் குன்றுகள். (வை.மு) பூக்கள் நிறைந்த மணற் குன்று. (அண்) மலர்கள் தம்மிடம் நிரம்பப்பெற்ற மணற் குன்றுகளாகிய மேடுகள். (கலா) (அ : 543)

பூவகம் - பூமி. பூவத்தில் விசும்பில் புறத்தில் ஏவர் கிற்பவர் எதிர் நிற்க என்னுடைச் சேவகற்கு. (யுத் : 4135)

பூவடி - தாமரை மலர் போன்ற திருவடி. (யுத் : 4263)

பூவணை - 1. மலர்ப்படுக்கை. பூவணை பலவுங் கண்டார். (பா:946) (பா:1177)

2. மலர்களால் ஆய ஆசனம். தூய பூவணைப் பொலிந்து தோன்றினர். (கி : 111)

பூவணை யாடை - மலர்ப் படுக்கையில் மேல்விரி யாடை. அரசே பூவணை யாடைவைகுவாய். (கி : 397) [பா : பே]

பூவர்க்கம் - மலர்த் தொகை. மலர் வகை. இனமலர் பூவர்க்கம் பொழிந்து வீழ்ந்தான். (யுத் : 4269) பூவர்க்கம் இமையோர் தூவ. (யுத் : 2552)

பூவராவு வேல் - கூர்மையாக அராவப்பெற்ற வேல். பூவராவு வேற் புரந்தரன். (ஆ : 510) பூவராவு பொலங் கதிர் வேலினிர். (ஆ : 214)

பூவரு புரிகுழல் - பூக்கள் தங்கிய பின்னப்பட்ட கூந்தல். பூவரு புரிகுழல் பொருவில் கற்புடைத் தேவி. (கி : 948)

பூமரு மழலை யன்னம் - தாமரை மலரில் தங்கும் இயல்புடைய இளமையான அன்னப் பறவை. (கி : 807)

பூவலயம் - பூமண்டலம். பூவலயத்தை யாண்ட புரவலன். (சு:1119) பூவலய மின்று தனியன்று பொது வென்பார். (அ : 283) பூவலயத்தை யன்றே புகழ்வது. (சு : 749)

பூவலர் குரவு - குரா மரத்தின்கண் மலர்ந்த பூ. பூவலர் குரவோடும் புடை தவழ் பிடவீனும். (அ : 696)

பூவளவிய மென் கால் - பூக்களின் நறு மணம் அமைந்த தென்றல். இள மென் கால் பூவளவியது எய்த. (அ : 693)

பூவாய் வாளிச் செல் - கூர்மை பொருந்திய அம்பாகிய இடி. பூவாய் வாளிச் செல்லெறி காலைப் பரி பொன்ற. (யுத் : 3551)

பூவி - 1. தாமரை யிலுள்ள திருமகள். பூவி நீத்தென நாடு பொலிவொரீஇ. (அ : 819)
2. பூமி. பூவின் நீத்தன நாடு பொலிவொரீஇ. (அ : 819) [பா : பே]

பூவியல் அமளி - பூக்களால் இயன்ற படுக்கை. பூவியல் அமளி மேலாப் பொய்யுறக் குறங்கு வானை. (சு : 308)

பூவியல் கானகம் - பூக்கள் பரவிய காடு. பூவியல் கானகம் புக வுய்த்தேன் என்கோ. (அ : 551)

பூவியல் நறவம் - பூக்களில் விளையும் தேன். (அண்) மலர்களில் உண்டான மது. (வை.மு) மலர்களிலிருந்து உண்டாகுந் தன்மை யுள்ள கள். (கலா) பூவியல் நறவம் மாந்திப் புந்தி வேறுற்ற போது. (கி : 363)

பூவியல் புறவம்-மலர்களின் மயமாகத் தோன்றும் காட்டிடம். முல்லை நிலம். பூவியல் புறவமெங்கும் பொறிவண்டு போர்ப்ப. (கி : 478)

பூவியல் வாளி - கூர்மை பொருந்திய அம்பு. (கலா) பூக்கள் பொறிக்கப்பட்ட அம்பு. (அண்) பூவியல் வாளியர்ற் பொலங் கொள் தோழித்து. (ஆ : 496)

பூவியனறவம் - பூவியல் நறவம் பார்க்க.

பூவிரி பொலன்கழல் - பொன்னுற் செய்த பூவேலைப்பாடுகள் பரவிய வீரக்கழல். பூவிரி பொலன் கழல் புனைவில் தானையான். (அ : 993)

பூவிலோன் - தாமரைப் பூவைத் தங்குமிடமாகக் கொண்ட பிரமன். பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி. (அ : 263)

பூவின் அண்டர் கோன் - தாமரை மலரில் உள்ள தேவர் தலைவனுகிய பிரமன். (யுத் : 3347)

பூவின்திரு - இலக்குமி. செந்தாமரை மலரில் எழுந்தருளியிருப்பவளாகிய திருமகள். பூவின் திருவை அழகின் புனைகலத்தை. (யுத் : 293)

பூவின் நான்முகன் புதல்வன் - தாமரை மலரில் இருக்கும் பிரமன் புதல்வனுகிய காசிபன். பூவில் நான் முகன் புதல்வன் ஆதியாந் தாவின் மன்னர். (அ : 925)

பூவின் மாரி - மலர் மழைகள். பொழிந்தன பூவின் மாரி. (ஆ:647)

பூவின் மெல்லியர் - பூவைக்காட்டிலும் மென்மையானவர். பூவின் மெல்லியர் வருந்துவர் சிறிதென மனத்தின் எண்ணினுன். (பா : 358)

பூவின் மேலிருந்த தெய்வத் தையல் - மலர் மேல் வசிப்பவளான தெய்வத் தன்மையுள்ள இலக்குமி. பூவின் மேலிருந்த தையலும் பொதுமையுற்ருள். (யுத் : 1663)

பூவின் மேற்புனிதன் - திருமாலின் உந்தித் தாமரை மேல் தோன்றிய தூய பண்புகளையுடைய பிரமன். (கலா) தாமரை மலரில் உறைகின்ற பிரமன். (அண்) பூவின் மேற் புனிதற் கேனும் அறத்தினதிறுதி வாழ் நாட்கிறுதி. (கி : 424)

பூவின் வானவர் - அந்தணர். நீதியின் வெறுக்கையும் பூவின் வானவர் கொண்டனர் போகவே. (அ : 825)

பூவின் வெறி - பூவின் கணுள்ள மணம். பொன்னிஞெளி பூவின் வெறி சாந்துபொதி சீதம். (பா : 1229)

பூவுண்ட கண் - பூவைப் போன்ற கண். பூவுண்ட கண்ணன். (யுத் : 2374)

பூவுதிர்ந்த தோர் கொம்பு - மலர்கள் உதிரப் பெற்ற ஒரு பூங் கொம்பு. பூவுதிர்ந்த தோர் கொம் பெனத் தரை மிசைப் புரண் டாள். (அ : 184)

பூவுலகு - பூமி. பனி யாமது மேதை படப் படர் மேதினியானது பூவுல கெங்கணுமே. (யுத் : 1751)

பூவுலாவு பூவை - தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிராட்டி. பூவுலாவு பூவை யோடும் ஏவலாரும் ஏகினர். (ஆ : 72)

பூவுளான் - பிரமன். பூவுளான் புணரி மேலான். (யுத் : 1276)

பூவுறங்குதல் - மலர் குவிதல். பூவுறங்கினும் புள்ளுறங் காதன பொய்கை. (பா : 543)

பூவை - 1. நாகணவாய்ப் புள். பூவையோடு புலம்புகின்ருர் சிலர். (சு : 268)

2. மைஞ. (கலா) பூவை வாய்ச்சியர். (பா : 898)

3. காயா மலர். எள்ளில் பூவையும் இந்திர நீலமும். (பா : 653) பூவை போல் நிறத்தினன். (யுத் : 4216)

4. பெண். பூந்துகிலாய அப் பூவை பூண்களே. (கி : 202) பொருந்து நன்மணிப் பூவையைப் பிரிந்துளாய் கொலோ. (கி : 113)

பூவை நிறவ - பூவை மலர் போன்ற நிறமுள்ளவனே. அற முதல்வ பூவை நிறவ என வேத முறை புகழ. (யுத் : 3424)

பூவையர் - பெண்கள். விஞ்சைப் பூவையர். (சு : 144) பூவையர் கண்ணினீராற்றினிற் குளிப்பக் காண்டியால். (சு : 662)

பூவை வாய்ச்சியர் - பூவை என்ற புள்ளின் குரல் போலத் தீஞ் சொற்கள் பேசும் மகளிர்- பூவை வாய்ச்சியர் முலை சிலர் புயத் தொடும் பூட்ட. (பா : 898)

பூழி - புழுதி. பூழிப் பொற்ருேள் முற்று மடங்கப் புரள் போழ்தில். (அ : 227) பூழி ஒட்டலால். (கி : 830) [பா : பே] பூழி யாக்கின. (யுத் : 1000)

பூழியணை - புழுதி படிந்த தரையாகிய படுக்கை. பூழியணை மேற்று யின்றனையோ போர்க்களத்தே. (யுத் : 1666)

பூழியின் தொகை - புழுதியின் கூட்டம். பூழியின் தொகை விசும் பணவப் போயப் புகும் கேழில் வெங்கொடியவன் உயிர்ப்பு. (சு : 222)

பூழிவெங்கானம் - புழுதியை யுடைய விரும்பத்தக்க கானம். (அண்) புழுதியை யுடைய கொடிய காடு. (வை.மு) பூழிவெங்கானம் நண்ணிப் புண்ணியத் துறைகளாடி. (அ : 292)

பூழை - துளை. உட்டொளை. புழை. பூழையூடே பொடித் தப்புறம் போயதே. (பா : 1123) பூழையிற் பொருகணை யுருவப் புக்கன மூழையிற் பொலிந்தன முரலும் வெள்வளை. (யுத் : 586)

பூளை - ஒரு பூ. பூண்டு. பூளைசூடி. (பா : 516) மாருத மறைந்த பூளை. (யுத் : 1218) வெள்ளிடைக் கரந்த பூளை போன்றதப் பொருசினத்தரிகள் தம்புணரி. (யுத் : 3509)
(யுத் : 3509)

பூளை சூடி - சிவபிரான். பூளைசூடி தன் நகையினில் எயில் பொடித் தனபோல். (பா : 516) பூளையே சூடுவானைப் பொருவுமா முனிவன் போனான். (யுத் : 4306)

பூளைவீ - 1. பூளைப்பஞ்சு. பூளைவீயன்னதன் அங்கம் வெந்து. (பா : 342)

2. பூளைப்பூ. பூளைவீயெனப் போவன. (சு : 1213) [பா : பே] பூளைவீ என வீவனன்றே. (ஆ : 873)

பூளைவீ புரை பனிப்புயல் - பூளைப் பூவை ஒத்த மெல்லிய வெண்ணிற மான பனி மழை. பூளைவீ புரை பனிப்புயற்குத் தேம்பிய தாள தாமரைமலர். (பா : 610)

பெ

பெட்டல் - விரும்புதல். முருடாகுளி பெட்கும் தூரியம். (யுத் : 816)

பெட்பற - ஆசைதீர. பெரும்புனல் நதிகளும் குளனும் பெட்பறக் கரும் பொடு செந்நெலும் கவின் கொண்டோங்கிட. (பா : 226) [பா : பே]

பெட்பு - 1. விருப்பம். பிறை முகத்தலை பெட்பின் இரும்பு. (பா : 68) பெட்பற. (பா : 2269) [பா : பே]

2. பெருமை. ஓர் அரக்கி உருக்கொடு பெட்பினேங்கி. (சு : 67) நதிகளும் குளனும் பெட்புற. (பா : 226) பேருவகைக் கடல் பெட்பற. (உ.வி) (அ : 71)

3. தன்மை. திருவின் பெட்பினர். (அ : 11) பேருவகைக் கடல் பெட்பற. (அ : 91)

பெட்புற - விரும்ப. பெட்புறத் துன்னின சிவிகை. (கி:686)(பா:266)

பெட்புறு - பெருமை மிக்க; ஆசை மிக்க. பெட்புறு மாரிமேகம். (ஆ : 391)

பெடை - பறவை முதலியவற்றின் பெண். மடப் பெடை இள வண்டுகள் (பா : 9146) (கி : 4)

பெடையனம் - பெடையன்னம். அன்னப்பேடு. பெடையன நடையாரும் பிடியென வருவாரும். (பா : 1281)

பெண் - 1. பெண் பிறப்பு. பெண்ணின் நீர்மையினுல் எய்தும் பயன் இன்று பெறுது மென்பார். (பா : 1150)

2. பெண்பால்; மனைவி. பெண்கொடு வினைசெயப்பெற்ற நாட்டினில். (அ : 482)

3. மகளிர். பெண்ணின் அணங்கனையாள். (பா : 1342)

பெண்கள் பால் வைத்த நேயம் - பெண்களிடத்து வைத்த அன்பு. பெண்கள் பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்ருல். (பா : 41)

பெண்களானுர் - பெண்ணுய்ப் பிறந்தவர். பெண்களானுர்க்குள் நல்ல உறுப்பெலாம் பெருக்கி யீட்டி. (யுத் : 1588)

பெண்கனி - பெண்ணுருக் கொண்ட கனி போன்ற சீதாபிராட்டி. கல்லும் புல்லுங் கண்டுருகப் பெண் கனி நின்ருள். (பா : 595)

பெண் கொடி - கொடி போன்ற பெண். செய் தவத்திஞேர் பெண் கொடி எம்முடன் பிறந்தவள். (யுத் : 1453)

பெண் கொலை - பெண்ணைக் கொல்லுதல். பெண் கொலை செய்தல் பெரும்பழி யன்ருே. (யுத் : 2828)

பெண்டிர் - பெண்கள். (அ : 264) (ஆ : 1022)

பெண்டிரிற் கூற்ற மன்னுள் - பெண்களில் யமனைப் போன்ற கைகேசி. பெண்டிரிற் கூற்ற மன்னுள் பிள்ளையைக் கொணர்க என்ருள். (அ : 264)

பெண்டிரிற் றிறம்பினுர் - கற்புடைய பெண்டிரிடத்து முறை தவறி நடந்தவர். பெண்டிரில் திறம்பினுரைத் துறந்தது பிழையிற் ருமோ. (யுத் : 3064)

பெண்டிரின் வாழ்தல் - வீரமிழந்து அடங்கி வாழ்தல். செறுநர் மாட்டு ஏவல் செய்து பெண்டிரின் வாழ்வரன்றே இதுவன்ரே தேவர் பெற்றி. (ஆ : 1022)

பெண்ணருங்கலம் - பெண்களுக்கு அருங்கலம் போல்பவள் அலம்பு வார்குழலாய் மயிற் பெண்ணருங்கலமே. (அ : 768)

பெண்ணுட்டம் - ஒரு பெண்ணின் நோக்கம். (அ : 415)

பெண்ணுட்ட மொட்டேன் - ஒரு பெண்ணின் நோக்கம் நிறைவேற வொட்டேன். (அ : 415)

பெண்ணு ரமுதன்னவர் - பெண்டிருள் அரிய அமுதை ஒத்தவர். (யுத் : 1775)

பெண்ணிடை யரசி - மகளிர் இனத்தில் தலைவியாக வுள்ளவள். பெண்ணிடையரசி தேவர் பெற்ற நல்வரத்தால் பின்னர் மண்ணிடை மணியின் வந்த வஞ்சியே போல்வாள். (ஆ : 281)

பெண்ணியல் தீபம் - பெண் தன்மையுடையதாய் ஒளிர்வதோர் விளக்கு. பெண்ணியல் தீபமன்ன பேரெழிலாட்டி. (ஆ : 1042)

பெண்ணின் அருங்கலம் - பெண்களின் அரிய குலத்திற்கே அணி கலன் போன்றவள். (யுத் : 2828)

பெண்ணின் அனங்கனையாள் - பெண்களின் தெய்வம் போன்றவளாகிய சீதாதேவி. கண்ணகல் நாடொடு காசுயர் தூசும் பெண்ணின் அனங்கனையாள் பெறுகென்ருர். (பா : 1342)

பெண்ணின் இன்னமுதன்னவள் பெண்களுக்குள் இனிய அமுதம் போன்றவளாகிய சீதாபிராட்டி. பெண்ணின் இன்ன முதன்னவள் தன்னெடும் பிரியாவண்ண வெஞ்சிலைக் குரிசில். (அ : 50)

பெண்ணின் நீர்மை - பெண் பிறப்பின் தன்மை. பெண்ணினீர்மையினுல் எய்தும் பயனின்று பெறுதும் என்பார். (பா : 150)

பெண்ணின் நோக்கும் சுவை - (ஓர் ஆடவன் ஒத்த காதலுடைய) ஒரு மகள் பால் துய்த்தறியும் இன்பம். (அண். பெண்பாலாரிடத்து அனுபவித்துக் காணப்படும் காமவின்பம். (வை.மு) பெண்ணின் நோக்குஞ் சுவையிற் பிறர் தமக் கெண்ணின் நோக்கி இயம் பரும் இன்பத்தை. (அ : 628)

பெண்ணின் விளக்கெனுந் தகையாள் - பெண்களுள் விளக்கு என்று சொல்லத்தக்க தகுதியுடையவள். பெண்ணின் விளக் கெனுந் தகையாள் இருந்துழி. (சு : 427)

பெண்ணுக்கரைசி - பெண்கட்கு அரசி. பெண்ணுக் கரைசியைத் தருதிர் ஈண்டென. (பா : 1203)

பெண்ணெனப் பெயர் கொடு திரியும் கூற்றினர் - பெண்களென்று பெயர் வைத்துக்கொண்டு திரியும் யமன் போன்ற அரக்கியர். (சு : 389) [பா : பே]

பெண்ணை - 1. பனை. பெண்ணை வன் செறும்பில். (அ : 650)

2. ஒரு நதி. செய்ய பெண்ணைக் கரிய பெண்ணைச்சில வைகல் தேடிக் கடிது வழிக்கொள்வீர். (கி : 758]

பெண் பால் - பெண். பெண்பாலுரு நான் இது கண்டது. (ஆ:709) பெண் பால் எனக் கருது பெற்றியொழி. (சு : 82)

பெண் பாலார் - பெண்டிர்கள். நணுகாரே ஆண் பாலாரே பெண் பாலாரோடு அடைவம்மா. (அ : 224)

பெண்பாலாள் - மனையாள். பெண்பாலாள் தன்னுறுவல் தீர்ப்பான் (ஆ : 996)

பெண்பாலுரு - பெண் வடிவம். (ஆ : 709)

பெண் பிறந்தேன் - பெண்ணாகப் பிறந்துள்ள யான். கண்ட பெண் பிறந்தேனுக் கென்றால். (ஆ : 284) பெண் பிறந்தேன் பட்ட பிழை யெனப் பிதற்றும். (ஆ : 322)

பெண் மேல் வைத்த காதல் - பெண் மீது கொண்ட ஆசை. பெண் மேல் வைத்த காதலின் இப் பேறுகள் பெற்றேன். (யுத்:2604)

பெண்மை - 1. அமைதித் தன்மை. அடக்கமுடைமை. பிறை யெனும் நுதலவள் பெண்மை என்படும். (பா : 603)

2- பெண்ணின் தன்மை. ஒருவில் பெண்மை யென் றுரைக் கின்ற உடலினுக் குயிரே. (அ : 750)

3. பெண்மைக் குணங்கள். கானியைப் பெண்மைக் கெல்லாம், (யுத் : 3963) பெண்மைக் காப்பினை. (யுத் : 3980)

4. மகளிர்க்குரிய குணம். பெண்மை நீங்காத கற்புடைய பேதையை. (சு : 141)

பெண்மைக் காப்பு - நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்ற பெண்மைப் பண்புகளுக்குப் பாதுகாவலாக உள்ளவள். சீதாபிராட்டி. (யுத் : 3980)

பெண்மைக்கு அரசி - பெண்கள் நாயகமான பிராட்டி. பெண்மைக்கு அரசியை ஐயனோடும் திருவடி தொழுது நின்றார். (யுத் : 4098)

பெண்மை நீங்காத கற்புடைய பேதை - மகளிர்க்குரிய நற்குணங்களை விட்டுப் பிரியாத கற்பிற் சிறந்த பெண்ணாகிய சீதை. (சு : 141)

பெண்வழி நலன் - பெண்களுக்குரிய நற்குணங்கள். பெண் வழி நலனொடும் பிறந்த நாணொடும் எண்வழி உணர்வு நான் எங்குங் காண்கிலேன். (பா : 618)

பெய் கடல் - பல பொருள்களைப் பெய்த பாற்கடல். பெய் கடற் பிறந்து. (பா : 803)

பெய் கழல் - வீரக் கழல். பிசாச னென் றொரு பெயர் பெற்ற பெய் கழல் நிசாசரன். (யுத் : 54)

பெய்தல் - 1. செருகி வைத்தல். வாளி பெய் புட்டில். (ஆ : 385)

2. பொருந்தி யிருத்தல். பெய்த ஐம்பொறி. (கி : 926)

3. கூறுதல். புகலுதல். விளக்குதல். அளவைப் பெய்குவன். (யுத் : 188)

4. போடுதல். தள்ளுதல். ஐயனைப் பெய்தனர். (யுத் : 215)

5. பிரயோகித்தல். உபயோகித்தல். பெய்திற னெல்லாம் பெய்து பேசினேன். (யுத் : 1388)

6. சொரிதல். அருவி பெய் வரையிற் பொங்கி. (பா : 877)

7. தருதல். பிச்சமும் கவிகையும் பெய்யும் இன்னிழல். (அ : 26)

8. உகுத்தல். எறிதல். பலம் பெய் மந்திகள். (அ : 768)

9. அணிதல். பெய் கலங்களின் இலங் கொளி. (கி : 19)

10. கக்குதல். உமிழ்தல். பொறிகள் பெய்து போம் வகை. (யுத் : 1190)

11. பொழிதல். இராகவன் பெய்தான். (யுத் : 1190)

பெய்தவம் - செய்தவம். தங்கிய நல்வினைப்பயன். பெய்தவத்தினேர் பெண்கொடியெம் முடன்பிறந்தாள். (யுத் : 1452)

பெய்திறன் - செலுத்தக்கூடிய சாமர்த்தியம். பேச்சுத்திறமை. பெய் திறனெல்லாம் பெய்து பேசினன். (யுத் : 1388)

பெய்துண்ணுதல் - வார்த்துண்ணுதல். பெய்தெவரும் உண்ணுதன கூர்நறவுண்ட தசும்பு எண்ணுயிரமாயினு மீகுவெனுல். (யுத் . 1715)

பெய்துழிப் பெய்யும் மாரியனையவன் - பெய்த விடத்திலேயே பெய்யும் மேகம் போன்றவன். (இலக்குவன்) பெய்துழிப் பெய்யும் மாரியனையவன் பிணங்கு கூற்றின் கையினிற் பெரிய அம்பாற் கவசத்தைக் கழித்து வீழ்த்தான். (யுத் : 2122)

பெய்வளை - அணிந்த வளையல்களையுடைய சீதாபிராட்டி. பெண் ணினுக் கருங்கல மனைய பெய்வளை. (கி : 463) (யுத் : 1315) (யுத் : 4034)

பெய்வளைத்தளிர் - கைகள். வளைபெய்த தளிர் போன்ற கைகள். பெய்வளைத் தளிராற் பிசையும். (அ : 306)

பெய்வளைத் தோளி - அணிந்த வளையல்களை யுடைய தோள்களை யுடையவளே. பெய்வளைத் தோளி என்பால் என்னை காரியத் தைச் சொல். (ஆ : 268)

பெய்வளை யணங்கு - அணிந்த வளையல்களை யுடைய பெண்.(சீதை) பெய்வளை அன்னமன்ன அணங்கினை நோக்கினுன். (ஆ : 218)

பெயர் - புகழ். பிசாசன் என்றெரு பெயர் பெற்ற பெய்கழல் நிசாசரன். (யுத் : 54)

பெயர்த்தல் - 1. விட்டொழித்தல். விடுத்தல். பிறவியும் பெயர்த் தேன். (யுத் : 435) சிலைநின்று பெயர்த்தான். (யுத் : 1190)

2. போக்குதல். பெயர்த்தேன் பழி. (ஆ : 1000)

பெயர்த்து - மறுபடியும். உணர்த்துதி பெயர்த்தும். (சு : 551)

பெயர்த்தும் - மறுபடியும். மீண்டும். பெயர்த்தும் எண்ணுவான். (ஆ : 237) பெயர்த்தும் ஏதில் வார்த்தைகள் இனையன இயம்பலே. (யுத் : 186)

பெயர்தல் - 1. நீங்குதல். பெரும் பகல் இறந்தது பெயர்தி. (கி : 701)

2. இருந்த இடம் விட்டுச் செல்லுதல். திரும்புதல். (வெ.ப.) பெயர்திர். (கி : 773) பெயர்வது. (யுத் : 1386) பெயருந்தன்மை செய்திலன். (யுத் : 1388)

3. பின்வாங்குதல். பெயர்ந்திலன் சிறிதும் பாதம். (யுத்-1118)

4. மாறுபடுதல். (உ.வி) (யுத் : 1388)

5. பிறழ்தல். நிலை நீங்குதல். பிறந்தார் பெயருந் தன்மை பிறரால் அறிதற் கெளிதோ. (அ : 331)

6. நிலை பெயர்தல். உலகெலாம் பெயரப் போவான். (யுத்:259) பெயரப் பெயர்வான். (யுத் : 259) [பா : பே] உலகெலாம் பெயரப் பேராக் காதை. (யுத் : 3082)

7. ஓடுதல். பித்தரைப் போல் நீயும் இவரொடும் பெயர்ந்த தன்மை ஒத்திலது. (யுத் : 3306)

பெயர்ந்து - மறுபடியும். பெயர்ந்தொரு சிகரந் தேடி. (யுத் : 1403)

பெயர்ந்து போதல் - நீங்கிச் செல்லுதல். பின்னிகல் பழுதெனப் பெயர்ந்து போயினன். (யுத் : 1481)

பெயர - பெயரையுடையன. பெண்ணெனும் பெயர வெல்லாம். (யுத் : 1941)

பெயரன் - 1. பெயரையுடையவன். அக்கயன் என்னும் பெயரன் வந்தடைந்தான். (கி : 721)

2. பேரன். மக்களுடைய மகன். காதலைப் பெயரனை. (யுத்:1793) [பா : பே]

பெயரா இருவினை - நீக்கமுடியாத நல்வினை தீவினைகள். பெயரா இருவினை துடைத்தவர். (சு : 846)

பெயருஞ் சிந்தையாள் - நிலை மாறும் மனத்தை யுடையவள். பிறப் பினோடிறப்பென பெயருஞ் சிந்தையாள். (பா : 1098)

பெயருந்தன்மை செய்திலன் - மனம் மாறுந்தன்மையைக் கொண் டானில்லை. பெய்திறனெல்லாம் பெய்து பேசினன் பெயருந் தன்மை செய்திலன். (யுத் : 1388)

பெரிது - மிகுதியாக. பாவையிற் பெரிதுபட்டார். (யுத் : 2049)

பெரிய காரியம் - பெரிய செயல்கள். பெரிய காரிய முள அவை முடிப்பது பின்னர். (பா : 477)

பெரிய நோக்கு - பெரிய காட்சி. பிறவியிற் பெரிய நோக்கிற் பிசித முண்டுழலும் பெற்றிச் சிறையன. (யுத் : 2044)

பெரிய மாமுனிவர் - மேம்பட்ட உயர்ந்த முனிவர். சொல்வரம் பெரியமா முனிவ ரென்பவர்கள். (யுத் : 103)

பெரியள் - சிறந்தவள். வான் கடந்தானைத் தான் தன் கண்கட வாது காத்த காரிகை பெரியளே காண். (பா : 1154)

பெரியாள் - பெரியவள். யான் பிறத்தலால் துறந்த பெரியாள் (அ : 1056)

பெரியோன் - பெருமையுடையோன். (இலக்குவன்) பெரியோன் அறிந்து பேர்க்குவன் அஞ்சல் நீ என்றிடை யடைந்தான். (யுத் : 3520)

பெருக்கல் (பெருக்குதல்) - மிகுதிப் படுதல். பெரிதும் உண்டு பண்ணல். பித்துமாலும் பிறவும் பெருக்கலான். (கி : 585) கடைநாள் வையம் பேர்வுறு கால மென்னப் பெருக்கினன். (யுத் : 2376)

பெருக்கி யீட்டி . மிகுதியாக ஒன்று கூட்டி. பெண்களா ணர்க்குள்ள உறுப்பெலாம் பெருக்கி யீட்டி. (யுத் : 1588)

பெருகு சூல் - முதிர்ந்த கரு. பெருகுசூல் இளம்பிடி. (அ : 746)

பெருகுதல் - 1. மிகுதல். பெருகுஞ் சிறப்புற்றபோதும். (யுத்:1972)

2. மேன்மேற் பெருகுதல். பெருகுகாதலும் துன்பும் பிறங்கிட. (யுத் : 3152)

3. ஆறுபோற் பெருகுதல். நளிர் புனல் பெருகலா நதிகள். (பா . 544)

4. முதிர்தல். பெருகுசூல் இளம்பிடி. (அ : 746)

பெருகை – பெரியகை. பெருகையிற் பெயர்த்தனர் தலையை. (அ : 470)

பெருங்கலம் – பெரிய மரக்கலம். உந்துகடலிற் பெருங்கலம். (அ : 604)

பெருங்களிச் சலதி - மிக்க கலவியாகிய பெரிய மகிழ்ச்சிக்கடல். யாமமும் பகலுமோர் ஈறின் றென்னலாய்த் தாமறு பெருங்களிச் சலதி மூழ்கினுர். (பா : 372)

பெருங்குழல் – நீண்டடர்ந்த கூந்தல். பிழையுடை விதியார் செய்த பெருங்குழல் கருங்கட் செவ்வாய் இழையணி மகளிர். (யுத் : 2234)

பெருங்கோயில் - பெரிதாயுள்ள (கன்னி) மாடம். அகல் வானம் திண்ட நிமிர்ந்த பெருங்கோயில். (பா : 632)

பெருங்கோல் - செங்கோல். பிரிவரும் ஒரு பெருங் கோலெனப் பெயரா. (சு : 846)

பெருஞ்சாய் - மிக்கவலிமை. இந்திரன் தன் சாயாப் பெருஞ்சாய் கெட. (யுத் : 1072)

பெருஞ்சாரிகை - பெரிய சாரிகை. (யுத் : 3375)

பெருஞ்சிறைக் கற்பினுள் - பெரிய காவலாகிய கற்பினையுடைய சீதாபிராட்டி. (யுத் : 2841)

பெருஞானம் - ஐயந்திரிபில்லாத உண்மையறிவு. சான்றரோ என் தவப் பெருஞானமே. (ஆ : 141)

பெருத்தகுன்று - பெரியதாயுள்ளமலை. (யுத் : 660)

பெருத்துயர்தவம் - மிகுதியாகச் சிறந்துள்ளதவம். பெருத்துயர் தவத்தினுலும் பிழைப்பிலன் என்னும் பெற்றி திருத்தியதாகு மன்றே. (யுத் : 413)

பெருந்தகை - பெருந்தகுதிவாய்ந்த இராமபிரான். மகாகுணவான். பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான். (பா : 395) (யுத் : 2676)

பெருந்தகைமை - பெருமை வாய்ந்த குணம். பெருந்தகைமைத் தயரதன். (பா : 720)

பெருந்தடங்கண் - பெருமையும் அகலமுமுடைய கண். பெருந்தடங் கண் பிறை நுதலார். (பா : 67) பெருந்தடங்கண்ணவள் பேசன் மேயினுள். (ஆ : 848)

பெருந்தடங் கண்ணி - மிகவும் பெரிய கண்களை யுடைய ஒரு பெண். ஆண்டோர் நீக்கிடம் பெருது விம்மும் பெருந்தடங் கண்ணி. (பா : 1164)

பெருந்தடங் கொம்பு - மிகப்பெரிய மரக்கிளை. (யுத் : 3361)

பெருந்தடந்தானை - மிகப் பெரிய சேனை. (யுத் : 4232)

பெருந்தவம் - தவப்பயன். வாடாப் பெருந்தவமுடைய ஐயா. (யுத் : 123) புரந்தரனூர் பெருந்தவமாய்ப் போயிற்றம்மா. (யுத் . 3908)

பெருந்தாமரைக்கட் கருமுகில் - பெரிய தாமரை மலர் போன்ற கண்களையுடைய கரிய மேகம் போல்வனாகிய இராமபிரான். (அ : 610)

பெருந்திசை - பரந்த திக்குகள். நோக்கினன் பெருந்திசை தொறும். (யுத் : 2083)

பெருந்திண்ணெடுமால் - மிக்கவலியோனாய் உலகளத்தற்கு நீண்ட திருமால் (பா : 633)

பெருந்திரு - பெருமை பெற்ற மங்கலியம், என் அம்மனை அழுத கண்ணள் பெருந்திருக் கழிக்கலாற்றாள். (யுத் : 2358)

பெருந்திருக்கழித்தல் - தாலிபெருகுதல். (யுத் : 2358)

பெருந்திரை நதிகள் - பெரிய அலைகளையுடைய ஆறுகள். பெருந் திரை நதிகளும் வயலும். (அ : 979)

பெருந்துறை - பெருமை பொருந்திய இடம். அப்பெருந்துறை வைகி. (ஆ : 222)

பெருந் தெய்வம் - சிறந்த தெய்வம். உன்னலாற் பெருந் தெய்வம் உயர்ந்துளோர் ஒழுக்கன்றே. (ஆ : 56) என் பெருந்தெய்வம் ஐயா. (சு : 1305)

பெருந்தேவி - முதன் மனைவி. ஆழிவேந்தன் பெருந்தேவி. (அ:602)

பெருந்தேன் இன் சொற் பெண் - பெருமை பெற்ற தேன் போலும் இன் சொல்லையுடைய பெண். பெருந் தேனின் சொற்பெண்ணிவ ளொப்பாள் ஒரு பெண்ணை. (பா : 590)

பெருநாள் - பல நாட்கள். நெடுங்காலம். பெருநாள் நிற்பின். (சு : 545) (சு : 496) திரு நான் மறையின் நெறியே திரிவார் பெருநாள் தெரிகின்றிலர். (யுத் : 236)

பெருநிலக்கிழத்தி - பூமிதேவி. பெருமை சான்ற பூமிப்பிராட்டி. பூமியாகிய நங்கை. பெருநிலக் கிழத்தி நோற்றும் பெற்றிலள் போலும். (அ : 663) (யுத் : 4302)

பெருநில வரைப்பு - பெரிய நிலவுலகம். பெருநில வரைப்பில் மன்னும் மன்னுயிர்க் கிராமனின் மன்னவரில்லை. (அ : 33)

பெருநீதி - உத்தம நீதி. தள்ளரிய பெருநீதித் தனியாறு. (பா : 741)

பெரு நெடுஞ்செரு - நீண்ட பெரும் போர். (யுத் . 2480)

பெரும் பகல் - அநேக காலம். அருந்தவம் பெரும் பகல் தள்ளி. (பா : 538)

பெரும்பகை - ஐம்புல ஆசையாகிய பகை. தோற்கலா நனிவரு பெரும்பகை நவையின் நீங்கி அத்தனி யரசாட்சியில் தாழும் உள்ளமே. (அ : 23)

பெரும்பசி - மிக்கபசி: உயிரனைத்தும் பெரும் பசியால் உலவாமல். (பா : 721)

பெரும்படை - பெரிய படை. எழுந்தது பெரும் படை. (அ : 958)

பெரும்பண் - பாலையாழ் முதலிய தலைமைப் பண்கள். கனராகம். தலைப்பண். சங்கையில் பெரும்பண் உற்ற நிறத்துறை. (யுத் : 2783)

பெரும் பதம் - பெருமை பெற்ற சொல். பெயர். சாதிப்பார் பெரும் பதம் தலைக்கொன்டு. (யுத் : 160)

பெரும் பயம் - பேரச்சம் இருவர்க்கும் பெரும்பயமியற்ற. (சு:1080)

பெரும் பயம் பிடிப்பர் - பெரியதோர் அச்சங்கொள்வார். உறங்குகின்ற வஞ்சரும்... ஓர் பெரும் பயம் பிடிப்பரன்றே. (யுத் : 2224)

பெரும்பரம் - பெரிய பாரம். பியலிடம் பெரும்பரம் விசித்த தொய்யல் மாநிலச்சுமை. (அ : 62)

பெரும்பணைத் தடக்கை - பெரிய பணைபோன்ற நீண்ட கை. பிளிறு மேகத்தைப் பிடியெனப் பெரும் பணைத் தடக்கை களிறு நீட்டுமச் சித்திரகூடம். (அ : 736)

பெரும்பாம்பு - பெரிய பாம்பு. (யுத் : 1944)

பெரும்பாயற் பரஞ்சுடர் - பெரிய பாயலில் திருக்கண் வளரும் ஆதியஞ் சோதி. பணியரங்கப் பெரும்பாயற் பரஞ்சுடரை யாங் காண அணியரங்கந் தந்தானை. (பா : 722)

பெரும்பித்து - பெரும் பேதுறவாகிய அறிவின்திரிவு. (யுத்:3946)

பெரும் பிறக்கம் - பெரிய குவியல்கள். வரையுறு பிணப் பெரும் பிறக்கம் மண்டின. (சு : 664)

பெரும்பீழை - பெரிய துயரம். பெண் தானுற்ற பெரும்பீழை உலகுக்கெல்லாம் பெரிதன்றே. (யுத் : 2627)

பெரும்புகழ்ச் சனகி - பெரிய புகழையுடைய சானகி. மண்ணினும் நல்லள் மலர்மகள் கலையூர் பெண்ணினும் நல்லள் பெரும்புகழ்ச் சனகி. (அ : 40)

பெரும் புறக்கடல் - அண்டத்தினுள்ளேயுள்ள ஏழுகடல்களைவிடப் பெரியதும் அதன் வெளியில் உள்ளதுமான கடல். மாப்பெரும் புறக்கடல் மஞ்சனம் மருவி. (யுத் : 139)

பெரும்புறம் - பெருவெளி. மணிவாயிலின் பெரும்புறத் துய்த்தனர். (யுத் : 211)

பெரும்புனல் - மிக்கநீர். பெரும்புனல் நதிகளும் குளனும் பெட்புற. (பா : 226)

பெரும் பெயர்க்கிரி - பெரிய புகழையுடைய ஏமகூடம் முதலிய எட்டு மலைகள். பெரும்பெயர்க் கிரிகளும் பெயரத்தாங்கிய அரும்பொறை. (அ : 16)

பெரும் பெரும - மிகவும் பெரியோனே. பெரும் பெரும உன்னைப் படைத்தாய் நீ என்றால். (யுத் : 287) [பா : பே]

பெரும் பெருமை - மிக்க மகிமை. பெரும் பெருமை உன்னைப் படைத்தாய் நீ என்றால். (யுத் : 287)

பெரும் பேய்ச் சாலங்கள் - பெரிய பேய்க்கூட்டங்கள். கரும் பூதமும் பெரும் பேய்ச்சாலங்களும் நிமிர்கின்றன. (யுத் : 3044)

பெரும் பொருள் - மிக்க பொருள். சிங்கலில் பெரும் பொருள் இழந்து சீறினோர். (யுத் : 386)

பெரும் பொறி - பெரிய நெருப்புப் பொறிகள். பொடித்தெழுந்து பெரும் பொறி போவன இடிக்குலங்களின் வீழ்தலின் எங்கணும் வெடித்த. (சு : 1192)

பெரும - பெருமானே. உரைசெய் எம்பெரும. (பா : 814)

பெரு மகன் - 1. தலைவன். அரசன். அரசன் தன் பெரு மகன். (பா : 317) பெருமகன் ஏவலில். (அ : 1110)

2. மூத்தவன். தமயன். பெருமகன் உலைவுறு பெற்றி கேட்டுநீ வெருவலை. (ஆ : 825)

3. பெருமையுள்ள மகன். இராமன். பெருமகன் என்வயிற் பிறக்க. (அ : 29) (ஆ : 960)

பெருமன் - தலைவன். எம் பெரும. (யுத் : 3301)

பெரு முனிவர் - சிறந்த முனிவர்கள். பல் பெரு முனிவர்க்கு முயிருடன் தழீஇய அனைத்தினுக்கும் நீயே பரம். (யுத் : 4022)

பெரு மெய்யீர் - பேருடம்பினை யுடையீர். மேருகிரிக்கும் மீதுற நிற்கும் பெரு மெய்யீர். (கி : 1020)

பெருமை - 1. பெரியாரது தன்மை. பெருந் தன்மை. பெண்ணிவண் உற்ற தென்னும் பெருமையால். (பா : 975) பெருங் கணவர். (யுத் : 2317)

2. குணப்பெருமை. குறுமை கண்டவர் பெருமை கண்டல்லது தேறுர்.

3- விபுவாயிருத்தல். பெருமையுஞ் சிறுமைதானும். (யுத் : 716)

4. மிகுதிப்பாடு. செருவின் மாண்டவர் பெருமையும் இலக்குவன் செய்த வரிவிலாண்மையும். (யுத் : 1446) பெரு வலி வயக்குருகு. (யுத் : 337) மாயையின் பெருமையான். (யுத்:2559) (யுத்:3443)

5. அரிய செயல். பெருமை யோராயினுர் பெருமை பேசலார். (கி : 210)

பெருமை ஏற்றது கோடும் - பெருமை பெற்றதாகிய உணவை (பேருண்டியை) உட்கொள்ளுவோம். (அண்) குலப் பெருமைக்கு ஏற்றதாகிய செயலையே செய்ய மேற்கொள்ளுவோம். (உ.வி) (யுத் : 1279) [பா : பே)

பெருமை யோராயினுர் - பெருமையுடை யோர். (கி : 210)

பெருவலியாற்றல் - மிகப் பெரிய வலிமை. அன்னவன் பெருவலி யாற்றலையறிதி யென்னின். (கி : 156)

பெருவழி - பெரியவழி. பொரிபடர் நிலம் பொடிந்து கீழுற விரிதலிற் பெருவழி விளங்கித் தோன்றலால். (பா : 357)

பெருவனம் - கடல்; மிக்க நீரையுடையது. செறிந்த பன்மணி பெருவனந்திசை பரந்தெரிய. (யுத் : 1208)

பெருவாடை - பெரிய வாடைக்காற்று. நற்பெரு வாடையுற்ற மரங்களின் நடுக்கமெய்த. (யுத் : 2852)

பெருவிலை - மிக்கவிலை. பேசரிது ஒருவர்க்கேயும் பெருவிலை. (யுத் : 4346)

பெருவிலை யாரம் - பெரிய விலைமதிப்புள்ள முத்தாரம். (யுத் : 4339)

பெருவெறுக்கை - தொகுதியாயுள்ள செல்வம். பெருவெறுக்கை வெறுக்கவீசி. (யுத் : 2624)

பெற்றத்தால் - பெற்றதால். மூன்றுலகு மீன்றுனை முன்னீன்றுனைப் பெற்றத்தால் தான் பெற்ற பெருஞ்செல்வம். (அ : 1056)

பெற்ற முடையவன். எருதை வாகனமாகவுடைய சிவன். மூவரிற் பெற்ற முடையவன் தன்னேடும். (யுத் : 117)

பெற்றவன் - தந்தை. பெற்றவன் அளித்த மோலி இளையவன் பெற. (யுத் : 442)

பெற்றி - 1. நிலை. உள்ளத்தின் பெற்றி ஓராள். (ஆ : 271)
2. தன்மை பிளிறியோடும் பிடியன்ன பெற்றியாள். (ஆ : 388) என்னுற்ற பெற்றி. (யுத் : 1231) (யுத் : 413)
3. பெருமை. சிறப்பு. பெற்ற நாணமும் பெற்றிய தாகுமோ (சு : 622)
4 விதம். சொல்லும் வகை. அடுத்த தன்மை பெற்றியின் உணர்தற்பாற்றே. (சு : 520)
5. விரதம். நோன்பு. பாபம் நின்றிடத்து நில்லாப் பெற்றிபோல். (ஆ : 641)
6. பேறு. செல்வம். (மு.ரா) (ஆ : 641)
7. ஆலோசனை. மாருதி வடித்துச் சொன்ன பெற்றியே பெற்றி. (யுத் : 414)
8. செயல். (உ.வி) என்னுற்ற பெற்றி என்ருன். (யுத் : 1231)

பெற்றித்து-இயல்பினையுடையது. பேரர் என்பார்களாகும்பெற்றியிற் பெற்றித் தாமே. (யுத் : 3103)

பெற்றிமை - முறை. கொல்வானுற்று ஓர் பெற்றிமையாதுங் குறையாதாள். (சு : 486) [பா : பே]

பெற்றிலம் - பெற்றுே மில்லை. மலைந்த வானரம் இற்றிலதாகிய தென்னும் வார்த்தையும் பெற்றிலம் பிறந்திலம் என்னும் பேரலால். (யுத் : 26)

பெற்றேன் - பெற்ற நான். உயிரே உன்னைப் பெற்றேன் அருமை யறிவேன். (அ : 356)

பெறலருஞ் சூழ்ச்சியர் - பெறுதற்கரிய ஆராய்ச்சி யுடையவர். பெறலருஞ் சூழ்ச்சியர் திருவின் பெட்பினர். (அ : 11)

பெறலருந்திரு - யாவராலும் பெறுதற்கரிய அரச பதவியாகிய பெருஞ் செல்வம். பெறலருந்திருப் பெற்ற பின் சிந்தனை பிறிதாம். (அ : 167) (கி : 566)

பெறலருந்தெரிவை - பெறுதற்கரிய சீதை. (கி : 826)

பெறலரு மின்னுயிர் - பெறுதற் கருமையான இனிய உயிர். ஊழி வாழ் பெரு நிலத்துப் பெறலரு மின்னுயிர்க் கருவு மாண்டறக் காணுதியோ. (யுத் : 4154)

பெறுதல் - பெறுதல். அமரரும் பெறுகலா வீடு பெற்றான். (யுத்:96) பின்பு பெறும் பேறு முண்டோ பெறுகுவனேல். (யுத் : 299) பெற்றில மாதும். (யுத் : 1399) இன்ன மிருக்கப் பெறுவீரே. (அ : 868)

பெறுவது - பெறுக. இன்றேடும் பெறுவது. (யுத் : 1399)

பே

பேச்சு விடுதல் - மௌன மாதல். உரையாடுவதை நிறுத்துதல். அவன் பின்னை பேச்சு விட்டான். (யுத் : 908)

பேசற் பாற்று - பேசத்தக்கது. அவதி நாள் நாளை நண்ணியபின் செயத்தக்கது பேசற் பாற்றென்றான். (கி : 700)

பேசுதல் - 1. எண்ணுதல் அன்னவை பேசானேல். (அ : 1008) 2. சொல்லுதல். மைந்தன் பேசினான். (யுத் . 187) பேசலார். (கி : 210) ஒன்று பேசலன் நாணினால். (யுத் : 534) பேசலன் இருந்தவள்ளல். (ஆ : 271)

பேசுவார் - பேசப்படுவார். வீரக் கோட்டி பேசுவார் ஒருவற் காவி தோற்றிலேன். (யுத் : 1594)

பேடி - ஆண்மையின்மை. பேடித்தன்மை. பேடிப்போர் வல்லரக்கர். (ஆ : 347)

பேடித்தல் - அச்சுறுத்தல். (உ.வி) (ஆ : 347)

பேடிப்போர் - பேடித்தன்மையுள்ள போர். தர்மயுத்தஞ் செய்யாமல் பேடிகள் போல மாயையில் மறைந்து நின்று செய்யும் யுத்தம். (ஆ : 347)

பேடை - பெட்டை. பறவைகளின் பெண்பால். பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்க வந்தடைந்த பேதை வேடன். (யுத் : 418)

பேடை மேலுள்ள மோடல் - பேடைமேல் மனம் செல்லுதல். ஒரு தனிப் பேடைமேல் உள்ளம் ஓடலால் பெருவலி வயக்குருகு இரண்டும் பேர்கில. (யுத் : 337)

பேணல் . குறிக் கொண்டு காத்தல். பிழைபேணல் விட்டு. (கி : 322)

பேணலார் - பகைவர். முடையுடல் பேணிப் பேணலார்த் துணிக் குறு வயிரவாள் தடக்கை தூக்கிப் போய். (அ : 907)

பேணமை - 1. நோக்காமை. பின் குற்றம் மன்னும் அரசென்றல் பேணேன். (அ : 425)

2. விரும்பாமை. பேணாய் உனக் கொர் பொருள் வேண்டு மென்று. (யுத் : 2207) பேண. (அ : 216)

பேணிய விரதம் - விரும்பிக் கூறிய சூளுறவு. பேதையைக் கொல்வே னென்று பேணிய விரதப் பெற்றி. (யுத் : 424)

பேணுதல் - 1. விரும்புதல். பொய்ச் சொற் பேண வாய்மொழி மன்னன். (அ : 216) (யுத் : 2207) பேணலர். (அ : 470)

2. போற்றுதல். நல்லுரை பேணலன். (அ : 903) ஊனிலா யாக்கை பேணி. (யுத் : 1603)

3. வழிபடுதல். பேணுதி உள்ளத்தால். (அ : 105)

4. ஆதரித்தல். (உ.வி) (அ : 105)

5. மதித்தல். பேணலா திகழ்ந்த வானோர். (பா : 680)

6. பாதுகாத்தல். (வை.மு) பேணும் உணர்வே. (சு : 496)

7. கருதுதல். உணர்தல் பின்னவன் இவன் என்பதும் பேணலை. (கி : 335) பிறிவருங் கருணையும் மெய்யும் பேணினன்.(யுத்:399)

8. ஒப்புக்கொள்ளுதல். கேட்டார்கொள்ளார் கண்டவர் பேணார். (ஆ : 1172)

பேதம் - கிளை. பிரிவு. வேறு பாடுகள். நின்ற பேதங்கள் இயம் பினர். (சு : 74)

பேதமை - அவிச்சை. பேதமை தாய் வரும் பிறப்பு. (அ : 31)

பேதமை தாய்வரும் பிறப்பு - பேதமையாகிய காரணத்தை உடைய தாய் வரும் பிறப்பு. (அ : 31)

பேதவுருவம் - பலவகைப்பட்ட உருவம். பேதவுருவம் பிறழ்கிலாது. (ஆ : 1)

பேதறுத்தல் - கலக்க மொழித்தல். கலக்கத்தைப் போக்குதல். மாருதி வந்துன்ஊப் பேதறுத்து. (யுத் : 4086)

பேதித்த - வேற்றுமைப்பட்ட. பேதித்த உயிரனைத்தும் பெரும் பசியால் உலவாமல். (பா : 721)

பேதித்தல் - 1. மாறுபடுதல். ஓதப் பெரு நூல்கள் உலப்பிலவால் பேதிப்பன. (யுத் : 240)
2. பலவகையாதல். பேதித்த உயிர் அனைத்தும். (பா : 721)

பேதியா - மாறுபடாத. நெறியயிற் பேதியா நிலைமையார். (கி : 83)

பேதியாது - தன்மை வேறுபடாது. பேதியாது நிமிர் பேதவுருவம். (ஆ : 1)

பேது - 1. மயக்கம். பிணி யுடையவனென்னும் பேதினன். (அ : 689)
2. காம விகாரம். பெண்கள் தம்மில் நொந்து பேதுறுகின்ற காலை. (பா : 1154)
3. மாறுபாடு. பேதையைப் பேதின்றி. (அ : 151) [பா : பே]
4. கலக்கம். பேதுறு மின்னுடைச் சனகியை மீட்டு மீடுமால். (கி : 212)
5. வருத்தம். பேதமை மயக்கம் பேதினல். (ஆ : 962)

பேதுறல் (பேதுறுதல்) - 1. மயங்குதல். மயக்கங் கொள்ளல். காணர் பேதுற்ரர். (அ : 610) பேதுறுவேன். (ஆ : 996)
2. கலங்குதல். மனக்கலக்கமடைதல். நின் மருங்கிருந்தார் பேதுருதவரில்லை. (யுத்:3240) பேதுற்று அலமருவேம். (ஆ:104) பேதுறுவீரேல். (சு:487) பெருந்தடையுற்றெனப் பேதுற்ருளரோ. (யுத் : 3991) (உ.வி) (யுத் : 1387)
3. மாறுபடல். (கலா) பேதுறு நிலையனுகி. (யுத் : 1387)

பேதை - 1. அறிவில்லாதவன். பிள்ளைமை விளம்பினை பேதை நீ. (யுத் : 86) பேதை உன் துணையாருளர் பழிபடப் பிறந்தார். (அ : 171)

2. பெண். இந்துவன்ன நுதற் பேதை இருந்தாள். (யுத் : 9)

பேதை காணுதல் - பித்தேறுதல். பேதை நசையிடைக் கண்டா னென்ன. (யுத் : 1940)

பேதை நசையிடைக் கண்டா னென்ன - நசையினுற் பேதைமைக் குணத்தை யடைந்தான் போல. (வை.மு) மனைவியை அவள் காதலித்த பிறன் ஒருவனிடம் கண்ட சொந்தக் கணவன் போன்று. (கலா) ஒரு பொருள் மேல் ஆசை காரணமாகப் பித்துக் கொண்டான் போன்று. (அண்) பேதை நசையிடைக் கண்டான் போன்று நகும் அழும் முனியும். (யுத் : 1940)

பேதை மாதர் - பேதைமைக் குணமுடைய மனைவிமார். மையற் பேதை மாதர். (பா : 1007)

பேதைமார் - பேதைப் பருவமுள்ள பெண்கள். (5 வயது முதல் 7 வயதுள்ளவர்) பேதைமார் முதல் கடைப் பேரிளம் பெண்கள் தாம். (பா : 1147)

பேதைமை - யாதும் அறியாமை. அவிச்சை. மாசடை பேதைமை இடை மயக்கலால். (கி : 9)

பேதைமைப் பெண் - பேதைமைக் குணம் நீங்கப் பெறுத பெண். பின்னுந் தாழ்குழற் பேதைமைப் பெண்ணிவள் என்னுந் தன்மை எளிமையின் பாலதே. (பா : 406)

பேதைமை மயக்கப்பேது - அறியாமை மயக்குதலால் உண்டான வருத்தம். பெண் எனும் பேதைமை மயக்கப் பேதினல் உண்ணிறை சோரும் என்று. (ஆ : 962)

பேதைமை மயக்கு - அஞ்ஞானமாகிய மயக்கம். உண்ட பேதைமை மயக்கற வேறுபட்டு ருவங் கொண்டு. (பா : 548)

பேதையர் - பகுத்தறிவற்றவர். பேதையர் எதிர் குவரெனினும். (கி : 257)

பேதையவள் - இளமை கொண்ட அவள். (வை.மு) அறியாமை யுடையவள். (அண்) பேதையவள் தன்னிலை விரிப்பாள். (ஆ:262)

பேதையேன் - அறிவிலியாகிய யான். பிடித்து நல்கு இவ்வுழை யெனப் பேதையேன் முடித்தனென் முதல் வாழ்வென. (ஆ 815)

பேம் - அச்சம். பேமுறத் துயர்துடைத்தளித்த பெற்றியோ. (சு : 1297) [பா : பே]

பேய் - 1. பிசாசு. பேயை யாளியை யானையை. (யுத் : 497) பேய் பிளந்தொக்க. (பா : 349) கழல் கட்பல் பேய். (சு : 946)
2. பேய் போன்ற பயனற்ற படைக்கலம். (யுத் : 3776)

பேய்க்கணம் - பேய்க்கூட்டம். பேய்க்கண முகக்கும் மூழை யொத்தன. (யுத் : 1436) பேயிருங்கணங்களோடு படுகளத் துறையும் பெற்றி ஏயவன். (யுத் : 1242) பாடுகின்றன பேய்க் கணம். (யுத் : 1011)

பேய்கள் - பிசாசுகள். கழல்கட் பேய்கள் தோள்புடைத் தார்ப்ப- (சு : 946) [பா : பே]

பேய்ச்சாலங்கள் - பேய்க்கூட்டங்கள். (யுத் : 3044)

பேய்நரி - வெறிகொண்ட நரிகள். (யுத் : 108)

பேய் முகப்பிணி - பேயின்பால் உளதாகிய பசிநோய். பேய்முகப் பிணியற. (ஆ : 26)

பேய்வாய் - பேயின் வாய். பேய்வாயென்ன வெள்ளெயிறெங்கும் பிறழ்கின்ற. (யுத் : 3806)

பேய்வினை - கொடிய வினை. தேற்றிய பேய்வினைப் பொருள்தனை யறிந்து பெற்றதோர் ஆய்வினை மெய்யுணர்வனுக. (கி : 548)

பேயம் - பானஞ் செய்தற் குரிய ஒரு பொருள். (அண்) கள். (கலா) பேய மன்றினில் நின்று பிறங்கெரி. (சு : 1196)

பேயமன்று - மதுச்சாலை. கட்குடிக்குமிடம். (சு : 1196)

பேயனேன் - பேய் போன்ற யான். பேயனேன் என்பல பிதற்றி. (யுத் : 494)

பேயிரண்டாயிரம் பேணுங்கேடகம் - இரண்டாயிரம் பேய்கள் பேணிக் கொணர்ந்த கேடகம். பேயிரண்டாயிரம் பேணுங் கேடகம் ஏயெனு மளவினில் எய்தச் சென்றதால். (யுத் : 1522)

பேயின் பண்டாரம் - பிணக்குவியல். பொரு பேயின் பண்டாரத் திடையிட்டார் தம்முடல். (சு : 968)

பேயீர் - பேயின் தன்மையீர். பேயிரே நீர் இன்னமிருக்கப் பெறு வீரே. (அ : 868)

பேயொராயிரம் பூண்டதேர் - ஓராயிரம் பேய்கள் கட்டிய தேர். பேயொராயிரம் பூண்டது பெய்ம்மணி ஏயதேர். (யுத் : 2080)

பேர் - 1. உடல். தாரணியும் விசும்பும் தவழ்பேரர். (யுத் : 2084)
2. பெரிய பெருமை. கருணன் செய்த பேரெழிலாண்மை. (யுத் : 1582) பேருகம். (யுத் : 3233) பேர் உங்காரம். (யுத் : 3799)
3. மிகுதி. பேரபிமானங்கள் உற்ற பெற்றியோர். (யுத் : 387) பேரளறு. (யுத் : 563) பேரிழுக்கு. (கி : 233)
4. ஐந்து விசும்பிடைச் செல்வ தோர் பேர் செலாது. (யுத் : 2108)
5. பெயர். புகழ். பேருடையவுணர். (யுத் : 267) பேரேபட்டன. (சு : 958) பேரடா நின்ற தாரோடு. (யுத் : 259) (யுத் : 159)
6. பெயர். பேரை ஒரு பொருட்கே பல்வகையாற் பேர்த் தெண்ணும் தாரை நிலையை. (யுத் : 289) பேரெலாம் உமதே யாக்கி. (யுத் : 1593)
7. பெயரையுடையவன். அதிகாயனென்றும் பேர் கொன்றவன். (யுத் : 1958)

பேர்க்ககிலா-நீக்கமுடியாத. வானவர்க்கும் பேர்க்ககிலாத் திண்மை யும். (அ : 1131)

பேர்க்கப் பேர்க்க - போர்க்குந் தோறும். பேர்த்தன சிலமலை பேர்க்கப் பேர்க்க நின்று ஈர்த்தன. (யுத் : 625)

பேர்க்கல் - மாற்றுதல். பேதித்தல். பதுமத் தானுக்கும் பேர்க்கலாம் சிந்தையள் அல்லள். (யுத் : 3995)

பேர்ச்சி - 1. நிலைகலங்குதல். பேராழி முகஞ்செலச் சென்றனன் பேர்ச்சி யில்லான். (யுத் : 1978)
2. பேர்தல்· மாறுதல். ஊழிப் பேர்ச்சியுள். (ஆ : 1119)
3. மீளுதல். அமங்கலப் பொருள். (யுத் : 1978)

பேர்த்தல் - 1. போக்குதல். பெண்ணுர் அமுதமனை யார் மனத்தூடல் பேர்த்தும். (பா : 974)

2. வேறுபடுத்தல். பேரை ஒரு பொருட்கே பேர்த் தெண்ணும் தாரை நிலையை. (யுத் : 289)
3. மாற்றுதல். பேதித்தல். பதுமத் தானுக்கும் பேர்க்கலாஞ் சிந்தையளல்லள். (யுத்:3995) (யுத்:289)
4. இருக்கு மிடத்திலிருந்து எடுத்தல். பேர்த்தன மலைசில. (யுத் : 625)
5. கால் பெயர்த்தல். பேர்த்தான் பேர்த்தான் முற்று மளந்தான். (யுத் : 3477)
6. நீக்குதல். வானவர்க்கும் பேர்க்ககிலாத் திண்மையும். (அ : 1131)

பேர்த்தான் பேர்த்தான் - பேர்த்துப் பேர்த்து. (யுத் : 3477)

பேர்தல் - 1. பிறழ்தல். பேரா வரம். (அ : 597)
2. விட்டு விட்டு வீசுதல். பூஞ்ஞெளி பேர்ந்தன. (அ : 802)
3. நிலை குலைதல். வான் கனல் பேர் என அவன் அவை முனியிற் பேருமால். (ஆ : 819) அமரிற் பேரு மத்தனை எத்தனை யுலகமும். (யுத் : 506)
4. அசைத்தல். பேருமோ ஒருவரால் அவர்களாலல்லது. (யுத் : 101)
5. மாறுதல். பேர்கிலை யால். (யுத் : 240)
6. நிலை திரிதல். வேறுபடல். நிலையில் மாறுபடல். பேர்கிலன். (யுத் : 189)
7. இருந்த இடத்தை விட்டு அப்பாற் செல்லுதல். பேருதிர். (யுத் : 3319) பேருதி உயிர் கொண்டு. (யுத் : 1420) வாளி உன் மார்புருவிப் பெரும் புண் திறவா வகை பேருதி நீ. (ஆ : 916) பேர்குதி. (யுத் : 354) பேர ஒல்வதன்று. (யுத் : 3345) நீ பேர் கின்றிலையால். (யுத் : 240) [பா : பே]
8. மீளுதல். தொடர்ந்து பேரவே யருள். (யுத் : 4074)
9. வீசுதல். பேருங் கற்றைக் கவரிப் பெருங்கடல். (யுத்:1060)
10. விலகுதல். பேர நின்றனர். (கி : 607)
11. பின்னிடுதல். பேர்கலாத்தாரை. (கி : 607)
12 புறப்படுதல். சேனையும் பேர்க. (கி : 752)
13. இடம்விட்டுப் பெயர்தல். நிலமாமகள் பேர்வள் என. (யுத் : 1698)
14. அழிதல். பேராக்காதை. (யுத் : 3082)

15. செல்லுதல். பேர்குவான். (யுத் : 1489)

பேர் முழக்கு - பெரிய முழக்கு. இடியும் மாக்கடன் முழக்கமும் வெருக்கொள இசைக்கும் பேர் முழக்குடையன. (கி : 712)

பேர்விடம் - பெயர்ந்து செல்லும் இடம். புரவியு மிடைந்த சேனை பேர் விட மில்லை. (பா : 896)

பேர்வு - 1. பேர்த்தல். பேர்வுறு கவியின் சேனைப் பெருங்கடல். (யுத் : 715) பெருந் தவமியற்றினோர்க்கும் பேர்வரும் பிறவி நோய். (யுத் : 445)

2. பெயர்ந்து செல்லுதல். வெய்யோன் பேர்விலாக் காவற்பாடும். (சு : 1338)

பேர்வுறுதல் - அறவே நீங்குதல். பித்துண்டது பேர்வுறுமா பெறும். (யுத் : 244)

பேர - 1. நகர. மாசுணம் பேரவே. (பா : 954)

2. பெரியளவாகிய. பேர ஆவொடு மாசுணம் பேரவே. (பா : 954)

3. அசைதலால். (அண்) உவமவுருபு. (கு) விட்டு விட்டு. (கலா) ஒளிவிட்டு. (வை.மு) எயிற்றிளம் பிறைக் குலம் பேர மின்னி. (பா : 110)

பேரகல் வானம் - பெரிய தாய் விரிந்துள்ள ஆகாயம். பேரகல் வான மெங்கும் பிறங்கெரி பிறக்குமாறும். (ஆ : 1017)

பேரகழி - பெரிய அகழி. (ஆ : 560)

பேரடையாளம் - சிறந்த அடையாளம். பெரிய அடையாளம். இத்தனை பேரடையாளம். (சு : 685) (சு : 1319) (யுத் : 4165)

பேரண்டங்கள் - பெரிய அண்ட கோளகைகள். பெரிய அண்டங்கள். மிடைந்த பேரண்டங்கள் மேல கீழன உடைந்துபோம். (ஆ : 820)

பேரணி - 1. நடுப்படை. தூசியொடு நெற்றி இருகையினெடு பேரணி கடைக்குழை. (யுத் : 3398)

2. பெரிய அணிகள். பெருஞ் சேனை. (அண்) தானவர் பேரணியைக் கொன்றனென. (யுத் : 2933) (ஆ : 579)

பேரணை - 1. பெருந்தடை. சிறப்புடைய அணை. (அண்) சீர்த்த பேரணை தன்னையுஞ் சிந்தின. (யுத் : 975)

2. பெரிய அணைக்கட்டு. ஆன்ற பேரணை அன்பின் அமைத் தனர். (யுத் : 689) (யுத் : 3286)

பேரபிமானம் - 1. பேரன்பு. பிரிந்த ஏதுகொல் பேரபிமானங்கொல். (ஆ : 1055)

2. மிக்க தேகாபிமானம். (கலா) நாட்டுப்பற்று முதலிய பற்றுக் கள். (அண்) மிக்க அன்பு. (வை.மு) பேரபிமானங்கள் உற்ற பெற்றியோர். (யுத் : 387)

3. பெரிய அபிமான வுணர்ச்சி. (மானக்கேடு) (அண்) சீதைபால் வைத்த பேரன்பு (அண்) பற்று. (கலா) பேரபிமானம் மென்னும் சத்திரம். (யுத் : 2853)

பேரம் - உடல். தாரணியும் விசும்பும் தவழ் பேரர். (யுத் : 2084)

பேரர் - 1. உடலையுடையவர். (யுத் : 2084)

2. கீர்த்தியை யுடையவர். (உ.வி) (யுத் : 2084) (யுத் : 3103)

பேரரசி - பெரிய பட்டத்தரசி. அரசரிற் புகுந்து பேரரசியான நீ. (அ : 158)

பேரரசு . பெரிய இராச்சியம். எடுத்தமா முடிசூடி நின்பால் இயைந்து அடுத்த பேரரசு ஆண்டிலை. (அ : 1066) (கி : 814) (அ : 173)

பேரரா - பெரும் பாம்பு. புழுங்கு வெம்பசியோடு புரளும் பேரரா. (பா : 352) (யுத் : 3351)

பேரருந்துயர் - பேர்த்துக்களைதற்கரிய பெருந்துன்பம். பேரருந்துயர் இறைபேர்ந்துளோர் என. (ஆ : 1130)

பேரருளாளர் - பேரருள் ஆள்பவர். பேரருளாளர் என்பார் கறவையும் கன்றும் ஒப்பர். (யுத் : 3541) (யுத் : 434)

பேரவலம் - பெரிய துன்பம். தோன்றிய பேரவலம் துடைத்த துண்டேல். (அ : 193)

பேரவா - பெரிய விருப்பம். பேர் அவாவொடு மாசுணம் பேரவே. (பா : 954)

பேரவிட்ட - பெயரும்படி செய்யப்பட்ட. தொலைந்துபோன. (அண்) பேரவிட்ட பெருவலி இந்திரன். (யுத் : 1292)

பேரவை - 1. மகாசபை. பெரிய சபையோர். என்றனன் என்ற போதிருந்த பேரவை. (அ : 951)

2. அத்திரு நாமங்கள். தாமரைத் தடங்கண்ணினுன் பேரவை தவிர. (யுத் : 138)

பேரளறு - மிக்க சேறு. அங்கம் வெந்து பேரளற்றிடை அடுக்கிய கிடந்த. (யுத் : 563)

பேரளி - பெருங்கருணை. பேரளிக்குப் பிறந்த இல்லாயினுன். (கி : 34)

பேரறிவாளன்-பெரிய அறிவினையுடையவன் (அனுமன்) பேரறிவாள நன்று நன்று. (யுத் : 412)

பேரன் - 1. பாட்டன். விரிஞ்சனும் யாவர்க்கும் மேலாம் முன்பன் பேரன் நாடுற்ருயோ. (யுத் : 3891)

2. மகனது மகன். மகளது மகன். பாட்டன் பெயரினைப் பெற்றவன் காதலைப் பேரனை மருகனை. (யுத் : 1793)

பேராசை - மிக்க ஆசை. பேராசை மனங் கவற்ற. (ஆ : 560) (யுத் : 3888)

பேராத வாய்மைப் பெரியோன் - வேறுபடாத மெய்ம்மையைப் பேசுகின்ற பெரியோன். (வசிட்டன்) பேராத வாய்மைப் பெரியோன் உரை செவியில் சாராத முன்னம் தயரதனைப் போல் வீழ்ந்தார். (அ : 389)

பேராப் பெரும்பழி - அழியாத பெரிய பழி. காலின் பேருளதனையும் பேராப் பெரும் பழி பிடித்தி போலாம். (யுத் : 3200)

பேராயிரங்கள் - ஆயிரம் பெயர்கள். பேராயிரங்களுடையாய். (யுத் : 2213)

பேராயிரமுடையான் - திருமால். நெடு மாருதி நிமிரும் பேராயிர முடையானெனத் திசை யெங்கணும் பெயர்ந்தான். (யுத் : 2993)

பேரா விடர்ப்பட்டு - தீராத துன்பமுற்று. பேரா விடர்ப்பட்டு அயலுறு பீழை கண்டும். (அ : 440)

பேராளன் - பெருமை பெற்றவன்- பெரியோன். பட்ட இவன் வேறே யோர் பேராளன் தானே. (ஆ : 1190)

பேராற்றல் - பெருவலி. தாங்கரிய பேராற்றல் தாடகை. (பா:745)

பேராறு - பெரிய நதி. விரிந்த குருதிப் பேராறு. (சு . 861)

பேரி - 1. பேரிகை. முரசு. குறடு மாப் பேரி கொட்டும். (யுத்:2397) (யுத் : 2360) (யுத் : 4189)
2. போர்ப்பறை. பேரி யோசை பிறத்தலும்...... தேரின் சேனை திரண்டது. (ஆ : 391)
3. ஓர் இசைக் கருவி. போர்த்த பேரியின் கண்ணன. (யுத் : 1432)

பேரி இரட்டல் - பேரி கொட்டுதல். பேரியும் இடிபட முழங்கின இரட்டலின்றியே. (சு : 372)

பேரிகை - பேரிகை. ஆன்ற பேரிகை யரிகுரற் சங்கமும். (யுத் : 3496) [பா : பே]

பேரிசை - பெரும்புகழ். உறல் நல்லது பேரிசை. (யுத் : 1741)

பேரிடங்கர் - உலாவுகின்ற முதலைகள். பேரிடங்கரின் கொடுங் குழை யணிந்தன பேய்கள். (யுத் : 3783)

பேரிடம் - பெரிய இடம். பேரிடம் கதுவரிது. (யுத் : 3783)

பேரிமுழக்கு - பேரிகை வாச்சியங்களின் ஒலி. பேரி முழக்கன்ன பேச்சினர். (யுத் : 2084)

பேரிமுழா - முரசங்களும் முழவுகளும். மோதுகின்றில பேரிமுழா. (அ : 816)

பேரியங்கள் - பெரிய இசைக் கருவிகள். பேரியங்கள் முருடு ஆகுளி பெட்குந்துரியம். (யுத் : 816)

பேரியல் - 1. பெருந்தன்மை. பெருமை. பேரியல் இலங்கை வேந்தன் பின்னவன். (யுத் : 1332)
2. பெரிய தன்மை. பேரியற் படையுஞ்சூழ. (யுத் : 4221)

பேரியலாளர் - பெருந்தன்மை யுடையவர்கள். பேரியலாளர் செய்கை ஊதியம் பிடித்துமென்னுர். (யுத் : 2223)

பேரியாக்கை - பெரிய உடம்பு. (யுத் : 2319)

பேரிரும்பின் வன்கட்டி - பெரிய இரும்பின் வன்மையான கட்டி. (யுத் : 3742)

பேரிருள் - மிக்க இருள். தயங்கு பேரிருள் சூழ் ஆழி மாதிலம். (கி : 160) (யுத் : 2280) (யுத் : 2309)

பேரிலங்கை - பெரிய இலங்கை. (யுத் : 1952)

பேரிளம் பெண் - வயது முப்பத்திரண்டு முதல் நாற்பதளவும் பேரிளம் பெண். பேதைமர் முதல் கடைப் பேரிளம் பெண்கள்தாம். (பா : 1147)

பேரினம் - பெரிய கூட்டம். தடையில் கூற்றன்ன பேரினம். (ஆ : 400)

பேரீசன்-பெரிய பெருமான். பெருமையுடைய இறைவன். என்னுனே வல்லன் என மகிழ்ந்த பேரீசன். (யுத் : 300)

பேருடைக்கிரி - பெருமை பொருந்திய மலே. பேருடைக் கிரியெனப் பெருத்த மீன்களும். (யுத் : 582)

பேருணர்வு - மூதறிவு. தலேயாய பேருணர்வில். (பா:743)

பேருதவி - பெரியதாகிய உதவி. அன்செய்த பேருதவிக்கு யான் செய் செயல் பிறிதில்லே. (யுத் : 4340)

பேருதி - திரும்பிச் செல்வாயாக. (ஆ : 916)

பேருமோ - அசைக்க முடியுமோ. பேருமோ ஒருவரால். (யுத்: 110)

பேருயிர்ப்பு - பெருமூச்சு. பொம்மலார் பேருயிர்ப் பொடிருந்தனர். (யுத் : 3578)

பேருரு - பேரெழில் வாய்ந்த உருவம். அகலிகைக் கரிய பேருரு வளித்தருளினுன். (கி : 84)

பேருவகைக் கடல் - பெரிய மகிழ்ச்சியாகிய கடல். எழுந்த பேரு வகைக் கடற் பெருந்திரை இரைப்ப. (கி : 149) (அ : 91) (பா : 326)

பேருறுகதி - (வாராமல்) பெயர்க்கும் வழி. இதனே ஐய பேருறு கதியுமுண்டோ. (யுத் : 2871)

பேரெழில் - பேரழகு. மிக்க அழகு. பேரெழில் உவமையன் ஆனுன். (ஆ : 1177) (கி : 340) (யுத் : 144) (ஆ : 1177)

பேரெழில் ஆண்மை - மிக்க எழுச்சியையுடைய ஆண்மை. பெருமையும் எழுச்சியும் வாய்ந்த வீரச் செயல். (அண்) பெருமையும் வண்மை தானும் பேரெழிலாண்மை தானும். (யுத் : 876) கருணன் செய்த பேரெழி லாண்மை யெல்லாம். (யுத் : 1582)

பேரெழில் தழைத்த வீரன் - பேரழகு தளிர்த்து விளங்கும் வீரன். இராமபிரான். பிழைத்த தன்மை இதுவெனப் பேரெழில் தழைத்த வீரன் உரைசெய. (கி : 340)

பேரெழிலாட்டி - பேரழகினையுடைய சீதை. பெண்ணியல் தீபமன்ன பேரெழிலாட்டி. (ஆ : 1042)

பேரெழிலாளன் - மிக்க எழிலையுடையவன். (நளன்) பெரியவன் தலைமேல் நின்ற பேரெழிலாளன். (யுத் : 2388)

பேரெழிலான் - பேரழகனாகிய இராமபிரான். நின்ற பேரெழிலானை நோக்கி. (கி : 374)

பேரொலி அரவம் - மிகவும் பெரிய முழக்கம். இலக்குவன் வயிர வில்லின் பேரொலி யரவம். (யுத் : 2243) தாவரும் பேரொலி. (யுத் : 2759)

பேரொளி - மிக்க ஒளி. (ஆ : 579)

பேழ் - 1. பெருமை- பெரிய. கொண்ட பேழுக்க மூள. (சு : 306) 2. பிளந்த. பேழ்வாயரக்கி. (சு : 70)

பேழ்கணித்தல் - கண்மூடி வருந்துதல். (கலா) பேராசைப் படுதல். (பழையவுரை) மருண்டு விழித்தல். (அண்) வேங்கையென் றினைய வேயும் பின் சென்று காதல் கூரப் பேழ்கணித்திரங்குகின்ற. (கி : 53)

பேழ்வயிற்றரவு - பெரிய வயிற்றினையுடைய பாம்புகள். மதக்கடமா அடங்கு பேழ்வயிற்றரவுரி. (அ : 740)

பேழ்வயிறு - பெரியவயிறு. (அ : 740)

பேழ்வாய் - பிளந்தவாய். (கலா) பெரிய வாய். (அண்) (வை.மு) தறுகட் பேழ்வாய்... கோண்மா. (கி : 53) (ஆ : 282) எயிற்றுப் பேழ்வாய் மடித்து. (யுத் : 3679)

பேழை - பெட்டி. ஆழியிற் புனலற மணிகளட்டிய பேழையிற் பொலிந்தன. (யுத் : 586) (யுத் : 1436)

பேறு - 1. பெறப்படும் புருஷார்த்தம். மோட்சம். பேறு நீ இகழ்வு நீயே. (யுத் : 606)
2. பெற உரியன ஓம வேள்வியில் இமையவர் பேறெலாம் உண்ணும். (யுத் : 138)

3. பயன். (கலா) தீய பேறு. (அண்) பிறந்திலம் என்றும் பேரலால் முற்றுவதென்னினி. (யுத் : 26)

பேனம் - நுரை. பேன வேலை. (சு : 868) பேன வெண்குடைய வாய குருதிப்பேராறு. (யுத் : 2537)

பை

பை - 1. படம். பையரவு. (பா : 950) பைத்தலையரவு. (சு : 1044)
2. இளமை. அழகு. தன்னுடல் கொடுத்த பைம்புள். (யுத்:418)
3. பசுமை. பைந்தொடி. (சு:477) பைந்துணர் மாலை. (அ:471)

பைங்கழல் - பசுமையான வீரக்கழல். பைங்கழ லனுமனைப் பிணித்த பாந்தளை. (சு : 1054) பைங்கழலோர். (யுத் : 3226)

பைங்கிளி - பச்சை நிறமுள்ள கிளி. பா கெர்க்குஞ் சொற் பைங்கிளி யோடும் பல பேசி. (பா : 584)

பைங்கூழ் - பசுமையான நெற்பயிர். இளம்பயிர். அலர்ந்த பைங்கூழ் அகன் குளக் கீழன. (அ : 815)

பைத்தலையரவு - பட முள்ள தலைகளையுடைய பாம்பு. (சு . 1044)

பைதல் . சிறுவன். பயல். (துஷ்டக் குரங்கு) பைதலை இத்தனை பொழுது கொண்டிருப்பதோ என. (சு : 1044)

பைந்தலை - பசுமையான தலை. விழுந்த பைந்தலைய. (யுத் : 2017) அற்ற பைந்தலை. (யுத் : 2018)

பைந்தாமரை - பசிய தாமரைக் கொடி. தண்டிருந்த பைந்தாமரை. (யுத் : 9,0)

பைந்தார் - 1. பசிய வெற்றி மாலை. பைந்தார் வடித்த குனி வரி சிலைக்கை மைந்தன். (பா : 713)
2. பொன்னாலியன்ற மாலை. பதவலிச் சதங்கைப் பைந்தார்ப் பாய் பரி. (யுத் : 4345)

பைந்துகட்கள் - பசிய தூளிகள். என்றூணைத் தாளின் பைந்து கட்களும் ஒக்கில ராமெனப் படைத்தாய். (யுத் : 4039)

பைந்துணர் மாலை - பசுமையான பூங்கொத்துக்களால் இயன்ற மாலை. பைந்துணர் மாலையிற் பரிந்த மேகலை. (அ : 478)

பைங்தொடி - 1. பசுமையான வளையல். பைந்தொடி ஒருத்தி. (அ : 450)
2. பைங்தொடியாளான பெண். (சீதாபிராட்டி) பைந்தொடி ஓவியப் பாவை போன்றனள். (பா : 602)

பைங்தொடித்திரு - பசிய வளையல்களை யணிந்த திருமகள் போன்ற சீதை. பைந்தொடித் திருவின் பரிவாற்றுவான் வெந் தொழிற்றுறை வீடுபெற்றெய்திய எந்தை. (கி : 347)

பை நாகம் - படத்தையுடைய பாம்பு. பை நாக நிகர்க்கும் வீரர். (சு : 1248)

பைப்பய - மெல்ல மெல்ல. சின்னெறியைப் பைப்பய நீங்கினர். (அ : 144) பைப்பயப் போதலே கருமம். (சு : 1066) (ஆ : 993)

பைப்பைய - மெல்ல மெல்ல. பைப்பைய அறிவு திர்ந்து. (ஆ : 993) [பா : பே]

பைபய - மெல்ல மெல்ல. பைபயப் பயந்த காமம். (சு : 1328)

பைம்புள்-இளமைப்பருவமுள்ள பறவை. அழகிய பறவை. (யுத்:418)

பைம்பூண் - பசிய பொன்னாலாகிய அணிகலன். (யுத் : 883)

பைம்பொற் செங்கரம் - பசிய பொன்னாற் செய்த சிவந்த அணி கலன்கள் அணிந்த கைகள். (யுத் : 2651)

பைம்பொன் ஆரமாமுடி - பசிய பொன்னாற் செய்த முத்துவரிசை யுடைய பெரிய மகுடம். நின் பைம்பொன் ஆரமாமுடிக் கோலமும் செவ்வியும் அழகும். (யுத் : 4074)

பைம்பொன் மாரி - பசுமையான பொன்மலர் மாரி. விண்டுவின் நாட்டவர் பைம்பொன் மாரி சொரிந்தார். (ஆ : 941)

பைய - 1. மெல்ல. பைய வரன் முறை கூறலுற்ருன். (யுத் : 895)
2. மெதுவாக. அருகெய்திப் பைய... இறந்தான் உம்பி அம்பிற் கொன்றனன் இராமன் என்ருர். (யுத் : 1656)

பையரவல்குலார் - பாம்பின் படம் போன்ற இடைப்பக்கத்தை யுடைய பெண்கள். (யுத் : 2158)

பையரவு - படத்தையுடைய நாகம். பையரவல்குலார். (யுத் : 2158) (பா . 579)

பையரா - படத்தையுடைய பாம்புகள். பையரா நுழைகின்ற போன்றன. (அ : 239)

பைய வருதல் - மெல்ல வருதல். பைந்தொடிக் கிடர்களே பருவம் பையவே வந்தடுத்துளது. (கி : 545)

பையுணோய் - பையுள் நோய் பார்க்க.

பையுயிர்த்தல் - மெல்லப் பெருமூச்சு விடுதல். பையவுயிர்த்து என்பதன் தொகுத்தல். பையுயிர்த் தயரும் பேழ்வாய்ப் பஃறலைப் பரப்பினுலும். (யுத் : 893)

பையுள் - 1. துன்பம். வருத்தம். பையுள் நகரம் வைகிட. (அ:617) பரிந்தவன் பையுள் எய்தி. (அ : 668) பையுள் பார்த்து. (கி : 220)
2. நோய். பையுளுற் றுயங்கி நைந்தான். (ஆ : 656)

பையுள் நகரம் - துன்புற்ற நகர மாந்தர். (அ : 617)

பையுள் நோய் - துன்ப நோய். பையுணோய் சுட்டவன் மானவற் றெழுத லுன்னியே. (யுத் : 4247)

பை வாய் நெடு நா - பை போலும் நீண்ட நாக்கு. அவன் ஆருயிர் கக்கப் பை வாய் நெடுநாவை முனிந்து பறித்தான். (யுத் : 1923)

பொ

பொகட - செல்லும்படி. போகட. வெற்பினம் பொகடவுற்ற. (யுத் : 2098)

பொகுட்டு - 1. தாமரை மலரின் நடுவே அமைந்துள்ள கொட்டை. (அண்) விரை செறி கமல மென் பொகுட்டு மேவிய வரசரோருகன் மகன். (பா : 184) (யுத் : 200)
2. (இலக்) ஊதும் போது வாயு பூரித்ததனுல் திரண்டு தோன்றும் வாயின் வடிவம். காளத்தின் பொகுட்ட ஆர்த்த வாயன. (யுத் : 1432)
3. மலை. முழை கொள் மேருவின் பொகுட்டிடை. (சு : 302) [பா : பே]

பொங்கணே - உயர்ந்த படுக்கை. பொங்கணே மேற் கிடந்தாள் தனே விரைவின் எய்தினுள். (அ : 139)

பொங்கல் - 1. உயர்ச்சி. பொங்கணே. (அ : 139)
2. பருமை. பொங்கிளங் கொங்கை. (அ : 970)

பொங்காரம் - 1. மிக்க ஆரம். (வை.மு) பொங்காரத்தான். (யுத் : 3799)

2. பொங்கு காரம்; பொங்குகின்ற சினம். (கலா) (யுத் : 3799)

பொங்கி - மனக்கிளர்ச்சி கொண்டு. (கலா) சிரித்து. (கோபித்து) (வை.மு) நசை திறந்திலங்கப் பொங்கி நன்று நன்றென்ன நக்கு. (யுத் : 25)

பொங்கிளங் கொங்கை - பருத்த இளமையான கொங்கை. (அ:970)

பொங்கு கோபம் - பொங்கி வழிகின்ற கோபம். நுதல் விழிப் பொங்கு கோபஞ் சுட. (பா : 342)

பொங்குதல் - 1. எழுதல். மேன் மேற் கிளர்தல். பூசலி னெழுந்த வண்டு மருங்கினுக் கிரங்கிப் பொங்க. (பா : 575)

2. கோபித்தல். பூரியர் எண்ணிடை வீழ்வன் என்று பொங்கும். (அ : 207) பொங்கரா. (சு : 481)

3. சின மிகுதல். உனக் கபயம் பிழைபுல்லல் என்னவும் பொங்கினுய். (கி : 333)

4. மிக் கொலித்தல். பொங்கியம் பலவுங் கறங்கின. (அ : 240)

5. மகிழ்ச்சியின் மிகுதல். வானுயர் காதலிற் பொங்கினுன். (அ : 799)

6. பூரித்தல். தோள்கள் பொங்க. (சு : 17)

7. உற்சாகங் கொள்ளல். பார்த்திபன் எழுந்து பொங்கிப் பிணித்தனன் சுரபி தன்னை. (பா : 660) போர்த் தொழில் வேட்கை பூண்டு பொங்கினர் புகுந்து. (யுத் : 2253)

8. அடங்கா திருத்தல். வம்பிற் பொங்கும் கொங்கை. (பா:1002)

9. விளங்குதல். பொங்கு வெந்தனையிற் பூட்டி. (யுத் : 286)

10. கிளர்ந் தெழுதல். பொங்கிப் பரந்த பெருஞ் சேனை. (யுத் : 3)

11, ஒலித்தல். பொங்கின சிலம்புகள். (பா : 1109)

12. வெகுண்டு துன்புறுத்தல். மறம் திறம்பல்... எளியவர்ப் பொங்குதல். (கி : 337)

13. விரிதல். பொங்கிய விசும்பிடைக் கடிது போவான். (யுத் : 710)

14. நிறைந்து மேலோங்குதல். மிகுதல். பொங்கிருள். (ஆ:1117) இடிபடு முழக்கம் பொங்க. (அ : 1041)

15. வலிமை மிகுதல். பொங்கு வன்தனையிற் பூட்டி. (யுத்:2863)

பொங்கு தொறு பொங்கு தொறு - பொங்கிப் பொங்கி எழுந் தோறும். (யுத் : 699)

பொங்கு தோள் - பூரித்த தோள். பொங்கு தோள்வேர்த்தனன். (கி : 203)

பொங்குநர்-சீற்றம் மிக்கவர். போரிடைப் பொங்குநர்க் கொன்றவர். (யுத் : 386)

பொங்கு மோதை - கிளர்ந் தெழும் ஒலிகள். சினமாப் பொங்கு மோதையும். (யுத் : 2596)

பொங்கு வில் தலைவர் - சிறந்த வில்வீரர். (கி : 81)

பொங்கு வெங் கொடுமை - கிளர்கின்ற மிக்க கொடுமை. பொங்கு வெங் கொடுமை என்பது புழுங்கி எழ. (ஆ : 14)

பொங்கு வெஞ்செரு - கிளர்ந் தெழும் கொடிய போர். (யுத்:2303)

ொங்கு வெந்தீ - பொங்கி எழுகின்ற கொடிய [தீ. இவ்வன்னை கற்பெனும் பொங்கு வெந்தீச்சுட. (யுத்:4011)

பொங்குளை - வளர்ந் தோங்கி விளங்குகின்ற பிடரி மயிர். பொங் குளைப் பச்சை மாப்புரவி. (ஆ : 690) [பா : பே]

பொங்குளைச் சீயம் - மேலோங்கிப் பரந்து விளங்கும் பிடரி மயிர் களையுடைய சிங்கம். (சு : 5)

பொங் கொளி - சூரியன். புதையிருட் பொழுதினும் மலரும் பொங் கொளி. (யுத் : 1075)

பொச்சை - குற்றம். பொச்சை மாக்கள். (கி : 564)

பொசி - கசிவு. உதிரக் கசிவு. பொசி துதைந்தன. (கி : 191)

பொசிவு - நெகிழ்வு. பொசிவுறு பசும் பொற் குன்றில். (சு : 194)

பொடி - 1. மண். புரிகுழல் பொடியளாவுற. (சு : 978)
2. புழுதி. பொடியுடைக் கானம். (பா : 415)
3. சாம்பல். விண்டு நீங்கினர் உடலுகுபொடியின் மேவினளே. (பா : 535)
4. மகரந்தப் பொடி. மொண்டுற வீசின நறும் பொடி விண்டு வாடையே. (கி : 553)
5. பூமி (வை.மு) பொடிமிசைப் புரண்டவும் புரவியீட்டமே. (அ : 995)

பொடிசூழ் படி - புழுதி நிறைந்த தரை. கையாற் பொடிசூழ் படி நின்றெழுவி. (அ : 333)

பொடித்தல் - 1. (வெளித்) தோற்றுவித்தல். வெளித் தோன்றுதல். கண்கள் பொடித்த பொங்கு சோரி. (யுத்:198) மின் பொடித்தது போன்றன விண்ணெலாம். (யுத் : 681) மிகுகனல் பொடிக்குங் கண்ணினர், (ஆ : 473) பொடித்தன போன்ற. (கி : 480) (யுத் : 2786)

2. வெளிப்படல். புண்ணுற்ற தணைய சோரி பொறியொடும் பொடிப்ப நோக்கி. (கி : 312) பொறிக்குலம் பொடிப்ப. (யுத் : 1489)

3. சிதறுதல். பொடித் தெழுந்து பெரும் பொறி போவன. (சு : 1192)

4. கெடுத்தல். போக்கடித்தல். அது கண்பொடித்த நாள். (சு : 357)

5. அரும்புதல். துள்ளிக் கண்ணீர் பொடித்திலன். (யுத் : 2851)

6. புளகித்தல். சிலிர்த்தல். அவனிக்கு அம்மயிர் பொடித்தன போலுமிப்புல். (ஆ : 243)

7. பொடியாதல். பக்கம் வீசும் படைச்சுடர் பஃறிசை புக்குப் போதப் பொடிப்பன போக்கில. (யுத் : 3710)

8. நிறைதல். நிரம்புதல். பொடித்தன உரோமப் புள்ளி. (யுத் : 431) மயிர்ப்புறந் தோறும் வந்து பொடித்தன மதன வாளி. (யுத் : 2786)

9. துளித் துளியாதல். இரத்தம் பொடித்தெழ (யுத் : 849)

10. பொங்குதல். பொடித்தெழுந்தானை. (யுத் : 3207)

11. முகிழ்த்தல். வேலை ஓர் ஏழும் புலைகொள் வல்லுருப் பொடித்தனவோ. (யுத் : 3280)

பொடித்தலம் - 1. புழுதி நிறைந்த மண். பொடித்தலந் தோளுறப் புரண்டு. (அ : 883)

2. புழுதி மண். பொடித்தல மிலங்குறு பொலங்கொள் மேனி யான். (அ : 1201)

பொடித்தவன் - எரித்துச் சாம்பராக்கியவன். எயில் பொடித்த வனின் நகையெழுந்தன. (பா : 492)

பொடிதல் - 1. பொடிப் பொடியாகப் பறத்தல். தீயிடைப் பொடிந் தெழும் உயிர்ப்பினன். (யுத் : 3813)

2. பொடியாதல். வீரர் தஞ்சிரம் பொடிந்து சிந்தவே. (யுத்: 3350)

பொடிப்பு - மயிர்க் கூச்சு. செருக்கிக் கூசம்மயிர் பொடிப்பற்றன அனலாயின கொடிய. (யுத் : 3724)

பொடிப் பொடியாகி - பொடியாய். தூள் தூளாக. இடிப்புண்டு பொடிப் பொடியாகி அற்றவாறென்றும். (யுத் : 1156) எல்லாம் பொடிப் பொடியாகிப் போன. (யுத் : 1400)

பொடிபடுத்தல் - நீருக்குதல். ஆடகத் தருவின் சோலை பொடி படுத்து. (சு : 748)

பொடியாடுதல் - திருநீற்றைப் பூசுதல். வரையார் தோள் பொடி யாடி வைகுவாய். (கி : 397)

பொடியுடைக் கானம் - புழுதி நிறைந்த காடு. பொடியுடைக் கான மெங்கும் குருதிநீர் பொங்க வீழ்ந்த...... தாடகை. (பா : 415)

பொடி யொடுங் கெழீஇய - புழுதியோடு புழுதியாய்க் கலந்து போயின. (கி : 647)

பொத்தகம் - சுவடி. பொத்தகம் படிகமாலை. (பாயி : 32) [பா : பே]

பொத்தல் - துளை. மூலப் பொத்தற் செத்தமரம். (யுத் : 2608)

பொத்திய - 1. குத்துகின்ற. அச்சம் மூன்றப் பொத்திய துன்பம். (யுத் : 2810)
2. நிரம்பிய. மாயம் பொத்திய வயப்படை. (யுத் : 3778) அனைத்துத் திக்கும் பொத்திய நிருதர் தானை. (யுத் : 3206)

பொத்திய துன்பம் – நிறைந்த துன்பம். மனத்திற் கலந்த துன்பம். அச்ச மூன்றப் பொத்திய துன்பத்தோடும். (யுத் : 2810)

பொத்துதல் - 1. புதைத்தல். மூடுதல். இவனை மண்ணிடைப் பொத்துதல் வழக்கு. (ஆ : 44) மழையின் வாய் பொத்துவாரை. (சு : 200)
2. நிறைதல். மாயை பொத்திய வயப்படை. (யுத் : 3778) மால் பொத்திய மறவோர். (ஆ : 467)
3. கலத்தல். செம்பால் பொத்தின நதி. (ஆ : 467)
4. பிடித்தல். விரை வெங்கால் பொத்தினர் நமன் தூதுவர். (ஆ : 467)
5. மூட்டுதல். கனல் பொத்தி. (யுத் : 214)
6. நிரப்புதல். மாயை பொத்திய வயப்படை. (யுத் : 3778)

7. தைத்தல். பொத்துற உடற்பழி புகுந்ததென நாணி. (ஆ : 620)
8. அடைத்தல். தோட்டதன் செவி பொத்தி. (யுத் : 4141)
9. நிரம்பியிருத்தல். அனைத்துத்திக்கும் பொத்திய நிருதர் சேனை. (யுத் : 320)

பொதி - 1. அரும்பு. மொட்டு. கமலப் பொதியினை நகுவன புணர்முலை. (பா : 75)
2. தொகுதி. மூடை. முழங்கு வேலைப் பெய்கணைப் பொதிக ளாலே வளர்ந்தது. (யுத் : 2066)
3. இதழ். பூப் பொதி யவிழ்ந்தன நடையன். (ஆ : 834)
4. மூட்டை. பொதியொடும் வாரிய பொலன் கொள்மேனியார், (கி : 889)
5. திரட்சி. பொதி நிமிர் பல்விரர். (யுத் 1146)

பொதிதல் - 1. மூடுதல். பனி பொதிகதிர். (ஆ : 129)
2. நெருங்குதல். குவிதல். பொதிபல கவிகைமீன் பூத்த தாகிலும். (அ : 968)
3. முடிதல். இழை பொதிந்திட்டனள். (கி : 197)
4. கவ்விக் கொள்ளுதல். உலகைப் பொதியும் வெந்தீ. (யுத் : 3150)
5. கட்டுதல். நெஞ்சம் பொதியும் மருந்தில். (கி : 25)

பொதிந்த - 1. செறிந்த. பொதிந்தமணி விசும்பின் மீனின்மேல் விளங்க. (பா : 633)
2. நிரம்பிய. புகழ் பொதிந்த மெய். (கி : 769)

பொதிபேயின் பண்டாரம் - நிறைந்துள்ள பேய்களின் பொக்கிஷ மாகிய பிணக்குவியல். (சு : 968) [பா : பே]

பொதியம் - பொதிய மலை. மலய மென்பது பொதிய மாமலை. (யுத் : 3221)

பொதியவிழ்தல் - முறுக்கு விரிதல். கட்டவிழ்தல். இவ் வழகன் வாண்முகம் பொதியவிழ் தாமரைப் பூவை ஒப்பதோ. (ஆ : 241) பூப்பொதி யவிழ்ந்தன நடையன். (ஆ : 834)

பொதியில்திரு முனிவன் - பொதிய மலையிலுள்ள சிறந்த அகத்திய முனிவன். தென்தமிழ் நாட்டகன் பொதியிற்றிரு முனிவன் தமிழ்ச் சங்கம் சேர்கிற்பிரேல். (கி : 774)

பொதிர் - நடுக்கம். புரந்தரன் தலை பொதி ரெறிந்திட. (சு : 1015)

பொதிர் எறிதல் - அஞ்சி நடுங்குதல். (சு : 1015) ஆசை காவலர் தலைகள் பொதிரெதிர்ந்தார். (யுத் : 2695) மூவர் தலைகள் பொதி ரெதிர்வர். (யுத் : 1876) திக்கிடை நின்ற யானை பொதிரெறிய. (யுத் : 2430)

பொதிர்வு - மிகுதி. போர்க்கின்ற தெல்லா வுலகும் பொதிர் வுற்ற பூசல். (கி : 267)

பொதிர்வுறுதல் - நிறைந்து விளங்குதல். (உ.வி) (கி : 267)

பொதிவுற்றது - முடிந்து வைக்கப்பட்டது. தன் திருத்துகிலிற் பொதிவுற்றது. (சு : 685)

பொது - 1. கூட்டம். அணங்கனார் தம் பொதுவிடைப் புகுந்து. (கி : 612)
2. சாதாரணமான தன்மை. பொதுவின் மன்னுயிர்க் குலங்கள். (யுத் : 564)
3. உலகியல். இது பொது. (யுத் : 1134)
4. பொதுவாந்தன்மை. ஒப்பு பொது இயற்கை தீர்பத்தினி. (யுத் : 3253)

பொதுத்தல் - 1. பொத்துதல். பொய்த குத்தின பொதுத்தன தொளைத்தன. (சு : 800)
2. துளைத்தல். அண்டத்தைப் பொதுத்து அப்புறத் தப்பினலாடும். (யுத் : 134) மழை பொதுத்து ஒழுகும் நீரால் மஞ்சன மாடுவாரும். (சு : 279)

பொதுநின்ற நீதி - உலகிற்குப் பொதுவான நீதி மொழிகள். பொது நின்ற நீதியை உணர்த்தினல் அது உறும் என. (சு : 1132)

பொது நெறிநிலை யதாகப் புணர்த்துதல் - ஒத்து பொது நெறியில் வ்ழங்குவதாக மனதிற் பதியும்படி எடுத்துரைத்தல். (அண்) பொதுவான நெறியிலே நிற்பதானலும் அதனை உபயோகப்படுத்திப் பார்த்தல். (வை.மு) (கலா) சாமானியமாக ஒரு வதந்தி தோன்றி நிற்க அது குறித்து ஆலோசித்தல். (உ.வி) மாலியவான் நல் வாய்மை பொதுநெறி நிலையதாகப் புணர்த்துதல் புலமை யென்ன. (யுத் : 762)

பொது நோக்கல் - நடு நிலை நின்று ஆராய்தல். பொது நோக்காது எண்ணிக் காணாய் மெய்ம்மையை என்றார். (சு : 484)

பொதுப்படுதல் - ஒத்தல். பொதுப் படா உயர் புயம். (யுத் : 2027)

பொதுப் பெண்டிர் - கணிகையர் பொதுப் பெண்டிர் அல்குற் புனை மேகலைப் பூசல் ஓதை. (பா : 973

பொதும்பர் - 1- சோலை. பொன்றிணி நெடுமரப் பொதும்பர். (சு : 406) (யுத் : 333)
2. குறுங்காடு. பொதும்பர் வைகு தேன் புக்கருந்துதற் ககம் புலரும் மதம் பெய் வண்டு. (சு : 1094)
3. உள்ளிடம். சோலைப் பளிக்கறைப் பொதும்பர் புக்கான். (ஆ : 295)

பொதும்பு - 1. புதர். மென் மலர்ப் புழையும் வாசப் பொதும்பும். (சு : 718)
2. குகை. மருவின் பொதும்பிற் புக்கதோர் மின்னொளி மேகம். (யுத் : 4245)

பொதுமுகம் - பட்சபாத மில்லாத முகம். பொது முகத்தின் அருள் நோக்கம். (ஆ : 50)

பொதுமை பார்த்தல் - பொதுவாக நோக்குதல். (கலா) பொது நோக்காகப் பார்த்தல். (வை.மு) பொதுத் தன்மையைப் பார்த்தல். பொதுமை பார்க்கின் ஏலு மென்றிசைக்கின் ஏலா. (கி : 782) பொதுமை பார்க்கின் அன்றிது கருமம். (யுத் : 2864)

பொதுமை யுறுதல் - பொதுவாகிய தன்மையை அடைதல். பூவின் மேலிருந்த தையலும் பொதுமையுற்றாள். (யுத் : 1643)

பொதுவற - பொதுவாக இன்றி ஒருவற்கே சிறப்புரிமை யாக. பொலங் கிளர் மானந்தானே பொதுவறக் கொடுப்பேன். (யுத் : 1632) பொதுவறப் புரந்தேன். (யுத் : 3180)

பொதுவற நோக்கும் பொற்பு - சிறப்பாக நோக்குதற் குரிய வீர அழகு. (யுத் : 3874)

பொது வியற்கை தீர்பத்தினி - ஒப்பற்ற சிறப்பினையுடைய கற்பினை யுடைய பத்தினி. (யுத் : 3253)

பொதுவிலா வகையினுல் - வேருெரு வருக்கும் சம்பந்த மில்லாதபடி. (முழுவதுந் தாமே) தம்மை யன்றி வேறெவர்க்கும் எவ்விதத் தொடர்புமின்றி. புல்லினர் உலகினைப் பொதுவிலா வகையினுல். (கி : 822)

பொதுவு - 1. நடுவு நிலைமை. பொலிவது பொதவுற வண்ணும் புன்ருெழில். (யுத் : 45)

2. சகசம். இயல்பு. பூணித்திவை உரை செய்தனை அதனுல் உரை பொதுவே. (யுத் : 1134)

3. சாதாரணமான தன்மை. பொதுவின் மன்னுயிர்க் குலங்களுந் துணிந்தன. (யுத் : 564)

பொதுவுறக் காண்பார் - வேற்றுமையற மெய்ப்பொருளைப் பொருந் தக் காணும் ஞானிகள். (யுத் : 171)

பொதுவுற நோக்கல்-1. பொதுவாகப் பார்த்தல். கோபுரத்தின் எய்திப் போதுவுற நோக்கலுற்ருன். (யுத் : 3213) பொலங்குழையவரை யெல்லாம் பொதுவுற நோக்கிப் போந்தேன். (சு : 1314)

2. பட்சபாத மின்றிப் பார்த்தல். மன்னவன் கருதிய பயனும் பொருந்தும் மன்னுயிர்க் குறுதியும் பொதுவுற நோக்கித் தெரிந்து. (அ : 34)

பொதுளிஆடல் - குடைந்து ஆடல். கடகரி பொதுளி ஆடலின். (கி : 12)

பொதுளுதல் - 1. நிறைதல். சினைப் பொதுளு புன்னை. (கி : 517)

2. செழித்தல். தழைத்தல். மழைபடப் பொதுளிப. (கி : 564)

3. நெருங்குதல். மண்டுதல். புகையொடு சிகையனல் பொதுளிய தால். (யுத் : 3093)

பொம் - ஒலிக்குறிப்பு. பொம் மென்ன வண்டலம்பும் புரிகுழல் (பா : 771)

பொம்மல் - 1. பெருமை. இப் பொம்மல் வாசகம் உவகையின் மொழிந்ததோ உள்ள நோக்கியோ. (அ : 79)

2. மகிழ்ச்சி. போய்வருங் கருமம் முற்றிற் றென்பதோர் பொம் மல் பொங்க. (சு : 1249)

3. பொலிவு. புதுப்புன லாடும் பொம்மல். (யுத் : 3600) மின்னின் நிற மெல்லாம் பூண்ட தொளிர் பொன்னனைய பொம்மல் நிறம் அம்மா. (சு : 557)

4. மிகுதி. துமனிப் பொம்மல். (யுத் : 456) பல் பேய் புதுப் புனலாடும் பொம்மல். (யுத் : 3600)
5. ஓசை. ஒலி. வேயின் பொம்மல். (யுத் : 2399)
6. வருத்தம் பெருந்துன்பம். புண்ணினைக் கோலுறுத்தனைய பொம்மலால் உண்ணினைப் போவி நின்று. (யுத் : 3990) (உ.வி) பொம்மலார். (யுத் : 3578)
7. பொன்னிறம். (உ.வி) (அ : 557)
8. வியப்பு. போரி யற்கை நினைந் தெழு பொம்மலார். (யுத் : 3578)
9. கூட்டம். (உ.வி) பல் பேய் புதுப் புனலாடும் பொம்மல். (யுத் : 3600)

பொம்மல் ஓதை - மகிழ்ச்சி நிறைந்த ஓசை. போர்த் தொழிற் களத்தை முற்றுஞ் சுற்றிய பொம்மலோதை. (யுத் : 3672)

பொம்மல் வாசகம் - மகிழ்ச்சியை யுணர்த்தும் பொலிவுடைய சொல். நீர் புகன்ற இப் பொம்மல் வாசகம் உகவையின் மொழிந்ததோ உள்ள நோக்கியோ. (அ : 79)

பொம் மென் முழக்கம் - பொம் மென் றொலிக்கின்ற (கடலின்) ஆரவாரம். போர்ப் பெரும் பணை பொம் மென் முழக்கமா நீர்த்தரங்க நெடுந் தடந் தேர்களா. (ஆ : 392)

பொம் மென்றிரைத்தல் - ஆர வாரித்து ஒலியெழுப்பல். (அண்) பொம் மென்று ஆரவாரம் முண்டாதல். போயினன் நகர் பொம் மென்றிரைத் தெழ. (யுத் : 1288)

பொம் மென எழுதல் - விரைவுடனே கிளம்புதல். பொம் மென எழுந்து நொய்திற் பொருக்கென விசையிற் போனான். (யுத்:2168)

பொம் மெனல் - 1. ஒலிக் குறிப்பு. வண்டு பொம் மென விம்மவே. (அ : 241) பொம் மென்ன வண்டலம்பும் புரிகுழல். (பா : 771)
2. விரைவுக் குறிப்பு. எங்கும் பூநனை கூந்தன் மாதர் பொம் மெனப் புகுந்து மொய்த்தார். (பா : 1148) பொம் மென எழுந்து. (யுத் : 2168)

பொம் மெனு முயிர்ப்பு - பொம் மென்ற ஒலியுடன் விடும் பெரு மூச்சு. சீதை என் வயிற்றிர்ந்தனளோ எனும் போதகம் மெனப் பொம் மென் உயிர்ப்பினன். (ஆ : 1052)

பொய் - 1. வஞ்சகம். பொய் வினைக்குதவும் வாழ்க்கை யரக்கர். (பா : 579) பொய்யர் - (யுத் : 3356)

2. அசத்தியம். பொய்ம் மருங்கின் நில்லாதாய். (யுத் : 2684)

3. வெற்றிடம். பொய்யெனப் பளிங்கினுய இருக்கையின் புறத்தைச் சுற்றி. (யுத் : 901)

4. இல்லாமை. பொய்த்தலை மருங்குலாள் ஒருத்தி. (பா : 1091)

5. வெளி. பொய்யெனப் பளிங்கினுய இருக்கை. (யுத் : 901)

பொய்க்கரி கூறினேன் . பொய்ச்சான்று சொன்னவன். பொய்க்கரி கூறினேன் போருக்கஞ்சிநேன். (அ : 895)

பொய்க்கரிகூறும் புன்கணார் - பொய்ச்சாட்சி சொன்ன அற்பர்கள். புலந்தெரி பொய்க்கரி புகலும் புன்கணார் குலங்களின் அவிந்தனர் குரங்கினல். (சு : 808)

பொய்க் கருமம் - பொய்ச்செயல். வஞ்சவினை பொய்க் கருமம் வெல்லினும் இராமனை அம்மாயர் கடவார். (யுத் : 3410)

பொய்க்குரல் - பொய்யானகுரல். பொய்க்குரல் இன்று. (சு : 564)

பொய்கை - மானிடரால் ஆக்காத நீர் நிலை. பொய்கை பள்ளங்கள். (கி : 19 (யுத் . 463)

பொய்த்த - பேச்சில் தவறிவிட்ட. (பொய் பேசிய) மொழியின் பொய்த்த சான்றவன் குல மெனப் பொருகணை எரிய. (யுத்:559)

பொய்த்த தோர் மூரி - பொய்யான சோம்பல் முறித்தல். பொய்த்த தோர் மூரியால் நிமிர்ந்து போக்குவாள் எத்தனை. இறந்தன கடிகை ஈண்டென்ருள். (பா : 1081)

பொய்த்தல் - 1. தவறுதல். பொய்யாதன வந்து புணர்ந்திடுமால். (யுத் : 237) ஊழிற் பொய்த்தால். (அ : 227)

2. அறிவு சோர்தல். போர்த்துப் பொய்த்தன னென்று பொலன் கொள் தேர் பேர்த்து. (யுத் : 3839)

3. பின்வாங்குதல். (வை.மு) பொய்த்தோர் வில்லிகள் போவாராம். (சு : 647)

4. சொல்லை நிறை வேற்ருமை (அண்) (சு : 647)

5. தவிர்தல். அழித்ல். பொய்பா மன்னைக் கொல்லிய வந்தது. (யுத் : 226)

6. மாறுபடல். பொய்த்தலில் குறிகள். (யுத் : 3538)

7. பொய்க்குநர் தன்மை. பொய்க்குந் தன்மை பொய்த்தலை யுடைய தெல்லாம் தருமமே போலும் என்று. (யுத் : 1611)

பொய்த்தலை மருங்குலாள் - பொய் போல இல்லையான இடையை யுடையவள். பொய்த்தலை மருங்குலாள் ஒருத்தி புல்லிய கைத்தலம் நீக்கினள். (பா : 1091)

பொய்த்தாமோ-பொய்யாகுமோ. என்ற வீடணன் மொழி பொய்த்தா மோ. (யுத் : 3593)

பொய்த்திரு - பொய்ம்மையைக் கொண்டுள்ள செல்வம். இலங்கை நுங்கள் பொய்த்திருப் பெறுகிற் பானும் வீடணன். (யுத் : 1686)

பொய்த்திறத்தினன் - பொய் பேசுந்திறமுடையவன். பொய்த்திறத் தினனுக்குதியோ புகல் மெய்த்திறத்து நம் வேந்தனை நீ என்றான். (அ : 310)

பொய்தல் - 1. தாக்குதல். (அண்) பொய்தார் பலர். (ஆ : 465)
2. தொளைசெய்தல். தொளைக்கப்படுதல். பொய் தகடு. (சு:911)
3. விழுதல். அறுத்துவீழ்த்தல். அவை பார் சேரப் பொய்தான். (சு : 962)
4. சொரிதல். இகலிப் பொய்த. (சு : 800)
5. விளையாட்டாகப் போர் புரிதல். (வை.மு) (ஆ : 465)

பொய்ந்நிலை மருங்கினர் - இல்லையென்று சொல்லத்தக்க நிலையினை யுடைய இடையினையுடையராகிய மகளிர். பொய்ந்நிலை மருங் கினர் புலம்பினர் புரண்டார். (ஆ : 600)

பொய்ந்நிலையோர்கள் - பொய்மை மிக்கவர்கள். பொய்ந்நிலை யோர்கள் புணர்த்த வஞ்சமுண்டோ. (அ : 203)

பொய்ப்பகை - பொய்க்குப் பகையானவன். பொய்ப்பகையே மெய்க்கணியே. (ஆ : 197)

பொய்ப்பிணி - வஞ்சனையாற்செய்த பிணிப்பு. நாகபாசப்பிணிப்பு. (யுத் : 2452)

பொய்ப்பிறவி-பொய்மைமிக்க பிறவி. நான் இப்பொய்ப் பிறவிக்கும் பொறையல்லேன். (யுத் : 2603)

பொய்ப்போது - நிழலிலுள்ள மலர். (கலா) மெய்ப்போதின் நங்கைக் கிணை யொப்பவள் வெண்பளிங்கில் பொய்ப்போது தாங்கிப் பொலி கின்றதன் மேனி நோக்கி. (பா : 98)

பொய்ப்போர் - தன்தகுதிக்கு ஏற்றதல்லாத போர். பொய்ப்போர் சில புரியேல் இனி. (யுத் : 1122)

பொய்ம் மகள் - பொய்மைக் குணமுள்ள மகள். (சூர்ப்பநகை) பூசல் வண்டரற்றுங் கூந்தற் பொய்ம் மகள். (ஆ : 271)

பொய்ம்மாணுமற்கு - பொய்யாகாமல் இருத்தற்கு. என் சொல் பொய்ம் மாணுமற்கு இன்றே பொன்று தொழியேன் என்றான். (அ : 338)

பொய்ம் முறை - பொய்யுறவு பூண்டொழுகும் இயல்பு. பொய்ம் முறை இலரோம் (அ : 671) [பா : பே]

பொய்ம்மை-பொய் மொழி. உரைத்திலன் பொய்ம்மை. (யுத் 3064)

பொய்ம்மை படித்தல் - பொய்யைப் பழகுதல். படித்தேனன்றே பொய்மை. (யுத் : 2612)

பொய்ம்மையரவு - அரவென்ற பொய்யாகிய எண்ணம். அலங்கலில் தோன்றும் பொய்ம்மை யரவென. (சு : 1)

பொய்யற்றான் - பொய்ம்மை இல்லாத தூயநெஞ்சினன். பிரகலாதன் (யுத் . 222)

பொய்யறுகுலம் - வஞ்சனைக் குணமில்லாத குலம். புலத்தியன் வழி முதல் வந்த பொய்யறு குலத்தியல்பு அழிந்தது. (யுத் : 1300)

பொய்யாதன - தப்பாதன. தீவினைதான் பொய்யாதனவந்து புணர்ந் திடுமால். (யுத் : 237)

பொய்யாவாய்மை - பொய் பேசாமல் மெய்யே பேசுதல். பொய்யா வாய்மைப் புதல்வன். (அ : 376)

பொய்யிடம் - வெற்றிடம். காலியிடம். பொய்யிடமில்லாத. (யுத்:700)

பொய்யிடை - பொய்போலும் இல்லையாய்த் தேய்ந்துபோன இடை. முலைபொருத பொய்யிடை நையப்பூநீர் ஆட்டுவோர் அமரர் மாதர். (சு : 198)

பொய்யில் கேள்விப்புலமையினோர் - பிழைபடாத கேள்வியறிவுடன் நூலறிவுமுடைய புலவர். பொய்யில் கேள்விப் புலமையினோர் புகல் தெய்வ மாக்கதை. (பா : 6)

பொய்யில் நாயகம் - மெய்யான தலைமை. யான் தவமியற்றிப் பொய்யில் நாயகம் பூண்டலின். (யுத் : 184)

பொய்யில் மாருதி - பொய்ம்மையில்லாத அனுமன். பொய்யில் மாருதி முதலோர். (கி : 172)

பொய்பிலாதவன் - பொய்ம்மை மொழி புகன்றறியாத அனுமன். (கி : 146)

பொய்பிலா நிற்பு - பொய்ம்மையற்ற நிலே. பொய்யிலா நிற்பின் நின்றன நீதி. (பா : 90)

பொய்பிலா வுள்ளத்தான் - வஞ்சகமற்ற மனமுள்ளவன். (கௌதமன்) மாமுனிக் கற்றஞ் செய்து பொய்யிலா வுள்ளத்தான்தன் னுரு வமே கொண்டு புக்கான். (பா : 552)

பொய்யிலுள்ளத்தன் - குற்றமற்ற மனத்தினேயுடையவன். (குகன்) சேவடிக் கமலப் பூவில் பூட்டிய கையன் பொய்யில் உள்ளத்தன் புகலலுற்ருன்: (அ : 1026)

பொய்யின் நீட்டிய தீமை - வஞ்சனையினுற் செய்த (உண்டாக்கிய) தீமை. இலங்கையாம் என்மகள் பொய்யினீட்டிய திமை பொறுக்கலாது. (யுத் . 686)

பொய்யின்மை - திரிகரண சுத்தி. மனம் வேறு செயல் வேறு ஆகாமை. மனம் வாக்குக் காயம் வேறுபடாமை. அருங்குலக் கற்பின் அப் பொய்யின் மங்கையர். (கி : 341)

பொய்யினும் பெரிய மெய்யான் - பொய்யைக் காட்டிலும் பெரிய உடல் படைத்தவன். பொய்யினும் பெரிய மெய்யான் பொருப் பிணைப் பழித்த தோளான். (யுத் : 1905)

பொய்யுறக்கு - பொய்யான உறக்கம். பொய்யாகக் கண்முடிய உறக்கம். (அறிதுயில். பொருந்தாத உறக்கம்) பூரியல் அமளி மேலாப் பொய்யுறக் குறங்குவாணை. (சு : 308)

பொய்யுறங்கு மடந்தைமார் - கள்ளத் துயில் செய்கின்ற மகளிர். வேல் நெடுங்கண் மூகிழ்த்து நெஞ்சில் நிணைப்பொடும் பொய் யுறங்கு மடந்தைமார். (அ : 241)

பொய் பெஞ்சாவிலது - பொய்ம்மை மிகாமல் இல்லே; மெய்யாக இல்லே. நினக்கு மேல் யாதும் பொய் யெஞ்சாவில தென்னும் மீதருமறை புகலும். (யுத் . 4024)

பொய் வணக்கிய மாதவர் - பொய்யை வென்ற பெரிய தவத்தினர். பொய் வணக்கிய மாதவர் புரை தொறும் புகுந்து. (அ : 770)

பொய்வினை - வஞ்சகச் செயல்கள் பொய்வினைக் குதவும் வாழ்க்கை யரக்கர். (அ : 579)

பொர - மோத. காம்பு கால் பொர. (பா : 66)

பொரா நின்றேம் - பொருவோமாக நின்றுள்ளோம். இராமன் தம்பி நீ இராவணன் தம்பி நான் இருவேம் பொரா நின்றேம். (யுத்:1452)

பொரி - நெற் பொரி. சாடிகள் பொரியொடு தகர்ந்து தள்ளுற. (யுத் : 2941) (கி : 841)

பொரிதல் - சுடுதல். உலகந்தானே பூ நனிவடவைத் தீயிற் புக் கெனப் பொரிந்து போகும். (யுத் : 3483)

பொரிபரல் - சுட்ட பருக்கைக் கற்கள். பொரி பரற் படர் நிலம். (பா : 357)

பொரியுண - பொரிந்து போக. இந்திரனிருக்கை யெல்லாம்பொரி யுண. (யுத் : 3180)

பொரு - 1. தடை. பொருவில் தடக்கை. (ஆ : 384)
2. பொருகின்ற. கயல் பொரு கடல். (பா : 791)
3. ஒப்பு உவமவுருபு. பொருவுவர்- (பா : 311) வெதிர் பொரு தோளி. (பா : 1098 மேருவும் பொன்மலை யாதலாற் பொருவ லாது. (ஆ : 239) வேறில்லை பொருவே. (யுத் : 1189)
4. நெருங்கிய. பொருகனற்பொறிகள். (யுத் : 2125)

பொருக்க - விரைவாக. ஒண்கிரி ஒன்றினின்று ஒன்றினிற் பொருக்க எய்தினன். (கி : 578) பொருக்க அகல் கென்னினும் அது இன்று புரிகின்றேன். (சு : 614)

பொருக்கென - 1. விரைவாக. பொருக்கென அவரிடைப்பொருந்த நோக்கினன். (சு : 391) பொருக்கென நீங்கிப்புக்கான். (அ:265) பொருக்கென எழுந்து. (அ : 51)
2. திடீரென்று. பொருக்கென விசையிற் போனன். (யுத்:2168)

பொரு கனற்பொறிகள் - நெருங்கிய தீப்பொறிகள். (யுத் : 2125)

பொருங்கலசம் - இணைக்கலசம். (அண்) வாளம் பொருங்கலசம் ஒக்கும் முலை. (கி : 863)

பொருசிலை மேகம் - பொருகின்ற வில்லைத்தாங்கிய மேகம் போன்ற இராமபிரான். என்தன் பொருசிலை மேகந்தன்னைக் காணலாம் என்னும் ஆசைதடுக்க. (யுத் : 2654)

பொருசினத்தரசன் - போர் செய்தற்குரிய கோபத்தையுடைய அரசன். ஆனதன் பொருசினத்தரசன் மாடணுகினான். (கி:79)

பொருட்டு - நிமித்தம்- பாவை நின் பொருட்டினாலோர் பழிபெற. (சு : 475) (ஆ : 626)

பொருடருமிருவர் - சிறந்த வரங்களை அளிக்கவல்ல சிவனும் பிரமனும். (கலா) (பா : 208([பா : பே]

பொருடருமிறைவர் - புத்திரர்களைத் தருபவரான தேவர்கள். (பா : 208) [பா : பே]

பொருடரு முனி - நல்ல பொருளை உபதேசிக்கவல்ல முனிவர்கள். (அண்) அருளும் தருமமும் உபதேசிக்கவல்ல முனிவர்கள். (கலா) பொருள்தரு முனிவருந் தொடரப் போயினன். (பா:232)

பொருடருமெவரும்-பிள்ளைகளைத்தருமாறு ஏற்றுக்கொண்ட எல்லாத் தேவர்களும். பொருள் தரும் எவரும் தத்தம் உறைவிடம் சென்று புக்கார். (பா : 208)

பொருடீங்கில் கேள்விச் சுடர் - நூற் பொருளும் குற்றமில்லாத நூற் கேள்வியாகிய ஒளியும். முற்று முற்றிப் பொருள் தீங்கில் கேள்விச்சுடர் புக்கு வழங்கலின்றி. (ஆ : 698)

பொருடீர்ந்த ஞானச் சுடர் - உண்மைப் பொருள் இதுவென்று ஐயத்துக்கு இடமின்றித் தீர்மானஞ் செய்த ஞானமாகிய நல்லொளி. முற்று முற்றிப் பொருள் தீர்ந்த ஞானச்சுடர் புக்கு வழங்கலின்றி. (ஆ : 698) [பா : பே]

பொருண்மை-பொருளின் தன்மை. கதமெனும் பொருண்மையிலர். (கி : 51)

பொருத்துதல் - 1. போர் மூட்டுதல். முட்ட விடுதல். கோப மூளுறப் பொருத்தி. (யுத் : 3193) திசை சுமந் தோங்கிய பூழி வன கரி இரண்டு இருகைக் கொடு பொருத்தும். (யுத் : 133)
2. ஒட்டவைத்தல். இயற்றப் பொருத்தமான செயல். உங்களை அமர்த்துறை சிரங் கொய்து பொருத்தினல் அது பொருந்துமோ. (யுத் : 1549)

பொருத்துறு பொருள் - அடையக்கூடிய பொருள். திராதாயிற் பொருத்துறு பொருளுண்டாமோ. (யுத் : 1375)

பொருத - ஒத்த. மாருதம் பொருத திண்டோள். (பா : 209)

பொருதமை - போர்செய்தமை. பொருதமை புண்ணே சொல்ல. (சு : 1256)

பொருதல் - 1. தாக்குதல். மோதுதல். உள்ளாடிய நெடுங்கால் பொர. (யுத் : 1139) முடியொடு முடி பொருவாயில். (பா : 816)
2. பொருந்துதல். காலபாசங் கதை பொருகையினர். (ஆ:378)
3. ஒத்தல். தீ நிகர் தொழிலாடைத்திரை பொருவன பாராய். (அ : 707) மாதிரம் பொருததோள். (பா : 248)
4. போர்செய்தல். எதிர்ந்துளோர் படப்பொரு தொழில் யாவையும் புரிந்து. (யுத் : 47, பொருதியோ. (யுத் : 2027) தம்மிற் பொருதன பொருதலோடும். (யுத் : 1878) பொரும்கையினர் (ஆ : 378) இருவேம் பொரா நின்றேம். (யுத் : 1452)
5. அராவுதல். தாமரத்தாற் பொராத்தகைகொள் வாட் படை. (யுத் : 3827) வெவ்வரம் பொருதவேலோய் (யுத் : 4118)
6. மாறுபடுதல். பொருபடை இரண்டும். (யுத்: 1878)

பொருதி - போர்செய்வாய். போரடா பொருதியாயிற் புறப்படு புறப்படென்றான். (யுத் : 252)

பொருதிசையானை - போர்செய்கின்ற கிழக்குத்திசையானை; ஐராவதம். (சு : 823)

பொருதிசையானையூரும் புனிதன் - இந்திரன். பொருதிசையானையூரும் புனிதனைப் பொருவும் பொறற்பர். (சு : 823)

பொருதிறத்தான் - போர்செய்யும் வல்லமையுடைய இராமன். பொருதிறத்தானை நோக்கி. (ஆ : 285)

பொருது துறந்துகோடல் - போர்புரிந்து பகைவரைத் துரத்திவிட்டு அவரிடமுள்ள பொருளைக்கவர்ந்து. புரந்து கோடலும் புகழொடு கோடலும் பொருது துரந்து கோடலும் என்றிவை தொன்மையிற் றொடர்ந்த. (யுத் : 545)

பொருதுறை சேர்வேல் - பகைவருடன் போர்புரிந்து உறையிடம் புகும் வேல். பொருதுறைசேர் வேலினாய். (பா : 725)

பொருந்தல் - 1. சேர்தல். புலக்குறி அற நெறி பொருந்த நோக்கினார். (யுத் : 349)

2. உடன் படுதல். இறைப் பொழுதினிற் கொணர்கு வாயெனப் பொருந்தினன். (யுத் : 2740) பொருந்தலை. (ஆ : 274)

3. நெருக்கமாதல். பொருந்த வந்துற்ற போர். (யுத் : 1231)

4. இயலுதல். பூதமைந்தொடும் பொருந்திய உருவினாற் புரளான். (யுத் : 148)

பொருந்தலர் - பகைவர். இலங்கை பொருந்தலர் எற்பு மால்வரை யாகில தேயெனின். (சு : 623)

பொருந்தா நயனம் - பொருந்தாத கண்கள். பொருந்தா நயனம் பொருந்தி நமைப்பொன்றச் சூழ்ந்த எனப் புரண்டார். (அ : 610)

பொருந்திய மகளிர் - குலம் நலம் கல்வி முதலியவற்றால் ஒத்த மணம் பொருந்திய மகளிர். பொருந்திய மகளி ரோடு வதுவை யிற் பொருந்து வாரும். (பா : 46)

பொருந்து நன் மனைக் குரிய பூவை - பொருத்தமான நல்ல மனைக்கு உரிய நாகணவாய்ப் புள்போன்ற மனைவி. பொருந்து நன் மனைக் குரிய பூவையைப் பிரிந்துளாய் கொலோ நீயும். (கி : 113)

பொருந்துபு - சென்று சேர. கலைவலாளனிற் பொருந்தினர் பொருந்துபு விலங்கெனுப் புரிந்து. (பா : 220)

பொருநர் - 1. கூத்தர். பாடற்கும் உரியவர். பண்ணிமை யடைத்த பல கட் பொருநர் பாடல். (சு : 257)

2. போர் வீரர். பொருநர்கள் இல்லமுந் துருவி. (சு : 239) [பா : பே]

பொருநர் குழாங்கள் . கூத்தர் கூட்டங்கள். மயிலெனும் சாயலார் கூழை போன்ற பொருநர் குழாங்களே. (அ : 826)

பொருநை - தாம்பிரபர்ணி. பொன்றிணிந்த புனல் பெருகும் பொருநை யெனுந் திருநதி. (கி : 774)

பொருப்படா - ஒப்பாக மாட்டாத. ஒன்றொடு பொருப்படா உயர் புயத்தினன். (யுத் : 4027)

பொருப்பதங்கள் - (மலை) மலை போன்ற யானை. சில கணை ஓடைப் பொருப் பதங்களை உருவி. (யுத் : 1430)

பொருப்பவிர் தோளன் - மலை போன்று விளங்குகின்ற தோள்களை யுடையவன். (பரதன்) (யுத் : 4249)

பொருப்பனையான் - மலை போன்ற இராமன். பொருப்பனை யானிடைப் போவனே யெனின் அருப்பமில் கேடு வந்தடையும். (ஆ : 828)

பொருப்பிடை நெருப்பு - மலையினிடைப் பட்டதீ. பொருப்பிடை நெருப்பிற் பொங்கி. (சு : 825)

பொருப்பினம் - மலை வர்க்கங்கள். பொருப்பினம் வாங்கிச் சிரத்தின் மேலெறிந் துறுக்குவர். (கி : 283)

பொருப்பினன் - கைலாச மலையை வாழுமிடமாகக் கொண்ட சிவ பிரான். பூவுளான் புணரி மேலான் பொருப்பினன் முதல்வராய யாவரும். (யுத் : 1276)

பொருப்பு - மலை. போருப் பேந்திய தோளான். (அ : 623)

பொருப்பும் நாண உயர்ந்த புயம் - மலையும் நாணுமாறு உயர்ந்த தோள்கள். பொருப்பு நாண உயர்ந்த புயத்தினன். (அ : 832)

பொருப்பு மெய்விற் றெழிப்பு - மலை போன்ற உடலைப் படைத்த வில்லின் பேரொலி. ஆர்ப்பும் பொருப்பு மெய்விற் றெழிப்பும் உண்டென்ப போல்குரைக்கும் வேலைக் குழாங்களும். (யுத்:3707)

பொருப்புவில் - மேருமலையாகிய வில். பொருப்பு வில்லைப் பொடி செய்த புண்ணியா. (பா : 1169)

பொருப்புறழ்தோள் - மலைபோலும் தோள். பொருப்புறழ்தோள் புணர் புண்ணியத் தனு. (பா : 617)

பொருப் பேந்திய தோள் - மலை போல் உயர்ந்த தோள். பொருப் பேந்திய தோளானொடு விளையாடினள் போனாள். (அ : 623)

பொருபுனற் கொடி - மோதி வரும் நீண்ட நீர்ப் பெருக்கு. (கொடி - நீட்சி) பொரு புனற் கொடிவரின் அதன் வேக மார் பொறுப்பார். (பா : 528)

பொரும் - பொருவும். சயந்தனைப் பொருந் தம்பி. (யுத் : 3518)

பொருமல் (பொருமுதல்)- 1. துன்பம், துயரம், வருத்தம். போய தெம் பொருமல் என்னு இந்திரன் உவகை பூத்தான். (பா . 204) பொருமல் நீங்கினன். (யுத் : 1511) போயதெம் பொருமல் என்றார். (யுத் : 1883)

2. விம்முதல், தேம்புதல். அழாது விம்முதல். புடை வந்து பொரும. (அ : 511)

3. புலம்புதல். பொருமினுன் அகம் பொங்கினுன். (யுத் : 2511) பொருமலன். (யுத் : 3178)

4. அச்சம். பொருமலால் தேவருந் தங்கள் செய்கை மறந்தனர். (யுத் : 3704)

5. பூரிப்பு. புந்தி யோங்கும் உவகைப் பொருமலோ. (யுத் : 3942)

பொரு மா கணை - தாக்குகின்ற சிறந்த அம்பு. பொரு மா கணை விட்டிடலும். (அ : 370)

பொருமி - வருந்தி. (கி : 649)

பொருமிப் பொங்குதல் - விம்மிவிம்மியழுதல். நல்லியல் அருங்கடன்கழித்த நம்பியைப் புல்லுதியோ எனப் பொருமிப் பொங்கினுள். (ஆ ; 947)

பொருமி விம்முதல் – 1. குமைந்து வாய்விட்டழுதல். போர்வலான் தடுக்கவும் பொருமிவிம்மினுன். (அ : 571)

2. விம்மியழுதல். (வை.மு) (ஆ : 599)

3. அஞ்சி மனம்வருந்தல். (அண்) முத்தினுலிகள் பொலிதரச் சிலருளம் பொருமிவிம்முவார். (ஆ : 599)

4. இன்ப துன்பங்காரணமாக உடம்பிலே உயிர்ப்புமிக்கு உள்ளத்திலே உணர்ச்சி மீதுர அவ்வுணர்வினைச் சொல்லால் வெளியிட முடியாதுதத்தளித்தல். (அண்) புல்லினன் உவகையிற் பொருமி விம்முவான். (ஆ : 1120)

பொருமுதல் - 1. வருந்துதல். துக்கித்தல். பொங்கிய சிற்றம் பற்றிப் புகல்கிலன் பொருமி நின்ருன். (கி : 649) சிந்தை பொருமுற்று வெருவுகின்ருன். (ஆ : 730)

2. அஞ்சுதல்- (அண்) (ஆ : 599)

3. கலங்குதல். உள்ளம்விம்மல் அயாவுயிர்த்தகம் பொருமினன் பன்முறை. (: 1124)

பொருவரிய. -1. ஒன்றுடன் ஒன்று ஒவ்வாத. பொருவரிய சமயங்கள் புகல்கின்ற புத்தேளிர். (ஆ : 57)

2. ஒப்பற்ற. பொருவரிய திருமனத்தால் தெரிந்தான். (ஆ:340)

பொருவருந்துயர் - உவமை சொல்ல முடியாத பெருந்துயர். பொருவருந்துயரினன் தொடர்ந்து போகின்ருன். (அ: 485)

பொருவரும் பெருவலி - ஒப்பற்ற பெருவலி. பொருவரும் பெருவலியுடையான். (கி : 716)

பொருவரு மணிமார்பு - ஒப்பற்ற அழகிய திருமார்பு. பொருவரு மணிமார்பா போதுவெ னுடனென்ருன். (அ : 684)

பொருவலாது - ஒப்பாகாது. மேருவும் பொன்மலை ஆதலாற் பொருவலாது. (ஆ : 239)

பொருவன்று - நிகரன்று. பொன்னையே இரும்பு நேருமாயினும் பொருவன்று. (யுத் : 4349)

பொருவியது - பொருந்தியது. போர் செய்தது.. இனைய தன்மை பொருவியது. (யுத் : 282)

பொருவில் கேண்மையர்-ஒப்பற்ற சுற்றத்தவர். (யுத்:317)

பொருவில் சுற்றம் - ஒப்பற்ற சுற்றத்தவர். பொருவில் சுற்றமும் பக்கமும் பெயர்கென. (அ : 3)

பொருவில் தடக்கை-ஒப்பற்ற பெரியகை. பொருவில் தடக்கையால் நின்று வாங்கி. (அ : 797)

பொருவில் தானையான் - ஒப்பற்ற படையினை யுடையவன். பூவிரி பொலன் கழற் பொருவில் தானையான். (அ : 993)

பொருவில் தூதுவர் - ஒப்பற்ற தூதுவர். (அ : 793)

பொருவின - போன்றன. ஒத்து விளங்கின. படிவுற்று ஆடுகின்றன கொழுனரைப் பொருவின அன்னம். (கி : 483)

பொருவீரையும் பொருவீரையும் - அலை மோதுகின்ற கடலும் அலை மோதுகின்ற கடலும். பொரு'வீரையும் பொருவீரையும் பொருதாலெனப் பொருதார். (யுத் : 2998)

பொருவு - ஒப்பு. பொருவில் எம்பி. (அ : 514)

பொருவுதல் - 1. பொருந்துதல். மற் பொருவு தோள். (ஆ : 35)
2. ஒத்தல், கரிகளைப் பொருவினர். (பா : 1143)

பொருள் - 1. புத்திரர். பொருள் தரும் எவரும். (பா : 208) (சு : 436)

2. செய்தி. அரசன் பொன்னுலகம் புக்கான் என்னும் பொருள் கேட்டார். (அ : 615) தூயவன் என்பதோர் பொரு ளுஞ் சொல்லினுன். (யுத் : 361)
3. காரியம். செயல். பெருங்காயெம். சாகல் இன்று பொருளன்று என. (ஆ : 42) இது அன்னே பொருளன்ருல். (சு : 611) சூழ்வ தோர் பொருளன்று. (ஆ : 812) கொல்கை ஓர் பொருளிற்ரு தான். (யுத் : 1654)
4. பயன், இப் பூப்போலும் மெல்லியலாற் பொருளென்னே. (ஆ : 352) மாள்வதே பொருளாக வந்தானலன். (ஆ : 812)
5. காரணம்- நிகழ்ச்சி. மூக்கரிவான் பொருள் வேறுண்டோ. (ஆ : 357) வவ்வினர் போல் போர் கொண்டனனே பொருள் உண்டிதெனு. (ஆ : 1101)
6. செல்வம், பொருளாசை. பொருளும் காமமும் என்று இவை போக்கி- (சு : 1140)
7. உண்மை. தெற்கு நோக்கிய தெனும் பொருள் தெரிந்தது (ஆ : 978)
8. புருஷார்த்தம் தாழ்ச்சியிற் பொருள் தரும் தரும மூர்த் தியை. (யுத் : 325)
9. கொள்கை. பொன்ருனென்னிற் போகல தென்னும் பொருள் கொண்டான். (யுத் 3801)
10. செம்பொருள். இலக்கணப் பொருள், குறிப்புப் பொருள். ஆன்ற பொருள் தந்து புலத்திற்ருகி. (ஆ : 225)
11. குறித்த பொருள். உத்தேசம். விஷயம். மூக்கரிவான் பொருள் வேறுண்டோ. (ஆ : 367)
12. கல்வியும் செல்வமும். நாடிய பொருள் கைகூடும். (பாயி : 23)
13. பரம்பொருள். பூமகளும் பொருளும் மென நீ என் மா மகள் தன் னெடு மன்னுதி. (பா1331)
14. இயங்குதிணே நிலேத்திணேப் பொருள். உலகம் பொரு ளற்றிட முற்றிடும் மப் பகல். (அ327)
15. இராச்சியம். போதாதோ என்ருய் இவள் வயிற் கொண்ட பொருளம்மா. (அ : 872)
16. உவமானப் பொருள். பொருளினி உரை வேறு புறத்து மொன்றுண்டோ. (யுத் : 2220)

பொருள் காவல் - பொருளைக் காவல் செய்பவர். கள்வாரி லாமைப் பொருள் காவலுமில்லை. (பா : 166)

பொருள் பயக்குதல் - காரியத்தை உண்டாக்குதல். பொய்க்குரல் இன்று பொல்லாப் பொருள் பின்பு பயக்கு மென்பான். (சு : 564)

பொருள் வயிற் பிரிதல் - செல்வம் ஈட்டும் பொருட்டுப் பிரிதல். பாசறையிற் பொருள் வயினிற் பிரிந்து போன ...... கொழுநர் வர. (பா : 715)

பொருளன்று - ஒரு பெரிய காரிய மன்று. இது அன்னை பொரு ளன்றால். (சு : 611)

பொல்லாதாள் - கொடுந் தீயவள். நாட்டந்தான் எரியுமிழ நல்லாள் மேற் பொல்லாதாள் ஓட்டந்தாள். (ஆ : 345)

பொல்லாது - 1. நல்லதன்று. உன்னைக் கண்டால் எள்ளுவர் பொல்லாது உடுநீ. (பா : 1003)

2. தீங்கு. கோக்காது ஈண்டுநின் றேகல் பொல்லாது. (அ : 549)

பொலக்குண்டலம் - பொற்குண்டலம். பொலக் குண்டலமுங் கொடுங் குழையும். (கி : 31)

பொலங்கழல் - பொன்னாலாகிய வீரக்கழல். பொலங் கழற் குமரர். (பா : 887) (சு : 611)

பொலங்குழை - பொற் குழை. பொலங்குழை மயில். (கி : 1030) (பா : 608) பொலங்குழாய். (ஆ : 894)

பொலங்கெழுமலை - பொன் மிக்க மலை. (மகேந்திரம்) அழுத்த லோடும் பொலங்கெழு மலையுந்தாளும் பூதலம் புக்க மாதோ. (சு : 16) (யுத் : 914)

பொலங்கொடி - அழகிய கொடி. பொலங்கொடி நெடுந்தேர். (யுத் : 2396)

பொலங்கொண்டல் - அழகிய மேகத்தை யொத்த மேனியை யுடைய இராமன். பொலங் கொண்டலனைய மேனிப் புரவலன். (யுத் : 2903)

பொலங் கொள் கழல் - அழகிய திருவடிகள். வரிவெஞ் சிலையினோர் தம் பொலங்கொள் கழல் தாழ்குவென். (சு : 611)

பொலங்கொள் பாதம் - பொன் போலும் பொலிவினைக் கொண்ட அழகிய பாதங்கள். (கி : 643)

பொலந்தார் - பொன்னாலான மாலை. (அண்) பொலந்தார் அரக்கன் பொருவில் பெருங் கோயில். (சு : 861)

பொலந்தேர் - பொன்னாலியன்ற தேர். (யுத் : 3869)

பொலம் - 1. அழகு. பொலங்கொள் கழல். (சு : 611) பொலங் கெழு சிதை. (914) (பா : 608) (யுத் : 2903) பொலம் பொற் றேர். (யுத் : 2283) பொலந்துடி மருங்கு லாய். (சு : 361)
2. ஆபரணம். நிருதர் தங் குல மாதர் பொலந் துடித்தன. (சு : 299)
3. பொன்னிறம். (வை.மு) பொலந்தாது- (கி : 29)
4. பொன். போதுநின்றதெனப் பொலிந்த பொலங்கழற் காற் பொடி கண்டாய். (பா : 740) [பா : பே] பொலந்தேர். (யுத் : 3869)

பொலம்புரி நூலவர் - அழகிய முப்புரி நூலாலமைந்த காப்பு நாணைக் கொண்டவர். (சீதாராமர்) பொலம்புரி நூலவர் செய்பொருள் முற்றி இலங்கொளி அம்மி மிதித்து. பா : (1336)

பொலம் பொற்றேர்-பொன்னாற்செய்த அழகியதேர். பொலம் பொற் றேரினான். (யுத் : 2283)

பொலன் - 1. பொன். பொலம் என்பதன் மரூஉ. பொலன் கழல்- (அ : 993) (அ : 5) பொலன் குழை. (கி : 214) (பா : 117)
2. அழகு. பொலன் கொள்நாண். (யுத் : 1202) பொலன் கொள் மேனியார். (சு : 833)

பொலன் கழல் - பொன்னாற்செய்த வீரக்கழல். பூவிரி பொலன் கழல். (அ : 993) (அ : 5)

பொலன்குழை - பொற்குழை. பொலன் குழைத் தெரிவையர். (கி : 214) (பா : 1171)

பொலங்கொள் நாண்.-அழகைக்கொண்ட நாண். தோளுறப் பொலங் கொள் நாண் வலம்படப் போக்கி. (யுத் : 1202)

பொலன்கொள் பாதம் - அழகுநிறைந்த திருவடி. (புத் : 2166)

பொலன்தேர் - பொன்னாலாகியதேர். பூட்கைமேல் பொலன்தேர் விழ. (யுத் : 1113)

பொலன் பொற்றிண்டேர் - பொன்மயமான அழகிய வலியதேர். (யுத் : 3102)

பொலன்வரை - மேருமலை. போரொடு நிகர்வன பொலன்வரை. (பா : 77)

பொலிஞ்ச - பொலிந்த. சிறந்த. நாமவேற் பொலிஞ்ச வென்றி பூணுமக் கிலிஞ்சன். (ஆ : 68)

பொலிதல் - 1. மிகுதல். உயிர்ப்புனல் பொலிந்து வரவும். (ஆ : 44)
1. விளங்கித் தோன்றுதல். புல்லிப் பொலிந்த பொலந்தாது. (கி : 29) தோள் பொலியவே. (ஆ : 10) (ஆ : 37)
3. தோன்றுதல். பொலிந்ததாங்கு மிகுபோர். (யுத் : 806) பொலிந்ததாலினிது போரெனலோடும். (யுத் : 806) [பா ; பே]

பொலிவு - 1. புறத் தழகு. பொற்பின் நின்றன பொலிவு. (பா : 90) பொலிவழுங்க. (அ : 547)
2. சிறத்தல். பொன்னின் சோதிப் போதினினுற்றம் பொலிவே போல். (பா : 586)
3. நன்ருயிருத்தல். பொலிவுடைத் தெனத் தேரைகள் புகழ்வன போலும். (கி : 22)
4. மிகுதி. நீர் நிரந்தரம் பொழிகின்ற பொலிவால். (சு : 335)
5. தோற்றம். (அண்) (சு : 335)

பொலிவுறுதல் - விளங்கித் தோன்றுதல். அலரி கீட்டிசைப் பொன் றிணி நெடுவரை பொலிவுருதமுன். (கி : 704)

பொலிவொரீஇ - பொலிவு இழந்து. (அ : 819)

பொழிதல் - 1. சிந்துதல். உலக மெங்கும் பொழிந்தன பொறிகள். (யுத் : 2054)
2. நிறைதல். உலக மேழும் எரிந்துகப் பொழிந்த கோபக் கனலுகப் பொங்குவான். (ஆ : 376) பொழிகனல். (ஆ : 473)
3. மிகுதியாக வெளியிடல். பொழிந் தெழுகாதலாற் பொருந் தினர். (ஆ : 126)

பொழிந் தெழுதல் - பொங்கி எழுதல். (ஆ : 126)

பொழில் - 1. உலகம். ஏழ்பொழிற்கும் ஏழ்நிலைத் தலஞ் சமைத்த தென்ன. (பா : 118)

2. சோலை இப்பொழிலினைக் கடிதிறுக்குவென். (சு : 696)

பொழிலகம் - பொழிலிலுள்ள குடில். பொருந்த அமலன் பொழிலகத் தினிது புக்கான். (அ : 166)

பொழுதகத்து - பொழுது. படியகத்துப் புரள்கின்ற பொழுதகத்து. (ஆ : 338)

பொழுதத்து - பொழுது. சொற்ற பொழுதத்தரசர் கை தொழுதெழ. (பா : 1243) வீரர் முடியெல்லாம் அற்றபொழுதத்து. (ஆ : 618) அபய மென்ற பொழுதத்தே அபயதானம் ஈதலே கடப்பாடு என்பது. (யுத் : 426)

பொழுது - 1. முழுத்தம். முகூர்த்தம். புரைதபு நாளொடு பொழுது நோக்குவான். (அ : 86)

2, முறை. மூவெழு பொழுது. (சு : 357)

3. கணம் ஆண்டகை இனி ஒரு பொழுதும் ஆற்றுமோ. (சு : 672)

4. பகற்பொழுது இராப்பொழுது. பொழுதுணர் வரிய அப் பொருவின் மா நகர். (பா : 142)

5. நேரம். காலம். பழங்க ணேடிரந்தவர் பரிவு தீர்தர வழங்கவும் பொழுது போம் சிலர்க் கம் மாநகர். (பா : 159) (பா : 158)

6. சூரியன். புனைந்திதழ் உரிஞ்சுறு பொழுது புல்லியும் வனைந்தில. (ஆ : 683)

பொழுது போக்கல் - காலத்தைக் கழித்தல். மங்கையும் இன்னுயிர் துறத்தல் திண்ணமால் பொங்கு வெஞ் செருவடைப் பொழுது போக்கினுல். (சு : 1106)

பொழுது போகுதல் - பொழுதுபோக்காகக் கழித்தல். அம்மலர் சூடவும் பொழுது போம் சிலர்க் கத் தொன்னகர். (பா : 158)

பொற்கணுன் - இரணியன். பொன்மயமான உடம்பை யுடையவன். பொற்கணுன் தம்பி என்றினைய. (சு : 458)

பொற்கலசங்கள் - பொற்கலசங்கள் போலும் கொங்கைகள். பூணுலாவிய பொற்கலசங்கள். (பா : 706)

பொற்கலன்- பொன்னுபரணங்கள். பொற்கலன் கிடந்த மாட நெடுந் தெரு. (பா : 569) பொன்னிற் பிறிதாகில பொற்கலனே. (யுத் : 242) (யுத் : 290)

பொற்கலை - பீதாம்பரங்கள். வற்கலை நோற்றன மாசிலாமணிப் பொற்கலை நோற்றில போலுமால். (ஆ : 246)

பொற்கிழி - பொன் முடிந்த சீலை முடிப்பு. (ஆ . 3) புன்னையின் அரும்பு. பரதர் முன்றில் பொற்கிழி விரித்தன சினைப்பொதுளு புன்னை. (கி : 517)

பொற்குவடு - பொன்மலைகள். பொற்குவட்டி டையே தோன்றும் மரகதக் குன்றம் போன்றான். (யுத் : 785)

பொற்குழாத்துறையுள் - பொன்னாற் செய்யப்பட்ட திரட்சியை யுடைய மண்டபம். ஒடுங்கலில் பொற்குழாத் துறையு ளெய்தி யோர் மடங்கலாதனத் திடை முனியை வைத்தனன். (பா:233)

பொற்கூடம் - ஏமகூடம். முன்புள யோசனை யெல்லாம் முற்றின் பொற்கூடஞ் சென்றுறுதி மொய்ம்ப. (யுத் : 2679)

பொற்கோயில் - அழகிய அரண்மனை. புரைசை மதகளிற்றான் பொற்கோயின் முன்னர். (அ : 385) (யுத் : 1586)

பொற்ப - அழகு பெற. பொலிவுற்று விளங்க. புதுமலர் பொற் பச் சிந்தியே. (அ : 783)

பொற்பகம் - அழகிய இருப்பிடம். பொற்பகம் மானநீர் இலங்கைப் பொன்னகர். (ஆ : 855)

பொற்பச் சிந்தி - அழகுபொருந்தச் சிதறி. (அ : 783)

பொற்பதி - செல்வத்தின் நாயகனான குபேரன். பொற்பதி மானந் தேர் இலங்கைப் பொன்னகர். (ஆ : 855) [பா : பே]

பொற்பறை - அழகழிந்தவள். கரன் கொலாமிவள் பொற்பறை யாக்கினன். (ஆ : 591) [பா : பே]

பொற்பாவை - பொன்னாலாகிய பிரதிமை. உருகு பொற் பாவை யும் ஒத்துத் தோன்றினாள். (பா : 615)

பொற்பிறங்கல் - பொன்மலை. பொற்பிறங்கல் இலங்கை, (சு : 623)

பொற்பிறந்தாக்கினன் - அழகழிந்த தாக்கினான். கரன் கொலாம் இவள் பொற்பிறந் தாக்கினன் புகன்றென்றார் சிலர். (ஆ : 591)

பொற்பின் ஆணி - அழகு என்னும் பொன்னுக்கு (மாற்று அறிய) உரையாணி போன்ற சீதாபிராட்டி. கற்பினுக் கணியை பொற் பின் ஆணியை. (யுத் : 3963)

பொற்பினர் - அழகினையுடையவர். புனையும் வற்கலைப் பொற்பினர் நெடு நெறி போனார். (அ :727)

பொற்பினுக்கணி - அழகிற்கும் அணியாக விளங்குபவர். பொற் பினுக் கணியினைக் கண்ணின் நோக்கினான். (ஆ : 838)

பொற்பினுக்கு அழகு - அழகினுக்கு அழகாக அமைந்தவள். அழகு கட்டு அழகு செய்பவள். சீதா பிராட்டி. (யுத் : 3980)

பொற்பு - 1. நற்குண நற் செய்கையாகிய அகத்தழகு. பொற்பின் நின்றன பொலிவு. (பா : 90)

2, அழகு. செயிரின்றி யலர்ந்த பொற்பும் சிந்தையும் (பா : 1155) (அ : 311) பொற்பினுக்கணியை. (ஆ : 838)

3. பொலிவு. காகுத்தான் புகழோடும் பொற்பும் யானும் இவ் விலங்கையும் பொன்றுதும் இன்று. (சு : 295)

4. ஒழுக்கம். பூணினும் புகழே அமையும் என்றினைய பொற் பினின்று. (பா : 105)

5. விளக்கம். (செருக்கு) இவன் தனது பொற்பும் உரனும் இரும் எஞ்சியென. (அ : 23)

6. தன்மை. பொருவில் மாரிமேல் ஒழுகும் பொற்பினால் அருவி பாய் தரும் குன்ற மேயனான். (கி : 893)

பொற்புதல்வர் - பொன்போன்ற புதல்வர். (அ : 1191)

பொற் புறுத்தன - அழகு மிக்கன. பொற்புறுத்தன மெய்ம்மை பொதிந்தன. (அ : 311)

பொற்பூ - பொன்மலர். வானவர் பூமழை மன்னவர் பொற்பூ (பா - 1333)

பொற்பெருங்கோயில் - பொன்னாற் செய்த பெரிய அரண்மனை. (யுத் : 3580)

பொற்பொடி - பொன்னின்பொடி. புன்னைப் பூந்தாது மானும் பொற்பொடி அப்பிவிட்டார். (பா : 1218)

பொற்ற - 1. அழகு மிக்க.

2. பொன்மலிந்த. நல்ல. பொற்றமாடங்கள் கோடி. (சு : 232)

பொற்றகடு - பொன் தகடு. சுடர் மின்னும் பொற்றகடுறு நிலம். (அ : 70)

பொற்றடந் தோள் - அழகிய பெரிய தோள். (யுத் : 3143)

பொற்றடந் தோளான் - பொன்னிறமான பெரிய தோளை யுடையவன். (அனுமன்) (யுத் : 2848)

பொற்றட மகுடம் - பொன்தட மகுடம். பொன்னாலாகிய பெரிய முடி. பொற்றட மகுடஞ் சூடப் போதுதி விரைவின். (அ : 266)

பொற்றலம் - விண்ணுலகம். தாவில் பொற்றலத்தில்.

பொற்றலை - அழகிய உச்சி.

பொற்றார் 1. பொன்னாலியன்ற கிண்கிணி மாலை. மான மாப் புரவிப் பொற்றார் மாக்கொடி கண்டைமான. (யுத் : 2398)

2. பொன்மாலை. பொற்றாரகன் மார்பு. (சு : 58)

பொற்றுலைத்தாலம் - பொன்னை நிறுக்குந் துலாக் கோல். செம் பொற்றுலைத்தால மன்ன தனி நிலை தாங்கிய ஞால மன்னன். (அ : 116)

பொற்றேர் - பொன்மயமான தேர். (யுத் : 2909)

பொற் றேரரசே - பொன்னால் இயன்ற தேர் எறுதற்குரிய அரசே- பொற்றேரரசே தமியேன் புகழே. (அ : 356)

பொற்றை - மலை. சிறுகுன்று. (கலா) பொற்றை மாமுறைப் புலாலுடை வாயினிற் புகுந்து. (ஆ : 502)

பொற்றை மால்வரை - பொற்றையென்று வழங்கும் வரை; பொன்றும் இயல்பினதாகிய மலை. பொற்றைமால் வரைகளோ என்புயநெடும் பொருப்பும் அம்மா. (யுத் : 778)

பொற்றொடி - 1. பொன்னாலாகிய வளை. பொற்றொடித் தெரிவை. (யுத் : 4087)

2. பொன்னாலாகிய வலையல்களை யணிந்தவள். பொற்றொடி கேட்டு வெங்கனலிற் பொங்குறு. (பா : 377) (ஆ : 953)

பொற்றோடு - பொன்னாலாகிய தோடு. பொற்றோடிவர்கின்ற பெருங் குழையாள். (ஆ : 1108)

பொற்றோள் - அழகிய தோள். வன்றொழிற் கொற்றப் பொற்றோள். (சு : 310) (யுத் : 263)

பொறி - 1. புள்ளி. பொறிவரி யம் பெனுந் தும்பி. (யுத் : 2310)
2. யந்திரம். பல மாயந் தரும் .பொறிகள். (ஆ : 363) பொறிவனம். (யுத் : 2422) நின் மாயப்பொறி புக்கு மயங்கும். (யுத் : 238)

3. தீப்பொறி. பொறிந்தன கலவைகள். பொறியிற் சிந்தின. (பா : 613) பொறிந்து. (கி : 1021) பொறிவனம் வெந்தபோல். (யுத் : 2421)
4. திருமகள். (உ.வி) (சு : 691)
5. வண்டுகள் - (புள்ளி. அழகு) பொறிக்குல மலர்ப் பொழில். (சு : 691)
6. ஐம்பொறி. கேள்வியரல்லர் பொறியிலர். (யுத் : 732) (யுத் : 238)
7. யந்திரம். அதனை யுடைய தேர். வனிதையும்... முனிவனும் பொறிமிசை நெறியை முன்னினர். (பா : 246)
8. வலை. மாயப் பொறிபுக்கு மயங்குவரால். (யுத் : 238)
9. அறிவு நல்லறிவு. பொறியில் அடலரக்கர். (ஆ : 369)
10. பிரதிமை. தன்கிளைச் சுற்றத்தாரும் எந்திரப் பொறியில் நிற்ப. (யுத் : 1223)
11. பொலிவு. பொறிவரி. (சு : 427)
12. மனம். கதியுறு பொறியின் வெய்ய காம நோய் (ஆ:645) (யுத் : 238) (உ.வி)
13. நல்வினை சனகன் கட்டுரை பொய்யடையாக்கிய பொறி யிலேன். (கி : 555)
14. புலன். புலனுணர்ச்சி. ஊருசை முதற் பொறி யாவையும். (ஆ : 720) பொன்றினள் போது மென்னுப் பொறி யழிந் துயிர்ப்புப் போவாள். (யுத் : 1617) [பா : பே]
15. அளவு கண் கோடற் பொறியிற் கடிதேகி. (யுத் : 228)
16. அடையாளம். இந்திரனை நாமப் பொறி துடைத்த எம்பியோ. (யுத் : 1655)
17. துகள். அவை பொறியோ என மறியத் தாயோனுமத் துணை வாளிகள் தொடுத்தான். (யுத் : 2996)
18. நல்லிலக்கணம். (உ.வி) பொறியிலர். (யுத் : 732)
19. உறுப்புக்கள். கூட்டினன் தேர்ப்பொறி. (அ : 577)
20. ஒளி. அரஞ் சுடர்ப் பொறி நிமிர் அயிலின் ஆடவர். (கி : 464)

பொறிக்குலம் - தீப் பொறிகளின் கூட்டம். (சு : 834)

பொறிக்குல மலர் - 1. வண்டுகளின் கூட்டமுள்ள மலர். (பொறி - புள்ளி; வண்டுக்கு ஆகு பெயர்) (சு : 691)

2. திருமகளுக்கு இருப்பிடமாகிய மலர். (உ.வி) (சு: 691)

பொறி கொள் வெஞ்சரம் - அனற் பொறியைக் கொண்ட கொடிய அம்பு. (வை.மு) புள்ளிகளைக் கொண்ட கொடிய அம்பு. (அண்) இந் நெடியோன் பொறி கொள் வெஞ்சரம் போவது காண். (கி: 156)

பொறி சிதறல் - நெருப்புப் பொறி சிந்துதல். முழு விழியிற் பொறி சிதற. (யுத்: 1135)

பொறித்தல் - 1. பதியச் செய்தல். அந்தப் பரிபவம் முதுகிற் பற்றப் பொறித்த போது. (யுத்: 1235)

2. எழுதுதல். வரைதல். பொறித்த நாமத்தை நோக்கினன் புகழோன். (கி: 307) பொறிப்பருந் துன்பம். (கி: 434)

பொறிதல் - நெருப்புப் பொறி பறத்தல். தீச்சுடர் சிதறுதல். ஓர் ஆடகத் தண்டு வாங்கிப் பொறிந்தாங்கு எரியின் சிகை பொங்கி எழப்புடைத்தான். (ஆ: 933) யாவையும் எரிந்துப் பொறிந்து போயுக. (யுத்: 1168) பொறிந் தெழு கண்ணினன். (யுத்: 1473) பொறிந் தோடின. (யுத்: 3004)

பொறிப்படலை - பொறியின் திரள். பொறிப் பிதிர்ப் படலைச் செந்தீப் புகையொடு பொடிப்ப. (ஆ: 1015)

பொறிப் பருந்துன்பம் - ஏழுத முடியாத துன்பம். பொறிப் பருந் துன்ப முன்னுக் கவிக் குலத்தரசன் போனுன். (கி: 434)

பொறிப்புண்டரீகம் - புலி. பொறிப்புண்டரீகம் போலும் ஒருவன். (யுத்: 955)

பொறிபடுதல் - தீப் பொறி தோன்றுதல். என்கை வாளி பொறிபடச் சுடர்கள் தியப் போவன. (யுத்: 777)

பொறிபடை - தீப் பொறி பறக்கின்ற படை. பொறி வெம்படை கொண்டிடை படர்கின்றன மதயாறுகள். (யுத்: 1828)

பொறிபிறத்தல் - நெருப்புப் பொறி வெளிப்படுதல். அனற் பொறி தோன்றுதல். நிமிர் பொறிபிறக்க. (யுத்: 630) பொறி பிறக் கின்ற கண்ணன். (யுத்: 3605)

பொறிமயிர்க் கவுதாரி - புள்ளிகளையுடைய மயிர் செறிந்த கவுதாரி. நெடும்பொறி மயிர்க் கவுதாரிகள் போற்றுறும் நெறியின் மாக் களும். (அ: 806)

பொறி மயிர்ப்புறம் பொடிப்ப - தீப்பொறிகள் ஒவ்வொரு மயிர்க் காலிலும் தோன்ற. பொழிந்த கோபத்தன் புதுப் பொறி மயிர்ப் புறம் பொடிப்ப விழுங்குவேனென ஓங்கலும். (ஆ : 1176)

பொறியிலர் - மக்கட்குரிய நல்லிலக்கணம் இல்லாதவர். ஐம்பொறி கள் நன்கு அமையாதவர். கேள் வியரல்லர் பொறியிலர் (யுத் : 732)

பொறிவரி - 1. பொலிவுள்ள கோடுகள். மீமிசைச் சொல். (அண்) பொறிவரி எறும்வலிப் புகைக்கண் காய்சின உழுவை. (சு:427)
2. பொறியும் வரியும். புள்ளியும் கோடும். பொறிவரி அம்பெனுந் தும்பி. (யுத் : 2310). பொறிவரி யரவம். (யுத் : 1897). பொறி வரியரவு. (பா : 26)

பொறிவரிய அம்பெனுந் தும்பி - பொறியையும் வரியையுமுடைய அம் புகளாகி தும்பி. பொறி—நெருப்பு, புள்ளி. வரி—அழகு, இரேகை. (யுத் : 2310)

பொறிவரி யரவம் - படப் புள்ளிகளையும் உடற் கோடுகளையுமுடைய நாகம். (வாசுகி) பொன்னெடுங் குன்றஞ் சூழ்ந்த பொறிவரி யரவமென்ன. (யுத் : 1897)

பொறிவரி யரவு - புள்ளிகளையும் கீற்றுகளையும் உடைய பாம்பு. (காளிங்கன்) பொறிவரியரவினுடும் புனிதன். (பா : 26)

பொறிவனம் - வண்டுகள் மொய்க்கின்ற வனம். படைகள் யாவும் பொறிவனம் வெந்த போலச் சாம்பராய்ப் போயதல்லால். (யுத் : 2422)

பொறிவானுறுதீ - வானத்தினின்று சொரியும் பொறிகளையுடைய தீப் பிழம்பு. (யுத் : 326)

பொறுத்தல் - 1. தன்னிடத்தே கொள்ளுதல். யாக்கை பொறுத் தனன் புகுதக் கண்டார். (யுத் : 3186)
2. தாங்குதல். புனலின் படை தொடுத்தான் அவன் அதுவே கொடு பொறுத்தான். (யுத் : 3021)

பொறுத்தாய் பொறையே-பொறுமை என்னுங் குணத்தையே தரித் திருப்பவனே. (அ : 353)

பொறை - 1 பொறுமை. பொறுக்கும் தன்மை. பொறுத்தாய் பொறையே. (அ : 353) பொன்றினள் போலுமென்னுப் பொறை யழிந்துயிர்ப்புப் போவாள். (யுத் : 1617)

2. பாரம். சுமை. அரும்பொறை இனிச்சிறி தாற்ற ஆற்ற லேன். (அ : 16)

3. உடம்பு. பொறையுள் நீங்கி உக்கதாம் உயிரள். (ஆ : 294)

4. அடங்கியிருத்தல். பந்திக்கை. நெடுநாள் பொறையுற்ற உயிர்ப்பு. (சு : 51)

5. பாறை. தபனன் மைந்தன் உறைதரும் பொறை ஈதென் ருன். (யுத் : 4095) [பா : பே]

பொறைகல்லா - பொறுக்கலாற்ரு. அடியிணை பொறைகல்லா என்றுகொல் அதரெங்கும் இடையிடை மலர்சிந்தும் இன மரமிவை காணுய். (அ : 705)

பொறை சிகைப்பெருந்தலை - பாரமான உச்சியைக் கொண்ட பெரிய தலை. (யுத் : 3768)

பொறைத்துயர் - வில் முதலியவற்றைப் பயன்படுத்தப் பகைவர் இல்லாமல் வீணே சுமக்க நேர்ந்த துன்பம். அமைந்த வில்லும் அருங்கணைத் தூணியும் சுமந்த தோளும் பொறைத்துயர் நீங்கு மால். (ஆ : 137)

பொறை தருதல் - பொறுத்தல். முந்தையுன் குறையும் பொறை தந்தனம். (சு : 683 d)

பொறை தவிர்தல் - நிறைந்த பாரத்தை இறக்குதல் (பாவச்)சுமை நீங்குதல். இசை கெழு வேந்தன் காக்கப் பொறை தவிர்ந்து உயிர்க்கும் பூதலம். (பா : 51)

பொறை நலம் - பொறுமைக் குணம். நலம் பொறை கூர்தரு மயில். (ஆ : 1139)

பொறை பொறுத்தல் - பொறுமை யென்னுங் குணத்தைத் தரித் திருத்தல். பொறுத்தாய் பொறையே. (ஆ : 353)

பொறைமை- பொறுமை. எளிமை சால் பொறைமை கூர. (யுத் : 105)

பொறையழிதல் - பொறுக்குந் தன்மை கெடுதல். பொறை யழிந் துயிர்ப்புப் போவாள். (யுத் : 1617)

பொறை யாற்றுதல் - பளுவைப் பொறுத்தல். பொறுத்தலைச் செய் தல். தாங்கி நிற்றல். குரக்குத் தனிக்கரத்திற்றெடப் பொறை யாற்றுவை கொல்லாம். (யுத் : 1127) [பா : பே] பொறை யிருந் தாற்றி. (சு : 499) துன்பப் பொறை யாற்ருர். (யுத் : 2605)

பொறையிற்று - பொறுக்கத்தக்கது. போழ்ந்தென அரக்கன் செய்த புன் தொழில் பொறையிற்ருமால். (யுத் : 3885)

பொறையினன் - பொறுமை யுடையவன். (விபீடணன்) தாவரும் பொறையினன். (யுத் : 3886)

பொறையுயிர்த்தல் - 1. பாரம் நீங்குதல். மலர் வடம் பூண்கிலாமை யால் ஒல்கிய ஒருவகைப் பொறையுயிர்த்தவே. (அ : 974)
2. இளைப்பாறுதல். பொன்னுயிர்க்குந் தாராய் பொறையுயிர்த்த வாறிதுவோ. (அ : 1127)
3. கருவுயிர்த்தல். வெளிப்படுதல். சிலை இரு கால்களும் ஒரு கால் பொறையுயிரா. (யுத் : 3007)

பொன் - 1. பொன்போலும் மகரந்தம். பொன்னே சூழும்பூ. (பா : 593)
2. இலக்குமி. நங்கையங்கொரு பொன். (பா : 1186)
3. ஒருநாணயம் பல் பதிறுயிரம் பசுவும் பைம்பொனும். (பா : 1314)
4. பிரகஸ்பதி. தேவகுரு. பொன்னெடு வெள்ளியும் புரந்தராதி யர்க்கு இன்னியல் முறைமுறை இருக்கை ஈயவே. (ஆ : 575) (யுத் : 4317)
5. கரும் பொன். இரும்பு. பொன்ருழ் கவசம். (1695)
6 அழகு. பொற்பணை. (சு:726) பொன்னின்றுகளுலும் தெய்வப் பூணினர். (சு : 759) பொற்சிலை மாரன். (பா : 1180)
7. தேமல். தழைத்த பொன்முலைத்தடம். (சு : 325)
8. செம்பொன். பொன்னணி வீதி. (அ : 816)
9. பொன்னின் தன்மை. பொன்னின்ற வடிம்பின்வாளி. (யுத்:1880)

பொன்கணன் – இரணியாட்சன் நினக்குப் பின்னேன் பொன் கணன் ஆவியுண்ட புண்டரிகக்கண் அம்மான். (யுத் : 251)

பொன்கயிற்றூர்தியான் - பொன்னுலியன்ற கயிற்றைக் கொண்டு தேரைச் செலுத்துபவனுன மாதலி. (யுத் : 3825)

பொன்குலாம் மேனி மைந்தன் - பொன்போல் விளங்குகின்ற திருமேனியையுடைய இலக்குவன். பொன்குலாம் மேனிமைந்தன் தன்னெடும். (யுத் : 2135)

பொன்செய் கம்மியர் கூடம் - பொன்னைப் பணி செய்கின்ற கம்மியரின் சம்மட்டி. உலையுற வெந்த பொன்செய் கம்மியர் கூடமொப்பக் குலையுறு பொறிகள் சிந்த. (யுத் : 1416)

பொன்செய்தார் மவுலி விண்ணோர் - பொன்னாலியன்ற கற்பக மாலையை முடியில் அணிந்த விண்ணோர். (அண்) பொன்மயமான மாலையை முடியிலணிந்த தேவர்கள். (வை மு.) பொன்செய்து ஆர் மவுலிவிண்ணோர். பொன்னாற்செய்யப்பட்டு அமைந்த கிரீட மணிந்த தேவர்கள். (உ.வி.) (யுத் : 2058)

பொன் சென்றறியா உவணத்தளிப்புள் - நிறத்தினாற் பொன்னும் உவமையாகச் சொல்லுதலை யறியப்பெறாத (ஒப்பாக மாட்டாத) கருடன் என்னும் ஒப்பற்ற பறவை. பொன் சென்றறியா உவணத் தனிப் புள்ளினுக்கும் மின்சென்றறியா மழுவாளவன் விடைக்கும். (யுத் : 972)

பொன்தந்த முழை - பொன்மயமான குகை. பொன்றந்த முழைகள் தோறும் புறத்துராய்ப் புரண்டு போவ. (சு : 4)

பொன் நாகம் - மேரு. மால்விடையும் பொன் நாகமும் நாகமும் நாண நடந்தான். (பா : 781)

பொன்பரப்பல் - பொன்னின் ஒளியைப் பரவச் செய்தல். புனல் பரப்ப ஒப்பிருந்த பொன் பரப்பு மென்பவால். (கி : 234)

பொன் பிழைக்கப் பொதிந்தனர் - இடையில் கிடைத்த பொன்னை நழுவி விழும்படி துணியில் முடிந்தவர். முன் பிழைத்த வறுமையின் முற்றினோர் பொன் பிழைக்கப் பொதிந்தனர் போலவே. (அ : 308)

பொன்புனை நகரம் - பொன்கொண்டு புனைந்த இலங்கா நகரம். அரக்கியர் அரற்றிவீழப் பொன்புனை நகரம் புக்கான். (யுத்:3184)

பொன்பொதி விளக்கம் - பொன்னாற் செய்த விளக்குகள். பொன் பொதி விளக்கங் கோடிப் பூங்குழை மகளிர் ஏந்த. (யுத் : 2231)

பொன்மதில் - பொன்னாலியன்ற மதில். செப்பிற் செம்புனல் தோய்ந்த செம்பொன் மதில் துப்பிற் செய்தது போன்றது. (யுத் : 989)

பொன்மயமான நங்கை-பொன்னொளி வாய்ந்த சீதை. பொன்மய மான நங்கை மனம் புகப்புன்மை பூண்ட தன்மையோ. (ஆ:646)

பொன்மலை - 1. மேரு. பொன்மலை வில்லினான். (யுத் : 2549)
2. பொன்னாலாகிய மலை. மேருவும் பொன்மலை யாதலால். (ஆ : 239)

பொன்மலை வில்லினான் தன்படைக் கலம் - மேருமலையை வில்லாகக் கொண்ட சிவபிரானது பாசுபதாஸ்திரம். (யுத் : 2549)

பொன்மழை - பொன்மாரி. பொன் மழைத்த மேகம். (பா : 785)

பொன்மா நகரம் - 1. பொன்னாற் புனைந்த இலங்கைமா நகரம். அரக்கியர் அரற்றி வீழப் பொன்மா நகரம் புக்கான். (யுத்: 3184)
2. அழகிய பெரிய நகரம். கேகய நாட்டரசனுடைய நகரம். போனார் அவரும் கேகயர் கோன் பொன் மாநகரம் புக வெய்தின். (அ : 608)

பொன்மால் வரை - 1. இமய மலை. வடதிசை வாய் உயர் பொன் மால் வரை. (பா : 1349)
2. சித்திரகூடம். அப் பொன் மால்வரை. (அ : 762)

பொன் மானுரியான் - பொன்னிறம் வாய்ந்த மான் தோலையுடைய உருத்திரன். தானும் தன் பாங்கர் நின்ற பொன் மானுரியானுந் தழீஇயெனப் புல்லி. (அ : 435)

பொன் மொய்த்த தோளான் - வீரலட்சுமி தங்கிய தோள்களையுடைய இராமபிரான். பொன் மொய்த்த தோளான் மயல் கொண்டு புலன்கள் வேறாய். (சு : 573)

பொன் வடிம்பு - கரும் பொன்னினால் அமைக்கப்பட்ட விளிம்பு. அலங்கு பொன் வடிம் பிழைத்த வான் பகழி. (அ . 1103)

பொன்வரை - மேரு மலை. பொன்வரை போலும் இந்து சயிலம். (பா : 897)

பொன்வரைக்குடுமி - பொன் மலையாகிய மேருமலையின் சிகரம். வானத்தில் பொன்வரைக் குடுமியில். (கி : 965)

பொன்வள்ளம் - பொற்கிண்ணம். அம் பொன் வள்ளத்து வார்க்கிய பசுநறு மாந்தல் மேயினர். (பா : 1052)

பொன்விரி புன்னை - பொன்னிறமான மகரந்தங்களோடு கூடிய மலர் விரிந்த புன்னை. பொன்விரி புன்னையில் பள்ளிகொள்வன பங்கயத்தன்னமே. (பா : 64)

பொன்விலைப் பாவையர் - பொன்னை விலையாகப் பெற்று போகத்தை விற்கும் பெண்கள். பொன் விலைப் பாவையர் மனமும் போற் பசையு மற்றதே. (பா : 356)

பொன்விலை மகளிர் - பொன்னை விலையாகப் பெறும் பொதுமகளிர் பொன்விலை மகளிர் மனமெனக் கீழ் போய். (பா : 106)

பொன்றந்த முழை - பொன்தந்த முழை பார்க்க.

பொன்றாத பொழுது - சாவாத போது. பொன்றாத பொழுதெனக் கித் கொடுந்துயரம் போகாதால். (சு : 321)

பொன்றாது பொன்றுதல் – உயிர்போகாமல் உயிர்ப் பொடுங்கி இறந் தவர் போலாதல். பொன்றாது பொன்றினான் தன் புகழென இழிந்து போனான் (யுத் : 891)

பொன்றா தொழிபார் - உயிர் துறவாமபிரார். (ஆ : 1109)

பொன்றாழ் குழையாள் - பொன்னாற் செய்யப் பெற்றுக் காதில் தொங்குகின்ற குழை யென்னும் அணியை அணிந்த சீதை (யுத் : 2629)

பொன்றிணி திரடோளான் - அழகு செறிந்த திரண்ட தோள்களை யுடையவன். (இராமன்) நன்மடவாளோர்டினிதினின் விளையாடிப் பொன்றிணி திரள்தோளான் போயினன். (அ : 708)

பொன்றிணிந்த கை - பொன் அணிகலன் அணிந்த கை. பொன் றிணிந்த பொருவில் தடக்கையான். (அ : 797)

பொன்றிணிந்த தோடு - பொன்னாலியன்ற திண்ணிய இதழ். உவணம் விற்றிருந்த பொன்றிணிந்த தோட்டரும் பெறல் இலச் சினை போக்கி. (அ : 73)

பொன்றிணிந்தன சடைப்புனிதன் - தங்கத்தைத் திணித்து வைத் தாற் போன்ற சடையையுடைய தூயோனாகிய வசிட்டன். வேந் தரும் பொன்றிணிந்தன சடைப் புனிதனோடும் போய்ச் சென் றனர். (அ : 1145)

பொன்றிணி நெடுமதில் - பொன்னாற் செய்யப்பட்ட திண்மையான நீண்ட மதில். (அ : 462)

பொன்றிணி நெடுமரப் பொதும்பு - பொன்னாற் செய்யப்பட்ட அடர்ந்த நீண்ட மரங்களையுடைய சோலை. (சு : 406)

பொன்றிணி நெடுவரை - உதயகிரி. அலரி கிட்டிசைப் பொன்றிணி நெடுவரை பொலிவுறுத முன். (கி : 107)

பொன்றிணி பொலங் கொடி - பொன் போலும் தேமல் செறிந்த பொற்கொடி போன்றவளே. (அண்) பொன்மய மான அழகிய பூங்கொடி போன்றவளே. (வை.மு) பொன்னைத் திணித்து அமைக்கப் பெற்ற அழகிய கொடி போன்றவளே. (கலா) (சு : 609)

பொன்றிணி போதினள் - அழகு நிறைந்த தாமரை மலரிலிருக் கின்ற திருமகள். பொன்திணி போதினளும் பூமியும் புலம்பி னைய. (அ : 296)

பொன்றிணி மன்னன் கோயில் - பொன் செறிந்த அரசன் (தயரதன்) கோயில். பொன்திணி மன்னன் கோயில் சுமந்திரனோடும் புக்கான். (அ : 584)

பொன்றிணி மாடவீதி - பொன்னினால் திண்ணிதாகக் கட்டப்பட்ட மாடங்களையுடைய வீதி. பொன்றிணி மாடவீதி பொருக்கென நீங்கிப் புக்கான். (அ : 265)

பொன்றி நீங்குதல் - இறந்து போதல். பொன்றி நீங்குதல் புரிவென் யான். (அ : 181)

பொன்றினவன் - செத்தவன். பொன்றினவன் எழுந்தாற்போற் புடை பெயர்ந்தங் கெழுந்திருந்தான். (யுத் : 1274)

பொன்னின்வான் அன்னபோர்க்களம் - பொன்னிற முள்ள செவ் வானம் போன்ற போர்க்களம். (யுத் : 3167)

பொன்றுங்காலம் புகுதல்-இறந்து படுங்காலம் வருதல். புகுந்ததோ பொன்றுங்காலமே- (யுத் : 1297)

பொன்றுதல் - 1. அழிதல். பொன்றுத பொலங் கழலோன். (ஆ:87) காகுத்தன் புகழோடும் பொற்பும் யானும் இவ்விலங்கையும் அரக்கரும் பொன்றுதும். (சு : 295)

2. வருந்துதல். மாமழையே யணையான் பூணு தொழிவா னெனில் யாமுளமோ போன்றேல் என்றுன். (அ : 335)

3. கெடுதல். பொருந்தா நயனம் பொருந்தி நமைப் பொன்றச் சூழ்ந்தது. (அ : 610)

4. இறத்தல். பொன்றிய புரவலன். (அ . 1089) பொன்று முன்னம் பொன்றுதி. (ஆ:1169) பொன்றுன் என்றுல். (ஆ:1167) பொன்றுதியெனினும். (யுத் : 1217)

பொன்றுந்தன்மை - 1. இறக்கும் நிலைமை. இன்னலாற் பொன்றுந் தன்மை புகுந்தபோது. (கி : 983)

2. அபாயம். பிழைத்தானெனிற் பொன்றுந்தன்மை புகுந்தது போய் என்றுள். (யுத் : 4152)

பொன்றுவித்தல் - அழித்தல். கொல்லல். பூதலத்தரசையெல்லாம் பொன்றுவித்தனையென்றுலும். (பா : 1384) பொன்றுவிப்பதோர் விதி. (யுத் : 3283)

பொன்றுவிப்பதோர்விதி - அழிக்கச்செய்வதாகிய ஊழ். இக்குல மெலாம் பொன்றுவிப்பதோர் விதி தந்ததாமெனப் புகன்றுன். (யுத் : 3283)

பொன்றுன்னும்படி - அழகு பொருந்திய பூமி. பொன்றுன்னும் படியகத்துப் புரள்கின்ற பொழுதகத்து. (ஆ : 338)

பொன்னகர் - 1. அழகிய நகரம். (வை.மு.) பொன்மயமான நகரம். இலங்கை. (அண்) மானநீர் இலங்கைப் பொன்னகர். (ஆ : 855) (சு : 190) (யுத் : 1973)

2. பொன்மயமான மாளிகை. (அண்) ஆடகமாடம். (உ.வி.) (பா:646) (858)

3. அமராவதி. (வை.மு.) பொன்னகர் அன்னதோர் ஆடக மாடம். பா : 646) (ஆ : 858)

பொன்னகரம் - அமராவதி. சுவர்க்கம். பொன்னகரத்தினும் .. நாகர்தம் தொன்னகரத்தினும். (ஆ : 858)

பொன்னகரி - பொன்மயமான பட்டினம். துன்னரிய பொன்னக யினுறைவீரல்லிர். (கி : 809) [பா : பே]

பொன்னடி – 1. அழகிய பாதங்கள். பொன்னடி. வணங்கிப் போனுன். (பா : 560) (யுத் : 1371) (யுத் : 313) (யுத் : 2348)

2. சிறந்த பாதங்கள். தூய கோசலை பொன்னடி. (அ : 880)

பொன்னணி - 1. பொன்னாற் செய்த அணிகலன். பொன்னணி மணியணி. (அ : 487)

2. பொன் போலும் அழகிய. பொன்னணி நறவு. (அ : 703)

பொன்னணி நிறவேங்கை - பொன்னின் அழகிய நிறம் வாய்ந்த மலர்களோடு கூடிய வேங்கை. (அ : 703) [பா : பே]

பொன்னணி வீதி - அழகு செய்யப்பெற்ற வீதி. விழாப் போது கின்றில பொன்னணி வீதியே. (அ : 816)

பொன்னந்திய நதி - பொன்னை மிகுதியாக வுடைய நதி. பொன் னந்திய நதிகண்டுள மகிழ்ந்தந்தனர் போனார். (அ : 621)

பொன்னரி சுமந்த பீடம் - அழகிய சிங்கங்களால் தாங்கப் பெற்ற சிங்காசனம். பொன்னரி சுமந்த பீடத்திமையவர் போற்றி செய்ய மன்னவனாக. (யுத் : 946)

பொன்னரி மாலை - 1. மலராற் செய்தது போன்று பொன்னாற் செய்த மாலை. சுடர் மணித் தோளிற் றேன்றும் பொன்னரி மாலை. (யுத் : 1587) (பா : 946)

2. பொன்னாலாகிய சதங்கை மாலை. பொன்னரி மாலை கொண்டு புரிகுழல் புனையலுற்றான். (பா : 1062)

பொன்னரை - அழகிய அரை. (இடை) பொன்னரைச் சீரையின் பொலிவு நோக்கினான். (அ : 455)

பொன்னனார் - திருமகள் போன்று அழகிய மாதர். பாலையாழைப் பழித்த சொற் பொன்னனார். (ஆ : 654)

பொன்னாசனம் - பொன்னாலியன்ற அரியணை. பொன்னாசன முங் குடையும். (அ : 361)

பொன்னாட்டவர் - தேவர்கள்- மேலைப் பசும் பொன்னாட்டவர் நாட் டமும் உள்ளமும் படரா. (யுத் : 2359)

பொன்னாட்டிற் புதுக்குடி யேற்றுதல் - போரில் பகைவரைக் கொன்று தேவராக்கி வானுலகிற்கு அனுப்புதல். அரக்கர் சேனை யாவரும் மீளா வண்ணம்... பொன்னெடு நாட்டை யெல்லாம் புதுக்குடி யேற்றிற் றன்றே. (யுத் : 3119)

2. சிறந்த பாதங்கள். தூய கோசலை பொன்னடி. (அ : 880)

பொன்னணி - 1. பொன்னாற் செய்த அணிகலன். பொன்னணி மணியணி. (அ : 487)

2. பொன் போலும் அழகிய. பொன்னணி நறவு. (அ : 703)

பொன்னணி நிறவேங்கை - பொன்னின் அழகிய நிறம் வாய்ந்த மலர்களோடு கூடிய வேங்கை. (அ : 703) [பா : பே]

பொன்னணி வீதி - அழகு செய்யப்பெற்ற வீதி. விழாப் போது கின்றில பொன்னணி வீதியே. (அ : 816)

பொன்னந்திய நதி - பொன்னை மிகுதியாக வுடைய நதி. பொன் னந்திய நதிகண்டுள மகிழ்தந்தனர் போனார். (அ : 621)

பொன்னரி சுமந்த பீடம் - அழகிய சிங்கங்களால் தாங்கப் பெற்ற சிங்காசனம். பொன்னரி சுமந்த பீடத்திமையவர் போற்றி செய்ய மன்னவனாக. (யுத் : 946)

பொன்னரி மாலை - 1. மலராற் செய்தது போன்று பொன்னாற் செய்த மாலை. சுடர் மணித் தோளிற் றோன்றும் பொன்னரி மாலை. (யுத் : 1587) (பா : 946)

2. பொன்னாலாகிய சதங்கை மாலை. பொன்னரி மாலை கொண்டு புரிகுழல் புனையலுற்றான். (பா : 1062)

பொன்னரை - அழகிய அரை. (இடை) பொன்னரைச் சீரையின் பொலிவு நோக்கினான். (அ : 455)

பொன்னனார் - திருமகள் போன்று அழகிய மாதர். பாலையாழைப் பழித்த சொற் பொன்னனார். (ஆ : 654)

பொன்னாசனம் - பொன்னாலியன்ற அரியணை. பொன்னாசன முங் குடையும். (அ : 361)

பொன்னாட்டவர் - தேவர்கள்- மேலைப் பசும் பொன்னாட்டவர் நாட் டமும் உள்ளமும் படரா. (யுத் : 2359)

பொன்னாட்டிற் புதுக்குடி யேற்றுதல் - போரில் பகைவரைக் கொன்று தேவராக்கி வானுலகிற்கு அனுப்புதல். அரக்கர் சேனை யாவரும் மீளா வண்ணம்... பொன்னெடு நாட்டை யெல்லாம் புதுக்குடி யேற்றிற் றன்றே. (யுத் : 3119)

பொன்னாடு - பொன்னுலகம். சுவர்க்கம். பொன்னாட்டிடைப் போயி னரால்- (ஆ : 382)

பொன்னுடை - பொன் மயமான பீதாம்பரம். புலியினதளுடை யானும் பொன்னுடை புனைந்தானும். (ஆ : 563)

பொன்னார் கலை - பொன்னுடை பொன்னார் கலை யணிவானெதிர் புகுவான். (பா : 1372)

பொன்னார் சடை - பொன் போன்ற சடை. பொன்னார் சடை மாதவ போதுதியால். (ஆ : 88)

பொன்னார் வலயம் - பொன்னால் இயன்ற வளை. பொன்னார் வலயத் தோளான். (அ : 368)

பொன்னி - காவிரி. கரைகள் தோறும் பரப்பிய பொன்னி யன்ன ஆவணம். (பா : 574) பொன்னியைப் பொருவுங் கங்கை. (பா : 509)

பொன்னி நாட்டுவமை வைப்பு - காவிரி வளஞ் செய்யும் நாட்டிற் குவமையான நிலங்கள். (யுத் : 2713)

பொன்னி நாடு - சோழநாடு. தெய்வப் பொன்னி நாட்டுவமை வைப்பு. (யுத் : 2713)

பொன்னியல் சிவிகை - பொன்னாலியன்ற பல்லக்கு. (யுத் : 4191)

பொன்னிலை மான் - பொன்னிறம் நிலைபெற்ற மான். (ஆ : 953)

பொன்னிறத்திரு - பொன் போன்ற நிறத்தையுடைய சீதாபிராட்டி. இளையவன் இழைத்த சாலையிற் பொன்னிறத் திரு வொடும் குடி புக்கானரோ. (அ : 784)

பொன்னிறத் தும்பி - பொன்னிறமுள்ள வண்டு. பொன்னிறத் தும்பி வந்தூதிப் போயதால். (சு : 366)

பொன்னின் சோதி - பொன்னின் பேரொளி. பொன்னின் சோதி போதினின் நாற்றம். (பா : 586)

பொன்னின் நன்னகர் - பொன்மயமான நல்ல நகர். பொன்னி னன்னகர் வீதியிற் புக்கனன். (கி : 605)

பொன்னின் நாடு - பொன்மயமான சுவர்க்கலோகம். (யுத் : 4105)

பொன்னின் மணிப்புரிகலம் - பொன்ஞலியற்றப்பட்ட மணிகள் பதித்த பாத்திரம். பொன்னின் மணிப்பரிகலத்திற் புறப்பட்ட இன்னமுதை. (பா : 739)

பொன்னின் மலே - மேரு. முந்து வெள்ளிமலே பொன்னின் மலேயோடு முரண. (ஆ : 17)

பொன்னின் மால்வரை - பொன்மயமான மேருகிரி. (யுத் : 1450)

பொன்னின் மான் - பொன்மான். பொன்னின் மாஞகிப் புக்கு. (ஆ : 769)

பொன்னின் முன்னம் ஒளிரும் பொன்னே - பொன்னினும் மிக்கு ஒளி வீசும் சிறந்த பொன் போன்றவனே. பொன்னின் முன் னம் ஒளிரும் பொன்னே புகழின் புகழே. (அ : 354)

பொன்னின் மேரு - பொன்மயமான மேருமலே. இரவியும் பொன் னின் மேருவில் போய் மறைந்திட்டதே. (அ : 1070)

பொன்னின் மேனி பொடியுறுதல் - பொன் போன்ற உடலம் புழுதியிலே தோய்தல். பொன்னின் மேனி பொடியுறப் போக் கிஞன். (அ : 1082)

பொன்னின் வான் - தேவலோகம். பொன்னின் வானன்ன போர்க் களம். (யுத் : 3167)

பொன்னின் வான் அன்ன போர்க்களம் - பொன்னிற முள்ள செவ் வானம் போன்ற போர்க்களம். (யுத் : 3167)

பொன்னினன்னகர் - பொன்னின் நன்னகர் பார்க்க.

பொன்னிஞடு - பொன்மயமான தேவலோகம். பொன்னிஞடு வந் திழிந்தெனப் புட்பகந்தாழ. (யுத் : 4105)

பொன்னிஞெளி - பொன்னின்கண் ஒளி. பொன்னிஞெளி பூவின் வெறி சாந்துபொதி சிதம். (பா : 1229)

பொன்னுடைச் சிமயம் - மேருமலே. பொன்னுடைச் சிமயத்துச்சிக் குச்சியும் புதையப்போஞன். (யுத் : 3167)

பொன்னுடை வரிவில்லாற்றல் - பொற் கட்டினேயுடைய வில்லின் வன்மை. (யுத் : 3320)

பொன்னுந்திய நதி - பொன்னேக் கொழிக்கின்ற நதி. (அ : 621) [பா : பே[

பொன்னுயிர்க்குந்தார் - பொன் போன்ற மகரந்தப் பொடியைச் சிந்தும் மாலை. பொன்னுயிர்க்குந் தாரோய். (அ : 1127)

பொன்னுயிர்த்த பூமடந்தை - பொன்னைத் தோற்றுவிக்கின்ற செந் தாமரைச் செல்வியாகிய திருமகள். பொன்னுயிர்த்த பூமடந்தை யும் புவியெனுந் திருவும். (அ : 38)

பொன்னுருவப் பொருகழல் - பொன் மயமான அழகிய போர்க்குரிய வீரக்கழல். பொன் னுருவப் பொருகழலீர். (ஆ : 357)

பொன்னுருளுரைத்தல் - பொன்னாலியன்ற சக்கரங்கள் பொன்னை உரைத்துக் கொண்டு செல்லுதல். உருண்ட வாய் தொறும் பொன்னுருள் உரைத் துரைத் தோடி. (பா : 905)

பொன்னுலகம் - அமராவதி. பொன்னுலகம் மீளப் புகாரோ புரந்தரனார். (யுத் : 1660)

பொன்னூது மிருந்தை - பொன்னை வைத்து ஊதும் கரி. பொன் னூது மிருந்தையின் எழு தி. (அ : 697)

பொன்னெடுங்கிரி - பொன் மயமான நீண்ட மலை. (கி : 848)

பொன்னெடுங் குன்றம் - 1. நெடிய பொன்மலை. பொன்னெடுங் குன்ற மன்னான். (பா : 414) (ஆ : 899)
2. மந்தரம். பொன்னெடுங் குன்றஞ் சூழ்ந்த நெடு பொறி வரி யரவம் போல. (யுத் : 1897)

பொன்னெடு நாடு - நெடிய பொன்னுலகம். (சுவர்க்கம்) பொன் னெடு நாட்டை யெல்லாம் புதுக்குடி யேற்றிற்றன்றே. (யுத் : 3121) பொன்னெடு நாட்டிலுள்ளார். யுத் : 4219)

பொன்னெடு வரை - மேருமலை. பொன்னெடு வரையிற் றெத்திய கோளும் நாளு மொத்து. (சு : 414)

பொன்னே சூழும் பூ - மகரந்தங்கள் சூழ்ந்த பூக்கள். பொன்னே சூழும் பூவின் ஒதுங்கிப் பொலிகின்றாள். (பா : 593)

பொன்னைக் கொல்லுமொளி - பொன்னை யழிக்கும் ஒளி. பொன் னைக் கொல்லு மொளிப் புகழ் பொய்யாமன். (யுத் : 226)

பொன்னைத் தீயிடைப்பெய்வது - பொன்னை நெருப்பிலிட்டுக் காய்ச் சுதல். பொன்னைத் தியிடைப் பெய்வது அப் பொன்னுடைத் தூய்மை தன்னைக் காட்டுதற்கென்பது மனக் கொளல் தகுதி. (யுத் : 4043)

பொன்னையுற்ற பொலன் கழல் - பொன்னாலியன்ற அழகிய வீரக் கழல். பொன்னையுற்ற பொலன் கழலோய். (அ : 513)

பொன்னையே பொருவுவாய் - (ஆலோசனை கூறுவதில்) வியாழனை ஒப்பவனே. பொன்னையே பொருவுவாய் போது. (கி : 94)

பொன்னொப்பார் - வியாழன். வெள்ளியும் பொன்னுமொப்பார் விதி முறை மெய்யிற் கொண்ட ஒள்ளிய நாளில். (யுத் : 4317)

பொன்னெழுரு பூ - தாமரை. (பொன் - தாது) பொன்னெழுகு பூவிலுறை பூவை. (ஆ : 256)

பொன் னொளிர் நெடு முடி - பொன் மயமாகி விளங்குகின்ற நீண்ட கிரீடம். பொன்னொளிர் நெடு முடிப் புரந்தரன். (ஆ:105)

பொன்னோக்கியர் - பொருளிடத்தே கருத்துள்ள விலைமாதர். பொன் னோக்கியர் தம் புல னோக்கிய புன்கணோர். (ஆ : 931)

பொனின் வெறுக்கை - பொன்னின் வெறுக்கை. பொன்னாகிய செல்வம். வேழப்பந்திகள் வயப்பரி பசும் பொனின் வெறுக்கை மைந்த வறியோர் கொள வழங்கென நிரைப்பார். (அ : 278)

போ

போக்கரிது - 1: போக்கு (போதல்) அரிது. போக முடியாது. பைம் பொன் பூந்தளிர் உறைப்ப மாழ்கிப் போக்கரி தென்ன நிற்பார். (பா : 873)

2 உயிர் பிழைத்துப் போகும் விதம் மூக்கரிந்து நுங்குலத்தை முதலரிந்தீர் இனி யுமக்குப் போக்கரிது. (ஆ : 349)

போக்கரும் பெருமைய - போக்க முடியாத பெருமையை யுடையன (வாளி). கடிதிற்போன போக்கரும் பெருமைய புணரியுட் புக்க. (யுத் : 2493)

போக்கரும் பொங்கு கங்குல் - போக்க முடியாது மேன் மேல் வளர் கின்ற இரவு. பொய்யுறு பிறவி போலப் போக்கரும் பொங்கு கங்குல். (ஆ : 1040)

போக்கற அடைத்தல் - சலிக்க ஒட்டாது. அசையவொட்டாது. புணரியைப் போக்கற அடைத்தவாறும். (யுத் : 736)

போக்கறவு - பகைவர் கையிற் பட்டுச் சிதைதல். எம்பியர்கள் மாளவும் இந் நொய்திலங்கை போக்கறவும். (யுத் : 1664)

போக்கி - 1. தவிர்த்து. என்னுனக்குதவி செய்வது .... பொன்னுடை வரி விலாற்றல் புறன் நின்று காண்டல் போக்கி. (யுத் : 3320)

2. அல்லாமல். பாக்கியம் மெனக்குளதென நினைவுறும் பான்மை போக்கி நிற்கிது பொருளென உணர்கிலென். (பா : 475)

போக்கிய - 1. மிகுதியாகப் பரப்பப்பட்ட. போது போக்கிய சேக்கை. (பா : 1052)

2. போகும்படி. அரக்கராவி போக்கிய போகவென்று கருதவே உலகமெல்லாம் சரங்களாய்க் காட்டுமன்றே. (யுத் : 1239)

போக்கிய போக - உயிர் போகும்படி (நீங்கும்படி) செல்க. (யுத் : 1239)

போக்கிலா(த) - 1. எல்லையற்ற. என் கைவாளி பொறிபடச் சுடர்கள் தீயப் போவன போக்கிலாத. (யுத் : 777)

2. போக்க முடியாத. போக்கிலா இருளுடை வைகலேம். (ஆ : 133)

போக்கினி யரிது - இனிமேல் வேறுவழி இல்லை. அமுதமுண்ணினும் பொன்றுவென் போக்கினி யரிது போன்மென. (ஆ : 252)

போக்கு - 1. வேறு வழி. போக்கினியரிது. (ஆ : 252)

2. தப்பிப்போதல். இனி உமக்குப் போக்கரிது. (ஆ : 349)

3. நடை. அன்னப்போக்கு. (கி : 641)

4. சலிப்பு. புணரியைப் போக்கற அடைத்தவாறும். (யுத்:736)

5. போகை நாவாய்ப் போக்கின் ஒன்றொன்று தாக்க (அ:1047) (பா : 873)

6. கடத்தல். புணையிலாதவர்க்கு வேலைபோக்கரிது. (ஆ:1192)

7. நல்வழி. பொன்றிணையாகவே கோடி போக்கிலாய். (யுத் : 1305)

8. சலனம். அசைதல். (உ.வி) (யுத்:736) புணரியைப் போக்கற அடைத்தவாறும். (யுத் : 736)

9. போ(க்)குதற்குரிய இடம். செல்லுதற்குரிய இடம். புலவர் போக்கிலார் வேர்த்துயிர் பதைத்தனர். (யுத் : 2288) புகுந்த மாமகரக்குலம் போக்கற முகந்த வாயிற் புனலினை முற்றுற. (யுத் : 3831)

10. புகலிடம். போக்கிலாய். (யுத் : 1305)

11 செல்லுதல். அதனைத் தீர்ப்பான் போக்கு எனக்கு அடுத்த. (கி : 1008) (யுத் : 3317)

12. ஒடுக்கம். வரவு போக்கது. (யுத் : 199)

போக்குதல் - 1. கொடுப்பித்தல். கலன்களும் தூதும் போக்கினுன். (பா : 821)

2. அனுப்புதல். பூண்ட பேரன்பினுரைப் போக்குவதரிது. (அ : 549)

3. கழற்றிவிடுதல். பொன்னணி மணியணி மெய்யிற் போக்கினர். (அ : 487)

4. வீசியெறிதல். குன்ருெடு மரங்களும்... கவிகள் போக்கின. (யுத் : 2956)

5. விலக்குதல். புயலைப் பற்றுமப் பொங்கரி போக்கி ஓர் முயலைப் பற்றுவது என்ன முயற்சியோ. (கி : 323)

6. மிகுதியாகப் பரப்புதல். போது போக்கிய சேக்கை. (பா : 1052)

7. விட்டுச் செல்லுதல். தம் புதல்வர்ப் போக்கிலார் தொங்குடல் தோள்மிசை இருந்து சோர்வுற. (யுத் : 2940)

8. தொடுத்தல். வலம்படப் போக்கி. (யுத் : 1002)

9. போகும்படி செய்தல். நீக்குதல். போக்குவென், (யுத்:1502)

போக்குமின் - அனுப்புமின். (அண்) போகுமின். எதுகைபற்றி விகாரம். (வை.மு) மற்றினி நலியாவண்ணம் போக்குமின் விரைவின் என்ருன். (யுத் : 729)

போக்கூடு - போதல். மிக்கிரண்டு திக்கூடு போக்கூடு தவிர்த்து. (யுத் : 1580)

போக்கூடு தவிர்த்து - போதலை விலக்கி. (கலா) போதல் தவிர்த்து. (வை.மு) போகின்றதை இடையிலே நிறுத்தி. (அண்) (யுத்:1580)

போகக்களிப்பு - போகங்களை அனுபவிப்பதனுலாகிய மகிழ்ச்சி. நாளும் கரை தெரிவிலாத போகக் களிப்பினுள் இருந்தான் மன்னே. (யுத் : 4320)

போகங்கனி - போகமாகிய பழம். (வெ.ப) (வை.மு) தசரத சக்கரவர்த்தி. (அண்) இன்பமெனும் கனி போகத்துக்குரிய கனி உவமை. போகம். பேரின்பம். (கலா) போகங் கனி யொன்று பழுத்தது போலு மன்றே. (பா : 167)

போகட - பொகட பார்க்க.

போகத்தின் குறி தொடர்ந்தார் புகலிடங்கள் - போகஸ்த்தானத்தைப் பெறுதற்கு ஏற்றனவாகக் குறித்த யாகங்களைச் செய்தவர் புகும் சுவர்க்க லோகத்தினிடங்கள். போகத்தின் குறி தொடர்ந்தார் புகலிடங்கள் பிற்படப் போய். (யுத் : 2691)

போகந்திருந்திய வானநாடு - போகத்தால் நன்கு விளக்கமுற்ற தேவருலகம். போகந் திருந்திய வான நாடு சேர வந்திறுத்த தன்றே. (யுத் : 4120)

போகநோக்குதல் - போகச் செய்தல். போயின கேடகம் போக நோக்கினன். (யுத் : 1522)

போகப்போக - போய்க்கொண்டிருக்க. பொதுவுற நோக்கலுற்றான் ஒரு நெறி போகப் போக விதிமுறை காண்பன் என்னும் வேட்கையான். (யுத் : 3213)

போக பூமி - சுவர்க்கம். போக பூமி பொருந்திட வல்ல நின் வேகம். (கி : 749) (கி : 108)
2. போக பூமியான அமராவதி. (அண்) இன்பத்தையனுபவிக்கும் பதவி. (வை. மு) போக பூமியிற் பொன்னகர் அன்னதோர் மாக மாடம். (பா : 646)

போக பௌவம் - இவ்வுலக இன்பமாகிய கடல். தோய்ந்தே கடந்தான் திருவின் தொடர் போக பௌவம். (பா : 172)

போகம் - 1. இன்பம் போகம் உறைவிடம். (பா : 97) போகங் கனி. (பா : 167) திருவின் தொடர் போக பௌவம். (பா : 172)
2. நுகரப்படும் பொருள். பெண், ஆடை, அணிகலன், போசனம், தாம்பூலம், நறுமணப் பொருள், பாட்டு, பூம்படுக்கை என்னும் அஷ்டபோகங்களையும் குறிக்கும் என்பர். (உ. வி) (பா : 167)
3. உலக இன்ப அனுபவம், சுகானுபவம். திருவின் தொடர் போக பௌவம். (பா : 172) வலிக்கடன் வானுளோரைக் கொண்டு நீ வகுத்த போகம். (யுத் : 3589)
4. உண்கை. உயிரின் போகம் வெறுத்தனன் நமனும். (யுத் : 1110)
5. சதுரங்க சேனையை ஒன்றுக்குப் பின் ஒன்றாக நிறுத்தும் வியூக வகை. போகம் எத்தனை அத்தனை புரவியின் ஈட்டம். (யுத் : 3270)

போகலம் - போவோம் அல்லோம். இன்று நாம் பதிபோகலம். (யுத் : 4122) [பா : பே]

போகமாமலர் - இனிய சிறந்த தாமரை மலர். மேகநாதன் புகுந் திலங்கை மேய நாட் போகமா மலருறை புனிதன் மீட்டமை. (பா : 189) [பா ; பே]

போகா - அழியாத. அழிவு நேராமல் நிலைத்தற்குக் காரணமான. போகாவிதி (கி : 635)

போகாய் - ஓடிப்போ. (சு : 177)

போகிய போக - உயிர் போகும்படி செல்வனவாக. (யுத் : 1239)

போகில - போகவில்லை. போகில மீளகில்லா. (அ : 253)

போகிலானை - மாறுபடாதவனை. அந்நிலை போகிலானை வாளால் இறுப்பினும் ஆவது இரப்பது (அ : 209)

போகிலேன் - பெயரேன். வெல்வென் வென்றலது போகிலேன். (யுத் : 2029)

போகு - போ. போவாய். ஒண்டார் முகிலை வனம் போகு என்று ஒருப்படுத்தாள். (அ : 388)

போகுதல் - 1. அடைதல். அங்குப் போகேன். (யுத் : 1373)
2. செல்லுதல். வஞ்சன் வல்லையிற் போகுதல் கண்டு. (ஆ:951)
3. மாறுபடுதல். ஒறுப்பினும் அந்நிலை போகிலானை. (அ : 209)

போகை - செல்லுதல். போகை நன்று இவன். (சு . 681)

போச்சு - போய்விட்டது. போச்சித்தனை போலும் நின்னுற் றலெனப் புகன்றான். (ஆ : 938)

போடு - விட்டிடு. வீசு. போடகலப் புல்லொழுக்கை. (ஆ : 359)

போத்தருதல் - விடுத்தல். போத்தரும் தாதை. (அ : 1196)

போத்தரும் - செல்வான். (வை.மு) வந்திருக்கின்ற. (கலா) மனக் குற்றமில்லாத. (அண்) (பொத்து-மனக்குற்றம்) இராமன் இவ் வழிப் போத்தரும் தாதை சொற்புரக்கும். (அ : 1196)

போத்து - 1. ஆண்விலங்கு. கடா; குட்டி. யாளிப் போத்து. (யுத் : 642)

2. பொத்து என்பதன் விகாரம். மனக்குற்றம். போத்தருந் தாதை. (அ : 1196)

போத - 1. வர. போதவுளதெம் முழையொர் புண்ணியமதன்றே. (ஆ : 262)

2. நன்ருக. முற்றிலும். போதத்தன் செவித்தொளை இரு கைகளாற் பொத்தி. (யுத் : 152)

3. மிகவும். காளிமைப் பிழம்பு போதப் பொழிந்தது போன்ற தன்றே. (யத் : 2169) போதப் பிழைத்தது. (யுத் : 2040)

போதகக்கன்று - யானைக்குட்டி. போதகத்தின் மழக்கன்றும் புலிப் பறழும் உறங்கிடனும் பொருந்திற்றம்மா. (கி : 771)

போதகம் - இளம் பருவத்து யானை, பத்து வருஷத்து யானைக் கன்று. போதகமனையவன் பொலிவு நோக்கி. (பா : 760) (கி : 771)

போதத்த வீரன் - ஞானத்தையுடைய வீரனுகிய பாதன். (யுத் : 4132)

போதத்தது - காலத்துக் கூறியது. வனத்திடைச் சென்ற போதத்த தவ்வுரை. (யுத் : 4132)

போதத்தளவு - உணர்வு உண்டாகும் வரையில். திண்காலுக்க மென்கால் போதத்தளவே தவழ்வித்து இன்சொற்புகலா நின்ருன். (அ : 334)

போதத்து - போது. பொழுது. சென்ற போதத்தவ்வுரை. (யுத் : 4132) [பா : பே] அபயமென்ற போதத்தே அபயதானம் ஈதலே கடப்பாடு என்பது. (யுத் : 426)

போதம் - 1. அறிவு. அறிதல். போதங்கொள் நெடுந் தனிப் பொருவில் கூம்பொடு. (அ : 860)

2. ஞானம். வீடு பயக்கும் ஞானம். மாதவர்க்கு வழிபாடி ழைத்து அரும் போதம் முற்றி. (சு : 319) (யுத் : 160) (யுத் : 2762)

3. கற்றறிந்த ஞானம். போதமும் பொருந்து கேள்விப் புரையறு பயனும். (சு : 1120)

4. ஞானசொருபியான பரம்பொருள். (வை. மு) ஞானத்தெளிவு. வேதத்தின் சிரத்தின் போத மொத்தனன் இராமன். (யுத் : 1183)

5. பிரஞ்ஞை. போதத்தளவே தவழ்வித்து (அ : 334) போதம் வந்துறுதலும். (சு : 1029) (யுத் : 2856)
6. உணர்வு. போதம் முதல் வாய் மொழியே புகல்வோன். (யுத் : 1722) (சு : 1029)
7. ஆன்மபோதம். தத்துவ அறிவு. போதம் முற்றிய நீதி வித்தகன். (யுத் : 4103)

போதம் முதல் - மெய்யுணர்வுப் பொருளாகிய முதல்வன். (யுத்:1722)

போதர் - புறப்பட்டு வருக. புந்தியின் பெருமையாய் போதர் என்றுரை செய்தான். (கி : 93)

போதரிக்கண் - செந்தாமரை மலர் போன்ற செவ்வரி படர்ந்த கண் போதரிக்கண் பொலன் குழைப் பூண்முலைச் சீதை. (பா:117) போதரிக் கண்ணினள். (சு : 479)

போதல் - 1. நீங்குதல். பூவெலாங் குடி போனதும் போன்றதே. (பா : 1044) போமின். (யுத் : 960) போகலென். (யுத் : 2029)
2. மாறுதல். அந்நிலை போகிலாளை. (அ : 209)
3. நீளல். முதுகொடும் போம் பழி. (ஆ : 513)
4. மிகுதல். பரம ஞானம் போய்த் தெட்டவர். (அ : 20)
5. கைவருதல். (உ.வி) (அ : 20)
6. அத்தமித்தல். தாமரைப் பூநனி முகிழ்த்தன அலரி போன பின். (அ : 776)
7. விஷயம் இவ்வாருதல். எரிந்தன கரிந்தன போக. (சு:1013)
8. செல்லுதல். சீதை போகிலள். (யுத் : 1305) போதி- (யுத் : 1383) எவையும் போமே பொருள் என்ற புராதனர். (யுத் : 239) போதன் மேயினன். (யுத்:1311) போந்தகைக் குரி யையன்ருல் போகலை போகல் என்னு. (யுத் : 1885) போகலை. (யுத் : 2102) போதிநூது. (பா : 1092) போயதால். (சு : 366) வல்லை போம். (யுத் : 2019) போகுவது... போதல் செய்யும். (யுத் : 1384) போதல் திண்ணம். (யுத் : 1384) [பா:பே]
9. அழிந் தொழிதல், அழிதல் (உ.வி) (யுத் : 239) (சு : 366) போகாவிதி. (கி : 635)
10. தெரிதல். (உ.வி.) (யுத் : 239)
11. ஒலியடங்குதல். முரசெலாம் போன. (1199)

12. கடந்திருத்தல். காமத்துப் பகுத்த பத்தி ஆயிரமல்ல போன. (யுத் : 1595)
13. கழிதல். மறந்தன பெரிய போன (யுத் : 1596)
14. வருதல். போந்தவர் போந்திலம். (அ : 135) என்னெடு போதுதியால். (யுத் : 1596) போதுதி. (அ : 266) போத. (ஆ : 264)
15. திரும்பச் செல்லுதல். மீளல். மறித்தும் போகில. (சு : 152) மறித்தும் போகல. (சு : 152) [பா:பே]
16. நிறைவேற்றுதல். எவையும் போமே பொருள் என்ற புராதனர். (யுத் : 739)

போதல் செய்தல் – மீண்டு செல்லுதல். போதல் செய்குநரும். (யுத் : 670)

போதல் செய்யும் - போயே தீரும். போகுவது அயலே நின்று போற்றினும் போதல் செய்யும். (யுத் : 1384)

போதல்மேயினுன் - போக ஆரம்பித்தான். போதலைப் பொருந்தினுன். பொருக வெம்போரெனப் போதல் மேயினுன். (யுத் : 1311) (அ : 480

போதவன் - உள்ளக் கமலத்தில் இருப்பவன். முத்தி அறிவினை யளிக்கும் ஐயன் போதவன் இராமகாதை· (பாயி : 5)

போதா - பெருநாரை. போதா அன்னமுள பொன்னிவளோடன் பின் விளையாட. (ஆ : 175)

போதாநெறி – கடத்தற்கரிய வழி. விதியார் விளைவாற் போதா நெறி எம்மொடு போதுறு நாள். (யுத் : 2641)

போதி – 1 செல்லுதி. நீ போதி. (பா : 1395) போதி என்னெதிர் நின்று. (அ : 164)
2. போய்விடு. அன்றெனில் தக்கதோர் நெறி போதியால் என்றனன். (யுத் : 3988)

போதிகை - தூணின்மேல் வைக்கப்படும் கட்டை. மரகதத் துலாம் செயிரறப் போதிகை கிடத்தி. (பா : 121)

போதியாதது - தெரிந்துகொள்ள முடியாதது; அறிவினுக்கு எட்டாமல் சொல்லித்தரத் தக்கது. என்னுணர்வினுக்கொன்றும் போதியாததுமில்லை. (யுத் : 157)

போதியாதி – செல்வாயாக. போதியாதி என்ருன். (கி : 572)

போதியாது – போதிக்காமல். போதியாது அளவிலா உணர்விஞர். (கி : 83)

போதிர் – போய்ச் சேருங்கள். போதிர் மாதிமவளே உந்தி இனிது. (ஆ : 22) (கி : 758)

போதிஞள் - தாமரையிலிருப்பவளாகிய திருமகள். பொன்றிணி போதிஞளும் பூமியும் புலம்பிறைய. (அ : 296)

போதினிஞற்றம் – மலர்களின் நறுமணம். பொன்னின் சோதி போதினிஞற்றம். (பா : 586)

போதினே வெறுத்து அரசர் பொன்மனே புகுந்தாள்–தனது இருக்கையாகிய செந்தாமரை மலரை வெறுத்துச் (சனக) மன்னனது அழகிய பொன்ஞலியன்ற அரண்மனேயிற் புகுந்த சீதை. (பா : 1236)

போது - 1. உரிய பொழுது. (ஆகு) சூரியன். போதுஞ் சென்றது குட பால். (அ : 708) போதுறு கிழவன். (யுத் : 328) மெய்ப்போதின் நங்கை. (யுத் : 987)

2. தாமரை. போதவன் இராம காதை. (பாயி : 5)

3. மலரும் பருவத்தையுடைய அரும்பு. போதவிழ் பொய்கை. (பா : 31)

4. செல்க. போது நீ அன்னே. (பா : 568)

5. மலர். நின்ற போது அலர்வதுண்டோ. (பா : 581)

6. வேளே. குறிந்து சாய்ந்த ஆம்பலும் என்றபோது. (அ:581. பாவியாதபோது. (ஆ : 651)

7. போவாய்.

போதுக - 1. செல்லுக. மாநிலத்துறுகண் நீக்கிப் போதுக நதியாய் என்ஞ. (பா : 432)

2. வருக. போதுகென்ன உட்புக்கவர். (அ : 794)

போதுகுதல் - மலர் சிந்துதல். போதுகுங் கடிபொழில் அயோத்தி. (ஆ : 1204)

போதுங்கொல் - போவோமோ. பறந்துபோதுங்கொல் என்று பதைக்கின்ருர் (அ : 807)

போதுதல் - 1. நன்ருக ஆதல். போதத்தன் செவி பொத்தி. (யுத் : 152)
2. வருதல். போதுவாய் நீயே. (யுத் : 1369)

போதுதி - வருக. பொற்றட மகுடஞ்சூடப் போதுதி விரைவின் என்ருன். (அ : 266) (ஆ : 1200)

போது பிற்படல் - காலத்தை அனுசரித்தல். (வை.மு) காலங் காரணமாகப் பிற்படுதல். (அண்) போது பிற்பட லுண்டு இது ஓர் பொருளன்று. (கி : 512)

போது போக்குதல் - காலங்கழித்தல். புறன் அலர் அவனுறப் போது போக்கி. (சு : 502) [பா : பே]

போதுமோ - போதிய வலிமையுடைய தாகுமோ. (கி : 301)

போதுறு - புகுதற்குரிய. வருதற்குரிய. (யுத் : 1069)

போதுறு கிழவன் - தாமரையிலிருக்கின்ற பிரமன். போதுறு கிழவனைத் தவமுன் பூண்ட நாள். (யுத் : 328)

போதுறுதல் - வருதற்குரிய தாதல். சீற்றத்தாற் போதுறு பெருங் களம் புகுந்துளான். (யுத் : 1069)

போதோன் - பிரமன். போதோன் படைத்த திக்கெலாம். (யுத்:3286)

போந்தது - 1. வந்தது. (வந்துவிட்ட கூட்டம்) போந்ததே பெரி தென்பாரும் புகுவதே பெரி தென்பாரும். (அ : 254)
2. விளங்கிற்று. கடிது சேணிடைப் போக்கிய பொருளெனக் கின்று போந்ததால். (அ : 156)

போந்த வழி - பிறந்த குலம். புக்க வழிக்கும் போந்த வழிக்கும். (சு : 485)

போந்து - வந்து. பூட்டிய செல்வம் ஆங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து. (கி : 318)

போம் - போகும். என் நடுவண் போமெனுந்துணை போமோ. (கி : 301)

போமின் போமின் - விரைவில் ஓடிப்போய்விடுங்கள். வேமின் போல்வன விழுவதன் முன்னம் போமின் போமின் புறத்து. (யுத் : 960)

போய் - 1. நிரம்பி. மும்மடங்காற்றல் பொங்க விரவிப்போய் கதிரோன் மௌமி இறுதிமேல் என்னலானுன். (சு : 956)
2. மிக்கு. கைவந்து. பரமஞானம் போய்த் தெட்டவர். (அ : 20)

போய்த்திலர் - புக்கவுடனேயே. போய்த்திலர் பொன்றினர் போனார். (சு : 1241)

போய்த்து - போயிற்று என்பதன் போலி. போய்த்தென். (ஆ : 354)

போய்ப்போய் - போய்ப்போய். உலகினுக் குலகு போய்ப்போய் ஒன்றினென் றெதுங்கலுற்ற தொலைவருந் தானை. (யுத் : 3210)

போய் மிகுதல் - எல்லை கடந்து மிகுதல். தூயவன் உவகை போய் மிக. (அ : 149)

போயது - போயிற்று. சென்றது (சு : 366)

போயபின்றை - சென்றபின். விண்ணவர் போய பின்றை. (பா : 419)

போயபொருள் - நிகழ்ந்து போன செய்தி. போய பொருள் மனத் தடைப் பாயல்லை. (கி : 639)

போயிட - போவதற்கு. காசினியதனின் மீது போயிடத் துணிந் தோமென்றார். (பா 207)

போயிற்றீர் - போய் இற்றீர். நீங்கி ஒழியப்பெற்றீர். போயிற்றீர் நும் புலம் வென்று போற்றிய .... மாதவம். (சு : 1135)

போயின நல்லுயிர் நல்குவது - சஞ்சீவகரணி. போயின நல்லுயிர் நல்குவ தொன்று நன்னிறந் தொல்லைய தாக்குவதொன்று. (யுத் : 2745)

போயின போயினதிசை - ஓடிச்சென்ற திக்குகளிலெல்லாம். கவிக ளோடின நிருதர் போயின போயின திசை நிறையப் புரள்பவர் முடிவிலர். (யுத் : 3095)

போயினர் - சென்றனர். பூ மழைபொழிந்து விண்ணோர் போயி னரே. (பா : 418)

போர் : 1. வைக்கோற் போர். போரொடு நிகர்வன பொலன் வரை. (பா : 77)

2. செறிவு போர்வனத்திருந்த வீரர். (ஆ : 424)
3. தாக்குகை. கலங்குசூறைவன் போர்நெடுங்கால். (ஆ : 559)
4. போர் செய்தல். போர்ச்சினம். (சு : 813) போரியற்கை இராவணன். (சு.262) போரது புரிதிரோ. (யுத் : 350) போரணி பொலங்கொல் வேலாய். (ஆ : 274)

போர் அரிந்தமன் - போரில் பகைவரை அடக்க வல்ல இராமபிரான். (யுத் : 330)

போர்க்கலே - போர்த் தொழில் நுட்பங்கள் புரவியிற் பொருவில் செண்டாடிப் போர்க்கலே தெரிதலிற் பொழுதுபோம் சிலர்க்கு. (பா : 160)

போர்க்களம் - யுத்தகளம். (யுத் : 1602)

போர்க்குழாம் - போர்க் கூட்டம். (அண்) (சு : 801)

போர்க்கோலம் - போர் செய்தற்கேற்ற ஒப்பனே. நெடிது நாள் வளர்த்துப் பின்னேப் போர்க்கோலம் செய்துவிட்டாற்கு உயிர்கொடாது. (யுத் : 1373)

போர் கடத்தல் - போரில் வெல்லுதல். அமரர் வேந்தனேப் போர் கடந்தவன். (யுத் : 1980)

போர் கொள்ளல் - போர்செய்தலே மேற்கொள்ளல். போர்கொண்டனனே. (ஆ : 1101)

போர்ச் சினம் - போர் செய்யவேண்டும் என்பதால் மூண்ட பெருஞ் சினம். இலங்கை வேந்தன் போர்ச் சினம் போவ தொப்பான். (சு : 911)

போர்த்தண்டு - போருக்குரிய தண்டாயுதம். நமனுர் போர்த்தண்டினும் வலிதாயது கொண்டான். (யுத் : 1833)

போர்த்தல் - 1. மூடுதல். சிலிர்த்து மெய்ம்மயிர் போர்த்தனர். (அ : 124) போர்த்தலும். (யுத் : 1507)
2. மூடப்படுதல். போர்த்துப் பொய்த்தனன் என்று பொலன்கொள் தேர் பேர்த்துச் சாரதி போயினன். (யுத் : 3839)
3. தோலால் மூடுதல். போர்த்த சங்கப் படகம் புடைத்திட. (யுத் : 1061)
4. ஊட்டுதல். பஞ்சி போர்த்த மெல்லடி.

போர்த்துப்பு – போர்புரியும் வலி. போர்த்துப்பு ஒய்ந்தனன் என்ற. (யுத் : 3839) [பா : பே]

போர்த்தூளி – போரில் எழும் புழுதி. போர்த்தூளி துடைப்பன்நாளை அவருடற் பொறையினின்றுங் கோத்தூறுங் குருதி தன்னால். (யுத் : 899)

போர்த்தொழில் மாற்றல் - போர்புரிதலை விலக்குதல். போர்த் தொழில் மாற்றி நின்றார். (யுத் : 2139) போர்த்தொழிற் சிரமம் போக்கி. (யுத் : 3084)

போர்த்தொழில் வேட்கை - போர்த் தொழிலில் விருப்பம். அரசரும் முரசமார்ப்பப் போர்த் தொழில் வேட்கை பூண்டு பொங்கினர். (யுத் : 2253)

போர்த் தொழிற் குமரன் - போர்த் தொழில் வல்ல குமரனான இராமன். போர்த்தொழிற் குமரனுந் தொழுது போந்த பின் (பா : 461)

போர்தரல் போர் செய்தல். எதிரே வந்து போர் தரப்புகறி (யுத் : 931)

போர் தொலைத்தல் - தோற்றோடிப் போகும்படி செய்தல். இந்திரனைப் பொருதவனைப் போர் தொலைத்து. (ஆ : 327)

போர்ப்படை - யுத்தத்துக்குச் சித்தமான சேனை. போர்ப்படை இங்கு வந்திருக்கும். (சு : 679)

போர்ப்பணை - போர்முரசு. போர்க்குரிய இசைக்கருவிகள். சோனை மாமழை முகிலெனப் போர்ப்பணை துவைத்த. (சு : 868) (யுத் : 2396)

போர்ப்பரம் - போருக்காகத் தாங்கிய பாரம். (யுத் : 3542)

போர்ப்பு - கவிந்து கொள்ளுதல். தூளியின்படலை போர்ப் படங்கின உலகெலாம். (யுத் : 1199) .

போர்ப்புறங்கொடுத்தோர் - போரிலே முதுகாட்டி ஓடியவர். போர்ப்புறங் கொடுத்தோர்ப் போன்ற ஆண்டொழிலோரிற் பெற்ற வெற்றியும் அவத்தம். (யுத் : 3876)

போர்ப் பெருங்கோலம் - பெரிய போர்க் கோலம். (அ : 1115)

போர் மகள் - விஜயலட்சுமி. போர் மகளைக் கலைமகளைப் புகழ் மகளைத் தழுவிய கை. (யுத் : 3893)

போர்மத்தன் - ரணமத்தன். போர் மத்தனென்பான் வந்தான். (யுத் : 1891)

போர் முறுகுதல் - போர் முற்றுதல். குறுகின கவசரும் மின் போல் குரைகழலுரகரும் வன் போர் முறுகின பொழுதி னுடைந்தார். (சு : 766)

போர்மழு - போருக் குரிய மழுவாயுதம். பூண்ட போர்மழுவுடைய நெடும்புகழ் குறுக. (அ : 61)

போர்வலயம் - போர்க்குரிய வாகுவலயங்கள். அடல்கடந்த தோள் அலங்குபோர் வலயங்கள் இலங்க. (யுத் : 3615)

போர்வலி - போர் செய்யும் வலிமை. கிடந்த போர்வலியார் மாடே கெடாத வானவர். (யுத் : 1220)

போர்வாலி - போர்தொழில் வன்மையினைக் கொண்ட வாலி. ஆண்டு போர் வாலி யாற்றல் மாற்றியது அம்பொன்ருனல் வேண்டுமோ துணைவர். (கி : 623)

போர்வில் - போர் செய்தற்குரிய வில். (யுத் : 2229)

போர - போக. கூளியோடும் ஞாளியும் போர. (யுத் : 3351)

போரணி - போர்க் கோலம். புணைமணித் தாரினனும் போரணி யணிந்து போனன். (சு : 935)

போரரங்கு - போரின் நர்த்தனசாலை. மேதினி குறைத்தலை நடப் போர் அரங்குபட. (யுத் : 72)

போரழியான் - போரில் அழியமாட்டான். (யுத் : 3109)

போராசைப் படல் - போரிலே விருப்பங் கொள்ளல். போராசைப் பட்டெழுந்த குலமுற்றும் பொன்றவுந் தான் பொங்கிநின்ற பேராசை பெயர்ந்ததோ. (யுத் : 3888)

போராழி - போராற்றலுடைய சக்கரப்படை. அறத்தகை யரசன் திண் போராழியு மனையனனன். (சு : 30)

போராள்வில்லி - போர்த் தொழிலை ஆளுகின்ற வில்வீரன். (யுத் : 2449)

போரிடைப் பட்டவர் - போரில் இறந்தவர்கள். ஒட்டிய பகைஞர் வந்துருத்த பேரிடைப் பட்டவரல்லரேல். (அ : 20)

போரியற்கை இராவணன் - போர்புரிவதே இயல்பாகவுடைய இராவணன். (அ : 262)

போரின்மத்தன் - போர்மத்தன் (யுத் : 506)

போரென்றெல்லொலி - ஒலிக்குறிப்பு. போரென்று பொருந்திய ஒலி. போரென் றெல்லொலி கைம்மிகப் போயினர். (அ : 528) [பா : பே]

போரென்ன வீங்கும் தோள் - போர் என்று கூறினமாத்திரத்தில் பூரிக்கும் தோள். போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலங் கொள் திண்டோள். (பா : 992)

போரேறிடுதல் - போர் மிகுதல். வன் போர் ஏறிட. (யுத் : 1693)

போரேறு இரணசிங்கம். (இராமன்) அறிவனுந்தன் புனைந்த சடை முடிதுளக்கிப் போரேற்றின் முகம் பார்த்தான். (பா : 774) (இலக்குவன்) (யுத் : 1732)

போரொலி - போர் ஆரவாரம். (யுத் : 2243)

போரொன்றெல் லொலி - ஒலிக்குறிப்பு. போரிலே விளையும் ஒல் லென்றும் ஒலி. போரொன்றுல் லொலி கைம்மிகப் போயினர். (அ : 528)

போல் - அசை. கைகேசி உள்ளூறுகாதல் இலள் போல் என்றுள்ள மிந்தார். (அ : 402) (அ : 572)

போல்வார் - போல் - ஒப்பில் போலி வானர வீரர் போல்வார். (யுத் : 2139)

போலாம் - 1. போல். ஒப்பில் - போலி. ஒருத்தன் மனையுற்றாள் பொன்னடி தொழத் தொழ மறுத்தல் புகழ் போலாம். (யுத் : 62) (சு : 761)

2. அசைநிலை. பழியென ஒழிதிபோலாம். (யுத் : 3054)

போலியர் - போன்றவர். எம் போலியர். (யுத் : 239)

போலியரல்லர் - போன்றவர் அல்லர். பொன்னின் வார் கழற் புரந்தரன் போலியரல்லர் சொன்மருமகப் பெற்றவர் அருத்துயர் துறந்தார். (அ : 68)

போலும் - 1. உரையசை. தேம்பின குவிந்த போலும் செங்கழு நீரும். (அ : 581) (கலா) (பா : 166) (ஆ : 1198)

2. ஒப்பில் போலி. இது போலும் உன்னுயிருண்பது புக்கு என்னு. (யுத் : 2099)

3. ஒக்கும். மேகமுங் கரிந்திடை விழ்ந்த போலுமே. (பா : 353) (பா : 351)

போலும் போலும் - போலும் போலும். தகுதியன்று என்பதைக் குறிக்கும். (வை.மு) அசைகள் இசை நிறையாய் வந்தன. (கலா) புலையனேன் இன்னும் ஆவிசுமக்கின்றேன் போலும் போலும். (யுத் : 3179)

போவது புரிதல் - போவதைச் செய்தல். போகுதல். அவர் முகம் இனிது நோக்கிப் போவது புரிதிர் என்னப் புகறலும். (யுத் : 2254) போவது புரிவல்யான். (ஆ : 831)

போவது புலமை - போவது அறிவுடைய செயல். போவது புலமை யென்னுப் பொருக்கென எழுந்து போனுர். (சு : 1257)

போவனே யாம் - செல்பவனே யாவான். உரைசால் குமரன் புணரான் நிலமே வனமே போவனே யாம் என்னு. (அ : 350)

போவா தொழியான் - போகாதிரான். போவா தொழியான் என்ருள் புதல்வன். (அ : 349)

போவுண்ட தென்னின் - பிழைத்துப் போக நேருமானுல். (கலா தப்பிப்போவது நேர்ந்தால். (வை.மு) தமியன் சேர்வான் போவுண்ட தென்னின் ஐய புணர்க்குமா மாயம். (யுத் : 2183)

போழ் - பிளக்கப்பட்டது. பிளவு (வை.மு) பனந்துண்டம். (அண் உடலைத்துண்டவன் போழ்களிற் புரட்டினர். (யுத் : 1996)

போழ்குறை கறி - பிளந்து நறுக்கப்பெற்ற கறி. இரும்பு போழ் குறை கறித்திரள் குப்பை. (பா : : 68)

போழ்தத்து - அளவிலே; பொழுது. என்ருன் என்ற போழ்தத்தே ஆவி போனுன். (அ : 590)

போழ்தத்தும் - பொழுதும். பிறங்கிருங்கடலிற் பெய்த போழ் தத்தும். (யுத் : 639)

போழ்தல் - 1 அழித்தல். நீக்குதல். நீர் போழ்ந்தனிர் எமதிடர் புணர்ப்பினுல் என்ருன். (பா : 229)

2. பிளத்தல். போழ்ந்தாய் நெஞ்சை என்றூர். (அ : 379) போழ்ந்தன குறை. (சு : 1296) போழ்கிற்கில (யுத் : 220) போழக்கிற்றில. (யுத் : 220) [பா : பே] போழுமின். (கி : 1043)
3. துணிக்கப்படுதல். சுற்று மெயிற்றிற் போழக்கிற்கில என்று புகன்றூர். (யுத் : 220)
4. ஊடுருவுதல். ஊசிபோழ்வதோர் வடு. (சு : 879)

போழ்தினில் - போது. இடருற்றிடு போழ்தினில் அச்செம்மாமயில் கோசலையுந்திகையா. (அ : 384)

போழ்ந்தன - போழ்ந்தன்ன. உடலைப் பிளந்தாற் போன்ற. போழ்ந் தன யான் செய்த குறை பொறுக்கென. (சு : 1296)

போழ்ந்தனிர் - அழித்துத் தீர்த்துவிட்டீர்கள். (பா : 225)

போழ்ந்தென - பிளந்தாற்போல. போழ்ந்தென அரக்கன் செய்த புன்றெழில் பொறையிற்றுமால். (யுத் : 3885)

போழ்படல் - பிளத்தல். கவச மெய்கள் போழ்படத் தாள்விழ. (ஆ : 449) விசும்பு போழ்பட. (யுத் : 1087)

போழ்வித்தல் - பிளந்து அழியுமாறு செய்தல். இருள் போழ்வித்தீர். (கி : 993) மார்பு அகலம் போழ்வித்தனன். (யுத் : 2337)

போற்றரும் புகழ் - போற்றுதற்கு அருமையான போர்ப் புகழ். கவிஞு ஞேர் அங்கத முரைப்பப் போற்றரும் புகழ் இழிந்த பேரொரு வனும் போன்றூன். (யுத் : 1211)

போற்றல் - 1. துதித்தல். ஐயனைப் போற்றலை இன்னன புகறற் பாலையோ. (கி : 261)
2. உபசரித்தல். போந்தவணிருப்பின் எம்மைப் போற்றவே பொழுது போமால். (கி : 429)
3. பாதுகாத்தல். நுங்குலத்துந்தையர் போலியற்கையும் சீல மும் போற்றலை. (கி : 326) கவுதாரிகள் போற்றுறு நெறியின் மாக்கள். (அ : 806)
4. பெரிதாகப் பாராட்டல். மனத்திற் கொள்ளுதல். போன அப்பொருள் போற்றலை புந்தியோய். (யுத் : 3955)

போற்றி - 1. வாழ்க. பள்ளப் புண்டரீகத்து வைகும் புராதனு போற்றி போற்றி. (யுத் : 604)

போற்றி செய்ப - துதிக்க. இமையவர் போற்றி செய்ய. (யுத் : 946)

போற்றி போற்றி - 1. வாழ்க வாழ்க. (யுத் : 604)
2. காப்பாயாக - வணக்கம். (யுத் : 604)

போற்றுதல் - 1. கொண்டாடுதல்.
2. வாழ்த்துதல். புலவர் போற்றும் மூவரில் ஒருவன். (சு : 749)
3. பாதுகாத்தல். அயலே நின்று போற்றினும் போதல் செய்யும். (யுத் : 1384)
4. ஆதரித்தல். சீதை தானே புணர்வதோர் வினையம் போற்றி. (யுத் : 1584)

போன்ம் - போலும். தலையின் மேலுமொரு சேதுவுந்தருவ போன்ம். (யுத் : 667) (ஆ : 252)

போன 1. கடந்துள்ளன. காமத்துப் பகுத்த பத்தி ஆயிரமல்ல போன ஐயிரண்டென்பர் பொய்யே. (யுத் : 1595)
2. கழிந்தன. மறந்தன பெரிய போன வரும் எனும் ஆசை தன்னால் இறந்திறந்து உய்கின்றேன் யான். (யுத் : 1596) [பா : பே]

போனகத்தொழில் - உண்கின்ற செயல். நீ அவர் இன்னுயிர்ப் போனகத் தொழில் முற்றுதிபோய். (யுத் : 1296)

போனகந் துறந்ததையல் - உணவினைத் துறந்த நோன்பினளாகிய பிராட்டி. (யுத் : 3962)

போனகம் - 1. உணவு. சிறந்த அறுசுவை உண்டி. வையப் போனகன். (அ : 119) (அ : 574) போனகந் துறந்த தையல். (யுத் : 3962)
2. உயர்ந்த உணவு. திவ்ய இனிய அன்னம். புதல்வன் காயுணப் போனகம் பற்றிய பொய்யின் மன்னவன். (அ : 574)

போன சுவடு - போன அடையாளம். போன சுவடுண்டு. (யுத் : 2847)

போன நாடு - வெகு சேய்மையிலுள்ள மேலுலகம். ஈசனல்லாற் போன நாட்டிடை போகவல்லனே. (யுத் : 2692)

போன போன திக்கு - சென்ற சென்ற திசை. போன போன திக்கறிவரும் இயல்பினர் போனார். (சு : 1221)

போன போன திசையிடம் - ஓடிப்போன ஓடிப்போன திக்குகளில். வான மானமும் வானவர் ஈட்டமும் போன போன திசையிடம் புக்கன. (யுத் : 3157)

போன வென்றியன் - நீங்கிய வெற்றியை யுடையவன்; தோற்றவன். போன வென்றியன் தீயெனப் பொங்கினான். (யுத் : 2106)

போனான் போனான் - போயினான் போயினான். அவலம் பற்றி வந்த அடுக்கு. போனான் போனான் எங்களை நீத்திப் பொழுதென்னா. (அ : 594)

போனிறம் - பொன்னிறம். அழகிய நிறம். பொன்னிறம் போனிற மென எதுகை நோக்கிய விகாரம். (வை.மு) போல் நிறம். (பவழக் கொடியின்) நிறம் போல. (அண்) பவள நீள் கொடி போனிறம் பொலிந்திட (ஆ : 180)

பௌ

பௌவம் - கடல். பார்மிசைப் படர்ந்தது பதாதிப் பௌவமே. (அ:965) பௌவத்தைப் பருக வேண்டின். (யுத்:1238) [பா:பே]

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	27	தகவில்லான்.	தகவில்லாள்.
5	8	தருமுந்	தருமமுந்
9	6	காணுதியென்னில். (அ : 658)	காணுதியென்னில். (அ : 458)
17	30	துன்பபட்டுதல்	துன்பப்படுதல்
29	11	(வை.ப)	(வெ.ப)
34	17	யாவயும்	யாவையும்
40	9	வரசவனம்	வாசவனம்
46	24	அனைத்துக் கொள்ள	அணைத்துக்கொள்ள
50	23	தானற்றுருள	தாளற்றுருள
55	19	தரையிற்கிறிடில்	தறையிற்கிறிடில்
70	14	நான்மலர்க்கானத்துள்	நாண்மலர்க்கானத்துள்
72	19	பற்ரு மிக்க	பற்ருன் மிக்க
73	18	தயே யனைய	தாயே யனைய
88	29	ஆகரயம்	ஆகாயம்
97	25	தொடர்ந்துள்ள	தொடர்ந்து துள்ள
109	24	கேள்வினை	கேள்வனை
113	21	இளைய	இனைய
119	3	சிரத்ந்தி	சிரத்தின்
120	9	ஓங்தகுல்	ஓங்குதல்
136	1	மன்னரின்றே	மன்னரின்றியே
141	6	யானைக்கொம்பும்	தும்பிக்கொம்பும்
154	9	செல்வத்துயுதுடயவனுன	செல்வத்தையுடையவனுன
157	21	சீதுத	சீதை
159	19	முனிவருஞ்	துனிவருஞ்
171	16	பயைவுரை	பழையவுரை
187	32	நெறித்தெழுந்து	தெறித்தெழுந்து
191	11	தேக்கிலைப்படலை	தேக்கடைப்படலை
231	2	மானிவன்	மானிடவன்
241	1	நஞ்சிலன்	நஞ்சிலள்
	1	நைந்திலன்	நைந்திலள்
250	21	மனவலிமை	நம்மைக்காட்டிலும் மனவலிமை
258	10	நாட்டார்	நாட்டார் நல்லவர்
266	26	மலைமலைதாவினன்	மலைபலதாவினன்
315	24	என்ன	என்ற
321	15	பெுண்ணிறம்	பெண்ணிறம்
346	10	லேிடமம்	மேலிடம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
418	13	படுப்பது	வேறு தனிச்சொல்; அடுத்த வரியோடு சேர்க்க.
421	19	பராவமுறை	பராவமுதை
427	14	பணிமுறை	பணிமொழி
434	8	பதாதிய	பதாதிப்
435	3	பதினைட்டு	பதினெட்டு
449	30	பகையற	பசையற
465	2	வேதியின்	வேதியன்
472	16	பருமணி	பணுமணி
478	9	[பாக பிரஸனன்]	[பாக சாஸனன்]
507	20	அவள்	அவன்
512	10	வள்ளல்	பிள்ளல்
522	14	பிரிந்துரிமை	பிறந்துரிமை
532	18		இவ்வரியை நீக்கிவிடுக
533	3	புகலறுமுழை	புகலருமுழை
541	25	தண்டரிக	புண்டரிக
555	28	புரான	புராதன
576	17	புன்கை - சிறிய பகை	புன்பகை - சிறியபகை
584	1	மலரம்பூ - பூக்களாகிய அம்பூ.	மலரம்பு - பூக்களாகிய அம்பு.
594	25	பூவத்தில்	பூவகத்தில்
622	20	துரியம்	தூரியம்
623	12	அன்செய்த	அன்று செய்த
645	12	போருப்பேந்திய	பொருப்பேந்திய
648	4	பெருங்காயெம்	பெருங்காரியம்
649	18	கேரக்காது	போக்காது
657	18	ஏமுத	எமுத
685	16	என்ருள்	என்றுள்